உ

சிவமயம்.

திருக்குறட் குமரேச வெண்பா.

(மூலமும் உரையும்.)

ஆசிரியர்

ஜெகவீரபாண்டியன்.

தூத்துக்குடி
வேலாயுதம் பிரிண்டிங் பிரஸில் பதிப்பிக்கப் பெற்றது.

௲௱·ம் ஆண்டு ஆவணி௴,

Copy right] 1924. [*Registered.*

முன்னுரை.

தெய்வப் புலமைத் திருவள்ளுவப் பெருந்தகை அருளியுள்ள திருக்குறளின் கருத்துக்களுக்குப் பொருத்தமான கதைகளை இராமாயணம் பாரத முதலிய இதிகாசங்களினும், காந்தம் பாகவத முதலிய புராணங்களினும், சிந்தாமணி சிலப்பதிகார முதலிய காவியங்களினும், பத்துப்பாட்டு எட்டுத்தொகை முதலிய சங்க நூல்களினும், வேறு பல நூல்களினும் இருந்து தெரிந்தெடுத்து எமது குலதெய்வமாகிய குமரேசனது முன்னிலையில் விண்ணப்பித்து அவற்றிற்கு விடை கூறுமுறைமையில் குறள்களை உதாரணமாக எடுத்துக்காட்டி யிற்றைக்கு மூன்று வருடங்கட்கு முன்னரே யிந்நூலை முடித்து வைத்தும் வெளிப்படுத்தக் கூசி வாளா விருந்தேன். இங்ஙனமிருப்ப, அறிஞர் பலர் இந்நூலுட் சில பாக்களைக் கேட்டு மகிழ்ந்து இதனை அச்சிலேற்றி அனைவருக்கும் உபகரிக்கவேண்டுமென்று என்பால் அன்பால் என்னைத் தூண்டினர். அன்னார் வேண்டுகோளைச் சிரமேற்கொண்டு இதுபொழுது இதனை வெளிப்படுத்துகின்றேன்.

கதைகளைக் குறட்பாவில் அமைத்துத் திருக்குறள்களோடிணைத்துத் தனிச்சீரும் சேர்த்திருத்தலினால் இந்நூல் முழுதும் நேரிசை வெண்பாவால் நிறைந்துள்ளது. தெய்வ வணக்கமும் அவையடக்கமும் உள்பட இதில் 1332 வெண்பாக்கள் அடங்கியுள்ளன.

செவிக்கும் வாய்க்கும் சிந்தைக்கும் இனியவாய சிறந்த சொற்செறிவும் இருவினையும் நீக்கும் அருமருந்தனைய உயர்ந்த பொருட்பொலிவும் பொருந்தி விளங்கும் நமது தமிழ் வேதத்தின் அமிழ்தமயமான நீதியொழுக்கங்களையும் பொருள் நுணுக்கங்களையும் அறிந்தனுபவித்து உணர்ந்தமைவதே மக்கட் பிறப்

பின் மாண்பயனுறும். அருமையான இத்தரும நூலை யருளிய நாயனாரே நமக்கு நல்ல தாயராவர். தாய்மார் தனவமுதூட்டி உடற்குறுதி செய்வர். நாயனார் குறளமுதூட்டி உயிர்க்குறுதி செய்கின்றார். இக்கருணை வள்ளல் காட்டியுள்ள குறள் நீதிகளும் அவற்றிற்கு உரிமையான பல அரிய சரிதங்களும் இதில் ஒருங்கமைந்துள்ளன. பாலொடு கலந்த நீர் பாலாகுமாறு போல் வள்ளுவர் நூலொடு கலந்த இதுவும் ஓர் நூலாகும் என்பது சால்பாம்.

எவ்வகையினாலாவது திருக்குறளின் பயனை எல்லாரும் பெற்று இன்புற வேண்டுமென்பதே என் வேட்கை. இவ்வேட்கையே யெனது நாணத்தை ஒருபுறமொதுக்கி யென்னை யிந் நூலையியற்றும்படி செய்தது. இந்த எண்ணத்தை என் உள்ளத்தில் தோற்றுவித்து அதனை நிறைவேற்றிய திருவருளையும் குருவருளையும் சிந்தித்து வந்தித்து வாழ்த்துகின்றேன்.

ஜெகவீரபாண்டியன்.

Introduction.

1. The present volume is a fitting companion to Thirukural, the divine work of great creative genius Thiruvalluvar who is universally revered as a saint throughout the Tamil World.

2. This book, the first of its kind in the field of Tamil Literature, is composed by the Great Scholar and Poet **Jagaveerapandian** of Ottanatham and every page of it, which is replete with the grace and splendour of word beauty enhanced by the ethical import of each couplet, is a clear proof of the author's deep penetration and critical powers of research in the religious literature of the land.

3. ·The abstract ethical import of each couplet of the Kural is illustrated by suitable anecdotes culled out from the Puranic and other Hindu literature of the past and is written in the very same sweet rythym as that of the Kural which is a striking evidence of the author's poetic composition which is as much inspired as the original itself. For the reason that each Kural is definitely backed and aptly illustrated by some Puranic anecdotes and other, the value of original work is enhanced hundread fold, its meaning of each couplet being made richer and fuller. Hence such a useful and interesting work as the present, which is a genuine and patriotic attempt on the part of the author to renovate the past will surely attract the attention of the Tamil world.

4. At the same time, wherever the reader may turn his eye through the 1332 stanzas of this volume, each section bears the strong impression of the author's profound scholarship, critical powers of research and admirable talents of poetic composition. For the reasons stated above it is no doubt that the present volume is a rich addition to the Tamil literature, the Tamil world itself owes a deep debt of gratitude to the author for having broken a new ground in the field of research.

5. This book must be in the hands of all lovers of Tamil literature, especially the readers of Kural if the full meaning of the divine work should be understood in its proper setting. Also the work may be placed in the hands of school boys and taught regularly as class lessons to them to produce in them a love and reverence for the past.

6. It is finally hoped that by the kind of reception given to the present volume by Tamil reading public, the author would be spurred into fresh composition of a similar nature and thus enrich the Tamil Literature.

Swami Vidyanantha,
Madras.

* * *

மதிப்புரை.

திருவள்ளுவநாயனாரது திருக்குறளில் அமைந்த பொருளின் சிறப்பை எடுத்துக்காட்டிய புலவர்கள் ஐம்பத்துமூவர். அந்நூலில் அமைவுற்ற ஆயிரத்து முந்நூற்று முப்பது அரிய குறள் வெண்பாக்களுக்கும் உரைதந்தவர் பதின்மர். அவருள் பரிமேலழகர் செய்துள்ள உரையே தற்காலம் ஆதரிக்கப்பட்டு வருகின்றது. இவ் உரை வித்வான்களுக்கன்றி ஏனையோருக்கு எளிதில் விளங்காமைபற்றி பண்டிதர்கள் பலர் இவ் உரைக்கு விளக்க உரைகள் எழுதித்தந்தனர். அன்றியும் கால நிலைமைக்கேற்ப குறள் வெண்பாக்களை வசன ரூபமாகவும் இயற்றியுள்ளார் சிலர். இவ்வாறு திநக்குறளின் அருமை நோக்கி தமிழ் மக்கள் எளிதிற் கற்றுணருமாறு பண்டிதர்கள் பரிவுடன் பல்லாற்றானும் முயற்சி புரிந்திருக்கின்றனர். நிற்க.

நீதிகளைப் போதிப்பதே காவியங்களின் கருத்தாகும். காவியங்களோ கதாரூபமாயுள்ளன. கதாரூபமாகத் திருக்குறளின் கருத்துகளை விளக்கி உணர்த்துவதால் கற்பவர்மனசில் நீதிகள் அழுத்தமுற்று அனுட்டானத்திற் கைகூடுமென்பது கருதி மாதவச் சிவஞான சுவாமிகள் திருக்குறளின் அதிகாரந்தோறும் குறிப்பிட்ட ஒவ்வோர் குறளைப்பொறுக்கி அதன் கருத்திற்கு இணங்கிய கதைகளைப் புகுத்து சோமேசர் முதுமொழி வெண்பா என ஒரு நூலை இயற்றி அளித்துள்ளார். அப்பெரியாரது நெறியைப் பின்பற்றி, திருவாளர் ஜெகவீரபாண்டியன் அவர்கள் ஆயிரத்து முந்நூற்று முப்பது அரிய குறள்களுக்கும் பொருந்திய கதைகளை அமைத்து “திருக்குறட் குமரேச வெண்பா’ எனும் இந்நூலை ஆக்கி அளித்திருக்கின்றனர். இந்நூலில் திருக்குறள்களின் அரும்பதங்களுக்குக் குறிப்புரையும், குறித்த கதைகளுக்கு விளக்க சூசனங்களும் எழுதப்பட்டுள்ளன. இக்கதைகள் இதிகாசங்கள் புராணங்கள் முதலிய பெரும் நூல்களினின்றே பெரிதும் எடுத்தாளப்பட்டிருக்கின்றன. குறள்களின் கருத்துகளையும் அவற்றிற்கிணங்க எடுத்தாளப்பட்டுள்ள கதை

களின் கருத்துகளையும் ஒப்பநோக்கில் இன்பமும், அன்பும், வியப்பும் விளைகின்றன. இதனால் இந்நூலாசிரியரது விரிவுற்ற கல்வி ஆராய்ச்சியும் திருவள்ளுவர் மீதுள்ள இவர்களது மெய்யன்பும் வெளிப்படுகின்றன.

தமிழுலகத்திற்கு இவர்கள் செய்துள்ள உபகாரம் மிகவும் பாராட்டற்பாலதாம். இப்பெருந்தகைமைக்குத் தமிழுலகம் செய்யும் கைம்மாறு யாதோ? "கைம்மாறு வேண்டா கடப்பாடு." ஆதலின் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் இந்நூலைப் பெற்றுக் கற்றுணர்ந்தொழுகுவதே தக்க பயனாகும். "நன்றி மறப்பது நன்றன்று" எனும் திருக்குறளைச் சிந்தித்து இந்நூலாசிரியரது நன்றியை மறவாமையே நம்மவர் கடனாம்.

இந்நூலாசிரியர் இறைவன் திருவருளால் நாடிய நீடிய ஆயுளும் பெறுவாராகுக.

இலக்குமணப்போற்றி.

நூன்முகம்.

புனிதம் நிறைந்த இனிய இந்நூலை
நூலென நினைந்து சாலவும் மகிழ்ந்தேம்.

இந்நூல் பொய்யாமொழியைக் தழுவியுள்ளது. புராதனமான பல சரிதசாரங்களை உதாரணமாக எடுத்துக்காட்டிக் குறள் நீதிகளை யினிதாகவும் தெளிவாகவும் விளக்குகின்றது. திருக்குறளுக்கு எளிய நடையில் தெளிய எழுதிய ஒரு சிறந்த விரிவுரையென்றே யிதனைச் சொல்லிவிடலாம். இவ்வரிசையில் முன்னரே பெரியோர்களால் சில நூல்கள் செய்யப்பட்டுள்ளன. ஆயின், அவற்றிற்கும் இந்நூலுக்கும் பெரிதும் வேறுபாடு உண்டு. அவை அதிகாரத்துக்கு ஒவ்வொரு குறளையே தெரிந்தெடுத்துச் செய்யப்பட்டன. இது குறள்கள் முழுமையும் தழுவியுள்ளது.

ஆயிரத்து முந்நூற்று முப்பது அரியகுறள்களுக்கும் பொருத்தமான கதைகளைத் திருத்தமாக இணைத்து இந்நூல் செய்யப்பெற்றிருக்கிறது. இதனானே இதன் அருமையும் பெருமையும் இனிதுபுலனாம். இது சிறந்தவுரையும் நிறைந்த கதைவிளக்கமும் திருந்தியநலனும் பொருந்தியுள்ளது.

இந்த அரிய நூலை ஸ்ரீமான் ஜெகவீரபாண்டியனவர்கள் செய்து உதவியிருக்கிறார்கள். இவர்கள் நுண்ணிய நூலறிவோடு தண்ணிய சீலமும் வாய்ந்தவர்கள். இந்நூலை முடித்ததிறமே இவர்களது கல்வித்திறத்தை யினிது காட்டும். இதனைப் படித்தவுடனே பாண்டியனவர்களுடைய கவித்துவசக்தியும் மதி நுட்பமும் ஆராய்ச்சித்திறனும் பயிற்சிபின்பரப்பும் எவர்க்கும் நன்கு தெளிவாம். உலகுக்கெல்லாம் இஃதொரு நல்விருந்தாக இருக்குமென்று நம்புகின்றேன். இந்நூலின்பயனை யெல்லாரும் எய்தி இன்புறுமாறு திருவருளைச் சிந்திக்கின்றேன்.

திகம்பரவித்தியானந்த சுவாமிகள்,
சென்னை.

உ

சிறப்புப்பாயிரம்.

வள்ளுவர்வாய் வந்ததிருத் தெள்ளமுதாந் திருக்குறளை
மருவி யின்பம்

துள்ளுமுயர் குமரேச வெண்பாவென் றுலகுவந்து
துதிக்கச் செய்தான

கொள்ளுமியற் புலமையொடு கோதறுநற் குணங்கள்குடி
கொண்ட தூயோன்

தெள்ளு புகழ்ச் செகவீர பாண்டியனுங் கவிராஜ
சிங்கமன்னோ.

உ

சிவமயம்.

திருக்குறட் குமரேச வெண்பா.

காப்பு

போதந் தருசெய்ய பொய்யா மொழிபுணர்த்தி
ஓதுகின்ற இந்நூற் குறுதுணையாச—சோதிமிகு
மாதங்கங் கொண்டே மகிழ்பரமன் தந்தவொரு
மாதங்கங் கொண்டேன் மனம்.

இதன் பொருள்

மெய்யுணர்வைத் தருகின்ற செவ்விய திருக்குறளை யிணைத்துச் சொல்லுகின்ற இந்நூலுக்கு நல்ல துணையாக, ஒளிமிக்க உமாதேவியை பொருபாகத்தில் வைத்து, மகிழ்கின்ற பரமபதி தந்த ஒரு மாதங்கத்தை மனத்துட் கொண்டேன (எனபதாம்)

மனத்துட் கோடல் = நினைத்துத் துதித்தல்.

பொய்யாமொழி யென்றது திருக்குறளை.

மெய்யான நூல் ஆதலால் இஃது இப்பெயர்பெற்றது.

தான் உணர்த்திய நெறியில வழுவாது ஒழுகுவார்க்குப் பொருந்திய பயனைப் பொய்படாதபடி விளைவிக்கும் திருந்திய மெய் மொழிகளால் தேவர் இந்நூலைச் செய்துள்ளமை தேற்றம். செய்ய பொய்யாமொழி=செம்மையும், மெய்மையும் சேர்ந்த மொழி.

மாதங்கம்= யானை. அது தனது முகத்தையுடைய விநாயக மூர்த்தியை யீண்டுவிளக்கி நின்றது.

மாதை அங்கத்தில் வைத்து மகிழ்பரமன் தந்த ஒரு மாதங்கத்தை யெனது மனத்தில் வைத்து யான் இந்நூலைச் செய்கின்றேன் என்பதாம்.

இதனால் இஃது இனிது முடியும் என்பது துணிபு.

இஃது இந்நூல் மங்கலமா முடியும் பொருட்டு ஐங்கரக்கடவுளை வாழ்த்தியதென்க.

திருக்குறளைத் தழுவிக் குமரேசனை முன்னிலையாகக்கொண்டு வெண்பாவால் செய்தபடியால் இந்நூல் திருக்குறட் குமரேச வெண்பா எனப்பெயர் பெற்றது.

அவையடக்கம்.

அங்கணீர் கங்கை யடைந்தவுட னேபுனித
மங்கலநீர் ஆகி வயங்காதோ — இங்கெனது
புன்பாவும் வள்ளுவர்தம் பொன்பாவைச் சேர்ந்ததனால்
இன்பாகு மன்றோ இனி

புன்மை, எளிமையைக் குறிக்கும்; பொன்மை அருமையை யுணர்த்தும்

நதிகள் எவற்றினும் சிறந்து புனிதமும் இனிமையும் பொருந்தித் தன்னைச் சார்ந்தவுயிர்களுக்கு நலங்கள் பலவுந் தந்து வருகின்ற தெய்வ நதியாகிய கங்கை, எல்லா நூல்களினுஞ் சிறந்து தூய்மையும் வாய்மையும் தோய்ந்து, ஆழமும் தெளிவும் வாய்ந்து தன்னையாய்ந்த மக்களுக்கு எல்லா நலங்களையும் இனிது உதவிவருகின்ற தெய்வ நூலாகிய திருக்குறளோடு இங்கு உவமை கூறுகின்றது.

அங்கண நீர் கங்கை நீரைக் கலந்தவுடனே தனது இழிவு நீங்கி விழுமிய தீர்த்த மாதல்போல, எனது எளிய பாவும் வள்ளுவரது அரிய பாவைத் தழுவி யுள்ளதனால் அதன் எளிமை நீங்கி அருமையும் பெருமையும் அடையும் என்பது கருத்து.

இதனால் அவையடக்கம் கூறப்பட்டது.

உ

சிவமயம்

திருக்குறட் குமரேச வெண்பா.

முதல் அதிகாரம்.

கடவுள் வாழ்த்து.

பூவுலகோ டெங்கும்வான் பூண்ட துமைகேள்வன்
கோமுகிழ்த்த தன்மை குமரேசா— மேவும்
அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு.

இதன் பொருள்.

குமரேசா! உமைகேள்வன் கோமுகிழ்த்த தன்மை பூவுலகோடு எங்கும்வான் பூண்டது எனின்? எழுத்துக்களெல்லாம் அகரத்தை முதன்மையாக உடையன; அதுபோல, உலகம் ஆதி பகவனை முதன்மையாகவுடையதெனக.

கோ = கண்.

எழுத்து உயிரும் ஒற்றும் என இருவகைப்படும். உலகம் உயிருடைப்பொருளும் உயிரில் பொருளும் என இருவகைப்படும். அகரம் எல்லா எழுத்துக்களையும் கலந்து இயக்கித் தானும் தனித்து இயங்கும். ஆதிபகவனும் எல்லாப்பொருள்களையும் கலந்து இயக்கித் தானும் தனித்தியங்குவன். அகரம் இயங்காவழி அனைத்தெழுத்தும் இயங்கா. அவன் அசையாவழி அணுவும் அசையாது இவ்வுண்மை உமைகேள்வன் திருக்கண் குவித்த காலத்தில் காணப்பட்டது. அது பின்வரும் சரிதத்துட் காட்டப்படும்.

நம்மால் காணப்படுகின்ற இவ்வுலகத்தைக்கொண்டு காணப்படாத கடவுள் உண்மையை நமக்குக் காட்டவந்த நாயனார், நாம் அறிந்துள்ள அகரமாகிய எழுத்தின் தன்மையைக்காட்டி நம் அறிவுக்கெட்டாத ஆதிபகவனது இயல்பை இவ்வாறுணர்த்தினார்.

இறைவன் அடங்கினால் எல்லாம் அடங்கும், அவன் அசைந்தால் அகிலமும் அசையும் என்னும் இத்தலைமைத்தன்மை அகரத்துக்கும் ஒருவகையில் அமைந்திருத்தலால் அஃது இங்கு ஆதிபகவனுக்கு உவமையாக வந்தது.

ஆயின், அகரம் அறியார்க்கு இது கருவியன்றே யெனின்? கடவுளது உண்மையை யெடுத்துக்காட்டும் இவ்வுவமையானது எழுத்தறிவுடையார்க்கே அமையுமென்று கொள்க. அறியார்க்கு வேறு வகையான் உணர்த்தப்படும் என்க. "உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே" என்றது தொல்காப்பியம்.

நமது தேவர் அருளியுள்ள திருக்குறளானது தமிழ்ச்சுவை முழுவதுந்தழுவி தமிழுக்கே பெருஞ்சிறப்பாக அமைந்துள்ள ஒரு தனி நூல் என்பது அதில் காணப்படும் சில குறியீடுகளை உய்த்துணர்வார்க்கு இனிது புலனாம். அவற்றுட் சிலவருமாறு:— 'அகர முதல் னகர இறுவாய்' என ஆசிரியர் தொல்காப்பியனார் அருளியபடி தமிழ் மொழியானது தனது எழுத்துக்களுள் அகரம் முதலிலும் னகரம் இறுதியிலும் அமையப்பெற்றுள்ளது. திருக்குறளும் அவ்வுரிமை தோன்ற முதலில் அகரமும் முடிவில் னகரமும் பெற்று விளங்குகின்றது. எங்ஙனமெனின்! "அகரமுதல" என ஆதியில் தொடங்கியும், "முயங்கப்பெறின்" என முடிவில் முடிந்தும் நிலவுதல் காண்க. இன்னும் தமிழெழுத்துக்கள் உயிரும் மெய்யும் என இருவகையாய் முப்பதென்னும் ஒரு தொகையுள் அடங்கும். அவை உயிர்க்கணம், வன்கணம், மென்கணம், இடைக்கணம் என நால்வகைக் கணங்களாகவும் வழங்கப்படும். இவ்வினமுந் தோன்ற முதற் குறள் முதல், நான்காவது வரை இக்கணங்கள் நான்கும் முறையே இணங்கியுள்ளன.

இன்னும், நுண்ணுணர்வான் ஆராய்வார்க்குப்பல நலங்களும் நயங்களும் இதில் தோன்றும். அவையெல்லாம் திருக்குறளானது தமிழுக்கே உரிமையும் பெருமையும் தரவந்த ஒரு தனி நூல் என்பதை யினிதுணர்த்தும் என்க.

கதை

உமைகேள்வன் கோமுகிழ்த்ததன்மை:—பிரமாவின் மானச புத்திரர்களாகிய சனகாதியர் நால்வரும் உமாபதியை யணுகித் தங்களுக்குத் தத்துவ ஞானத்தை யுணர்த்தும்படி வேண்டினர். அது வாக்காற் சொல்லிப் போதிக்கும் இயல்பினையுடையதன்றாதலால் அப்பரமன் சொல்லாமற் சொல்லல் என்னும் மோன நிலையால் அவர்கட்கு ஞானநிலையை யுணர்த்தினார். எள்ளுள் எண்ணெய்போல் எங்கும் நிறைந்துள்ள அம் முழு முதற் பரமன் அங்ஙனம் உணர்த்துங்கால் திருக்கண் முகிழ்த்துச் செங்கை குவித்துச் சின் முத்திரை தரித்தார். சிறிதுபொழுது அசைவற்று மோனமுற்றிருந்தார். அவ்வமையம் அகிலமும் அவ்வண்ணமே யடங்கியிருந்தன. உயிர்களெல்லாம் முயற்சியும் இச்சையும் முற்றுந் துறந்தன. அலைகின்ற கரணங்கள் அடங்கி நின்றன. பின்னர் மோனம் நீங்கி விழித்தார். எல்லாவுயிர்களும் இச்சையுற்றெழுந்தன. உலகபோகங்களை நாடின. முயற்சியைக் கூடின, என்பதாம்.

உடலில் உயிர்போல் எல்லாவற்றுள்ளும் கலந்து இறைவன் எழுந்தருளியிருக்கின்றார் என்பதும், சகல சீவகோடிகளும் அண்ட கோடிகளும் அவருக்குத் திருமேனிகளாக அமைந்துள்ளன என்பதும், அவரே உலக முதல்வன் என்பதும், இதனால் இனிது புலனாம்.

இச்சரித்திர வுண்மைகள் இதனடியில் வருகின்ற கவிகளில் நன்கு தெளிவாம்.

காரணமுதல்வன் மோனக் காட்சியால் அமரரெல்லாம்
சூர் அரமகளிர் தங்கள் துணைமுலைப் போகமின்றி
ஆரிடர் நிலைமை தன்னை யடைந்தனர் அளக்கர் சூழ்ந்த
பாரிடையுயிரும் காமப்பற்றுவிட்டிருந்த வன்றே.

ஆரணன் தனது மைந்தர்க் கரும்பெறன் ஞானபோதம்
ஓரிறை காட்டு முன்னர் உலகெலாம் ஒருப்பாடொன்றி

யீருடல் முயங்கும் ஆர்வமின்றியே யிருந்த யார்க்கும்
காரணன் சிவனே யென்கை சாற்றவும் வேண்டற் பாற்றோ.
(கந்தபுராணம்)

இனி, உமை, கேள்வன் சோலை முகிழ்த்த தன்மையென்று கொண்டு உமாதேவி பரமனார் திருக்கண்களைப் புதைத்தபொழுது நிகழ்ந்ததையும் கொள்ளலாம். அது வருமாறு:—

பண்டொரு காலத்தில் பரமனும் பார்வதியும் ஓர் ஆதனத்தில் எழுந்தருளியிருந்தனர். அப்பொழுது இனிய பலமொழிகள் இடையே நிகழ்ந்தன. முடிவில் அம்மையார் ஐயனை நோக்கி, "தேவே! சூரியனும் சந்திரனும் தேவரீருக்குத் திருக்கண்களாக அமைந்துள்ளன என்று தத்துவ நூல்கள் சாற்றுகின்றனவே அஃதுண்மைதானா?" என்று புன்னகையோடு வினாவினார். இறைவன் உள்ளதுதான் என்றார். பகலொளியும், இரவொளியும் தேவரீரது விழியொளிகளாகவா விளங்குகின்றன என்று வியந்தார். மகிழ்ந்தார். உடனே விநோதமாக அம்மையார் ஐயன் திருக்கண்களைப் புதைத்தார். உலகம் முழுதும் இருண்டது. உயிர்களெல்லாம் இருளில் மருள் அடைந்தன. திடீர் என்று பயந்து அம்மையார் கையை எடுத்தார். உடனே வையமெங்கும் வானொளி பரந்தது. மருண்ட வுயிர்களும் தெருண்டெழுந்தன. இவ்வுண்மை பின்வரும் கவிகளில் இனிது தோன்றும்.

ஈசனார் விழி புதைத்தலும் இருட்பிழம் புருக்கிப்
பூசினாலென இருண்டன திசைகளும் புவியும்
மாசில் நீலமால் வரையெனக் கருகின மலைகள்
காசலாவிய நதியெலாம் யமுனைபோற் கருத்த.

மறையவனும் நாரணனும் முனிவர்களும் வசுக்களும் நான்
மறையும் வானோர்

இறையவனும் விழியொளி போய்ப் பிறவிநெடுங் குருடரென
இருந்தார் மற்றைக்

கறவைகிளை முதல்விலங்கு பறவைகளும ஒளியிழந்த
கண்ணவான
துறவறமும் பிறவறமுந் தொலைந்தன மற்றுள தொழிலும்
தொலைந்ததன்றே. (அருணாசலப்புராணம்.)

இனி, கோ என்பதற்கு அரசன் என்று பொருள்கொண்டு ருச்சுனனையும் பாண்டியனையும் கொள்ளலாம். வில்லாலும் ம்பாலும் இவ்விருவரும் பரமனையடித்தபொழுது அவ்வடி இலும்பட பரந்து நின்றமைதெளியப்படும். இப்பொருளில் மை கேள்வனை, கோ கைமுகிழ்த்த தன்மையென்று கொள்ளு ல் வேண்டும்.

அருச்சுனன் வில்லாலடித்த கதை

அருச்சுனன் சிவபெருமானை நோக்கி அருந்தவஞ்செய்தான். க்காலத்தில் நிகழ்ந்தவாற்றால் அப்பெருமானை வில்லால டித்தான். அவ்வடி உலகெங்கும் சென்று செறிந்தது. இதனை ல்லியாழ்வார் சொல்லியுள்ள இன்கவிகளால் நன்குணரலாம்.

அவை

வேதம் அடியுண்டன விரிந்தபல ஆகம
விதங்கள் அடியுண்டன ஓரைம்
பூதம் அடியுண்டன விநாழிகை முதற்புகல் செய்
பொருளொடு சலிப்பில் பொருளின்
பேதம் அடியுண்டன பிறப்பிலி யிறப்பிலி
பிறங்கல் அரசனறன் மகளார்
நாதன் அமலன் சமரவேட வடிவங்கொடு
நரன்கை யடியுண்ட பொழுதே.

விண்ணிலுறை வானவரில் யாரடிபடாதவர்
விரிஞ்சன் முதலோர் உதகிரும்
மண்ணிலுறை மானவரில யாரடி படாதவர்
மனுக்கள்முதலோர்கள் அதலக்

கண்ணிலுறை நாகர்களில் யாரடிபடாதவர்கள்
கட்செவி மகிபன் முதலோர்
எண்ணில் பலயோனியிலும் யாவும படாதன
இருந்துழியிருந்துழியரோ.
(பாரதம்)

பாண்டியன் பிரம்பால் அடித்த கதை

முன்னொரு காலத்தில், வைகை நதியில் பெருவெள்ளந் தோன்றி யிருகரைகளையும் உடைத்துச் சென்றது. பாண்டிய மன்னன் ஏவலால் மதுரை நகர்வாசிகள் எல்லாரும் அக்கரைகளை ஒழுங்கு படுத்தச் சென்றனர் அந்நகரில் பிட்டு விற்று வரும் நரைமூதாட்டி ஒருத்தியிருந்தாள் அவள் பங்குக்கு ஆள் வரவில்லை. அதனால் அவள் வருந்தினாள். அரசனது தண்டனை வருமென நினைந்து நடுங்கினாள் அருள்வள்ளலாகிய பரமன் இவளது நடுக்கத்தைத் தீர்க்கத் துணிந்தார். ஒரு கூலியாள்போல் வடிவங்கொண்டார். இவளிடம வந்தார் கூலிக்காக கொஞ்சம் பிட்டுவாங்கினார். பின்னர் அவள் பங்கின் கரையை அடைக்கச் சென்றார். சென்றவர் உள்ளபடி வேலைசெய்யவில்லை. செய்வது போல்நடித்தார். அங்கும் இங்கும அலைந்து நின்றார் இந்நிலையைத் தானைத்தலைவர்கள் அறிந்தார். அரசனுக்கு அறிவித்தார். அரசன்சினந்தான் ஐயன் முதுகில பிரம்பால் அடித்தான், அவ் அடி உலகமெங்கும் ஒருங்கே பட்டது.

இவ்வுண்மை யிதன் அடியில் வருகின்ற கவிகளால் இனிது தெளிவாம்.

வள்ளல்தன் கோபங்கண்ட மாறுகோற் கையர் அஞ்சித்
தள்ளருஞ் சினத்தராகித் தடக்கைதொட் டீர்த்துப்பற்றி
உள்ளொடு புறங்கீழ் மேலா யுயிர்தொறும் ஒளித்துநின்ற
கள்வனை யிவன்றான் வந்தி யாளெனக் காட்டிநின்றார்.

கண்டனன் கனன்று வேந்தன் கையிற்பொற் பிரம்புவாங்கி
அண்டமும் அளவிலாதவுயிர்களும் ஆகமாகக்
கொண்டவன் முதுகில் வீசிப் புடைத்தனன் கூடையோடு
மண்டனை யுடைப்பிற்கொட்டி மறைந்தனன் நிறைந்தசோதி.

பாண்டியன் முதுகிற்பட்டது செழியன்
பன்னியர் உடம்பினிற்பட்ட
ஆண்டகையமைச்சர் மேனிமேற்பட்ட
அரசிளங் குமரர் மேற்பட்டது
ஈண்டியகழற்கால வீரர்மேற்பட்டது
இவுளிமேற் பட்டது பருமம்
பூண்டவெங் கரிமேற் பட்டது எவ்வுயிர்க்கும்
போதன் மேற்பட்டது அந்தத்தழும்பு.

பரிதியும் மதியும் பாம்பும் மீங்கோளும்
பன்னிறம் படைத்த நாண்மீனும்
இருநிலம் புனல்கால் எரிகடுங் கனல்வான்
என்னும் ஐம்பூதமுங் காரும்
சுருதியும் ஆறு சமயவானவரும்
சுரர்களும் முனிவரும் தொண்டின
மருவிய முனிவர் கணங்களும் பட்ட
மதுரை நாயகனடித்தழும்பு

வானவர் மனிதர் நாகர் புள்விலங்கு
மாசுணஞ்சிதல் எறும் பாதி
யான பல்சரமும் மலைமரம்கொடி புல்
ஆதியாம் அசரமும் பட்ட
ஊனடை கருவும் பட்டன தழும்போடு
உதித்தன வுயிரில் ஓவியமும்
தானடிபட்ட சராசர சடங்கள் தமக்கு
உயிராயினேன் தழும்பு. (திருவிளையாடற் புராணம்)

இவ்வெல்லாவற்றாலும் கடவுள் ஒருவர் உளர் என்பதும், அவர் அகரம்போல் உலகு உயிர் எங்கும் ஒழிவற நிறைந்த ஒண்பொருள் என்பதும் தெளியப்படும்.

கடவுளது உண்மையும் தன்மையும் இச் செய்யுளால் கூறப்

கற்றறிந்தும் தாருவனர் கல்விநலம் எய்தாமல்
குற்றமுற்றார் என்னே குமரேசா—வெற்றிபெறக்
கற்றதனால் ஆய பயன்என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின். ௨

இ—ள்.

குமரேசா! தாருவனர் கற்றும் அறிவுற்றிருந்தும் கல்வி நலத்தை அடையாமல் என் குற்றமுற்றார் எனின், வாலறிவனது நல்ல தாளைத் தொழாதவர்கட்குக் கற்றதனால் ஆயபயன் இல்லை என்க.

வாலறிவு=மெய்யுணர்வு. அதனை யியல்பாகவே யுடையவன் என்பார் வாலறிவன் என்றார் தொழுவார்க்குத் துன்ப நீக்கமும் இன்பப்பேறும் நல்கும் நலங்கருதி நற்றாள் என்றார்

இறைவன் மெய்யறிவுடையான் என்பதும், தன்னைத் தொழுவார்க்கு அழிவில் இன்பத்தை அருளுவான் என்பதும், கல்வியறிவுடையார் எவரும் அவனது அடிகளைத் தொழுதல் வேண்டுமென்பதும், தொழவில்லையானால் அவ்வறிவாற் பயனில்லையென்பதும், இதற்குச் சான்றாகத் தாருவனர் கற்றிருந்தும் தாள் தொழாமையால் பயனைப் பெற்றிலர் என்பதும் இதில் காணப்படும்.

கதை

பூர்வகாலத்தில், இமயமலையருகில் தாருகம் என்றொரு வனம் இருந்தது. அதில் முனிவர் பலர் வாசஞ்செய்திருந்தனர். இவர் யோக நெறிகளில் தேர்ந்தவர். நூல் பல கற்று நுண்ணறிவு பெற்று மேன்மையுற்றிருந்தனர் தாம் செய்கின்ற

வேள்வி முதலிய நல்ல கருமங்களே கருதிய பயன்கள் எவற்றையும் தருமென்று உறுதியாகத் துணிந்தனர். அதனால் மற்றொரு கடவுளை வழிபடல் வேண்டாமென்று மனச்செருக்குற்று மதியாதிருந்தனர். இங்ஙனம் இருந்த இவர்களை உய்விக்கும் பொருட்டு கண்ணுதற் பரமன் எண்ணினார். கண்டார் எவரும் காதல் கொள்ளத்தக்க ஒரு புருட வேடந்தாங்கினார். திருமாலை மோகினி வடிவெடுத்து உடன்வரச் செய்தார். அவ்வனத்திற் புகுந்தார். அம்முனிவரையும் அவர் தம் பத்தினிமாரையும் நிலை குலைத்து அவர் கொண்டிருந்த மனச் செருக்கை யகற்றித் தெளிவித்தார். அவரும் தெளிந்தார். தங்கள் சிறுமையை யுணர்ந்தார். பின்னர் நற்றாள் தொழுதார். நற்பயன் பெற்றார். இதன் விரிவைக் கந்தபுராணத்திற் காண்க

வாலறிவனைத் தொழுதலே நூலறிவுக்குப் பயன் என்பது இதனால் கூறப்பட்டது

* * *

நீடியவாழ் வெய்தி நிலமிசையேன் மார்க்கண்டர்
கூடினர்பே ரின்பம் குமரேசா—நாடி
மலர்மிசை யேகினா னமாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார் ௩

இ—ள்.

குமரேசா! மார்க்கண்டர் நீடிய வாழ்வையும் பேரின்பத்தையும் ஏன் கூடினார் எனின், மலர்மிசை யேகினானது மாணடிகளைச் சேர்ந்தவர் நிலமிசை நீடுவாழ்வார் என்க

மனம் தாமரை போன்ற வடிவினையுடையதென்பது தத்துவ நூலார் துணிபு. ஆகலால் இங்கு மலர் என்றது மனமாகிய தாமரையை என்க. இதனை உள்ளக் கமலம் என்று குலபதி நாயனாரும் கூறியுள்ளார். சேர்ந்தாரை நீடுவாழச் செய்யும் சிறப்பு நோக்கி மாண் அடி யென்றார். உரு உடம்பால் இத் திருவடியைச் சேர இயலாதாதலின் சேர்தல் என்றது இங்கு நினைத்தல் என்னும் பொருளைக் குறித்து நின்றது.

அன்போடு நினைப்பவரது நெஞ்சத்தில் இறைவன் இன்போடு எழுந்தருளி யிருப்பன் என்பதூம். அவனது அடிகளைச் சேர்ந்தவர் அழியாவாழ்வும் கழியா இன்பமும் பெறுவர் என்பதூம் இதில் காட்டப்பட்டன. இவ்வுண்மை மார்க்கண்டர் பால் ரபபடும்.

கதை

பூர்வகாலத்தில் கடக நகரத்தில் குச்சகன் மரபில் மிருகண்டு என்னும் முனிவர் ஒருவர் இருந்தார். அவர் மருத்துவதி யென்னும் உத்தமியை மணந்து இல்லறம் புரிந்து இன்புடன் வாழ்ந்தார். பொறையும் அருளும் பூண்டொளி சிறந்தார். நூலறிவுடனே சீலமும் வாய்ந்தார். ஆயினும் மகப்பேறு இன்மையால் மனமிக மெலிந்தார். இறைவனை நோக்கி யருந்தவஞ் செய்தார். அருளுடைய பரமனும் இவர் தம் அன்புக்கிரங்கி,

மாதவத்தோய்!

தீங்குறு குணமே மிக்குச் சிறிதுமெய் யுணர் விலாமல்
மூங்கையுஞ் செவிடுமாகி முடமுமாய் விழியு மின்றி
யோங்கிய ஆண்டு நூறும் உறுபிணியுழப்போனாகி
யீங்கொரு புதல்வன் றன்னை யீதுமோ? அல்லது

கோலமெய் வனப்புமிகக் குறைவிலா வடிவமெய்தி
யேலுறு பிணிகளின்றி யெமக்குமன் புடையோனாகிக்
காலம் எண்ணிரண்டே பெற்றுக் கலைபல பயின்றுவல்ல
பாலனைத் தருதுமோ நின்எண்ணம் எனப்பகர்தி யென்றான்.

இறைவன் அருளிய இத்திரு மொழிகளைக் கேட்ட மிருகண்டு முனிவர் சிறிதுபொழுது சிந்தித்தார். பின் அந்திவண்ணனை வந்தித்தார். ஆயுள் சிறிதுடையனாயினும் அறிவு பெரிதுடையனே எனக்கு வேண்டுமென வேண்டினார். அங்ஙனமே யருள அருமையான ஆண்மகவொன்று இவர் மனைவிபால் வந்துதித்தது. மார்க்கண்டேயன் என்று அம்மகவுக்குப் பெயரிட்டனர். பிறையென நாளும் பெருகி வளர்ந்தது, வளர்ச்சி

யில் மகிழ்ச்சியுற்றிருந்த பெற்றோர் அப் புதல்வனுக்கு வயது பதினாறே யென்று இறைவனருளியிருந்த உண்மையை யெண்ணி யெண்ணி வருந்தினர் மகனும் வளர வளர இவர் மனத்தில் வருத்தமும் இளைத்து வளர்ந்தது. பெற்றோர் கவலையைக் குறிப்பாலுணர்ந்த இம் மகன் உண்மையை வினவியோர்ந்தான். தாயையும் தந்தையையும் தேற்றினான். தவத்தால் எவற்றையும் பெறலாமென்று துணிந்தான். மணிகர்ணிகையை யடைந்தான். பெருமானை நினைத்துப் பெருந்தவஞ் செய்திருந்தான். காலனும் காலம் பார்த்து இப்பாலன்பால் வந்தான். அழைத்தான். அதட்டினான். வெருண்டான். மருட்டினான். வெருட்டினான் பாலன் ஒன்றுக்கும் அஞ்சவில்லை முடிவில் காலன் பாசத்தால் பாலனை யீர்த்தான் உடனே பரமன் தோன்றிப் பாலனைக் காத்துக் காலனை வீழ்த்தினார் ''இத் தவப் புதல்வனுக்கு முன்னர் யாம் தந்த வயது பதினாறு என்றெண்ணற்க. என்றும் பதினாறென்றே யெண்ணுக'' என்று திருவருள் செய்து காலனையும் மகிழ்வித்து மறைந்தார். மார்க்கண்டேயரும் அழியாவாழ்வு பெற்றானந்தம் அடைந்தார் இதனை விரிவைக் கந்தபுராணத்தில் காண்க.

மார்க்கண்டர் தமக்குக் கருவிலேயமைந்த பதினாறு வயதை இறைவன் அருளால் என்றும் பதினாறாகப் பெற்று இன்றும் வாழ்ந்து வருதல் தேற்றம்.

இறைவன் அடிசேர்ந்தார் நெடிதுவாழ்வர் என்பது இதனால் கூறப்பட்டது.

எள்ளிச் சமணர் இடும்பைசெய்தும் அப்பரேன்
கொள்ளவில்லை துன்பம் குமரேசா—உள்ளியொன்றை
வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டும் இடும்பை யில. ௪

இ—ள்.

குமரேசா! சமணர்கள் இகழ்ந்து இடும்பைகளைச் செய்திருந்தும் அத்துன்பங்களை யேன் அப்பர் அடையவில்லை

பெனின், வேண்டுதலும் வேண்டாமையும் இல்லாதவனது அடிகளைச் சேர்ந்தவர்க்கு இடும்பைகள் யாண்டும் இல்லை என்க.

எக்காலத்தும், எவ்விடத்தும், எவராலும், எவற்றாலும், எவ்வகையாலும் என்பார் யாண்டும் என்றார். இடும்பை=துன்பங்கள். அவை தன்னால் வருவன, பிறரால் வருவன, தெய்வத்தால் வருவன, என மூவகைப்படும். இவற்றைத் தாபத்திரயம் என்பர். வேண்டிய பொருள் எய்தாவிடின் துன்பம். வேண்டாதன எய்தினும் துன்பம். ஆதலால் விழைவும் வெறுப்பும் துன்பங்கட்கே ஏதுவாயின. இதனால் உயிர்க்கு இருவகை யேதுவான் மூவகைத் துன்பங்கள் வருகின்றன என்பது தெளிவாம்.

எல்லாம் அறிந்து எங்கும் நிறைந்து என்றுமுள்ள பரம்பொருள் விழைதற்கும் வெறுத்தற்கும் உரியதொரு பொருள் ஒன்றும் இன்மையால் அப்பரம் பொருளுக்கு வேண்டுதல் வேண்டாமையிலான் என்று பெயரிட்டனர்.

கடவுள் விருப்பும் வெறுப்பும் இல்லாதவர் என்பதும் அவரது திருவடிகளைச் சேர்ந்தாரைத் துன்பங்கள் சேரா என்பதும் இதில் உணர்த்தப்பட்டன. இவ்வுண்மை திருநாவுக்கரசர் என்னும் அப்பரால் உணரப்படும்.

கதை

அப்பர் சைவசமய குரவர் நால்வருள் ஒருவர். இவர் திருமுனைப்பாடி நாட்டிலே திருவாமூரிலே, வேளாளர் குலத்திலே, கொறுக்கையர் குடியிலே தோன்றியிருந்த புகழனாருக்கும் மாதினியாருக்கும் புதல்வராய்த் தோன்றினார். இளமைப் பருவத்திலேயே பலகலைகளையும் வழுவறக் கற்றார். அதன் பின் சமண மதத்தைச் சார்ந்தார். அம்மத நூல்கள் பலவற்றையும் ஆய்ந்தார். புலமையும் போதனா சக்தியும் வாய்ந்தார். இவரது பெருமையைக் கண்ட சமணர்கள் இவரைத் தங்கள் மதத்துக்குத் தலைவராக்கித் தருமசேனர் என்ற பட்டமுந் தந்து வழிபட்டு வந்தார். மருணீக்கியார் என்பதுதான் இவரது பிள்ளைத் திருநாமம். இங்ஙனம் இருப்ப, இவருடன் பிறந்த திலகவதியார்

என்னும் அம்மையார் தனது தம்பி சமணமதபோதகனாய் நின்று வரும் நிலைமையை நினைந்து மிகவும் வருந்தினார். தானே எழுந்தருளியிருந்த திருவதிகை வீரட்டானத்துச் சிவபெருமானை வணங்கி தம்பி சமண மதத்தைக் கைவிட்டுச் சைவமதத்தைச் சாரவேண்டுமென்று மனமுருகி வேண்டினார். பெருமானும் அவ்வம்மையார் வேண்டுகோட்கிரங்கித் தருமசேனரைச் சூலை நோயால் வருத்தியாட்கொண்டார். சைவமதத்தை இவர் சார்ந்தமையைச் சமணர்கள் அறிந்தனர். உடனே வெகுண்டு திரண்டார். தமது மதம் இனி நிலைகுலையுமென மருண்டார். அக்காலத்தில் தங்கள் மதத்தைத் தழுவியிருந்த பல்லவராஜனை வந்து கண்டார். அவன்பால் உற்றதை முற்றும் ஒழியாதுரைத்தார். அடங்காக் கோபம் அவனும் அடைந்தான். அவனது உதவியால் நமது அப்பருக்குச் செப்புதற்கரிய பெருந் துன்பங்களைச் சமணர்கள் துணிந்து செய்தனர். முதலில் யானையை மேலே ஓட்டினர். நஞ்சையுள்ளே யூட்டினர். நீற்றறையில் ஆழ்த்தினர். கல்லுடன் பிணித்துக் கடலில் வீழ்த்தினர். இன்னும் பலவே இவர் செய்தீமைகள். இவற்றால் ஒருசிறிது துன்பமும் நமது நாயனார் அடைந்திலர். மகிழ்ச்சியும் இன்பமும் மாறாதிருந்தனர். மண்டியெரிகின்ற நீற்றறையினுள்ளே தள்ளி யேழு நாளளவும் மூடப்பட்டிருந்தனர் அதில் தமது ஐம்புலன்களும் அளவில் இன்பத்தை யனுபவித்தன. இவ்வுண்மையை, நமது அப்பர் அப்பொழுது செப்பிய அருமைத் திருவிருத்தம் தெளிவுறுத்துகின்றது. அது வருமாறு:—

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
யீசன் எந்தை யிணையடி நீழலே. (தேவாரம்)

இறைவன் அடிசேர்ந்தார்க்கு யாண்டும் இடும்பையில்லை என்னும் உண்மையை யிப்புனிதவாசகத்தால் நாம் இனிதுணர்கின்றோம். இதன் விரிவைப் பெரியபுராணத்தில் காண்க

இறைவனது அடிகளைச் சேர்ந்தாரை இடும்பைகள் சேரா என்பது இதனால் கூறப்பட்டது

வாட்புலிபோற் பாய்ந்துகொன்ற வல்வினையேன் சேரவில்லை
கோட்புலியார் தம்மைக் குமரேசா — கேட்பின்
இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

இ—ள்.

குமரேசா! கோட்புலி நாயனார் புலிபோற் பாய்ந்து தமது சுற்றத்தாரைக் கொன்றார். அக்கொலைவினையானது ஏன் அவரைச் சேரவில்லை யெனின், இறைவனது பொருள் சேர்ந்த புகழை விரும்பினாரிடத்து இருள் சேர்ந்த இருவினைகளும் சேரா என்க.

வினைகள் மயக்கத்தால் வருமென்பார் இருள் சேர்வினை யென்றார். உண்மையான புகழென்பார் பொருள் சேர் புகழ் என்றார். இருவினை = நல்வினை தீவினை. இந்த இரண்டு வினைகளும் மூன்று காரணங்களின் வழியாக உளவாம்.

துறக்க முதலிய சிறந்த இன்பங்களையூட்டி உயிர்களைப் பேரின்பத்தைப் பெறவொட்டாதபடி தடுத்தலினால் நல்வினையுஞ் சேராதென்றார்.

இறைவன் மெய்ப்புகழுடையான் என்பதும் அவனது கலியாணகுணங்களை விரும்பிக் துதித்தல் வேண்டுமென்பதும், அங்ஙனம் துதிப்பாரை வினைகள் சேரா என்பதும் இதில் உணர்த்தப்பட்டன. இவ்வுண்மை கோட்புலி நாயனாரிடம் உணரப்படும்.

கதை

கோட்புலிநாயனார் என்பவர் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர். இவர் சோழ நாட்டிலே வேளாளர் குலத்திலே நாட்டியத்தான் குடியிலே பிறந்தவர். சிவபக்தியிற் சிறந்தவர். அஞ்சா நெஞ்சும் எஞ்சாவலிமையும் வாய்ந்தவர். வாள்வேல் முதலிய ஆயுதப் பயிற்சியில் தேர்ந்தவர். அந்நாட்டு அரசனிடத்தில் சேனைத் தலைவராயமர்ந்திருந்தார். தாம் ஈட்டிய பெரும் பொருளைச் சிவாலயங்களுக்கும் சிவனடியார்க்குமே, மகிழ்ந்து உதவிவந்தார். இங்ஙனம் வருநாளில் பொருபடைகொண்டு ஒரு போர்முனைக்குப் போகும்படி அரசன் இவரையேவினான். போர் மேற்சென்று மீண்டு வருகின்றவரையும் சிவாலயங்களுக்குச் செவ்வையாகத் திருவமுது செய்யும்படி திட்டஞ்செய்தார். அதன் பொருட்டு வேண்டிய நெல்லைத் தொகுத்தார். சேமஞ் செய்தார். தமது சுற்றத்தாரை யழைத்தார். எவ்வித காரணத்தாலும் இந்நெற்பொதியிற் சிறிதும் எடுத்தலாகாது என்று அவர்கட்குக் கட்டளையிட்டார். அரசன் கட்டளைப்படி தாமும் போர்மேற்போனார் போனவர் பகைவரைப் பொருதுடன் வென்றார். வெற்றியும் புகழும் முற்றவும் பெற்றார். இவர் சென்றிருந்த சில காலத்துள் தமது நாட்டிற் பஞ்சந்தோன்றிற்று. அதனால் இவரது பெற்றோரும் சுற்றத்தாரும் சேமஞ்செய்திருந்த நெற்பொதியிற் சிறிதெடுத்துச் சீவித்திருந்தனர் வெற்றிபெற்று மீண்டுவந்த நாயனார் ஆண்டு நிகழ்ந்ததைக் கேட்டறிந்தார். கொண்டார் கோபம், எடுத்தார் வாளை. தமது மனைவி முதலிய சுற்றத்தார் அனைவரையும் வாளால் வீசித் துணித்தார். இறுதியில் அங்கோர் இளங்குழவியையும் வெட்டச் சினந்தார். அதுகண்ட சிலர் நடுநடுங்கி "ஐயா! இப்பசிய பாலன் நுமதுநெல்லின் அன்னத்தை யுண்ணவில்லையே" எனவேண்டினார். இக்குழவி யெனது நெல்லின் அன்னத்தை உண்ணவில்லை யென்பதுண்மை ஆனாலும் அவ்வன்னத்தை உண்ட தாயின்பாலை உண்டிருக்கு மல்லவாரென்று மொழிந்து பாலனை மேலே வீசி யெறிந்தார் தமது

வாளால் கூசாது அரிந்தார். உடனே பரமன் இவரது திடபக்தியைக்கண்டு வியந்து மகிழ்ந்தார். காட்சி தந்து கருணைசெய்தார். அன்பனே! உனது வாளால் மடிந்த உன் சுற்றத்தாரனைவரும் துறக்க இன்பந்துய்க்கின்றனர். நமபால்வைத்த உனது அன்பிற்கு யாம் அகமிக மகிழ்ந்தோம். நீயும பெறுக பேரின்பம் என்றுபெருமான் அருளினார். நாயனாரும் இருவினை நீங்கினார். இன்பம் எய்தினார். இதன் விரிவு பெரிய புராணத்தில் காணப்படும்.

இறைவனது அருள் சேர்ந்தாரை யிருவினைகள் சேரா என்பதிதனால் கூறப்பட்டது.

நாடி நெறிநின்ற நல்லசன காதியரேன்
கூடினர்நீள் வாழ்வைக் குமரேசா-ஓடும
பொறிவாயில் ஐந்தவித்தான்பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார். ௬

இ—ள்.

குமரேசா! சனகர் முதலிய நால்வரும் என்றும் அழியாத வாழ்வை யேன் எய்தினர் எனின், பொறிவாயில் ஐந்து அவித்தானது பொய்தீர்ந்த ஒழுக்கநெறியின்கண் நின்றவர் நீடுவாழ்வர் என்க.

சனகாதியர் என்றது சனகர், சனற்குமாரர், சனந்தனர், சனாதனர் என்னும் முனிவர் நால்வரை. பொறி என்றது மெய் வாய், கண், மூக்கு, செவி யென்னும் ஐந்து ஞான இந்திரியங்களை.

பொறிகளின் வழியாகச் சென்று சத்தம் பரிச முதலிய புலன்களை நாடியலையும் புன்மை இறைவனுக்கு இன்மையால் "பொறிவாயில் ஐந்தவித்தான்" என்றார்.

அவித்தவிதை உருவுடன் காணப்படும். ஆனால் முளைக்காது அதுபோல் பொறிகள் இருக்கும். புலன்களைப் பற்றா என்பதாம்.

கதை

ஐந்தவித்தான் அருளிய ஞான நெறியில் சனகாதியர் நால்வரும் வழுவாமல் நின்றார் மனத்தைப் புறத்தில் செலுத்தாமல்

பரத்திற் செலுத்தினார். அதனால் அந்தமில் இன்பத்தை அடைந்தார். சிவயோகிகள் என்னும் சிறப்பினைப்பெற்றார். சித்திபவுலகில் நீடுவாழ்வுற்றார்.

இதன் விரிவைச் சிவமகாபுராணத்தில் காண்க.

இறைவனருளிய மெய்ந்நெறி நின்றார் எய்தும் பேறு இதனால் கூறப்பட்டது.

வானவரேன் நஞ்சினால் வந்ததுன்ப மாற்றவுமை
கோனடியைச் சேர்ந்தார் குமரேசா—ஏனோர்
தனக்குவமை யில்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.

இ—ள்

குமரேசா! நஞ்சினாலே வந்த துன்பத்தை மாற்றுதற்காக வானவர் ஏன் உமைகோன் அடியைச் சேர்ந்தார் எனின் தனக்கு உவமை யில்லாதவனது தாள்களைச் சேர்ந்தவர்க்கல்லது மனக்கவலையைமாற்றல் அரிது என்க.

ஆதியும் நடுவும் அந்தமும் இன்றி, அநாதியாய் அருமறைகளுக்கும் ஓதவும எட்டாது உயர்ந்து, என்றும் நின்றான் ஒருவனே யென்பதுகருதி "தனக்குவமை யில்லாதான்" என்றார். உவமை யில்லாதவன் தாளைச்சேர்ந்தவரே கவலையில்லாதவராயிருப்பர். பிறர்க்கு அஃது உண்டுஎன்க தனக்கு உவமையில்லாதவனதாளே மனக்கவலை மாற்றும மருந்து என்பது கருத்து.

"ஒப்புஇல்லாதன உவமனில் இறந்தன ஒண்மலர்த் திருப்பாதத்து அப்பன்" என்றது திருவாசகம்.

எவ்வகையினும் எவரும் தனக்கு நிகரில்லாதவன் இறைவன் என்பதும், அவனது அடியைச் சேர்ந்தவர்க்குத் துன்பம் நீங்கும் என்பதும், இதற்குச் சான்றாகத் தேவர்கள் நஞ்சினால் சேர்ந்த கவலையை இவன்தாள் சேர்ந்து நீக்கினார் என்பதும் இதில் உணரப்படும்.

கதை

முன்னொருகாலத்தில் துருவாசரது சாபததால் துறக்கப் பொருள்கள் எல்லாம் கடலிடைப்புகுந்தன. அவற்றை மீண்டு பெறுதற் பொருட்டுச் சுரரும் அசுரரும் பாற்கடல் கடையத் துணிந்தார். மந்தரமலையை மத்தாக நாட்டினார். சந்திரனைத் தூணாக அமைத்தார். வாசுகி யென்னும் பாம்பை நாணாகப பிணிததார். இரு திறத்தாரும் கடைந்தார். வலிந்தும் நலிந்தும் கடையும் பொழுது நாணாகிய வாசுகியிடமிருந்து நஞ்சு வெளிவநதது. அப் பெரு நஞ்சு மண்டி மேல்எழுந்தது வானவர் கண்டு பயந்தார். மருண்டு வெருண்டார் என்செய்வோமென்று திரண்டு ஓடினார். அஞ்சி ஓடிய தேவர் முடிவில உமாபதியே தஞ்சமென்றடைந்தார். அப்பதியும், "அஞ்சன்மின்" என்று அவர்கட்கு ஆதரவு செய்து மண்டிவநத நஞ்சை தம் செங்கையில கொண்டார் கண்டமட்டும் உண்டார். அது கணடம் மட்டில நின்றது. நீலகண்டன் எனபபெயர் பெற்றார். வானவர் கவலை நீங்கினார். பரமனை வாழ்த்தி மகிழ்ந்தார். என்பதாம். இதன் விரிவை இராமாவ தாரத்தில் தெளிக.

துறக்கம் = சுவர்க்கம்.

உயிர்கள் மனக்கவலை மாற்றுதற்கு வழி யிதனால் கூறப்பட்டது.

காதற கடலைக் கடந்தான் சனகனேன்
கோதுற்றார் மற்றோர் குமரேசா—தீதில்
அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

இ—ள்.

குமரேசா! சனகன் காதற கடலைக்கடந்தான், மற்றவரேன் அதில் ஆழ்ந்தார் எனின், அறவாழி அந்தணனது தாளைச் சேர்ந்தவர்கட் கல்லது பிறஆழியை நீந்துதல் அரிது என்க. பிற என்றது, ஈண்டு பொருளையும் இன்பத்தையும் சுட்டி நின்றது.

மறத்தையும் குறிக்கும். இனி பிறஆழி, பிறவிக்கடல் எனவும்படும். மற்றவர் என்றது சூரன், கனகன், துரியோதனன் முதலாயினோரை.

இறைவன் தரும உருவினன் என்பதும், தண்ணளியுடையவன் என்பதும், அவனது தாளைச் சேர்ந்தவர் காதற்கடலைக் கடப்பர் என்பதும், சனகமன்னன் இவன் தாளைச்சேர்ந்து பிறஆழி நீந்தினன் என்பதும் இதில் தெளியப்படும்.

கதை

சனகன் என்பவர் விதேக நாட்டு வேந்தன் சீதைக்குத் தாதை. தசரதராமனுக்கு மாமன். மெய்யுணர்வுமிக்கவர். இல்லறஞானிகட்கு ஓர் எடுத்துக் காட்டாகவுள்ளவர். முற்றத் துறந்த சுகமுனிவரும் தம்மிடம் வந்து தத்துவ உபதேசம் பெறும்படி நின்ற உத்தமர். அருளும் பொறையும் அறிவும் நிறைந்தவர். பற்றற்ற பரமயோகி. "அறன் நிரம்பிய அருளுடையருந்தவர்க்கேனும், பெறலருந்திருப்பெற்றபின் சிந்தனை பிரிதாம்" என்றபடி பொருட்செல்வமானது எத்தகைய பேரறிவாளரையும் மயக்கிச் செருக்கையுண்டாக்கும் இயல்பினையுடையது. அதை இவர் அளவறப்பெற்றும் அரசபதவியையுற்றும் அகங்கார முதலிய இழிகுணங்கள் சிறிதும் இலராய், பொருளினால் உளவாம் சிற்றின்பங்களில் அழுந்தாமல் பேரின்பம் பேணிப் பிறவாழி நீந்

சனகன் இறைவன் தாள் சேர்ந்து பிறவாழி நீந்தினான் என்பது இதனால் கூறப்பட்டது.

வேதன் உயர்தலையும் வெண்டலையாய் வீழ்ந்துபலிக்
கோதடைந்த தென்னே குமரேசா— பூதலத்திற்
கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
தாளை வணங்காத தலை.

இ—ள்.

குமரேசா! வேதனது உயர்ந்ததலையும் வெள்ளிய தலையாய் மாறி யேன் குற்றமுற்றதெனின், எண் குணத்தானது தாளை வணங்காத தலைகள் கோள் இல் பொறியிற் குணம் இல என்க.

உம்மை சிறப்பும்மை. கோள் இல்பொறி = புலன்களைக் கொள்ளுதல் இல்லாத பொறிகள். இனி அறிவு இல்லாத பாவைகள் எனவுமாம். எண் என்றது எட்டு என்னும் தொகைப் பெயரைச் சுட்டி நின்றது. இது வினை முதலானால் எண்ணுகின்ற குணத்தான் எனப்படும்.

தலைமை, தூய்மை, தத்துவ வுணர்வு, அருள், வலி, இன்பம், அமலம், தெளிவு, என்னும் எண்வகைக் குணங்களையும் தனக்கு இயல்பாகவே உடையான் என்பார் எண்குணத்தான் என்றார்.

பரிசம் தெரியாத மெய்யும், சுவையை உணராத வாயும், ஒளியைக் காணாத கண்ணும், நாற்றத்தை அறியாத மூக்கும், ஓசையைக் கேளாத செவியும், உருவுடன் இருப்பினும் அவை எவ்வாறு பயன்படாவோ, அவ்வாறே, இறைவனது தாளை வணங்காத தலை உருவுடன் இருப்பினும் பயன் இலை என்பார் "கோள் இல் பொறியிற் குணம் இல" என்றார்.

இறைவன் எண் வகைக்குணங்களையுடையவன் என்பதும், அவனது தாளை வணங்குதலே ஒருவன் பிறவிக்குப்பயன் என்பதும், வணங்காத தலை யிழிவுறுமென்பதும், இதற்குச் சான்றாக வணங்காத பிரமனது சிறந்த தலையும் இழிந்ததென்பதும் இதில் உணரப்படும்.

கதை

ஒரு காலத்தில் பிரமன் தாமே தலைமைக் கடவுள் என்று எண்ணிச் சிவபெருமானை வணங்காமல் செருக்குற்று இருந்தார். அதனை யறிந்த பரமபதி அப்பிரமனது தலைகளுள் ஒன்றைக் கிள்ளி யெறிந்தார். கிள்ளப்பட்ட அத்தலை பெருமையிழந்து பிச்சைப்பாத்திர மாயிற்று. இதன் விரிவைக் கந்தபுராணத்தில் காண்க.

பெருவிதியும் சிறுவிதியும் பெருமானை வணங்காமல்
பிணங்கி யங்கே
இருதலையும் இழந்திழிந்தார் என்பதனை மன் பதைகள்
இனிது தேர்ந்தும்

அருமறைகள் புகழ்ந்து மகிழ் அவன்தாளை வணங்காமல்
ஆசை நோயால்
கருமமிகப் புரிந்துபிறந்திறந்துபவக் கடல் விழுந்து
கவல்வதென்னே,

என்றதுங்காண்க. பெருவிதி=பிரமன். சிறுவிதி =தக்க தக்கன் சிவபிரான் தாளை வணங்காமையால் தனது சிறந்த தலையை யிழந்தான். இழிந்த ஆட்டுத்தலையை யடைந்தான்.

இதனால் ஒருவன் தலைக்குப்பயன் சாற்றப்பட்டது.

சேர்ந்ததிண்ணர் வெம்பிறவி தீர்ந்தார்பின் சேராதார்
கூர்ந்தாழ்ந்தார் என்னே குமரேசா—ஆர்ந்த
பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார். ௰

இ—ள்.

குமரேசா! இறைவன் அடியைச் சேர்ந்த திண்ணனார் பிறவியைத்தீர்ந்தார். அதனைச்சேராதார் அதில் ஏன் அழுந்தினார் எனின், இறைவனது அடியைச் சேர்ந்தவர் பிறவிப்பெருங் கடலை நீந்துவர், சேராதார் நீந்தார் என்க.

திண்ணர் = கண்ணப்பர்.

சேராதார் என்றது கண்ணப்பருடைய வேட்டைத் தோழர்களை. முடிவின்மையும், கடத்தற்கு அருமையும் கருதி பிறவியைக் கடல் என்றார்.

பிறவியானது கடத்தற்கு அரியது என்பதும், அது கடலினும் பெரியது என்பதும், இறைவனது அடியென்னும் புணையைச் சேர்ந்தவரே அதனை நீந்தி யேறுவர் என்பதும், அல்லாதார் அதனில் வீழ்ந்து வருந்துவர் என்பதும், கண்ணப்பரே அப்புணை துணையாக அதனை நீந்தினார் என்பதும் இதன் பொழிப்பாம்.

புணை=தோணி.

கண்ணப்பர் என்பவர் பொத்தப்பி நாட்டி லுள்ள உடுப்பூரிலே வேடர்களுக்குத் தலைவனாகிய நாகன் என்பவனுக்கும் தத்தையென்பவளுக்கும் புத்திரராய்த் தோன்றினார். பிறந்தபொழுதே இவர் தேகம் திண்மையா யிருந்தபடியால் பெற்றோர் இவருக்குத் திண்ணனார் என்று பெயரிட்டனர். பருவம் வந்தபின் இவர் தமது மரபுக்குரிய வேட்டைத்தொழிலை மேற்கொண்டு வேடர் சிலருடன் காட்டில் புகுந்தார். பல மிருகங்களையும் வேட்டையாடிச் சென்றார். சென்றவர், தெய்வாதீனமாகத் திருக்காளத்தி மலையைக் கண்டார். அதின் மேல் ஏறினார். அங்குவிளங்கியிருந்த சிவலிங்கத்தை அணுகினார். உடனே அன்பால் உருகினார். உண்ணும் உணவும், பருகும் நீரும் துறந்தார். ஆறு தினங்களாக இரவும் பகலும் அம்மூர்த்தியையே கண்ணும் கருத்துமாகக் காத்தார். பலவகையிலும் அன்பு செலுத்தினார். என்பும் உருகும் இயல்பில் உரிமை பூண்டிருந்தார். இங்ஙனம் இருப்ப ஆறாவது நாளில் அச்சிவலிங்கத்தின் வலக்கண்ணில் உதிரம் வரும்படியான ஒரு சோதனை நிகழ்ந்தது. அதனைக் கண்டவுடனே யிவர் உளம் பதைத்தார். உடல் துடித்தார். ஐயகோ! என் ஐயன் கண்ணில் இரதகம் தோன்றிற்றே! யென்று அலறினார். அழுது ஓடிப் பல பசிய இலைகளைக்கொண்டு வந்தார். தமது வலிய கரத்தில் வைத்து நலியப் பிசைந்தார். அச் சாரத்தை அக்கண்ணில் பிழிந்தார். குணமின்மை கண்டார். வருந்தினார். தமது வலக்கண்ணையே தோண்டி யதில் அப்பினார். உடனே யிடக்கண்ணிலும் உதிரம் பெருகினது. அது கண்ட திண்ணனார் தமது இடக்கண்ணையும் அப்புதற்கு ஒப்பிக் கையிலிருந்த கூரிய அம்பால் அதனைக் கிளறித் தோண்டினார். உடனே எம்பெருமான் தோன்றி "நில்லு கண்ணப்ப, நில்லு கண்ணப்ப, என் அன்புடைத்தோன்றல், நில்லு கண்ணப்ப" என்று கூவித் தமது செங்கையால் அவரது திண்கையைப் பிடித்துத் தடுத்து ஆட்கொண்டார். கண்ணை அப்பினதினாலே கண்ணப்பர் என்னும் பெயரைப்பெற்றார். பிறவிப் பெருங்கடல் நீந்திப் பேரின்பம் உற்றார்.

ன் சென்ற வேட்டைத்தோழர்களாகிய நாணன், காடன் என்பவர் நகரை நோக்கி மீண்டார். பின் பிறவியை யடைந்தார். இதன் விரிவு பெரியபுராணத்தில் இனிது புலனாம்.

இறைவனது அடிகளை அடைந்தார் பிறவியை அடையார் என்பது இதனால் கூறப்பட்டது.

இவ்வதிகாரத்தின் தொகைப்பொருள்.

கடவுள் ஒருவர் உளர். அவர் அகரம்போல் உலகு உயிரெங்கும் ஒழிவற நிறைந்த ஒண்பொருள். அப்பொருளின் அடிகளைத் தொழுதலே அறிவுடைமைக்குப் பயன். அங்ஙனம் தொழுபவர் அழிவில் வாழ்வையடைவர். அவரைத் துன்பங்கள் தொடரா. வினைகள் சேரா. அவர் இன்பவாழ்வை எய்துவர். அவரைக் கவலைகள் கதுவா. பற்றுக்கள் பற்றா. தலைவனது தாளை வணங்குதலே தலைக்குப் பெருமை. தாளை யடைந்தார் பிறவியை யடையார் என்பனவாம்.

பின்வரும் திருநாமங்கள் கடவுளைக் குறித்து முறையே யிவ்வதிகாரத்தில் வந்துள்ளன.

1. ஆதிபகவன்.
2. வாலறிவன்
3. மலர்மிசையேகினான்.
4. வேண்டுதல் வேண்டாமையிலான்.
5 இறைவன்.
6. பொறிவாயில் ஐந்தவித்தான்.
7. தனக்குவமையில்லாதான்.
8. அறவாழியந்தணன்.
9. எண் குணத்தான்.
10. இறைவன்.

◆

௨-ம் அதிகாரம்.

வான் சிறப்பு.

அஃதாவது மழையினது பெருமை.

11. ஏனோ அமிழ்தியான் இந்திரன் முன் வானையீங்கக்
கோனுலகுக் கீந்தான் குமரேசா — ஆனமல்
வானின் றுலகம் வழங்கி வருதலால்
தானமிழ்தம் என்றுணரற் பாற்று. (௧)

இ ள்

குமரேசா! முன்னர் இந்திரன் அமிழ்தத்தைக் கொடுக்காமல் ஏன் இவ்வுலகுக்கு மழையைக் கொடுத்தான்எனின், வான் நின்று உலகம் வழங்கிவருதலால், தான் அமிழ்தம் என்று உணரும் தன்மையையுடைய தெனக.

வான் = மழை

தான் என்றது அம்மழையை. அமுதம்போல், மழையும் உயிர்களை நிலைத்து வாழச்செய்து வருகின்றது, ஆதலால் அதன் பெருமையை நினைந்து போற்றுக என்பது குறிப்பு. தொட்ட இடமெல்லாம் தோன்றும் நீர்தானே என்று மழையை யிகழற்க; தோன்றும் துணையாய் நின்று உயிர்களைக் காத்துவரும் அமிழ்தம் என்று அதனைப்புகழ்க என்றபடி.

மழையினாலேதான் உலகம் நிலைபெற்று வருகின்றது என்பதும் அஃது உயிர்களுக்கு அமிழ்தம்போல்வது என்பதும் அமிழ்தத்தையுடைய இந்திரனும் முன்னொருகாலத்தில் தான் நன்மைசெய்ய விரும்பிய உயிர்கட்கு இம்மழையையே யுதவினன் என்பதும் இதில் காணப்படும்.

கதை

ஒருகாலத்தில் இவ்வுலகில் மழைபெய்யாது பொய்த்தது உயிர்களெல்லாம் வருந்தி நொந்தன. அக்காலத்தில் ஆபுத்திரன் என்பவன் ஒருவன் இருந்தான். இவன் வாரணாசியென்னும் ஊரிலே பிறந்திருந்த அபஞ்சிகன் என்னும் அந்தணன் மனைவியாகிய சாலியென்பவளுடைய மகன். ஒருகாரணத்தால் தாய் இவனை ஒருகாட்டில் விட்டுப்பிரிந்தாள். இவன் பசிநோயால் வாடியழுதான். அப்பொழுது தெய்வப்பசு ஒன்று இவனை யணுகிப் பாலூட்டி வளர்த்தது. ஆ ஆதரித்த காரணத்தால் இவன் ஆபுத்திரன் எனப்பட்டான். பெரியவனான பின் தென்மதுரையைச் சேர்ந்தான். அங்குப் பசியால் வருந்திய அவ்வுயிர்களைக் கண்டான். இரங்கினான். தான் பெற்றிருந்த அக்ஷயபாத்திரத்தின் மகிமையால் அவற்றிற்கு நல்லுணவூட்டினான். எல்லாவுயிர்களும் உண்டு மகிழ்ந்தன. பசிநோயகன்றன. இந்த வுண்மையை யிந்திரன் அறிந்தான். ஆபுத்திரன்பால் அன்புடன் வந்தான். நின புண்ணியத்துக்கு மகிழ்ந்தேன். என்னுலகம் வா என்றான். பசிநோயகற்றி உயிர்களை மகிழ்விக்கும் இப் பெரும் பேற்றையிழந்து நின்னுடன் வருதற்கு இசையேன் என்று இவன் மறுத்தான். உடனே யெல்லாவுயிர்களுக்கும் பசியில்லாம்படி செய்ய இந்திரன் நினைத்தான். தன்பால் உள்ள எதையும் உதவவில்லை. மழையையே உதவினான். அன்று முதல் எல்லாவுயிர்களும் பசி நோயகன்றன. உயிர்களும் நிலைத்து ஒரு நிலை நின்றன. மழையை உருவம் நோக்கி நீர் என நினையாமல் உலகம் அதன் தன்மையை எண்ணி அமிழ்தென உணர்ந்தது. இதன் விரிவை மணிமேகலையிற் காண்க. மழையை அமிழ்தமென்று மதிக்கவேண்டும் என்பது இதனாற் கூறப்பட்டது.

◆

12 உண்டிதரும் நீரும் உணவாகச் சிதைபண்டு
கொண்டிருந்தான் என்னே குமரேசா—உண்டிதனைத்
துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை (உ)

இ—ள்.

குமரேசா! சீதை நீரையே உணவாகவும் ஏன்கொண்டிருந்தாள் எனின்? துப்பார்க்கு துப்பு ஆய துப்பு ஆக்கி துப்பார்க்கு துப்பு ஆயதும மழையென்க. துப்பார்=உண்பார்.
துப்பு ஆயதுப்பு—நல்லவுணவு. துப்பு ஆயதும்—உணவாயதும்.

துப்பு— உணவு சுத்தம் வலிமை முதலிய பலபொருள்களையும் குறித்து வரும் ஒருசொல்.

மழையானது உயிர்களுக்கு நல்ல உணவுகளை யுளவாக்கி உதவுவதோடு தானும் நீராய் நின்று அவ்வுயிர்கள் உண்ணும்படி அமைந்து உதவிவருகின்றதென்பது கருத்து.

மழை பலவகையாலும் உயிர்களது பசியையும் தாகத்தையும் நீக்கிவருகின்றதென்பதும் ஒரு காலத்தில் சீதை தனி நீரையே தனதுணவாகக் கொண்டிருந்தாள் என்பதும் இதில் உணரடுபம்.

கதை.

சீதை இலங்கையில் சிறைவாசஞ்செய்யும் பொழுது நீரையே பருகி உயிர் வாழ்ந்திருந்தாள். இந்த வுண்மை தூது வந்த அனுமன் பால் அந்த அம்மை அருளியுள்ள திருமொழிகளால் இனிது புலனாம். அவை அனுமனே! "இந்த இடத்தை விட்டு யான் வேறெங்கும் செலவதில்லை. தளர்கின்ற எனது அரிய உயிரைக்காக்கும் பொருட்டு சிறிது நீர் பருகுதற்காக சிற்சில சமயங்களில ரகுவீரனது திருமேனியை யொத்திருக்கிற இதோ தோன்றுகின்ற நீர் நிலைக்குமட்டும் செல்வேன்" என்பனவாம்.

தீர்கிலேன் இது ஒரு பகலுஞ்சிலை
வீரன்மேனியை மானுமிவ் வீங்குநீர்
வார நாண்மலர்ப் பொய்கையை நண்ணுவேன்
சோரும் ஆருயிர் காக்கும் துணிவினால். (இராமாயணம்)

நண்ணுவேன் என்றதனால் சிலை வீரனது மேனியையொத்த நீர் நிலையின் காட்சியால் சோர்வு நீங்கி உயிர் நிலைத்தனர் என்பதுமாம். மழையினது அரிய வுதவிகள் இதில் காட்டப்பட்டன.

13. தேசமிகு கோசிகனும் செத்தநா யூனையுண்ணக்
கூசாத தென்னே குமரேசா—மாசகன்ற
விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துண்ணின் றுடற்றும் பசி. (௩)

-ள.

குமரேசா! கோசிக முனிவரும் நாயின் ஊனை ஏன் கூசாமல் தின்னத் துணிந்தார் எனின்? விண் நின்று பொய்ப்பின் விரிந்த நீரையுடைய அகன்ற வுலகத்தில் பசி நின்று உடற்றும் என்க.

விண் என்றது மழையை. விரி நீர்=கடல்

மழை நீர் இல்வழி விரி நீரால் பயன் இல்லை யென்பது குறிப்பு.

மழை நிலைத்து மறுத்தால் பசிநிலைத்து வருத்தும் என்பார் விண்ணின்று பொய்ப்பின் பசி நின்று உடற்றும் என்றார்.

மழை நெடுநாள் இல்லையானால் உலகிலுள்ள உயிர்கள் பசி நோயால் வருந்தும் என்பதும், சிறந்த முனிவராகிய விசுவாமித்திரரும் பசிக்கொடுமையால் நாயின் ஊனையும் தின்னத்துணிந்தார் என்பதும் இதில் உணரப்படும் உம்மை முனிவரது பெருமையை விளக்கி நின்றது.

கதை

கோசிகனார் காதி என்னும் மன்னன் மகன். நிறைந்த அறிவும் சிறந்த வீரமும் உடையவர். மிக்க கீர்த்தியோடு அரசு புரிந்து வந்தார். ஒருநாள் வேட்டைக்குச் சென்றார். தவத்தின் பெருமையை வசிட்டரிடத்தில் நன்கு தெளிந்தார். அதனால் அரசைத் துறந்தார். அருந்தவஞ் செய்ய வனத்தில் புகுந்தார். பல வருடங்களாக அரியபெரிய விரதங்களை மேற்கொண்டு தவம் புரிந்தார். கண்மூடி மௌனியாகி நீண்டகாலம் யோகத்திலிருந்த இவர் ஒரு சமயம் விழித்தார். மழையில்லாதபடியால் உலகம் நிலைகுலைந்திருந்தது. பலவுயிர்களும் மடிந்து கிடந்தன.

இக்கொடுங் காட்சிகளைக் கண்டார். தாமும் பெரும் பசியால் வருந்தினார். உணவுப் பொருள்களை நாடித்தேடினார். ஒன்றுந் தோன்றவில்லை முனிவர் பலவுந்தேடி முடிவில் இறந்து கிடந்த ஒரு நாயின் பிணத்தைக்கண்டார். பசிக்கொடுமையால் அந்த நாயின வூனைத் தின்னத் துணிந்தார் உடனே இந்திரன் வந்து தடுத்து மழை வளம்பெருகச் செய்தான். அதன் பின் உலகம் செழித்தது. உயிர்கள் பசிநோய் நீங்கி மகிழ்ந்தன.

(இதன் விரிவை மணிமேகலையிற் காண்க)

இதனால் உற்றநோய் ஆற்றும தவத்தினரும் பசிநோய் ஆற்றாது பதைப்பார் என்பதும் அது தன்னையுடையானை மானமுதலிய வற்றை யிழப்பித்து இழிவுறும்படி தூண்டும என்பதும் தெளியப் படுதல் காண்க.

குடிப்பிறப் பழிக்கும் விழுப்பம் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்
நாண் அணி களையும் மாண்எழில் சிதைக்கும்
பூண்முலை மாதரோடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி யென்னும் பாவி. (மணிமேகலை)

மானங் குலம்கல்வி வண்மை யறிவொழுக்கம்
தானம் தவமுயற்சி தாளாண்மை=தேனிற்
கசிவந்த சொல்லியர்பால் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப் பறந்து போம் (நீதி வெண்பா)

இவற்றால் அப்பசிக்கொடுமை விளங்குத லுணர்க.

மழை மறுத்தால் பசிவருத்தும் என்பதுஇதனால் கூறப்பட்

◆

14. ஏர்நிலங்கள் வைத்திருந்தும் ஏன்உழவு செய்யவில்லை
கூறுண்சேர் நல்லான் குமரேசா—சீர் நிறைந்த
ஏரின் உழா அர்உழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால். (௪)

இ—ள்.

குமரேசா! நல்லான் என்பவர், ஏர்களையும் நிலங்களையும் வைத்திருந்தும் ஏன் உழுதலைச் செய்யவில்லையெனின்? புயல் என்னும் வாரிவளங் குன்றினால் உழவர்கள் ஏர்களால் உழுதலைச் செய்யார் என்க.

புயல் = மழை.

பசி நோய்க்கு மருந்தாகிய உணவுப்பொருள்களை உளவாக்குதற்கு நீர் நிலம் ஏர் எரு முதலிய உபகரணங்கள் பலவேண்டும். ஆயினும் அவற்றுள் முக்கியமானது நீர் ஆதலால அஃதில்லையானால அவைபயன்படா என்பார், புயல் என்னும் வாரி வளங் குன்றியக்கால் ஏரின் உழார் என்றார்.

மழையின்மை உழவின்மைக்கும் உழவின்மை உணவின்மைக்கும், உணவின்மை உயிரின்மைக்கும் உயிரின்மை உலகின்மைக்கும் ஏதுவாம் என்க. எனவே மழையால் உழவும், உழவால் உணவும் உணவால் உயிரும், உயிரால உலகும், உளவாம் எனபதாம்.

முதல் இரண்டு பாவில் மழையானது அமிழ்தம் போல் உயிர்களது பசியையும நீர் வேட்கையையும் நீக்கும் என்றும், மூன்றாவதில் அம்மழையில்லையானால் பசி உண்டாம என்றும், கூறி இதில், அப்பசியுண்மைக்கு வகை கூறினார்.

மழையில்லையானால் உழவர் தங்கள் நிலங்களை யுழார் என்னும் உண்மையை நல்லான பால் காண்க.

கதை

நல்லான் என்பவர் மதுரையில இருந்தவர். வேளாள குலத்தில் பிறந்தவர். விரிந்த நிலங்களும் நிறைந்த செல்வமும் உடையவர். மிக்க வள்ளற்குணம் வாய்ந்தவர். தமது செல்வத்தைப் பலர்க்கும் பகுத்து உதவிசெய்து வந்தார். சிறப்பாகச் சிவனடியார்க்குச் செய்தார். அதனால் "உழவோருள் நல்லான் அடியார்க்கு நல்லான் அறத்திற்கும்நல்லான் பொருட்கும் நல்லான்,

அனைவர்க்கும் நல்லான்'' என்று புகழப்பெற்றார். இங்ஙனம் வாழ்ந்துவருநாளில் ஒரு காலத்தில் மழைவளங் குன்றினது. அதனால் இவர் நிலவளங்குறைந்தது. பல ஏர்கள் வைத்திருந்தும் உழுதலைச் செய்யமுடியவில்லை. வறுமை கூர்ந்தார். வருந்தினார். அதன்பின் சோமசுந்தரப் பெருமானிடம்போய் முறையிட்டார். அப்பெருமான் அருளால் இவர் உலவாக்கோட்டை பெற்றார். உவந்தார் என்பதாம். இது திருவிளையாடலில் காணப்படும்.

உலவாக்கோட்டை = குறையாத நெற்பொதி.

வாரிவளங் குன்றினால் ஏர்வளங் குன்றுமென்பது இதனாற் கூறப்பட்டது.

* * *

15. உற்றமழை பெய்ய உரோமபதன் கேடகன்று
சொற்றமுற்றான் என்னே குமரேசா—வற்றிக்
கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
யெடுப்பதூஉம் எல்லா மழை. (௫)

இ—ள்

குமரேசா! மழையின்மையால் கேடுற்றிருந்த உரோமபதன் என்னும் அரசன் அது பெய்தவுடன் கேடுநீங்கி யேன் மேன்மையுற்றான் எனின், மழை பெய்யாது நின்று ஒருவனைக் கெடுக்கவும் வல்லது; பெய்து அவனை எடுக்கவும் வல்லது என்க.

சார்வு = துணை

முயற்சியால் ஆக்கமும் மடியால் கேடும் ஒருவனுக்கு வருவது உண்மை. எனினும் அம்முயற்சியும் மடியும் மழையினது உண்மை இன்மைகளால் நிலைபெறுதலின் மழையே ஆக்கமும் கேடும் ஆக்கவல்லது என்றார்.

மழை, பெய்யாமல் நின்று உலகத்தைத் தாழ்விக்கும் என்பதும் பெய்து அதனை வாழ்விக்கும் என்பதும் இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை உரோமபதன் பால் உணரப்படும்.

கதை

உரோமபதன் என்பவன் உத்தானபாதன் என்னும் அரசன் புதல்வன். தசரதன் காலத்தவன். வீரமும் அறிவும் மிகவும் வாய்ந்தவன். ஒரு குடை நிழலில் இரு நிலம் புரந்தவன். ஒரு காலத்தில் தன்னாட்டில் மழை பெய்யாமல் நின்றது. அதனால் பெருங்கேடடைந்தான். மழை வளங்கருதிப் பலவகைத் தானங்கள் செய்தான் அவற்றாலும் பயன் ஒன்றுங்கண்டிலன் கலைக்கோட்டு முனிவரைத் தனது நாட்டுக்குக் கொண்டுவந்தான். அம்மாதவன் வருகையால் மழைவளஞ்சுரந்தது. மாநிலஞ் செழித்தது. கேடு நீங்கிற்று. நாடும் நகரமும் நலமுற வாழ்ந்தன. மன்னுயிர்காக்கும் இம்மன்னனும் மகிழ்ந்தனன். இதன் விரிவு இராமாயணத்தில் காணப்படும்.

புகதான கொடுவினையோ டருந்துயரம் போயொளிப்பப்
புவனந்தாங்கும்
சத்தான குணமுடையான தயையொடு தண்ணளியின்
சாலைபோல்வான்
எத்தாலும் வெலற்கரியான் மனுகுலத்தே வந்துதித்தோன்
இலங்குமௌலி
உத்தான பாதன் அருள் உரோமபதன் என்றுளன் இவ்
வுலகையாள்வான்.

* * *

அன்னவன்றான் புரந்தளிக்குந் திருநாட்டில் நெடுங்கால
மளவதாக
மின்னியெழுமுகிலின்றி வெந்துயரம் பெருகுதலும்
வேத நன்னூல்
மன்னுமுனிவரையழைத்து மாதானம் கொடுக்கினும் வான்
வழங்காதாகப்
பின்னுமுனி வரர்க்கேட்பக் கலைக்கோட்டு முனிவரின்வரன்
பிலிற்றுமென்றார்.

வளநகர் முனிவரன் வருமுன் வானவன்
களணமர் கடுவெனக் கருகி வான் மிசைச்
சளசள வெனமழைத் தாரைகால்றன
குளனொடு நதிகள்தம் குறைகள் தீரவே.

(இராமாயணம்)

எனவரும் இவற்றால் மேற்குறித்த உண்மைகள் நன்குணரப்படும்.

மழையினது வன்மையும் நன்மையும் இதனால் கூறப்பட்

* * *

16. பண்டோர் பசும்புல்லும் பாரா திடைக்காடர்
கொண்டார் வரகை குமரேசா — கண்ட
விசும்பிற் றுளிவீழி னல்லால்மற் றாங்கே
பசும்புற் றலைகாண் பரிது. (௬)

இ—ள்.

குமரேசா! இடைக்காடர் ஒரு பசியபுல்லையுங்காணாமல் என் வரகையே உணவாகக்கொண்டார் எனின், விசும்பிலிருந்து துளி வீழ்ந்தால் அல்லது பசும் புல்லினது தோற்றத்தையும் காண்டல் அரிது என்க.

விசும்பு=மேகம்.

விசும்பு துளியை வீழ்த்தினால் நிலம் பசும்புல்லைக்காட்டும். இல்லையானால் காட்டாது என்பதாம்.

ஓர் அறிவுயிரும் தோன்றாதெனவே மற்றையவுயிர்களின் தோற்றம் சொல்லவேண்டாவாயிற்று.

மழையில்லையானால் இவ்வுலகில் ஓரறிவுயிரும் உண்டாகாதென்பதாம். இவ்வுண்மை இடைக்காடர் காலத்தில் காணம்

கதை

இடைக்காடர் என்பவர் கடைச்சங்க காலத்தில் இருந்த ஒரு பெரியவர். சோதிடத்தில் சிறந்தவர். சித்திகள் பல கைவரப் பெற்றவர். நல்ல வுத்தமர். இவர் ஒரு காலத்தில் பன்னிரு வருடங்கள் வரையும் இந்நில வுலகத்தில் மழை பெய்யாதென்பதைத்தமது நுண்ணறிவால் முன்னுணர்ந்தார். அதனால் பின் வரும் தம் வாழ்வுக்கு வரகைச் சேகரித்து வைத்தார். காய சித்தியால் வாழ்ந்தார். அப்பஞ்ச காலத்தில ஒரு பசும்புல்லையும் இவர் காண்பதரிதாயிருந்தது. புலவர் புராண முதலிய பல நூல்களிலும் இச்சரிதம் காணப்படும்.

நிலம் உளதாயினும் மழையிலதாயின் அதனாற்பயனில்லை யென்பதிதனாற் கூறப்பட்டது.

* * *

17. மண்டுகடல் பெற்றிருந்தும் வான்போயேன் பண்டுமழை
கொண்டுவந்தார் மூவர் குமரேசா—கொண்ட
நெடுங்கடலும் தன்னீர்மைகுன்றுந் தடிந்தெழிலி
தானல்கா தாகி விடின். (எ)

இ—ள்.

குமரேசா! மூவர் கடல் பெற்றிருந்தும் வான் போய் ஏன் பண்டு மழையைக்கொண்டு வந்தார் எனின், எழிலி நல்கா விடின் கடலுந்தன் இயல்பு குறையும் என்க.

எழிலி = மேகம்.

மூவர் என்றது சேரசோழ பாண்டியர் என்னும் மூவரசரை.

மேகமானது கடல் நீரை மொண்டு நிலத்தின்கட் பெய்ய வில்லையானால் அக்கடலும் தன் தன்மைகுன்றும் என்பதாம். உம்மை சிறப்பை விளக்கிற்று. நெடுமை அளவின்மையைக் குறித்தது. நிலத்துக்கேயன்றிக் கடலுக்கும் மழைவேண்டும் என்றபடி.

மழையில்லையானால் நீர் நிறைந்த கடலிருந்தும் பயன் இல்லையென்பதாம். இவ்வுண்மை மூவேந்தர் பாலும் ஒரு காலத்தில் காணப்பட்டது.

கதை

சேரநாடு சோழநாடு பாண்டிநாடு என்னும் இம்மூன்று நாடுகளும் ஒரு காலத்தில மழை வளங்குன்றி வறுமை மிக்கிருந்தன. அதனால் துயர்பல தொடர்ந்தன. அந்நாட்டு அரசர் மூவரும் இக்குறையை நினைந்தார். உளமிக நொந்தார். ஒன்று சேர்ந்தார். அகத்திய முனிவரிடம் சென்றார் உற்றதை யுரைத்தார். அம்முனிவர் பெருமானும் கோள்கள் நிலைமாறியுள்ளமையைத் தெளிந்து, நீவிர் மூவரும் இந்திரனை யெய்தி மழை வளங்கேண்மின் என்று பணித்தார் விண்ணுலகம் போதற்குரிய விரதமந்திரங்களையும் உபதேசித்தார். இவரும் அவற்றின்படி நடந்து வான் புகுந்தார். வானவர்கோனைக் கண்டார். மகிழ்ந்தார். அவ்வமரர் கோனும் இவர்களை ஆதரித்து வேண்டிய மழை வரம் விருப்புடன் தந்தான். விடைபெற்றிவரும் விரைவுடன் மீண்டார். மழை பெய்தது. தம்முடைய நாடுகள் நன்னிலையுற்றன. கடல் நீர் இருந்தும மழை நீர்க்காக இம்மன்னர் மூவரும் வானம் புகுந்தனர். அதன் பின் அம் மூந்நாடுமே நன்றாய் நன்கு செழித்தன.

மழையில்லையானால் கடலும் நிலைகுலையுமென்பது இதனாற் கூறப்பட்டது.

* * *

18. வென்றி மதுரையில் முன மெய்ச்சிறப்பும் பூசனையும்
குன்றி நின்ற தென்னே குமரேசா — என்னும்
சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு. (அ)

குமரேசா! மதுரையில் முன்னம் பூசையும் சிறப்பும் ஏன் குன்றி நின்றதெனின், வானம் வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டுச்செய்யப்படும் சிறப்பும் பூசையும் செல்லாதென்க.

சிறப்பு=திருவிழா. செல்லுதல்=நடத்தல்.
வறத்தல்=பெய்யாதுபுலர்தல.

மழை பொழியாதாயின் இவ்வுலகத்தாரால் தேவர்கட்குச் செய்யப்படும் சிறப்பும் பூசையும் நடவாதென்பதாம். ஆலயவழிபாடுகள் குன்றும என்றபடி. இவ்வுண்மை நெடுஞ்செழியன் காலத்தில் மதுரையில் காணப்பட்டது.

ண்ணை காலத்தில் மதுரையிலிருந்து அரசுபுரிந்த நெடுஞ்செழியன் என்னும் அரசர் பெருமான் கோவலனை ஆராயாமல் கொல்வித்தான். அத்தீவினையால் அவனது நாட்டில் மழை பெய்யவில்லை. நகரிலும் நாட்டிலும் துயர்பல நிறைந்தன. வறுமையும் நோயும் பெருகி வளர்ந்தன அக்காலத்தில் தெய்வங்கட்குச் செய்யத்தக்க சிறப்பும் பூசையும் செல்லாவாயின. வளமலி மதுரையும் பொலிவிழந்திருந்தது. இது நீங்கும் பொருட்டு அத்தீவினைக்குப் பிராயசித்தம் ஒன்று செய்தனர் அதன்பின் மழைபெய்தது. பூசையும் சிறப்பும் பொலிவுற நடந்தன.

மழையில்லையானால் விழவும் பூசையும் உளவாகா என்பது இதனால் கூறப்பட்டது.

* * *

19. பண்டுபலர் நோன்பிழந்தார் பாண்டியனும் பாவலரைக்
கொண்டிலனென் விட்டான் குமரேசா—கொண்டதொரு
தானந் தவமிரண்டுந் தங்காவியனுலகம்
வானம் வழங்கா தெனின். (௧)

இ—ள்.

குமரேசா! பண்டொரு காலத்தில் பலர் தவத்தை யிழந்தனர், பாண்டியனும் புலவர்களைப் போற்றாமல் ஏன் கைவிட்டான் எனின், வானம் வழங்காதெனின் வியனுலகத்தில் தானமும் தவமும் ஆகிய இரண்டறங்களும் தங்கா என்க.

வியன் உலகம் = அகன்றவுலகம்.

உம்மை அவனது வள்ளற் குணத்தை விளக்கி நின்றது. தங்குதல் நிலைத்தல். பலர் என்றது கௌதமர் முதலிய மாதவர்களை

வானம் வழங்குதல் = மழை பெய்தல்.

மழையில்லையானால் நெல்மணி முதலிய பொருள்கள் இவ்வுலகில் இலவாய் முடியும். அதனால் ஒரு பொருளை ஒருவருக்குக் கொடுத்தலாகிய தானம் தங்காதாயிற்று. எத்தகைய தவசிகளாயினும் உயிர் உடலில் நிலைத்திருத்தற்பொருட்டு உணவேனும் நீரேனும் சிறிது உட்கொள்ளல் வேண்டும். அவ்வுணவும் நீரும் மழையில்வழியில்லை ஆதலால் தவம் தங்காதாயிற்று.

மழை பெய்யாதாயின் இவ்வுலகில் தானமும் தவமும் நிலையா என்பதாம். தானம் நிலையாமை பாண்டியன்பாலும் தவம் நிலையாமை கௌதமர் முதலிய மாதவர் பாலும் காணப்படும்.

கதை 1.

இற்றைக்கு இரண்டாயிர வருடங்கட்கு முன் மதுரையம்பதியில் அரசர்பெருமானாகிய பாண்டியன் ஒருவர் இருந்தார். இவர் அருந்திறலும் பெரும்புலமையும் ஒருங்கு நிறைந்தவர்' பல்லாயிரம் புலவர்களை ஒருங்குசேர்த்து ஆதரித்து வந்தனர். வருநாளில் அங்கு மழை பெய்யவில்லை புலவர்களைப்பாதுகாக்க முடியாமல் அரசன் வருந்தி, புலவீர்! என் நாடு நலமடைந்த பின் வம்மின்; இப்பொழுது செழித்த நாட்டைச் சேர்மின் என்று அவரனைவரையும் அனுப்பினர்.

இஃது இறையனாரில் உள்ளது.

கதை 2

கௌதமர் அநேகமுனிவர்களுடன் தென்றிசையில் பிரமகிரியில் அருந்தவஞ் செய்துகொண்டிருந்தார். அக்காலத்தில் பல வருடங்களாக மழை பெய்யாது பொய்த்தது. உயிர்கள் பல மாண்டன முனிவர் பலரும் தவநிலை குலைந்தார். பதைத்தார். பல திசைகளிலும் பிரிந்தகன்றார். கௌதமர் மட்டும் கலங்காமல் நின்றார் வருணனைக்கருதினார். இவரது தவமகிமையால் அவன் வந்தான. அவன் பால் இவர் மழைவேண்டினார். அவன் என்றுங்குன்றாத ஒரு நீர் நிலையை அருளிப்போயினான். கௌதமர் அதனால் களிப்புற்று வாழ்ந்தார். இதன் விரிவு ஞான சங்கிதையில் காணப்படும்.

தானமும் தவமும் உளவாதற்கு மழையே காரணம் என்பது இதனாற் கூறப்பட்டது.

20. வானீர் இலாமையினால் மாதவரும் அத்திரிப்பேர்க்
கோனுமேன் நொந்தார் குமரேசா—ஊனமிலா
நீரின் றமையா துலகெனின் யார் யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு (௰)

இ—ள்.

குமரேசா! அத்திரிமுனிவரும் மற்றை மாதவரும் வான் நீர் இலாமையால் ஏன் வருந்தினார் எனின், யார் யார்க்கும் மழையையின்றி உலகொழுக்கம் அமையாதென்க.

எவ்வகைப்பட்ட சிறப்பினையுடையார்க்கும் என்பார், யார் யார்க்கும் என்றார். முற்றத்துறந்த முனிவரானும் நீர் இல்லாமல் உலகில் ஒரு கருமமும், செய்ய முடியாதென்பதாம்.

உலகியல் ஒழுங்காக நடைபெறுதற்கு நீரே காரணமென்பதும் அந்நீரும் மழையினாலேதான் உளதாகின்றதென்பதும் இம்மழையில்வழி யெத்தகையோர்க்கும் எதுவும் செய்ய முடியாதென்பதும் இதில் காட்டப்பட்டன இவ்வுண்மை அத்திரி முனிவர்பால் காணப்படும்.

கதை

முன்னொரு காலத்தில் காமதம் என்னும் வனத்தில் அத்திரி முனிவர் அருந்தவஞ் செய்துகொண்டிருந்தார். அவ்வனம் பசிய இலைகளையும் இனிய கனிகளையுமுடைய பலவகை மரங்களால் அலங்கரிக்கப் பட்டிருந்தது. இளஞ்செடிகளும் செழுங்கொடிகளும் அதில் நிறைந்திருந்தன. விழுமிய முனிவர் பலர் குழுமியிருந்தனர். இங்ஙனம் இருந்துவரு நாளில் பலவருடங்களாக உலகில் மழை பெய்யாது நின்றது. உயிர்கள் பலவும் மருகி மாண்டன. புல் மரமெல்லாம் பொரிந்துகரிந்தன. குழுமியமுனிவரும் குலைந்து நடுங்கினர். ஐம்பத்து மூன்று வருடம்யோகத்திலிருந்த அத்திரி முனிவரும் தக்களித்தார். விழித்தார் நீர் இன்மையை நினைந்தார். நெஞ்சுருகினார். சில வருடங்கள் கழிந்தபின் இறைவனருளால் மழை பெய்தது அதனால் அளவில் இன்பம் அடைந்தார். உலகியலும் நலமுற நடந்தது பொருளும் இன்பமும் பொருந்தி வளர்ந்தன. இதன் விரிவு சிவமகாபுராணத்தில் காணப்படும்

எல்லாவற்றிற்கும் மழையே காரணம் என்பது இதனால் கூறப்பட்டது.

இவ்வதிகாரத்தின் தொகைப்பொருள்

மழை அமிழ்தம்போல்வது. அது பலவகையிலும் உயிர்களுக்கு உதவி புரிகின்றது. மழை பெய்யாது மறுதலால் பசி உயிர்களை வருத்தும். மழைபொழியாதாயின் உலகில் உழவு தொழில்கள் நடவா. மழையே ஆக்கமும் கேடும் ஆக்கவல்லது. அஃதில்லையானால் உலகில் ஓரறிவுயிரும் இல்லை. மழை நீர் இன்றேல் கடல் நீரும் தன்னியல்குன்றும். மழைபொழியாதாயின் விழவும் பூசையும் நடவா. அஃதில்லையானால் தானமும் தவமும் இல்லை. அஃதுள்ளதானால் உலகியல் நன்கு நடைபெறும். என்பனவாம்.

௩-ம் அதிகாரம்

நீத்தார் பெருமை.

அஃதாவது துறந்தாரது பெருமை.

21 மண்டுபுகழ் மாணிக்க வாசகர்சீ ரைப்பனுவல்
கொண்டுபுகல் வானேன் குமரேசா—கொண்டாட
ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
வேண்டும் பனுவற் றுணிவு.

இ—ள்

குமரேசா! மாணிக்கவாசகரது பெருமையை நூல்கள் ஏன் மகிழ்வுகொண்டு புகலுகின்றன எனின், ஒழுக்கத்தின்கண் நின்று துறந்தாரது பெருமையைப் பனுவல்களது துணிவு விழுப்பத்து வேண்டும் என்க. பனுவல்துணிவு = நூல்களின்முடிவு.

விழுப்பத்து வேண்டும் = மேன்மையாக விரும்பும்.

துறந்தார்பெருமையை விழுமிதாக விரும்புவதே நூல்களது சிறந்த நோக்கம் என்பதாம். நீத்தல் = துறத்தல்.

அஃதாவது அகம் புறம் என்னும் இருவகைப்பற்றுக்களையும் அறவே விடுத்தல்.

ஒழுக்கமுடையராய்த் துறந்தாரே பெரியார் என்பதும் அவரது பெருமையை நூல்கள் விழுப்பமாக விரும்பும் என்பதும் இதில் உணர்த்தப்பட்டன. இவ்வுண்மை மாணிக்கவாசகர் பால் உணரப்படும்.

கதை.

மாணிக்கவாசக சுவாமிகள் சைவசமய குரவர் நால்வருள் ஒருவர். பாண்டிய நாட்டிலே திருவாதவூரிலே அந்தண வருணத்திலே அமாத்தியர் குலத்திலே அவதரித்தார். இவரது தாயார் சிவஞானவதியார். தந்தையார் சம்புபாதாசிரிதர். இள

ளமையிலேயே வேதங்கள் ஆகமங்கள், புராணங்கள், இதிகாசங்கள் முதலிய பல நூல்களையும் முழுவதுங்கற்றார். நிறைந்த அறிவும் சிறந்த ஒழுக்கமும் பெற்றார். அக்காலத்தில் மதுரையில் அரசு புரிந்துவந்த அரிமர்த்தன பாண்டியனுக்கு அமைச்சராயமர்ந்தார். அவ்வரசன் இவருக்குத் தென்னவன் பிரமராயன் என்ற பட்டமுந்தந்து, சீர்கள் பலசெய்தான். இவரது பெருங்குணங்களைக்கண்டு மகிழ்ந்து புகழ்ந்தான்; அன்புமிகுந்தான்; ஆதரித்துவந்தான். ஆயினும், இவர் இம்மை மறுமையின்பங்களை வெறுத்துப் பேரின்பத்தையே நாடினார். ஒழுக்கநெறியில் நின்று வழுவாமல் ஒழுகினார். துறவுற்றார். மெய்யுணர்வு பெற்றார். இருவகைப்பற்றுக்களையும் இகந்தார். இறைவன் திருவருளை யெய்தினார். இவ்வுண்மை,

சுற்றமுங் கொட்பும் கேடுந் துன்பமும்
இன்பும் அற்றேம்
வெற்றுடல் மானமு நீர்த்தேம் வெறுக்கைமேல்
வெறுக்கைவைத்தேம்

செற்றமுஞ் செருக்குங் காய்ந்தேம் தீவினை
யிரண்டும் தீர்ந்தேம்
கற்றைவார் சடையான் கோலங் காட்டியாட்
கொண்ட அன்றே.

என்ற இவர் திருவாக்கால் நன்றுதெளிவாம்.

திருவாதவூர்ப் புராண முதலிய பல நூல்களும் இவரது பெருமையை விழுமிதாக விரும்பிப்பாடுகின்றன.

வெறுக்கை = பொருள்.

நீத்தார் பெருமையையே நூல்கள் மேன்மையாக விரும்பும் என்பது இதனால் கூறப்பட்டது.

22. பண்டு கடல்பருகிப் பார்சமன்செய் மாதவன்சீர்
கொண்டதுணை என்னை குமரேசா--கண்டு
துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
திறந்தாரை எண்ணிக்கொண் டற்று. (உ)

இ—ள்.

குமரேசா! கடலைக்குடித்து இவ்வுலகத்தைச்சமன் செய்த அகத்திய முனிவரது பெருமையின் அளவு என்னையெனில், துறந்தாரது பெருமையை அளவிட்டு அறியப்புகுதல இவ்வுலகத்தில் இறந்தாரை இத்துணையரென எண்ணி அறியப்புக்கதுபோல்வதாம் என்க.

அப்பெருமை அளவிடமுடியாதென்பது குறிப்பு. கொண்டால் என்பதுகொண்டு எனநின்றது. துறந்தவர் பெருமைக்கும் இறந்தவர் தொகைக்கும் அளவில்லை என்பதாம்.

இறந்தார் தொகைமேல்வைத்துத் துறந்தார் பெருமைக்கு இதில் வரம்பின்மை கூறினர்.

கதை

அகத்தியர் என்பவர் முற்றத்துறந்த முனிவரெவரினும் முதன்மைவாய்ந்தவர். முன்னொருகாலத்தில பிரமன் ஒருவேள்வி செய்தான். அதில் அமைந்துள்ள கும்பம் ஒன்றில் இவர் உற்பவித்தார். அதனால் உம்பரும் இம்பரும் இவரைக் கும்ப முனிவர் என்றழைத்தார்கள். இருவகைப் புலவரும் இவரதுபெரும் புகழை விரும்பிப்போற்றுவர். இவர்செய்துள்ள அற்புதங்கள் அளவிடலரியன. இவர் ஏவலைச்செய்ய தேவரும் ஆவலுறுவர். தேவர் கோனும் இவரது சாபமெய்தினன். திருமாலையும் சிவபெருமானாக இவர்செய்தார் எனின், வேறுகூறுவதென். திருக்குற்றாலத்து மாலடியார் இவரோடு மாறுகொண்டு வாதுபுரிந்த காலத்தில் இவர் வைணவ வேடங்கொண்டார். ஆலயத்துட் புகுந்தார். திருமால் வடிவோடு அங்கு எழுந்தருளியிருந்த

மூர்த்தியைக்கண்டார். அணுகினார். வைணவவேதியர் பலருங் காண அம்மூர்த்தியின் முடிமேல் தமது செங்கையை வைத்தார். சிவமாகச் சிந்தித்தார். உடனே

முறுகுவலம் புரிக்கரத்து மான்குறுகப் பெரியதுழாய்
முடியின் மீது
சிறியமதிக் கலைகுறுகத் திலகநுதல் விழிகுறுகச்
செழும்பூண் மார்பில்
நிறையரவப் பணிகுறுக நிகிலவுலகமும் நிறைந்து

குறுகுகுறு கெனப்பரவித் திருவடிக்கீழ்க் குறுமுனிவன்
குறுகுங் காலை.

தவம்பெருக அறம்பெருகப் பொருள்பெருகத், தெருள்
பெருகச் சைவம் ஓங்கச்
சுவம்பெருக மனுநீதித் துறைபெருக நிறைபெருகச்
சுருதி வாய்மை
நவம்பெருகச் சரியாதி சதுட்டயங்கள் நனிபெருக
ஞால மெல்லாம்
சிவம்பெருகக் குறுகியருள் பெருகினான் குற்றாலத்
தேவ தேவன்.

வேறு

சித்தினாற் கரும்பொன்மேனி செம்பொனாம் படிபோற் கும்பன்
பத்தியால் உருகி மாலாம் படிவனே பரம ஞானன்
சத்துடன் அசத்து மாகிச் சதசத்து மான ஞான
நித்திய நிமலா னந்த நிட்கள சகள மூர்த்தி.

(திருக்குற்றாலத்தலபுராணம்.)

கடல் குடித்த கதை.

விருத்திரன் என்னும் அசுரன் இந்திரனோடு பெரும்போர் புரிந்தான். முடிவில் ஆற்றாமல் கடல்புக்கொளிந்தான். இந்திரன்

அகத்தியரையணுகி யிதனை அறிவித்தான். முனிவர் கடல்நீரைக் கையிலேந்தி முற்றவும் வற்றப்பருகி யவ்வசுரனை அமரர் கோனுக்குக் காட்டினார். அவனுங்கண்டான். குலிசத்தால் அவனைக்கொன்றான். வென்றிகொண்டான். முனிவரும் பருகிய கடலை மீண்டு உமிழ்ந்தார். அனைவரும் கண்டார். அன்புடன் வியந்தார். இதன் விரிவு திருவிளையாடற் புராணத்தில் காணப்படும்.

பரமன் செய்தது:—இறைவனது திருக்கலியாணகோலத்தைத் தரிசிக்கும் பொருட்டு எல்லாவுயிர்களும் இமயஞ் சார்ந்தன. அதனால் வடதிசை தாழ்ந்தது. உலகம் தலாது நிலைகுலைந்தது. உயிர்கள் அஞ்சி அலமந்தன. தேவர்களும் தியங்கினார். மாதவர்களும் மயங்கினார். மேருவுந் தளர்ந்தது. சேடனுங் கலங்கினான். அப்பொழுது எல்லாம்வல்ல இறைவன் மகத்துவமிகுந்த நமது அகத்திய முனிவரை நோக்கினார். முனிவர் திலகமே! இங்குவருக என்றழைத்தார். அவரும் வந்து வணங்கினார். அருந்தவமிகுந்த பெருந்தகையே, நீ தென்றிசை சென்று பொதிகையில் நின்றால் இவ்வுலகம் சமமாய் நிலைபெறும். உயிர்களும் நலமுறும் என்று பரமன் பணித்தார். முனிவரும் அப்பணியைத் தலைமேற்கொண்டார். திருவுருவை உள்ளத்தில் சிந்தித்தார். தென்றிசைநோக்கி நடந்தார். பொதிகை மலையை வந்து நண்ணினார். நண்ணலும் உலகம் சமமாய் நன்னிலையுற்றது. வருந்திய வுயிர்களும் மகிழ்ந்திருந்தன. தேவர் முதலிய யாவரும் குறுமுனியின் பெருமையை வியந்து புகழ்ந்தார். இதனால் அளவிடலரிய பெருமை நமது முனிவர்பால் அமைந்துள்ளமை தெளியப்படும்.

பொதியமதென்னும் வெற்பில் புனிதமா முனிவன் வைகத்
துதியுறு வடபாற் றென்பாற் புவனியோர் துலைபோலொப்ப
அதுபொழுதுயிர்களானோர் அணங்கொரீஇ யானந்தெய்தி
மதிமகிழ்ந் தமர்ந்தார் தொல்லை வதுவையின் செய்கை சொல்வாம்.

அணங்கு—வருத்தம். ஒரீஇ—நீங்கி. (கந்தபுராணம்)

துறந்தார் பெருமையே சிறந்ததென்பது இதனால் கூறப்பட்டது.

23. பண்டு துறவுகொண்ட பட்டினத்தார் மாண்புலகில்
கொண்டதுயர் வெவனே குமரேசா—கண்ட
இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு. (௩)

குமரேசா! துறவுகொண்ட பட்டணத்தாரது பெருமை ஏன் உலகில் உயர்ந்து விளங்கியதெனின், இருமைவகை தெரிந்து ஈண்டு அறம் பூண்டாரது பெருமையே உலகின்கண் உயர்ந்ததென்க.

இருமை என்றது பிறப்பு வீடு என்னும் இரண்டனை. வகை தெரிதலாவது, அவற்றின் துன்ப இன்பக் கூறுபாடுகளை முறையே ஆராய்ந்தறிதல். ஈண்டு அறம் என்றது துறவறத்தை.

பிறங்குதல்—மிகுந்து விளங்குதல்.

துன்பந்தோன்றின எவருந்துறந்து ஏகராய்த் தனித்தே யின்பந்தேடல் இயற்கை ஆதலால் இருமைவகை தெரிதலே துறவு பூணுதற்கு ஏதுவாயிற்று.

உலகப்பொருள்கள் முழுவதுமுடைய அரசர் பெருமையினும் அவற்றை முற்றவுந்துறந்த முனிவர் பெருமையே சிறந்ததென்பதாம்.

இருமைவகை தெரிதலே துறவு பூணுதற்கு ஏது என்பதும் அங்ஙனம் பூண்டவர் பெருமையே புவியில் சிறந்ததென்பதும், இதில் உணர்த்தப்பட்டன. இவ்வுண்மை பட்டினத்துப் பிள்ளையார்பால் உணரப்படும்.

கதை

பட்டினத்தார் என்பவர் உத்தமத்துறவு பூண்ட ஒருதத்துவஞானி. இவர் பிறந்தவூர் காவிரிப்பூம் பட்டினம். வணிககுல திலகரான இவர் சென்னையில் வசித்திருந்தார் என்பர். இவரது பிள்ளைத்திருநாமம் திருவெண்காடர் என்பதே. இவர் பல மாக்

கலங்களுக்குத் தலைவராய் விளங்கினார். இவரது கலங்கள் கலவாக்கடல்களேயில்லை. மறுபுலத்தவரோடும் வாணிகஞ்செய்தார். அரசரும் விரும்பும் பெரும்பொருள் பெற்றார். உலகபோகங்களுக்குரிய எல்லா நலங்களும் இவர்பால் ஒருங்கே அமைந்திருந்தன. வர்த்தகமுறையில் இவரது பெரும்புகழ் எங்கும் பரவிநின்றது. இம்மை யின்பங்களில் இவர்மனம் செம்மையாக அழுந்தியிருந்தது. இங்ஙனம் இருந்துவரும் நாளில் இவர் பண்ணியிருந்த புண்ணிய பலத்தால ஒருபெரியவர் இவர்பால் நண்ணினார். தம்பால் வந்த அந்தச் சந்நியாசியை இவர் நன்றாக உபசரித்தார். அன்பு செய்தார் உலக இன்பத்தில் இவர் மனம் ஊன்றி நிற்கும் தன்மையை அப்பெரியவர் ஓர்ந்தார். உண்மையான இவரது பரிபக்குவத்தையும் தெளிந்தார். ஒரு முறியில் ஒருசிறு வாக்கியத்தை எழுதி இவர் மனைவிபால் தந்து இவரிடம் சேர்க்கும்படி கட்டளையிட்டுச் சென்றார். துறைமுகம் போயிருந்த இவர் மனையகம்புகுந்தார் உண்டு மகிழ்ந்தார். அப்பொழுது மனைவி விநயமாக அம்முறியினை இவரிடம் தந்தாள். தந்ததை வாங்கித் தனியே நோக்கினார். அதில், "காதற்ற ஊசியும் வாராது காணும் கடைவழிக்கே" என்று எழுதியிருந்தது. அதின் கருத்தைத் தமது கருத்தில் இருத்தினார். சிந்தித்தார். பிறவியிலுள்ளவாகும் துன்பக் கூறுபாடுகளையும், வீட்டில் உளவாகும் இன்ப நலங்களையும் நன்கு தெளிந்தார். அரும்பொருளனைத்தையும் விடுத்தார். துறவறம் பூண்டார் அகன்பின் இவரது பெருமை உலகமெங்கும் பரவியோங்கி உயர்ந்தது. இவரது சிறந்த துறவைக் குறித்து உயர்ந்த நூல்கள் பல உவந்து கூறுகின்றன.

"பட்டினத்துப் பிள்ளையைப்போல் யாரும் துறக்கை
அரிது அரிது" (தாயுமானவர்)
"பட்டினத்துப்பிள்ளையினைப் பத்திரகிரியைப் பரவி
விட்டுவிடமாட்டார் வெறு வீடர்" (ஒழிவிலொடுக்கம்)

துறவியின் பெருமையே யிவ்வுலகில் உயர்ந்ததென்பதிதனால் கூறப்பட்டது.

24. கொண்டபொறி கொண்டொன்றும் கொள்ளாத நம்மாழ்வார்
கொண்டனர்வீ டென்னே குமரேசா—கொண்ட
உரமென்னும் தோட்டியான் ஓரைந்துங் காப்பான்
வரமென்னும் வைப்பிற்கோர் வித்து. (ச)

இ—ள்.

குமரேசா! பொறிகளால் புலன்களைக் கொள்ளாத நம்மாழ்வார் ஏன் வீட்டின்பத்தைக் கொண்டார் எனின், அறிவென்னும் தோட்டியால் ஐம்பொறிகளையும் அடக்கினவர் வீட்டு நிலத்துக்கோர்வித்து ஆவர் என்க. வரன் என்னும் வைப்பு—மேலான இடம்; அஃதாவது முத்தி நிலம்.

தோட்டி—யானையையடக்கும் கருவி. அஃது அங்குசம் எனப்படும்,

அறிவைத் தோட்டி யென்று உருவகஞ் செய்தமையால், ஐம்பொறிகளும் யானைகளாகக் கொள்ளப்பட்டன. புலன் மீறிச் செல்லும் பொறிகளை மதமீறிச் செல்லும் யானைகளாகக் கருதி யிதுகூறினார். ஐம்பொறிகளையும் அடக்கினவனே முத்தி நிலத்தில் முளைத்துக் கிளைத்து விளங்குவான் என்பார் "ஐந்துங் காப்பான் வரன் என்னும் வைப்பிற்கு ஓர் வித்து" என்றார். ஓர் என்பது அருமையை யுணர்த்திற்று.

முத்தி நிலத்துக்கு வித்து என்றதனால் இந்த நிலத்தில் வந்து பிறந்து வருந்தான் என்பதாம். சிற்றின்பத்தில் சிந்தையைச் செலுத்தாதவன் பேரின்பத்தில் நின்று பெருமையடைவான் என்றபடி.

பொறிகள் எப்பொழுதும் புலன்களையே நாடிச் செல்லும் என்பதும் அறிவால் அவற்றை அடக்கவேண்டும் என்பதும், அங்ஙனம் அடக்கினவனே வீட்டினை யடைவான் என்பதும் இதில் உணர்த்தப்பட்டன. இவ்வுண்மை நம்மாழ்வார் பால் உணரப்படும்.

கதை.

நம்மாழ்வார் என்பவர் இற்றைக்கு 5000 வருடங்கட்கு முன்னரே பாண்டிய நாட்டிலே திருநகரியென்னும் திருக்குருகூரிலே வேளாள வருணத்திலே சிறந்திருந்த காரியார்க்கும் உடைய நங்கையார்க்கும் புத்திரராய்வந்து அவதரித்தார். இவர் கருவிலே திருவுடையவர். தெய்வத்தன்மை நிறைந்தவர் ஆன்மா உடலோடுகூடி யிவ்வுலகில் உருவாகத் தோன்றியவுடனே ஒரு விக வாயுவந்து அதனைப் பற்றும். அப்பற்றுதலால் அது தனது பூர்வீக அறிவையும் பெருமையையும் இழந்து அவிச்சையின் வயப்படும். அதன்பின் அழுகல், அரற்றுதல், பருகுதல், முதலியவற்றைச் செய்து உலகவாசனையை யெய்தும். இதுஜட வாயு எனப்படும். இவ்வாயு தனதியல்பால் இவர் தோன்றியவுடனே இவரையும் தொடுதற்கு வந்தது. தனையணுகு முன்னமே யிவர் அதனை உங்காரத்தால் அதட்டி ஓட்டினர். அதனால் இவர் சடகோபர் என்னும் பெயரை எய்தினர் மாறனார் என்பது தான் இவருக்குப் பெற்றோர் இட்டபெயர். வேறு நாட்டமின்றி உலகியலுக்கு மாறாக இருந்தமையால் இவருக்கு இப்பெயரிடப்பட்டது. இவரது பிறப்பும் வளர்ச்சியும் மிக்க அற்புதமுடையன. பதினாறு பருவம் வரையும் இவர் கண் விழியாமல் மௌனமாக இருந்தார். ஓதாதனைத்தையும் ஒழிவறவுணர்ந்தார். தத்துவவுணர்வை முற்றவும் பெற்றார் திருமால் அடிக்கே பெருமால் கொண்டார். அவரது அடியார் எவரினும் முடியாய் நின்றார். பகவானது கலியாண குணங்களாகிய அமுத வெள்ளத்தில் ஆழ்ந்திருப்பவராதலால் மாலடியவர் ஆழ்வார் எனப்பட்டார். அவரெல்லாருள்ளும் பிரித்து நம்பெருமானால் இவர் நம்மாழ்வார் என்று அழைக்கப்பட்டார். திருமாலும் தமது மலர்வாய்திறந்து ‘‘நம்’’ என்னும் அடைகொடுத்து இவரை அழைத்தார். அது முதல் இவர் நம்மாழ்வார் எனனும் நற்பெயர் பெற்றார். இஃதொன்றே யிவரது பெருமையை நன்கு விளக்கும். இவர் பொறிகளைப் புறத்திற் செலுத்தாமல் பரத்திற் செலுத்தினர். அதனால் பிறவிதீர்த்தார். முத்தியுலகில் நித்த

ராப் முளைத்தார் திருநகரி என்னும் ஊர் இவர் அவதரித்த பின்னர் ஆழ்வார் திருநகரி யென்று வழங்கிவருகின்றது.

ஐம்பொறிகளை யடக்கினவனே வீட்டினை யடைவான் என்பது இதனால் கூறப்பட்டது

* * *

மாதவத்துக் கோதமன்றன் வாய்மொழியின் வன்மை யெவர்
கோதகலக் கண்டார் குமரேசா— பூதலத்தில்
ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்புளார்கோமான் (௫)
இந்திரனே சாலுங் கரி.

இ-ள்.

குமரேசா! கோதமனது வலிமையைக் குற்றமறக்கண்டார்யாவர் எனின், ஐந்தவித்தானது ஆற்றலுக்கு அகன்றவானத்துள்ளார் இறைவனாகிய இந்திரனே தக்க சான்று என்க.

கோமான் இந்திரன் — இருபெயரொட்டு.

கரி = சான்று

சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் புலன்கள் மேற்செல்கின்ற அவா ஐந்தையும் அடக்கினானது பெருமையும் அவற்றை யடக்காதவனது சிறுமையும் கூறுவார் ஐந்தவித்தான் ஆற்றற்கு இந்திரனே கரி என்று கூறினார்.

இங்கு ஐந்தவித்தான் என்றது கௌதமனை. இவரது வலிமையை உலகிற்கு நன்கு காட்டினான் இந்திரனே ஆகலால் அவனைச்சாலுங்கரி என்றார்.

ஐந்தவித்தானுக்கே அளவில் ஆற்றல் உளதாம் என்பதும் வேறு ஒருவன் எவ்வகையாற்றலை யுடையவனாயினும் அவனுக்கு ஈடாகான் என்பதும் இதில் உணர்த்தப்பட்டன. இவ்வுண்மை கௌதமர்பாலும் இந்திரன்பாலும் காணப்படும்.

கதை

கௌதமர் என்பவர் பெருந்தன்மை நிறைந்த ஓர் அருந்தவர். நெறிதிறப்பா நீர்மையர். மாசற்ற மனமுடையவர். இவர் அகலிகை யென்னும் மனைவியோடு மகிழ்ந்து வாழ்ந்திருந்தார். இவள் அழகனைத்தும் ஒருங்கே குடிகொண்ட திருமேனியையுடையவள். உத்தம குணங்கள் முற்றும் வாய்ந்தவள். இந்திரன் இவள்மீது பெருங்காதல்கொண்டான். இவளது அழகென்னும் பெருங்கடலில் விழுந்து கரைகாணாது வருந்தினான். எவ்வகையிலும் இவளைக்கலந்து இன்புறவேண்டுமென்று கருதினான். கலங்கினான். தெய்வபோகங்கள் அனைத்தையும் வெறுத்தான். அயலொன்றையும் நாடான். மயலையேகொண்டான். பல காலமும் முயன்றான். ஒரு நாள் நடுநிசியில் முனிவரது ஆச்சிரமத்துக்கு வந்தான். கோழிபோல் கூவினான். விடிந்தது பொழுது என்று கருதி முனிவர் எழுந்தார். காலைக்கருமங்களைச்செய்ய நீர் நிலையை நோக்கிப்போனார். உடனே இந்திரன் முனிவர் உருவங்கொண்டான். உள்ளே புகுந்தான். பேதை அகலிகையும் பேதந் தெரிந்திலள். தமது கணவன் என்றே முழுதும் நம்பினாள். கள்ள இந்திரனும் மெள்ள நெருங்கினான். அகலிகையை அணைந்தான். அவளும் இணங்கினாள். இருவரும் கலந்தார் இன்பந் துய்த்தார். நீர் நிலையை நோக்கிச்சென்ற கௌதமர் உரிய காலம் வரவில்லையென்றுணர்ந்தார். மனையில் நிகழும் வினையைத் தமது ஞானத்தால் தெளிந்தார். விரைந்து மீண்டார். புகுந்தார் மனையுள். வந்தனர் முனிவரென் றிந்திரன் கண்டான். உள்ளங்கலங்கினான். உடலும் நடுங்கினான். புரந்தரன் பயந்து ஒரு பூனையாய் ஓடினான். முனிவர்பெருங்கோபங் கொண்டார். அவன் உடல் முற்றும் பெண் குறிகளாகக் கடவதென்று சபித்தார். அவையெல்லாம் அவ்வாறே யுடனே அவனுடலில் வந்தமைந்தன. திரும்பினார். அங்கங்குலைந்த அகலிகையை நோக்கினார். சீறினார். நீ பொல்லாதது புரிந்தாய். ஆதலால் கல்லாகுக என்று சபித்தார். சபிக்கு முன் கணவன்காலில் அகலிகை விழுந்தாள். அறியாமல் அடியாள் அரும்பிழை செய்தேன். இதற்கொரு

முடிவை எனக்கருள் என்றாள். தசரதராமன் திருவடித்துகள் படிமேல் இக்கல்லுருவம் நீங்கி நல்லுருப்பெறுவாய் என்று கௌதமர் கருணை செய்தார். அதன்பின் மனையை யிகந்தார். வனமே புகுந்தார்

இவ்வுண்மை யிதனடியில் வருகின்ற கவிகளில் இனிது தெளியப்படும்.

தையலாள் நயனவேலும் மன்மதன் சரமும்பாய
உய்யலாம் உறுதிநாடி யுழல்பவன் ஒருநாளுற்ற
மையலால் அறிவுநீங்கி மாமுனிக்கு அற்றஞ்செய்து
பொய்யிலாவுள்ளத்தான்றன் உருவமே கொண்டுபுக்கான். (க)

புக்கவ ளோடும் காமப் புதுமண மதுவின்றேறல்
ஒக்கவுண்டிருத்தலோடும் உணர்ந்தனளுணர்ந்த பின்னும்
தக்கதன் றென்ன வோராள் தாழ்ந்தன ளிருப்பத்தாழா
முக்கணான் அனைய வாற்றல் முனிவனுமுடுகி வந்தான். (உ)

சரந்தருசாபமல்லால் தடுப்பருஞ்சாபம் வல்ல
வரந்தருமுனிவ னெய்தவருதலும் வெருவி மாயா
நிரந்தரம் உலகில்நிற்கும் நெடும்பழிபூண்டாளை நின்றான்
புரந்தரன்நடுங்கி யாங்கோர் பூசையாய்ப் போகலுற்றான். (ங)

தீவிழிசிந்த நோக்கிச் செய்ததை யுணர்ந்து செய்ய
தூயவன் அவனை நின்கைச்சுடுசரம் அனையசொல்லால்
ஆயிரமாதர்க்குள்ள அறிகுறி உனக்குண்டாகென்
றேயினன் அவையெலாம்வந்தியைந்தன இமைப்பின்
முன்னம். (ச)

எல்லையில் நாணமெய்தியாவர்க்கும் நகைவந்தெய்தப்
புல்லியபழியினோடும் புரந்தரன்போயபின்றை
மெல்லியலாளைநோக்கி விலைமகளனையநீயும்
கல்லியலாதியென்றான் கருங்கலாய்மருங்கு வீழ்வாள் (ரு)

பிழைத்தது பொறுத்தல்என்றும பெரியவர்கடனே யென்பர்
அழற்றருங்கடவுளன்னாய் முடிவிதற்கருளுகென்னத்
தழைத்துவண்டிமிருந்தண்டார்த் தசரத ராமன்என்பான்
கழற்றுகள் கதுவ இந்தக் கல்லுருத் தவிர்நி யென்றான். (௫)
(இராமாயணம்)

மிதிலைக்குவரும் வழியில் இராமன்பால் விசுவாமித்திரர் அகலிகை சரிதத்தை யிவ்வாறு கூறினார். எனவேயிது இராமாவதாரத்துக்கு வெகுகாலத்துக்கு முன்னரே நிகழ்ந்துள்ளமை பெறப்படும். தவவலியானது தெய்வவலியினும் சாலச்சிறந்ததென்பது இதில் காணப்பட்டது.

பிறப்பால் மனிதனாயினும் ஐந்து அவித்தவன் இந்திரனிலும் சிறந்தவன் என்பது குறிப்பு.

கௌதமனது பெருமைக்கும இந்திரனது சிறுமைக்கும் ஏது இதனால் கூறப்பட்டது.

* * *

26. வீடுமனார் மெய்த்தவத்தை மேவினார் சந்தனுவேன்
கூடினான் காமம குமரேசா—நாடிச்
செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார். (௬)

இ—ள.

குமரேசா! வீடுமன் மனத்தை யடக்கித் தவத்தைச செய்தான் சந்தனு ஏன் அதனை அடக்கமாட்டாமல் காமத்தைக் கூடினான் எனின், பெரியோர் செய்தற்கு அரியனவற்றைச் செய்வார். சிறியோர் அவற்றைச் செய்யமாட்டாமல் எளியவற்றைச் செய்வார் என்க.

அரியது, ஐம்பொறி அடக்கம் எளியது. அஃதின்மை. செயற்கரிய செய்வார் பெரியர் எனப்பொதுவாகக்கூறினபடியால் இதுதான் செயற்கு அரியது, இதுதான் செயற்கு அரியது

என ஒவ்வொருவருந் தத்தமக்கு வேண்டியவாறே கூறலாம்; ஆயினும் பிற்காலத்துப் பெரியார் ஒருவர் அதனை வரையறுத்துளார். அஃது இதனடியில் வருகின்றது.

கந்துக மதக்கரியை வசமா நடத்தலாம்
கரடிவெம் புலிவா யையும்
கட்டலாம் ஒருசிங்க முதுகின்மேற் கொள்ளலாம்
கட்செவி எடுத்தாட்ட லாம்
வெந்தழலின் இரதம்வைத் தைந்துலோ கத்தையும்
வேதித்து விற்றுண்ண லாம்
வேறொருவர் காணாமல் உலகத்துலாவலாம்
விண்ணவரை யேவல் கொளலாம்
சந்ததமும் இளமையோ டிருக்கலாம் மற்றொரு
சரீரத்தினும் புகுத லாம்
சலமேல் நடக்கலாம் கனல்மேல் இருக்கலாம்
தன்னிகரில் சித்தி பெறலாம்
சிந்தையை யடக்கியே சும்மா இருக்கின்ற
திறம் "அரிது" சத்தாகி யென்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேசோம யானந்தமே. (தாயுமானவர்)

கட்செவி=பாம்பு.

செயற்கு அரியது இதுவென இதனால் இனிது புலனாம். பெருமைக்கும் சிறுமைக்கும் உரிமையான உண்மைக் கருவியை யிதில் ஒருங்குணர்த்தினார்.

கல்வி செல்வம் குலம் அதிகாரம் பருவம் உருவம் முதலியவற்றால் சிறியாராயினும் அரியன செய்வரேல் அவரே பெரியர் என்பதூஉம் அவற்றாற் பெரியாராயினும் அரியன செய்யாரேல் அவர் சிறியர் என்பதும் இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை விடுமன்பாலும் சந்தனுபாலும் உணரப்படும்.

கதை

சந்தனு என்பவன் சந்திரகுலவேந்தன். வருணனது அம்சமா வந்து பிறந்தவன். இப்பாரதகண்டத்தில அஸ்திநபுரியிலிருந்து அரசபுரிந்தான். பேரழகும் வீரமும் ஒருங்கே உடையவன். கங்கை என்னும் தெய்வமகளை மணந்து வீடுமன் என்னும் மெய்மகனைப்பெற்றான். மகனும் பருவமடைந்து மதனெனத்திகழ்ந்தான். இங்ஙனம் வருநாளில் ஒருநாள சந்தனு வேட்டைமேற் சென்றான். யமுனாநதியை யணுகினான். அங்கே மச்சகந்தியைக்கண்டான். இவள் அந்நதியில் நாவாய் விடுகின்ற பாதவர் பதியின் மகள். இவளது திருமேனியின் நறுமணம் வெகுதூரம் சென்று வீசுகின்றபடியால யோஜன கந்தியெனவும் பரிமளகந்தியெனவும் புகழப்பட்டாள். அரசன் இவளைக்காதலித்தான். மணஞ்செய்யக்கருதினான். தனது கருத்தை யிவளது தந்தைக் குணர்த்தினான். நின்முதன்மகன் இருப்ப என் புதல்வியை நல்கேன் என்று தந்தை மறுத்தான் அரசனும் மனந்தளர்ந்தான். உடல் மெலிந்தான். நகரையடைந்தான். மாளிகையிற்புகுந்து வாடியிருந்தான். இளவரசாகிய வீடுமன் தநதையின் நிலைமையை வினவியறிந்தான். பாதவர்பதிபாற் சென்றான். பாட்டா! என்று விளித்தான். நின்மகளே எனக்குத் தாய் என்றான். இத்தாய் வயிற்றில தோன்றிய புதல்வர்கட்கே அரசுரிமை உண்டு. எனக்கு அரசுரிமை வேண்டாம். என்றும் மணத்தை யான் இனிச்செய்யேன்; என்னும் உறுதியை முன்னே கூறினான். பரிமளகந்தியைக் கொணர்ந்தான். தந்தைக்கு மணமுடித்தான். தந்தையின் பொருட்டுத்தான் ஐம்பொறி யடக்கினான். அரிய விரதத்தை உரியவாக்கொண்டான். சந்தனு அவளை மணந்தான். இன்பந்துய்த்தான்.

பருவத்திற் சிறியராயிருநதும அரிய செய்து வீடுமர் பெரியர் ஆயினர். அதிற்பெரியராயிருந்தும் சந்தனு எளிய செய்து சிறியராயினர். இதன் விரிவைப்பாரதத்தில் காண்க.

செயற்கரிய செய்து விடுமர் பெரியாராயினர் என்பது இதனால் கூறப்பட்டது.

* * *

27. உற்றசுகன்பால் உலகொடுங்கி நிற்கவவன்
கொற்றமுற்ற தென்னே குமரேசா—முற்றும்
சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
ான் கட்டே யுலகு. (எ)

குமரேசா! உலகமானது சுகமுனிவரது அறிவில் அமைந்து நிற்ப அவர் மேன்மையுற்றது என்னே எனின், சுவைமுதலிய ஐந்தனது வகையினை ஆராய்வானது அறிவின் கண்ணே உலகம் அடங்கிநிற்கும் என்க.

காணப்படுகின்ற இத்தூலவுலகத்திற்கு மூலமானசூக்கும காரணங்களை ஆராய்ந்து தெளிந்தவன அதன்தோற்றத்தைக் கண்டு மயங்காமல் தத்துவஞானியாய் விளங்குவான் என்பார் உலகுவகை தெரிவான் கண்ணதே என்றார்.

புலகம் ஐவகைப்பூதங்களின் காரியம் என்பதும், இதனைத்தெரிதலே மெய்யுணர்வு என்பதும் இவ்வுணர்வுடையவன் அதன் தோற்றத்தில மயங்கான் என்பதும் இதில் உணர்த்தப்பட்டன. இவ்வுண்மை சுகமுனிவர்பால் உணரப்படும்.

கதை.

சுகர்என்பவர் வியாசருடைய பிள்ளை. பிறந்தபொழுதே துறந்து சென்றவர். உலகியலையும் உணர்வியலையும் நன்குதெரிந்தவர். சுகம்என்பது கிளியென்னும் ஒரு பறவைக்குப் பெயர். அதன்முகம் போன்றமுகத்தை யிவர் பெற்றிருந்தமையால் சுகன் என்னும் பெயரை இவர் பெற்றார். இவர் தந்தையினும் சிறந்த தத்துவவுணர்வினர். உலகப்பற்றைமுற்றத்துறந்து விரைந்துசென்றார். தந்

தை மகவாசைபால் பின்தொடர்ந்தார். அழைத்தார். அப்பொழுது எல்லாப் பொருள்களும் என்னை என்னை என்று எதிர்மொழிதந்தன. வகைதெரிவான் கண்ணதே உலகம் என்பது இவர் பால்காணப்பட்டது. இதனை இதனடியில்வருவதால் காண்க

பிறந்தபொழுதே துறந்து பிறைக்குழவி போல் நடப்பப்
பின்போய்த் தொன்னூல
அறைந்த புகழ்வியாதமுனியாதாத்தால மதலாயென்
றழைப்பசெவ்வாய்
திறந்து நறை பொழியுமலர்ச்செழுந்தருவும் ஏன் என்ன
உயிர்கள்யாவும்
நிறைந்துறையும் சுகமுனிவனிரையிதழ்ச்சதா மரைமலர்த்
தாள நினைதல் செய்வாம. (பாகவதம)
சுகமுனிவர் மெய்யுணர்வுடையராய்த் துறந்தார் என்பது
இதனால கூறப்பட்டது.

28. காட்டினநக் கீரன்சீர் கம்பன் பெருமையவர்
கூட்டுமொழி யென்னே குமரேசா — பாட்டில
நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும். (௮)

இ—ள்

குமரேசா! நக்கீரரது சீரையும் கம்பரது பெருமையையும் ஏன் அவர் மொழிகளை காட்டின எனின், நிறைந்த மொழியினையுடைய மாந்தரது பெருமையை நிலவுலகத்தில் அவர் அறைந்த மொழிகளே காட்டிவிடும் என்க

நிறைமொழி = அறிவும் தவமும் நிரம்பிய மொழி.
மறைமொழி = ஆணையிட்டுச் சொல்கின்ற மந்திரமொழி.
காட்டுதல் = பிறரறிய உணர்த்துதல்

மாந்தர் என்னும் சொல் என்றும் பன்மையாகவே நின்று மக்களைச் சுட்டும். பெரியாரது மொழிகள் தம்பயனையாண்டும் தப்பாமல் பயக்கும் என்பது "காட்டிவிடும்" என்னும் துணிவுரையால் காணப்படும்.

சிறந்த பெரியார்களிடத்தில் நிறைந்தமொழிகள் உளவாம், என்பதும் அம்மொழிகளே அவர்களுடைய பெருமைகளை உலகறிய உணர்த்திவிடும் என்பதும் இதில் உணர்த்தப்பட்டன. இவ்வுண்மை நக்கீரர் பாலும் கம்பர் பாலும் உணரப்படும்.

கதை. 1.

நக்கீரர் என்பவர் இற்றைக்கு ஆயிரத்தெண்ணூறு வருடங்கட்கு முன்னர் மதுரையில் இருந்தவர். சங்கப்புலவருள் தலைமையாய் நின்றவர். பொய்யில் புலவர் என்னும் புகழினைப் பெற்றவர். பரம பொருள் நூலுக்கு அரும் பொருள் கண்டவர். நெற்றிக் கண் காட்டினும் குற்றம் குற்றமே யென்று கண்ணுதற் பரமனை முன்னின்று கலங்காமல் வாதித்த கல்விவீரர். இவர் சங்கத்தில் தலைமை பெற்று விளங்கியிருந்தார். அக்காலத்தில் கொண்டான் என்னும் குயவன் ஒருவன் அங்கு வந்தான். சங்கத்தை மதியாது தருக்குற்று நின்றான். வடமொழியே சிறந்ததென்று வாதித்தான். அவ்வளவில் அமையாமல் தமிழை யிழித்துக் கூறினான். அதனால் நக்கீரர் அவனை வெகுண்டு பாடா மறைமொழி யொன்றை விரைவில் மொழிந்தார். உடனே அவன் துள்ளி விழுந்தான். துடித்து உயிர் துறந்தான். அதன் பின் அவன் மேல் அருளி,

ஆரியம் நன்று தமிழ்தீ தெனவுரைத்த
காரியத்தால் காலக்கோட் பட்டானைச் — சீரிய
அந்தண் பொதியில் அகத்தியனார் ஆணையால்
செந்தமிழே தீர்க்கசுவா கா.

என்றொரு கவியை நன்று மொழிந்தார். விழுந்து மடிந்த கொண்டான் எழுந்து மகிழ்ந்து நின்றான். இம்மொழி இவர் பெருமையை அன்று நன்று காட்டிற்று.

நிறை மொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறை மொழி தானே மந்திரம் என்ப. என்னும்

தொல்காப்பியச் சூத்திர உரையில் இது தெளியப்படும்

கதை 2.

கம்பர் என்பார் இற்றைக்கு ஆயிரவருடங் கட்கு முன்னர்ச் சோழ நாட்டிலே திருவழுந்தூரிலே அவதரித்தார். இவரது குலத்தைப் பற்றிப் புலவர் பலர் பலவாறு கூறுகின்றனர் இவரை அந்தணர் என்பார் பலர். வேறு சிலர் அரசர் என்பார் இன்னுஞ் சிலர் வேளாளர் என்பார்-பின்னுஞ் சிலர் உவச்சர் என்பார். கன்னன் பிறப்பும் பின்னாளிற் றுலங்கிற்று கம்பன் பிறப்பு இன்னம் அறிந்தார்கள் இல்லையில்லை முக்காலும் இது மெய்மையே என்றார் மற்றொரு பெரியவர். இவர் குலம் எதுவாயினும் இவரது தோற்றம் தெய்வத் தன்மை வாய்ந்ததென்பது தேற்றம். இராமாயணம் என்னும் காவிய அமுதத்தை மன்பதைகள் என்றும் அநுபவித்து இன்புறும் வண்ணம் அருளுடன் தந்த திருவினையுடையவர். புவியரசர்களும் கவியரசர்களும் போற்றி வணங்கத் தக்கசீர்த்தி வாய்ந்தவர். கல்வியிற் பெரியவர். கவிச் சக்கிரவர்த்தியென்னும் அரும்பெயர் பெற்றவர். பிள்ளைப் பருவத்திலேயே கலைமகள் கருணையை இவர் நலமுறப் பெற்றார். அதனால் நிறைமொழியுடையராய் நிலத்தில் விளங்கினார். அக்காலத்தில் காளிங்கராயன் என்னும் குறுநில மன்னனது குதிரை ஒன்று இவரது குருவின் விளைநிலத்தில் மேய்ந்து கொண்டு நின்றது. அதையிவர் ஓட்டினார். அஃது ஓடவில்லை. வெகுண்டார்.

வாய்த்த வயிரபுர மாகாளியம்மேகேள்
காய்த்த தினைப்புனத்தில் கால் வைத்துச்—சாய்த்துக்
கதிரைமா ளத்தின்ற காளிங்க ராயன்
குதிரைமா ளக்கொண்டு போ. என்று

வசைகவி யொன்றை இசையுடன் மொழிந்தார். உடனே அக்குதிரை மாண்டு விழுந்தது. கண்டார் அதனை. கொண்டார் கருணை. முன் சொன்ன வெண்பாவின் ஈற்றடியை மாற்றி "குதிரை மீளக்கொண்டுவா" என்றார் மாண்டகுதிரை மீண்டெழுந்தது. மேற் குறித்த பெரியார் இருவரும் நிறைமொழி மாந்தர் என்பதை அவர் மறைமொழிகளாலே உலகம் நன்குணர்ந்தது.

பெரியார் பெருமையை அவர் மொழியால் அறியலாம் என்பது இதனால் கூறப்பட்டது.

* * *

29. வென்றிக் கபிலர் வெகுளியால் ஏன்சகரர்
குன்றி மடிந்தார் குமரேசா—என்றுங்
குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது (கூ.)

இ—ள்

குமரேசா! கபிலமுனிவர் வெகுளியால் சகரர் எல்லாரும் ஏன உடனே இறந்தாரெனின், குணமென்னும் குன்றின் மேல் நின்றாரது கோபத்தைக் கணமேயும் காத்தல் எவருக்கும் அரிதென்க.

கணம் = மிகச் சிறியதோர் கால அளவை. அருமையும் திண்மையும் பெருமையும் கருதி குணத்தைக் குன்று என்று உருவகித்தார். சகரர் என்றது சகரன் என்னும் அரசன் புதல்வர் அறுபதினாயிரவரை.

வாய்மை தூய்மை அருள் தவம் மெய்யுணர்வு முதலிய உயரிய குணங்களையுடையாரே பெரியார் என்பதும், அவர்பால் வெகுளி தோன்றாது என்பதும், ஏதாவது ஓர் ஏதுவால் தோன்றினும் தோன்றிய அப்பொழுதே அவ்வெகுளி அழியும் என்ப

தும், அத்துணைப்பொழுதினும் அதனைத்தடுத்தற்கு எவர்க்கும் முடியாதென்பதும், "கணமேயும் காத்தல் அரிது" என்பதனால் உணரப்படும். குணமிலார் வெகுளியினும் அதனையுடையாரது வெகுளிக்கே அஞ்ச வேண்டுமென்பது குறிப்பு. இல்லார் வெகுளி ஏதும் செய்யாது. உடையார் வெகுளி எல்லாம் செய்யும் என்பதாம்.

(இவ்வுண்மை கபிலர்பால் காணப்படும்.)

கதை

கபிலர் என்பவர் ஓர் அருந்தவர். உயரிய குணங்களெல்லாம் ஒருங்கே உடையவர். பாதலத்தில் அமர்ந்து நெடுங்காலம் கடுந்தவம் புரிந்தார். அக்காலத்தில் அயோத்தியில் சகரன் என்னும் ஓர் அரசன் இருந்தான். இவ்வரசனுக்குத் தெய்வத் திருவருளால் அறுபதினாயிரம் புதல்வர் தோன்றினார். அதன்பின் பரிவேள்வியொன்று செய்யக் கருதி அதற்கு உரிய முறைப்படி ஒரு அசுவத்தை உலகைவலம் வரும்படி விட்டான். தம் புதல்வராகிய அறுபதினாயிரவரும் அதனைத் தொடர்ந்து பின்சென்றார். இவ்வேள்விக்கு இடையூறுசெய்ய எண்ணியிருந்த இந்திரன் அவரனைவரும் அறியாவண்ணம் அப்பரியைப் பிடித்துப் பாதலத்தில் தவம் செய்துகொண்டிருக்கிற கபிலமுனிவர் பக்கத்தில் உள்ள ஒரு மரத்தில் பிணித்து விட்டு மறைந்து போயினான். குதிரையைக் காணாமல் சகரர் பல இடங்களிலும் தேடினார். வாடினார். வருந்தினார். முடிவில் கண்மூடி யருந்தவம் புரியும் கபிலர் பக்கல் வந்து அதனைக் கண்டார். அம்முனிவரே தம் குதிரையை மறைத்து வைத்துள்ளார் என்று மாறு படமதித்தார். அனைவரும் சீறினார். ஆராயாமல் அவரைவைதார். முனிவர் வெகுண்டு விழித்தார். அவரது வெகுளித்தீயால் சகரர் அனைவரும் கணத்துள் மடிந்து சாம்பராயினார். இதன் விரிவை இராமாயணத்தில் தெளிக.

பெருவீரராகிய அறுபதினாயிர அரசகுமாரரையும் தமது பார்வையால் ஒரு கணத்துள் ஒருங்கே யழித்தமையால் வென்றி யென்னும் பதம் அவர்க்கு அடையாக நின்றது.

மேலே, நீத்தாரது மொழியால் அழிவும் ஆக்கமும் உளவாம் என்றார். இதில் அவர் எண்ணினாலும் பார்த்தாலும் அவை நிகழும் என்றார்

சான்றோர் வெகுளியின் தன்மையும் வன்மையும் இதனால் சாற்றப்பட்டன

* * *

30. பண்டே சடபரதர் பல்லுயிர்க்கும் செந்தண்மை
கொண்டு நடந்தார் குமரேசா—கொண்டாடும்
அந்தண ரென்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான். (வ.)

குமரேசா! சடபரதர் எல்லாவுயிர்களிடத்தும் செவ்விய அளியை வன செய்து ஒழுகினார் எனின் எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகுதலே அந்தணர் என்று சொல்லப்படும் அறவோர்க்கு இயல்பு என்க.

அந்தணர்—அழகிய தண்ணளியையுடையவர். அளி—இரக்கம். செந்தண்மை—செவ்விய தண்ணளி அஃதாவது கோடாத அருளுடைமை.

உயிர்களிடத்துச் செவ்விய அளியைச் செய்து ஒழுகுதலே அந்தணர்க்குக் கடமையென்பதும், அஃதில்லார்க்கு அந்தணத் தன்மையில்லை யென்பதும், அளியுடையார் எவராயினும் அவரே அந்தணர் என்பதும், இதில் உணர்த்தப்பட்டன. இது சடபரதர் பால் உணரப்படும்.

கதை

பரதன் என்பவர் இப்பரத கண்டத்தில் பெரும்புகழ் நிறுவிய ஒரு பெரிய அரசன். பிறிதின் நோய் தன்னோய்போல் கருதும் பெற்றியையுடையான். எவ்வுயிரும் தன்னுயிர்போல் எண்ணியிரங்கும் புண்ணியன். உலகியலையும் உணர்வியலையும் இவர் உள்ளபடி யுணர்ந்தார். பிறவி வீடு என்னும் இருமை வகையினையும் ஒருமையில் தெளிந்தார். அரசு முதலிய அனைத்தையுந் துறந்தார். ஞானியாய் மோன முற்றிருந்தார். அதன்பின் அந்தணராய்த் தோன்றினார். எல்லாம் தெரிந்திருந்தும் யாதும் தெரியாதவரைப்போல் நடித்தமையால் இவர் ஜடபரதர் எனப்பட்டார். தாம் நடந்துசெல்லும் வழியில் எறும்பு முதலிய சிறு பிராணிகள் வருந்துமே யென்று குந்தி நடந்தார். அளி நிறைந்த நெஞ்சும் ஒளி நிறைந்த மேனியும் உடையாராயிருந்தார். பெரியார் எவரும் இவரது செந்தண்மையை மதித்துத் துதித்தார். அந்தணர் இவரென அனைவரும் போற்றினார். இதன் விரிவை விண்டு புராணத்தில் கண்டு தெளிக.

செந்தண்மையே அந்தணர் தன்மை யென்பது இதனால் கூறப்பட்டது.

(இவ்வதிகாரத்தின் தொகைப்பொருள்.)

ஒழுக்கத்தின்கண்ணே வழுவாமல் நிற்றல். பற்றுக்களை விடுத்தல். பிறப்பு வீடுகளின் பெற்றியைத் தெளிதல். ஐம்பொறி அடக்கல். அவாவினை அறுத்தல். செயற்கரியசெய்தல். உலகியல் ஓர்தல். நிறைமொழி கொள்ளல். குணங்களால் விளங்குதல். செந்தண்மைபூணல். என்பனவாம்.

இவை, பெரியாருக்கு உரிய குணங்களாக முறையே இதில் உணர்த்தப்பட்டன.

4-ம் அதிகாரம் அறன் வலியுறுத்தல்.

அஃதாவது அறத்தினது சிறப்பை யுணர்த்துதல்.

31. பண்டுபல அல்லலுற்றும் பாண்டவர்கள் ஏனறத்தைக்
கொண்டார் துணையாக் குமரேசா—மண்டு
சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்
காக்கம் எவனோ உயிர்க்கு (௧)

குமரேசா! பாண்டவர்கள் அல்லல் பல அடைந்தும் அறத்தை ஏன் உறுதியாகப் பற்றிநின்றார் எனின், அறம், சிறப்பையும் தரும் செல்வத்தையும் கொடுக்கும் ஆகலால் அவ்வறமே உயிர்கட்குச் சிறந்த துணையாம் என்க.

சிறப்பு—முத்தி. உயிர்கள் பெறத்தக்க எல்லாப் பேற்றினும் பெருஞ் சிறப்புடையது முத்தியே ஆதலால் சிறப்பு என்றதற்கு ஈண்டு இப் பொருள் கொள்ளப்பட்டது. ஊங்கு, மிகுதியென்னும் பொருளை விளக்குவதோர் சொல்.

உயிர்க்கு அறத்தினூஉங்கு ஆக்கம் எவன்—உயிர்கட்கு அறத்தினும் மிக்க ஆக்கம் யாது வேறு ஒன்றும் இல்லை யென்பது குறிப்பு.

ஆக்கம், ஆகிவருவது. அஃதாவது இன்ப சாதனங்கள் ஒருவனுக்கு மேன்மேலும் பெருகிவருதல். சிறப்பு ஈனும் செல்வமும் ஈனும் என்றதனால் இருமையினும் அறம் இன்பம் தரும் என்பது பெற்றாம். பொருளாளர் ஆக்கம் வருமெனல் போக்கி அறமே அதனைத் தருமென்றெண்ணுக என்பதாம்.

அறமே எல்லா நலங்களையும் அருளும் என்பதும், தமக்கு ஆக்கம் என்று கருதி உயிர்கள் அவ்வறத்தையே செய்யவேண்டும் என்பதும், இதற்குச் சான்றாக ஆக்கமுதலிய அனைத்தையும் விடுத்தும் அறத்தைமட்டும் விடாமல் பாண்டவர்கள் உறுதியாகப் பற்றி நின்றார் என்பதும், அதன் பயனாக அவர்கள் சிறப்பையும் செல்வத்தையும் அடைந்தார்கள் என்பதும் இதில் உணரப்படும்.

கதை

பாண்டவர் பாண்டு என்னும் அரசன் புதல்வர். அவராவார் தருமன், வீமன், விசயன், நகுலன், சகாதேவன் என ஐவர். இற்றைக்கு 5000-வருடங்கட்கு முன்னமே அத்தினாபுரியில் இருந்தார். இப்பொழுது டில்லி என்று வழங்கப்படுகிற இடமே பண்டு அப்புரியிருந்த இடமாம். சந்திரகுலத்தில் தோன்றிய அத்தி என்னும் அரசனே முதன் முதல் இதனை வனப்புற ஆக்கினான். அதனால் இப்புரிக்கு அப்பெயரிடப்பட்டது. இதிலிருந்து தருமன் முதலிய ஐவரும் பெருமையோடு வாழ்ந்துவந்தனர். அக்காலத்தில் இவரது பெரிய தந்தையாரின் புதல்வராகிய துரியோதனன் முதலியோர் பொறாமையால் இவருக்குப் பெருந்துயர் விளைத்தனர். அவர் செய்த சூழ்ச்சியால் இவர் அரசபதவியையும் இழந்தார் ஆக்கமுந் துறந்தார். அடவியிற் புகுந்தார் அருந்துயர் அடைந்தார். ஆயினும் அறமே ஆக்கம் என்று அறிவுடனிருந்தார். அறவோர் இவரென அனைவரும் புகழ்ந்தார். இவ்வுரிமையும் உண்மையும் தருமன் என்னும் பெயரானே நன்கு விளங்கும். சிறப்பும் செல்வமும் இவர்கள் அறத்தால் பெற்றனர். இதனைப் பாரதத்தில் அறியலாம்.

தருமமேயினை யில்பொருள் தரையிடைத் தகைசால்
ஒருமையின்பினை யுதவிவின் னுலகினும் உடன்போய்
அருமையின்பமுய்த் தந்தகர்ச் செறுமெனில் அறமே
இருமையுந்துணை யாகுவ தன்றிமற் றில்லை.

(திருக்கூவப் புராணம்)

தருமமே உலகம் போற்றச் சகலகா ரணமதாகும்
தருமமே யழியா தென்றும் தாபர மாகிநிற்கும்
தருமமே தனைவேட் டோர்க்குச் சவுக்கியம் அனைத்தும் நல்கும்
தருமமே முத்திசேரும் சாதனம் என்றுட்கொள்வான்.

(காசிரகசியம்.)

ஈட்டிய ஒண்பொருளும் இல்லொழியும் சுற்றத்தார்
காட்டுவாய் நேரே கலுழ்ந்தொழிவர் மூட்டும்
எரியின் உடம்பழியும் ஈர்ங்குன்ற நாட
தெரியின் அறமே துணை.

(அறநெறிச்சாரம்)

அறமே உயிர்கட்குச் சிறந்த உறுதிப் பொருள் என்பது இதனால் கூறப்பட்டது

* * *

32 வீடணனார் ஆக்கமுற வேயிலங்கை மன்னவனேன்
கூடினான் கேடு குமரேசா — நீடில்
அறத்தினூஉங் காக்கமும் இல்லை யதனை
மறத்தலினூஉங்கில்லைக் கேடு. (உ)

குமரேசா! வீடணன் ஆக்கம் பெற இராவணன் ஏன் கேட்டை அடைந்தான்எனின், உயிர்கட்கு அறஞ்செய்தலினும் மிகுந்த ஆக்கமும் இல்லை. அவ்வறத்தை மறந்து விடுதலினும் மிக்க கேடும் இல்லை என்க

அறம் செய்தவன் சிறப்பையும், செல்வத்தையும் அடைவான் என்று மேலே கூறினார். இதில் அதனைச் செய்யாமல் மறந்தவன் கெடுவான் என்றார்.

ஆக்கத்தை விழைதலும் கேட்டை வெறுத்தலும் உயிர்களது இயல்பு, ஆதலால் விரும்பியவற்றை விரும்பியவண்ணமே ஒருவன் பெறவேண்டுமாயின் அவன் அறஞ்செய்ய வேண்டும் என்பதாம்.

கேட்டை அடைதற்கு ஒருவன் யாதும் செய்யவேண்டாம் அறம் செய்யாமையே அமையும் என்றபடி.

அறம் செய்தவன் ஆக்கம் பெறுவான், அதனை மறந்தவன் கேட்டை அடைவான் என்னும் உண்மை வீடணன்பாலும் இராவணனிடமும் முறையே காணப்படும்.

கதை. 1.

இராவணன் புலத்திய முனிவரது புதல்வராகிய விச்சிரவசுவுக்கும் கேகசிக்கும் பிறந்தவன். அரக்கர் குலதிலகன் சிறந்தவரபலங்களையுடையவன் இலங்கையிலிருந்து அரசு புரிந்தான். நல்லபோர்வீரன் தேவர் முதலிய அனைவரையும் செருவில் வென்று திக்கு விசயம் செய்தான். மூன்று உலகங்கட்கும் தானே முதல்வனாய் நின்றான். அதனால் திரிலோகாதிபதியெனச் சிறந்து விளங்கினான். இத்துணை நலங்களை யெய்தியிருந்தும் இவன் அறத்தை மறந்தான். மறத்தையே புரிந்தான் அதனால் பெருங்கேடுற்றான்.

கறங்குகால்புகாக கதிரவன் ஒளிபுகா மறலி
மறம்புகாஇனி வானவர் புகார் என்கை வம்பே
திறம்புகாலத்துள் யாவையும் சிதையினும் சிதையா
அறம்புகா திந்த அணிமதிற் கிடக்கை நின்றகத்தின்.

இஃது இராவணனது இராஜதானியாகிய இலங்கையைப் பார்த்தபொழுது அனுமான் கூறினது. இதனால் இராவணன் எல்லாவலிமைகளையும் எய்தியிருந்தான் என்பதும், அவன் இருந்த ஊரிலுங்கூட அறம் இல்லை என்பதும், தெளியப்படும். இதன் விரிவை இராமாயணத்தில் காண்க.

கதை 2

வீடணன், அரக்கர் குலதிலகனாகிய இராவணன் பிறந்த தம்பி அறமும் அறிவும் அருளும உடையவன். அறமே எல்லா நலங்களையும் அருளுமென்று கருதி அதனை மறவாமற் செய்தான். கம்பர் அடிக்கடி இவனை தருமவுருவினன் என்பர். தன் தமையன் செய்கின்ற மறக்கொடுமைகளை நினைந்து வருந்தினான் அறத்தை மறந்தால் கேடுவரும் என்று அண்ணனுக்கு அறிவுறுத்தினான். அவன் கேட்கவில்லை. அதன்பின் அவனை விட்டகன்றான் தரும மூர்த்தியாகிய இராம மூர்த்தியைச் சார்ந்தான். ஆக்கம் அனைத்தையும அடைந்து மகிழ்ந்தான்.

மன்னுதவத்துப் புலத்தியன்றன் மரபுவிளங்க மறைவிளங்க
தன்னேரில்லாத் தந்தைக்குத் தக்கமகவாய்ச் சண்டாளர்
அன்னோர் முன்னோரவருதித்த அந்தவயிறு சுத்தமுற
மின்னேரிடையாள் தன்வயிற்றில விளங்கும்புகழ்வீடணன்
பிறந்தான்.

பொய்யுங்களவும் பாதகமும்பொல்லா வொழுக்கும் அவைகடிந்து
மெய்யுந்தயாவும தருமமுடன்விளங்கும் பொறையும் இவைபூண்டு
செய்யும் செயல்களவையெல்லாம சிட்டர்செய்யும் செயலாகி
அய்யன்புகழ்வீடணன்மறைகள் அறைந்த அறத்தின்வழிநின்றான்.
(இராமாயணம்.)

உயிர்க்கு உறுதிபயக்கத்தக்க அறத்தை ஒரு போதும் ஒருவன் மறக்கலாகாது என்பது கருத்து

அறம் செய்யாதவன் கெடுவான் என்பது இதனால் கூறப்பட்டது.

33. தண்டாமல் செய்தார்என் தண்டியடிகளன்று
கொண்டவினையைக் குமரேசா—கண்டென்றும்
ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாம் செயல். (௩)

இ—ள்.

குமரேசா! தண்டியடிகள் தாம்கொண்ட அறவினையைப் பேண இடைவிடாமற் செய்தார் எனின், அறவினையை ஒல்லும் வகையால் செல்லும் வாயெல்லாம் ஓவாதே செயல் என்க.

ஓவுதல்=ஒழிதல் ஓவாதே=இடைவிடாமலே.

ஒல்லும் வகையால்=தமக்கு இயன்றவகையில்
செல்லும்வாய் எல்லாம் செயல்=செய்ய முடியுமான இடங்களில் எல்லாம் செய்க.

அறமாகிய நல்வினையை ஒருவன் தனது தகுதிக்கேற்பச் செய்யலாம் என்பதும், இடம் பொருள் ஏவல்கள் இல்லாதவனும் மனம் மொழி மெய்களால் அதனைச் செய்யலாம். என்பதும், அங்ஙனம் செய்யுங்கால் அதனையிடையே விடலாகாது என்பதும், இதற்குச் சான்றாகத் தண்டியடிகள் அறவினையை ஒல்லும் வகையால் ஓவாதே செய்தார் என்பது, இதில் உரைப்படும்.

கதை

தண்டியடிகள் என்பவர் அறுபான்மும்மை நாயன்மார்களில் ஒருவர். இவர் சோழநாட்டிலே திருவாரூரிலே யிருந்தார். பிறவியிலேயே குருடர் பொருள்வளங் குறைந்தவர். ஆயினும் அருள்வளம் மிகுந்தவர். அறவினையை நாளும் மறவாமற் செய்தார். திருவாரூர்ச்சிவாலயத்தின் மேற்றிசையில் ஒரு சிறு குளம் இருந்தது. அது சேறும் மணலும் நிறைந்து தூர்ந்திருந்தது. அக்குளத்தையிவர் நன்கு பண் படுத்தினார். இந்நல்வினையை யிவர் செய்துவருங் காலத்தில் குளத்துள் ஒரு தறியும் கரைமேல் ஒன்றும் நட்டினார். அவ்விரண்டற்கும் தொடர்பாக நீண்ட கயிறொன்று கட்டினார். அக்கயிற்றைத் தடவிக்கொண்டே சென்று மண்ணைக் கூடையில் எடுத்து வெளியே கொண்டு தட்டினார். ஒல்லும் வகையால் ஓவாதே யிதனைச் செய்து வருங்காலத்தில் சமணர் பலர் இவருக்கு இடையூறுகள் செய்தனர். எவர்

எதைச் செய்தாலும் தடையின்றி யிவர் தமது அறவினையை யிடைவிடாமல் செய்துவந்தார். அதனால் இவர்குருடு நீங்கினார். பெரும் புகழுற்றார் பேரின்பம் பெற்றார். இதன் விரிவைப் பெரியபுராணத்தில் காண்க

அறம் செய்யும் திறம் இதனால் அறிவிக்கப்பட்டது.

* * *

34 வேடமின்றிப் பூசையின்றி மெய்யறத்தைச் சாக்கியனார்
கூடினார் என்னே குமரேசா—ஓடும்
மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற. (௪)

இ—ள்

குமரேசா! சாக்கிய நாயனார் வேடமும் பூசையும் இல்லாமலே அறத்தின் பயனை யேன் அடைந்தார் எனின், ஒருவன் தனது மனத்தின் கண் மாசு இலன் ஆதலே அறம்; பிற ஆகுல நீர என்க. மாசு குற்றம்.

ஆகுல நீர—ஆரவார நீர்மையன. அவையாவன பிறர் அறியவேண்டிச் செய்கின்ற ஆடம்பரங்கள்.

மொழியும், மெய்யும், மனத்தின் வழிப்பட்டன. இதன நிலைமைக்குத் தக்கபடியே அவை நிலைத்து நிற்கும். ஆதலால் ஒருவன் மனம்மாசு இலதாயிருந்தால் அவன் மொழியினும் மெய்யினும் மாசிலனாம் என்க

தீயவினைகளைச் சிந்தித்தல் மனத்தின் குற்றம். பொய்முதலியவற்றைப் பேசுதல் மொழியின் குற்றம். இரத்தல் முதலியவற்றைச் செய்தல் மெய்யின் குற்றம். முக்கரணங்களினும் இக்குற்றங்கள் இல்லாமற்செய்தலே அறம் என்பதுகருத்து. மேல் செல்லும் இடமெல்லாம் அறம் செய் என்றார். இதில் அதனைச் செய்தற்குச் சிறந்த இடம் இஃது என்று சுட்டினார்.

மாசு இல்லாத மனமுடைமையே ஒருவனுக்கு அறமாம் என்பதும், மனக்குற்றமுள்ளவன் எனைத்தறங்கள் செய்யினும் அதனால் பயனில்லையென்பதும், இதற்குச் சான்றாகச் சாக்கியனார் மனநலம் ஒன்றானே அற நலங்கள் எல்லாம் அடைந்தார் என்பதும் இதில் உணரப்படும்

கதை.

சாக்கிய நாயனார் என்பவர் தொண்டை மண்டலத்திலே சங்கமங்கை என்னும் ஊரிலே வேளாளர் குலத்திலே பிறந்தார். கருவி நூல்களையும் அறிவு நூல்களையும் கசடறக்கற்றார். அக்காலத்தில் எங்கும் பரவியிருந்த புத்தமதத்தில் புகுந்தார். அதன் உண்மைகளை ஓதியுணர்ந்தார். அதன் பின் சிவத்தைப் பேணுதலே தவத்திற்கு அழகு என்று நன்கு தெளிந்தார். ஆயினும் தான் முன்னிருந்தபடியே யிருந்தார். வேறு எவ்வித வெளி வேடங்களும் கொள்ளவில்லை. மனத்தில் மட்டும் மாசு இலராயினார். அந்தரங்கத்தில் அரனை வழிபட்டு வந்தார். அறப்பயன் அனைத்தும் சிறப்புடன் பெற்றார். மாசறுமனத்தால் இவர் ஈசனருள் எய்தினார். இது பெரிய புராணத்தில் உள்ளது.

மனத்தின்கண் மாசு இல்லாதவன் செய்யும் அறமே சிறந்த பயனை விளைவிக்கும் என்பது கருத்து.

கற்றதங் கல்வியும் கடவுட் பூசையும்
நற்றவம் இயற்றலும் நவையில் தானமும்
மற்றுள அறங்களும் மனத்தின் பாலழுக்
கற்றவர்க் கேபயன் அளிக்கும் என்பரால்.

(காசிகாண்டம்)

அறத்தின் இயல்பு இதனால் அறிவிக்கப்பட்டது.

—:ooOoo:—

35 **வெற்றி மிகுதக்கன் வேள்வியறம் செய்துமேன்**
குற்றமிக வுற்றான் குமரேசா—உற்ற
அழுக்கா றவா வெகுளி யின்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்ற தறம். (௫)

குமரேசா! தக்கன் வேள்வியாகிய அறத்தைச் செய்தும் ஏன் குற்றம் உற்றான் எனின், அழுக்காறும் அவாவும் வெகுளியும் இன்னாச்சொல்லும் ஆகிய நான்கு இழிகுணங்களும் கலவாமற்செய்ததே அறமாம் என்க.

இழுக்கா இயன்றது—நீக்கி நடந்தது செய்யா என்னும் வாய்பாட்டைச் செய்தென்னும் வாய்பாடாகத் திரித்துப் பொருள் கொள்ளப்பட்டது.

அழுக்காறு—பிறருடைய நலங்களைக் கண்டு பொறாமல் மனம் புழுங்குதல் மற்றெவற்றினும் இது மிக்க இழி குணமாதலால் இதனை முன் வைத்தார்.

அழுக்காறு முதலிய மூன்றும் மனக்குற்றமாகவும் இன்னாச்சொல் மொழிக்குற்றமாகவும் கொள்ளப்படும்.

மனம் மொழி மெய் என்னும் மூன்று காரணங்களாலும் அறம் செய்யப்படுமென்பதும், அவற்றான் அதனைச் செய்யுங்கால் மேற்குறித்த நான்கும் விரவாமல் இருக்கவேண்டுமென்பதும், அவற்றுள் ஒன்று கலந்தாலும் அறம் நன்றாகாதென்பதும் இதற்குச் சான்றாகத் தக்கன் வேள்வியறம் செய்தும் பொறாமையும் வெகுளியும் பொருந்தியதனால் அது பொன்றியதென்பதும், இதில் காணப்படும்.

கதை

தக்கன் என்பவன் பிரமாவின் மானசபுத்திரருள் ஒருவன். சிறுவிதி யென்று ஒரு மறு பெயருடையவன். உமாதேவியார் தனக்குப் புத்திரியாக வந்து தோன்றும்படி யருந்தவஞ் செய்தான். அம்மையும் அவ்வாறே வந்து அவதரித்தார். உலகமாதாவைத் தனது மகளாகப் பெற்றமையை நினைந்து இவன் பெருமகிழ்வடைந்தான். தாக்ஷாயணி யென்று அம்மைக்குத் தன் சம்பந்

தமாக வோர் தனிப்பெயரிட்டான் போற்றி வளர்த்தான். பருவமுற்ற பின் பரமனுக்குத் திருமணஞ் செய்து உதவினான். அதன் பின் சிவபெருமானைத் தனது மருமகனைக் கருதினான். இக்கருத்தால் பெருமான் பெருமையை யிவன் அறவே மறந்தான். செருக்குடன் ஒருநாள் கைலைக்குச் சென்றான். அங்குள்ள சிவகணங்கள் இவனை அவமதித்தன. அதனால் இவன் வெகுண்டான். விரைந்து மீண்டான் பொறாமை கொண்டான் பரமனை யிகழும் நோக்கத்தோடு வெகுளியால் இவன் ஒரு பெரு வேள்வி செய்தான். இந்த உண்மையை யிறைவன் அறிந்து வீரபத்திரரை யேவினார். அவர் இவன் வேள்வியைச் சிதைத்தார். வெகுளியும் பொறாமையும் விரவிச் செய்ததால் இவனது அறம் சிதைந்தது இது கந்தபுராணத்தில் உள்ளது

அழுக்காறு முதலிய இழிதுணைகள் சிறிதும் விரவாமல் செய்தலே அறமாம் என்பது இதனால் கூறப்பட்டது.

36 அன்றிளையம் என்னா தறமேன் விரைந்து செய்தான்
குன்றாத் துருவன குமரேசா — இன்றிருந்து
அன்றறிவாம் என்னா தறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை (௬)

இ—ள்

குமரேசா! துருவன் தன்னை இளையவன் என்று எண்ணாமல் அன்றேன் அறத்தை விரைந்து செய்தான் எனின், அன்று அறிவாம் என்னாது அறஞ் செய்க அஃது ஒருவன் பொன்றுங் காலத்தில் அவனுக்குப் பொன்றாத் துணையாய் நின்று உதவும் என்க. பொன்றுதல்—அழிதல்.

பொன்றாத் துணை—அழியாத துணை நிலையான உண்மைத்துணை யென்றபடி. அறமானது தன்னைச் செய்த உடம்பு அழியினும் தான் அழியாமல் நின்று அவ்வுயிர் புக்குழிப் புகு

ந்து தன் பயனை அதற்கு இனிது உதவும் ஆதலால் அதனைப் பொன்றுந்துணை யென்றார்.

இத்தகைய துணையை ஒருவன் விரைந்து செய்து கொள்ள வேண்டும் என்பது கருத்து. நேற்றிருந்தார் இன்று வெந்து நீறானார் என்றபடி நிலையாமையே மிகுந்துள்ள இவ்வுலகத்தில் ஒருவன் நிலைத்துள்ள பொழுதே நிலையான துணையைத் தேடிக் கொள்வானாகில் அவன் அழிவில்லா இன்பத்தை யடைந்தவனாவான் என்பதாம். அன்று என்றது மாற்றாந்தாய் துருவனை யிகழ்ந்த அக்காலத்தை.

அறமே ஒருவனுக்கு அழிவில்லாத துணை யென்பதும், அதனை இளமைப்பருவத்தே விரைந்து செய்யவேண்டும் என்பதும், இதற்குச் சான்றாக துருவன் இளம்பருவத்தே யறம்புரிந்தான் என்பதும், அதனால் அவன் பொன்றா இன்பம் பொருந்தினான் என்பதும் இதில் உணரப்படும்.

கதை.

உத்தானபாதன் என்னும் அரசன் ஒருவன் பண்டு இப்பாரத கண்டத்தின் வடபாலிருந்து அரசுபுரிந்து வந்தான். இவனுக்குச் சுநீதி சுருசி என்று இரண்டு மனைவிகள் உண்டு. இவ்விருவருள் சுநீதிபால் ஒரு புதல்வன் தோன்றினான். அவனுக்குத் துருவன் என்று பெயரிட்டார் அருமையாக வளர்த்தார் ஒருநாள் இப்பாலன் தந்தையின் மடிமேல் தங்கச் சார்ந்தான். இவன் சிறியதாயாராகிய சுருசி சகியாதவளாய் இவனை வைதாள். இவனும் நாணிவருந்திக தாயிடம் சென்றான். தாயும் தெரிந்து தனதுளந்தளர்ந்தாள். மகன் தாயைத் தேற்றினான். அறமே துணையென்று அருங்கானடைந்தான். நாரதர் அருளால் நற்றவஞ் செய்தான். அதனால் இவன் இளம் பருவத்திலேயே யிறைவன் அருளை யெய்தி யறங்கள் பல புரிந்து பெரும் புகழ்பெற்றான். அழிவில் வாழ்வை யுற்றான். இதன் விரிவு பாகவதம் காசிகாண்டம் முதலிய பல நூல்களிலும் காணப்படும்.

அறமே ஒருவனுக்கு அழியாத் துணையென்பது இதனால் அறிவிக்கப் பட்டது.

* * *

37. உற்ற மணிச்சிவிகை யூர்ந்தாரேன் மூர்த்தியார்
கொற்றவனேன் தாழ்ந்தான குமரேசா— பற்றும்
அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை (எ)

இ — ள்

குமரேசா! மூர்த்திநாயனார் சிவிகையூர்ந்தார்; ஓர் அரசன் ஏன் தாழ்ந்தான் எனின், அறத்தின் பயன் இது என்று யாம் உணர்த்த வேண்டா, சிவிகை பொறுத்தானோடு ஊர்ந்தானிடை அது காணப்படும், என்க.

ஆறு—பயன். சிவிகை—பல்லக்கு. பொறுத்தல் சுமத்தல். ஊர்தல்—செலுத்தல்.

அறத்தின் பயனை நாம் சுருதி கொண்டு அறியவேண்டா, காட்சியானே காணலாம் என்பதாம். மேல் அறம் பொன்றாத் துணையென்றார், இதில் அது துணையாந் தன்மையைத் தெளிவித்தார்.

பல்லக்கின் மேல் அமர்ந் திருப்பவன் அறஞ்செய்தவன் என்றும், அதனைச் சுமந்து செல்பவன் அறம் செய்யாதவன் என்றும், நீவிரே கண்கூடாக அறிந்து கொள்ளலாம், யாம் வேறு கூறவேண்டா என்று தேவர் கூறியபடியிது

அறத்தால் சிறந்த இன்பத்தைப் பெறலாம் என்பதை மூர்த்திநாயனார் பால் காண்க

கதை

அறுபத்து மூன்று நாயன் மார்களில் ஒருவராகிய மூர்த்தி நாயனார் என்பவர் மதுரையில் இருந்தார். சிவபெருமானுக்குத் தினந்தோறும் சந்தனக்காப்பு இட்டு வந்தார். இந்த அறத்தின் பயனால் இவர் அரசரானார். யானை இரதம் சிவிகை முதலியவ

ற்றில் இருந்து செலுத்தினார். இன்பம் பெற்றார். இவர் செய்து வந்த அறத்துக்கு இடையூறு செய்த கருநாடதேசத்து அரசன் தனது அரசபதவியை யிழந்திறந்தான். அவனது பரிசனங்கள் மூர்த்தியாருக்குச் சிவிகை தாங்கினார். சீர்கள் பல செய்தார். மூர்த்தியார் அறத்தாற்றால் சிவிகை யூர்ந்தார். மறத்தால் மற்றையோர் அதனைச் சுமந்து சென்றார். இதன் விரிவு பெரிய புராணத்தில் காணப்படும். இனி பண்டுசிவிகை பொறுத்த ஜடபாரதருக்கும் அதனை யூர்ந்த சவ்வீரன் என்னும் அரசனுக்கும் இடையே நிகழ்ந்த மொழிகளால் அறத்தாறு உணரப்படும்; யாம் உணர்த்த வேண்டா என்று தேவர் அவ்விருவரைச் சுட்டியது போலவும் இது தோன்றுமென்பாருமுளர்.

அறத்தின் பயனைக் கண்கூடாகக் காணலாம் என்பது இதனால் கூறப்பட்டது.

* * *

38. நன்றே புரிந்துவந்த நந்தனார் வாழ்நாள்போய்க்
குன்றிநின்ற தென்னே குமரேசா—என்றேனும்
வீழ்நாள் படாமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல். (அ)

இ—ள்

குமரேசா! நாள்தோறும் அறமே செய்து வந்த நந்தனாரது வாழ்நாள் ஏன் குன்றி நின்றது எனின், வீழ் நாள் உளவாகாமல் ஒருவன் நன்மையைச் செய்வானாயின் அச்செயல் அவன் உடம்போடு கூடுகின்ற நாள் வரும் வழியை வாராமல் அடைக்கும் கல்லாம் என்க.

வீழ்தல்—கழிதல். நன்று—அறம். அஃது—அச்செயல். வீழ் நாள் படாமை—கழியும் நாள் இல்லாமல். அஃதாவது அறம் செய்யாமல் கழிந்த நாள் ஒன்று இருந்தது என்று உண்டாகாதபடி ஒருவன் அறத்தைச் செய்வானில் அச்செயல் அவன் பிறவியைத் தீர்த்துவிடும் என்பதாம்.

நன்றை இடைவிடாமல் என்றும் செய்யவேண்டும் என்பது குறிப்பு.

வாழ் நாள்—(உயிர் உடலோடு கூடி) வாழும் நாள். பிறவி என்றபடி. இடையறாது தொடர்பாக வந்து கொண்டிருக்கிற பிறவியின் வழியை யினிவாராமல் அடைப்பதற் கோர் தகுதி யான கதவு இது வெனத்தேவர் இதில அருளியுள்ளமை காண்க கல் என்றது அதன் திண்மை கருதி.

இயன்றவரையில் ஒருவன் நாள் தோறும் அறம் செய்யவேண்டும் என்பதும் அங்ஙனம் செய்வானாயின அவன பிறவி தீர்வான் என்பதும் இதற்குச் சான்றாக நாளும் நன்று ஆற்றிய நந்தனார் பிறவி தீர்ந்தார் என்பதும் இதில் உணரப்படும்.

கதை

நந்தனார் என்பவர் அறுபத்து மூன்று நாயன் மார்களில் ஒருவர். இவர் சோழ மண்டலத்திலே, மேற்கா நாட்டிலுள்ள ஆதனூர் என்னும் ஊரிலே பறையர் குலத்திலே பிறந்தார். வெட்டிமைத் தொழில புரிந்தார். தமது மரபுக்கேற்ற வகையால் இயன்றவரை நாளும் நல்வினையை நயந்து செய்துவந்தார். அதனால் இவர் மனந்தூயராயினார். சிவாலயங்கள் தோறும் சென்று தரிசனம் செய்ய விரும்பினார். திருப்புன் கூர் என்னும திவ்விய தலத்துக்குச் சென்றார். அங்கே ஒரு பெரிய குளத்தை வெட்டினார். ஆலயங்களுக்குரிய பேரிகை முழவு யாழ் முதலியவற்றிற்குத் தோல் வார் நரம்பு முதலியன உதவினார். சிதம்பர தரிசனஞ் செய்யச் சிந்தித்தார் தமது குலம் இழிந்தது என்றும் தாம எவ்வாறு அங்கே புக முடியும என்றும எண்ணி யெண்ணி வருந்தினார். ஆயினும் சிதம்பரத்துக்குச் செல்ல வேண்டும் என்னும் ஆசையிவர்க்கு அதிகரித்தது. வேறு நாட்டமின்றிச் சிதம்பரத்தையே நாடினார். இப்பொழுதே செல்வேன் என்று துணிந்து எழுவார். நான் புலையனாயிற்றே! யெவ்வாறு அங்குப் புகுவேன் என்று எண்ணி யமர்வார். நாளைப் போவேன், நாளைப் போவேன், என்று நாள்பல கழித்தார், அதனால் திருநாளைப் போவார் என்னும் ஒரு

திருப்பெயரை யிவர் பெற்றார். காதல் அதிகரித்ததால் நல்லநாள் ஒன்றில் தில்லையை நோக்கிச்சென்றார். சென்றவர் நகரினுட் செல்லாமல் நின்றார். தில்லையின் எல்லையை மெல்லச்சுற்றினார் ஐயனை நினைந்து மெய்ம்மயிர் சிலிர்த்தார் புறத்தே நின்று தொழுதார் அகத்தே நினைந்து அழுதார். எம்பெருமானும் இவரை ஆட்கொள்ள அருள்கூர்ந்தார் தில்லைவாழ் அந்தணர்கட்குணர்த்தினார் உணர்த்தினபடியே அவரனைவரும் இவரைப்புலைமகன் என்று இகழாமல் தலைமகன் என்று புகழ்ந்தார். கொணர்ந்தார் மங்கலநெருப்பைப் பொங்க முற வளர்த்தார். விருப்புடன் நந்தனார் அந்நெருப்பில் குதித்தார். விண்ணவர் போற்றும் புண்ணிய வுருவைப்பெற்றார். அந்தணர் உடன்வர அடைந்தனர் ஆலயம். கண்டவர் அனைவரும் காணாமல் நின்றனர். கனகசபையிற் கலந்தனர் நந்தனார். நாளும் அறம் புரிந்தமையால் நந்தனார் வாழ்நாள் வழிதூர்ந்தது. இதன் விரிவு பெரிய புராணத்தில் காணப்படும்.

அறம் பிறவியை நீக்கிப் பேரின்பம் தரும் என்பது இதனால் கூறப்பட்டது.

---:ooOoo:---

39. கூடிமனை யின்பமுற்ற கோவலனேன் மாதவியால்
கோடிதுன்பம் கொண்டான் குமரேசா—தேடும்
அறத்தான் வருவதே யின்பமற் றெல்லாம்
புறத்த புகழும் இல. (௯)

இ—ள்.

குமரேசா! மனைவியோடு கூடியின்பமுற்ற கோவலன்மாதவியால் ஏன் பெருந்துன்பம் அடைந்தான் எனின், அறத்தான் வருவதே இன்பம். மற்ற எல்லாம் புறத்த புகழும் இல என்க.

மற்று என்னும் இடைச்சொல் அறத்துக்கு மறுதலையான மறத்தைக்குறித்து நின்றது.

மற்று எல்லாம்=பாவத்தால் வருவனவெல்லாம்.

புறத்த என்றது இன்பத்துக்குப்புறமாகிய துன்பத்தை; இறந்தது தழுவிய எச்சவும்மையானது இன்பமும் இல்லையென்பதை விளக்கிநின்றது.

அறநெறியால் வரும்பொருளே ஒருவனுக்கு இன்பமும் புகழும் தரும்பொருளாம் என்பதும் பிறநெறியில் வருவன துன்பமும் பழியுமே தருவனவாம் என்பதும். இதற்குச் சான்றாகக்கோவலன் அறநெறியாற் பெற்றகண்ணகியால் இன்பமும் புகழும் எய்தினான் என்பதும், மறநெறிபால்கொண்ட மாதவியால் துன்பமும் பழியும் அடைந்தான் என்பதும், இதில் உணரப்படும்.

கதை

சோழ நாட்டிலே காவிரிப்பூம்பட்டினத்திலே வணிகர் குல திலகனாகிய மாசாத்துவான் என்பவன் ஒருவன் இருந்தான். இவன் இருநிதிக்கிழவன் எனப்பெருநிதியுடையவன். பெருமனைக்கிழத்தியென்னும் மனைவியோடு கூடி இவன் இல்வாழ்க்கையை யினிது நடத்தினான். இங்ஙனம் நடந்துவரும் நாளில் இவனுக்கொரு புதல்வன் தோன்றினான். அப்புதல்வனுக்குக் கோவலன் என்று பெயரிட்டார். மிக்க சிறப்போடு போற்றி வளர்த்தார். இவன் பேரழகு வாய்ந்தவன். பருவம் அடைந்தபின் அந்நகரில், மாநாய்கன் மகளாகிய கண்ணகியென்னும் புண்ணியவதியை இவனுக்குத் திருமணம் முடித்தார். இருவரும் ஒரு மனப்பட்டு இல்வாழ்ந்திருந்தார். அன்புடன் இன்பம் ஆரத்துய்த்தார். கோவலன் அறநெறியில் பெற்ற தனது மனைவியை நோக்கி,

மாசறு பொன்னே வலம்புரி முத்தே
காசறு விரையே கரும்பே தேனே
அரும்பெறற் பாவாய் ஆருயிர்மருந்தே
பெருங்குடிவணிகன் பெருமடமகளே
மலையிடைப் பிறவா மணியேயென்கோ
அலையிடைப்பிறவா அமிழ்தேயென்கோ
யாழிடைப்பிறவா இசையேயென்கோ

தாழிருங் கூந்தற் றையால் நின்னை யென்று
உலவாக்கட்டுரை பலபாராட்டி.

நாளும் மகிழ்ந்து நலமுற வாழ்ந்தான். இங்ஙனம் வாழ்ந்து வரும் நாளில் மாதவியென்னும் பெயரினையுடைய ஒரு பொது மாதைக் கண்டான் அவள்மேற்காதல் கொண்டான் அதனால் கற்புத்தெய்வமாகிய தனது காதலியை மறந்தான். மாதவியுடனே மருவிமகிழ்ந்தான அவளால் தனது பொருள் முழுதையும் ஒருங்கே இழந்தான். வறியனாயினான். அதன்பின் தன் மனைவிபால வந்தான். கண்ணகி தன் கணவனைக் கண்டாள். அவன் நிலைமையை நினைந்தாள். நெஞ்சுருகினாள் கலங்கினாள். தனது காலில் அணிந்திருந்த அழகிய பொற்சிலம்பைக் கழற்றிக் கோவலன் கையிற்கொடுத்தாள். இதனை விலைப்படுத்துங்கள். அப்பொருள்கொண்டு நாமிருவரும் இனிது வாழலாம் என்று கூறிக்கணவனைத் தேற்றினாள். அவனுந் தேறினான். அச்சிலம்பை விற்றற்பொருட்டு மனைவியோடு மதுரைக்குச்சென்றான். சென்ற இடத்தில் தீவினை வயத்தால கோவலன் கொலையுண்டிறந்தான். இத் துன்பமும் பழியும் மறநெறியால் வந்த மாதவிபால் இவனுக்கு வந்தன. இதன் விரிவைச் சிலப்பதிகாரத்தில் காண்க அறநெறியால் வருவனவே ஒருவனுக்கு இன்பமும் புகழும் தருவனவாம் என்பது இதனால் கூறப்பட்டது.

40. நல்வினையே செய்தான் நளன்பாம்பின் செய்கைகண்டும்
கொல்வினையேன் விட்டான் குமரேசா—சொல்லிற்
செயற்பால தோரும் அறனே யொருவற்
குயற் பால தோரும் பழி (௰)

இ—ள்

குமரேசா! நளன் நல்வினையையே செய்தான். பாம்பின் செய்கையைக் கண்டும் ஏன் கொல்வினையைத் தவிர்ந்தான் எனின், ஒருவன் செய்யத்தக்கது அறமே; ஒழிக்கத் தக்கது பழியே யாம் என்க.

ஓரும் என்னும் இடைச்சொற்கள் இரண்டும் அசைநிலையாயின.

உயற்பாலது = ஒழிக்கப்படும் உரிமையையுடையது.

விதியும் விலக்கும் இதில் விதந்து கூறினார். ஒருவன் புகழ் பயக்கும் வினைகளைப் பேணிச் செய்து பழி விளைக்கும் செயல்களை நாணி ஒழிக்கவேண்டும் என்பதாம்.

நளன் நிடத நாட்டிலுள்ள மாவிந்த புரியில் விளங்கியிருந்தான் சந்திரகுலதிலகன் திகிரியுருட்டி நிலமுழுதும் ஆண்ட செங்கோல் வேந்தன். விதர்ப்ப தேசத்து வீமராசன் மகளாகிய தமயந்தியை மணம் புரிந்தான். அதில் உண்டான செற்றத்தால் கலி இவனைத் தொடர்ந்தான். அதனால் இவன் சூதாடி நாடிழந்தான். மனைவியோடு வனம் புகுந்தான். பின் பிரிந்து அகன்றான். அக்காலத்தில் அங்கே கார்க்கோடகன் என்னும் பாம்பு ஒன்று காட்டுத் தீயில் அகப்பட்டுப் பதைத்துத் துடித்தது. நளன் அதனைக் கண்டான் இரக்க முற்று நெருப்பினுட் புகுந்தான் அதனை வெளியேற்றிக் காப்பாற்றினான். பின் அஃதோர் ஏதுவால் இவனைத் தீண்டியது. தீண்டி வருத்தினும் அதற்கு யாதொரு தீங்கும் செய்யாமல் அரசன் நின்றான். அதுபின் இவனுக்கு நன்மையாக முடிந்தது. இதன் விரிவைச் சரித்திரத்தில் காண்க.

ஒருவன் செய்யத் தகுவதும், ஒழிக்கத் தகுவதும், இதனால் கூறப்பட்டன.

இவ்வதிகாரத்தின் தொகைப் பொருள்.

அறம் உயிர்கட்குச் செல்வ முதலிய எல்லா நலங்களையுந் தந்து சிறப்பையும் கொடுக்கும். அறமே ஒருவனுக்குச் சிறந்த ஆக்கம். அதனை மறந்தவர் கெடுவார். இயன்ற மட்டும் அறத்

தை என்றும் எங்கும செய்தல வேண்டும். மனத்தில் குற்றம் இல்லாதவனே உத்தம் அறவோன். பொறாமை கோபம ஆசை முதலிய இழி குணங்கள் இலலாமல் ஒருவன் அறததைச் செய்தல் வேண்டும. அதனை இளம பருவததே செய்யவேண்டும். அதன் பயனை அனைவரும் கண்கூடாகக் காணலாம். ஒருவன் விடாமல் அறஞ செயவானாகில அவன் பிறவி தானே நீங்கிவிடும். அற நெறியால வருவனவே புகழும இன்பமும் பொருந்தப் பயக்கும. பிறநெறியால வருவன பழியும துன்பமும் இழிவுடன் கொடுக்கும. ஆகலால ஒருவன் கொள்ளத்தக்கது, அறமே தள்ளததக்கது பழியே எனபனவாம.

(பாயிர முற்றிற்று.)

இல்லறவியல்.

5-வது அதிகாரம் இல்வாழ்க்கை.

அஃதாவது மனைவியோடு கூடி ஒருவன் இல்லின் கண் இருந்து வாழும் இயல்பு.

* * *

41. ஏனைமூ றெல்லார்க்கும் இன்றுணையா நன்றுசெய்தான்
கோனும் வல்லாளன் குமரேசா — ஞானமுடன்
இல்வாழ்வான் எனபான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை.

குமரேசா! வல்லாளன் என்னும் அரசன் எல்லோருக்கும் னிய துணையாய் நின்று ஏன் உதவி செய்தான் எனின், இல்லறத்தில் இருந்து வாழ்பவன் இயல்பினையுடைய மூவர்க்கும நல்ல என்க.

நல் ஆற்றின் நின்ற துணை = நல்ல ஒழுக்க நெறியின் கண் நிற்கின்ற நிலையான துணை. ஆறு நெறி வழி என்பன ஒரு பொருளன. பிரமச்சாரி, கிருகத்தன், வானப்பிரத்தன், சந்நியாசி என்னும் நால் வகை நிலையினரும் ஒருவரிசையில் வைத்து எண்ணப்படுவர். அவருள் கிருகத்தனாகிய இல் வாழ்வானை வேறு பிரித்தமையால் ஏனையோரை மூவர் என்றார். இது தொகைக் குறிப்பு.

இல் வாழ்பவன் சந்நியாசி முதலிய மூவர்க்கும் உணவும், உடையும், மருந்தும், இடமும், தந்து ஆதரிக்கவேண்டும் என்பதாம். அவ்வுணவு முதலியவற்றால் அவர்கள் பசி குளிர் நோய் முதலியன நீங்கி தங்கட்குரிய தவவொழுக்கங்களை நன்குசெய்து உய்வார்கள்.

ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்துக்குச் செல்லுகின்ற வழி நடையினர்க்கு இடையிலே யுண்டாகும் தடைகளை நீக்கிக் குறித்த இடத்திலே யவரைக் கொண்டு போய்ச் சேர்க்கும் நல்ல வழித் துணையாளர் போல் பந்தமாகிய இந்த உலகத்திலிருந்து முத்தி உலகை நோக்கிச் செல்லும் அறநெறியாளர்க்குப் பசி முதலியவற்றால் உளவாகின்ற வருத்தங்களை நீக்கி அவரை அந்நெறியில் வழுவாமல் செல்லும்படி செய்து நிற்றலால் இல் வாழ்வானை அவர்க்கு நல்ஆற்றில் நின்ற துணை என்றார் இனி ஆற்றில் நின்ற நல் துணை எனவும் கொள்ளப்படும். இறைவனே எல்லார்க்கும் துணை எனினும் இம் மூவர்க்கும் வெளிப்படையாக இல் வாழ்வானே துணையாம் என்றபடி.

துறந்தார் முதலிய சிறந்தார் எவர்க்கும் இல் வாழ்வானே நல்ல துணை. இவ்வுண்மை வல்லாளன் பால் காணப்படும்.

கதை

வல்லாளன் என்பவன் திருவண்ணாமலையில் இருந்த ஒரு சிறந்த அரசன். விழுமிய குணங்கள் பலவும் நிறைந்தவன். நெறிவழுவாதவன், நற்குணம் நிறைந்த இரண்டு தேவிமா

ரோடு கூடியிவன் இல் வாழ்ந்திருந்தான். எல்லாரிடமும் இரக்கமும் அன்பும் காட்டினான் துறவோர் முதலிய அறவோர் எவர்க்கும் அருந்துணையாய் நின்றான். அவர்கட்கு உணவும் உடையும் தினமும் உதவினான். இவன் செய்து வருகின்ற இல்லறத்தின் சிறப்பையும் இவனது வள்ளற் குணத்தையும் இறைவன் எண்ணினார். மகிழ்ந்தார் அன்புடையிவன்பால் அருளுடன் வந்தார் சங்கம வேடந்தரித்தார் ஒரு சந்நியாசிபோல் நின்றார். கண்டான் அரசன். காலில் விழுந்தான். தனது திருமனைக்குள் அழைத்துக் கொண்டு போய் உபசரித்தான். இவர் விரும்பிய எதையும் வெறுப்பின்றி உதவினான். எல்லாருக்கும் நல்ல துணையாய் நின்று இவண் இல் வாழ்ந்தான். அதனால் தனி முதல் வணங்கிய பரமனே யிவனுக்கு இனிய புதல்வனாய் வந்து இன்பம் செய்தார். இஃது அருணாசலப் புராணத்தில் உள்ளது.

இல்வாழ்வான் இயல்பு இதனால் கூறப்பட்டது.

42. உற்ற துணை யாய்முன் உதவினனேன் பாண்டவர்க்குக்
கொற்ற விராடன் குமரேசா—முற்றும்
துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை.

குமரேசா! விராடன் பாண்டவர்க்கு உற்ற துணையாய் ஏன் உதவினான் எனின், துறந்தவர்க்கும், துவ்வாதவர்க்கும், இறந்தவர்க்கும் இல் வாழ்வான் துணை யாவான் என்க.

துறந்தார்—ஆதரித்து வந்தவரால் கைவிடப்பட்டவர்.

துவ்வாதவர்—உணவு முதலியன துய்க்கப் பெறாதவர். வறியர் என்றபடி.

இறந்தார்—உயிர் நீங்கினவர். செத்தவர் என்றபடி.

கதியற்றவர், பொருளற்றவர், உயிரற்றவர். ஆகிய இம்மூவருக்கும் இல்வாழ்வான் துணையாய் நின்று உதவவேண்டும் என்பதாம. துறந்தாரை வினவியடுத்தும், துவ்வாதவரை உணவுமுதலியன கொடுத்தும்; இறந்தாரை உரிய நீர் விடுத்தும், ஆதரிக்க வேண்டுமென்பது கருத்து.

மேல் தன்னோடு இயைபுடைய மூவரைக் குறித்தார். இதில் அஃதில்லாத மற்றொரு மூவரையும இணைத்து இவ் அறுவருக்கும் இல் வாழ்வான் துணையென வுணர்த்தினார். மேலவருவதில் ஐவரை உணர்த்துவர்.

பெரியோர் வறியோர் முதலிய எவர்க்கும இல் வாழ்வான் ரயாவான் என்பதும் இதற்குச் சான்றாக விராடன் அனைவருக்கும் உபகரித்தான் என்பதும் இதில் உணர்த்தப்பட்டன.

கதை

விராடன் என்பவன் ஓர் அரசன. மசசதேசத்திலுள்ளவன். விராடபுரத்திலிருந்து இவன் அரசுபுரிந்தான. இக்காலத்தில் மேட்டுப்பாளையத்தை அடுத்துள்ள தாராபுரமே அக்காலத்தில் இப்புரம் இருந்த இடம் என்பர் இந்த அரசன் எல்லார்க்கும் நல்ல துணைவனாய்ச் செல்வாக்கோடு இல் வாழ்ந்திருந்தான். பாண்டவர் பன்னிருவருடம் வனவாசம் செய்து முடித்தபின்னர் ஒருவருடம் இவன் வசம் வந்து உருவங்கரந்து ஒதுங்கி இருந்தார். அவரை அன்புடன் இவன் ஆதரித்து வந்தான். உத்தரன் என்று ஒருமகனும், உத்தரை யென்று ஒருமகளும் இவனுக்கு உண்டு. இவன் மனைவி பெயர் சுதேட்டிணை வருடமுடிவில் பாண்டவரென உண்மை தெரிந்த பின் இவன் பெருமகிழ்வடைந்தான். அதன் பின்னும் பாண்டவர்க்குப் படைத்துணையாய் நின்று வேண்டுவனபுரிந்தான். தன் மகளாகிய உத்தரையை அருச்சுனன் மகனாகிய அபிமன்னனுக்கு மணமுடித்துத் தந்தான்.

(இதன் விரிவு பாரதத்தில் காணப்படும்.)

துறந்தார், துவ்வாதவர் என மறைந்து வந்த பாண்டவர்க்கு இவன் சிறந்த துணையாய் நின்று உயர்ந்த உதவிகள் செய்தான்.

இல்வாழ்பவனே வறியார்க்கு உரிய துணை என்பது இதனால் கூறப்பட்டது

43. தேடுபுகழ்க் காளத்தி சென்றடைந்தார் தம்மையெல்லாம்
கோடாதே தன் காத்தார் குமரேசா—பீடுடைய
தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்
கைம்புலத்தார் ஒம்பல் தலை. (௩)

இ—ள்

குமரேசா! காளத்தியப்ப முதலியார் விருந்து ஒக்கல் முதலிய எல்லாரையும் முன் ஆதரித்து வந்தார் எனின், தென்புலத்தாரையும் தேவரையும் விருந்தினரையும் சுற்றத்தாரையும், தன்னையும் பேணிவருவதே இல்வாழ்வானுக்குச் சிறப்பாம் என்க.

ஒக்கல் = சுற்றம். புலம் = இடம்

ஐம்புலத்து ஆறு ஓம்பல்—ஐந்து இடத்தும் செய்யத்தக்க அறநெறியை வழுவாமல் செய்தல் ஐம்புலத்தார் என்று பாடங் கொண்டால் ஐந்து இடத்தாரையும் என்று கொள்க.

பிரமச்சாரி வானப்பிரத்தன் சந்நியாசி துறந்தார் துவ்வாதார் இறந்தார் தென்புலத்தார் தேவர் விருந்தினர் சுற்றத்தார் என்னும் பதின்மரையும் ஆதரிக்க வேண்டுவது இல்வாழ்வானுக்குக் கடமை இவ்வியல்பு காளத்தியப்ப முதலியார் பால் காணப்படும்.

கதை.

காளத்தி முதலியார் தொண்டை மண்டலத்திலே நின்றையென்னும் ஊரிலே பிறந்தார். இல்லறத்திலிருந்து எல்லாரையும்

ஆதரித்து வந்தார். தயையும் வள்ளற் குணமும் வாய்ந்தவர் வறுமைப் பிணிக்கோர் மருந்து போல்பவர். நாளும் பல இடங்களில் இருந்தும் இவரை நாடிவருவார் பலர். அவரனைவருக்கும் வேண்டுவன தந்து அன்போடு அனுப்புவார். தம்பால் வந்தவரது முகம் மலர இவரது அகம் மகிழும். பிறர்க்கு இதம் புரிதலையே யிவர் பேரின்பமாகக் கொண்டார். ஒக்கலையும் விருந்தையும் இவர் பக்கம் வைத்து உண்டார். தம்மையும் காத்துத் தமரையும் போற்றிய இவரது இல்லறமாண்பை யெல்லோரும் போற்றினர். தொண்டை மண்டல சதகமுதலிய பல நூல்களிலும் இவர் சரிதம் காணப்படும்.

இல்லறத்தான், தென் புலத்தார் முதலிய ஐவரையும் பேண வேண்டுமென்பது இதனால் கூறப்பட்டது.

* * *

44. வள்ளற் சடையன் வழியென்றுங் குன்றாச்சீர்
கொள்ளநின்ற தென்னே குமரேசா—தள்ளும்
பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல். (௪)

குமரேசா! சடையவள்ளலது வழி யென்றுங் குன்றாமல் நின்றது என்னே எனின், பழியஞ்சிப் பொருள் ஈட்டி மேற் குறித்த பதின்மருக்கும் பகுத்து ஈந்து ஒருவன் உண்பானாயின் அவன் வழி என்றும் நின்று நிலவும் என்க.

எஞ்சல் = தேய்ந்து அழிதல். வழி—மரபு. தொடர்பாக வருதலின் இஃது இப்பெயர் பெற்றது.

பழிக்கு அஞ்சுதலும் பகுத்து உண்டலும் ஒருவனுக்கு அமையுமாயின் அவன் சந்ததி என்றுங் குன்றாமல் நிலைத்து நிலவும் என்பதாம். ஒருவன் வழியழியாமைக்கு வழியிதிலுணர்த்தினர்.

ஒருவன் நல்வழியிற் பொருளீட்டி யதனைப் பிறர்க்குப் பகுத்துதவி வருவானாயின் அவன் வழியும் வாழ்க்கையும் நெடிது வாழும். இவ்வுண்மை சடையப்பர் வழியில் காணப்படும்.

கதை

சடையப்ப பிள்ளை யென்பவர் சோழநாட்டிலுள்ள திருவெண்ணெய் நல்லூரிலே வேளாளர் குலத்திலே பிறந்தார். இவரது காலம் இற்றைக்கு ஏறக்குறைய ஆயிரத்துநூறு வருடங்கட்கு முன்னராம். பெருந்தன்மையும் வள்ளற் குணமும் ஒருங்கே நிறைந்தவர் பழுதில்லாத உழவு தொழிலால் பொருளீட்டி அதனைப் பலர்க்கும் பகுத்துக் கொடுத்து வந்தார். கவிச்சக்கிரவர்த்தியாகிய கம்பரை அன்புடன் ஆதரித்தார். "அடையா நெடுங்கதவும் அஞ்சல் என்ற சொல்லும் உடையான் சடையப்பன்" என்ற இதனானே இவரது விருந்தோப்பும்திறம் காணப்படுகின்றது. இவர் இல் வாழ்க்கை நலம் நல்லோர் பல்லோராலும் நன்கு புகழப் பட்டுள்ளது.

அரியணை அனுமன் தாங்க அங்கதன் உடைவாள் ஏந்தப்
பரதன் வெண் குடைகவிக்க மற்றிருவரும் கவரி வீச
விரைசெரி குழலியோங்க "வெண்ணெயூர்ச் சடையன்றங்கள்
மரபுளோர்" கொடுக்கவாங்கி வசிட்டனேபுனைந்தான்மௌலி.
(முடிசூட்டுப் படலம்)

இதனால் பல்லாயிர வருடங்கட்கு முன்னரே அவதரித்த இராமர் காலந் தொட்டே வெண்ணெயூர்ச் சடையன் வழியார் சிறந்து விளங்கி வந்துள்ளார் என்பது புலனாம்.

ஒருவன் இல்வாழ்க்கையை நடத்தும் வகை இதனால் கூறப்ப

* * *

45. மண்டுபுகழ் மாறனார் மாறாத அன்பறனோடு
கொண்டிருந்தார் இல்லற குமரேசா — தண்டாத
அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது. (௫)

குமரேசா! இளையான் குடிமாற நாயனார் அன்பும் அறனும் உடையாராய் என இல்வாழ்ந்தார் எனின், அன்பும் அறனும் உடைய இல்வாழ்க்கையே பண்பும் பயனும் பெறும் என்க

அன்போடு அறம் புரியும் இல்வாழ்பவனே பண்போடு பயன் பெறுவான் என்பது கருத்து

இல்வாழ்வான் தனது மனைவி மக்களிடத்தில் மிக்க அன்பு செய்தும் பிறரிடத்துப் பகுத்துண்டல் முதலிய அறஞ் செய்தும் வாழவேண்டும் என்பதும் இதற்குச் சான்றாக மாறனார் அன்பும் அறமும் உடையாராய் இல்வாழ்ந்தார் என்பதும் இதில் உணரப்படும்.

கதை

மாறனார் என்பவர் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர். பாண்டி நாட்டிலே இளையான்குடி என்னும் ஊரிலே வேளாளர் குலத்திலே இவர் பிறந்தார். அதனால் இவர் இளையான்குடி மாறநாயனார் எனப் பெற்றார். உத்தம குணங்கள் நிறைந்த தம் பத்தினியோடு கூடி இல்வாழ்ந்திருந்தார். நிறைந்த செல்வமும் விரிந்த நிலங்களும் உடையவர். அடியார் முதலிய அனைவர்க்கும் நாளும் நல்லுணவு அளித்தார். மிகவும் அன்புடையவர். இல்லறத்தை யின்புற நடத்தினார். இங்ஙனம் வருகின்ற நாளில் இவரது செல்வம் குறைந்தது வறுமைநிறைந்தது. ஆயினும் அன்பும் அறனும் உடையாராய் இவர் இல்லறத்தை இன்புறச் செய்தார்.

இறைவன் இவரைச் சோதிக்கும்பொருட்டு விடாமழை பெய்யும் நடுநிசியொன்றில் சந்நியாசிபோல் வேடந்தரித்து இவரது இல்லை நோக்கி மெல்லவந்தார். வந்த முதியவரை யிவர் வணங்கினார். வாழ்த்தினார். உள்ளே எழுந்தருளச் செய்தார். இதனை மனைவியிடங் கூறினார். வருந்தினார் என்செய்வார் பாவம்! இரண்டுநாட்பட்டினி. அந்நடுநிசியில மழையில் நனைந்து வெளியே போனார் வயலில மிதந்த நெல்விதைகளை வாரிக் கொணர்ந்தார். மனைவிபால தந்தார் இருவருமுயன்றார். இன்னுணவாக்கினார். மாறா அன்போடு இவர் செய்யும் இலவாழ்க்கைநலத்தை ஐயன்கண்டார். அருள்செய்தகன்றார் மாறநாயனார் பயனும் பண்பும் பெற்றுப் பேரின்பமுற்றார். இதன் விரிவைப் பெரியபுராணத்தில் உணர்க.

அன்பும் அறமும் உடையவனே இலவாழ்வான் என்பது இதனால் கூறப்பட்டது.

---

46. தேடித் துறவறத்திற் செல்லார் குசேலரிலமேலன்
கூடி யிருந்தார் குமரேசா—நாடி
அறத்தாற்றின் இல்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன். (௬)

இ—ள்.

குமரேசா! குசேலர் துறவொழுக்கத்தை மேற்கொண்டு செல்லாமல், ஏன் இல்வாழ்க்கையில் இருந்தார் எனின், ஒருவன் இல்வாழ்க்கையை அறநெறியே செலுத்துவானாயின் புறநெறியிற்போய் அவன் பெறும்பயன் யாது என்க.

அருமை கருதி ஆற்றின் என்றார்.

புறத்து ஆறு=இல்லறத்துக்குப் புறமாகிய நெறி. அஃதாவது துறவறம். ஒருவன் நெறிவழுவாமல் இல்லறத்தைச் செய்வானாகில் அவன் துறவறத்திற்சென்று பெறும்பயன் ஒன்றும் இல்லையென்பதாம்,

துறந்து தவஞ்செய்து பெறத்தக்க எல்லாப பேறுகளையும் முறைதவறாத இல்லறத்தான் உறுதியாகப் பெறுவான் என்பது கருத்து.

இல்லறத்தை ஒருவன் வழுவாமற் செய்யவேண்டும் என்பதும், அங்ஙனம் செய்வானாயின அவன் துறவியினும் பெரியவன் என்பதும், அவனுக்கு எல்லா நலங்களும் ஒருங்கே உளவாம் என்பதும், இதில் உணர்த்தப்பட்டன. இவ்வுண்மை குசேலர்பால் உணரப்படும்.

கதை

இற்றைக்கு ஐயாயிர வருடங்கட்கு முன்னர் அவந்தி நகரத்திலே அந்தணர் வருணத்திலே குசேலர் என்பவர் ஒருவர் இருந்தார். இவர் கண்ணனுடைய பள்ளித்தோழர். நல்ல எண்ணமுள்ளவர். பற்றற்றவர். துறவுக்குரிய குணங்கள் எல்லாம் இவருக்குப் பிறவியிலேயே யமைந்திருந்தன. ஆயினும் துறந்து போகவில்லை. இல்வாழ்க்கையே நல்லதென்றெண்ணினார். சுசீலை யென்னும் மனைவியை மணந்தார். இல்லில் இருந்தார். நல்லறஞ் செய்தார். துறந்தவர் எவரினும் இவர் சிறந்து விளங்கினார். எல்லா நன்மையும் இவர் இல்லிலிருந்தெய்தினார். இதன் விரிவு குசேலோபாக்கியானத்தில் காணப்படும்.

துறவறநிலையினும் இல்லறநிலையே இனிதென்பது இதனால் கூறப்பட்டது.

47. முற்றத் துறந்தார்க்கேன் முன்னின்றான் இன்னின்ற
கொற்றச் சனகன் குமரேசா—உற்ற
இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை. (எ)

இ--ள.

குமரேசா! சனகன் இல்வாழ்க்கைக் கண் நின்றிருந்தும் முற்றத்துறந்த முனிவரினும் ஏன் மேன்மையுற்றான் எனின்,

இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான் முயல்வாருள் எல்லாம் தலை எனக.

தலை=சிறப்பு. இயல்பு=இல்வாழ்க்கைக் குரிய இயல்பு. முயல்வாருள் எல்லாம் தலை=முத்தியை அடைய முயல்கின்றவர் எல்லாருள்ளும் சிறந்தவன்.

உடலிலுள்ள உறுப்புக்கள் எல்லாவற்றுள்ளும் தலை உயர்ந்து நின்று சிறந்து விளங்கும். அதுபோல் உலகிலுள்ள நிலையினர் எல்லாருள்ளும் இயல்புடைய இல்லறத்தானே உயர்வுடையான் என்பதாம்.

மேல், துறந்துபோய் ஒருவன் பெறத்தக்க பெரும்பயனை இல்லின்கண் இருந்தே பெறலாம் என்றார். இதில், அங்ஙனம் இருந்து பெறுபவனே சிறந்தவன் என்றார். ஒரு பொருளைச் சென்று பெறுபவனிலும் நின்றுபெறுபவனே என்றும் உயர்ந்தவன் எனக. அவ்வீட்டை இவ்வீட்டிலிருந்தே அடையலாம் என்பது குறிப்பு.

இல்வாழ்க்கையில் இருந்து ஒருவன் எல்லார்க்கும் நல்ல உபகாரியாய் வாழவேண்டும் என்பதும், அங்ஙனம் வாழ்பவனே துறந்தவர் எவரினும் சிறந்தவன் என்பதும், இதற்குச் சான்றாக சனகன் இல்வாழ்ந்து சிறந்தான் என்பதும், இதில் உணர்த்தப்பட்டன.

கதை.

மகத தேசத்துக்குத் தென் கிழக்கில் உள்ள மிதிலையென்னும் நகரில் இருந்து நெறிவழுவாமல சனகர் இல்வாழ்க்கையை யினிது நடத்தினார். சிறந்த துறவிகள் எல்லாம் இவரது பெருமையை வியந்து புகழ்ந்தார். இவரது அறிவாலும் ஒழுக்கத்தாலும் தெளிந்து திருந்தின துறவிகள் பலர். நல்ல உபகாரியாய் இல்லிலிருந்தே எல்லா நலங்களையும இவர் எய்தினார். துறந்து பொறிகளையடக்கி வருந்தியடையும் பேற்றை யிவர் இல்

வாழ்க்கையிலிருந்து இன்பமெல்லாந் துய்த்து இயல்புடன் எய்தினார். அருந்தவராகிய சுகர் முதலிய பெரியார் எவரினும் சிறந்தவராய் இவர் விளங்கினார். இவரது இல்வாழ்க்கையின் இயல்பும் உயர்வும் பாகவத முதலிய பலவினும் புலனாம்.

நெறிவழுவாமல் இல்வாழ்பவனே துறந்தவர் எவரினும் சிறந்தவன் என்பது இதனால் கூறப்பட்டது.

48. கொற்றத் தவஞ்செய்யும் கோசிகரேன் வேள்விமுற்றக்
கொற்றவனில் வந்தார் குமரேசா—மற்றவரை
ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை யுடைத்து. (அ)

இ—ள்.

குமரேசா! அரியதவத்தைச் செய்யும் விசுவாமித்திரர் வேள்வியை முடிப்பதற்காக தசரதன் இல்லை நோக்கி ஏன் வந்தார் எனின், பிறரையும் நெறியே ஒழுகச்செய்து தானும் வழுவாமல் ஒழுகும் இல்வாழ்க்கை நிலையானது நோற்பார் நிலையினும் நோன்மையுடைத்து என்க.

நோற்பார்=தவஞ்செய்வார். இங்கு இஃது அவரது நிலையையுணர்த்திற்று. நோன்மை=பொறுமை. ஒழுக்குதலுடைமையும் இழுக்குதல் இன்மையும் ஒருவன் இல்வாழ்க்கையில் ஒருங்கே அமைந்திருத்தல் வேண்டும் என்பதாம்.

இல்வாழ்பவன் பிறரையும் வழுவாமல் ஒழுக்கித்தானும் வழுவாமல் ஒழுகவேண்டும் என்பது கருத்து.

துறவிகள் தமக்குற்ற பசி, நோய் முதலியவற்றை மாத்திரம் நீக்கும் பொறுப்பினையுடையவர். இல்வாழ்பவரோ, தமக்குறுவனவும் பிறர்க்கு உறுவனவுமாகிய எல்லாத் துன்பங்களையும் நீக்

கும் பொறுப்பினையுடையவர். ஆதலால் துறவற நிலையினும் இல்லற நிலையிலே தான் பொறுப்பும் வருத்தமும் பொருந்தியுள்ளன என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை விசுவாமித்திரர்பாலும் தசரதர்பாலும் உணரப்படும்.

கதை

துறந்தவரிற் சிறந்தவராகிய விசுவாமித்திரர் சித்தாச்சிரமம் என்னும் இடத்திலிருந்து ஒரு பெருவேள்வி செய்தார். இவ்வேள்விக்குத் தாடகை முதலியோர் பல இடையூறுகள் செய்தனர். அதனால் அது நன்கு முடியவில்லை. முடியாமையை நினைந்து முனிவர் வருந்தினார். பலமுறை முயன்றார். முயன்றும் அது நலமுறவில்லை. வனவாழ்க்கை செய்யும் இவர் தமது வேள்வியை முடிக்கும்பொருட்டு இல்வாழ்க்கை செய்யும் தசரதனை நோக்கி வந்தார். வந்த முனிவரை மன்னன் தொழுதான். புகழ்ந்தான். மகிழ்ந்தான். முனிவரும், உற்றதை முற்றும் உணர உரைத்தார். அதன்பின் அரசன் தமது அருமைத் திருமகனாகிய இராமனை முனிவருடன் அனுப்பி அவரது தவத்தை யினிது முடிப்பித்தான். முடிவை நினைந்து முனிவர் பெருமகிழ்வடைந்தார். துறவற நிலையிலிருந்த முனிவருக்கு உற்ற இடையூற்றை நீக்கி, அவரை ஆற்றின் ஒழுக்கி அரசன், இல் அறம் புரிந்தமையை உலகம்போற்றிப் புகழ்ந்தது.

இஃது இராமாயணத்திலுள்ளது.

துறவற நிலையினும் இல்லற நிலையே அருமையும் பெருமையும் உடைத்து என்பது இதனால் கூறப்பட்டது.

49. இச்சையற்ற தன்மகனை யில்வாழ்வில் நில்லென்றேன்
குச்சகனார் சொன்னார் குமரேசா—மெச்சும்
அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை யஃதும்
பிறன்பழிப்ப தில்லாயின் நன்று. (௯)

இ—ள்.

குமரேசா! இச்சையில்லாத தனது மகனை இல்வாழ்க்கையிலேயே நில என்று ஏன் குச்சகனார் சொன்னார் எனின், அறன் எனப்பட்டது இல்வாழ்க்கையே; அஃதும் பிறன்பழிப்பது இல்லாயின் நன்று என்க

அஃது என்றது துறவறத்தை.

இல்லறம் துறவறம் என ஒரு வகையிலவைத்து எண்ணப்படும் இருவகை அறங்களுள் இலலறத்தைப் பிரித்து முற்கூறினமையால் ஏனைத்துறவறத்தை "அஃதும" என்று சுட்டினார். இனி, அஃது என்னும் சுட்டுப்பெயரை இல்வாழ்க்கைக்கே ஏற்றி அறன் எனப்பட்டது இல்வாழ்க்கையே; ஆயினும் பிறரால் பழிக்கப்படாதபடி அது நடத்தப்படுமாயின் மிகவும நன்று; என்று பொருள் கூறவும்படும்.

பொறிகளையடக்கி நல்வழியில் வழுவாமல் நிற்கும் துறவி தான் பொறியின்பங்களைப் பொருந்தத்துய்க்கும் இல்வாழ்வானோடு சமமாக மதிக்கப்படுவான் என்பதும; இல்வாழ்பவன் பிறனில் விழைதல், புறங்கூறல், முதலிய இழிகுணங்களை, யறவே யகற்றி ஒழுகவேண்டும் என்பதும், மேற்குறித்த இருவகைப் பொருட்கு முறையே உரிமையாம்.

துறவற நிலையினும் இல்லற நிலையே ஒருவனுக்கு நல்லது என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை குச்சகன்பால் உணரப்படும்.

கதை.

இப்பாரதகண்டத்தின் வடகோடியில் கடகம் என்று பெயரிய நகரம் ஒன்று இருந்தது. அதில் குச்சகன் என்னும் பெயரினையுடைய ஒரு வேதியர் இருந்தார். இவர் அருந்தவஞ்செய்து ஒரு புதல்வனைப்பெற்றார்: அவனுக்குக் கௌச்சிகன் எனப்பெயரிட்டார். போற்றி வளர்த்தார். பருவமுற்றபின் இவர் அவனுக்குத் திருமணஞ்செய்யக் கருதினார். தந்தை கருத்தை மைந்தன் உணர்ந்தான். மணத்தை வெறுத்தான். வனத்திற்புகுந்தான்.

ஊணினை மறந்தான். மனத்தை யொடுக்கினான். பல வருடங்களாக அருந்தவம் புரிந்தான் கொடுமிருகங்கள் தனது உடலில் வந்து தடவினும் உணராமல் ஒரு மனப்பட்டுப் பரமனைப்பற்றினான். அதனால் மிருக கண்டூயன் என்னும் பெயரினைப்பெற்றான். இப்பெருந்தகையின் அருந்தவத்தை வியந்து இறைவன் அருள் புரிந்தார் அருள்பெற்ற புதல்வன் தெருளுற்ற தந்தையை வந்து கண்டான். தவத்திலுற்றதைத் தந்தைக்கு உரைத்தான். தந்தையு மகிழ்ந்தார். தனயனை நோக்கினார். இனியேனும் இல்லறத்திலிருந்து நல்லறம் செய்யென்றார். மகன் மனம் இசையவில்லை துறவறமே நல்லதென்றான். துணிந்துசெல்லநின்றான். தந்தை தடுத்தார். இல்வாழ்க்கையே சிறந்த அறம் என்று மகனுக்கு இனிது எடுத்துரைத்தார். மகனும் இசைந்தான். அதன்பின் விருத்தையென்னும் ஓர் உத்தமியை மணந்தான். இல்வாழ்க்கை புரிந்தான். மிருகண்டு என்னும் புதல்வனைப்பயந்தான். இல்லறப்பயனை இன்புடனே அடைந்தான். இம்மிருகண்டுவே நமது மார்க்கண்டர் தந்தை. இதன் விரிவு கந்தபுராணத்தில் மார்க்கண்டேயப் படலத்தில் காணப்படும்.

இல்வாழ்க்கையே சிறந்த நல்வாழ்க்கை என்பது இதனால் கூறப்பட்டது.

* * *

[மென்று

50. மண்டலத்தில் வாழ்ந்திருந்தும் வள்ளுவரேன் தெய்வ
கொண்டாடப் பட்டார் குமரேசா—உண்டாகும்
வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப் படும். (௰)

இ—ள்.

குமரேசா! வள்ளுவனார் இவ்வுலகத்தில் வாழ்ந்திருந்தும் அவனை ஏன் எல்லாரும் தெய்வம் என்று கொண்டாடினார் எனின், வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன், வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும் என்க.

மண்டலம்=மண்தலம். நிலவுலகம் என்றபடி. இதன் எதிர்மொழி விண்டலம். வாழ்வு ஆங்கு வாழ்பவன்=வாழவேண்டிய இயல்பின்படிவாழ்பவன். இல்லறத்திற்குரிய இயல்பில் வழுவாமல் வாழ்பவன் மனிதனாயினும் அவன் தேவனாக மதிக்கப்படுவான் என்பதாம்.

வாழ்வாங்கு வாழ்பவன் பின்தேவனாதல் திண்ணமாதலால் வையத்தானே யெனினும் அவனை வானத்தான் என்று மதித்துத் துதிக்கவேண்டும் என்பது கருத்து.

ஒழுக்கம் நிறைந்த இல்வாழ்பவன் விழுப்பம் நிறைந்ததெய்வமாக விரும்பி மதிக்கப்படுவான் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை நமது திருவள்ளுவர்பால் உணரப்படும்.

கதை.

இற்றைக்கு இரண்டாயிர வருடங்கட்கு முன்னர் பிரமாவின் அமிசமாக இவ்வுலகத்தில் ஓர் அவதாரம் நிகழ்ந்தது. இந்த அவதார மூர்த்திக்குத் தான் திருவள்ளுவர் என்று பெயர். இவரே திருக்குறள் என்னும் தெள்ளமுதத்தை உலகுய்யத்தந்த வள்ளல்.

இவரது தாயின் பெயர் ஆதி. தந்தையின் பெயர் பகவன். ஆதியையும் பகவனையும் தமக்குத் தாயும் தந்தையுமாக் கொண்டு தோன்றிய இவரது தோற்றத்தால் இவ்வுலகில் பல நலங்கள் தோன்றின.

அன்னையும் பிதாவும்முன்னறி தெய்வமென்று ஔவையார் அருளிய செவ்விய மொழியின்படி நமது நாயனார் தமது தாயையும் தந்தையையுமே தெய்வமாக மதித்துத் துதித்தனரோ என்று கருதும்படி கடவுள் வாழ்த்தின் முதற்பாவில் "ஆதி பகவன் முதற்றே உலகு" என்று அமைந்துள்ளது. இவரது மதி நலமும் மனநலமும் மக்கட்குப் பெருநலங்களை யுதவிவருகின்றன.

இவர் வாசுகி என்னும் மனைவியோடு கூடி இல்லற நிலையில் இன்புற்றிருந்தார். இல்லற ஒழுக்கங்கள் எல்லாம் இப்பெருந்தகைபால் ஒருங்கே அமைந்திருந்தன. இவரது இல்வாழ்க்கை நலத்தை யெல்லாரும் புகழ்ந்தார் வானவரும் இவரது ஞான நிலைமையை நன்கு மதித்தார் துதித்தார். இவரது அறநலத்தையும் அறிவின் பலத்தையும் அறிந்து அனைவரும் இவரைத் தெய்வமென்று போற்றினார். முற்றத்துறந்த முனிவர் பலரும் இவரது இல்லை நோக்கிவந்து இவர் சொல்லுகின்ற நீதி நெறிகளைக் கேட்டு மகிழ்ந்து சென்றார்.

தேவர், திருவள்ளுவர், தெய்வப்புலவர், செந்நாப்போதார் நாயனார், நான்முகனார், மாதானுபங்கி, பொய்யில்புலவர், பெருநாவலர், முதற்பாவலர், என்பன இவருக்குத் திருநாமங்களாம். இப்பெயர்களானே இவரது பெருந்தன்மையும் திருந்திய பண்பும் நன்குபுலனாம். இவர் தமது வாழ்க்கைத் துணையாகிய வாசுகியென்னும் அம்மையோடு கூடி வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையுந்தெய்வத்துள் தெய்வமாச்சிறந்து விளங்கினார். அதன் பின் நமது அம்மை முன்னும் ஐயன் பின்னுமா இவ்வையகத்தைத் துறந்தார். இவரது திருமேனியைத் தீண்டிய பறவை முதலிய சிறிய பிராணிகளும் மெய்யுணர்வு பெற்றுத் தெய்வ வுருவை அடைந்தன.

> அடிசிற் கினியாளே அன்புடையாளே
> படிசொற் கடவாக பாவாய் — அடிவருடிப்
> பின்தூங்கி முன்னெழுந்த பேதையே போதியோ
> என்தூங்கும் என்கண் இரா.

இஃது அம்மை பிரிந்த காலத்தில் நமது ஐயன் அழுதிரங்கி அருளியது. இதனால் அம்மையின் விழுமிய குணங்களெல்லாம் முழுதும் உணரப்படும்.

சென்னையை அடுத்துள்ள மயிலாப்பூரில் இப்பெருமானது திருவுருவத்தையுடைய ஆலயம் ஒன்று இன்றும் உள்ளது.

அஃது என்றும் எல்லாராலும் நன்று வழிபாடு செய்யப்பெற்று வருகின்றது. இதன் விரிவைப் புலவர் புராணத்தில்

நெறிவழுவாமல் இல்வாழ்பவன் உறும்பயன் இதனால் ர்த்தப்பட்டது.

* * *

நல்லற நூல்களிற் சொல்லறம் பலசில
இல்லறந் துறவறம் எனச்சிறந்தனவே
அந்நிலை இரண்டினுள் முன்னது இளப்பின்
கற்றநூற் றுறைபோய்க் கடிமனைக்கிழவன்
நற்குணம் நிறைந்த கற்புடை மனைவியோடு
அன்பும் அருளுந் தாங்கி இன்சொலின்
விருந்து புறந்தந்து அருந்தவர்ப் பேணி
ஐவகை வேள்வியும் ஆற்றி இவ்வகை
நல்லறம் நிரப்பிப் பல்புகழ் நிறீஇப்
பிறன்மனை நயவான் தன்மனை வாழ்க்கைக்கு
வரையா நாளின் மகப்பேறு குறித்துப்
பெருநலந் துய்க்கும் பெற்றித் தன்றே.

(சிதம்பர மும்மணிக்கோவை)

மழையின்றி மாநிலத்தார்க்கில்லை மழையுந்
தவமிலார் இல்வழி இல்லை—தவமும்
அரசியல் இல்வழி இல்லை அரசனும்
இல்வாழ்வான் இல்வழி இல்.

(நான்மணிக்கடிகை.)

தார நல்லிதந் தாங்கித் தலைநின்மின்
ஊரும் நாடும் உவத்தல் ஒருதலை
வீரவென்றி விறன்மிகு விண்ணவர்
சீரின் ஏத்திச் சிறப்பெதிர் கொள்பவே.

(வளையாபதி)

பிச்சையும் ஐயமும் இட்டுப் பிறன்தாரம்
நிச்சலும் நோக்காது பொய்யொரீஇ—நிச்சலும்
கொல்லாமை காத்துக் கொடுத்துண்டு வாழ்வதே
இல்வாழ்க்கை என்னும் இயல்பு (அறநெறிச்சாரம்)

இவ் அதிகாரத்தின் தொகைப்பொருள்.

எல்லார்க்கும் இல்வாழ்பவனே துணை. பெரியோர் வறியோர் முதலிய அனைவரையும் அவன் அன்புடன் ஆதரிக்கவேண்டும். பிதிர்களைக்கருதல், தெய்வந்தொழுதல், விருந்தினரை உபசரித்தல், சுற்றம் பேணல், ஆகிய இவற்றைக் குற்றமறச் செய்தல் வேண்டும். பழிக்கு நாணிப் பகுத்து உண்டு அன்புடையனாய் அறம்புரிதல் வேண்டும். இல்லைத்துறந்து போதலினும் அதில் இருந்து வாழ்தலே நன்று. மேற்குறித்த நெறிகளில் வழுவாமல் வாழ்பவன் துறவிகளினும் பெரியவனாவன். துறவறநிலையினும் இல்லறநிலையே வலிமையுள்ளது. இல்லறமே நல்லது. அதிலிருந்து நெறியோடு வாழ்பவன் தெய்வநிலையை எய்துவான், என்பனவாம்.

நிவது இல்வாழ்க்கை முற்றிற்று.

* * *

6ம் அதிகாரம்-வாழ்க்கைத் துணைநலம்.

அஃதாவது ஒருவனது இல்வாழ்க்கைக்குத் துணையாகிய மனைவியினது நன்மை. மேல் இல்வாழ்க்கையின் தன்மையை உணர்த்தினார். இதில் அதற்குத் துணையாகிய நன்மையை உணர்த்துகின்றார்.

அதிகார அமைவும் இதனானே புலனாம்.

51. கொண்டான் சிறுவரவும் கொண்டேன் சுசீலையன்பு
கொண்டா தரித்தாள் குமரேசா—கண்ட
மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை. (க)

இ—ள்.

குமரேசா! சுசீலை தன்னைக்கொண்டவனது சிறியவருவாயைக்கொண்டே ஏன் அன்புகுன்றாமல் ஆதரித்தாள் எனின், மனைக்குத்தக்க மாண்பும் தன்னைக்கொண்டவனது வளத்துக்குத்தக்க வாழ்க்கையும் உடையவளே வாழ்க்கைக்குத் துணையாவள் என்க. சு=நன்மை. சீலம்=ஒழுக்கம். சு சீலம் உடையவள் சுசீ

தற்கொண்டான்=தன்னை மனைவியாக்கொண்டவன், கணவன் என்றபடி. துணை என்றது ஆகுபெயராய் இங்கு மனைவியை உணர்த்திற்று இல்லின் கண் இருந்து ஒருவன் செய்யும் அறத்திற்கு உடனிருந்து அவனுக்கு உதவி புரிபவளாதலால் மனைவியைத் துணைவியென்றார்.

பெரியாரைப்போற்றல், வறியாரைக்காத்தல், விருந்தினரை உபசரித்தல், சுற்றத்தாரை ஆதரித்தல், இனியவுணவுகளை உளவாக்கித் தனது கணவனைப்பேணல் முதலிய விழுமிய குணங்களும், வருவாயின் அளவறிந்து செலவு செய்துவாழுந்திறமும், உடையவளே இல்லாள் என்பது இதில் உணர்த்தப்பட்டது.

இவ்வுண்மை சுசீலைபால் உணரப்படும்.

என்பவள் குசேலருடைய மனைவி. உத்தம குணங்கள் முற்றும் வாய்ந்தவள். இருபத்தேழு மக்களைப்பெற்றாள். தனது கொழுநனாகிய குசேலர், பொருள் தேடும் வழியிற் புகாமல் அருளையே நாடினார். அதனால் வறுமை அதிகரித்தது. குசேலர்,

வெளியே சென்று காட்டில் உதிர்ந்து கிடக்கின்ற புல்லியதானியங்களைப்பொறுக்கித் தொகுத்துக்கொணர்ந்தார். அதனைச்சுசீலை அன்புடன் பெற்றுப்பகுவஞ்செய்து கஞ்சியாக்கிக் கணவனையும் மக்களையும் ஊட்டி அதிதிகளையும் உபசரித்தாள். கொண்டானது சிறியவாயினும் கோணாமல் பெருமகிழ் வுடனே இல்வாழ்க்கையை நடத்தினாள். மனைத்தக்க மாண்பும் வளத்தக்க வாழ்க்கையும் இவள்பால் நன்கு அமைந்திருந்தன நல்ல சீலம் உள்ளவள் ஆதலால் இந்த அம்மையைச் சுசீலை என்று அழைத்தார்.

மாசிலாக் குலத்து வந்தாள் வருவிருந்து உவப்ப வூட்டும்
நேசமிக் குடையாள் கொண்கன் நினைப்பறிந் தொழுகும் நீராள்
தேசுறு வாய்மை யுள்ளாள் சினந்திடல் என்றும் இல்லாள்
பேசுதிண் கற்பு வாய்ந்தாள் பெற்றதே கொண்டுவப்பாள்.

மணமகன் உடம்புபோற்ற வல்லவள் மனைவியேயென்று
உணர்வினர் மொழியுமாற்றம் உவள்செயல் நோக்கிப்போலும்
தணவறும் அன்புஞ் சாந்தத் தன்மையும் நன்மையான
குணமுமோர் உருவங்கொண் டோர் குடிப்பிறந் தனைய நீராள்.
(குசேலோ பாக்கியானம்)

இது பாகவதத்தில் உள்ளது.

ஒருவன் மனைவிக்கு அமைந்திருக்க வேண்டிய நலங்கள் இவையென இதில் உணர்த்தப்பட்டன.

* * *

52. கொற்றமுற்ற பத்ரகிரி கோன்வாழ்க்கை இல்லாளால்
குற்றமுற்ற தென்னே குமரேசா—உற்ற
மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல. (உ)

குமரேசா! பத்திரகிரியினது அரச வாழ்க்கையும் இல்லாளால் ஏன் குற்றமுற்றதெனின், ஒருவன் இல்லாள்கண் மனைக்கு

உரியமாட்சிமை இல்லையாயின் அவன வாழ்க்கை எவ்வளவு மாட்சிமை உடையதாயினும் அதனால் பயன் இல்லை என்க.

மனைமாட்சி=இல்லறத்திற்கு உரியமாண்பு. அஃதாவது கற்பால் தன்னைக்காத்தலும், கணவனைப்பேணலும், விருந்தினர் முதலியோரை மெய்யன்போடு உபசரித்தலும் முதலாயின.

ஒருவன் இல்வாழ்க்கையானது செல்வத்தால் எவ்வளவு பெருமையை உடையதாயிருப்பினும் அவனது மனைவியினிடத்து நற்குணங்களும் நற்செயல்களும் இல்லையாயின் அவ்வாழ்க்கை பயன்படாதென்பதாம். இவ்வுண்மை பத்திரகிரிபால் காணப்படும்.

பத்திரகிரி என்பவர் விக்கிரமாதித்தன்பட்டி என்னும் மெய்யறிவாளரோடு உடன் பிறந்தவன். உச்சனி என்னும் நகரில் இருந்து அரசுபுரிந்தான். வடமொழியிற் சிறந்த வித்துவான். நீதிசதக முதலிய உயர்ந்த நூல்களை அதில் இயற்றியுள்ளான். எல்லாவளங்களும் இவன் இல்லில் அமைந்திருந்தன. மனைவியோடுகூடி வாழ்க்கையை நடத்தி வருங்காலத்தில் முனிவரொருவர் இவன் இல்லை நோக்கி வந்தார். நல்லமாங்கனி யொன்றை இவனிடம் தந்தார். அதனை அரசன் வாங்கினான். தான் உண்ணவில்லை. தனது மனைவிக்கே தந்தான். அவள் அதைத் தனது கள்ளநாயகனுக்கு மெள்ள அனுப்பினாள். அவன் அதைப்பெற்றுத்தான் நேசம் வைத்துள்ள ஒரு தாசிக்குத் தந்தான். அவளும் அதனைத்தான் காதலித்துள்ள ஓர் இடையனுக்குக் கொடுத்தாள். அவனும் அதனை உண்ணவில்லை. தான் காதல்கொண்டுள்ள ஒரு புலைமகளுக்கு அவ்விலையில் கனியை விரும்பிக்கொடுத்தான். அப்புலைமகளும் அக்கனியின் பெருமையை அறியாமல் தன் தலையில் வைத்துள்ள சாணம் நிறைந்த கூடைமேல் வைத்துத் தனது குடிசையை நோக்கிச் சென்றாள். அவ்வமையம் அரசன் மேன்மாடத்தின் நிலாமுற்றத்தின் மேல் உலாவிக்கொண்டு நின்றான். அப்புலைமகள் செலலை இத்தலை

மகன் கண்டான். குடைமேல் உள்ளது தனது மனைவிக்குத் தந்த இனியமாங்கனியென்று தெளிந்தான். அவளைக்கொணரும்படி செய்தான். அவளும் வந்தாள். மன்னனை வணங்கி நின்றாள். அரசன் இக்கனி உனக்கேதென்றான். அவள் உள்ளதைச்சொன்னாள். அதன்பின் அடுத்தடுத்து அரசன் அதன் இயல்பை வினவி ஆய்ந்தான். முடிவில் உற்றதை முற்றும் உணர்ந்தான். இல்லாள் இழிவை நினைந்தான். மிகவும் வருந்தினான். இல்வாழ்க்கையை வெறுத்தான். அரசபோகங்கள் அனைத்தையும் விடுத்தான். வனம்புகுந்தான். தவம்புரிந்தான். இதன் விரிவை நீதிசதகத்தில் தெளிக.

ஒருவன் மனைவியினிடத்து மாண்பு இல்லையானால் அவன் வாழ்க்கை இழிவுறும் என்பது இதனால் கூறப்பட்டது.

53 ஒன்றுமில்லாச் சத்தியவான் உற்றானென் இல்லாளால்
குன்றாமல் எல்லாம் குமரேசா—என்றேனும்
இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை. (௩.)

இ-

குமரேசா! ஒன்றும் இல்லாத சத்தியவான் இல்லாளால் எல்லா நலங்களையும் ஏன் பெற்றான் எனின், இல்லவள் மாண்புடையவளானால் அவனுக்கு எல்லா நலங்களும் உளவாம் என்க.

இல்லவள் மாணாக்கடை—மனைவி மாண்பு இலளாயின். என், என்னும் வினா இரண்டாவது யாதும் இல்லையென்பதைக் குறித்து நின்றது.

ஒன்றும் இலனாயினும் நல்ல மனைவிமட்டும் ஒருவன் உடையனாயின் அவன் எல்லாம் உடையனாம். எல்லாம் உடையனாயினும் நன்மனைவிமட்டும் ஒருவனுக்கு இல்லையானால் அவன் யாதும் இலனாம் என்பது கருத்து.

பொருளுடைமையினும் ஒருவனுக்கு மாண்புடைய மனைவியுடைமையே சிறந்ததென்பது குறிப்பு.

மாண்புடைய இல்லாளையுடையவனுக்கு இல்லாதது ஒன்றும் இல்லையென்பது இதில் உணர்த்தப்பட்டது இவ்வுண்மை சத்தியவான் பால் உணரப்படும்.

கதை

சத்தியவான் என்பவன் சாளுவதேசத்து அரசன் புதல்வன். இவன் இளவரசனாக வருதற்கு முன்னரே தனது தந்தையை வென்று பகைவர்கள் அவன் அரசைக் கைப்பற்றிக்கொண்டார்கள் நாடிழந்து நலிந்திருந்த தந்தை தாயருடன் இவன் வனம்புகுந்து வருந்தியிருந்தான். இங்ஙனமிருப்ப, அசுவபதியென்னும் அரசன் மகளாகிய சாவித்திரி என்பவள் இளமையிலேயே இவனை மணமகனாகக் கருதியிருந்தாள். பின் இவன் எளிய நிலைமையைத்தெளிய அறிந்தாள் ஆயினும், அன்புமாறவில்லை. பெற்றோர் வேறு மணமுடிக்கக் கருதினார். இவள் இசைந்திலள். சத்தியவானே தனக்கு உத்தமநாயகன் என்று உறுதிகூறினாள். பெற்றோர்களும் இவள் பெருந்தன்மையை வியந்தார். இவளது அழகிய திருமேனியின் அருமையை நினைந்து தளர்ந்தார். ஆயினும், இவள் மனம்போல் இசைந்து காட்டில் வசிக்கும் சத்தியவானுக்கே இவளைக்கொண்டுபோய்த்தாரை வார்த்துத்தந்தார். மீண்டார். சாவித்திரியும் சத்தியவானுடன் காட்டில் வசித்தாள் இவளது பெருங்குணங்களுக்கு இறைவன் இரங்கினார். சத்தியவான் இழந்திருந்த எல்லா நலங்களையும் அவன் எய்தும்படி யருளினார். அவனும் அடைந்தான். தனது பத்தினியோடும் பெற்றாரோடும் நாட்டினையடைந்தான். இழந்த அரசைப்பெற்றான். இனிதாக இல்வாழ்ந்தான். இதன் விரிவு தருமசங்கிதையில் உணரப்படும்.

மாண்புடைய மனையாளை யுடையவன், எல்லா நலங்களையும் அடைவான் என்பது இதனால் கூறப்பட்டது.

54. பண்டேன் நளாயினியைப் பற்றற்ற மாதவனும்
கொண்டு மகிழ்ந்தான் குமரேசா—கொண்டாடும்
பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின். (ச)

இ—ள்

குமரேசா! பற்று அற்ற மாதவனும் ஏன் நளாயினியை மனைவியாகப்பெற்று மகிழ்ந்தான் எனின், ஒருவன் பெறத்தக்க பொருள்களுள் மனைவிபோல் சிறந்த பொருள்கள் யாவையுள அவளிடத்தில் கற்பு என்னும் திண்மையுண்டாகப் பெறின் என்க.

பற்று அற்ற மாதவன்=மௌவத்கல்யர்.

பெருந்தக்க= பெரிய தகுதிவாய்ந்த அஃதாவது மிக மேம்பாடான பொருள். பதிவிரதைகளுடைய மனம் நிலைகுலையாமல் உறுதியாக நிற்கும் பெருமையையுடையது அது கருதி "கற்பு என்னும் திண்மை" என்றார்.

இம்மையில் ஒருவன் பெறுகின்ற பேறுகள் எல்லாவற்றுள்ளும் கற்புடையாளை மனைவியாகப் பெறுதலே சிறந்த பேறென்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை மௌவத்கல்யர் பால் உணரப்படும்.

கதை

மௌவத்கல்யர், இவரொரு சிறந்தமுனிவர் நிறைந்த தவவொழுக்கமுடையவர் நளாயினி என்னும் குலமகளைத் தனக்கு மணமகளாகக் காதலித்தார். அவள் தந்தைபால் வந்தார். தன் கருத்தை உரைத்தார் அவனும் இசைந்தான். முனிவர் அவளை மனைவியாகக் கொண்டார். மோன இன்பத்தைமுழுதும்விடுத்தார். காதல் இன்பத்தைக் கலந்து துய்த்தார். அதன்பின் இவர் அவளது கற்பின் திண்மையைச் சோதிக்கக் கருதி அவளுக்கு அல்லல் பல செய்தார். அவ்வெல்லாவற்றிலும் நிலைகுலையாமல் நின்றாள்.

நெறி திறம்பாமல் ஒழுகினாள். அன்பால் முனிவர்க்கு இன்பமே செய்தாள். அவர் வேண்டுவன வெல்லாம் விருப்புடன் தந்தாள். மாண்டவியர் என்னும் முனிவர் ஒருநாள் இவள் மங்கலம் இழக்கும்படி சபித்தார். அதற்கு மாறாக இவள் சூரியன் உதிக்காமல் இருக்கும்படி சபித்துத் தடுத்தாள். அருக்கனும் அவ்வாறே அடங்கியிருந்தான். உலகம் இருண்டது. பிரமன் வேண்டுகோளால் இவள் கதிரவனை வருக என்றாள் அவன் களிப்புடன் உதித்தான். தேவரும் இவள் கற்பின் பெருமையைத் தெளிந்து புகழ்ந்தார். இவளது கலங்காத கற்பின் நலங்கண்ட கணவனும் கழிபேருவகை கொண்டான்.

விரிவைச் சரித்திரத்தில் உணர்க.

இவ்வுலகில் ஒருவனுக்கு நல்லமனைவிபோல் சிறந்தபேறு வேறெதுவுமில்லை என்பது இதனால் கூறப்பட்டது

55. பண்டுமழை பெய்யப் பணித்தாள் அநசூயை
கொண்டுபெய்த தென்னே குமரேசா—உண்டான
தெய்வந் தொழாஅள்கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை. (௫)

இ—ள்.

குமரேசா! அநசூயை முன்னம் பெய்யென்று சொன்னவுடனே ஏன் மழைபெய்தது எனின், வேறு தெய்வத்தைத் தொழாமல் தன் தெய்வமாகிய கணவனையே தொழுது துயில் எழுகின்றவள் பெய்யென்று சொல்ல மழைபெய்யும் என்க.

அறிவுடைமக்கள் உறங்கப்புகுமுன் தெய்வம்தொழுது அச்சிந்தனையோடு உறங்குவர். கற்புடைய மகளிர் உறங்கப்புகுமுன் கொழுநனைத்தொழுது அச்சிந்தனையோடே உறங்குவர். அவர் விழித்து எழும்பொழுது அவருளத்தில் அச்சிந்தனையே முந்தி

நிற்கும். ஆதலால் எழுந்து தொழுவாள் என்னாது "தொழுது எழுவாள்" என்றார்

கனவிலும் நனவிலும் கணவனைத் தெய்வமென்று கருதியுள்ள கற்புடையவளுக்குத் தேவர்களும் ஏவல் செய்வர் என்பது குறிப்பு.

கணவனையே தெய்வமென்று மனைவி கருத வேண்டுமென்பதும், அங்ஙனம் கருதுகின்றவள் கருதியனவெல்லாம் கைகூடும் என்பதும், இதில் உணர்த்தப்பட்டன. இவ்வுண்மை அநசூயைபால் உணரப்படும்

அநசூயை என்பவர் அத்திரி முனிவரது பத்தினி. நல்ல உத்தமி. அசூயை என்றால் பொறாமை. அஃதில்லாதவள் அநசூயை. எனவே அழுக்காறு முதலிய இழிகுணங்கள் இல்லாத பெருந்தன்மையுடையவள் என்பது தன் பெயரானே பெறப்பட்டது. கணவனே தெய்வம் என்று கருதி உரிமையான பணிவிடைகளை முனிவருக்கு உவந்து செய்துவந்தாள். திரிமூர்த்திகளும் இவளது கற்பின் பெருமையையறியும் பொருட்டு இவள்பால் வந்தார். சோதித்தார். அச்சோதனையில் அந்த மூவரும் இந்த அம்மைக்கு மகவாய் விளங்கினார். காமதகம் என்னும் வனத்திலிருந்து தனது கணவன் பலவருடங்களாகத் தவநிலையிலிருந்தார். அக்காலத்தில் மழை பெயலின்மையால் உலகம் நிலைகுலைந்திருந்தது. அநசூயை கொழுநனைத் தொழுது மழைபெயப் பணித்தாள். உடனே மழை பெய்தது. கங்கைவந்தாள். காட்சி தந்தாள். அனைவரும் மகிழ்ந்தார்.

இதன் விரிவு சிவபுராண முதலிய பலவினும் புலனாம்.

காண்டகைய தங்கணவ ரைக்கடவு ளார்போல்
வேண்டலுறு கற்பினர்தம் மெய்யுரையில் நிற்கும்

ஈண்டையுள தெய்வதமும் மாமுனிலும் என்றால்
ண்டகைமை யோர்களும அவர்க்கு நிகரன்றே

(கந்தபுராணம்)

கற்பு மேய கனங்குழை மாதரைப்
பெற்றுளோர்தம மரபும் பெருந்தவக்
கற்பினாட்கொண்ட காதலன் ஆருயிர்ச்
சுற்றம் யாவுந் துறக்கத்தின் எய்துமால். (காசிகாண்டம்)

௦, பதிவ்ரதைகளுக்குப் பணிபுரியும் என்பது கூறப்பட்டது.

56. கொண்டானைப் பேணிக் குலமங்கை யர்க்கரசி
கொண்டார் புகழேன் குமரேசா—தண்டாமல்
தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண். (௬)

குமரேசா! மங்கையர்க்கரசியார் தன்னைக் கொண்டவனைப் பேணி ஏன் புகழ்கொண்டார் எனின், தன்னைக்காத்து தன்னைக் கொண்டவனைப் பேணி தகைசான்றசொல் காத்து சோர்வு இலாள் பெண் என்க.

தகைசான்ற சொல் = தகுதி நிறைந்த சொல். அஃதாவது புகழ்.

ஒழுக்கத்தால் தன்னைக்காத்து, அன்பால் கணவனைப் பேணி இருவருக்கும் இன்பம் பயக்கத் தக்க புகழை வளர்ப்பவளே வாள் என்பது இதில் உணர்த்தப்பட்டது.

இவை மங்கையர்க் கரசியார் பால் உணரப்படும்.

கதை

மங்கையர்க் கரசியார் என்பவர் மதுரையிலிருந்த நெடுமாறன் என்னும் பாண்டிய மன்னன் மனைவியார். சோழமன்னன் மகள். தமது கணவன் சமணமதத்தைச் சார்ந்தார். சைவநெறியை மறந்தார். அரசியார் இதனை அறிந்தார். வருந்தினார். பலவகையிலும் மதியூட்டினாள் மன்னன் மனம் மாறவில்லை. அம்மையார் திருஞான சம்பந்தப் பெருமானைத் தமது திருநகருக்கு எழுந்தருளும்படி செய்தார். அப்பெருமானைக் கொண்டே அரசனுக்குச் சைவநெறியின் பெருமைகளை யினிதுணர்த்தினார். தமதறிவிருந்ததை நெடுமாறன் உணர்ந்தான். சைவஞ்சார்ந்தான். அதன்பின் அரசி பெருமகிழ்வடைந்தாள். இந்த அம்மை தன்னையும் காதலித்த தன்னைக் கொண்டானைப் பேணிய திறத்தை யனைவரும் வியந்து புகழ்ந்தார். புகழைவளர்க்கும் குலமகளிர்க்கெல்லாம் இவர் தலைவியாய் நின்றார். அதனால் மங்கையர்க்கு அரசியெனும் மாண்பெயர் பெற்றார்.

"மங்கையர்க்கரசி வளவர்கோன்பாவை வரிவளைக் கைமடமானி, பங்கயச்செல்வி பாண்டிமாதேவி' என்று சம்பந்தமூர்த்தியும் இவரைத் தமது மலர்வாய்திறந்து மகிழ்ந்து புகழ்ந்துள்ளார்.

இதன் விரிவு பெரிய புராணத்தில் உணரப்படும்.

தன்னையும் தலைவனையும் பேணிப் புகழ்வளர்ப்பவளே மனைவியாவள் என்பது இதனால் கூறப்பட்டது.

* * *

57. சீதை வனம்புகுந்தும் சீருற்றாள் ஏனழகன்
கோதை குலைந்தாள் குமரேசா—மாதர்
சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை. (எ)

இ—ள்.

குமரேசா! சீதைவனம் புகுந்தும் சீருற்றாள்; அழகன் கோதைமாடத்தில் இருந்தும் ஏன் நிலைகுலைந்தாள் எனின், மக

ளிரைச் சிறைசெய்து காக்கும் காவலால் என்ன பயன்; நிறைகாக்கும் காப்பேதலை எனக.

நெஞ்சை நெறியே நிறுத்தல் என்னும் ஏதுவால் நிறையென்பது கற்பை யுணர்த்திற்று.

சிறை, புறக்காவலாகவும், நிறை, அகக்காவலாகவும் கொள்ளப்படும். சிறையாலும் நிறையாலும் மகளிர்காக்கப் படுவர் என்பதும், அவற்றுள் நிறை யிலவழி சிறையால் பயனில்லை யென்பதும் கூறியபடி. நிறையுடையார்க்கே சிறை பயன்படுமென்பது கருத்து.

இராவணன் தன்னகர் புகுத்தித்துயர் பலசெய்தும் சீதைதனனை நிறைபாற்காத்துப் பெரும்புகழ்கொண்டாள்.

தந்தைமுதலானவர் சிறைசெய்து காத்தும் ஏலங்குழலாள் கற்பிழந்து கடும்பழி பூண்டாள்.

கதை

பண்டு இப்பரத கண்டத்தின் மேல் கோடியில் அளகை என்றொருவளநகர் இருந்தது. அதில் உதயன் என்னும் ஓர் அரசன் இருந்தான். இவனுக்கு ஒரு புதல்வி யுண்டு. அவள் பெயர் ஏலங்குழலாள். இவள் மிக்க அழகுடையவள் பருவமுற்றாள். உடனே தகுதியானவரன் அமையவில்லை தந்தை முதலானவர் இவளைக் கன்னிமாடத்தில் வைத்துப் போற்றி வந்தார். வருங்கால் சந்தனன் என்பவன் ஒருநாள் அங்குவந்தான். இவன் பாடலிபுரத்து அரசன் மகன். கல்வியில்லாதவன். இவனை அவள் கண்டாள். காதல் கொண்டாள். சிறுமுறியில் ஒன்று எழுதியிவன் முன்னர் வீசினாள். அதை இவன் எடுத்தான். படித்தவன் ஒருவனிடம் காட்டினான். அதில் "இன்று இரவு இன்ன இடத்தில் இரு, யான் அங்குவருவேன்" என்று எழுதியிருந்தது. படித்தவன் பார்த்தான். மாறுபடவுரைத்தான். அவனை அச்சுறுத்தி வேற்றூர்க்குப் போகும்படி வஞ்சித்தான். இவனொரு குட்ட

ரோகி. அரசன் மகள் இன்பத்தைத்தான் அனுபவிக்கலாம என்று கருதினான் முன்குறித்த இடத்தில் தான்போய் விருப்புடன் இருந்தான் பாவம்! மன்னன் மகளும் மேன்மாடம் விட்டு மெல்லவந்தாள். உள்ளே புகுந்தாள். அவனை அடுத்தாள். மாற்றான் என உணர்ந்தாள். உடனே மானத்தால் உயிரை மாய்த்தாள். (இதன் விரிவை நீதிமஞ்சரியிலுணர்க)

தன்னைத்தான் காத்தலே குலமகளுக்கு அழகென்பது இதனால் கூறப்பட்டது.

* * *

58 வானுலகும் போற்றுகின்ற மாண்பையேன் கண்ணகிதன்
கோனுடனே பெற்றாள் குமரேசா—தானுவந்து
பெற்றாற் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு. (அ)

இ—ள்.

குமரேசா! தேவரும் போற்றும் பெருஞ்சிறப்பினை கண்ணகி தன் கணவனுடனே ஏன் வானுலகில் பெற்றாள் எனின் பெண்டிர் பெற்றானைப் பேணப்பெறின் புத்தேளிர் வாழும் உலகின் கண் பெருஞ் சிறப்புப் பெறுவர் என்க.

பெற்றான் = கணவன். புத்தேளிர் = தேவர்.

பெண்டிர் பெற்றான் பெறின் = பெண்டிர், தம்மை மனைவியாகப் பெற்றவனை உபசரிக்கப் பெறின். பெறின் என்றது அருமையை விளக்கி நின்றது.

இவ்வுலகில் கணவனைப்பேணும் கற்புடைப் பெண்டிர் அவ்வுலகில் தேவர்களால் பேணும் பெருஞ்சிறப்பினைப் பெறுவர் என்பதாம். இவ்வுண்மை கண்ணகிபால் காணப்படும்.

கதை

கண்ணகி என்பவள் காவிரிப்பூம் பட்டினத்திலிருந்த மாநாய்கன் என்னும் பெயரினையுடைய ஒரு வணிகர் தலைவனது

ளிரைச் சிறைசெய்து காக்கும் காவலால் என்ன பயன்; நிறைகாக்கும் காப்பேதலை என்க.

நெறியே நிறுத்தல் என்னும் ஏதுவால் நிறையென்பது கற்பை யுணர்த்திற்று.

சிறை, புறக்காவலாகவும், நிறை, அகக்காவலாகவும் கொள்ளப்படும். சிறையாலும் நிறையாலும் மகளிர்காக்கப் படுவர் என்பதும், அவற்றுள் நிறை யில்வழி சிறையால் பயனில்லை யென்பதும் கூறியபடி. நிறையுடையார்க்கே சிறை பயன்படு மென்பது கருத்து.

இராவணன் தன்னகர் புகுத்தித்துயர் பலசெய்தும் சீதைதன்னை நிறையாற்காத்துப் பெரும்புகழ்கொண்டாள்.

தந்தைமுதலானவர் சிறைசெய்து காத்தும் ஏலங்குழலாள் கற்பிழந்து கடும்பழி பூண்டாள்.

கதை

பண்டு இப்பரத கண்டத்தின் மேல கோடியில் அளகை என்றொருவளநகர் இருந்தது. அதில் உதயன் என்னும் ஓர் அரசன் இருந்தான். இவனுக்கு ஒரு புதல்வி யுண்டு. அவள் பெயர் ஏலங்குழலாள். இவள் மிக்க அழகுடையவள் பருவமுற்றாள். உடனே தகுதியானவரன் அமையவில்லை தந்தை முதலானவர் இவளைக் கன்னிமாடத்தில் வைத்துப் போற்றி வந்தார். வருங்கால் சந்தனன் என்பவன் ஒருநாள் அங்குவந்தான். இவன் பாடலிபுரத்து அரசன் மகன். கல்வியில்லாதவன். இவனை அவள் கண்டாள். காதல் கொண்டாள். சிறுமுறியில் ஒன்று எழுதியிவன் முன்னர் வீசினாள். அதை இவன் எடுத்தான். படித்தவன் ஒருவனிடம் காட்டினான். அதில் "இன்று இரவு இன்ன இடத்தில் இரு, யான் அங்குவருவேன்" என்று எழுதியிருந்தது. படித்தவன் பார்த்தான். மாறுபடவுரைத்தான். அவனை அச்சுறுத்தி வேற்றூர்க்குப் போகும்படி வஞ்சித்தான். இவனொரு குட்ட

ரோகி. அரசன் மகள் இன்பத்தைத்தான் அனுபவிக்கலாம என்று கருதினான் முனகுறித்த இடத்தில தான்போய் விருப்புடன் இருந்தான் பாவம்! மன்னன் மகளும் மேன்மாடம் விட்டு மெல்லவந்தாள். உள்ளே புகுந்தாள். அவனை அடுத்தாள். மாற்றான என உணர்ந்தாள். உடனே மானத்தால் உயிரை மாய்த்தாள். (இதன் விரிவை நீதிமஞ்சரியிலுணர்க)

தன்னைததான் காத்தலே குலமகளுக்கு அழகென்பது இதனால கூறப்பட்டது

58 வானுலகும் போற்றுகின்ற மாண்பையேன் கண்ணகிதன்
கோனுடனே பெற்றாள் குமரேசா—தானுவந்து
பெற்றாற் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு. (அ)

குமரேசா! தேவரும் போற்றும் பெருஞ்சிறப்பினை கண்ணகி தன் கணவனுடனே ஏன் வானுலகில் பெற்றாள் எனின் பெண்டிர் பெற்றானைப பேணப்பெறின் புத்தேளிர் வாழும் உலகின் கண் பெருஞ் சிறப்புப பெறுவர் எனக.

பெற்றான் = கணவன். புத்தேளிர் = தேவர்.

பெண்டிர் பெற்றான் பெறின்—பெண்டிர், தம்மை மனைவியாகப் பெற்றவனை உபசரிக்கப பெறின். பெறின் என்றது அருமையை விளக்கி நின்றது.

இவ்வுலகில கணவனைப்பேணும் கற்புடைப் பெண்டிர் அவ்வுலகிலே தேவர்களால் பேணும் பெருஞ்சிறப்பினைப் பெறுவர் என்பதாம். இவ்வுண்மை கண்ணகிபால் காணப்படும்.

கதை

கண்ணகி என்பவள் காவிரிப்பூம் பட்டினத்திலிருந்த மாநாய்கன் என்னும் பெயரினையுடைய ஒரு வணிகர் தலைவனது

திருமகள். கோவலன் மனைவி. தனது கணவன் மாதவி யென்னும் ஒரு தாசி வசப்பட்டு தன்னை மறந்திருப்பினும் தான் அவனை மறவாது அன்புசெய்து வந்தாள். அவன் பொருள்முழுதும் இழந்தபின்வறியனாயில்லை நோக்கி வந்தான். கண்ணகிமாறு அன்போடு அவனுக்கு வழிபாடு செய்தாள் கணவனைப் பேணுதற்குத் தன்கையிற் பொருளின்மையால் தனது காலில் கிடந்த சிலம்பைக் கழற்றி அவன்கையில் கொடுத்தாள். கோவலன் மனைவியின் குணத்தை நினைந்து நினைந்து உருகினான் தான் செய்து வந்ததவறுக்கு இரங்கினான். கண்ணகி கணவனைத் தேற்றினாள் அதன்பின் அச்சிலம்பை விலைப்படுத்த மதுரைக்குச் சென்றான். கண்ணகியும் அவன் சாயைபோல அவனைத் தொடர்ந்து உடன் சென்றாள். இடையில் அல்லல் பல அடைந்து இருவரும் முடிவில் மதுரையை அடைந்தார். கண்ணகியை அவ்வூரிலுள்ள மாதரி என்னும் ஓர் இடையர் மகளிடம் அடைக்கலமாக வைத்து விட்டுக் கோவலன் சிலம்பை விற்கத் தெருவினில் வந்தான். அங்கு நின்ற ஒரு பொற்கொல்லனைக் கண்டான். அவன் அந்நகர் மன்னன் மனைவியின் சிலம்பை முன்னமே களவாகக்கொண்டவன். இழிகுணம் நிறைந்தவன். கோவலன் அவனிடம் தன் சிலம்பைக் கொடுத்தான் அக்கொடியவன் வாங்கினான். அரசனிடங்காட்டி வருவதாகச் சொல்லிக் கோவலனை வெளியே நிறுத்தி விட்டு உள்ளே சென்றான் சென்ற தீயோன் தேவியின் சிலம்பைத் திருடின கள்வனைப் பிடித்துக் கொணர்ந்தேன் என்று சொல்லித் தன்கையிலிருந்ததை யெடுத்துக் கொடுத்தான். அரசனும் அவனை நம்பிக் கோவலனை ஆராயாமல் கொல்வித்தான். கணவன் கொலை யுண்டதை அறிந்த கண்ணகி பெருந்துயரடைந்து தலைவிரிகோலமாய் ஓடிவந்து அரசன் முன் நின்றாள். அரசே! என் அருங் கணவனை ஏன் கொடுங் கொலை செய்தாய் எனது சிலம்பை உனது தேவியின் சிலம்பென்று மாறுபடமதித்தாய். கொணர்க நின் சிலம்பெனக் கூவினாள். மன்னனும் கொணர்ந்தான். தன் காற்சிலம்பையும் அரசியின் சிலம்பையும் நேரில் வைத்து உடைத்தாள். இரண்டிற்கும் உள்ள வேற்றுமையை

உணர்த்தினாள். அரசன் உணர்ந்தான். தான் செய்த தீவினையை நினைந்தான். உயிர் பதைத்தான் உடனே இறந்தான். இப் பத்தினித் தெய்வத்தின் திருவடியில் அரசியும் விழுந்தாள். அடைக்கலம் புகுந்தாள். ஆயினும் தனது அருமைக்காதலனைப் பிரிந்த பெருந்துயரால் உறுங்கோபந் தணிந்திலள். மதுரையும் எரிய மனத்தால் நினைத்தாள். நெருப்பும் பற்றி விருப்புடன் எரித்தது. கற்பின் மகிமையால் கணவனைக் கலந்தாள். புத்தேளுலகம் புகுந்தாள். தேவரும் போற்றும் சிறப்பினைப் பெற்றாள்.

இதன் விரிவு சிலப்பதிகாரத்தில் புலப்படும்.

பத்தினிகட்கு மறுமையில் மிகவும் பெருமையுண்டாம் என்பது இதனால் கூறப்பட

59. நாடுஞ் சுரர்குருவேந்த நாணினார் நண்ணார்முன்
கோடிசெல்வம் வைத்தும் குமரேசா — தேடும
புகழ்புரிந்தில்லிலோர்க்கில்லை யிகழ்வார்முன
ஏறுபோற் பீடு நடை (௫௯)

இ—ள்.

குமரேசா! கோடிசெல்வம் வைத்திருந்தும் தேவகுருவேந்தன் பகைவர் முன் நாணினார் எனின், புகழ்புரிந்த இல்லாளை யில்லாதவர்க்கு இகழ்வார் முன் ஏறுபோற் பீடு நடை இல்லை என்க. புரிந்த—செய்த.

புகழ்புரிந்த இல் இல்லோர்க்கு—புகழுடைய மனைவியை இல்லாதார்க்கு. ஏறு—சிங்கவேறு. எருதுமாம்.

ஒருவனது கம்பீரத்துக்குக் காரணங்கள் பல உளவேனும் புகழுடைய மனையாளுடைமையே சிறந்தது என்பது குறிப்பு. எவ்வளவு நலங்களையும் பலங்களையும் உடையனாயினும் அவன் மனைவியிடத்து மாண்பு இல்லையானால், அவன் தன், பகைவர்முன் நாணுவான் என்பது இதில் உணர்த்தப் பட்டது.

இவ்வுண்மை அமரர்குருவின் பால் அறியப்படும்.

கதை

தேவகுருவாகிய வியாழபகவான் தாரையென்னு மனைவியோடுகூடி இல்வாழ்ந்திருந்தார். சந்திரன் இவரிடம கல்வி பயின்று வந்தான். இவனது இளமைப் பருவத்தையும், அழகிய உருவத்தையும் தாரைகண்டாள். காமுற்றாள். பலமுறையும் உரிய சமயம் பார்த்து வந்தாள். சந்திரன் ஒரு நாள் தனியேயிருந்தான். தாரையும் அவ்விடம் இனிதே சார்ந்தாள். அருகில் நெருங்கினாள்; பெருகிய காதலோடு பல மொழிகள் பேசினாள். தாரையின் கருத்தைச் சந்திரன் தெரிந்தான். தனது அருமைக் குருவின் திருமனைவியென்பதையும் அறவேமறந்தான். அவள் கருத்துக்கு இணங்கினான். கலந்து இன்புற்றான். இருவரும் களவுடன் ஒழுகிப் பல நாள் கழித்தார் சந்திரன் இறுதியில் தாரையைத் தன்னுடன் கொண்டே ஏகினான். குரு அறிந்தார். மிகச் சினந்தார். இந்திரன் முதலிய இமையவர்களைக் கொண்டு சந்திரனைக் கொல்லத் தந்திரஞ்செய்தார். முடியவில்லை. பிரமன் வந்தான். மதிக்கு மதியூட்டினான். அதன் பின் அவன் தாரையைவிட்டான். தாரை சந்திரனிடம் இருக்கும்பொழுது பிறந்த புதல்வனுக்கே புதன் என்றுபெயர். அதனால் புதனுக்கு மதிமகன் என்றொரு பெயரும் வந்தது. சுரர்குருவுக்கு நிகழ்ந்த இச் சிறுமையை அசுரர் சிலர் சொல்லி அவமதித்தனர். சிறந்த அறிவும் உயர்ந்த நலங்களும் ஒருங்கே நிரம்பிய வியாழபகவானும் இதனை நினைந்து நினைந்து நெடுங்கவல் கொண்டார். இகழ்வார் முன் செல மிகவும் நாணினார்.

இதன் விரிவு பாரதத்தில் காணப்படும்.

புகழுடைய இல்லாளையுடையவனுக்கே எல்லாப் பெருமைகளும் உளவாம் என்பது இதனால் கூறப்பட்டது.

60. பண்டேன் அருந்ததியால் பாலரால் சிரெல்லாம்
கொண்டார் வசிட்டர் குமரேசா—உண்டான
மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு. (௭)

இ—ள்.

குமரேசா! அருந்ததி என்னும் மனைவியாலும், மக்களாலும், வசிட்டர் ஏன் பெருஞ்சிறப்பை அடைந்தார் எனின், மனைமாட்சி ஒருவனுக்கு மங்கலமாம்; நன்மக்கட்பேறு மற்று அதன் நன்கலமாம் என்க.

மங்கலம்=நலம்: அழகுமாம். நன்கலம்=நல்ல அணி.

கற்புறு மனைவியும், அறிவுடைமக்களும், ஒருவனுக்கு நலமும் சிறப்பும் நல்குவர் என்பதாம்.

இனிஒருவன் இல்லாள் மனைமாட்சியை மங்கலமாகவும்; நன்மக்கட்பேற்றை நன்கலமாகவும், கருதல் வேண்டும் என்பர் எனவும் இது பொருள்படும். இதில் மங்கலம் என்றது தாலியை.

மங்கலத்தாலும் நன்கலத்தாலும் ஒருபெண் அழகுறுவள். அதுபோல் மனைமாட்சியாலும், மக்கட்பேற்றாலும், ஒருவன் இல்லாள் சிறப்புறுவள் என்பதாம்.

கற்புடைய மனைவியையும் அறிவுடைய புதல்வரையும் ஒருவன் உடையனாயின் அவன் எல்லாராலும் புகழ்ந்துபோற்றத்தக்க பெருமையை அடைவான் என்பது இதில் உணர்த்தப்பட்டது.

இவ்வுண்மை வசிட்டர் பால் உணரப்படும்.

கதை

வசிட்டர் என்பவர் பிரமாவின் மானச புத்திரர்களில் ஒருவர். பெருந்தன்மை நிறைந்தவர். அருந்தவருட் சிறந்தவர். சூரிய குலத்து அரசர்களுக்குக் குருவாயிருந்து வழி வழியாக அரச

களைப் போதித்து வந்தார். அருந்ததி என்னும் பெருங்கற்புடையாளை மணந்தார். இல்வாழ்க்கை புரிந்தார். இவரது மனைவியாகிய பதிவிரத தெய்வத்தின் உத்தம குணங்கள் அளவிடலரியன. மனைமாண்புடைய மகளிரனைவரும் தினமும் துதிக்கும் பெருமாண்புடையவள் இன்றும் இவ்வுலகில் மணம் புரிந்தவுடனே கணவனைக் கைப்பிடித்து மணவறையைச் சுற்றிவருஞ் சமயம் எந்த மணமகளும் இந்த அம்மையை நினைந்து வாழ்த்தி வணங்கிவருவது வழக்கம் இஃதோர் நியமமாக நிலைத்துள்ளது. இச்சடங்கை அம்மி மிதித்தல், அருந்ததிபார்த்தல் எனவழங்கி வருகின்றனர். கற்பு நிலைகுலைந்த அகலிகை கல்லாய் மண்ணில் இழிந்தாள். நிலைகுலையாத அருந்ததி நக்ஷத்திரமாய் விண்ணில் உயர்ந்தாள் ஆகலான் இழிவுக்கும் உயர்வுக்கும் ஏதுவாக ஒவ்வொரு மணமகளுக்கும் இவ்வுண்மை உணர்த்தப்பட்டு வருகின்றது. 2700-வருடங்கட்கு ஒருமுறை தன்னைத்தானே சுற்றி நிற்கும் இயல்பினையுடைய மண்டலம் ஒன்று வானிலுள்ளது. இது சப்தரிஷி மண்டலம் எனப்படும். இது நக்ஷத்திரக் கூட்டங்களால் நிறையப்பெற்றது அம்மண்டலத்தின் முற்பகுதியின் அடியில் இருப்பது வசிட்ட நக்ஷத்திரம். அதனை அடுத்து நுண்ணிதாய்க் காணப்படுவது அருந்ததி நக்ஷத்திரம். இதைத்தான் நலமடைதற்பொருட்டு மணமகள் தலை நிமிர்ந்து பார்ப்பது. இத்தகைய சிறப்புவாய்ந்த அருந்ததியாரும் மக்களைப்பெற்ற பின்பே மிக்க சிறப்பையடைந்தார். சுதபன், அநகன், சுமதி முதலிய நன் மக்களாலும், மனைவியாலும் வசிட்டர் எல்லா நலங்களையும் பெற்றார். இவரது மனை மாட்சியையும் மக்கட் பேற்றையும் தேவரும் புகழ்ந்து போற்றினார்.

இதன் விரிவைச் சிவபுராணத்தில் உணர்க.

மனைமாட்சியுடையான் எல்லாமாட்சியும் அடைவான் என்பது இதனால் உணர்த்தப்பட்டது.

(இவ்வதிகாரத்தின் தொகைப் பொருள்)

கணாவனது வருவாய் அறிந்து செலவு செய்யும் நலமும் இனியகுணமும், உடையவளே மனைவியாவள். ஒருவன் எல்லா முடையனாயினும அவன் இல்லாளிடத்தில் நலம் இல்லையானால் அவனுடைமை பயனடையா நல்ல இல்லாளையுடையவன் ஒன்றும் இல்லாதவனாயினும் அவன் எல்லாம் உடையனாம். கற்புடைய மனைவிபோல் சிறந்தபொருள் இவ்வுலகில் ஒன்றும் இல்லை. கற்புடையவள் பெய்யென்றால் உடனே மழைபெய்யும். தன்னையும் காத்துத்தலைவனையும் பேணிப்புகழ் வளர்ப்பவளே குலமகள். சிறைக்காவலினும் நிறைக்காவலே பெண்களுக்குச் சிறந்தது. பதிவிரதைகள் தேவர்களாலும் பெருஞ்சிறப்போடு போற்றப் படுவார் சிறந்தமனைவியை யில்லாதவனுக்கு நிறைந்த புகழ் இல்லை. குணமுடைய மனைவியும அறிவுடையமக்களும ஒருவனுக்கு அமையுமாயின் அவனே யிவ்வுலகில் நலங்கள் பலவும் அடைந்த நன்மையாளன் என்பனவாம்.

6-வது வாழ்க்கைத் துணை நலம் முற்றிற்று.

7-வது அதிகாரம் மக்கட்பேறு.

அஃதாவது மக்களைப் பெறுதலின் சிறப்பு.

ஒருவன் வாழ்க்கைககுத் துணையாகிய மனைவியின் நலத்தை முன்னர்க் கூறினார். இதில் அதன்பயனாகிய மக்கட்பேற்றின் சிறப்பைக் கூறுகின்றார். அதிகார அடைவும் இதனானே தெளிவாம்.

61 நாடி மிருகண்டர் நற்சிலதர் மக்களுக்கேன்
கோடிதவஞ் செய்தார் குமரேசா—தேடிப்
பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற. (க)

இ—ள்.

குமரேசா! மிருகண்டரும் சிலாதரும், மக்கட்பேறுகருதி ஏன் பலவருடங்களாக அருந்தவஞ் செய்தார் எனின், அறிவறிந்த மக்கட்பேறே ஒருவன் பெறும் அவற்றுள் சிறந்தது என்க.

பெறும் அவற்றுள்=பெறத்தக்க பொருள்களுள்.

அறிவு அறிந்த மக்கள்=அறியவேண்டுவனவற்றை அறிந்த பிள்ளைகள்

இவ்வுலகில், ஒருவன் பெறுவனவற்றுள் மக்கட்பேறே சிறந்தது. அதனினும் சிறந்த பேறு வேறு ஒன்றும் இல்லை. இவ்வுண்மையை நமது தேவர்தாமே அனுபவித்துத் தெளிந்துள்ளமையான் "அல்ல பிற யாம் அறிவது இல்லை" என்று நெஞ்சு தட்டிக் கூறினர்.

மக்கட்பேற்றிற் பெரும்பேறில்லை என்றார் பிறரும்.

அறிவுடைய மக்களைப் பெறுதலே ஒருவனுக்குப் பெருஞ் சிறப்பு என்பது இதில் உணர்த்தப்பட்டது.

இவ்வுண்மை மிருகண்டர்பாலும் சிலாதர்பாலும் உணரப்படும்.

கதை 1.

மிருகண்டர் இவர் கௌசிகர் என்னுமுனிவரது புதல்வர். முற்கலமுனிவரது புத்திரியாகிய மருத்துவதியை மணந்து வாழ்ந்தார். தமக்கொரு நன் மகன் இன்மையை எண்ணிபிரங்கினர். காசியை அடைந்தார். ஈசனை நினைந்தார் இருந்தவம் புரிந்தார். கண்ணுதற் கடவுளைக் கண்டார். அவரிடம் இவர் வேறொன்றும் வேண்டவில்லை. அறிவுடைய மகனையே தரும்படி கூறினர். விரும்பிப் பெற்றார். அம்மகனே மார்க்கண்டன். விரிவை முதலிற் காண்க.

கதை 2.

சிலாதர் என்பவர் ஒரு முனிவர். பொறிகளை அடக்கிய அறிவினையுடையவர். எல்லா நல்லகுணங்களும் இவர்பால் இயல்பாகவே அமைந்திருந்தன. இவரது பத்தினியாருக்குச் சித்ரவதியார் என்று பெயர். அந்த அம்மையோடு கூடி யிவர் இல்வாழ்க்கை புரிந்தார். தமது பிதிரர்களை மகிழ்விக்கும் பொருட்டு இவர் ஒரு புதல்வனைப்பெற மிகவுமுயன்றார். தானம் செய்தார். தவம் பலதாங்கினார். பிறபேறுகளையெல்லாம் வெறுத்தார். மகப்பேற்றையே விழைந்தார் சிவமேதுணைஎன்று தெளிந்தார் வனஞ்சென்றார். தவமே துணிந்தார். தனி நின்று புரிந்தார். கல்லென நிலைத்துப் பல் பகல் நின்றார். பசிய சிறுகற்களையே தமது பசிக்கு உணவாக்கினார். அதனால் சிலாதர் எனப்பெற்றார் சிலை என்னும் சொல் கல்லை உணர்த்தும். ஆதலால் இப்பெயர் அப்பெரியார்க்கு வந்தது. தேவவருடங்கள் பலகழியும்படி இவர் தவ நிலையில் நின்றார். பரமபதியும் தண்ணளிசெய்து இவர் தம்முன் தோன்றியது கண்டுதொழுதிவர் களிமீக்கூர்ந்தார். வேண்டுவதென்னென விமலன் கேட்டார். அறிவறிந்த மகவையே அருள் என வேண்டினார். அங்ஙனமே முதல்வன் அருள ஒருபுதல்வன் தோன்றினான். முனிவர் தமக்கு மகப்பேறுற்றதை நினைந்தார். மிகப்பேருவகை பூத்தார். அந்திவண்ணன் அருளால் வந்த மகனுக்கு இவர் நந்தி யென்று பெயரிட்டார். பேணிவளர்த்தார். இப்புதல்வனால் அவர்பிதிரர் அனைவரும் உய்ந்தார். உயர்கதி பெற்றார். இப்பாலனும் அருந்தவம் செய்தான் காலனைக் கடந்தான். கால காலனையடைந்தான். தவமகிமையால் இவர் சிவகணத்தலைவராய்ச் சிறந்துளார்.

இதன் விரிவை இலிங்கபுராணத்திலும் சிவரகசியத்திலும் தெளிக.

பெறுமவற்றுள் எல்லாம், மக்கட்பேறே பெரிதும் சிறந்தது என்பதை முழுதும் தெரிந்து, மிருகண்டரும் சிலாதரும் பெற்று மகிழ்ந்தார்; ஆதலால் இவரிருவரும் இங்கு உதாரணமாக வந்தனர்.

கண்ணில் யாக்கையும் திங்களில் கங்குலும் கண்போல்
அண்ணல் மந்திரி இல் அரசாட்சியும் அருளில்
திண்ணென் நெஞ்சமும புலவரில் அவையும் ஒண் தீம்பால்
வண்ணவா யிள மக்களில்மனையும் ஒப்பாமால்

(சீகாளத்திப் புராணம்)

மெத்துகின்ற விழுமிய சீர்த்தியோ
டெய்த்த லின்றி இருமைஇன் புந்தரும்
புத்திரற் பெறும புண்ணியவாழ்க்கைதான்
அத்தவத்தினும் ஆற்றச்சிறந்ததே.

(திருக்கூவப் புராணம்)

பொறையிலா அறிவுபோகப் புணர்விலா இளமைமேவத்
துறையிலா வனசவாவி துகிலிலாக் கோலத்தூய்மை
நறையிலா மாலை கல்வி நலமிலாப் புலமை நன்னர்ச்
சிறையிலா நகரம் போலும் சேயிலாச் செல்வமன்றே

(வளையாபதி)

எல்லாப் பேற்றினும் ஒருவனுக்கு மக்கட்பேறே சிறந்த என்பது இதனால் கூறப்பட்டது.

62. பண்டேன் சகரர் பகீரதனால் தீதகன்று
கொண்டார் புகழைக் குமரேசா—கண்ட
எழுபிறப்பும் தீயவை தீண்டாப் பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின். (உ)

இ—ள்.

குமரேசா! பகீரதனால் சகரர்பழி நீங்கி ஏன் புகழ்கொண்டார் எனின், பழி பிறங்காத பண்புடை மக்களைப் பெற்றவர்களைத் தீயவை எழுபிறப்பினும் தீண்டா என்க.

பெறின் என்றார் அருமை கருதி.

பழிபிறங்காப் பண்பு உடைமக்கள் = பழியில்லாத குணங்களையுடைய புதல்வர்.

தீயவை தீண்டா = துன்பங்கள் அணுகா.

பழியை நீக்கிப் புகழை ஆக்கும் பண்புறும் புதல்வனை ஒருவன் ஒரு பிறப்பில் பெறுவனாயின் அவன் தலைமுறை ஏழும் நல றும என்பதாம். நற்குணமுடைய மக்களைப் பெற்றார்க்குப் கழும் இன்பமும் முழுதும உளவாம் என்பது கருத்து.

தேவர், மக்கள், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, வரம் என்னும எழுவகைப் பிறப்புக்களையும் ஓர் உயிர் வினை யத்தால் அடையும. அவ் எழு பிறபபினகண்ணும் உறுதுயர்கள் னமகப்பேறுற்றானை உறா எனவும இது பொருளபடும. மேல் க்கட் பேறே சிறந்தது என்றார், அப்பேற்றால் பயன் யாது னபார்க்கு இது கூறினார்.

நல்ல புதல்வனால் ஒருவன குலமுழுதும் நலமடையும் என் து இதில் உணர்த்தப்பட்டது. இவ வுண்மை பகீரதன் பால் உணரப்படும்.

கதை.

பகீரதன் என்பவன் சூரியகுல திலகன் திலீபன் என்னும் அரசனது புதல்வன். சிறந்த கலவியும், உயர்நத ஞானமும ஒருங்கே நிறைந்தவன். நெறிவழுவாமல் அரசு புரிந்தான். ஒரு நாள் தமது குல குருவாகிய வசிட்டரிடம் தமது மூதாதைகளுடைய பழஞ் சரிதங்களை முழுதும கேட்டான். அதில் சகரர் இயல்பை விவரமாக உணர்ந்தான். அவர்கட்கு இவன் நான்காவது தலைமுறையில் வந்தவன். தமது முன்னோர் கபிலரால் மடிந்து கதியடையாமையை நினைந்தான். உளம் மிக நொந்தான். அரசை அமைச்சன் இடம் தந்தான். அருங்கான் அடைந்தான். பெருங்

தவஞ் செய்தான். விண்ணில் விளங்கிய கங்கையை இவன் தவ மகிமையால், இம் மண்ணில் முழங்கக் கொணர்ந்தான். பண்டு மடிந்து கிடந்த தம் முன்னோராகிய சகரரது பெரிய என்புக்குவியலைத் தான் கொண்டுவந்த இனிய கங்கையால் புனிதமாக்கினான். அதனால் அச்சகரர் அனைவரும துயரகன்றார். உயர்கதி பெற்றார் தமது முன்னோர்களுடைய பழியையகற்றிய பகீரதனது பெரும் புகழை உயர்ந்தோர் வியந்து துதித்தார். இப் புதல்வனைப் பெற்ற திலீபன் நிலைபெற்ற இன்பமெய்தினான். எழுபிறப்பும் தீயவை தீண்டா என்பதை உலகம் இவன் பிறப்பால உணர்ந்தது. பழியைத் தேய்த்துப் புகழை வளர்த்த பகீரதன் அயோத்தியை மீண்டும் அன்பால் அடைந்தான். இன்போடு இருந்தான்.

(இது பாகவதத்தில் உள்ளது.)

ஒரு பிறப்பில் பெற்ற பண்புடை மக்களால் ஒருவனுக்கு எழுபிறப்பினும் இன்பம் உண்டாம் என்பது இதனால தெளியப் பட்டது.

இறைவர் ஞானமும் ஏதம் இலாமையும்
பொறையும் பூண்ட புதல்வர்ப் பெறுவரேல
மறவ ரேனும் அவரையவ் வல்வினை
பிறவி யேழினும் பின்தொட ராதரோ.

(திருக்கழுக்குன்றப்புராணம்.)

இல்லொழுக்கம் இயைந்து பிதிர்க்கடன்
ஒல்லும் வண்ணம் உஞற்றி மரபுளோர்
செல்லும்வான் நிரயத்துயர் சிந்துவான்
வல்ல மக்கட் பெறற்கிணை மற்றிலை.

(திருக்கூவப்புராணம்.)

மன்னரானவர் அல்லர்மேல் வானவர்க் கரசாம்
பொன்னனின் வார்கழற் புரந்தரன் போலியரல்லர்
பின்னும் மாதவந் தொடங்கினோன் பிழைத்தவர்பிறர்யார்
சொன்மறுமகற பெற்றவர் அருந்துயர் துறந்தார்.

(இராமாயணம்.)

நன் மக்கட்பேற்றால் ஒருவன் அடையும் பயன் இதனால் கூறப்பட்டது.

63 பெற்றபொருள் விட்டுமக்கட் பெற்றான் தசரதன்பின்
கொற்றமுற்றான் என்னே குமரேசா—பற்றுகின்ற
தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்
தந்தம் வினையான் வரும். (௩)

இ—ள்.

குமரேசா! தசரதன் கையிற் பெற்ற பொருளை வேள்வியிற் செலவிட்டு ஏன் மக்களைப் பெற்றான் எனின், அம் மக்கள் செய்யும் பொருள் தம்மை நோக்கி வரும்; ஆதலால் தம்மக்களே தம்பொருள என்க.

ஒருவனுக்கு ஒரு பொருட்டாக மதிக்கத்தக்க உண்மைப் பொருள் நன்மக்களேயாம்; நெல் மணி முதலியன அல்ல என்பதாம். செல்வம்போன்ற சிறப்பினையுடையவராதலால் மக்களுக்குப் பொருள் என்றும் ஒருபெயர் உண்டு.

எவ்வளவு பொருள்கள் இருப்பினும் மக்கள் இல்லையானால் அறிவுடையார் அவற்றை ஒரு பொருளாக மதியார் என்பதும், மக்களை ஒருவனுக்கு உயிர்க்கு உயிரான ஒண்பொருள் என்பதும், இதில் உணர்த்தப்பட்டன. இவ்வுண்மை தசரதன்பால் உணரப்படும்.

கதை.

தசரதன் சூரியகுலத்து வேந்தன். அயன் என்னும் அரசன் புதல்வன். அயோத்தியிலிருந்தான். திகிரிமன்னன். உலக முழுவதையும் வழுவற ஆண்டான். மன்னுயிர் எல்லாம் தன்னுயிர் எனவே எண்ணியொழுகிய புண்ணிய வுருவினன். சத்தியசீலன். தரும பாலன். உயிர்கள் எல்லாம் இன்பம் அடையும்படி என்றும் அன்பு செய்துவந்தான்.

தாயொக்கும் அன்பில் தவமொக்கும் நலம்பயப்பிற்
சேயொக்கும் முன்னின்று ஒருசெல்கதி யுய்க்குமீரால்
நோயொக்கும் என்னில் மருந்தொக்கும் நுணங்குகேள்வி
ஆயப்புகுங்கால் அறிவொக்கும் எவர்க்கும் அன்னான்.

ஈய்ந்தே கடந்தான இரப்போர் கடல் எண்ணில்நுண்ணூல்
ஆய்ந்தே கடந்தான் அறிவென்னும் அளக்கர்வாளால்
காய்ந்தே கடந்தான் பகைவேலை கருத்துமுற்றத
தாய்ந்தே கடந்தான் திருவிற்றொடர் போகவெள்ளம்

எய்யென எழுபகை எங்கும் இன்மையால
மொய்பொரு தினவுறு முழவுத தோளினான்
வையகம் முழுவதும வறிஞன் ஓம்புமோர்
செய்யெனக்காதது இனிது அரசசெய்கின்றான்.

என அவ் அரசர் பெருமானைக் குறித்துக் கமபர் கூறியுள்ளார். இவற்றால் அப்பெருந்தகையின் அருங்குணங்கள் எல்லாம் ஒருங்குணரலாம். இமமன்னன் கோசலை, சுமித்திரை, கைகேசி என்னும் தலைமையான மனைவிமார் மூவரோடு கூடி வாழ்ந்து வந்தான். அறுபதினாயிர வருடங்களும உறுபகையொடுக்கி இவ்வுலகை நலமுற ஆண்டான். எலலாப் பொருள்களும் இவனிடம் நிறைந்திருந்தன. பிறிதொரு குறையும் இலன். ஆயினும, ஒரு குறைமட்டும் உடையனாயினான். அது மக்கட்பேறின்மையேயாம்.

அதனை நினைந்து நினைந்து நெடுங்கவல்பூண்டான். குருவினி கூறினான் அவர் உணர்த்தியபடியே கலைக்கோட்டு முனிவரைக் கொணர்ந்தான் அவர் அருளால் புத்திரகாமேட்டி என்னும ஒரு பெரு வேள்வி செய்தான். பெற்றிருந்த பொருளையெல்லாம் அதில் பேணாது வீசினான். பொருள் அறையைத திறந்து வறியவர் கொள்கென முரசறைவித்தான். தம பொருள் என்பது தம் மக்களே என்று நம்பினான். உற்றவேள்வியின் பயனாக மக்கள் நால்வரைப் பெற்றான். அப்புதல்வர்கட்கு இராமன், பரதன், இலக்குவன், சத்துருக்கன் என முறையே பெயரிட்டான். இம் மக்களால் அம்மன்னன் இம்மையிற் புகழும, மறுமையில் இன்பமும் ஒருங்கே பெற்றான்.

மைந்தரைப்பெற்று வானுயர் தோற்றத்தின் மலர்ந்தார்
சுந்தரப் பெருந்தோளினாய் என்துணைத தானின்
பைந்துகட்களும ஒக்கில ராமெனப் படைத்தாய்
உய்ந்தவர்க்கருந் துறக்கமும் புகழும்பெற் றுயர்ந்தேன்.

பண்டுநான்தொழும் தேவரும் முனிவரும் பாராய்
கண்டுகண்டெனை கைததலங் குவிக்கின்ற காட்சி
புண்டரீகத்துப் புராதனனை தன்னொடும பொருந்தி
அண்டமூலத்தோர் ஆசனத்திருத்தினை யழக. என்று

தான் மக்களால் அடைந்த மறுமையின் பெருமையைப் புண்ணிய வுருவோடு வந்து இராமன முன்னிலையில் தசரதன் இவ்வாறு கூறினான்.

(இதன விரிவை இராமாவதாரத்தில் உணர்க.)

கண்ணிற் சிறந்த வுறுப்பில்லை கொண்டானின்
துன்னிய கேளிர் பிறரில்லை மக்களின்
ஒண்மைய வாய பொருளில்லை ஈன்றாளின்
என்ன கடவுளும் இல். (நான்மணிக்கடிகை)

அறிவுடைய மக்களே ஒருவனுக்குச் செறிவுடைய செல்வம் என்பது இதனால் கூறப்பட்டது.

* * *

64 உண்டுமக்கள் கையளைந்த ஒண்கூழை யென்சுசீலை
கொண்டினிதா உண்டாள் குமரேசா—கண்ட
அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ் (௪)

இ—ள்

குமரேசா! தனது மக்கள் கையளைந்து உண்டு எஞ்சிய கூழையும் ஏன் சுசீலை இனிதாக உண்டாள் எனின், தம்முடைய மக்கள் சிறு கையால் அளைந்த கூழ், அமிழ்தினும் ஆற்ற இனிதாம் என்க.

ஆற்ற இனிது=மிக இனிமையுடையது.

கூழ்=உணவு.

எளிய உணவாயினும் தம்மக்களது சிறிய கையால் அளாவப்படுமாயின், அஃது உயர்ந்த தேவர் உணவினும் சிறந்த சுவையினையுடையதாம் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை சுசீலைபால் உணரப்படும்.

கதை.

குசேலர் மனைவியாகிய சுசீலை தான் ஆக்கிய கூழைக் கணவனுக்கும் மக்களுக்கும் கனிந்து ஊட்டுவாள். அதன்பின்பே தான் உண்பாள். ஊட்டி எஞ்சிய கூழைத் தான் உண்ணும்பொழுது தனது இளங் குழவிகள் புழுதி தோய்ந்த மெய்யுடன் வந்து புகுந்து அக்கூழைத் தங்கையால் நொய்ய அளையும். தம்மக்கள் சிறுகையளாவிய அக் கூழையும் மண்டிய சுவையுடன் சுசீலை ண்டு மகிழ்ந்தாள். இதனை அவர் சரிதத்தில் உணர்க.

பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனுமற்
றென்னுடைய ரேனும் உடையரோ—இன்னடிசில்
புக்களையும் தாமரைக்கைப் பூநாறுஞ் செய்யவாய்
மக்களையின் இல்லாத வர். (நளவெண்பா.)

மகவளைந்த வுணவே மிகவுயர்ந்த சுவையாம் என்பது இதனால் கூறப்பட்டது.

* * *

65 தேடுபுகழ்ச் சம்பந்தர் செம்மொழிகேட் டேன்மகிழ்ந்தார்
கூடியின்பார் தந்தை குமரேசா—ஓடிவந்து
மக்களமெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
சொற்கேட்டல் இன்பஞ் செவிக்கு. (௫)

இ—ள்

குமரேசா! சம்பந்தரைச் சுமந்து மகிழ்ந்த தந்தை ஏன் அவர் சொல்லையும் கேட்டு மகிழ்ந்தார் எனின், ஒருவன மெய்க்கு மக்கள் மெய்யைத் தீண்டுதலும், செவிக்கு அவர் சொல்லைக் கேட்டலும் இன்பமாம் என்க.

செம்மொழி—செம்பொருள் கண்டமொழி.

வாய்க்கு இன்பம் மேலே கூறினார். இதில் செவிக்கும் மெய்க்கும் சேர்த்துக் கூறினார்.

பரிச இன்பத்தின் அருமை கருதி அதனை முன்வைத்தார்.

மக்களைத் தழுவியும் அவர்தம் மழலை மொழிகளைக் கேட்டும் பெற்றோர் மகிழ்வர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை சிவபாத இருதயர்பால் உணரப்படும்.

சிவபாத இருதயர் என்பவர் சோழமண்டலத்திலே சீர்காழி என்னும் திருநகரிலே அந்தணர் வருணத்திலே, கௌணியர் கோத்திரத்திலே பிறந்தவர். நல்லசீலமுள்ளவர். பகவதியார் என்னும் மனைவியோடு கூடி இவர் இல்லறம் புரிந்துவந்தார். வருங்கால், பரமன் அருளால் இவரொரு புதல்வனைப் பெற்றார். பெருமகிழ்வுற்றார். இவர் அந்நகரிலுள்ள சிவாலயத்துட் சென்று பிரதிதினமும் தரிசனஞ்செய்வார். செல்லுங்கால், தளர்நடையிட்டுத்

தத்தி நடக்கும் தமது அருமைத் திருமகனையும் தழுவித் தோளிலேந்திச் சுமந்து செல்வர். மக்களைத்தீண்டி மகிழும் மெய்யின்பத்தையே யிவர் மெய்யின்பமாக மதித்தார். ஆலயத்தருகிலுள்ள நீர் நிலையை ஒருநாள் அணுகினார். பிள்ளையை வெளியே வைத்து விட்டுத் தான் உள்ளே புகுந்தார். நீருள் மூழ்கினார். அவ்வமயம் பிள்ளையார் தமது தந்தையைக் காணாமையால் அம்மா! அப்பா! என்று அழுதார். உடனே அனைத்துயிர்க்கும் அம்மையும் அப்பனுமாகிய உமையும் பரமனும் தோன்றினார். தேவி ஒரு பொற்கிண்ணத்தில் பாலைக் கறந்து பிள்ளைக்குக் கொடுத்தார். பிள்ளையாரும் கொண்டார். வள்ளத்தை வாயில்வைத்துக் குடித்தார். வள்ளம் மறைந்தது. பாலொழுகிய வாயோடு மகிழ்ந்துநிற்கு மகனை நீராடி வந்த தந்தை கண்டார் யார் தந்த பாலைப்பருகினாய் என்று தமது அருமை மகனை அதட்டினார். பிள்ளையாரும் கையை மேலே தூக்கி இதோ இவர் தந்தார் என்று சுட்டிக் காட்டினார்

தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசியென் உள்ளங்கவர் கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந்தேத்த அருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மான் இவனன்றே

என்று மழலை மொழியோடு இதனை மிழற்றினார் தந்தையார் கேட்டார். கேட்டபடியே கண்டார். கழிபேருவகைகொண்டார். மகனது அழகு நிரம்பிய மென்மையான அருமைத் திருமேனியைத் தீண்டியும், சுவை நிரம்பிய இனிமையான மழலைச் சொற்களைக் கேட்டும் இவர் பேரின்பமுற்றார். சிவஞானத்தோடு சம்பந்தம் உற்றமையால், பிள்ளையாரும் திருஞான சம்பந்தர் என்னும் ஒரு பெருநாமம் பெற்றார். இதன் விரிவு பெரியபுராணத்தில் உணரப்படும்.

சேறளைந்தமென் சீறடித் தளிரொடு தீம்பாற்
சோறளைந்தகைத் தாமரை யோடுசெந் துவர்வாய்
ஊறுநீர்நனை மார்பினோ டிளமகா ருந்தி
யேறுமின்பமுள் ளதனையே உடம்பென இசைப்பார்.

அரிகொள் பொன்புனை கிண்கிணி தண்டையோடணிந்த
தருணமென்றளிர்ச் சீறடித் தளர்நடைச் சிறுவர்
மருவறாதசெவ் வாம்பல்வாய் மழலையாரமுதம்
பருகிலாச்செவி பாவையின் செவியெனப் படுமால்.

(சீகாளத்திப்புராணம்.)

ஒருவன் உடற்குஞ் செவிக்கும் உண்மையான இன்பம் இஃதென இதனால் உணர்த்தப்பட்டது.

66 மன்றாடி நின்மழலை வாசகமேன் கேட்டுவந்தார்
கொன்றைமுடி சாய்த்தும் குமரேசா—என்றும்
குழலினிது யாழினி தென்பதம் மக்கள்
மழலைச்சொற் கேளா தவர். (௬)

இ-ள்

குமரேசா! கொன்றைமுடி சாய்த்தும் நின் மழலை வாசகத்தை மன்றாடி ஏன் கேட்டு மகிழ்ந்தார் எனின், குழலிசையினும் யாழ் இசையினும் தம்மக்களுடைய மழலையிசையே யினிது ஆதலால் என்க.

மன்றாடி=சிவன். கெஞ்சி என்றுமாம். குழல்=வேய்ங்குழல். இதனையிப்பொழுது புல்லாங்குழல் என வழங்கிவருகின்றனர். யாழ்=வீணை. இவற்றின் இசைகளை முறையே வேணுகானம், வீணாகானம் என்பர் வடநூலார்.

மக்கள் சொற்கேட்டலே செவிக்கு இன்பம் என்று மேலே கூறினர். குழல் இசையும் யாழ் இசையுமே செவிக்கு இன்பம் பயப்பன என்று கூறுவாருஞ்சிலர் உளராதல் எனின், அவர் மக்கள் சொற் கேளாதவரேயாவர். கேட்டவராயின் அங்ஙனம் கூறார் என்று அவரை நோக்கி இது கூறினர்.

அறிவில்லாத குழலினும யாழினும் நின்று எழும் ஓசையினும் அறிவுடைய மகவின் வாயிலிருந்து வரும் மழலையோசையே மிகவும் இன்பமாம் என்பது இதில் உணர்த்தப்பட்டது.' இவ்வுண்மை உமாபதிபால உணரப்படும்.

கதை.

தமக்குத் திருமகனாய் அவதரித்த முருகப்பெருமானது மழலைச் சொல்லைக் கேட்டுப் பரமனும் உமையும் பெருமகிழ்வுற்றார் பாலனை யிடையே பரிந்து வைத்தார். மழலைமொழியை மாந்தி மகிழ்ந்தார். நாரதரது யாழினும் தமது அருமைத் திருமகனது மழலைச் சொல்லிலே தான் பெரிதும் இன்புற்றார்.

> ஏலவார்குழல் இறைவிக்கும் எம்பிரான் தனக்கும்
> பாலனாகிய குமரவேள் நடுவுறும் பான்மை
> ஞாலமேலுறும் இரவொடு பகலுக்கும் நடுவாய்
> மாலையான தொன் றழிவின்றி வைகுமாறொக்கும்.
>
> (கந்தபுராணம்.)

இதனால் மேற்குறித்தவுண்மை புலனாம். இன்னும் பிரமனும் அறியாத ஒருமொழிக்கு முருகப்பெருமான் பொருள் கூறும் பொழுது பரமன் அம்மழலை மொழியைத் தமதுகொன்றை முடி சாய்த்துக் கேட்டமையும் காண்க.

> சொன்ன கலையின் துறையனைத்துந் தோய்ந்தாலும்
> என்ன பயனுடைத்தாம் இன்முகத்து—முன்னம்
> குறுகுதலைக் கிண்கிணிக்காற் கோமக்கள் பால்வாய்ச்
> சிறுகுதலை கேளாச் செவி. (புகழேந்தி.)

குழலினும் யாழினும் மகவின் மழலை மொழியே யினிதென்பது இதனால் கூறப்பட்டது.

* * *

67 பாடலியூர்க் கோன்புதல்வர் பல்கலையும் தேறவன்றேன்
கோடிவகை செய்தான் குமரேசா—பீடுடைய
தந்தை மகற்காற்றும் நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல். (எ)

குமரேசா! பாடலிபுரத்து வேந்தன் தன்து புதல்வர் கலை பல கற்றுத் தெளியுமாறு ஏன் பலவகையுபாயங்களைச் செய்தான் எனின், அவையின்கண் முந்தியிருக்கும்படி செய்தலே தந்தை மகனுக்குச் செய்யும் நன்றி என்க.

ஆற்றும் நன்றி=செய்யும் உதவி.

அவை=கற்றுவல்ல நல்லோர் கூடிய இடம். அதில் முந்தியிருக்கும் பெருமையைக் கல்விநலமுடைய ஒருவனே அடைவான் ஆதலால் அந்நலத்தைத் தன் மகன் உடையனாம்படி செய்தலே ஒரு தந்தைக்குக் கடமையாம் என்பது கருத்து.

தம்பொருளாகிய தம்மக்கட்கு ஒருவன் கல்விப்பொருளையே தருதல்வேண்டுமென்பது குறிப்பு.

பொருள் தொகுத்துத் தருதல் முதலியனவெல்லாம் ஓர்உதவியல்ல என்பதும், கலையுணர்புலமையில் தன்மகனைத் தலைமையோனாக்குதலே தந்தையின் கடமை என்பதும், இதில் உணர்த்தப்பட்டன. இவ்வுண்மை சுதரிசனன்பால் உணரப்படும்.

கதை.

பண்டு இப்பரதகண்டத்தில் பாடலிபுரம் என்றொரு நகரம் இருந்தது. சுதரிசனன் என்னும் பெயரினையுடைய அரசன் ஒருவன் அதிலிருந்து அரசுபுரிந்தான். இவன் நீதிநூல் பலவும் ஓதியுணர்ந்தவன். இவனுக்கு எழுபுதல்வர்கள் பிறந்தனர். அப்புதல்வர் எழுவரும் செல்வத்திற் சிறந்தார். செழிப்புடன் வளர்ந்

தார். கல்வியில் இவர்கட்கு மனஞ் செல்லவில்லை. கல்விபயிலும்படி தன்மக்கட்குப் பலமுறையும் அரசன் அறிவுறுத்தினான். அவர்கள் பயில முயலவில்லை. மனம் போனபடியே திரிந்தார். மதியிழந்து மகிழ்ந்தார். அதனால் அரசன் பெருங் கவலைகொண்டான். எப்படியாவது தன் மக்களைக் கல்வியில் வல்லுநராக்கக் கருதினான். தனது நாட்டில் சோமசர்மா என்னும் வேதியர் ஒருவர் இருந்தார். அவர் கல்வியறிவு மிக்கவர். நல்ல சொல் வன்மையுடையவர். அவரை அரசன் அழைத்துவரும்படி செய்தான். அவரும் வந்தார். தன் பிள்ளைகளை எவ்வகையிலாவது கல்வியறிவுள்ளவர்களாக ஆக்கவேண்டும் என்று அவரிடம் அரசன் வேண்டினான். அவரும் இசைந்தார் அவர் வேண்டிய எதையும் விரும்பித் தந்தார். புகல்வர் தகுதியறிந்து அவரும் இதமாகக் கற்பித்தார். கதைகள் பல கூறினார். அவர்தாமே கல்வியை விரும்பும்படி செய்தார், அதன்பின் கற்பித்தார். அவரும் பயின்று தெளிந்தார் புலவர்கள் அவையில் அவர்கள் பலமுறையும் தலைமைபெற்றிருந்தார். மன்னன் கண்டான். மக்கட்குச் செய்யவேண்டிய கடமையைச் செய்து முடித்தமையை நினைந்து மன்னன் பெருமகிழ்வு கொண்டான். இதன் விரிவைப் பஞ்சதந்திரத்தில் உணர்க.

தம் மக்களைக் கல்வியுடையராக்குதலே தந்தையர்க்குக் கடன் என்பது இதனால் கூறப்பட்டது.

* * *

68 மண்டு புகழ்ப்பகவன் மக்களறி வாலுலகோர்
கொண்டனரேன் இன்பம் குமரேசா—கண்டுமகிழ்
தம்மிற்றம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது. (அ)

இ—ள்

குமரேசா! பகவனது மக்களறிவால், உலகோர் ஏன் இன்பம் உற்றார் எனின், தம்மக்களது அறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க்கெல்லாம் தம்மினும் இனிதாம் என்க.

மகன் அறிவுடையவனாயிருந்தால் அவன் தந்தைக்கு எவ்வளவு மகிழ்வுண்டாகுமோ அதனினும் பெருமகிழ்வை உலகோர் அடைவர் என்பது கருத்து.

"தம்மின் இனிது" என்பதில் ஒப்புப்பொருளும் கருதப்படும்.

இனி, தம்முடைய அறிவினும் தமது மக்களுடைய அறிவு சிறந்தது என்று கேட்கப்படுமாயின் இவ்வுலகத்தில் எல்லார்க்கும் அஃதோர் இன்பமாம், எனவும் இது பொருள்படும்.

கல்வியில் தன்னினும் சிறந்தவன் என்று பிறனொருவனைக் கூறக்கேட்டால் வருந்துகின்ற ஒருவன் அங்ஙனமே தன்மகனையெடுத்துக் கூறினால் மகிழ்கின்றான்; குறுகிய அறிவுடையவனும் தன்மகனைப் பெருகிய அறிவுடையவனாக ஆக்கிப்பார்க்க விரும்புகின்றான்' இவை இரண்டும் மேற்குறித்த மூன்றாவது பொருளை வற்புறுத்துகின்றன.

நன்மக்களுடைய அறிவுடைமையால் உலகமெல்லாம் இன்பமுறும் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை பகவன் மக்கள்பால் உணரப்படும்.

கதை.

பகவன் என்பவர் பெருஞ்சாகரன் என்னும் ஒரு வேதியன் புதல்வர். நல்ல நீதியொழுக்கங்கள் உள்ளவர். தனது முப்பத்துமூன்றாவது வயதில் காசியாத்திரைக்குச் சென்றார். இடையில் தொண்டைமண்டலத்திலுள்ள மேலூர் அகரம் என்னும் ஒரு நகரத்தில் தங்கினார். இரவில் தனித்திருந்தார். அங்கு ஆதியென்னும் ஒரு மாது வந்தாள். புலைமகள் என்று கருதியொரு கோலால் அவளைத் தலையில் அடித்தார். அவளும் அகன்றாள். அதன்பின் இவர் காசியையடைந்தார். பல வருடங்கள் ஆண்டுத் தங்கி மீண்டும் அந்நகரமே வந்து தங்கினார். முன்போன ஆதியும் மீள வந்தாள். உண்மையில் இவளோர் அந்தணன் மகள், தல்முனியென்பவருக்கும், அருணமங்கையென்பவளுக்கும் புதல்

வியாய்த்தோன்றினாள். இவள் தோன்றியபின் தன்னூர் மண்மாரி பாலழியத் தான்மட்டுந் தப்பினாள். உறையூர் புகுந்தாள் அங்கோர் பறையன் வீட்டில் ஒதுங்கினாள். பின் விதிவசத்தால் நீதிலையன் என்னும் ஒரு வேதியன் வளர்க்க வளர்ந்தாள். அங்கு நின்றகன்று நாடெங்குந் திரிந்தாள். திரியுங்காலத்தில் தான் பகவனைக்கண்டாள். பகவனும் இவளை மிகவும் காதலித்தான் ஆதியும் இசைந்தாள். இருவரும் மணந்தார். ஆதியில் தான் அடித்த அடியின் வடுவை ஆதியின் தலையில் ஒருநாள் பகவன் கண்டான். முன் தன்னால் அடிக்கப்பட்ட புலைமகள் என்று நிலைகுலைந்தோடினான் ஆதியுந் தொடர்ந்தாள். பகவனைப் பற்றினாள். இருவருந் தம்முள் ஓர் உறுதியைச் செய்தார். கலந்தின்புற்றார். இவர்பால் வழுவில்மக்கள் ஏழுவர் பிறந்தார். அதிகமான், கபிலர், திருவள்ளுவர் எனப் புதல்வர் மூவரும், உப்பை, ஔவை, உருவை, வள்ளியெனப் புதல்வியர் நால்வரும் ஆவர். இவ்விழுமிய குழவிகள் எழுவரையும் பிறந்த இடத்திலேயே விட்டுவிட்டுத் தாம்முன் செய்துகொண்ட உறுதியின்படி ஆதியும் பகவனும் அகன்று சென்றார். செல்லுங்கால் தாய் மட்டும் பிள்ளைகளைப் பிரியஆற்றாது மறுகி நின்றாள் அவ்வமையம் திருவருளால் இக்குழவிகள் ஏழும் தம்மலர்வாய் திறந்து மழலை மொழியால் தமது தாயைத் தேற்றியனுப்பின.

இட்டமுடன் என்தலையில் இன்னபடி யென்றெழுதி
விட்டசிவ னுஞ்செத்து விட்டானோ—முட்டமுட்டப்
பஞ்சமே யானாலும பாரமவ னுக்கன்னாய்
மே யஞ்சா திரு. (ஔவை)

கருப்பைக்குள் முட்டைக்கும் கல்லினுள் தேரைக்கும்
விருப்புற் றமுதளிக்கு மெய்யன்—உருப்பெற்றால்
ஊட்டி வளர்க்கானோ வோகெடுவா யன்னாய்கேள்
வாட்டம் உனக்கேன் மகிழ். (அதிகமான்)

அத்தி முதலெறும்பீ றானவுயி ரத்தனைக்கும்
சித்த மகிழ்ந்தளிக்கும் தேசிகன்—முற்றவே
கற்பித்தான் போனானோ காக்கக் கடனிலையோ
அற்பனோ அன்னா யான். (உப்பை)

சண்டப்பைக் குள்ளுயிர்தன் தாயருந்தத் தானருந்தும்
அண்டத் துயிர்பிழைப்ப தாச்சரியம்—மண்டி
யலைகின்ற அன்னாய் அரனுடைய வுண்மை
நிலைகண்டு நீயறிந்து நில். (உருவை)

அன்னை வயிற்றில அருத்தி வளர்த்தவன்றான்
இன்னும் வளர்க்கானோ என்தாயே—பின்னரவஞ்
சூடும் பெருமான் சுடுகாட்டில் நின்றுவிளை
யாடும் பெருமான் அவன். (வள்ளி)

சண்ணுழையாக் காட்டில் கருங்கற் றவளைக்கும்
உண்ணும் படியறிந் தூட்டுமவர்—நண்ணும்
நமக்கும் படியளப்பார் நாரியோர் பாகர்
தமக்குந் தொழிலென்ன தான் (கபிலர்)

எவ்வுயிருங் காக்கவொரு ஈசனுண்டோ இல்லையோ
அவ்வுயிரில் யானொருவன் அல்லனோ—வவ்வி
அருகுவது கொண்டிங் கலைகுவதேன் அன்னாய்
வருகுவது தானே வரும் (வள்ளுவர்)

இத்தெய்வ மக்களின் அறிவுடைமையால், இந்நிலவுலகம் உயர்நலமுற்றது இவரைப் பெற்றவர் தம்மினும் மற்றவரே இவரால் பேரின்பம் உற்றனர். இவருள் நமது வள்ளுவத் தெய்வத்தின் மதிநலம் இம்மாநிலத்து மன்னுயிர்க்கெல்லாம் பெரிதும் இனிதாம் பெருமையுள்ளது, இவ்வுண்மை சங்கத்தார் பால் நன்கு காணப்படும்.

சிந்தைக் கினிய செவிக்கினிய வாய்க்கினிய
வந்த இருவினைக்கும் மாமருந்து—முந்திய
நன்னெறி நாமறிய நாப்புலமை வள்ளுவனார்
பன்னிய இன்குறள்வெண் பா.

இதுபோன்ற பல பாக்களால் நமது தேவர் அறிவுடைமையை உவந்து வியந்து சங்கத்தார் சாற்றியுள்ளார். ஆண்டுக்காண்க.

ஒருவன் அறிவுடைய மக்களைப் பெறுவனாயின் அவரால் உலகமுழுதும் இன்பமடையும் என்பது இதனால் கூறப்பட்டது.

69 உற்றடைந்தார் சிவகன்சீர் ஓதவுவந் தாளென்னே
கொற்ற விசயை குமரேசா—முற்றியே
ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய். (௯)

இ—ள்.

குமரேசா! தன்னை வந்து கண்டவர்கள் சிவகன் பெருமையைச் சொன்னவுடனே ஏன் விசயை பெரு மகிழ்வடைந்தாள் எனின், தன் மகனைச் சான்றோன் எனக் கேட்டதாய், ஈன்றபொழுதினும் பெரிது மகிழும் என்க.

பெற்றகாலத்தில் அடைந்த மகிழ்ச்சியைவிடத் தன்மகனை நல்லவன் என்று பிறர் சொல்லக் கேட்ட காலத்தில் தாய் பெரு மகிழ்வை அடைவாள் என்பதாம்.

மகன் என்று பொதுவகையாகக் கண்ட பொழுது உண்டான இன்பத்தினும் அவன் குணமுடையன் என்று கேட்டபொழுது உளதாம் இன்பம அவனைப் பெற்றவட்குப் பெரிதாம் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை விசயைபால் உணரப்படும்.

கதை.

விசயை என்பவள் தத்தன் என்னும் பெயரினையுடைய விதைய தேசத்து வேந்தன் மகள். சிறந்த வுருவமும், நிறைந்த அழகும் ஒருங்குவாய்ந்தவள். ஏமாங்கத நாட்டு அதிபதியாகிய சச்சந்தன் என்னும் அரசனுக்கு இவள் மணமகளானாள். இவளது அன்பமைந்த இன்பத்தை அரசன் நன்கமைந்து துய்த்தான். காதற்சுவையைக் கனிந்து மாந்தினான். அவ் இன்ப வெள்ளத்தில் இவன் ஆழ்ந்து தாழ்ந்திருந்தான். அதனால் இவனது அரசுரிமையை அமைச்சன் ஒருவன் தனக்கு உரிமையாக்கிக் கொள்ளக்கருதினான். படையைத் திரட்டினான் இரவில் வந்தான். அரண்மனையை வளைந்தான். சச்சந்தன் விழித்தான். உற்றதை யுணர்ந்தான். சினந்தான். எழுந்தான். அவ்வமையம் தனது மனைவி நிறைந்த கருப்பம் உடையவளாயிருந்தாள். அதனை நினைந்து நினைந்து அரசன் வருந்தினான். முடிவில் துணிந்தான். அற்புதமான மயிற்பொறியொன்றில் விசயையை யேற்றி வெளியே விட்டான். அவளும் மறுகினாள். பகைவரைப் பொருது கணவன் வென்றுவிடுவான் என்று தேறினாள். அதனால் பொறிமேல் இருந்தாள். நெறியே நோக்கினாள். மயிற்பொறியை வலக்கரத்தாற் சுழற்றி வான்வழி போனாள். பகைவரும் நெருங்கினர். போரும் நடந்தது. அதில் சச்சந்தன் பட்டான். மண்ணில் நிகழ்ந்த வெற்றித்தொனியை விண்ணில் போன விசயை கேட்டாள். ஏங்கி மயங்கினாள். அதனால் பொறியோடு ஒருபுறங் காட்டில்வீழ்ந்தாள். திருவருளால் பிழைத்தாள். அன்றே கருவுயிர்த்தாள். ஒளி நிறைந்த மேனியுள்ள ஒரு புதல்வன் தோன்றினான். மகனது அருமையையும் தனக்குற்ற சிறுமையையும், எண்ணி யெண்ணி ஏங்கினாள். ஒரு வனதேவதை வந்துவிசயையைத் தேற்றி அக்குழவிக்குச் சீவகன்என்று பெயரிட்டது. தன்மகனை அவ்வனதேவதையிடம் தந்து தாயும் வருந்தித் தவவனஞ் சார்ந்தாள். இவ்வுலகியலை வெறுத்தாள். உயர்தவஞ்செய்தாள். இவ்வகையில் இருபத்தொரு வருடங்கள் கழிந்தன. மகனும் வளர்ந்தான். துயர்கள்பல

வுங் கடந்து உயர்நலமுற்றான். கலைபல தெளிந்தான். அழகு வீரம், ஆண்மை முதலியவற்றால் மேன்மையுற்றான் தனது பெற்றோர்க்கும் தனக்கும் உற்றதை முற்றவும் உணர்ந்தான். இழந்த அரசைப் பெறுதற்கு எண்ணினான். பதுமுகன் முதலிய துணைவர் பலரையுஞ் சேர்த்தான் அரசிளஞ்சிங்கம்போல் விளங்கினான். பல தேயங்களுக்குஞ் சென்றான். இவனது சால்புடைமையைக் கண்டு மேலோர் புகழ்ந்தார். இங்ஙனம் இவன் சிறந்து விளங்குந் தன்மையை வனத்திலிருந்து தவஞ்செய்யும் விசயையிடஞ் சிலர் சென்று சொல்லினார். அதைக் கேட்டவுடனே பெரிதும் உவந்தாள். அவ்வுவகைப் பெருக்கில் இவள் மிகவுந் தோய்ந்தாள். மகனையும் பின்பு தகவுடன் கண்டாள். மார்போடணைத்துப் பேருவகை பூத்தாள். மகனும் பகைவரை வென்று அரசினைப்பெற்றான்.

(இதன் விரிவைச் சீவக சிந்தாமணியிற் காண்க.)

பொற்பறிவில் லாதபல புத்திரரைப பெற்றதிலோர்
நற்புதல்வ னைப்பெறுதல் நன்றாமே--பொற்கொடியே
பன்றிபல குட்டி பயந்ததினால ஏதுபயன்
ஒன்றமையா தோகரிக்கன் றேது. (நீதிவெண்பா)

தன் மகன் சால்புடையனானால் தாய் பேருவகை கூர்வள் என்பது இதனால் கூறப்பட்டது.

* * *

70 நல்லஇரா மன்புரிந்தான் நற்றாதை யென்னோற்றான்
கொல்லெனுஞ்சொல் என்னே குமரேசா---செல்ல
மகன்தந்தைக் காற்றும் உதவி யிவன்தந்தை
யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல். (௰)

இ—ள்

குமரேசா! இவனைப் பெறுதற்கு இவன் தந்தை யென்ன தவஞ் செய்தானோ, என்று சொல்லும்படி ஏன் இராமன் செய்

தான் எனின், இவன் தந்தை என் நோற்றான் கொல் என்னுஞ் சொல்லை உண்டாக்குதலே மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி என்க.

ஆற்றும் உதவி=செய்யும் கைமாறு.

என்நோற்றான் கொல்—என்ன தவஞ் செய்தானோ.

தவத்தின் அளவு தெரியாமல் தமக்குள்ளே வினவுகின்றபடியால், கொல் என்னும் இடைச்சொல் ஈண்டு ஐயத்தைக்குறித்தது. வியப்பையும் உணர்த்தும்.

நெறி வழுவாத அறிவுடைய புதல்வனைக்கண்டால் உலகோர் மகிழ்வர் அங்ஙனம் மகிழுங்கால இந் நன்மகனைப் பெறுதற்கு இவன் தந்தை முன்னம் என்ன தவஞ்செய்தானோ? என்று நினைந்து வியந்து புகழ்வர். இப் புகழ்மொழி பெற்றோனுக்குப் பெருமகிழ்வையூட்டும். ஆதலால் அம் மகிழ்வையே மகன் தந்தைக்கு உண்டுபண்ண வேண்டுமென்பது கருத்து.

தளர்ந்துழி உணவுமுதலியன தந்து ஆதரித்தல் உபசரித்தல் முதலியனவெல்லாம் ஓர் உதவியல்ல என்பது குறிப்பு.

பெற்றோர்க்கு என்னாது தந்தைக்கு என்றார் தலைமை கருதி.

தம்மை அறிவுடையனாக்கிய தந்தைக்கு ஒரு மகன் செய்ய வேண்டிய வுதவியாவது, தான் ஒழுக்கமுடையனாய் நின்று உயர்தலேயாம் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை இராமன்பால் உணரப்படும்.

கதை.

இற்றைக்குப்பல்லாயிர வருடங்கட்கு முன்னர் திருவயோத்தியில் இருந்த தசரதனுக்கும், கோசலைக்கும் புதல்வனாக இராமன் என ஒருவர் அவதரித்தார். இவர் சிறந்த போர்வீரர், உயர்ந்த அருளுடையவர். தந்தை சொற்கடவாதவர், பேராண்மையு

யவர். அறிவும், ஒழுக்கமும், அழகும் நிறைந்தவர். தன்னைச்சொல் மிக்க மாதிரியில்லையென்ற சிந்தனையுடையவர். இவரது குணம், செயல், அழகு முதலியவற்றைக் கண்டு உலகம் ரமித்தது. அதனால் இவரை இராமன் என்றார்; இராமன் என்ற சொல்லுக்கு ரமிக்கச்செய்பவன் என்பது பொருள். ரமிக்கச்செய்தல் = இன்புறச் செய்தல். இத்திருமகனது அறிவொழுக்கங்களைக் கண்டார் அனைவரும் இவரைப் பெற்றோரது தவத்தைப் புகழ்ந்து போற்றினர். “என்ன நோன்பு நோற்றாள் கொல் இவனைப் பெற்ற வயிறுடையாள், என்னும் வார்த்தை எய்துவித்த இருடிகேசா” என்று இராமனைக் குறித்துப் பெரியார் அருளியுள்ள திருமொழியாலும் இவ்வுண்மை தெளியப்படும்

மக்கட்பேற்றால் பெருமையடைந்தவர்களுக்குள்ளே தசரதன் ஒருவரே உயர்ந்தவரானார். அவருக்கு உயர்வாகவும், ஒப்பாகவும் ஒருவரும் இல்லை.

மகன் தந்தைக்கு ஆற்றும் உதவியில் இராமர் ஒருவரே எவரினும் சிறந்தார். இதன் விரிவை அவர் சரிதத்திலுணர்க.

உந்துநீர்க்கடல் உடுத்தபார் முழுவது மொருங்கே
வந்துதாள்தொழும் அரசியல் வளமெலாம் பெறினும்
இந்திராதியர் பெரும்பதத் திருக்கை பெய்திடினும்
மைந்த ரின்றியே வாழ்வது வாழ்வுமற் றன்றே.

(பிரமோத்தரகாண்டம்)

தொக்கிள மலர்துதை விலாத சோலையும்
புக்கிள தாமரை நகாத பொய்கையும்
மிக்கிளம் பிறைவிசும் பிலாத அந்தியும்
மக்களை யிலாததோர் மனையும் ஒக்குமே. (சூளாமணி)

மகன் தந்தைக்குச் செய்யும் உதவியின் இயல்பு இதனால் உணர்த்தப்பட்டது.

(இவ்வதிகாரத்தின் தொகைப்பொருள்.)

இவ்வுலகில் ஒருவன் பெறத்தக்க பேறுகளுள் மக்கட்பேறே சிறந்தது; அதனால் அவன் குலமுழுதும் நலம் அடையும். தம் மக்களே ஒருவனுக்கு உண்மையான உயர்பொருள். அவர்கள் சிறுகையளாவிய கூழ் அமிழ்தினும் இனிதாம். அவர்கள் தொட்டால் மெய்க்கு இன்பமாம். சொற்கேட்டால் செவிக்கு இன்பமாம். குழலினும் யாழினும் அவர்தம் மழலைமொழியே பெரிதும் இனிதாம். மக்களைக் கல்வியுடையனாக்குதலே தந்தைக்குக் கடன். அறிவுடைய மக்களால் அனைவரும் இன்புறுவர். தன் மகன் சால்புடையன் ஆனால் தாய் பேருவகை கூர்வள். ஒரு தனயன் தன் தந்தைக்குச் செய்யும் உதவியாவது, தான் அறிவும் ஒழுக்கமும் உடையனாய் ஒழுகுதலேயாம்.

7-வது மக்கட்பேறு முற்றிற்று.

௮-ம் அதிகாரம் அன்புடைமை.

அஃதாவது தனது மனைவி புதல்வர் முதலிய தொடர்புடையாரிடத்தில் ஒருவனுக்கு இயல்பாகவே தோன்றும் விருப்பமுடைமை. இதனை மிகுதியாக வுடையவனே இல்வாழ்க்கைக்குத் தகுதியானவன், ஆதலால் இஃது ஈண்டு வைக்கப்பட்டது.

அதிகார அமைவும் இதனானே புலனாம்.

71 கண்டழுதார் கண்ணப்பர் காய்கதிரோன் சேயுமேன்
கொண்டழுதான் முன்னம் குமரேசா—உண்டான
அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும். (க)

இ—ள்.

குமரேசா! சிவலிங்கத்தின் தனிமையைக்கண்டு கண்ணப்பரும், வாலியின் உதிரத்தைக் கண்டு கதிரோன் சேயும் ஏன் அழுதார் எனின், அன்பிற்கும் அடைக்கும் தாழ் உண்டோ, ஆர்வலர் புன்கண்ணீர் பூசல்தரும் என்க.

கதிரோன் சேய்=சுக்கிரீவன.

தாழ்=கதவினை நிலையுடன் பிணிக்கும் ஒருவகைக் கருவி. இஃது ஆகுபெயராய்க் கதவையுங் குறிக்கும். ஓகாரம் எதிர்மறை. பூசல் என்பது பொருதல், ஒலித்தல், என்பனவற்றை விளக்கும் ஒரு சொல். அது வெளிப்படுத்தல் என்பதை ஈண்டு விளக்கி நின்றது

ஆர்வலர் புன்கண்ணீர் பூசல் தரும்=அன்புடையாரது கண்ணின் புல்லிய நீரே உள்ளிருக்கும் அன்பினை வெளிப்படுத்தும்.

இன் கண்ணீரை விலக்குதற்குப் புன் கண்ணீர் என்றார். முன்னது இன்பத்தால் உண்டாம். பின்னது துன்பத்தால் தோன்றும். பிறர் துன்பமுறக் கண்டால அன்பரது கண்ணில் நீர் வரும் என்பது குறிப்பு.

அன்பு கருத்துப் பொருள் ஆதலால் அஃது அனுமானம் ஒன்றானே அறியப்படும். கம்பரும், "அன்பென்பது ஒன்றின் தன்மை அமரரும் அறிதல் தேற்றார்" என்றார்.

காட்சியால அன்பைக் காணமுடியாது என்பதும, அதனையுடையாரது செயலிலிருந்தே அதன் உண்மை கருதப்படும் என்பதும், அதனை மறைத்து வைக்க இயலாது என்பதும், ஒருவன் உள்ளத்தில் அடங்கியிருக்கும் அன்பை அவன் கண் பொழியும் வெள்ளமே காட்டிவிடும் என்பதும், இதில் காட்டப்பட்டன. இவ்வுண்மை கண்ணப்பர் கண்ணும், சுக்கிரீவன்பாலும் காணப்படும்,

கதை 1.

காளத்தி மலைமேலிருந்த சிவலிங்கமாகிய தனியுருவைக் கண்டவுடனே அகமுருகி அதன் தனிமைக்கு இரங்கி அழுததையானும், கண்ணையெடுத்து அப்பிய தன்மையானும், கண்ணப்பரது அன்புண்மை காணப்பட்டது.

“கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்” என்று மணிவாசகப் பெருந்தகையும் இவரை நினைந்து வியந்து இரங்கியுள்ளார். இதனானே அன்பின் பேரெல்லையில் இவர் தனி நின்று நிலவுகின்றமை தெளியப்படும்.

கதை 2

சுக்கிரீவன் என்பவன் வானரகுல திலகனாகிய வாலியின் தம்பி, நல்ல போர்வீரன். தனது முன்னவனுடன் கிட்கிந்தையென்னும் நகரில் இருந்தான். வாலி சிறந்த வரபலங்களையுடையவன். இவன் அரசுபுரிந்து வருங்காலத்தில் ஓர் ஏதுவால் தம்பியை நம்பவில்லை. மாறாக மதித்தான். இவனும் பயந்து வணங்கினான். நயந்து பொழிந்தான். வாலி கேட்காமல் இவனை வைது சினந்தான். கொல்ல நினைந்தான். தம்பி மெல்லத் தப்பினான். மதங்க மலையில் புகுந்தான். மறைந்திருந்தான். அனுமார் முதலிய அறிஞர் பலரும் இவனுடன் உறைந்திருந்தனர். இவர் இங்ஙனம் இருப்ப, இராமரும், இலக்குவரும் அங்கு வந்தார். அனுமானால் இராமர் நட்பைச் சுக்கிரீவன் பெற்றான். அதன்பின் இராமரைக்கொண்டே தன் தமையனைக் கொல்லக் கருதினான். அவரும் இசைந்தார். கிட்கிந்தைக்குச் சென்றார். சுக்கிரீவன் போர்க்கு அறைகூவினான். வாலி வந்தான். இருவரும் சினந்தார் ஒருவரையொருவர் பிடித்தார். உடன்று பொருதார் தம்பி தளர்ந்தான். அவ்வமையம் இராமர் வாலிமேல் ஓர் அம்பை ஏவினார். அது மார்பில்பட்டது. படவும் வாலி பதைத்துவிழுந்தான். உருண்டான். உதிரம்பெருகியோடியது. அதனைச் சுக்கிரீவன் கண்டான். செற்றமும் பகையும் முற்றவும் மறந்தான். அழுது சோர்ந்து தரையின் விழுந்தான்.

வாசத்தாரவன் மார்பெனும் மலைவழங்கருவி
யோசைச் சோரியைக் கண்டனன் உடன்பிறப்பென்னும்
பாசத்தால்பிணிப் புண்டவத் தம்பியும் பசுங்கண்
நேசத்தாரைகள் சொரிதர நெடுநிலஞ் சேர்ந்தான்.

(இராமாயணம் வாலிவதைப் படலம்.)

இதன் விரிவை அவர் சரிதத்தில் உணர்க. அன்பின் தகையும் அதனை அறியும் வகையும் இதனால் கூறப்பட்டன

* * *

72 மோனத் ததீசி முதுகெலும்பை வானவர்தங்
கோனுக்கேன் தந்தான் குமரேசா—ஞானமுறும்
அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு. (உ)

இ—ள்

குமரேசா! ததீசி முனிவர் தமது முதுகு எலும்பை ஏன் இந்திரனுக்குந் தந்தார் எனின், அன்புடையார் என்பினையும் பிறர்க்கு உதவுவதற்கு உரியராவர் என்க.

புறப்பொருள்கள் எல்லாம் உடையராயினும் அகப்பொருளாகிய அன்பு இல்லாதவர் பிறர்க்கு ஒன்றும் உதவார் என்பது கருதி "அன்பு இலார் எல்லாம் தமக்கு உரியர்" என்றார்.

ஒன்றும் இலராயினும் அன்புடையவர் தமது உடம்பையேயுந் தந்து பிறர்க்கு உதவிபுரிவர் என்பதும், எல்லாம் உடையராயினும் அன்பு இல்லாதவர் யாதும் உதவார் என்பதும், கூறியபடி.

பிறர் துன்புற அன்புடையார் சகியார் என்று மேலே கூறினார், இதில் பிறர்பொருட்டு அவர் தமது உடம்பையும், உயிரையும் உதவுவர் என்றார்.

(இவ்வுண்மை ததீசி முனிவர்பால் உணரப்படும்.)

ததீசி என்பவர் அதர்வா என்னும் ஒரு முனிவர் புதல்வர். இவரது தாயின் பெயர் சாந்தினி. இவர் ஐயமகன்ற மெய்யுணர்வுடையவர். அன்பும், தவமும், அமைதியும் வாய்ந்தவர். தண்ணளி ததும்பிய புண்ணியவுருவினர் சுரரும் அசுரரும் பாற்கடல் கடைந்த காலத்தில் அவர்தம் படைக்கலங்களை இவரிடம் அடைக்கலமாகக் கொடுத்திருந்தார். அவற்றை இவர் நெடுநாள் வைத்திருந்தார். அவர் வரவில்லை தமது தவமகிமையால் விழுங்கினார். அவை உள்ளே புகுந்தன. எல்லாம் ஒன்றாய் இணைந்து திரண்டது. முதுகெலும்புடன் சேர்ந்தது திண்ணிதாய் நின்றது. இவ்வுண்மையை உணர்ந்த இந்திரன் இவரிடம் வந்தான். முனிவர் உபசரித்தார் வந்ததை வினவினார். தன் கைக்குலிசம் தேய்ந்து வலியிழந்திருப்பதால் அசுரரை வெல்ல முடியவில்லை என்று இந்திரன் இசைத்தான். இருளுடல் அவுணரைத் தேய்த்து எமர் குடியெல்லாம் புரப்பதோர் கொள்கைத்தாய படைக்கலம் அடிகள் பால் அமைந்துள்ளது என்பதையும் உணர்த்தினான். முனிவர் உணர்ந்தார்.

“நாய்நம தெனநரி நமதெனப் பிதா
தாய்நம தெனநமன் தனதெனப் பிணி
பேய்நம தெனமனம் மதிக்கும் பெற்றிபோல்
ஆய்நம தெனப்படும் யாக்கை யாரதே.

நடுத்தயா விலார்தமை நலியக துன்பநோய்
அடுத்தயா வருந்திரு வடைய பாக்கையைக்
கொடுத்தயா அறம்புகழ் கொளப்பனே யெனில
எடுத்தயாக் கையின்பயன் இதனின் யாவதே.”

என்றார். இன்புற்றார். அன்பால் என்புடை அவனுக்கீயத் தன் இன்னுயிரை முன்னே விடுத்தார். அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு என்பதை இவர் நன்று காட்டினார். அன்பின் இயல்பை

அனைவரும் கண்டார். இன்புடன் என்பை இந்திரன் கொண்டான் குலிசம் ஆக்கி அசுரரை வென்றான்.

இதன் விரிவு தீர்த்தகிரி புராணத்தில் உணரப்படும்.

அன்புடையார் உடம்பாலும் பிறர்க்கு உதவிபுரிவர் என்பது இதனால் உணர்த்தப்பட்டது.

* * *

73 ஆனிரைபால் அன்பால் அருந்தவனேன் மூலனெனுங்
கோனுடம்பைக் கொண்டான் குமரேசா—ஆனதினால்
அன்போ டியைந்த வழக்கென்ப ஆருயிர்க்
கென்போ டியைந்த தொடர்பு.

இ—ள்

குமரேசா! ஆன் நிரைபால் அன்பால் மூலன் என்னும் கோன் உடம்பை ஏன் அருந்தவன் கொண்டான் எனின், ஆர் உயிர்க்கு என்போடு இயைந்த தொடர்பு, அன்போடு இயைவந்த வழக்காம் என்க.

ஈண்டு என்பு என்றது உடம்பினை. ஆன் நிரை = பசுக்கூட்டம்.

ஆர் உயிர்க்கு என்போடு இயைந்த தொடர்பு = அரிய உயிர்க்கு உடம்போடு உண்டான நட்பு.

அன்போடு இயைந்த வழக்கு = அன்போடு பொருந்துதற்கு வந்த வழியின் பயன்.

உயிர் உடம்போடு கூடியது பிறர்க்கு அன்பு செய்யும் பொருட்டேயாம் என்பது கருத்து. அன்பை உடையவனே மக்கட் பிறப்பின் மாண்பை அடைந்தவன் என்பதும், அஃதில்லாதவன் உருவத்தால் மனிதனாயினும் அவன் பிறப்பால் பயன் இல்லை என்பதும் கூறியபடி.

தனித்து நிற்கும் தன்மையில்லாத நெருப்பு விறகு முதலியவற்றைப் பற்றி நின்ற பின்னரே உணவு முதலியவற்றைச் செய்ய உதவியாம், அதுபோல் அருவமாய உயிரும் உருவமாய மனித உடம்பைக் கூடிய பின்னரே அன்பு செய்ய ஏதுவாம் என்பது குறிப்பு.

இனி, "ஆர் உயிர்க்கு இப்பிறப்பில் மக்களுடம்போடு உண்டான தொடர்பு, முற்பிறப்பில் அஃது அன்போடு பொருந்திவந்ததின் பயனேயாம்" எனவும் இது பொருள்படும்.

அறிவுடைய உயிர் அறிவில்லாத உடம்பினையடைந்ததற்குப் பயன், பிறர்க்கு அன்பு செய்தலேயாம் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை திருமூலர்பால் உணரப்படும்.

கதை.

திருமூலர் என்பவர் ஒரு சிவயோகி. நந்திதேவரது மரபில் வந்தவர் அகத்திய முனிவரைக் கண்டு மகிழ வேண்டுமென்று இவர் காதல் கொண்டார் அதனால் தென்திசை நோக்கி நடந்தார். காவேரி நதியைக் கடந்தார். அதன் தென் கரையருகில் நன்கு அமைந்துள்ள ஒரு காட்டில் புகுந்தார். அங்கு மூலன் என்னும் ஓர் இடையன் பல பசுக்களை மேய்த்துவந்தான். விதிவசத்தால் அன்று இறந்தான் அவன் உடம்பைச் சூழ்ந்துகொண்டு பசுக்கள்பல கலங்கிநின்றன கண்ணீர் ததும்பிநிற்கும் பசுக்களை முனிவர் கண்டார். அன்புகொண்டார். பொதிகைக்குச் செல்லும் மதியினை மறந்தார். எவ்வகையினாலாவது அப்பசுக்களை ஆதரிக்க வேண்டுமென்று கருதினார் தவமகிமையால் மூலன் உடம்பில் புகுந்தார். எழுந்தார் பசுக்கள் கண்டன பெருமகிழ்வு கொண்டன. முனிவர் தமது திரு உடம்பை ஒரு புதரில் மறைத்தார். பொழுதும் மறைந்தது. பசுக்கள் ஊரை நோக்கிச் சென்றன. தாமும் பின் சென்றார். அவையெல்லாம் தத்தம் இல்லம் அடைந்தன. மூலர் மட்டும் வெளியே தனித்து நின்றார். உரிய காலத்தில்

தனது கணவன் வரவில்லையே யென்று மூலன் மனைவி தேடினாள். புதிய மூலரை வந்து கண்டாள். அவரும் மௌனமாக நின்றார். இவளும் நெருங்கினாள். தீண்டாதே என்று மூலர் தடுத்தார். மூலனுக்கு ஏதோ ஒருவகைச் சித்த பேதம் என்று ஊரிலுள்ளார் கருதினார். இவ்வகையில் மூலர் அன்பால் பசுக்களை ஆதரித்து வந்தார். சின்னாட்கள் கழிந்த பின்பு தமது அருமைத் திருவுடம்பை மூலர் போய்ப் பார்த்தார். அது மறைந்துவிட்டது. முனிவர் கலங்கினார். அவ்வமையம, "இவ்வுலகம் உய்யும்படி ஓர் அரிய நூலை நீ தருதல் வேண்டும்" என்று திருவருளால் ஒரு ஒலி ஒலித்தது. மூலர் கேட்டார். அருளை நினைந்தார். தனியேசென்றார். யோகத்தில் இருந்தார். வருடத்துக்கு ஒன்றாக மூவாயிர வருடங்கள் யோகத்திலிருந்து மூவாயிரம் பாடல்கள் பாடினார். அவை திருமூலர் திருமந்திரம என்று இப்பொழுது வழங்கப்பட்டு வருகின்றன. அன்பு செய்யும் பொருட்டே தமது ஆர் உயிர் மூலன் உடம்பில் புகுந்து விளங்கினமையால் முனிவர் திருமூலர் என்னும் செழுமபெயர் பெற்றார் அன்பின் பயனாகவே உயர்ந்த பிறப்பு எய்தும் எனபதும, அப்பிறப்புககுப் பயன அன்பு செய்தலேயாம், என்பதும் இவர் சரிதத்தில் தெளியப்பட்டன. இதன் விரிவைப் பெரியபுராணத்தில் உணர்க.

ஒருவன் பிறப்புக்குப் பயன் அன்பு செய்தலேயாம் என்பது இதனால் கூறப்பட்டது.

74 திண்டோட் குகனன்பு செய்தான் இராமனண்பேன்
கொண்டான் அவன்பால் குமரேசா—உண்டாகும்
அன்பினும் ஆர்வ முடைமை யதுவினும்
நண்பென்னும் நாடாச சிறப்பு. (4)

இ—ள்.

குமரேசா! குகன் அன்பு செய்தான். இராமன் ஏன் அவன்பால் நண்புகொண்டான் எனின், அன்பு ஆர்வமுடைமையை ஈனும். அது நண்பு என்னும் நாடாச் சிறப்பை ஈனும் என்க'

நாடாச் சிறப்பு = மதிக்கமுடியாத சிறப்பு.

அன்பு=மனைவி மக்கள் முதலிய உறவினரிடத்து நிகழும்காதல்.

ஆர்வம்=உறவில்லாத பிறர் இடத்தும் ஒருவனுக்கு உண்டாம் விருப்பம். அன்பின் பெருக்கமே ஆர்வம் என்க.

பேரன்புடையவனுக்கு யாவரும் நண்பர் ஆவர் என்பது குறிப்பு.

பெறுதற்கரிய பெரியாரது நண்பையும் ஒருவன் அன்புடைமையால் பெறுவான் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை குகன்பால் உணரப்படும்.

கதை.

குகன் என்பவன் வேடுவர்குலத் தலைவன். இற்றைக்குப் பல்லாயிர வருடங்களுக்கு முன்னர்க் கங்கைநதியின் வடகரையில் சிருங்கிபேரம் என்னும் ஓர் ஊர் இருந்தது. அதில் இவன் விளங்கியிருந்தான். கங்கைத்துறையிற் சென்று மீளுதற்குரிய தோணிகள் எல்லாம் இவனுக்குக் காணியாக இருந்தன. மற்போரிலும், விற்போரிலும் இவன் நற்பேர் பெற்றவன். கங்கையின் இரு கரைகளிலும் உள்ள பொருள்களெல்லாம் தனக்கே உரிமையாக உடையவன். சிறந்த வீரமும், நிறைந்த அன்பும் ஒருங்கே வாய்ந்தவன். இராமன் அரசைத்துறந்து மனைவியோடும், இளையவனோடும் வனவாசஞ் செய்துவருங் காலத்தில் ஒருநாள் கங்கைக் கரையின் அருகில் வந்து தங்கியிருந்தார். அவர் வரவை இவன் கேட்டான் உடனே அவரைக் கண்டு மகிழ வேண்டுமென்று காதல் கொண்டான். தன் தகுதிக்கேற்பக் கையுறையாகச் சில பொருள்களை யெடுத்துக்கொண்டு அவர் இருப்பிடம் நோக்கிச் சென்றான். கண்டான். அன்பால் உருகி அவர் அடிமேல் விழுந்தான். எழுந்தான். அவரது சடைமுடியையும், மரவுரியையும்

நெடிது நோக்கினான். உடல் துவண்டு நின்றான். அவர் மனைவியோடு வனம் புக வந்ததைக் கண்டு வேர்த்தான். அகம் குழைந்தான். அழுதான். தனது பொருள் முழுவதையும் உரிமையாகப் பெற்றுத் தன் நகரில் இருந்து அவர் இனிதாக வாழவேண்டும் என்று அடியிணை முடிபடத் தொழுது வேண்டினான். இவனது அன்பின் பெருக்கை இராமர் தன் தம்பிக்கும் மனைவிக்கும் காட்டினார் வியந்தார் பின் குகனைத் தேற்றி இராமர் வனம் புகத் துணிந்தார். அன்புடைக் குகனும் அவர்பின் செல்லவிழைந்தான். குகனது ஆர்வத்தை இராமர் தெளிந்தார் அவனைத் தழுவினார். பெருநண்புகொண்டார். "நான் உன் உடன் பிறந்தவன். என் தம்பி உன் தம்பி. எனது மனைவி உனது கொழுந்தி. அயோத்தியிலுள்ள நமது சுற்றத்தைப் பரதன் ஆதரிக்கின்றான். இங்குள்ள நமது கிளையை நீ இருந்து காக்கவேண்டுமே, நான் வனவாசம் செய்து மீண்டு வருங்காலத்தில் இங்குவருவேன். என்னுருயிர்த் துணையே! நில்" என்று இதவுரை பலகூறி நிறுத்தினார். குகனும் ஆணை கடக்க அஞ்சி நின்றான். தனது பெருகிய அன்பால் இராமனது உயரிய நண்பைப் பெற்றான். இதன் விரிவை இராமாயணத்தில் உணர்க.

அன்புடையவர்க்கு யாவரும் நண்பராவர் என்பது இதனால் கூறப்பட்டது.

75 தேடுகின்ற இன்புற்றம சேரமான் ஏன்சிறப்புங்
கூடஎய்தி நின்றார் குமரேசா — நாடுகின்ற
அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்
தின்புற்றார் எய்தும் சிறப்பு. (5)

இ—ள்

குமரேசா! இன்பமும் சிறப்பும் ஏன் சேரமான்பெருமான் ஒருங்கே எய்தினர் எனின், வையகத்தில் இன்புற்றார் எய்தும் சிறப்பு, அன்புற்று அமர்ந்த வழக்கு ஆம் என்க.

அன்பு உற்று அமர்ந்த வழக்கு = அன்புடையாராய் இருந்த நெறியின் பயன்.

சிறப்பு என்றது பேரின்பத்தினை.

இவ்வுலகத்தில் இருந்து இன்பங்களை நன்கு துய்த்து, அவ்வுலகத்திலும் சென்று சிறப்பினை எய்தும் உரிமை அன்புடைய ஒருவனுக்கே அமையும் என்பதாம்.

அன்புடையவர் இம்மையினும் மறுமையினும் இன்பம் எய்துவர் என்பது கருத்து.

விரதங்காத்து வருந்தி அடையத்தக்க சிறந்த இன்பத்தை அன்புடையவன் எளிதில் அடைவான் என்பதை இதினுணர்த்தினர். இவ்வுண்மையைச் சேரமான் பெருமான்பால் உணரலாம்.

கதை.

சேரமான் பெருமான் என்பவர் சேரநாட்டிலே மகோதை என்னும் நகரிலே சேர அரசர் மரபிலே செங்கோற் பொறையன் என்பவருக்குப் புதல்வராகத் தோன்றினர். சிறந்த செல்வத்திற் பிறந்த இவர் நிறைந்த அறிவோடு வளர்ந்தார். பருவமுற்றார். திருவஞ்சைக்களம் என்னும் திருத்தலத்திற்குச் சென்றார். அங்குத் தங்கினர். அன்புற்றமர்ந்தார். அதன்பின் இவர் அரசரானார். யாரினும் அனைவருக்கும் அன்புடையராய் அறநெறி நின்றார்.

உலக இன்பங்களை உவந்து நுகர்ந்தார். எல்லாவுயிர்க்கும் இதமே செய்தார். ஒரு நாள் இவர் குடைநிழலிருந்து குஞ்சரம் ஊர்ந்து நகர்வலம் வந்தார். வருங்கால் வண்ணான் ஒருவன் உவர்மண் தோய்ந்த மெய்யுடன் இவரெதிரே வந்தான். பார்த்தார். நீறு தோய்ந்த மெய்யினையுடைய சிவனடியார் என்று அவனையிவர் கருதினார். தமது அரச மாண்பையும் மறந்து அவனடிமிசை விழுந்தார். அவன் நடுநடுங்கினான். இவர் பின் உண்மையையுணர்ந்தார். இந்த ஆரவாரகாலத்தில் திருநீற்றின் சிந்தனையையுண்டுபண்ணின பெரியவர் என்று அவனை மறுபடியும போற்றிப் புகழ்ந்தார். இவரது பேரன்பை உலகம் காணும்படி இறைவன் பாணபத்திரருக்குப் பொருள் தருக என்று இவரிடம் ஒரு திருமுகம் உய்த்தார்.

மதிமலி புரிசை மாடக் கூடற்
பதிமிசை நிலவும் பானிற வரிசிற
கன்னம் பயில்பொழில ஆல வாயின
மன்னிய சிவன்யான் மொழிதரு மாற்றம்

பருவக்கொண்மூப் படியெனப் பாவலர்க்கு
உரிமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா வுகைக்குஞ் சேரலன் காண்க,

பண்பால் யாழ்பயில பாண பத்திரன
தன்போல் என்பால் அன்பன் தன்பால
காண்பது கருதிப போந்தனன்
மாண்பெருள் கொடுத்து வரவிடுப்பதுவே.

இஃது இச்சேரர்பெருமானுக்குச்சிவபெருமான் எழுதியது இதனால இவரது அன்புடைமையும வள்ளற்குணமும் நன்கு காணப்படும். இவர் நெடுங்காலம் இவ் வையகத்தில இருந்து இன்புற்றார் இறுதியில் உடலுடன் இவரொரு பரிமேலிவர்ந்து கைலைக்குச் சென்றார். சிறப்பினை எய்திச் செம்மாந்து இருந்தார்.

(இது பெரிய புராணத்தில் உள்ளது.)

அன்புடையவர், இருமையினும் இன்புறுவர் என்பது இதனால் கூறப்பட்டது.

* * *

76 பண்டு வரதுங்க பாண்டியனேன் அன்புசெய்தான்
கொண்டமறங் கண்டுங் குமரேசா—கண்ட
அறத்திற்கே அன்புசார் பென்ப வறியார்
மறத்திற்கு மஃதே துணை (௫)

குமரேசா! தன் தம்பி தன்மேல் மறஞ்செய்யக் கண்டும் வரதுங்கராமபாண்டியன் ஏன் அவன்பால் அன்பு செய்தான் எனின், அறத்தை ஆக்கவும், மறத்தை நீக்கவும் அன்பு துணையாம் என்க. சார்பு = துணை அஃதே = அவ் அன்பே.

அன்பானது, மறத்தை நீக்குதற்கும் துணையாம் என்பதை அறியாதவரே, அதனை அறத்திற்கே சார்பு ஆம் என்று கூறுவர் அறிந்தார் அங்ஙனங் கூறார் என்பதாம்

அறத்தைச் செய்யவும், மறத்தை நீக்கவும், அன்பு துணையாம் என்பது குறிப்பு. மறத்திற்கும் என்பதிலுள்ள உம்மை, அறத்திற்கும் துணையாம் என்பதை உணர்த்தி நின்றது. இஃது இறந்தது தழுவிய எச்சவும்மையென இயம்பப்படும்

இனி, தனக்கு உரிமையுள்ளவரிடத்தில் ஒருதவறுகண்டுழி ஒருவன் அவரைத் தண்டித்தற்குக் காரணம், அவன் அவர்பால் வைத்த அன்புடைமையே ஆகலால் "மறத்திற்கும் அஃதே துணை" என்றார் எனவும் இது பொருள்படும். மேல், அன்பானது தன்னையுடையானுக்கு இருமையினும் இன்பம் பயக்கும் என்றார். இதில் அது பகைமையை நீக்கி உவகையை விளைக்கும் என்றார்.

பிறர் செய்த தீமையைக் குறித்து ஒருவன் மனத்தில் வெகுளிதோன்றும் பொழுது உடனே அவரை நண்பராகக் கருதி அவர்பால் அன்பு செய்யவேண்டும் என்பதும், அதனால் மறம் நீங்கும் என்பதும், இதில் உணர்த்தப்பட்டன.

இவ்வுண்மை வரதுங்க ராமபாண்டியன் பால் உணரப்படும்.

கதை.

வரதுங்க ராமபாண்டியன் என்பவர் வழுதிவேந்தர் மரபில் வந்தவர். உயர்ந்த திருவும் சிறந்த கல்வியும் ஒருங்கேவாய்ந்தவர். நல்ல சீலமுள்ளவர். யாவரிடமும் பேரன்புடையவர். அறிவுடைய தம்மனைவியோடு இவர் நெடுங்காலங் கருவையம்பதியில் தங்கியிருந்தார். அங்கு எழுந்தருளியுள்ள இறைவனுக்குத் தகுந்த ஆலயம் ஒன்றைச் செய்வித்தார். அரும்பணிகள் பலவும் அங்கு ஆக்கினார். புலமைமிக்க தமது அருமை மனைவியால் இவர் நலம் பலபெற்றார். புவியரசராகவும், கவியரசராகவும் இவர் பொருந்தியிருந்தார். கோல் கொண்டிருந்தும் இவர் நூல் பலதந்தார் கருவைப் பெருமான் மீது ஓர் அந்தாதியும் செய்துள்ளார். அது கருவையந்தாதியென வழங்கப்பட்டுவருகின்றது இவருடைய காலம் இற்றைக்கு ஏறக்குறைய எண்ணூறு வருடங்கட்கு முன்னர் என்ப. நைடதம், காசிகாண்டம், வெற்றிவேற்கை, முதலிய நூல்களின ஆசிரியராகிய அதிவீர ராமபாண்டியன் என்பவர், இவருடன்பிறந்த தம்பியாவர். அவர் நைடத நூலை முடித்துத் தன் தமையன்பால் வந்து அதனைச் சரிபார்க்கத் தந்தார். இவர் பெற்றார். பார்த்தார். இந்நளனைப் பாடியதினும் அப்பரனைப் பாடியிருந்தால நலமாயிருந்திருக்குமென்று தம்முட் கருதினார். புலமை நிரம்பிய தமது அருமை மனைவியையும் அதனைக் காணும்படி தூண்டினார். அவளும் கண்டாள். கொழுந்தன் கவித்திறத்தைக் குறிப்பால இகழ்ந்தாள். தம்பி வெகுண்டு தன் அரண்மனை சார்ந்தார் எமது நூலையெம் அண்ணனிடம் தந்தால் அவர் தமது மனைவியிடம் தந்து எம்மை இவ்வகையில்

அவமானப் படுத்தினரே! என்று எண்ணி யெண்ணி வெகுண்டார் அண்ணனைப் பொருதுவென்றுவிடக்கருதி எழுந்தார். வந்து வனைந்தார். தம்பி வந்ததைத் தமையர் அறிந்தார். அன்பு செய்தார் கவி ஒன்றை எழுதி அவர்பால் உய்த்தார். அது

செஞ்சுடரோன் மைந்தனையும் தென்னிலங்கை வேந்தனையும்
பஞ்சவரிற் பார்த்தனையும் பாராதே—மிஞ்சு
விரதந் தனைக்கொண்டு மெய்யன்பு பூண்ட
பரதனையும் ராமனையும் பார். என்பதே.

இதனை உற்றுநோக்கினார். சுக்கிரீவன், விபீடணன், அருச்சுனன் என்பவர்களைப்போல் இராமல் பரதனைப்போல் இரு. என்று அண்ணன் நண்புடன் கூறிய அன்புடைமையைத் தமபி யுணர்ந்தார். கொண்ட கோபம் தணிந்தார். தமையன் அடியில் விழுந்து தொழுதார். அவரும் தழுவினார் இருவரும மகிழ்ந்தார். தம்முள்ளத்தில் நிகழ்ந்த மறந்தை அன்பால் நீக்கித் தம்பியை யணைத்த வரதுங்கராம பாண்டியனை உலகம் புகழ்ந்தது.

இதன் விரிவு அவர் சரிதையில உணரப்படும்.

அறத்தைச் செய்யவும் மறத்தை நீக்கவும் அன்புதுணையாம் என்பது இதனால் கூறப்பட்டது.

77. அன்றரன்பால் அன்பில் அசுரனேன் மோகினிமுன்
குன்றி எரிந்தான் குமரேசா—குன்றாத
என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை யறம். (எ)

இ—ள.

குமரேசா! அரன்பால் அன்பு இல்லாத அசுரன் ஏன் மோகினிமுன் தானே எரிந்து மாய்ந்தான் எனின், என்பு இல்

லாத உடம்பை வெயில் காயுமாறுபோல், அன்பு இல்லாத உயிரை அறம் காயும் என்க. அறம் என்றது தருமதேவதையை.

என்பு இல்லாத புழுக்களை வெயில் காய்ந்து கொல்லுதல் போல் அன்பு இல்லாத மக்களை அறம் காய்ந்து கொல்லும் என்பதாம். என்பு இல்லாதன, வெயில்முன் இயல்பாகவே கெடுதல் போல, அன்பு இல்லாதவர், அறக்கடவுள்முன் தாமே கெடுவர் என்பது கருத்து.

உடற்கு என்புபோல் உயிர்க்கு அன்பு உறுதியாம் என்பது குறிப்பு.

அன்பு இல்லாதவர், தம்மியல்பால் தாமே அழிவர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இது பசுமாசுரன்பால் உணரப்படும்.

பசுமன் என்பவன் ஓர் அசுரன். துந்துபியின் புதல்வன். இரக்கமென்றொருபொருள் இலாத நெஞ்சினன. ஆனால் மிக்க வுறுதியுடையவன். எவரையும் இலகுவில் வென்று விடவேண்டுமென்று நெடுங்காலம் இவன் கருதியிருந்தான். அதனை கண்ணுதற்பரமனை யெண்ணிக் கடுந்தவம் புரிந்தான் அவன் தவத்துக்கும் இரங்கித் தனி முதல் வந்தது. வந்த முதல்வனை அவன் வணங்கினான். தன்கையால் தொட்டால் எவராயினும், அவர் எரிந்து போம்படி வரந்தரவேண்டினான். பிள்ளைமதியரும் அதனை இல்லையென்னாது தந்தார். கொண்டான் அசுரன். அதனால் அவரையே கொல்லக் கருதினான். அவன் அன்பில் செயலை வியந்தார். வெருண்டவர்போல ஓடினார். அவனும் அவரைத் தன்கையால் தீண்டக்கருதித் தொடர்ந்தான். அவரும் விரைவில் மறைந்தார். அவன் கொடுமையை நெடுமால் நினைந்தார். ஒரு மோகினி வடிவொடு அவன் முன்னே தோன்றினார். அவனுங் கண்டான். உடனே பெரு மோகங்கொண்டான். பெற்றவரத்தை மறந்தான். உற்றமயலில் உழன்றான். மோகினியை இசையும்படி

வேண்டினான். அவள், "என்னை என்றும் பிரிவதில்லையென்று கையால் உன் தலை தொட்டு ஆணையிட்டுத் தருவையானால் யான் இசைவேன்" என்றாள். அவனும் இசைந்தான். அவ்வண்ணமே செய்தான். உடனே எரிந்து மாய்ந்தான். மாயமோகினி முன் அவன் காயம் தானே காய்ந்ததை யனைவரும் கண்டார். அன்பிலனை அறங்காயும் என்பதை உணர்ந்தார்.

இதன் விரிவை அரிஅர சரிதையில் உணர்க.

அன்பு இல்லாதவர், தாமே அழிவர் என்பது இதனால் கூறப்பட்டது.

* * *

78. தண்டகனேன் அன்பிலலாத தன்மையினால் வாழ்விழந்து
கொண்டவுயிர் தீர்ந்தான் குமரேசா—மண்டுகின்ற
அன்பகத் தில்லா வுயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று. (அ)

குமரேசா! அன்பில்லாத தன்மையினால் தண்டகன் என் வாழ்வு இழந்து தன்னுயிரும் தீர்ந்தான் எனின், அன்பு அகத்தில் இல்லாத உயிர் வாழ்க்கை, வன்பால் கண் வற்றல் மரம் தளிர்த்தாற்போலும் என்க. வன்பால்=பாலைநிலம்.

வன்பார் என்று பாடங்கொண்டால், அதற்கு வலியநிலம் என்பது பொருள். வற்றல் மரம்=உலர்ந்த மரம்.

பசையில்லாத மரங்கள் பாலை நிலத்தின் கண் நின்று தளிர்த்து வளர்ந்தால், அன்பு இல்லாத உயிர்கள் இவ்வுலகிலிருந்து செழித்துவாழும் என்பதாம். வாழமுடியாது என்பது உவமையால் உணரப்படும்.

உள்ளத்தில் அன்பு இல்லாதவன் இல்லத்தில் இருத்தல் பட்டமரம் பாலை நிலத்தில் நிற்றல் போல்வதாம் என்பது கருத்து.

அகத்தில் அன்பு இல்லாதவன் புறத்தில் எவ்வளவு வாழ்வை உடையனாயினும், அவன் வாழ்வு குன்றித் தானும் அழிவான் என்பது இதில் உணர்த்தப்பட்டது

(இவ்வுண்மை தண்டகன்பால் உணரப்படும்.)

கதை

தண்டகன் என்பவன் சூரிய குலத்தில் பிறந்தவன். இக்குவாகுவின் புதல்வன். தண்டனைக்குரிய கொடிய குணங்களையே யிவன் உடையனாயிருந்தான். அதனால் தண்டகன் என்ற பெயர் பெற்றான். இவன் சிந்தையின் கொடுமையைத் தந்தையறிந்தார் வெறுத்து அகற்றினர். இவனும் அகன்று தென்றிசை வந்தான். விந்திய மலையை அடுத்துள்ள ஒரு பெரிய நிலப்பகுதியைத் தனக்கு உரிமையாக்கிக் கொண்டான். பொருள்கள் மிகவுந் தொகுத்தான். குடிகள் பலவுங் குழுமின. வளங்களும் மிகுந்தன. அங்கோர் உயர்ந்த இடத்தில் அழகமைந்த நகரம் ஒன்றைத் தண்டகன் அமைத்தான். அதற்கு மதுமந்தம் எனப் பெயர் தந்தான். அதில் இருந்தான். ஆட்சிபுரிந்தான். சிற்றினத்தாரையே முற்றவுஞ் சேர்த்தான். கொடுமையும் மூர்க்கமும் குன்றாது நின்றான். மனஞ் சென்றவழியே சென்று மகிழ்ந்தான். புறத்தில் இன்பப் பொருள்பல கொண்டான். அகத்தில் அன்பை அறவே விட்டான். தீயன பலவுஞ் செய்து திரிந்தான். குருவும் பிறரும் இவனைக் கொதித்து வைதனர். அதனால் ஏழு நாளுள் இவன் வாழ்வும் இழந்தான். தானும் மாய்ந்தான். நாடும் திரிந்து காடாய் விரிந்தது. இதைத்தான் "தண்டகவனம்" என்று பின் கண்டவர் புகன்றார். அன்பகத்தில்லாதவன் உயிரும் வாழ்வும் விரைவில் அழியும் என்பதை உலகம் இவன்பால் கண்டது.

(இதன் விரிவை மறுமுறையிலுணர்க.)

அன்பில்லாதவன் வாழ்வு நெடிது நில்லாதென்பது இதனால் உணர்த்தப்பட்டது

79. பண்டு துரோணருக்கேன் பாஞ்சாலன் ஈயவில்லை
கொண்டவெல்லாம் வைத்தும் குமரேசா—கொண்ட
புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும யாக்கை
அகத்துறுப் பன்பில் அவர்க்கு. (௯)

இ—ள்.

குமரேசா! பாஞ்சாலன் பொருள் பல வைத்திருந்தும் துரோணருக்கு ஏன் ஒன்றும் கொடுக்கவில்லை எனின், யாக்கையின் அகத்து உறுப்பாகிய அன்பு இல்லாதார்க்குப் புறத்து உறுப்பு எல்லாம் எவன் செய்யும் என்க.

அகத்தில் அன்பு இல்லாதவர் புறத்தில் எவ்வளவு பொருள்களையுடையராயிருப்பினும் அவற்றால் அவர் ஓர் உதவியும் பிறர்க்குச்செய்யார் ஆகலான் “அன்பு இல அவர்க்குப் புறத்துறுப்பு எல்லாம் எவன் செய்யும்” என்றார்.

அன்பில்லாதவனது உடைமைகள் பிறர்க்குப் பயன் படாமல் பழுதுபடும் என்பதாம்

அன்பு இல்லாதவர் எவ்வளவு பொருள்களை வைத்திருப்பினும் அவற்றுள் யாதும் பிறர்க்கு எத்துணையும் உதவார் என்பது இதில் உணர்த்தப்பட்டது.

(இவ்வுண்மை பாஞ்சாலன்பால் உணரப்படும்.)

கதை.

பாஞ்சாலன் என்பவன் பாஞ்சாலதேசத்து அரசன். துருபதன் என்னும் பெயரினையுடையவன். தனது இளமைப்பருவத்தே பல நூல்களையும் கற்றான் அதன்பின் அங்கிவேச முனிவரிடம் சென்று படைக்கலம்பயின்றான். அக்காலத்தில் துரோணர் இவனுக்குப் பள்ளித் தோழராயிருந்தார். இவர் மிக்க நுண்மதியுடையவர். வில் ஷிக்ஷையில் அருமையான முறைகளையெல்லாம் இவர் அவ்வரச குமாரனுக்குத் தெளிவாக உணர்த்தி

வந்தார். அதனால் அவன் இவரிடம் மிக்க நண்பு கொண்டான் ஒரு நாள் மகிழ்வுடனே இவரை நோக்கினன். "துரோணரே! யான் அரசபதவியை யெய்திய பின்னர் எனது உரிமையிற் பாதி உமக்குத் தருவேன்" என்றான். கலைதேர்ந்த பின் இருவரும் கலைந்தார். துருபதன் அரசனானான். துரோணர் கிருபியென்னும் மனைவியை மணந்தார் அசுவத்தாமாவைப் பெற்றார். வறுமையால் வருந்தினார். பழைய நினைவு வந்தது துருபதன்பால் சென்றார். தனது எளிமையை யுணர்த்தினார். மாவின்பாலையன்றி மரபுக்குரிய மைந்தன், ஆவின்பால கண்டறியான், ஆதலால் எனக்கோர் பசு வேணும் அருளவேண்டுமென்று பரிந்து வேண்டினார் எல்லாம் உடையனாயிருந்தும் அவன் இவர்க்கு ஒன்றும் உதவாமல் நின்றான். உள்ளன்பு இல்லாதவன் வெளியில் ஒன்றும் உதவான் என்று இவர் நாணி மீண்டார். (இது பாரதத்தில் உணரப்படும்.)

இல்லானுக் கன்பிங் கிடம்பொருள் ஏவல்மற்
றெல்லா மிருந்துமவற் கென்செய்யும்—நல்லாய்
மொழியிலார்க் கேது முதுநூல் தெரியும்
விழியிலார்க் கேது விளக்கு. (நன்னெறி)

அன்பில்லாதவன் யாதும் உதவான் என்பது இதனால் கூறப்பட்டது.

* * *

80. எய்தபுற வுக்காக ஏனசிபிமுன் தன்மெய்யைக்
கொய்து கொடுத்தான் குமரேசா—மெய்யான
அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு (௰)

இ—ள்

குமரேசா! ஒரு புறவிற்காக ஏன் சிபி தன்மெய்யைக் கொய்து கொடுத்தான் எனின், அன்பின் வழியது உயிர்நிலை; அஃது இலார்க்கு உளவான உடம்புகள் என்பினைத் தோலாற்

போர்த்தனவாம் என்க. உயிர் நிலை = உடம்பு. இஃது ஏதுப்பெயர்.

அன்பை முதலாகவுடைய உடம்பே உயிர்நின்றவுடம்பு அன்பில்லாதன உயிர்நின்றனவாகா, பிணங்களே என்றபடி.

பெறுதற்கரிய மனிதப்பிறப்பிற்கு அன்புடைமையே சிறப்பாம் என்பது கருத்து.

அன்பின் பொருட்டு தமது உடம்பையும் அறிவுடையார் கொடுப்பார் என்பது குறிப்பு. இவ்வுண்மை சிபியால் தெளியப்பெறும்.

கதை

சிபியென்பவன் சாக்ருச மனுவின் புதல்வன். சூரியகுலத்தில் புகழ்பெற்ற திகிரி மன்னர் வரிசையில் முதன்மை பெற்றவன் திருவயோத்தியிலிருந்து செங்கோல் செலுத்திய வெண்குடை வேந்தன். உயிர்கள் எல்லாம் இன்பம் அடையும்படி அன்புடன் ஆண்ட அருள்வள்ளல். நீதியும் தருமமும் நிறைந்த நெஞ்சினன். ஒருநாள் மாலைப்பொழுதில் அழகிய சோலை ஒன்றில் இவன் தனியே உலாவிக்கொண்டு நின்றான். இவனது அன்பின் நலத்தைச் சோதிக்க விரும்பி இந்திரனும் யமனும் சிந்தித்தார். புறவும் வேடுவனுமாக முறையே இருவரும் உருவெடுத்தார். வேடுவன் துரத்தினான். புறவு வெருண்டோடி வந்தது. சிபியினிடமே சிறையடித்தடைந்தது. பதைத்துடல் துடித்தது. அக்கள்ளப்புறவின் கண்கலக்கத்தை யிவ்வள்ளல் கண்டான். அன்புடன் எடுத்தான். உச்சியும் உடலும் உவந்து தடவினான். அடுத்து வேடன் கடுத்து வந்தான். என் இரை தந்திடு, மன்னவ என்றான். இதனை விடுக; வேறு தருகின்றேன் என்று வேந்தன் இசைத்தான். வேடன் இசையவில்லை ஊன உணவே விரும்பினான். கொடுத்தால் இப்புறவையே கொடு. இல்லேல், அதன் எடைக்கு உன் உடற்றசைகொடு என்றான். அரசன் உவந்து

இசைந்தான். தன் தொடைத் தசையையறுத்தெடுத்தான் அதன் எடைக்கிசையத் துலையிலிட்டுத்தூக்கினான். புறவின் தட்டே புவியில் தாழ்ந்தது. தசை முழுதும் உடலிலிருந்து குடைந்தெடுத்து இட்டான். இடுந்தொறும், இடுந்தொறும் தசைத்தட்டே உயர்ந்தது. வேறு தசையின்மையால் முடிவில் மன்னனே அத்துலையில் புகுந்தான். உடனே புறவும்வேடனும் உருவமாறினர். இந்திரனும் யமனுமாய் எதிரே நின்றனர். அரசைப் புகழ்ந்தார். அகமகிழ்ந்தார். கொய்த தசையெல்லாம் அரசன் உடலில் எய்த வரந்தந்தார். அன்புடை அரசனும், முன்போல் நின்றான். வரம் பல தந்தார். வந்தவர் சென்றார். அன்பின் வழியது உயிர்நிலை என்பதை உலகம் இவ்வேந்தன்பால் உணர்ந்தது.

ஒருவன் உயிர்க்கு உடம்பினும் அன்பே உரிமையுடையது என்பது இதனால் உணர்த்தப்பட்டது.

(இவ்வதிகாரத்தின் தொகைப்பொருள்.)

அன்பு அருவப்பொருள். அஃது அனுமானத்தானே அறியப்படும். அதனையுடையவர் உடம்பையும் பிறர்க்கு உவந்து உதவுவர். அன்புடைமையே உடம்பின் பயன். அன்புடையவர்க்கு யாவரும் நண்பராவர். இருமையின்பங்களையும் அன்புடையவர் எளிதில் எய்துவர். அறத்தைச் செய்யவும், மறத்தை நீக்கவும் அன்பே துணையாம். அன்பில்லாதவர் தம்மியல்பால் தாமே அழிவர். அன்பில்லாதவுயிர்கள் நெடிதுநின்று இன்புறா. உள்ளன்பில்லாதவர் ஒன்றும் உதவார். அன்புடையவரே மனிதர். அஃது இல்லாதவர் நடைப்பிணங்களே என்பனவாம்.

8-வது அன்புடைமை முற்றிற்று.

* * *

௯-ம் அதிகாரம் விருந்தோம்பல்.

அஃதாவது விருந்தினரைப் பேணல். இஃது அன்புடைமை யின்பயனாக நிகழும். ஆதலால் அதன்பின் இது வைக்கப்பட்டது.

* * *

81 ஈட்டும் பொருளையெல்லாம் ஏன்விருந்தைப் பேணுதற்கே
கூட்டினரப் பூதி குமரேசா—நாட்டில்
இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு. (க)

இ—ள்

குமரேசா! அப்பூதியடிகள் தாம் ஈட்டிய பொருளையெல்லாம் விருந்தினருக்கே உதவி மீண்டும் ஏன் கூட்டினார் எனின், இல் இருந்து ஓம்பி வாழ்வது எல்லாம், விருந்தினரைப் பேணி வேளாண்மை செய்தற் பொருட்டேயாம் என்க.

வேளாண்மை=உபகாரம்.

இல்லின்கண் இருந்து பொருளையீட்டி ஒருவன் போற்றி வாழ்வதெல்லாம், விருந்தினரைப் பேணி அவர்க்கு வேண்டிய உபகாரஞ் செய்தற்காகவேதான் என்பதாம். இல்வாழ்பவனுக்கு முதன்மையான கடமை விருந்தோம்புதலேயாம் என்பது குறிப்பு.

தென்புலத்தார் முதலிய ஐவரினும் இடைநின்ற விருந்தினர் சிறந்தவர் ஆதலின் அவரை விதந்தெடுத்து ஈண்டு விரித்தார்.

இல்வாழ்பவன் வருந்தித் தொகுத்த பொருளால் விருந்தைப் போற்றவேண்டுமென்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை அப்பூதியடிகள்பால் உணரப்படும்.

கதை

அப்பூதி என்பவர் அறுபான் மும்மை நாயன்மார்களில் ஒருவர். இவர் சோழமண்டலத்திலே திங்களூரிலே அந்தணர் வருணத்திலே பிறந்தார். அரிய கலைகள் பலவும் பயின்றார். அறிவிற் சிறந்தார். அதன்பின் எல்லா நல்ல குணங்களும் இயல்பாகவே யமைந்திருந்த ஒரு குணவதியை மணந்தார். இல்வாழ்க்கையி விருந்தார். மனைவியுந் தானும் ஒருமனப்பட்டு மகிழ்ந்து வாழ்ந்தார். அன்புடன் எவரையும் ஆதரித்து வந்தார். தாம் வருந்திப் போற்றிய பொருளால் விருந்தைப் போற்றிவந்தார். வருங்கால் அப்பரது அருங் குணங்களை யிவர் செப்பக் கேட்டார். அவ்வடிகள்பால் இவர் பேரன்பு கொண்டார். தாமியற்றியுள்ள அறச்சாலைகள் எல்லாவற்றிலும் அப்பர் பெயரையே சூட்டினார். இங்ஙனம் ஆரா அன்போடு இவர் வாழ்ந்துவருங்கால் அப்பரும் அங்கு வந்தார். தம் பெயர் நாட்டி அவர் அறம்புரியுந்தன்மையை அப்பர் அறிந்து வியந்தார். அப்பூதியடிகளைக் கண்டார். வந்தவர் அப்பர் என்பதை அறிந்தவுடனே அப்பூதியடிகளுக்கு உண்டான உவகைக்கு அளவேயில்லை. வணங்கினார். வாழ்த்தினார். இல்லில் எழுந்தருளச்செய்தார். மனைவியும், புதல்வரும் வணங்கி மகிழ்ந்தார். அதன்பின் குழுமிய சுவையுடைய விழுமிய உணவை விரைவினில் ஆக்கினார். தமது புதல்வருள் முதல்வனாகிய மூத்த திருநாவுக்கரசு என்பவனை இலைகொணரும்படி பணித்தார். அவன் வாழைத்தோட்டத்துட் சென்றான். பரிகலம் அரியும் சமையம் ஒரு பாம்பு இவன் கையில் கடித்தது. உடனே புதல்வன் துடித்து உயிர் துறந்தான். தாயும் தந்தையும் அறிந்தார். விருந்தினரைப் பேணுதற்கு இஃதோர் தடையாயிற்றே! என்று வருந்தினார். மகனின் உடலை யொருபடலில் மறைத்தார். இலையைத்தாங்கி விரைவினில் வந்தார். அப்பரை உபசரித்தார். உணவூட்ட விரும்பினார். மெய்யுணர்வுடைய அப்பர் நிகழ்ந்ததையோர்ந்தார். அப்பூதியடிகளது ஒப்புயர்வற்ற விருந்தோம்புந்திறத்தை வியந்தார். இறைவனைத் துதித்தார். முதல்வன் அருளால் புதல்வன் பிழைத்

தான். அப்பர் பின் உண்டார். அவரனைவரும் மகிழ்ந்தார். இல்லில் இருந்து இவர் விருந்தோம்பிய பெருந்தன்மையை உலகம் போற்றியது. (இதன் விரிவு பெரியபுராணத்தில் உணரப்படும்)

விருந்தினரைப் பேணுதலே ஒருவன் இல்வாழ்க்கைக்குப் பயன் என்பது இதனால் கூறப்பட்டது

82 தானுண்ணான் ஒளவையுண்ணத் தந்தான்
கோனதிகன் என்னே குமரேசா—மான
விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று. (உ)

குமரேசா! அதிகமான் என்பவன் அமுதம் போன்ற அருங்கனியைத் தான் உண்ணாமல் ஒளவைக்கு ஏன் தந்தான் எனின், சாவா மருந்து எனினும், விருந்துபுறத்ததாகத் தான் உண்டல் வேண்டற்பாற்று அன்று என்க.

சாவா மருந்து = சாவாமைக்கு ஏதுவாகிய மருந்து. அமிர்தம் என்றபடி. வேண்டல் பாற்று அன்று = விரும்புதல் முறைமையன்று.

ஒருவனால் உண்ணப்படும் பொருள் பெறுதற்கு அரியதும், மிக இனிய சுவையுடையதுமாகிய அமிர்தமேயெனினும், தன் இல்லின் புறத்தே விருந்தினரை வைத்துவிட்டுத் தான்மாத்திரம் உண்ணுதல் தகுதியன்று என்பதாம்.

விருந்தையோம்பியே அருந்தவேண்டும் என்பது கருத்து. ,‘மருந்தேயாயினும் விருந்தோடு உண்’’ என்றதுங் காண்க.

இனி, விருந்தை வெளியே வைத்துவிட்டு, ஒருவன் தனியே உண்டால் அஃது அவன் சாவாமல் நிலைத்திருத்தற்கு உரியதோர் அருமருந்தாம் என்று எவராயினும் கூறிக் குலைத்தாலும், உண்ணலாகாது, எனவும் இது பொருள்படும்.

தமக்குக் கிடைத்தது அமிர்தமேயானாலும் அதனையும் விருந்தினர்க்குக் கொடுத்தே இல்வாழ்பவன் அருந்தவேண்டும் என்பது இதில் உணர்த்தப்பட்டது இவ்வுண்மை அதிகமான்பால் உணரப்படும்.

கதை.

அதிகமான் என்பவன் கடையெழு வள்ளல்களுள் ஒருவன். நல்ல போர்வீரன். இவன் காலம் இற்றைக்கு இரண்டாயிரம் வருடங்கட்கு முன்னராம். இவன் இருந்த ஊரின் பக்கத்தில் ஒரு செழித்த மலைச்சாரலும், தழைத்த பூஞ்சோலையும் நிலைத்திருந்தன. அச்சாரலில் தெய்வீகமான நெல்லிக்கனி ஒன்று அற்புதமாக உற்பவித்தது. அஃது அமிழ்தின் தன்மையைத் தன்னிடத்தே அமையப்பெற்றது. தன்னை உண்டவர்களை நெடிது வாழச் செய்யும் தகுதியுடையது. அதனை ஓர் அருந்தவர் கண்டார். அதன் இயல்பையெல்லாம் தமது தவ மகிமையால் ஓர்ந்தார். எடுத்தார். அந்நாட்டுத் தலைவனாகிய அதிகமான்பால அதனைக் கொணர்ந்துகொடுத்தார். அதன் அருமையையும் பெருமையையும் கூறியகன்றார். அவன் கொண்டு மகிழ்ந்தான். உண்ணுதற்கு உரியதோர் காலத்தைக்குறித்து அதனை நிறுத்தி வைத்திருந்தான். குறித்த காலம் வந்தது. அதனையுண்ண எண்ணினான். அவ்வமையம் அவன் இல்லை நோக்கி ஔவை வந்தாள். அதிகமான் கண்டான். மகிழ்ந்தான். உபசரித்தான். தான் உண்ணாமல் அவ் அருங்கனியை அன்புடன் ஔவைக்கே தந்தான். அமிழ்துவினை தீங்கனியைத் தான் உண்ணாமல் தனக்கே தந்த அவன் வள்ளற்குணத்தை ஔவை வியந்து பாடினாள். சாவா மருந்தெனினும் விருந்திருக்க உண்ணலாகாது என்பதை அதிகமான் காட்டினான். (இதன் விரிவு புறநானூற்றில் காணப்படும்.)

இல் வாழ்பவன் தன்னினும் விருந்தினரையே இனிதாகப் பேணவேண்டும் என்பது இதனால் உணர்த்தப்பட்டது.

83 ஈட்டியவெல் லாந்தேய்ந்தும் ஏனல்லான் பின்னுலவாக்
கோட்டைபெற்று வாழ்ந்தான் குமரேசா—வீட்டில்
வருவிருந்து வைகலும ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று. (௩)

இ—ள்

குமரேசா! நல்லான் என்பவன் ஈட்டிய பொருளையெல்லாம் இழந்தும் பின் ஏன் உலவாக்கோட்டை பெற்று வாழ்ந்தான் எனின், வருவிருந்து வைகலும் ஓம்புவானது வாழ்க்கை, பருவந்து பாழ்படுதல் இன்று என்க.

பருவந்து பாழ்படுதல் இன்று—வருந்திக் கெடுதல் இல்லை.

வருந்திப் பெற்ற பொருளால் ஒருவன் விருந்தைப் போற்ற வேண்டுமென்று மேலே கூறினார். அங்ஙனம் போற்றின் அது தேய்ந்து கெடுமே என்பாரை நோக்கி ஓம்புவான் வாழ்க்கை பருவந்து பாழ்படுதல் இன்று" என்று இதில் உறுதி கூறினார்.

தன்னை நோக்கி வந்த விருந்தை நாள்தோறும் பேணி வருகின்றவனது வாழ்க்கை வருந்தி அழியாதென்பதாம். வளர்ந்தோங்கும் என்பது குறிப்பு. இவ்வுண்மை நல்லான்பால் உணரப்படும்.

கதை.

நல்லான், மதுரையிலிருந்த ஓர் வேளாண் மரபினர். இவரது மனைவி பெயர் தருமசீலை. இவ்விருவரும் ஒருமனப்பட்டு விருந்து புரந்து அருந்தவர்ப்பேணி நாளும் நன்றாற்றி வந்தார். இறைவன் சோதனையால் இவர் செல்வந் தேய்ந்தது. விருந்தோம்புதலை

விருப்பினர். வருந்தினர். இறைவனை நோக்கி யருந்தவங்கிடந்தார். அப்பரமன் உலவாக்கோட்டை யருளினர். அதுகொண்டு களும் விருந்தோம்பி மெய்யினபமெய்தினர்.

வானாறுசூடி தருகோட்டையை வைகறோறும்
பூநாறுசாந்தம் புகையொண்சுடர் கொண்டருச்சித்
தானாதசெவ்வி யடிசிற்கு மதற்குவேண்டும்
நானாகருவி விலைக்கும் அது நல்கவாங்கா.

மின்னார்சடையான்றமர் ஆய்ந்தவர் வேதச்செல்வர்
தென்னாடர்தெய்வம் விருந்தொக்கல் செறிந்துநட்டோர்
முன்னாமெவர்க்கும் முகில்போல வரையாமனல்கி
எந்நாளும்நோயின் றளகாதிப னென்னவாழ்ந்தான்.

(கூடற்காண்டம்.)

நல்லான் இயல்பு இனிது தெளிவாம்.

ந்தோம்புவான் வாழ்வு, வளர்ந்தோங்கும் என்பது இதனால்கூறப்பட்டது.

* * *

84 என்றும் அசதியில்லில் ஏனோ திருமகளார்
குன்றா துறைந்தார் குமரேசா—நன்றா
அகனமர்ந்து செய்யா ளுறையும் முகனமர்ந்து
நல்விருந் தோம்புவான் இல் (௪)

-ள

குமரேசா! திருமகள் மனமகிழ்ந்து அசதியில்லில் ஏன் நிலைத்து இருந்தாள் எனின், முகன் அமர்ந்து நல்விருந்து ஓம்புவான் இல்லில், செய்யாள் அகன் அமர்ந்து உறையும் என்க,

அமர்ந்து=மகிழ்ந்து. பொருந்தி எனவுமாம்.

முகமலர்ந்து விருந்தினரைப் பேணுகின்றவன் வீட்டில் திருமகள் மனமகிழ்ந்து தங்கி நிற்பள் என்பதாம்.

விருந்தோம்புவானது வாழ்வு பாழ்படாதென்று மேற்காட்டியதற்கு ஏதுவை யிதில் நாட்டினார்.

விருந்தினரை உபசரிப்பவனது இல்லில் செல்வம் மல்கும் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை அசதியால் உணரப்படும்.

கதை.

அசதி என்பவன் ஓர் ஆயர் குலத்தவன். தொண்டைநாட்டிலே ஐவேல் என்னும் ஊரிலே பிறந்தான். இவன் காலம் இற்றைக்கு ஆயிரத்து ஐநூறு வருடங்கட்கு முன்னராம். குறுகிய நிலமும் பெருகிய ஆநிரையும் இவனுக்கு உடைமைகளாயிருந்தன. அவற்றால் வருவிருந்தை வைகலும் பேணி இல்வாழ்ந்து வந்தான். ஒளியுயர்ந்த ஔவை ஒருநாட் பாதிராவில் இவன் இல்லில் வந்து சேர்ந்தாள். பசியால் உடல் நடுங்கிச் சோர்ந்தாள். இவன் கண்டான். முகமலர்ந்து எழுந்தான். மனமகிழ்ந்து பணிந்தான். புகழ்ந்தான். உள்ளே எழுந்தருளச் செய்தான். அவ்வமையம் அந்த ஆயத்தமாயிருந்த காட்டுக்கிழங்கைப் பக்குவஞ்செய்து ஆட்டுப்பாலுடன் தந்தான். ஔவை கொண்டாள். உண்டாள். சோர்வு நீங்கினாள். அவன் அன்பின் திறத்தையும், விருந்தோம்பு நலத்தையும் நினைந்து மகிழ்ந்தாள். ‘‘ஐவேல் அசதி’’ என்பதை முன்னிலையாக்கொண்டு அவன்மீது பல பாடல்கள் பாடினார். அதன்பின் அவன் புகழ் உலகெங்கும் பரவிற்று. திருமகளும் மகிழ்வோடு இவன் மனையிலுறைந்தாள்.

(இஃது அசதிக்கோவையில் அறியப்படும்.)

நல்விருந்தோம்புவானுக்கே செல்வம் நிலைக்கும் என்பது இதனால் கூறப்பட்டது.

◆

85 வித்தின்றி மூத்தேன் விளைந்ததுவெண் ணெய்ச்சடையன்
கொத்தும் வயலிற் குமரேசா—சத்திசெய்து
வித்தும் இடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம். (௫)

இ—ள்

குமரேசா! வெண்ணெய்ச் சடையன் வயலில் வித்துகள் இடாமலே ஏன் முத்துகள் விளைந்தன எனின், விருந்தோம்பி மிச்சில் மிசைவான் புலத்தில் வித்தும் இடல்வேண்டும் கொல்லோ என்க. மிச்சில்=மிஞ்சியிருந்தது. மிசைதல்=உண்டல். புலம்=விளை நிலம்.

மிசைவான் புலம் தானே விளையும் என்பது கருதி வித்தும் இடல்வேண்டுமோ என்றார். இது குறிப்பு மொழி.

உம்மை அதன் உரிமையை விளக்கி நின்றது.

விருந்தை முதலில் ஊட்டி அதன் பின்பு தான் உண்டு வாழும் பெருந்தகையோனது விளை நிலத்தில் பெருகிய வளங்கள் தோன்றும் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை வெண்ணெய்ச்சடையன் விளைபுலத்தில் உணரப்படும்.

கதை

சோழநாட்டிலே திருவெண்ணெய் நல்லூரிலே ஏர்வளம் படைத்துச் சீர்பெற வாழ்ந்த சடையப்பபிள்ளையென்பவர் ஒரு பெருங்கொடைவள்ளல். இவர் தமது நிலங்களில் பயிர்களைப் போற்றி உயிர்களைக் காத்தார். பசி நோய்க்கு இவரொரு மருந்து போன்றிருந்தார். தம்மில்லில் வந்து உண்டு மகிழ்ந்த விருந்தினர் முகங்களை யிவர் கண்டு மகிழ்வர். பல இடங்களினும் இருந்து தினந்தோறும் இவரது இல்லை நோக்கி வருவார் பலர். அவரனைவரும்உண்டு உவந்த பின்னரே யிவர் உண்ணப்புகுவார். உயிர்களைப்

பேணும்பொருட்டே யிவர் பயிர்களைப்பேணினார். நிலங்களைப்பண்படுத்துவதிலும், அவற்றின் தன்மைகளையறிவதிலும் இவர் மிகச் சிறந்தவர். இவரது உபகார நலத்தால் இவர் விளைபுலத்தில் பெருவளங்கள் தோன்றின. ஒரு சமயம் இவர் வயலில் விளைந்த சில கரும்புகளில் கணுக்கள்தோறும் முத்துக்கள் இருந்தன. இதைக் குறித்துக் கம்பர் குணசேகரபாண்டியன் என்னும் அரசனிடம் கூறி மகிழ்ந்துள்ளார். உபகாரியின் விளை நிலம் தானே விளையும் என்பதை உலகம் இவர்பால உணர்ந்தது.

பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும். (ஔவை)

உண்டுவிருந் துவந்தபின்பே உண்ணுமென்ற பெருந்தகைபோன்
உழுநிலத்தில்
கொண்டுவித்தும் இடல்வேண்டுங்கொல்லோவென் றுரைத்தமொழி
குறித்தோ என்றும்
மண்டுபுகழ்த் திருவெண்ணெய் நல்லூர்வாழ் சடையப்பன்
வயலில் வாய்த்த
மிண்டுசெழுங் கரும்புகளில் வெண்முத்தம் கணுக்கள்தொறும்
விளைந்ததம்மா. (தனியன்)

விருந்தோம்புவான் விளைநிலம் பெருவளம் தருமென்பது இதனால் கூறப்பட்டது.

* * *

86 தேடிவிருந் தோம்பும் சிறந்தொண்டர் வாழுலகேன்
கூடிவிருந் தானார் குமரேசா—நாடிச்
செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு. (க)

குமரேசா! இவ்வுலகில் விருந்தினரைப் பேணிய சிறுத்தொண்டர் ஏன் வானுலகுக்கு விருந்தானார் எனின், செல்விருந்தை ஓம்பி வருவிருந்தைப் பார்த்திருப்பான், வானத்தவர்க்கு நல்ல விருந்து ஆவான் என்க. செல்விருந்து=வந்தவிருந்து.

வரவையுணர்த்தும் வரு என்னுஞ்சொல், தன்மை முன்னிலையெனும் இரண்டிடங்கட்கேயுரியது. அது வழுவமைதியாய் ஈண்டுப்படர்க்கையில் வந்துள்ளது.

> தருசொல் வருசொல் ஆயிரு கிளவியும்
> தன்மை முன்னிலை யாயி ரிடத்த. (தொல்காப்பியம்.)

வந்த விருந்தினரைப் பேணி பின் வரத்தக்க விருந்தினரை எதிர்பார்த்திருக்கும் வண்மையாளனை வானவர் விரும்பிப் பேணுவர் என்பது கருத்து.

இம்மையில் உயிர்களுக்கு உணவூட்டி இன்பஞ்செய்தவன் மறுமையில் பேரின்பத்தை மருவுவான் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை சிறுத்தொண்டர்பால் உணரப்படும்.

கதை.

சிறுத்தொண்டர், அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர். இவர் சோழநாட்டிலே, திருச்செங்காட்டங்குடி என்னும் ஊரிலே, ஆமாத்தியர் குலத்திலே பிறந்தார். சிறந்த போர்வீரர். படைக்கலப் பயிற்சியில் மிகத்தேர்ச்சி பெற்றவர். கவண், அம்பு முதலிய கைவிடு படைகளிலும், வேல், வாள் முதலிய கைவிடாப் படைகளிலும் இவர் வல்லுநர். அதனால் அந்நாட்டு அரசன் இவரைத் தன் தானைக்குத் தலைவராக்கினான். இவருந் தலைவரானார். பல போர்முனைகளிலும் சென்று பகைவரை வென்றார். இவரது அரு

மையையும், வெற்றியையும் அறிந்து அரசன் இவருக்குப் பெரும்பொருள் தந்தான். அது கொண்டார். அதன்பின் மணம்புரிந்தார். திருவெண்காட்டு நங்கை என்னும் பெயரினையுடைய தமது அருமைத் திருமனைவியோடு அமர்ந்து வாழ்ந்தார். வாழும் நாள் தமக்கு ஒரு புதல்வன் தோன்றினான். அவனுக்குச் சீராளன் என்று பெயரிட்டார். மகிழ்ந்தார். பேரன்போடு விருந்தினரைப் பேணினார். விருந்தோம்புதலையே யிவர் பிறவிப் பயனாக விரும்பினார். வைகலும் நூற்றுக்கணக்கான விருந்தினர் வந்து இவர் இல்லில் உண்டாலொழிய இவர் உண்ணார். இவரது விருந்தோம்புந்திறத்தை உலகம் தெரிந்தோம்புமாறு பரமன் விரும்பினான். ஒரு வைரவ வேடந்தரித்தான். இவர் இல்லம் நோக்கி வந்தார். ஒரு விருந்தும் அன்று இல்லையாம்படி செய்தார். மணங்கமழ் உணவை வழக்கம்போல ஆக்கி விருந்தினரை நாயனார் எதிர்பார்த்திருந்தார். ஒருவரும் வரவில்லை. வருந்தினார். விருந்தினரைத் தேடி வெளியே போனார். துறவிபோல வேடங்கொண்டு வந்த பரமனைக் கண்டார். உவந்து கொண்டுவந்தார். உண்ணூட்டத் துணிந்தார். அவர் தடுத்தார். "நாம் இப்புல்லிய உணவையுண்ணோம். நாமுண்பது நிணங்கமழ் உணவேயாம். அஃது அழகும் இளமையும்பொருந்திய ஒரு குழவியின் கறியோடு கலந்திருத்தல் வேண்டும். இல்லெனில் நாம்செல்வோம்" என்று எழுந்தார். நாயனார் நடுங்கினார். அவர் அடியிணைவீழ்ந்தார். அவ்வகையுணவு தருகின்றேன் என்று தொழுது நிறுத்தினார். உள்ளேயோடினார். மனைவியிடம் இவ்வுண்மையை உளங்கலங்கியுரைத்தார். மனைவியும் பதைத்தார். முடிவில் இருவரும் தேறித்தமது அருமைத்திருமகனையே அறுத்துச் சமைக்கத் துணிந்தார். பள்ளியில் இருக்கும் பிள்ளையை மெள்ள அழைத்தார். உள்ளே கொண்டுபோனார். பாவம்! தாய் மடியில் தாங்கிப் பாலன் காலைப்பிடித்தாள். தந்தையஞ்சாது தலையையறுத்தார். விரைவில் கறி சமைத்தார். அடியவர்க்குப் படை

த்தார். பாலன் ஒருவன் என் பக்கத்தில் இருந்தால் தான் யாம் இதை உண்போம் என்று அவர் பகர்ந்தார். பாலன் இல்லையே என்று இவர் அயர்ந்தார். வெளியேபோய் அழை என்றார். ஆணையை மறுக்க அஞ்சி யிவரும் அழைத்தார். புத்தகமேந்திய கையோடு சீராளன் தெருவிலிருந்து திருவருளால் ஓடி வந்தான். பிள்ளையுள்ளே வருமுன் உணவும விருந்தும் ஒருங்கே மறைந்தன. உடனே பரமன் விடைமேல் தோன்றினார். அருள்செய்தார். மனைவியும், புதல்வனும், தாதியும், உடன்வர நாயனார் அருளுருவடைந்தார். வானவர் எதிர்கொள்ள வான்வழிபோனார். அழிவில் இன்பத்தைத் தமருடன் துய்த்தார். இவரது இயற்பெயர் பரஞ்சோதியார் என்பதே. எவரிடமும் பணிவோடு தொண்டுபுரிந்ததனால் இவர் சிறுத்தொண்டர் எனப பெற்றார்.

(இதன் விரிவைப் பெரியபுராணத்தில் உணர்க.)

விருந்தோம்புவானுக்கு உளதாம் பயன் இதனால் கூறப்பட்டது

87 ஓரன்னம் கண்ணற் குதவியதால் பாஞ்சாலி
கூர்பயனேன் கொண்டாள் குமரேசா—பாரில்
இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன். (எ)

இ—ள்

குமரேசா! பாஞ்சாலி கண்ணனுக்கு ஓர் அன்னம் உதவியதனால் ஏன் பெரும் பயனையடைந்தாள் எனின், வேள்விப்பயன் இனைத்துணைத்து என்பது ஒன்று இலலை, விருந்தின் துணைத் என்க.

வேள்விப் பயன் இனைத்துணைத்து=விருந்தோம்புதலின் பயன் இவ்வளவினையுடையது.

விருந்தின் துணைத்துணை=விருந்தின் தகுதி அளவே அளவு.

இல் வாழ்பவன் செய்யவேண்டிய ஐவகை வேள்விகளுள் விருந்தோம்பல் மானுட வேள்வி எனப்படும். ஆதலால் அதனையே வேள்வியென்றார். மற்றவை பிரம வேள்வி, தேவ வேள்வி, பிதிர்வேள்வி, பூத வேள்வி எனப்படும். அவை முறையே வேதமோதல், ஓமம் வளர்த்தல், நீர்க்கடன் செய்தல் பலியீதல்களாம்.

விருந்தோம்பலின் பயன் பொருளின் அளவைப் பொறுத்ததன்று. அதனைப் பெறுவோரது தகுதியைப் பொறுத்ததாம் என்பது கருத்து.

கொடுத்தது சிறிதானாலும் அதனைக் கொண்டவரது தகுதிக்கேற்ப அதன் பயன் பெரிதாம் என்பது இதில் காட்டப்பட்டது. இவ்வுண்மை கண்ணன்பால் காணப்படும்.

கதை.

பாண்டவர் வனவாசம் செய்யுங்காலத்தில் துருவாச முனிவர் அத்தினபுரிக்கு வந்தார். துரியோதனன் அவரைத் தொழுது உபசரித்தான். தனது அரண்மனையில் அவருக்கொரு பெருவிருந்து செய்தான். அதில் உண்டு மகிழ்ந்த முனிவர் அவனுக்கோர் வரந்தர விரும்பினார். அவன் வேறொன்றுங்கேளாமல், எமது இல்லில் உண்ட உணவுபோல் பாண்டவரிடமும் போய் நீவிர் உண்டு வரவேண்டும் என வஞ்சகமாக வேண்டினான். முனிவரும் இசைந்தார். வனம்புகுந்தார். பாண்டவரைக் கண்டார். அவரனைவரும் இவரடியிணை விழுந்து தொழுதார். பூசித்தார். உடனே முனிவர் "யாம் பசித்துள்ளோம். யாம் உண்ண நல்லவுணவுதா" என்றார்.

பாவம்! என் செய்வார் பாண்டவர். சூரியன் உதவிய பாத்திரத்தின் மகிமையால் தினம் ஒருமுறை சிறிது உணவு பெற்று உண்டு வருகின்றார். அம்முறையும் அன்று பெற்று முடிந்தது. நாழிகை இருபதாயிற்று. ஐவரும் வருந்தினர். தருமன் முடிவில் தேறி முனிவரை நீராடி வரும்படி வணங்கினர். அவரும் விரைந்து போனார். என் செய்வோம் என்று இவர் நினைந்துக் கண்ணனைக் கருதினர் கருதியதையுணர்ந்த கருணைக் கண்ணன் உடனேயிவர்முன் தோன்றினன் ஐவரும்மகிழ்ந்தார் உள்ளதை உணர்த்தினர். கண்ணன் திரௌபதியை நோக்கிப் பாண்டத்தில் ஏதாவது ஒட்டியுள்ளதா பார்! என்றார். பார்த்தாள் பாஞ்சாலி. ஒரு பருக்கையே யிருந்தது. கொணர்ந்து கொடுத்தாள் கண்ணன் கையில கொண்டான் உலகமுண்ட வாயில அதனையும் வைத்துண்டான். நீராடி விரைந்து வருகின்ற துருவாச முனிவருக்கும் அவரடியவர்க்கும் பசிநோய் நீங்கியது. சிறிதும் இடம் பெறுதபடி வயிறு நிறைந்தது. முனிவர் மகிழ்வோடு நினைத்தார். கண்ணனை வந்து கண்டார் கழிபேருவகை கொண்டார் யாம் இன்று உண்ட உணவு போல் என்றும் உண்ணப் பெற்றிலேம் என்று ஐவருக்கும் பாஞ்சாலிக்கும் ஆசிகூறியகன்றார். விருந்தின் துணைத் துணை வேள்விப்பயன் என்பதை உலகம் கண்ணனால் கண்டது.

(இதன் விரிவு பாரதத்தில் காணப்படும்.)

தகுதியான விருந்தை ஓம்புவார்க்கு மிகுதியான பயன்கள் உளவாம் என்பது இதனால் கூறப்பட்டது.

* * *

88 பற்றற்றான் உள்ளம் பரிந்திரந்தான் என்பின்பு
சுற்ற முற்றான் சேடன் குமரேசா—முற்றும்
பரிந்தோம்பிப் பற்றற்றே மென்பார்விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார். (அ)

இ—ள்

குமரேசா! சேடன் என்பவன் பற்றுக்கள் அற்று வன் பரிந்து இரந்து குற்றமுற்றான் எனின், விருந்து ஓம்பி வேள்வி தலைப்படாதார் பரிந்து ஓம்பிப் பற்று அற்றேம் என்பார் என்க.

பற்று=பற்றுக்கோடு. பொருள் என்றும்.

பரிந்து=வருந்தி. வேள்வி=விருந்தோம்பல்.

வேள்வி தலைப்படாதார்=விருந்தோம்பி அதனால் எய்தும் பயனைப் பொருந்தாதவர்.

விருந்தினரைப் பேணாதவரே, பொருளை வருந்திக் காத்து இழந்தேமென்று சொல்லி இரங்குவர் என்பதாம்.

விருந்தைப் போற்றி வருதலே ஒருவன் வருந்திப் பெற்ற பொருளுக்குப் பயன் என்பது குறிப்பு.

நிலையில்லாத செல்வம் தனக்கு உரிமையாக அமைந்திருக்கும்பொழுதே ஒருவன் அதனைப் பிறர்க்கு உபகரிக்கவேண்டும் என்பதும், இலதேல் அது தன் இயல்பாய் நீங்கும் என்பதும், அதன்பின் அவன் அதனை வருந்திக்காத்த நயமாக குறித்தும், அதனால் எய்தும் பயனை யிழந்தமையை நினைந்தும், இரங்குவான் என்பதும் பின் இரந்து திரிவான் என்பதும், இதில் உணர்த்தப்பட்டன. இவ்வுண்மை சேடனால் உணரப்படும்.

கதை

சேடன்என்பவன் சோழநாட்டிலே கோரைஎன்னும் ஊரிலே யிருந்த ஒரு பெருஞ்செல்வன். ஔவை காலத்தவன். வஞ்சமும் சூதும் நெஞ்சினில் உடையவன். இரக்கமில்லாதவன் பேராசை பிடித்தவன். தானும் இன்புறான். பிறர்க்கும் உதவான். கொடு என்றால், சுடு என்பான். வன்கண்மை மிக்கவன். நல்ல விருந்தைக்

கண்டால் தன்னைக் கொல்லுமருந்தென்று கொள்வான். பதுங்கி யொதுங்குவான். ஒருநாள் ஔவை தளர்ந்து இவன் இல்லை வந்தடைந்தாள். அமுதனைய கவிபாடும் அம்மூதுமகளுக்கு இவன் சிறிது பழங்கூழும் உதவினான் இல்லை. தவமகள் எழுந்தாள். கவி ஒன்று பாடிக் கடுகி நடந்தாள்.

பாடல் பெறானே பலர்மெச்ச வாழானே
நாடறிய நன்மணங்கள் நாடானே—சேடன்
இவன்வாழும் வாழ்க்கை யிருங்கடல்சூழ் பாரில்
கவிழ்ந்தென் மலர்ந்தென்ன காண். (ஔவை)

சேடன் தன் விதிவசத்தால் பொருள் முழுதும் இழந்தான். துயரங்கள் பல தொடர்ந்தன. இழந்ததை நினைந்து ஏங்கினான். பண்டு விருந்தோம்பாமையை யெண்ணி யிரங்கினான். பலவிடங்களிலும் அலைந்தான். இரந்து திரிந்தான். பின் இறந்து தீர்ந்தான். விருந்தினையோம்பாதவன் பொருளினையிழந்து வருந்துவான் என்பதை உலகம் இவன்பால் உணர்ந்தது.

(இஃது ஔவை காதையில் உள்ளது)

மண்ணாற்சட்டி காத்தேந்தி மறநாய் கவ்வும வாயினராய்
அண்ணாந்தேங்கி யிருப்பவரை யறிந்தோம அறிந்தோம் அம்மம்ம
பண்ணார்மொழியார் பாலடிசில் பைம்பொற் கலத்தில் பரிந்தூட்ட
உண்ணாநின்ற போழ்தத்தே உதவாமாந்த ரிவர்தாமே.

(சிந்தாமணி.)

விருந்தோம்பாதவன் பொருள் இழந்து வருந்துவான் என்பது இதனால் கூறப்பட்டது.

◆

89 வாடிவந்த நல்லதங்கை வன்பசியைத் தீர்த்திலேளன்
கோடியுடை யாளும் குமரேசா—நாடும்
உடைமையுள் இன்மை விருந்தோம்ப லோம்பா
மடமை மடவார்கண் உண்டு. (௯)

இ—ள்

குமரேசா! அலங்காரி பெரும் பொருளை யுடையவளா யிருந்தும் ஏன் வாடிவந்த நல்லதங்கையின் வன்பசியை மாற்றவில்லை எனின், விருந்து ஓம்பல் ஓம்பா மடமை மடவார்கண் உண்டு என்க.

உடைமையுள் இன்மை = செல்வத்துள்ளே வறுமை.

விருந்து ஓம்பல் ஓம்பா மடமை = விருந்தினரைப் பேணாமல் இகழும் பேதைமை.

மடவார்கண் உண்டு = பேதையார்கண்ணே உளதாம்.

விருந்தினரைப் பேணாமல் இகழும் பேதைமைதான் உடைமையுள்ளே தோன்றுகின்ற வறுமை என்பதும், அதனை அறிவில்லாதவரே உடையராவர். என்பதும் கூறியபடி.

பொருள் இன்மையையே வறுமை என்பர், ஆனால் அதன் உண்மையிலேயும் அஃதுண்டு என்பதும், அதன் இயல்பும், தேவர் இதில் வேறு உணர்த்தினார்.

குருடன் ஒளியுள்ள காலத்தினும் இருளேயுடையவன். அதுபோல் மடையன், பொருளுள்ள காலத்தினும் வறுமையினையேயுடையவன் ஆவன் என்பது குறிப்பு.

ஒளியால் எய்தும் பயனைக் குருடன் தன் குருட்டுத்தன்மையால் எய்தாதவாறு போல், பொருளால் எய்தும் பயனை மடவார் தம் மடத்தன்மையால் அடையார் என்பது கருத்து. மேல், விருந்தோம்பாதவன் பொருள் இழந்து கெடுவான் என்றார். இதில், அக்கேட்டை மடையனே அடைவான் என்றார்.

பொருள் பெற்றால் அதுகொண்டு விருந்தினரை ஓம்பவேண்டுமென்பதும் இல்லையானால் அதன் பயனை யிழந்து தாமும் இழி

வர் என்பதும், இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை அலங்காரி பால் உணரப்படும்.

கதை.

இற்றைக்கு எழுநூறு வருடங்கட்கு முன்னர் வடமதுரையின் அருகில் இருந்த மருவூர் என்னும் நகரில் சாலுவன் என்னும் பெயரினையுடைய குறுநில மன்னன் ஒருவன் இருந்தான். அவன் இளந்துரையென்னும் மனைவியை மணந்தான். இருவரும் மகிழ்ந்து வாழ்ந்தார். இவர்பால் ஒரு புதல்வனும் புதல்வியும் தோன்றினர். நல்லண்ணன், நல்லதங்கை, என்று முறையே அம் மக்கட்குப் பெயரிட்டார். இவ்விருவரும் தமது இளமைப் பருவத்தே தம் பெற்றோரை இழந்தார். தளர்ந்து தேறினர். வளர்ந்து பருவமுற்றபின் நல்லண்ணன் தன் தங்கையைக் காசி மன்னனுக்கு மணமுடித்துத் தந்தான். நல்லதங்கை தன் தமையனிடம் வரிசைகள் பல பெற்று மணமகனுடன் சென்று கலந்து வாழ்ந்தாள். மக்கள் எழுவரைப் பெற்றாள். மிக்க இன்பம் உற்றாள். வருங்கால் அங்குக் கொடிய பஞ்சம் ஒன்று தோன்றிற்று. அதில் மன்னன் தன் பொருள் முழுவதையும் குடிகளுக்கு உதவினன். முடியாமையால் குடிகளும் நாடும் குலைந்து அழிந்தன. மன்னன் வருந்தினன். நல்லதங்கை தனது நாயகனுடன் தன் அண்ணனிடம் வந்து தங்க விரும்பினள். மன்னன் மறுத்தான். மனைவியை மாத்திரம் தேற்றி மக்களுடன் அனுப்பினன். அவளும் பிரிவாற்றாது வருந்தினள். அதன்பின் மக்களையணைத்துச் சென்றாள். காடுகள் பல கடந்தாள் வாடிய மக்களுடன் மருவூர் வந்து சேர்ந்தாள். அவ்வமையம் அண்ணன் வேறூர் போயிருந்தான். அவன் மனைவி மட்டும் மனையில் இருந்தாள். அவள் பெயர் அலங்காரி. மிகக் கொடியவள். வன்மையும், புன்மையும், மடமையும் நிறைந்தவள். பசியால் வாடி, நடையால் மெலிந்து தளர்ந்து தள்ளாடிய மக்களுடன் உள்ளே நுழைந்த நல்லதங்கையைப் பாவி அலங்காரி முகங்கடுத்துப் பார்த்தாள். வா! என்று கூட அவள் வல்வாய் திறந்திலள். அங்கு முன் செல்வமாக வளர்ந்திருந்த

நல்லதங்கை யிதனை யெண்ணி யெண்ணி யுள்ளங்கொதித்தாள். பசியால் கலங்கி அழுது துடிக்கும் மக்களின்பொருட்டு நல்லதங்கை அவள்பால் மெல்லச் சென்றாள். அண்ணீ! இக் குழந்தைகளுக்குக் கொஞ்சம் பழங் கூழேனும் கொடுங்கள் என்று கூறிக் கேட்டாள். படுபாவி அலங்காரி ஒன்றும் கலங்காமல் நின்றாள். மடித்த கேழ்வரகைச் சிறிது எடுத்துக் கடுத்த முகத்துடன் அடுத்து வீசினாள். நல்லதங்கை பாவம்! என் செய்வாள். பிள்ளைகள் புழுவெனத் துடிக்கின்றனர். அதனால் வீசியதையும் கூசாது எடுத்தாள். கூழாக்கினாள். அதில் பெரிதும் நொந்தாள். ஆக்கியதை ஆற்றிக்குடிக்குமுன், அலங்காரி ஆக்கிய கொடுமைகள் பல. அவற்றை நினைந்து மக்களைத் தழுவி விழிநீர் சொரிந்து வெளியேறினாள். ஒரு காட்டில் புகுந்தாள். அங்கோர் பாழ்ங் கிணற்றில் மக்களோடு வீழ்ந்து மாய்ந்தாள். அண்ணனும் கணவனும் இவ்வுண்மையையறிந்தார். அங்கு வந்தார். தாமும் உயிர்விடத் துணிந்தார். இறைவன் அருளால் இறந்தவர் எண்மரும் எழுந்தார். அனைவரும் மகிழ்ந்தார். உடைமை பல வைத்திருந்தும் விருந்தோம்பா மடமையால் அலங்காரி பெருங்கேடடைந்தாள்.

செல்வனாயிருப்பினும் விருந்தோம்பாதவன் வறியனே என்பது இதனால் உணர்த்தப்பட்டது.

* * *

90 பண்டுதக்கன் மாறுபட்டுப் பார்த்தவுடனேயுமையார்
கொண்டார் குழைவென குமரேசா—கண்டெடுத்து
மோப்பக் குழையும் அனிச்ச முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து (வ)

ப—ள

குமரேசா! தக்கன் மாறுபட்டுப் பார்த்தவுடனே ஏன் உமையார் வாடி நீங்கினர் எனின், அனிச்சப்பூ மோப்பக்குழையும், முகம் திரிந்து நோக்க, விருந்தினர் குழைவர் என்க.

அனிச்சம்—ஒருமரம். அது தன்னிடத்தில் தோன்று மலரையீண்டு உணர்த்தி நின்றது.

எடுத்து மோந்தால் அனிச்சம் வாடும், கடுத்துப் பார்த்தால் விருந்தினர் வாடுவர் என்றது, அருமையோடு அவரைப் பேணவேண்டும், என்பது கருதி மலர்வகையில் மென்மையான அனிச்சப்பூவினும் விருந்தினர் மிகமென்மையராதலால் அவரை உள்ளன்போடும் இன்முகத்தோடும் போற்ற வேண்டுமென்பது குறிப்பு.

திரிந்து நோக்கினால் விருந்தினர் வருந்தி மீள்வர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை உமையால் உணரப்படும்.

தக்கன் செய்த அருந்தவத்தின் பெரும்பயனாக உமாதேவியார் அவனுக்குப் புதல்வியாக அவதரித்தார். பருவம் வந்தபின் பரமனைக் கலந்தார். இன்புடன் அங்கிருந்தார். தக்கன் இங்கு உமாபதியை யிகழ்ந்து வெகுளியால் ஒரு வேள்வி செய்தான். உமை அதைக் காணக்கருதினார் பதி தடுத்தார். தேவி பணிந்து நயந்தார். விடைபெற்று வந்தார். பண்டு தமக்குத் தந்தையாயிருந்தவன் அன்று செய்த வல்வேள்வியை அம்மை வந்து கண்டார். காணவுந் தக்கன் கடுத்தான். முகந்திரிந்து நோக்கினான். அம்மை அகந்திரிந்தார். வருந்தினார். வாடிநீங்கினார். வந்து பதியை வணங்கிக் கலந்தார். சென்றதும் நடந்ததும் செய்வதும் தெரித்தார்.

(இதன் விரிவைக் கந்தபுராணத்தில் உமைவரு படலத்தில் உணர்க.)

விருந்தினரை அன்போடும் இன்சொல்லோடும் பேணவேண்டுமென்பது இதனால் கூறப்பட்டது.

இவ்வதிகாரத்தின் தொகைப்பொருள்.

விருந்தினரைப்பேணுவதே இவ்வுலகில் ஒருவன் இருந்துவாழ்வதற்குப்பயன். அமிழ்தமேயெனினும் விருந்திருக்க, ஒருவன் உண்ணலாகாது. விருந்தோம்புவான் வாழ்வு பாழ்படாது. அவன் மனையில் திருமகள் மனமகிழ்ந்து வாழ்வள். அவன் நிலம் தானே விளையும். இங்கு விருந்தினரைப் போற்றினவன் அங்கு தேவர்களால் போற்றப்பெறுவான். தக்க விருந்தைப் பேணினவன் மிக்க பயனையெய்துவான். விருந்தினரை ஓம்பாதவன் பொருளிழந்து பின் வருந்துவான். செல்வனாயிருந்தாலும் விருந்தோம்பாதவன் வறியனேயாவன். அன்பு கலந்த இன் சொலோடு விருந்தினரை உபசரிக்க வேண்டும் என்பனவாம்.

௯-வது விருந்தோம்பல் முற்றிற்று.

௰-ம் அதிகாரம் இனியவைகூறல்.

அஃதாவது இனிய சொற்களைச் சொல்லுதல். விருந்தோம்புவார்க்குப் பொருந்தியிருக்கவேண்டிய திருந்திய குணங்களுள் இனியவைகூறல் நனி சிறந்ததாதலான் இஃது ஈண்டு வைக்கப் பெற்றது. அதிகாரத்தின் தொடர்பும் இதனானே தெளிவாம்.

* * *

91 மாறில் உயர்சவரி வாய்ச்சொல்லை யின்சொலென்று
கூறினார் என்னே குமரேசா—ஊறுகின்ற
இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாஞ்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.

இ—ள்

குமரேசா! சவரியினது வாய்ச்சொல்லை இன்சொல் என்று ஏன் சொன்னார் எனின், ஈரம் அளைந்து படிறு இலவாகின்ற

செம்பொருள் கண்டாரது வாய்ச்சொல்லே, இன்சொல் என்க.

ஆல், அசை.

ஈரம் அளைந்து = அன்பு கலந்து. அளைந்து என்னும் வினையெச்சம் அளைஇ என அளபெடுத்து நின்றது. இது சொல்லிசை அளபெடை. படிறு = வஞ்சனை அஃதாவது உள் ஒன்று வைத்துப் புறம் ஒன்று சொல்லல். செம்பொருள் என்றது அறத்தினை.

அன்போடுகலந்து, வஞ்சனையில்லாத அறமுடையார் வாய்ச்சொல்லே இன்சொல் என்பது கருத்து.

ஏதாவது ஒரு காரணம்பற்றி அன்பு இல்லாத வஞ்ச நெஞ்சினர் வாயிலும் இன்சொல் காணப்படும். ஆயினும், அவற்றை மெய்யென்று கொள்ளலாகாது என்பது குறிப்பு.

அன்பும், மெய்மையும், பொருந்திய அறம்உணர்ந்தார் வாய்ச்சொல்லே யின்சொல் என்பது இதில் உணர்த்தப்பெற்றது. இவ்வுண்மை சவரிபால் உணரப்பெறும்.

கதை

சவரி என்பவள் ஒரு தவ முதுமகள். மதங்க முனிவரது சாரலில் இருந்தாள் முனிவர் பலரும் புகழத்தக்க துறவொழுக்கத்தையுடையவள் உலர்ந்த இலைகளையும், உதிர்ந்த கனி காய்களையுமே தனக்கு உணவாகக்கொண்டு நெடுங்காலம் இந்நிலத்தில் நிலைத்திருந்தாள். ஆருயிர்கள்மாட்டு அன்பும் இன்சொல்லும் அமையப்பெற்றவள். இராமன் கவந்த வனத்தைக் கடந்து சீதையைத் தேடித் தன் தம்பியோடு தளர்ந்து அவ்வழி வருங் காலத்தில் அவரை யெதிர்கொண்டு கண்டாள் அளவில் உவகை கொண்டாள். தனது தவச்சாலைக்கு அவ்விருவரையும் அழைத்துச்சென்றாள். தனது மெய்யுணர்வால் அவர் வருகையை முன்னரே யுணர்ந்து அவர் பொருட்டுத் தொகுத்து வைத்திருந்த இனிய கனிகளையெடுத்துக் கொணர்ந்தாள். முன் வைத்தாள்.

உண்ணும்படி. இராமனைத் தொழுதாள். அன்பு கலந்த இன்சொற்களை மனமுவந்து கூறினாள். சவரி சொன்ன இனிய மொழிகளைச் செவிக்கு உணவாகவும் அவள் தந்த அரிய கனிகளை வாய்க்கு உணவாகவும் இராமர் கொண்டு மகிழ்ந்தார். அதன்பின் கிட்கிந்தைக்கு அவள் கூறியவழியே தம்பியோடு சென்றார். அவளும் அழிவில் இன்பத்தை யெளிதில் எய்தினாள்.

ஆண்டவள் அன்பினேந்தி யழுதிழி யருவிக்கண்ணள்
மாண்டதென் மாயப்பாசம் வந்தது வரம்பில் காலம்
பூண்டமா தவத்தின் செல்வம் போயது பிறவி யென்பாள்
வேண்டிய கொணர்ந்து நல்க விருந்துசெய் திருந்தகாலை.

அனகனும் இளையகோவும் அன்றவ ணுறைந்த பின்றை
வினையறு நோன்பி னாளும் மெய்ம்மையி னோக்கி வெய்ய
துனைபரிக் கதிரோன் மைந்தன் இருந்தஅத் துளக்கில் குன்றம்
நினைவரி தாயற் கொத்த நெறியெலாம் நினைந்து சொன்னாள்.

விட்டினும் கலையவகான மெய்ந்நெறி வெளியிற் றாகக்
காட்டினும் அறிந ரென்ன அன்னவள் கழறிற் றெல்லாம்
கேட்டனன் எம்ப ரன்னே கேள்வியால் செவிகள் முற்றும்
தோட்டவர் உணர்வி னுண்ணும் அமுதத்தின் சுவையாய்நின்றான்.

(இராமாயணம்)

இன்சொல் இயல்பு இதனால் உணர்த்தப் பெற்றது.

92. கண்டு முகமலர்ந்து கண்ணன் குசேலரையேன்
கொண்டினிமை செய்தான் குமரேசா—அண்டி
அகனமர்ந் தீதலின் நன்றே முகனமர்ந்
தின்சொல னாகப் பெறின். (உ)

-ள.

குமரேசா! கண்ணன் முகமலர்ந்து எதிர்கொண்டு குசேலரை யேன் இன்சொல்லால் உபசரித்தான் எனின், அகன் அமர்ந்து

ஈதலினும் ஒருவன் முகன் அமர்ந்து இன்சொலன் ஆகப்பெறின் நன்று என்க.

அகன் அமர்ந்து=மனம் உவந்து.

முகன் அமர்ந்து=முகமலர்ந்து.

அமர்தல் என்பது பொருந்தல், விரும்பல், பொலிவு முதலிய பல பொருள்களை உணர்த்தும் ஒரு சொல். இனியமுகமும் இன்சொல்லும் ஒருவனுக்கு ஒருங்கே அமைதல் அருமை என்பது கருதி, பெறின் என்றார்.

மனம் உவந்து பொருள் கொடுத்தலினும், முகமலர்ந்து இன்சொற் சொல்லுதல் இல்வாழ்வானுக்கு நல்லது என்பதாம்.

ஈதலை மனமகிழ்ந்து செய்தல் வேண்டும் என்பதும், இன்சொல்லை முகமலர்ந்து கூறல் வேண்டும் என்பதும், கூறியபடி.

அகம் உவகையாலும், பொருள் ஈகையாலும், முகம் நகையினாலும், மொழி இனிமையாலும், பெருமை எய்தும் என்க.

ன் நன்று’ என்பதில் ஒப்புப்பொருளுந் தோன்றும். பொருளுடையவர் தானம்செய்து அதனால் எய்தும் பயனை அஃதில்லாதவர் இன்சொல்லால் இனிது எய்தலாம் என்பது குறிப்பு.

ஈதலினும் இன்சொல்லே நன்று என்பது இதில் காட்டப் பெற்றது. இவ்வுண்மை கண்ணன்பால் காணப்பெறும்.

கதை.

திருமாலின் ஓர் அவதார மூர்த்திக்குக் கண்ணன் என்று பெயர். இற்றைக்கு ஐயாயிரத்து ஐம்பது வருடங்கட்கு முன்னர் வடமதுரையில் வசுதேவருக்கும் தேவகிக்கும் புதல்வராய்த் தோன்றினார். கோகுலத்தில் நந்தகோபன் என்னும் இடையர் தலைவன் வீட்டில் வளர்ந்தார். விநோதமான பல்வகை யற்புதங்களைச் செய்து இளமைப் பருவத்தில் இவர் எல்லாருக்கு மகிழ் ஊட்டி வந்தார். இவரது தோற்றம் நடை உடை செயல் மொழி

எல்லாம் இன்பகரமானவை. பருவமுற்றபின் வடமதுரையைத் தனக்கே உரிமையாகப் பெற்றார். அதன்பின் மேல்கடலிடையே அருமையான பெரிய நகரம் ஒன்றை அமைத்தார். அதற்குத் துவாரகை யென்று பெயர். அதன் பெருவளத்தால் குடிகள் பல குழுமின. உயர்நலமுற்றன. எண்ணரிய சிறப்புடன் கண்ணன் அதிலிருந்து அரசு புரிந்தார். புரியுங்கால் இவரது பள்ளித்தோழராகிய குசேலர் வறுமையால் வாடி இவரை நாடிவந்தார். அவ்வமையம் சிறந்த அரண்மனையில் உயர்ந்த ஆசனத்தில் சத்தியபாமை உருக்குமணி முதலிய பத்தினிமார்கள் புடைசூழ மிக்க மகிழ்வுடன் கண்ணன் வீற்றிருந்தார். குசேலர் வருகையைக் கண்டவுடனே தமது இனிய மனைவிமார் அனைவரையும் விடுத்துத் தனியே யெழுந்தார். விரைந்தெதிர்சென்றார். மெய்யன்போடு முகமலர்ந்து தொழுதார். தழுவினார். இனியமொழிகள் பல இன்புற இயம்பினார். அரண்மனைக்குள் அழைத்துக் கொணர்ந்தார். மணியிழைத்த ஓர் அரியாதனத்தில் இருத்தித் தந்துணைவிகளோடு பெரிதும் உபசரித்தார். கண்ணன் இனியமுகத்தையும், இன்சொல்லையும், அன்புறு செயலையும் கண்டும், கேட்டும், பெற்றும், குசேலர் கழிபேருவகை பூத்தார்.

(இதன் விரிவைப் பாகவத முதலிய நூல்களில் உணர்க.)

எண்ணானைக் கிலங்கு மார்பம் ஈந்தருள் பிரானை நீல
வண்ணனைத் திகிரி சங்கம் வலமிட முறக்கொண்டானை
மண்ணனைத் தும்புரக்கும் வாசுதே வனைமனைக்கும்
கண்ணனைத் துளவத் தாமக் கண்ணனைக் கண்ணிற் கண்டான்.

காண்டலும் உவகை பூத்துக் கால்விசை கொடு நடந்தான்
ஆண்டகை யானுங் கண்ணுற் றணையுடைத் தெழுநீத் தம்போல்
நீண்டபூம் பள்ளிநீத்து நிலவுபே ரன்பு பொங்கப்
பூண்டமா தவன்முன் சென்றுபொன்னடி வணங்கினானால்.

மன்னுடைய மறையனைத்தும் வகுத்துணர்ந்த மாதவனே
யுன்னுடைய தரிசனத்தால் உடம்புபூரித் தனன்யான்
மின்னுடைய விளங்கொளிவேல் வேந்தருளுந் தேவருளும்
என்னுடைய பெறலரும்பே றியார்பெற்றார் யார்பெறுவார்.

இவை குசேலரைக் கண்டபொழுது கண்ணன் சொல்லிய இன்சொற்கள். (குசேலோபாக்கியானம்.)

இனிய முகத்தோடு இன்சொற் சொல்லுதல் இல்வாழ்வானுக்கு மிகவும் நல்லது என்பது இதனால் கூறப்பெற்றது.

93. கண்டான் இனிதாகக் கண்ணனையேயன் இன்சொலுடன்
கொண்டான் விதுரன் குமரேசா—கொண்டு
முகத்தான் அமர்ந்தினிது நோக்கி யகத்தானாம்
இன்சொ லினதே யறம். (௩

குமரேசா! விதுரன் என் கண்ணனை இனிதாக நோக்கி இன்சொல்லால் போற்றினான் ஆதலின், முகத்தான் விரும்பி இனிதாக நோக்கி அகத்தான் ஆம் இன்சொலினதே அறம் என்க.

அகத்தான் ஆம் இன்சொலினதே அறம்—மனத்தோடு பொருந்திய இனிய மொழிகளைச் சொல்லுதலின் கண்ணதே அறம்.

மேல், ஈதலினும் இன்சொல்லே நன்று என்றார்; ஈதல் அறம் அன்றோ? அதனினும் இன்சொல் எங்ஙனம் நன்றாம், என்பாரை நோக்கி யிது கூறினார்.

ஈதலாலும், இனியது கூறலாலும், அறம் உண்டாம் எனினும், முன்னது, இழிந்தாரிடத்துந் தங்கி மறம்புரிதற்கும் துணைபுரிந்து நிற்கும் பொருள் வயத்ததாம். பின்னது, உயர்ந்தாரிடத்தே தோன்றி அறம் ஒன்றையே வளர்க்கும் அருள்வயத்ததாம். ஆதலால் "இன்சொலினதே அறம்" என்று எடுத்துக் கூறினார். ஏகாரம்

ஆயின், இன்சொல்லே அமையும், ஈதல் வேண்டாவோ எனின், அன்பு கலந்த இன்சொல்லுடையார் என்னையும் பிறர்க்கு இன்புற ஈவர் ஆதலால், அவர்பால் அஃது இயல்பாகவே அமைந்திருக்குமென்க.

இன்சொல்லோடுகூடிய ஈதலே அறமாம் என்பது கருத்து. அகமகிழ்ந்து, முகமலர்ந்து, இனிது நோக்கி, இன்சொல் மொழிந்து விருந்தினரைப் பேணவேண்டுமென்பது இதில் உணர்த்தப்பெற்றது. இவ்வுண்மை விதுரன்பால் உணரப்பெறும்.

கதை.

விதுரன் என்பவன் இற்றைக்கு ஐயாயிரவருடங்கட்கு முன்னர் அத்தினபுரியில் திருதராட்டிரன் தாயாகிய அம்பிகையின் தோழிவயிற்றில் வியாசர் அருளால் பிறந்தவன். திருதராட்டிரன் பாண்டு என்னும் அவர்களுக்குத் தம்பியானவன். இவன் யமனுடைய அமிசம். சிறந்த வில்வீரன். சிறியதந்தையாயும், மந்திரியாயும் இருந்து துரியோதனனுக்கு உதவிபுரிந்து வந்தான். நல்ல குணங்களெல்லாம் இயல்பாகவே அமையப்பெற்றவன். கண்ணன் பாண்டவர்களுடைய தூதனாய் அத்தினபுரிக்கு வந்த காலத்தில் அரசனான துரியோதனன் அவனைச் சிறிதும் மதியாமல் மனச்செருக்குற்று இருந்தான். இவன் மாத்திரம் அரச சபையை விட்டெழுந்து அன்போடு கண்ணனை யெதிர்கொண்டு சென்றான். இனிதாகக் கண்டான். அகமகிழ்ந்து தொழுதான். மெய்யன்புடன் இனிய பலமொழிகள் அவர் இன்புறக் கூறினான். தண்ணளி ததும்பிய கண்ணனைத் தமது இல்லில் எழுந்தருளச் செய்தான் அதன்பின் அமுதனைய வுணவை விரைவில் ஆக்கி விருந்து செய்தான். கண்ணன் உண்டுகளித்தான். விதுரனது உள்ளன்பை உணர்ந்தும், விருந்தின் திறத்தை வியந்தும், முகனமர்ந்து கூறிய அவனது இனியமொழிகளைக் கேட்டும் கண்ணன் பெருமகிழ்வு கொண்டான். விதுரன் அறமுடையனாய் அருள்நிலையுற்றான்.

இதன் விரிவைப் பாரதத்தில் உணர்க.

உள்ளினன் உணர்ந்துள்ளமும உருகினன எழுந்து
துள்ளினன் விழுந்திணையடி சூடினன் துயரைத்
தள்ளினன் மலர்த்தடக்கையால் தத்துவ அமுதை
அள்ளினனெனக் கண்களால் அருந்தினன் அளியோன்.

முன்னமேதாயின் றருளிய முதுபயோ ததியோ
பன்னகாதிபப் பாயலோ பச்சையா லிலையோ
சொன்ன நால்வகைச் சுருதியோ கருதிநீ யெய்தற்
கென்னமாதவஞ் செய்தது சிறுகுடில் என்றான். (பாரதம்.)

கண்ணனைக் கண்டகாலத்தில் விதுரன் இன்சொல்லோடு அகனமர்ந்து காட்டிய அன்பின் திறம் இவற்றால் நன்கு தெளிவாம்.

இன்சொல்லே, சிறந்த அறம் என்பது இதனால் கூறப்பெற்றது.

* * *

94. ஏதச் சிறையிருந்தும் இன்சொற் புகழேந்தி
கோதற்றேன் துய்த்தார் குமரேசா—தீதற்ற
துன்புறூஉம் துவ்வாமை யில்லாகும் யார்மாட்டும்
இன்புறூஉம் இன்சொ லவர்க்கு. (௪)

இ—ள்.

குமரேசா! இனிய சொல்லையுடைய புகழேந்தி யென்னும் புலவர் தலைவன் சிறைப்பட்டிருந்தும் என் சுவைநிரம்பிய வுணவுகளைத் துய்த்தார் எனின், யார்மாட்டும் இன்பத்தை உறுவிக்கும் இன்சொல்லையுடையவர்க்குத் துன்பத்தை மிகுவிக்கும் துவ்வாமைஇல்லாகும் என்க. துவ்வாமை=வறுமை.

துவ்வல்=அனுபவித்தல். அஃது இங்கு எதிர் மறையாய் நின்று வறுமையை யுணர்த்திற்று.

மேல், இன்சொல்லே அறம் என்றார், ஆயின், அதன் பயனாகிய இன்பத்தை அவ் இன்சொல்லையுடையவர் அடைவரோ! என்பாரை நோக்கி யிது கூறினார்.

இன்பத்தை மிகுவிக்கும் இன்சொல்லையுடையார்க்குத் துன்பத்தை மிகுவிக்கும் துவ்வாமை உண்டாகாது என்பது கருத்து.
யவை கூறுவார், வறுமை கூறார் என்பது குறிப்பு.

இன்சொல்லையுடையவர் என்றும் எவ்விடத்தும் இன்புறுவர் என்பது இதில் உணர்த்தப் பெற்றது. இவ்வுண்மை புகழேந்திபால் உரைப்பெறும்.

கதை.

புகழேந்தி என்பவர் தொண்டை மண்டலத்திலே பொன்விளைந்த களத்தூர் என்னும் ஊரிலே வேளாளர் குலத்திலே பிறந்தார். பல நூல்களையும் பயின்று இளமையிலேயே யிவர் புலமை நிரம்பினார். புகழுக்குரிய குணங்கள் பலவும் பொருந்தப் பெற்றார். இஃது அவர் பெயரானமை தெளிவாம். இவர் காலம் இற்றைக்கு ஏறக்குறைய ஆயிரவருடங்கட்கு முன்னராகும். அக்காலத்தில் மதுரையிலிருந்த பாண்டிய மன்னன் இவரை விரும்பிப் போற்றிவந்தான். வருங்கால் தனது அருமைப் புதல்விக்கும் குலோத்துங்க சோழனுக்கும் திருமணம் நிகழ்ந்தது. மருகனிடம் மகளை அவன் நகரத்துக்கு அனுப்புங்கால் மன்னன் தன் புதல்விக்கு ஆதரவாகப் புகழேந்தியையும் உடன் அனுப்பினான். அரசிளங்குமரியும் மனமகிழ்ந்து சென்றாள். சென்று சேர்ந்தபின் அங்கு அரசகுருவாயிருந்த ஒட்டக்கூத்தர் என்னும் புலவர் தலைவனுக்கும் புகழேந்திக்கும் பகைமை விளைந்தது. கூத்தர் மதிநலமும் வன்குணமும் வாய்ந்தவர். புகழேந்தி மனநலமும் இன்குணமுமுடையவர். இவ்விருவருக்கும் இடையே தோன்றிய பகைமை நாளுக்கு நாள் அதிகரித்து வளர்ந்தது. அதனால் அரசன் அன்பைத் தனக்கு முழுதும் உரிமையாக்கொண்டிருந்த கூத்தர் நமது புகழேந்தியைச் சிறைப்படுத்தினார். இனிய உணவொன்றும் அங்கு இடாதபடி செய்தார். ஆயினும் நமது புலவர்பெருமான் தமது இனியமொழிகளால் அமுதனைய வுணவை நாளும்பெற்று நன்குதுய்த்தார். அனைவரும் இவர்பால் அன்புற நடந்தார். சிறைக்கூடத்தின் அருகே தண்ணீர்க்குச்செல்கின்ற பெண்கள் உணரும்படி பழைய கதைகளை எளிய நடையில் இனிமையாகப் பாடினார். அவைதாம் இதுபொழுது வழங்கிவருகின்ற, அல்லியரசாணிமாலை, பவழக்கொடிமாலை, என்பன. இவரது விழுமிய நளவெண்பாவுக்கும் இவற்றிற்கும் பெரிதும் வேறுபாடு உண்டு. இவர் இன்புறுகின்ற

இன்சொல்லை எவரிடமும் உடையவர். கூத்தரும் இவரதுபெருந்தன்மையை யுணர்ந்து தான் கொண்டிருந்த பகைமையை நீக்கினார். உவகையோடு உறவு பூண்டார். இன்புறும் இன்சொல்லையுடையார்க்குத் துன்புறும் துவ்வாமை இல்லை என்பதை உலகம் இவர்பால் உணர்ந்தது. (விரிவை இவர் சரிதத்தில் உணர்க)

இன்சொல்லுடையார்க்கு வறுமை யில்லை என்பது இதனால் கூறப்பெற்றது.

95. பண்டேன் இன் சொல்லும் பணிவும் அணியாக்
கொண்டான் அனுமான் குமரேசா—கொண்ட
பணிவுடையன் இன்சொல னாத லொருவற்
கணியல்ல மற்றுப்பிற. (௫)

இ—ள்.

குமரேசா! அனுமான் பணிவையும் இன்சொல்லையும் என் அணியாகக் கொண்டான் எனின், பணிவு உடையன் இன்சொலன் ஆதலே ஒருவனுக்கு அணி என்க.

பிற அல்ல=மற்றவை அணிகளாகா.

பிற வந்ததினால மற்று அசையாய் நின்றது.

பிற என்றது பொன் மணி முதலியவற்றால் உளவாம் அணிகளை. உடல் அழகுறும்படி அணியும் பொய்யணியினும் ஒருவனுக்குச் சிறந்த மெய்யணி இனிய மொழியும், பணிவுடைமையுமே யாம் என்பது கருத்து. அணி உடற்கு அழகு செய்வதுபோல் இவை உயிர்க்கு அழகு செய்யும் என்க. ஒருவன் மெய்யினும், வாயினும் அமைந்திருக்கவேண்டிய நலங்களை யிதில் உணர்த்தினார். இனியவை கூறலே இங்கு உரிமையாயினும் அதற்கு இனமாதலால் பணிவையும் உடன் கூறினார்.

இனிய மொழியையும், பணிவையுமே ஒருவன் தனக்கு அழகாகக் கொள்ளல்வேண்டும் என்பதும், இவ்வணிகளையுடைய வரையே யுலகம் நனி விரும்பும் என்பதும் இதில் உணர்த்தப்பெற்றது. இஃது அனுமான்பால் உணரப்பெறும்.

கதை.

அநுமான் என்பவன் வாயுவின் மகனாய் இவ்வுலகில் அவதரித்த ஒரு வானரவீரன். தாய் பெயர் அஞ்சனை. தந்தை கேசரி. கிட்கிந்தை நகர சாரலில் சுக்கிரீவனோடு அநுமான் தங்கியிருந்தான். அவ்வமயம் இராமர் அங்கு வந்தார். அவரைக் கண்டவுடனே அநுமான் பேரன்பு கொண்டான். உள்ளம் உருகினன். பணிந்து தொழுதான். அன்புறு மொழிகளை யின்புறக் கூறினன். அவனது பணிவுடைமையையும் இன்சொல்லையும் கண்டு இராமர் பெருமகிழ்வுற்றார். தனக்கு உயிர்த் துணையாக உடன் கொண்டு சென்றார். அதன் பின் அநுமான் புகழ் உலகெங்கும் உயர்ந்தோங்கியது. அறிவு, ஒழுக்கம், ஆண்மை, வீரம், பொறுமை, அடக்கம் அன்பு, பணிவு முதலிய உயர் குணங்களெல்லாம் ஒருங்கே அமையப் பெற்றான். சொல்வன்மையில் எவரும் தனக்கு நிகரில்லாதவன். எத்தகைய அரிய காரியங்களாயினும் எளிதில் முடிக்கும் இயல்பினையுடையவன். இவனது குணங்கள் முழுவதையும் இராம சரிதமாகிய காவியவுலகில் இன்புறக் காணலாம். அங்கு அவை உயிர் பெற்று ஒளிவீசி யுலாவுகின்றன. அவற்றுள் இவன் பணிவுடைமையைப் பல இடங்களிலும் நலமுறக் காணலாம்.

தண்ணளியி னல்மிகு தயாவுடைமை யால்வரு தருக்கறுத லால்
என்றுநரு பங்களினை யாவுமிலை யுற்ற இயற்று மியல்பால்
நன்னலனை விண்ணவர்க ளாயினும் நடுங்குறு மிடுக்குடைமையால்
மண்ணுலகில் விண்ணுலகில் மாருதியை யொக்குமவர் யாருமிலையால்.
(அநுமப்படலம்.)

இனிய மொழியும் பணிவுமே ஒருவனுக்கு உயிரணி என்பது இதனால் உணர்த்தப் பெற்றது.

96. நன்றான நீதிகளை நாடிப்பயன் சூதமுனி
குன்றுமற் சொன்னார் குமரேசா—குன்றாத
அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை
நாடி யினிய சொலின். (அ)

குமரேசா! சூதமுனிவர் தவஞ்செய்யாமல் நீதிக்கதைகளையே என் ஓதிக்கொண்டிருந்தார் எனின், நல்லவை நாடி இனிய சொலின், அல்லவை தேய அறம் பெருகும் என்க.

அல்லவை=அறம் அல்லாதவை: பாவங்கள் என்றபடி.

மேல், இன்சொல்லே உயிர்க்கட்டு உயர்ந்த அணி என்றார். இதில், அதனை யுடையார்க்கு உளவாம் பயனை உணர்த்தினர்.

பிறர் நலமுற இனிய மொழிகளைச் சொல்லுகின்றவனுக்கு அறம் பெருகும் என்பதாம்.

“விளக்குப் புக இருள்மாய்ந் தாங்கு ஒருவன் தவத்தின்முன் நில்லாதாம் பாவம்” என்றதனால் தவம் ஒன்றே அல்லவைத் தேய்க்கவும் அறத்தை வளர்க்கவும் வல்லது. அதன் பயனை இனியசொல்லையுடையார் எளிதில் எய்துவா ரென்பது கருத்து.

விரதங்காத்து வருந்திச் செய்யத்தக்க தவத்தின் பயனை இனிய சொல்லால் ஒருவன் எளிதில் எய்துவான் என்பது இதில் உணர்த்தப் பெற்றது. இது சூதமுனிவர்பால் உணரப்பெறும்.

கதை.

சூதமுனிவர் என்பவர் உரோமகருணர் என்று பெயர் பெற்றிருந்த ஒரு மாதவன் புதல்வர். வியாச முனிவரது மாணவர் பலருள் முதன்மை வாய்ந்தவர். இதிகாசங்கள் புராணங்கள் முதலிய பல நூல்களையும் வழுவறக் கற்றவர். சிறந்த சொல்வன்மை யுடையவர். சவுனகர் முதலிய முனிவர் பலர்க்கும் வேத மந்திரங்களையும் நீதிமுறைகளையும் ஓதிவந்தார். அரிய பொருள்களையெல்லாம் புராணக் கதைகளிற் பொருத்தி எளிய முறையில் எவர்க்குந் தெளிவாகப் போதித்தார். உதங்கர் முதலிய சீடர் பலரையும் இவர் உடையராயிருந்தார். இவருடன் இருந்த முனிவர் பலர் அருந்தவம் புரிந்தார். சிலர் விரதங்கொண்டு மோனமுற்றிருந்தார் இவர் மட்டும் நீதிகளை ஆராய்ந்து பிறர் இன்புற இனிதாகச்சொல்

ர். இவரது இனிய சொல்லால் தெளிந்து நன்மையடைந்த அரசரும் முனிவரும் பலராவர். செல்லுமிடமெல்லாம் புராண படனமே இவர் செய்தார். பாண்டவர்களும் இவருடைய ஆச்சிரமத்தில் சிலகாலம் தங்கியிருந்தார். இவரது இனிய சொல்லால் அவர்தங் கவலை நீங்கினர். பிறர் வருந்திச் செய்த தவத்தின் பயனையிவர் இன்சொல்லால் முழுதும் பெற்றார். நல்லனவை நாடி இனிய சொலின் அல்லவை தேய அறம் பெருகும் என்பதை உலகம் இவர்பால் உணர்ந்தது. (இதன் விரிவை பாரத கதையில் உணர்க.) இன் சொல்லால் அறம் வளரும் என்பது இதனால் கூறப்பட்டது.

97. தேடியசீர்ச் சேக்கிழார் செப்பியவோர் சொல்லாலென்
கோடி நலம் கொண்டார் குமரேசா—நாடும்
நயனீன்று நன்றி பயக்கும் பயனீன்று
பண்பிற் றலைப்பிரியாச் சொல். (எ)

இ—ள்.

குமரேசா! சேக்கிழாரது ஒருசொல்லால் என் பல நலங்களைப் பயந்தது எனின், பயனை ஈன்று பண்பின் தலைப்பிரியாச் சொல் நயன் ஈன்று நன்றி பயக்கும் என்க.

பண்பின் தலைப்பிரியாச்சொல்—இனிமையாகிய குணத்தில் நின்றும் நீங்காத சொல். இன்சொல் என்றபடி.

தலைப்பிரிதல்—நீங்குதல். நயன்ஈன்று நன்றிபயக்கும்—நன்மையை யுண்டாக்கி அறத்தையும் கொடுக்கும்.

பயன் பொருந்திய இனிய சொல்லால் ஒருவனுக்கு நயனும் நன்றியும் உளவாம் என்பது கருத்து. ஒருவன் சொல்லுகின்ற மொழியில் இனிமையும், அதன் பொருளில் பிறர்க்கு ஏதாவது ஒரு பயனும், அமைந்திருத்தல் வேண்டுமென்பது குறிப்பு.

பயனுடைய இன்சொல்லால் ஒருவன் அறமும் இன்பமும் அடைவான் என்பது இதில் உணர்த்தப்பெற்றது. இவ்வுண்மை சேக்கிழார்பால் உணரப்பெறும்.

கதை

சேக்கிழார் என்பவர் தொண்டை மண்டலத்திலே குன்றத்தூர் என்னும் ஊரிலே வேளாளர் குலத்திலே தோன்றினார். பல கலைகளையும் பயின்று இளமையிலேயே மிகவும் புலமை நிரம்பினார். மதிநலத்தோடு பண்புடைமையும் அமையப்பெற்றார். அக்காலத்தில் அரசாண்டிருந்த அநபாய சோழன் இவர் தந்தையாராகிய குன்றத்தூர் முதலியார் என்பவரை நோக்கி "இவ்வுலகினும் பெரியது எது" என்று விளையாட்டாக ஒருநாள் வினவினார். முதலியார் விடைகூற முடியாமல் விரைந்து போந்தார். நிகழ்ந்ததை நினைந்து நெடுங்கவல் கொண்டார். தந்தையின் வாடிய முகத்தை யிம்மைந்தனார் கண்டார் உற்றதை வினவியுணர்ந்தார். "காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப்பெரிது" என்ற குறளையே அவ்வினாவிற்கு விடையாக இவர் விடுத்தார். மன்னன் கேட்டு மகிழ்ந்தான். இவரது மதிநுட்பத்தை வியந்தான். அதன் பின் இவரைத் தனக்கு அமைச்சராக அமைத்தான். இவரும் அமைந்து அமைச்சியல் புரிந்தார். புரியுங்கால் இன்சொல்லொடு எவரிடமும் அன்பு செய்தார். பொருளில் மொழியை இவர் ஒருபொழுதும் புகலார். பயனும் பெரிய நயனும் மொழிந்தார். அதனால் இவரை "அருண்மொழித்தேவர்" என்று அரசனும் அழைத்தார். இனிய பாவில் நாயன்மார் சரிதையை நன்குபாடினார். அது பெரியபுராணம் என்னும் பேர் பெறுகின்றது. பயன் பொருந்திய இன்சொல்லால் இவர் பல நலம் பெற்றார்.

(விரிவை சரித்திரத்தில் உணர்க)

இனிய சொல்லால் அறமும் இன்பமும் உளவாம் என்பது இதனால் கூறப்பெற்றது.

98. தீதகலின் சொல்லால் திரிசடையேன் இன்பமெல்லாம்
கோதகலக் கொண்டாள் குமரேசா—ஓதும
சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பந் தரும். (அ)

இ—ள்.

குமரேசா! இருமையின்பத்தையுந் திரிசடை என் இன்சொல்லால் எய்தினள் எனின், சிறுமையுள் நீங்கிய இன்சொல் இம்மையினும் மறுமையினும் இன்பந்தரும் என்க.

சிறுமை=புன்மை. உள்—ஐந்தாம் வேற்றுமையுருபு. அது நீக்கப்பொருளை உணர்த்தி நின்றது.

சிறுமையுள் நீங்கிய இன்சொல்=புன்மையில் நின்று நீங்கிய இன்சொல். அஃதாவது பிறர் இன்புறத்தக்க இனியசொல்.

நன்மொழிகளை இனிமையாகச் சொல்லுகின்றவர்க்கு இருமையினும் இன்பம் உண்டாம் என்பது இதில் உணர்த்தப்பெற்றது. இவ்வுண்மை திரிசடையால் உணரப்பெறும்.

கதை.

திரிசடை என்பவள் வீடணன் திருமகள். மெய்யுணர்வுடையவள். இராவணன் அசோகவனத்தில் சீதையைச் சிறைவைத்திருந்த காலத்தில் தன் தம்பிமகளாகிய இவளை அந்த அம்மைக்குத் துணையாக உடன் இருத்தினான். உடனிருந்த அரக்கியர் பலரும் இரக்கம் இல்லாமல் வன்சொல் வழங்கிச் சீதைக்குத் துயரஞ் செய்தனர். இவள் மாத்திரம் சிறுமை நீங்கிய இனிய சொல்லால் சீதையை நாளும் நன்கு தேற்றினாள். இவளது அன்புடைமையையும் இன்சொல் நலத்தையும் அனுமான் அடிக்கடி புகழ்ந்து போற்றினார். அரக்கியரனைவரும் துயிலுற்ற பின்னர் இராமபத்தினியவளிடம் சிலமொழிகள் கூறித் தேற்றினார். இவளது குணநலங்கண்டு தன் தாயென்றே கொண்டார். வன்சொற்கூறிய அரக்கியர் பலரும் மாய்ந்தார். தன் தந்தை அரசுரிமைபெற இவள் பின் இருமை இன்பமும் பெற்றாள். (விரிவு சரிதையில் விளங்கும்)

இருமையினும் இன்சொல் இன்பந்தரும் என்பது இதனால் கூறப்பெற்றது.

99. மாறில் விதுரனின்சொல் மாண்புகண்டு மன்னவனேன்
கூறினன் வன்சொல் குமரேசா—கூறுகின்ற
இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது. (கூ)

குமரேசா! விதுரன்கூறிய இன்சொல்லைக்கேட்டுணர்ந்தும் என் வன்சொல்லைத் துரியோதனன் வழங்கினன் எனின், இன்சொல் இனிது ஈன்றல் காண்பான் வன்சொல் வழங்குவது யாது பயன் கருதியோ என்க.

வன்சொல் வழங்குவது—வன்சொல்லைச் சொல்வது.

பிறர் கூறுகின்ற இன்சொல் தனக்கு இன்பந்தருதலைத்தான் அனுபவித்தறிந்தும் அதனைவிடுத்து ஒருவன் வன்சொல்லைச் சொல்வது என்னபயனைக் கருதியோ யான் அறிகிலேன் என்று தேவர் ஐயமுறக் கூறியது அவனது அறியாமைக்கு இரங்கி யென்க.

வன்சொல் வழங்குவது தீதென்று வேதம் விதித்துள்ளது அதனை நூலறிவால் தெளிந்து விலகவேண்டும். அஃதியலாவிடினும் அனுபவத்தால் உணர்ந்தபின்னரேனும் அதனை ஒழிக்கவேண்டும். அங்ஙனம் உணர்ந்திருந்தும் ஒருவன் அதனை வழங்குவானாயின் அவனறிவு பயனற்றது என்பதாம். வன்சொல்லைச் சொல்லுதல் அறிவுடைமைக்கு அழகன்றென்பது குறிப்பு.

இன்பம்பயக்கும் இன்சொல்லை விடுத்துத் துன்பம் பயக்கும் வன்சொல்லை ஒருவன் சொல்வது அவன் துன்புறுதற்கு ஏதுவாம் என்பது இதில் உணர்த்தப்பெற்றது. இவ்வுண்மை துரியோதனன்பால் உணரப்பெறும்.

கதை.

கண்ணன் அத்தினபுரிக்குத் தூதாகவந்த காலத்தில் விதுரன் எதிர்சென்று உபசரித்து அவரைத்தமது இல்லில் எழுந்தருளச் செய்து அவருக்கு உரியதோர் விருந்தை உவந்து செய்ததைத் துரி

யோதனன் தெரிந்து சினந்தான். அதுகாரணமாக அரச சபையில் வைத்துத் தனது சிறியதந்தை யென்பதையும் பாராமல் வைதான். விதுரன் கூறிய இன்சொற்களால் இன்புற்றிருந்தும் துரியோதனன் வன்சொற்களையே வழங்கினான். பொது மகள் மகன் என்றும் புல்லியன் என்றும் செவிகைக்குப்படியான பல வசை மொழிகளைவாரி யிறைத்தான். அதனால் வெறுப்புற்ற விதுரன் தனது வெற்றிவில்லை இற்றாக முறித்தான். அவனை இளிவாக நினைத்து வெளியேபோனான். வில்வலியிற் சிறந்த விதுரனது உதவியையிழந்ததனால் அவன் பெருந்துயருழந்தான். பின்பேதுற்றிறந்தான்.

ன்சொல்லை ஒருவன் கூறலாகா தென்பது இதனால் கூறப்பெற்றது.

100. என்னே சிசுபாலன் இன்னாத கூறியுடன்
கொன்னே மடிந்தான் குமரேசா—அன்றோ
இனிய வுளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று. (ய)

இ—ள்.

குமரேசா! சிசுபாலன் இன்னாதனகூறி ஏன் உடனே மடிந்தான் எனின், இனியமொழிகள் உளவாக இன்னாதனகூறல் கனிகள் இருப்பக் காய்களைக் கவர்ந்ததனோடு ஒக்கும் என்க.

இன்னாதசொல்=வன்சொல்.

இனிய இன்னாத என்பன பெயர் எச்சங்கள். இனி, வினையாலணையும் பெயராகவும் இவை கருதப்படும்.

தன்னிடத்தில் இனிய சொற்கள் உளவாயிருப்ப, அவற்றைக் கூறாமல் இன்னாத சொற்களை ஒருவன் கூறுதல், எதுபோல்வது எனின், இன்பம் பயக்கும் இனிய கனிகளை நுகராமல், துன்பம் பயக்கும் கடியகாய்களைத் தின்றல் போல்வதாம் என்க.

இன்பமே விரும்பும் இயல்பினையுடைய மக்கள் அதனைப்பயக்கத்தக்க இன்சொல்லை விடுத்து, துன்பம் பயக்கத்தக்க வன்சொல்லைச் சொல்லுவது பெரும்பேதைமையாம் என்பது கருத்து.

நச்சுக்காய்களை யுண்டவன் நாசமுறுதல்போல் வன்சொற்களைச் சொல்பவன் மாசடைந்து மாய்வன் என்பது குறிப்பு. இவ்வுண்மை சிசுபாலன்பால் தெளியப்படும்.

கதை.

சிசுபாலன் என்பவன் சாத்துவதிக்குப், தமகோடன் என்பவனுக்கும் புதல்வனாய்த் தோன்றினான். கண்ணனுக்கு இவன் மைத்துனனாவன். மிக்க வலிமை யுடையவன். இவன் பிறவி மிக்க அற்புத முடையது. மூன்று கண்களும் நான்கு கைகளும் இவன் மேனியில் பொருந்தி யிருந்தன. தாயும், தந்தையும், இவனது விகாரவுருவத்தைக் கண்டார். பெருங்கவலை கொண்டார். அவ்வமயம் எவர் மெய்யைத் தீண்டுப்பொழுது ஒரு கண்ணும், இரண்டு கைகளும் மறையுமோ அவரே இவனைக் கொல்லும் பகைவர், என்று அசரீரியாக ஆகாயத்தில் ஓர் ஒலி ஒலித்தது. அதனைக் கேட்ட பெற்றோர் பலரிடமும் இவனை வைத்துச் சோதித்துப் பார்த்தார். ஒருவர்பாலும் அவ்வுண்மை நிகழவில்லை. முடிவில் கண்ணன் மடியில் இவனைக் காணும்படி வைத்தார் உடனே அதிகமாயிருந்த கண்ணும் கைகளும் மறைந்தன. வடிவழகோடு மடியில் விளங்கினான். பெற்றோர் பேருவகையுற்றார். இவன், பிழை நூறு செய்யினும் பொறுத்தருளல்வேண்டுமென்று கண்ணனை வேண்டினர். கண்ணனும் இசைந்தான். பருவங்கள் பல கடந்தன. பின்னர்த் தருமரது இராஜசூய யாகத்தில் இவன் கண்ணனையிகழ்ந்தான். இன்னாதன பல கூறினான். பிழைகள் வரம்புக்கு மீறின. கண்ணனும் கண்ணோடாமல் இவனைக் கொன்றார். வன்சொல் உடையான் கெடுவான் என்பதை உலகம் இவன்பால் உணர்ந்தது.

(இது பாரதத்தினும் பாகவதத்தினும் உள்ளது.)

நாவின் நுனியில் நயமிருக்கிற் பூமாதும்
நாவினிய நல்லோரும் நண்ணுவார்—நாவினுனி
யாங்கடின மாகில் அத்திருவுஞ் சேராளே
யாங்கே வருமரணம் ஆம் (நீதி வெண்பா.)

புன்சொல்லும் நன்சொல்லும் பொய்யென் றுணர்கிற்பார்
வன்சொல் வழியராய் வாழ்தலு முண்டாமோ
புன்சொல் இடர்ப் படுப்ப தல்லால் ஒருவனை
இன்சொல் இடர்ப்படுப்பதில். (பழமொழி)

இன்னாத சொல்லால் ஏதம் வருமென்பது இதனால் கூறப்பெற்றது.

(இவ்வதிகாரத்தின் தொகைப் பொருள்.)

அன்பு கலந்து வஞ்சனையின்றி அறமுடையார் கூறும் சொல்லே இன்சொல். அஃது ஈதலினும் சிறந்தது. ஈதலறத்தை இன்சொல்லால் எய்தலாம். இன்சொலுடையார்க்கு இடும்பைகள் இல்லை. பணிவும் இன்சொல்லும் உயிர்கட்கு அணிகலமாகும். அதனால் பாவம் நீங்கும். அறம் ஓங்கும். பொருளும் இன்பமும் அதனால் உளவாம். இருமை இன்பங்களையும் அஃது ஒருமையில் ஈனும். ஆதலான் ஒருவன் இன்சொல்லைவிடுத்து வன்சொல்லைச் சொல்லலாகாது. வன்சொலுடையார் வருந்திக் கெடுவார் என்பனவாம்.

௰-வது இனியவை கூறல் முற்றிற்று.

௰௧-ம் அதிகாரம் செய்ந்நன்றியறிதல்.

அஃதாவது தனக்குப் பிறர் செய்த உதவியை மறவாமல் ஒழுகுதல். இனியவை கூறி இன்பமேவி இல்வாழ்கின்றவன் உணர்ந்தொழுகவேண்டிய உயர்ந்தவிதிகளுள், செய்ந்நன்றியறிதல் தலைநின்றது, ஆதலான் அதன்பின் இது வைக்கப்பெற்றது.

101. மற்றொன்று மாற்றாமல் மன்னனுங்கேன் கன்னனுயிர்
கொற்றமுறத் தந்தான் குமரேசா—உற்றொன்று
செய்யாமற் செய்த வுதவிற்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது. (௧)

குமரேசா! துரியோதனனுக்கு வேறு ஒன்றையும் உதவாமல் கன்னன் தன்னுயிரையே ஏன் உதவினான் எனின், செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும் வானகமும் ஆற்றல் அரிது என்க. ஆற்றல் அரிது—ஒத்தல் அரிது.

தான் ஓர் உதவியும் முன் செய்யாதிருப்ப, தனக்கு ஒருவன் செய்த முதலுதவிக்குப் பதிலாக வையத்தையும் வானத்தையும் கொடுத்தாலும் ஈடாகாது என்பதாம்.

செய்தபின் செய்யும் உதவியினும், செய்யாமற்செய்த உதவி சிறந்ததென்பது குறிப்பு. முன்னது காரணங் கருதியதென்பதும் பின்னது காரணமின்றிச் செய்தது என்பதும் காண்க.

காரணமின்றி ஒருவன் செய்த உதவி, மண்ணுலகத்தினும் விண்ணுலகத்தினும், சிறந்தது ஆதலான் அதனை மறவாமல் அவன்பால் நன்றியுடையனாய் அன்புசெய்தல் வேண்டுமென்பது கருத்து. இவ்வுண்மை கன்னன்பால் காணப்பெறும்.

கதை.

கன்னன் குந்திதேவியின் முந்திய புதல்வன். இவள் கன்னிப்பருவமாயிருக்கும்பொழுதே யிவனைக்காணப்பெற்றாள். துருவாசர் இளமையில் தனக்கு உணர்த்தியிருந்த மந்திரத்தின் பலனையறிய வேண்டிச் சூரியனை நினைந்தாள். உடனே தோன்றினான். இவள் இவனைப் பயந்தாள்.

"பன்னிவாழ்க்கைப் படாமுன் படர்ந்தொரு களவினாலே
கன்னியே பெற்ற பிள்ளை கானீனன் என்றேயோதும்."

என்றதனால் கானீனன் என்னும் பெயரையும் இவன் எய்தினான். குந்தி பழியஞ்சி இவனை ஒரு பேழையுள் வைத்து ஆற்றில் தள்ளினாள். அதன்வழியாய் இவன் அத்தினபுரியை அடைந்தான். வேட்டைபோல் வந்திருந்த திருதராட்டிரன் திருவருளால் இவனைக் கண்டெடுத்தான். தேர்ப்பாகன் கொண்டுபோய் வளர்த்தான். அரசன் புதல்வருள் முதல்வனாகிய துரியோதனன் இவன்பால் பெருநண்பு கொண்டான். உயர்ந்த உதவிகளை உவந்து செய்தான். தனது பிறப்புரிமையை உணர்ந்தபின்னரும் கன்னன் பாண்டவர்களோடு கூடாமல் அம்மன்னன் செய்த உதவியையே நினைந்தான். அவனுக்காகத் தன் இன்னுயிரையும் தந்தான். அதனால் செய்ந்நன்றி மறவாத மெய்ந்நின்றவீரன் என்று உயர்ந்தோர் இவனைப் புகழ்ந்தார். (இதன் விரிவைப் பாரதத்தில் உணர்க)

ஊரும் ஒருகுலமும் இல்லா என்னை
உங்கள் குலத்துள்ளோரில் ஒருவனாக்கித்
தேருநும் அரியணை [illegible] வாராத என்னைச்
செம்பொன் மணிமுடிசூட்டி யம்புராசி
சூழும் புவிபாலர் பலரும் போற்ற
நின் [illegible] பெறவைத்தாய் நினக்கேயன்றி
பெருஞ்[illegible] உற்ற போரில்
யார்க்கினியென் உயிர்கொடுப்ப தியம்புவாயே. (பாரதம்)

இது கன்னன் துரியோதனனை நோக்கிக் கூறியது.

உதவாமல் ஒருவன்செய்த உதவிக்குக் கைம்மாறாக
மதயானை யனைய மைந்த மற்றுமுண் டாகவற்றோ
சிதையாத செருவில் அன்னான் முன்சென்று செறுநர்மார்பில்
உதையானேல் உதையுண்டாவி யுகேயானேல் உலகில்மன்னோ.
(இராமாயணம்.)

செய்யாமற் செய்த உதவியே எவற்றினும் சிறந்தது என்பது இதனால் கூறப்பெற்றது.

* * *

102. திண்டோள் அயாதிசெய்த சிற்றுதவி யேன்பெரிதாங்
கொண்டாள்தெய் வானை குமரேசா—திண்டாடுங்
காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது. (௨)

இ—ள்.

குமரேசா! அயாதி செய்த சிறிய உதவியையும் தெய்வ ஏன் பெரிதாக மதித்தாள் எனின், திண்டாடுங் காலத்தில் செய்த உதவி சிறிது எனினும் ஞாலத்தினும் மிகப் பெரிதாம் என்க.

"காலத்தினால்" என்னும் தொடரிலுள்ள மூன்றனுருபாகிய ஆல், ஏழாவதற்குரிய இடப்பொருளில் வந்தது. இஃது உருபு மயக்கம் எனப்படும்.

யாதன் உருபிற் கூறிற் றாயினும்
பொருள்செல் மருங்கின் வேற்றுமை சாரும். [தொல்காப்பியம்.

துன்பங்காலத்தில் தனக்கு ஒருவன் செய்த உதவி சிறிதாயிருந்ததாயினும் அதனை இந்நிலவுலகத்தினும் மிகப் பெரிதாக மதித்துப் போற்ற வேண்டும் என்பதாம்.

பெரிது பெரிது புவனம் பெரிது என்ற முதுமொழியை நோக்கி அதனினும் பெரிது உரியகாலத்தில் ஒருவன் செய்த உதவி என்று தேவர் இதில் காட்டினார் போலும் என்பது கருதப்படும்.

உரியகாலத்தில் ஒருவன் செய்த உதவியைப் பெரிதாக மதித்துப் பேண வேண்டுமென்பது குறிப்பு. இவ்வுண்மை தெய்வயானைபால் தெளியப்பெறும்.

கதை

தெய்வயானை என்பவள் அசுர குருவாகிய சுக்கிரன் மகள். சன்மிட்டை என்னும் அரசன் புதல்வியுடன் கூடியிவள் ஒருநாள் மலர் கொய்யச் சென்றாள். தோழிகள் பலரும் உடன் சென்

றிருந்தார். அனைவரும் ஒரு பூஞ்சோலையுட் புகுந்தார். புதுமலர் கொய்தார். உச்சியம்பொழுதில் ஒருங்கே கூடினர். உயரிய கனிகளை உவந்துடன் உண்டார். இனிய மொழிகளை யியம்பி யெழுந்தார். அங்கோர் நாண்மலர்ப் பொய்கையை நாடியடைந்தார். நீராடல் விரும்பித்தம் ஆடைகள் உரிந்தார். அந்தக்கரை மேல் தொகுத்து வைத்தார். நீர்மேல் பாய்ந்தார். நீந்திமகிழ்ந்தார். அவ்வமையம் அங்கோர் ஆண் மகன் வந்தான். இவரனைவரும் நாணித் தரைமேல் வந்தார். கரையுறும் உடைகளை விரைவில் உடுத்தார். அதில், தெய்வயானையின் ஆடையைச் சன்மிட்டை அறியாது தரித்தாள். அதனால் சினந்த தெய்வயானை அவளை யிகழ்ந்து கூறினள். தன்னை மன்னன் புதல்வியென்று மதியாமல் அவள் கூறிய வன்மொழிகளைச் சன்மிட்டை தன் மனத்திற்கொண்டிருந்தாள். அச்சினத்தால் அவளை ஒருபாழுங் கிணற்றில் தள்ளினள். மறைந்து சென்றனள். தள்ளுண்டவள் பதைத்துத் தனியே நின்றனள். தளர்ந்து நொந்தாள். அங்கு வேட்டைக்கு வந்திருந்த அயாதி மன்னன் இவளை அன்று கண்டான். இரங்கினன். தனது மேல் ஆடையைக் கீழேவிடுத்துப் பற்றும்படிசெய்து இவளை மேலே தூக்கிவிட்டான். அந்நன்றிக்கு இவள் தன்னையே அவனுக்குத் தந்தாள். காலத்தினாற் செய்த நன்றியை நினைந்து தெய்வயானை அரசனுக்கு மனைவியாய் மகிழ்வூட்டியதை மாநிலம் புகழ்ந்தது.

(இதன் விரிவைப் பாகவதத்தில் உணர்க.)

காலத்திற் செய்த உதவி ஞாலத்திற் பெரிதென்பது இதனால் காட்டப்பெற்றது.

103. திண்டோள் அனுமான்செய் சீருதவி யேன்பெரிதாக்
கொண்டாள்முன் சீதை குமரேசா—உண்டாம்
பயன்றூக்கார் செய்த வுதவி நயன்றூக்கின்
நன்மை கடலிற் பெரிது. (௩)

இ—ள்.

குமரேசா! அநுமான் செய்த உதவியைப் பெரிதாக என் சீதை கருதினாள் எனின், பயனைக் கருதாதவர் செய்த உதவியின் நயனை ஆராயின் அதன் நன்மை கடலினும் பெரிதாம் என்க.

தூக்கார்=வினைமுற்றெச்சம். பயன்தூக்கார்=பயனை எதிர் நோக்காதவராய். உதவிநயன்=உதவியாகிய நயன் என இருபெயரொட்டாய் நின்றது. பயன் தூக்காமல் உதவி செய்தற்கு அன்புடைமையே காரணம் ஆதலான் ஈண்டு நயன் என்றது அதனையே குறித்து நின்றது

ஒரு பயனையும் கருதாமல் ஒருவன் செய்த உதவி நயத்தை ஆராயின் அது கடலினும் பெரிதாம் என்பது கருத்து.

மேல், ஒன்றை ஞாலத்தினும் பெரிது என்றார். இதில் அதனினும் பெரிதாய கடலினும், பயன் கருதாமற் செய்த வுதவி பெரிதென்றார். எனவே அவ்வுதவியினும் இது சிறந்தது என்பது தெளியப்படும்.

பயன் தூக்காமற் செய்த உதவிக்குப் பதிலுதவ இவ்வுலகில் ஒன்றும் இல்லையென்பது இதில் உணர்த்தப்பெற்றது. இவ்வுண்மை அநுமன்பால் உணரப்பெறும்.

கதை.

அநுமன் இராம தூதனாய் இலங்கையுட் புகுந்து அங்கு வருந்தி இறக்கத்துணிந்த சீதையைத் தேற்றினான். இவன் செய்த உதவியின் திறத்தால் தானும் தனது நாயகன் முதலிய நல்லோர் பல்லோரும் எய்திய நலங்கள் பல. இந்திரசித்தன் பிரமாத்திரத்தால் உயிர் துறந்த அனைவரும் உயிர்பெற்று எழவும், தம்பியின் சோகத்தால் சோர்ந்துகிடந்த இராமன் சோர்வு நீங்கி இன்புறவும் மருந்து மலையைக் கொண்டுவந்து இவன் உதவினான். உரிய காலத்தில் இராமன் வரவில்லையே என்று ஏங்கி நெருப்பில் விழத்துணிந்த பரதனை நிறுத்தி உறுவதுகூறி அவனுக்கு உயிருதவி செய்தான். இன்னும் பலவே இவன் செய்த உதவிகள். இவற்

றையெல்லாம் பயன் தூக்காமலே நயனொடு செய்தான். இவன் செய்த உதவி நலங்களைச் சீதையும் இராமனும் அடிக்கடி சிந்தித்து மகிழ்ந்தார். இவனுக்குக் கைம்மாறு செய்யக் கருதுதல் அரிது என்று கண்டு தெளிந்தார்.

(விரிவை அவர் சரிதத்தில் உணர்க.)

மும்மையாம் உலகம்தந்த முதல்வற்கு முதல்வன்றாதாய்ச்
செம்மையா னுயிர்தந் தாய்க்குச் செயலென்றால் எளியதுண்டோ
அம்மையா யத்தனாய அப்பனை அருளின் வாழ்வை
இம்மையே மறுமை தானும் நல்கினை இசையோடென்றாள். (1)

முன்னை நீக்குவென் மொய்சிறை யென்றநீ
பின்னை நீக்கி யுவகையும் பேசினை
என்னை பேற்றினை யிகுவ தென்பதை
யுன்னி நோக்கி யுரைமறந் தோவினேன். (2)

உலக முன்றும் உதவற் கொருதனி
விலையி லாமையும் முன்னினென் மேலவை
நிலையி லாமை நினைந்தனென் நின்னையென்
தலையி னாற்றொழு வுதகுந் தன்மையோய். (3)

(சீதை,)

மாருத விமலரேயை மகிழ்ந்தினி தருளின் நோக்கி
ஆருத விடுநற்கொத்தார் நீயலால் அன்றுசெய்த
பேருத விக்கியான்செய் செயல் பிறிதில்லை மெய்ப்பூண்
போருத வியதிண்டோளாய் பொருந்துறப் புல்லுகென்றான். (1)

(இராமன்.)

கருதாமற் செய்தஉதவி கடலினும்பெரிது என்பது இதனால் கூறப்பெற்றது.

104. எய்தசிறு நன்றிக்கும் ஏகலைவன் ஏன்விரலைக்
கொய்து கொடுத்தான் குமரேசா — செய்ய
தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார். (௪)

-ள.

குமரேசா! சிறிய நன்றியையும் பெரிதாகக் கருதி ஏகலைவன் என் தனது விரலைக் கொய்து கொடுத்தான் எனின், தினைத்துணை நன்றி செயினும், பயன் தெரிவார்
யாக் கொள்வர் என்க.

ா=உணவுப் பொருள்களுள் ஒருவகைச் சிறு தானியம். அஃது உவமான அளவையாய் உதவியின் சிறுமையை உணர்த்தி நின்றது.

தமக்கு ஒருவன்செய்த உதவி தினையளவு சிறியது ஆயினும் அதனைப் பனையளவு பெரியதாகக் கருதுவார் பெரியோர் என்பதாம் அங்ஙனங் கருதார் சிறியோர் என்பது குறிப்பு. ஒருவன் செய்த உதவியை மறவாமல் ஒழுகுவார்க்கு, அறம் புகழ் இன்பங்கள் ஒருங்கே உளவாம், இவ்வுண்மைப் பயனை உணர்ந்தவரே தினைத்துணை நன்றியையும் பனைத்துணையாக உள்ளுவர், ஆதலால், “பயன் தெரிவார் கொள்வர்” என்றார்.

செய்யாமல் செய்த உதவி, காலத்திற் செய்த உதவி, பயன் கருதாமற்செய்த உதவி, என்னும் மூன்று உதவிகளும் முறையே வானினும், உலகினும், கடலினும் பெரியன போலக் கூறி, இதில் சிறிய உதவியும் பெரியார் கைப்பட்டால் பெரிதாம் என்று கூறினார்.

பிறர் செய்த சிறிய உதவியையும் பெரியதாக நினைந்து அன்பு செய்வார் உயர்ந்தோர் என்பது இதில் உணர்த்தப் பெற்றது. இவ்வுண்மை ஏகலைவனால் உணரப்பெறும்.

கதை.

இற்றைக்கு ஐயாயிர வருடங்கட்கு முன்னர் அத்தினபுரியை அடுத்திருந்த ஒருசிற்றூரில் ஏகலைவன் என்னும் பெயரினையுடைய

ஒரு வேடன் இருந்தான். அக்காலத்தில் அத்தினாபுரியில் அரசிளங் குமாரர்களுக்கு துரோணர் வில்வித்தை கற்பித்துவந்தார். அவர்பால் இவன் அன்புடன் வந்தான். தனக்கும் கற்பிக்கும்படி அவரைத் தாள்பணிந்து வேண்டினான். தமது பெருமைக்குச் சரியில்லையென்று அவர் மறுத்தார். ஆயினும், அவரை இவன் வெறுக்காமல் அகன்று சென்றான். அவரது வடிவம்போல் மண்ணால் ஓர் உருவஞ்செய்தான். தனியான இடத்தில் வைத்தான். அதனையே குருவாக நம்பிச் சிலைத் தொழில் பயின்றான். அது பயிற்றத் தான் பயில்வதாக மதித்தான் அம்மதியால் சிலைவேத முழுதும் இவன் மலைவறத் தெளிந்தான். துரோணரது காட்சியானே அது கைவந்ததென்று இவன் கருத்துட் கொண்டான். அதனையே ஒரு பெரிய நன்றியாகக் கருதினான். அவர்பால் உள்ளன்பு வைத்திருந்தான். இங்ஙனம் இருப்பத் துரோணர் மாறுபாடாய் வந்து இவன் கைவிரலைக் கொய்து தரும்படி கேட்டார். இவனும் அதனைக் கொய்தே கொடுத்தான். தினைத்துணை நன்றியையும் பனைத்துணையாக் கருதிய இவனது பெருமையை உலகம் புகழ்ந்தது. இவனும் புகழும் அறமும் பொருந்தியின்புற்றான்.

(இதன் விரிவைப் பாரதத்தில் உணர்க)

தினையனைத்தே யாயினுஞ் செய்தநன் றுண்டாற்
பனையனைத்தா வுள்ளுவர் சான்றோர்—பனையனைத்
தென்றுஞ் செயினும் இலங்கருவி நன்னாட
நன்றில நன்றறியார் மாட்டு. (நாலடியார்.)

சிறிய உதவியையும் பெரிதாகக் கருதுவார் பெரியோர் என்பது இதனால் கூறப்பட்டது.

105. வாழுந் திருவெய்த வாழ்த்தினளேன் ஔவைபழங்
கூழுதவி னார்க்கும் குமரேசா—வீழும்
உதவி வரைத்தன் றுதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து

(இ—ள்.)

குமரேசா! தனக்குப் பழங்கூழை உதவினார் பெருஞ்செல்வத்தை யெய்தும்படி ஒளவை என் வாழ்த்தி உதவினாள் எனின், உதவி, உதவியின் வரைத்து அன்று உதவிசெயப்பட்டார் சால்பின் வரைத்து என்க.

உதவி உதவி வரைத்து அன்று=பதிலுதவி முதலுதவியின் அளவினது அன்று

உதவி செய்யப்பட்டார் சால்பின் வரைத்து=உதவியை ஏற்றுக்கொண்டவரது தகுதியின் அளவு.

ஒருவன் செய்த உதவி, அதனைச் செய்யும்படி நின்றவரது தகுதிக்கேற்ப பெரிதாம் என்பதாம்.

செய்த உதவிக்குப் பதிலாக ஒருவன் செய்யும் உதவி அதன் அளவைக் குறிக்காமல், தன் தகுதியின் அளவைக் குறித்திருக்க வேண்டுமென்பது குறிப்பு.

மேல், தினைத்துணை நன்றியைப் சான்றோர் பனைத்துணையாக் கொள்வர் என்றார். இதில் தமது சால்புக்கேற்ப அவர் கைமாறு செய்வர் என்றார். தாளால் உண்ட இழிநீரை இளநீராக்கித் தலையால் உதவுந் தென்னைபோல் சிற்றுதவிக்கும் மேலோர் பேருதவி செய்வர் என்பது குறிப்பு. சால்புடையவர்க்குச் சிறிய உதவியைச் செய்யினும் அதனால் பெரிய பயனைச் செய்தவர் எய்துவர் என்பது கருத்து இவ்வுண்மை ஒளவைக்கு உதவிய சிலம்பி, அங்கவை, சங்கவை, அசதி என்னும் இவர்பால் அறியப்படும்.

கதை.

சிலம்பி என்பவள் சோழநாட்டிலே காவிரியின் வடகரையில் உள்ள பேரூரில் இருந்த ஒரு பொதுமகள். புலவர் பெருமானாகிய கம்பரிடமிருந்து இவளொரு கவிபெற விரும்பினாள். அதன் பொருட்டுப் பெரும் பொருளை அவர்பால் தந்தாள். அவர்,

தண்ணீருங் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணாவ துஞ்சோழ மண்டலமே—என்பது வரையும்

பாடிப் பின்னும் பாதிக்கு இன்னும் இத்துணைப் பொருள் தருவையேல் பாடுவல் என்று பகர்ந்து சென்றார். இவள் அயர்ந்து நின்றாள். பின், பொருள் பெற முயன்று வந்தாள். வருங்கால் ஔவையும் ஒருநாள் அங்கு வந்தாள். அவளிடம் இருந்த பழங்கூழை உவகையோடு தந்தாள். உற்றதையும் உரைத்தாள். உண்டு மகிழ்ந்த ஔவை கம்பன் பொருட்கவியைக் கண்டாள்.

பெண்ணாவாள்—அம்பொற் சிலம்பி அரவிந்தத் தாளணியும்
செம்பொற் சிலம்பே சிலம்பு. என்று.

அதன் பாதியையும் ஓதினாள் அதனால் சிலம்பி பொருளும் புகழும் பொருந்தி இன்புற்றாள் கம்பர் தமுசல் ஔவையைக் கூழுக்குப் பாடி என்றார். சிறிய உதவிக்கும் தக்கார் பெரிய உதவியைச் செய்வர் என்பதை உலகம் ஔவையால் உணர்ந்தது. அங்கவை முதலியோர் செய்த உதவிக்கு ஔவை செய்ததை அவர் சரித்திரத்தில் உணர்க.

உயர்ந்தோர்க்கு உதவியது சிறிதாயினும் அதனால்வரும் பயன் பெரிதாம் என்பது இதனால் உணர்த்தப்பட்டது.

106. நன்றாம் இராமனுயர் நற்கேண்மை வானரர்கோன்
குன்றாதேன் கொண்டான் குமரேசா—என்றும்
மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துட் டுப்பாயார் நட்பு. (சு)

இ—ள்.

குமரேசா! இராமனது நட்பை ஏன் சுக்கிரீவன் என்றும் மறவாமற் கொண்டான் எனின், மாசு அற்றாரது கேண்மையை மறத்தலும், துன்பத்துள் துப்பாயாரது நட்பைத் துறத்தலும் செய்யலாகாதென்க.

மாசு அற்றார்—குற்றமில்லாதவர். நற்குணங்களையுடையவர் என்றபடி.

துன்பத்துள் துப்பு ஆயார்—துன்பக்காலத்தில் துணையாயினார். துறத்தல்=மறந்துவிடுதல்.

மேல், உயர்ந்தவர்க்குச்செய்யும் உதவியின் சிறப்பை உணர்த்தினார். இதில், அவரது கேண்மையை மறவாதே என்றார்.

துன்பக்காலத்தில் ஒருவன் செய்த உதவியைத் துறவாதொழிக என்பதுதான் இங்கு உரிமையாயினும், மாசற்றார் கேண்மையை மறவற்க என்பதும் உடன் கூறினார் அது மறுமைக்கும் உறுதி தரும் என்பது கருதி.

தூயோரது நட்பையும், துன்பக்காலத்தில் உதவியாயோரது நட்பையும், ஒருவன் மறந்துவிடலாகாது என்பது கருத்து. இவ்வுண்மை சுக்கிரீவன்பால் உணரப்படும்.

கதை.

சுக்கிரீவன் வாலியால் நலியப்பட்டுத் துன்பமுற்றிருக்குங் காலத்தில் இராமர் அவனுக்குத் துணையாய் நின்று உதவி புரிந்தார். அந்நட்பை மறவாமல் தன் படைகளோடு தானும் உடன் சென்று அவருக்கு வேண்டும் உதவிகளை விரும்பிச் செய்தான் அதனால் அவன் இருமையினும் பெருமை யெய்தினான்.

(இதன் விரிவு இராமாயணத்தில் இனிது தெளிவாம்.)

நல்லோர் நட்பையும் நன்றியையும் ஒருவன் என்றும் மறக்கலாகாது என்பது இதனால் கூறப்பட்டது.

107. மாறில் சடையப்பர் வண்புகழைக் காவியத்தும்
கூறினனேன் கம்பன் குமரேசா—தேறி
எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு. (எ)

பொ—ள்.

குமரேசா! சடையப்பரது புகழைக் காவியத்திலும் ஏன் கம்பன் கூறினான் எனின், தம் கண் விழுமம் துடைத்தவரது நட்பை, எழுமையினையுடைய எழுவகைப் பிறப்பினும் நினைப்பர் என்க.

விழுமம்= துன்பம்.

தங்கண் விழுமம் துடைத்தவர்= தம்மிடத்துத் தோன்றிய துன்பத்தை நீக்கினவர். எழுமை எழுபிறப்பும்—ஏழு முறை பிறக்கின்ற எழுவகைப் பிறப்பினும். ஓருயிர் ஒரு பிறப்பிற்செய்த இருவினைப் பயனையும் எழுபிறப்பு வரையினும் எய்தி நுகரும் என்பது ஒருவகை நியமம் ஆகலான், "எழுமை எழுபிறப்பும் உள்ளுவர்" என்றார். "ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற் கெழுமையும் ஏமாப்புடைத்து" என்றதுங் காண்க.

தமக்கு எய்திய துன்பத்தை நீக்கினவரது நட்பினை பிறவியேழினும் பெரியோர் மறவார் என்பதாம். இவ்வுண்மை கம்பர்பால் காணப்படும்.

கதை.

கம்பர் தமது விழுமம் துடைத்த சடையப் பிள்ளையுடைய பெருநட்பினை என்றும் மறவாமல் பேரன்பு கொண்டார். அவரது புகழையே மீண்டு மீண்டும் யாண்டும் துதித்தார். தமது நன்றியறிதலை என்றும் நின்று நிலவும்படி செய்ய நினைந்தார். அதனால் தாம்பாடிய இராமாயணம் என்னும் காவிய வுலகில் சடையப்பரது பெருமையை இடையிடையே வைத்தார் போற்றினார்.

விண்ணவர் போயபின்றை விரிந்தபூ மழையினாலே.
தண்ணெனுங் கானநீங்கித் தாங்கருந் தவத்தின் மிக்கோன்
மண்ணவர் வறுமைநோய்க்கு மருந்தன சடையன் வெண்ணெய்
அண்ணல்தன் சொல்லே யன்ன படைக்கலம் அருளினானே.

இது, விசுவாமித்திரர் இராமனுக்குப் படைக்கலங்கள் கொடுக்கும்பொழுது தொடுக்கப்பட்டது.

ல் முனிவரருளிய அப்புக்குச் சடையரது சொல்லை உவமைகூறினார். இதனால் இராமபாணம் குறி பிழையாமல் சென்று பயன் தருதல்போல் சடையவள்ளல் சொல்லும் பிழையாமல் பயன்தரும் என்பது காண்க. இவ்வகையில் இவரது நட்பினை நினைந்து நினைந்து நெஞ்சுருகி இடங்கள் தோறும் இசைத்துள்ளார். இவர் இறக்குந் தருணத்தும் இந்நினைவோடே யிருந்தார்.

ஆன்பாலும் தேனும் அரம்பைமுதன் முக்கனியும்
தேன்பாய உண்டு தெவிட்டுமனம்—தீம்பாய்
மறக்குமோ வெண்ணெய் வருசடையா நம்பன்
இறக்கும்போ தேனும் இனி.

என்று சொல்லிக்கொண்டே இறந்தார். இதனால் இவர், தமது விழுமம் துடைத்தவரது நட்பை எழுமை எழுபிறப்பினும் உள்ளிய திறமும், நன்றியறிதலின் நலமும், நன்கு தெளியப்படும

ஒருவன் செய்த நன்றியைப் பிறவியேழினும் பெரியோர் மறவார் என்பது இதனால் கூறப்பட்டது.

108. வாதவூர் அண்ணல் வழுதிசெய்த நன்றையுன்னிக்
கோதேன் மறந்தார் குமரேசா—ஓதுங்கால்
நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று. (அ)

இ—ள்.

குமரேசா! வாதவூரண்ணல் வழுதிசெய்த நன்றியை மாத்திரம் நினைந்து அவன்செய்த தீமையை ஏன் மறந்தார் எனின், நன்றியை மறப்பது நன்று அன்று, நன்று அல்லதை அன்றே மறப்பது நன்று என்க.

நன்று அல்லது=தீமை. அன்றே=தீமைசெய்த அப்பொழுதே. இதில் உள்ள ஏகாரம் விரைவுதோன்றநின்றது.

வாதவூர் அண்ணல்=மாணிக்கவாசகர். வழுதி=அரிமர்த்தனபாண்டியன். மேல், ஒருவன் செய்த நன்றியை எழுபிறப்பினும் மறக்கலாகாது என்றார் நன்றிசெய்த ஒருவனே தீமையும் செய்தானாயின் என்செய்வது என்பாரை நோக்கி யிது கூறினார்.

உபகாரமும், அபகாரமும் ஒருவனால் செய்யப்படுமாயின் அவற்றுள் முன்னதை மாத்திரம் மறவாதுட்கொண்டு பின்னதை மறந்து விடவேண்டும் என்பதாம்.

உயர்ந்தோர், ஒருவன் செய்த நன்மையை மாத்திரம் நி தீமையை மறப்பார் என்பது கருத்து. இது மாணிக்கவாசகர் பால் காணப்படும்.

கதை.

மாணிக்கவாசகர் மதுரையிலிருந்த அரிமர்த்தன பாண்டியன் என்னும் மன்னனுக்கு மந்திரியாயிருந்து அரசியல் புரிந்தார் அக்காலத்தில் சிறந்த குதிரைகள் வாங்கிவரும்படி அரசன் இவரை யேவினான். இவரும் பெரும்பொருள் கொண்டு பெருந்துறைக்குச் சென்றார். சென்று சேர்ந்தபின் திருவருளால் இவர் உலகியல் மறந்தார். அருளுருவாகிய பரமனே இவர் முன் குருவடிவாகி நின்றார். இவர் அவரைத் தொழுதார். அன்பால் அகமுருகி அழுதார். பின் அவருக்கு அங்கோர் ஆலயம் வகுத்தார். அதன் பொருட்டுத் தன்கைப்பொருள் முழுதையும் செலவிட்டார். பரிகள் வாங்காமல் தமது அமைச்சர் செய்கையைப் பாண்டியன் அறிந்தான். இவரைக் கொணரும்படி செய்தான் கொடுந்தண்டம் இட்டான். சிறையிலிட்டுத் துயர்பல செய்தான். மன்னன் செய் இன்னலைப் பொறுக்கமுடியாமல் மாணிக்கவாசகர் மனமுருகிப் பரமனைத் துதித்தார். பரமன் நரிகளையெல்லாம் பரிகளாக்கிப் பாண்டியன் முன் கொண்டுவந்தார். வந்தபின் உண்மையை மன்னன் தெளிந்தான். அமைச்சர் அருமையை அறிந்தான் அஞ்சினான். அவரடிமிசை வீழ்ந்தான். தான்செய்த தீமையைப் பொறுத்தருளும்படி வேண்டினான். மாணிக்கவாசகர் மன்னனை இன்முகத்தோடு நோக்கினார். நன்றியையே நினைந்தார். அவன் செய்த நன்றல்லதை மறந்தார்.

நன்மொழிகள் பலகூறினார். அன்புடன் தேற்றி அரசனை அனுப்பினார்.

உம்மைநான் அடுத்த நீரால் உலகியல் வேதநீதி
செம்மையால் இரண்டும் நன்றாத் தெளிந்தது தெளிந்த நீரால்
மெய்ம்மையாஞ் சித்த சுத்தி விளைந்தது விளைந்த நீரால்
பொய்ம்மைவா னவரி னீந்திப் போந்தது சிவன்பாற் பத்தி

இது பாண்டியன் பிழைபொறுக்க வேண்டியபொழுது மாணிக்கவாசகர் சொன்னது. இதனால் அவர், நன்றியை நினைந்ததும் நன்றல்லதை மறந்ததும் நன்கு தெளியப்படும்

ஒருவன் செய்த நன்றியை என்றும் மறக்கலாகாது என்றும் தீமையை உடனே மறந்துவிடவேண்டும் என்றும் இதனால் கூறப்ப

109. எள்ளி விராடன் எறிந்தும் தருமனேன்
கொள்ளவில்லை கோபம் குமரேசா—துள்ளிவந்து
கொன்றன்ன இன்னா செயினு மவர்செய்த
ஒன்றுநன் றுள்ளக் கெடும். (க)

இ—ள்.

குமரேசா! விராடன் இகழ்ந்து எறிந்தும் ஏன் தருமன் கோபங்கொள்ளவில்லை எனின், கொன்று அன்ன இன்னாசெயினும் அவர் செய்த நன்று ஒன்று உள்ளக் கெடும் என்க.

கொன்று அன்ன இன்னா செயினும்=கொன்றால் ஒத்த துன்பத்தைச் செய்யினும்.

முன், ஒரு சிறு நன்மையைச் செய்தவர் பின், பல பெருந்தீமைகளைச் செய்வாராயினும் அவர்செய்த நன்று ஒன்றனையும் கருத அவை யெல்லாம் இல்லையாம் என்பதாம்.

பெரியோர் தினைத்துணை நன்றியையும் பனைத்துணையாகக் கருதும் பண்புடையராதலின் தமக்கு ஒரு சிறிய நன்றியைச் செய்தவர் பின்பு பெரிய துன்பத்தைச் செய்யினும் பொறுப்பர் என்பது கருத்து இவ்வுண்மை தருமன் பால் உணரப்படும்.

கதை

• தருமன் முதலிய ஐவரும் துரோபதையும் பன்னிருவருடம் வனவாசம் செய்தபின் தமது இசைவின்படி மற்றொரு வருடம் உருவங் கரந்து விராடநகரத்தில் அரசனது ஆதரவில் தங்கியிருந்தார். இதனைத் துரியோதனன் அறிந்தான். அவரது இசைவினைச் சிதைவுசெய்ய நினைந்தான். தமது படைகளோடு அந்நகரைவந்து வளைந்தான். அங்கு உருவுகரந்துறையும் துணைவர் நால்வரையும் போர்மேலேவித் தருமன்மாத்திரம் கங்கபட்டர் என்னும் புரோகிதர் போன்று அரசனோடு பொருந்தியிருந்தான். போனவர் பொருது மீளும்வரையும் இவ்விருவரும் பொழுது போக்கக்கருதிச் சூதினையாடினார். அதில் நிகழ்ந்த வாதினால் அரசன் தாயக்கருவியால் தருமனையெறிந்தான். எற்றிய கவறு தருமன் நெற்றியில் பட்டது. அரசன் முன்புரிந்த நன்றியையே நினைந்தான். எறிந்த தீதை மறந்தான். ஆயினும், முன்னவன் நெற்றியில் முற்றிய வடுவினைப் பின்னவர் கண்டார். உற்றதையோர்ந்தார். மனங்கவன்றார். சினந்தெழுந்தார். உடனே தருமன் அவரை நோக்கினான்.

ஒன்றுதவி செய்யினும் அவ்வுதவி மறவாமல்
பின்றையவர் செய்பிழை பொறுத்திடுவர் பெரியோர்
நன்றி பலவாக ஒருநவை புரிவரேனும்
கன்றிடுவ தன்றிமுது கயவர் நினையாரே. (1)
அனைமுழுது கானகம் அகன்றுநெடு நாளாங்
நினைவுவழு வாமலிவன் நீழலி லிருந்தோம்
சினமிகுதலிற் றவறு செய்தன னெனப்போய்
முனிதல்பழு தாகுமென முன்னவன் மொழிந்தான். (2)
(பாரதம்.)

இவற்றால் தருமரது நன்றியறிவும் பொறையும் நன்கு தெளியப்படும்.

ஒருநன்றி செய்தாரை உள்ளத்தே வைத்துப்
பிழை நூறும் சான்றோர் பொறுப்பர்—கயவர்க்
கெழுநூறு நன்றிசெய் தொன்று தீதாயின்
எழுநூறுந் தீதாய் விடும். (ஔவை.)

நன்றல்லதை மறந்து நன்றியையே பெரியோர் என்றுங் கருதுவர் என்பது இதனால் கூறப்பட்டது.

110. நன்றியொன்றுக் காகத்தன் நல்லுயிரைச் சல்லியனே
துன்றாமல் தந்தான் குமரேசா—குன்றாத
எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு. (௰)

குமரேசா! ஒரு சிறு நன்றிக்காகச் சல்லியன் ஏன் தன்னுயிரைக் கொடுத்தான் எனின், எந்நன்றி கொன்றார்க்கும் உய்வு உண்டாம், செய்நன்றி கொன்ற மகனுக்கு உய்வு இல்லை என்க.

எந்நன்றி கொன்றார்க்கும்—எத்துணைச் சிறந்த அறங்களைச் சிதைத்தார்க்கும்.

சிறந்த நன்மைகள் பலவற்றையும் அழித்துப் பெரும் பாதகங்களைச் செய்தவரும் ஏதாவது ஒரு பிராயச்சித்தத்தான் அவற்றின் நின்றும் உய்வர்; செய் நன்றியை மறந்தவர் எவ்வகையினும் உய்யார் என்பதாம்.

பாவங்கள் பலவற்றுள்ளும் செய் நன்றி மறத்தலே பெரும் பாவம் என்பது குறிப்பு.

ஒருவன் எதை மறந்தாலும், செய்நன்றியை மாத்திரம் மறக்கலாகாது என்பது கருத்து. இவ்வுண்மை சல்லியன்பால் காணப்படும்.

கதை.

சல்லியன் என்பவன் மத்திர தேயத்து மன்னன். நகுல சகாதேவர்கட்கு மாமன் சிறந்த ஆண்மையும், நிறைந்த கேண்மையும், திருந்திய பான்மையும் பொருந்திய மேன்மையன். இவன் பாண்டவர்கட்குத் துணைபுரியும்படி தன் படைகளோடு வந்தான். இவ

னது பேராற்றலையும் போராற்றலையும் நன்கு தெரிந்த துரியோதனன் இவனை எவ்வகையிலாவது தனக்கு உரிமையாக்கிக்கொள்ளக் கருதினான். அவன் வருகின்ற வழியில் வஞ்சகமாக ஒரு தண்ணீர்ப்பந்தலை வைக்கும்படி செய்தான். அது தருமனுக்கு உரியதென்று அதன் முகப்பில் எழுதிவைத்திருந்தான் அவ்வழியே வந்த சல்லியன் அதனைத் தனது மருமகனுடையது என்று கருதினான். படைகளோடு தானும் நீர் பருகிச் சிறிதுபொழுது அங்குத் தங்கினான் பின் அது மாற்றானுக்கே யுரியது என்பதைத் தெளிந்தான். வஞ்சகமாகச் செய்யினும் நீருதவிய அவன் நன்றியை மறத்தற்கு இவன் அஞ்சினான். தனது மருகராகிய ஐவருக்கும் துணை புரியாமல் அவனுக்குத் துணையாய் நின்று படைகளோடு தனது ஆருயிரையும் உதவினான். செய்நன்றி மறவாமல் இவன் செய்த செய்கையை வையமும் வானமும் போற்றின.

(இதன்விரிவைப் பாரதத்தில் உணர்க.)

ஒன்றொரு பயன்தனை யுதவினோர் மனம்
கன்றிட ஒருவினை கருதிச் செய்வரேல்
புன்றொழி லவர்க்குமுன் புரிந்த நன்றியே
கொன்றிடு மல்லது கூற்றும் வேண்டுமோ.

(கந்தபுராணம்.)

ஆன்முலை யறுத்த அறனி லோர்க்கும்
மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கிற் கழுவாயு முளவென
நிலம்புடை பெயர்வ தாயினும் ஒருவன்
செய்தி கொன்றோர்க்கு உய்தி யில்லென
அறம்பா டிற்றே ஆயிழை கணவ.

(புறநானூறு.)

செய் நன்றி மறத்தல் உய்தியில் குற்றம் என்பது இதனால் கூறப்பட்டது.

(இவ்வதிகாரத்தின் தொகைப் பொருள்.)

செய்யாமற் செய்த உதவி, வையத்தினும் வானத்தினும் சிறந்தது. உரியகாலத்தில் செய்த உதவி உலகினும் பெரிது. கருதாமற் செய்த உதவி கடலினும் பெரிது. சிறிய உதவியையும் பெரியோர் பெரிதாகக் கருதுவர். உற்றவர் தகுதிக்கேற்ப உதவியும் பெரிதாம். துன்பக்காலத்தில் செய்த வுதவியை ஒருவன் ஒருபோதும் மறக்கலாகாது. ஒருவன் செய்த உதவியை நல்லோர் எழுபிறப்பினும் மறவார். நன்றல்லதை அன்றே மறப்பது நன்று. ஒருநன்றி செய்தாரை உள்ளத்தே வைத்துப் பிழைநூறுஞ் சான்றோர் பொறுப்பர். செய் நன்றி மறந்தார்க்கு எவ்வகையினும் உய்வழியில்லை என்பனவாம்.

(௰௧-வது செய்ந்நன்றியறிதல் முற்றிற்று.)

* * *

௰௨-ம் அதிகாரம் நடுவு நிலைமை.

அஃதாவது ஒருபாற் கோடாமல் ஒப்பநிற்கும் நிலைமை. நன்றி செய்தவரிடத்தும் இந்நிலை குலையாமல் ஒழுகவேண்டும் என்பதை உணர்த்துதற்கு இஃது ஈண்டு வைக்கப்பட்டது. அதிகாரத்தின் தொடர்பும் இதனானே தெளிவாம்.

111. பண்டோர் பசுவுக்கும் பாலனுக்கும் ஒருதகுதி
கொண்டுரைத்தான் சோழன் குமரேசா—கொண்ட
தகுதி யெனவொன்று நன்றே பகுதியாற்
பாற்பட் டொழுகப் பெறின் (௧)

இ—ள்.

குமரேசா! சோழன் ஒரு பசுவினுக்கும் தனது பாலனுக்கும் ஒரு தகுதியாக நின்று நீதி செய்தான் எனின், பகுதிதோறும் பாற்பட்டு ஒழுகப்பெறின், தகுதியென்னும் ஒன்றே நன்று என்க

தகுதி=நடுவு நிலைமை.

ஒருவன் அறிவுடைமைக்குத் தகுதியான தன்மையையுடையது நடுவுநிலைமையே ஆதலால் அதனையே எண்ணித் தகுதியென்றார்.

பகுதி=பகை, உறவு, பொது, என்னும் மூவகைப் பிரிவு. பகுதியாற்பாற்பட்டு ஒழுகப்பெறின்=பகுதிதோறும் முறைமை குன்றாமல் ஒழுகப்பெறின். இதில் ஆன் உருபு தொறுப் பொருளில் வந்தது.

பகைவர், உறவினர், பொதுவினர், என்னும் மூவகையாரிடத்தும் ஒருவன் நடுநின்ற முறைமையை விடாமல் நீதிசெய்து ஒழுகுவானாயின் அவ்வொழுக்கம் ஒன்றே அவனுக்கு என்றும் நன்றாம் என்பது கருத்து. அவ்வொழுக்கத்தை ஒருவன் உறுதியாகப் பெறுவது அருமையென்பது கருதிப் பெறின் என்றார்.

சத்துரு மித்துரு [illegible] என்னும் முத்திறத்தார் பாலும் ஒருவன் மனத்திறத்தும் கோடாமல் நடுவு நிலைமையாக நின்று முறைமை செய்வானாயின் அவனே தகுதியுடையவன் என்பதும், பேரறங்களின் பயன்களெல்லாம் இவ் ஓர் அறத்தானே அவன் எய்துவன் என்பதும் இதில் உணர்த்தப் பெற்றன. இவ்வுண்மை சோழ மன்னன்பால் உணரப்படும்.

கதை.

சோழநாட்டிலே திருவாரூர் என்னும் திருநகரிலே இற்றைக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் அநபாயன் என்ப பெயரிய சோழ மன்னன் ஒருவன் இருந்தான். சூரியகுலத் தோன்றலாகிய இவன் எல்லா உயிர்களும் இன்புறும்படி நல்ல அரசுபுரிந்தான். புரிந்துவருங்கால் இவனுக்கு ஒரு திருமகன் பிறந்து வளர்ந்தான். இம்மகன் வீதிவிடங்கன் என்ப பெயரிடப் பெற்றான். இளமையிலேயே பலகலைகளையும் ஓதியுணர்ந்தான். ஒருநாள் இவ்வரசிளங்குமரன் தோழர் பலர் புடைசூழத் தேரூர்ந்து தெருவிடைச் சென்றான். அங்ஙனம் செல்லும்பொழுது பசுவின் கன்று ஒன்று துள்ளி ஓடிவந்து இவன் தேர்க்காலில் சிக்கிச் சிதைந்து இறந்தது. தன்

கன்றின் பிரிவால் நெஞ்சு கலங்கிய தாய்ப் பசுவானது துடித்து ஓடிவந்தது. அரண்மனை வாசலில் கட்டித் தொங்கும் அசையா மணியைத் தன் கொம்பால் அசைத்தது. மணியோசையைக் கேட்டவுடனே அரசன் மனங்கவன்றான். அணியாசனத்தை விட்டு விரைந்தெழுந்தான். வெளியே வந்தான். பசுவினைக்கண்டான். உற்றதையுணர்ந்து தன் உள்ளம் பதைத்தான். ஆன் அடைந்த துன்பத்தைத் தானும் அடைதலே தகுதியென்று கருதினான். அக்கன்றின் கதியைத் தன்மைந்தன் அடையும்படி பணித்தான். அமைச்சன் அதனைச் செய்யங்கூசித் தன்னுயிர் நீத்தான். அதன்பின் அரசனே தனது அருமைத் திருமகனைத் தெருவிற் கிடத்தித் தேர்மேல் ஏறினான். துணிந்து முன் ஊர்ந்தான். அரசன் ஊர்ந்த தேர் மகன்மேல் ஏறுமுன் பரமனும் விடைமேல் பரிவுடன் ஏறினார். அரசன் காண அருளுடன் வந்தார். இறந்த கன்றும் மடிந்த மந்திரியும் எழுந்து நின்றார். கிடந்த மகனும் தொடர்ந்து எழுந்தான். இறைவன் இன்னருளை அரசன் எண்ணி யெண்ணிப் பெருமகிழ்வுற்றான். ஒரு பசுவின் நிமித்தம் அரசன் நடுவுநிலைமை குன்றாமல் முறைமை செய்ததை உலகம் தெளிந்தது. பகுதிதோறும் முறைமையோடு ஒழுகிய தகுதியுடைமையால் இவ் அரசனை மநுநீதிகண்ட சோழன் என்று மாநிலம் புகழ்ந்தது. (இதன் விரிவைப் பெரிய புராணத்தில் உணர்க.)

இவ்வரசனது தகுதியைச் சோதிக்கக் கருதி ஈசனே பசுவாகவும், எமனே கன்றாகவும் வந்தனர் என்ப.

> ஈசன் பசுவாகி எமனொரு கன்றாகி
> வீசுபுகழ் ஆரூரின் வீதிவந்தார் அம்மானை
> வீசுபுகழ் ஆரூரின் வீதிவந்தா ராமாயின்
> காசளவு பாலுங் கறவாதோ அம்மானை
> கன்றையுதை காலி கறக்குமோ அம்மானை.
>
> (சொக்கநாதப் புலவர்.)

தகுதியின் அருமையும் அதனையுடையவர் பெருமையும் இது கூறப்பட்டன.

112. வாணனுயர் செல்வம் வழிவழியா வந்ததென்றும்
கோணாமல் என்னே குமரேசா—பூணுகைச்
செப்ப முடையவன் ஆக்கம் சிதைவின்றி
யெச்சத்திற் கேமாப் புடைத்து. (உ)

குமரேசா! வாணனது உயர்ந்த செல்வம் என்றும் யாமல் ஏன் அவன் வழி வழியாக நின்று வந்தது எனின், செப்பம் உடையவனது ஆக்கம் சிதைவு இன்றி அவனது எச்சத்திற்கும் ஏமாப்பு உடைத்து என்க.

செப்பம்=நடுவு நிலைமை.

எச்சத்திற்கு ஏமாப்பு உடைத்து=சந்ததியார்க்கும் யாதலை உடையது. இறந்தது தழுவிய எச்சவும்மை இதில் தொக்கு நின்றது.

ஏமாப்பு என்பது, காவல் செருக்கு களிப்பு வலிமை என்னும் பல பொருள்களையுணர்த்தும் ஒரு சொல்.

செப்பமுடையவனது செல்வம் தனக்கும் இன்பந்தந்து பின் வருகின்ற தன் சந்ததியார்க்கும் சிதையாமல் நின்று உறுதிதரும் என்பதாம்.

நடுவு நிலைமையுடையவன் செல்வம் என்றும் கெடாமல்நின்று தனது வழியில் வருவார்க்கெல்லாம் உரிமையாம் என்பது இதில் காட்டப்பட்டது. இவ்வுண்மை வாணன்பால் காணப்படும்.

கதை.

வாணன் என்பவர் இற்றைக்கு ஆயிரத்து நூறுவருடங்கட்கு முன்னர்த் தொண்டை மண்டலத்திலே ஆறை என்னும் ஊரிலே தோன்றியிருந்த ஒரு வேளாள மரபினர். நல்ல உபகாரி. அரும்பொருள் படைத்துப் பெரும்புகழ் பெற்றவர். விரிந்த நிலப்பரப்பினைத் தனக்கு உரிமையாகவுடையவர். ஏர் பலவைத்துச் சீர்பெற

வாழ்ந்தவர். யாவரிடமும் ஒப்ப நின்றொழுகிய செப்பமுடையவர். அவருக்கொரு புதல்வன் தோன்றினான். அவனுக்கு ஏகம்பவாணன் என்று பெயர். இவன் இளமைப் பருவமாயிருக்கும்பொழுதே அவர் இவ்வுலகத்தைத் துறந்தார். அரசரும் மதிக்கத்தக்க தமது பெருஞ்செல்வத்தை வேலைக்காரருள் ஒருவனாகிய ஏகன் என்னும் பறையன் போற்றிவந்தான். ஒரு பூதமும் அவனுடனின்று அதனைக் காத்தது. புதல்வன் பருவமுற்றபின் அதனைப் பூதம் அவன்பால் அருளுடன் தந்தது. சிறிதும் சிதைவின்றிவந்த தனது தந்தையின் ஆக்கத்தை யிவனும் பெற்றுத் தகுதியோடு போற்றினான். அழிவின்றிப் பெருகி அதுபின் இவன் வழி வழி வந்தது. நடுவு நிலைமையுடையவன் செல்வம் கெடுதலின்றிவளருமென்பதை உலகம் வாணன்பால் உணர்ந்தது.

நடுவு நிலைமையையுடையவன் செல்வம் என்றும் அழியாதென்பது இதனால் கூறப்பட்டது.

113. பெற்றதாய் ஆக்கமுறப் பேதித்தும் கன்னனேன்
குற்றமென்று நீத்தான் குமரேசா — முற்றுக
நன்றே தரினு நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே யொழிய விடல் (௩)

இ—ள்.

குமரேசா! பெற்ற தாய் வந்து அரசைப் பெறும்படி தன்னைப் பேதித்தும் கன்னன் ஏன் அதனைக் குற்றமென்று ஒழிய விட்டான் எனின், நன்றே தரினும் நடுவு இகந்து ஆம் ஆக்கத்தை அன்றே ஒழியவிடல் என்க.

நடுவு இகந்து ஆம் ஆக்கம் = நடுவு நிலைமையை விடுதலால் உளவாகின்ற செல்வம். ஆகும் என்னும் பெயரெச்சம் இதில் ஆம் என நின்றது. உம்மை உயர்வு சிறப்போடு எதிர்மறைப்பொருளையும் குறிக்கும்.

விடல் என்னும் உடன்பாட்டு வியங்கோள் விடுக என்னும் பொருளில் வந்தது. நடுவு இகந்து ஆம் ஆக்கம், தீங்கே தரும் என்பது தெளிந்தபடியால் நன்றே தரினும் என்று மறையாகக் கூறினார்.

நடுவு நிலைமையை நீங்கி அதனால் எய்தும் ஆக்கம் அப்பொழுது நன்மை தருவதுபோல் தோன்றினும் பின் தீமையே தருதல் ஒருதலையாதலான் அதனை ஒருவன் விரும்பாமல் உடனே ஒழிய விடுதல் வேண்டும் என்பதாம்.

பெரிய செல்வம் வருவது எனினும் அது கருதி அறிவுடையார் தமது நடுவு நிலைமையை விடுதல் செய்யார் என்பது கருத்து. இது கன்னன்பால் காணப்பெறும்.

கதை.

தூது சென்ற காலத்தில் கன்னன் பிறப்பைக் கண்ணன் உணர்த்தினான். கன்னனும் உணர்ந்து கருதி நெஞ்சுருகினான். அதன்பின் கண்ணன் அவனை நோக்கினான். ஐவரும் வழிபட அரசினைப் பெறுவாய். மணிமுடி கவித்து இவ்வணி நிலம் புரப்பாய். வருக ஆங்கு என் மருக என்றான். கன்னன் மறுத்தான். கண்ணன் பிரிந்தான். ஆய்வினை கருதிப் பின் தாயினை ஏவினான். குந்தியும் வந்து தன் மைந்தனைக் கண்டாள். தாயெனத் தேற்றினாள். அச்சேயும் தேறினான். அதன்பின் தம்பியர் ஐவர்பால் வருக எனவும் அரசினைப் பெறுக எனவும் அவள் பலவாறு வேண்டினாள். நடுவு நிலைமையை நீங்கி ஆங்கு வருதல் செய்யேன் என்று கன்னன் கூறிக் கண்ணீர் சொரிந்தான்.

இதனால் கன்னனது நடுவு நிலைமை நன்கு புலனாம்.

(விரிவைப் பாரதத்தில் உணர்க.)

எதன்பொருட்டும் நடுவு நிலைமையை விடுதலாகாதென்பது இதனால் கூறப்பட்டது.

114. மைந்தர் தமைக்கொண்டே மாநிலத்தோர் காந்தாரி
குந்திமன்சீர் கண்டார் குமரேசா—சிந்தைதனில்
தக்கார் தகவிலர் என்பதவரவர்
எச்சத்தால் காணப் படும். (ச)

இ—ள்.

குமரேசா! குந்தியின் தகுதியையும், காந்தாரியின் தகவின்மையையும் அவர் பெற்ற மக்களைக்கொண்டே இவ் உலகத்தார் கண்டார் எனின், தக்கார் தகவு இலர் என்பது அவர் அவருடைய எச்சத்தால் காணப்படும் என்க.

தகவு இலர் — நடுவு நிலைமையில்லாதவர்.

இவர், தகுதியுடையவர். இவர், தகுதியில்லாதவர் என்னும் வேறுபாடு அவரவருடைய மக்களாது நன்மை தீமைகளால் அறியப்படும் என்பதாம். 'மன்சீர்' என்றதனால் காந்தாரி குந்திகளுடைய தலைவர்களாகிய திருதராட்டிரனையும், பாண்டுவையும் குறிக்கும்.

மக்களாது நன்மை தீமைகளால் அவரைப்பெற்ற தாய் தந்தைகளுடைய தகுதியையும், தகவின்மையையும் அறியலாம் என்பது கருத்து.

மனைவியர்க்குத் தானாய்ப் பிறப்ப என்னும் சொல் வாக்கானும், தந்தைதானே மைந்தனாகின்றான் என்ற வேத வாக்கியமும், ஒரு காரியம் அதன் காரணத்தினின்றும் வேறாகாது என்னும் நியதி உண்மையானும், மக்களின் தன்மையைக்கொண்டே அவரைப் பெற்றோர்களின் தன்மையை நன்கு தெரியலாம் என்பது கருத்து. இவ்வுண்மை காந்தாரி, குந்திகள் பாலும், அவர் கணவர் பாலும் காணப்படும்.

கதை.

காந்தாரி என்பவள் சிந்து நதிக் கரையின் அருகிலிருந்த காந்தாரம் என்னும் தேசத்து அரசனாகிய சுபலன் புதல்வி. திரு

தராட்டிரன் மனைவி. துரியோதனன் முதலிய மக்கள் நூற்றுவரையும் பெற்றவள். தம் மக்களுடைய கொடுமையால் இவள் கொடியவள் என்று எண்ணப்பட்டாள். தன் கணவனும் தகவிலான் என்று கருதப்பட்டான். பாஞ்சாலியைத் துச்சாதனன் பற்றியீர்க்கும்பொழுது அவள், இவள் பக்கம்வந்து சார்ந்தாள். பயந்து நடுங்கினாள். இவள் சிறிதும் இரங்காமல் கொடுமொழி புகன்றாள். இவள் தகவிலள் என்பதை அத்தங்கவள் உணர்ந்தாள். பின் மிக்க துன்பமுற்றாள்.

பூவார்குழலி தளர்வொடு தன்புறஞ்சேர்பொழுதஞ்சிறிதிரங்காள்
நீ வாவென்றே யருகிருத்தி நெடுங்கண் பொழியும் நீர்துடையாள்
மேவாரல்லர் தமரழைத்தால் மேலுன் கருத்து விளம்பியரப்
பாவாய் அஞ்சா தேயென்றாள் பலபாதகரைப பயந்தாளே.

(பாரதம்)

இவள் தகவிலள் என்பது இதனால் நன்கு தெளிவாம்.

தம் மக்களுடைய நற்குணங்களால் குந்தியும், பாண்டுவும் தக்கார் என்று போற்றப் பெற்றார். தம் மக்களுடைய கொடுமையால் திருதராட்டிரனும், காந்தாரியும் தகவிலார் என்று தூற்றப் பட்டார். இதன் விரிவு அவர் சரிதத்தில் தெளிவாம்.

செந்நெல்லால் ஆய செழுமுளை மற்றுமச்
செந்நெல்லே யாகி விளைதலால் — அந்நெல்
வயனிறையக் காய்க்கும் வளவய லூர
மகனறிவு தந்தை யறிவு. (நாலடியார்)

பழியின்மை மக்களாற் காண்க ஒருவன்
கெழுவின்மை கேட்டால் அறிக பொருளின்
நிகழ்ச்சியால் ஆக்கம் அறிக புகழ்ச்சியால்
போற்றாதார் போற்றப் படும். (நான் மணிக்கடிகை.)

பெற்றோர் தகுதியை மக்களால் காணலாம் என்பது இதனால் காட்டப்பெற்றது.

115. கொற்றமுறப் பகைக்கும் குந்திமைந்தன் நாட்பார்த்தேன்
குற்றமறச் சொன்னான் குமரேசா—உற்றவரும்
கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்றோர்க் கணி. (ரு)

குமரேசா! பகைவனுக்கும் வெற்றியுறும்படி நாட்பார்த்து ஏன் குந்தி மைந்தன் குற்றம் அறச் சொன்னான் எனின், கேடும், பெருக்கமும் இல் அல்ல நெஞ்சத்துக் கோடாமை சான்றோர்க்கு அணி என்க.

பகை—துரியோதனன்.

குந்தி மைந்தன்—சகாதேவன். நெஞ்சங்கோடாமை—நடுவு நிலைமை தவறாமை.

அல்ல என்பது இல் அல்ல என நின்றது. இவ்விரண்டு எதிர் மறையும் ஒரு உடன்பாட்டை யுணர்த்தும். உண்டாகியுள்ளன என்பது இதன் பொருள்.

கேடும் பெருக்கமும் இல் அல்ல—கேடு வருதலும், ஆக்கம் வருதலும் இல்லாமல் அல்ல. யாவர்க்கும் முன்னமே அமைந்துள்ளன என்பதாம். கேட்டைத் தவிர்தல் குறித்தேனும், ஆக்கத்தைக் கொள்ளுதல் குறித்தேனும், நெஞ்சங் கோடுதல் கூடாதோ எனின், கேடும் பெருக்கமும் யாவர்க்கும் இன்று வருவன அல்ல அவரவர் வினையின்படி அன்றே அமைந்து நின்றுள்ளன, ஆதலால் அவ்வுண்மையை உய்த்துணர்ந்து நடுவு நிலைமை நீங்காமல் நிற்றலே சான்றோர்க்கு அழகு என்க என்பதாம்.

இதனைச் சகாதேவன்பால் காண்க.

கதை.

சகாதேவன் என்பவன் பாண்டுவின் இளைய மனைவியாகிய மத்திரை வயிற்றில் பிறந்த உத்தமன். ஐவரில் இளையவன். அறி

வினில் மூத்தவன். செம்மையும், பொறையும், மெய்ம்மையும் உடையவன். கணித நூற் புலமையில் எவருந் தனக்கு நிகரில்லாதவன். வஞ்சமில்லாத நெஞ்சமும் வாய்மையும் உடையவன். பதின்மூன்று வருடம் வனவாசம் செய்து முடித்து உபப்பிலாவியம் என்னும் நகரத்தில் வந்து தன் தமையன்மாரோடு இவன் தங்கியிருந்தான். அவ்வமையம் பாண்டவர்களோடு போர் தொடங்குதற்கு உரியதொரு நாளைத் துரியோதனன் தெரிய விரும்பினான். நல்ல முகூர்த்தத்தை நன்கு தெரிந்து சொல்லச் சகாதேவன் ஒருவனே வல்லவன் என்பதை உணர்ந்தான். உள்ளந் துணிந்தான். மெள்ள வந்தான். இருந்தவன் எழுந்துபோய் மகிழ்ந்துபசரித்தான். வந்தது என்னென வணங்கிக் கேட்டான். அவன் வாய் கூசாமல் வந்ததை யுரைத்தான். தன் பகைவர் தாழ்ந்தழியவும் தான் உயர்ந்தோங்கவும் உரிமையான ஒருநாளை உணர்த்தும்படி வேண்டினான். உடனே சகாதேவன் கோள் நிலை குறித்து நாள் நலம் ஆய்ந்தான். அதன் பின் அவனை நோக்கினான் 'மார்கழி மாதம் அமாவாசையன்று இரவு பதினெட்டு நாழிகை ஒன்பது விநாடியில் போர்க்கு நாட்செய்த களப்பலி இடுவையேல் குற்றமற்ற வெற்றியை முற்றவும் பெறுவாய்' என்று உற்றதை உரைத்தான். இவன் தகவுரை கேட்டு அவன் உவகை பூத்தான். அதனையே நினைந்து தன் நகரை நோக்கிச் சென்றான். அந்நாளைக் கண்ணன் வஞ்சித்துப் பின் தன் நாளாக்கினான். தமக்குக் கேடுவருமென்பதைக் குறித்தேனும், பகைவன் என்று அவனை வெறுத்தேனும், மனங் கோடாமல் சகாதேவன் சொல்லிய உறுதி மொழியையும் அவனது நடுநிலைமையையும் அனைவரும் புகழ்ந்து போற்றினர்.

(இதன் விரிவைப் பாரதத்தில் உணர்க.)

உள்ளங் கோடாமையே உயர்ந்தோர்க்கு அணியென்பது இதனால் கூறப்பட்டது.

116. கோடினான் நெஞ்சம் குருவிச் சுவவுருவன்
கூடினான் கேட்டேன் குமரேசா—வாடிக்
கெடுவல்யான் என்ப தறிகதன் னெஞ்சம்
நடுவொரீஇ யல்ல செயின். (௬)

குமரேசா! விச்சுவ வுருவன் என்பவன் தன்னெஞ்சம் கோடினவுடனே என கேடு கூடினான் எனின், தன்னெஞ்சம் நடுவு ஒரீஇ அல்ல செயின், யான் கெடுவல் என்பது அறிக என்க.

ஒருவி என்னும் வினையெச்சம் ஒரீஇ என அளபெடுத்து நின்றது. கெடுவல்—அல் விகுதிபெற்று வந்த தன்மை யொருமை எதிர்கால வினைமுற்று. தன்னெஞ்சம் நடுவு ஒரீஇ அல்ல செயின்=தன்மனம் நடுவுநிலைமை நீங்கித் தீங்கு செய்ய நினைக்குமாமாயின்.

யான் கெடுவல் என்பது அறிக=யான் கேடுறுவேன் என்பதனை உணர்க.

ஒருவன் மனம், நடுவு நீங்கிப் பிறருக்குத் தீங்கு நினைக்குமாயின் அவன் கெடுதற்கே ஓர் அறிகுறி என்று அந்நினைவை அவன் உணரவேண்டும் என்பதாம்.

ஒருவன் மனம் கோடுமாயின் அஃது அவனுக்கு ஏதோ ஒரு பெருங்கேடு பின்வருகின்றதென்பதை முன் உணர்த்தும் துற்குறியாம் என்க.

மேல், கோடுதலால் கேடு நீங்காதென்றார். இதில், அதனானே அது வருமென்றார்.

ஒருவன் உளங்கோடியபோதிலேயுடனே அவன் கெடுவான் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை விச்சுவவுருவன் பால் உணரப்படும்.

கதை.

விச்சுவவுருவன் என்பவன் துவட்டா என்னும் அசுர வீரன் புதல்வன். பல நூல்களையும் நலமுறக் கற்றவன். ஆன்ற அறிவு

வாய்ந்தவன். மூன்று தலைகள் ஏய்ந்தவன் மிக்க தந்த சூழ்ச்சியும் உடையவன். சாந்த குருவாகிய வியாழ பகவானை இந்திரன் ஒருகாலத்தில் பிரிந்திருந்தான். அவ்வமையம் இவனை அவன் குருவாகக் கொண்டான். இவனும் இசைந்தான். இனிதேயிருந்தான். இருந்துவருங்கால் தேவர்கட்கு நலமும் பலமும் உண்டாகும்படி இந்திரன் ஒரு வேள்வியை யியற்றினான். அதில் இவன் குருவாக இருந்து தம்மினத்தார்க்கே அவையுண்டாகும்படி கருதினான். வெளியில் அமரர்க்குச் செய்வதுபோல் கூறி உள்ளே அசுரர்க்கே உறுதி நாடினான். நடுவொரீஇ அல்ல செய்தான். இவ்வுண்மையை இந்திரன் உய்த்துணர்ந்தான். உடனே இவன் தலைகள் சிதறும்படி தன் கைக் குலிசத்தால் தாக்கினான்.

வாக்கினான் மனத்தான் வேறுபட்டகஞ் செய்வான் செயலை யக்கை
நோக்கினான் ஓதி தன்னை நோக்கினான் குலிசவேலாற்
றாக்கினான் தலைகள் மூன்றுந் தனித்தனி பறவையாகப்
போக்கினான் அலகைவாயிற் புகட்டினான் புலவுச்சோரி.

(மதுரைக்காண்டம்)

நடுவு நீங்கினவன் கெடுவான் என்பது இதனால் கூறப்பட்டது.

◆

117. நாடிழந்தும் இல்லைவிற்றும் நல்லரிச் சந்திரன்சீர்
கோடாத தென்னே குமரேசா — கோதில்
கெடுவாக வையா துலகம் நடுவாக
நன்றிக்கட் டங்கியான் தாழ்வு (எ)

இ—ள்

குமரேசா! அரிச்சந்திரன் நாட்டினை யிழந்தும் மனைவியை விற்றும் ஏன் அவன் பெருமை குறையவில்லை எனின், நடுவாக நின்று நன்மையின் கண்ணே தங்கினவனது தாழ்வை உலகம் கெடுவாக நினையாதென்க.

தாழ்வு=வறுமை.

உலகம் கெடுவாக வையாது=உலகத்தார் வறுமையாகக் கருதார்.

நடுவு நிலைமை குன்றாமல் நன்னெறியில் நின்றவனது தாழ்வை உயர்ந்தோர் தாழ்வாக நினையார் என்பதாம். உயர்வாக மதிப்பர் என்பது குறிப்பு.

சிறுமையாகக் காணப்படும் வறுமையும் நடுவு நிலைமையுடையான்கட் படுமாயின் பெருமையாக மதிக்கப்படும் என்பது கருத்து.

இவ்வுண்மை அரிச்சந்திரனால் அறியப்படும்.

கதை.

அரிசந்திரன் என்பவன் சூரியகுலத்தில் அவதரித்த திகிரி மன்னன். திரிசங்குவின் புதல்வன். நெறிதவறாத அறிவினையுடையவன். திருவயோத்தியிலிருந்து அரசு புரிந்தான். புரியுங்கால் மாறிய மனத்தராய் விசுவாமித்திரர் அங்கு வந்தார். மன்னனிடம் உரிய சூழ்ச்சியொன்று செய்தார் அரசும் பிறவும் முழுதும் கவர்ந்தார். அதன்பின் மனைவியோடும் மகனோடும் நகரை விட்டகன்றான். குழகன் பெருந்தவ முனிவரை வைதனன் அரசன் குழகனை அதனுடன் கடிந்தான். நடுவாக நின்று பல நன்மொழி புகன்று முனிவரைப் போற்றினான். பணிவுடன் தேற்றினான். அங்ஙனம் ஆயினும், முனிவர் தொடர்ந்தார் அம்மன்னனுக்கு இன்னல் பல செய்தார். அவற்றால் தலைவியைப் புதல்வனை அரசன் விலைசெய்து கொடுத்தான். தானும் வருந்தினான். ஆயினும், நன்னெறி தவறாமல், குன்றென நின்றான். அவனது தாழ்வை உலகம் வாழ்வென மதித்தது.

(விரிவு சரிதையில் தெரிவாம்)

கோடாதவன் கேடு கேடாகாது என்பது இதனால் கூறப்பட்டது.

118. கூடாமல் வீமனொடுங் கோன்தருமன் நீதியன்றேன்
கோடாமல் சொன்னான் குமரேசா—நாடிச் [பால்
சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொரு
கோடாமை சான்றோர்க் கணி. (அ)

குமரேசா! வீமனொடுங் கூடாமல், நீதி கோடாமல் ஏன் தருமன் கூறினான் எனின், சமன் செய்து சீர்தூக்கும் கோல் போல் அமைந்து ஒரு பால் கோடாமை சான்றோர்க்கு அணி என்க.

கோல் = துலாக் கோல்

சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல் = தான் சமனாக நின்று தன் கண் வைத்ததை வரையறுத்துக் காட்டும் துலாக் கோல்போல்.

'ஐயந்தீரப் பொருளை யுணர்த்தலும் மெய்ந்நடு நிலையும் மிகு நிறைகோற்கே' என்றபடி நடுவு நின்று தன் கண் உற்றதின் அளவை உள்ளபடி யுணர்த்துந் தன்மை துலாக் கோலிடம் அமைந்திருத்தலால் அது, நடுவு நிலைமையுடைய சான்றோர்க்கு இங்கு உவமையாக நின்றது.

பகைவர் என்று கோடுதலும், உறவினர் என்று கூடுதலும் இன்றி அவ்விருவர்பாலும் ஏய்ந்ததை நடுவாக நின்று ஆய்ந்து தெளிந்த உண்மையைத் துணிந்து மொழிவதே அறிவோர்க்கு அழகு என்பதாம்.

இது தருமன்பால் அமைந்திருந்தது.

கதை

தருமர் அரசு புரிந்த காலத்தில், வீமன் ஓர் அடவியிற் புகுந்தான். அஃது ஒரு புருட மிருகத்துக்கு உரிமையானது. அது மனிதமுகமும் மிருக உடம்பும் அமைந்தது. மந்திர பலமுடை

யது அது வீமனைக் கண்டது. இருவருக்கும் கலாம் நிகழ்ந்தது. வீமன் அதன் எல்லையைக் கடக்குமுன் அம்மிருகபூதம் அவனைப் பிடித்துவிட்டமையினால் தனக்கு அவன் அடிமையாகவேண்டுமென்றும் இல்லையேல் தான் அவனுக்கு உதவி செய்யவேண்டுமென்றும் முடிவில் அப்பூதம் இம்முடிவைச் செய்தது. வீமனும் இசைந்தான். குறித்த எல்லையில் தருமனை நிறுத்தி இருவரும் ஓட ஒருமைப்பட்டார். பந்தய ஓட்டத்தைத் தொகையில் வைத்த வீமன் பூதத்தின் மாயையைக் கொண்டு விரைந்து ஓடினன். காலின் மாமகன் கால் விசைகொண்டோட பூதமும் அவனைப் பின் தொடர்ந்தது. முடிவிற்றுறுதியில் வீமனைப் பூதம் பிடித்தது. பிடித்த சமயம் வீமன் வலக்கால் எல்லைப்புறத்து நின்றது. இடக்கால் எல்லைக்குள் இருந்தது. வீமன் கடந்தேன் என்றான். பூதம் பிடித்துவிட்டேன் என்றது. நடுநின்ற தருமனை இருவரும் நடுக்கூற வேண்டினர். சான்றோனாகிய தருமன் செய்தி சீர்தூக்கினான். தம்பியென்றுங் கருதாமல் இடக்கால் பக்கத்திற் குரியதே, ஆதலால் அதனைத் துணித்து அதனிடங் கொடு என்றான். வீமனும் இசைந்தான். கோடாமல் சொல்லிய நீதித் துணிவுகண்டு பூதம் அவனைத் தடுத்தது. தருமனது நடுவு நிலைமைக்கு மகிழ்ந்தது. தான் உரிமையாக நின்று உற்றது செய்தது.

விரிவை அச்சரிதத்தில் உணர்க.

குடிப்பிறந்தார் வறுமையினுங் கோடார் என்பது கூறப்பட்டது.

119. மாநில் விகர்ணன் சொல்மன் னவையிற் செப்பமென்றேன்
[illegible] குமரேசா — கூறுகின்ற
சொற்கோட்ட மில்லது செப்பம் ஒருதலையா
உட்கோட்டம் இன்மை பெறின். (௯)

இ-ள்.

குமரேசா! விகர்ணனுடைய சொல் நடுவு நிலைமையுடையது என்று அரசன் அவையில் அனைவரும் ஏன் சொன்னார்

எனின், உட்கோட்டம் இன்மை ஒருதலையாகப்பெறின், சொல் கோட்டம் இல்லது செப்பம் என்க.

சொல் கோட்டம் இல்லது செப்பம்=சொல்லின் கண் கோடுதல் இல்லாதது நடுவு நிலைமையாம்.

உட்கோட்டம் இன்மை ஒருதலையாப் பெறின்=மனத்தின் கண் கோட்டம் இன்மை உறுதியாக அமையப் பெறின்

கோட்டமில்லாத மனமுடையான் கூறுகின்ற நீதிமொழியே நடுவு நிலைமையுடையதாகக் கருதப்படும் என்பதாம்.

உளக்கோட்டமும், மொழிக் கோட்டமும் ஒருங்கே யில்லாத ஒருவனிடத்தே உள்ள செப்பமுடைமைதான் யாவராலும் ஓங்கி நிற்கும் உயர்வுடையது என்பது கருத்து,

அது விகர்ணன் பால் அமைந்திருந்தது.

கதை.

விகர்ணன் என்பவன் துரியோதனனுடைய இளைய தம்பி. நேர்மையான நெஞ்சமும், கூர்மையான மதியும் வாய்ந்தவன். உண்மையை உறுதியாக நின்று உரைக்க வல்லவன். தனது முன்னவன் பொல்லாத செயலைப் பாஞ்சாலிபால் புரியுங்காலத்தில் இவன் நடுநின்று நல்ல நீதிகளைச் சொல்லினான். பிறரெல்லாரும் அரசனுக்கு அஞ்சித் தகுதியின்றி அவையில் தங்கியிருந்தார் இவன்மட்டும் அஞ்சாமல் எழுந்தான். நெஞ்சு கோடாமல் நேர் நின்றான். நன்மொழிகள் பல நன்கு சொன்னான். வீடுமர், துரோணர் முதலிய உயர்ந்தோர் அனைவரும் இவனது தகுதியை மதித்தார். மிகுதியாகத் துதித்தார். தக்கவன் என்று இவனைப் போற்றினர்.

இதன் விரிவு பாரதத்தில் உணரப்படும்.

நடுவு நிலைமையுடையவன் மொழியும் மனமும் கோடா என்பது இதனால் கூறப்பட்டது

120 வாணிகப்செய் ஏலேலர் மற்றவையும் பேணியறங்
கோணாதேன் செய்தார் குமரேசா—காணியா
வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவுந் தமபோற் செயின்.

குமரேசா! ஏலேலர் பிறர் பொருளையும் தம் பொருள்போல் பேணி ஏன் வாணிகம் செய்தார் எனின், பிறவும் தமபோல் பேணிச் செயின், வாணிகம் செய்வார்க்கு நல்ல வாணிகம் ஆம் என்க.

தம என்றது தம் பொருளை

பிறவும் தமபோல் பேணிச் செயின்=பிறர் பொருளையும் தம் பொருள்போல் போற்றி வர்த்தகம் செயின்.

கொள்வதிலும் கொடுப்பதிலும் கொடுமையின்றிச் செய்தலே நடுவு நிலைமை என்றபடி.

வாணிகம் இரண்டனுள் முன்னது வர்த்தகத்தையும், பின்னது ஊதியத்தையும் உணர்த்தி நின்றது.

பிறர் பொருளையும், தம் பொருள் போலவே கருதி வாணிகம் செய்யும் அறிவோர்க்கு அறமும் பொருளும் மிகவும் பெருகும் என்பது கருத்து.

கோடாமல் வாணிகம் செய்பவரே குல வணிகர் என்பதும், அரிய பொருள்களெல்லாம் அவர்க்கே யெளிதில் உளவாம் என்பதும், இதில் உணர்த்தப்பட்டன. இவ்வுண்மை ஏலேல சிங்கர் பால் உணரப்படும்.

கதை.

ஏலேல சிங்கர் என்பவர் நமது வள்ளுவ தெய்வத்தின் காலத்திலிருந்த ஒரு வணிக குல திலகர். உயரிய குணங்களெல்லாம்

ஒருங்கேயுடையவர். வணிக முறையில் எவருந்தனக்கு இணையில்லாதவர். பெருங்கடல் கடந்தும் அரும்பொருள் தொகுத்தார். கலம் பல வைத்து நலம்பெற வாழ்ந்தார். தமது வர்த்தகத் துறையில் எத்திறத்தும் இவர் கோடாமல் நின்றார். பிறவுந் தமபோல் பேணியே செய்தார். அதனால் பெரும்புகழோடு இவர் அரும்பொருள் எய்தினார். இவருக்கொரு அருமைத் திருமகன் தோன்றியிருந்தான். அவனுக்கு அழகானந்தன் என்று பெயர். அரசரும் விரும்பும் பெருந்திருவோடு இவர் சென்னையில் விளங்கியிருந்தார். கொள்வதிலும் கொடுப்பதிலும் கொடுமையின்றி நடுவு நின்று இவர் செய்துவந்த வணிகமாண்மை மக்கள் வாழ்த்தி மகிழ்ந்தார்.

(இதன் விரிவு அபிதான போதத்தில் அறியப்படும்.)

நடுவு நிலைமை குன்றாமல் வாணிகம் செய்வாரே நலம்பெறுவார் என்பது இதனால் கூறப்பட்டது.

(இவ்வதிகாரத்தின் தொகைப் பொருள்.)

நடுவு நிலைமையே ஒருவனுக்குச் சிறந்த நன்மை. நடுவு நிலைமையுடையவன் செல்வம் நெடிது நின்று பயன்தரும். நன்றே தரினும் ஒருவன் நடுவு நீங்கலாகாது. தக்கார் தகவு இலார் என்பதை அவரவர் மக்களால் அறியலாம். கேடுவருவதெனினும் நெஞ்சம் கோடுதல் கூடாது. கோடுதல்தானே கேடுதருங்குறி. கோடாதான் கேடு கேடாகாது. தாம் கோடாமையே சான்றோர்க்கு உயரணி. நடுவு நிலைமையுடையார் மொழி மனம் கோடார். நடுவு நீங்காதவர் நலம் பல பெறுவர்.

௰௨-வது நடுவு நிலைமை முற்றிற்று.

௰௩-ம் அதிகாரம் அடக்கமுடைமை.

அஃதாவது தீநெறியிற் செல்லாமல் நன்னெறியின் கண்ணே அடங்கிநிற்றலை ஒருவன் உடையனாதல். நடுவுநிலைமையுடையார்க்கே இவ் அடக்கம் நன்கு அமையும் ஆதலால் அதன்பின் இது வைக்கப்பட்டது.

121. அன்றொருவன் வாயடங்கி யவ்வுலகுற் றானிருவர்
குன்றினார் என்னே குமரேசா — என்றும்
அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும். (௧)

குமரேசா! அடக்கத்தால் ஒருவன் துறக்கம் புக்கான் அடங்காமையால் என் இருவர் இழிந்து குன்றினார் எனின், அடக்கம் அமரருள் உய்க்கும், அடங்காமை ஆர் இருள் உய்த்து விடும் என்க.

ஒருவன் — சுபன். இருவர் — ரங்கன், சாநன் என்பவர். அடக்கம் அமரர் உள் உய்க்கும் — அடக்கம் தன்னையுடையானைத் தேவருள் செலுத்தும். அமரர் அருள் எனப் பிரித்துப் பொருந்திய அருள் என்று கொண்டு இறைவன் திருவருளையும் குறிக்கலாம்.

ஆர் இருள் உய்த்து விடும் — அரிய இருளில் செலுத்திவிடும்.

விடும் என்றது துணிவுணர்த்தி நின்றது. அரிய இருள் என்றது ஒருவகைக் கொடிய நரகத்தை. அதனைத் தமசு என்பர்.

அடக்கமானது தன்னையுடையானை இன்பவுலகத்தில் செலுத்தும், அடங்காமையானது துன்பவுலகத்தில் தள்ளும் என்பதாம்.

இவ்வுண்மை சுபன் முதலிய மூவர்பாலும் முறையே காணப்படும்.

கதை.

இற்றைக்குப்பல நூற்றாண்டுகட்கு முன்னர் யமுனை நதியின் வடகரையில் ஒரு பேரூர் இருந்தது. அதில் சுபன், சங்கன், சாகன் என்பவர் இருந்தார். இவர் அந்தணர் மரபினர். அம்மூவரும் பதத்தையவேண்டி வனம் புகுந்தார். கனி காய்களை யுண்டு மோன விரதங்கொண்டார். விடாமல் முயன்றார். அவர் விரத நலத்தின் பலனாக விமானங்கள் மூன்று வந்தன. மூவரும் தனித்தனி அவற்றில் ஏறினார். அவை மேல்நோக்கி எழுந்தன. அவ்வமையம் அங்கோர் கருடன் ஒரு பாம்பைப் பற்றிற்று. அதனைக் கண்டார் கண்ட மூவருள் சங்கன் என்பவன் கருடா, அரவை விடுக என்றனன். விட்டது. அதன் பயனாக விமானத்தை விட்டு அவனும் கீழே வீழ்ந்தான். அதனைக்கண்ட சாகன், விடச் சொன்னமையால் அது நிகழ்ந்ததென்று கருதி "பற்றுக" என்றான். கருடனு மீண்டும் அதனைப் பற்றியது. அக்குற்றத்தால் தானும் பற்றற்றுக் கீழே வீழ்ந்தான். சுபன் மாத்திரம், உயிர்கள் வினைப்பயன்களைத் தத்தம் உரிமைக்கேற்ப நுகர்கின்றன என்று தெரிந்து ஒன்றுங் கூறாமல் இருந்தான். அவன் விமானம் மேலெழுந்து விரைந்து சென்றது. அவனும் அமரருள் ஒருவனாய் அமைந்தின்புற்றான். இதில் வந்த கருடனும் பாம்பும் இந்திரனும் யமனும் என்பர். அம்மூவரது அடக்கத்தின் தகுதியைச் சோதிக்கக் கருதி யிவ்விருவர் வந்தனராம். இது போசன் காலத்தில் நிகழ்ந்தது.

உற்றவொரு கருடன்பால் ஒருமொழியை யடக்கமின்றி
யுரைத்தலாலே
குற்றமுற்றார் இருவர்துயர் கொண்டுநொந்தார் ஒருவன்மட்டுங்
குறிக்கொண்டுள்ளம்
பற்றி நின்றான் அடக்கம் அதன் பயனாக வானவனாய்ப்
பயன் துய்த்தானால்
இற்றறிந்தும் அடக்கத்தை யிகந்து துன்பமெய்துகின்ற
தென்னை என்னே.

அடக்கம் தன்னை யுடையானுக்குத் துறக்க இன்பத்தைக் கொடுக்கும் என்பது இதனால்கூறப்பட்டது.

122. அன்றேன் அனுமான் அடக்கத்தை ஆருயிர்போற்
குன்றுமற் காத்தான் குமரேசா—என்றும்
காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்
அதனினூஉங் கில்லை யுயிர்க்கு.

இ—ள்.

குமரேசா! அனுமான் என் அடக்கத்தை உயிர்போற் காத்தான் எனின், உயிர்க்கு அதனின் ஊங்கு ஆக்கம் இல்லை ஆகலின் அடக்கத்தை ஒருவன் உறுதிப் பொருளாகக் கருதிக் காக்க வேண்டுமென்க.

உயிர்க்கு அதனின் ஊங்கு ஆக்கம் இல்லை = உயிர்கட்கு அடக்கத்தினும் மிக்க செல்வம் இல்லை. பொருள் இம்மைக்கு மாத்திரம் ஏது. அடக்கம் இம்மை மறுமை என்னும் இருமை யின்பங்கட்கும் ஏதுவாம், ஆதலால் அதனை உயிர்க்கு ஆக்கம் என்றார்.

பொருள் உடற்கு உறுதி பயப்பது போல் அடக்கம் உயிர்க்கு உறுதி பயக்கும் என்பதும் ஆதலால் அதனையே ஒருவன் உறுதியாகக்கொண்டு ஒழுகவேண்டும் என்பதும் இதில் உணர்த்தப்பட்டன. இவ்வுண்மை அனுமான்பால் உணரப்படும்.

கதை.

அடக்கத்தையே உறுதிப் பொருளாக அனுமார் கருதிக் காத்தார் என்பது அவர் சரிதத்தில் ஆங்காங்கு தெளியப்படும்.

அறிவு மீதே உருவு மீதே ஆற்றல் மீதே அரும்புலத்தின்
செறிவு மீதே செயல் மீதே தேற்றம் மீதே தேற்றத்தின்
நெறியு மீதே நிலை மீதே நீதி மீதே நினக்கென்றால்
வெறியரன்றோ குணங்களான் விரிஞ்சன்முதலாய் மேலோர்கள்.

அரும்புலத்தின் செறிவும் = அரிய புலன்களின் அடக்கமும். இது சீதை அனுமானை நோக்கிக் கூறியது.

தில் எல்லா நல்ல குணங்களும் அனுமான்பால் அமைந்திருந்தன என்பதும் அவன் கொண்டிருந்த அடக்கம்போல் பிரமன் முதலிய மேலோரும் கொள்ளவில்லை யென்பதும் காண்க.

அடக்கமே உயிர்கட்கு உறுதிப் பொருள் என்பது இதனால்

123. பண்டு சடபரதர் பாரில் அடங்கிநின்றும்
கொண்டார் உயர்வேன் குமரேசா—கொண்ட
செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்
தாற்றின் அடங்கப் பெறின்.

குமரேசா! பிறர் அறியாவண்ணம் அடங்கியிருந்தும் சடபரதரை என் உலகம் அறிந்து அவருக்குப் பெருமை செய்தது எனின், அறிவு அறிந்து ஆற்றின் அடங்கப் பெறின், செறிவு அறிந்து சீர்மை பயக்கும் என்க.

செறிவு=அடக்கம்.

அறிவு அறிந்து=அறிவின் பயனையறிந்து. இனி, அறிய வேண்டுவனவற்றை அறிந்து எனவும் இது பொருள்படும்.

அடக்கமே அறிவின் பயன் என்பதை அறிந்து நெறியால் ஒருவன் அடங்கப்பெறின், அவ்வடக்கம் உயர்ந்தோரான் அறியப்பட்டு அவனுக்கு மேன்மையைக் கொடுக்கும் என்பதாம்.

அறிவுடைய ஒருவன் அடங்கித் தன்னை வெளிப்படுத்தாமல் இருப்பினும் எவ்விதத்தாலும் உலகம் அவனை யறிந்து புகழ்ந்து போற்றும் என்பதாம் இவ்வுண்மை சடபரதர்பால் தெளியப்படும்.

கதை

பண்டைக் காலத்தில் சிந்து தேசத்தை ஆண்ட சவ்வீரன் என்னும் அரசன் ஒருவன் இருந்தான். இவனுக்கு இரகுகுணன் எனவும் ஒரு பெயர் உண்டு. இவன் நல்ல அறிவுடையவன். ஒரு நாள் சிவிகையூர்ந்து ஒரு காட்டின் வழியே சென்றான். அறிவறிந்தடங்கிய சடபரகர் இவன் செல்லும் வழியில் ஒரு பித்தரைப்போல் நின்றார். பல்லக்காளர் அவரையும் தம்முடன் சேர்ந்து சுமக்கும்படி பற்றியீர்த்தார். என் செய்வார் பாவம்! அவரும் தாங்கினார். தொடர்ந்து நடந்தார். தரையிற் கிடக்கும் சிறிய பிராணிகள் தமது அடிபடின் மடியுமென்பது கருதித் தாண்டித் தாண்டிச் சென்றார். அச்செலவால் அரசன் அசைந்து வருந்தினான். சிவிகையை நிறுத்தித் தரையில் இறங்கினான். புதியவரைக் கண்டான். அவரது அறிவின் பெருமையையும் அடக்கத்தின் அருமையையும் உய்த்துணர்ந்தான். அடிமிசை விழுந்தான். நெடிது போற்றினான். தனது பிழையைப் பொறுத்தருளும்படி தொழுது வேண்டினான். அவரைச் சிவிகையில் ஏற்றித் தனது திண்டோளால் தாங்கினான். தன்னகர் கொணர்ந்தான். அவரருளால் ஐயம் அகன்றான். மெய்யுணர்வுற்றான். உலகமும் அவரது செறிவை அறிந்தது. சீர் பல செய்தது.

அடக்கமுடையவன் பெருமையை உலகம் அறிந்து போற்றும் என்பது இதனால் கூறப்பட்டது.

124. இல்வாழ்க்கை யுற்றிருந்தும் ஏனுயர்வு பெற்றுநின்றார்
கொல்லோ சனகர் குமரேசா — நல்ல
நிலையிற் றிரியா தடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது. (௪)

இ—ள்.

குமரேசா! சனகன் இல்வாழ்க்கையில் இருந்தும் ஏன் உயர்வு பெற்றார் எனின், நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம் மலையினும் மாணப் பெரிது என்க.

தோற்றம்—உயர்ச்சி.

நிலை—இல்வாழ்பவனுக்குரிய நிலை. அஃதாவது அவன் நிலைத்து ஒழுகும் நெறி. நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்—நிலையில் நின்று வேறுபடாமல் அடங்கினவனது உயர்வு.

மலையினும் மாணப் பெரிது—மலையின் உயர்ச்சியினும் மிகப்பெரிது.

மலையின் உயர்ச்சியே உலகில் உயர்ந்தது எனினும், அதனினும் அடக்சமுடையவன் புகழே உயர்ந்த தென்பதாம். மலை எவ்வளவு தோற்றத்தை யுடையதாயினும் அதனை அடுத்து நின்று காண்பார்க்கே அது காணப்படும். அடக்கமுடையவனை அனைவரும் அறிவர் என்றபடி.

அடங்கின ஒருவன் பெருமையே இவ்வுலகில் அடங்காமல் நிற்கும் என்பது குறிப்பு.

நெறி தவறாமல் அடங்கி நின்றவனே இவ்வுலகில் உயர்ந்தவன் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இது சனகன்பால் உணரப்

கதை.

சனக மன்னன் நெறி நின்று அரசுபுரிந்த காலத்தில் அவன் பால் முனிவர் பலர் வந்து குழுமினர். உண்டியும், உடையும், உறையுளும் உதவி அவரனைவரையும் அவன் ஆதரித்தான். தலைமையான புலமைவாய்ந்த அருந்தவர் ஒருவர்பால் அவர் அமைந்து நூல் பயின்றார். சனகனும் உடனிருந்து பயின்று வந்தான். குறித்த நேரத்தில் எவர் வரவில்லையானாலும் குரு பாடத்தை ஆரம்பித்து விடுவார். அரசன் வரவில்லை என்றால் அவர் நிறுத்தி வைத்திருப்பார். வந்தபின் தொடங்குவர் இதனை முனிவர்கள் எண்ணினார். மனமிக மெலிந்தார். அரசனானபடியால் நமது குரு துறவிகளாகிய நம்மினும் சனகன்பால் நன் மதிப்புக்கொண்டுள்ளார் என்று தம்முட் கூறினார். இதனை உய்த்துணர்ந்த குரு சனகன் உயர்வை அவர்கட்குக் காட்டக் கருதினார். ஒரு மந்திர

பலத்தால் ஒரு பெரு நெருப்பை அரண்மனையில் தோன்றும்படி செய்தார். மாளிகை முற்றும் பற்றி யெரிவதாகக் காணப்பட்டது. பாடங்கேட்கும் பொருட்டுக் குழுமியிருந்தவரனைவரும் குலைந்தெழுந்தார். தங்கள் கோவணங்களையும் கமண்டலங்களையும் குறித்து ஓடினார். சனகன் மட்டும் தனியே யிருந்தான். குருவும் இருந்தார். "நீ ஏன் போகவில்லை" என்று அரசனை வினவினார். எல்லாம் இறைவன் செயல். அடிமை என் செய்வேன் என்று அடங்கியிருந்தான். ஓடின முனிவர் அங்கு ஒன்றும் இன்மையையுணர்ந்தார் மீண்டார். மன்னனையும் குருவையும் வந்து கண்டார். நாணினார். அரசன் அடக்கத்தை அறிந்து போற்றினார். தோன்றிய எவரினும் அவன் தோற்றமே உயர்ந்தது.

அடக்கமுடையவன் உயர்ச்சியே அனைத்தினும் பெரிது என்பது இதனால் கூறப்பட்டது.

125. கண்டு குசேலனைமுன் கண்ணன் பணிந்ததையேன்
கொண்டு புகழ்ந்தார் குமரேசா—உண்டான
எல்லார்க்கும் நன்றாம் பணித லவருள்ளும்
செல்வர்க்கே செல்வந் தகைத்து. (௫)

குமரேசா! கண்ணன் குசேலனைப் பணிந்ததை ஏன் எல்லாருங் கொண்டாடுகின்றார் எனின், பணிதல் எல்லார்க்கும் நன்றாம். அவருள்ளும் செல்வர்க்கே செல்வந் தகைத்து என்க.

பணிதல் = அடங்குதல். தகைத்து = தகுதியையுடையது. பணிதல் தகைத்து என அமைத்து நோக்குக.

அடங்கி ஒழுகும் குணம் செல்வர்க்கு அமையுமாயின் அஃது அவர்க்கு மேலும் ஒரு செல்வம் அமைந்த சிறப்பினையுடையதாம் என்க.

கல்வி அதிகாரம் குடிப்பிறப்பு முதலிய நலங்களையுடையார் அடங்குதலினும் செல்வர் அடங்குதலே சிறந்ததொன்றும் என்பார் "செல்வர்க்கே செல்வம் தகைத்து" என்றார். ஏகாரம்பிரிநிலை.

செல்வமுடையவர் அடக்கமுடையவராயின் அவரது மேன்மை மிகவும் பெரிதாம் என்பது கருத்து. செல்வர் அடக்கமே சிறந்து காட்டும் என்பது இதில் காட்டப்பட்டது. இதனைக் கண்ணன்பால் காண்க.

கதை

மணிமுடி யரசர் பலர் வந்து பணியும்படியான பெருஞ் செல்வத்தைக் கண்ணன் பெற்றிருந்தும் குசேலரைக் கண்டவுடனே அவரை யாரும் நாணப் பணிந்தான். அப்பணிதல் அவனுக்குப் பெருஞ் சிறப்பைத் தந்தது. செல்வர் அடங்கின் அஃது அவர்க்குப் பெரும்புகழை விளக்கும் என்பதை உலகம் கண்ணன்பால் கண்டது

கல்வி யுடைமை பொருளுடைமை யென்றிரண்டு
செல்வமும் செல்வம் எனப்படும்—இல்லார்
குறையிரந்து தம்முன்னர் நிற்பபோல் தாமும்
தலைவணங்கித் தாழப் பெறின். (நீதி நெறி விளக்கம்.)

செல்வர்க்கு அடக்கமே தேடருஞ் சிறப்பு என்பது இதனால் கூறப்பட்டது.

---

126. புற்றோங்க ஏனோ பொறியடக்கி வான்மீகர்
குற்றமற நின்றார் குமரேசா—உற்ற
ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்க லாற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து.

குமரேசா! புற்றுவளர வான்மீகி ஏன் அதில் அடங்கி நின்று தன் பொறிகளை அடக்கினார் எனின், ஆமைபோல் ஒரு

மையுள் ஐந்தும் அடக்கல் ஆற்றின், எழுமையும் ஏமாப்பு உடைத்து என்க.

ஒருமையுள் ஐந்து அடக்கல் ஆற்றின்—ஒரு பிறப்பில் ஐம்பொறிகளையும் ஒருவன் அடக்க வல்லவனாயின் ஆற்றின் என்றார் அதன் அருமை கருதி.

ஐந்து என்னும் எண்ணுப்பெயர் அதனையுடைய பொறிகளையுணர்த்திநின்றது. இஃது எண்ணலளவை ஆகுபெயர்.

கால்கள் நான்கு தலை ஒன்று ஆக ஐந்து உறுப்புக்களையும் ஆமை இடர் புகுதாமல் தன்னுள்ளே அடக்குந் தன்மைபோல் ஒரு பிறப்பிலே ஒருவன் ஐம்பொறிகளையும் பாவம் புகுதாமல் அடக்கவல்லவனாயின், அஃது அவனுக்கு எழுபிறப்பிலும் துணையாய் நின்று இன்பம் பயக்கும் என்பதாம்.

ஒருமையில் ஐந்தை அடக்கினவன் எழுமையினும் இன்புறுவன் என்பது கருத்து. வினைப்பயன் எழுமையும் தொடரும் என்பது இதனானும் தெளிவாம்.

ஒன்று ஐந்து ஏழு என்னும் எண்கள் இதில் ஒன்றிவந்த நயத்தை ஊன்றி உணர்க.

நிலத்தில் வாழும் மக்கள் நிலைத்த இன்பத்தைக் காணவேண்டுமாயின் நீரில் வாழும் ஆமையின் நீர்மையைப் பேணவேண்டுமென்பது குறிப்பு.

ஒரு பிறப்பின் அடங்கக்கால் ஒருவன் எழுபிறப்பிலும் இன்புறுவன் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை வான்மீகியால் உணரப்படும்.

கதை.

வான்மிகி என்பவர் பல்லாயிர வருடங்கட்கு முன்னர் இவ்வுலகில் இருந்த ஒரு பெரியவர். பிறப்பால் அந்தணர். வினைவயத்தால் இவர் தமது குலவொழுக்கத்தை மறந்தார். இழிமகள்

ஒருத்தியை மணந்தார். பழிபடு வினைகள் பலவும் புரிந்தார். அவளோடுகூடி மக்கள் பலரைப் பெற்றார். வழிப்பறி முதலிய கொடுவினைகளைச் செய்தார். அவற்றால் வருவனகொண்டு அவர்களை ஆதரித்து வந்தார். வருங்கால் ஒரு முனிவர் அவ்வழி வந்தார். அவரையும் இவர் ஆறலைக்கத் தொடர்ந்தார். முனிவர் இவரை நோக்கி, என்னிடம் யாதும் இல்லை. ஆயினும், இத்தீவினையால் வரும் பாவம் நின்னையும், இலாபம் உன் மனைவி மக்களையும் பற்றும். இதன் முடிவான பலனை முதலில் தெளிக என்றார். அவரது அறவுரையை இவர் ஆய்ந்தார் தமது குடிசையை நோக்கிச் சென்றார். மனைவி மக்களிடம் தாம் செய்யும் பாவத்தில் பாதி பெறுவீரோ என்றார். பாவம் கொள்ளோம் அதனால் வரும் பொருளையே கொள்வோம் என்றார். ஒருவரும் உறவல்ல என்னும் உண்மையை யுணர்ந்தார். மீண்டார். முனிவரை ஓடிவந்து கண்டார். அடிமிசை விழுந்தார். அருள்புரிய வேண்டினார். அவரும் புரிந்தார். புரிந்தவர் நாரதர் என்பர். புரிந்த மந்திரத்தை இவர் இருந்து சிந்தித்தார். பருவங்கள் பல கடந்தன. இருந்ததிலிருந்து இவர் எழுந்திடவில்லை. புற்றும் பற்றிப் புறத்தே வளர்ந்தது. முற்றும் மறைந்தது. புற்றில் அடங்கி இவர் பொறிகளையடக்கினார். தத்துவவுணர்வை முற்றிலும் பெற்றார். வெளியுற்றார். இராம சரிதமாகிய இராமாயணத்தை வடமொழியில் அழகுற அருளிச்செய்தார். அதன்பின் அனைவரும் இவரை ஆதிகவி என்றார். வன்மீகம்—புற்று. அதனால் மூடப்பட்டதனால் இவர் வான்மீகி எனப் பெற்றார். அருந்தவர் போற்றும் பெருந்தவராய் இவர் ஒருமையில் ஐந்தினையடக்கி எழுமையினும் இன்பமெய்தினார்.

விரிவை இவரது நான்முகத்தில் உணர்க.

எழுமையினும் அடக்கம் இன்பந் தருமென்பது இதனால் கூறப்பட்டது.

◆

127. நாவினைக்கா வாமலன்றேன் நற்கவுந்தி யாலிருவர்
கூவிநரி யானார் குமரேசா—பூவுலகில்
யாகாவா ராயினும் நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. (எ)

இ—ள்.

குமரேசா! நாவைக் காவாமையால் கவுந்தியடிகளால் ஏன் இருவர் நரியாயினர் எனின், யாகாவாராயினும் நாகாக்க காவாக்கால் சொல்லிழுக்குப்பட்டு சோகாப்பர் என்க.

எது என்னும் அஃறிணை ஒருமை வினாவின் பன்மையாகிய 'யா' என்பது எல்லாவற்றையும் என ஈண்டு நிறைவை உணர்த்தி

சொல்லிழுக்குப்பட்டு சோகாப்பர்—சொற்குற்றத்தில் அகப்பட்டுத் துக்கிப்பார்.

எவற்றையடக்காவிடினும் நாவை அடக்கவேண்டுமென்பார் "யாகாவாராயினும் நாகாக்க" என்றார். நாவைக் காத்தலாவது தீய சொற்களைச் சொல்லாதிருக்கும்படி செய்தல்.

மனத்தையும் மெய்யையுங் காவாவழிப்படுங் குற்றத்தினும் ஒருவன் நாவைக் காவாவழிப்படுங் குற்றம் பெரிதாம் என்பது கருத்து.

தன்னால் காக்கப்படுவன எல்லாவற்றுள்ளும் ஒருவன் நா ஒன்றையுமே நாடிக் காத்தல் வேண்டும் என்பதும், காவாக்கால் வெளிப்படையாகப் பெருங் கேட்டை விரைவில் அடைவான் என்பதும் இதில் உணர்த்தப்பட்டன. இது கவுந்தியால் வந்த இருவர்பால் காணப்பட்டது.

கதை.

கோவலன் தனது மனைவியோடு மதுரையை நோக்கிவருங் காலத்தில் கவுந்தியென்னும் ஒரு தவ முது மகளைக் கண்டான். தொழுதான். அவள் இவன் நிலைமையையறிந்தாள். இரங்கி

அருளினார். அறவுரைகள் பல புகன்றாள். தேற்றினாள். அதன் பின் அங்கோர் மலர்ச்சோலையில் அம்மூவரும் தங்கியிருந்தார். அவ்வமையம் ஒரு விடன் தன் காதற்கிழத்தியுடன் அவ்வழி வந்தான். இருவரும் அம்மூவரை யணுகினார். கோவலன் கண்ணகி என்னும் அவ்விருவரது உருவ நலங்களை யிவர் உருவ நோக்கினார். நெடிதுநின்றார். வியந்தார். 'இவர் யாவர்,'' எனக் கவுந்தியிடம் கேட்டார். எம்மக்கள் என்றாள். என்றதைக் கேட்டு நின்றவர் நகைத்தார். ஒரு வயிற்றுட்பிறந்தோர் கொழுநனும் மனைவியுமாய்க் கூடியிருத்தல் கூடுமோ என்று பரிகசித்தார். மீண்டும் மீண்டும் வேண்டிய மொழிந்தார், விகடம் செய்தார். உடனே கவுந்தி வெகுண்டாள். அவ்விருவரையும் நரிகளாகச் சபித்தாள். அவ்வாறே அவர் குறிய நரிகளாய் நெடிய குரலிட்டார். உயர்ந்த மக்கட்பிறப்பை ஒரு சொல்லால் இழந்தார். இழி பிறப்புற்றார். நா காவாமையால் சொல்லிழுக்குப்பட்டு சோகாப்பராயினார்.

இதன் விரிவு சிலப்பதிகாரத்தில் தெளிவாம்.

ஆக்கப் படுக்கும் அருந்தளைவாய்ப் பெய்விக்கும்
போக்கப் படுக்கும் புலைநரகந் துய்ப்பிக்கும்
காக்கப் படுவனவும் இந்திரியம் ஐந்தினும்
நாக்கல்ல தில்லை நனிவெல்லு மாறே (வளையாபதி.)

மொழியடக்கம் இல்லார் இழிவடைவார் என்பது இதனால் கூறப்பட்டது.

128. நன்றுடைய மாடலனும் நன்மையெல்லாம் ஏனிழந்து
குன்றினனோர் சொல்லால் குமரேசா—என்றேனும்
ஒன்றானுந் தீச்சொற் பொருட் பயன் உண்டாயின்
நன்றாகா தாகி விடும்.

இ—ள்.

குமரேசா! மாடலன் ஒரு சொல்லால் தனது நன்மையெல்லாம் ஏன் இழந்து குன்றினான் எனின், தீச்சொற் பொரு

பயன் ஒன்றாயினும் ஒருவன் பால் உண்டாயின், அவன் நன்று தீதாய் விடும் என்க.

தீச்சொல் என்றது குறளை கடுஞ்சொல் முதலிய தீய சொற்

தீச்சொல் பொருட் பயன்—தீய சொல்லின் பொருளால் வரும் பயன்.

ஒன்றானும் உண்டாயின்—ஒரு சிறிது தோன்றினும்.

பிறர் துன்புறத்தக்க ஒரு தீய சொல்லை நாவடக்கமில்லாமல் ஒருவன் சொல்லுவானாயின் அதனால் அவன் நலங்கள் பலவும் நாசமுறும் என்பதாம்.

பல நல்ல சொற்களையுடையவனிடத்தே தீய சொல் ஒன்று தோன்றுமாயின் அஃது அவன் நன்மையெல்லாங் கெடுத்துத் தீமையைக் கொடுத்துவிடும் எனவும் இது பொருள்படும்.

தீய சொல்லை நாவடக்கமின்றிச் சொல்பவன் தீங்குறுவான் என்பது கருத்து. இது மாடலன்பால் காணப்படும்.

கதை.

மாடலன் என்பவன் ஓர் அந்தணன். சோழ நாட்டிலே காவிரிப் பூம் பட்டினத்தை யடுத்திருந்த தலைச்செங்கானம் என்னும் ஊரிலே பிறந்தவன். அரிய விரத ஒழுக்கங்களை யுடையவன். கோவலனோடு பெரு நண்புகொண்டிருந்தான். அவன் நிலை குலைந்து சென்று மதுரையில் கொலையுண்டிறந்ததை யிவன் அறிந்தான். அங்கிருந்து மீண்டான். காவிரிப் பூம் பட்டினத்துட் புகுந்தான். கேட்டவர் நடுங்கும்படி அக்கொலை வினையின் கொடுமையைக் கூறினான். நாவடக்கம் இல்லாமல் இவன் சொல்லிய கடுமொழியின் பயனைக் கோவலனது பெற்றோர் உற்றோர் முதலிய பலரும் அறிந்தார். பரிந்து மாண்டார். அதனால் இவன் புண்ணியத்தை இழந்தான். தீவினைத் துன்பத்தை மேவினான். அதன்பின் அப்பாவத்தைத் தீர்க்கும்பொருட்டு இவன் காசியையடைந்தான். கங்கைபாடி

னான். ஈசனை வணங்கி மாசினை நீங்கினான். தீச்சொற் பொருட் பயன் ஒருவன்பால் ஒன்று இருப்பினும் அஃது அவன் நன்றையெல்லாம் குன்ற அழிக்கும் என்பதை உலகம் இவன் பால் உணர்ந்தது.

கற்றறிவு குலமேன்மை கருணைபெரும் புகழ்ச்செல்வம்
கைம்மா றெண்ணா
ஆற்றுதவு கொடைசீர்மை ஒழுக்கம்அருந் தவநியமம்
உறவின் கேண்மை
மற்றெதிரில் லாத்திண்மை வாய்மைமிகுந் தூய்மைபொறு
வனப்பியாவும்
பெற்றிடினும் அடக்கமில்லாப் பெருமிதத்தால் அத்தனைக்கும்
பிழையுண்டாமால்.

(பிரபோத சந்திரோதயம்)

நாவடக்கம் இல்லாரைப் பாவம் தானே வந்து பற்றுமென்பது இதனால் கூறப்பட்டது.

---

129. ஆற்றாத சீற்றத்தோ டன்றகன்றான் ஏனரசன்
கூற்றால் விதுரன் குமரேசா—மாற்றாத
தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு.

இ—ள்.

குமரேசா! துரியோதனனது ஒரு சொல்லால் விதுரன் ஏன் பெருந் துயர் எய்தி அகன்றான் எனின், தீயினால் சுட்டபுண் உள் ஆறும், நாவினால் சுட்ட வடு ஆறாது என்க.

நாவினாற் சுடுதலாவது கடுஞ் சொற் சொல்லல். வாயினாற் வடு எனவும் பாடம்.

தீயினால் சுட்ட புண் உடம்பில் மட்டும் பட்டுச் சின்னாளில் ஆறித் திரும்;

கொடிய நாவினால் சுட்ட வடு உள்ளத்தில் பட்டு ஒரு காலத்து மாறாதென்பதாம்.

உயிர்களைத் துன்புறுத்துவதில் தீயும் கொடிய நாவும் ஒக்குமாயினும் முன்னது உடம்பைப்பற்றி நின்று ஒரு வகையான் நீங்கும், பின்னது உயிரைப்பற்றி நின்று எவ்வகையானும் என்றும் நீங்காது ஆதலால் தீயினும் கொடிய நாவே தீயது என்பது குறிப்பு.

நாவடக்கமின்றிக் கடுஞ்சொற் சொல்பவனைத் தீயினும் கொடியன் என்று கருதி நல்லோர் அகல்வர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இது விதுரன்பால் உணரப்படும்.

கதை.

கண்ணனை உபசரித்தான் என்ற எண்ணத்தால் துரியோதனன் விதுரனை அவையில் வைத்துவைதான். பொறுமையுடைய விதுரனும் அதனைப் பொறுக்காமல் பதைத்தான். அவனது வெவ்வாயின் வெவ்வுரையை எண்ணி எண்ணி நொந்தான். அது முதல் அவன் முகத்தை நோக்காமல் அகத்தை மாற்றினான். வெறுத்து நீங்கினான். ஆயினும் அவன் வாயினால் சுட்டவடு இவன் மனத்தில் கிடந்தது. மாறாதிருந்தது.

முதல் விழைந்தொருவன் உடனியைந்தபொருள் பற்றியின்புற
முயங்கினும்
அதிகமென்ற பொருள் ஒருவன் வேறுதரின் அவனையே
யொழிய அறிவரோ
பொதுமடந்தையர் தமக்குமண்ணிலிது புதுமையல்ல அவர்
புதல்வனும்
விதுரன் இன்றவனோடுறவு கொண்டதோர் வியப்பை யென்
சொலி வெறுப்பதே.

இது விதுரனைக்குறித்துத் துரியோதனன் கூறிய வடுவுரை.

தீயினுங்கடுஞ்சொல் தீயது என்பது இதனால் கூறப்பட்டது.

130. உண்டாம் அறங்களெல்லாம் உற்றடைய மெய்ப்புகழேன்
கொண்டான் தருமன் குமரேசா—மண்டு
கதங்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி
அறம்பார்க்கும் ஆற்றி னுழைந்து.

இ—ள்.

குமரேசா! எல்லா அறங்களும் தன்னை வந்தடைய ஏன் தருமன் புகழடைந்தான் எனின், கதம் காத்துக்கற்று அடங்கலை ஆற்றுவானது செவ்வியை அறம் ஆற்றின் நுழைந்து பார்க்கும் என்க.

கதம்—கோபம். செவ்வி—தக்கசமயம்.

ஆற்றின் நுழைந்து—நெறியிற்புகுந்து.

கதம் காத்தல்—கோபத்தைக் காத்தல். அஃதாவது அதனை மனத்தில் புகவொட்டாதபடி தடுத்தல்.

பொருளைக் கொள்ளைசெய்யும் கள்ளன்போல், வெகுளி மக்களது அறிவைக்கொள்ளை செய்யும் ஆதலால், அதனை ஒருவன் அஞ்சிக்காக்கவேண்டும் என்பது கருத்து.

கதத்தைக் காத்தலும் கற்று அடங்குதலும் அருமை என்பது ஆற்றுவான் என்பதனால் அறியப்படும்.

வெகுளியின்றிக் கல்வியுடையனாய் அடங்கவல்லவனை அறம் தானே வந்து அடையும் என்பதாம்.

அறிவோடு அடங்கிய ஒருவனை அடைதற்கு தருமதேவதை வழிநோக்கி நிற்கும் என்பார் "ஆற்றுவான் செவ்வியை அறம் ஆற்றின் நுழைந்து பார்க்கும்" என்றார்.

கதம் காத்துக்கற்று அடங்கிய ஒருவனை அறம்தானே வந்து அடையும் என்பது இதில் உணர்த்தப்பட்டது.

இது தருமன்பால் உணரப்படும்.

கதை.

கதம் காத்தலினும் கற்று அடங்குதலினும் தருமர் ஒருவரே எவரினும் முதன்மையானவர். அவற்றால் அறப்பயன் அனைத்தையும் அடைந்தார். அஃது அவர் பெயரானும் அறியப்படும். தனது நாடு முழுவதையும் கவர்ந்துகொண்டு துணைவரோடு பதின்மூன்று வருடம் தன்னை வனவாசஞ்செய்யும்படி செய்த துரியோதனன் மீதும் இவர் கதம் கொண்டிலர். சினந்துபொருது அரசு பெறுவதினும், வனம்புகுந்து திரிவதே நலமென நினைந்தார்.

குரவரையும் இளைஞரையும் குலத்துரிய துணைவரையும்
கொன்று போர் வென்
றரவநெடுங் கடலாடை அவனியெல்லாம் தனியாளும்
அரசுதன்னில்
கரவுறையும் மனத்தாதை முனிக்குரைத்த மொழிப்படியே
கானந்தோறும்
இரவுபகல் பலமூலசாகநுகர்ந் துயிர் வாழ்தல்
இனிது நன்றே. (1)

வயிரமெனுங் கடுநெருப்பை மிகமூட்டி வளர்க்கினுயர்
வரைக்காடென்னச்
செயிரமரில் வெகுளிபொரச் சேரவிரு திறத்தோமும்
சென்றுமாள்வோம்
கயிரவமுந் தாமரையும் கமழ்பழனத் திருநாட்டில்
கலந்துவாழ
உயிரனையாய் சந்துபட உரைத்தருளென்றான் அறத்தின்
உருவம் போல்வான். (பாரதம்.) (2)

தருமன் கதம் காத்த வன்மையும் கற்றடங்கிய தன்மையும் இதனால் இனிது தெளிவாம்.

அடங்கம் உடையானை அறம் விரும்பி யடையும் என்பது இதனால் கூறப்பட்டது.

(இவ்வதிகாரத்தின் தொகைப் பொருள்)

அடக்கம் தன்னையுடையானை இன்பத்திற் செலுத்தும். அடங்காமை துன்பத்தில் தள்ளும். அடக்கமே உயிர்கட்கு ஆக்கம். அடக்கமுடையான் அருஞ்சிறப்படைவான். உலையாது அடங்கினவனே உலகில் உயர்ந்தோன். செல்வர் அடக்கமே சிறப்பினும் சிறப்பு. ஒருமையின் அடங்கினார் எழுமையினும் இன்புறுவர். சொல்லடக்கம் இல்லார் அல்லற்படுவோர். தீச்சொல் ஒன்றால் தீங்கு பல உளவாம். தீயினும் தீய நாவே தீயது. அறிந்துளம் அடங்கினார் அறம்பெற அமைவர்.

13-வது அடக்கமுடைமை முற்றிற்று.

௧௪-ம் அதிகாரம் ஒழுக்கமுடைமை.

அஃதாவது மக்கள் தத்தமக்குரிய நிலையில் வழுவாமல் ஒழுகுதலையுடையராதல். மனம் மொழி மெய்களை முறையே அடக்கி நெறியே செலுத்தும் அறிவுடையார்க்கே ஒழுக்கம் உரிமையாக அமையுமாகலின் இஃது ஈண்டு வைக்கப்பட்டது.

அதிகாரத்தின் அடைவும் இதனானே தெளிவாம்.

131. ஏனோ தசரதனார் இன்னுயிரை நீத்துந்தன்
கோனொழுக்கம் காத்தார் குமரேசா—மாள
ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும். 1)

இ—ள்.

குமரேசா! தசரதன் உயிரைவிடுத்தும் ஏன் ஒழுக்கத்தைக் காத்தான் எனின், ஒழுக்கம் விழுப்பம் தரலான் அவ் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் என்க.

விழுப்பம் தரலான்—சிறப்பினைத் தருதலான்.

பிறப்பால் இழிந்தவனாக எண்ணப்பட்டவனும் ஒழுக்கமுடையனாயின், உயர்ந்தவனாக மதித்துப் போற்றப்படுகின்றான் ஆதலான் 'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்றார்.

விழுப்பத்தைத் தருதலான் ஒருவன் ஒழுக்கத்தை உயிரினுஞ்சிறந்ததாகக் கருதிக் காக்கவேண்டும் என்பதாம்.

உயிரினுஞ்சிறந்த பொருள் ஒன்றும் இல்லை ஆயினும், அது, தீவினைக்கும் இணங்கித் தன்னையுடையார் அனைவர்க்கும் மேன்மையை ஒருபடியாக உதவாமல் நிற்கும் ஓரமுடையது. ஒழுக்கம், நல்வினையொன்றற்கே உரியதாய்த் தன்னையுடையார் எவர்க்கும் சமமான சிறப்பை அமைவுடன் நல்கும் தகவுடையது. ஆதலால் அதனினும் இதனை ஒருவன் ஆர்வமோடு போற்றவேண்டுமென்பது கருத்து.

உயிரைவிட்டாலும் விடலாம் ஒருவன் ஒழுக்கத்தை விடலாகாதென்பது குறிப்பு. இது தசரதன்பால் உணரப்படும்.

கதை.

அறுபதினாயிர வருடங்கள் திருவயோத்தியிலிருந்து செங்கோல் செலுத்திய வெண்குடை வேந்தனாகிய தசரதன் தனது மனைவியருள் கைகேசி என்பவட்கு இருவரங்கள் தருவதாக முன் உறுதி கூறியிருந்தான். பருவங்கள் பல கழிந்தன. பின் மந்தரையால் கைகேசி தூண்டப்பட்டாள். இரவு தன்பால் அன்பால்வந்த அரசன் முன் இவள் துன்பாய்த் தோன்றினாள். அவ்வரங்கள் இரண்டையும் தரும்படி வஞ்சமாய்க் கேட்டாள். அரசன் தந்தேன் என்றான். அதன்பின், அவற்றுள் ஒன்றால் இராமன் வனம்புகுந்து திரியவும், மற்றொன்றால் தன் மகனாகிய பரதன் அரசுபுரிந்து மகிழவும் வேண்டும் என்று அவள் வேண்டி விரித்தாள். அரசன் அதனைக்கேட்டான். பதைத்தான். தனது அருமைத் திருமகனாகிய இராமனை வனஞ்செல்லும்படி சொல்ல அவன் மனம் பொருந்தவில்லை. சொன்னதை மறுக்கவும் அஞ்சினான். பல இனிய மொழிகளால் அவளை நயந்து வேண்டினான். காலிலும் வீழ்ந்தான். தனது ஒழுக்கத்தை ஓம்பும்பொருட்டு உலகையும் உயிரையும்

கொடுப்பதாகச் சொன்னான், தனது செல்லமகன் மட்டும் வனஞ் செல்லாதிருக்கும்படி அவளைச் சொல்ல வேண்டினான். அவள் சிறிதும் இசைந்திலள். அதனால் அரசன் உயிர் துறந்தான். ஒழுக்கத்தை உயிரினும் ஓம்பிய அரசனது விழுப்பத்தை உலகம் போற்றியது.

கண்ணே வேண்டும் என்னினு மீயக் கடவேனென்
உண்ணே ராவி வேண்டினு மின்றே யுனதன்றோ
பெண்ணே வண்மைக் கேகயன் மானே பெறுவாயேல்
மண்ணே கொள்நீ மற்றையதொன்றும் மறவென்றான்.
(கைகேசி சூழ்வினைப் படலம்.)

ஒழுக்கம் உயிரினும் சிறந்தது என்பது இதனால் உணர்த்தப்பட்டது.

132. பண்டிகசன் ஏனோ பரிந்தும் ஒழுக்கத்தைக்
கொண்டினிது காத்தான் குமரேசா — கொண்ட
பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கந் தெரிந்தோம்பித்
தேரினும் அஃதே துணை. (௨)

குமரேசா! பரிந்தும் ஒழுக்கத்தை என் கசன் காத்தான் எனின், தெரிந்து ஓம்பித்தேரினும் துணை அஃதே; ஆதலால் ஒழுக்கத்தைப் பரிந்தும் காக்கவேண்டும் என்க.

பரிந்தும்—வருந்தியும். இதில் உம்மை தொக்குநின்றது.

தெரிந்து ஓம்பித்தேரினும்—நுணுகி ஆராய்ந்து தெளியினும்.

துணை அஃதே—துணையாவது அவ்வொழுக்கமே.

மேல், உயிரினும் ஒழுக்கத்தை ஓம்பவேண்டும் என்றார். அங்ஙனம் அதனை ஓம்பியதனால் வரும் பயன் யாது, என்பாரை நோக்கி யிது கூறினார்.

ஒருவன், இருமை யின்பங்களையும், மருவுதற்கு ஒழுக்கமே என்பது குறிப்பு. ஏகாரம் பிரிநிலை.

ஒழுக்கத்தைக் காத்தற் கண் உளதாம் வருத்தத்தைக்கருதி 'பரிந்தும்' என்றார்.

எவ்வகையாக ஆராய்ந்து தெளியினும் உயிர்க்கு உறுதுணையாய் நிற்பது ஒழுக்கமே ஆதலான், எத்துணை இடுக்கண் வந்த காலத்துந் தளராமல் அதனைக் காக்கவேண்டும் என்பதாம்.

ஒழுக்கத்தை எவ்விதத்தும் ஒருவன் போற்றவேண்டும் என்பது இதில் காட்டப்பட்டது. இது கசன்பால் காணப்படும்.

கதை.

கசன் என்பவன் அமரர் குருவாகிய வியாழன் புதல்வன். அமரரால் போரில் மடிந்த அசுரரை மிருதசஞ்சீவினி என்னும் மந்திரத்தால் அடிக்கடி சுக்கிரன் எழுப்பிவந்தான். அதனால், வானவர் வருந்தினார். அசுரகுருவின்பால் அம்மந்திரத்தைத் தந்திரமாகக் கற்றுவரும்படி அமரர்குரு தன் மகனைச் செலுத்தினார். கசன் சென்றான். சேர்ந்தான். அவர்மனம் மகிழும்படி பணிகள் பலவும் இவன் பணிவோடு புரிந்தான். இவன் வந்திருக்கும் குறிப்பை அசுரர் முந்துற அறிந்தார். கொல்லத் துணிந்தார். குறித்திருந்தார். தனியே ஒருநாள் கசன் வெளியே வந்தான். ஒரு பொழிலுட் புகுந்தான். உடனே சில அசுரரும் புகுந்தார். அவனைக்கொன்று மறைத்தார். குருவின் மகளாகிய தெய்வயானை இயல்பாகவே அவன்மேல் காதல்கொண்டிருந்தாள். அவள் வேண்டுகோளால் சுக்கிரன் அவனை எழுப்பினான். மீண்டும் ஒருநாள் அவனைக் கொன்று சிதைத்து மதுவிற்கலக்கிக் குருவிடம் தந்தார். சுக்கிரன் குடித்தான். உற்றதை உணர்ந்த மகள் தந்தைக்கு உணர்த்தினாள். தந்தையும், தன் வயிற்றில் மதுவுடன் கலந்திருக்கும் கசனை வெளிப்படுத்தக் கருதினான். தனது உயிர் மந்திரத்தை அவன் உணரும்படி சிந்தித்தார். உடனே சுக்கிரன் வயிறு வெடித்தது. கசன் வெளியே வந்தான். தான் உணர்ந்த மந்திரத்தால் இறந்து கிடந்த குருவை எழுப்பினான். வந்த பயன் எய்தினான். தன் தந்தையைச் சிந்தித்தான். அவன் சென்றுவிடுவான் என்று தெய்வயானை தெரிந்தாள். தடுத்தாள். தன்னைக் கலந்து மகிழும்படி

கனிந்து வேண்டினாள். அவன் மறுத்தான். அவள் பன்முறையும் வற்புறுத்தினாள். கசன் கலங்காமல் நின்றான். அதனால், தெய்வயானை சினந்தாள். அம்மந்திரம் பலியாதிருக்கும்படி சபித்தாள். அது பலியாவிடினும் விடுக என்று அவன் சலியாது சென்றான். வருந்தியும் ஒழுக்கத்தை வழுவாமல் காத்தான்.

ஒழுக்கத்தை ஒருவன் உறுதியாகப் போற்றவேண்டும் என்பது இதனால் கூறப்பட்டது.

133. அன்றோர் இழுக்கால் அகலிகையும் கல்லாகிக்
குன்றினாள் என்னே குமரேசா—என்றும்
ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும். (௩)

குமரேசா! ஒரு இழுக்கத்தால் அகலிகையும் ஏன் கல்லாகி இழிந்தாள் எனின், ஒழுக்கமுடைமை குடிமை, இழுக்கம் இழிந்தபிறப்பாய்விடும் என்க. இழுக்கம்—தவறு.

குடிமை என்றது உயர்குலத்தை.

ஒழுக்கத்தால் உயர்குல நன்மையும், இழுக்கத்தால் இழிகுலத்தன்மையும் உயிர்கள் எய்தும் என்பதாம்.

உயர்ந்த குலத்திற் பிறந்தவனாயினும் ஒழுக்கம் இல்லாதவன் இழிந்தவன் என்பதும், இழிந்தகுலத்தில் பிறந்தவனாயினும் ஒழுக்கமுள்ளவனே உயர்ந்தவன் என்பதும் உணர்த்தியபடி.

உயர்குலம் என்பதும் இழிகுலம் என்பதும் ஒழுக்கத்தாலும் இழுக்கத்தாலும் முறையே உணரப்படும் என்பது குறிப்பு.

இழுக்கமுடையார் இழிபிறப்படைவார் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை அகலிகையால் உணரப்படும்.

புதல்வி. அயன்

[illegible] பொழுதுடையவர். உம்பரும் இம்பரும் இவளது உருவநலத்தை வியந்தார். புகழ்ந்தார். மணம்புரிய விரும்பினர். தினந்தோறும் வந்தார். முனிவரும், தேவரும், அரசரும் வருவதை முற்கலர் கண்டார். அயனோ ஆவலால் அவரனைவரையும் நோக்கினான். நீருள் மூழ்கி நெடுநாள் நின்று வெளிவருவோரே அகலிகைக்கு உரியாரென்று முனிவர் புகன்றார். வாரியில் அனைவரும் வந்து புகுந்தார். ஆழ்ந்து மூச்சை அடக்கினார். வளிமேல் அடக்கும் வலியினை யிழந்தார். ஒருவர் பின் ஒருவராய் வெளியே வந்தார். கருத்தடங்காமல் வருந்தமோடகன்றார். இந்திரன் பலமுறை முயன்றான் பயன்பெற நின்றிலன். கோதமர் மட்டும் நெடுநாள் நின்றார். அகலிகையை நினைந்தார். வெளியே வந்தார். வந்தவர் பெருமையைத் தந்தையறிந்தார். தனது குலமகளை அவர் நலமுறத் தந்தார். கோதமர் கொண்டு மகிழ்ந்தார். கூடி வாழ்ந்தார். வாழுங்கால், இந்திரன் ஒருநாள் அங்கு வஞ்சமாய் வந்தான். முனிவர் இல்லில் வஞ்சியும் அவனால் வஞ்சிக்கப்பட்டாள். உடனே, முனிவர் வந்தார். பாவம்! அகலிகை என் செய்வாள். அஞ்சி நின்றாள். இழுக்கந் தெளிந்தார். அம்மெல்லியலை நோக்கினார் கல்லாம்படி சபித்தார். அவளும் கருங்கல்லாகி பருந்தே வீழ்ந்தாள். வழுவில்லவளும் ஓர் இழுக்கால் இழிவினையடைந்தாள். இழுக்கம் இழிந்த பிறப்பாய் விடும் என்பதை உலகம் இவள்பால் உணர்ந்தது.

ஒழுக்கம் உயர்வுக்கும், இழுக்கம் இழிவுக்கும் ஏதுவாம் என்பது இதனால் கூறப்பட்டது.

143. பண்டு சுகுமாரன் பார்ப்பானாய் வந்துமேன்
கொண்டான் இழிவைக் குமரேசா—கண்ட
மறப்பினும் ஓத்துக்கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும். (ச)

இ—ள்.

குமரேசா! சுகுமாரன் பார்ப்பானாய்ப் பிறந்தும் ஏன் இழிந்தானெனின், ஓத்து மறப்பினுங் கொளலாகும், ஒழுக்கம் குன்றுமாயின் பார்ப்பான் பிறப்புக் கெடும் என்க.

ஓத்து—வேதம், ஓதப்படுவது என்னும் ஏதுவான் வந்தது.

பார்ப்பான்—அந்தணன். வேதப் பொருளையே விரும்பிப் பார்ப்பான் என்பதாம்.

பிறப்புக்கெடுதல்—இழி பிறப்பினனாக மதிக்கப்படுதல்.

கற்ற வேதத்தை மறந்தாலும் மீண்டுங் கற்றுக்கொள்ளலாம். ஒழுக்கங் குன்றுமாயின், பார்ப்பான் பிறப்புயர்வு குன்றிவிடும் என்பதாம்.

வேதத்தை மறந்தாலும், வேதியர் ஒழுக்கத்தை விடலாகாது என்பது கருத்து. உம்மை, மறக்கலாகாது என்பதை உணர்த்தி நின்றது.

வேத உணர்வும், ஒழுக்கமுடைமையும், அந்தணர்க்கு மேன்மையைத் தருவனவாம் என்க. பிறர்க்காயின் ஒழுக்கம் ஒன்றேயமையும், வேதியர்க்காயின் அதனோடு வேதவுணர்வும் வேண்டும் என்பது குறிப்பு.

ஓதலிற் சிறந்தன்று ஒழுக்கமுடைமை. (முதுமொழிக் காஞ்சி).

வேதியர்க்கழகு வேதமும், ஒழுக்கமும். (வெற்றிவேற்கை).

ஒழுக்கங் குன்றினால் பார்ப்பான் உயர்வு குன்றும் என்பது

ல உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை சுகுமாரன்பால் உண

பண்டைக் காலத்தில் விந்திய மலைக்கு வடபால் சிந்துநதி யருகில் குஞ்சரபுரியென்று ஒரு நகரம் இருந்தது. அதில் சங்

திரசேகரன் என்னும் அந்தணன் ஒருவன் இருந்தான். அவன் அந்நகரத்து அரசனாகிய பரிபுரஞ்சயன் என்பவனுக்குப் புரோகிதன். அவனுக்குச் சுகுமாரன் என்றொரு புதல்வன் தோன்றினான் இவன் சிறந்த அழகன். பருவமுற்றான். தந்தைசொற் கடந்து தனியே திரிந்தான். ஓதுவதொழிந்தான். உணர்வும் ஒழிந்தான். மங்கையர் குழாத்தே தங்கி மகிழ்ந்தான். ஒழுங்கம் இலனாய் இழுக்கமே புரிந்தான். தையலார் மய்யலில் தனி நின்றுழன்றான். வேதமே பார்ப்பார் இவன் எதிரும் பார்த்தார். வெறுத்து நீக்கினார். தந்தையும் கவன்றார். தனியே அகன்றார். அதன்பின் இவன் மனமிக மெலிந்தான். உலகெங்கும் அலைந்தான். ஒரு புலைமகளைப் பொருந்தினான். அவள்பால் அன்பால் அமர்ந்தினைபுற்றான். எல்லாரும் இவனை இழிவாக எண்ணினார். தனது பிறப்பின் சிறப்பை இவன் இறப்பவும் இழந்தான். உயர்ந்த குலத்தில் பிறந்தவனாயினும் ஒழுக்கம் குன்றினால் அவன் இழிந்தவனாவான் என்பதை இவன் எடுத்துணர்த்தினான். (இதன்விரிவு சிவராத்திரிப் புராணத்தில் உரைப்படும்.)

ஒருவனது குலத்தின் உயர்வும் ஒழுக்கம் இல்வழிக் குன்றும் என்பது இதனால் கூறப்பட்டது.

135. உற்ற திருவோ டுயர்ந்தும் சுயோதனனேன்
குற்றமுறத் தாழ்ந்தான் குமரேசா—பற்றும்
அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன் றில்லை
ஒழுக்க மிலான்கண் உயர்வு. (5)

குமரேசா! துரியோதனன், உயர்வும் திருவும் ஒருங்கே பெற்றிருந்தும் ஏன் தாழ்ந்தான் எனின், அழுக்காறு உடையான் கண் ஆக்கம்போன்று, ஒழுக்கம் இலான்கண் உயர்வு இல்லை யென்க. அழுக்காறு—பொறாமை.

கண்—இடம். இஃது ஏழனுருபு.

பொறாமையுடையவனிடத்தில் செல்வம் நில்லாதவாறுபோல் ஒழுக்கம் இல்லாதவனிடத்தில் உயர்வு நில்லாது என்பதாம்.

அழுக்காறின்மை ஆக்கத்திற்கும், ஒழுக்கமுடைமை உயர்வுக்கும் ஏதுவாம் என்க.

பொறாமையும், தீய ஒழுக்கமும் பொருந்தியவன் உயர்வையும், திருவையும் ஒருங்கே இழப்பான் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை துரியோதனன்பால் உணரப்படும்.

கதை.

துரியோதனன் சந்திரகுலவேந்தன். அத்தினாபுரியிலிருந்து அரசுபுரிந்தவன். திருதராட்டிரனுக்குக் காந்தாரியிடம் பிறந்தவன். ஐங்காமுடி மன்னன். அருந்திறலும், பெருந் திருவும் இவன்பால் இயல்பாகவே அமைந்திருந்தன. இறந்தாரையெழுப்புதற்குரிய மந்திரத்தையும் பெற்றிருந்தான். எனினும் கொடிய குணங்களெல்லாம் இவனிடங் குடிகொண்டிருந்தன. தனது தாயத்தாராகிய தருமன் முதலியோரிடம் பொறாமைகொண்டான். அவர்பால் பொல்லாதன புரிந்தான். வீடுமர் முதலிய நல்லோர் சொல்லையும் மறுத்தான். தருக்கினான். ஒழுக்கமின்றி இழுக்கமே செய்தான். சிறந்த ஆக்கமும், உயர்ந்த ஊக்கமும் சேரப் பெற்றிருந்தும், அழுக்காறும், தீய ஒழுக்கமும் உடைமையால் இவனை உலகம் இகழ்ந்தது. தன் சுற்றமுந் தாழக் குற்றமே செய்தான். அதனால், அவன் கோலும் இழந்தான். தன் கோலமும் அழிந்தான். (இதன் விரிவு பாரதத்தில் உணரப்படும்).

ஒழுக்கம் இல்லானுக்கு உயர்வு இல்லை என்பது இதனால் கூறப்பட்டது.

136. வீடுமனார் கொண்ட விரத ஒழுக்கத்தைக்
கோடாதே தன் காத்தார் குமரேசா—தேடும்
ஒழுக்கத்தின் ஒல்கா ருரவோர் இழுக்கத்தின்
ஏதம் படுபாக் கறிந்து (௬)

குமரேசா! தாம் கொண்ட விரத ஒழுக்கத்தை வீடுமர் ஏன் என்றும் கோடாமல் காத்தார் எனின், இழுக்கத்தின் ஏதம் படுபாக்கு அறிந்து, உரவோர், ஒழுக்கத்தின் ஒல்கார் என்க.

உரவு—அறிவு. வலியும் ஆம். ஒல்கார்—ஒடுங்கார். படுதல் என்னும் தொழிற்பெயர், தல்விகுதியின்றிப் பாக்கு என்பதைப் பெற்று வந்தது. பாக்கு இங்கே தொழிற்பெயர் விகுதியாய் நின்றது.

ஏதம் படுபாக்கு அறிந்து—குற்றம் உண்டாதலை உணர்ந்து. ஒழுக்கம் தவறினால் குற்றம் வரும் என்பதை யுணர்ந்து அறிவோர் நெறிவழுவாமல் ஒழுகுவர் என்பதாம்.

அடுக்கும் இடுக்கண்கட்கு அஞ்சி அறிவோர் ஒழுங்கில் சுருங்கார் என்பார் “உரவோர் ஒழுக்கத்தின் ஒல்கார்” என்றார்.

தாம் பொருந்திய ஒழுக்கத்தை அறிவோர் வருந்தியும் காப்பர் என்பது கருத்து.

எத்துணை இடையூறுகள் வரினும் உரவோர் ஒழுக்கம் தவறார் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இது வீடுமபால் உணரப்

கதை.

காசிமன்னன் புதல்வியாகிய அம்பை என்பவள் வீடுமனை மருவியின்புற விழைந்தாள். அவரது அறிவின் பலத்தையும் ஒழுக்கத்தின் நலத்தையும் தெரிந்தாள். அவரை இசையும்படி செய்ய எவராலும் இசையாது என்பதையும் அறிந்தாள். அவரது குருவாகிய பரசுராமரால் அது முடியுமென்று முடிவில் தெளிந்தாள். அவர்பால் வந்தாள். வணங்கினாள். தனது கருத்தை யுணர்த்தினாள். தன்னால் அது முடியும் என்று அவர் கூறினார். அவளோடு அத்தினபுரிக்கு வந்தார். குருவின் வருகையை வீடுமர் அறிந்தார். எதிர்கொண்டு சென்றார். அவரடியிணை முப்பட

அன்புடன் தொழுதார். அழைத்துவந்தார். சிறந்ததவிசொன்றில் இருத்தி மகிழ்ந்தார். போற்றிநின்றார். நின்றவரை இருந்தவர் நோக்கினார். அம்மையை அன்புடன் அணைந்துவாழ் என்றார். விநோதப்பட்டார். வெம்பிப் பறைந்தார். குருமொழி யேனும் இது இறுமொழி என்றார். உயிர் நீங்கினும் ஒழுக்கத்தின் ஒல்கேன் என்றார். அவரது அறிவின் திறத்தை அகிலமும் புகழ்ந்தது.

இன்சொலா லவனிகொண்ட எந்தைமுதல் இம்பமன்று
மேனிசெய்த நாள்
வன்சொலா லிரத மணைமுறேறினை மனத்தினல் விரத
மன்னினேன்
சொல்யாவரு மறுமொரனக்கருத் தீபுரைக்கினு
நிகழ்ந்திடேன்
புன்சொலானதினி மாதவத்தின் மிகு முனிவ நின்செவி
பொறுக்குமோ. (௧)

களம்புகுந்தவரை மீளவேகுதல் கொடாத கார்முக

உளம்புகுந்தினி திருக்கு நற்கடவுள் உன்னையன்றியிலை
யுண்மையால்
வளம்புனைந்தவது ராகபோக மிகு மாதரா மங்கையர்
பொருட்டினால்
விளம்புமிந்தமொழி யொழிக என்றனுயிர் வேண்டும்
என்னினும் வழங்குவேன். (௨)

உயர்ந்தோர் என்றும் ஒழுக்கம் குன்றார் என்பது இதனால் கூறப்பட்டது.

---

137. வீடாத மேன்மையுற்ற வெண்மதியும் வெம்பழியைக்
கூடினான் பின்பேன் குமரேசா — நாடும்
ஒழுக்கத்தி னெய்துவர் மேன்மை யிழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி. (எ)

குமரேசா! மேன்மை பெற்றிருந்த வெண்மதி பின்பு ஏன் வெம்பழியை மேவினார் எனின், ஒழுக்கத்தால் மேன்மையை எய்துவர், இழுக்கத்தால் எய்தாப்பழியை எய்துவர் என்க.

வெண்மதி—சந்திரன். இழுக்கம்—ஒழுக்கந்தவறு.

எய்தாப்பழி—எய்துதற்கு உரித்தல்லாத பழி, அடாப்பழி என்றபடி.

ஒழுக்கம் தவறினவன் செய்யாத குற்றங்களைச் செய்ததாகப் பிறர் அவன்மேல் பொய்யாகக்கூறினும் உலகம் அதனையும் அவன் இழுக்கப்பற்றி மெய்யாகக்கொள்ளும் ஆகலின் எய்தாப் பழியை அவன் எய்துவன் என்க.

ஒழுக்கமுடையான் மேன்மையை எய்துவன், அஃதிலாதவன் பழியை அடைவான் என்பதாம்.

ஒழுக்கத்தால் பெருமையும், இழுக்கத்தால் சிறுமையும், முறையே ஒருவனுக்கு உண்டாம் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை சந்திரன்பால் உணரப்படும்.

கதை.

சந்திரன் விண்ணொளியாகி விளங்கிய மேன்மையன். தண்ணளியுடையவன். உயிர்களெல்லாம் உவந்து தொழத்தகுந்தன்மையை இயல்பாகப்பெற்றவன். கலைகள் நிறைந்து பேரொழுக்கமுடையனாய் இளமையில் விளங்கினான். அதனால் பெருமேன்மை எய்தினான். ஒருநாள் தமது குருவாகிய வியாழபகவானது மனைவியை விரும்பினான். ஒழுக்கந்தவறினான். இழுக்கமே புரிந்தான். அதனால் இந்திரன் முதலிய இமையவரெல்லாம் இவனைப் பழித்தார். பகைத்தார். ஒழுக்கத்தால் தான் முன் எய்தியிருந்த மேன்மையை ஓர் இழுக்கத்தால் இழந்தமையை நினைந்து மதியும் வருந்தி

ஞான். அதன் பின் தக்கன் மகளை மணந்தான். அவனால் அடாப் பழியையும் அடைந்தான். அல்லலும் உற்றான். பரமனையடைந்து தன் பழியை நீக்கினான்.

விரிவு சரிதையில் தெளிவாம்.

ஒழுக்கத்தால் புகழும், இழுக்கத்தால் பழியும் உளவாம் என்பது இதனால் கூறப்பட்டது.

138. என்றும் சகுனி யிடும்பையுற்றான் நல்லொழுக்கம்
இன்றியதால் என்னே குமரேசா—ஒன்றுத
நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கந் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும். (அ)

குமரேசா! நல்லொழுக்கம் இல்லாத சகுனி ஏன் என்றும் இடும்பையுற்றானெனின், நல்லொழுக்கம் நன்றிக்கு வித்து ஆகும் தீயொழுக்கம் என்றும் இடும்பைதரும் என்க.

நன்றி—அறம். வித்து என்றது காரணத்தை.

நல்லொழுக்கம் நன்றிக்கு வித்து ஆகும்—நல்ல ஒழுக்கம் அறத்துக்குக் காரணம் ஆகும்.

மரம், வித்திலிருந்து உண்டாதல்போல், அறம், நல்ல ஒழுக்கத்திலிருந்து உண்டாம் என்பதாம்.

நல்ல ஒழுக்கம் இன்பத்திற்கும், தீய ஒழுக்கம் துன்பத்திற்கும் ஏதுவாம் என்பது கருத்து.

'என்றும்' என்றது, இம்மை மறுமை என்னும் இருமையிலும் தீயொழுக்கம் துன்பந்தரும் என்பது கருதி.

மேல், ஒழுக்கத்தால் புகழும், இழுக்கத்தால், இகழும் வரும் என்றார். இதில், முறையே அவை இன்பமும் துன்பமும் தரும் என்றார். எனவே ஒழுக்கமுடையவர் புகழையும் இன்பத்தையும் பொருந்துவர் என்பதும், அஃதில்லாதவர் பழியையும் துன்பத்தையும் அடைவர் என்பதும் தெளியப்படும். தீயொழுக்கமுள்ளவர் என்றுந் துன்புறுவர் என்பது இதில் காட்டப்பட்டது. இது சகுனிபால் காணப்படும்.

கதை

பண்டைக்காலத்தில் சிந்துநதி யருகில் விரிந்த நிலப்பரப்பு ஒன்று அமைந்திருந்தது. வளமிகவுடையது அதற்குக் காந்தாரம் என்று பெயர். அத்தேசத்தைச் சுபலன் என்னும் அரசன் ஆண்டு வந்தான். அவனுக்குப் புதல்வன் ஒருவனும் ஒருபுதல்வியும் தோன்றினர். அவ்விருவருக்கும் முறையே சகுனி என்றும் காந்தாரி என்றும் பெயர். இச்சகுனி சூதாடுவதில் மிகவல்லவன். பொய்யும், புன்மையும் பொறாமையும் வாய்ந்தவன். வஞ்சகன். தீயநெஞ்சன். தனது மருகனாகிய துரியோதனனைத் தீயவழியிற் செலுத்தினவன். அரசகுலத்திற் பிறந்தும் தனது தீய ஒழுக்கத்தால் சிறுமையே அடைந்தான். பாரதப் போரின் இறுதி நாளில் இவன் நகுலனால் கொல்லப்பட்டான் கொடியவர்களைக் கண்டால் உலகம் இன்றும் சகுனியைக் குறிக்கும். கொடுமைக்கு ஓர் வரம்பாகி நின்று இம்மையை என்றும் எய்தினன். (விரிவு அவன் சரிதத்தில் புலனாம்)

தீயொழுக்கம் துன்பந்தரும் என்பது இதனால் கூறப்பட்டது

—0—

139. சொல்லவில்லை யென்னேயோ நீசொன்னா லென
கொல்லவந்தார் பாலுங் குமரேசா [illegible]
ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல். (௯)

குமரேசா! ஏசுநாதர் தன்னைக்கொல்ல வந்தவரிடத்தும் என் ஒரு தீயசொல்லையும் சொல்லவில்லை எனின், தீயசொற்களை

வழுக்கியும் வாயால்சொலல், ஒழுக்கமுடையவர்க்கு ஒல்லா. என்க.

வழுக்கியும்—மறந்தும். ஒல்லா—முடியா.

தீய என்றது பொய், குறளை கடுஞ்சொல் ப[illegible] ஒல்லா என்பது அஃறிணைப் பன்மை வினை [illegible] அதற்கியையச் சொலல், என்பதையும் பலவாகக் கொள்க.

ஒல்லாதே எனவும் பாடம்.

ஒழுக்கமுடையவர் தீயசொற்களை மறந்தும் தம் வாயால் சொல்லார் என்பதாம். நல்லோரது நா, தீயன வழங்கி அறியாத தூய்மையுடையது, ஆதலான் அவர் மறப்பினும் அஃது அவைகளைச் சொல்லாதென்பது கருத்து.

என்றும் எவ்விடத்தும் நல்லோர் தீச்சொல்லைச் சொல்லார் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை ஏசுநாதரால் உணரப்படும்.

ஏசுநாதர் என்பவர் மாசில்லாத ஒரு மாதவர். இற்றைக்கு ஆயிரத்துத் தொளாயிரத் திருபத்து நான்கு வருடங்கட்கு முன்னர் மேல்நாட்டிலே ஐரோப்பாக் கண்டத்திலே கலிலேயா என்னும் தேசத்திலுள்ள நாசரேத்து என்னும் ஊரிலே இவர் அவதரித்தார். இவரது தோற்றம் மிக்க அற்புதமுடையது. மரியாள் என்னும் ஒரு கன்னி வயிற்றில் தோன்றினார். இவர் தோன்றிய பின் அந்நாடு அடைந்த நலங்கள் பல. இவரது ஞானவொளியால் அது தன் காரிருள் நீங்கிச் சீர்பெற விளங்கிப் பிறநாடுகளும் பேரொளி வீசும் பெருமையைப் பெற்றது. தமது இளமைப் பருவத்தே இவ்வுலகியலையும் உணர்வியலையும் [illegible] தெளிந்தார். முற்றத்துறந்தார். பற்றற்று நின்றார். எங்கும் சென்றார். எல்லாருக்கும் நல்ல நீதிகளைப் போதித்தார். ஒழுக்கத்தை உயர்வாக மதித்தார். அதனை உயிரினும் ஓம்பினார். பொறுமையும் வாய்மையும் பொருந்திய புனிதர். அருள் மிகவுடையவர். இவர் அருளியுள்ள மொழிகளெல்லாம் நீதிமயமானவை. புனித வேத வசனங்களாக மதிக்கப்படுகின்றன. இவர் சொல்லிய மொழிக

ளைக் கேட்டும் நல்லொழுக்கத்தைக் கண்டும் பல்லாயிரக்கணக்கான மனிதர்கள் இவரைப்பின்பற்றினர். அனைவரும் இவரைத் தெய்வமாக மதித்துப் போற்றினர். அதன்பின் இவரது பெருமை எங்கும் பரவியது. அதனால், சிலர் இவர்மீது பொறாமை கொண்டனர். பொல்லாதன செய்தனர். அவ்வெல்லாவற்றிலும் இவர் நிலைகுலையாமல் நின்றார். தமக்குத் தீமை செய்தவர்க்கும் நன்மையே செய்தார் வெறுத்து வைதாரையும் பொறுத்து வாழ்த்தினார். ஆயினும் அப்பகைவர் இவர்க்கு அல்லல் பல செய்தார். முடிவில் கொல்லவே துணிந்தார். தனித்த ஓர் இடத்தில் பணிகைப்பிடித்தார். பாவம்! இவரது மெல்லிய கைகளிலும் நல்லமார்பிலும் வல்லிரும்பை அடித்தார். கொடுவதை செய்தார். அத்தீயவர் தீமைக்கு இவர் திருவுளமிரங்கினார். அவர் நலமுறத்தவலை நாடிநயந்தார். இதமே கூறித்தன் இன்னுயிர் தீர்ந்தார். வழுக்கியும் தீச்சொல்லை இவர் வாய்திறந்துரைத்திலர். இவரது ஒழுக்க நலத்தை உலகம் புகழ்ந்தது.

(இதன் விரிவு அவர்சரிதையில்உணரப்படும்.)

தீச்சொல்லை மறந்தும் ஒழுக்கமுடையவர் சொல்லார் என்பது இதனால் கூறப்பட்டது.

—0—

140. கற்றறிந்தும் நற்சமணர் கல்லார்போல் ஏன்மடமைக்
குற்ற முற்றார் முன்னம் குமரேசா—உற்ற
உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார் (ய)

இ—ள்.

குமரேசா! சமணர் பலநூல்களைக் கற்றிருந்தும் ஏன் கல்லார் போல் மடமையுற்றார் எனின், உலகத்தோடு ஒட்ட ஒழுகுதலைக் கல்லாதார், பலகற்றும், அறிவில்லாதார் என்க.

உலகம் என்றது உயர்ந்தோரை, பல என்றது பலநூல்களை.

உலகத்தோடு ஒட்ட—உலகத்தோடு பொருந்த.

உயர்ந்தோர் ஒழுகிய வழியே ஒழுகுதலை அறியாதார், பல நூல்களையும் கற்றவராயினும், அறிவில்லாதவரே யாவரென்பதாம்.

உலகத்தோடு ஒட்ட ஒழுகல் என்றது, பழையன கழித்தும் புதியன புகுத்தியும் இடங்காலங்கட் கேற்ப இசைந்து ஒழுகுதலை என்க.

நூலுணர்வு சால உடையராயினும் உலக உணர்வு இல்வழி அதனால் பயன் இல்லையென்பது கருத்து.

இது சமணர் செயலால் காணப்படும்.

கதை.

சமணர் என்பார், இற்றைக்கு ஆயிரத்தைந்நூறு வருடங்கட்கு முன்னர் இவ்வுலகில் உயர்நிலையிலிருந்த ஒரு கூட்டத்தார். பல நூல்களையும் பழுதறக் கற்றவர். விக்கிரமபாண்டியன் மதுரையிலிருந்து அரசுபுரியுங் காலத்தில் அங்கு வந்தார். ஓருயிரையும் கொல்லலாகாதென்று தமது குரு போதித்திருந்தார். அதனால் அவர்கள் தங்கள் தலையிலிருந்த மயிர்களைத் தனித்தனி பறித்தார். ஏனெனில் அவைகள் இருந்தால் பேனும், ஈரும் பெருகி மடியுமாம். தரையில் நடந்தால் சிறு பிராணிகள் மடியுமென்று கருதி மரங்களில் உறிகளைக் கட்டி அவற்றில் தங்கித் தொங்கினார். செல்லவேண்டின் மயிற்பீலியால் நீவிச் செல்வர். மெய் வருத்தத்தால் உண்டாயதென்று கருதி நூல் ஆடையை உடுக்கார். இவ்வகையில் உலகத்தோடு ஒட்டாமல் பலவழியிலும் மாறுபட்டிருந்தனர். இப்படியிருந்தும் விக்கிரமவேந்தனைக் கொல்லத் துணிந்தார். அதனையறிந்த மன்னன் அவரனைவரையும் தண்டித்து அடக்கினான். பல நூல்களையும் கற்றிருந்தும் உலகொழுக்கங் கல்லாமையால் அறிவிலிகளாக அவர்கள் இழிக்கப்பட்டனர்.

உலகத்தோடு பொருந்த ஒழுகாதவர் அறிவில்லாதவரே என்பது இதனால் கூறப்பட்டது.

[illegible] னை நாணம் பொய்ம்மொழி யழுக்காறின்மை
[illegible] மை [illegible]க்த பயில்புறக் கரணமோம்பல்
[illegible] ல்ல மைநாளும் முனிவின்மை யுயிர்கொல்லாமை
பிறர்மனை நயத்தலின்மை நன்மொழி பிறழா வாய்மை.

புண்ணிய நன்னீராடல் கடவுளர் பூசையாற்றல்
உணவளி[illegible] டமிட்சிவேத பாரகர்க் கூட்[illegible]ல் நிய
[illegible] தொழுகுதல் கடுஞ்சொலின்மை
எண்ணிய [illegible]கள்நான்கு குலத்திறக்கும இயைந்தவாமால்.

(கூர்ம புராணம்.)

இழிந்த சாதிய ராயினும் புண்ணியம் இயற்றின்
கழிந்த மேன்மைகூர் சாதிய ராகுவர் கடையா
யொழிந்த பாதக மியற்றுந ருயர்ந்தவ ரெனினும்
பொழிந்த தீமைசால் புலைதொழிற் புன்மையராவர்.

ரகசியம்.)

[illegible] ர்வக் [illegible]தளிமின் தெளிந்தார்ப் [illegible]பணுமின்
பொ[illegible]ய்யுரை [illegible]யஞ்சுமின் புறஞ்சொற் போற்றுமின்
ஊனூண் துறமின் உயிர்க்கொலை [illegible]மின்
தானஞ் செய்ம்மின் தவம்பல தாங்குமின்

செய்ந்நன்றி கொல்லன்மின் திநட்பு இகழ்மின்
பொய்க்கரி போகன்மின் பொருள்மொழி நீங்கன்மின்
[illegible] ங்களம் அகலாது அணுகுமின்
பிற[illegible]ர் அவைக்களம் பிழைத்துப் பெயர்மின்

பிறர்மனை அஞ்சுமின் பிழையுயிர் ஓம்புமின்
அறமனை காமின் அல்லவை கடிமின்
கள்ளுங் களவும் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினில் ஒழிமின்

இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையா
உளநாள் வரையாது ஒல்லுவது ஒழியாது

செல்லுந் தேஎத்துக்கு உறுதுணை தேடுமின்
மல்லன்மா ஞாலத்து வாழ்வீர் ஈங்கென. (சிலப்பதிகாரம்)

(இவ்வதிகாரத்தின் தொகைப்பொருள்.)

ஒழுக்கம் உயிரினும் சிறந்தது. அதனை வருந்தியும் காக்க வேண்டும். ஒழுக்கமே உயர்குலம். அது குன்றினால் அந்தணர் குலங் குன்றும். அஃதில்லாதவனுக்கு உயர்வு இல்லை. அறிவோர் எவ்வகையினும் ஒழுக்கம் குன்றார். அதனால் மேன்மையுண்டாம். அது நீங்கினால் பழியுண்டாம். தீயொழுக்கமுடையார் என்றுந் துன்புறுவர். ஒழுக்கமுடையவர் ஒருபோதும் தீச்சொல்லைச் சொல்லார். நூல்களை அறிந்திருப்பினும் உலகறிந்து ஒழுகவில்லையானால் அவ்வறிவால் பயன் இல்லை.

14-வது ஒழுக்கமுடைமை முற்றிற்று.

௰௫-ம் அதிகாரம் பிறனில் விழையாமை.

அஃதாவது பிறனுடைய இல்லாளைக் காமமயக்கத்தால் காதலியாமை. ஒழுக்கமுடையார்கண் இயல்பாகவே அமைந்திருக்க வேண்டிய உயர் குணங்களுள் இது முதலது ஆதலான் அதன்பின் வைக்கப்பட்டது.

—0—

141 எள்ளிமுனி தாய்மொழிந்தும் ஏன்மெய்மன் வீடுமன்முன்
கொள்ளவில்லை பெண்ணைக் குமரேசா—கொள்ளும்
பிறன்பொருளாட் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்
தறம்பொருள் கண்டார்கண் இல். (க)

இ—ள்.

குமரேசா! முனிவரும், தாயும் இனிதாக மொழிந்தும் மெய்மன்னும் வீடுமனும் பெண்ணை விழைந்து ஏன் கொள்ளவி

ல்லை எனின், பிறன்பொருளைப் பெட்டு ஒழுகும் பேதைமை ஞாலத்து அறமும் பொருளும் கண்டார்கண் இல்லையென்க.

முனி—விசுவாமித்திரர். பெயமன்—அரிச்சந்திரன்.

தாய்—பரியமங்கி

பிறன்பொருளாள்பெட்டு—பிறனுடைய பொருளாயிருப்பவளை விரும்பி.

ஒருவனுக்கு உரிமையான பொருள்களுள் தலைமையானது மனைவியே, ஆதலின், அவளைப் பொருள் என்றார்.

அறம்பொருள் என்றது அவற்றின் இயல்புகளை விளக்கியுரைக்கும் நூல்களை என்க.

அறம் பொருள் இன்பம் வீடு என்னும் உறுதிப்பொருள்கள் நான்கனுள், முன்னைய இரண்டின் இயல்புகளை நன்குணர்ந்தவர், பின்னைய இன்பங்களுட் சிற்றின்பத்தை நெறிகெட விழையார் என்பார் "அறம்பொருள் கண்டார்கண் இல்" என்றார்.

அற நூலையும் பொருள் நூலையும் வழுவற அறிந்தார் மாட்டு பிறன் மனைவியை விழைந்தொழுகும் பேதைமை இல்லை என்பதாம்.

பிறர் மாதரைத் தழுவ விழைவது பேதைமை என்பதூஉம், அஃது அறிவுடையார்கண் உண்டாகாது என்பதூஉம் இதில் உணர்த்தப்பட்டன. இவ்வுண்மை அரிச்சந்திரன் வீடுமன் என்னும் அறவோர் பால் அறியப்படும்.

கதை 1.

சத்திய சீலனாகிய அரிச்சந்திரனை வஞ்சிக்கக் கருதி விசுவாமித்திரர் இரண்டு பெண்களை ஏவினார். அவர்கள் ஆடல் பாடல் அழகு இளமை முதலியவற்றில் மிகச் சிறந்தவர். கண்டவரெவரும் காதல் கொள்ளும்படியான நடையுடை பாவனைகளோடு அரசனை நாடிவந்தார். அரசன் அவ்வமையம் ஒரு பூஞ்சோலையில் அமர்ந்திருந்தான். வந்தவர் மன்னனை மகிழ்ந்து கண்டார், தம

து இனிய குரலால் மனமுருகப் பாடினார். அரசன் உவந்தான் வேண்டுவது என் என்றான் தம்மைக் கலந்து ஒழுகும்படி அரசனை அவர் வணங்கி வேண்டினர். அரசன் வெறுத்தான். வெகுண்டு நீக்கினான். அதன்பின் கோசிகர் வந்தார். வந்த மங்கையரை ஒருமுறையேனும், மருவுக என்றார். அரசன் மறுத்து வணங்கினான். இணங்காமையை முனிவர் உணர்ந்தார். முனிந்தார். மீண்டும் வேண்டினார், அவரடிமிசை முடிபட அரசன் வீழ்ந்தான். இம்மடமையை அடியேன் அடையேன் என்றான்.

அடினும் நின்விழி யாரழ லாலெனைச்
சுடினும் என்னுடல் தன்னைத் துறந்துயிர்
விடினு மானிலை கெட்டு யரிந்துகூ
றிடினும் இச்சொற் கிசைகிலன் யான் என்றான். (1)
கண்ணை வேண்டினும் ஈகுவன் காக்கின்ற
மண்ணை வேண்டினும் வாழ்வுடன் நல்குவன்
பண்ணை வேண்டிய செஞ்சொற் பறைந்தவ
பெண்ணை வேண்டிலன் யான் என்று பேசினான். (2)

(அரிச்சந்திரபுராணம்).

கதை 2.

வீடுமர் சந்திரகுலத் தலைவனாகிய சந்தனுவின் புதல்வர் தாய் பெயர் கங்கை. இவர் பிரபாசன் என்னும் வசுவின் அமிசம் கங்காதேவி இவரைப் பதினாறு வயது வரையும் வளர்த்தாள். அதன்பின் சந்தனுவினிடம் சேர்த்தாள். இவரும் சேர்ந்திருந்தார். பல கலைகளிலும் தேர்ந்துயர்ந்தார். சிறந்த மதியும் நிறைந்த ஒழுக்கமும் பொருந்தி விளங்கினார். தமது தந்தையின் பொருட்டு முடிவுவரையும் மண முடிப்பதில்லையென்று முடிவு செய்தார். தந்தை பரிமளகந்தியை மணந்தார். அவள்பால் சித்திராங்கதன் விசித்திர வீரியன் எனப் புதல்வர் இருவர் தோன்றினார். அவருள் ஒருவன் இறந்தான். இருந்த ஒருவனுக்கு வீடுமன் மணிமுடி சூடினான். சூடிய அரசனும் சின்னாளில் வாடி மடிந்தான். மடிந்த மன்னரது மனைவியரிருவரும் மக்

கட்பேறின்றி யிருந்தனர். மதி மரபு விளங்க ஒரு புதல்வன்மையை நினைந்து பரிமளகந்தி வருந்தினாள். தலைமைப் புதல்வனாகிய வீடுமனைத் தனியே யழைத்தாள். குருகுலம் குறுகாமல் பெருகும்படியான குமாரர்கள் இல்லையே யென்று புகன்றாள். தனது மருகிகளோடு மருவும்படி அவனை வேண்டினாள். அக்கொடுமொழி கேட்டு வீடுமர் நடுநடுங்கினார் செவிகளிரண்டையும் சேரப் புதைத்தார். பிறன் இல் விழைதல் பெருந்தீதென்றார். அறவுரை புகன்றார் அன்னையைத் தேற்றினார். பிறன் பொருளான் பெட்டொழுகும் பேதைமையை இப்பெரியவர் அடையாமல் பெரும் புகழ் பெற்றார்.

(இதன் விரிவு பாரதம சம்பவச் சருக்கத்தில் காணப்படும்)

அறிவுடையார் பிறர் மாதரை விரும்பார் என்பது கூறப்பட்டது.

142. தீதுசெய்தோர் தம்முள்ளே தென்னிலங்கை மன்னவ
னேதமிக வுற்றான் குமரேசா — ஓதும்
அறன்கடை நின்றாருள் எல்லாம் பிறன்கடை
நின்றாரிற் பேதையார் இல் (2)

குமரேசா! தீயவர்களுக்குள் இராவணன் ஏன் மிகவுந் தீயவன் ஆனான் எனின், அறன்கடை நின்றாருள் எல்லாம், பிறன் கடை நின்றாரில் பேதையார் இல் என்க.

அறன்கடை பாவம். அறத்தின் நின்று கடந்தது என்பதாம். ஒளி நீங்கிய இடத்தில் இருள் நிறைந்திருப்பதுபோல் அறம் கடந்த இடத்தில் பாவம் அடைந்திருக்குமென்க.

பிறன் கடை — பிறனுடைய வாயில்.

அறன்கடை நின்றாருள் எல்லாம் — பாவத்தின் கண்ணே நின்றாருளெல்லாம்.

காமங் கருதிய பாவத்தின் கண்ணே நின்றார் எவரினும், பிறன் மனையாளைக் காதலித்து அவன் வாயிலில் சென்றார்போலப் பேதையார் இல்லை என்பதாம்.

நெறிகடந்து நின்ற வரைவின் மகளிர் முதலியோரை விரும்பும் அறிவிலிகள் பொருளும் அறமும் புகழும் இழப்பினும் புல்லிய இன்பத்தையேனும் பொருந்துவர், பிறன் மனையாளை விரும்புவோர் தமது அச்சத்தாலும் இடையே நிகழும் தடைகளாலும் தாம் கருதிய இன்பத்தையும் இழப்பார், ஆதலால் அவரினும் பெரிய பேதையர் என்றார்.

பிறனில் விழைவோர், புகழ் அறங்களை இழந்து, பழி பாவங்களை எய்துவர் ஆகலான் அவரை ஏதங்கொண்டு ஊதியம் போகவிடும் பேதையர் என்றார்.

பாவங்கள் எல்லாவற்றுள்ளும் பிறனுடைய இல்லாளை விரும்புதல் பெரும் பாவம் என்பதும் அதனால் எல்லா நலங்களும் அழியும் என்பதும் இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை இராவணனால் உணரப்படும்.

கதை.

இராவணன் அரக்கர் முதல்வனாய் இலங்கையில் சிறந்திருந்து அரசுபுரியுங் காலத்தில் பஞ்சவடியில் வந்து தங்கியிருந்த சீதையின் பேரழகைக் கேட்டான். பெருங் காதல் பூண்டான். சந்நியாசிபோல் வேடந்தரித்து அங்கு வந்தான். இராமனும், இலக்குவனும் அவ்விடத்தைவிட்டுப் பிரியும்படி ஒரு சூழ்ச்சி செய்தான். தனியே இலைக்குடிசையிலிருந்த சீதையை வலிதில் எடுத்துச் சென்றான். தனது பூஞ்சோலையாகிய அசோக வனத்தில் வைத்தான். நாளும் வந்து தன் கருத்துக்கு இசையும்படியாக நயந்து வேண்டினான். கற்புத் தெய்வமாகிய அந்த அம்மை இவனது மடமைக்கு இரங்கி அறவுரைகள் பல கூறி யகற்றினார். எனினும், இவன் விடாமல் சென்று விரும்பினான். ஒருநாள் தனது முடிபடியில் படும்படி விழுந்து பணிந்தான். சீதை வெறுத்துரைத்தாள். அவன் மறுத்தும் மறுத்தும் வந்து மதியயம்

கிச சென்றான். முடியாத ஒன்றை முடியுமென்று கருதி இவன் நெடுநாள் உழன்றான். அனுமான் முதலிய பெரியோர்கள் வந்து பிறன்கடை நிற்றல் பெரும் பிழை என்று தேற்றினும் தேறாமல நின்றான். அதன்பின், இராமன் இலங்கை புகுந்து தனது வில் வலியால் அரக்கர் குலத்தையும் தொலைத்து அவனையும் அழித்தார். சீதையைச சிறைமீட்டித் தன் சிந்தை மகிழ்ந்தார்.

பிறன் மனையை விழைந்ததால் தனது அரச வாழ்வையும் ஆருயுரையும், பெரும் புகழையும் ஒருங்கிழந்து இராவணன் பேதையரிற் பேதையனாய்ப் பெரும் பழி பூண்டான். விரிவை இராம சரிதையில் தெளிக.

வெற்பெடுத் துயர்ந்த திண்டோள் இராவணன் விரகத்தெய்திப்
பொறபுடைச் சீதைநெஞ்சம் மெலிவுறப் புன்மைசெய்து
கற்பெனுங் கனலிபற்றக் கிளையோடுங் கரிந்தானென்னில
அற்புடை யவர்க்குத் தீமைபுரிவரேல் நரகினாழ்வார்.

(கூர்மபுராணம்).

காதலாள் கரிந்துநையக் கடியவே கனைந்துகன்றி
எதிலான் றாரநம்பி எளிதென இறந்தபாவத்
தூதுலை யுருகவெந்த ஒள்ளழற் செப்புப்பாவை
ஆதகாதென்னப்புல்லி அலறுமால் யானைவேந்தே.

(சீவக சிந்தாமணி)

பிறனில் விழைதல் பெரும் பேதைமை என்பது இதனால் கூறப்பட்டது.

143. தேறுங் குருமனைபால் தீமை செய்தான் சித்தனேன்
கூறுபட மாய்ந்தான் குமரேசா—மாறி
விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரிற்
றீமை புரிந்தொழுகு வார். (௩)

-ள.

குமரேசா! தனது குருவின் மனைவிபால் தீமை செய்த, சித்தன் என்பவன் உடனே ஏன் கூறுபட்டு மாய்ந்தான் எனின், மன்ற தெளிந்தாரது இல்லின்கண்ணே தீமையைச் செய்து ஒழுகுவார், விளிந்தாரின் வேறு அல்லர் என்க. விளிதல்—இறத்தல்.

மன்ற தெளிந்தார் இல்—நன்றாகத் தெளிந்தவரது இல்லில். அஃதாவது, தம்மீது ஐயங் கொள்ளாதார் இல்லாள் கண்ணே என்க. இனி, மிகத் தெளிந்த நல்லோரது இல் எனவும் ஆம்.

தீமை புரிந்து ஒழுகுவார்—தீமை செய்ய விரும்பி நடப்போர். தீமை என்றது இங்கே கற்பழித்தலை.

தம்மை ஐயுறாத நல்லாரது இல்லாளிடத்தே தீமை செய்தலை விரும்பிச் செல்லும் தீயோர், உயிரோடிருந்தவரேனும் இறந்தவரே யாவர் என்பதாம்.

பிறனில் விழைவார், அறம்பொருள் இன்பங்களை ஒருங்கே இழந்த பெரும் பேதையர் என்று மேலே கூறினர். இதில் அவர், செத்தவரோடு ஒப்பர் என்றார். என்றது பிறவிப் பயனை அவருயிர் எய்தாமை கருதி என்க.

பிறனுடைய மனைவியைக் கற்பழிக்கச் செல்வோன் பழியும், இழிவும் பொருந்தி அழிவான் என்பது இதில் காட்டப்பட்டது.

இது சித்தன்பால் காணப்படும்.

கதை.

குலோத்துங்கபாண்டியன் அரசுபுரிந்த காலத்தில் வடநாட்டிலிருந்து ஒரு வாள் வீரர் மதுரைக்கு வந்தார். அவர் முதிர்ந்த வயதுடையவர். வாளின் கலை முழுதும் வழுவற உணர்ந்தவர். திண்மையும் அன்பும் மெய்மையும் வாய்ந்தவர். வாள்வினை பயிற்றித் தன் நாளினைக் கழித்தார். இளைஞர் பலரும் அக்கிழவன்பால் பயின்றார். அவருள் சித்தன் என்பவன் அவ்வினையைக் கற்

ராத் தேர்ந்தான். அதனால் தருக்கினான். நன்றியை மறந்தான் குருவுக்கு எதிரியாய்த் தானுமோர் கூடஞ் சமைத்தான். அங்கு பயில்வாரைப் பிரித்துத் தன் பக்கஞ் சேர்த்தான். அல்லல் பல செய்தான். எனினும் கிழவர் பொறுமையோடு தளர்வின்றியிருந்தார். அத் தீயோன் அவர் இல்லாளையும் தழுவ விழைந்தான். அவர் இல்லாத சமயம் இல்லிற் சென்றான். சொல்லாதன சொல்லினான். அடுத் தடுத்துப் போய்த் தொடுத்துப் பிதற்றினான். அப் பொல்லாதவன் செயலுக்கு அந் நல்லாள் நொந்தாள். பரமனை நினைந்தாள். அப் பத்தினியின் பொருட்டுப் பரமன் கிழவனாய் வந்தார். பழிபடு சிதகனைத் துணிபட வெட்டினார். தெளிந்தார் இல்லில் தீமை புரிந்த சித்தன் விளிந்திழிந்தான்.

(இது திருவிளையாடற் புராணத்தில் உள்ளது)

பிறன் இல்லாளை விழைவோன் உயிரோடு செத்த பிணம் என்பது இதனால் கூறப்பட்டது.

144. என்னே அகலிகையால் இந்திரனும் தன் பெருமை
கொன்னே இழந்தான் குமரேசா—அன்றோ
எனைத்துணைய ராயினும் என்னாந் தினைத்துணையுந்
தேரான் பிறனில் புகல். (௪)

இ—ள்.

குமரேசா! அகலிகையால் தனது பெருமையை இந்திரனும் ஏன் இழந்தான் எனின், தினைத்துணையும் தேராமல் பிறனுடைய இல்லின்கட் புகுவாராயின், அவர் எனைத்துணையராயினும் என் ஆம் என்க. தேர்தல்—உணர்தல்.

தினைத்துணையும்—சிறிதும் என்றபடி.

புகல் என் ஆம் என்று கூட்டி புகுதல் யாதாய் முடியும் என்று காண்க. தீதாய் முடியும் என்பது கருத்து. புகில் எனவும் பாடம்.

பிறன் மனைவியை விழைதல் பிழையென ஒருவன் தினையளவேனும் உணராது பிறன் இல்லிடைப் புகுவானாயின், எவ்வளவு உயர்வுடையவனாயினும் அவன் பெருமை முழுதும் இழந்து சிறுமை யெய்துவான் என்பதாம்.

தன் இல்லாளை விரும்பித் தன் இல்லின்கண் ஒருவன் புகுவனாயின் தன் உள்ளம் எங்ஙனம் கொதிக்குமோ, அங்ஙனமே பிறன் இல்லின்கண் தான் புகுந்தால் அவன் உள்ளமுங் கொதிக்குமே என்னும் உணர்வு சிறிதேனும் இலர் என்பார் "தினைத்துணையும் தேரான்" என்றார்.

அறிவு, செல்வம், ஆண்மை, அதிகார முதலிய எல்லா நலங்களும் உடையனாயினும் பிறனில் புகுவானேல் அவன் பழியும், சிறுமையும் அடைவான் என்பது கருத்து. இவ்வுண்மை இந்திரன்பால் தெளியப்படும்.

கதை.

வானவர் தலைவனாகிய இந்திரன் அகலிகையைக் காதலித்துக் கௌதமரது இல்லிற் புகுந்தான். அதனால் தனது பெருமையெல்லாம் இழந்தான். யானைபோல் நிமிர்ந்தவன் ஒரு பூனையாய் ஓடினான். தனது அழகிய உடல் முழுதும் இழிகுறிகள் ஏறப் பெற்றான். முனிவர் மொழியால் நனிதுயருழந்தான். சிறுமையும், பழியும் சேரப்பெற்றான். (விரிவை நூல்களிற் காண்க.)

தன்னைப்போல் பிறரை யெண்ணல் தகுதியாம் தாரமணந்த
மின்னைப்போல் இடையினாளை விழைபவர்க் கோர், போரைத்
தின்னல்போல் புனிதர் கொள்வோர் அபலர்தம் தேவிதனை
அன்னைசோதரிபோல் எண்ணு தணைந்திட விருப்பமில
(நீதிநூல்).

இந்திரன் பிறனில் காமுற் றிழிகுறி முழுதும் பெற்றான்
சந்திரன் குரவனில்லாட் டழீஇவெந் துயரத் துழந்தான்
அந்தரத் தவரும் மண்மே லவரும் இவ்வாறு பட்ட
வெந்துயர்க் களவின் றுன்னை நோய்க்கும் வேறுதி யின்றே.
(தணிகைப் புராணம்)

ஆத்த மனையாள் அகத்தில் இருக்கவே
காத்த மனையாளைக் காமுறுங் காளையர்
காய்ச்ச பலாவின் கனியுண்ண மாட்டாமல்
ஈச்சம் பழத்துக் கிடருற்ற வாறே. (திருமந்திரம்.)

பிறனில் விழைவோர் பெருமை யிழப்பார் என்பது இதனால் கூறப்பட்டது.

145. கண்டான் துரோபதையைக் காதலித்தான் கீசகன்பின்
கொண்டான் பழியேன் குமரேசா—அண்டல்
எளிதென இல்லிறப்பான் எய்துமெஞ் ஞான்றும்
விளியாது நிற்கும் பழி. (ரு)

இ—ள்.

குமரேசா! துரோபதையைக் கண்டு காதலித்த கீசகன் என்றும் அழியாத பழியை ஏன் அடைந்தான் எனின், எளிது என இல்லிறப்பான், எஞ்ஞான்றும் விளியாது நிற்கும் பழியினை எய்தும் என்க.

இல் இறப்பான்—பிறன் இல்லின்கண் நெறிகடந்து செல்வோன்.

எஞ்ஞான்றும் விளியாது நிற்கும் பழி—எக்காலத்தும் அழியாது நிற்கும் பழி.

எளிதில் எய்துமென்று கருதிப் பிறனுடைய மனையாளை ஒருவன் தழுவவிழையின் அழியாது எக்காலத்தும் நிலைநிற்கும் பழியை அவன் அடைவன் என்பதாம்.

அதிகார ஆற்றல்களுடைமையால் எளிதில் எய்துமென்று கருதிப் பிறன் இல்லாளை ஒருவன் விரும்பலாகாது என்பதும் விரும்பின் அவனுக்குப் பழியும் கேடும் உளவாம் என்பதும் இதில் உணர்த்தப்பட்டன. இவ்வுண்மை கீசகன் பால் உணரப்படும்.

கதை.

கீசகன் என்பவன் மச்சநாட்டதிபனாகிய விராடன் மைத்துனன். அவ்வரசனது மனைவியாகிய சுதேட்டிணையின் உடன் பிறந்தவன். நூற்றுநால்வருள் மூத்தவன். அழகும், திண்மையும் அமைந்த மேனியன். இவனைப் பாணன் என்னும் காந்தருவனது அமிசம் என்பர். விராடனது தானைக்குத் தலைவனாய் நின்று தனியாண்மை செய்தான். செய்துவருங்கால், ஒருநாள் அந்தப்புரத்திற்குச் சென்றான், பாண்டவர்களோடுவந்து வண்ணமகளாய் அங்கே தங்கியிருக்கும் துரோபதையைக் கண்டான். காமுற்றான். அவளை எய்துதல் எளிதென நினைந்தான். தன் உடன் பிறந்தாளிடஞ் சொல்லி அவளை உடன்படுத்த வேண்டினான், முடியவில்லை. பலமுறை முயன்றான். முடிவில் வலிந்து பற்ற மனந் துணிந்தான். பாஞ்சாலி அதனை அறிந்தாள். மிடுக்குந் துடுக்குமிக்க அவன் கெடுத்து விடுவானென்று கவன்றாள். அஞ்சினாள். பரமனே தஞ்சமென்று நினைந்து நிகழ்வதை வீமனிடம் புகன்றாள். இருவரும் ஒரு சூழ்ச்சியைத் துணிந்தார். பிரிந்தார். மறு தினமே நகையுறு கீசகன் நாணாது வந்தான். அந்நல்லாளை நோக்கினான். பொல்லாதவை நினைந்தான். சொல்லாதன சொல்லினான். நயந்தான். வசையில்லாத அவளும் இசைவதுபோல் நடித்தாள். இரவில் ஒரு பனிமலர்ச் சோலைக்குள் அவனைத் தனி வரும்படி பணித்தாள். பரிவான் போனான். இரவும் வந்தது. வீமன் ஒரு மடமகள் போல் உடையணி புனைந்து குறித்த இடத்தில் முன் புகுந்திருந்தான். நறுமணந் தோய்ந்து பெரு மகிழ்வோடு அவனும் அங்கு வந்தான். பொழிலுட் புகுந்தான். உடல்முழுதும் ஆடையால் மறைத்து ஒருவகை அழகோடு குழைந்து படுத்திருக்கும் பெண். உருவைக் கண்டான். அவன் கொண்ட வுவகைக்கு அளவேயில்லை. பாவம்! பெருகிய காதலோடு அருகில் அணைந்தான். இருந்தான். தழுவ விழைந்தான். காதன் மொழி பல கனிந்து மொழிந்தான். அம்மங்கையின் செங்கையை அமையப்பற்றினான்

மான்போல் கிடந்தவன் மடங்கல்போல் எழுந்தான். கீசகன் பதைத்துக் கூசி மெய் துடித்தான். அடிகளும், குத்தும் அவன் மேல் இடியென விழுந்தன. அன்றவன் உற்றதை அவன் அன்றி யார் அறிவார். முடிவில் வீமனால் முடிந்து மடிந்தான். எளிதென இல்லிறந்தகால் அழியாப் பழியை இவன் இழிவோடு எய்தினான். (இதன் விரிவு பாரதத்தில் உணரப்படும்.)

பிறன் மனை நயந்தோர் பெரும் பழி எய்துவர் என்பது இதனால் கூறப்பட்டது.

146. அன்றொருவன் இல்லிறப்பால் அப்பனையும் ஏன்பகைத்துக்
கொன்றுபழி கொண்டான் குமரேசா—என்றும்
பகைபாவம் அச்சம் பழியென நான்கும்
இகவாவாம் இல்லிறப்பான் கண். (௬)

குமரேசா! முன் ஒருவன் இல் இறப்பால் தன் தந்தையையும் பகைத்துக் கொன்று ஏன் பழி கொண்டான் எனின், இல் இறப்பான் கண் பகையும், பாவமும் அச்சமும் பழியும் என்னும் இந்நான்கும் என்றும் நீங்கா எனக.

இகத்தல்—விட்டு நீங்குதல். இது தொழிற் பெயர் விகுதி குன்றி எதிர்மறையாய் நின்றது. இகவாவாம்—நீங்காவாம்.

இல் இறத்தல்—பிறனுடைய இல்லாள் கண் மிகைபுரிதல்.

பிறனுடைய மனையாள் பால் நெறி கடந்து செல்வான்கண் பகையும், பாவமும், பயமும், பழியும் என்னும் இந்நான்கும் ஒருக்காலும் நீங்கா என்பதாம்.

மேல், பழி ஒன்றே கூறினார் இதில் அதனோடு இம்மூன்றும் உளவாம் என்றார்.

பிறனில்லாளை விழைபவன் பழி பாவங்களை எய்தி இழிவான் என்பது கருத்து. இஃது உசகன்பால் உணரப்படும்.

கதை.

குலோத்துங்க பாண்டியன் மதுரையிலிருந்து அரசுபுரிந்த காலத்தில் அதனை அடுத்து அவந்தி என்று ஒரு நகரம் இருந்தது. அதில் ஒரு வேதியன் இருந்தான். பொறுமை முதலிய உயர் குணங்களை யுடையவன். முதிர்ந்த வயதினன். அவனுடைய மனைவி இளமைப் பருவம் வாய்ந்தவள். எழில் மிகப் பெற்றவள் அவனுடன் கலந்து வாழ்ந்து வருங்கால் ஒரு மைந்தன் பிறந்தான். அவன் வளர்ந்து பருவ முற்றான். பெற்ற தாயையே பெண்கொள நினைந்தான். சேயென இகழாமல் அத்தீயவள் இசைந்தாள். தீமையும் நிகழ்ந்தது. தாயும் சேயும் செய்துவருகின்ற தனிப் பாதகத்தை ஒருநாள் தந்தை குறிப்பால் அறிந்தான். பதைத்து வெறுத்தான. பொறுத்தான். மகனும் பகைத்தான். பின்னும் ஒருநாள் அவ்விருவரும் தனித்தார். அங்கு இவன் அறியாமல் சென்றான். மகன் எனும் பாவி இவன் தந்தையினைத் துணித்தான். அவளுடன் கூடி வெளிநாடு சென்றான். செல்லும் வழியில் கள்ளர் சிலரால் அவள் கைக்கொள்ள பட்டாள். அவர்பாலிருந்து அவள் அடைந்த சிறுமைகள் பல. அவளையிழந்து அவ் இழி மகன் அல்லலுற்றலைந்தான். கண்டார் அனைவரும், அவனைக் காணவு நாணினார். பாவி என்று பழித்தார். அவன் உருவமாறினான். உணர்வு மாறினான். பாவப்பயனைப் பற்றி உழன்றான். என்றும் நீங்கா இழி பழி எய்தினான்.

(இதன் விரிவு திருவிளையாடலில் மா பாதகந் தீர்த்த படலத்தில் உணரப்படும்.)

அறம்புகழ் கேண்மை பெருமை யிந்நான்கும்
பிறன்தாரம் நச்சுவார்ச் சேரா—பிறன்தாரம்
நச்சுவார்ச் சேரும் பகைபழி பாவமென்
றச்சத்தோ டிந்நாற் பொருள். (நாலடியார்.)

பிறனில் விழைவான் பழி பாவங்களை அடைவான் என்பது இதனால் கூறப்பட்டது.

147. பற்றும் அயோமுகியைப் பற்றான் இலக்குவனேன்
குற்றமென்று நீத்தான் குமரேசா—உற்ற
அறனியலான் இல்வாழ்வான் என்பான் பிறனியலாள்
பெண்மை நயவா தவன். (எ)

குமரேசா! தன்னை நயந்த அயோமுகியைத்தான் நயவாமல் ஏன் இலக்குவன் தள்ளினான் எனின், பிறன் இயலாளது பெண்மையை நயவாதவனே அறன் இயலான் இல் வாழ்வான் என்க. நயத்தல்—விரும்பல்.

அறன் இயலான்—அறத்தின் இயல்போடு. ஆன் மூன்றனுருபு. பெண்மை என்றது அதன் சுவையை

பிறன் இயலாள் பெண்மை நயவாதவன்—பிறனுடைய இயல்பின்கண்ணே நிற்பவளது மெய் நலத்தை நுகர விரும்பாதவன்.

பிறன் மனையாளை விரும்பாதவனே நெறி வழுவாமல் இல் வாழ்பவன் என்பதாம்.

துறவோர் முதலிய அறவோர்க்கெல்லாம் துணையாய் நின்று விருந்தினரை ஓம்பித் திருந்திய நலத்தோடு பொருந்தி வாழ்பவனாயினும் பிறன் இல்லாளை விரும்புவனாயின் அவன்பால் அறன் நில்லாது என்பது கருத்து.

பிறன் இல் விழையாமையே பேரொழுக்கம் என்பதும் அதனையுடையானே அறவோன் என்பதும் இதில் உணர்த்தப்பட்டன. இவ்வுண்மை இலக்குவன்பால் உணரப்படும்.

கதை.

இலக்குவன் தசரதனுடைய மூன்றாம் புதல்வன். தாய் சுமித்திரை. அழகும், வீரமும், அன்பும் நிறைந்தவன். இராம

னுடன் வனம் புகுந்தான். சீதை பிரிந்தபின் இவ்விருவரும் வருந்திக் கவந்த வனத்தையடுத்திருந்த ஒரு மலைச் சாரலில் தங்கினார். சூரியன் மறைந்தான். இருள் நிறைந்தது. அண்ணனுக்குத் தாகம் அதிகரித்தது. இளையவன் நீரைத் தேடி வெளியே போனான். அங்கு இவனை ஒரு மங்கை கண்டாள். காமுற்றாள். அவள் பெயர் அயோமுகி. தன்னைத் தழுவி மகிழும்படி இவனைத் தொழுது வேண்டினாள். இளையவன் வெறுத்தான். அவள் நயந்து பற்றினாள். இவன் சினந்து எற்றினான். அதன்பின் அவள் வருந்தி நொந்து வைது போனாள். கருகு இருளில் தனி இடத்தில் இளமையும் நலமும் அன்பும் பொருந்திய அழகி ஒருத்தி தன்னைத் தழுவ நயந்தும் தான் அவனை நயவாமல் தள்ளிய இளையவன்பெருமையை உலகம் புகழ்ந்தது. (விரிவு சரிதையில் தெளிவாம்.)

பெண்ணி னாகிய பேரஞர் பூமியுள்
எண்ண மிக்கவர் எண்ணினும் எண்ணிலார்
பின்னி நின்ற பெருவினை மேல்வரும்
என்ன தாயினும் ஏதில்பெண் நீக்குமின். (வளையாபதி)

148. பண்டரக்கி வந்துரைத்தும் பாராமல் ஏன்உறுதி
கொண்டான் இராமன் குமரேசா—கண்ட
பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்
கறனொன்றோ ஆன்ற ஒழுக்கு. (அ)

குமரேசா! அரக்கி வந்து பரிந்துரைத்தும் ஏன் இராமன் விரும்பி நோக்கவில்லை எனின், பிறன் மனைவியை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு அறனும் ஆன்ற ஒழுக்கமும் ஆம் என்க. ஆன்ற ஒழுக்கு—நிறைந்த ஒழுக்கம்.

ஒன்றோ என்பது உம்மை போல் ஈண்டு எண்ணுப் பொருளில் வந்தது. நோக்குதல் என்றது நயந்து பார்த்தலை. உள்ளத்தில் காதல் கொள்ளுதலை என்க. சான்றோர்—சால்புடையவர். குணங்களான் நிறைந்தவர் என்றபடி.

பிறன் மனையாளை விரும்பி நோக்காமையே சான்றோர்க்கு அறனும் ஆன்ற ஒழுக்கமும் ஆம் என்பதாம்.

அறம் என்பதும் ஒழுக்கம் என்பதும் பிறன் மனை நயவாமையே என்க. புறத்தில் உள்ள பகைவர்களை அடக்கியாளும் ஆண்மையுடையாரும் அகத்தில் உள்ள காமத்தால் அடங்கித் தாழ்வர் ஆகலின் அதனை அடக்குதலைப் பேராண்மை என்றார்.

பிறனில் விழையாமையே பேராண்மை என்பதும் அதனையுடையாரே சான்றோர் என்பதும், அவரே அறவொழுக்கங்கள் அமையப் பெற்றவர் என்பதும் இதில் உணர்த்தப்பட்டன. இவ்வுண்மை இராமன்பால் உணரப்படும்.

கதை.

இராமர் பஞ்சவடியில் தங்கியிருந்தபொழுது இராவணன் தங்கையாகிய சூர்ப்பணகை அங்கு வந்து அவரைக் கண்டாள். காமுற்றாள். தன்னைக் கூடி மகிழும்படி கோடி வகை செய்தாள். அவர் மறுத்துரைத்தார். மறுத்தும் மறுத்தும் அவள் வேண்டினாள். அதன்பின் அவர் வெறுத்துரைத்தார். வெகுண்டு நீங்கினார். மறுமங்கையர்க்கும் மறுமன்னவர்க்கும் மார்பும் முதுகும் கொடாதவர் என்றும், ஏகபத்தினி விரதர் என்றும், அவரை உலகம் இன்றும் போற்றுகின்றது.

(இதன் விரிவு சூர்ப்பணகைப்படலத்தில் இனிது தெளிவாம்.)

பிறன் மனையாளை விரும்பாதவனே அறமும் ஆண்மையும் உடையான் என்பது இதனால் கூறப்பட்டது.

149. நாடினள்தோள் தோயாமல் நற்றாயு மானவரேன்
கோடி யகன்றார் குமரேசா—நீதநிம்
நலக்குரியார் யாரெனில் நாமநீர் வைப்பிற்
பிறற்குரியாள் தோடோயா தார். (௯)

குமரேசா! தன்னை நாடினவருடைய தோளைத் தோயாமல் ஏன் தாயுமானவர் ஓடினர் எனின், நாமநீர்வைப்பின் நலக்கு உரியார் யார் எனின், பிறர்க்கு உரியாள் தோள் தோயாதார் என்க.

நாம் என்னும் உரிச்சொல் அச்சப் பொருளை யுணர்த்தும். அஃது ஈறு திரிந்து நாம என நின்றது. தோள் தோய்தல்—இடம்நரடங்கல். நாம நீர் என்றது கடலை. வைப்பு—உலகம்.

ஆழம் விரிவு பெருங் கொடும் பிராணிகள் முதலியவற்றால் எவர்க்கும் அச்சத்தைத் தரும் இயல்பு கடலிடை அமைந்துள்ளது ஆகலின் அதனை "நாம நீர்" என்றார்.

நாம நீர் வைப்பின்—அச்சம் தரும் கடலால் சூழப்பட்ட உலகத்தில்.

பிறனொருவனுக்கு உரியாளது தோளைச் சேராதாரே விரிந்த கடல் சூழ்ந்த இவ்வுலகின்கண் எல்லா நலங்களையும் எய்துதற்கு உரியார் என்பதாம்.

பிறன் இல்லாளை விரும்பாத ஒருவனே இருமையினும் நலம் பெறுவான் என்பது கருத்து. இது தாயுமானவர்பால் உணரப்படும்.

கதை.

தாயுமானவர் என்பவர் ஒரு தத்துவ வுணர்வினர். இற்றைக்கு 250 வருடங்களுக்கு முன்னர் சோழ நாட்டிலே வேதாரணியம் என்னும் திரு நகரிலே வேளாள வருணத்திலே பிறந்தார். இளமையிலேயே பல கலைகளையும் இவர் வழுவற ஓதி யுணர்ந்தார். அக்காலத்தில் திரிசிர புரத்தில் அரசு புரிந்துவந்த விஜய ரகுநாத சொக்கலிங்க நாயக்கரிடம் இவர் ஓர் உயர்ந்த உத்தியோகத்தில் அமர்ந்திருந்தார். சின்னாளில் அரசன் இறந்தான். அதன்பின் அரசியே அரசை நடத்திவந்தாள். வருங்கால், இவரது அறிவும்

அழகும் அவளைப் பெரிதும் மயக்கின. அவள் இவரைத் தழுவ விழைந்து சமயம் பார்த்திருந்தாள். அதனை இவர் குறிப்பான் உணர்ந்தார். அந்நகர் விட்டகன்றார். அதன்பின், மௌன தேசிகர் என்னும் ஒரு சிவயோகி இடத்து இவர் உபதேசம் பெற்றார். உளப் பற்றற்றார். பரமன் அருளையேபற்றி இன்புற்றார். இப் பெருந் தகை பல கவிகள் பாடியுள்ளார். அவையெல்லாம் அன்பும் இனிமையும் அமைந்து விளங்குகின்றன. தாயுமானவர் பாடல் என அவை இதுபொழுது வழங்கப்படுகின்றன. பிறர்க்கு உரியாள் தோள்தோயாத இவர் பெருநலமுடையராய்ப் பேரின்பந் துய்த்தார். விரிவு சரிதையில் உணரப்படும்.

பிறன் இல்லாளது தோள் நலந் தோயாதவரே பெரு நலந் தோய்வர் என்பது இதனால் கூறப்பட்டது.

150. நன்றுசெய்தான் தீமை நயவானோர் பெண்ணயந்தேன்
குன்றினான் வாலி குமரேசா—என்றும்
அறன்வரையான் அல்ல செயினும் பிறன்வரையாள்
பெண்மை நயவாமை நன்று. (ய)

குமரேசா! தீமை விரும்பாமல் நன்மையே செய்த வாலியும் என் ஒரு பெண்ணை விழைந்ததால் தீங்குற்றான் எனின், அறன்வரையானாய் அல்ல செயினும் பிறன்வரையாளது பெண்மையை ஒருவன் நயவாமை நன்று என்க. அல்ல என்றது பாவத்தை. வரைதல் என்பது எழுதல் கொள்ளல் நீக்கல் உரித்தாக்கல் முதலிய பல பொருள்களையும் குறித்துவரும் ஒரு சொல்.

அறன் வரையான் அல்ல செயினும்—அறத்தை உரித்தாகக் கொள்ளாமல் பாவத்தையே செய்யினும். அறன் என்னுஞ் சொல்லைக் கையால் எழுதுதலுஞ் செய்யாதவனாய் மறமே செய்யினும் எனவும் இது பொருள்படும்.

பிறன் வரையாள்—பிறனுடைய உரிமையில் நிற்பவள்.

ஒருவன் அறத்தை வரைந்து செய்யாமல் பாவத்தையே விரைந்து செய்யினும், பிறன் மனையாளைமட்டும் விரும்பாதிருப்பானாயின், அவன் நலம் பெறுவான் என்பதாம்.

எவ்வகைப் பாவங்களைச் செய்யினும் பிறன் இல் விழைதல் என்னும் இப் பெரும் பாவத்தை ஒருவன் செய்யலாகாது என்பது குறிப்பு.

எவ்வளவு நல்ல குணங்களையுடையவராயினும் பிறன் இல்லாளது மெய் நலத்தை விழைவராயின் அவர் நன்மையெல்லாம் இழந்து தீமையுறுவர் என்பது கருத்து. இது வாலியால் காணப்படும்.

கதை.

வாலி என்பவன் இந்திரன் கலையாய் இவ்வுலகில் வந்து தோன்றிய வானர குலத் தலைவன். பேராற்றலினும் போராற்றலினும் எவருந் தனக்கு நிகரில்லாதவன். தன்னோடு எதிர்த்தவர் எவராயினும் அவரது வலியிற் பாதி தன்பால் வரும்படி வரம் பெற்றவன். இறைவன்பால் நிறைவான அன்புடையவன். கிட்கிந்தையிலிருந்து அரசு புரிந்தான் அறிவு பெருந்தன்மை முதலிய உயர் குணங்களெல்லாம் ஒருங்கே வாய்ந்திருந்தும் தன் தம்பியின் மனைவியாகிய உருமை என்பவளை நயந்தான். நாணாது கவர்ந்தான். சுக்கிரீவன் இவனது ஆற்றலுக்கு அஞ்சி அகன்றான். மறந்தும் மறம் புரியாத அறிவுடையனாயிருந்தும் பிறன் வரையாளைத் தன் வரையாளாக்கிய தீமையால் அதன் பயனை யிழந்தான். இராமமூர்த்தியால் தண்டிக்கப்பட்டான்.

ஈரமாவதும் இற்பிறப் பாவதும்
வீரமாவதுங் கல்வியின் மெய்ந்நெறி
வாரமாவதும் மற்றொருவன் புணர்
தாரமாவதைத் தாங்குந் தருக்கதோ. (1)

தரும மின்ன தெனுந்தகைத் தன்மையும்
இருமை யுந்தெரிந் தெண்ணலை யெண்ணினால்
அருமையும்பிகன் ஆருயிர்த் தேவியைப்
பெருமை நீங்கினை யெய்தப் பெறுதியோ. (2)

இவை, தான் குற்றம் ஒன்றும் செய்யவில்லை என்று வாதித்த வாலியை நோக்கி இராமன் கூறியன. விரிவை இராமாயணத்தில் உணர்க.

அறனும் அறனறிந்த செய்கையும் சான்றோர்
திறனுடையன் என்றுரைக்குந் தேசும்—பிறனில்
பிழைத்தான் எனப்பிறரால் பேசப் படுமேல்
இழுக்காம் ஒருங்கே இவை. (அறநெறிச்சாரம்.)

பிறன் மனைவியை விரும்பாதவனே அறவோன் என்பது இதனால் கூறப்பட்டது.

(இவ்வதிகாரத்தின் தொகைப் பொருள்)

பிறன் மனைவியை விரும்புதல் என்னும் பேதைமையை அறவோர் கொள்ளார். அதனைக்கொண்டவர் பெரும் பேதையராவர். அவர் செத்த பிணத்தோடு ஒப்பர். எவ்வளவு பெருமையுடையவராயினும் பிறனில் விழைவரேல் அவர் சிறுமையடைவர். அதனால் அழியாப் பழி யுண்டாம். பகையும் அச்சமும் பாவமும் விளையும். பிறனில் விழையாதவனே அறவோனாவான். அவனே பேராண்மையுடையவன். அவனே எல்லா நலங்களும் எய்துதற்குரியவன். அறஞ்செய்யானாயினும் அது செய்யலாகாது.

௰௫-வது பிறனில் விழையாமை முற்றிற்று.

௰௬-ம் அதிகாரம் பொறையுடைமை.

அஃதாவது பிறர் செய்த பிழைகளைப் பொறுத்தலை யுடையராதல். பிறனில் விழையாமல் நெறி நின்றொழுகும் நிறையுடையார்க்குப் பொறையுடைமை இன்றியமையாச் சிறப்பினது ஆதலான் அதன்பின் இது வைக்கப்பட்டது.

151. கண்டிகழ்ந்து துன்புசெய்த கள்ளரையும் ஏன்பொறுத்தார்
கொண்டசய தேவர் குமரேசா—கண்டி
அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை (க)

இ—ள.

குமரேசா! சயதேவர் தம்மை இகழ்ந்து துன்பஞ் செய்த கள்ளரையும் ஏன் பொறுத்தார் எனின், அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல தம்மை இகழ்வாரைப் பொறுத்தல் தலையாய அறம் என்க.

அகழ்தல்—தோண்டுதல். இகழ்தல்—அவமதித்தல்.

நிலம், தன்னை அகழ்கின்றவரை வீழாமல் தாங்கும் இயல்பினையுடையது, அதுபோல், தம்மை இகழ்கின்றவரை வெறுக்காமல் பொறுத்தல் அறிவோர்க்குச் சிறப்பாம் என்பதாம்.

தன்பால் இயல்பாகக் காணப்படும் நலத்தை எடுத்துக் காட்டிப் பொறையினது உயர்ந்த நிலையை இஃதுணர்த்தியதென்க.

பூமியைப் போல் பொறையுடையராய் இருத்தல் வேண்டுமென்பது குறிப்பு.

தம்மை அவமதித்துத் தீமை செய்தவரையும் ஆதரித்துப் பெரியோர் நன்மை செய்வர் என்பது கருத்து. இது சயதேவர்பால் காணப்படும்.

கதை.

சயதேவர் என்பவர் சகந்நாதத்தை யடுத்துள்ள பில்வம் என்னும் ஊரில் பிறந்திருந்த ஒரு பெரியவர். இவரை வியாசரது அவதாரம் என்பர். இவர் வேத முதலிய கலைகள் பலவும் வழுவறவுணர்ந்து இளமையிலேயே மெய்யுணர்வுடையராய் விளங்கியிருந்தார். பருவம் எய்திய பின் பத்மாவதி என்னும் ஓர் உத்தமியை மணந்தார். திருமால் அடிக்கே பெருமால் கொண்டார். இவரது மன நலத்

தையும் மனை யறத்தையும் கண்டு மகிழ்ந்த பெருந் தனவணிகரொருவர் இவரைத் தமது இல்லிற்கு அழைத்துச் சென்றார். சில நாட்கள் கழிந்த பின்னர் அங்கிருந்தபடியே தமது மனைவியுடன் ஜகந்நாதத்திற்குச் செல்ல விரும்பினார். வணிக அன்பர் ஒரு பெருந் தொகைப் பொருளை அவரது சகடத்தில் வைத்தனுப்பினார். செல்லும் வழியில் கள்ளர் சிலர் வந்தார். கொள்ளை செய்யத் துணிந்தார். தேவர் அப் பொருளை அவர்க்கு மகிழ்வோடு காட்டி முழுதும் கொள்ளும்படி செய்தார். மனைவியுடன் வழிநடந்தார். அத்தீயோர், இவர், பிறரிடஞ் சொல்லித் தமக்குத் துயர் விளைப்பர் என்று கருதி ஓடி வந்தார். சய தேவரைப் பற்றினர். கால்களையும் கைகளையும் வெட்டி ஒரு புதரில் இட்டுப் போயினர். இரவும் வந்தது. அங்கு வேட்டைக்கு வந்திருந்த கிரவுஞ்சன் என்னும் வேந்தன் கார்இருளில் இவரை வந்து கண்டான். நிகழ்ந்ததை யுணர்ந்தான். வருந்தி இரங்கினான். விடிந்தபின் தனது இரதத்தில் ஏற்றிக்கொண்டு தன்னகர் கொணர்ந்தான். அரண்மனையில்வைத்து இருவரையும் அன்புடன் ஆதரித்தான். இவரது கட்டளைப்படி அவ்வரசன் நாள்தோறும் பாகவதர்கட்கு வேண்டுவன கொடுத்துவந்தான். அக்கள்வரும் பொருள்பெற விரும்பி பாகவதர்களைப் போல் வேடந்தரித்து அரசன் முன்பு வந்தார். அங்குச் சயதேவரைக் கண்டார். உள்ளம் நடுங்கினர். தேவர் அவர்களை மிகவும் ஆதரித்து பெரும் பொருளைக் கொடுப்பித்து வழியனுப்பினர். தானைத்தலைவர் நால்வரைத் துணையாகச் செலுத்தினர். சென்ற தலைவர்பால் அத்தீயோர் சயதேவர் மீது அடாப் பழி கூறினர். அஃதாவது "இவர் மிகக் கொடிய வஞ்சகர். எங்கள் நாட்டு அரசன் இவரைச் சிரச்சேதம் செய்யும்படி எங்களுக்குக் கட்டளையிட்டனர். இவரைப் பற்றி ஒரு காட்டுக்குக் கொண்டுபோய் கால் கைகளைமட்டும் தறித்துவிட்டு உயிர்ச் சேதம் செய்யாமல் சென்றோம். அவ்வுதவிக்காக எங்கட்கு இவ்வளவு பொருளை உபகரித்து உபசரித்தார்." என்று சொல்லி, மேல் நாவெழுமுன் பூமி படீர் என்று வெடித்தது. அதில் அப்படு பாவிகள் அனைவரும் ஆழ்ந்திறந்து மறைந்தார். தானைத் தலைவர் தப்பி ஓடிவந்து சயதேவரிடம் நடந்த

தைச் சாற்றினார். உடனே தேவர் திருமாலை நினைந்து மனமுருகி இறந்து மறைந்தவர்கள் எழுந்து வரும்படி வேண்டினார். பகவான் தேவரது பொறுமையை வியந்து அவர் விரும்பியபடியே செய்தார். குறைந்த உறுப்புக்களும் நிறைந்து விளங்கின. அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை இகழ்வாரையும் பொறுத்து ஆதரித்த சய தேவரது பொறையுடைமையை அனைவரும் புகழ்ந்து போற்றினார். விரிவை அவர் சரிதையில் உணர்க.

சாந்தனையுந் தீயனவே செய்திடினுந் தாமவரை
யாந்தனையுங் காப்பர் அறிவுடையோர்—மாந்தர்
குறைக்கும் அளவுங் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாங் கண்டீர் மரம் (மூதுரை.)

பொறுமையே ஒருவனுக்குத் தலைமையான அறம் என்பது கூறப்பட்டது.

152. வள்ளுவர்தம் ஆடை வலித்தான் பிழைபொறுத்துங்
கொள்விலையென் சொன்னார் குமரேசா—உள்ளம்
பொறுத்தல் இறப்பினை யென்று மதனை
மறத்தல் அதனினும் நன்று. (௨)

இ—ள்.

குமரேசா! தமது ஆடையை வலித்துங் கிழித்தானது பிழையையும் பொறுத்து என் அவனுக்கு வள்ளுவனார் விலையையும் சொன்னார் எனின், இறப்பினை என்றும் பொறுத்தல், அதனை மறத்தல் அதனினும் நன்று என்க.

இறப்பு—நெறி கடந்த செயல்.

இறப்பினை என்றும் பொறுத்தல்—பிழையினை என்றும் பொறுக்க. ஒறுத்தற்கு இயலுங் காலத்திலும் ஒருவன் செய்த பிழையைப் பொறுக்கவேண்டுமென்பார் 'என்றும்' என்றார்.

அதனை மறத்தல் அதனினும் நன்று—அப் பிழையை மறத்தல் அப் பொறையினும் நல்லது.

பொறுத்தல்—பிறர் செய்த பிழையை மனத்துட்கொண்டு சகித்தல்.

மறத்தல்—அதனை உட்கொள்ளாது உடனே மறந்துவிடுதல். மறவாவழி அது மனத்துட் கிளைத்து ஓரோவழிச் சினத்தை யெழுப்பும் ஆதலான் அதனை மறத்தல் மிகவும் நன்றாமென்க.

பிறர் செய்த பிழையைப் பொறுத்தலினும், அதனை உளத்துட்கொள்ளாமல் உடனே மறத்தல் மிக்க நன்மையாம் என்பதாம்.

இப்பெருந் தன்மை வள்ளுவப் பெருமான்பால் உணரப்படும்.

கதை.

வாசுகி என்னும் அம்மையுடன் திருமயிலையிலிருந்து வள்ளுவப் பெருந்தகை இல்லறம் புரிந்து வருங்கால், தாம் கைமுயன்று நெய்த ஆடையை விலைப்படுத்த முறைப்படி ஒருநாள் வெளியே சென்றார். இவரது உயர் குணங்களைக் கண்டு பொறாமை கொண்ட ஒருவன் எவ்வகையானும் வெகுளியை மூட்டி இவரது மனநிலையைக் கலக்கவேண்டுமென்று நெடுநாளாகக் கருதியிருந்தான். அன்று இவர் எதிரே வந்தான். ஆடை வாங்குபவன்போல் சாடை செய்தான். கையில் வாங்கினான். விலை என்? என்றான். ஒரு பணம் என்றார். கொண்ட துணியை இரு துண்டம் செய்தான். ஒன்றின் விலையை உரைமின் என்றான். தேவர் அரைப்பணம் என்றார். அதனையும் இரு துணி செய்து இவ் ஒன்று மட்டும் என் என்றான். பணம் கால் என்றார். அவன் அதனைத் தந்து அத்துணியோடு அகன்றான். மீதம் பயனற்றதாதலான் வீதியில் எறிந்துவிட்டு நாயனார் வீடு சேர்ந்தார். உற்றதைக்கொண்டு அன்று உறுபசி தீர்த்தார். அந்நெறியிலான் செய்தபிழையினை மறந்து விலை பகர்ந்து தந்த நாயனாரது மெய்ப்பொறையை உலகம் புகழ்ந்தது.

பிறர் செய்த பிழையை மனத்துட்கொள்ளாமல் மறந்துவிடுதல் மிகவும் நல்லது என்பது இதனால் கூறப்பட்டது.

153. தூதுசென்ற கண்ணன் துரியோ தனன்செய்த
கோதேன் பொறுத்தான் குமரேசா—யாதொன்றும்
இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை. (௩)

இ—ள்.

குமரேசா! தூது சென்ற காலத்தில், துரியோதனன் செய்த பிழையை என் கண்ணன் பொறுத்தான் எனின், மடவார்ப் பொறை வன்மையுள் வன்மையாம் என்க.

ஒருவுதல் என்பது ஒரால் என மரீஇயது.

இன்மையுள் இன்மை விருந்து ஒரால்—எளிமையில் எளிமையாவது விருந்தினரைப் பேணாது நீக்குதல்.

மடவார்—மடமையை யுடையவர்; அறிவிலார் என்க.

அறிவிலாரது பிழையைப் பொறுத்தலே அறிஞர்க்குப் பெரு வன்மை என்பதாம்.

பெரும் பொருளுடையனாயினும் விருந்தோம்பானேல் அவனே மிகவும் வறியனாம் என்பதும் வேறு வலிமைகள் இலனாயினும் பொறுமை யுடையனேல் அவனே உலகில் உயர்வலியுடையான் என்பதும் கூறியபடி.

வரு விருந்தைப் பேணலும், பிறர் பிழையைப் பொறுத்தலும் ஒருவனுக்கு நன்மையும் வன்மையும் ஆம் என்பது குறிப்பு.
பிறர் பிழை பொறுத்தலே பெருவன்மை என்பது கருத்து.
இது கண்ணன்பால் அமைந்திருந்தது.

கதை.

தன்பால் தூதுவந்த கண்ணனைத் துரியோதனன் கொல்லக் கருதினான். ஒரு படுகுழி தோண்டி மேற் பரப்பில் ஓர் அழகிய ஆதனமிட்டு அதன்மேல் அவரை எழுந்தருளச் செய்தான்.

குழியுள் ஆயிரக் கணக்கான மல்லர்களை ஆயத்தஞ் செய்துவைத்திருந்தான். கண்ணன் வஞ்சம் அறியாமல் அதன்மேல் வந்திருந்தான். உடனே ஆதனம் நெரிந்தது. கண்ணன் உணர்ந்தான். தன் காலால் மல்லரை உழக்கினான். வெளியே வந்தான். மன்னன் செய்த வன்பிழையைப் பொறுத்தான். அவனை ஒன்றுஞ் செய்யாமல் அமைதியோடகன்றான். பெருவன்மையுற்றிருந்தும் அப்பிழை பொறுத்தமையால் கண்ணனது பொறுமையின் பெருமையை வீடுமன் முதலானோர் போற்றிப் புகழ்ந்தார். விரிவு சரிதையில் தெளிவாம்.

பொறுமையே ஒருவனுக்குப் பெருவன்மை என்பது இதனால் கூறப்பட்டது.

154. கொண்ட பொறையுடைமை கோடாமல் என்றுங்
கொண்டான் தருமன் குமரேசா—கொண்ட
நிறையுடைமை நீங்காமை வேண்டிற் பொறையுடைமை
போற்றி ஒழுகப் படும். (௪)

குமரேசா! தருமன் என் பொறையுடைமையை என்றும்போற்றி ஒழுகினான் எனின், நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமையைப் போற்றி ஒழுகவேண்டும் என்க.

நிறை—உயரிய குணங்களெல்லாம் ஒருங்கே நிறைந்திருத்தல். இது சால்பு எனப்படும்.

குணகணங்கள் ஒருவன்பால் நீங்காமல் இருக்கவேண்டுமானால் அவன் பொறையுடைமையைப போற்றி ஒழுகவேண்டும் என்பதாம்.

எத்துணைப் பெருந் துயரை எய்தினும் பொறுமையை ஒருவன் கைவிடலாகாது என்பது கருத்து. இது தருமன்பால் காணப்படும்.

கதை.

துரியோதனன் செய்த அல்லல் பலவற்றினும் தருமர் பொறுமையுற்றிருந்தார். பேரவையில் வைத்துத் தமது மனைவியாகிய துரோபதையை அவன் மானபங்கஞ் செய்தான். எவரும் பொறுத்தற்கரிய அவ்வமையத்தும் இவர் தமது பொறையுடைமையைப் போற்றி நின்றார். அயல் நின்ற வீமன் விசயன் முதலிய தம்பியர் வெகுண்டார். இவர், அவர்களைத் தடுத்து அடக்கினார். இவரது பொறுமையின் பெருமையைப் பூமிதேவியும் புகழ்ந்து போற்றள்.

வீமன் கதைமேற் கைவைக்க விசயன் சிலைமேல் விழிவைக்க
தாமம் புனைதோள் இளையோரும் தத்தங்கருத்திற் சினமூட்ட
தூமம் படுசெந் தழலவியச் சோனைமேகஞ் சொரிவதுபோல்
நாமர் தருமன் எனத்தக்கோன் இளையோராற நவிலுற்றான். (1)

தேம்போ தனைத்தும் மெய்சாயுஞ் சிலபோதலருஞ் சிலபோது
வேம்போ தங்கு வாழ்வவெலாம் வெங்கானுடனே வவாவோ
ஆம்போ தாகும் அதுவன்றி ஆபபொருள்கள் அம்முறையே
போம்போ தனைத்தும் போமுன்னம் பொறுத்திர் இன்னம்
பொறுமென்றான். (2)

(பாரதம் சூதுபோர்ச் சருக்கம்.)

பொறையில்லார்க்கு நிறை இல்லை என்பது இதனால் கூறப்பட்டது.

155. கொன்ற மழுவோனைக் கொல்லாமல் என்பொறுத்தான்
குன்று இராமன் குமரேசா—கன்றி
ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து (௫)

இ—ள.

குமரேசா! தமது முன்னோரைக் கொன்ற மழுவோனை ஏன் இராமன் கொல்லாமல் பொறுத்தான் எனின், ஒறுத்தாரை ஒன்றாக வையார், பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து வைப்பர் என்க.

மழுவோன்—பரசுராமன். மழு—ஒரு வகை ஆயுதம். அது பரசு எனவும் படும். அதனை என்றுங் கையில் உடையவனாதலால் அப் பெயர் பெற்றான். ஒறுத்தார்—தண்டித்தவர்.

ஒன்றாக வையார்—ஒரு பொருளாக மதியார்.

தமக்கு ஒருவன் பிழை செய்தால் அதனைத் தாமும் அவன்கட் செய்யாமல் பொறுத்தாரை உலகோர் என்றும் நினைந்து புகழ்வர் என்பதாம்.

பொன்னைப் பேழையுள் வைத்துக் காப்பது போல் பொறையுடையாரை அறிவுடையார் உளத்தில் வைத்துப் போற்றுவர் என்பார் ‘பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து வைப்பர்’’ என்றார்.

பொறையுடையார் எல்லாராலும் மதித்துப் போற்றப்படுவார் என்பது கருத்து. இஃது இராமர்பால் உணரப்படும்.

கதை.

தசரதராமன் சீதையை மணம்புரிந்து மிதிலையிலிருந்து திருவயோத்தியை நோக்கிவந்தார். வருகின்ற வழியின் இடையே பரசுராமர் வந்து மறித்தார். அவர், சூரிய குலத்து அரசர் பலரையும் தமது மழுவாயுதத்தால் கொன்று குவித்தவர். இவரையும் கொல்லத் துணிந்தார். சினந்தெதிர் நின்றார். சில வன்மொழி பகர்ந்தார். ஏ, இராமா? “நான் உன் குலப் பகைவன், உன்னையுங் கொல்ல வந்தேன். நீ சிறுவனாதலால் முதலில் உனது வலியினை அறிய விரும்புகின்றேன். இதோ என் கையி

லுள்ள வலிய வில்லை நீ வாங்கி வளை பார்ப்போம்" என்றார். உடனே இராமர் முறுவல் சிறிது எய்தினார். தருக வில் என்றார். அவர் தந்தார். இராமர் தமது தடக்கையை நீட்டி அவ்வலிய வில்லை வாங்கினார். வளைத்தார். தமது கூரிய பாணத்தை அதில் கோத்துப் பிடித்தார். தமது முன்னோர் பலரையும் அவர் கொன்றிருந்தும் இவர், அவரைக் கொல்லத் துணிந்திலர். எடுத்துத் தொடுத்த அம்பை வேறொரு திசையில் கடுத்து விடுத்தார். நன்மதி புகட்டிச் சென்மின் என்றார். ஒறுத்தற்குரிய உறுவலி படைத்திருந்தும் தன்னைக் கொல்லாமல் பொறுத்த இவரது பொறுமையைக் கண்டு பரசுராமரும் புகழ்ந்து வணங்கினார். போற்றியகன்றார். விரிவு சரிதையில் தெளிவாம்.

> பூதலத் தரசையெல்லாம் பொன்றுவித் தனையென்றாலும்
> வேதவித் தாய மேலோன் மைந்தனீ விரதம்பூண்டாய்
> ஆதலிற் கோறலாகா தம்பிது பிழைப்ப தன்றால்
> யாதிதற் கிலக்க மாவ தியம்புதி விரைவினென்றான்.
> (பரசுராமப் படலம்.)

இது, தசரத இராமன் பரசுராமனை நோக்கிக் கூறியது.

ஒறுத்தலினும் பொறுத்தலே நன்றென்பது இதனால் கூறப்பட்டது.

156. வெற்றி அருணகிரி வில்லிசெவி கொய்யாதேன்
குற்றம் பொறுத்தார் குமரேசா—பற்றி
ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ். (௬)

-ள்.

குமரேசா! அருணகிரி நாதர் வெற்றியுற்றும் என் வில்லியாழ்வார் காதை அறுக்காமல் பொறுத்தார் எனின், ஒறுத்தார்க்கு ஒரு நாளை இன்பம், பொறுத்தார்க்குப் பொன்றுந் துணையும் புகழ் ஆம் என்க.

பொன்றாத் துணையும்—உலகம் அழியும் வரையும் ஒருவனது புகழ் தனக்கு ஆதாரமான உலகம் அழியும் அளவும் வழி வழி வழங்கி நிலை பெறும் என்க.

பிறர் செய்த பிழையைப் பொறுக்காமல் ஒறுத்தவர்க்கு ஒரு நாளில் தோன்றியழியும் சிறிய இன்பமும், பொறுத்தவர்க்கு ஊழியளவும் அழியாத பெரிய புகழும் உளவாம் என்பதாம்.

பொறையுடையான் புகழ் உகாந்தம் வரையும் பொன்றாது நிற்கும் என்பது கருத்து. இஃது அருணகிரி நாதர் பால் அறியப்படும்.

கதை.

அருணகிரி நாதர் திருவண்ணாமலையில் அவதரித்த ஒரு பெரியவர். சிறந்த புலமை வாய்ந்தவர். குமார தெய்வத்தின் திருவருளை நன்கு பெற்றவர். அத்தெய்வத்தின் மீது அற்புதமான பல சந்தப் பாடல்கள் பாடியுள்ளார். அவை திருப்புகழ் என வழங்கப்படும். இவரது காலம் இற்றைக்கு எண்ணூற்றைம்பது வருடங்கட்கு முன்னராம். அக்காலத்தில் விளங்கியிருந்த வில்லியாழ்வார் என்பவர் புலவர்களைச் சோதிக்கும் தலைமை பெற்றிருந்தார். சோதனையில் தவறிய புலவர்களது செவிகளை அவர் அறுத்துவிடுவார். அக்கொடுஞ் செயலைக் கேட்டு வருந்திய அருணகிரி நாதர் அவரை ஒரு நாள் சந்தித்தார். இருவருக்கும் புலமைத் திறத்தைக் குறித்து வாதம் நிகழ்ந்தது. சொற்போர் தொடங்கினர். தோல்வியும் வெற்றியும் தெரிதர விழைந்தார். தோற்றவர் செவியை வென்றவர் அறுத்துவிடவேண்டும் என்று கொடுஞ் சூள் புகன்றார். இருவரும் தமது புலமைத் திறத்தைக் கொட்டி அளந்தார். அதில் வில்லியாழ்வார் தோற்றார். உடனே செவியைக் கொய்துவிடுக என்று தனது தலையைச் சாய்த்தார். அருணகிரியார் அவரை ஒறுத்து அதனை அறுக்கவில்லை. பொறுத்தார். நன்மதி கூறியனுப்பினார். அவரும் இவரது பொறுமையைப் போற்றிச் சென்றார். பொன்றாப் புகழை இவர் பொருந்தி இன்புற்றார். (விரிவு சரிதையில் தெளிவாம்.)

பொறையுடையார்க்கே நிறை புகழ் உண்டாம் என்பது னால் கூறப்பட்டது.

157. திண்டோட் பரீச்சித்து தீங்குசெய்தும் என்இரக்கம்
கொண்டான் சமீகன் குமரேசா—மண்டித்
திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்
தறனல்ல செய்யாமை நன்று. (எ)

குமரேசா! பரீச்சித்து வேந்தன் செய்த பிழையினை ஏன் சமீகன் பொறுத்து இரங்கினான் எனின், திறன் அல்ல தன் பிறர் செய்யினும் நோநொந்து அறன் அல்ல செய்யாமை நன்று என்க. நோ—துன்பம்.

திறன் அல்ல தன் பிறர் செய்யினும்—செய்யத் தகாத ஒன்றைத் தன்னிடத்துப் பிறர் செய்தார் எனினும்.

தனக்குப் பிறர் தீமை செய்யினும் தான் எதிர் செய்யாமல் அவர்க்கு அதனால் உண்டாம் துன்பத்தை நினைந்து வருந்துவது ஒருவனுக்கு நன்று என்பதாம். பிறர் திறன் அல்ல செய்யினும் மிகவும் நொந்து ஒருவன் அறன் அல்ல செய்யாமை நன்று எனவும் இது பொருள்படும்.

பிறர் செய் பிழையைப் பொறுத்தலோடு அதனால் அவர் துன்புறுவரே என்று நல்லோர் நொந்து இரங்குவர் என்பது கருத்து. இது சமீகன்பால் காணப்படும்.

கதை.

சமீகன் என்பவர் ஒரு முனிவர். இவருக்குச் சிருங்கியென்று ஒரு புதல்வன் பிறந்தான். அதன்பின் மனைவியோடு வனம் புகுந்திருந்து இவர் மா தவஞ் செய்தார். செய்துவருங்கால் பரீச்சித்து மன்னன் ஒரு நாள் அங்கு வேட்டைக்கு வந்

தான். இவரைக் கண்டான். அசைவற்று இவர் மோனமுற்றிருந்ததை அவன் நெடிது நேரம் நின்று நோக்கினான். இறந்து கிடந்த பாம்பு ஒன்றைத் தன் வில்லால் கோதி விளையாட்டாக இவர் கழுத்திலே போட்டுவிட்டு அவன் மெல்லப் போனான். அதனைக் கண்டவர் போய் இவர் புதல்வராகிய சிருங்கியிடம் சொன்னார். உடனே அவர் வெகுண்டார். தனது தந்தையின் கழுத்தில் பாம்பைப் போட்டவன் ஏழுநாளுள் பாம்பால் கடியுண்டு இறக்கக் கடவது என்று சபித்தார். சபித்ததைச் சமீகர் அறிந்தார். தமது புதல்வன் சொன்னதை நினைந்து மிகவும் வருந்தினார். அதனை அரசனிடம் அறிவித்து அதற்கு உபாயமுங் கூறி அவன் உய்யும்படி செய்தார். திறன் அல்ல செய்ததால் அரசனுக்கு எய்திய நோவை நினைந்து இவர் நொந்து இரங்கினார்.

ரிவைப் பாகவதத்தில் உணர்க.)

நிந்தனை புரியினும் நின் றுதைப்பினும்
சிந்தனை வெகுள்கிலார் சீதரற் றெழா
வந்தனை புரிபவ ரென்று மாமனம்
நொந்தனன் பலப்பல நுவன்றிட் டானரோ. (பாகவதம்.)

இது, மன்னனுக்குச் சாபங்கொடுத்த தன் மகனை நோக்கிச் சமீகன் நொந்து சொன்னது.

தம்மை யிகழ்ந்தமை தாம்பொறுப்ப தன்றிமற்
றெம்மை யிகழ்ந்த வினைப்பயத்தால்—உம்மை
எரிவாய் நிரயத்து வீழ்வர்கொல் என்று
பரிவதூஉஞ் சான்றோர் கடன். (நாலடியார்)

பிறர் செய் பிழையைப் பொறுப்பதுமன்றி அவர்பால் இரக்கமும் கொள்வர் அறிவோர் என்பது இதனால் கூறப்பட்டது.

---

158. காலால் மிதித்தாற்கும் கச்சியப்ப ரேன்கொடுத்தார்
கோலச் சிவிகை குமரேசா—ஏனும்
மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தம்
தகுதியான் வென்று விடல். (அ)

இ—ள்.

குமரேசா! தன்னைக் காலால் உதைத்தவனுக்கும் என் கச்சியப்ப முதலியார் சிவிகை கொடுத்தார்எனின், மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம் தமது தகுதியால் வென்றுவிடவேண்டும் என்க. மிகுதி—மனச்செருக்கு. மிக்கவை—தீயவை

தகுதியான் வென்றுவிடல்—பொறையால் வெல்க.

அறிவுடையவன் அமைந்திருக்கவேண்டிய ஒழுங்கில் மிகுந்திருத்தலால் மனச் செருக்கை மிகுதி என்றார்.

தனக்கு ஒருவன் துன்பம்செய்யின் அதனைத் தானும் அவன்கட் செய்யாமல் பொறுத்தலே ஒருவனுக்கு மேன்மையான வெற்றிஎன்பதாம். தமக்குப் பிறனொருவன் பிழைசெய்த வழி அவன் அதைச் செய்தற்கு ஏதேனும் காரணம் தம்பால் இருப்பின், அதனை நீக்கியும், இலதேல் அவனது அறியாமைக்கு இரங்கியும் அறிவோர் அமைதியுறுவர் என்க.

செருக்கால் தீமை செய்பவரை ஒறுத்து வெல்வதற்கோர் உரித்தான உபாயம் இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை கச்சியப்ப முதலியார்பால் உணரப்படும்.

கதை.

கச்சியப்ப முதலியார் என்பவர் தொண்டைமண்டலத்திலே வல்லம் என்னும் ஊரிலே பிறந்தவர். சிறந்த செல்வமும் நிறைந்த கல்வியுமுடையவர். ஒரு நாள் சிவிகையூர்ந்து ஓர் ஊருக்குச் சென்றார். இடை நெறியில் வீரன் என்னும் புலவர் ஒருவர் வந்தார். அவர் குறுநில மன்னர் பலரையும் தம் கவித் திறத்தால் களிப்பித்துப் பெரும் பரிசு பெற்றவர். எவருந் தனக்கு நிகர் இலர் என்னும் இறுமாப்புடையவர். அதனால், பல்லக்கில் செல்பவர் தம்மைக் கண்டு இறங்கி வணங்கவில்லையேயென்று நினைந்து சினந்தார். நில் என நிறுத்தினார். முதலியார் மார்பில் தன் காலால் ஒல்லென உதைத்தார். செருக்கால் உதைத்தவரை முதலியார் வெறுக்கா

மல் பொறுத்தார். அறியாமல் சென்றேன் என்று வணங்கி உபசரித்து அப்புலவருக்குத்தான் ஊர்ந்துவந்த பல்லங்கையுந் தந்தார். அவர், இவரது பொறுமையின் உயர்வையும் வள்ளற்குணத்தையும் புகழ்ந்து துதித்தனர்.

மண்படுமோ வெய்யிலிலே வாடுமோ புல்லரிரு
கண்படுமோ அன்பாகக் கற்றவர்கள்—பண்புகழ
மெச்சியப்பா லும்புகழ வீறுவல்லை யாளவந்த
கச்சியப்ப னையுதைத்த கால்.

இது தனக்குச் சிவிகை தந்தவுடனே கச்சியப்பரை நோக்கி அப் புலவர் மகிழ்ந்து சொல்லியது.

(இதன் விரிவு தொண்டைமண்டல சதகத்தில் உணரப்படும்.)

பொறுமையே ஒருவனுக்கு மெய்மையான வெற்றி என்பது இதனால் கூறப்பட்டது.

— —

159. மாறான மாமியின்வாய் வன்சொலெதிர் என்கௌரி
கூறாமல் நோற்றாள் குமரேசா—தீதறித்
துறந்தாரிற் றூய்மை யுடையர் இறந்தார்வாய்
இன்னாச்சொல் நோற்கிற் பவர். (௯).

இ—ள்.

குமரேசா! மாறுபட்ட தனது மாமியின் வன்சொல்லுக்குஎதிர் ஒன்றுங் கூறாமல் என் கௌரி பொறுத்தாள் எனின், இறந்தார் வாய் இன்னாச் சொல் நோற்கிற்பவர், துறந்தாரின் தூய்மையுடையவராவர் என்க.

இறந்தார்—நெறி கடந்தவர்: தீயார் என்றபடி.

நோற்கிற்பவர்—பொறுப்பவர்.

ஆற்றலையுணர்த்தும் 'கில்' என்னும் இடைநிலையால் பொறுமையின் அருமை உணரப்படும்.

தீமையில் மிகுந்தவரது வாயால் சொல்லப்படுகின்ற தீய சொற்களைப் பொறுப்பவர் துறந்தவரினுந் தூய்மை யுடையவர் என்பதாம். இதிலுள்ள ஐந்தனுருபாகிய இன் எல்லைப் பொருளோடு ஒப்புப் பொருளையும் குறிக்கும்.

பிறர் கூறுகின்ற வன்சொற்களைப் பொறுப்பவர் இல்லறத்திருப்பினும், துறவு நிலை யெய்திய அறவோர்போலத் தூய்மை எய்தி மேன்மை யுறுவர் என்பது கருத்து. இவ்வுண்மை கௌரிபால் காணப்படும்.

கதை.

கௌரி என்பவள் இற்றைக்கு ஆயிரத்துத் தொளாயிர வருடங்கட்கு முன்னர் மதுரையிலிருந்த ஒரு மறையவன் புதல்வி. தாய் பெயர் சுபவிரதை. கௌரி பருவமுறுமுன் பெற்றோர் அவளை ஒருவனுக்கு மணமகளாக்கினார். வரிசைகள் செய்து அவனது நகரினுக்கனுப்பினார். அம் மண மகனது பெற்றோர் செருக்கினை யுடையவர், வஞ்ச நெஞ்சினர். பொறையும் இரக்கமும் இறையும் இல்லாதவர். தமது வீட்டுக்கு வந்த மருகி என்னும் உரிமையும் இன்றி அவட்கு பெருந துயர் புரிந்தார். கொடுமொழி புகன்றார். நாளும் வன்சொலால் தேளென நலிந்தார். கௌரி தனது விதி நலமென்று பொறையுடன் இருந்தாள். அவளது பொறையின் பயனால் இறைவன் தோன்றினான். கிழவனாய்க் குமரனாய்க் குழவியாய் நின்றான். தண்ணருள் செய்தபின் அவள் உண்மையை யுணர்ந்தாள். துறந்தவர் போலத் தூய்மையை எய்தினாள். இது திருவிளையாடலில் உள்ளது.

தீயவரது தீச் சொல்லைப் பொறுத்தலால் ஒருவனுக்குத் தவப் பயன் உண்டாம் என்பது இதனால் கூறப்பட்டது.

160. மண்டுபுகழ் மாந்தாதா மாதவரின் மேன்மைமிகக்
கொண்டுநின்றார் முன்னோன் குமரேசா—உண்டிதனை
உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்
இன்னாச்சொல் நோற்பாரிற் பின் (ம)

இ—ள்.

குமரேசா! மாந்தாதா என்பவர் மாதவரினும்ஏன் மேன்மை பெற்று முன்பு நின்றார் எனின், பிறர் சொல்லும் இன்னாச் சொல்லை நோற்பாரிற் பின்தான், உண்ணாது நோற்பார் பெரியராவர் என்க.

உண்ணாது நோற்பார்—பட்டினியிருந்து தவம் புரிவோர்.

இன்னாச்சொல் நோற்பார்—இன்னாத சொல்லைப் பொறுப்பவர்.

உணவைத் துறந்து தவம் புரிவோரினும் பிறர் கூறுகின்றவன் சொல்லைப் பொறுப்பவரே பெரியோர் என்பதாம்.

பசிநோயைப் பொறுத்துத் தவம் புரிவதினும், பிறர் சொல்லும் வசை மொழியைப் பொறுத்து அமைதியுறுதல் அருமையென்பது கருத்து.

துறவு நிலை எய்திய பெரியார் எவரினும், பொறையுடைய இல் வாழ்பவனே பெரியோன் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை மாந்தாதா பால் உணரப்படும்.

கதை.

மாந்தாதா என்பவன் சூரிய குலத்து வேந்தனாகிய யுவனாச்சுவன் புதல்வன் இவன் தோற்றம் மிக்க அற்புதமுடையது. தந்தை புத்திரப் பேறு கருதிச சிறந்த முனிவர்களைக் கொண்டு அரிய வேள்வியொன்று செய்தான். செய்துவருங்கால் ஒருநாள் இரவில் அரசனுக்குத் தாகம் அதிகரித்தது. அதனால் அங்கு வைத்திருந்த கும்ப நீரைப் பருகினான். உடனே கருவுற்றான். சின்னாட் கழிந்தவுடன் யுவனாச்சுவனது வலது பாகத்தைப் பீறிக் கொண்டு அக்கரு ஓர் அழகிய புதல்வனாய் வெளியே வந்தது. தெய்வ அருளால் அரசன் பிழைத்தான். குழவி பாலின்றி யழுதது. இந்திரன் வந்து தனது வலது கைப் பெருவிரலை அதன் வாயில் வைத்தான். அது மாந்தி மகிழ்ந்தது. அதனால் மாந்தாதா

என்னும் பெயரினை யெய்தி வளர்ந்து பருவமுற்றான். அரசுரிமை பெற்று அகிலமும் புரந்தான். நிறை வலி பெற்றும் பொறையுற்றிருந்தான். செய்தற்கரிய வேள்விகள்பல செய்துமுடித்தான். இவனது பொறையின் இயல்பைச் சிலர் தெளிய விரும்பினார். மன நிலை குலையும்படியான இன்னாத சொற்களை அவர் எடுத்து மொழிந்தார். இவன் அவற்றை இன்புறப் பொறுத்தான். முற்றத் துறந்தாரும் இவனது பொறைக் குணத்தை வியந்து போற்றினார். பொறையால் உயர்ந்து இவன் புகழ்மீக் கூர்ந்தான். மாதவர் துதிக்கும் மாண்பினை யடைந்தான்.

பெரும் பொறை யுடையவன் அருந்தவரினும் சிறந்தவன் என்பது இதனால் கூறப்பட்டது.

நெறியி னீங்கினோர் நீரல க
அறியாமை யென் றறிதல் வேண்டும். (சிலப்பதிகாரம்.)

இளையான் அடக்கம் அடக்கங் கிளைபொருள்
இல்லான் கொடையே கொடைப்பயன்—எல்லாம்
ஒறுக்கு மதுகை யுரனுடை யாளன்
பொறுக்கும் பொறையே பொறை. (நாலடியார்.)

எள்ளிப் பிறருரைக்கும் இன்னாச்சொல் தன்னெஞ்சிற்
கொள்ளிவைத்தாற்போற் கொடிதெனினும்—மெள்ள
அறிவென்னும் நீரால் அவித்தொழுக லாற்றிற்
பிறிதெனினும் வேண்டாந் தவம். (அறநெறிச்சாரம்.)

(இவ்வதிகாரத்தின் தொகைப் பொருள்.)

பொறையே தலையாய அறம். பொறுத்தலினும் பிழையைனே மறத்தல் நன்று. பொறுமையே ஒருவனுக்குப் பெருவன்மையாம். பொறை இல்லார்க்கு நிறை இல்லை. அஃதுடையாரை உலகம் பொன்போல் போற்றும். அதனால், நிலையான புகழுண்டாம். பிறர்செய் பிழைக்கு எதிர்செய்யாமை நன்று. பொறு

மையே ஒருவனுக்குப் பெறலரும் வெற்றி. துறவோரினும் பிறர் வன்மொழி பொறுப்பவரே தூயராவர். பொறை யுடையவரே எவரினும் பெரியவர்.

௧௬-வது பொறையுடைமை முற்றிற்று.

௧௭-ம் அதிகாரம் அழுக்காறாமை.

அஃதாவது பொறாமையைச் செய்யாமை. பொறாமை என்னும் இழி குணத்தை யுணர்த்தும் அழுக்காறு என்னுஞ் சொல் எதிர்மறை ஆகாரம் புணர்ந்து அதனை விலக்கவேண்டும் என்னும் பொருளில் ஈண்டு வந்தது. இது பொறைக்கு மறுதலையாகலின் அதன்பின் வைக்கப்பட்டது. மேலது கொள்ளத்தக்கது, இது தள்ளத்தக்கது என்க. அதிகார முறைமையும் இதனானே தெரிவாம்.

161. திண்டோ ளுயர்வீமன் றீயஅழுக் காறுநெஞ்சங்
கொண்டிலனேன் என்றான் குமரேசா—கண்ட
ஒழுக்காறாக் கொள்க ஒருவன்றன் நெஞ்சத்
தழுக்கா றிலாத இயல்பு. (௧)

குமரேசா! அழுக்காறு என்னும் இழி குணத்தை வீமன் ஏன் தன் நெஞ்சில் ஒருபோதுங் கொள்ளாமல் ஒழுகினான் எனின், தன்னெஞ்சத்து அழுக்காறு இல்லாத இயல்பையே ஒருவன் ஒழுக்காறாகக் கொள்ளவேண்டும் என்க.

ஒழுக்கு ஆறு ஆ கொள்க—ஒழுக்க நெறியாகக் கொள்க.

தனது உள்ளத்தில் அழுக்காறு இல்லாதபடி ஒருவன் அமைந்து ஒழுகவேண்டும் என்பதாம்.

பிறரது நலங்களைக் கண்டு பொறாமைகொள்ளுதல் என்னும் தீக்குணம் தனது நெஞ்சம் புகாமல் ஒருவன் பாதுகாக்கவேண்டு மென்பது கருத்து.

வெளியாசாரங்கள் ஒன்றும் இலனாயினும் அழுக்காறு இல்லாத ஒருவனே விழுமிய ஒழுக்கமுள்ளவன் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இது வீமனால் உணரப்படும்.

கதை.

வீமன் பாண்டுவேந்தன் புதல்வன் தருமனுக்குப் பின் குந்திதேவியின்பால் வாயுவின் கலையாய் வந்து பிறந்தான். குழவிப் பருவத்தே தாய் இவனை ஒரு மலைமேல் எடுத்துச் சென்றாள். ஏறிச் செல்லுங்கால் குழவி கை நழுவிக் கீழே விழுந்தது. விழுந்த இடம் துகள்பட்டது. உடனே "பீமன்" என்று ஆகாயத்திலிருந்து ஒரு ஒலி தோன்றிற்று. அந்த அசரீரி வாக்கையே இவனுக்குப் பெயராகச் சூட்டினார். பீமன் என்றால் பிறர் பயமுறத் தக்க வலியினை யுடையவன் என்பதாம். அது வீமன் என மருவியது. இவன் சிறந்த தேக பலமுடையவன். தண்ட யுத்தத்தில் எவருந் தனக்கு நிகர் இல்லாதவன். பிறர் மனைவியரையும் பிறர் பொருளையும் கனவிலும் விரும்பாதவன். பிறரது வசையைச் சிறிதும் இசையான். பிறரது துயரைத் தனதென நினைவான். பிறர் நலமுறவே பெரிதும் விரும்புவான். ஆடம்பரமான வெளி யொழுக்கங்கள் ஒன்றும் மேற்கொள்ளான். உள்ளத்தில் அழுக்காறு இல்லாத இயல்பையே தனது ஒழுக்கமாகக் கொண்டான். பூசனை முதலிய வெளி ஆசாரங்களையுடைய விசயன் முதலிய எவரினும் மனநலமுடையனாய் இவன் மாண்புற்றான்.

விரிவு சரிதையில் தெளிவாம்.

பிறர்மனை யவரைப் பெற்றதாய் எனவும் பிறர்பொருள் எட்டியே எனவும்
பிறர்வசை யுரைத்தல் பெருமையன் றெனவும் பிறர்துயர் என்துயர் எனவும்

இறுதியே வரினும் என்மனம் கிடக்கை யெம்பிரான் இவையென
வுரைத்தான்
மறலியும் மடியுமாறுமல்லியற்கை வலிமைகூர் வாயுவின் மைந்தன்.

இது, தன் மன நிலையை யறிய விரும்பிய கண்ணன் பால் வீமன் கூறியது.

அழுக்காறு இல்லாதவனே உண்மையான ஒழுக்கம் உள்ளவன் என்பது இதனால் கூறப்பட்டது.

162. பெற்றாள் அநசூயை பேறு அழுக்காறுங்
குற்ற மின்மை என்னே குமரேசா—முற்றும்
விழுப்பேற்றின் அஃதொப்ப தில்லை யார்மாட்டும்
அழுக்காற்றின் அன்மை பெறின் (உ)

குமரேசா! அழுக்காறு என்னும் குற்றம் இல்லாமையே தான் பெறும் பேறாக என் அநசூயை பெற்றாள் எனின், யார் மாட்டும் அழுக்காற்றின் அன்மைபெறின், விழுப்பேற்றின் அஃது ஒப்பது இல்லை என்க.

விழுப்பேறு—சிறந்த பேறு. பேறு—பெறப்படுவது.

அழுக்காற்றின் அன்மை பெறின்—அழுக்காற்றில் நின்று நீங்குதலை ஒருவன் பெறுவானாயின். பெறின் என்றது அதன் அருமையை விளக்கி நின்றது.

பகைவரிடத்தும் அழுக்காறு கொள்ளலாகாது என்பதை உணர்த்துதற்கு "யார்மாட்டும்" என்றார்.

பெறுகின்ற பேறுகள் எல்லாவற்றுள்ளும் அழுக்காறு இன்மையே ஒருவனுக்குச் சிறந்த பேறு என்பதாம்.

அழுக்காற்றின் நீக்கமே உயிர்கட்கு விழுமிய ஆக்கம் என்பது குறிப்பு. இஃது அநசூயை பால் அறியப்படும்.

கதை.

அத்திரி முனிவரது பத்தினியாகிய அநசூயை அழுக்காறு இல்லாத இயல்பையே தனக்கு உரிமையான உடைமையாகக் கொண்டிருந்தாள். யார்மாட்டும் அசூயை கொள்ளாத தன்மையால் அந்த அம்மையை அநசூயை என்று உலகம் புகழ்ந்தது. அவளது மனநலத்தை அனைவரும் அறியும்படி செய்ய நாரதர் விரும்பினார். அயனுலகம் புகுந்து கலைமகள் முன் நின்று கொஞ்சம் இருப்புக்கடலையைத் தந்து வறுத்துக்கொடுக்க வேண்டினார். அம்மை முடியாதென அருளினார். இலக்குமியிடம் சென்று கேட்டார். அவரும் மறுத்தார். அதன்பின் உமாதேவியிடம் வேண்டினார். அம்மையும் அவ்வாறே மறுத்தார். உடனே உலகில் வந்து அதனை அநசூயையிடங் கொடுத்தார். பத்தினி கொண்டாள். வறுத்துக் கொடுத்தாள். அதனைப் பெற்றுக் கொறித்துக்கொண்டு முனிவர் மேற்குறித்த மூவரிடமும் முறையே சென்றார். உங்களால் முடியாத ஒன்றை உலகில் ஒருத்தி முடித்துத் தந்தாள். அவள் அழுக்காறு இல்லாதவள். உங்களினும் குணங்களால் உயர்ந்தவள் என்று புகழ்ந்து சென்றார். அம்மூவரும் மனம் பொறாமல் தங்கள் தலைவர்களிடம் அதனைச்சாற்றி அநசூயையினது மனநிலையைக் குலைக்கும்படி வேண்டினார். அவரும் இசைந்தார். அவள்பால் வந்தார். அதிதிகள்போல் வேடங்கொண்டு நின்றார். அவள், உபசரித்து யாதுவேண்டும் என அவரை வேண்டினாள். அவர், "உன் இன்பால் உண்ண நின்பால் அன்பால் வந்தோம்" என்றார். உடனே சிறிது நீரை எடுத்துத் தெளித்து அம்மூவரையும் இளங்குழவிகளாக்கி, மார்பொடணைத்துப் பால் நன் கூட்டினாள். அவள் கற்பின் மகிமையால் வந்தவர் மீளாமல் தங்கியிருந்தார். மலைமகளும், கலைமகளும், மலர்மகளும் அவள்பால் வந்து தங்கள் தலைவரைத் தரும்படி மங்கலப்பிச்சை கேட்டார். அவள் வணங்கித் தந்தாள். அங்குத் தங்கியிருந்த அம்மூவரின் கலைகளால் தத்தாத்திரையர் தோன்றினார். இராமர் வனம்புகுந்த காலத்தில் உடன் வந்திருந்த சீதைக்கு மங்கல அணிகள் பல தந்து நன்மதி புகட்டினாள். இங்ஙனம் பேரும் தெய்வ

பத்தினிகளும் போற்றத்தக்க பெருஞ்சிறப்பைப் பெற்று அரும் புகழோடு விளங்கி யிருந்தாள். அவள் பெற்ற பெரும்பேறுகளுக்கெல்லாம் அழுக்காறின்மையே காரணம் என்பர்

விரிவை நூல்களிற் காண்க.

அழுக்காறின்மையே உயிர்கட்கு விழுப்பேறென்பது இதனால் கூறப்பட்டது.

163. பெற்றான் நளனாக்கம் என்றகலி பேணாதேதன்
குற்றமுற்றான் வீணே குமரேசா—முற்றும்
அறனாக்கம் வேண்டாதா னென்பான் பிறனாக்கம்
பேணா தழுக்கறுப் பான். (௩)

இ—ள.

குமரேசா! நளன் ஆக்கம் பெற்றான் என்று பேணாமல் ஏன் கலி விரோதமாக அவன்மேல் அழுக்காறு கொண்டான் எனின், அறனும் ஆக்கமும் வேண்டாதான் என்பவனே பிறனது ஆக்கத்தைப் பேணாது அழுக்கறுப்பான் என்க. பேணல்—மகிழல்.

அழுக்கறுப்பான்—அழுக்காற்றைச் செய்வான்.

பிறனுடைய ஆக்கத்தைக்கண்டு மகிழாமல் பொறாமைகொள்பவனை அறனும் பொருளும் அடையா என்பதாம்.

மறுமைப்பயனாகிய அறத்தையும் இம்மைப் பயனாகிய பொருளையும் பொறாமை யுடையவன் ஒருங்கே இழப்பான் என்பார், "அழுக்கறுப்பான் அறன் ஆக்கம் வேண்டாதான்" என்றார்.

பொறாமையுடையவனை பாவமும் வறுமையும் பற்றும் என்பது குறிப்பு. இது கலி புருடன்பால் காணப்படும்.

கதை.

கலி என்பான் தேவகணத்துள் ஒருவன். சூரியன் மனைவியாகிய சந்திரிகை என்பவளது சாயையின் வயிறாகத் தோன்றினவன். அரிய தவம்புரிந்து கிரகபதம் பெற்றவன். மந்த கதியும் குரோத குணமு முடையவன். சனி எனவும் அழைக்கப்படுவான். இவன், விதர்ப்ப தேசத்து வீமன் மகளாகிய தமயந்தியை நளன் மணம்புரிந்தானெனத் தெரிந்து அவன்மேல் அழுக்காறு கொண்டான். இந்திரன் வருணன் முதலியோர் தடுத்துங் கேளாமல் அழுக்காறு காரணமாக நளனுக்கு இவன் பெருந்துயர் விளைத்தான். அதில் அம்மன்னன் அல்லல் பல அடைந்தான். நளனது உயர் குணங்களையும் மனத்திட்பத்தையும் நன்கு தெளிந்தபின் இவன் நாணியகன்றான். அரசன் மனநலத்தால் புகழும் மேன்மையும் பொருந்தி யின்புற்றான். தனது மனக்கோட்டத்தால் இவன், அறமும் ஆக்கமும் அகன்றிட நொந்தான். நளனை வந்து வணங்கினான். அவனை நினைந்தவரையும் தான் நலிவதில்லை என்று உலகறிய இவனொரு உறுதியை மொழிந்தான். அதனால் பின் நலமுற்றான். பிறனாக்கம் பேணாது அழுக்காறு செய்வானை அறக்கடவுள் வெறுக்குமென்பதை இவன் அறிந்து தெளிந்தான்.

விரிவை நளன்கதையில் உணர்க.

அழுக்காறுடையானை அறம்பொருள் அடையா என்பது இதனாற் கூறப்பட்டது.

---

164. சேரன் அமைச்சரல்ல செய்யாமல் ஏனன்பு
கூரநின்றார் பின்பு குமரேசா—யாரும்
அழுக்காற்றின் அல்லவை செய்யார் இழுக்காற்றின்
ஏதம் படுபாக் கறிந்து (௪)

இ—ள்.

குமரேசா! அழுக்காற்றால் முன்பு அல்லவை செய்த

சேரனது அமைச்சர் பின்பு என் அவற்றைச் செய்யாமல் அன்பு செய்தார் எனின், இழுக்காற்றின் எதம் படுபாக்கு அறிந்து, அழுக்காற்றின் அல்லவை செய்யார் என்க.

இழுக்காறு—கொடுநெறி.

அல்லவை—அறன் அல்லாதன; தீவினைகள் என்க.

க்காற்றின் எதம் படுபாக்கு அறிந்து—தீ நெறியால் கேடு வருதலைத் தெரிந்து.

தீ நெறியால் கேடுவரும் என்பதைத் தெரிந்து அழுக்காறு ஏதுவாக அறிவோர் அல்லன செய்யார் என்பதாம்.

இழுக்கை ஆற்றின் எதம்வரும் என அறிந்து அழுக்காற்றால் அல்லன செய்யார் எனவும் இது பொருள்படும்.

இழுக்கு ஆற்றலாவது, ஆக்கமுடையானை நோக்கிமகிழாது அவர்க்குக் கேடு நினைத்தலும், பழிமொழிபகர்தலும், இழிவினை செய்தலு முதலியன.

பொறாமையுடையவனை அறமும் ஆக்கமும் அடையாஎன்று மேலே கூறினார், இதில், அவ்வுண்மையை அறிந்து அல்லவை செய்யார் அறவோர் என்றார்.

இது சேரன் அமைச்சர்பால் தேறப்படும்.

கதை.

சேரநாட்டிலே திருவஞ்சிக்களம் என்னும் திருநகரிலே இற்றைக்கு நாலாயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூறு வருடங்கட்கு முன்னர் குலசேகரன் என்னும் பெயரினையுடைய அரசர் பெருமான் ஒருவர் இருந்தார். அரச பதவியைப் பெற்றிருந்தும் பகவானது குணகணங்களாகிய அமுதவெள்ளத்திலேயே இவர், ஆழ்ந்திருந்தார். மாலடிக்கே மனங்குழைந்த இவரது குண நலத்தைக்கண்டு பாகவதர்கள் பலர்வந்து குழுமினார். அவரனைவரையும் இவர், ஆரா அன்போடு ஆதரித்து வந்தார். அதனால் அடிய

வர்களுடைய அதிகாரமும் செல்வாக்கும் அங்கு அதிகரித்தன. அரசனது மனமும் அடியவரது இனமும் ஒருமையுற்றிருப்பதை அமைச்சர் அறிந்தார். அழுக்காறு கொண்டார். அரசனுக்கு அவர்மேல் வெறுப்பையுண்டுபண்ணி அவரனைவரையும் துரத்திவிட எண்ணினார். ஒரு நவமணி மாலையை எடுத்துமறைத்து அதனைக் களவுசெய்து கொண்டார் என்று பாகவதர்கள் மேல் அடாப்பழி கூறினார். அரசன் அதனை நம்பவில்லை. ஆராய்ந்து உண்மை தெளிந்தான். அழுக்காறு காரணமாக அமைச்சரே அது செய்தார் என்றுணர்ந்து அவரை வெறுத்தான். இழுக்காற்றியதால் ஏதம் வந்ததென்பதை அமைச்சர் அறிந்து வருந்தினார். அழுக்காற்றால் அல்லவற்றை இனிமேல் செய்யோம் என்று அரசனைவணங்கி அன்றுமுதல் அமைச்சரனைவரும் அடியவர்பால் அன்புற்றிருந்தார். இதன் விரிவு ஆழ்வார் நூலில் அறியப்படும்.

அழுக்காற்றால் இழுக்கம் வரும் என்பது இதனால் கூறப்பட்டது.

165. கேடுபிறர் செய்யாதேன் கேடுற்றாள் காந்தாரி
கோடியதன் னெஞ்சால் குமரேசா—கோடும்
அழுக்கா றுடையார்க் கதுசாலும் ஒன்னார்
வழுக்கியுங் கேடீன் பது.

இ—ள்.

குமரேசா! பிறரொருவரும் கேடு செய்யாமலிருந்தும் ஏன் காந்தாரி தானே கெட்டு நொந்தாள் எனின், ஒன்னார் வழுக்கியும் கேடு ஈன்பது ஆகலான், அழுக்காறு உடையார்க்கு அது சாலும் என்க. ஒன்னார்—பகைவர்.

பொருந்தாதவர் என்னும் பொருளை விளக்கும் ஒன்றார் என்னும் சொல் ஒன்னார் என மருவி வந்தது. இதன் எதிர்மொழி ஒன்றுநர்.

ஒன்னார் வழுக்கியும் கேடு ஈன்பது—பகைவர் நீங்கியும் கேடு தரவல்லது.

உலகில் ஒருவருக்கொருவர் கேடு புரிபவர் பகைவரே யாதலான் அவர் செய்யுந்தொழிலினும் அழுக்காறு அதனைச் செய்து விடும் என்பது கருத்து.

அழுக்காறு உடையவர்க்கு வேறு பகைவர் வேண்டாம் தமக்குக் கேடுதருதற்கு அஃதொன்றே அமையும் என்பதாம்.

கொடிய பகையினும், அழுக்காறு கொடியது ஆதலான் அதனை ஒருவன் வெறுத்து நீக்கவேண்டும் என்பது குறிப்பு.

தன்னையுடையவர்க்கு அழுக்காறு தப்பாமல் கேடுதரும் என்பது இதில் காட்டப்பட்டது. இவ்வுண்மை காந்தாரிபால் காணப்படும்.

கதை.

திருதராட்டிரன் மனைவியாகிய காந்தாரி கருப்பந்தரித்து மகப்பேறு நோனாளும் பருவகாலை எதிர்நோக்கி விருப்பமுற்றிருந்தாள். பொருந்திய நாளும் திருந்தி நிறைந்தது. அக்காலத்தில் பாண்டுவின் மனைவியாகிய குந்திதேவி தருமன் என்னும் ஓர் அருமைக் குழந்தையை முதலிற் பெற்றாள். அக்குழந்தையைக் கண்டு பெற்றோரும் சுற்றமும் பெருமகிழ்வுற்றார். இதனைக் காந்தாரி தெரிந்தாள். தனக்கு முந்திய பிள்ளையைப்பெற்றுக் குந்தி பெருமையும் புகழும் பெற்றாளே என்று அவள் பொறாமையுற்றாள். அதனால் ஒரு கருங்கல்லை எடுத்துத் தன் வயிற்றில் நெருங்க இடித்தாள். கருப்பஞ்சிதைந்தது. உதிரமாகித் தரையில் வீழ்ந்தது. வியாசரது அருளால் அவ்வுதிரத்துளிகள் பின் பிள்ளைகளாயின. சிறந்த கருப்பமும் அவள் பொறாமையால் சிதைந்திழிந்தது. பகைவரையின்றியுங் காந்தாரி தன் அழுக்காற்றால் தானே கெட்டாள். இதன் விரிவு பாரதத்தில் உணரப்படும்.

அற்றனள் துயரமெல்லாம் அருந்தவப் பயனால் மைந்தற்
பெற்றனள் குந்தியென்னும் பேருரை கேட்டவன்றே
உற்றனள் பொறாமை கல்லால் உதரமுட் குழம்புமாறு
செற்றனள் தனது கேடும் ஆக்கமுஞ் சிந்தியாதாள்.
(சம்பவச் சருக்கம்)

அழுக்காறுடையவர் தாமே கெடுவா ரென்பது
இதனால் கூறப்பட

166. சீறிக் கடுத்த சிசுபாலன் சுற்றமேன்
கூறுபட்டுத் தாழ்ந்த குமரேசா—தேறிக்
கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற முடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும். (௬)

குமரேசா! இராசசூய வேள்வியில் கண்ணனுக்குத் தருமர் கொடுப்பதனைத் தடுத்த சிசுபாலனது சுற்றம் ஏன் சிதறுண்டு கெட்டது எனின், கொடுப்பது அழுக்கறுப்பானது சுற்றம் உடுப்பதூஉம் உண்பதூஉம் இன்றிக் கெடும் என்க.

கொடுப்பது உடுப்பது உண்பது என்பன வினையாலணையும் பெயர்கள். ஒருவன் பிறனொருவனுக்கு ஏதாவது ஒன்றைக் கொடுக்கும்பொழுது அதனை அழுக்காற்றினால் தடுப்பவனது சுற்றம், உடுக்கப்படுவதும் உண்ணப்படுவதுமாகிய உடையும் உணவும் இல்லாமல் கெடும் என்பதாம்.

உடை—உடம்பின் பாதுகாப்பிற்கு ஏதுவாயது.

உணவு—உயிரின் பாதுகாப்பிற்கு ஏதுவாயது.

இடம் பொருள் ஏவல் முதலிய எவற்றினும் உயிர்கள் இன்புற்று வாழ்தற்கு இவ்விரண்டுமே இன்றியமையாச் சிறப்பின வாதலின் அவை ஈண்டு விதந்து குறிக்கப்பட்டன.

பிறர் பெறுவதனை இழப்பிப்போனது சுற்றமும் உணவு இழந்து கெடுமென்றால் அவன் பேரிழவு சொல்லவேண்டாவாயிற்று.

அழுக்காறு, தன்னை எடுத்தவரையும், அடுத்தவரையும் கெடுத்து விடும் என்பது கருத்து. இது சிசுபாலன்பாலும் அவனது

சுற்றத்தின் பாலும் தெளியப்படும்.

கதை.

சேதிநாட்டுக் தலைவனாகிய சிசுபாலன் என்பவன் கண்ணன் மீது நெடுங்காலம் அழுக்காறுகொண்டிருந்தான். அக்காலத்தில் தருமர் இந்திரப் பிரத்தத்தில் இராச சூயம் என்னும் ஓர் அரியவேள்வியைச் செய்தார். அதன் பொருட்டு முனிவர் அரசர் முதலிய பெரியோர் பலரும் அங்குக் குழுமியிருந்தார். வேள்வி முடிந்தவுடன் யாருக்கு முதலில் அவிநலந் தருவது என்று ஆராய்ந்தார். அங்கு வந்திருந்தவர்களுள் வியாசர் எழுந்தார். முதன்மையாகப் பூசனையைப் பெறுவதற்கு உரியார் கண்ணன் ஒருவனே என்று மொழிந்தார். அனைவரும் அது சரியென்றிசைந்தார் தருமர் கொடுக்கத் துணிந்தார். சிசுபாலன் பொறாமையால் தடுத்தான. அதன் பயனாக அவன் ஆழியால் அழிந்தான். அதன் பின் அவன் அரசியல் குலைந்தது. நாடு முழுதும் கேடே பலித்தது. வறுமையும் சிறுமையும் பெருகி வளர்ந்தன. அவன் சுற்றத்தாருட் பலர் உடையின்றி மெலிந்தார். உணவின்றி யிழிந்தார்.

விரிவு பாகவதத்தில் தெளிவாம்.

தாமுங் கொடார்கொடுப்போர் தம்மையுமீ யாதவகை
சேயஞ்செய் வாருஞ் சிலருண்டே—ஏயநிழல்
இடுமலர் காய்கனிகள் ஈந்தருளு மாமரத்தைக்
கட்டுமுடை முள்ளெனவே காண். (நீதிவெண்பா.)

ஈவது விலக்கேல். (ஔவை.)

பொறாமையுடையவன் கிளையோடு வறுமையுற்றழிவான் என்பது இதனால் கூறப்பட்டது.

167. உற்றதிரு வெல்லாம் ஒருங்கிழந்து முஞ்சனோன்
குற்றமிக வுற்றான் குமரேசா—மற்றவர்மேல்
அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவள்
தவ்வையைக் காட்டி விடும். (௭)

குயபேரா! முஞ்சன் தனது செல்வமெல்லாம் இழந்து ஈன் நிலையுற்றான் எனின், அழுக்காறு உடையானைச் செய்யவள் அவ்வித்துத் தவ்வையைக்காட்டிவிடும் என்க.

செய்யவள்—சீதேவி. தவ்வை—மூதேவி.

இலக்குமிக்கு முன்னே பிறந்தவளாதலால் மூதேவியைத் தவ்வை என்றார். தவ்வை என்பதற்கு மூத்தவள் என்று பொருள். இவ்விருவரும் முறையே இளையவள் எனவும் மூத்தவள் எனவும் வழங்கப்படுவர்.

அவ்வித்து—பொறாது. இஃது அவ்வியம் என்னும் பெயரடியாகப் பிறந்த வினையெச்சம். அவ்வியம்—பொறாமை.

செய்யவள் அவ்வித்துத் தவ்வையைக் காட்டிவிடும்—சீதேவி பொறாது மூதேவிக்குக் காட்டி நீங்கும். இதிலுள்ள ஐ என்னும் இரண்டனுருபு, தனக்குரிய செயப்படு பொருளை யுணர்த்தாமல் நான்காம் வேற்றுமைக்குரிய கோடற் பொருளைக் குறித்து நின்றது. இஃது உருபு மயக்கம்.

அழுக்காறுடையவனை வெறுத்துத் திருமகள் நீங்குவள் என்பதாம்

ஒளி மறைந்த இடத்தில் இருள் நிறைந்திருத்தல்போல் இளையவள் நீங்கிய இடத்தில் மூத்தவள் தங்கி நிற்பள் என்க.

மேல், பொறாமையுடையவனை வறுமையும் கேடும் மருவுமென்றார், இதில் அதற்குக் காரணத்தை யுணர்த்தினார்.

பொறாமையுடையவன், திருவும் சீரும் இழந்து வறுமையும் பழியும் அடைவான் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை முஞ்சன்பால் உணரப்படும்.

கதை.

முஞ்சன் என்பவன் போஜமன்னனது சிறியதந்தை. தன் தமையனாகிய சிந்துலனுடன் தாரா நகரத்தில் இவன் தங்கியிருந்

தான். சிந்துலவேந்தன் செய்த அருந்தவத்தின் பெரும்பயனாக அவனுக்கொரு புதல்வன் பிறந்தான். போசன் என்று பெயரிட்டுப் போற்றி வளர்த்தான். மகனது இளமைப் பருவத்தே சிந்துலன் இறந்தான். அதன் பின் கொடிய முஞ்சனே முடி புனைந்தான். அரசு புரிந்தான். புன்மையும் தருக்கும் பொருந்தி விளங்கினான். போசன் பருவமுற்றபின் அரசைக் கொள்வன் என்று அஞ்சிமெலிந்தான், அதனால் அவன்பால் அழுக்காறு கொண்டான். அறிவும் அருளும் அழகும் நீதியும் மறுவறு குணங்களும் மாண்பும் வாய்ந்த அவ்வருமை மகனுக்கு இவன் அல்லல் பல செய்தான். கொடியவர் சிலரைக் கூவிக்கொல்லவும் ஏவினான். அவ்வெல்லா வற்றினுந்தப்பி, இளஞ்சிங்கம்போல் இறைவன் அருளால் அவ் ஏந்தல் விளங்கினான். நஞ்சனைய முஞ்சன் தனது திருவுஞ் சீரும் இழந்தான். வறுமையும் பழியும் எய்தினான். அருந்துயர் பல அடைந்து முடிவில் இழிந்தழிந்தான்.

இதன் விரிவு போச சரிதையில் புலனாம்.

அழுக்காறுடையவனை மூதேவி அடைவள் என்பது இதனால் கூறப்பட்டது.

168. ஆன்று கஞ்சன் கொண்ட அழுக்காற்றால் தன்திரு
குன்றி யழிந்தான் குமரேசா—கன்றும் (வேன்
அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும். (அ)

-ள்.

குமரேசா! அழுக்காற்ற கஞ்சன் ஏன் திருவிழந்து தீமையுற்றான் எனின், அழுக்காறுஎன ஒருபாவி திருச்செற்று தீயுழியுய்த்து விடும் என்க.

தீயுழி—தீய இடம். இது தீமையின் பயனை அனுபவிக்கும் இடம் என்னும் ஏதுப் பெயராய் ஈண்டு நரகத்தைக் குறித்து நின்றது.

ஒரு பாவி—ஒப்பில்லாத பாவி.

பாவம்—குணம். பாவி—குணி. குணத்தை இங்கே குணியாகச் சொன்னது அதன் செயல் நோக்கி என்க.

தன்னை யெடுத்தானை இம்மையிற் செல்வத்தைக் கெடுத்து மறுமையில் நரகத்தில் செலுத்தும் கொடுமைபற்றி அழுக்காற்றைப் பாவி என்றார்.

எத்துணைக் கொடியராயினும் தன்னை அடுத்தாரைக்கெடுக்க அஞ்சுவர். அன்றிக் கெடுப்பின் இம்மையில் மாத்திரம் துன்பஞ் செய்வர், அழுக்காறு இருமையினும் அதுசெய்யும் ஆதலான் அஃது ஒப்பில்லாத பாவியாயிற்று.

பொறாமை யென்னும் பெரும்பாவி தன்னை யுடையானை ஆக்கத்தைக் கெடுத்து நரகத்தில் ஆழ்த்திவிடும் என்பதாம்.

அழுக்காறுடையவன் இம்மையில் திருவையிழந்து மறுமையில் நரகில் அழுந்துவன் என்பது கருத்து.

இவ்வுண்மை கஞ்சன்பால் காணப்படும்.

கதை.

கஞ்சன் என்பவன் யதுகுலத்தலைவனாகிய உக்கிரசேனன் புதல்வன். கண்ணனுக்கு மாமன் திண்ணிய நெஞ்சினன். தீயவஞ்சகன். பிறர்நலம் பேணாது பெருந்துயர் செய்வோன். தனக்குக் கேடு விளைப்பான் என்று எண்ணிக் கண்ணன்மேல் அழுக்காறு கொண்டான். அதனால் வஞ்சனை பலவுஞ்செய்தான். கொல்லக்கருதிக் கொடுமை யிழைத்தான். முடிவில், மடிந்தான். திருவுமிழந்து தீயுழி அடைந்தான்.

(இதன் விரிவு பாகவதத்தில் உணரப்படும்.)

மாங்கனி வாயிற்கவ்வி மரத்திடை யிருந்தமந்தி
பாங்கர்நீர் நிழலை வேறோர் பழமுனுங் குரங்கென்றெண்ணித்
தாங்கரும் அவாவிற் றாவிச் சலத்திடை யிறந்ததொப்ப
நீங்கரும் பொறாமை யுள்ளோர் நிலத்திடைக் கெடுவரம்மா(1)

தாரணியில் எவரேனுந் துயருறில் தன் தலையின்முடி
தரித்த தொப்பாம்
சீரணியும் செல்வமவர் படைக்கிற்றன் றாய் மனைவேய்
செத்த தொப்பாம்
காரணமே யொன்றுமின்றிச் சுகதுக்கந்தன் வலியால்
கணத்துக்குள்ளே
பூரணமா ஆக்கிடுவோன் பொறுமையுள்ளோன் அன்றியெவர்
புவியில்வல்லார். (நீதிநூல்) (2)

அழுக்காறு இருமையினும் சிறுமைதரும் என்பது இதனால் கூறப்பட்டது.

169. அன்றசித்தி ராங்கதனேன் அவ்வியஞ்செய்தும் [வாழ்ந்தான்

குன்றினனேன் மன்னன் குமரேசா—என்றேனும்
அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமுஞ் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும். (௬௯)

இ—ள.

குமரேசா! சித்திராங்கதன் அவ்வியஞ்செய்தும் ஆக்கமுறச் செவ்வியமன்னனேன் தீங்குற்றான் எனின், அவ்வியநெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான் கேடும உளவாயின் அவை நினைக்கப் படும் என்க.

அவ்வியம்—கோட்டம். அது செவ்விக்கு எதிர்மறையாய் ஈண்டு அழுக்காற்றைப் புணர்த்தி நின்றது

செவ்வி—செம்மை. அஃதாவது நெறிவழுவாத நேர்மை.

அவ்வியான்—தீயவன். செவ்வியான்—நல்லவன்.

கோடிய மனத்தையுடையவனது ஆக்கமும் கோடாதவனது கேடும் காணப்படுமாயின் அவை ஆராயப்படும் என்பதாம்.

நல்லோர்க்குக் கேடும் தீயோர்க்கு ஆக்கமும் நெறியே உளவாகா என்பது கருத்து.

அழுக்காறுடையவன் திருவிழந்து கெடுவான் என்றதற்கு மாறாய் அதனையுடைய தீய நெஞ்சினர் சிலர் ஆக்கமுற்று மகிழவும், அஃதில்லாத நல்லோர் வறுமையுற்று வருந்தவும் இவ்வுலகில் காண்கின்றோமே யெனின், அவற்றிற்குக் காரணம் பழவினையே யென்று கருதவேண்டுமென்று இது காட்டியதென்க.

அவ்வியநெஞ்சத்தானுக்கு ஆக்கமும் செவ்வியானுக்குக் கேடும் ஒருதலையாக நிலைத்து உளவாகா என்பதும் உளவாயின் அவற்றிற்குக் காரணம் அவரது பழவினையேயாம் என்பதும் இதில் உணர்த்தப்பட்டன. இவ்வுண்மை சித்திராங்கதன் என்னும் கந்தருவனிடமும் விசித்திரவீரியனது தமையன்பாலும் காணப்படும்.

கதை.

சந்தனுவுக்குப் பரிமளகந்திபிடம் சித்திராங்கதன் விசித்திரவீரியன் என இரண்டு புதல்வர்கள் தோன்றினர். குருகுலத்தை விளக்கவந்த அக்குமாரர்கள் இருவரும் கலைமதிபோன்று தலைமையோடு நிலவி வளர்ந்தனர். பருவமெய்தியபின் இருவருள் முதல்வனுக்கு வீடுமர் மணிமுடி சூட்டினர். அவனும் அரியணை அமர்ந்து அரசு புரிந்தான். புரிந்து வருங்கால் ஒருநாள் அவனொரு சோலையில் உலாவினன். சித்திராங்கதன் என்னும் கந்தருவன் ஒருவன் அவ்வரசன் மேல் அழுக்காறு கொண்டிருந்தான். தன் பெயரையே ஒரு மனிதனும் பெற்றிருக்கிறான் என்று செற்றமீக்கூர்ந்தான். அவ்விய நெஞ்சினனாய் அங்கு வந்தான். அவ்வரசன் தலையை அறுத்துச் சென்றான். சென்றவன் ஆக்கஞ் சிதையாமல் வாழ்ந்தான். செவ்வியனாயிருந்தும் அரசன் கேடுற்றிறந்தான். கொடுமையுந் தீமையுமுடைய கந்தருவன் இன்புற்றதற்கும், செம்மையும் நன்மையும் வாய்ந்த மன்னன் துன்புற்றதற்கும் அவ்விருவரும் முன் செய்திருந்த பழவினைகளே காரணங்களாயின. விரிவு மகாபாரதத்தில் உணரப்படும்.

அழுக்காறுடையவன் ஆக்கமுறான் என்பது இதனால் கூறப்பட்டது.

170. அன்றழிந்தார் நூற்றுவரும் ஐவரேன் ஆக்கமுற்றுக்
குன்றாமல் வாழ்ந்தார் குமரேசா—என்றும்
அழுக்கற் றகன்றாரு மில்லை யஃதிலார்
பெருக்கத்திற் றீர்ந்தாரு மில் (௰)

இ—ள்.

குமரேசா! துரியோதனன் முதலிய நூற்றுவரும் கேடுற்றழிய, தருமன் முதலிய ஐவரும் ஏன் ஆக்கமுற்றுயர்ந்தார் எனின், அழுக்கற்று அகன்றாருமில்லை, அஃது இலார் பெருக்கத்தில் தீர்ந்தாரும் இல் என்க.

அழுக்கற்று—அழுக்காற்றைச் செய்து.

அகன்றாரும் இல்லை—உயர்ந்தாரும்

அழுக்காறுடையவர் ஆக்கமுற்றுயர்தலும் அஃதில்லாதவர் அதனைநீங்கி யிழிதலும் என்றும் இல்லவாம் என்பதாம்.

அழுக்காறுண்மை கேட்டிற்கும், அஃதின்மையே ஆக்கத்திற்கும் ஏதுவாம் என்பது கருத்து.

பொறாமை யுடையவர் இழிந்து மாள்வர் என்பதும், அஃதில்லாதவர் உயர்ந்து வாழ்வர் என்பதும் இதில் உணர்த்தப்பட்டன. இவ்வுண்மை துரியோதனனாதியர் பாலும் தருமர் முதலானோர் பாலும் காணப்படும்.

கதை.

துரியோதனன் தனது சுற்றத்தவராகிய பாண்டவர் மீது பொறாமைகொண்டான். அதனால் வீமனைக் கழுவில் வீழ்த்தினான். நஞ்சை யூட்டினான். ஐவரும் அழியும்படி அரக்குமாளிகை

யில் நெருப்பை வைத்தான். திருவருளால் தப்பிப் பிழைத்த ஐவரைமீண்டும் அழைத்துச் சூதால் அரசைக் கவர்ந்தான். காட்டில் ஓட்டினான். பல கேடுகள் புரிந்தான். இவன் உயர்ந்த வாழ்வைப்பெற்றுச் சிறந்த அரசனாய் இருந்தும் அழுக்காற்றைச் செய்ததனால் இழிந்து மாண்டான்.

கதை. 2

அழுக்காறு என்னும் இழிகுணம் சிறிதும் இல்லாத ஐவரும்பெருகிய செல்வம் படைத்து நிறைபுகழோடு உயர்ந்து வாழ்ந்தார். அழுக்காற்றால் கேடும் அஃதின்மையால் ஆக்கமும் உளவாம் என்பதை உலகம் இவர்பால் உணர்ந்தது.

இதன் விரிவை அவர் சரிதையில் உணர்க.

அழுக்காறில்லாதவர் ஆக்கம் பெறுவார் என்பது
கூறப்பட்டது.

(இவ்வதிகாரத்தின் தொகைப் பொருள்.)

அழுக்காறு இல்லாதவனே உண்மையான ஒழுக்கமுள்ளவன். அழுக்காறின்மையே விழுப்பேறாகும். அதனையுடையானை அறம் பொருள் அடையா. அதனால் இழுக்கமே உண்டாம். அதனையுடையவர் தாமே கெடுவர். அவரது சுற்றமும் வறுமையுற்றழியும். அழுக்காறு கொண்டவனை மூதேவி கொள்வள். அஃது இம்மையில் செல்வத்தைக் கெடுத்து மறுமையில் நரகத்தைக் கொடுக்கும். அது கேடுதருதற்கே ஏதுவாயது. அஃதில்லாதவரே ஆக்கம் பெறுவார்.

௰௭வது அழுக்காறாமை முற்றிற்று.

௰௮-ம் அதிகாரம் வெஃகாமை.

அஃதாவது பிறர் பொருளைக் கவர்ந்து கொள்ளக் கருதாமை. இது, பிறருடைய ஆக்கத்தைக்கண்டு அழுக்காறுகொள்ளாத அறவோர் உள்ளத்தே நிகழ்வதாதலின் அதன்பின் வைக்கப்பட்டது.

“எவனுடைய பொருளையும் இச்சியாதே” என்ற ஈசாவாசிய உபநிடதத்தின் முதன் மந்திரக்கருத்து ஈண்டுக்கருதத்தக்கது.

171. கொற்றமுறுங் கட்டியனென் கோன்பொருளை வெஃகியதால்
குற்றமுற்று மாய்ந்தான் குமரேசா—முற்றும்
நடுவின்றி நன்பொருள் வெஃகிற் குடிபொன்றிக்
குற்றமு மாங்கே தரும். (௧)

இ—ள்.

குமரேசா! கட்டியங்காரன் என்பவன் அரசன் பொருளை வெஃகியதால் ஏன் குற்றமுற்று மாய்ந்தான் எனின், நடுவு இன்றி நன்பொருளை வெஃகின் அது குடியையும் கெடுத்துக் குற்றத்தையும் கொடுக்கும் என்க

பொன்றி என்னும் வினையெச்சம் இங்கே பொன்ற என்னும் பொருளில் வந்தது. “சொல்திரியினும் பொருள் திரியா வினைக்குறை” என்பது இயல்.

நடுவு இன்றி நன்பொருள் வெஃகின்—நடுவுநிலைமை யில்லாமல் பிறர் நன்பொருளை ஒருவன் தன்பொருளாக்க விரும்பின்.

நன்பொருள் என்றது எல்லா நலங்களும் அதனால் உளவாம் என்பது கருதி யென்க.

பிறர் பொருளை நடுவு நிலைமையின்றி ஒருவன் கவர்ந்துகொள்ளக்கருதின் அஃது அவன் குடியைக்கெடுத்துப் பல குற்றங்களையும் கொடுத்துவிடும் என்பதாம்.

நெறியான் ஈட்டும்பொருளை ஒருவன் குடியை வளர்த்துக் குணத்தைப் பயக்குமென்பது குறிப்பு.

பொருளுடைமையால் தன்குடி வளருமென்று கருதி அதனை ஒருவன் முயற்சியான் ஈட்டாது நெறிகெட விழையின் அதனால் தன் குடிக்கு அழிவும் தனக்குப் பழியும் உளவாம் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை கட்டியங்காரன்பால் காணப்படும்.

கதை.

கட்டியங்காரன் என்பவன் ஏமாங்கத நாட்டு வேந்தனாகிய சச்சந்தனுடைய அமைச்சன். இவன் மிகத் தீயவன். கொடுமையும் வஞ்சமும் கொண்ட நெஞ்சினன். அரசன் இவனை நம்பித் தனது அரசியலை நன்கு நடத்தும்படி தந்தான். இவனும் நடத்திவந்தான். நாள் பல கழிந்தன. அதன்பின் அரசபதவியைத் தனக்கு உரிமையாக்கிக்கொள்ளக் கருதினான். குடிகளைத் தன்வசப்படுத்திப் படைகளைத் திரட்டினான். நன்றியை மறந்தான். நன்றிசெய்த அரசனைக் கொன்றிடத் துணிந்தான். குறித்ததை முடித்தான். கோல் கைக்கொண்டான். கொடுங்கோல் செய்தான். செய்துவருங்கால், இறந்த மன்னனது திருமகனாகிய சீவகன் பருவமெய்தினான். அக்கொடியனைவென்று முடிபுனைந்தாண்டான். அத்தீயவன் குடியும் சேர அழிந்தது. நடுவு நிலைமைகுன்றி ஒருவன் நன்பொருளை வெஃகின் அதனால் அவன் அடியோடு கெடுவான் என்பதை உலகம் இவன்பால் உணர்ந்தது. இதன் விரிவைச் சீவக சிந்தாமணியில் உணர்க.

பிறர் பொருள் கவர்வோன் குடியோடு கெடுவான் என்பது இதனால் கூறப்பட்டது.

172. பண்டுபொருஞ் சாத்தன் பழிசெய்ய நாணியொன்றுங்
கொண்டிலனேன் மீண்டான் குமரேசா—மண்டிப்
படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்
நடுவன்மை நாணு பவர். (உ)

குமரேசா! பெருஞ்சாத்தனார் பழிசெய்ய நாணி ஒன்றுங்கொள்ளாமல் மீண்டார் எனின், நடுவு அன்மையை நாணுபவர், படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார் என்க.

பழிப்படுவ — பழி படுஞ்செயல்கள்.
படுபயன் — பொருளால் உளதாம் இன்பம்.

நடுவுநிலைமை யின்மையை நாணுகின்றவர், பிறர் பொருளைக் கைக்கொண்டால் அதனால் உண்டாம் பயனைவிரும்பிப் பழிக்கத் தக்க இழிதொழில்களைச் செய்யார் என்பதாம்.

நடுவு நிலைமையுடையவர், எவ்வளவு வறுமையாளராயினும் தமக்குப் பொருளெய்தும் பொருட்டுப் பழிச்செயல்களைச் செய்யார் என்பது கருத்து.

இவ்வுண்மை பெருந்தலைச் சாத்தனார்பால் காணப்படும்.

கதை.

பெருந்தலைச் சாத்தனார் என்பவர் பாண்டி நாட்டிலே மதுரையம்பதியிலிருந்த ஒரு சிறந்த புலவர். இவரது காலம் இற்றைக்கு ஆயிரத்தைந்நூறு வருடங்கட்கு முன்னராம். நல்ல சீலமுள்ளவர்.

பஞ்சலக் கணத்தொடு பஞ்ச காவியம்
பஞ்சமொன் றின்றியே பயின்ற நாவினன்
விஞ்சுபல் காவியம் விளம்பு மேதகன்
செஞ்சொலிற் பிரசங்கஞ் செய்யுஞ் சீரியன் (க)

நால்வகைக் கவியினும் நாளும் வல்லவன்
நால்வகைக் கவிஞரும் நன்கு மெச்சுவோன்
நால்வகை யருத்தமும் நயந்து தேர்ந்தவன்
நால்வகைத் தானையர் நண்பு பெற்றுளோன். (உ)

முருந்தனைத் திருநகை முகிழ்த்துப் பாரதி
பொருந்தலைப் புதுக்கிய புலமைப் புண்ணியன்
வருந்தலைக் கண்டிடா மதுரை யூரினன்
பெருந்தலைச் சாத்தனார் என்னும் பேரினன். (௧)

ஈட்டுபொன் முயற்சியெண் ணிறந்த வோடுறழ்
கூட்டுறின் அல்லது கூடுறா வென
நாட்டிய பாடலை நவித்தி னேய்க்கும்
வாடுறு வறுமையே மலிந்த தன்மையான். (௨)

(குமணன் கதை.)

இத்துணை அரிய நலங்கள் எல்லாம் அமையப்பெற்றும் வறுமையால் நாளும் வாடி வருந்தினார். அதனால் குமணனை நாடிச் சென்றார், காட்டிலிருந்த குமணனைக் கண்டு மகிழ்ந்தார். கவியொன்று பாடினார். அவ்வள்ளல் இவரது வறுமைப் பிணியை நீக்க இயலாமைக்கு வருந்தினார். தன் தலையைக் கொண்டுவருவோர்க்கு ஆயிரம்பொன் தருவதாகத் தன் மேல்பகைத்துத் தம்பி உறுதிகூறியிருப்பதை நினைந்தான். மகிழ்ந்தான். என் தலையைக் கொண்டுபோய் என் தம்பிக்குக்கொடுத்து அதன் விலையைக் கொண்டு உன் வெறுமை நோய் களையென்று புலவர் கையில் வாளைக்கொடுத்துத் தன் தலையை நீட்டினான். புலவர் நாணினார். பொருள் வருமென்று கருதி அப்பழிச்செயலைச் செய்ய அவர் துணியவில்லை. வறுமையுறினும் பழிப்பனவே செய்யேன் என்று நடுவுநிலைமையோடு அகன்றார். இது புறநானூற்றில் காணப்படும்.

நடுவுநிலைமையுடையார் பொருள் விரும்பிப் பழிபுரியார் என்பது இதனால் கூறப்பட்டது.

[தன்

173. கொள்ளென்று றன்றேன் கொடுத்துமேன் சத்துருக்
கொள்ளவில்லை நாட்டைக் குமணரசா — எள்ளுகின்ற
சிற்றின்பம் வெஃகி யறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர். (௩)

குமரேசா! பரதன் கொள் என்று கொடுத்தும் வன் சத்துருக்கன் நாட்டைக் கொள்ளவில்லை ஆதலின், மற்றின்பம் வேண்டுபவர், சிற்றின்பம் வெஃகி அறனல்ல செய்யார் என்க.

மற்றின்பம் என்றது துறக்க இன்பத்தை. பேரின்பத்தையுங் குறிக்கும். மற்றை என்பது மற்றுஎன நின்றது. இவ்விரண்டும் இடைச்சொற்களே எனினும், முன்னது தனக்கு இனமான பொருளையும், பின்னது பிறிதொன்றையும் குறிக்கும் என்க

மற்றைய தென்னுங் கிளவி தானே
சுட்டுநிலை யொழிய இனங்குறித் தன்றே. (தொல்காப்பியம்)

சிறந்த இன்பத்தை விரும்புகின்றவர், சிறிய இன்பத்தை விரும்பி அதன் பொருட்டு அல்லவற்றைச் செய்யார் என்பதாம்.

இன்பமுஞ் சிறப்பும் தருவதெனினும் பிறர்பொருளை அறிவுடையார் முறைகெடவிரும்பார் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை சத்துருக்கனால் உணரப்படும்.

கதை.

சத்துருக்கன் என்பவன் அரசர் பெருமானாகிய தசரதருடைய இளைய புதல்வன். இராம இலக்குவர்கள் வனம்புகுந்தபின் அவர்கள் வருகையைப் பரதனுடன் பதினான்கு வருடங்கள் எதிர்பார்த்திருந்தான். குறித்த காலத்தில் இராமன் அயோத்திக்கு வரவில்லையென்று தெரிந்த பரதன் உயிர்விடத் துணிந்தான். நெருப்பை வளர்த்தான். தன் தம்பியாகிய சத்துருக்கனைப் பார்த்து “இவ்வுலகை நீயே ஆளவேண்டும். அண்ணன் வரவில்லை ஆதலால் நான் இறந்துபடுவேன்” என்றான். தம்பி அது செய்ய இசையவில்லை. அரச இன்பத்தை வெறுத்தான். அவனும் உடன் இறக்கத் துணிந்தான். அவ்வமையம் அனுமார் வந்து காப்பாற்றி சிற்றின்பம் வெஃகி அறன் அல்ல செய்யாத சத்துருக்கனை ஊரும் போற்றினர். விரிவை இராமாயணத்தில் உணர்க.

காளை நிலமகளைக் கைவிட்டுப் போனவனைக் காத்துப் பின்பு
போனானும் ஒருதம்பி போனவர்கள் வருமவதி போயிற்றென்று
ஆறாத வுயிர்விடவென் றனையானும் ஒருதம்பி அயலேநாணா
னியானுமிவ் வரசாள்வேன் என்னேயிவ்வரசாட்சியினிதேயம்மா.

(மீட்சிப்படலம்.)

இது, தன்னை இன்புற அரசுபுரிக என்ற பரதனை நோக்கிச்
சத்துருக்கன் சொன்னது.

இன்பம் விரும்பி எதனையும் அறிவோர் வெஃகார் என்பது
இதனால் கூறப்பட்டது.

174. வள்ளுவனார் தள்ளா வறுமையுற்றும் வெஃகியொன்றும்
கொள்ளவில்லை என்னே குமரேசா—மெள்ள
இலமென்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற
புன்மையில் காட்சி யவர். (௪)

இ—ள்.

குமரேசா! வள்ளுவனார் வறுமையுற்றிருந்தும் ஏன் வெஃகி ஒன்றும் கொள்ளவில்லையெனின், புலம்வென்ற புன்மை யென்று வெஃகுதல் செய்யார் என்க.

புலம்வென்ற—ஐம்புலன்களையும் அடக்கிய. வெல்லுதல் என்னும் சொல்லாற்றலால் அவற்றின் மிகவீறிய தகைமையும், பகைமையும் உணரப்படும். "ஐம்புல வேடர்" "ஐவர் என்ற புலவேடர்" என வருவனவுங் காண்க.

புன்மையில் காட்சி—சிறுமையில்லாத அறிவு; என்றது மெய்யுணர்வை.

உலகப் பொருள்களைக் காண்டற்குக் கண்கள் கருவியாயிருத்தல்போல், உண்மைப் பொருளைக் காண்டற்கு அறிவு கருவியாயிருத்தலின் அதனைக் காட்சி என்றார்.

இலம் என்று வெஃகுதல் செய்யார்—வறியம் என்று கருதி விரும்புதல் செய்யார். இலம் தன்மைப் பன்மை முற்று.

புலன்களை வென்ற புன்மையில்லாத அறிவினையுடையவர், வறியம் என்று கருதிப் பிறர் பொருளை விரும்புதல் செய்யார் என்பதாம். காட்சியார் வெஃகார் என்று காண்க.

வறுமையுறினும் மெய்யுணர்வுடையோர் பிறர்பொருளை விரும்பார் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை வள்ளுவப் பெருந்தகைபால் காணப்படும்.

கதை.

வள்ளுவப் பெருந்தகை திருமயிலையிலிருந்து தாம் கைமுயன்று நெய்த ஆடையை விற்று அதனால் எய்தும் பணமொன்றானே குணமுடன் வாழ்ந்தார். அவரது அருங்குணங்களையும் பெரும் புலமையையும் கண்டுமகிழ்ந்தோரெல்லாரும் அவருக்குத் தம்மாலியன்றதைக் கொண்டுவந்து கொடுத்தார். அவற்றுள் ஒரு சிறிதையும் அவர் கொள்ளாது விடுத்தார். தமது அடியவருட் சிறந்தவராகிய ஏலேலசிங்கரென்பவர் அரசரும் விழையும் பெருந்திருவுடையவர். வள்ளுவநாயனார் எதையும் கொள்ளார் என்று தெரிந்தவராதலால் அவரில்லாத அமையம் ஒரு பெருந்தொகைப்பொருளை அவர் இல்லத்தில் ஒருநாள் பெய்துவைத்துப் போயினார். வெளியே சென்றிருந்த நாயனார் இல்லம்புகுந்தார். அங்கிருப்பதைக்கண்டார். வாசுகியம்மையாரிடம் வந்ததை வினவினார். வந்தவிதத்தை அம்மை வணங்கியுரைத்தார். நமது ஐயன் புன்னகை கொண்டார். சிங்கரையழைத்தார். இச்சிறு செயல் எனபாலினிச் செய்தலைவிடுக. இவ்வுறுபொருள் கொண்டு நின்னுயர்மனைபடைக. கொள்க நின்பொருள் கொள்க என்றுரைத்தார். சிங்கர் நாணினார். சென்றார் எடுத்தே. வறுமையே தமக்குப் பெருமையாகக் கருதி வள்ளுவப்பெருமான் வாழ்ந்த வண்மையும், அறிவோர் பிறர் பொருள் அணுவுங்கொள்ளார் என்னும் உண்மையும் ஏலேலசிங்கர் சாலவுந்தெளிந்தார். தன்மனை புகுந்து தனியறம் புரிந்தார்.

வறுமையுறினும் அறிவோர் பிறர்பொருள் வெஃகார் என்பது இதனால் கூறப்பட்டது.

175. மேலாம் அறிவுற்றும் வெஃகிக் கணனிழிந்து
கோலிழந்தான் என்னே குமரேசா—சாலவே
அஃகி யகன்ற அறிவென்னும் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின் (௫)

இ—ள்.

குமரேசா! கணன் என்பவன் சிறந்த அறிவுடையனுயிருந்தும் வெஃகியதால் ஏன் இழிந்து தாழ்ந்தான் எனின், யார் மாட்டும் வெஃகி வெறிய செயின், அஃகி அகன்ற அறிவு என்னும் என்க.

அஃகி அகன்ற அறிவு—நுணுகிப் பரந்த அறிவு

வெறிய செயின்—வெறுக்கத்தக்க செயல்களைச் செய்வாராயின்.

நுண்ணிதாய்ப் பலநூல்களிலும் சென்று விரிந்த பேரறிவுடையராயினும் பிறர்பொருளை விரும்பி அருளில் செயல்களைச் செய்வராயின் அவரது அறிவால் யாதும் பயனில்லையென்பதாம்.

பிறர் பொருளை வெஃகி இழிசெயல்களைச் செய்யாமையே ஒருவன் அறிவுடைமைக்குப் பயன் என்பதும், செய்வனாயின், எத்துணைப் பேரறிவாளனேயாயினும் அவன் அறிவிலியே யாவன் என்பதும் இதில் உணர்த்தப்பட்டன.

இவ்வுண்மை கணன்பால் உணரப்படும்.

கதை.

கணன் என்பவன் அபிசித் என்னும் ஓர் அரசன் புதல்வன். தாய் பெயர் குணவதி. இவன், அழகும் ஆண்மையும் அமையப் பெற்றவன். வேல் வலம்பெற்ற வீரருள் வீரன். நூல்பலகற்றுச்

சால்புயர்வுற்றோன். செங்கோல் தாங்கிச் சீர்பெற ஆண்டான். ஒருநாள் வேட்டைக்குச் சென்றான். அங்குக் கபில முனிவரைக் கண்டான். மன்னன் களைப்புற்றிருப்பதை அம்முனிவர் தெரிந்தார். தாம் பெற்றிருந்த சிந்தாமணியின் தெய்வீக நலத்தால் அரசனுக்கும் சேனைகளுக்கும் உணவளித்து அன்புடன் உபசரித்தார். அரசன் களை தீர்ந்தபின் அம்மணியை வெஃகினான். முனிவர் மறுத்தார். அரசன் வலிந்து அதனை வௌவிச்சென்றான். கபிலர் விநாயகரைத் துதித்து விழிநீர் சொரிந்தார். அம்மூர்த்தி, யானைபோல் தோன்றி அவ் அரசனை யெதிர்த்தார். அரசன் அஞ்சினான். முனிவர்செய்த வஞ்சமென்று தெளிந்தான். பண்டான். அவரைக்கொல்லத் துணிந்தான். கணபதி காய்ந்தது. கணைன் மாய்ந்தான். அஃகி அகன்ற அறிவுற்றிருந்தும் முனிவரது மணியை வெஃகியதால் அரசன் அறிவின் பயனையிழந்தான். அழிந்தான். இஃது அபிதான சிந்தாமணியிலுள்ளது.

பிறர் பொருள் வெஃகாமையே ஒருவன் அறிவுக்குப் பயன் என்பது இதனால் கூறப்பட்டது.

176. வென்றிமிகு கார்த்த வீரியனோர் ஆவைவெஃகிக்
குன்றினான் என்னே குமரேசா—நன்றும்
அருள்வெஃகி ஆற்றின்கண் நின்றான் பொருள்வெஃகிப்
பொல்லாத சூழக் கெடும். (௬)

குமரேசா! கார்த்தவீரியன் ஒரு பசுவை வெஃகியதால் ஏன் கேடுற்றான் எனின், அருளைவிரும்பி ஆற்றின்கண் நின்றவன், பிறர் பொருளை விரும்பிப் பொல்லாத சூழக்கெடும் என்க.

பொல்லாத சூழக்கெடும்—தீச்செயல்களைச் செய்ய எண்ணக் கெடுவர். எண்ணினுங்கெடுவரெனவே, செய்தால் வருங்கேடு சொல்ல வேண்டாவாயிற்று. அருளைவிரும்பி அதனை அடைதற்குரிய நெறியின்கண் நின்றவர், பிறர்பொருளை விரும்பிப் பொல்லாதன சூழக்கெடுவர் என்பதாம்.

இறைவனது அருளை யெய்துதற்குரிய நெறியில் நின்றவர் பிறரது பொருளை விரும்பினால் கெடுவர் எனவும் இது பொருள்படும்.

நெறிநின்றொழுகிய அறிவினரேனும் பிறர் பொருளை விரும்பினாற் கெடுவர் என்பது கருத்து. இது கார்த்தவீரியன்பால் காணப்படும்.

கதை.

கார்த்தவீரியன் என்பான் சூரியகுலத்து வேந்தன். கிருதவீரியன் புதல்வன். தாய் பெயர் சுகந்தை. இவன் மிகச்சிறந்த வீரன். ஆயிரங்கைகளையுடையவன். மகா வீரனான இராவணனையும் வென்று சிறையிலிட்டவன். மாகிஷ்மதியென்னும் பட்டணத்திலிருந்து அரசுபுரிந்தான் அருளை விரும்பி அறம்பல செய்தான். நெறிதவறாத அறிவினையுடையவன். இவன் ஒருநாள் சமதக்கினி முனிவரது தவச்சாலைக்குச் சென்றான். அவர்பால் அமைந்திருந்த காமதேனுவைக் கண்டான். அத்தெய்வப் பசுவை அவாவினான். அதனால், அத்தூயவனிடமும் தீயனசெய்தான். ஆவைக் கவர்ந்து தன் அணிநகர் அடைந்தான். அதன் பின் அம்முனி மகனாகிய பரசுராமன் வந்தான். அங்கு நிகழ்ந்ததைத் தெரிந்தான். நொந்து சினந்தான். அரசனை நாடி விரைவினில் ஓடினான். தன்கை வெய்ய மழுவால் அவன் தலையைக் கொய்து துணித்தான். அருள்வெஃகி நின்ற அரசர் தலைவனும் ஒருபொருள் வெஃகியதால் பொன்றி மறைந்தான்.

இதன் விரிவை மச்சபுராணத்தில் உணர்க.

பிறர்பொருளை விரும்பினோர் அருளிழந்து கெடுவர் என்பது இதனால் கூறப்பட்டது.

177. தள்ளாத் தனபதிபோன் தாயத்தார் வெளவியுமேன்
கொள்ளவில்லை இன்பம் குமரேசா—எள்ளளவும்
வேண்டற்க வெஃகியாம் ஆக்கம் விளைவயின்
மாண்டற் கரிதாம் பயன்.

இ—ள்.

குமரேசா! தனபதி வணிகரது பொருளை அவரது தாயத்தார் வெளவியும் பயன்கொள்ளவில்லையெனின், வெஃகி ஆம் ஆக்கம் வேண்டற்க விளைவயின் பயன் மாண்டற்கரிதாம் என்க.

வெஃகி ஆம் ஆக்கம்—பிறர்பொருளை அவாவிக் கவர்ந்து அதனால் ஆகும் ஆக்கத்தை.

வேண்டற்க—விரும்புதலொழிக.

விளைவயின்—பலன் விளையும் இடத்து: அனுபவிக்கும்போது என்றபடி. பயன் மாண்டற்கு அரிது ஆம்—அவ்வாக்கத்தின் பயன் மாண்புறுதற்கு அரியதாம். ஈண்டு அருமை இன்மை குறித்து நின்றது.

பிறர் பொருளை வெளவிக்கொண்டு அதனால் ஆகும் இன்பத்தை ஒருவன் விரும்புதலாகாது, ஏனெனில் அவ்வாக்கத்தின் பயன், விளைவில் நன்மையாகாதென்பதாம்.

பிறன் பொருளை ஒருவன் பேராசையால் கவர்ந்துகொள்வானாகில் அப்பொருள் அவனுக்கு நன்மையான பலனை நல்காதென்பது இதில் உணர்த்தப்பட்டது. இது தனபதிவணிகரது தாயத்தார்பால் காணப்படும்.

கதை.

தனபதி என்பவன் மதுரையம்பதியிலிருந்த ஒரு வணிகர் தலைவன். இவன் இருநிதிக் கிழவன் எனப் பெருநிதியுடையவன். சுசீலை என்னும் தன் மனைவியுடன் அன்புற்றமர்ந்து இன்புற்று வாழ்ந்தான். அறம்பல புரிந்தான். எல்லா நலங்களும் எய்தியிருந்தும் பிள்ளைப்பேறின்றிப் பெரிது வருந்தினான். தன்னுடன் பிறந்த தங்கைக்கு ஒருமகன் இருந்தான். அம்மருமகனையே தனக்கு மகனாகக்கொண்டான். தன் பொருள் முழுதையும் அவனுக்கே தந்தான். மனைவியோடு அவன் தவமேற்சென்றான். சென்றபின் அவன் தாயத்தார் அப்பொருள் முழுதையும் கவர்ந்தார்.

தாயும் மகனும் தளர்ந்தார். தனிமுதலாக் கந்தாயமா யிளைந்தார். அம்மாமன் தவஞ்செய்யச் சென்ற தனபதி வணிகர்போல் வந்தார். தாயத்தாரை அழைத்துச் சபையில் நிறுத்தினர். வரன்முறை கூறி அவர் பொருள் முழுதையும் அம்மகனே அடையும்படி செய்தார். தாயத்தார் உற்றதையெல்லாம் ஒருங்கேயிழந்தார் குற்றமும் பழியும் கொண்டுளம் நொந்தார். வெஃகியாம் ஆக்கம் விளைவில் இகழ்தரும் என்பதைத் தேர்ந்தார். செய்பிழைக் கிரங்கினர். இதன் விரிவு திருவிளையாடலில் உணரப்படும்.

பிறர் பொருளை ஒருவன் கவர்ந்து கொள்ளினும் அதனால் அவன் நன்மையெய்தான் என்பது இதனால் கூறப்பட்டது.

178. வள்ளலுயர் ஆய்செல்வம் மாறா மேன்மேல் வளர்ந்து
கொள்ளநின்ற தின்பம் குமரேசா—எள்ளளவும்
அஃகாமை செல்வத்திற் கியாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள். (௮)

-ள்

குமரேசா! ஆய்வள்ளலது செல்வமட்டும் என்றும் பெருகி ஏன் இன்பமுற நின்றது எனின், செல்வம் அஃகாமைக்கு ஏது யாதெனின், பிறன் வேண்டும் கைப்பொருளை ஒருவன் வெஃகாமையேயாம் என்க.

அஃகாமை—குறையாமை. இவ் எதிர்மறைத் தொழிற்பெயர் ஆகுபெயராய் அதன் காரணத்தைக் குறித்து நின்றது.

பிறன் விரும்பும் கைப்பொருளைத் தான் விரும்பாமையே ஒருவன செல்வம் சுருங்காமைக்குக் காரணமாம் என்பதாம்.

இனி, ஒருவன் செல்வம் சுருங்காமலிருக்கவேண்டுமானால் பிறன் கைப்பொருளை அவன் விரும்பாமல் இருக்கவேண்டும், எனவும் இது பொருள்படும்.

பிறர் பொருளை இச்சியாதவன் செல்வமே பெருகிவளரும் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இஃது ஆய்பால் ஆயப்படும்.

கதை.

ஆய் என்பவன் பாண்டி நாட்டிலே பொதியமலைக்கு அருகிலிருந்த ஆய்க்குடி என்னும் ஊரிலே இருந்தவன். இவனது காலம் இற்றைக்கு ஏறக்குறைய ஆயிரத்தெண்ணூறு வருடங்கட்கு முன்னராம். இவன் தாளாண்மை மிக்க வேளாண் மரபினன். நூல் பல தேர்ந்த மேலாம் அறிவினன். மனநலமும் இனநலமும் மாண்புறப் பெற்றவன். கடை வள்ளல்கள் எழுவருள் ஒருவன். சிற்றரசனாயிருப்பினும் பேரரசரும் போற்றத்தக்க பெரும் புகழுடையவன். சிறுபாணாற்றுப்படை புறநானூறு நற்றிணை முதலிய பழைய நூல்கள் பலவற்றிலும் இவன் புகழ்மணங் கமழ்கின்றது. இரவலர் யாவர்க்கும் இவன் உயிரென இருந்தான். ஈதலின்பமே இல்லறமெனக் கொண்டான். வேற்றரசர் சிலர் இவனை வெல்லக் கருதினர். முடியவில்லை. பொருள் பல போக்கி உறுகுணம் ஆய்ந்தார். அவற்றில் இவன் அவாவின்றி நின்றான். இவனது மனப்பண்பும் பிறர் பொருள் வெஃகாப் பெற்றியுந் தெளிந்து அவரும் இவன்பால் பெருநண்பு கொண்டார். குறையா வாழ்வு பெற்று இவன் கொடுத்து வாழ்ந்தான். இவனது பேரும் ஊரும் இமயமலைபோல் நிலைநின்று இவ்வுலகிற்கு நலம் பல புரிகின்றன என்று மோசியார் எனும் புலவர் பெருமான் இவன்மேன்மையை வியந்து பாடியுள்ளார்.

"வடதிசை யதுவே வான்றோய் இமயந்
தென்றிசை ஆய்குடி யின்றாயிற்
பிறழ்வது மன்னே இம்மலர் தலையுலகே." (மோசியார்.)

இவனிசை புறநானூறு முதலிய பல நூல்களிலும் புலனும். வெஃகாதான் செல்வம் அஃகாதென்பது இதனால் கூறப்பட்டது.

179. கொள்ள விரும்பாக் குசேலரிடம் செல்வமன்பு
கொள்ளவந்த தென்னே குமரேசா—உள்ள
அறனறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேருந்
திறனறிந் தாங்கே திரு. (௯)

இ—ள்.

குமரேசா! பிறர் பொருளை விரும்பாத குசேலரை ஏன் செல்வம் விரும்பி வந்தடைந்தது எனின், அறன் அறிந்து வெஃகாத அறிவுடையாரைத் திருமகள் திறன் அறிந்து சேரும் என்க.

திறன் அறிந்து—சமயமறிந்து. அஃதாவது வெஃகாதவன் மனமகிழ்ந்திருக்கும் காலமும் இடமும் தெரிந்து.

பிறர் பொருளை விரும்பாமையே தனக்கு அறமென்று அறிந்து அதில் வழுவாதொழுகும் அறிவுடையாரைத் திருமகள்தானே வந்து அடைவள் என்பதாம்.

ஆங்கே என்றது அறிந்த படியே எனவும் அதன்படியே எனவும் இருவகையினும் பொருள்படும்.

பிறர் பொருளை விரும்பாதவர்க்குச் செல்வம் தானே வந்து சேரும் என்பது கருத்து.

மேல், வெஃகாதான் செல்வம் அஃகாதென்றார், இதில் அது தானே அவனை வெஃகி வந்து சேரும் என்றார்.

இவ்வுண்மை குசேலரால் காணப்படும்.

கதை.

குசேலர் வறுமையுற்றிருந்தும் பிறர் பொருள் வெஃகாப் பேரறிவுடையராயிருந்தார். இவர் வட மதுரை சென்றும் ஒன்றும் வேண்டாது மீண்டார். திரும்பி வருமுன் இவர் இல்லில் திருமகள் வந்து விரும்பியிருந்தாள். அப்பெருஞ் செல்வத்தைக் கண்டு இவர் இறும்பூதெய்தினார். இவரது வறிய குடிசையும் பெரிய மாளிகையாயது. உணவின்றி வருந்திய மனைவியு மக்களும் உயர்ந்த அரசபோகங்களில் உலாவி விளங்கினார். திருவருளை நினைந்து குசேலர் திருவுற்று வாழ்ந்தார்.

வாயிலடைந்த மறைக்குலத் தலைவன்
மாயனரி யான நின்றிழிந்து
மேயதன் முன்னர்க் கந்தைபோற்றுவார
மிக்க சிற்றிலைக் குடில் திரிந்து
தூயசெம்பொன்னால் அமைந்திடப்பட்ட
சுடர்ப்பெரு மாளிகையாகிப்
பாய பல் வளனும் நிறைதரப் பொலியும்
பண்பினை நோக்கினனின்றான்.

(குசேலோபாக்கியானம்.)

பிறர் பொருள் விரும்பாதவனைத் திருமகள் விரும்பி அடைவள் என்பது இதனால் கூறப்பட்டது.

180. கண்டாள் பழிவெஃகிக் கைகேசி காகுத்தன்
கொண்டான் விறலென் குமரேசா—மண்டி
இறலீனும் எண்ணாது வெஃகின் விறலீனும்
வேண்டாமை யென்னும் செருக்கு. (ம)

இ—ள்.

குமரேசா! கைகேசி அரசை வெஃகிப் பழியுற்றாள், இராமன் ஏன் அதனை வேண்டாமல் விறலுற்றான் எனின், எண்ணாது வெஃகின் இறல் ஈனும், வேண்டாமை என்னுஞ் செருக்கு ஈனும் என்க. இறல்—இறுதி. விறல்—வெற்றி.

எண்ணாது வெஃகின் இறல் ஈனும்—பின் விளைவதை எண்ணாமல் பிறன் பொருளை ஒருவன் விரும்பின் அஃது அவனுக்கு இறுதியைக் கொடுக்கும்.

செருக்கு—மனக்களிப்பு. அஃது, ஆகுபெயராய்த் தனக்கு ஏதுவாகிய செல்வத்தை இங்கே குறித்து நின்றது.

பொருள் விருப்புள்ளவன் மருளோடு இழிந்துழல்வான், அஃதில்லாதவன் தெருளோடு சிறந்து திகழ்வான் என்பார் “வேண்டாமை என்னுஞ் செருக்கு விறல் ஈனும்” என்றார்.

பின் விளைவை அறியாமல் பிறன் பொருளை ஒருவன் விரும்பின் அஃது அவனுக்கு நாசத்தையும், வேண்டாவிடின் மேன்மையையும் கொடுக்கும் என்பதாம்

பிறர் பொருளை அறிவின்றி வெளவக் கருதினோனைப் பழியும் இழிவும் பற்றும் என்பதும், வேண்டாதவனைப் புகழும் வெற்றியும் பொருந்தும் என்பதும், இதில் உணர்த்தப்பட்டன. இவ்வுண்மை கைகேசிபாலும் காருத்தன்பாலும் காணப்படும்.

கதை.

கைகேசி என்பவள் கேகய தேசத்து மன்னன் மகள். தசரதன் மனைவி. உருவ நலனும் அறிவின் திறனும் ஒருங்கு வாய்ந்தவள். தசரதன் தனது தலைமகனாகிய இராமனுக்கு முடிபுனைய முடிவு செய்திருந்தான். அதனைக் கைகேசி அறிந்தாள். மனந்திரிந்தாள். அவ் அரச பதவியைத் தன் மகனாகிய பரதனுக்கே உரிமையாக்க விரும்பினாள். கணவனை வஞ்சித்தாள். நினைந்ததை முடித்தாள். முடிவை எண்ணி இராமன் நெடுவனம் புகுந்தான். அரசன் அதனால் ஆவி துறந்தான். அனைவருந் துயரில் ஆழ்ந்து வருந்தினார். கேகய தேசத்துக்குப் போயிருந்த பரதன் வந்தான். தாய் செயல் தெளிந்தான். தன்னுளங் கொதித்தான். வைது வெறுத்தான். முடியிழந்து வனம்புகுந்த அண்ணனைத் தேடிச் சென்றான். கணவனையும் மகனையும் பிரிந்து கைகேசி கடுந்துயருழந்தாள். பின் விளைவதை அறியாமல் அரசுரிமையை வெஃகியதால் இவள் அரும்பழியடைந்தாள்.

எண்ணாது வெஃகின் இறல் ஈனும் என்பதை யுலகம் இவள்பால் உணர்ந்தது.

கடிபயா னத்திடைதன் துணையேசத் தோன்றல் துயர்க்
கடலினைக்
கடுமையார் கானகத்தில் கருணையார் கலியேகக்
கழற்கால் மாயன்
நெடுமையால் அன்றளந்த உலகமெல்லாந் தன்மனத்தே
நினைந்து செய்யும்
கொடுமையால் அளந்தானை யறிந்திலையேல் இங்கின்றுள
என்னையின்றே.

இது, கைகேசியைக் குறித்துக் குகனிடம் பரதன் கூறியது.

அரசு வேண்டாம் என்று இராமன் அடங்கி யகன்றான். அதனால் முற்றத் துறந்த முனிவரும் அவனது மனத்துறவையும் வெறுத்த நிறையையும் வியந்து போற்றினர்.

வெஃகுதலால் இறலும், வெஃகாமையால் விறலும் உளவாம் என்பதை உலகம் இவர்பால் ஓர்ந்தது.

வெஃகாமையே ஒருவனுக்கு மெய்யான மேன்மை என்பது இதனால் கூறப்பட்டது.

(இவ்வதிகாரத்தின் தொகைப் பொருள்.)

பிறன் பொருளை ஒருவன் கவர்ந்துகொள்ளக் கருதின் அக்கருத்து அவன் குடியையும் கெடுத்து அவனுக்குப் பழியையும் கொடுக்கும். நடுவு நிலைமையுடையவர் பிறர் பொருள் வெஃகார். மறுமை யின்பத்தை விரும்பினோர் அதனை விரும்பார். வறியராயினும் அறிவோர் வெஃகார். பிறர் பொருள் வெஃகாமையே ஒருவன் பேரறிவுக்குப் பயன். அருள் விரும்பி நெறிநின்றவராயினும் பொருள் விரும்பின் பொன்றி யிழிவர். வெஃகியாம் பொருளால் ஒருவன் மெய்யின்பம் எய்தான். விரும்பாதவன் செல்வம் சுருங்காது. அவனுக்குச் செல்வம் தானே வந்துசேரும். வெஃகுதல் இழிவையும் அழிவையும் ஈனும். வெஃகாமை ஒருவனுக்கு வெற்றியையும் மேன்மையையும் கொடுக்கும்.

18-வது வெஃகாமை முற்றிற்று.

௧௯-ம் அதிகாரம் புறங்கூறாமை.

அஃதாவது காணாத இடத்தில் பிறரை யிகழ்ந்து சொல்லாமை பிறர் ஆக்கங்கண்டு பொறாமை கொண்டு அதனை வெளவக் கருதும் இழிகுணமில்லாத இடத்தே நிகழ்வதாதலின் அழுக்காறாமை வெஃகாமைகளின் பின் இது வைக்கப்பட்டது. அழுக்காறும் வெஃகுதலும் மனக்குற்றமாகவும் புறங்கூறல் மொழிக்குற்றமாகவும் கருதப்படும். மொழிநலம், மனநலம் அடியாக வருமாதலால் அதிகார அமைவும் அம்முறையில் நின்றது.

---

181. மாறுசெய்தங் கும்பகன்னன் மாண்புற்றான்யார்புறமும்
கூறினன் றென்னே குமரேசா—தேறி
அறங்கூறான் அல்ல செயினும் ஒருவன்
புறங்கூறான் என்ற லினிது. (௧)

இ—ள்.

குமரேசா! கும்பகன்னன் கொடுஞ் செயலுடையனாயிருந்தும் புறங்கூறாத புனிதன் என்று ஏன் புகழ்பெற்றான் எனின், அறங்கூறானாகி அல்லனவே செய்யினும் புறங்கூறான் என்று ஒருவன் போற்றப்படுவானாயின் அஃது அவனுக்கு நன்மையாம் என்க.

அறம் கூறான்—அறமென்று வாயினாலுஞ் சொல்லாதவனாய். இதில், வினைமுற்று எச்சமாகி நின்றது. அல்ல என்றது பாவங்களை. புறங்கூறான்—காணாத இடத்தில் பிறரை யிகழ்ந்துசொல்லான்.

அறமென்று சொல்லுவதுஞ் செய்யாது பாவங்களையே செய்பவனாயினும், பிறரை யிகழ்ந்து சொல்லான் என்று உலகத்தாரால் அவன் வியந்து சொல்லப்படுவானாயின் அஃது அவனுக்கு நன்மை என்பதாம்.

பெரும் பாவங்களைச் செய்யினும் ஒருவன் புறஞ்சொல்லலாகாதென்பது கருத்து. பாவங்கள் பலவற்றினும் புறங்கூறலே

பெரும் பாவம் என்பதும் அதனையுடையவன் அறம் பல செய்பினும் நலம்பெறான் என்பதும் இதில் அமைந்தமை காண்க.

எவ்வளவு கொடியவனாயினும் புறங்கூறாதிருப்பின் அவன் நலம் பெறுவான் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இது கும்பகன்னன்பால் உணரப்படும்.

கதை.

கும்பகருணன் என்பவன் விச்சிரவசுவுக்குக் கேகசியென்னும் அரக்கியிடம் பிறந்தவன். இராவணன் தம்பி. வியக்கத்தக்க மெய்வலியுடையவன். அஞ்சா நெஞ்சினன். அருந்திறல் பெற்றோன். பேருண்டிகொண்டு பெருநாளுறங்குவோன். மறம் பல செய்பினும் புறங்கூறாதவன். இராவணன் சீதையைக் கவர்ந்து சிறையில் வைத்தபின் இராமனைப் பலமுறை யிகழ்ந்தான். பழித்தல் தீதென்று இவன், அவனை யிடித்துக்கூறினான். புறங்கூறுவோர் என்றும் புல்லியரென்றான். பேடிகளன்றோ பிறன் புறங்கூறுவார் நும்போன்ற பெரு வீரர்க்கு அது பெரும்பிழையென்று பெரிதும் புகன்றான். பகைத்த வீரர் முன் எதிர்த்துச் செல்வான். மறங்கொண்டு கொல்லினும் புறஞ்சொற் சொல்லான். அல்லன செய்பினும் புறங்கூறாமையால் இவன் நல்லவனாயினான்.

இஃது இராமாயணத்தில் தெளியப்படும்.

அறங்கூறானாயினும் ஒருவன் புறங்கூறலாகாதென்பது இதனால் கூறப்பட்டது.

182. கண்டு நகைத்த கனகவன்மன் ஏன்கேடு
கொண்டான் பழித்துக் குமரேசா—கொண்ட
அறனழீஇ யல்லவை செய்தலிற் றீதே
புறனழீஇப் பொய்த்து நகை. (உ)

ப—ள.

குமரேசா! கண்டு நகைத்த கனகவன்மன் ஏன் புறங்கூறிப் பெரும்பழி கொண்டான் எனின், அறத்தையழித்து அல்லவற்றைச் செய்தலினும் ஒருவன் புறத்தே பழித்துப் பொய்த்து நகுதல் பெருந்தீமை என்க. தீதே என்பதில் ஏகாரம் தேற்றங் குறித்து நின்றது.

அழி என்பது அழீஇ என நீண்டு அளபெடுத்து ஈரிடத்தும் வினையெச்சப் பொருளை விளக்கி நின்றது.

அறன் அழீஇ—அறத்தை யழித்து. அறம் என்பது ஒன்று இல்லையென்று மறுத்துச் சொல்லி எனவுமாம்.

அல்லவை செய்தலின்—பாவங்களைச் செய்தலினும்

புறன் அழீஇ—புறத்தே யழித்து: அஃதாவது ஒருவன் பெருமையழியும்படி அவன் புறத்தே யிகழ்ந்து சொல்லி.

காணாத இடத்தே ஒருவனை யிகழ்ந்துசொல்லிக் கண்ட இடத்தே அவனோடு பொய்யாக ஒருவன் புகழ்ந்து நகுதல், அறத்தைக் கொன்று அல்லவற்றைச் செய்தலினும் தீமையாம் என்பதாம்.

புறஞ்சொல்வோர் அறங்கொல்வோரை நேர்வர், அதனோடு பொய்த்து நகுவோர் அக்கொலையோடு அல்லவை செய்வோரை நிகர்வர் என்க.

புறங்கூறுவோன் வெறும் பாவி அதனோடு பொய்யாக முகநகை செய்வோன், பெரும் பாவி என்பதாம்.

புறத்தே பழித்து முகத்தே பொய்நகை செய்வோன் பெருந்தீமையடைவான் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை கனகவன்மன்பால் காணப்படும்.

கனகவன்மன் என்பவன் மதுரையிலிருந்த ஒரு தட்டார் தலைவன். நெடுஞ்செழியன் அரசுபுரியுங் காலத்தில் உடனிருந்தவன். பொற்பணி செய்வதில் நற்பேர் பெற்றவன். மரகத முதலிய மணிகளின் குணங்களைத் தெரிவதிலும், விலைகளைத் துணிவதிலும் மிக வல்லவன். மணியணி பலவும் புனைந்து தந்து அரசன்பால் அணியணியாகப் பரிசு கொண்டவன். புறத்தில் இத்துணை நலங்கள் அமையப் பெற்றும் இவன் உளத்தில் இழி குணங்களே யிசைந்திருந்தன. எவருடைய பொருளையுங் கவருங் கருத்தினன். பொய்யே புகலும் வெய்ய நாவினன். சிலம்பை விலைப்படுத்த மதுரைக்கு வந்த கோவலனை இவன் கண்டான். நகைமுகங் காட்டினான். கோவலன் நம்பினான். தன் கைச் சிலம்பை அவன் கைக்கொடுத்தான். அதனை நல்லவிலைக்கு விற்றுத் தருவதாக அப்பொல்லாதவன் புகன்றான். பொன் நகை செய்வோன் பொய்நகை செய்தான். வஞ்சமான இனியமொழிகளால் கோவலனது நெஞ்சைத் தேற்றினான். ஓரிடத்தில் இருக்கும்படி செய்தான். சிலம்பைக்கொண்டு அரசமாளிகையிற் புகுந்தான். அரசனைக் கண்டான். முன்னரே அரசியின் சிலம்பொன்றை அக்கொடியவன் களவாகக் கொண்டிருந்தான். அதனையின்று கண்டுகொண்டுவந்தேன் என்று கூசாமல் கூறினான். பெருமை யழியும்படி கோவலனுக்குச் சிறுமையேற்றினான். அடாப்பழி கூறினான். கள்ளனெனக் காட்டிக் கோவலனைக் கொல்லச்செய்தான். நோனும் நொல்வித்துங் கொடும்பழி கொண்டான். புறம் பழித்துப் பொய்த்து நகைத்த அக்கொடியோனும் குலத்தோடழிந்தான். கொடுந்தீதுற்றான்.

(இதன் விரிவு சிலப்பதிகாரத்தில் தெளியப்படும்).

புறங்கூறல் அறங்கோறலினுங் கொடியதென்பது இதனால் கூறப்பட்டது.

183. சீறி யெதிர்வைது செத்தான் பவுண்டரகன்
கூறான் புறமேன் குமரேசா—வேறாப்
புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாதல்
அறங்கூறும் ஆக்கந் தரும். (௩)

இ—ள்.

குமரேசா! பவுண்டரகன் புறங்கூறி வாழாமல் ஏன் எதிர்கூறி யிறந்தான் எனின், புறங்கூறிப் பொய்த்து உயிர் வாழ்தலினும் சாதல் அறங்கூறும் ஆக்கம் தரும் என்க.

அறம் என்பது ஈண்டு அதனை யுணர்த்தும் நூல்களைக் குறித்து நின்றது.

காணாத இடத்தில் பிறரை யிகழ்ந்து சொல்லிக் கண்டஇடத்தில் அவர்க்கு நல்லவன்போல் நடித்துப் புகழ்ந்து ஒருவன் வஞ்சகமாக உயிர் வாழ்வதைவிட அவன் இறந்து படுதல் நல்லதென்பதாம்.

இறவாதிருப்பின், புறங்கூறலாகிய பெரும்பாவத்தை மேலும் மேலும் புரிந்து மீளா நரகினுக்காளாவான், இறப்பின், அது கூறானாய் அறங்கூறும் ஆக்கத்தையடைதற்கு உரியனாவன். ஆதலால், சாதல் அவனுக்கு நலந்தருவதாயிற்று.

இனி, ஒருவனைக் குறித்துப் பிறனொருவனிடம் புறங்கூறி அவன் மனமகிழும்படி இச்சகஞ்செய்து ஒருவன் உயிர் வாழ்தலினும் சாதல் அவனுக்கு இனிதாம் எனவும் இது பொருள்படும்.

புறங்கூறி வாழ்தலினும் ஒருவன் இறந்து படுதல் நலமென்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை பவுண்டரகன்பால் காணப்படும்.

கதை.

பவுண்டரகன் என்பவன் கண்ணன் காலத்திலிருந்த ஒரு திண்ணிய வேந்தன். கருநாடென்னும் பெருநாட்டை யாண்ட

வன். நாரத முனிவரது தூண்டுதலால் கண்ணன்மீது இவன் கடும்பகை கொண்டான். அவரது சின்னங்களைத் தானும் கொள்ள எண்ணினான். அதன்பொருட்டுக் கண்ணுதற் பரமனைக் கருதிப் போற்றினான். அப்பரமனருளால் அவை வரப்பெற்றான் சங்கு சக்கரம் தண்டு முதலிய ஐவகைப் படைகளையுங்கொண்டான். கண்ணனினும் பெரியவனாகத் தன்னை யெண்ணினான். பொறாமையுந் தருக்கும் பொருந்தப் பொங்கினான். ஆயினும் புறங்கூறல் என்னும் புன்மையை யொழிந்தான். மறம்புரிதற்கே மனந்துணிந்தெழுந்தான். கண்ணனை நேரே காணச் சென்றான். கண்டான், கடிந்தான். கண்ணா! "ஐவகைப் படைகளும் எமக்கேயுரியன. அவை, நீ தாங்க அருகனல்லன். விடுக அவற்றை விரைவில்" என்றான். கண்ணன் புன்னகை செய்தான். அவன் கூறியபடி முதலில் ஆழியைவிட்டான். விடுத்த ஆழி கடுத்து வந்தவன் மணிமுடி துணித்துத் துனியுடன் சென்றது. மாய்ந்து வீழ்ந்தவன் மாலுரு வெய்தினான். மாறா இன்பமருவி மகிழ்ந்தான். பொறாமையுற்றும், புறங்கூறிப் பொய்த்துயிர் வாழாமல் மறப்புரிந் திறந்தமையால் இவன் அறங்கூறும் ஆக்கத்தையடைந்தான். இதன் விரிவைப் பாகவதம் பத்தாங்கந்தத்தில் காண்க.

பண்ணமை களிநல்யானைப் பவுண்டரன் வதனநோக்கி
வெண்ணிலா முறுவல்கோட்டி விடுதிவெந் தழல்வாய்கான்ற
ஒண்ணிற நேமியென்றுங் குரைத்தனை விடுதுமென்று
மண்ணமை முழுவுத்திண்டோள் மாலவன் விடுத்திட்டானால் (1)

ஊற்றிருந் துதிரமாரி யொழுகுசெந் தழல்வாய்நேமி
சீற்றமோ டெதிர்ந்துசெய்ய செருத்தொழில் விளையாநின்ற
பாற்றினஞ் சுழலும்வைவேற் பவுண்டர வாசுதேவன்
மாற்றருஞ் சிறப்புவாய்ந்த மணிமுடி துணித்ததன்றே. (2)

விட்டிரு வினையுநீங்கி வேரியந் துளவமாயன்
கட்டெழி லுருவநாடிக் கைபுனைந் திருந்தவாற்றால்
பட்டவெங் களிநல்யானைப் பவுண்டர வாசுதேவன்
வட்டவாய்த் திகிரிதாங்கும் மாலுருமரீஇயி னானே. (3)
(பாகவதம்)

புறங்கூறி ஒருவன் வாழ்தலினும் சாதல் நன்றென்பது இதனால் கூறப்பட்டது.

---

184. மாறா வமுதுண்ணும் வஞ்சரெதிர் வெய்யசொன்னார்
கூறார் புறமேன் குமரேசா—சீறிவந்து
கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க
முன்னின்று பின்னோக்காச் சொல். (அ)

இ—ள்.

குமரேசா! மாறாகி அமுதுண்ணும் வஞ்சரெதிரேநின்று வெய்ய சொற்களைச் சொன்னாரேயன்றி சூரிய சந்திரர் என்புறஞ் சொல்லவில்லையெனின், கண் நின்று கண் அறச்சொல்லினும் முன்னின்று பின்னோக்காச் சொல் சொல்லலாகாதென்க.

கண் நின்று—எதிரே நின்று. ஒருவன் கண் காணும்படி நிற்றலால் எதிர் நிற்றலைக் கண் நின்று என்றார்

கண் அறச் சொல்லினும்—அருள்கெட மொழியினும். இங்கே கண் என்றது கண்ணோட்டத்தை: அஃதாவது கண் சென்றவிடத்தே தோன்றும் பரிவு. உம்மையால் அதுவும் சொல்லலாகாதென்பது உணரப்படும்.

முன் இன்று—நேரேயின்றி.

பின் நோக்காச்சொல்—பின்வருங் குற்றத்தை யெண்ணாத சொல்.

ஒருவன் எதிரே நின்று கடுஞ்சொற் சொன்னாலும், அவன் புறத்தே நின்று ஒருவன் பழிச்சொற் சொல்லலாகாதென்பதாம்.

கண்முன் நின்று தன்னையொருவன் கண் அறச்சொல்லினும் அவன் முன்னேயன்றிப் பின் நோக்காச் சொல்லைத் தான் சொல்லலாகாது எனவும் இது பொருள்படும்.

நேர் நின்று கடுஞ்சொற் சொல்லினும் ஒருவன் புறநின்று பழிச்சொற் சொல்லலாகாதென்பது கருத்து. இது சூரிய சந்திரர்பால் காணப்படும்.

கதை.

சுரரும் அசுரரும் பாற்கடல் கடைந்த காலத்தில் அதிலிருந்து அமுதம் எழுந்தது. அதனை யிருதிறத்தாரும் பகுந்துண்ண விரும்பினார். திருமால் அசுரரை வஞ்சித்துத் தேவர்களை அதனைத் தனித்துண்ணும்படி செய்தார். அத்தெய்வ வரிசையில் இராகு, கேது, எனனும் பெயரினையுடைய அசுரரிருவர் கரந்து புகுந்தார். கையில் வாங்கிக் களிப்புடன் உண்டார். கதிரும் மதியும அக்கரவைக் கண்டார். கண்முன் நின்று கடுத்து மொழிந்தார். கரியமாலுக்குத் தெரியக் காட்டினார். அவருந் தெளிந்தார். அவ்விருவரையும் தமது ஆழியால் துணித்தார். துணிபட்ட இருவரும் அமுதநலத்தால் அழியாமல் நின்றார். பரமனருளால் கிரகபதம் பெற்றார். தம்மைக் காட்டிய அவ்விருவர்மீதும் செற்றங்கொண்டார். தீங்கே நினைந்தார். கண் நின்று கண்ணறச் சொல்லினும் கதிரும் மதியும் புறங்கூறாத புனிதரென்று போற்றப்பட்டார்.

(இதன் விரிவு கந்தபுராணத்தில் காணப்படும்.)

கடுஞ்சொற் சொல்லினும் புறஞ்சொல்லலாகா தென்டனால் கூறப்பட்டது.

185. கண்டார் அறம்புகன்றுங் கண்ணில்லான் தீயனென்றேன்
கொண்டார்முன் ஐவர் குமரேசா—கொண்ட
அறஞ்சொல்லு நெஞ்சத்தா னன்மை புறஞ்சொல்லும்
புன்மையாற் காணப் படும். (ரு)

-ள.

குமரேசா! கண்ணில்லான் அறப்புகன்றும் அவனையேன் அனைவரும் தீயன் என்று கண்டார் எனின், புறஞ்சொல்லும் புன்மையால் அறஞ்சொல்லும் நெஞ்சத்தான் அன்மை காணப்படும் எ. று.

கண் இல்லான்—திருதராட்டிரன். புன்மை—புல்லியதன்மை. நெஞ்சத்தான் அன்மை—மனத்தான் அல்லன் என்னுந் தன்மை.

புறஞ்சொல்லும் ஒருவன் அறத்தை நன்றென்று பிறர் மெய்க்கச் சொல்லினும் அதனை அவன் மனம் பொருந்தச் சொல்லவில்லையென்பது அவன் புறஞ்சொல்லால் காணப்படும் என்பதாம்.

புன்மையால், அன்மை காணப்படுமென்றது காண்க.

புறஞ்சொல்லுவோர் ஒருகால் அறஞ்சொல்லினும் அதனை மெய்யென்று நம்பலாகாது என்பது கருத்து.

இது திருதராட்டிரன்பால் காணப்படும்.

கதை.

திருதராட்டிரன் என்பவன் துரியோதனன் தந்தை. வியாசரது திருவருளால் விசித்திர வீரியன் மனைவியாகிய அம்பிகை வயிற்றில் தோன்றினன். பதினாயிரம் யானைகளின் வலிமையைத் தனக்கு உரிமையாகப் பெற்றவன். விழியிரண்டும் ஒளியிழந்தவன். வஞ்சமே புரியும் நெஞ்சினையுடையவன். தன் புதல்வன், தருமரை வரவழைத்துச் சூதினால் தீதுசெய்யச் சூழ்ச்சிசெய்த பொழுது இவனும் உடனிருந்து இசைந்தான். அவரையும் அழைத்து வரும்படி விதுரனை விடுத்தான். பழியில்லாத அவரும் இவ்விழியில்லான் முன்னின்றார். நின்றவரைப் புகழ்ந்து நீதிகள்புகன்றான்

கருமநீதிசேர் கல்வி மந்திரம்
பெருமை யாண்மைதாள் பிறநீடுபேர்
தருமம் யாவுநுந் தன்மை யாதலால்
அருமை யின்றியே யரசு செல்லுமே (1)

எண்டிசாமுகத் தெல்லை யெங்கணும்
கொண்டதாகுமுன் குருகுலத் துளோர்
தண்டியாமனுந் துணைவர் தம்மொடும்
பண்டுபோல மன் பரவ வைகுவீர். (2)

சேணிருந்து நஞ்சீர் செவிப்படுத்
தியானை ரணபுகூர் இனிமையன்றியே
புணாலம் பெறுப பொற்பொடுங்களைக்
காணுமாறசெங் கண் படைத்திலேன். (3)

என்று நேசமுள்ளவன் போல் நெகிழ்ந்து கூறினான். அறமே நன்று அதனால் இருமையின்பமும் எளிதில் எய்தலாம். அதனை உறுதியாய்க்கொண்டு இவ்வுலகை யாளுங்கள். துணைவர்களோடு இணைந்து வாழுங்கள். என்பன பலவாக வுள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசினான். அருகிலிருந்த விதுரன் முதலியோர் அவையனைத்தும் வஞ்சமொழியென்று நெஞ்சகந்தேர்ந்தார். ஐவருமுணர்ந்தார். இறுதியிலொருநாள் இவன், வீமனைக்கொல்லக் கருதியிருந்தான். வஞ்சமாக அவனை நகமென்றழைத்தான். அவனைச் செலுத்தாமல் ஓர் இருப்புத்தூணைச் செலுத்தினார். அதனை யிறுக்கிப் பிடித்து நொறுக்கித் தகர்த்தான். திருமாலருளால் வீமன் பிழைத்தான். புறஞ்சொல்லும் புன்மையதனால் இவன் அறஞ்சொல்லினும் அதனை எவரும் மெய்யென்று கொள்ளார். பொய்யென்றே கண்டார். இது பாரதத்தில் காணப்படும்.

புறஞ்சொல்லும் புன்மையோனுக்கு அறஞ்சொல்லும் நன்மையில்லை யென்பது இதனால் கூறப்பட்டது.

186. நீதிப் பழியுரைத்த வேந்தன் கடோற்கசனால்
கூறப்பட் டானேன் குமரேசா — மாறிப்
பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளுந்
திறன்தெரிந்து கூறப் படும். (௬)

குமரேசா! பழிமொழி கூறிய துரியோதனன் உடனே ஏன் கடோற்கசனால் பழிக்கப்பட்டான் எனின், பிறன் பழியைக் கூறுவான் தன்பழி யுள்ளும் திறன்தெரிந்து கூறப்படுவான் என்க.

தனை எனத்து பழிகூறுவானை.

திறன்தெரிந்து—வருத்துந் திறத்தை ஆராய்ந்தறிந்து.
பிறரைப் பழிப்பவன், தன்பழி பலவற்றுள்ளும் தன்னை வருத்தத் தக்க திறத்தையுடைய பழிகளைத் தெரிந்தெடுத்து அவரால் பழிக்கப்படுவானென்பதாம்.

நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம் ஆதலால் பழியெல்லாம் பழிசொல்வார் பாலவாம் என்க.

பழிப்பவன், உடனே பழிக்கப்படுவான் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை துரியோதனனைக் கடோற்கசன் சொன்னதால் காணப்படும்.

கதை.

கடோற்கசன் என்பவன் வீமன் மகன். இடிம்பியென்னும் அரக்கியிடம் பிறந்தவன். சிறந்த தேகபலமுடையவன். மல்லயுத்தத்தில் எவரையும் வெல்ல வல்லவன். பாரதப்போர் நிகழுங் காலத்தில் பதின்மூன்றாநாள் இரவு தருமன், இவனைத் துரியோதனன்பால் தூதனுப்பினான். இவனுஞ் சென்றான். அரசவையிற் புகுந்தான். அரசனைக் கண்டான். அஞ்சாமல் நின்றான். அரியணைபற்றியவனை நோக்கினான். "அரசே! இன்று அபிமன்னனைக் கொன்ற சயந்திரதனை நாளை அருச்சுனன் கொல்வதாகக் குறித்தான். படைநலங் கருதிப் பாசறையடைந்தான். விரைவினில் எய்தி வென்றியைக்கொள்வான். ஆதலால் பகைவன் அவன் தலை துணிபடும். என்னும் உண்மை நின்னையே தெரிய எண்ணிய தருமர் என்னை முன் விடுத்தார். வருவதைத் தெரிந்து நீ உறுவதைப் புரிக". என்று கடோற்கசன் தனது பெரிய தந்தையார் கூறிய சிறிய மொழிகளை நேரில் கூறினான். அரசன் கேட்டுப் பொருநகை செய்தான். அரக்கி மகனே யென்று விளித்தான். பழித்தான். உடனே கடோற்கசன் சினந்தான். பழி பலவற்றுள்ளும் அவன் உரியவன நாடினான். அரவக்கொடியோய்! அரக்கராயிருப்பினும், உற்றார் நலிய யாம் உறுதுயர் செய்யோம். பொறாமை கொள்ளோம். பிறர் பொருள் வெஃகோம். வஞ்சனை புரியோம். நஞ்சினை யூட்டோம். கொழுந்தியரைத் துகிலுரி

யோம். கோட்சொல்லித் திரியோம். இவையெல்லாம் நீயே புரிந்தாய். பேயே என்றான். அவன் நாணி நொந்தான். இவன் நகைத்து மீண்டான். பழிகூறியதால் அவன் பழிக்கப்பட்டான்.

அந்தவுரை மீண்டிவன்கேட் டாக்கவனை நகைத்துரைப்பான்
அரக்கரேனும்
சிந்தைதனில் விரகெண்ணார் செருமுகத்தில் வஞ்சகமுஞ்
செய்யாரையா
வெந்திறல்கூர் துணைவருக்கு விடமருத்தார் நிரைக்கழுவில்
விழச்செய்யார்
உந்துபுனல் விடைப்புதையார் ஒருநிருப்பாகற்றார்
உரையுந்தப்பார் (1)

செழுந்தழல்வாழ் மனைக்கொளுவார் செய்ந்நன்றி கொன்றறியா [ர
ரிங்குறார்
அழுந்துமனத் தழுக்குறார் அச்சமுறப் பாறுவின்றிப்
பொய்ச் சூதாடார்
கொழுந்தியரைத் துகிலுரியார் கொடுங்கானமடைவித்துக்
கொல்ல எண்ணார்
எழுந்தமரில் முதுகிடார் இவையெல்லாம் அடிகளுக்கே
யேற்ப என்றான். (பாரதம்.)

இவை, தன்னை அரக்கன் என்று இகழ்ந்துகூறிய துரியோதனனை நோக்கிக் கடோற்கசன் கூறியன.

பிறன்பழி சொல்வோன் பெரும்பழி கொள்வான் என்பது இதனால் கூறப்பட்டது.

187. காணிலிரா மன்பிரியக் கைகைதனை யேன்பிரித்தாள்
கூனிபுறங் கூறிக் குமரேசா—தானே
பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாடல் தேற்றா தவர். (எ)

வி.

குமரேசா! இராமன் வனம் போகும்படி என் கூனி புறங்கூறிக் கைகேசியைப் பிரித்தாளெனின், நகச்சொல்லி நட்பாடல் தேற்றாதவர், பகச்சொல்லிக் கேளிரைப் பிரிப்பார் என்க.

பகச் சொல்லி—நீங்கும்படி புறங்கூறி.

கேளிர்ப் பிரிப்பர்—சுற்றத்தாரையும் பிரிப்பர்.

தேற்றாதவர்—தெளியாதவர்.

மகிழும்படி இனிய சொற்களைச் சொல்லி நட்பை வளர்த்தலை யறியாதார் புறங்கூறிச் சுற்றத்தாரையும் பிரிப்பர் என்பதாம்.

நகச் சொல்லி அன்பு செய்வோர், பகச் சொல்லித் துன்பு செய்யார் என்க.

புறங்கூறுவோர் ஒரு குடியின் ஒற்றுமையைக் கெடுத்துக் குற்றத்தையுண்டாக்குவர் என்பது கருத்து. இது கூனிபால் காணப்படும்.

கதை.

கூனி யென்பவள் கைகேசியிடம் இருந்த ஒரு முதியவள். உறுவன உணர்த்தும்படி கேகய தேசத்திலிருந்து அவளுடன் வந்தவள். மந்தரை யென்றொரு மறு பெயருடையவள். வளைந்த முதுகினள். அதனால் இவள் கூனி யென்று அழைக்கப்பட்டாள். மிகக் கொடியவள். இராமன் முடிசூட அமைந்ததை அறிந்தாள். கவன்றாள். உடம்புபோல உள்ளமுங் கோடினாள். பொறாமையால் ஓடினாள். கைகேசி முன்னின்று கடுமொழி புகன்றாள். இராமன்பால் பேரன்புடைய கைகேசியின் மன நலத்தை மாற்றினாள். தன் சொல்வழி நடக்கும்படி ஆக்கினாள். முடி புனையாதபடி இராமனை வனம் போக்கினாள். பகச் சொல்லிக் கேளிரைப் பிரித்தமையால் இவளை அனைவரும் பகைத்தார்.

பாவி யென்று வெறுத்தார். பலரும் பழிக்க இவள் பரிந்து வருந்தினாள். இதன் விரிவு இராமாயணத்தில் காணப்படும்.

புறஞ்சொல்வோர் பல குடியைக் கெடுப்பர் என்பது இதனால் கூறப்பட்டது.

188. வெற்றி மிகுகண்ணனுக்கும் வெய்யதுரி யோதனனேன்
குற்றமிகச் சொன்னான் குமரேசா—சுற்றமெனத்
துன்னியார் குற்றமுந் தூற்று மரபினார்
என்னைகொ லேதிலார் மாட்டு. (அ)

இ—ள்.

குமரேசா! துரியோதனன் ஏன் திருமாலுக்குங் குற்றங் கூறினான் எனின், துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினார் ஏதிலார் மாட்டு என்னை கொல் சொல்லார் என்க.

துன்னியார் குற்றமும்—நெருங்கிய உறவினரது குற்றத்தையும்.

தூற்றும் மரபினார்—பலரறியப் பரப்பும் இயல்பினோர்.

ஏதிலார் மாட்டு—அயலாரிடத்தில்.

மிக நெருங்கிய சுற்றத்தாரது குற்றத்தையும் உலகறியப் பரப்பும் இயல்பினோர், அயலாரிடத்தில் யாதுதான் செய்யார் என்பதாம்.

உறவினரையும் புறங் கூறிப் பழிக்கு மரபினோர் பிறர்பால் என் சொல்லார் யாது செய்யார் என்பார் "ஏதிலார் மாட்டு என்னை கொல்" என்றார். என்னர் கொல் எனவும் பாடம்.

புறங்கூறலாகிய பெரும் பாவத்தை உறவினரிடமும் செய்யும் மறவோர் பிறர்பால் எதையுஞ் சொல்வர் என்பது கருத்து. இது துரியோதனன்பால் காணப்படும்.

கதை.

தருமர் முதலிய உறவினரையும் புறங் கூறித் தூற்றிய துரியோதனன் கண்ணோட்டம் சிறிதுமின்றிக் கண்ணனையும் வைதான். கடுவினை புரிந்தான்.

அன்னையானவரும் இருவராமுதலளித்த தந்தையர்க ளைவராம்
பின்னையாசை கொடு குருகுலத்துரிமை பெறுமாமொரு பிறப
[பிலோர்
மின்னையாமிவர்க ளைவரும் பரிவி னொடு தனித்தனி விருப்புறா
பொன்னையா மவரொ டொருகுலத்தரச னென்பதம்மவிலையென்
[கொலாம். (1)

அளிவருங்குழல் பிடித்துமன்னவையில் ஐவருக்குமுரியாளை நான்
எளிவருந்துகி லுரிந்தபோதரு கிருந்து கண்டவர்களல்லவோ
துளிவரும்புனல் பரிந்தருந்திபிடு சோறு தின்றுயிர் சுமந்ததோ
அளிவரும்வடி விருந்தபாவியரு மின்றுஞானநிலையாளரவரோ. (2)

என்று ஐவரைப் பழித்தான்.

புன்பிறப்புடைய பொதுவர் தங்களொடு புரவிலானிரை புரக்கும்
உன்பிறப்புமுர லோடுகோவியா உனைப்பழித்தது மறந்துநீ
மன்பிறப்பினுயர் குருகுலத்தவர்தம் வாய்மைதானுமொரு மாசிலா
என்பிறப்புமுறை யாமலோசபையில் இந்தவாசக மியம்பினாய்.

என்று கண்ணனை ஏசினான். கரவிற் கொல்லவுந் துணிந்தான். இதைக்கேட்ட சாத்தகிக்கு நாட்டஞ் சிவந்தது. ஒள்வாளுருவி யவன்மேல் ஒல்லெனப் பாய்ந்தான். உடனே, கண்ணன் தம்பியைக் கையிற் பிடித்தான். துன்னியார் குற்றமுந் தூற்று மரபினனாகிய துரியோதனன் நம்பால் எவையுஞ் சொல்வான் எல்லாஞ் செய்வான். பொறு என்று தடுத்தார். அவனும் பொறுத்து நின்றான். இது பாரதத்தில் காணப்படும்.

புறங்கூறுவோர் எவரிடமும் எப்படியுஞ் செய்வார் என்பது இதனால் கூறப்பட்டது.

189. கூறுஞ் சமிதன் கொடுஞ்சகுனி யேனுலகம்
கூறியழ நின்றார் குமரேசா — கூறும்
அறனோக்கி யாற்றுங்கொல் வையம் புறனோக்கிப்
புன்சொ லுரைப்பான் பொறை. (9)

இ—ள்.

குமரேசா! சமிதன், சகுனியென்பவரை யேன் உலகந் தாங்கலாற்றாது தளர்ந்து மொழிந்ததெனின், புறம் நோக்கிப் புன்சொல் உரைப்பானது பொறையை அறம் நோக்கி வையம் ஆற்றும் என்க. ஆற்றுங்கொல்—பொறுக்கும்போலும். கொல் என்னும் இடைச்சொல் ஐயத்தைக் குறித்து நின்றது.

புறம் நோக்கி—பிறர் நீங்கிய சமயம் பார்த்து.

புன்சொல் உரைப்பான் பொறை—புறங்கூறுவானது உடற்பாரத்தை.

பிறரில்லாத அளவு பார்த்து அவர்மீது பழிகூறும் இழிமகனது உடற்பாரத்தைப் பொறுக்கலாற்றாது வருந்தினும், நிலமகள் அறம் நோக்கிப் பொறுக்கும் போலும் என்பதாம்.

அறம் நோக்காவழிப் போக்கும் என்பது குறிப்பு.

நிலம் எல்லாவற்றையும் தாங்கி நிற்கும் இயல்பினையுடையதே யாயினும் பாவ யாக்கையைத் தாங்கலாற்றாது பதைக்குமென்க.

இனி, புறம்நோக்கிப் புன்சொல் உரைப்பானது பொறையை அறம் நோக்கியேனும் வையம் ஆற்றுமோ, ஆற்றாது எனவும் இது பொருள்படும்.

புறங்கூறுவோன் பெரும் பாவியாதலால் அவனைப் பொறுத்து நிற்க ஆற்றாது பூமி, வருந்துமென்பதாம். இவ்வுண்மை, சுமிதன், சகுனியென்னுமிவர்பால் காணப்படும்.

கதை 1.

சமிதன் என்பவன் மகத தேசத்தில் வசவபுரம் என்னும் ஓர் நகரிலிருந்தவன். இசை நூல் வல்லவன். இவன், அந்நாட்டு வேந்தன் மகளாகிய குணவதி யென்பவளுக்கு இளமையிலேயே யிசைபயிற்றி வந்தான். வருங்கால் குணவதி பருவமெய்தினாள். இவன் முதியவயதினன். அறுபதுக்கு மேற்பட்ட பருவமுடையவன். அவளை மருவி யின்புறக்கருதி வருந்தினான். அவள், அழகும் நிறையும் அறிவும் வாய்ந்தவள். ஐயமின்றி யிவன்பால் அணுகிப் பயின்றாள். இசையுடை வசையோன் அவள்மேல் நசைமீக்கூர்ந்தான். தன் காதற் குறிப்பைக் கனிந்துகாட்டினான். அவள் கண்டாள். அதுமுதல் இவனை யணுகாமல் விலகினாள். தன் தந்தையிடம் ஏதேனும் சொல்லிவிடுவளோ வென்று இவ்வந்தணன் அஞ்சினான். அதனால் முன்னுற அரசனை யடுத்தான். அடாப்பழி கூறினான். அரசன் சினந்தான். இவனே அதனையாற்றினான். அவளை ஒரு பேழையுள் வைத்து அந்நகரை யடுத்துச் செல்லும் ஒரு காட்டு நதியில் விடுத்துவிடுதல் நலமென்று இவன், அரசன் மனங்கொள மொழிந்தான். பேதை மன்னன் இசைந்தான். அவள் தூங்கும்போதடுத்து அத்தீய வினை செய்தார். பேழை நதி வழியே யொழுகி யொரு கரையினை யடுத்தது. அந்த வேட்டைக்கு வந்திருந்த சசிதரன் என்னும் அரசன் மறுநாட் காலையில் அதனைக் கண்டான். வியந்து திறந்தான். குணவதி யெழுந்தாள். அக்குல மகனைத் தனக்குக் கொழுநனாகக் கருதினாள். அவ் இளவரசனு மிசைந்தான். பேழையின் பிழையியல் ஆய்ந்து தன் வலையில் சிக்கிய கரடியை அதனுள் விடுத்தடைத்தான். அழகியைக்கொண்டு அவ் இளவல் சென்றான். புறம்நோக்கிப் புன் சொல்லுரைத்த அப்புல்லியன் பேழையை நாடி மறுநாள் மாலையில் வந்தான். புவிமகளும் அவன் பொறையினை யாற்றாது புலம்பினாள். கண்டான் பேழையை. கருதியதை முடித்துவிடலாமென்று காதல்மீக்கொண்டான். திறந்துட்புகுந்து தேறுதலுமடினான். பசியால்மெலிந்து ஓர்மூலையில் பதுங்கிக்கிடந்தக் கரடியை அப்பாவையென்று இப்பதகன் நினை

தான். தன் பாழ்வாய் திறந்தான், "குணவதி! இப்பொழுது என் செய்வாய். அன்றே யென் கருத்துக்கிசைந்திருந்தால் இவ்வல்லலுனக்கெய்துமா? இனியேனும் மருவி வாழலாமே வா" என்று மொழிந்தணைந்தான். பசிநோய் மிருந்த அஃது இவன்மேற் பாய்ந்துயிர் குடித்துச் சாய்ந்து சென்றது. நிலமும் பொறை நீங்கிற்று.

இஃது இரதபோதத்திலுள்ளது.

கதை 2

வஞ்சமும் அழுக்காறும் நிறைந்த நெஞ்சினையுடைய சகுனி நஞ்சனைய வெருச்சொல்லையே நாளுஞ் சொல்வான். புறம்நோக்கிப் புன்சொல்லுரைக்கும் புன்மையையே இவன் நன்மையென்று கொண்டான். துரியோதனனுக்குங் கெடுமதி பலகூறிக் கேடே செய்தான். இவன் உடற்பாரத்தைப் பொறுக்கலாற்றாது வருந்திப் பூமிதேவி கண்ணனிடம்போய் முறையிட்டாள். அறம் நோக்கியே யிவன் பொறையை அவளாற்றினாள். பின் கண்ணன் மாற்றினான். (இவ்வுண்மை பாரதத்தில் காணப்படும்.)

புறங்கூறுவோனைப் பொறுக்கலாற்றாது புவித்தாயும் வெறுப்பள் என்பது இதனால் கூறப்பட்டது.

190. கண்டவுடன் தன்குற்றங் காதலுறுந் தீமையிலே
கொண்டிலரேன் விட்டார் குமரேசா—உண்டாக
ஏதிலார் குற்றம்போல் தன்குற்றம் காண்கிற்பின்
றீதுண்டோ மன்னு முயிர்க்கு (ய)

இ—ள்.

குமரேசா! வில்லிபுத்தூரர் தன் குற்றம் கண்டவுடனே ஏன் தான்செய்துவந்த தீமையை யெய்தவில்லை எனின், ஏதிலார் குற்றம்போல் தன் குற்றம் காணகிற் பின் மன்னும் உயிர்க்குத் தீது உண்டோ என்க.

மன்னும் உயிர்—நிலைபெற்ற உயிர். ஆன்மா நித்தியமாதலான் மன்னும் என்னும் அடைபெற்றுவந்தது.

காண்கிற்பின்—காணவல்லராயின். இதில் கில் என்னும் ஆற்றலை யுணர்த்தும் இடைநிலை, காண்டலின் அருமையைக் காட்டிநின்றது.

இனி, காண்கின், தீது பின் உண்டோ எனவும் பிரித்துப் பொருள் கொள்ளலாம். ஓகாரம் எதிர்மறை.

பிறர் குற்றம்போலத் தன் குற்றத்தையும் காணவல்லராயின் அவர் உயிருக்கு யாதொரு துன்பமும் உண்டாகா தென்பதாம்.

காணமாட்டாதார் அயலார் குற்றமே நாடிப் புறங்கூறலென்னும் பெரும்பாவத்தைச் செய்வர். ஆதலால் அதன் பயனாகிய துன்பம் அவர்க்குண்டாம். காணவல்லார் அது செய்யார் ஆதலின் அவர்க்குத் தீது இன்றாம் என்பது கருத்து.

பிறர் குற்றம்போல் தன் குற்றத்தையும் கண்டு தெளிந்தோர் பின், பிறர்பால தீது செய்யார் என்பது இதில் உணர்த்தப்பட்டது.

இவ்வுண்மை வில்லிபுத்தூரரால் உணரப்படும்.

கதை.

வில்லிபுத்தூரர் என்பவர் இற்றைக்கு அறுநூறு வருடங்கட்கு முன்னர் விளங்கியிருந்த ஒரு சிறந்த புலவர். நடுநாட்டிலுள்ள சனியூரென்னு மூரிலே வேதியர் குலத்திலே வீரராகவன் என்னும் ஓர் உத்தமருக்குப் புத்திரராய்த் தோன்றினார். இளமையிலேயே கலைகள் பலவும் கற்றுத் தெளிந்தார். முத்தமிழ்ச் சுவையும் முற்றுந் துய்த்தார். பாரதத்தைச் சீர்பெறப் பாடியுள்ளார். அது வில்லிபாரதமென இவர் பெயரால் வழங்கப்படுகின்றது. ஆசு முதலிய நால்வகைக் கவிகளும் மாசறப்பாடினார். இவரது மதிநலத்தையும், கவி நலத்தையுங்கண்டு மகிழ்ந்த அரசர் பலரும் இவருக்குப் பெரும்பரிசு கொடுத்தார். அவருள், வக்கபாகை யென்னும் நகரிலிருந்து அரசுபுரிந்த கொங்கர்குல திலகனு

கிய வரபதியாட்கொண்டான் என்பவர், இவர்பால் பேரன்பு பூண்டார். அவர் ஆதரவில் இவர் புலமையைச் சோதிக்கும் தலைமையைப் பெற்றார். வாதொன்று கொண்டார். புலவர்கள் பாடி வருங் கவிகளில் ஏதேனுங் குறைகள் காணப்படின் அவர் செவிகளை அறுத்துவிடுவார். அதனால் புன்கவிகளெல்லாம் பொங்காதடங்கின. பிறர் குறைகண்டால் பொறுக்காமல் ஒறுத்தடக்கும் இவர் ஒருநாள் அருணகிரிநாதரைக் கண்டார் வாதங்கொண்டார். இருவரும் தமது கல்விப் பெருக்கையும் கவித்திறத்தையும் காணத் துணிந்தார். அதில் வில்லி மெலிந்தார். ஆறுமுகப் பெருமான் அருள்பெற்ற அருணகிரியார் வென்றார். எனினும், செவியைக் கொய்யாமல் அவரைச் செல்லவிடுத்தார். கருணாக்கடலாகிய நாதரது பெருமையை வியந்து வில்லியார் சென்றார். பிறர் குற்றங்கண்டு தண்டித்துவந்தவர், அன்று தன் குற்றமுங் கண்டார். அன்று முதல் தாம் செய்துவந்த தீமையை விடுத்தார். நீதிநெறி நின்றார். ஏதிலார் குற்றம்போல் தன குற்றம் காணவல்லாராயின் அவருயிர்க்குத் தீதில்லையென்பதை யுலகம் இவர்பால் உணர்ந்தது. (இதன் விரிவு இவர் சரிதையில் தெளிவாம்)

புறங்கூறாதவர்க்கு ஒரு தீதும் உண்டாகாதென்பது இதனால்
கூறப்பட்டது

(இவ்வதிகாரத்தின் தொகைப்பொருள்.

அறங்கூறானெனினும் ஒருவன் புறங்கூறலாகாது. புறங்கூறல் பாவங்களெவற்றினும் பெரும்பாவமாகும். புறங்கூறி உயிர்வாழ்வதினும் ஒருவன் சாதல் நல்லது. கடுஞ்சொற் சொல்லினும் புறஞ்சொல்லலாகாது. புறஞ்சொல்லும் புன்மையோனுக்கு அறஞ்சொல்லுந் தன்மையில்லை. பழிமொழி கூறுவோன் பிறரால் பழிக்கப்படுவான். புறங்கூறுவோர் பிறர் குடியைக் குலைப்பர். அவர் எப்பழியுஞ் செய்வர். அவரைச் சுமந்த இவ்வுலகமும் வருந்தும். புறங்கூறாதார்க்கொரு தீங்குமில்லை.

௰௯-வது புறங்கூறாமை முற்றிற்று.

௨௰-ம் அதிகாரம் பயனில சொல்லாமை.

அஃதாவது பயனில்லாத சொற்களைச் சொல்லாமை. இதுவும், புறங்கூறல்போல் மொழிக்குற்றமாதலால் இதனையும் ஒழிக்கவேண்டுமென்பது கருதி அதன்பின் வைக்கப்பட்டது. அது மனப்புன்மையானும் இஃது அறிவின்மையானுந் தோன்றுமென்க. பொய்ச்சொல், புறஞ்சொல், கடுஞ்சொல், பயனில்சொல் என்னும் இந்நான்கும் வாக்கின்கண் நிகழும் பாவங்களாம். வைப்புமுறையால் முறையே அவற்றின தீமை மிகுதி காணப்படும்.

191. எல்லாரு மெள்ளி யிகழ்ந்தா ரிளங்குமணன்
கொல்லென்ற போதேதன் குமரேசா—வல்லான்போற்
பல்லார் முனியப் பயனில சொல்லுவான்
எல்லாரு மெள்ளப் படும். (௧)

இ—ள்.

குமரேசா! கொல்லென்று சொல்லிய இளங்குமணனை என் எல்லாரும் இகழ்ந்தார் எனின், பல்லார் முனியப் பயனில சொல்லுவான் எல்லாராலும் எள்ளப்படும் என்க.

பல்லார் முனிய—பலரும் வெறுப்ப.

எல்லாரும் எள்ளப்படும்—எல்லாராலும் இகழப்படும். இதில் ஆன் உருபு தொக்கு நின்றது.

பலருங்கேட்டு வெறுக்கும்படியாகப் பயனில்லாகிய சொற்களை ஒருவன் சொல்லுவானாயின் அவன் எல்லாராலும் இகழப்படுவான் என்பதாம்.

பல்லாரும் எல்லாரும் என்பன இரண்டும் மக்கட்பன்மையைச் சுட்டிநின்றனவேயெனினும், முன்னது, பயனிலசொல்லுங்கால் கேட்டுநின்றவரையும் பின்னது அல்லாத பிறரையுங்குறித்து நின்றதென்க.

பயனில சொல்வோனை அனைவரும் இகழ்வர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை இலக்குமணன்பால் உணரப்படும்.

கதை.

இலக்குமணன் என்பவன் குமணவள்ளலது தம்பி. பேராசைமிக்கவன். பொறாமையும் கொடுமையும் பொருந்தியுள்ளவன். கல்வியறிவில்லாதவன். தனது அண்ணன் எல்லாருக்கும் உபகரித்துவருவதைக் குறித்துப் பெருவருத்தங்கொண்டான். தீயார் பலருடன் சேர்ந்து திரிந்தான். மனந்துணிந்தான். தனது முன்னவன்பால் ஒருநாள் சினந்துவந்தான். அரசினைத் தருக, இல்லேல் என்னுடன் அமர்செய வருக என்றான். குமணவள்ளல் உடனே அரசைக் கொடுத்துவிட்டு அடவியிற் புகுந்தான். அருந்தவஞ்செய்தான். இவன் அரசைக் கொண்டான். ஆண்டு வந்தான். வருங்கால் குமணன் ஒருகால் மீண்டும் வந்து தன் அரசைக்கேட்பனோ என்று தன் அகத்தில் எண்ணினான். அதனால் அவனைக் கொல்லக் கருதினான். குமணன் தலையைக் கொணர்வோருக்கு ஆயிரம் பொன் தருவேனென்று இவன் தன் அவையில் கூறினான். அதனைக்கேட்டார் பலரும் முனிந்து வருந்தினார். அதன்பின் அவனை அனைவரும் இகழ்ந்தார். பல்லார் முனியப் பயனில சொல்லுவான் எல்லாராலும் எள்ளப்படுவான் என்பதை யுலகம் இவன்பாலுணர்ந்தது.

(இதன் விரிவு குமண சரிதையில் காணப்படும்.)

பயனில சொல்லுவானை உலகம் பழிக்குமென்பது இதனால் கூறப்பட்டது.

192. பற்றித் துகிலுரியு மென்றான் பலர்முன்னே
குற்றமுற்றான் பின்பேன் குமரேசா—உற்ற
பயனில பல்லார்முற் சொல்லல் நயனில
நட்டார்கட் செய்தலிற் றீது. (௨)

இ—ள்.

குமரேசா! துரோபதையைத் துகிலுரியுமென்று பலர் முன்னே சொல்லிய துரியோதனன் ஏன் தீமையுற்றான் எனின், நயன் இல நட்டார்கண் செய்தலினும் பல்லார்முன் பயனில சொல்லல் தீதாம் என்க.

நயன் இல—நன்மையில்லாதன. என்றது வெறுக்கத்தக்க செயல்களை.

தீயசெயல்களை தனது நண்பரிடத்தே செய்தலினும் பயனிலவாகிய சொற்களைப் பலர்முன்னே ஒருவன் சொல்லுதல் பெருந்தீது என்பதாம்.

உறவினரிடத்து இழிசெயல் செய்யினும் பயனில்சொற்களை ஒருவன், பலர் முன்சொல்லலாகா என்பது கருத்து.

பயனில்சொல் ஒருவனுக்குப் பழியும் கேடும் இழிவுடன் கொடுக்குமென்பது குறிப்பு. இது துரியோதனன்பால் காணப்படும்.

கதை.

தருமனது பொருள் முழுதையுங் கவரும்படி துரியோதனன் சகுனியை யேவினன். அவனுங் கவறுருட்டிக் கவர்ந்தான். நட்டார்கண் நயனிலசெய்த அக்கெட்டவன் அவ்வளவிலமையாது துரோபதையைத் தொட்டிழுத்து வரும்படி கட்டளையிட்டான். துகிலுரியும்படி துணிந்து சொன்னான். தனது மாமனாகிய சகுனி நல்லவன். தருமனோ பாவி. ஆதலால் பொருளிழந்தான். இனி, அவன் மனைவி உடையிழக்கவேண்டுமென்று கொடுமொழி புகன்றான். அவன், நயன்இல செய்ததைக் கண்டு சகித்திருந்த விதுரன் துரோணன் முதலிய அறிஞரனைவரும் அப்பயனில் சொல்லைக்கேட்டவுடனே பதைத்து வெறுத்தார். பழிபாவமெய்தி யழிவான் என்று அனைவரும் அவனைப் பழித்து நொந்தார். முன் செய்த செயலினும் பின்சொன்ன சொல்லால் இவன் பெருந்தீதுற்றான்.

இன்னன தரணிவேந்தர் இருந்துழி யிருந்துகூற
மன்னனுந் தம்பிதானு மாமனு மாறுவண்மைக்
கன்னனுந் தம்பியெண்ணிஞ் சங்கைமா மகனைநோக்கி [ன்.
பன்னக துவசன கேட்டோர் பலருமெய் பனிக்கச்சொல்வா

தண்ணிய தருமன்செய்த பாவமோ சகுனிசெய்த
புண்ணிய நெறியோவந்தப் பொதுமகள் யாகசாலை
நண்ணிய தவரேறுமற்றை நால்வருந தகைமைகூர
பண்ணிய மதியோவென்னி னிங்ஙனம் விளைந்ததென்றான்

(சூது போர்ச் சருக்கம்)

நயனில் செயலினும், பயனில் சொல் பெருந்தீது பயக்கு மென்பது இதனால் கூறப்பட்டது.

193. சார்ந்துநின்ற மாயா சனகனையேன் தீயனென்று
கூர்ந்தறிந்தார் சொல்லால் குமரேசா—ஆர்ந்த
நயனில னென்பது சொல்லும் பயனில
பாரித் துரைக்கு முரை. (௫)

இ—ள்.

குமரேசா! மறைந்திருந்தும் மாயாச்சனகனை ஏன் தீயவனென்று அவனுரையால் தேர்ந்தார் எனின், பயனில பாரித்து உரைக்கும் உரையே ஒருவனை நயன் இலன் என்று சொல்லும் என்க.

நயன் இலன் என்பது—நன்மையில்லாதவன் என்பதனை.

பாரித்து உரைக்கும் உரை—விரித்துச் சொல்லுஞ் சொல்.

பயனில்லாதவற்றைப்பற்றிப் பரக்க உரைக்கும் ஒருவனது உரையே அவனை நயனில்லாதவன்என்று காட்டிவிடும் என்பதாம்.

உரையே கருவியாக ஒருவனை யுணரலாம் என்பார் அதன் மேலேற்றி அஃதுரைக்கு மென்றார்.

பயனில் சொல்லால் ஒருவனது நயன் இன்மையை நன்குணரலாம் என்பது இதில் காட்டப்பட்டது. இது மாயாசனகன் மூலம் காணப்படும்

கதை.

மாயாசனகன் என்பவன் இலங்கையிலிருந்த ஒரு சிறந்த அரக்கன். சீதையின் தாதைபோல் உருவெடுத்து அந்த அம்மையைப் பேதிக்க வந்தவன். மாயைகள் பலவுஞ் செய்ய வல்லவன். மகோதரனுக்குச் சிறந்த நண்பினன். மருத்துவன் என்னும் பெயரினையுடையவன். இவனை யேவிவிட்டு வேறொரு வழியாய் இராவணன் சீதையின்பால் வந்தான். ஆசையால் வருந்தியவளெதிரே யிருந்தான். மொழிபல பிதற்றினான். அடியினும் விழுந்தான். சீதை கேட்டுச் சினந்து வைதாள். அவ்வமையம் அவள் தந்தையென்றே நம்பும்படியாக அவ்வரக்கனைக் கட்டிப் பிடித்து மகோதரன் கடிதில் வந்தான். கண்டாள் சீதை. வஞ்சமென்று தெளியாமல் நெஞ்சங் கலங்கினாள். கைகளை நெறித்தாள். கண்ணை மோதினாள். நெருப்பில் மிதித்தாற்போல் நிலத்திடைப் பதைத்தாள்.

எந்தையே யெந்தையேயின் றென்பொருட் டுனக்கு மிக்கோள்
வந்ததே யென்னைப்பெற்று வாழ்ந்தவா றிதுவோ மண்ணோர்
தந்தையே தாயேசெய்த தருமமே தவமே யென்னும்
வெந்துய ரென்னுந் தீயிழ் விறகென வெந்துவீழ்ந்தாள்.

பின்னை மாயாசனகனை தீய அரக்கன் அழுது நெருங்கி குழந்தாய்! சீதையே! "என்னை யென்குலத்தோடு காப்பாற்ற வேண்டும். இலக்குமியும் ஒருவரிடத்துத் தங்காமல் பலரிடத்துந் தங்கியிருக்கிறாள். தெய்வமகளிர் பலரும் அவ்வாறேயமைந்திருக்கிறார்கள். ஆதலால் இலங்கைக்கு ஈசனை நீ நேசிக்கவேண்டும். அவனது மையல் நோயை நீ மாற்றல்வேண்டும். அது செய்தால் நானுய்வேன். நீயும் சிறைநின்று நீங்கி நிறையின்பமடைவாய்." என்று பல பயனில் சொற்களைப் பாரித்துரைத்தான்.

அவ் இழிமொழிகளைக் கேட்டவுடனே அவனைத் தன் தந்தையல்லன் என்று தெளிந்தாள். வாய்ச்சொல்லாலே அவன் தீச்செயல் தேர்ந்தாள். ஒருவன் நயன் இலன் என்பதை அவனது பயனில் சொல்லே காட்டுமென்பதை உலகம் இவன்பால் கண்டது.

அறங்கெட வழக்குநீங்க அரசர்தம மரபுக் கான்ற
மறங்கெட மெய்மைதேய வசையுற மறைகளோதும்
திறங்கெட வொழுக்கங்குன்றத் தேவநும் பேணத் தக்க
நிறங்கெட இனையசொன்னாய் சனகனைக்கொல நினையினையே. (1)

நீயுநின் கிளையுமற்றிந் நெடுநில வரைப்பு நேரே
மாயினு முறைமைகுன்றா வாழ்வெனோ வயிரத் திண்டோள்
ஆயிர நாமத்தாழி யரியினுக் கடிமை செய்வேன்
நாயினை நோக்குவேனோ நாண்டிறந் தாவிநச்சி. (2)

இவை, மாயாசனகனை நோக்கிச் சீதை கூறிய சீரிய மொழிகள்.

பயனில் சொல்லால் ஒருவனது நயனின்மை காணப்படுமென்பது இதனால் கூறப்பட்டது.

[னென்றேன்.
194. மாசில்லான் வாயிற்பொய் வார்த்தைவரு விப்ப
கோசிகன்சீர் நீத்தான் குமரேசா — ஆசில்
நயன்சாரா நன்மையி னீக்கும் பயன்சாராப்
பண்பில்சொற் பல்லா ரகத்து. (௪)

இ—ள்,

குமரேசா! கோசிகன், அரிசந்திரனை வாயில் ஒரு பொய்யை வருவிப்பன் என்று பலர்முன் சொன்னதால் தனது நன்மையை ஏன் இழந்தான் எனின், பயன்சாராப் பண்பு இல் சொல்லை ஒருவன் பல்லாரகத்துச் சொல்லுவானாயின் அஃது அவனை நயன் சாரா நன்மையினீக்குமென்க.

நயன் என்பது பலன் உறுதி இன்பம் நீதி என்பவற்றைக் குறித்துவரு மொரு சொல்.

பயன்சாராப் பண்பு இல் சொல்—பயன் பொருந்தாத பண்பில்லாத சொல்லை. பண்பு என்றது இனிமை மெய்ம்மை முதலிய சொற்குணங்களை யிங்கே சுட்டி நின்றது.

பல்லார் அகத்து—பலரிடையே சொல்லின். இதில் சொல்லின் என்பது வருவிக்கப்பட்டது.

பயன் பொருந்தாத பண்பில்லாத சொல்லைப் பலர் நடுவே ஒருவன் சொல்லுவானாயின் அஃது அவனை நயன் பொருந்தாதவனாக்கி நன்மையின் நீக்கும் என்பதாம்.

பயனும் பண்பும் இல்லாத சொல்லைச் சொல்வோன் நயனையும் நன்மையையும் இழப்பான் என்பது கருத்து.

பயனில் சொல்லைப் பலர்முன் சொல்வோன் நயனிலனாய் நன்மையை நீப்பான் என்பது இதிலுணர்த்தப்பட்டது. இது விசுவாமித்திரரால் உணரப்படும்.

கதை.

முன்னொரு காலத்தில் பொன்னுலகத்தில் முனிவர் குழாங்களும் தேவ கணங்களும் ஒருங்கே தொக்கனர். அப்பேரவையில் வானவர் தலைவனாகிய இந்திரன் உயர்ந்த ஆசனத்தில் சிறந்து வீற்றிருந்தான். பல்வகைக் காட்சிகளும் நல்விதமாக நிகழ்ந்தன. அங்குக் குழுமியிருந்த அனைவரும் விழுமிய இன்பத்தை வியந்து துய்த்தனர். அவ்வமையம் நிலவுலகில் உயர் நலமுடையவன் யாவன் என முனிவரை நோக்கி இந்திரன் வினவினான். தூய்மையினும் வாய்மையினும் மேன்மை பெற்றவன் அரிச்சந்திரன் ஒருவனே என்று வசிட்டர் உடன் விடை கூறினார். அதைக் கேட்ட கோசிகர் கொதித்தார். இவரால் புகழ்ந்து கூறப்பட்ட அவன், கொடியரிற் கொடியன். பதகரிற் பதகன் எனப் பண்பில் சொல்லைப் பலர்முன் துன்புறச் சொன்னார். அதனால் தம்

முனிவரிருவரு முனிவுற்றெழுந்தார். வாதம் புரிந்தார். வைது வெகுண்டார். சூளுரை புகன்றார். அரிச்சந்திரனைப் பொய்யனாக்கேனேல் யான் செய் தவத்தில் பாதி யெய்தவிடுவேன் என்று வைது மொழிந்து கோசிகர் வையம்புகுந்தார். சொன்னதை முடிக்க முனிவர் முன்னுற முயன்றார். முடியவில்லை. தேவரும் முனிவரும் அவரைச்சேர இகழ்ந்தார். அவரும் நயனும் நன்மையும் நீங்கித் தமது தவமும் இழந்தார். பண்பில் சொல்லைப் பலர்முன் சொல்வோர் நயன் இலராய் நன்மையை யிழப்பார் என்பதை இவர் நன்கு காட்டினார். இதன்விரிவு அரிச்சந்திர புராணத்தில் காணப்படும்.

பயனில் சொல்லால் நயனும் நன்மையும் நீங்கும் என்பது இதனால் கூறப்பட்டது.

195. உற்றசீர் எல்லாம் ஒருசொல்லா லேனிழந்தான்
கொற்றநகுடன் குமரேசா—பெற்றபெருஞ்
சீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில
நீர்மை யுடையார் சொலின். (ரு)

இ—ள்.

குமரேசா! நகுடன் ஒரு சொல்லால் ஏன் தனது சிறப்பையெல்லாம் இழந்தான் எனின், பயன் இல நீர்மை யுடையார் சொலின் அவரது சீர்மை சிறப்பொடு நீங்குமென்க. நீர்மையுடையார்—நீரின தன்மையுடையார். அஃதாவது தண்மை நன்மை இனிமை தூய்மை முதலிய நற்குணங்களையுடையவர்.

சீர்மை—மேன்மை. சிறப்பு—நன்மதிப்பு.

செய் தவத்தால் எய்திய சீரெல்லாம் ஒரு வெய்ய சொல்லால் விலகி யொழியும் என்பது கருத்து.

பயன் இல்லாத சொற்களைப் பண்புடையார் சொல்லுவாராயின் அவரது சீர்மையும் சிறப்பும் ஒருசேர நீங்கும் என்பதாம்.

எவ்வளவு நலங்களை யெய்தினவராயினும், பயனில் சொல்லைச் சொல்லுவராயின் உடனே அவர் சிறப்பும் சீரும் இழப்பார் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை நகுடன்பால் உணரப்படும்.

கதை.

நகுடன் என்பவன் சந்திரகுல வேந்தனாகிய ஆயுவின் புதல்வன். இவன், வீரமும் கொடையும் ஈரமும் உடையவன். பலகலை தேர்ந்த நலமிகுவுணர்வினன். பருவமெய்தினான். மடியற முயன்று முடிபுனைந் துயர்ந்தான். விதிமுறை வழாது முது நிலம் புரந்தான். பரிமகம் நூறு பரிவுடன் புரிந்தான். அதன் பயனாக இந்திரனானான். வானவர் போற்று மேனிலையடைந்தான். சிவிகையிலேறிச் சிறந்து வீற்றிருந்தான். குறுமுனி முதலிய பெரியவர் எழுவரும் குழுமியடைந்தார். சதமகம் புரிந்து சதமகனான இவனை அம்முனிவரெழுவரும் முறைப்படி சுமந்தார். இந்திர மாளிகையை நோக்கி முந்துறச் சென்றார். செல்லுங்கால் இந்திராணி மீது இவன், சிந்தையைச் செலுத்தினான். அவளைக் கலந்து மகிழ விழைந்து விரைந்தான். காமமிகுதியால் கருத்தும் அழிந்தான். தாங்கிச் செல்லும் முனிவர் தகுதியை மறந்தான். விரைந்து சென்மின் என வெகுண்டு மொழிந்தான். "சர்ப்ப சர்ப்ப" என அதனையோர் அற்ப வார்த்தையால் குறித்தான். உடனே முற்கொம்பு தாங்கி நடக்கும் அகத்திய முனிவர் முனிந்தார். சர்ப்பமாகும்படி அவனைச் சபித்தார். அவனும் அரவமாகி அவனியில் உருண்டான். ஒரு சொல்லால் தனது சீர்மையும் இழந்தான். அதனால் எய்தும் சிறப்பும் நீங்கினான். நீர்மையுடையார் பயனில சொல்லின் அவரது சீரும்சிறப்பும் சேர நீங்கும் என்பதையுலகம் இவன்பால் தேறி நின்றது.

சர்ப்ப என்பது விரைந்து செல்க என்பதை யுணர்த்தும் ஒரு மறை மொழி.

முகுடமும்பெருஞ் சேனையுந் தரணியு முற்றும்
சகுட நீரெனச் சதமகம் புரியருந் தவத்தோன்
நகுடநாமவேல் நராதிப னாகருக் கரசாய்
மகுடமேந்திய குரிசிலா யுவின் றிருமைந்தன். (1)

புரந்தரன் பதம் பெற்றபின் புலோமசை முயக்கிற்
கிரந்துமற்றவ ளேவலின் யானமுற் றேறி
வரந்தருங் குறு முனிமுனி வாய்மையான் மருண்டு
நிரந்தரம் பெரும் புயங்கமானவனுமந்நிருபன். (பாரதம்) (2)

மனிதரின் மகவாகி வருபவன் சிவிகைதாங்கும்
புனிதமா தவரை யெண்ணான் புன்கணோய் விளைவும் பாரான்
கனிதரு காமந்துய்க்குங் காதலால் விரையச் செல்வான்
பாற்கொண் டேகுமின் சர்ப்பமென்றான். (1)

சர்ப்பமா கெனமுற்கொம்பு தாங்கிமுன் னடக்குந் தென்றல்
வெற்பனும் முனிவன்சாபம் விளைத்தனன் விளைத்தலோடும்
பொற்பமா சுணமேயாகிப் போயினான் அறிவிலாத
அற்பரா னவர்க்குச் செல்வமல்லது பகைவேறுண்டோ. (2)
திருவிளையாடற் புராணம்.

பயனில்லாத ஒரு சொல்லால் தனது நலமெல்லாம் ஒருவன் ஒருங்கேயிழப்பான் என்பது இதனால் உணர்த்தப்பட்டது.

196. சீதை இராவணனைச் சீறிப் பதரென்றேன்
ஓதுபடச் சொன்னாள் குமரேசா—ஏதும்
பயனில் சொற் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி யெனல். (௬)

இ—ள்.

குமரேசா! சீதை என் இராவணனைப் பதர் என்று சொல்லிப் பழித்தாள் எனின், பயனில் சொல்லைப் பாராட்டுவானை மகன் எனல் மக்கட் பதடியெனல் என்க.

பாராட்டுதல்—பலகாலும் பண்ணிப் பண்ணிச் சொல்லல்.
மகன் எனல்—மனிதன் என்று சொல்லாதே.
மக்கட் பதடி எனல்—மக்களுள்ளே பதர் என்று சொல்லுக.

எனல் எனனும் அல்விகுதி வியங்கோள் முன்னது எதிர்மறையினும் பின்னது உடம்பாட்டினும் உற்றுநின்றது.

பயனில் சொல்லைப் பலகாலுஞ் சொல்வோனை மக்களுள்ளே பதர் என்று கொள்ளவேண்டுமென்பதாம்.

வாக்கு நயத்தாலன்றிக் கற்றவரை மற்றவரை யாக்கை நயத்தாலறியலாகாதே யென்றபடி சொல் நலம் ஒன்றனே மனிதனது எல்லா நலங்களும் தெளியப்படும்; பயன இல்லாத சொல்லைப் பலகாலுஞ் சொல்வோன் அறிவில்லாதவனேயாதலால் அவனை மனிதனென்று மதிக்கலாகாதென்பது கருத்து.

பயிரின் குணமாகிய மணியில்லாத நெல் பதர் எனப்படும் அதுபோல், உயிரின் குணமாகிய அறிவில்லாதவனையும் கருதவேண்டுமென்பதாம்.

உள்ளீடு இல்லாத தானியம் வெளித் தோற்றத்தில் ஓர் உணவுப் பொருள்போல் காணப்படினும் அஃதோர் பொருளாகக் கொள்ளப்படாது அதுபோல் அறிவில்லாத ஒருவன் உருவத்தால் மனிதனாகக் காணப்படினும் அவனை மக்களுள் ஒருவனாக வைத்து மதிக்கப்படாதென்பார் 'மகன் எனல் மக்கட் பதடி எனல்' என்றார்.

பயனில் சொல்லைப் பலகாலுஞ் சொல்வோன் பதர் என்று பழிக்கப்படுவான் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இஃது இராவணன்பால் உணரப்படும்.

கதை.

இராவணன், சிறையிடை வைத்த சீதைபாற் சென்று நாளும் நெறிகெட விழைந்தான். அவளது மனநிலையை நன்கு தெ

ளிர்ந்தும் இவன், அறிவிழந்து அவள்மேல் ஆசைமீக் கூர்ந்தான். சென்று சென்று பல தீமொழி புகன்றான். அவள் வெறுத்துரைத்தும் பயனில் சொல்லையே மறுத்தும் மறுத்தும் அவள்பால் இவன் பரக்க உரைத்தான். இவனது மடமையை நினைந்து அம்மங்கை வெகுண்டாள். இருபது நெஞ்சுடைத் துரும்பே யென்றாள். புல்லொன்றை யெறிந்து செல்லென்று சினந்தாள். அவன் செல்லாமல் நின்றான். எறிந்த புல்லையே யெதிர்ந்து நோக்கினாள். பதரெனப் பழித்துப் பலமொழி புகன்றாள்.

பழியிது பாவமென்று பார்க்கிலை பகரத்தக்க
மொழியிவை யல்லவென்ப துணர்கிலை முறைமை நோக்காய்
கிழிகிலை நெஞ்சம்வஞ்சக் கிளையொடு மின்றுகாறும்
அழிகிலை யென்றபோதென் கற்பென்னும் அறந்தானென்னும். (1)

வானுள அறத்திற்கென்றும் சொல்வழி வாழுமன்னின்
ஊனுள உடம்புக்கெல்லாம் உயிருள உணர்வுமுண்டால்
தானுள பத்துப் பேழ்வாய் தகாதன வுரைக்கத்தக்க
யானுளன் கேட்கவன்றால் என்சொல்லா யாதுசெய்யாய். (2)

(இராமாயணம்.)

பயனில் சொற் சொல்வோன் மனிதன் அல்லன் என்பது இதனால் கூறப்பட்டது.

[வியன்றேன்

197. மண்டுபுகழ் மூவேந்தர் வன்சொலொன்றைச் சொல்
கொண்டசீர் தீர்ந்தார் குமரேசா—கொண்ட
நயனில சொல்லினும் சொல்லுக சான்றோர்
பயனில சொல்லாமை நன்று. (எ)

இ—ள்.

குமரேசா! மூவேந்தரும் வன்சொல் லொன்றைச் சொல்லி ஏன் தம் சீர் குன்றினார் எனின், சான்றோர் நயன் இல சொல்லினும் சொல்லுக; பயன் இல சொல்லாமை நன்று என்க.

நயன் இல சொல்லினும்—நீதியில்லாத சொற்களைச் சொன்னாராயினும். உமமையால், அதுவும் சொல்லலாகாதென்பது உணரப்படும்.

நயன் இல்லாத சொற்களைச் சொல்லினும் பயன் இல்லாத சொற்களை அறிவோர் சொல்லாமை பெறின் அஃது அவர்க்கு நன்மையாம் என்பதாம்.

நயன் இல் சொல்லினும் பயனில் சொல் பெருந் தீது பயக்கும் என்பது குறிப்பு. இவ்வுண்மை மூவேந்தர் பாலும் உணரப்படும்.

கதை.

சேர சோழ பாண்டியர் என்னும் முடியுடை வேந்தர் மூவரும் சேர்ந்து இயல்பாகவே ஒருநாள ஏகம்பவாணரது திருநகரை யணுகினார். அங்கே வாணரைக் காண அம்மூவரும் விழைந்தார். அவர், வீட்டிலிருக்கின்றாரா? என்று கேட்டுவரும்படி ஒருவனை விடுத்தார். அவன் சென்று வினவினான். முதலியார். வயலுக்குப் போயுள்ளார் என்று அங்குள்ளார் மொழிந்தார் மொழிந்ததையவர்பால் அவன் மீண்டு மொழிந்தான். வேந்தர் தெரிந்தார். முதலியார் முடி நடப் போயினரோ என்று விநோதமாக அவர் வெண்மொழி பகர்ந்தார். அதனால் வாணர் மனைவி வன்சினங் கொண்டாள். அம்மூவரும் நாணப் பாவொன்று பாடினாள்.

சேனை தழைபாக்கிச் செங்குருதி நீர்தேக்கி
யானை மிதித்த அருஞ்சேற்றில்—மானபரன்
பாவேந்தர் வேந்தன் பறித்துநட்டான் ஏகம்பன்
மூவேந்தர் தங்கள் முடி.

இதனைக் கேட்டு அம்மூவரும் வாட்டமுற்றகன்றார். வாணரும் நிகழ்ந்ததை வந்தபின் னுணர்ந்தார். பூதம் ஒன்றேவி அவர் கட்சேதம் புரிந்தார். ஒரு பயனில் சொல்லால் அவர் புல தீப்

பயன் அடைந்தார். நயன் இல சொல்லினும் பயன் இல சொல்லலாகாதென்று தெளிந்தார். விரிவு அவர் சரிதையில் தெரிவாம்.

198. மாறனொரு சொல்லை மதுரகவி முன்சொன்னார்
கூறார்வே றென்னை குமரேசா—தேறி
அரும்பய னாயும் அறிவினார் சொல்லார்
பெரும்பயன் இல்லாத சொல் (௮)

இ—ள்.

குமரேசா! நம்மாழ்வார், மதுரகவியை நோக்கிச் சொல் ஒன்றே சொல்லி வன் வேறொன்றையுஞ் சொல்லவில்லையெனின், அரும்பயனை ஆயும் அறிவினார், பெரும் பயன் இல்லாத சொல்லைச் சொல்லார் என்க.

மாறர், சடகோபர் என்பன நம்மாழ்வாரது திருநாமங்கள்.

அரும்பயன் ஆயும் அறிவினார்—அரிய பயனை ஆராயும் அறிவுடையார்.

அரிய பயன் என்றது மெய்யுணர்வான அன்றி வேறொன்றும் அறிதற்கரிய முத்திப்பேறு முதலிய மறுமைப் பயன்களை என்க.

பெரும் பயன் இல்லாத சொல்லைப் பேரறிவாளர் சொல்லார் என்பதாம்.

அறிவில்லாதவரே பயனில்லாதசொல்லைச் சொல்வர், உடையவர் பயனுள்ள சொல்லையே, சொல்லுவர் என்பது குறிப்பு.

அறிவின் பெருமைக்குத் தக்கபடியே சொல்லின் பெருமை காணப்படுமாதலால் பேரறிவோர் பெரும் பயனுள்ள சொல்லையே சொல்லுவர் என்பதும், அல்ல பிற சொல்லார் என்பதும்

இதில் உணர்த்தப்பட்டன. இவ்வுண்மை சடகோபர் பால் உணரப்படும்.

கதை.

குருகைநாதனாகிய நம்மாழ்வார் அரும்பயனையே யாய்ந்தார். பயப்பொருளையே தோய்ந்தார். அதனால் ஒருவரோடும் ஒன்றும் பேசாமல் ஒடுங்கியிருந்தார். எவர் வந்து எதைக் கூறினும் அவரை இவர் எதிர்நோக்கவுஞ் செய்யார். தமது மெய்யுணர்வின் பயனைப் பொய்யுணர்வோருக்குப் புகலுவதில் பயனொன்றுமில்லையென்று கருதி மோனமாயிருந்தார். இவர் இங்ஙனமிருப்பத் திருக்கோளூரில் அவதரித்துத் திருவயோத்திக்குப் போயிருந்த மதுரகவியாழ்வார் தென் திசை நோக்கி மீண்டார். இவரை வந்து கண்டார். வியந்தார். சிறிதும் அசையாதிருக்கின்ற இவர்பால் எஃதேனும் உணர்ச்சியுளதா என்று உணர விரும்பினார். அசேதனமான உடம்பில் சேதனமாய் அருவாய் உள்ள உயிர் ஒன்றியிருந்தால் அஃது எதனைத் துய்த்து எங்கே இருக்குமென்னும் பொருளையமைத்து, "செத்தத்தின் வயிற்றில் சிறியது பிறந்தால் எத்தைத் தின்று எங்கே கிடக்கும்" என்றார். உடனே மாறனார் தமது மலர் விழி திறந்தார். உயிர் உடலோடு கூடித் தனது வினைப் போகங்களை நுகர்ந்து அதன் கண்ணேயே தங்கி நிற்கும் என்று அதற்குவிடையாக "அத்தைத் தின்று அங்கே கிடக்கும்" என்றார். தமது மதி நலத்தின் மாண்மையைத் தெரிவார் இல்லையென்று கருதியே இதுவரையும் இவர் யாதும் சொல்லாமல் இருந்தார் என்னும் உண்மையை மதுரகவியார் ஓர்ந்தார். உவந்தார். பயன் சேர்ந்த அச்சொல்லின் அருமையையும் அவரது அறிவின் பெருமையையும் பெரிதும் போற்றினார். குருவாகக் கருதினார். அரிய கவிகள் பல அவர் மேற் பாடினார் வேறொன்றும் விரித்துச் சொல்லாமல் அடங்கியிருக்கும் அவரது அருமையைப் புகழ்ந்தார். அரும்பயன் ஆயும் அறிவினார் பெரும்பயன் இல்லாதன சொல்லார் என்னும் உண்மையை அவர்பால் தெளிந்தார்.

சரிதையில் தெளிவாம்.

பயன் இல்லாத சொல்லை அறிவாளர் சொல்லார் என்னும் இவ்வுண்மையை அழகிய உவமையால் விழுமிதாகக் கம்பர் விளக்கியுள்ளார். அவரது அவ் இன் கவி இங்கு நன்கு கருதத்தக்கது.

கல்வியிற் றிகழ்கணக் காயர் கம்பலைப்
பல்விதச் சிறாரெனப் பயில்வ பல்லரி
செல்விடத் தல்லதொன் றியம்பல் செய்கலா
நல்லறிவாளரின் அவிந்த நாவெல்லாம்.

(கார் காலப் படலம்)

மழைக்காலங் கழிந்தபின் வருக என்று கட்டளையிட்டுச் சுக்ரீவனைக் கிட்கிந்தைக்கு அனுப்பியபின் தம்பியோடு இராமர் அங்கு ஒரு மலைச் சாரலில் தங்கியிருந்தார். அவ்வமையம் கார் காலம் கழிந்தது. குளிர்காலம் எழுந்தது. அவ் இரண்டு பருவங்களின் இயல்பையும் வருணித்துக் கூறுங்கால் இது கூறப்பட்டது.

ஓர் ஆசிரியனுக்கு அடங்கிப் பள்ளிக்கூடத்திலிருந்து ஒருவர் முறை சொல்ல அதன்பின் ஒருங்கே சொல்லி மூல பாடங்களை மனப்பாடஞ்செய்யும் இளம்பிள்ளைகளைப்போல், ஒன்றின்பின்னொன்றாகப் பேரிரைச்சலிட்டு மழைக்காலத்தில் கத்திக்கொண்டிருந்த தவளைகள், குளிர்காலம் வந்தவுடனே அங்ஙனமின்றித் தமது சொல்சென்று பயன்படும் இடத்தேயன்றி வேறிடத்து ஒன்றுஞ் சொல்லாமல் நாவடங்கியிருக்கும் நல்லறிவாளரைப்போல் ஒவ்வொர் சமயம் மாத்திரங் கத்தி ஒடுங்கியிருந்தன என்பது இதன் திரண்ட பொருளாம்.

மழைக்காலத்தில் வரம்பின்றிக் கத்தும் தவளைகள்போல் பயனில்லாத சொற்களைப் பேதையர் பாரித்துரைப்பர் என்றும், அறிவோர் பயனுறுஞ் சொல்லை நயனுறச் சொல்லி நாவடங்கியிருப்பர் என்றும், இதில் விளக்கியுள்ள உவமையின் நுண்மையும் நயமும் நுனித்துணரத்தக்கன.

அறிவோர் பயனுறுஞ்சொல்லையே நயனுறச் சொல்வர் என்பது இதனால் கூறப்பட்டது.

199. அன்றேன் இரணியன்சேய் அல்லலுற்றுஞ் சொல்ல
குன்றியசொல் ஒன்றும் குமரேசா—என்றும் [வில்லை
பொருடீர்ந்த பொச்சாந்துஞ் சொல்லார் மருடீர்ந்த
மாசறு காட்சி யவர். (௯)

இ—ள்.

குமரேசா! இரணியன் சேய் அல்லலுற்றும் பயன் குன்றிய சொல்லை ஏன் சொல்லவில்லை எனின், மருள் தீர்ந்த மாசறு காட்சியவர் பொருள்தீர்ந்த சொல்லைப் பொச்சாந்துஞ் சொல்லார் என்க.

இரணியன்சேய்—பிரகலாதன். பொச்சாந்தும்—மறந்தும். பொருள்தீர்ந்த—பொருள் நீங்கிய: என்றது பயன் இல்லாத சொற்களை. மருள்தீர்ந்த—மயக்கம் நீங்கிய. மாசறு காட்சியவர்—குற்றமற்ற அறிவினையுடையவர்.

மயக்கம் இல்லாத மெய்யுணர்வுடையவர் பயன் இல்லாத சொற்களை மறந்தும் சொல்லார் என்பதாம்.

மேல், அறிவுடையார் பயன் இல சொல்லார் என்றார் மடி மறதி, அச்சங்களுள் ஏதாவது ஒன்றான் மருண்டேனும் சொல்லாரோ எனின், எவ்வகையானும் அவர், அதை யாண்டுஞ் சொல்லார் என்று மீண்டுந் தெளிவுறுத்தினார்.

மருள் நீங்கிய அறிவினோர் பொருள் நீங்கிய சொல்லை மறந்தும் சொல்லார் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இது பிரகலாதன் பால் உணரப்படும்,

கதை.

பிரகலாதன் என்பவன் இரணியன் புதல்வன். அருள் சேர்ந்த நெஞ்சினன். மருள் தீர்ந்த மாண்பினன். மாசற்ற உணர்வினன். கருவிலே யெய்திய திருவினையுடையவன். இளமைப்பருவத்தே இவனுக்கு வேதத்தைப் போதிக்கும்படி தந்தை ஒரு வேதியனுக்கு ஒதினான். அவன் இவனை அழைத்துச்சென்று தனதருகேயிருத்தினான். அவன் அசுர குருவாகிய சுக்கிரன் மகன், பெயர் சண்டமார்க்கன் என்ப, ஓதுவிக்கத் தொடங்கினான். முன்னதாக முறைப்படி இரணியாய நம: எனச்சொல் என்றான். புதல்வன் அதனைச் சொல்ல இசைந்திலன். நாராயணாய நம: என்று சொல்லினான். உலகமெல்லாம் தன் பெயரே செல்லும்படி செங்கோல் செலுத்துகின்ற உன் தந்தைபெயரைச் சொல்லாமல் ஏன் இந்தப் பெயரைச் சொல்லுகிறாய் என்று குரு முனிந்தான். குமரன் குறுநகை செய்தான். அது பொருள் தீர்ந்த சொல். அதனை யான் சொல்லேன். வேதத்தின் உச்சியின் மெய்ப்பொருளாய் விளங்கும் இப்பெயரையே செப்புவேன் என்றான். தனக்கு ஏதம் வருமென்றெண்ணி வேதியன் ஓடினான். நடந்ததை வேந்தனிடம் நடுங்கி ஓதினான். இரணியன் எழுந்தான். புதல்வனைக் கண்டான். புகன்றதைத் தெளிந்தான். சேயெனக் கருதாது தீயெனக்கனன்றான். அப்பெயரைச்சொல்லாதே யென்று அவனுக்கு அல்லல் பல செய்தான். யாது செயினும் அவன் அதனையே ஓதினான். தாதையை நோக்கினான்.

காமம் யாவையுந் தருவதும் அப்பதங் கடந்தால்
சேமவீடுறச் செய்வதும் செந்தழல் முகந்த
ஓமவேள்வியின் உறுபத முய்ப்பது மொருவன்
நாமம் அன்னதுகேள் நமோ நாராயணாய.

என்று மொழிந்தான். எதிர்நின்று இகழ்ந்தான். மருள் தீர்ந்த மாட்சியுடையார் பொருள் தீர்ந்ததைப் பொச்சாந்துஞ் சொல்லார் என்பதை யிவன் உணர்த்தி நின்றான்.

(இதன் விரிவு இராமாயணத்தில் உரைப்படும்.)

பொருள் நிறைந்த சொல்லை அறிவோர் பொச்சாந்துஞ் சொல்லார் என்பது இதனால் கூறப்பட்டது.

---

200 சீதைதன்மை சொல்லித்தான் செய்ததையேன் சொல்
லாதில் அனுமான் குமரேசா—ஏதேனும் [லவில்லை
சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல் (ய)

இ—ள்.

குமரேசா! சீதையின் இயல்பை மட்டுஞ்சொல்லியவன் அனுமான் தான் செய்ததை ஒன்றுஞ் சொல்லவில்லை எனின், சொல்லின் பயனுடைய சொல்லுக; சொல்லின் பயனிலாச் சொல் சொல்லற்க என்க.

சொல்லின் பயனுடைய சொல்லுக—சொற்களிற் பயனுடைய சொற்களையே சொல்லுக.

சொல்லின் என்பதைச் சொல்லவேண்டுமாயின் எனவுங் கொள்ளலாம்.

பின்வரும் நிலை என்னும் அணிநோக்கிச் சொல் என்பது பொருளுடன் கலந்து இதில் ஐந்து நிலைகளில் நின்றது. அது சொற்பின் வருநிலை, பொருட்பின் வருநிலை, சொற்பொருட் பின்வருநிலை என மூவகைப்படும். அவற்றுள் இது சொற்பொருட் பின்வரு நிலையாம்.

முன்வருஞ் சொல்லும் பொருளும் பலவயிற்
பின்வரு மென்னிற் பின்வரு நிலையே. (தண்டியலங்காரம்.)

சொற்களில் பயனுள்ளனவே சொல்லுக; பயன் இல்லாதன சொல்லாதொழிக என்பதாம்.

அறிவுள்ள ஒருவன் பயனுள்ள சொற்களைச் சொல்லி பயனில்லாதவற்றை ஒழிக்கவேண்டும் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை அனுமான்பால் உணரப்படும்.

கதை.

அனுமான் தன்னுடன் வந்த இரண்டுவெள்ள வானரங்களை மகேந்திரமலையில் நிறுத்திவிட்டுக் கடல்கடந்து இலங்கையில் புகுந்தான். சீதையைத் தேடினான். கண்டான். உண்மையை உணர்ந்தான். அவர்பால் உறுவன உணர்த்தினான். அதன்பின் அரக்கர் பலரை மாய்த்தான். அக்கனைத் தேய்த்தான். இந்திரசித்தனை எதிர்ந்தான். ஏற்றமர்புரிந்தான். மன்னன் முன் எய்தி மனுமுறை புகன்றான். அவன் செய்த தீமையெல்லாம் இவன் சேர்ந்து பொறுத்தான். தன் வாலில் வைத்த தீயை அவ் இலங்கையில் வைத்தான். எரித்தான். வான் வழியெழுந்தான். மீண்டான். தமரிடை சார்ந்தான். அவரனைவரும் இவனை அன்புறத் தழுவினார். அகமிக மகிழ்ந்தார். போனதும் புகுந்ததும் புகலெனப்போற்றினார். சிறையிடையிருக்கும் சீதையின் செம்மையும் அவர்தந்த அடையாளம் தான்கொண்டுவந்த தன்மையும் ஆகிய இரண்டே அமைவுறச் சொல்லினான். தான் அங்குச் செய்த அருஞ்செயல்களுள் ஒன்றுஞ்சொல்லவில்லை. ஆயினும் அவையெல்லாம் அவர் குறிப்பாலுணர்ந்தார். அறிவோர் பயனுள்ளனவே சொல்வார் இல்லன சொல்லார் என்னும் உண்மையை அனுமான்பால் தெளிந்தார். விரிவு சரிதையில் தெளிவாம்.

ஆண்டகை தேவியுள்ளத் தருந்தவம் அமையச் சொல்லிப்
பூண்டபே ரடையாளங்கைக் கொண்டதும் புகன்றுபோரில்
நீண்டவா ளரக்கரோடு நிகழ்ந்ததும் நெருப்புச் சிந்தி
மீண்டதும் விளம்பான் தான்தன் வெற்றியை யுரைப்பவெள்கி.

(இராமாயணம்.)

பயனில் சொல்லைச் சொல்லலாகாதென்பது இதனால் கூறப்பட்டது.

(இவ் அதிகாரத்தின் தொகைப் பொருள்.)

பயன் இலவாகிய சொற்களைச் சொல்வோர் பலராலும் இகழப்படுவார். தீய செயலினும் அது தீயதாகும். பயனில சொல்வோன் நயன் இலனாவான். அஃது ஒருவனை நயனிலனாக்கி நன்மையின் நீக்கும். அதனால் ஒருவனது சீர்மையும் சிறப்புமசேர நீங்கும். பயனில சொல்வோன் பதரெனப்படுவான். நயன் இல சொல்லினும் பயனில சொல்லாமை நன்று. அறிவோர் அதனைச் சிறிதும் சொல்லார். பெரியோர் மறந்தும் அதனை ஒருபோதும் சொல்லார். இல்லன என்றுஞ் சொல்லாதொழிக. பயனுள்ள சொல்லையே பண்புடன் சொல்லுக

20-வது பயனில சொல்லாமை முற்றிற்று.

உ௧-ம் அதிகாரம் தீவினையச்சம்.

அஃதாவது தீயவினைகளைச் செய்தற்கு அஞ்சுதல். மனத்தின்கண்ணும் மொழியின்கண்ணும் நிகழுந் தீமைகளை ஒழிக்கும்படி யிதுவரை புணர்த்தினார். இனி, மெய்யின்கண் நிகழும் வெவ்வினைகளையெல்லாம் விலக்கும்படி விளக்குகின்றாராகலின், இஃது ஈண்டுவைக்கப்பட்டது. மேல், பயனில சொல்லாதே என்றார், இதில் நயனில செய்யாதே என்கின்றார். அதிகார அமைவும் இதனானே தெளிவாம்.

201. அன்றசுரர் தின்றார் அமரரேன் அஞ்சினார்
கொன்றமீன் திண்டங் குமரேசா—நன்றகன்ற
தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்
யென்னுஞ் செருக்கு. (௧)

இ—ள்.

குமரேசா! அசுரர், கொன்ற மீன்களை அஞ்சாமல் தின்றார் ஏன் அமரர் அவற்றைத் தீண்டவும் அஞ்சினார் எனின், தீவினை என்னுஞ் செருக்கைத் தீவினையார் அஞ்சார்; விழுமியார் அஞ்சுவர் என்க. விழுமியார்—மேலோர்.

செருக்கு—மனக்களிப்பு. ஈண்டு அதனால் எய்தும் மயக்கத்தை அது குறித்து நின்றது.

பின் துன்பம் பயக்கத்தக்க தீயசெயல்களை இன்பமென மயங்கி யெண்ணாது செய்தற்கு அச்செருக்கே காரணமாகலின் அதனையே தீவினையாக அமைத்துரைத்தார்.

செருக்கு என்னும் காரணத்தால் தோன்றும் காரியமாகிய தீவினையை அதுவாகக் கூறியது அதன் மிகுதி கருதியென்க.

தீய செயல்களையே செய்து வந்தவர் என்பார் தீவினையார் என்றார். பழகிய ஒன்றில் பயந்தோன்றாதாதலான் அவற்றிற்கு அவர் அஞ்சாராயினர்.

கீழோர் தீய செயல்களைச் செய்தற்கு அஞ்சார்; மேலோர் அஞ்சுவர் என்பதாம்.

மேன்மையை வேண்டுவோர் தீவினைகட்கு அஞ்சவேண்டுமென்பது குறிப்பு.

தீயார் அஞ்சாமல் தீவினைகளைச் செய்வர் என்பதும் நல்லார் அவற்றிற்கு அஞ்சுவர் என்பதும் இதில் உணர்த்தப்பட்டன. இவ்வுண்மை அசுரர்பாலும் அமரர் கண்ணும் முறையே உணரப்படும்.

கதை.

வீரமகேந்திரத்திலிருந்து சூரபன்மன் அரசுபுரியுங் காலத்தில் தேவர்கள் பெரும் பயங்கொண்டு அவனுக்கு ஏவல் புரிந்து

வந்தார். வரினும், இரக்கஞ்சிறிதுமின்றி அவர்பால் அவன் அல்லலே செய்தான். தனது நகரத்திலுள்ள அசுரரனைவருக்கும் மீன்களைக்கொண்டுவந்து கொடுக்கும்படி அவரை ஏவினான். அவரனைவரும் அவன் கொடுமைக்குப் பயந்து கடலிடைச்சென்றார். மீன்களைப் பிடித்தற்கு மிகவும் அஞ்சினார். பழியென நாணினார் பதைத்துநடுங்கினார். அசுரரனைவரும் அவற்றை அஞ்சாமல்கொன்றார். துடிக்கத் துடிக்க அவற்றை யெடுத்துச் சென்றார். தின்றுகளித்தார். தீமையை அஞ்சாமல் தினமுஞ் செய்தார் தேவர் அஞ்சி அயர்ந்தார். (விரிவு கந்தபுராணத்தில் காணப்படும்.)

உரைக்குமொழி யதுகேளா அனையரெலாம் உண்ணடுங்கி
யுயங்கிவெள்கித்
திரைக்கடலின் மீன்றனக்குத் தருகென்றா னிதற்கினிநாஞ்
செய்வதேதோ
விரைக்கமலத் தனிக்கடவுளிட்டாயு நந்தலையில்
விதித்தானென்னா
இரக்கமொடு மறுக்கலஞ்சி யத்திறமே புரிதுமென
இசைந்துபோனார். (1)

தேனுலவுந் தாருத் திருநிழற்கீழ் இன்பமுறும்
வானவர்க ளென்றேமதிக்குந் தகைமையினோம்
ஈனமொடு மீன்சுமந்தே யெல்லோர் களுநகைக்கத்
தானவர்முன் செல்வதினுஞ் சாதன்மிக நன்றுநன்றே. (2)
(தேவரை ஏவல்கொள் படலம்.)

தீவினைக்கு அஞ்சுவதே மேன்மை என்பது இதனால் கூறப்பட்டது.

---

202. அஞ்சாத பாண்டியனும் அஞ்சினனேன் தீயதென்று
கொஞ்சந் தெரிந்து குமரேசா—நஞ்செனவே
தீயவை தீய பயத்தலாற் றீயவை
தீயினும் அஞ்சப் படும். (௨)

இ—ள்.

குமரேசா! அஞ்சாத பாண்டியனும் ஏன் தீயவற்றிற்கு அஞ்சினன் எனின், தீயவை தீயபயத்தலால் தீயவை தீயினும் அஞ்சப்படும் என்க.

தீயவை தீய பயத்தலான்—தீவினைகள் துன்பந் தருதலான். தீவினைகள் துன்பமே பயக்கும் இயல்பினவாகலான் அவற்றைத் தீயினுங் கொடியதாகக் கருதி அஞ்சவேண்டும் என்பதாம்.

தொட்டகாலத்தில் தொட்ட உடம்பைமட்டும் தீ சுட்டு வருத்தும்; தீவினை, தன்னைச் செய்த உடர்பு அழியினும் அவ்வுயிர் புக்கவிடமெல்லாந் தானும் உடன் புகுந்து அதற்குக் கொடுந்துன்பத்தையே கொடுத்துநிற்கும் ஆதலால் தீயினும் தீவினைக்கு அஞ்சவேண்டுமென்க.

தீயைத் தீண்டினார் தீண்டலாம், தீவினையைச் செய்யலாகா தென்பது குறிப்பு.

தீவினைக்கு அஞ்சவேண்டுமென்று மேற்கூறிய உண்மைக்கு உறுதியை யிதில் உணர்த்தினார்.

தீவினை தீயினுங் கொடியதாகக் கருதி அறிவோரால் அஞ்சப்படுமென்பது இதில் உணர்த்தப்பட்டது. இது பாண்டியன்பால் உரைப்படும்.

கதை.

இற்றைக்கு இரண்டாயிர வருடங்கட்கு முன்னர் மதுரையம்பதியில் நெடுஞ்செழியன் என்னும் பாண்டிய மன்னன் அரசாண்டிருந்தான். அக்காலத்தில் தனது மனைவியின் சிலம்பை விலைப்படுத்தும்பொருட்டு அங்குவந்த கோவலனைக் கனகவன்மன் என்னும் பொற் கொல்லன் கண்டான். மன்னனுக்கு இவன் மணியணி செய்வோன். வந்தவனை வஞ்சித்தான். அரசியின் சிலம்பைத் திருடின கள்வனைப் பிடித்தேன் என்று கோவலனைக்

குறித்தான். இதறிய ஏவலன் சொன்னதை அத்தூய காவலன் நம்பினான். கொல்லும்படி செய்தான். கண்ணகியால் அதன் பின் உண்மை தெளிந்தான். அத்தீவினையை நினைந்தான். அஞ்சா நெஞ்சமும் அஞ்சி நடுங்கினான். தீயினும் அதனைத் தீயதென்றோர்ந்தான். தன் அறிவைப்பழித்தான். ஆட்சியை வெறுத்தான்.

"தாழ்ந்த குடையன் தளர்ந்தசெங் கோலன்
பொன்செய் கொல்லன் தன்சொற் கேட்ட
யானோ அரசன் யானே கள்வன்
மன்பதை காக்குந் தென்புலங் காவல்
என்முதற் பிழைத்தது கெடுகவென் ஆயுளென"

மயங்கி வீழ்ந்தான். மன்னுயிர் நீர்ந்தான்.

(இதன் விரிவு சிலப்பதிகாரத்தில் காணப்படும்.)

தீயினும் தீயவைக்கு அஞ்சவேண்டுமென்பது இதனால் கூறப்பட

203. செற்ற பகைவனுக்கும் தீதுசெய்யா தேன்விடுத்தார்
கொற்றமிகு மெய்யர் குமரேசா—பெற்ற
அறிவினுள் எல்லாந் தலையென்ப தீய
செறுவார்க்குஞ் செய்யா விடல். (௩)

இ—ள்.

குமரேசா! மெய்ப்பொருள் நாயனார் தன்னைக் கொன்றவனுக்குந் தீங்கு ஒன்றுஞ் செய்யாமல் ஏன் செல்ல விடுத்தார் எனின், செறுவார்க்கும் தீயவற்றைச் செய்யாதுவிடல் அறிவினுள் எல்லாம் தலையாம் என்க.

செய்யாது என்பது ஈறுகுறைந்து செய்யா என நின்றது.

செறுவார்—துன்பஞ்செய்வார்.

செறுவார்க்கும் தீய செய்யாது விடல்—செறுவாரிடத்தும் தீயவினைகளைச் செய்யாது விடுதலே.

தலை என்ப—தலைமையான அறிவு என்பர் பெரியோர். என்ப என்னும் பயனிலைக்கு ஏற்ற எழுவாய் இதில் வருவிக்கப்பட்டது.

ஒருவன் பெற்றுள்ள அறிவுகளெல்லாவற்றுள்ளும் சிறந்த அறிவாவது யாதெனின், தீது செய்தற்கு ஏது உள்ள இடத்தும் அதனைச் செய்யாது விடுதலேயாம் என்பதாம்.

பிறர்மாட்டுத் தீயதைச் செய்யாதிருத்தல் அறிவாம்; செறுவார்மாட்டும் அதனைச் செய்யாது விடுதல் பேரறிவாம் என்க.

தம்மைக் கொலைபுரியும் கொடியவரிடத்தும் பேரறிவாளர் தீயதைச் செய்யார் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை மெய்ப்பொருளார்பால் உணரப்படும்

கதை.

மெய்ப்பொருள் நாயனார் என்பவர் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர். இவரொரு சிற்றரசராயிருந்தும் உலகப் பொருள்களில் உளப்பற்றற்றார். பரம்பொருளையே மிகப்பற்றி நின்றார். அதனால் மெய்ப்பொருளார் என்னும் நற்பெயர்பெற்றார். இவரது தந்தை பெயர் தெய்வீகன். தாய் பெயர் பொன்மாலை. மலையமானாருக்குத் தலைவராய்த் திருக்கோவலூரென்னும் திருநகரிலிருந்து இவர் செங்கோல் செலுத்தினார். பயிர்களுக்கு மேகம்போல் உயிர்களுக்கு இவர் உதவிபுரிந்தார். புரிந்துவருங்கால், முத்தநாதன் என்னும் மறுபுலத்துக் குறுநிலமன்னனொருவன் இவர்மேற் பகைகொண்டிருந்தான். பலமுறையும் இவரை வெல்ல முயன்றான். முடியவில்லை. அக்கொடியவன் ஒருநாள் அடியவர்போல் வேடந்தரித்து இவர்பால் வந்தான். மாளிகையுட்புகுந்தான். இவர் கண்டார். வஞ்சன் என்று அறியாமல் வணங்கினார். உபசரித்தார். அரியநூற் பொருளொன்றைத்

தெரியவுணர்த்த வந்தேன் என்று இவர்பால் அவன் கூசாது கூறினான். பொய்யே புகலும் அவ்வெய்யவன் குறிப்பை மெய்யே காணும் இவ் ஐயர் கண்டிலர். மனைவி மக்கள் முதலிய அனைவரையும் அகற்றினார். தனியிடம் ஒன்றில் அவனுடன் புகுந்தார். இருவருந் தனித்தார். முறையெடுப்பதுபோல் அவன் உறையினை யவிழ்த்தான். வாளால் இவரை வலிந்து வீசினான். உடல்துணி பட்டது. உதிரங் கான்றது. உடனே தத்தன் என்னுந் தானைத் தலைவன் கண்டான். அவனைக் கொல்லத் துணிந்தான். தாழ்த் துக்கிடக்கும் இவர் கடுத்துத் தடுத்தார் நம் இல்லில் வந்தானைக் கொல்லலாகாது. அவனே நமக்கு ஆருயிர்த் துணைவன். ஊறொன்றுஞ் செய்யாது நீ உடனே சென்று அவன் ஊரிடைவிடுத்து வா என்றார். அவனும் சென்று விடுத்துத் திரும்பி வந்தான். அதன்பின் இவரும் ஆருயிர் துறந்தார். மெய்ந்நிலையெய்தி மேவி யின்புற்றார். செறுவார்மாட்டும் தீதுசெய்யாது விடுத்த இப்பெரியாரது பேரறிவை உலகம் போற்றியது.

(விரிவு பெரிய புராணத்தில் காணப்படும்)

யார்மாட்டுந் தீதுசெய்யாமையே ஒருவன் பேரறிவுக்குப் பயன் என்பது இதனால் கூறப்பட்டது.

204. வெற்றி விசயனுக்கேன் வெம்மூகன் கேடெண்ணிக்
குற்றமுற்று மாய்ந்தான் குமரேசா—எற்றும்
மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு.

இ—ள். (ச)

குமரேசா! மூகன் என்பவன் விசயனுக்குக் கேடு எண்ணியதால் ஏன் உடனே மாய்ந்தான் எனின், பிறன் கேடு மறந்தும் சூழற்க; சூழின் சூழ்ந்தவன் கேடு அறம் சூழும் என்க.

சூழ்தல்—எண்ணல்.

பிறன் கேடு — பிறனுக்குக் கேடுதரும் செயலை.

மறந்தும் சூழற்க — மறந்தும் எண்ணாதே.

அறம் சூழும் — அறக்கடவுள் எண்ணும்.

பிறனுக்குக் கேடு பயக்கும் தீவினையை ஒருவன் மறந்தும் எண்ணலாகாது; எண்ணுவானாயின் உடனே அவன் கெடும்படி அறக்கடவுள் எண்ணும் என்பதாம்.

ஒருவன் பிறர்க்குக் கேடு எண்ணுவானாயின் அது அவனுக்கே கேடாய் முடியுமென்பதாம்.

கெடுவான் கேடு நினைப்பான் என்றதுங் காண்க.

கேடு சூழ்வானைத் தருமதேவதை கெடுத்துவிடும் என்பது இதில் உணர்த்தப்பட்டது. (இது மூகன்பால் உணரப்படும்.)

கதை.

மூகன் என்பவன் ஓர் அசுரன். மாயைகள் பலவும் நேயமொடு பயின்றவன். துரியோதனனுக்கு உரிமையான நண்பினன். அவன், விசயனைக் கொன்றருப்படி இவனை யேவினன். இவனும் இசைந்தான். ஒரு பன்றியுருவங் கொண்டான். பரமனை நாடித் தவப்புரிந்து நிற்கும் விசயனை நாடி வந்தான். ஈன அசுரன் ஏனமாய் வருவதை ஞானநாயகன் உணர்ந்தார். வேடவுருவங்கொண்டார். மலைமகளோடு சிலையெடுத்துச் சென்றார். செல்லும் பன்றியை மெல்லத் தொடர்ந்தார். தவம்புரி சாரலைச்சார்ந்தார். அம்பொன்றை யேவி அதனுயிர் மாய்த்தார். கேடுசூழுமுன் மூகன் கெட்டு விழுந்தான். பிறன்கேடு சூழ்வோனுக்கு அறம் கேடு சூழும் என்பது உலகம் இவன்பால் உணர்ந்தது.

(இதன் விரிவு பாரதத்தில் உணரப்படும்.)

கேட்டுநீ செவ்வாய்க் கிளிநிகர் மொழியாய் கிரீடியைத்
துணைவர்களுடனே
காட்டிலே யொதுக்கி யிளைஞருந் தானுங் கடியவஞ்
சனையினால் கவர்ந்த
நாட்டிலே வாழ்வேனை ஏவலால் மூக நாமதா
னவனிவன் றன்னைக்
கோட்டிலே கொலைசெய் ஏனமாய் வந்திக் குன்றிடை
யின்று புக்கனால் (1)

மற்றவன் விரைவினுடனமர் மலைந்து வாசவன்
மதலையை வதைத்து
கற்றவம் அகற்றுமுன்னமே விரைந்து நாமுயிர்
கவருதல் வேண்டும்
சொற்றவன் மதலை கேட்டன வரங்கள் கொடுத்தலும்
வேண்டுமென் றெழுந்தான்
கற்றவர் வழுத்துந் திரிபுரமெரித்தோன் கற்றவர்
கருத்தினிற் காண்போன். (2)

(அருச்சுனன் தவநிலைச் சருக்கம்.)

கேடு சூழ்வோன் கெடுவான் என்பது இதனால் கூறப்பட்டது.

205 உற்ற வறுமை யொழிக்கவொரு தீதுசெய்தேன்
குற்றமுற்றான் கூலன் குமரேசா—எற்றும்
இலனென்று தீயவை செய்யற்க செய்யின்
இலனாகும் மற்றும் பெயர்த்து. (௫)

இ—ள்.

குமரேசா! கூலன் என்பவன் தான் உற்ற வறுமையை ஒழிக்கக்கருதி ஒரு தீது செய்து வன் பெருங்கேடு உற்றான்

எனின், இலன் என்று தீயவை செய்யற்க, செய்யின் பெயர்த்தும் இலன் ஆகும் என்க. இலன் என்று—வறியன் என்று கருதி.

மற்று—அசை நிலை. அதிலுள்ள உம்மை பிரித்துப் பெயர்த்து என்பதன்பின் கூட்டப்பட்டது.

பெயர்த்தும் இலனாகும்—மறுபடியும் வறியனாவன்.

வறியன் என்று கருதி அதனைத் தீர்க்கும்பொருட்டு ஒருவன் தீவினைகளைச் செய்யின் மறுபடியும் அவன் கொடிய வறுமையையே அடைவன் என்பதாம்.

முறையான முயற்சியாலன்றிக் களவுமுதலிய தீவினைகளால் பொருள்செய்து தனது வறுமையை ஒருவன் நீக்க முயலலாகாது என்னெனின், தீவினைக்குப் பயன் துன்பமே யாதலால் அது வறுமையை மிகுவிக்குமேயன்றிச் செல்வத்தை வருவிக்காதென்பதாம்

வறியன் என்று கருதிப் பிறனுக்குத் தீவினையைச் செய்யாதே; செய்யின் அதனால் நீயும் வறியவனாவாய் எனவும் இது பொருள்படும்.

முன்னைத் தீவினைப்பயனால் இப்பொழுது வறியனாயிருக்கின்றேன் என்று உணராமல் ஒருவன் அதனை ஒழிக்கக்கருதி மேலும் தீவினையைச் செய்யின் அவன் என்றும் வறியனாயிழிந்து கெடுவான் என்பது கருத்து. இது கூலன்பால் காணப்படும்.

கதை.

கூலன் என்பவன் அவந்தியையடுத்திருந்த தீவகம் என்னும் ஊரிலிருந்த ஓர் வேதியன். இளமையிலேயே வறுமை மிக்கவன். பருவமெய்தினான். பொருளாசைகொண்டான். ஆலயம் ஒன்றில் புகுந்தான். அங்கே காணிக்கையாகச் சேர்ந்த பொருளைக் காணாமல் கவர்ந்தான். பின் காணப்பட்டான். அரச தண்டனை

யை அடைந்தான். அதன் பின் ஆருயிர் தீர்ந்தான். பன்னிரு பிறவிகளிலும் இன்மையே அடைந்தான். இறுதியில் இழிமகனானான். பிரமசீலன் என்னும் முனிவர் ஒருவர் கங்கையாடி இவன் கண்முன் வந்தார். அவர் சடையிலிருந்து ஒரு துளி நீர் இவன் உடலில்பட்டது. அதனால் தூயவனாகினான். தீயவை நீங்கினான். இலன் என்று தீயவை செய்யின் அவன் மேலும் இலனாம் என்பதை உலகம் இவன்பால் ஓர்ந்தது (இதன் விரிவைக் காசிகாண்டபியத்தில் காண்க.)

தீமையால் வறுமையே வருமென்பது இதனால் கூறப்பட்டது

206 கூடியமான் கொன்ற கொடுந்தீதால் பாண்டுமன்னன்
கூடியேன் மாய்ந்தான் குமரேசா—நாடியென்றும்
தீப்பால தான்பிறர்கட் செய்யற்க நோய்ப்பால
தன்னை யடல்வேண்டா தான். (௬)

இ—ள.

குமரேசா! பாண்டுமன்னன் கூடிய மானைக்கொன்ற தீமையால் ஏன் கூடி மாய்ந்தான் எனின், நோய்ப்பால தன்னை அடல்வேண்டாதான் தீப்பால தான் பிறர் கண் செய்யற்க என்க.

நோய்ப்பால—துன்பப்பகுதிகளாகிய பாவங்கள்.

தீப்பால-

துன்பங்கள் தன்னைவந்து வருத்துதலை வேண்டாதவன் பிறர்பால் தீவினைகளைச் செய்யலாகாதென்பதாம்.

தனக்குத் துன்பம் வேண்டாதவன் பிறர்க்குத் துன்பஞ்செய்யாமலிருக்க வேண்டுமென்பது கருத்து.

பிறர்க்குத் துயர்செய்வோன் பெருந் துயர் அடைவான் என்பது குறிப்பு.

ஒருவன் எவ்வகையில் பிறர்க்குத் தீமை செய்கின்றானோ அவ்வகையே அதனை அவன் அடைவான் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இது பாண்டு மன்னன்பால் உணரப்படும்.

கதை.

பாண்டு என்பவன் அம்பாலிகை வயிற்றில் வியாசர் அருளால் பிறந்தவன். குந்தி மாத்திரை என்னும் இருவரை மணந்து திருவுடன் வாழ்ந்தான். உத்தம குணங்கள் வாய்ந்து அத்தினபுரியை ஆண்டான். ஆண்டு வருங்கால் மனைவியர் இருவருடன் ஒருநாள் இமயச்சாரலை எய்தினான். அவருடன் அமைந்து ஆரமகிழ்ந்துலாவினான். வினோதமாக வேட்டையாடினான். விலங்கினங்கள் கலங்கியோடின. கிந்தமன் என்னும் கந்தருவன் ஒருவன் தனது மனைவியுடனே அங்கோர் தனியிடத்தில் முனியுருக்கொண்டு தங்கியிருந்தான். அவ்விருவருங் கலையும் பிணையுமாய்ச் சலந்து துய்த்தார். பாண்டு கண்டான். பகழி தூவினான். மானுருவானவன் மயங்கி வீழ்ந்தான். தேறி நொந்தான். மாறி மன்னனைச் சீறி நோக்கினான். என்போல் நீயும் இறப்பாய் என்றான். கேட்டான் மன்னன். வாட்டமீக்கூர்ந்தான். நிகழ்ந்ததற்கிரங்கினான். நினைந்து நீங்கினான். கலவியின்பத்தைக் கருதாதிருந்தான். வசந்த காலமொன்றில் ஒரு பனிமலர்ச் சோலையில் குந்தியுடனே கூடியுலாவினான். முயங்கியின்புற மயங்கி விரும்பினான். பெற்ற சாபத்தை முற்றவும் மறந்தான். முயங்கித் துய்த்தான். உடனே மயங்கிச் சோர்ந்தான். மன்னுயிர் தீர்ந்தான். ஒருவன் தீப்பால பிறருக்குச் செய்யின் அஃது அவன்பாலே வருமென்பதை உலகம் இவன்பால் ஓர்ந்தது. (இது பாரதத்தில் உணரப்படும்.)

பொன்னங் கழலா னெதிரவ்விடைப் போகம்வேட்டு
மன்னுங் கலையும் பிணைமானும் மகிழ்ச்சிகூர
மின்னுங் கணையா லிவனெய்திட வீழ்ந்தபோதின்
முன்னின்ற தந்த வுயிர்வந்தோர் முனிவனாகி. (1)

நாரிக் கொருகூ றானார்முத னல்கவெய்த
வேரிக் கணையான் மிகநொந்துழி வேடமாறிப்
பூரித்த காம நலமெய்து பொழுது நின்னைச்
சோரிக் கணையா லறையுண்டுயிர் சோர்ந்துவீழ்ந்தேன். (2)

என்போல இன்பத் திடைநீயும் இறந்திடென்று
அன்போ டிறந்தான் முதற்கிங்கம னாணம்பேரான்
தன்போன் மகிழ்நனுடனே செந்தழலி னெய்திப்
பின் போயினள் மெய்ப்பிணையான வப்பேதைதானும் (3)

(சம்பவ சருக்கம்)

செய்த தீமையே ஒருவனைச் சென்று வருத்தும் என்பது இதனால் கூறப்பட்டது.

---

207 கொன்றான்முன் சங்கமனைக் கோவலனாய் வந்தபின்னும்
குன்றியேன் மாய்ந்தான் குமரேசா—என்றும்
எனைப்பகை யுற்றாரு முய்வர் வினைப்பகை
வீயாது பின்சென் றடும். (எ)

இ—ள்.

குமரேசா! சங்கமனைக் கொன்ற பரதன் கோவலனாய்ப் பிறந்த பின்பும் ஏன் அவ்வினை சென்று அவனைக் கொன்றது எனின், எனைப்பகை உற்றாரும் உய்வர் வினைப்பகை வீயாது பின் சென்று அடும் என்க. உய்வர்—தப்புவர்.

வீயாது பின்சென்று அடும்—நீங்காமல் பின் தொடர்ந்து கொல்லும். வீயாது என்பது வீ என்னும் வினையடியாப் பிறந்த எதிர்மறை வினையெச்சம்.

வீ என்பது மலர் பறவை நீக்கம் என்பனவற்றை யுணர்த்தும்.

எவ்வளவு பெரிய பகையை யுற்றவரும் ஒருவகையில் தப்பிப் பிழைப்பர், வினைப்பகை விடாமல் பின்தொடர்ந்து கொல்லும் என்பதாம்.

புறப்பகைக்குத் தப்பினும் தப்பலாம் வினைப்பகைக்குத் தப்பமுடியாதென்பது கருத்து.

புறப்பகைவர் எனைத் துணையராயினும் ஒருவன் அவர்க்கு அஞ்சாமல் இருக்கலாம்; வினைப்பகைக்கு அஞ்சவேண்டுமென்பது குறிப்பு.

பிறர்பால் ஒருவன் தீவினைசெய்யின் அஃது அவன்பாலே மீண்டுவந்து அவனை வருத்துமென்று மேற்கூறியதை நோக்கி அவன் இறந்துபடின் அஃது என்செய்யும் எனின், சென்றவிடமெல்லாம் பின்தொடர்ந்து சென்று அஃது அவனைக்கொன்றுவிடும் என்று இதில் நன்குணர்த்தினார் என்க.

இறப்பினும், ஒருவனை வினைப்பகை விடாமல் பின்சென்று கொல்லும் என்பது இதில் கூறப்பட்டது. இவ்வுண்மை பரதன்பால் தேறப்படும்.

கதை.

பரதன் என்பவன் கலிங்கநாட்டிலிருந்த சிங்கபுரம் என்னும் நகரத்தில் பிறந்தவன். அதிலிருந்து அரசுபுரிந்த வசு என்பவனுக்கு நண்பன். அக்காலத்தில் கபிலபுரத்தில் குமரன் எனப்பெயரிய அரசன் ஒருவன் இருந்தான். அவ்வசுவேந்தனுக்கும் இக்குமர மன்னனுக்கும் கொடும் பகை மூண்டது. ஒருவரையொருவர் வெல்லக்கருதி யிவ்விருவரும் இருந்தார். இருந்துவருங்கால் கபிலபுரத்திலிருந்து வணிகனொருவன் சிங்கபுரத்துக்கு வந்தான். அவன் பெயர் சங்கமன். பண்டம்பலகொண்டு அங்குப் பணிவுடன் விற்றான். அவனைப் பரதன் கண்டான். கேடு சூழ்ந்தான். அரசன்பால் சென்றான். குமரன் என்னும் நமது பகைவனிடமிருந்து சங்கமன் என்றொரு ஒற்றன் இங்கு வந்துள்ளான். விலைசெய்யும் வணிகன்போல் வேவு பார்க்கின்றான். அவனைக் கொலைசெய்ய வேண்டுமென்று பரதன் கொடுமொழி கூறினான். வசுவும் இசைந்தான். ஒன்றும் அறியாச் சங்கமனைக் கொன்று தொலைத்தார்.

அவன் மனைவியாகிய நீலி யென்பவள் தலைவிரி கோலமாய் அங்கு வந்தாள். தன் தலைவனுக்குக் கொலைவினை சூழ்ந்தோன் அவ்வகையே கொலையுண்டு தொலைக, அவன்மனைவியும் தன்போல் துயருழந்து கெடுக என்று சபித்தாள். தலைவன் உடலைத் தழுவித் தன்னுயிர் நீத்தாள். அவ்வகையே பரதன் கோவலனாய்ப்பிறந்து மதுரையில் கொலையுண்டிறந்தான். வினைப்பகை பின்சென்று கொல்லுமென்பது இவன்பால் விளங்கி நின்றது.

இதன் விரிவு மணிமேகலையில் காணப்படும்)

ஒருவன் புக்குழியெல்லாம் தீவினைபுகுந்து கொல்லும் என்பது இதனால் கூறப்பட்டது.

208 பண்டுயர்ந்த காளமுனி பாண்டவர்பாற் செய்தீதால்
கொண்டானென் கேடு குமரேசா—மண்டிநின்ற
தீயவை செய்தார் கெடுதல் நிழற்றன்னை
வீயா தடியுறைந் தற்று. (அ)

இ—ள்.

குமரேசா! பாண்டவரிடம் காளமுனி செய்த தீமையானது அவனை என்வந்து கெடுத்ததெனின், தீயவைசெய்தார் கெடுதல் நிழல் தன்னை வீயாது அடியுறைந்தற்று என்க.

நிழல் தன்னை வீயாது—ஒருவன் நிழல் அவனை விடாது தொடர்ந்து வந்து. உறைந்து அற்று—தங்கியதுபோலும்.

தீவினைகளைச்செய்தவர் கெடுவது எதுபோல்வது எனின், ஒருவன் நிழல் அவனை விடாது தொடர்ந்துவந்து அவன் அடியின்கண் அடங்குவது போலும் என்பதாம்.

நிழல் உடலைத் தொடர்தல்போல் வினை உயிரைத்தொடரும் என்பது குறிப்பு.

ஒருவன் நிழல் வெயிலொளியால் நெடுந்தூரம் நீண்டிருப்பினும் அவன் சென்றவிடமெல்லாம் தொடர்ந்து சென்று முடிவில் அவனடியின் கண்ணே தங்கிநிற்கும்; அதுபோல் ஒருவன் வினை, காலபேதத்தால் மிக அகன்றிருப்பினும் அவன் புக்குழியெல்லாம் புகுந்து இறுதியில் தப்பாமல் அவனைப்பற்றிக் கொல்லும் என்பதாம். அருவமான வினை உயிரைப்பற்றி வருத்தும் உண்மையை உணர்த்துதற்கு உருவமான நிழலை ஒப்புக்காட்டிய நுண்மை யீண்டுணரத்தக்கது.

வினைப்பகை வீயாது பின் சென்று அடுமென்று மேற்கூறியதை விளக்குதற்கு இவ்வுவமை கூறியதென்க.

ஒருவன் செய்வினையானது அவன் மெய்ந் நிழல்போல் விடாமல் தொடர்ந்து வந்து அவனைப் பற்றிக்கொல்லும் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இது காளமுனியால் காணப்படும்.

கதை.

காளமுனி என்பவர் அக்கினிபுரியை யடுத்திருந்த ஓர் வனத்திலிருந்தவர். திருதராட்டிரனுக்குச் சிறந்த நண்பினர். தவம் புரிந்திருந்தும் அவம்பல புரிந்தவர். இவரை ஒருநாள் துரியோதனன் அழைத்தான். வனம் புகுந்திருந்த பாண்டவர் ஈண்டு மீண்டு வந்துவிடாமல் அங்கு வைத்தே கொல்லவேண்டுமென்று இவரை மெல்ல வேண்டினன். முதலில் மறுத்தார். பின் இசைந்தார். எழுந்துசென்றார். தனியிடம் ஒன்றில் தங்கினார். மாரணவேள்வி ஒன்று செய்தார். ஆரணமுறைப்படி அதிலிருந்து ஒரு பூதம் எழுந்தது. ஐவரைக் கொன்றுவா என்று இவர் அதன்பால் உரைத்தார். வெகுண்டு பூதம் விரைந்து சென்றது. மாலின் அருளால் நால்வர் மாண்டார். தருமர் ஒருவரே அங்குத் தனித்திருந்தார். பூதங்கண்டது. செத்தவர்மீதோ நம்மைச்செய்தவன் ஏவினான். நன்று நன்றென நகைத்து வெறுத்தது. சினந்துமீண்டது. விரைந்து புகுந்தது. அவன் மெய்யையே சிதைத்து

ஒய்யென மறைந்தது. சித்திசெய்த முனிவன் செத்துத்தீர்ந்தான். ஒருவன் செய்த தீவினை அவன் மெய்நிழல்போல் மீண்டு வந்து அவனையேபற்றுமென்பதை உலகம் இவன்பாலுணர்ந்தது.

(இதன் விரிவைப் பாரதத்தில் காண்க.)

செய்தவனையே தீவினை சேர்ந்து கொல்லுமென்பது இதனால் கூறப்பட்டது.

209 மானாகித் தீவினைசெய் மாரீசன் என்மாய்ந்தான்
கோனால் வருந்திக் குமரேசா — ஊறுபல்
தன்னைத்தான் காதல னாயின் எனைத்தொன்றும்
துன்னற்க தீவினைப் பால். (௯)

குமரேசா! மானாகித் தீவினை செய்த மாரீசன் ஏன் கோனால் வருந்தி மாய்ந்தான் எனின், தன்னைத்தான் காதலன் ஆயின் தீவினைப்பால் எனைத்தொன்றும் துன்னற்க என்க.

துன்னல் — செய்தல்.

எனைத்து ஒன்றும் துன்னற்க — எத்துணை சிறிய தீமையுஞ் செய்யா தொழிக.

தனக்குத் துன்பமொன்றும் இல்லாதிருக்கும்படி ஒருவன் விரும்புவனாயின் பிறரிடம் அவன் யாதொரு தீமையும் செய்யலாகாதென்பதாம்.

தனக்கு இன்பம் வேண்டுபவன் பிறர்க்குத் துன்பம் செய்யாமல் இருக்கவேண்டுமென்பது கருத்து.

பிறர்க்குத் தீது செய்யின் தனக்கே அஃது உயிர்க்கேடு தரும் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இது மாரீசன்பால் உணரப்படும்.

கதை.

மாரீசன் என்பவன் தாடகையின் புதல்வன். தந்தை பெயர் சுந்தன். இயக்கனான இவன் அகத்தியர் சாபத்தால் அரக்கனாயினான். மா தவஞ் செய்வோர்க்கு ஏதமே செய்தான். விசுவாமித்திரரது வேள்வியைக் காக்கும்நாள் இராகவன் ஒரு கணையினை யேவி இவனைக் கடலிடை வீழ்த்தினார். வருந்தியெழுந்தான். அவ்வீரன் வலிமையைத் தேறி அஞ்சினான். அசனைத் தீதும் அடங்கினான். ஓர் வனத்திற் புகுந்து தனித்திருந்து மனத்தை யடக்கினான். இங்ஙனமிருப்ப சீதைபால் காதல் கொண்ட இராவணன் இவனிடம் வந்தான். மானாகிச் சென்று இராமனை வஞ்சிக்கும்படி இவனை வேண்டினான். முதலில் இவன் மறுத்தான். பின் இசைந்து சென்றான். பொன்மானானான். சீதை முன்னே போனான். சீதை மயங்கித் தன்னாயகனைத் தொழுதாள். பிடித்துத் தா என்றாள். மாயமான நிலைமையை அந்தூயவன் தெரிந்திலன். பிடிக்கக் கருதி யடுத்துச் சென்றான். அது கடுத்து விரைந்தது. நெடுந்தூரம் போனபின் அதன் கொடு நிலைமை தெளிந்தான். ஓர் அம்பை யெய்தினான். அவன் வெம்பி வீழ்ந்து வெந்துயிர் நீத்தான். துன்னிய தீவினையால் ஒருவன் மன்னுயிர் துன்புறும் என்பதை உலகம் இவன்பாலோர்ந்தது.

(இதன் விரிவை இராமாயணத்தில் காண்க)

தனக்கு நன்மை நாடுவோன் பிறர்க்குத் தீமை செய்யலாகா தென்பது இதனால் கூறப்பட்டது.

---

210. பண்டு துயரம் பலசெய்தும் பொன்னவன்சேய்
கொண்டுளன்கே டென்னே குமரேசா—கண்டு
அருங்கேடனென் பதறிக மருங்கோடித்
தீவினை செய்யான் எனின். (௰)

இ—ள்.

குமரேசா! பிறர் துயர் பல செய்தும் பொன்னவன்சேய்

கேடு சிறிதும் வந்து அடைதலில்லானாக, மருங்கோடித் தீவினை செய்யான் எனின், அருங்கேடன் என்பது அறிக என்க.

பொன்னவன்சேய்—பிரகலாதன். பொன்னவன்—இரணியன். மருங்கு—பக்கம்; அது நேர்வழியல்லாத கொடுநெறியை யிங்கே குறித்து நின்றது.

மருங்கோடி—தீநெறிக்கண் விரைந்து சென்று. அருங்கேடன்—அரிதாகிய கேட்டையுடையவன். அருமை, இங்கே இன்மையைக் குறித்து நின்றது. கேடில்லாதவன் என்க.

பொறிநெறிக்கட் சென்று தீவினைகள் செய்யாதவனைக் கேடில்லாதவன் என்று அறியவேண்டுமென்பதாம்.

தீவினை செய்யாத ஒருவனை அடைதற்குரிய கேடு யாதொன்றும் இல்லையென்பது கருத்து.

நெறி நீங்கித் தீவினைகளைச் செய்யும் அறிவிலிகளையே எல்லாக் கேடுகளும் எளிதிலடையுமென்பது குறிப்பு.

நெறியே சென்று நல்வினைபுரியும் அறிவுடையாரைக் கேடுகளடையா என்பது இதில் உணர்த்தப்பட்டது. இது பிரகலாதன் பால் உணரப்படும்.

கதை.

இரணியன் புதல்வனாகிய பிரகலாதன் நெறி நின்றொழுகிய அறிவினையுடையவன். அவன் இரணியாய நமவென்று சொல்லவில்லையென்று வெகுண்டு அரசனேவியபடியே அசுரர் பலர் அவனுக்கு அல்லல் செய்தார். கொல்லத்துணிந்து எல்லாம்புரிந்தார். பாம்புகளைவிடுத்துத் தீண்டும்படி செய்தார். மலைமேலேற்றித் தலைகீழுருட்டினார். நஞ்சையுள்ளே நடுங்க வூட்டினார். தண்டங்கள் கொண்டு தலைமேலடித்தார். வேலால் எறிந்தார். வாளால் வீசினார். தீயைவளர்த்துச் சேரத்தள்ளினார். கல்லுடன் கட்டிக் கடலில் இட்டார். அவ்வெல்லாவற்றினும் பிரகலாதன் யாதொரு கேடும் இல்லாதிருந்தான். பெருமானருளால் பெருமகிழ்வுற்

ருன். பருககோடித் தீவினை செய்யாதவனுக்கு உறுங்கேடு ஒன்றுமில்லை யென்பதை உலகம் இவன்பாலுணர்ந்தது.

(இதன் விரிவை இரணியன் கதையிலுணர்க)

தீவினை செய்யாதவனுக்குக் கேடொன்றுமில்லை யென்பது இதனால் கூறப்பட்டது.

(இவ்வதிகாரத்தின் தொகைப்பொருள்.)

தீவினையைச் செய்தற்குத் தீயார் அஞ்சார். தூயர் அஞ்சுவர். தீவினை தீயினுங்கொடியது. அதனைச் செய்யாது விடுதலே தலையாய அறிவு. பிறனைக் கெடச் சூழ்வோன் பெருங்கேடடைவான். வறுமையுறினும் தீமை செய்யலாகாது. தீவினை செய்யான் நோவினை யெய்தான். வினைபகை பின்சென்று விடாமல் கொல்லும். அது நிழலெனத் தொடர்ந்து அழலென வருத்தும். தனக்கு இன்பம் விரும்பினவன் பிறர்க்குத் துன்பம் புரியலாகாது. தீவினை செய்யாதவனுக்குக் கேடொன்றுமில்லை.

உக-வது தீவினையச்சம் முற்றிற்று.

உஉ-ம் அதிகாரம் ஒப்புரவறிதல்.

அஃதாவது உலக இயல்புக்கும் தன் இயல்புக்கும் ஒப்புறும் நலங்களை உய்த்துணர்ந்து உதவிசெய்தல். உரவு—நன்மை. மேல் தீவினையைச் செய்யற்க என்றார். இதில் நல்வினையைச் செய்க என்கின்றார். ஆகலின் அதன்பின் இது வைக்கப்பட்டது.

211. வேறொன்றும் வேண்டாமல் மெய்யுதவி செய்துநள்ளி
கூறுதேன் சென்றான் குமரேசா—வேறாகக்
கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ வுலகு. (க)

இ—ள்.

குபேரசா! நள்ளி என்பவன் வேறொன்றையும் வேண்டாமல் பேருதவி செய்து தன் பெயரையுங் கூறாமல் ஏன் சென்றான் எனின், உலகு மாரிமாட்டு என் ஆற்றும் அதுபோல் கடப்பாடும் கைம்மாறு வேண்டாதென்க.

உலகம் என்றது உயிர்களை. கடப்பாடு—ஒப்புரவு. அறிவுடையவரால் கடனாகக் கருதிச் செய்யப்படுவது என்க.

கைமாறு—பதிலுதவி. பிறர்க்குதவியது தன் கைக்கு மாறுவது என்னும் ஏதுவான் வந்தது.

உலகம் மழையினிடத்து என்ன கைமாறு செய்யாநின்றது அதுபோல ஒப்புரவுகளும் கைமாறு நோக்கா என்பதாம்.

தமக்கு நீர் உதவுகின்ற மேகங்கட்கு உயிர்கள் யாதோர் உதவியும் செய்யாவிடினும் அதனை அவை இடையறாது உதவிவருதல் போல் உபகாரிகளும் பயன் கருதாமல் யாவர்க்கும் யாண்டும் உதவிசெய்வர் என்பதாம்.

மேகம்போல் நல்லோர் அருள்கூர்ந்து எல்லார்க்கும் உதவி செய்வர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இது நள்ளியால் உணரப்படும்.

கதை.

நள்ளி என்பவன் கடைஎழு வள்ளல்களுள் ஒருவன். யாவர்மாட்டும் பேரருளுடையவன். இல்லையென்னாமல் ஈந்துமகிழ்ந்தவன். மலைவளம் வாய்ந்த ஒரு சிறு நிலப்பகுதியை ஆண்ட குறுநிலமன்னன். தமனியம் என்னும் நகரிலிருந்து இவன் அரசுபுரிந்தான். பெற்றோர் பிள்ளைகளைப் போற்றுவதுபோல் இவன் எல்லாரையும் பேணினான். இவனது உயர் குணங்களைக்கண்ட அனைவரும் இவன்பாற் பெருநண்பு கொண்டார். நள்ளியென்னும் பெயர்க்கு நற்பொருள் காட்டினான். பரணர் என்னும் புலவரோ

ருவர் பல இடங்களுக்குஞ்சென்று வருந்தி இவனது நகரையடுத்திருந்த ஒரு காட்டில்வந்து களைத்திருந்தார். அங்கு இவன் இயல்பாகச் சென்றான். அவரைக்கண்டான். வறுமையால் வாடிய அவரது மேனியை நோக்கினான். பெரிதும் இரங்கினான். சிறந்த உணவைக் கொணர்ந்து உவந்து ஊட்டினான். தன் கழுத்தில் அணிந்த சிறந்த முத்தாரத்தையும் கையில்விளங்கிய உயர்ந்த கடகத்தையும் அவருக்கு முறையே பூட்டினான். ஒரு பெருந்தொகைப் பொருளை அவர் இருந்த ஊருக்கனுப்பினான். அவனை பெருஞ்செல்வனாக்கித் தன் பெயர் ஊர் ஒன்றுஞ் சொல்லாமல் நீங்கினான். புலவர் பின் தெரிந்தார். கைம்மாறு கருதாமல் கனிந்துதவிய அவனது வள்ளற்குணத்தை மனங்குழைந்து வாழ்த்தினார். பாரிருக்கு மறவாமல் தன்னுயிருள்ளளவும் அவன் புரிந்தவுதவியை உன்னியுன்னி மகிழ்ந்தார். கைம்மாறு கருதாமல் மேலோர் உதவுவர் என்பதை நள்ளியால் உணர்ந்து அவர் நன்றி புரிந்தார்.

(இஃது அகநானூற்றில் அறியப்படும்)

பிறர்க்குதவி செய்தலே பெரியோர் கடமை என்பது இதனால் கூறப்பட்டது.

212. ஈட்டிவைத்த செல்வமெல்லாம் ஏற்பார்க்குந் தக்கார்க்
ஊட்டினனேன் பாரி குமரேசா—நாட்டமுடன் [கும்
தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு. (உ)

—பா.

குமரேசா! ஈட்டிவைத்த செல்வமெல்லாம் ஏற்பார்க்கும் தக்கார்க்கும் ஏன் பாரி உதவினான் எனின், தாள் ஆற்றித் தந்த பொருள் எல்லாம் தக்கார்க்கு வேளாண்மை செய்தற் பொருட்டேயாம் என்க. தாள்—முயற்சி. வேளாண்மை—உபகாரம்.

தாள் ஆற்றி—முயற்சியைச் செய்து.

தந்த பொருள் எல்லாம்—தொகுத்த பொருள் முழுதும்.

முயற்சியைச் செய்து தொகுத்த பொருள் முழுதும் தகுதியுடையவர்க்காயின் பிறர்க்கு உதவும் பொருட்டேயாம் என்பதாம். ஆயின் என்பது வருவிக்கப்பட்டது.

தகவிலார் தாமே உண்டுசெருக்கண்டு களிப்பர். தக்கார் பிறர்க்குதவி செய்து பேரின்புறுவர் என்க.

ஒருவன் முயன்று தொகுத்த பொருள் முழுதும் தகுதியுடையவர்க்கு உதவி செய்யும்பொருட்டேயாம் எனவும் இது பொருள்படும்.

தக்கோர் தம்பொருள் முழுமையும் பிறர்க்குதவுவர் என்பது இதினுணர்த்தப்பட்டது. இது பாரிபால் உணரப்படும்.

கதை.

பாரி என்பவன் வேளிர் குலத் தலைவன். மாரிபோல் வாரி வாரி வரையாது கொடுத்த வள்ளல். முந்நூறு ஊர்களையுடைய ஒரு சிறு நிலப் பகுதியை உரிமையாகவுடையவன். இம்மன்னன் பறம்பு என்னும் மலைச்சாரலில் விளங்கியிருந்த அருளகமென்னும் திருநகரிலிருந்து அரசு புரிந்தான். பிறவுயிர்கள் மாட்டுப் பேரருளுடையவன். மலர்தலையுலகினுக்கு இவன் உயிரென இருந்தான். தான் பெற்ற பொருள் முழுதும் பிறருக்கீந்து உதவினான். இல்லையென்னாமல் ஈந்துவந்த வள்ளற் குணத்தால் இவன் புகழ் உலகெங்கும் பரந்தது. அதனால் சேரசோழ பாண்டியர் என்னும் முடியுடை வேந்தராகிய மூவரும் இவன்மேல் பொறாமைகொண்டார். வெல்லக் கருதினார். படையுடன் திரண்டு இவன் நகர்மேல் வந்தார். அரண்வலியால் பெருஞ் சிறப்புடைய அதனை முற்றுகை செய்தார். பாரியும் அஞ்சா நெஞ்சுடன் அவரோடெதிர்த்தான். வெற்றியை ஒருவரும் முற்றவுங் கண்டிலர். பருவங்கள் பல கழிந்தன. அக்காலத்தில் பாரியின் உயிர்த்துணைவராயிருந்த கபிலர் என்னும் புலவர் பெருமான் வெளியே வந்து அம்மூவரையும் நோக்கினார். அரசீர், "எமது மன்னன் தொன்

டபொருளையும் ஆண்ட ஊர்களையும் இரவலர்க்குக் கொடுத்து விட்டு இதுபொழுது தனியே யிருக்கிறான். பறம்பும் இருக்கிறது. நானும் இருக்கின்றேன். ஆயினும் நீவிர் அவனைப் பொருது வெல்ல முடியாது. எம்மைக் கைக்கொள்ள விரும்பின் நீவிரும் இரவலராய் வரின் விரைவிற் பெறலாம். எம் இறைவன் மாறாத தருளுவன். என்று புகன்றார்.

கடந்தடு தானை மூவிருங் கூடி
உடன்றனி ராயினும் பறம்புகொளற் கரிதே
முந்நூ றூர்த்தே தண்பறம்பு நன்னாடு
முந்நூ றூரும் பரிசிலர் பெற்றனர்
யாமும் பாரியும் உளமே
குன்றும் உண்டுநீர் பாடினிர் செலினே. (கபிலர்)

இதனால் பாரியினது பெருவீரமும் வள்ளற்குணமும் தாளாற்றித் தந்ததை வேளாண்மை செய்தமையும் இனிது புலனாம்.

மேலோர் பொருளெல்லாம் பிறர்க்கே உதவுவர் என்பது இதனால் கூறப்பட்டது.

213. தென்னுபுகழ் ஆபுத் திரனொப் புரவொன்றே
கொள்ளமகிழ்ந் தானென் குமரேசா—வள்ளாத
புத்தே ளுலகத்தும் ஈண்டும் பெறலரிதே
ஒப்புரவின் நல்ல பிற. (௩)

இ—ள்.

குமரேசா! ஆபுத்திரன் ஒப்புரவு ஒன்றே நன்று என்று ஏன் கொண்டான் எனின், புத்தேள் உலகத்தும் ஈண்டும் ஒப்புரவின் நல்லபிற பெறல் அரிது என்க.

புத்தேள் உலகம்—தேவருலகம்.

ஒப்புரவின் நல்லபிற—ஒப்புரவுபோல நல்ல செயல்கள்பிற,

வானுலகத்தும் இந்நிலவுலகத்தும் ஒப்புரவுபோல நல்ல செயல்கள் பிற பெறுதல் அரிதென்பதாம்.

ஒப்புரவுக்கு ஒப்பான நன்மை யாண்டும் இல்லை என்றபடி; ஒப்பிலதெனவே உயர்வும் இல்லையாயிற்று.

இருவேறுலகினும் பெறுதற்கரிய ஒப்புரவைத் தமக்கு உரிமையாகப் பெறுவோரே பெரியோர் என்பது கருத்து.

பிறர்க்குதவி செய்தல் என்னும் பெருநலமுடையவர் அதனை விடுத்து வேறு எதனையும் பெறுவதற்கு விரும்பார் என்பது குறிப்பு. இவ்வுண்மை ஆபுத்திரன்பால் அறியப்படும்.

கதை.

ஆபுத்திரன் என்பவன் சாலி என்னும் ஒருத்தி புதல்வன். அருள் நிறைந்த நெஞ்சினன் பிறவுயிர்கட்கு இதம் புரிதலையே பெரும்பயமாக எண்ணினான். இவனது உண்மை நலத்தைக் கண்டு மகிழ்ந்த சிந்தாதேவி யென்னும் ஒரு தேவி அமுதசுரபி என்னும் ஓர் அற்புதபாத்திரத்தை இவனுக்கு உரிமையாகக் கொடுத்தாள். அதனால் ஆருயிர்கட்கு இவன் பேருதவி செய்தான். பறவைகளுக்கும் விலங்கினங்களுக்குங்கூட இவன் பரிந்துணவளித்தான். இவன் ஒப்புரவு செய்தொழுகும் செயற்பாட்டை இந்திரன் உணர்ந்தான். இவன்பால் வந்தான். உனது உதவியின் நலத்தை உவந்தேன் என்னுடன் வா என்றான். பொன்னுலகமாகிய உன்னுலகத்தில் எனது உதவியைப் பெறுதற்கு உரியாரில்லை. அஃது ஏற்பாரில்லாத இயல்பினையுடையது அதனால் அதனை யெய்தேன். ஒப்புரவு செய்தொழுகுதற்குரிய இப்புவியே யான் இன்புறத்தக்கதென இசைத்தான். இந்திரன் நாணிவிட்டான். (இதன் விரிவை மணிமேகலையிற் காண்க)

பொலம்பூங் காவின் நன்னாட் டோரும்
செய்வினை மருங்கின் எய்தல் அல்லதை
உடையோர் ஈதலும் இல்லோர் இரத்தலும்
கடவது அன்மையிற் கையற வுடைத்தே. (புறநானூறு)

ஈவாரும் கொள்வாரும் இல்லாத வானத்தே
வாழ்வாரே வன்க ணவர். (பரி-யுரை)

ஒப்புரவொன்றே ஒருவனுக்கு உயர் நலமென்பது இதனால் கூறப்பட்டது.

214. என்னேநம் வேங்கடத்தான் இன்பமுற முனைவனேன்
கொண்மை இழந்தான் குமரேசா—உன்னியே
ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும். (௪)

இ—ள்

குமரேசா! வேங்கடன் என்பான் சீரும் இன்பமும் சேரப்பெற்றான், அவனுடன் பிறந்தவன் ஏன் பழிக்கப்பட்டான் எனின், ஒத்தது அறிவான் உயிர் வாழ்வான் மற்றையான் செத்தாருள் வைக்கப்படும் என்க.

ஒத்தது என்றது ஒப்புரவை. உலகம் நல்லது என்று ஒப்பியதை என்பார் ஒத்தது என்றார்.

மற்றையான்—உலக இயற்கையையறிந்து உதவி செய்யாதவன்.

உலகத்தோடு ஒட்ட ஒழுகி உயிர்கள் இன்புறத்தக்க விதங்களை யுணர்ந்து தாமால் இயன்றவரை பிறருக்கு உதவி செய்து வாழ்பவனே உயிர் வாழ்பவனாவான், அல்லாதவன் செத்தவனோடு ஒப்பாவான் என்பதாம்.

உயிர்கள் இன்புற உதவி செய்யாதவனைச் செத்த பிணத்தோடு ஒப்பிடவேண்டுமென்பது கருத்து.

பிறர்க்குதவி செய்தலே ஒருவன் பிறவிக்குப் பயனாதலால் உபகாரியை உயிர் வாழ்வான் என்றும் உபகாரமில்லாதவன் உருவுடன் இருப்பினும் உயிரின் குணமில்லையாதலால் அவனை இறந்தவனை எனவுட னாக்கவேண்டும் என்றபடி.

ஒத்ததையறிபவனே உயிர் வாழ்பவனாவன் அல்லாதவன் செத்தவனே என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை திருவேங்கடனிடமும் அவன் முன்னோனிடமும் முறையே உணரப்படும்.

கதை.

திருவேங்கடன் என்பவன் வட நாட்டிலே நேரி என்னும் ஊரிலே விளங்கியிருந்த ஒரு பெருஞ்செல்வன். யாவரிடமும் பேரன்புடையவன். இனிய சொல்லினன். சொல்லாலும் செயலாலும் எல்லார்க்கும் இதமே செய்பவன். ஒத்ததறிந்தொழுகும் பேருபகாரியாகிய இவனுக்கு மூத்தவனாய்க் கண்ணுக்கினியான் எனும் பெயரினையுடைய அண்ணன் ஒருவன் இருந்தான். அவன் வன்கண்ணன் ஒருவர்க்கும் ஒன்றும் உதவாதவன். இரட்டையர் என்னும் புலவர் இருவர் அவன் பாலில் வந்தார். தம்பி மகிழ்ந்து புலவர்க்கு வேண்டியவற்றை விரும்பித் தந்தான். அவன் தகித்தான். உடனே தம்பியைப் புகழ்ந்தும் தமையனை இகழ்ந்தும் புலவரிருவரும் விளைவிடையாகப் பாவொன்று பாடினர். இளையவனாயிருந்தும் ஒப்புரவொழுகியதால் திருவேங்கடன் உயர்ந்தின்புற்றான். முன்னவனாயிருந்தும் உதவியின்மையால் கண்ணுக்கினியான் கருதலுக்கு இனியாதவனாய்ப் பழியுற்றிழிந்தான். ஒத்ததறிந்தான் உயர்ந்தான். அறியாதான் செத்தான் என்பதை உலகம் முறையே இவர்பால் ஓர்ந்தது.

தேன்பொழிந்த வாயான் திருவேங் கடத்துடனே
ஏன் பிறந்தான் கண்ணுக் கினியானை—வான்சிறந்த
சீதேவி யாருடனே செய்யதிருப் பாற்கடலில்
மூதேவி யேன்பிறந்தாள் முன். (இரட்டையர்)

ஒப்புரவறியாதவன் பிணத்தோடொப்பன் என்பது இதனால் உணர்த்தப்பட்டது.

215. வள்ளலிரா மன்றிருவால் வையமெல்லாம் பேருவகை
கொள்ளநின்ற தென்னை குருபரா—வொளாத
ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்
பேரறி வாளன் திரு. (ரு

–ள்

குமரேசா! இராமன் திருவெய்த உலகமெல்லாம் ஏன் பேருவகை யெய்தியது எனின், உலகு அவாவும் பேரறிவாளன் திரு ஊருணி நீர் நிறைந்ததையொக்கும் என்க.

ஊருணி—குளம்; இஃது ஏதுப் பெயர். ஊரில் வாழ்வார் நீர் உண்ணுமிடம் என்பதாம். நிறைதல் என்னும் நீரின் தொழில் அது நிலைத்து நிற்கும் குளத்தின்மேல் நின்றது.

உலகு அவாம்—உலக நடையை விரும்பிச் செய்யும். இதில் அவாவும் என்னும் எச்சம் அவாம் என ஈற்றுயிர்மெய் கெட்டு நின்றது.

உயிர்கள் இன்புறத்தக்க விதங்களை யினிதுணர்ந்து உதவி செய்யும் பேரறிவுடையவனது செல்வம் ஊருணியில் நீர் நிறைந்ததையொக்கும் என்பதாம்.

ஓர் ஊருணியில் நிறைந்த நீர் அவ்வூரிலுள்ள எல்லாராலும் உண்ணப்பட்டு அவரனைவர்க்கும் ஒப்ப நின்று தப்பாமல் இன்பம் விளைக்கல் போல் ஒப்புரவறியும் உபகாரியினது செல்வம் உலகமெல்லாம் உவந்து துய்க்கும்படி அமைந்து நிற்கும் என்பதாம்.

உலகமுழுவதுக்கும் பயன்படுகின்ற உபகாரியினது செல்வத்தை ஓர் ஊர்க்கு மாத்திரம் பயன்படும் குளத்து நீரோடு ஒப்புமை கூறியது அதனது ஒண்மையும் தண்மையும் எண்மையும் கருதி யென்க.

ஊருணி நீரும் பேரறிவாளனது திருவும் தடையொன்றின்றி நெடிது நின்று எல்லார்க்கும் இன்பந்தரும் என்பது கருத்து.

உபகாரியானவன் செல்வமெய்தினால் உலகமெல்லாம் உவகையெய்துமென்பது குறிப்பு. இவ்வுண்மை இராமன்பால் காணப்படும்.

கதை.

தசரத மன்னன் தனது தலைமைப் புதல்வனை இராமனுக்குத் திருமுடி சூட்டக் கருதித் தன் கருத்தை அமைச்சர்க

னுக்கு அறிவித்து நாடெங்கும் அறியும்படி செய்தான். இராமன் அரசதிருவை யெய்தவருகின்றான் என்பதைக் கேட்டவுடனே யெல்லாரும் அளவிலுவகை யெய்தி ஆர்வமீக்கூர்ந்தனர். ஒவ்வொருவரும் தத்தம் உச்சிமேல் அம்மணிமகுடத்தை வைத்ததாகக் கருதிச் சிந்தை களித்தார். ஓர் ஊருணி நீர் நிறைவதைக் கண்டு அவ்வூரிலுள்ளோர் உளமகிழ்வதுபோல இராமன் திருவெய்துகின்றான் என்பதையறிந்தவுடனே எல்லா உயிர்களும் ஒருங்கே இன்புற்றன. ஊருணி நீர்போல் பேரறிவாளன் திரு எல்லார்க்கும் நெடிது நின்று இனிதுதவுமென்பதை உலகம் இராமன்பால் உணர்ந்தது, இதன் விரிவை இராமாயணத்திற் காண்க.

இறைவன் சொல்லெனும் இன்னறவு அருந்தினர் யாரும்
முறையினின்றிலர் முகந்துறு களியிடை மூழ்கி
நிறையு நெஞ்சுடை யுவகைபோய் மயிர்வழி நிமிர
உறையும் விண்ணகம் உடலொடு மெய்தினர் ஒத்தார். (1)

ஒத்த சிந்தையர் உவகையர் ஒருவர்க்கங் கொருவர்
தத்தமக் குற்ற அரசெனத் தழைக்கின்ற மனத்தர்
முத்த வெண்குடை மன்னனை முறைமுறை தொழுதார்
அத்த நன்றென அன்பினோ டறிவிப்ப தானார். (2)

ஊருணி நிறையவும் உதவு மாடுயர்
பார்கெழு பழுமரம் பழுத்தற் றாகவும்
கார்மழை பொழியவும் கழனி பாய்நதி
வார்புனல் பெருகவும் மறுக்கின் றார்கள்யார்.
(மந்திரப்படலம்.) (3)

பேரறிவாளன் செல்வம் ஊருணி நீர்போல் எல்லார்க்கும் இனிது பயன் தரும் என்பது இதனால் கூறப்பட்டது

---

216. கோட்டி முதலியார் கொண்டசெல்வம் எல்லார்க்கும்
கூட்டியதேன் இன்பம் குமரேசா—நாட்டில்
பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கட் படின். (௬)

இ—ள்.

குமரேசா! கோட்டி முதலியார் கொண்ட செல்வம் எல்லாருக்கும் ஏன் இன்பங் கொடுத்தது எனின், செல்வம் நயனுடையான் கண்ணே படின் அது, பயன்மரம் ஊருள்ளே பழுத்ததை யொக்கும் என்க.

ஊர் உள் என்பது உள்ளூர் என மாறி நின்றது.

பயன் மரம்—பயனுள்ள மரம்: அஃதாவது இனிய கனிகளை யுதவும் மா பலா முதலிய விழுமிய மரங்கள் என்க.

செல்வம் நயன் உடையான்கண் படின்—செல்வம் உபகாரியினிடத்துப் பொருந்துமாயின்.

உலக நடையையறிந்து உதவி செய்யும் உபகாரியிடத்துச் செல்வந் தங்கி நிற்குமாயின் அது பயனுள்ள மரம் ஊர் நடுவே பழுத்து நிற்பது போலும் என்பதாம்.

ஊருள் நிற்கும கனிமரம் அங்குள்ளார் அனைவர்க்கும் எளிதில் இனிமை தருதல் போல் நயனுடையான் செல்வமும் எல்லார்க்கும் நன்கு பயன் கொடுக்குமென்பது கருத்து.

நல்லோர் செல்வம் எல்லார்க்கும் இன்பந் தரும் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை கோட்டி முதலியார்பால் காணப்படும்.

கதை.

கோட்டி முதலியார் என்பவர் தொண்டை நாட்டிலுள்ள மாகறல் என்னும் ஊரிலே பிறந்தவர். நிறைந்த செல்வமும் சிறந்த ஈகையும் ஒருங்கு வாய்ந்தவர். வறியர் வந்து வாய் திறவாமுன் அவர் குறிப்பறிந்து விரைந்து கொடுத்த பெருந் தகையாளர். இல்லையென்றிரத்தல் இளிவென்று கருதிச் சொல்ல நாணுகின்ற எல்லார்க்கும் இனிதுதவ விரும்பித் தமது வீட்டின் முன்னே வெண் மணல் பரப்பி வேண்டுவோர்க்கு வேண்டியதை யதில் விளங்க எழுதச்செய்து அதனைக் கண்டு தெளிந்து களிப்புடன் உதவினார். உலக நடையையறிந்து உதவி செய்தல் என்

னும் புண்ணியத்தைத் தினந்தோறும் மனமுவந்து செய்து வந்தமையால் புண்ணிய கோட்டி முதலியார் என்று அனைவரும் இவரைப் புகழ்ந்து போற்றினார்.

நீணிலத்திலுறும் ஏழைமாந்தர் நீவிர்வேண்டுவன இன்புறீஇ
நேரில்கேண்மினவை தருவன்யானலதும் நினைவிலுன்னுமவை நவிலகீர
நானிலென்னுடைய மனைமுன்வாயில்தனில் நன்மணல்மிகுதி கொட்டியே
நாம்பரப்பியும் இருக்கிறோமதனில் நாடிவந்தனை யெழுதுமின்
காணிலக்குடனே யருள்வமென்ன அவன்கட்டளைப்படியே திட்டமாய்க்
கையினாலெழுத உவகையோடுபொருள் கண்டளித்த பிரபு யாரெனில்
பூணிலக்குநதி வரகுலத்தில்வரு புண்ணியன்மதிகொள் கண்ணியன்
புலவர்போற்றுமா கறலின்மேவுமெழில் புண்யகோடியெனும் பூபனே. (படிக்காசுப புலவர்)

இதனால் இவர் செல்வம் கனி மரம் போல் எல்லார்க்கும் நனிபயன் பட்டமை நன்கு தெளிவாம்.

நடுவூருள் வேதிகை சுற்றுக்கோட் புக்க
படுபனை யன்னர் பலர்நச வாழ்வார்
குடிகொழுத்தக் கண்ணுங் கொடுத்துண்ணா மாக்கள்
இடுகாட்டுள் ஏற்றைப் பனை.

நயனுடையான் செல்வம் எவர்க்கும் எளிதில் பயன்படும் என்பது இதனால் கூறப்பட்டது.

217. கற்றோர் புகழ்சீதக் காதிசெல்வத் தாற்பலரேன்
குற்றமற்று வாழ்ந்தார் குமரேசா—முற்றும்
மருந்தாகித் தப்பா மரத்தற்றாற் செல்வம்
பெருந்தகை யான்கட் படின். (எ)

இ—ள்.

தூயோய்! சீதக்காதி பெற்ற செல்வத்தால் என்பலருந் நலமாய் உய்ந்து வாழ்ந்தாரெனின், பெருந்தகையான்கண் செல்வம் படின், அது மருந்தாகித் தப்பாத மரத்தை யொக்கும் என்க.

மருந்து—பிணி தீர்க்கும் பொருள். அமுதம் எனினுமாம்.

தப்பா மரம்—பயன் தருவதில் தவறாத மரம்.

மரத்தற்று—மரத்தை ஒக்கும். மரம் என்னும் பெயர் ஈறு கெட்டு இயல்பின்றி நின்று அத்துச்சாரியை பெற்று மரத்து என நின்றது. அற்பால—அந்த மரவக்கு ஒன்றன்மேற்று நிற்றல் மேவனாமாயின், நிலைமொழியீற்றில் நின்ற அகரவுயிர்முன் அத்துச்சாரியை அகரம் முதல் கெட்டது.

அத்தின் அகரம் அகர முனை இல்லை. (தொல்காப்பியம்)

பெருந்தகையான்கண் செல்வம் பொருந்துமாயின் அது, வேர் முதலிய எல்லா உறுப்புக்களும் மருந்தாகித் தவறாது பயன் தரும் மரம் போலும் என்றதாம்.

நெல்லி முருங்கை வேம்பு சுரபுன்னை முதலியன பிணி நீக்கும் மருந்து மரங்கள் என்பர்.

இலை தளிர் மலர் காய் கனி கட்டை பட்டை வேர் முதலிய எல்லா உறுப்புக்களாலும் மாண்பாகித் திருந்தி நின்று உயிர்களுக்கு உறுநோய் நீக்குந் தருவே போலப் பெருந்தகையான் திருவும் எல்லார்க்கும் பெரும்பயனைத் தரும் என்பது கருத்து.

என்றும் எல்லார்க்கும் எளிதில் பயன்படும் மருந்து மரம்போல் திருந்திய பண்புடைய பெருந்தகையான் செல்வம் பொருந்தநிற்கும் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை சீதக்காதிபால் தெளியப்படும்.

கதை.

சீதக்காதி என்பவர் நெல்லையின் எல்லையிலுள்ள காயற்பதியிலிருந்தவர். துருக்க மரபினர். சிறந்த கல்வியும் நிறைந்த

செல்வமும் பொருந்தி வாய்ந்தவர். பெருங் கொடையாளி. பிறர்க்கு உதவுதலையே தனக்கு இன்பமாகக் கருதினவர். மழைவளங் குன்றியதால் உணவுப் பொருள்கள் இன்றி உயிர்கள் வருந்திய ஒரு காலத்தில் இவர் [illegible] ஆதரித்தார். இவரதும் உபகார நலத்தைப் படிக்காசுப் புலவர்,

ஓர் தட்டிலே பொன்னும் ஓர் தட்டிலே நெல்லும் ஒக்கவிற்கும்
கார் தட்டிய பஞ்ச காலத்திலே தங்கள் காரியப்பேர்
ஆர் தட்டினுந் தட்டு வாராமலன்னதானத்துக்கு
பார் தட்டிய துரைமால் சீதக் காதி வரோதயனே.

என்று பாடிப் புகழ்ந்தார். இவர்பால் பரிசில் பெற்று மகிழ்ந்து சென்ற புலவர் பலர். உயிர் நீங்கியபின் இவ்வள்ளலது மெய்யை [illegible] சமாதிக்குழியில் வைத்து மூடிக்கொண்டிருந்த பொழுது இவரை நாடி வந்த புலவர் அந்த நிகழ்ச்சியைப் பார்த்து வாடி அவர்பால் ஓடிவந்தார். கண்ணீர் சொரிந்தார்.

தேட்டாளன் காயற்றுறை சீதக் காதி சிறந்தவரை
பாட்டான் புகழ்ந்தப்ப நாட்டு வைத்தான் தமிழ்நாவலரை
மூட்டாண்டியாக்கி அவர்கடம் வாயில் ஒருபிடிமண்
போட்டான் அவனும் ஒளித்தான் சமாதிக் குழிபுகுந்தே.

என்று மனமுருகிப் பாடினார். உடனே குழியிலிருந்து கை வெளியே நீண்டது. அதில் ஒரு விலையுயர்ந்த மோதிரம் இருந்தது. அனைவரும் வியந்தார். அதனையெடுத்துப் புலவருக்கீந்தார். அதனால் "செத்துங் கொடுத்தான் சீதக்காதி" என்று [illegible] அவரைப் போற்றியது. தான் வருந்தினும் மருந்து மரமே போல் தப்பாமல் நின்று உதவிபுரிந்த இப்பெருந்தகையினது [illegible]ற்ற ஒப்புரவாண்மையை உயர்ந்தோர் புகழ்ந்து மகிழ்ந்தார்.

ஈயாத புல்லர் இருந்தென்ன போயென்ன எட்டிமரம்
காயாதிருந்தென்ன காய்த்தும் பயனென்ன கைவிரித்துப்
போயாசகரென் றுரைப்போர்க்குச் செம்பொன் பிடிபிடியாய்
தூயாமல் ஈபவன் சீதக் காதி ஒருவனுமே.

வருந்தியும் பெருந்தகையான் பிறர்க்கு உதவிசெய்வான் என்பது இதனால் கூறப்பட்டது.

218. பண்டுசெல்வந் தேய்ந்தும் பரிந்தளிப்பேன் என்றிரகு
கொண்டெழுந்தார் என்னே குமரேசா—கொண்ட
இடனில் பருவத்தும் ஒப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சி யவர். (௮)

குமரேசா! இரகுமன்னன் பஞ்சமுற்ற காலத்தும் தன்பால் வந்து இரந்தவனுக்குப் பரிந்து கொடுப்பேன் என்று வன்துணிந்து எழுந்தான் எனின், கடன் அறி காட்சியவர் இடனில் பருவத்திலும் ஒப்புரவு செய்தற்கு ஒல்கார் என்க.

இடன்—விரிவு. அஃது இங்கே செல்வப் பெருக்கத்தைக் குறித்து நின்றது.

இடன் இல் பருவத்தும்—செல்வம் இல்லாத காலத்தும்.

அறிவுடையார் செல்வஞ் சுருங்கிய காலத்தும் ஒப்புரவு செய்தற்கு உளந்தளரார் என்பதாம்.

எது ஒழிந்தாலும் அறிவோர் ஒப்புரவு செய்தலை ஒழியார் என்பது கருத்து.

அறிவுடையான் திரு எய்தினால் அஃது ஊருணி நீர்போலவும் ஊர்நடுவே நிற்கும் கனிமரம் போலவும், எல்லா உறுப்புக்களும் பயன்படுகின்ற மருந்துமரம்போலவும் எல்லார்க்கும் எளிதில் பயன்படுமென்று மேல் மூன்றினும் முறையே கூறினார். இதில் அத்திருச் சுருங்கினும் அவர் ஒப்புரவு செய்வதில் சுருங்கார் என்றார்.

பிறர்க்கு உதவுதலையே தமக்குக் கடமையாகக் கருதிப் பேணும் பேரறிவுடையார் வறுமையுற்ற காலத்தும் தாம் செய்யத்தக்க உதவியைச் செய்தே விடுவர் என்பது கருத்து. இஃது இரகு மன்னனால் உணரப்படும்.

கதை.

இரகு என்பவன் சூரியகுலத்தில் தோன்றி விளங்கிய வீரிய வேந்தன். சீரிய குணங்களெல்லாம் சேரப்பெற்றவன். திர்க்கபாகு என்னும் அரசர்பெருமானது அருமைத்திருமகன். அறிவு, அருள் ஆண்மை அழகு அமைதி வீரம் செம்மை சீலம் முதலிய எல்லா நலங்களும் இயல்பாகவே இவன்பால் எய்தியிருந்தன. குலதிலகனாய் விளங்கியிருந்தமையால் இவன் வழித்தோன்றலாகிய இராமமூர்த்தியும் இராகவன் எனப் பெற்றார். இராகவன்—இரகுமரபில் உதித்தவன். இவனது கீர்த்தி புத்தேளுலகத்தும் புகுந்துலவியது. மகாகவியாகிய காளிதாசர் இவனது கீர்த்தியையும், மரபையும் வடமொழியில் இனிமையாக விளக்கியுள்ளார். அதனால் இரகு வம்சம் என்னும் பெயரான் வழங்கிவருகின்றது. இப்பேரறிவாளன் தான்பெற்ற செல்வமெல்லாம் பிறர்க்கே உதவி இறுதியில் வறுமையை யெய்தினான். பொற்கலத்தில் பாலடிசில் உண்ட இப் புண்ணிய வேந்தன் மட்கலங்களையே மனையில்வைத்து வழங்கிவாழ்ந்தான். அவ்வளவு வறியகாலத்தில் கௌசர் என்னும் வேதியன் ஒருவன் இவனை நாடிவந்தான். வந்தவனை உபசரித்துக் கால்கழுவும்படி மட்கலத்தில் நீரைக்கொண்டு கொடுத்தான். அரசன் வறிய நிலையை அந்தணன் உணர்ந்தான். கவன்றான். யாதுங்கூறாமல் அகன்றான். இவனை அடுத்து வினவினான். என் குருவுக்குக் காணிக்கை தரும்பொருட்டு நின்பால் பதினாலுகோடி பொன்பெற வந்தேன் நின் நிலைமையைத் தெரிந்து பேசாது நீங்குகின்றேன் என்றான். அவனைத்தடுத்து நிறுத்திக் குபேரனோடு அமர்புரிந்தேனும் அவன் விரும்பிய பொன்னைக் கொண்டுவந்து கொடுப்பேன் என்று வில்லுடன் விண்ணோங்கி எழுந்தான். இவ்வதிபதி துணிவை அந்நிதிபதி யுணர்ந்தான். நெஞ்சுருகினான். மணியும் பொன்னும் இவன் அரண்மனையில் அணி அணியாகக் குவியும்படி செய்தான் அதன்பின் ஈந்து மகிழ்ந்து இன்புற வாழ்ந்தான். இடன்இல் பருவத்தும் அறிவோர் ஒப்புரவிற்கு ஒல்கார் என்பதை உலகம் இவன்பால் உணர்ந்தது.

(இதன் விரிவை இரகுவம்சத்தில் காண்க.)

வறுமையுறினும் அறிவோர் உபகரிப்பர் என்பது இதனால் கூறப்பட்டது.

219. குன்றா இளையான்குடி மாறர் செய்நீர்மை
குன்ற நொந்தார் என்னே குமரேசா — என்றும்
நயனுடையான் நல்கூர்ந்தா னாதல் செயுநீர்மை
செய்யா தமைகலா வாறு (கூ)

இ—ள்.

குமரேசா! குன்றாத இளையான்குடி மாறர் ஏன் செய்நீர்மை குன்றியதால் நொந்தார் எனின், நயன் உடையான் நல்கூர்ந்தான் ஆதல் செயுநீர்மை செய்யாது அமைகலா வாறு என்க.

நயனுடையான் என்றது உபகாரியை.

நல்கூர்ந்தான் ஆதல்—வறியவனாதல்.

செயும் நீர—செய்யத்தக்க கடமைகள்.

அமைகலா ஆறு—அமைதியுறாத்தன்மை; அஃதாவது மனக்கவலை.

ஒப்புரவு செய்தொழுகும் அறிவுடையானுக்கு வறுமையாவது யாதெனின் தான் செய்யவேண்டுவன செய்யமுடியாதபடி துன்புறுவதே என்பதாம்.

தான் துய்க்கப் பெறுமைக்காக உபகாரி வருந்தான், பிறர்க்கு உதவி செய்ய இயலாமைக்கே வருந்துவன் என்பது கருத்து.

தனக்கு நுகர்தற்கு உரியன இல்லையே யென்று சிறியோர் கவலவர், பெரியோர் பிறர்க்கு உதவ இல்லையே யென்று வருந்துவர் என்பதாம்.

வறுமையால் தாம் வருந்துவதினும் பிறர்க்கு உதவப் பெறுமைக்கே அறிவோர் பெரிதும் வருந்துவர் என்பது இதில் உணர்த்

தப்பட்டது. இவ்வுண்மை இளையான்குடி மாற நாயனார்பால் உணரப்படும்.

கதை.

இளையான்குடி மாறநாயனார் உள்ளன செல்வமனைத்தையும் பிறர்க்கே உதவி வறுமையடைந்து உணவின்றியிருந்த ஒருநாள் தம்பால் வந்த பெரியவர்க்கு உதவுதற்கு ஒன்றுமில்லையே யென்று உளமிக நொந்தார். தானும் தன் மனைவியும் உணவின்றி யிருப்பதற்காக வருந்தவில்லை. வந்தவரது பசியை நீக்க முடியாமையை நினைந்தே பெரிதும் வருந்தினார். பசி நோயால் களைத்துப் படுத்திருந்த அவர் அப்பெரியவருக்கு உதவிசெய்யக் கருதினார். இரவில் எழுந்து வெளியே சென்றார். கீரை முளைகளை வாரிக்கொணர்ந்தார். பக்குவஞ்செய்து பரிவுடன் நல்கினார்.

நமக்கு முன்பிங் குணவில்லை யாயினும்
இமக்கு லக்கொடி பாகர்க் கினியவர்
தமக்கு நாமின் னடிசில் தகவுற
அமைக்கு மாறெங்ங னேயணங் கேயென. (1)

உள்ளம் அன்புகொண் டூக்கவோர் பேரிடாக்
கொள்ள முன்கவித் தூக்குறி யின்வழிப்
புள்ளுறங்கும் வயல்புகப் போயினார்
வள்ள லாரிளை யான்குடி மாறனார். (பெரிய புராணம்) (2)

செய்யவேண்டிய ஒப்புரவைச் செய்யமுடியாமைக்கே நாயனார் வருந்தினார் என்பது இவற்றால் நன்கு தெளிவாம்.

பிறர்க்குதவி செய்ய முடியாதபடி யெய்துகின்ற இயல்பையே அறிவோர் வறுமையாகக் கருதுவர் என்பது இதனால் கூறப்பட்டது.

220. வெள்ளி கெடுவா யெனவுரைத்தும் மாவலியேன்
கொள்ளென்று தந்தான் குமரேசா—தள்ளாத
ஒப்புரவி னால்வருங் கேடெனின் அஃதொருவன்
விற்றுக்கோட் டக்க துடைத்து. (௰)

குமரேசா! வெள்ளி கெடுவாய் எனச் சொல்லித் தடுத்தும் மாவலியேன் கொள் என்று கொடுத்தான் எனின், ஒப்புரவு செய்தலினால் கேடு வரும் எனினும், அஃது ஒருவன் விற்றுக் கொள்ளுந் தகுதியை உடையதென்க.

விற்றுக் கோள் தக்கது உடைத்து—விலைகொடுத்து வாங்கிக் கொள்ளுந் தகுதியையுடையது.

ஒப்புரவு செய்தலினால் கேடுவருமென்று பிறர் சொல்லினும் அக்கேட்டைத் தன்னை விற்றாயினும் ஒருவன் கொள்ளவேண்டும் என்பதாம்.

தன்னை ஒப்புக்கொடுத்தேனும் அறிவோர் ஒப்புரவைச் செய்தற்கு ஒப்புக்கொள்வர் என்பது குறிப்பு.

பொருட்கேடு வருமென்று பிறர் கடுத்துத் தடுப்பினும் அறிவோர் தம்மைக் கொடுத்தேனும் ஒப்புரவென்னும் உயர் நலத்தைக் கொள்ள வேண்டுமென்பது இதில் உணர்த்தப்பட்டது. இது மாவலியால் உணரப்படும்.

கதை.

மாவலி என்பவன் பிரகலாதன் புதல்வனான விரோசனன் என்னும் அசுரவேந்தன் திருமகன். தாய் பெயர் சயதேவி. கொடையும் வீரமும் அடையப் பெற்றவன். மீதலம் பூதலம் பாதலம் என்னும் மூவகை உலகங்களுக்குந் தலைமையெய்தி இவன் அரசு புரிந்தான். விந்தியாவலி என்னும் தனது அருமை மனைவியோடு கூடி வாழ்ந்து நூறு புதல்வர்களைப் பெற்று எவ்வுலகத்தாரும் போற்றத்தக்க பெரும் புகழ் பெற்றான். இவனது அரசாட்சி

யையும் பிறமாட்சியையும் கண்டு இந்திரன் பொறாமைகொண்டான். இவனைப் பொருதுவெல்ல முடியாதென்று தெளிந்து திருமாலிடஞ்சென்று ஒரு சூழ்ச்சியைச் செய்து இவன் பொருள் முழுதுங் கவரும்படி வேண்டினான். மாலுங் குறளாய் இவன்பால் வந்தார் மூன்று அடி மண் தா என்றார். மாற்றாது கொடுக்க மாவலி துணிந்தான். தனக்குக் குருவும் மந்திரியுமாகிய சுக்கிரன் தடுத்தான். "உன்னைக் கெடுக்கக் கருதி இவர் வந்துள்ளார் கொடுக்காதே" என்று கடுத்து அவ்வஞ்சகத்தை நெஞ்சறியத் தேற்றினான். என் கொடையால் எனக்குக் கேடு வரினும் அதனை நன்றென்று கொள்வேன் என்று அரசன் துணிந்து கொடுத்தான். மாலும் தமது மலரடியால் உலக முழுவதையுங் கொண்டு இவனையும் ஆட்கொண்டார். தன்னைக் கொடுத்தும் ஒப்புரவு செய்த இப்பெருந்தகையின் வள்ளற்றன்மையை உலகம் புகழ்ந்தது. தடுத்துரைத்த வெள்ளியை நோக்கி மாவலி மறுத்துரைத்தவை இதனடியில் வருகின்றன.

எடுத்தொருவருக்கொருவர் ஈவதனின் முன்னே
தடுப்பது நினைக்கினது தகவில வெள்ளி
கொடுப்பது விலக்குகொடி யோயுனது சுற்றம்
உடுப்பதுவும் உண்பதுவும் இன்றிவிடு கின்றாய் (1)

வெள்ளியை யாதல் விளம்பினை மேலோர்
வள்ளிய ராக வழங்குவ தல்லால்
எள்ளுவ என்சில இன்னுயி ரேனும்
கொள்ளுதல் தீது கொடுப்பது நன்றால். (2)

(இராமாயணம்)

ஒப்புரவு செய்வதில் மாவலி கொண்டிருந்த திட்பம் இவற்றான் இனிது தெளிவாம். தன்னை விற்றாவது ஒப்புரவு செய்ய வேண்டுமென்பது இதனால் கூறப்பட்டது.

(இவ்வதிகாரத்தின் தொகைப் பொருள்.)

பெருந்தகையாளர் மேகம்போல் கைமாறு கருதாமல் ஒப்புரவு செய்வர். அவர் முயன்றீட்டிய பொருள் எல்லாம் தக்கார்க்கே

உதவுவர். ஒப்புரவுபோல் சிறந்தது யாண்டுமில்லை. உலக நடையையறிந்து உதவி செய்யாதவன் பிணத்தோடொப்பன். உபகாரி செல்வம் ஊருணி நீர்போல் எல்லார்க்கும் எளிதில் பயன்படும். அவனது ஊர் நடுவே நிற்கும் கனிமரம் போல்வதாம். அது மருந்து மரம்போல் நின்று எல்லாருடைய வறுமை நோயையும் நீக்கும். வறுமைக்காலத்தும் அறிவோர் பிறர்க்கு உதவி செய்வார். பிறர்க்கு உபகரிக்கப் பெறாமையே அறிவோர்க்கு வறுமையாம். தம்மை விற்றாயினும் அறிவோர் ஒப்புரவைச் செய்வர்.

௨௨-வது ஒப்புரவறிதல் முற்றிற்று.

௨௩-ம் அதிகாரம் ஈகை.

அஃதாவது இல்லையென்று இரந்தார் எவர்க்கும் இல்லை என்னாது கொடுத்தல். பிறர்க்கு உபகரித்தலையே தமக்குக் கடமையாகக் கருதி ஒப்புரவு செய்தொழுகும் ஒட்பமுடையார் கண்ணே இஃது ஒப்ப நிகழுமாகலின் அதன் பின் வைக்கப்பட்டது. அது புகழையும் இஃது அதன்மேற் புண்ணியத்தையும் பயக்குமென்க.

221. மன்ன ருயர் போசன் வறியார்க்கே யீந்தமையில்
கொள்ளவுமே லானந்தான் குமரேசா—தள்ளும்
வறியார்க்கொன் றீவதே யீகைமற் றெல்லாங்
குறியெதிர்ப்பை நீர துடைத்து. (௧)

குமரேசா! போசன் என்பவன் வறியவர்க்கே கொடுத்தவன் ஒரு நாயினுக்குப் போர்வையைக் கொடுத்தான் எனின், வறியார்க்கு ஒன்றை ஈவதே ஈகை, மற்று எல்லாம் குறியெதிர்ப்பை நீரது உடைத்து என்க.

குறியெதிர்ப்பை—கைம்மாற்று: அஃதாவது அளவுகுறித்து நிகழ்வில் கொடுத்து அவ்வாறே எதிர்வில் கொள்வது என்க.

எதிர்ப்பை—எதிர்பெறும்படி இடுவது என்னும் ஏதுவான் வந்தது. பொருளுடையார் பதிலுதவி செய்யும் இயல்புடையார் முதலாயினோர்க்குக் கொடுப்பன எல்லாம் ஒருவகைக் கடன்கொடுத்ததாகக் கருதப்படும் என்பார் மற்று எல்லாம் குறியெதிர்ப்பை நீரது உடைத்து என்றார்.

எதிர் உதவி செய்யமுடியாத வறியவர்க்குக் கொடுப்பதே கொடை. பிற எல்லாம் கைமாற்றாகக் கொடுக்கும் இயல்பினையுடையது என்பதாம்.

இல்லார்க்கு ஈவதே ஈகை என்பது கருத்து.

ஒரு பொருளும் இல்லாதவர்க்குத் தமது உறுபொருளை உதவுவோரே உயர்ந்த கொடையாளர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை பேகன்பால் உணரப்படும்.

கதை.

பேகன் என்பவன் கடைஎழு வள்ளல்களுள் ஒருவன். மலைநாட்டுக்குத் தலைவன். கண்ணகியென்னும் பெயரினையுடைய ஒரு பெண்மணியை மணந்து களிப்புடன் வாழ்ந்தவன். தாழ்ந்தாரையுயர்த்துந் தண்ணளியுடையவன். தனது அரிய பொருளையெல்லாம் வறியவர்க்கே கொடுத்தவன். புறத்தே தகுந்த பொருளும் அகத்தே மிகுந்த அருளும் அமையப்பெற்றவன். வறுமைநோய் நீக்கும் அருமருந்தென இவனைப் புலவர் பலரும் போற்றி மகிழ்ந்தார். ஒருநாள் இவனது நகரையடுத்திருந்த குளிர்மலர்ச் சோலையிற் சென்று மாலையில் உலாவினன். அங்கே மயிலொன்று தனது அழகிய கலாபத்தை விரித்து விழைவுடன ஆடியது. உடல் பனித்து மயிர்சிலிர்த்து ஆடியபின் கூவி நின்றது. அதனைக் கேட்டு உடனே இவன் அருள்மீக்கொண்டான். குளிரால் நடுங்கி அது வருந்திக் கூவியதாகக் கருதினன். பொற்சரிகையிட்ட

தனது விலையுயர்ந்த போர்வையை அதன் மேல் போர்த்தான், நகரை நோக்கி மீண்டான். வறியார்க்கே கொடுத்து அரிய புகழைக்கொண்ட இவனது ஈகையின் இயல்பையும் ஒரு பறவை மாட்டும் அருள்சுரந்து செய்த பெருந்தகைமையையும் உலகம் வியந்து புகழ்ந்தது (இதன் விரிவை புறநானூற்றில் காண்க.)

வானம் வாய்த்த வளமலைக் கவான்
கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய
அருந்திறல் அணங்கின் ஆவியர் பெருமகன்
பெருங்கல் நாடன் பேகனும். (சிறுபாணாற்றுப்படை)

நர்க்கு அளிப்போர் அற
ஆற்றாமாக்கள் அரும்பசி களைவோர்
மேற்றே யுலகின் மெய்ந்நெறி வாழ்க்கை (மணிமேகலை)

ஏற்றகை மாற்றாமை யென்னானுந் தாம்வரையா
தாற்றாதார்க் கீவதாம் ஆண்கடன்—ஆற்றின்
மலிகடற் றண்சேர்ப்ப மாறீவார்க் கீதல்
பொலிகடன் என்னும் பெயர்த்து. (நாலடியார்)

இதனுள் கொடையின் இயல்பு கூறப்பட்டது.

222. வள்ளலாங் கன்னனன்று வந்தகண்ணன் பாலொன்றுங்
கொள்ளாதேன் ஈந்தான் குமரேசா—உள்ளபடி
நல்லா றெனினுங் கொளறீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று. (௨)

குமரேசா! கன்னன், தன்பால் வந்த கண்ணன் பால் தான் ஒன்றுங்கொள்ளாது ஏன் ஈந்தான் எனின், நல்ல ஆறு எனினும் கொளல்தீது மேல் உலகம் இல் எனினும் ஈதலே நன்று என்க. மேல் உலகம்—முத்தியுலகம்.

கொளல்—ஏற்றல். நல் ஆறு எனினும்—நல்ல நெறி என்று சொல்லினும். உம்மை அங்ஙனம் சொல்வார் இன்மையைக் காட்டுகிறது.

ஏற்றலே மேலுலகிற்கு நல்ல நெறி என்று கூறினும் அது தீது, ஈவார்க்கு மேலுலகம் இல்லை என்று சொல்லினும் ஈதலே நன்று என்பதாம்.

கொள்வோர் துன்ப வுலகத்தை யடைவர். ஈவோர் இன்ப வுலகத்தை யெய்துவர் என்பது உண்மை. இதனை மாற்றிக் கூறி யாரேனும் மயக்கினும் மயங்கலாகாது என்பார் "கொளல் தீது ஈதல் நன்று" என்றார்.

தீயவை யெவற்றினும் ஏற்றல் தீது. நல்லவை எல்லாவற்றினும் ஈகையே மிக்க நல்லது என்பது கருத்து.

பிறர் பொருளைச் சிறிதும் கொள்ளாமல் தன் பொருளைக் கொடுக்கவே ஒருவனுக்கு நன்மை என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை கன்னன்பால் உணரலாம்.

கதை.

சேனையாலும் வானையாலும் எவரும் தனக்கு நிகரில்லாத கொடை வீரனாகிய கன்னன் பாரதப் போரில் துரியோதனனுக்குத் துணை நின்று பதினாறு நாள்வரையும் பொருதான். பதினேழாம் நாளில் கடும் போர் புரிந்து முடிவில் விசயனுடைய வெவ்விய கணைகளால் உடல் முழுதும் துளைபடத் தேருடன் விழுந்தான். உதிரம் பெருகியது. அவன் தரித்திருந்த மாலையும் முடியும் கவசமும் குண்டலங்களும் நிறங் குலைந்தன. ஆவி அகத்ததோ புறத்ததோ என்னும்படியாயது. அவ்வமையம் திருமால் ஒரு முனிவர் வடிவங்கொண்டு அவன்பால் சென்று வறுமைமிக்குடையேன் ஏதேனுந் தருக என்று இரந்தார். அந்நிலையிலிருப்பினும் கன்னன் மகிழ்ந்து என்ன வேண்டுமென்றான். கண்ணன் அவன் செய்த புண்ணியத்தையே உதவும்படி வேண்டினார். கன்னன் மகிழ்ந்து தன் மார்பில் பாய்ந்துள்ள அம்பை யீர்த்து அ

திலிருந்து பெருகிய குருதி நீரால் உறுதி கூறித் தந்தான். மாய முனிவர் கொண்டார். உனக்கு யாது வேண்டும் என்றார். கண்ணன் என்று தெளிந்தும் அவ்வள்ளல் ஒன்றும் கொள்ளவில்லை. அவர் மீண்டும் வேண்டினார். யான் இன்னும் பிறந்தால் இல்லையென்று இரப்போர்க்கு இல்லையென்னாத இதயத்தோடு பிறப்பியென்றனன். திருமால் மகிழ்ந்து தன்னுருவங் காட்டி இன்னருள் செய்தார். ஒன்றுங் கொள்ளாமல் இன்னுயிர்த் துணையாய் நின்ற தன் புண்ணியத்தையுங் கொடுத்த அப்புண்ணியன் வண்மையை யாவரும் எண்ணியெண்ணி வியந்தார். (இதன் விரிவைப் பாரதத்தில் காண்க).

மாய்ந்தவர் மாய்ந்தவ ரல்லர்கள் மாயா
ஏந்திய கைகொ டிரந்தவ ரெந்தாய்
வீய்ந்தவர் என்பவர் வீய்ந்தவ ரேனும்
ஈந்தவர் அல்ல திருந்தவர் யாரே. (கம்பர்)

ஈதல் ஒன்றே என்றும் நன்றாம் என்பது இதனால் கூறப்பட்டது.

---

223. தெள்ளு குமணனென்றுஞ் செப்பாம லேன்தலையைக்
கொள்ளெனமுன் தந்தான் குமரேசா—என்னும்
இலனென்னும் எவ்வம் உரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே யுள. (௩)

இ.—ள்.

குமரேசா! குமணன் இல்லையென்று சொல்லாமல் தன் தலையையும் ஏன் கொடுத்தான் எனின், இலன் என்னும் எவ்வம் உரையாமையும் ஈதலும் குலனுடையான் கண்ணே உள என்க.

இலன் என்னும் எவ்வம்—வறியன் என்னும் இளிவை.
குலனுடையான்—மேன்மகன்.

இலன் என்னும் இளிமொழியைச் சொல்லாமையும் தன்பாலுள்ளதைப் பிறர்க்கு உவந்து ஈதலும் ஆகிய இவ்விரண்டு நலங்க

ளும் குலமகனிடமேதான் இயல்பாக அமைந்துள்ளன என்பதாம்.

ஏற்றல் தீது ஈதலே நன்று என்று மேற்குறித்த மெய்ம்மையைக் குலமகன் ஒருவனே குறிக்கொண்டொழுகுவான் என்பார் "குலமகன் கண்ணே உள" என்றார்.

உள என்பது அஃறிணைப் பன்மைக் குறிப்பு முற்று அஃது உரையாமையும் ஈதலும் என்னும் இரண்டு எழுவாயும் கொள்ள நின்றது.

உள என்னும் பயனிலைக்குப் பன்மை குறித்து ஈதல் ஒன்றையே எழுவாயாகக் கொண்டால் இதில் பல பொருள்கள் கொள்ளப்படும்.

அவை

இலன் என்னும் எவ்வம் உரையாமை ஈதல்—வறியன் என்னும் துயர் மொழியைத் தன்முன் ஒருவன் கூறாதபடி கொடுத்தல் எனவும்,

தன்பால் வந்தவன் இலன் என்னும் எவ்வத்தைப் பின்னும் போய்ப் பிறரிடஞ் சொல்லாமல் கொடுத்தல் எனவும்,

இலன் என்னும் எவ்வத்தை வந்தவன்பால் தான் சொல்லாமல் கொடுத்தல் எனவும்,

தன்னிடம் வந்துபோனவன் பின்பு அவனிடம் வருபவர்க்கு இலன் என்று உரையாமல் அவன் கொடுக்கும்படி கொடுத்தல் எனவும்,

தன்பால் வந்தவனைக் குறித்து இவன் இல்லாதவன் என்று இகழாமல் கொடுத்தல் எனவும்,

பொருளிருந்தும் ஈயாதவனாதலால் இவன் இல்லாதவனே என்று தன்னைக் குறித்துப் பிறர் பழியாதபடி கொடுத்தல் எனவும்,

இலன் என்று சொல்லி இன்னான் வந்து என்பால் இரந்தா

ண் என்று பிறரிடம் அதனை உரையாமல் கொடுத்தல் எனவும்,

தன்பால் வந்தவனை இல்லாதவன் என்று பின்பு பிறர் சொல்லாதபடி கொடுத்தல் எனவும் வருவனவாம்.

இவை முறையே குறிப்பறிந்து கொடுத்தல், வறுமை நீங்கக் கொடுத்தல், கரவாது கொடுத்தல், நிரம்பக் கொடுத்தல், பழியாமல் கொடுத்தல், பழிக்கஞ்சிக் கொடுத்தல், கூறாது கொடுத்தல், பெருகக் கொடுத்தல் எனக் கருதப்படும்.

பொருள் முதலியன யாவும் இலனாய்த் தான் எவ்வித நிலையினையெய்தியிருப்பினும் தன்பால் வந்து வேண்டினவனுக்கு யான் இது பொழுது ஒன்றும் இல்லாதவன் என்று சொல்ல இசையாமையும் தம்முயிரினையேனும் மனமுவந்து கொடுத்தற்கு இசைதலும் குலமகனொருவனுக்கே கூடும் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை குமணன்பால் உணரப்படும்.

கதை.

குமணன் என்பவன் இற்றைக்கு இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னர் கொங்கு நாட்டிலே ஆம்பிராவதி என்னும் நதிக்குத் தென்பால் அமைந்திருந்த குமணாபுரி யென்னும் நகரிலிருந்து அரசுபுரிந்த ஒரு குறுநில மன்னன். பேரறிவாளன். அருளால் பொறையால் ஆற்றலால் பெரியவன். ஏற்றதை மாற்றாமல் எதையும் கொடுப்பவன். நிறையும் நீதியும் இறை வழுவாதவன்.

எந்தவேளையும் நொந்தவர் துயரறிந் தின்னல்
தந்தபேர் தனை மைந்தனே யாயினுந் தக்க
பந்த மாதிய விதிப்படி தண்டனை பணிக்குஞ்
சிந்தை யாதியன நிந்தையின் நீங்கிய செம்மல், (1)

மருவி நோக்கினர் வதனமாம் பங்கய மலர்க்கும்
பாவி யேபுவி கடுக்குறும் பாவமாம் பனிக்கும்
சாள மாகிய கவிவலோர் கலியிருள் தனக்கும்
இரவி யாமென விளங்கிய வளங்கொளும் ஏந்தல், (2)

இவ்வகை நலங்களெல்லாம் ஒருங்கே யமைந்திருந்த இப்பெருந்தகைக்குத் தம்பி ஒருவன் இருந்தான். அவன் பெயர் அமணன். பொருளையெல்லாம் பிறர்க்கீந்து கொடுத்து அண்ணன் கெடுக்கின்றான் என்று அமணன் சினந்தான். பின்பு அமர் செய்யவந்தான். இளையவன் நிலைமையையறிந்து அனைத்தையும் அவன்பால் கொடுத்துவிட்டுக் குமணன் தனித்து ஓர் வனத்தில் புகுந்து தங்கியிருந்தான். அமணன் அரசுரிமையை அடைந்து மகிழ்ந்தான். அவ்வளவில் அமையாமல் குமணனைக் கொல்லவுங் கருதினான் அவன் தலையினைக் கொணர்வோருக்குப் பெருநிதி தருவதாகப் பறையறைவித்தான். அவ்வள்ளலைக் கொல்லத் துணிவார் யாரும் இல்லை. இந்நிலையில் பெருந்தலைச் சாத்தனார் என்னும் புலவர் ஒருவர் குமணனை நாடி வந்தார். நாட்டில் இல்லையென்று தெரிந்தார். இருந்த இடத்திற் சென்று கண்டார்.

ஆடெரி படர்ந்த கோடுயர் அடுப்பில்
ஆம்பி பூப்பத் தேம்பசி யுழப்ப
இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை
சுவைதொறுஞ் சுவைதொறும் பால்காணாமல்
குழவி தாய்முகம் நோக்க
மனைவி யென்முகம் நோக்க யானும்
நின்முகம் நோக்கி வந்தனென் குமணா.

என்று தமது வறிய நிலைமையைத் தெரியப்பாடினார். குமணன் கேட்டான். புலவர் நிலைமையைத் தெளிந்தான். அவரது இன்மையை நீக்கத் தன்பால் ஒன்றும் இல்லையே என்று எண்ணியேங்கினான். தம்பி கூறியுள்ளதை நினைந்தான். உடனே தெளிந்து மகிழ்ந்தான். புலவிர்! என் தலையைக் கொண்டுபோய் என் தம்பி கைக்கொடுத்தால் அவன் உமக்குப் பெருநிதி தருவான. தடையொன்றுமின்றி இதனைக் கொய்து கொண்டுசெல்லும் என்று சொல்லிப் புலவர் கையில் வாளைக்கொடுத்துத் தன் தலையை நீட்டினான். புலவர் பதைத்துப் பரிந்தார். உண்மையுணர்ந்தார். அதன்பின் தமது மதிநலத்தால் இருவரையும் இணைத்துக் குமண

னை யரசனுக்கினர். இலன என்னும் எவ்வம் உரையாமல் தன் தலையைஈந்த இப்பெருந்தகையை உலகம் தலைவள்ளல் என்று புகழ்ந்து போற்றியது. (இதன் விரிவைக் குமணன் கதையில் காண்க.)

அந்தநாள் வந்திலை யருங்கவிப் புலவோய்
இந்தநாள் வந்துநீ நொந்தனை யடைந்தாய்
தலைதனைக் கொடுபோய்த் தம்பிகைக் கொடுத்ததன்
விலைதனைப் பெற்றுன் வெறுமைநோய் களையே.

இது புலவரை நோக்கிக் குமணன் கூறியது.

இலன் என்னாமல் ஈபவனே குலமகன் என்பது இதனால் கூறப்பட்டது.

224. மன்னா நளன் துன்பம் எய்தினன் வானவர்தங்
கோனிரந்த போது குமரேசா—தானாக
இன்னா திரக்கப் படுதல் இரந்தவர்
இன்முகங் காணும் அளவு. (௪)

இ—ள்.

குமரேசா! இந்திரன் வந்து தன்பால் இரந்தபோது நளன் என் துன்பமுற்றான் எனின் இரந்தவரது இன்முகங்காணும் அளவும் இரக்கப்படுதலும் இன்னாது என்க.

இன்னாது—இனிது அல்லாதது. துன்பம் என்றபடி.

இரத்தல்—பிறரிடம் சென்று ஈ என்று கேட்டல்.

இரக்கப்படுதல்—இரப்பவர்க்கு ஈயும்படி இருத்தல்.

இரத்தலில் தான் துன்பம் உண்டு ஈதலினும் அஃதுண்டென்றது அதனைச் செய்வாரது தகுதி கருதி என்க.

இரந்தவரது இனிய முகத்தைக் காணும் அளவும் இரக்கப்படுவோருக்கும் துன்பமாம் என்பதாம்.

தன்பால் வந்து இரந்தவன் தான் கொடுத்ததைப் பெற்று அதனால் அவன் முகமலர்ந்து சிறப்பதைக் காணும் வரையும் வள்ளல்கள் உள்ளம் மகிழ்வுறாது என்பது கருத்து.

இரப்போர் முகமலர ஈவோர் அகமலரும் என்க. இரந்தவன் விரும்பியது எதுவோ அதைக்கொடுத்து அவனை அனுப்பும்வரையும் இலன் என்னாமல் ஈயும் குலமகனுக்கு இன்னாமை நீங்காதென்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை நளன்பால் உணரப்படும்.

கதை.

நளன் தமயந்தியை மணஞ்செய்யும் பொருட்டு அவள்தங்கியிருக்குந் திருநகரையடைந்தான். அரசர் பலரும் அவ்வாறே அங்குவந்து செறிந்தார் வானவரும் வந்தார். வருணனோடு வானவர் தலைவனும் வந்தான். வந்த இந்திரன் நளனது பேரழகை நோக்கி வியந்து மகிழ்ந்தான். அவனையன்றித் தமயந்தி தன்னை விரும்பாளென்று தெளிந்தான். அவனையே தூதனுப்பி அவன் வாயிலாக அவளைப் பெற்றுவிடவேண்டுமென்று இந்திரன் நளன்பால் தந்திரமாக வந்தான். நளன் பணிந்து உபசரித்தான். இந்திரன் ஒன்று வேண்டி உன்பால் வந்தேன் என்றான். நளன் அதனைக் கேட்டான். அவன் கேட்டதைக் குறிப்பறிந்து கொடுக்க விரும்பினான். ஆனால் விருப்பம் இன்னதென்று தெரிந்திலன். அதனால் பெருந்துயர் அடைந்தான். இரந்தவர் இன்முகம் காணும் அளவும் இரக்கப்படுதலும் இன்னாது என்பதை உலகம் இவன்பால் உணர்ந்தது. (இதன் விரிவை நளன் தூதில் காண்க.

குறிப்பறிந் தீதலே கொடைமற் றின்றென
மறுத்தலே கேட்டபின் வழங்க லாதலின்
பெறற்கரும் ஆவியும் பெட்பி னீகுவன்
திறப்பட இவருளந் தெரிந்த தில்லையால். (நைடதம்.)

இரந்தவரது முகமலர்ச்சியைக் காணும் வரையும் ஈவோர்க்கும் துன்பமாம் என்பது இதனால் கூறப்பட்டது.

225. அம்பரீ டன்வலிமைக் காற்றுமல் கோபமுனி
கும்பிட்டேன் வீழ்ந்தார் குமரேசா—அப்புவியில்
ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலிற் பின். (ரு)

இ—ள்.

குமரேசா! அம்பரீடன் வலிமைக்கு ஆற்றாமல் ஏன் கோபமுனி கும்பிட்டு வீழ்ந்தார் எனின், ஆற்றுவார் ஆற்றல் பசியை ஆற்றல் அதுவும் அப்பசியை மாற்றுவாரது ஆற்றலிற் பின்னும் என்க.

கோபமுனி—துருவாசர். ஆற்றுவார்—தவஞ் செய்வார்.

ஆற்றுவார் ஆற்றல் பசி ஆற்றல்—தவஞ்செய்வார்க்கு வலிமையாவது தம் பசியைப் பொறுத்தலேயாம்.

தம் பசியைப் பொறுத்தலே தவஞ்செய்வார்க்கு வலிமை; அதுவும், பிறர் பசியை நீக்கும் ஈகையாளரது வலிமைக்குப் பின்னேயாம் என்பதாம்.

உறுபசியை அடக்கி அருந்தவஞ்செய்யும் தவத்தினரைவிட பிறர் பசியை நீக்கிய பேருதவி செய்யும் ஈகையாளர் பெரியவர் என்பது கருத்து.

தானஞ்செய்வோன் தவஞ்செய்பவனினும் வலியன் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை அம்பரீடன் கண்ணும் துருவாசரிடமும் உணரப்படும்.

கதை.

அம்பரீடன் என்பவன் சூரிய குலத்து வேந்தன். திருமாலை நினைந்து நெடுநாள் தவம்புரிந்து சிறந்த வர பலங்களைப் பெற்றவன். ஸ்ரீமதியென்னும் ஓரழகியை மணந்து சிறந்து வாழ்ந்தான். இந்திரனுடன் ஓர் ஆசனத்திருந்தவன். சிறந்த வீரன். அசுரர்களுடன் தனிநின்று பொருதவன். இவனது அடர் வலி

யை நோக்கி அமரரும் போற்றினார். பெருங்கொடையாளி. வறியவரெவரும் இவனை உயிரெனக் கருதினார். தான் உண்ணுகின்றதுபோலவே எத்திறத்தவர்க்கும் இனிய உணவையிட்டு மகிழ்வான். ஏகாதசிதோறும் விரதம் இருந்து அதன் முடிவில் அறுபது கோதானஞ் செய்து துவாதசியன்று அருந்தவர் பலருடன் இருந்து உணவு அருந்துவான். ஒரு முறை துருவாசர் வந்தார். இவன் வருக என்றுபசரித்துப் பாரணை செய்ய விரும்பினான். அவர் காளிந்தி நதியில் நீராடி வருவதாகச் சென்றார். அவர் வரவை இவன் எதிர்பார்த்திருந்தான். உணவு அருந்துதற்கு உரிய காலத்தில் அவர் வரவில்லை. விரதநியமம் தப்பிவிடுமே என்று சிறிது நீர் பருகினான். முனிவர் வந்தார். உண்மை தெரிந்தார். வருமுன் போசனஞ் செய்தாய் என்று சினந்து தமது தவவலியால் ஒரு பூதத்தை ஏவினார். அது வெகுண்டு வந்தது. அரசன் செய்துவந்த தானமகிமையால் தன்கையில் ஓர் ஆழி வந்தது. அதனால் அதனைக் கொன்றான். அச்சக்கரம் முனிவரையுங் கொலைக்குத் துணிந்தது. அவர் அஞ்சி ஓடினார். அதுவும் பின் தொடர்ந்து விரைந்தது. முனிவர் ஓடிக் களைத்து மாலிடஞ் சென்றார். அவர் உன்னை ஆதரிக்க எம்மால் முடியாது. அம்பரீடனிடமே சென்று அடைக்கலம் புகுக. இலையேல் அழிவாய் என்றார். முனிவர் மீண்டார். அரசனையடைந்து வணங்கி அடைக்கலம் புகுந்தார். அதன்பின் ஆழி அகன்றது. அரசனுக்கு ஈகையால் எய்தியுள்ள புண்ணிய வலியை முனிவர் எண்ணி வியந்தார். பசியை ஆற்றித் தவம்புரிவாரினும் அதனை மாற்றும் ஈகையாளர் வலியர் என்பதை உலகமே இவன்பால் உணர்ந்தது.

(இதன் விரிவைப் பாகவதத்தில் காண்க.)

தவத்தினும் ஈகை சிறந்ததென்பது இதனால் கூறப்பட்டது.

226. பெற்றனகொண் டேனு பெறுஞ்சித் திரப்பசிநோய்
குற்றமறத் தீர்த்தார் குமரேசா — முற்றுமே
அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி. (௬)

இ—ள்

குமரேசா! பெருஞ்சித்திரனார் தான்பெற்ற பொருளைத் தொகுத்து வையாமல் ஏன் அதனால் பிறர் பசியைத் தீர்த்தார் எனின், அற்றார் அழிபசி தீர்த்தல் பெற்றான் ஒருவன் பொருள் வைப்புழி அதுவாம் என்க. வைப்பு உழி—வைக்கும் இடம்.

அற்றார்—பொருளற்றவர்: வறியர் என்க.

அழி பசி—கடும்பசி. குடிப்பிறப்பு விழுப்பம் மானம் முதலிய எல்லா நலங்களும் அழியும்படி பசி செய்யும் ஆதலால் அஃது அழி என்னும் அடைபெற்று வந்தது.

பொருளைப் பெற்றவன் பின்பு தனக்கு உதவும்படி அதனைத் தொகுத்து வைத்தற்கு உரிய இடமாவது வறியவரது கொடிய பசியைத் தீர்க்க இடுவதேயாம் என்பதாம்.

ஒருவன் பெற்ற பொருளைப் பேரூதியம் தரும்படி வைத்தற்குரியதோர் நல்லிடமிஃதெனக் காட்டியருளிய நயம் காணத்தக்கது.

உயிர்களது பசியை நீக்க ஒருவன் உதவுகின்ற பொருளே நூறுங்கோடியாய்ப் பின் அவனுக்கு நன்றுதரும் என்பது கருத்து.

குலமகன் பொருள் பெற்றால் பிறர் பசியைத் தீர்ப்பான் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இது பெருஞ்சித்திரனார்பால் உணரப்படும்.

கதை.

பெருஞ்சித்திரனார் என்பார் இற்றைக்கு இரண்டாயிர வருடங்களுக்குமுன் விளங்கியிருந்த ஒரு சிறந்த புலவர். அதிகமான் முதலான வள்ளல்களைப் பாடியுள்ளார். இவரது இனிய கவிகளெல்லாம் புறநானூறு முதலிய பழைய நூல்களிற் காணப்படும். நல்லறிவாளராகிய இவர்பால் பொல்லாத வறுமையும் பொருந்தியிருந்தது. அதனால் அல்லல் பல அடைந்தார். குமண வள்ளல் இவரது மதிநலத்தையறிந்து பெரும்பொருள் உதவினார். அதன்பின் மனையை நோக்கி வந்து தன் மனைவியை நோக்கி

னார். தாம் பெற்ற பொருளை எல்லார்க்கும் உதவி வாழும்படி அவளிடம் கூறினார். அவளும் அவ்வாறே ஆற்றி வாழ்ந்தாள். இருவரும் அதனால் என்றும் இன்புற்றார். வறுமைத் துயரால் வாடி வருந்திய பெருஞ்சித்திரனார் பொருள் பெற்றபின் உயிர்களது அரும்பசியை நீக்கிய பெருந்தகைமையை உலகம் புகழ்ந்தது. பெருஞ்சித்திரனார் தமது மனைவியை நோக்கிக் கூறிய இனிய மொழிகள் இதன் அடியில் வருகின்றன.

நின்னயக் துறைநர்க்கும் நீநயந் துறைநர்க்கும்
பன்மாண் கற்பினின் கிளைமுத லோர்க்கும்
கடும்பின் கடும்பசி தீர யாழநின்
நெடுங்குறி யெதிர்ப்பை நல்கி யோர்க்கும்
இன்னோர்க் கென்னாது என்னொடுஞ் சூழாது
வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும்
எல்லார்க்கும் கொடுமதி மனைகிழ வோயே
பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்துவேற் குமணன் நல்கிய வளனே. (புறநானூறு.)

பிறர் பசியைத் தீர்த்தலே ஒருவன் பொருள் வைக்கும் இடம் என்பது இதனால் கூறப்பட்டது.

---

227. பண்டு வனம்புகுந்தும் பாண்டவர்கள் வெம்பசிநோய்
கொண்டிலரீ தென்னே குமரேசா—கொண்டதைமுன்
பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னுந்
தீப்பிணி தீண்டல் அரிது. (எ)

இ-

குமரேசா! பாண்டவர்கள் வனம்புகுந்தும் ஏன் பசி நோயை அடையவில்லை எனின், பாத்தூண் மரீஇயவனைப் பசி என்னும் தீப்பிணி தீண்டல் அரிது என்க.

மருவியவன் என்பது மரீஇயவன் எனநின்றது. மருவியவன்—பழகினவன்,

பாத்தூண் மரீஇயவனை—பகுத்து உண்ணுதலைப் பொருந்தினவனை.

பசியைத் தீப்பிணி என்றது அறிவொழுக்கங்களை அழித்து இழிவைப்படுத்தும் பழி வழி நல்கும் அதன் கொடுமை கருதி என்க.

பகுத்து உண்டலைப் பழகி வந்தவனை யாண்டும் பசிநோய் தீண்டாதென்பதாம். (இவ்வுண்மை பாண்டவர்பால் காணப்படும்

கதை.

பாண்டவர்கள் நாடிழந்து காடடைந்திருந்த காலத்தும் இனிய உணவுகளையே அருந்தி இருந்தார். தருமர் ஒருநாள் சௌனக முனிவரைக் கண்டு வணங்கினார். முனிவர் தருமரது பெருந்தன்மையை வியந்து ஒரு மந்திரத்தை உபதேசித்தார். தருமர் தெளிந்தார். அந்த மந்திரத்தைக் கொண்டு சூரியனை நோக்கி அருந்தவஞ்செய்தார். சூரியன் தோன்றி ஓர் அற்புதமான பொற்பாத்திரத்தை உதவினன. எவ்வளவு பேர்களைக் குறித்து எண்ணினும் அவ்வளவினர்க்கும் அஃது இன்னுணவளிக்கும் இயல்பினை யுடையது. அஃது அட்சய பாத்திரம் எனப்படும். தன்னுடன் வந்த பன்னீராயிரம் முனிவர்களையும் தம்மையும் அதனால் ஆதரித்துவந்தார். காட்டில் இருந்தும், நாட்டிலும் கிடையாத நல்லுணவையே நாளுந்துய்த்தார். பகுத்துண்டு வாழ்வோரைப் பசிநோய் தீண்டாது என்பதை உலகம் இவர்பால் தெளிந்தது.

(இதன் விரிவைப் பாரதத்தில் காண்க.)

ஈவோர்க்குப் பசிநோய் இல்லை என்பது இதனால் கூறப்பட்டது

---

228. ஈரமுடன் ஈயாமல் ஏனிழந்து துன்பமுற்றான்
கோரைநகர் ஆழ்வான் குமரேசா—பாருலகில்
ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்கணவர். (அ)

குமரேசா! கோவைநகர் ஆழ்வான் என்பான் இருந்து துன்புற்றான் எனின், தாம் உடைமை வைத்து இழக்கும் வன்கணவர் ஈத்து உவக்கும் இன்பம் அறியார் என்க.

ஈத்து என்பது வறுமை நோக்கி வழங்கி நின்றது.

வன்கண்மை — இரக்கமின்மை. வன்கணவர் என்றது இரப்பவர்க்கு இரங்கி ஈயாத இழிமக்களை என்க.

தாம் உடைமை — தாம் உடைத்தாயிருக்கும் பொருளை.

ஈத்து உவக்கும் இன்பம் — கொடுத்து மகிழ்தல் என்னும் இன்பத்தை. இனி, கொடுத்து (வறியவர்) உவத்தலால் எய்தும் இன்பம் எனவுமாம்.

பிறர் இன்புறக் கொடுத்து அதனால் தாம் எய்தும் இன்பத்தை ஈயாது வைத்திழக்கும் உலோபர் அறியார் கொல் என்பதாம்.

சிறிய பொருளைக் கொடுத்துப் பெரிய இன்பத்தினை எய்தாமல் வறிதே இழப்பது யாது கருதியோ என்பார் "அறியார்கொல்" என்றார். கொல் என்பது ஐயக்குறிப்போடு வியப்பையும் குறித்து நின்றது. அறிவிலார் கொடாது இழப்பவர். அறிவின்மையால் வைத்திழந்து துன்புறுவர் என்பது கருத்து.

கொடை யின்பத்தை யறியாத மடையரே தம் பொருளைக் கொடாமல் வைத்திழந்து கவல்வர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இது கோவைக்கா லாழ்வான்பால் காணப்படும்.

கதை.

சோழநாட்டிலே கோவைக்கால் என்னும் ஊரிலே ஆழ்வான் என்னும் பெயரினையுடைய பெருஞ்செல்வன் ஒருவன் இருந்தான். இவன் பொருள் மிகப்பெற்றும் அருள் இலனாயினான். கல்வியறிவுஞ் சிறிது எய்தியிருந்தான். பொருள்மேல் பெரும்

பற்றுடையவன். அதனால் அதனை எவர்க்கும் கொடாமல் மிகப் போற்றி வாழ்ந்தான். இரவலரைக் கண்டால் இவன் கரவுடன் அகல்வான். இவன் நிலைமையையறியாமல் புலவரொருவர் இவன் மேல் பல கவிகள் செய்துவந்தார். பாடிப் புகழ்ந்தார். அவர் இகழ்வர் என்று அஞ்சி இவன் ஒரு வருடங் கழித்துவரின் ஒரு யானை தருகின்றேன் என்றான். குறித்த காலத்தில் புலவர் வந்தார். இன்னுஞ் சில காலங்கழித்து வாருங்கள் ஏதாவது கொடுக்கின்றேன் என்றான். இவ்வகையே பலமுறையுங்கூறி முடிவில் ஒன்றுங் கொடாமல் மறுத்தான். இவன் வன்கண்மையை ஔவை அறிந்தாள். வசை ஒன்று பாடினாள். அதன் பயனாக இவன் பொருள் முழுதும் இழந்தான். ஈதலின்பத்தை யெய்தாதிழிந்தான்.

கரியாய்ப் பரியாகிக் காரெருமை தானாய்
எருதாய் முழப்புடவை யாகித்—திரிதிரியாய்த்
தேரைக்கால் பெற்றுமிகத் தேய்ந்துகால் ஓய்ந்ததே
கோரைக்கால் ஆழ்வான் கொடை. (ஔவை.)

உடாஅதும் உண்ணாதும் தம்முடம்பு செற்றுங்
கெடாஅத நல்லறமுஞ் செய்யார்—கொடாஅது
வைத்திட்டி னாரிழப்பர் வான்றோய் மலைநாட
உய்த்திட்டுந் தேனீக் கரி. (நாலடியார்.)

ஈதலின்பத்தைப் பேரறிவாளரே எய்துவர் என்பது இதனால் கூறப்பட்டது.

229. என்றம் பலர்சூழ்ந் திருந்துண்ண என்உண்டான்
குன்றையூர் எல்லன குமரேசா—கன்றி
இரத்தலின இன்னாது மன்ற நிரப்பிய
தாமே தமியர் உணல்

இ—ள்.

குமரேசா! குன்றையூர் எல்லன் தனித்துண்ணாமல் என் பலரோடுங் கூடியுண்டான் எனின், நிரப்பியதாமே தமியர் உணல் இரத்தலினும் மன்ற இன்னாது என்க.

நிரப்பிய தாமே தமியர் உணல்—தொகுத்ததைத் தாமே உண்டல். ஏகாரம் பிரிநிலை.

மன்ற என்பது தெளிவுப் பொருளை யுணர்த்தும் ஓர் இடைச் சொல்.மன்றவென் கிளவி தேற்றஞ் செய்யும் (தொல்காப்பியம்.)

ஈட்டிய பொருள்களைப் பிறர்க்கு ஈயாமல் தாமே தனித்து உண்ணுதல் இரத்தலினும் உண்மையாக இன்னாது என்பதாம்.

நிரப்பிய என்பதை வினையெச்சமாகக் கொண்டால், ஏதாவது, ஒரு பொருளெல்லையைக் குறித்துவைத்து அதனை நிரப்பும் பொருட்டு ஒருவர்க்கும் ஒன்றுங்கொடாமல் தாமே உண்டு உலோபஞ் செய்தல் இரத்தலினும் இளிவு என்று கொள்ளப்படும்.

ஈயாது உண்ணல் இரத்தலினும் தீது என்க.

முயன்று தொகுத்த பொருளைப் பிறர்க்குதவி வாழ்பவனே குலமகன் என்பது குறிப்பு. இஃது எல்லன்பால் காணப்படும்.

கதை.

எல்லன் என்பவர் தொண்டை நாட்டிலே குன்றையூர் என்னும் நகரிலே பிறந்தவர். வேளாண் மரபினர். பெரிய நிலப்பகுதியைத் தனக்கு உரிமையாகவுடையவர். யாவர்மாட்டும் பேரன்பு வாய்ந்தவர். எல்லாரும் இன்புற ஈந்து வாழ்ந்தவர். இவர் உலையில் அரிசியிட்டால் ஊர்பசி நீங்கும் என்பர். ஆயிரக்கணக்கான மனிதர்கள் தினமும் இவர் இல்லில் வந்து அன்னம் அருந்தி செல்லுவர். பலரும் புடைசூழ உண்டால் அன்றி இவர் ஒருநாளும் தனித்து உண்ணுவதில்லை. நான்கு திசைகளினும் இருந்து நாளும் இவரை நாடி வருவார் பலர். எவர் வரினும் இனிய முகத்தோடு உபசரித்து அவர் குறித்ததை உடனே கொடுத்தனுப்புவர். இவரைச் சோதிக்கக் கருதிய ஒருவனுக்குத் தமது உடற்றசையையுங் கொடுக்கத் துணிந்தார்.

ஆலெங்கே யங்கே யரும்பறவை ஆலமர்ந்த
மாலெங்கே யங்கே மலர்மடந்தை—கோலஞ்சேர்
செங்கே தகைமணக்கும் செங்குன்றை எல்லனெங்கே
அங்கே யிரவலரெல் லாம். (பொய்யாமொழி)

இதனால் இவரது ஈகைக்குணம் இனிது தெளியப்படும்.

ஈயாது உண்டல் இரப்பினும் இழிவென்பது இதனால் கூறப்பட

230. ஈதலியை யாமைக்கேன் இன்னுயிரும் நீக்கநின்றார்
கோதறுகா ளத்தி குமரேசா—பூதலத்தில்
சாதலின் இன்னாத தில்லை யினிததூஉம்
ஈத லியையாக் கடை. (௰)

பொ—ள.

குமரேசா! காளத்தி முதலியார் ஈதல் இயையாமைக் காக என் தனது இனிய உயிரையும் நீக்கத்துணிந்தார் எனின், சாதலின் இன்னாதது இல்லை, ஈதல் இயையாது எனின், அதுவும் இனிதாம் என்க.

சாதலின் இன்னாதது இல்லை—சாதல்போலத் துன்பமானது இவ்வுலகில் ஒன்றுமில்லை.

ஈதல் இயையாக்கடை—ஈதல் முடியாத இடத்து.

ஈதல் முடியாமை எய்துமாயின் அது, சாதல் துன்பத்தினுங் கொடிது என்பதாம்.

காரணம் யாவும் கலங்குற வருகின்ற மரண துன்பமே எவ்வகைத் துன்பங்களினும் உயிர்கட்கு மிக்க துன்பமாம் அதனினும் வறியவர் விரும்பியதொன்றைக் கொடுக்க முடியாதவிடத்துக் குலமகனுக்குத் தோன்றுந் துன்பங்கொடிதாம் என்பது கருத்து.

தன்பால் வந்து இரந்தவனுக்கு இல்லையென்று சொல்வதினும் ஒருவன் இறந்து படுதல் நல்லது என்பார் "ஈதல் இயையாக் கடை சாதல் இனிது" என்றார்.

கொடுக்க முடியாத இடத்துக் குலமக்கள் தம் உயிரையும் விடத்துணிவர் என்பது குறிப்பு. இவ்வுண்மை காளத்தியால் காணப்படும்.

கதை.

காளத்தி முதலியார் வறியவரெவர்க்கும் உறுதுணையாய் நின்று பெருதவிசெய்து நின்றை என்னும் ஊரில் நிலைத்துவாழ்ந்தார். அதனால் அவரது புகழ் உலகெங்கும் பரவியது. பல திசைகளிலுமிருந்து இரவலர் பலர் நாளும் இவரை நாடிவருவர். அவர் வேண்டிய எல்லாம் இவர் விரும்பியுதவினார். முடிவில் பொருள் வளங்குறைந்தது. வறுமை வளர்ந்தது. உணவும் இன்றி ஒருநாட் பட்டினிகிடந்தார். அங்கு இருத்தற்கு நாணினார். மறுநாள் இரவில் தன் மனைவியோடு எழுந்து ஒருவருக்குந் தெரியாதபடி அயலிடஞ்சென்றார். வழியிலிருந்த ஒரு பொது நிலையத்தின் புறந்திண்ணையில் கடும்பசியோடு களைத்துத் தங்கினார். இவர்பால் பரிசில் பெறக்கருதி நின்றையூரை நோக்கிவந்த புலவர் ஒருவரும் அங்கோர் மூலையில் பொருந்தியமர்ந்தார். தன்னைவிடாமல் வருத்துகின்ற வறுமையை முன்னிலைப்படுத்திப் புலவர்,

நீளத் தொடர்ந்தனையே நீங்கா நிழல்போல
நாளைக்கென் செய்குவாய் நல்குரவே—காளத்தி
நின்றைக்கே சென்றக்கால் நீயெங்கே நானெங்கே
இன்றைக்கே சற்றே யிரு. என்றார்.

முதலியார் இதனைக் கேட்டார். புலவர் குறிப்பைத் தெரிந்தார். நாளை இவர் நமது இல்லையடைந்து நாம் இல்லாமையை அறிந்தால் அல்லலுறுவரே என்று ஒல்லை எழுந்தார். மனைவியை யழைத்து விடியுமுன் மெல்ல வீடுவந்து சேர்ந்தார். அரிதின் முயன்று சிறிது உணவை ஆக்கிவைத்தார். புலவரும் வந்தார். முதலியார் அவரை உபசரித்து உணவூட்டினார். புலவர் குறிப்பின்படி கொ

டுத்தனுப்புதற்கு ஒன்றும் இல்லையேயென்று யெண்ணி யெண்ணி நொந்தார். இல்லையென்று சொல்வதினும் இறந்துவிடுதல் நல்லது என்று துணிந்தார். தமது இல்லின் பின்புறத்திற்குச் சென்று இறக்கக்கருதி அங்கிருந்த ஒரு பாம்பின் புற்றில் கையை விடுத்தார். அதிலிருந்த நாகம் கடித்தலைச் செய்யாமல் தன் சிரத்திலிருந்த செம்மணியை அக்கையில் கக்கிற்று. முதலியார் கையை வெளியே இழுத்தார். ஒளிமணியைக் கண்டார். பேருவகை கொண்டார். விரைந்து வந்தார். அதனைப் புலவர்க்கே தந்து போற்றியனுப்பினார். ஈதல் முடியாத இடத்துக் குலமக்கள் சாதல் இனிது என்று கொள்வர் என்பதை உலகம் இவர்பால் கண்டது. இதன் விரிவை இவர் காதையில் காண்க

> சாதல்வந் தடுத்தகா லுந் தனக்கொரு சாதலின்றிப்
> பூதலம் இறந்துங் காறும் புகழுடம் பிருந்து மந்தக்
> கோதறு புகழின் யாக்கை கொடையினாற் செல்வங்கூட
> வாழ்தலை யுடைய ரன்றே வானமும் வணங்குசீரார்.
>
> (விநாயக புராணம்.)

ஈதலின்றி வாழ்தலினும் சாதல் நன்று என்பது இதனால் கூறப்பட்டது.

இவ்வதிகாரத்தின் தொகைப் பொருள்.

வறியவர்க்குக் கொடுப்பதே கொடை. ஏற்றல் தீது. ஈதலே நல்லது. இலன் என்னாமல் ஈவோன் குலமகனே யாவன். இரந்தவரது இன்முகங் காணும்வரையும் ஈவோர்க்கும் துன்பமாம். பிறர் பசியைத் தீர்ப்போர் தவசிகளினும் வலியவர். பிறர் பசிக்கு இடுதலே ஒருவன் பொருள்வைக்கும் இடமாம். பகுத்து ஈந்து உண்போனைப் பசிநோய் அணுகாது. கொடாமல் வைத்து இழப்போர் கொடியரேயாவர். ஈயாது உண்ணல் இரத்தலினுந் தீது. ஈதலின்றி வாழ்தலினுஞ் சாதல்

௨௩-வது ஈகை முற்றிற்று.

உ௪-ம் அதிகாரம் புகழ்.

அஃதாவது தனது குணஞ் செயல்களான் உலகம் என்றும் உவந்து போற்றும்படி ஒருவனுக்கு அமைந்த சிறந்த கீர்த்தி. இதன் திட்பம் வீரம் கல்வி நியாயங்களாலும் மெய்ம்மையினும் ஈகை முதலியனே இன்புறத் தோன்றும் ஆதலால் அதன்பின் இது வைக்கப்பட்டது.

231. திண்டோள் இயற்பகைதன் தேவியையும் ஈந்தே
கொண்டார் இசையைக் குமரேசா — தண்டாமல்
ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்ல
தூதியம் இல்லை யுயிர்க்கு (க)

இ—ள்.

குமரேசா! இயற்பகையார் தன் தேவியையும் ஈந்து என் இசைபெற்றார் எனின், ஈதல் இசைபட வாழ்தல் அது அல்லது உயிர்க்கு ஊதியம் இல்லை என்க. ஊதியம் — இலாபம்.

இசைபட — புகழ் உண்டாக. அது என்றது புகழை.

ஈதல் வாழ்தல் என்பன தல் ஈற்று வியங்கோள் முற்றுக்கள் ஆதலான் அவை ஈக வாழ்க என ஏவல் மேனின்றன.

ஈக; அதனால் புகழுண்டாக வாழ்க; அப்புகழல்லது உயிர்க்கு ஊதியம் இல்லை என்பதாம்.

ஈதலைச் செய்து அதனால் புகழினை எய்தி வாழ்தலே ஒருவன் பிறவிக்குப் பயன் என்பது கருத்து.

ஈதலின்றி வாழ்தலினும் சாதல் நன்று என்று மேற் குறித்த அதனால் யாது பயன் என்பாரை நோக்கி அஃது உயிர்க்கு ஊதியமாகிய புகழையுண்டாக்குமென்று இதில் உணர்த்தினார் என்க.

எதனையும் இல்லையென்னாமல் ஈந்து புகழுற வாழ்வோரே பிறவிப் பயனை யெய்திய பெரியவராவர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை இயற்பகையார் பால் உணரப்படும்.

கதை.

இயற்பகையார் என்பவர் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர். சோழநாட்டிலுள்ள காவிரிப்பூம் பட்டினத்தில் வணிகர் மரபில் பிறந்தவர். எவர் வந்து எதைக் கேட்பினும் இல்லையென்னாமல் ஈயும் இயல்பினையுடையவர். குணவதி என்னும் தனது அருமை மனைவியுடன் அமர்ந்து இல்வாழ்ந்துவந்தார். வருங்கால் இவரது புகழினை உலகறியும்படி செய்ய இறைவன் கருதினார். ஒரு காமுகன்போல் வேடங்கொண்டு இவர் பால்வந்தார். அவரை ஓர் அடியவராகவே கருதி இவர் அவர் அடிவணங்கி நின்று யாது வேண்டுமென்றார். "உன் மனைவியே வேண்டும்" என்று அவர் வேண்டினார். இவர் இல்லை என்னாமல் தம் இல்லாளையுந் தந்தார். அவர் கொண்டு சென்றார். இவரது உறவினர் அவரைக் கடுத்துத் தடுத்தார். இவர் வெகுண்டு சென்று அவரனைவரையும் அச்சுறுத்திச் சிறிது தூரம் உடன் சென்று அவ்விருவரையும் அனுப்பினார். மாயவண்ணங் கொண்டுவந்த அவர் மனைவியையும் மருதவண்ணந் தந்த இவர்முன் விடைமேல்தோன்றினார். கண்டு தொழுதார். பின் மனைவியோடு பேரின்பம் எய்தினார். ஈதலும் அதனால் இசைபெற வாழ்தலுமே ஆருயிர்க்குப் பேருதியம் என்பதை உலகம் இவர்பால் உணர்ந்தது.

(விரிவைப் பெரிய புராணத்தில் காண்க.)

புகழொன்றே இம்மையில் ஒருவன் எய்துதற்குரிய பெரும் பயன் என்பது இதனால் கூறப்பட்டது.

232. பாரிகன்னனாதியரைப் பல்லோரும் பேரன்பு
கூறவுரைப் பானேன் குமரேசா—பாரில்
உரைப்பார் உரைப்பவை யெல்லாம் இரப்பார்க்கொன்
றீவார்மேல் நிற்கும் புகழ். (௨)

இ—ள்.

குமரேசா! பாரி கன்னன் முதலிய வள்ளல்களுடைய புகழை எல்லாரும் ஏன் உரையாடி மகிழ்கின்றார் எனின், உரைப்பார் உரைப்பவை எல்லாம் இரப்பார்க்கு ஒன்று ஈவார்மேல் நிற்கும் புகழேயாம் என்க.

பேசுவார் பேசுவன எல்லாம் இல்லையென்னாமல் ஈயும் ஈகையாளர்களுடைய புகழ்களே என்பதாம்.

வள்ளல்கள் புகழ்களே வாய்படைத்த மாந்தரால் வியந்து பேசப்படும் என்பது கருத்து.

கல்வியறிவு நிரம்பப் பெற்றவர் விழுமமான உரையாலும் புலவர்கள் பாட்டாலும் வள்ளல்களுடைய மேன்மையைப் போற்றி மகிழ்வர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை பாரிகன்னன் முதலினவர்பால் காணப்படும்.

கதை.

இரப்பார்க்கு இல்லையென்னாமலீந்து வந்த பாரி கன்னன் குமணன் பேகன் நன்னன் எழினி அதிகமான் மலயமான் ஆய் சோமன் சந்திரன் சுவர்க்கி ஓரி கூவத்துநாரணன் பள்ளிகொண்டான் காரி வரபதியாட்கொண்டான் அந்திமான் சந்திமான் நள்ளி முல்லான் சிபி காளத்தி முதலியார் சீதக்காதி சடையப்ப பிள்ளை முதலிய வள்ளல்களுடைய கீர்த்தியை உரையாலும் பாட்டாலும் உலகம் இன்றும் போற்றிவருவதை எங்கும் காணலாம்.

“கொடைக்குக் கன்னன்”

“சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய பாரி”

“ஈந்து சிவந்தது மால் சீதக் கா;

“ஈர நன்மொழி இரவலர்க்கீந்த காரி”

"அமிழ்து விளை தீங்கனி ஔவைக்கீந்த அதியன்"
"பிறந்த நாட்டொடங்கி யாரும் தலைபுக்க பெரியோன்
பெற்றி மறந்தநாள் உண்டோ"
"மண்ணவர் வறுமை நோய்க்கு மருந்தன்ன சடையன்"
மாரி யீகை மறப்போர் மலையன'

எனவரூஉம் இவற்றான் ஈவார் மேல் நிற்கும் புகழ் உரையானும் பாட்டானும் உயர்ந்து பேணப்படும் உண்மை காணப்படும்.

வள்ளல்களுடைய புகழே எல்லாராலும் வியந்து சொல்லப்படும் என்பது இதனால் கூறப்பட்டது.

233. என்றும் சிபிசுகுணன் இன்புகழே நின்றதிங்கு
குன்றியவேன் எல்லாம் குமரேசா—நன்றாக
ஒன்றா வுலகத் துயர்ந்த புகழல்லாற்
பொன்றாது நிற்பதொன் றில். (௩)

இ—ள்.

குமரேசா! சிபி முதலோரது புகழே இவ்வுலகில் நிலைபெற்றது பிற எல்லாம் ஏன் நிலையாமல் அழிந்தன எனின், ஒன்றா உயர்ந்த புகழ் அல்லால் உலகத்தில் பொன்றாது நிற்பது ஒன்று இல்லை என்க.

ஒன்றா—தன்னோடு ஒப்பது இன்றித்தான் ஒன்றேயாக. ஒப்பற்றதென்க.

ஒன்றா உயர்ந்த புகழ்—ஒப்பின்றாக உயர்ந்த கீர்த்தி.

ஒன்றா என்பதை உலகத்துக்கே அடையாக்கி "நிலையா உலகம் ஆம்,

அரிய புகழைத்தவிர இவ்வுலகத்தில் அழியாமல் நிற்பது வேறு ஒன்றும் இல்லை என்பதாம்.

நிலையில்லாத இவ்வுலகில் புகழ் ஒன்றே நிலைத்துநிற்கும் என்பதும் அஃது ஈகையானே எய்தப்படும் என்பதும் கொடுத்தற்கு அரியதைக் கொடுத்தேனும் அதனைக் கொண்டவரே உயர்ந்தோர் என்பதும் அவரது பேரும் சீரும் உலகமுள்ள அளவும் யாவரானும் போற்றப்படுமென்பதும் இதில் தோற்றி நின்றமை காண்க.

இல்லையென்றால் எதனையுங்கொடுத்து வள்ளல்கள் எய்திய அரிய புகழ் ஒன்றே இவ்வுலகில் அழியாமல் நிற்கும் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை சிபி சுகுணன் முதலாயினார் பால் காணப்படும்.

சுகுணன் என்பவர் தொண்டைமண்டலத்திலே விடூர் என்னும் நகரிலே விளங்கியிருந்த ஒரு வேளாண் மரபினர். தமக்கு உரிய பொருளையெல்லாம் வறியவர்க்கே கொடுத்து மகிழ்வுடன் வாழ்ந்தவர். அவரது வள்ளன்மையையறிய விரும்பிப் புலவர் ஒருவர் வந்து மனைவியைத்தரும்படி கேட்டார். அவர் மாற்றாது தந்தார். புலவர் வியந்து சுகுணனைத் தந்தையேயென்றழைத்து அவர் மனைவியைத் தாயென வணங்கினார். சேயாகிய என்பால் தாய்தந்த தாதாவே என்று மீண்டும் அவளை அவர் பால் சேர்த்தார். கொடுத்தற்கரிய உரிமைப் பொருளையும் கொடுத்த அவரது ஈகைக்குணத்தைப் புலவர் எண்ணியெண்ணித் துதித்தார். ஒன்றா உயர்ந்த அவர் புகழ் என்றும் நின்று நிலவும்படி நன்று பாடினார். (இதன் விரிவைத் தொண்டை மண்டல சதகத்தில் காண்க.) சிபிபுகழ் நிலைத்தமை மேலே காண்க.

அரிய புகழொன்றே அழியாமல் நிற்குமென்பது இதனால் கூறப்பட்டது.

---

234. வானுலகேன் போற்றியதோர் வண்புறவை வானிலுள்ளார்
கோனையும் போற்றாமல் குமரேசா—மான
நிலவரை நீள்புகழாற்றிற் புலவரைப்
போற்றாது புத்தே ளுலகு. (௪)

குமரேசா! வானுலகம் தன்பாலுள்ள தேவரைப் போற்றாமல் பண்டு ஏன் ஒரு பறவையைப் போற்றியது எனின், நிலவரை நீள் புகழ் ஆற்றின் புத்தேள் உலகு புலவரைப் போற்றாது என்க.

நிலவரை—பூமியின்கண். நீள்புகழ்—நெடுங்காலம்நிலைத்து நிற்கும் புகழ். புலவர் என்றது தேவரை. புலம்—அறிவு. அதனைப் பெரிதும் உடையராதலால் அவரனைவரும் புலவர் எனப்பட்டார்.

நிலவரை நீள்புகழ் ஆற்றின்—நிலவுலகிலிருந்து நெடிய புகழைச் செய்யின்.

இந்நிலவுலகிலிருந்து ஒருவன் பெரும் புகழைச் செய்வானாகில் அவனையல்லது தெய்வவுலகம் தன்பாலுள்ள தேவர்களைப் பேணாது என்பதாம்.

புண்ணியத்தால் தெய்வவுடம்பையெடுத்துப் புத்தேளுலகினையெய்தி நிற்கும் தேவர்களினும் ஈகையால் புகழுடம்பையெடுத்து இந்நிலவுலகிலிருக்கும் வள்ளல்கள் சிறந்தவர் என்பது கருத்து.

நெறியின்றொழுகிய அறிவினையுடையார் மறுமையை பாத்திரம் உரிமையாக உடையவராவார், புகழுடையார் இருமையினும் பெருமையை யெய்துவராதலான் புத்தேளுலகம் அவரினும் இவரை விரும்பிப் பேணும் என்க. இவ்வுண்மை புகழாற்றிய ஒரு புறாவின்பால் காணப்படும்.

கதை.

பல்லாயிர வருடங்களுக்கு முன்னர் நிடதமலையையடுத்துப் பெரிய வனம் ஒன்று இருந்தது. அடர்ந்த மரங்களும் சிறந்த செடி கொடிகளும் அதில் நிறைந்திருந்தன. வில்லும் கையுமாய் வேடனொருவன் அங்கு வந்தான். வரவும், பெருமழை பெய்தது. ஓயவில்லை. அதனால் வருந்திக் குளிரால் நடுங்கினான். பறவை

களும் மிருகங்களும் வாடி நொந்தன. நலிந்து மெலிந்த பெண் புறா ஒன்று தரையினிடைத் தளர்ந்து கிடந்தது. வேடனதைத் தன வலையிற் போட்டுக்கொண்டு தழைத்த ஓர் மரத்தினடியில் களைத்திருந்தான். இரவும் வந்தது. அம்மரத்தில் தனித்திருந்த ஆண்புறா தனது பேடையைக் காணாது பெரிதும் வருந்தி அடியில் நலிந்திருக்கும் வேடன் வலையில் அமைந்திருப்பக் கண்டு கண கலங்கிக்கொண்டது. அதன்பின் பேடை மெலிவுக்கு இரங்கிப் பல இடங்களுக்குஞ் சென்று காய்ந்த விறகுகளைக் கொணர்ந்து குவித்து காட்டுத்தீயைக் கோலில் தாங்கிவந்து மூட்டித் தனது மெல்லிய சிறகுகளால்வீசி நெருப்பை வளர்த்து அவனது குளிரை நீக்கினது. அவனும் நீங்கி நிமிர்ந்தான். உடனே அவன் பசிநோய்க்கு இரையாகப் புறா அதில் பாய்ந்து மடிந்தது. வேடன கண்டு வியந்து பயந்து தன் வலையில் கிடக்கும் பெண் புறாவை எடுத்து வெளியே விட்டான். தன் துணையைப் பிரிந்திருக்க ஆற்றாது அதுவும் அக்நியில் விழுந்தது. உடனே விமானம் வர அவ்விரண்டும் தெய்வவுடம்பெய்திச் சேர்ந்து மேலெழுந்தன. இவ்வுலகிலிருந்து நீள்புகழாற்றிய அப்புறவிரண்டையும் புத்தேளுலகம் புலவரினும் போற்றி மகிழ்ந்தது.

(இதன் விரிவைச் சாந்தி பருவத்தில் காண்க.)

பேடையைப் பிரிந்துந்தன்னைப் பிடிக்கவந் தடைந்தபேதை
வேடனுக் குதவிசெய்து விறகிடை வெந்தீ மூட்டிப்
பாடுறு பசியைநோக்கித் தன்னுடல் கொடுத்தபைம்புள்
வீடுபெற் றுயர்ந்தவார்த்தை வேதத்தின் விழுமிதன்றோ
(இராமாயணம்)

புகழுடையாரைப் புத்தேளுலகமும் போற்றும் என்பது இதனால் கூறப்பட்டது.

---

235. தண்டார் அரவான் ததீசிபோல் மெய்ப்புகழைக்
கொண்டிலரேன் மற்றோர் குமரேசா—கொண்டாடும்
நத்தப்போற் கேடும உளதாகுஞ் சாக்காடும
வித்தகர்க் கல்லால் அரிது. (௫)

குமரேசா! அரவான், ததீசிபோல், பிறர் என் பெறும் புகழைக் கொள்ளவில்லை எனின், நத்தம் ஆகும் கேடும் உளது ஆகும் சாக்காடும் வித்தகர்க்கு அல்லால் அரிது என்க.

திருந்தல் வருந்தல் என்பன திருத்தம் வருத்தம் என நிற்றல்போல் நந்தல் என்பது இங்கே நத்தம் என நின்றது.

நந்தல் என்பது வளர்தல் ஆக்கம் முதலியவற்றைக் குறித்து வரும் ஒரு தொழிற்பெயர். சாக்காடு—சாவு.

போல் என்பதை உரையசையாக்கொண்டு ஆகும் என்பதை ஆங்குப் பெய்து பொருள் கொள்ளும்படி இது நின்றது.

ஆக்கம் ஆகும் கேடும் வாழ்தலாகுஞ் சாவும் வித்தகர்க்கு அன்றி மற்றவர்க்கு எய்துதல் அரிது என்பதாம்.

வித்தகர்—அறிவு, அருள், ஆண்மைகளான் மேன்மை பெற்றவர். அழியும் உடலைக்கொடுத்து அழியாத புகழை அடைதல் எல்லார்க்கும் எளிதன்றாதலான் "வித்தகர்க்கு அல்லால் அரிது" என்றார்.

புகழுடம்பை எடுத்தற்காகப் பூதவுடம்பைக் கெடுத்தலும் அது நிலைத்து நிற்கும்பொருட்டு இறத்தலும் தான வீரர்க்கே அமையும் என்பது கருத்து

உடல் உயிர்களைக் கொடுத்தேனும் மேலோர் புகழினை அடைவர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை அரவானிடமும் ததீசிபாலும் அறியப்படும்.

கதை.

அரவான் என்பவன் அருச்சுனன் புதல்வன். உலூபி என்னும் நாககன்னியிடம் பிறந்தவன். சிறந்த வீரன். நல்ல அங்கங்களும் எதிர் உரோமங்களும் வாய்ந்தவன். எவராலும்

வெல்லுதற்கரிய மெய்வலிமை யுடையவன். பாரதப் போரில் கானொருவனே சென்று பகைவரனைவரையும் தொலைத்து வெற்றி பெற விரும்பியிருந்தான். இங்ஙனமிருப்பத் துரியோதனன் போர் தொடங்குமுன் வீரமுறைப்படி களப்பலியூட்ட விரும்பினான். களப்பலி என்பது தனக்கு வெற்றியுண்டாகும்படி சிறந்த ஆண்மையும் நிறைந்த அறிவும் திருந்திய வுருவும் உடலில் எதிரேறிய உரோமமும் உடைய ஒருவனைக் கொண்டுபோய்க் காளிதேவிமுன் நிறுத்தித் தோள் மார்பு தொடை முதலிய அவயவங்களைச் சிறிது சிறிது கொய்து அவளுக்கு மகிழ்வுண்டாகும்படி உதிரமும் தசையும் ஒருவன் ஒருங்கேயிடுவது. மேற்குறித்த இலக்கணங்கள் அரவானுக்கும் கண்ணனுக்குமே அமைந்திருந்தன. கொடியனான துரியோதனன் அரவானிடம் வஞ்சமாக வந்தான். அவனைப் பெரிய தந்தையாக மதித்து அரவான், யாது வேண்டுமென்றான். நீதான் வேண்டுமென்று அத்தீதானவன் சொன்னான். தந்தேன் கொள்க என்று அம்மைந்தன் இசைந்தான். அதன்பின் கண்ணன் கவர்ந்து அவனை முன் களப்பலி செய்தான். பூதவுடம்பைக்கொடுத்துப் புகழுடம்பை எடுத்த அரவானது கொடை வீரத்தை அமரரும் துதித்தார்.

(இதன் விரிவைப் பாரதத்தில் காண்க.)

இந்திரனுக்கு முதுகென்பை யீந்து புகழுண்டாகும்படி சாக்காடு எய்திய சதுரப்பாடுடைமையைத் ததிசியால் காண்க.

பூதவுடம்பைக் கொடுத்தேனும் புகழுடம்பை ஒருவன் எடுக்கவேண்டுமென்பது இதனால் கூறப்பட்டது.

236. பூருவேன் தோன்றிப் புகழ்கொண்டான் எனிருவர்
கூரிகழ்வால் நொந்தார் குமரேசா — பாருலகில்
தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று. (௬)

குமரேசா! பூரு என்பவன் தனது இளமையையும் கொடுத்துப் புகழ்கொண்டான் ஏன் அவன் துணைவர் இகழ்வாயிருந்தார் எனின், தோன்றின் புகழொடு தோன்றுக; அஃது இலார் தோன்றலின் தோன்றாமை நன்று என்க.

புகழ் என்றது இங்கே அதற்கு ஏதுவாகிய நலத்தைக் குறித்து நின்றது. அஃது இலார்—அக்குணம் இல்லாதவர்.

பிறந்தால் புகழ்க்கு ஏதுவாகிய குணத்தோடு பிறக்க; அக்குணம் இல்லாதவர் பிறத்தலினும் பிறவாமல் ஒழிதல் நன்று என்பதாம்.

உயிர்க்கு ஊதியமானது புகழ் ஒன்றே ஆதலால் அதனைப் பெற்றவனே மனிதனாகப் பிறந்தவனாவான்; பெறாதவன், உருவத்தால் மனிதனாயினும் அவன் பிறப்பு பயனற்றது என்பது கருத்து.

தோன்றவில்லையானால் புகழில்லாதவனை ஒருவரும் மதியார் ஆதலால் தோன்றாமை நன்று என்றார்.

மக்களாய்ப் பிறந்தால் புகழ்பெறும்படி பிறக்கவேண்டும் இல்லையானால், அப்பிறப்பு இழிக்கப்படும் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இது பூருவின் கண்ணும் அவன் துணைவரிடமும் உணரப்படும்.

கதை.

பூரு என்பவன் சந்திரகுல வேந்தனாகிய அயாதியின் புதல்வன். தெய்வயானை சன்மிட்டையென்னும் அயாதியின் மனைவியரிருவருள் இவன், இளையவளிடம் பிறந்தவன். மறு, துரு, யது, வசு, என்னுந் துணைவர் நால்வருடன் வளர்ந்து பருவமெய்தினான். சுக்கிரன், தன் மகளாகிய தெய்வயானையிருப்ப மற்றொருத்தியை மணந்தான் என்று சினந்து அரசனைத் தளர்ந்த கிழவனாகும்படி சபித்தான். அரசன் பெருமூப்பெய்தினான். இல்லின்பந்துய்க்க

இசையாமையை நினைந்து நகைக்கூர்ந்தான். இளமையைத் தரும்படி தன் புதல்வரைக் கேட்டான். யது முதலிய நால்வரும் மறுத்தார். பூரு மகிழ்ந்து தன் இளமையைத் தந்து அம்முதுமையைக் கொண்டான். அரசன் இளமையெய்திப் பெருமகிழ்வுற்றான். மறுத்த நால்வரையும் வெறுத்தகற்றினான். வேண்டிய இன்பந் துய்த்தபின் அவ்விளமையை மீண்டும் பூருவுக்கே தந்தான். தனது உரிமை முழுவதுந்தந்து அவனொருவனையே அரசனாக்கினான். அகன்ற நால்வரும் மிலேச்சராகி இழிந்தொழிந்தார். புகழொடு தோன்றிய பூருவே போற்றப்பட்டான். அஃதில்லாதவர் தோன்றியும் தோன்றாதவராய்த் தூற்றப்பட்டார்.

(இதன் விரிவைப் பாரதத்தில் காண்க.)

புகழுறப் பிறத்தலே உயர் பிறப்பென்பது இதனால் கூறப்பட்டது.

---

237. ஓதுபுகழ் கொள்ளா உலகனென் தன்னையிகழ்
கோதிலரை நொந்தான் குமரேசா—ஏதும்
புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை
யிகழ்வாரை நோவ தெவன். (௭)

இ—ள்.

குமரேசா! உலகன் என்பவன் தன்னை யிகழ்ந்தவரை ஏன் நொந்தான் எனின், புகழ்பட வாழாதார் தம்மை நோவாதே தம்மை இகழ்வாரை நோவது எவனோ என்க.

தந்நோவார்—தம்மை நோவாதவராய். நோவார் என்னும் எதிர்மறை முற்று இங்கு எச்சமாய் நின்றது.

ஈதலைச் செய்து புகழுறவாழ்தலே இல்வாழ்வானுக்குக் கடமையாதலால் அதனை யெய்தாதவனை உலகோர் இகழ்வர். அங்ஙனம் இகழுங்கால், தன் குறையையுணர்ந்து அவன், தன்னை நோவாமல் இகழ்வாரை நோவதால் பயன் இல்லை என்பதாம்.

தன்னைப், பிறர் இகழ்வாராயின் அதனையுணர்ந்து தான் திருந்தாமல் அவரை அவன் வெறுப்பது அறிவின்மையாம் என்பது கருத்து.

புகழ்பட வாழாதவனை உலகோர் இகழ்வர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை உலகன் பால் உணரப்படும்.

கதை.

சோழ நாட்டிலே ஆங்கூர் என்னும் ஊரிலே உலகன் என்னும் பெயரினையுடைய செல்வன் ஒருவன் இருந்தான். வாணிக முதலிய எல்லாத் துறைகளினும் நல்ல திறமையுடையவன் ஆனால் கல்வியறிவு சிறிதும் இல்லாதவன். புன்மையும் வஞ்சமும் பொருந்திய நெஞ்சினன். பொருள்மேல் பெரும்பற்றுள்ளவன். எவரேனும் வந்து ஏதாவது ஒன்றை ஈ என்று கேட்டால் எமன் வந்து தன்னுயிரைக் கொடு என்று கேட்டதுபோல் மிக நொந்து கவல்வான். இவனது நிலைமையைத் தெரியாமல் இரட்டையர் என்னும் புலவர் வந்து இவன்மேற் பல கவிகள் பாடினார். அப்புலவருக்கும் இவன் ஒன்றுங் கொடாமல் அவமதித்தான். அவர் இவனது மடமையையுங் கொடுமையையுந் தெளிந்தார்.

மூடர்முனே பாடல் மொழிந்தால் அறிவரோ
ஆடெடுத்த தென்புலியூர் அம்பலவா—ஆடகப்பொற்
செந்திருவைப் போலணங்கைச் சிங்காரித் தென்பயன்
அந்தகனே நாயகனா னால். என்று வசையொன்று பாடினார்.

அதன் பயனாக அவன் விழியொழியிழந்தான். புகழ்பட வாழாத தன்னை நோவாமல் தன்னை இகழ்ந்த புலவரை அறிவின்றி நொந்து வறிதே இழிந்தான். (இதன் விரிவைப் புலவர்மான்மியத்தில் காண்க.

புகழ்பட வாழாதவன் இகழ்பட்டு நோவான் என்பது இதனால் கூறப்பட்டது.

238. பள்ளிகொண்டான் செல்வமெல்லாம் பலபேர்க்கும் ஈந்திசையைக்
கொள்ளைகொண்டான் என்னே குமரேச;— தள்ளரும்
வசையென்ப வையத்தார்க் கெல்லாம் இசையென்னும்
எச்சம் பெறாஅ விடின். (அ)

இ—ள்.

குமரேசா! பள்ளிகொண்டான் என்பவன் தன் செல்வமுழுமையும் எல்லார்க்கும் கொடுத்து இசை கொண்டான் என்ன, இசையென்னும் எச்சம் பெறாவிடின் வையத்தார்க் கெல்லாம் அது வசையாம் என்க.

இசை என்னும் எச்சம்—புகழ் என்னும் மகவு.

புகழ் என்னும் பிள்ளையைப் பெறாது ஒழிவராயின் உலகத்தார்க் கெல்லாம் அஃது ஒரு பெரு வசையாம் என்பதாம்.

தன்னை ஆக்கியவன் துஞ்சினும் தாம் துஞ்சாமல் எஞ்சி நின்று அவனது பெயரை மகவும், புகழும், நிலைபெறச்செய்யு மெனினும் முன்னதினும் பின்னதே நெடிது நின்று பெரிதும் விளங்குமாதலான் அதனையே உறுதியாக ஒருவன் பெறவேண்டும் என்பது கருத்து.

செல்வ முதலியன பெறாமை வசை அன்று, இசைபெறாமையே ஒருவனுக்கு வசையாம் என்பது குறிப்பு.

இசை என்னும் எச்சம் பெற்றவனே வசையற்றவனாவான் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை பள்ளிகொண்டான் பால் காணப்படும்.

கதை.

பள்ளிகொண்டான் என்பவன் இற்றைக்கு நூற்றிருபது வருடங்கட்குமுன் பாண்டிய நாட்டிலே நெடுங்கழி என்னும் பதியிலே விளங்கியிருந்தான். பரதவர் மரபினன். தோணிகள்

கொண்டு வாணிகஞ்செய்தான். செல்வமும் கல்வியும் இவனிடம் சிறந்திருந்தன. இரந்துவந்தவர்க்கு இல்லையென்னாமல் உவந்து ஈந்து உயர்ந்து வாழ்ந்தான். மக்கட்பேற்றினும் செல்வப்பேற்றினும் புகழ்ப்பேற்றையே உயர்வாக மதித்து அதனைப் பெரிதும் போற்றினான். இசை என்னும் எச்சம் பெற்றான். அதனால் இவன் பெயர் திசைதோறும் நின்றது. இவனது குணநலங்களை வியந்து புலவர் பலர்பாடி மகிழ்ந்தார்.

வள்ளிகொண் டான்மயில் ஏறிக்கொண் டான்மதி
போலுமலை
வெள்ளிகொண் டான்விடை யேறிக்கொண் டான்விண்
ணவர்க்கமுதம்
துள்ளிகொண் டான்புள்ளில் ஏறிக்கொண் டான்சுப
சோபனஞ்சேர்
பள்ளிகொண் டான்புகழ் ஏறிக்கொண் டானென்று
பார்க்கவென்றே.

(நையாண்டிப் புலவர்)

இசைபெற்றவனே உலகில் வசையற்றவன் என்பது இதனால் கூறப்பட்டது.

---

239. பண்டைவளங் குன்றியதிப் பாரென் நரகனைமுன்
கொண்டிருந்த போது குமரேசா—கொண்ட
வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா
யாக்கை பொறுத்த நிலம். (௯)

இ—ள்.

குமரேசா! நரகாசுரனைத் தாங்கியிருந்த காலத்தில் ஏன் இவ்வுலகம் வளங்குன்றி இருந்தது எனின், இசையில்லாயாக்கை பொறுத்தநிலம் வசையிலா வண்பயன் குன்றும் என்க.

வசைஇலா வண்பயன் குன்றும்—பழிப்பில்லாத செழிப்புள்ள விளைவு குறையும்.

குன்றும் என்னும் விளைபொருளின் தொழில் அது விளைதற்குரிய நிலத்தின்மேல் நின்றது.

நிலம் குன்றும் — நிலத்தில் தோன்றும் விளைவுகள் குன்றும். புகழில்லாத உடம்பைத் தாங்கிய நிலத்தில் பழியில்லாததும் செழிப்புள்ளதுமான விளைவு குறையும் என்பதாம்.

புகழில்லாதவன் இருக்கும் இடத்தில் வளமான பொருள்கள் விளையா என்பது கருத்து.

புகழில்லாதவன் தோற்றம் உலகத்துக்கே பெருங்கேடாம் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை நரகாசுரனால் உணரப்படும்.

கதை.

நரகாசுரன் என்பவன் சோதிதம் என்னும் நகரிலிருந்து அரசு புரிந்த ஓர் அசுரவேந்தன். துவட்டாவின் புதல்வியாகிய கசேருஎன்பவளை மணந்து காதலின்பத்தைத் துய்த்தான். கொடிய குணமுடையவன். அஞ்சாதநெஞ்சினன். எஞ்சாத வலியினன். பிறர்க்கு இதம் புரிதலை சிறிதும் அறியாதவன். பெருங்காமி. பதினாறாயிரம் அழகிய இளங்குமரிகளைக் கவர்ந்து கொண்டுவந்து தன் நகரிலே வைத்து வலிந்து துய்த்தான். தத்தங் கணவரையிழந்து இவனால் சிந்தைகலங்கிய மாதர் பலர் வசையே இசையாக இயைய வளர்ந்து வந்தனர். இவனிருந்த நிலப்பரப்பில் இடைஇடையே கொடிய பஞ்சங்கள் தோன்றின. மக்களனைவரும் மிகத் துன்புற்றார். திருமால்தோன்றி இவனைக்கொன்று தொலைத்தார். அதன்பின் உலகம் மகிழ்ந்தது. அன்று எண்ணெயிட்டு நீராடிய பல்வகைச் சிற்றுணவுகளையுண்டு நல்லாடை புனைந்து எல்லாருங் களித்தார். இன்றும் அது நடைபெற்று வருகின்றது. அதுதான் தீபாவளியாம். இசையிலா நரகன் தொலைந்தபின் வசையிலா வளங்களை நிலந்தந்து நின்றது. (இது பாகவதத்தில் காணப்படும்). புகழ்இல்லாதவன் இருந்த இடமும் விளங்காதென்பது இதனால் கூறப்பட்டது.

(புகழ்

240. மண்புகழ் நன்னன்சேய் வாழ்ந்துயர்ந்தான் நன்னன்
கொண்டிழிந்தான் என்னே குமரேசா—மண்டும்
வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய
வாழ்வாரே வாழா தவர். (௰)

இ—ள்

குமரேசா! நன்னன்சேய் புகழுற வாழ்ந்தான், நன்னன் வாழ்ந்தும் ஏன் இகழ்வாய்த் தாழ்ந்தான் எனின், வசை ஒழிய வாழ்வாரே வாழ்வாராவர்; இசை ஒழிய வாழ்வாரே வாழாதவர் என்க. வசை—இகழ். இசை—புகழ்.

வசை ஒழிய வாழ்வார்—வசையின்றி வாழ்வார், என்றது புகழ்பெற்று வாழ்வாரை என்.

இசை ஒழிய வாழ்வார்—புகழ் பெறாமல் வாழ்வார்.

புகழ்பெற்று வாழ்பவரே உயிர் வாழ்பவராவர், புகழ் பெறாமல் வாழ்பவர் இறந்தவரேயாவர் என்பதாம்.

செல்வ முதலிய எல்லா நலங்களும் வாய்ந்து சிறந்து வாழ்பவனாயினும் புகழென்னும் மகவைப் பெறவில்லையானால் அவனை இறந்து தொலைந்தவனாகவே மதிக்கவேண்டும் என்பது கருத்து.

இல்வாழ்க்கைக்குப் பயன் புகழ் ஒன்றே என்பதும் அதனைப்பெற்றவனே உயர்ந்தவன் என்பதும், பெறாதவன் இழிந்தவனேயாவன் என்பதும் இதில் உணர்த்தப்பட்டன. இவ்வுண்மை நன்னன்சேய் இடமும் நன்னன் கண்ணும் காணப்படும்.

கதை

நன்னன்சேய் என்பவன் வேளிர் குலத் தலைவனாகிய குறுநில மன்னன் புதல்வன். இவனது காலம் இற்றைக்கு ஆயிரத்தெண்ணூறு வருடங்கட்கு முன்னர் என்பர். தொண்டை நாட்

டிலே செங்கண்மா என்னும் நகரிலேயிருந்து இவன் நல்லரசு புரிந்தான். அரசுக்குரிய உயர் குணங்களெல்லாம் இவனிடம் ஒருங்கே குடிகொண்டிருந்தன. அருந்திறலும் பெருங்கொடையும் திருந்திய பண்பும் பொருந்தி இசை திசை பரப்பி இன்புற வாழ்ந்தான். இவனது வீரம் ஈகை அருள் முதலிய குணநலங்களை வியந்து புலவர் பாடியுள்ளனர். அவற்றுட்சில இதனடியில் வருவன;

தொலையா நல்லிசை யுலகமொடு நிற்பப்
பலர்புறங் கண்டவர் அருங்கலந் தரீஇப்
புலவோர்க்குச் சுரக்கும் அவன் ஈகைமாரியும்
இகழுநர்ப்பிணிக்கும் ஆற்றலும் புகழுநர்க்கு
அரசுமுழுது கொடுப்பினும் அமரா நோக்கமொடு
தூத்துளி பொழிந்த பொய்யா வானின்
வீயாது சுரக்கும் அவன் நாண்மகிழ் இருக்கையும்
(பெருங்கௌசிகனார்)

பாடுநர் செலினே,
அருங்குறும் பெறிந்த பெருங்கல வெறுக்கை
ஒழாது சுரக்கும் நன்னன். (அகநானூறு)

இன்னும், வசையொழிய வாழ்ந்த இவனது மாட்சியின்பரப்பு முழுதும் மலைபடுகடாம் என்னும் அரிய நூலில் இனிது காணப்படும்.

கதை 2.

மேற்குறித்த இசைக்குரிசிலின் தந்தையாகிய நன்னன் என்பவன் பெருஞ்செல்வம் பெற்றிருந்தும இசை ஒழிய வாழ்ந்தான் ஔவையும் முனிந்து அவன்மேல் வசையொன்று பாடினார். அதனால் வாழ்ந்திருந்தும் வாழாதவனாய்த் தாழ்ந்து அவமதிக்கப்பட்டான். மகன்பெயர் திசைதொறும் நிற்பத் தன்பெயர் வசையுற்றுழிந்தது. வசைபொழிய வாழ்ந்தவனே பிறந்தவனாவான், அல்லாத

வன் பிறந்தும் இறந்தவனே என்பதை உலகம் இவர்பால் உணர்ந்தது.

உயிருடன் இருப்பினும் புகழில்லாதவன் இறந்தவனேயாவன் என்பது இதனால் கூறப்பட்டது.

ஒருவன் றிரண்டு யாக்கை யூன்பயி னரம்பின் யாத்த
உருவமும் புகழுமென்றாங் கவற்றி னூழ் காத்துவந்து
மருவிய வுருவமிங்கே மறைந்துபோ மற்ற யாக்கை
திருவுயர்ந் துலகமேத்தச் சிறந்துபின் னிற்குமன்றே.
(சூளாமணி)

(இவ்வதிகாரத்தின் தொகைப்பொருள்)

புகழ்பெறல் ஒன்றே இவ்வுலகில் ஒருவன் பிறந்துவாழ்ந்ததற்குப் பயன். புகழுடையொருவனை எல்லாரானும் போற்றப்படுவான். அந்தப்புகழ் ஒன்றே அழியாது நிற்கும். புத்தேளுலகமும் புகழுடையாரையே பேணிமகிழும். தமது உடல்விடுத்தேனும் மேலோர் புகழுடம்பெடுப்பர். புகழ்பெறாதவன் பிறத்தலினும் பிறவாமைநன்று. அவன் எல்லாரானும் இகழப்படுவான். எந்நலங்களைப்பெற்றிருப்பினும் ஒருவன் புகழ்பெறவில்லையானால் அவன் வசையுடையவனேயாவன். அவன் இருந்த நிலமும் விளைவு குறையும். புகழுடையவனே என்றும் உயிருடன் வாழ்பவன், இல்லாதவன் இறந்தவனேயாவன்.

24-வது புகழ் முற்றிற்று.

துறவறவியல்.

௨௫-ம் அதிகாரம் அருளுடைமை.

அருளாவது எல்லாவுயிர்களிடத்தும் இயல்பாகவே செல்லுகின்ற கருணை. சிறந்து புகழ்பெற வாழ்ந்து வருகின்றமேலோரிடமே பிறவுயிர்களைப் பேணும் இவ் அருளுடைமை உரிமையாக

அமைந்திருக்கும் ஆகலானும் இல்லறத்துக்கு அன்புடைமை போல் துறவறத்துக்கு இன்றியமையாச் சிறப்பினதாதலானும் இஃது ஈண்டு வைக்கப்பட்டது.

241. கொண்ட உடம்புங் கொடுத்தானேன் சீமூதன்
கொண்டான் அருளைக் குமரேசா—கண்ட
அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள (௧)

குமரேசா! சீமூதன் என்பவன் தன் உடம்பையுங் கொடுத்து ஏன் அருள்கொண்டான் எனின், செல்வத்துட் செல்வம் அருட்செல்வமே பொருட்செல்வம் பூரியார் கண்ணுமுள என்க.

பூரியார்—இழிந்தார். அருட்செல்வம்—அருளால் வருஞ் செல்வம்; அஃதாவது பிறவுயிர்களைப் பேணி அதனால் எய்தும் மேன்மை.

செல்வங்கள் பலவற்றுள்ளும் சிறந்த செல்வமாவது அருட்செல்வமேயாம்; பொருட்செல்வங்கள் இழிந்தாரிடத்தும் உள்ளன என்பதாம்.

புறத்தேயிருப்பதும் அழிவுள்ளதும் வருத்தத்தான் வருவதுமாகிய பொருட்செல்வத்தினும், அகத்தேயுள்ளதும் அழிவில்லாததும் இன்புறத்தோன்றும் இயல்பினதுமாகிய அருட்செல்வமே ஒருவனுக்குச் சிறந்ததென்க.

சிறியாரிடத்தும் பொருந்தி வறிதேயழியும் பொருட்செல்வத்தினும் பெரியாரிடத்தே தங்கி உயிர்கள் இன்புற வுயர்ந்தோங்கும் அருட்செல்வமொன்றே சிறந்ததாதலான் அதனையே ஒருவன் அடையவேண்டுமென்பது குறிப்பு.

பொருளுடையவரினும் அருளுடையவரே உயர்ந்தவர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை சீமூதன்பால் உணரப்படும்.

கதை.

சீமூதவாகனன் என்பவன் மகததேசத்திலிருந்த ஒரு மதிகுல மரபன். தன்னுயிர்போலவே மன்னுயிர் ஓம்பினான். மரம் செடி கொடி முதலிய ஓர் அறிவுயிர்கட்கும் யாரேனும் ஓர் ஊறு செய்யினும் இவன் விரைந்து சென்று அதனைப் பரிந்து அகற்றுவான். ஒருநாள் தனியாக ஒரு மலைச்சாரலை யடுத்தான். அங்கே கருடனுக்கும் நாகர்களுக்கும் ஏற்பட்டிருந்த உடன்படிக்கையின்படி ஒவ்வொருவராயும் வந்து உரிய இடத்தில் அமர்ந்திருக்கின்ற நாக குமாரனைக் கருடன் கவர்ந்து சென்று கொன்று தின்னும். சீமூதன் சென்றிருந்த அன்று முறைப்படி வந்து முன் தங்கியிருந்த ஓர் இளங்குமாரனைக் கண்டான். அங்கு நிகழுமியல்பினை அவனிடம் வினவி யோர்ந்தான். கலங்கி நிற்கும் அவனது நிலைமையை நினைந்து மிகவும் இரங்கினான். அவனைக் காக்க விரும்பி அவன் போர்வையைத் தன்மேல் போர்த்துக் குமாரனை யகன்று போம்படி செய்து தான் குறித்த இடத்தில் படுத்திருந்தான். பெரும்பசியோடு வந்து கருடன் இவனைக் கவர்ந்து சென்று தன் குல இடத்தில் களித்து நின்று தசை முழுவதையும் நசையுடன் உண்டது. அதன்பின் உற்றுநோக்கி வேறொருவன் என்று தெரிந்து நீ யார் என வினவியது. உயிர்நீங்கும் நிலையிலிருந்த சீமூதன் இயல்பினைத் தெய்வ அருளால் அது தெளிந்தது. கருடன் வருந்தி சீமூதன் முன்னை யுருவத்தை யெய்தும்படி திருமாலை வேண்ட அவனும் அடைந்தான். பொருட்செல்வத்தை ஒரு பொருளென மதியாது அருட்செல்வ மெய்திய இப்பேரறிவாளனை யாரும் போற்றினர். அது முதல் அக்கருடனும் கொலையினை யொழித்து அருளுடன் சென்றது. தயாவீரன் என்று வடமொழியில் இவன் போற்றப்படுகின்றான். விரிவை ஆண்டுக் காண்க.

அருட்செல்வமே எல்லாவற்றினுஞ் சிறந்தது என்பது இதனால் கூறப்பட்டது.

242. ஏனோ அருளொன்றே இன்றுணையாக் கொண்டுநின்றார்
கோனான புத்தர் குமரேசா—தானாக
நல்லாற்றான் நாடி யருளாள்க பல்லாற்றாற்
அஃதே துணை. (2)

-ள.

குமரேசா! புத்தர் அருள் ஒன்றையே துணையாகக்கொண்டு என் உறுதியாக நின்றார் ஆதலின், நல்லாற்றான் நாடி அருள் ஆள்க; பல் ஆற்றான் தேரினும் அஃதே துணையாம் என்க.

அஃதே—அவ் அருளே.

நல் ஆற்றான்நாடி—நல்ல நெறியிலே நின்று ஆராய்ந்து. பல் ஆற்றான்—பலவழிகளாலும்; அஃதாவது மதவேறுபாடு நூல் வேறுபாடு மக்களுடைய உணர்ச்சி வேறுபாடு முதலிய எல்லாவற்றாலும்.

நன்றான நெறியிலே நின்று எவ்வகையாக ஆராய்ந்து தேரினும் அருள் ஒன்றே உயிர்க்கு உறுதுணையாக நிற்கும் ஆகலான் அதனையே ஒருவன் தனக்கு உரிமையாகக்கொண்டு ஒழுகவேண்டும் என்பதாம்.

துணைபோல் காணப்படும் மனைவி மக்கள் ஒக்கல் பொருள் முதலியன எல்லாம் மெய்யாக ஆராயின் பொய்யாகமுடியும் என்பதும், அருள் ஒன்றே உயிர்த்துணையாய் ஒன்றி நிற்கும் என்பதும், அஃதே என்னும் பிரிநிலை ஏகாரத்தால் உணரப்படும்.

மேல், பொருளினும் அருளே சிறந்தது என்றார் இதில் அஃது என்றும் நீங்காது நின்று உதவும் என்றார்.

அருளுடையனாக ஒருவன் ஒழுகவேண்டுமென்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை புத்தர்பால் உணரப்படும்.

கதை

புத்தர் என்பவர் இற்றைக்கு இரண்டாயிரத்தைநூறு வருடங்கட்கு முன்னர் இப்பரத கண்டத்தின் வடபாகத்தில் கங்கை

யின் கிளைநதியாகிய உரோகிணி என்னும் நதிக்கரையில் விளங்கியிருந்த கபிலபுரம் என்னுந் திருநகரிலே அரசு புரிந்த சுத்தோதனன் என்னும் அரசனுக்குத் திருமகனாயவதரித்தார். இவர் தாய் பெயர் மாயாதேவி. மகன் பிறந்த ஏழாம்நாள் இவள் இறந்தாள். சித்தார்த்தன் என்று முதலில் இவர் பெயரிடப்பெற்று வளர்ந்து பருவமுற்றார். பலகலைகளையும் வழுவறக்கற்றார். இவரது உருவ அமைப்பும் வனப்பும் குணங்களும் காண்பவரெவர்க்கும் பெருங்களிப்பூட்டின. பேரருளுடையவர். சீரியபிராணிகள், சிறிது வருந்தினும் உடல் நடுங்கி இவர் உள்ளம் பதைப்பர். தேவதத்தன் என்னும் தன் மைத்துனனோடு ஒரு பூஞ்சோலையில் இவர் உலாவிக்கொண்டிருந்த பொழுது ஒரு பறவையை அவன் எய்தான். அது தரையில் விழுந்தது. உடனே இவர் உளங்கரைந்து ஓடியெடுத்து அதன் உடலில் பட்டுள்ள அம்பைப் பெயர்த்தெறிந்து தனது அழகிய வாயால் ஊதி யூதி அதன் நோவை யாற்றினார். அது கலங்குவதைக்கண்டு இவர் கண்ணீர் சொரிந்தார். அது பிழைத்துச் சென்றபின் பெருமகிழ்வுற்றார். தேவதத்தனும் இவரது அருளுடைமையறிந்து பெரிதும் நாணினான். நோய்வாய்ப்பட்ட ஒருவனையும், முதிர்ந்து தளர்ந்த மற்றொருவனையும், இறந்துகிடந்த வேறொருவனையும், ஒருநாள் இவர் கண்டார். இரங்கினார். பிணி மூப்புச் சாக்காடு நீப்பதென்று இவ்வுலகை வெறுத்தார். பெருந்திருவையும் அரம்பையரினும் சிறந்த அழகியாகிய யசோதரை என்னுந்தனது அருமை மனைவியையும் துறந்து அருளே துணையாகத் தவம்புரிந்தார். அதன் பின் இவர் புத்தர் எனப் பெயர் பெற்றார்.

இதன் விரிவை நீலகேசி முதலிய நூல்களிற் காண்க.

அருளொன்றே உயிர்த்துணை என்பது இதனால் கூறப்பட்டது.

243. நாடொறு நாட்டொண்ட நல்லருளால் துன்பகன்று
கூடினனின் பெண்ணே குமரேசா — தேடும்
அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை யிருள்சேர்ந்த
இன்னா வுலகம் புகல். (௩)

இ—ள்

குபேரசா! நாடன் என்பவன் ஒருநாள் கொண்ட அருளினால் ஏனை துன்பமடையாது இன்பமெய்தினான் எனின், இருள் சேர்ந்த இன்னா உலகம் புகுதல் அருள் சேர்ந்த நெஞ்சினார்க்கில்லை எனக.

இருள்சேர்ந்த இன்னா உலகம்—இருள் நிறைந்த துன்பவுலகம்.

அஃதாவது ஒருவனை நரகத்தை நரகமாவது பாவிகள் தமது தீவினைப்பயனாகிய துன்பங்களை அநுபவித்துக் கழித்தற்குரிய இடம். அது, கோரம், அதிகோரம், பயம், ரௌரவம், காலம், கும்பிபாகம், தமசு, எனப்பலவகைப்படும். அவற்றுள் இங்கே குறிக்கப்பட்டது தமசு என்க. இது எப்பொழுதும் மிக நெருங்கிய இருளையுடையதாய்த் தன்னை அடைந்தவர்க்குப் பொறுத்தற்கரிய துன்பத்தைக் கொடுத்து நிற்கும்.

அருள் நிறைந்த நெஞ்சினையுடையார்க்கு இருள் செறிந்த துன்பவுலகமென்னும் நரகம் புகுதல் இல்லை என்பதாம்.

அருளுடையார்க்கு நரகம் இல்லையென்க. எனவே அருள் இல்லார்க்கு அஃது உண்டு என்பது பெறப்படும்.

மேல், அருளே ஒருவனுக்குத் துணை என்றார் இதில் அதனையுடையார் மறுமையில் அடையும் பயனையுணர்த்தினார்.

அருள் சேர்ந்த நெஞ்சினை அடைந்தபின் ஒருவன் நரகினை யடையான் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை நாடன்பால் உணரப்படும்.

கதை

நாடன் என்பவன் நிடதமலை யருகில் கானதம் என்னும் ஊரில் இருந்த ஓர் வேடன். இவன் தனது குலமுறைமைப்படி அம்மலைச்சாரலில் வேட்டையாடச் சென்றான். அங்குக்கும்பலாய் இருந்த புறாவின் கூட்டங்களில் ஓர் அம்பை எய்தான்.

அதனால் ஐந்து புறாக்கள் சோர்ந்து விழுந்தன. அவை சிறையடித்துத்துடிப்பதை இவன் அருகணைந்து கண்டான். உடனே உள்ளங்கலங்கிக் கண்ணீர் சொரிந்தான். எவ்வளவு கொடுமை செய்தேன் என்று ஏங்கியிரங்கினான். தன் வில்லை முறித்து வீசியெறிந்தான். தன் பிறவியை வெறுத்தான். அன்றுமுதல் எவ்வுயிர்க்கும் தீங்கு செய்வதில்லையென்று துணிந்தான். அருள் சேர்ந்த நெஞ்சினனாய் ஆருயிரோம்பினான். முழுவின்பமே முடிவில் அடைந்தான். அருள் சேர்ந்த நெஞ்சினனுக்கு இருள் நரகம் புகுதல் இல்லை என்பதை உலகம் இவன்பால் உணர்ந்தது அருளுடையார்க்கு நரகம் இல்லையென்பது இதனால் கூறப்பட்டது

244. அன்றுநஞ்சை யுண்டும் அல்லலின்றி யேன்வசவர்
குன்றா இன் புற்றார் குமரேசா — என்றுமே
மன்னுயி ரோம்பி யருளாள்வாற் கில்லென்ப
தன்னுயி ரஞ்சும் வினை. (௪)

இ—ள்.

குமரேசா! வசவர் நஞ்சை யுண்டும் துன்பமின்றி ஏன் இன்பமெய்தினர் எனின், மன் உயிர் ஓம்பி அருள் ஆள்வாற்கு தன் உயிர் அஞ்சும் வினை இல்லை என்க.

மன்னுதல் — நிலைத்தல். மன் என்னும் அடையான் உயிரினது நித்தியத் தன்மை உணரப்படும்.

அருள் ஆள்வாற்கு — அருளையுடையவனுக்கு.

நிலைபெற்ற உயிர்களைப் பேணி அருளைத் தனக்கு என்றும் உரிமையாக உடையவனுக்குத் தன் உயிர் அஞ்சுதற்கு ஏதுவாகிய [illegible] உண்டாகாதென்பதாம்.

பிறவுயிர்கள் அஞ்சுதற்கேதுவாகிய கொடுவினையை ஒருவன் செய்யின், பின் அவன் அஞ்சும்படி வந்து பற்றி அஃது அவனை வருத்தும் என்பது குறிப்பு.

அருளுடையவனுக்கு அஞ்ச வருவதொரு துன்பம் யாண்டும் இல்லை என்பது கருத்து. இவ்வுண்மை கேசவதேவர் பால் உணரப்படும்.

கதை.

கேசவதேவர் என்பவர் வடநாட்டிலே மங்களாபுரி என்னும் நகரிலே [illegible] என்பவருக்குப் புதல்வராயிருந்தார். தாய் பெயர் [illegible]குமாரிகை இவர், நங்காம்மை என்னும் ஒரு கன்னியை மணந்து இல்வாழ்க்கையிலிருந்தார் பிறிதின் நோயைத் தன் னோய்போல் போற்றும் பேரருளுடையவர். செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருக்கும் பெருவண்மையுடையவர். இவர் இல்லில் இலக்கத்தெண்பதினாயிரம் அடியவர் ஒரு நாள் உண்டு களித்தார். கொடியவரிருவர் கள்ள வேடந்தரித்து நல்ல அடியவர் போல் அவர் வரிசையில் மெல்லப் புகுந்து உண்ணத் துணிந்தார் உண்மை தெளிந்து அவரைப் பிறர் அடிக்கச் சென்றார். இவர் தடுத்து அவ்வேடதாரிகளை மெய்யடியவராகப் பாவித்து நல்லுணவூட்டி அனுப்பினார். இவர் மீது பொறாமையுற்ற அரசன் ஒருவன் இவருக்கு நஞ்சை யூட்டினான். அதனை யுண்டும் அல்லலின்றி யிருந்தார். வெகுண்டு வந்த வெய்ய புலி யொன்று இவரைக் கண்டதும் மெய் வணங்கி நின்றது. அஞ்சுதற்கேதுவாகிய தீவினை ஒன்றுமின்றி இவர் இன்புற வாழ்ந்தார். அருளுடையார்க்கு அஞ்ச வருந் துன்பம் இல்லை யென்பதை உலகம் இவர் பால் ஓர்ந்தது. (இதன் விரிவை வசவ புராணத்தில் காண்க)

தன்னுயிர் தான்பரிந் தோம்பு மாறுபோல்
மன்னுயிர் வைகலும் ஓம்பி வாழுமேல்
இன்னுயிர்க் கிறைவனாய் இன்பமூர்த்தியாய்ப்
பொன்னுயி ராய்ப்பிறந் துயர்ந்துபோகுமே.

(சீவக சிந்தாமணி.)

அருளுடையானுக்குத் தீவினை யில்லை யென்பது இதனால் கூறப்பட்டது.

245. கண்ட திருக்குறிப்பார் கல்லின்மேல் பாய்ந்துமல்லல்
கொண்டிலர் முன் என்னே குமரேசா—மண்டுகின்ற
அல்லல் அருளாள்வார்க் கில்லை வளிவழங்கும்
மல்லன்மா ஞாலங் கரி. (ரு)

குமரேசா! திருக்குறிப்புத் தொண்டர் கல்லின் மேல் பாய்ந்தும் ஏன் அல்லல் கொள்ளவில்லை எனின், அருள் ஆள்வார்க்கு அல்லல் இல்லை என்பதற்கு வளி வழங்கும் மல்லல் மா ஞாலமே கரி என்பதாம்.

ஞாலம் என்பது ஆகு பெயராய் அதில் வாழ்கின்ற மக்களைச் சுட்டி நின்றது.

வளி வழங்கும் மல்லல் மா ஞாலம்—காற்று இயங்குகின்ற வளப்பத்தையுடைய பெரிய உலகத்தாரே சாட்சி. வளி—காற்று. மல்லல்—வளம். மா—பெருமை. ஞாலத்துக்கு அடையாய் நின்ற வளி, மல்லல், மா, என்னும் இம்மூன்றும் முறையே ஒன்றற்கொன்று ஏதுவாதலை யுய்த்துணர்க.

அருளுடையார்க்கு அல்லல் இல்லை; அதற்குச் சான்று, காற்று உலாவுகின்ற வளமுடைய பெரிய உலகத்தில் வாழ்வாரேயாவர் என்பதாம்.

பிறர்க்கு அல்லலைச் செய்தவரே அல்லலை அடைவர்; அருளுடையார் அதனை யாண்டும் செய்யாராதலான் அஃது அவர்க்கு இல்லையாயிற்று; இல்லாததொன்று என்றும் எவராலும் காணப்படாது; ஆதலான் அதனைக் கண்டு கூறுதற்கு உரியார் ஒருவரும் இலர் என்னும் துணிவால் "ஞாலங் கரி" என்றார்.

அருளுடையொருவன் அல்லலையடைந்தான் என்று உலகத்தில் ஒருவருங் கண்டதில்லை என்பது குறிப்பு.

அருளுடையான் தானே வலிந்து அல்லலை அடையவிரும்பினும் அஃது அவனை யடையாது என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ் வுண்மை திருக் குறிப்புத் தொண்டர் பால் காணப்படும்.

கதை

திருக்குறிப்புத் தொண்டர் என்பவர் அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவர். தொண்டை நாட்டிலே காஞ்சி மாநகரிலே பிறந்தார் இவர், ஆடை யொலிக்கும் வண்ணார் மரபினர். எவ்வுயிர் மாட்டுங் கண்ணோட்டமுடையவர். தம்மால் இயன்றவாறு பிறர்க்கு உதவி புரிந்து வந்தார் மன்னுயிர் ஓம்பி அருள்புரிந்து வரும் இவரது பெருந் தன்மையை உலகினுக் குணர்த்த விரும்பி இறைவன் ஓர் அடியவர் போல் வந்தார். குறிப்பு அறிந்து உதவி புரியும் இவர், அவரைக் கண்டார். அவரது மாசு படிந்த ஆடையை வாங்கி வெளுத்துத் தர விரும்பினார் வேண்டப் பெற்று வெளுத்து நிற்குங்கால மழை விடாது பெய்தது. குளிரால் நடுங்குவது போல் அவர், உடல் ஒடுங்கினார். அவரது மெய் நடுங்கும் பொய்த் துன்பத்தைக் கண்டு இவர் பொறாது வருந்தினார். அவரைப் பேண முடியவில்லையேயென்று நாணிக் கல்லின்பாற் கடுகப் பாய்ந்தார். நில்லென இறைவன் ஒல்லெனத் தோன்றி யின்னருள் புரிந்தே தன்னுருங் காத்தார் கல்லிடை மோதியும் இவர் அல்லலில்லாதவராய் அகமகிழ்வெய்திப் பின் பேரின்ப மெய்தினார் குறிப்பறிந்து பிறவுயிர்கட்கு அருள்புரிந்தமையால் இவர் திருக் குறிப்புத் தொண்டர் எனப் பெற்றார். அருளாளவர்க்கு அல்லல் இல்லையென்பதை இவர் அன்று காட்டி நின்றார். இதன் விரிவைப் பெரிய புராணத்தில் காண்க.

அருளுடையார்க்கு அல்லல் இல்லை என்பது இதனால் கூறப்பட்டது.

---

246. அன்றேன் சமணர் அருணீங்கி யல்ல செய்தார்
குன்றினார் பின்பேன் குமரேசா—அன்றும்
பொருணீங்கிப் பொச்சாந்தா ரென்பர் அருணீங்கி
அல்லவை செய்தொழுகு வார். (௬)

இ—ள்.

குமரேசா! முனைவர் அருளை ஒழிந்து அல்லன செய்த சமணர் என் பின்னர் அழிந்தார் எனின், அருள் நீங்கி அல்லவை செய்து ஒழுகுவார் பொருள் நீங்கிப் பொச்சாந்தார் என்பர் என்க.

அல்லவை—கொடுமைகள். பொச்சாப்பு—மறதி, நீது.

பொருள் என்றது இங்கே உறுதிப் பொருளாகிய அறத்தை என்க. மெய்ப் பொருள் எனினுமாம். பொச்சாந்தார்—மறந்தவர்.

அருளைத் தவிர்ந்து கொடுமைகளைச் செய்து ஒழுகுவோர் உறுதிப் பொருளை இழந்து தாம் பின் வருந்துகின்றமையை மறந்தவர் என்று நல்லோர் சொல்லுவர் என்பதாம்.

அருளிழந்து தீமைகளைச் செய்வோர் பொருளிழந்து பின் கெடுவர் எனவும் இது பொருள்படும்.

பிறர்க்குத் தீமை செய்யின் அது, தமக்கே யாம் என்பதை மறவாதவர் அருள் நீங்கி அல்லவை செய்யார்; ஆதலான் செய்தொழுகுவார் பொச்சாந்தார் என்க.

அருளில்லாதவர் அறமும் பொருளும் இழந்து பெருந் துன்பம் அடைவர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை சதமன் சமன் முதலிய சமணர் பால் காணப்படும்.

கதை.

இற்றைக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் பாடலிபுரத்தில் சமணர் பலர் குழுமி இருந்தனர். அவரனைவருங் கொல்லா விரதங் கொண்டவராயிருந்தும் செற்ற மிகுதியால் அருள் நீங்கி திருநாவுக்கரசு நாயனாருக்குக் கொடுமைகள் பல செய்தனர். அதன் பயனாக உறுதிப்பொருள் முழுதும் இழந்து அல்லலையடைந்தார். அவருட் சிறந்தவராயிருந்த சதமன் சயன் முதலிய குருமார் பலரையும் உண்மை தெளிந்த அந்நாட்டு வேந்தன் ஒறுத்தகற்றினான் அது முதல் அவரெல்லாரும் சிதறுண்டு அழிந்தார்.

அருள் நீங்கினார் பொருள் நீங்கிப் புன்மையுறுவர் என்பதை உலகம் இவர் பாலோர்ந்தது.

(இதன் விரிவை அவர் சரிதையில் காண்க)

அருளில்லாதவர் உறுதிப் பொருளையிழந்து பின் வருந்துவர் என்பது இதனால் கூறப்பட்டது.

247. அன்றநளில் காமந்தன் அவ்வுலகில் இன்பமின்றிக்
குன்றிநொந் தான்என்னே குமரேசா - நன்றாம்
அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க்
கிவ்வுலக மில்லாகி யாங்கு (௭)

குமரேசா! காமந்தன் என்பவன் அவ்வுலகில் இன்பம் சிறிதும் பெறாமல் ஏன் பெரிதும் வருந்தினான் எனின், பொருள் இல்லார்க்கு இவ்வுலகத்தில் இன்பம் இல்லையானாற் போல அருள் இல்லார்க்கு அவ்வுலகில் இன்பம் இல்லை என்க.

அ என்னும் சேய்மைச் சுட்டு துறக்கத்தைச் சுட்டி நின்றது. முத்தியை எனினுமாம். அவ்வுலகம் இவ்வுலகம் என்பன இடவாகு பெயர்களாய் ஆண்டும் ஈண்டும் அனுபவிக்கப்படும் இன்பங்களைக் குறித்து நின்றன.

இல் ஆகி ஆங்கு—இல்லையாயினாற்போல்.

பொருள் இல்லாதவர்க்கு இவ்வுலகத்தில் இன்பம் இல்லையாயினாற்போல அருள் இல்லாதவர்க்கு அவ்வுலகில் இன்பம் இல்லை என்பதாம்.

பொறிகளின் நுகர்ச்சிக்குரிய உணவு உடை முதலியன எல்லாம் பொருளானே உளவாம்; அஃதொன்று இல்லையானால் அவை யாவும் இலவாம்; ஆதலான் பொருள் இல்லார்க்கு இவ்வுலகத்து இன்பம் இல்லையாயிற்று என்க.

அவ்வுலக இன்பங்கட்கு அருளே காரணம் என்பதை உணர்த்துதற்குப் பொருளை எடுத்துக் காட்டினார். அதன் இயல்பு எல்லார்க்கும் எளிதில் தெரியும் என்பது கருதி.

அருளில்லாதவனுக்கு அவ்வுலகத்து இன்பமில்லை யென்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை காமந்தன்பால் காணப்படும்.

கதை.

காமந்தன் என்பவன் சித்துருவன் என்னும் ஒரு தனவணிகன் புதல்வன். தாய் பெயர் சுலோசனை. இவன், ரூபிணி என்னும் ஒருத்தியை மணந்து இல்வாழ்க்கை புரிந்தான். பொருள் வளமுடையவனாயிருந்தும் உளத்தில் அருள் சிறிதும் இலனாய் உயிர்களுக்கு அல்லலே செய்தான். வேதியனொருவனைத் தீதுறக் கொன்றான். தன் செல்வமெல்லாமிழந்தான். பின், பசிநோயால் மெலிந்து முன்னைய நிலைமையை யெண்ணி யெண்ணி யேங்கினான். இறுதியில் இறந்தொழிந்தான்' அவ்வுலக இன்பம் இலனாய் நரகில் பெருந்துன்பமெய்தினான். பொருளுடையனாய் இங்குப் பெருமை யெய்தியிருந்த இவன் அருளின்மையால் அங்குச் சிறுமையே யடைந்தான். (இதன் விரிவை விநாயக புராணத்தில் காண்க)

அருளில்லாதவனுக்கு மறுமை யின்பமில்லை யென்பது இதனால் கூறப்பட்டது.

248. அற்றபொருள் பூத்தார்பின் ஐவரந்த நூற்றுவரேன்
குற்றமுற்றே தாழ்ந்தார் குமரேசா—உற்ற
பொருளற்றார் பூப்ப ரொருகால் அருளற்றார்
அற்றார்மற் றாத லரிது. (அ)

இ—ள்.

குமரேசா! முன் இழந்த பொருளைப் பின் ஐவர் பெற்றன் நூற்றுவரும் குற்றமுற்றே தாழ்ந்தார் எனின், பொ

ருள் அற்றார் பூப்பர் ஒருகால் அருள் அற்றார், அற்றார் மற்று ஆதல் அரிது என்க. பூப்பர்—தோன்றி விளங்குவர்.

அருள் அற்றார் அற்றார் மற்று ஆதல் அரிது—அருள் இல்லாதவர் அழிந்தாரே யாவர் பின் என்றும் ஆதல் இல்லை.

மற்று என்பது அற்றார் என்னும் வினைக்கு மறுதலையாய் ஆனார் என்பதை விளக்கி நின்றது ஆகலான் அஃது இங்கு வினைமாற்றின் கண் வந்தது. மற்று ஆதல் அரிது—அழியாமல் ஆதல் இல்லை.

பொருளை இழந்தவர் பின் அதனை ஒருகால் பெறினும் பெறுவர் அருளை யிழந்தவர் அழிந்தாரே யாவர் பின் என்றும் ஆதல் என்பதாம்.

இம்மை மறுமை இன்பங்கட்குப் பொருளும் அருளும் முறையே காரணமாமென்று மேலே கூறினார் இதில் அதனினும் இது சிறந்ததெனபதை ஏதுவான் விளக்கினார்.

பொருள் இல்லாதவன் அதனையுடையார் எய்தும் பெருமையையுணர்ந்து தானும் முயன்று ஒருகால் அதனைப் பெறுதலுங் கூடும்; அருளில்லாதவன் கொடுமையே மிகுந்து தெளிவொன்றுமின்றி முடிவில் அழிவையெய்தி ஒழிவான் என்பதாம்.

வறியர் பொருள் பெறினும் கொடியர் நலமடைவதில்லை என்பது கருத்து. இவ்வுண்மை ஐவர்பாலும் நூற்றுவர் கண்ணும் அறியப்படும்.

கதை 1.

தருமர் முதலிய ஐவரும் நாடிழந்து காடுறைந்து வாடியிருந்தார். பதின்மூன்று வருடங்கழிந்தபின் இழந்த பொருளெல்லாம் எய்தப்பெற்று இன்புற்று வாழ்ந்தார்.

கதை 2.

துரியோதனன் முதலாயினோர் பொருளுடையராய் இருந்தும் அருள் இல்லாராயினர். அதனால் எல்லாராலும் இகழப்பட்டு இழிந்தார். பெருமையெல்லாம் இழந்தார். சிறுமைமுழுதும் அடைந்தார். இறுதியில் இழிவையெய்தியழிந்தார். அவ்வுலகத்து இன்பம் யாதும் இன்றி நரகத்துன்பத்தையே நண்ணி நைந்தார். பொருள் அற்றார் ஒருகால் பூப்பர் என்பதும் அருள் அற்றார் பின் ஆதல் அரிது என்பதும் முறையே இவ்விருதிறத்தார்கண்ணும் உலகம் கண்டு தெளிந்தது

(விரிவு அவர் சரிதையில் தெளிவாம்.)

கலையெலாம் உணர்ந்தா னேனுங் கரிசறத் தெளிந்தா னேனும்
மலையென உயர்ந்தா னேனும் மனமய லகன்றா னேனும்
உலகெலாம் புகழப் பல்லோர்க் குதவிய னைய னேனும்
இலகிய இரக்க மின்றேல் எழுநர கடைவ னன்றே.

(பதிபசு பாசவிளக்கம்.)

அருளில்லாதவர் இழிவையெய்தி அழிவார் என்பது இது கூறப்பட்டது.

249. அன்றுசதா னீகன் அறஞ்செய்தும் வனிழந்து
குன்றினன் இன்பம் குமரேசா—என்றும்
தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேரின்
அருளாதான் செய்யும் அறம். (௯)

குமரேசா! சதானீகன் என்பவன் அறஞ்செய்திருந்தும் ஏன் அதன் பயனையிழந்து துன்பம் எய்தினன் எனின், அருளாதான் செய்யும் அறம் தேரின், தெருளாதான் மெய்ப்பொருளைக் கண்டற்று என்க,

அருளாதான் — அருளில்லாதவன்.

தெருளாதான்— அறிவில்லாதவன்.

கண்டு அற்று— அறிந்தாற் போலும்.

மெய்ப்பொருள் என்றது மெய்ந்நூல்களில் சொல்லப்படுகின்ற உண்மைப் பொருளை: நூற்பொருள் எனக. பரம்பொருளுமாம்.

அருள் இல்லாதவன் செய்யும் அறத்தை ஆராயின் தெளிவான அறிவில்லாதவன் நூற்பொருளை அறிந்தாற்போலும் என்பதாம்.

தெளிந்த அறிவில்லாதவன் ஒருகால் மெய்ப்பொருளைக் காணினும் அஃது அவனுக்கு நிலையாததாற்போல நிறைந்த அருளில்லாதவன் அறஞ்செய்யினும் அதன் பயனை அவன் அடையான் என்பது கருத்து.

ஒருவன், புறத்தில் எத்துணை அறஞ்செய்யினும் அகத்தில் அருளில்லையானால் அதனால் அவனுக்கு யாதும் பயனில்லை என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை சதானீகன் பால் உணரப்படும்.

கதை.

சதானீகன் என்பவன் நாவலந்தீவின் மேல்பாகத்திலிருந்து அரசுபுரிந்த ஒரு முடிபுனை மன்னன். பெருவலி படைத்து நெறியுடன் ஆண்டவன். செயற்கரும் வேள்விகள் பல செய்து முடித்தான். அன்னதான முதலிய சிறந்த அறங்களைச் செய்தான். ஆயினும் குடிகளை வருத்திப் பெரும்பொருள் ஈட்டினான். இவனது அருளின்மையை நினைந்து அறிஞர்பலர் வருந்தினார். அதன் பயனாக இவன் அறப்பயனை இழந்தான். இறந்தபின் நரக துன்பத்தை யெய்தினான். அருந்தவராகிய பார்க்கவ முனிவர் எமபுரம் சென்றிருந்தபொழுது இவனைச் செக்கிலிட்டு எமபடர் சிதைப்பதைக் கண்டார். முனிவர் வருந்தி யருகில் அணைந்தார்.

அரசே! நீ அறம் பல புரிந்தும் என் இப்பெருந்துயருறுகின்றாய் என்றார். முன்னர் அருந்திறலும் பெருந்திருவும் பெற்றிருந்தும் அருளிலனாயினேன். அதனால் எனது அறப்பயன் முழுதையும் இழந்து இப்பெருந்துயருழந்து பேதுறுகின்றேன் என்றான். முனிவர் இரங்கி இந்நிலவுலகில் வந்து அவன் மகனைச் சதுர்த்தசி விரதம் கொள்ளச்செய்து அதனால் அவன் துயரொழிந்து உயர் நிலையடையும்படி செய்தார். அருளில்லாதவன் அறஞ்செய்யினும் அதனால் அவன் பயன் எய்தான் என்பதை உலகம் இதன்பால் உணர்ந்தது. (இதன் விரிவைச் சிவபுராணத்தில் காண்க)

அருளில்லாதவன் அறம் புரியினும் அஃது அவமே அழியுமென்பது இதனால் கூறப்பட்டது.

250. தாசரதி முன்பரசு ராமன் தனைநினைந்து
கூசினன் பின்போன் குமரேசா—கூசும்
வலியார்முற் றன்னை நினைக்கதான் தன்னின்
மெலியார்மேற் செல்லு மிடத்து. (ம)

இ—ள்

குமரேசா! தசரத ராமன் முன், பரசுராமன் தனது நிலையினையுணர்ந்து பின் யார்மாட்டும் தீதுசெய்யாமல் ஏன் அடங்கினான் எனின், வலியார்முன் தன்னை நினைக்க தன்னின் மெலியார்மேல் தான் செல்லும் இடத்து என்க.

தன்னை நினைக்க—தனது நிலையினை எண்ணுக.

தன்னினும் வலியார், தன்னை நலிய வரும்பொழுது தான் அவர் முன் அஞ்சி நிற்கும் நிலையினை ஒருவன், தன்னினும் மெலியார்மேல்தான் நலியச்செல்லும்பொழுது நினைக்கவேண்டும் என்பதாம்.

உடற்குத் துணையாகிய பொருள் முயற்சியாலும், உயிர்க்குத் துணையாகிய அருள் உணர்ச்சியாலும் உண்டாம் என்பது கருத்து

பிறர் தன்னை வருத்தவருங்கால் தன நெஞ்சம் பதைப்பதை ஒருவன் உய்த்துணர்வனாயின் அவன் பிறவுயிர்களை நலியத்துணியான் என்பது கருதி "வலியார் முன் தன்னை நினைக்க" என்றார்.

அருளுடைமையை ஒருவன் அடைதற்கு இது வழியாமென்க.

தன்னுயிர்ந்த இன்ப நிலையை ஒருவன் உணர்ந்தபின் பிறவுயிர்கட்கு அவன் துன்பம் புரியான் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை பரசுராமன்பால் உணரப்படும்.

கதை.

பரசுராமன் என்பவர் சமதக்கினி முனிவரது தலைமைப் புதல்வர். மாலின் கலையாய் வந்தவதரித்தவர். அருந்தவமும் பெருந்திறலும் அஞ்சா நெஞ்சமும் அமையப்பெற்றவர். சூரிய குலத் தோன்றலாகிய கார்த்தவீரியனை இவர் கொன்றாரென்று தெளிந்து அவன் புதல்வராகிய சயகதுவசன் வீரசேனன் என்னும் இருவரும் வந்து இவரது தாதையைக் கொன்று சென்றார். அதனால் இவர் பெருஞ்சினங்கொண்டார். அக்குல முதல்வர் எல்லாரையுங் கொன்று தொலைத்தார். இருபத்தொரு தலைமுறையாகக் கருவறுத்து வந்த இவர், தசரத இராமனையுங் கண்டு சினந்தார். அப்போர் வீரனால் இவர் வன்மை முழுவதும் இழந்து புன்மையடைந்தார். அவர் முன் அஞ்சி நின்று நெஞ்சம் பதைத்தார். அவரது பேராற்றலை வியந்து தொழுது விடைகொண்டு சென்றார். அதுமுதல் தன்னின் மெலியாரை நலியச் செல்லும் கொடுமை நீங்கினார். அருளுடையராய் அருந்தவம் புரிந்தார். வலியார் முன் தன் நிலைமையை நினைந்தவன் மெலியார்மேல் தான் நலியச் செல்லான் என்பது இவர்பால் தெளிய நின்றது.

(இதன் விரிவை இராமாவதாரத்தில் காண்க.)

இறப்ப நமக்கடுத்த எவ்வலோ யாவும்
பிறர்க்குமவை தாமென்று கொண்மின்—உறக்கருதி
எவ்வா றுமக்குறுதி யெண்ணுதிர்நீர் எல்லார்க்கும்
அவ்வாறே எண்ணல் அறம். (பெருந்தேவனார்.)

பொருளுடையான் கண்ணதே போகம் அறனும்
அருளுடையான் கண்ணதே யாகும் — அருளுடையான்
செய்யான் பரிபவம் சேரான் புறமொழியும்
உய்யான் பிறசெவிக் குய்த்து. (சிறுபஞ்சமூலம்)

தன்னுயிரைப் போலவே பிறவுயிர்களையும் பேணவேண்டுமென்பது இதனால் கூறப்பட்டது.

இவ்வதிகாரத்தின் தொகைப்பொருள்.

அருளுடைமையே செல்வங்களெல்லாவற்றினும் ஒருவனுக்குச் சிறந்த செல்வம். அருளே உயிர்க்கு உறுதுணை. அருளையுடையார்க்கு நரகம் இல்லை. அவர் அஞ்சத்தக்க துன்பம் யாண்டும் இல்லை. அவர்க்கு இம்மையில் அல்லல் எதும் இல்லை. அருளிழந்து அல்லவை செய்வோர் பொருளிழந்து பொச்சாப்புச் செய்தவர். அருளில்லார்க்கு அவ்வுலகத்து இன்பம் இல்லை. அருளிழந்தவர் அழிவே எய்துவர். அருளில்லாதவன் செய்யும் அறமும் பழுதாம். தன்னுயிர்போலவே பிறவுயிர்களையும் பேணவேண்டும்.

25-வது அருளுடைமை முற்றிற்று.

உ௬-ம் அதிகாரம் புலான் மறுத்தல்.

அஃதாவது ஊன் உண்ணாமை. புலால்—ஊன். மறுத்தல்—உண்ணாது விடுதல். தன்னுயிரைப்போலவே பிற உயிர்களையும் பேணும் அருளுடையார் கண்ணேதான் இவ்வுயர் நலம் இயல்புற அமையும், ஆகலான் அதன்பின் இது வைக்கப்பட்டது.

251. அன்றேன் அருளின்றி ஆதனென்பான் அன்றிலொன்றைக்
கொன்று சிதைந்தான் குமரேசா— நன்றாகத்
தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிதூன் உண்பான்
எங்ஙனம் ஆளும் அருள். (க)

குமரேசா! மருவிமகிழ்ந்த அன்றில் பறவையை ஏன் ஆதன் என்பவன் அருள் இல்லாமல் கொன்றான் எனின், தன் ஊனைப் பெருக்குதற்குத்தான் பிறிதின் ஊனை உண்பான் அருளை எங்ஙனம் ஆளும் எனக.

பசுவை உணர்த்தும் ஆ என்னுஞ்சொல் ஆன் என நிற்றல் போல் ஊ என்னும் நெட்டெழுத்தே ஒரு மொழியாய் அமைந்து தசையை உணர்த்தி னகரச்சாரியை பெற்று ஊன் என நின்றதெனக. ஊ என் ஒரு பெயர் ஆவொடு சிவணும்.

(தொல்காப்பியம்)

தன் ஊன் பெருக்கற்கு = தன் உடம்பைப் பருக்கச்செய்தற்கு.
பிறிது ஊன் உண்பான் = பிறிதொன்றின் உடம்பைத் தின்பவன்.
அருள் எங்ஙனம் ஆளும் = அருளை எவ்வகையான் ஆள்வான்?

எங்ஙனம் என்னும் வினா எதிர்மறைமேல் நின்றது.

தன் உடம்பைப் பருக்கச் செய்வதற்குப் பிறிதொன்றின் உடம்பைத் தின்பவன் எவ்வகையால் அருளினை ஆள்வான் என்பதாம்.

ஊனை உண்பவன் ஒருவகையானும் அருளினை உடையவனாகான் என்பது குறிப்பு.

தம் உடம்பைத் தாம் பேணுமாறு போல் பிறவுயிர்களும் அவற்றின் உடம்புகளைப் பேணுமே யென்னும் உணர்வில்லாமல் அவற்றைச் சிதைத்துத் தின்னும் கொடியோர்பால் அருள் ஒரு சிறிதும் உண்டாகாதென்பதாம்.

ஊனை உண்போன் அருளுடையனாகானா? என்பாரை நோக்கி இது கூறியுள்ளதாக அமைந்தமை காண்க.

புலாலுண் போன் இரக்கமின்றி உயிர்களை வருத்துவான் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை ஆதன்பால் அறியப்படும்.

கதை.

ஆதன் என்பவன் ஏமகூடம் என்னும் மலைச்சாரலில் இருந்த ஒரு வேடுவன். காடு புகுந்து விலங்குகளையும் பறவைகளையுந் தேடிக்கொன்று அவற்றின் தசைகளையே உணவாகக் கொண்டு வாழ்ந்தான். பிராணிகளெல்லாம் இவனைக் கண்டவுடனே கலங்கி நடுங்கும். ஒருநாள் வில்லுங் கணையும் வாளும் கண்ணியுங்கொண்டு செழித்த வனமொன்றில் இவன் புகுந்தான். அங்கோர் உயர்ந்த மரக்கிளையில் பேடுஞ் சேவலுமாகிய இரண்டு அன்றில் பறவைகள் ஒன்றோடொன்று மருவி மகிழ்ந்து கொண்டிருந்தன. மூக்கால் கோதியும் சிறகால் அணைத்தும் கழுத்தோடு கழுத்துப் பிணைந்தும் இணைந்திருந்த அவற்றை இவன் கண்டான். காதலால் களித்திருக்கும் அவ் அழகிய பறவைகளின் தசையினை யுண்ண நசைமீக்கொண்டான். மறைந்து நின்று ஒரு கணையை விரைந்து விடுத்தான். அது பட்டது. உடனே அவற்றில் ஒன்று பதைத்து விழுந்தது. துணைபிரிந்த சேவலும் துடிதுடித்துச் சோர்ந்தது. அக் கொடிய காட்சியை வான்மீகி முனிவர் கண்டு பெரிதும் இரங்கினார். அருளின்றிக் கொன்று நின்ற அக் கொடியவனை வெகுண்டு வைதார். ஊன் உண்போனுக்கு அருளுண்டாகாதென்பதை உலகம் அவன்பா லுணர்ந்தது. (இதன் விரிவை வான்மீகத்தில் காண்க)

ஊன் உண்பவனுக்கு அருளில்லை யென்பது இதனால் கூறப்பட்டது.

---

252 அன்றேன் உதிரன் அருளின்றி யந்தணனைக்
கொன்றானைத் தின்றான குமரேசா—என்றும்
பொருளாட்சி போற்றாதார்க் கில்லை யருளாட்சி
யாங்கில்லை யூன்தின் பவர்க்கு (2)

இ—ள்

குமரேசா! உதிரன் என்பவன் அருளின்றி ஓர் அந்தணனைக் கொன்று ஏன் தின்றான் எனின், பொருள் ஆட்சி போற்றாதார்க்கு இல்லை யாங்கு அருள் ஆட்சி ஊன் தின்பவர்க்கு இல்லை என்க.

பொருள் ஆட்சி—பொருளினை ஆளுதல்.
அருள் ஆட்சி—அருளுடையனாதல்.
-அது போல; இஃது உவமவுருபு.

பொருளால் பயன் கொள்ளுதல் அதனைப் பேணாதவர்க்கு இல்லையாயினாற் போல அருளால் பயன் பெறுதல் ஊன் தின்பவர்க்கு இல்லையாம் என்பதாம்.

புலால் உண்பவர்க்கு அருள் உண்டாகாது என்று மேற்குறித்த உண்மையை இதில், உவமையால் விளக்கினார்.

இம்மை இன்பத்திற்கு ஏதுவாகிய பொருளும் மறுமையின்பத்திற்கு ஏதுவாய அருளும் முறையே போற்றுதலாலும் புலாலுணவைப் போக்குதலாலும் ஒருவனுக்கு உளவாம் என்பதாம்.

கருத்தூன்றிக் காவாமையால் பொருட் கேடும் புலால் மறுக்காமையால் அருட் கேடும் உண்டாம் என்க.

ஊன் உண்போனுக்கு அருளில்லை யென்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை உதிரன் பால் உணரப்படும்.

உதிரன் என்பவன் ஓர் அரக்கன். வசிட்ட முனிவரது கோபத்தால் விளைந்த சாபத்தை யடைந்தவன். அருந்ததி யென்னும் மலையை யடுத்திருந்த ஒரு பெரு வனத்துட் புகுந்தான். அங்குள்ள விலங்கின் கணங்களைக் கொன்று கொன்று தின்றான். கொடுமையே மிகுந்தான். வனமெங்கும் திரிந்தான்.

ஒரு நாள் புது மணம் புரிந்து தன் மனைவியுடனே அவ் வழியே வந்த ஓர் அந்தணனைக் கண்டான் அவனைத் தின்னக் கருதினன். சினந்து போய்ப் பற்றினன். அவன் மனைவி நடு நடுங்கி அரக்கர் பதியே! என்று கூவி அவன் அடியில் விழுந்தாள். அழுது தொழுதாள். மங்கலப் பிச்சை தருக என்று தன் செங்கை ஏவித்தாள். உகிரன் அருள் சிறிதுமிலனாய் அவனைக் கொன்றான். உதிரங் குடித்தபின் ஊன் தின்று சென்றான்.

தன்றுணைத் தடங்கண் ணீர்பூழைக் கடக்கிற் றரைவிட்
டொழுக நின்றிரக்க
அன்றுரைத் திடுஞ்சொற் செவிக்கொளா துகி யந்தணன்
மைந்தனை விரைவில
கொன்றுடற் குருதி பிழிந்துமுன் குடித்துத் தொழுந்தசை
சரித்தகல்வாயின்
மென்றுடனருந்திப் பைங்கொடிக் கெதிராய் வெள்ளெலும்
பனைத்தையும உமிழ்ந்தான்.

இக் கொடுமையைக் கண்ட மணமகளும் பதைத்து மாய்ந்தாள். ஊன் தின்பவனுக்கு அருளாட்சி யில்லையென்பதை அக் கொடிய உகிரன் அன்று காட்டி நின்றான். விரிவைப் பாகவதத்தில் காண்க.

ஊன் தின்பவன் அருளினையாளான் என்பது இதனால் கூறப்பட்டது.

253. வில்வலன் வா தாவியென்பார் மெய்த்தவர்க்குங் கேடெ[ண்ணிக்
கொல்வினையேன் செய்தார் குமரேசா—கொல்லும்
படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றூக்கா தொன்றன்
உடல்சுவை யுண்டார் மனம். (௩)

இ—ள்.

குமரேசா! வில்வலன் வாதாவி என்பவர் ஏன் முனிவர்க்குக் கேடெண்ணிக் கொலை வினையைச் செய்தாரெனின்

ஒன்றன் உடல் சுவை யுண்டார் மனம், படை கொண்டார் நெஞ்சம் போல் நன்று ஊக்காது என்க.

உடல்சுவை உண்டார் — உடலைச் சுவையுளதாக்கவுண்டார். படை என்றது வில், வாள், ஈட்டி முதலிய கொலைக் கருவிகளை. நன்று என்றது அருளை. எல்லா நன்மைகளுக்கும் அருளே காரணமாதலான் அஃது [illegible] நன்று என நின்றது.

ஊக்காது = ஊன்றி நோக்காது.

கொலைக்கருவியைத் தம் கையில் கொண்டவர் நெஞ்சம் கொலையையே நோக்குவதல்லது கொல்லாமையை நோக்காது அதுபோல் பிறிதொன்றின் உடலைச் சுவைபட உண்டவர் மனம் அவ்வூன் உணவையே நோக்குவதல்லது அருளை நோக்காது என்பதாம்.

விழிகளால் எளிதிற் காணப்படுமென்பது கருதி உடல் உண்டார் இயல்பை விளக்குதற்குப் படைகொண்டாரை உவமை காட்டினார்.

புலி, ஓநாய், முதலிய கொடிய விலங்குகள் போல் கண்டபடியே உண்ணுமல் என ஊனை இன்சுவைத் தாக்கியே அருளில் மக்கள் உண்பர் ஆதலான் "சுவை உண்டார்" என்றார்.

ஊனை உண்போர், என்றும் தீவினைகளையே எண்ணுவர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை வில்வலன் வாதாவியென்னும் இவர்கள் பால் உணரப்படும்.

கதை.

வில்வலன் வாதாவி என்பவர் சூரபன்மனது தங்கையாகிய அசமுகியின் புதல்வர். தீமையும் வஞ்சமும் செறிந்த நெஞ்சினர். மாயைகள் பலவும் நேயமொடு பயின்றார். பிறஉயிர்களுக்கு இவர் நோயென வளர்ந்தார். பேயெனத் திரிந்தார். பறவைகளையும் விலங்குகளையுங் கொன்று தின்று களித்தார்.

பின்னர் மனிதர்களையுந் தின்ன விரும்பினார். அதனால் முன்னவன் முனிவன் போலவும் பின்னவன் ஆடு போலவும் வேடங் கொண்டு முனிவர் வாழும் வனங்களிற் புகுந்தார். முனி வடிவங்கொண்ட வில்வலன் வழியிடையிற் குடிசை யமைத்துத் தவம் புரிபவன் போலிருந்து வருகின்றவர்களை அழைத்து விருந்து செய்வதாகக் கூறி அவ் ஆட்டினைச் சமைத்து அவர் அறியாமல் ஊட்டுவன். உடனே வயிற்றைக் கீறி வாதாவி வெளியே வருவான். இறந்து பட்டவுடம்பை அதன்பின் அவ் இருவரும் தின்னுவர். இவ்வாறு ஊனை விரும்பித் தீமையே புரிந்தார். உடல் உண்டார் மனம் அருளை நோக்காதென்பதையிவர், அறியக் காட்டி இறுதியில் அகத்தியரால் அழிந்து தொலைந்தார். (இதன் விரிவைக் கந்த புராணத்தில் காண்க)

ஊன் உண்போர் தீவினைகளையே எண்ணுவர் என்பது இதனால் கூறப்பட்டது.

254. உற்ற அரிவிசயர் ஊன்தின்றல் பாவமென்றேன்
கொற்றவைமுன் சொன்னார் குமரேசா—பற்றும்
அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் றினல். (௪)

குமரேசா! ஊன் தின்னல் பாவமென்று ஏன் காளிமுன் அரிவிசையர் சொன்னார் எனின், அருள் அல்லது, யாதுஎனின் கொல்லாமை கோறலே ஆகலான் அவ் ஊன் தினல் பொருளல்லது என்க.

அருள் யாது எனின் கொல்லாமையே, அல்லது யாது எனின் கோறலே எனக்கொண்டு காண்க.

அல்லது — அருளல்லது; கொடுமை என்க.
கோறல்—கொல்லுதல்.

அருளும் அல்லதும் யாது எனின் கொல்லாமையும் கோறலும் ஆம் என முறையே கொள்ளினும் அமையும்.

பொருள் என்றது இங்கே உறுதிப் பொருளாகிய அறத்தை. பொருள் அல்லது—பாவம்.

அருள் கொல்லாமையாம்; அல்லது கொல்லுதலாம்; ஆதலால், அக் கொலையால் வரும் ஊனைத் தின்னுதல் பாவம் என்பதாம்.

அருளின்மையால் கொலையும், அக் கொலைப் பாவத்தால் ஊனும் உண்டாம் ஆதலால் அதனைத் தின்கை பாவமாம் என்க. ஊன தின்போன், கொலைப் பாவியாய் அருளிழந்து இருள் நரகம் புகுவன் என்பது கருத்து.

ஊன் தின்னல் ஆகிய தீவினையை அருளுடையார் யாண்டும் புரியார் என்பது குறிப்பு. இவ் வுண்மை அரிவிசயர்பால் அறியப்படும்.

கதை.

அரிவிசயர் என்பவர் வட மதுரையில் இருந்தவர். திருமாலிடம் பெருகிய அன்புடையவர். ஆருயிர் யாட்டிப் பொருள் வாய்ந்தவர். இவர், ஒரு நாள் பெருமாளைக் காணக் கருதிச் சகந்நாதத்துக்குச் சென்றார். இடையே ஒரு சோலையில் தங்கினார். அங்கிருந்த காளி தேவிக்குப் பலியிடும்படி ஒருவன் இரண்டு ஆடுகளைக் கொணர்ந்தான். இவர், அதனை உணர்ந்தார். வருந்தி யெழுந்து விரைந்து சென்றார். காளி பின் சென்றாள். இன்புறவுண்டு போம்படி இவரை அன்புடன் வேண்டினாள். நீ தேவியாயினும் ஊன் உண்ணும் பாவியாதலால் உன்னிடம் உணவு உண்ணேன் என்று இவர் மறுத்தார். இவரது அருள் மொழியைக் கேட்டுக் காளி பெரு மகிழ்வுற்றாள். அன்றுமுதல் கொல்லா விரதங் கொண்டாள். அந் நாட்டு வேந்தன் கனவில் தோன்றி "இனிமேல் எனக்கு உயிர்ப்பலியிடும் வழக்கத்தை

யெவரும் செய்யாதிருக்கும்படி நீ செய்யவேண்டும்" என்று கூறினார். அரசனும் அப்படியே அவ்வாறே செய்தான். அந்நாட்டா ரெவரும் ஊன் உண்ணலை விடுத்தார். உயர் நலம் அடைந்தார்.
*(இதன் விரிவைப் பக்தமாலையிற் காண்க)

ஊனின்மையின் நன்மை பாவம் என்பது இதனால் கூறப்பட்டது.

---

255 பரிசோதர் வேதத் திரனீர் பாவிபகனை இன்றேனோ
பொருந்தாய் பானகு மரேசா—தொலைவுறுகில்
உண்ணாமை யுள்ள துயிர்நிலை யூனுண்ண
அண்ணாத்தல் செய்யா தளறு (௫)

இ—ள்

குமரேசா! பகன் என்பவன் வேத்திரகத்தில் பரியாயுந்தினை [illegible] தனது நாசத்தில் மாய்ந்தனன் எனின், உயிர் நிலை ஊனுண்ணாமையுள்ளது, ஊன் உண்டபாயின் அளறு அண்ணாத்தல் செய்யாது என்க.

உயிர் நிலை—உயிர் உடம்பில் நிலை பெறுதல்.

உண்ணாமை—ஊனை உண்ணா வாழ்வின். உண்மையின் கண்ணும் [illegible] எனைத் திரிந்து நின்றது.

அளறு அண்ணாத்தல் செய்யாது—நரகம் வாயைத் திறவாது.

ஊன் உண்ணாமையாலேதான் சில வுயிர்கள் உடலில் நிலை பெறுகின்றன, அந்நிலை குலைய ஒருவன் அவற்றை உண்ணுவானேயின், அவனை விழுங்கிய நரகம் பின் உமிழ்தற்கு வாயைத் திறவாது என்பதாம்.

ஊன் உண்ணல் என்னும் தீவினையை மக்கள் செய்யவில்லையாயின், ஆடு முயல் மான் முதலிய சில விலங்கினங்களும், கோழி குயில் கொக்கு முதலிய சில பறவையினங்களும், மீன் முதலிய சில நீர் வாழினங்களும், சிதைவின்றி நிறைந்து நெடிது வாழும் என்பார் "உயிர் நிலை, உண்ணாமையின் உள்ளது" என்றார்.

உயிர் எய்துதற்குரிய பேரின்ப நிலை ஊன் உண்ணாமையானே ஒருவனுக்கு உள்ளது எனவும் இது பொருள்படும்.

உயிர்களைத் துடிக்கக் கொன்று அவற்றின் உடல்களைச் சுவை செய்து உண்போரை நரகம் உண்ணும் என்க.

உண்டவூன் மீளாது அவர் வயிற்றிலிருந்தே யழிந்து கழிதல் போல் அவரும் நரகினது ஆழ் வயிற்றில் அடங்கியே அழிந்து ஒழிவர் என்பதாம்.

ஊனை விழுங்கினவரை நரகம் விழுங்கி உமிழாது என்பது இதில் உணர்த்தப்பட்டது. இது பகன் பால் காணப்படும்.

கதை.

பகன் என்பவன் ஓர் அசுரன். ஏக சக்கிரம் என்னும் பெயரினையுடைய ஒரு வனத்திலிருந்து ஆண்டுள்ள உயிர்களையெல்லாம் கொன்று அவற்றின் உடல்களைத் தின்று வாழ்ந்தான். அதனால் அங்குள்ள பறவைகளும் விலங்குகளும் தேய்ந்தன. அதன்பின் அதனை அடுத்திருந்த வேத்திரகீயம் என்னும் பதியுள் இரவில் புகுந்து எதிர்ப்பட்ட மக்களையெல்லாம் பதைக்கக் கொன்று பழிபடவுண்டான். அவன் ஊன் உணவால் உயிர்கள் நிலைபேறின்றி அழிவடைவதை அவ்வூரார் நோக்கி உள்ளம் கலங்கி அவனைப் பணிந்து வேண்டினர். நாள்தோறும் ஒரு சகடம் நிறைய அன்னமும், அதனை யீர்த்துவரும் இரண்டு பகடுகளும், ஓட்டிவரும் ஒருநரனும், முறை தவறாமல் அனுப்பும்படி பகன் கட்டளையிட்டான். என் செய்வர் பாவம்; அவரும் இசைந்தார். அவ்வாறே நடந்துவந்தது. வருங்கால், துரியோதனன் செய்த கொடுமைக்குத் தப்பிப் பிழைத்துத் தயங்கிய தருமன் முதலிய ஐவரும் அவ்வூருட் புகுந்தார். ஒதுங்கியிருந்தார். பகன் செய் கொடுமையால் அந்நகர்படும் அழிவை அறிந்தார். அவருள் வீமன் துணிந்தான். சகடத்தைச் செலுத்துபவனாய்த் தானே சென்று அவனைப் பொருது தொலைத்தான். அவனும் அழிந்தான். இழி நரகில் ஆழ்ந்து வெளிவராது அழுந்தினான். ஊன்

ம்பாவனை நரகம் விழுங்கி உமிழாது என்பதை உலகம் அவன்பால் உணர்ந்தது. (விரிவைப் பாரதத்தில் காண்க.)

ஊன் உண்பவன், என்றும் நீங்காத நரக துன்பத்தையே அடைவன் என்பது இதனால் கூறப்பட்டது.

256. வில்லாமல் சூரனுங்கேன் பிணசுமந்து கொண்டுதந்தார்
கொல்லாத தேவர் குமரேசா—எல்லாந்
தினற்பொருட்டாற் கொல்லா துலகெனின் யாரும்
விலைப்பொருட்டால் ஊன்தருவார் இல். (௬)

-ள்.

குமரேசா! கொல்லாத தேவர் என் அசுரர்கட்கு பிணனைச் சுமந்து கொண்டுவந்து தந்தார் எனின், உலகம் தினல் பொருட்டாற் கொல்லாது எனின், விலைப் பொருட்டால் ஊன் தருவார் இல் என்க.

உலகு, தினல்பொருட்டால் கொல்லாது எனின்—உலகத்தார், ஊனைத் தின்னும் பொருட்டுக் கொல்லாராயின்.

உண்ணுதல் காரணமாக உலகத்தார் கொலை செய்யாராயின் பொருளுக்காக ஊனை விலைசெய்வார் ஒருவரும் இலர் என்பதாம்.

கொலைப்பாவம் கொன்றவனைச் சேருமேயன்றி ஊன் தின்றவனைச் சேராது என்பாரை மறுத்து இஃது உணர்த்தியதென்க.

ஊன் தின்பார் இல்லையாயின் இவ்வுலகில் கொலைவினை சிறிதும் இல்லையாம் என்பது கருத்து.

ஊன்தின்போர் உண்மையானே கொலைப்பாவம் உளவாகின்றது என்பது இதில் உணர்த்தப்பட்டது.

இது சூரன் முதலாயினோர்பால் காணப்படும்.

கதை.

கொலைத்தொழிலைச்செய்யாத தேவர்களும் சூரன் ஏவலால் மீன்களை வாரிக்கொணர்ந்தார். ஊன் தின்னும் அசுரரில்லையானால் அமரர் அன்று மீன்கொண்டு தந்திரார். அசுரர் தின்றற் பொருட்டால் கொன்றாரேயன்றி அமரர் விலைப்பொருட்டால் மீன்களைக் கொல்லவில்லை. அம்மீன் கொலைக்கு அசுரர் ஊன்தின்கையே காரணமாயிருந்தது. அசுரர் அழிந்தபின் அமரர் அக்கொலைத்தொழிலைக் கொள்ளவில்லை. ஊன்தின்போர் இல்லையானால் உயிர்களைக் கொல்வோர் உலகில் இல்லையென்பது அவர்பால் அன்று உணர்கின்றது. (விரிவு சரிதையில் தெளிவாம்)

ஊன் தின்கையே கொலைப் பாவத்துக்குக் காரணம் என்பது
இதனால் கூறப்பட்டது.

257. ஊனென் றுணர்ந்த வுடன்வெறுத்தேன் உண்ணவில்லை
கோன்குமர தேவர் குமரேசா — தானுக
உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்
புண்ண துணர்வார்ப் பெறின். (௭)

இ—ள்

குமரேசா! குமார தேவர் ஊன் என்று உணர்ந்தவுடனே ஏன் அதனை உண்ணாமல் வெறுத்து வீசினார் எனின், புலால் பிறிது ஒன்றன் புண்; அது உணர்வாரைப்பெறின் அதனை உண்ணாமை வேண்டும் என்க.

புலால் பிறிது ஒன்றன் புண்-ஊன் பிறிதோருடம்பின் புண்.

அது உணர்வார்ப்பெறின — புண் என்னும் அவ்வுண்மையை உணர்வார் உண்டாயின். பெறின என்றது அதனை உணர்வார் அரியர் என்பதை உணர்த்தி நின்றது.

உணர்வோர், ஊன் உண்ணார்; உணர்வில்லாதவரே அதனை உண்டு களிப்பர் என்க.

புலால் என்பது பிறிதோருடம்பின் புண்ணே என்னும் உண்மையை உணர்வாரைப்பெறின் அதனை உண்ணாது ஒழித்தல் வேண்டும் என்பதாம்.

தமது உடம்பில் புண் ஒன்று காணப்படின் அதனைத் தீண்டவும் கூசுகின்ற மக்கள் பிறிது ஒன்றன் உடம்பிலுள்ள தசைகுருதி நிணம் முதலியவற்றை அருவருப்பின்றித் தின்னுவதற்குக் காரணம் என்னையோ எனின் அறியாமையேயாம் என்பது கருத்து.

நரி கழுகு நாய் முதலிய இழிந்த பிராணிகளே ஈன ஊனை எண்ணாது உண்பனவாம்; அறிவமைந்த மக்கள் அதனை எவ்வகையாலும் உண்ணலாகாதென்பது குறிப்பு.

சிறந்த அமுதத்தோடு கலந்திருப்பினும் ஊன் என்று உணரப்பெறின் அதனை அறிவோர் உண்ணார் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை குமாரதேவர்பால் காணப்படும்.

கதை.

குமாரதேவர் என்பவர் சற்றேறக்குறைய இற்றைக்கு முந்நூறு வருடங்கட்கு முன்னர்க் கன்னடதேயத்தில் மாகபுரி என்னும் நகரில் தோன்றியிருந்த ஒரு மன்னவர். இவர், அரியணையமர்ந்து இருநிலம் புரந்தார். திருவமைந்து நின்றுபெரு நலந்துய்த்தார். பதி, நிதி, முதலிய யாவுந்துறந்து பின் பல இடங்களுக்குஞ் சென்றார். எவ்வுயிர்களும் இன்புறும்படி இன்னருள் செய்தார். ஒருநாள் இவர், விருத்தாசலம் என்னும் பதியில் புகுந்தார். உச்சியம்போதில் அந்தப் பிசைக்குச் சென்றார். இவரை அடியவர் என்று கருதி ஒரு குடியானவன் இவர் கை நிறைய அன்னமிட்டான். அதனைப் பெற்றார். உண்ணுதற்குமுன் உற்று நோக்கினார். மீனின் ஊனை அதில்கண்டார். உண்ணாமல் ஏந்தியபடியே ஓர் நீர்நிலையை யணுகினார். உயிருண்டாக அருள் புரிந்தார். அது மீனாகி நீரில் தானே பாய்ந்தது. புலாலின் இழிவையும் அதனை உண்ணுவதால் வரும் பழி பாவங்களையும் குமாரதேவர்-

ரவருந்தும் உணர்த்தினார். உணர்ந்தவரெல்லாரும் ஊனுணவை யொருங்கே ஒழிந்தார். புலாலானது பிறிது ஒன்றன் புண் என்று உணர்ந்தார், அதனை உண்ணார் என்பதை அவர் உணர்த்தி நின்றார். (இதன் விரிவைத் தேவா சரிதையில் காண்க.)

நாய்கழுகு கூகை நரிநாகம் ஈயெறும்பு
பேயிவைகள் ஆவி பிரிந்ததனை—நேயமொடு
தானருந்தல் அல்லாது சற்காரிய மனிதர்
தானருந்த லாவதோ சாற்று. (1)

ஊறுகா யாதிகளினிலு தித்ததோர் புழுக்கண்டாமேல்
வெறுவே விசிர்க்கிந்தை செய்மிகக் குலைந்தாருபால்
நாறுமூன புழுத்தசதேனும் நனிமிக விரும்பியுள்ளந்
தேறிநீ யுண்டவாறென் செப்புதி தெரிவிலாதோய். (2)

பிறிதொருடம்பின் புண்ணே என்று ஊனின் உண்மையை யுணரவேண்டும் என்பது இதனால் கூறப்பட்டது.

258. ஊனென் றுணர்ந்த உடன்வசிட்டர் உண்ணாதே தன்
கோனைச் சினந்தார் குமரேசா—ஈனச்
செயிரிற் றலைப்பிரிந்த காட்சியார் உண்ணார்
உயிரிற் றலைப்பிரிந்த ஊன். (௮)

இ—ள்.

குமரேசா! ஊன் என்று உணர்ந்தவுடனே வசிட்டர் உண்ணாது வெறுத்து அரசனை வன் வைதார் எனின் செயிரின் தலைப்பிரிந்த காட்சியார், உயிரின் தலைப்பிரிந்த ஊனை உண்ணார் என்க.

செயிர்—குற்றம் தலைப்பிரிந்த—நீங்கிய.

நீக்கத்தை உணர்த்தும் பிரிவு என்னுஞ்சொல் இங்கே அடையடுத்துவந்தது. இவ்வாறு வருவதை வடநூலார் உபசர்க்கம் என்பர்.

உயிரின் தலைப்பிரிந்த ஊன் — உயிரின் நீங்கிவந்த ஊன்: பிணம் என்றபடி.

குற்றத்தின் நீங்கித் தெளிந்த அறிவினையுடையார் உயிரின் நீங்கிய ஊனை உண்ணார் என்பதாம்.

மடமையும் கொடுமையுமுடைய அறிவிலிகளே ஊனின் ஈனத்தை யுணராமல் அதனை உண்டுகளிப்பர் என்பது குறிப்பு.

ஊனாவது, உயிர் நீங்கிய பிணமேயென்று உணர்ந்து அதனை எவ்வகையானும் உண்ணாமல் ஒழிப்பவரே உயர்ந்தோர் என்பது கருத்து.

உணர்வுடையார் ஊனின் இழிவை உணர்வராதலின் அதனை யாண்டும் தீண்டார் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை வசிட்டர்பால் உணரப்படும்.

கதை.

திருவயோத்தியிலிருந்து அரசுபுரிந்த மித்திரசகன் என்னும் மன்னவன் ஒருநாள் தமது முன்னோர்களையெண்ணிப் பெருவிருந்து செய்தான். அதில், வசிட்டமாமுனிவரை முதன்மையாக வணங்கி அழைத்தான். முனிவர் வந்தார். அரசன் அவரை உபசரித்து உயர்ந்த ஆசனத்திலிருத்திச் சிறந்த உணவுகளைப் படைக்கும்படி செய்தான். அரசனுக்குப் பகைவனாகிய அரக்கன் ஒருவன் கரவாகவந்து உணவுசெய்பவன்போல் அமைந்து ஒதுங்கியிருந்தான். அவ்வஞ்ச மடைமகன் புனிதமான இனிய உணவுகளோடு ஈன ஊனையும் இன்சுவைத்தாக்கிப் படைத்தான். முனிவர், உண்ணப்புகுமுன் அவ்வுண்மையை உணர்ந்தார். உண்ணாதெழுந்தார். அரசனை நோக்கிப் பெருஞ்சினங்கொண்டார். அரக்கனாகும்படி சபித்தார். வஞ்சமில்லாத மன்னனும் அஞ்சி வருந்தினான். செயிர் நீங்கிநின்ற அறிவினோர் உயிர் நீங்கிவந்த ஊனை உண்ணார் என்பதை முனிவர் உணர்த்தி நின்றார்.

(விரிவை விநாயக புராணத்தில் காண்க.)

உயர்ந்தோர் யாண்டும் ஊனை உண்ணார் என்பது இதனால் றப்பட்டது.

259. வெற்றிமிகு பிம்பசரன் வேள்வியினை ஏன்தடுத்துக்
குற்றமென்றார் புத்தர் குமரேசா—உற்ற
அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று. (௯)

இ—ள்.

குமரேசா! பிம்பசரன் என்பவன் செய்யும் வேள்வியைத் தடுத்து என் புத்தர் அது தீது என்று உரைத்தார் எனின், அவி சொரிந்து ஆயிரம் வேட்டலினும், ஒன்றன் உயிர் செகுத்து உண்ணாமை நன்று என்க.

அவியாவது மந்திர முறையோடு தேவர்களை நோக்கி வேள்வித்தீயில் இடுகின்ற நெய் முதலிய இனிய உணவுகள். ஆயிரம் என்னும் எண்ணுப்பெயர் இங்கு அந்தொகையினையுடைய வேள்விகளைக் குறித்து நின்றது. வேட்டல்—ஓமஞ்செய்தல்.

ஆயிரம் வேட்டலின்—ஆயிரம் வேள்விகளைச் செய்தலினும். ஆயிரம் என்றது இறப்பவும் பல என்னும் மிகுதியை விளக்குதற்கு என்க.

அவிகளைச் சொரிந்து ஆயிரம் வேள்விகளைச் செய்வதினும் ஓர் உயிரினைத் தொலைத்து அதன் ஊனைத் தின்னாமை நன்று என்பதாம்.

பல்லாயிரம் வேள்விகளைச் செய்து அவற்றின் எய்தும் நலத்தினும் ஊன் உண்ணாமையால் ஒருவனுக்கு உளதாம் நலம் பெரிதாம் என்பது கருத்து.

ஊன் உண்ணாமை என்னும் இவ் ஓர் அறமே அரிய பயன்களையெல்லாம் எளிதில் உதவும் என்பது கருத்து. இது பிம்பசாரன் பால் காணப்படும்.

கதை.

பிம்பசாரன் என்பவன் இற்றைக்கு இரண்டாயிரத்து ஐந்நூறு வருடங்கட்கு முன்னிருந்தவன். சிறந்த ஓர் அரசன். கங்கையின் வடபாலிருந்த இராசகிருகம் என்னும் நகரத்திலிருந்து இவன் அரசுபுரிந்தான். கல்விகேள்விகளில் வல்லுநரான அமைச்சர் பலர் இவன்பால் அமர்ந்திருந்தனர். மனநலமும் இனநலமும் மாண்புறப் பெற்றவன். அங்கநாட்டையும் வென்று அனைவரையுந் தன் குடைக்கீழ்த் தங்கவைத்தான். வருடந்தோறும் முறையாக அரசன் வேள்விகளைச் செய்துவந்தான். புத்தர் ஒருநாள் இவனிடம் வந்தார். அரசே உயிர்ப்பலிசெய்து ஏன் இவ்வேள்வியைச் செய்கின்றாய். எவ்வகையாலும் பிறவுயிர்கள் சிறிதும் வருந்தாவண்ணம் ஒழுகுவதே ஒருவன் அறிவுடைமைக்குப் பயனாம். பல்லாயிரம் வேள்விகளைச் செய்து உயர்ந்த பதத்தையடைந்தவனினும் ஓருயிரையும் கொல்லாத ஒருவனே சிறந்தவனாவான் என்று அருளுடன் கூறினார். அவரது பயனிறைந்த அருள் மொழிகளை அரசன் கேட்டான். அன்றுமுதல் வேள்வி செய்வதை விடுத்தான். வேட்டையாடலுந் துறந்தான். ஊன் உண்ணாமையென்னும் உயர்ந்த விரதத்தைக் கொண்டான். இவன் நாடுமுழுவதும் இந்நல்லறம் பரவியது. உயிர் செகுத்து உண்ணாமை என்னும் உயர் நலத்தால் இவ்வரசன் வேள்விப் பயனினும் பெரும்பயனெய்தினான். ஆயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர் செகுத்து உண்ணாமை நன்று என்பதை அன்று நின்று காட்டினான். (இதன் விரிவைப் புத்த சரிதையில் காண்க.)

ஊனுண்ணாமை ஒன்றேனும் ஒருவனுக்கு எல்லா நலங்களும் ஒருங்கே உளவாம் என்பது இதனால் கூறப்பட்டது,

260. மண்டுபுகழ் நந்தனார் வான்மீகர் ஏனுலகம்
கொண்டுதொழ நின்றார் குமரேசா—கண்டதொன்றும்
கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
யெல்லா வுயிருந் தொழும். (ம)

குமரேசா! நந்தனர், வான்மீகர், மன்பகர் ஏன் எல்லாராலும் தொழப் பெற்றார் எனில், கொல்லான் புலாலை மறுத்தானை எல்லா உயிரும் கைகூப்பித் தொழும் என்க.

அவிசைச் சொரிந்து வேள்வியைப் புரிகிறார் ஒருயிரைக் கொன்று ஊனைத் தின்னாமை நன்றென்று போற்றுகின்றதனை நோக்கின் அவ்வேள்விகளால் இந்திர பதமுதலிய பயன்களை யெய்துவாமே இதனால் பெறுபயன் மேலாம் என்பது தோற்றுகின்றது.

கொல்லான் என்னும் வினைமுற்று இங்கு எச்சமாய் நின்றது.

கைகூப்பி என்றது தொழுதற்கு ஏதுவாகிய உவகையின் மிகுதியை உணர்த்துதற்கு என்க.

ஒருயிரையும் கொல்லாதவனாய் ஊனையும் உண்ணாத ஒருவனை எல்லா உயிர்களும் கைகூப்பித் தொழும் என்பதாம்.

இப்பகுதியில் புலாலை உண்ணாமையினும் இரக்கஞ் சிறிதுமில்லாமல் உயிர்களைக் கொல்லாமையின், அவா, பகை, தவம், காமக், குரோத, மோக, முதலிய சில உணர்ச்சிகளையும் மேல் நின்று கருதப்பட்டவரே அன்றி, அருளுடையராய் மதிக்கப்பட்டார் ஆகலான், எல்லா உயிரும் தொழுதல் அமையாத அவர்க்கு இல்லையாம் என்க.

கொல்லாமை புலால் உண்ணாமை ஆகிய இவ்விரண்டறங்களையும் ஒருங்கே உடையார் அருள் நிறைந்த செய்யார் ஆகலான், அவ்வறவினை நினைந்து எல்லாவுயிரும் அவரைப் போற்றும் என்பதாம்.

கொலை துறந்து புலால் மறுத்தவர், எல்லாராலும் தொழத்தக்க பெரும் பேற்றை யெய்துவர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை நந்தனர் கண்ணும், வான்மீகி பாலும் காணப்படும்.

கதை 1.

நந்தனர் கொலைத் தொழிலும் புலைப்புசிப்புந் துறந்தமையால் எல்லாவுயிர்களும் அவரை இன்புறத் தொழுதன. வாழ்த்துணர்களும் சிரமேற் கைகூப்பித் திரண்டு தொழுதனர். (விரிவை அவர் சரிதையில் தெளிக.)

கதை 2.

வேடர்களோடு கூடிக் களவு முதலிய கொடுந்தொழில்களைச் செய்து திரிந்த வான்மீகியார் மெய்யுணர்வுடையராய்த் தெளிந்தபின் ஓருயிரையுங் கொல்லாதவராய் ஊன் உண்டலையொழிந்து எவ்வுயிர்க்கும் இனியராய் அருளையே செய்து அரிய தவத்தைக் கொண்டார். கொலையும் புலையுந் தவிர்ந்தபின் அவரை அமரரும் முனிவரும் அகமகிழ்ந்து தொழுதார். அருளுடையராய்ப் புலால் மறந்தவரை எல்லாவுயிருந் தொழும் என்பதை உலகம் இவர்பால் தெளிந்தது.

கொல்லாமையும் புலாலுண்ணாமையுமுடையாரை உலகமெல்லாம் உவந்து தொழும் என்பது இதனால் கூறப்பட்டது.

உயிர்கள் ஒப்புமின் ஊன்விழைந் துண்ணன்மின்
செயிர்கள் நீங்குமின் செற்றம் இகந்தொரீஇக்
கதிகள் நலனுருக் கண்டனா கைதொழும்
மதிகள் போல மறுவிலர் தோன்றுவீர். (வளையாபதி.)

கொலையும் புலையுங் களவுந் தவிர். (ஔவை.)

இவ்வதிகாரத்தின் தொகைப் பொருள்.

தன்னுடம்புபருக்கப் பிறிதொன்றின் உடம்பைத் தின்போன் கொடியனே யாவன். அவனுக்கு அருள் உண்டாகாது. அவன் மனம் தீமையையே யெண்ணும். புலால் உண்டல் பெரும் பாவம். ஊனுண்போனை நரகம் விழுங்கி யுமிழாது. ஊன் தின்கையே கொலைப் பாவத்துக்குங் காரணம். ஊன் என்பது பிறிதோருடம்பின் புண்ணென்று தெளிந்து அதனை யுண்ணாது ஒழிதல்வேண்டும்.

அறிவுடையார் அதனை யாண்டும் உண்ணார். பல்லாயிரம் வேள்விகளைச் செய்வதிலும் ஊன் தின்னாமை ஒன்றே நன்று. அதனோடு புலால் மறுத்தவனை எல்லாவுயிர்களுங் கைகூப்பித் தொழும்.

26-வது புலான் மறுத்தல் முற்றிற்று.

உஎ-ம் அதிகாரம் தவம்.

அஃதாவது மனத்தைப் புலன்வழிச் செலுத்தாது நலனுற நிறுத்தித் தன்னுயிர்க்கு உறுதுயர் தனிநின்று பொறுத்துப் பிறவுயிர்களைப் பேணும் பெருநலம். புலாலுண்டலையொழிந்து புனிதமெய்திய மனமுடையார்க்கே இஃது இனிது அமையுமாதலான் அதன்பின் வைக்கப்பட்டது.

261. உண்டி துறந்தார் உயிர்க்கிரக்கம கன்றுவரேன்
கொண்டு புரிந்தார் குமரேசா—மண்டியென்றும்
உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை
அற்றே தவத்திற் குரு. (க)

இ—ள்.

குமரேசா! கன்றுவர் தான் வருந்தி நின்று ஏன் பிறவுயிர்களைப் பேணினார் எனின், உற்ற நோயை நோன்றலும் உயிர்க்கு உறுகண் செய்யாமையும் ஆகிய அற்றே தவத்திற்கு உருஎன்க.

நோன்றல்—பொறுத்தல். உறுகண்—துன்பம்.

உற்றநோய் நோன்றல்—தமக்கு வருந்துன்பங்களைப் பொறுத்தல். அற்றே என்னும் சுட்டின் அடியை ஒட்டி நின்ற ஏகாரம் தேற்றப் பொருளைத் தோற்றி நின்றது

தம் உயிர்க்கு வருகின்ற துயரைப் பொறுத்தலும் பிற உயிர்கட்கு ஒரு துயரும் செய்யாமையும் ஆகிய அவ் அளவினதே தவத்திற்கு வடிவம் என்பதாம்.

பசி பிணி பகை வெயில் பனி மழை முதலியவற்றால் தமக்கு துன்பங்களைப் பொறுத்துப் பிறவுயிர்கட்குச் சிறிதும் தீங்கு செய்யாமல் அருள் புரிந்து ஒழுகுவதே ஒருவர்க்குத் தவமாம் என்பது கருத்து.

பிறந்தபோதே கூட உறைந்தமைந்து என்றும் இருந்து ஓயா தொடர்ந்து நலியும் பசிப்பிணியே உற்றநோய் என்றதற்கு இது முதல உரிமையாய் நின்றது. ஆதலால் அதனைப் பொறுத்தலே தவ இயல்பென்பதாம். ஆற்றுவார் ஆற்றல் பசி ஆற்றல் என்றார் மேலும்.

புல்லுணர்ச்சிகளில் புக்குழலாமல், நிலைபெறும் பொருட்டுச் சுவையுணவு துறந்து உடற்றுயர் பொறுத்து ஆருயிர்மாட்டு அருள்புரிந்தொழுகலே அருந்தவர் இயல்பென்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை கண்ணுவர்பால் காணலாகிறது.

கதை.

கண்ணுவர் என்பவர் அப்பிரதிரதன் என்னும் முனிவரது புதல்வர். உயர் கலை பலவும் ஓதியுணர்ந்தவர். மரம் கொடி செடி முதலிய ஓரறிவுயிர்களையும் இவர் பேரருளுடன் பேணினார். நடந்து செல்லுங்கால் எறும்பு முதலிய சிறிய உயிர்களுக்கு ஊறுகண் உறாமே என்று இரங்கி ஒதுங்குவார். ஆகிய விரதங்களைக்கொண்டு பொறிகளையடக்கினார். தனிவனம் ஒன்றில் இனிதுற அமர்ந்தார். நிலையாவறிய சமாதியை நெடிது பயின்றார். உற்ற நோயைப் பொறுத்துப் பற்றற நின்றார். இவரது திருவுடம்பைப் புற்று மூடி வளர்ந்தது. பருவங்கள் பல கழிந்தபின் அதன்மேல் மூங்கில் ஒன்று தோன்றி வளர்ந்தது. இவரது தவமகிமையால் அது பெருவலியுற்றது. அதன் அருமையைப் பிரமன் உணர்ந்தார். முனிவரது புனிதமிக்க மனநிலையை வியந்து அதனை மூன்று விற்களாக்கித் தான் ஒன்றைக்கொண்டு மற்றையிரண்டில் ஒன்றை உமாபதிக்கும் ஒன்றைத் திருமாலுக்குங் கொடுத்தார். அம்மூன்றும் முறையே காண்டீபம் பிநாகம் சார்ங்கம் எனப் பெயர் பெற்றன. கண்ணுதற் பரமன், கண்ணுவர் கருதியவெல்

லாம் அருளினார். அருந்தவருட் சிறந்தவராய் விளங்கி இவர் வனத்திலிருந்த காலத்தில் விசுவாமித்திரருக்கு மேனகையிடத் தோன்றிப் போற்றுவாரின்றிப் புலம்பியழுத சகுந்தலையைக் கண்டார். அருளுடன் எடுத்தார் ஆதரித்து வளர்த்தார். தான் வருந்தியும் பிறவுயிர்களைப் பேணிப் பெருந்தவமுடையராய் எல்லா நலங்களையும் பொருந்தப் பெற்றார்.

(இதன் விரிவைத் தணிகைப் புராணத்தில் காண்க)

தவத்தின் தன்மை இதனால் கூறப்பட்டது.

262, வெம்பித் தவம்புரிந்தும் மெய்ப்பயனை யேயிழந்தான்
கும்பகருணன் குபேரசா—நம்பும்
தவமுந் தவமுடையார்க் காகும் அவமதனை
யஃதிலார் மேற்கொள் வது. (உ)

இ - ள்.

குபேரசா! கும்பகருணன் வருந்தித் தவம்புரிந்தும் என் அதன் பயனை இழந்தான் எனின், தவமும் முன் தவம் உடையார்க்கே ஆகும்; அதனை அஃது இலார் மேற்கொள்வது அவமாம் என்க.

அதனை—அந்தவத்தை. அஃது என்றது முன் தவமுடைமையை. அவம்—வீண். மேற்கொள்வது—செய்ய முயல்வது.

முன் செய்த தவமுடையார்க்கே தவம் கைகூடும்; அஃது இல்லாதவர் அத்தவத்தை மேற்கொள்வது வீண் என்பதாம்.

தவமும், என்பதிலுள்ள உம்மை அதன் பயனையும் சுட்டி நின்றது ஆதலான் அஃது இறந்தது தழுவிய எச்சவும்மையாம்.

தன்னை முன்செய்து பழகினவனுக்கே ஒருதொழில் இனிது அமையும் அல்லாதவனுக்கு அது நன்கு அமையாது; அது

போல் தவமும், தன்னை முன் செய்துள்ளவனுக்கே தடையின்றி முடிவுறும், இல்லாதானுக்கு இன்புற முடியாது என்க.

முன்னைத் தவமுடையார்க்கே தவம் இனிதாய்; இல்லாதார் மேற்கொள்வது அவமாம் என்றது இதுவரை தவஞ்செய்யாதவர் இப்பொழுதேனுஞ் செய்தபின் வருங்காலத்தில் முன் தவமுடையாராக அவர் அமையவேண்டுமென்பது கருதி என்க.

முதல் நாள் இரவு ஒரு செய்யுளை மனனஞ்செய்தவனுக்கு மறுநாட்காலையில் அது எளிதாய்த் தோன்றுதல்போல் முன்னை செய்தவர்க்கே தவம் சிறந்து முடியும் என்பது கருத்து.

இனி, தவவொழுக்கமுடையார்க்கே தவவேடம் நல்லதாகும் அவ்வொழுக்கமில்லாதார் அதனை மேற்கொள்வது தீதாகும் எனவும் இது பொருள்படும்.

இதில் தவம் ஆகு பெயராய் வேடத்தைக் குறித்து நின்றது.

முன்னைய நல்வினையுடையார்க்கே தவம் இனிதாய முடியும்; இல்லாதார் ஊக்கமும் ஆற்றலுமுடையராய் அதனை ஒருவாறு முடிப்பினும் அதன் பயனை இழப்பர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை கும்பகருணன்பால் உணரப்படும்.

கதை

இலங்கையர் வேந்தனுக்கு உடன் தம்பியாகிய கும்பகருணன், எல்லாரையும் அடக்கியாளுதற்குரிய உயர் நிலையினை அடைய விரும்பினான். உயிர்கள்மாட்டு அருளிலனாயினும் பொறிகளை யடக்கினான். கொன்றைக் கானம் என்னும் பெயரினையுடைய ஒருவனத்தையடைந்தான். உணவும் நீருந் துறந்தான். கோடைக்காலத்தில் கொதிக்கின்ற வெயிலிடை நின்றான். மாரிக்காலத்தில் குளிர்கின்ற நீர்நிலை நின்றான். ஒரு மனமுடையனாய்ப் பிரமனை நாடினான். அழலில் இருந்தும் மழையில் நனைந்தும் அருந்தவஞ்செய்தான். ஆண்டுகள் பதினாயிரம் மாண்டு கழிந்தன. அவன், மனந்தளராது நினைந்ததே செய்தான். அவனது ஆற்

ம் அருஞ்செயலையும் அயன் வியந்து அவன் முன் தோன்றினான். கும்பகருணா! நீ வேண்டியவை தருவேன் வேண்டுக என்றான். நன்றான துறக்கபதத்தை அவன் நாடியிருந்தான். உள்ளத்தில் கொள்ள விரும்பியது அதுவாயினும் “நன்றாக உறக்கமேகொடு” என்று குழறிக் கூறினான். அயனும் உடனே கொடுத்தேன் என்றான். அவனும் சொன்னதை நினைந்து குலைந்து நடுங்கினான். அருந்தவத்தை வருந்தி முடித்தும் அதன் பயனை யடையாதிழந்தான். முன்னைத் தவமிலார் முயன்றாலும் தவம் இனிது முடியாது. ஒருவாறு முடியினும் அதன் பயனை அடையாது அவர் அவமே அடைவர் என்பதை உலகம் அவன்பால் உணர்ந்தது.

இதன் விரிவை உத்தரகாண்டத்தில் காண்க.

அள்ளன் மடுவின் மூழ்கிக்காம அநர்ப்பட்டினிபட்டலைந்தும்
உள்ளந் தூய நல்லாருந் தொருகாரியமும் பலியாதா
கள்ள மனச்செய் தவத்துப் பகனனைதரினும் வரங்கொடுக்கும்
வள்ளன் மலரோன் இடைபெற்றவரத்தால் மாறாத்துயில்பெற்றான்.

(ஒட்டக்கூத்தர்)

எத்தொழிலும் முற்பழக்க மின்றிச்செய்தா தறமென்னும்
இணையொன்றில்லா
அத்தொழில்முற் பழக்கமின்றிச் சாங்காலத் தனையுமோ
வருமென்றற்கு
வத்திரம்வேண் டிற்பருத்திவிதைத்துமுன்னம் நெய்யாமல்
மணஞ்செய்காலத்
தொத்ததுகில் வேண்டுமென எத்தனைபேர் முயன்றாலும்
முறுமோ நெஞ்சே. (நீதிநூல்.)

தவத்தை ஒருவன் தாழாது செய்யவேண்டுமென்பது இதனால் கூறப்பட்டது.

263 ஏழை தவமுடியா தில்லிருந்தார் சேந்தனார்
சோழனை சேர்மா குமரேசா — தாழை
துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
மற்றை யவர்கள் தவம்.

இ—ள்.

குமரேசா! சேந்தனார் [illegible] என்பவர் துறந்தவர்க்குச் செய்யவென இல்வாழ்க்கையை விரும்பி இருந்தாராயின், துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மற்றையவர்கள் தவம் மறந் தார் கொல்லோ.

துப்புரவு - [illegible] இனிய பொருள்கள். மற்றையவர்கள் என்றது இல்வாழ்வாரை.

துறந்தார்க்கு [illegible] முதலியவும் [illegible] விரும்பித் தாம் தவஞ்செய்தலை [illegible] மறந்தார் போலும் என்பதாம்.

இல்வாழ்வார், துறந்தார்க்கெல்லாம் உணவும் உடையும் இருப்பிடமும் [illegible], துறந்தார், உணவு முதலியன [illegible] பொருள்களையடைந்து [illegible] இடர்ந்து [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] வேண்டுவது, இதனை யுணர்ந்து [illegible].

வேண்டியவாறு [illegible] நலத்தக்க துப்புரவைத் துறந்து சென்று [illegible] செய்யாமல் பலர் இல்வாழ்க்கையில் இருந்து வருகின்றார் என்பதை [illegible] தெரியவேண்டும். இதனால் இல்லறத்தார் துப்புரவுக்கார் என்பதும் [illegible] இயல்பும் ஒருவகை தெரிக்கப்பட்டது. தவத்தின் பயனை இல்வாழ்வார் தாமடைகின்ற [illegible] [illegible]. இது சேந்தனார் செய்கையினாலும் இதனாலும் [illegible].

கதை.

சேந்தனார் என்பவர் சோழநாட்டிலுள்ள காவிரிப்பூம் பட்டினத்திருந்தவர். [illegible] கன்னிகையை மணந்து

இல்வாழ்க்கையிலமர்ந்து எவ்வுயிர்க்கும் அன்புடையராய் இன்புடன் வாழ்ந்தார். தாம், முதலில் வணிகராய் இருந்தகாலத்தில் பட்டினத்தடிகள் இவரைத் தமது நிதியறைக்குக் தலைவராக்கினார் இவரும் அமைந்து அதனை உரிமையோடு போற்றினார். அடிகள் துறவடைந்தபோது, தம் பொருள் முழுவதையுந் தெருவிடைச் சூறையிடும்படி சொன்னார். அவ்வாறே இவர் செய்தார்; பற்றற்று நின்றார். பல்லுயிர்க்கும் இரங்கினார். அடிகள் அகன்ற பின் இவரும் அந்நகரைவிட்டகன்று மனைவியோடு சிதம்பரத்துக்கு வந்தார். அங்குத் தங்கினார். பொருளை வருந்தி யீட்டினார். அதனால், விருந்தினரையூட்டினார்; அருந்தவரைப் பேணினார். தவம் புரிதற்குரிய மன நிலையைப் பெற்றிருந்தும் அதனை மறந்து இவர், உயிர்கட்கு உதவியே புரிந்தார். தவத்தின் உயர்வை உணர்ந்திருந்தும் தாம் செய்யும் தானத்தையே விரும்பி இல்வாழ்ந்திருந்தார். இவரது உபகார நலத்தை உலகினுக்கு உணர்த்த விரும்பிச் சிவமூர்த்தி ஒருநாளிரவு இவர் வீட்டுள் நுழைந்தார். அங்கிருந்த கூழை அன்புடன் உண்டார். மறுநாள் தில்லைப் பரமன் திருமேனி முழுதுங் கூழமைந்திருந்தது. கண்டவர் திகைத்தார். உடனே "இது சேந்தனார் ஊட்டிய திருக்கூழ்" என்று ஒருசொல் சிறந்தெழுந்தது. கேட்டவரெல்லாரும் வியந்து சென்று சேந்தனாரைச் சேவடி வணங்கினார். அவரும், துறந்தவர்க்கெல்லாம் துப்புரவு நல்கிச் செப்பமுற வாழ்ந்தார்.

விரிவைத் திருமுறையில் காண்க.

கதை 2.

சோமர் என்பவர் தினகரன் என்னும் ஓர் அரசன்புதல்வர். அருளும் நீதியும் அமைந்த நெஞ்சினர். பெருங்கொடையாளி. உயிர்களுக்கு உதவிசெய்தலை தவமெனக் கொண்டார். உணவும் பிறவும் எவர்க்கும் உவந்து உதவினார். பற்றில்லாத உள்ளத்தைப் பெற்றிருந்தும் இல்லறத்தையே இவர் பற்றி நின்றார். தானஞ் செய்வதையே விரும்பித்தன் தவத்தையும் மறந்தார். ஒளவையாரும் இவரை அன்புடன் பாடினார்.

நிழலருமை வெய்யிலிலே நின்றறிமின் ஈசன்
கழலருமை வெவ்வினையிற் காண்மின்—பழகுதமிழ்ச்
சொல்லருமை நாலிரண்டிற் சோமன் கொடையருமை
புல்லரிடத் தேயறிமின் போய். (ஔவை.)

இல் வாழ்வார் தானத்தையும், துறந்தார் தவத்தையும் இனிது செய்யவேண்டுமென்பது இதனால் கூறப்பட்டது.

264. ஏசிச் சிலரை யழித்தார் திரிசங்கைக்
கோசிகரேன் காத்தார் குமரேசா—கூசாமல்
ஒன்னார்த் தெறலும் உவந்தாரை யாக்கலும்
எண்ணிற் றவத்தான் வரும். (௪)

ள.

குமரேசா! கோசிகர் சிலரை வைது கெடுத்தார் என் திரிசங்கை வாழ்த்திக் காத்தார் எனின், ஒன்னாரைத் தெறலும் உவந்தாரை ஆக்கலும் எண்ணின் தவத்தான் வரும் என்க.

ஒன்னார்—பகைவர். தெறல்—கெடுத்தல். ஆக்கல்—உயர்த்தல். உவந்தார் என்றது நண்பரை.

பகைவரைக் கெடுத்தலும் நட்பினரை உயர்த்தலும் தவஞ் செய்வார் எண்ணுவராயின் அவர்க்கு அவை எளிதில் உளவாம் என்பதாம்.

அருளமைந்த உளமுடையராதலால் தவஞ் செய்வார், தமக்குத் தீங்கு செய்யுங் கொடிய பகைவனையும் கெடுக்க எண்ணார் என்பது கருதி "எண்ணின்" என்றார்.

செற்றமும் பற்றும் நீங்கிய மனத்தினையுடைய தவத்தினர்க்குப் பகைவர் இவர், உறவினர் இவர், என்னும் பகுப்பு இல்லையாயினும் ஏதேனும் ஓர் ஏதுவால் உளராயின் முறையே அவரை அழிக்கவும் ஆக்கவும் அவர், வல்லுநர் என்பதாம்.

பட்டினி கிடந்து உடல் மெலிந்து ஒடுங்கியிருப்பினும் தவமுடையார் எண்ணிய துணையானே எல்லா வலிமைகளும் அவர்பால் நண்ணும் என்பது கருத்து.

தவத்தினரைப் பகைத்து இகழ்வோர் கேடுற்றழிவர், உவந்து புகழ்வோர் உயர்ந்து வாழ்வர் என்பது குறிப்பு.

செறுத்தாரை அழிக்கவும் சேர்ந்தாரை ஆக்கவும் தவவலியுடையார்க்கு இயலும் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இது கோசிகர்பால் உரைப்படும்.

கதை.

கோசிகர் அரசைத் துறந்து அடவியிற் புகுந்து தென்றிசை நண்ணி அருந்தவம் புரிந்தார். அக்காலத்தில் திருவயோத்தியிலிருந்து செங்கோல் செலுத்திய சூரியகுலத் தோன்றலாகிய திரிசங்கு என்பவன் தனது குருவின் சாபத்தால் உருநிலைமாறி மனமிக மெலிந்து வனமெலாந் திரிந்தான். முடிவில் இவரை வந்து கண்டான். பேருவகை கொண்டான். உவந்து தொழுதான். முனிவர், அவனது இயல்பினை முழுவதும் வினவியோர்ந்தார். இரங்கினார். அவன் அடைந்த சிறுமையை நீக்கி அவனை அமரருள் ஒருவனாக ஆக்க எண்ணினார். அதன் பொருட்டு வேள்வி ஒன்று செய்ய விரும்பினார். அங்குள்ள முனிவரை உடன்வர அழைத்தார். சிலர் மறுத்து இவரை அவமதித்தார். அவரனைவரும் இழிந்தவராக இவர், நினைந்தார். உடனே வேடுவர்களாயினர். காடுகள்தோறும் அலைந்தார். கேடுற்றழிந்தார். அதன்பின் அரசனை நோக்கினார். "நீ போய்த் துறக்கத்தில் நில்" என ஏவினார். உடனே மன்னன் ஓங்கி யெழுந்தான். அவ்வுலகை ஒல்லையிலடைந்தான். அங்குள்ள தேவர் அவனைப் புலையனென்று கருதித் தலைகீழாகத் தள்ளினார். அரசனும் புரண்டு அவனியில் வீழ்ந்தான். அபயம் அபயம் என அஞ்சி அரற்றினான். முனிவர் தெரிந்தார். "நில் நில் நில்" எனச் சொல்லி விரைந்தார். அரசனும் ஆங்கே அமைந்து தொங்கினான். முனிவர் முனிந்தார். வான்முதலனைத்தையுந் தானே படைக்கத் துணிந்தார்.

அவரது தவ வலிமையைக் கண்டு அமரரும் அஞ்சினர். மூவரும் வியந்து அவர் முன்னே தோன்றினர். அடைந்தாரை ஆதரிக்கும் அவரது அருளையும் தவத்தையும் துதித்தார். பொறுத்தருளும்படி அவரைப் புகழ்ந்து வேண்டினர். திரிசங்கை வானில் தனியிடமொன்றில் அவர் விரும்பியபடியே தங்கும்படி செய்தார். ஒன்னாரைத் தாழ்த்தவும் உவந்தாரை உயர்த்தவும் தவமுடையார் எண்ணின் உடனே அவர்க்கு அவை உளவாம் என்பதை அனைவரும் அவர்பால் தெளிந்தார். (இதன் விரிவை இராமாயணத்தில் காண்க.)

இன்னும், இவர்பால் ஒன்னாராகி ஒழிந்தாரும் உவந்தாராய் நின்று உயர்ந்தாரும் பலராவர்.

விஞ்சிய விசுவா மித்திர னாலே
அஞ்சொல் அரம்பை அருஞ்சிலை யானாள்
தஞ்செனை நீடு தவத்தவர் தம்பால்
வஞ்ச மிழைத்தவர் வாழ்ந்தவர் மன்மேல் (சேதுபுராணம்.)

தவமுடையார் அழிக்கவும் ஆக்கவும் வலியர் என்பது கூறப்பட்டது

265. பாலப் பருவத்தே பண்டுதவம் ஏன்முயன்றார்
கோலவுப மன்யு குமரேசா—சீலமுடன்
வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவம்
ஈண்டு முயலப் படும்.

குமரேசா! உபமன்யு என்பவர் இளமைப் பருவத்தே ஏன் பெருந்தவஞ் செய்தார் எனின், வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம் ஈண்டு முயலப்படும் என்க.

வேண்டிய—விரும்பிய பொருள்கள். இது வினையாலணையும் பெயர். ஈண்டு முயலப்படும்—இங்குச் செய்யப்படும்.

தவமே தம் கருமம் என்று கருதி அறிவுடையோரால் செய்யப்படும் ஆதலால் அதனைச் 'செய்தவம்' என்றார். இது செயப்பாட்டு வினைப்பொருளில் வந்த செய்வினை எச்சம்.

தவத்தால், விரும்பிய பயன்களை விரும்பியவாறே மறுமையில் பெறலாம் ஆதலால், செய்யப்படுவதாய தவம் அறிவுடையோரால் இம்மையிலே முயலப்படும் என்பதாம்.

மேல், பகைத்தவரைக் கெடுக்கவும், அடுத்தவரை உயர்த்தவும் தவம் வல்லது என்றார்; இதில், அதனால் எண்ணியவெல்லாம் எண்ணியவாறே எய்தலாம் என்றார்

> ஆக்கமும், திறலும், சீரும், ஆயுவும், நலனும், மேலாம்,
> ஊக்கமும், வீடும், எல்லாம், தவத்தினது ஊற்றம் அன்றே
> என்றார் பிறரும்.

எல்லா நலங்களும் தவத்தால் எய்தலாம் ஆதலால் அதனை இளமையிலேயே ஒருவன் விரைந்து செய்யவேண்டுமென்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை உபமன்யு பால் உணரப்படும்.

கதை.

உபமன்யு என்பவர் வியாக்கிரபாத முனிவருடைய புதல்வர். வசிட்டருடைய தங்கையாகிய வசுமதி பால் பிறந்தார். வறுமை வளர வளர்ந்தார். மாவின் பாலையே நாளும் பருகினார். தாய் இவரை எடுத்துச் சென்று தன் தமையனார் வீட்டில் சில காலம் தங்கியிருந்தாள். வசிட்ட பத்தினியாகிய அருந்ததியார் அங்கிருந்த காமதேனுவின் பாலை நாளுங் கறந்து இவர்க்கு நன்கு கொடுத்தார். உண்டு மகிழ்ந்தார். பின், ஊருக்கு வந்தார். அப்பாலையே நினைந்து தாயிடம் அழுதார். என் செய்வாள் பாவம்! வசுமதி வருந்தி முன்னைத் தவமின்மையால் வறுமையில் வாடுகின்ற நமக்குப் பால் எங்கிருந்து வரும் என்று மதலையை நோக்கி மனங் கவன்று மொழிந்தாள். உபமன்யு கேட்டார். எல்லா நலங்களையுந் தவத்தால் எய்தலாம் போலுமென்று துணிந்து வெளியே சென்றார். திரிகூட மலையிலிருந்து இறைவனை நோக்கி

அருந் தவ முயன்றார். பருவங்கள் பல கடந்தன. முடிவில் பரமன் இவர் முன்னே தோன்றி வேண்டுவதென் என வேண்டிக் கூறினார். இவர், தமது தாய் தந்தையர் பொற்கலத்தில் வைத்துப் பாலடிசில் உண்ணவும், திருமகள் என்றுந் தம் இல்லில் உறையவும், இருமை இன்பமும் தாம் உரிமையிற் பெறவும், அருள்க என வேண்டினார் அவ்வாறே பரமன் அகமகிழ்ந்தருளித் திருப்பாற் கடலையும் இவர் விருப்புறத் தந்தார். உபமன்யு, தம் தவ நலத்தால், இம்மையில் எல்லா நலங்களையுந் துய்த்து மறுமையினும் வேண்டியன வேண்டியவாறே எய்தி மேன்மையுற்றிருந்தார்.

(இதன் விரிவைச் சிவ ரகசியத்தில் காண்க).

ஆற்றலிற் றாமுடல் அலசப் பல்பகல்
நோற்றவ ரல்லரோ நுவலல் வேண்டுமோ
தேற்றாகி லிர்வொராலை தேவ ராகியே
மேற்றிகழ் பதகதொறு மேவுற் றாரெலாம்.

(கந்தபுராணம்).

எவ்வகைப் பொருள்களும் ஈய வல்லது
செவ்விய தவமதே தெரியின் வேறிலை
இவ்வுல கத்திலை நியற்றி னின்றதே
உவ்வுட லெடுத்தபே றுறுதி யென்பவே.

(திருக்கூவப் புராணம்).

எண்ணியவெல்லாந் தவத்தால் எய்தலாம் என்பது இதனால் கூறப்பட்டது-

266. பண்டுபலர் சிற்றின்பம் பற்றச் சவுனகரேன்
கொண்டுதவஞ் செய்தார் குமரேசா—மண்டு
தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார் மற்றல்லார்
அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு. (௬)

இ—ள்.

குமரேசா! பலர் பொருள் இன்பங்களைச் செய்து நிற்ப என் சவுனகர் என்பவர் தவஞ் செய்யச் சென்றார் எனின், தவம் செய்வாரே தம் கருமம் செய்வாராவர்; மற்று அல்லார் ஆசையுட்பட்டு அவம் செய்வார் என்க. அவம்—கேடு.

மற்று அல்லார் என்றது தவம் செய்யாதவரை.

செய்தல் என்னும் வினைக்கு மறுதலையாய செய்யாமையை உணர்த்தி நின்றமையின் மற்று இங்கு வினைமாற்றின்கண் வந்தது.

தவம் செய்வாரே தம் உயிர்க்கு இன்பம் செய்தவராவர் அல்லாதார் ஆசையாகிய வலையுட்பட்டு கேடுசெய்பவரே என்பதாம்.

உயிர்க்கு உறு துணையாய் நின்று பிறவியை ஒழித்துப் பேரின்பத்தைத் தர வல்ல தவத்தைச் செய்யாமல் பொறியின்பங்களை விரும்பிப் பொருள்களைப் பெற முயற்சி செய்வோர், ஆசையென்னும் பெருங் காற்றிலகப்பட்டு உணர்விழந்து சுழன்று மேலும் மேலும் பிறந்து பெருந் துன்பத்தை அடைய மருவுவர் ஆதலால் தவஞ் செய்யாதவர் தமக்கே அவஞ் செய்வார் ஆயினர் என்க.

தமக்கு நன்மையை நாடுவோர் தவமே செய்யவேண்டுமென்பது குறிப்பு.

தவமே உயிர்க்கு இன்பம் பயக்கத்தக்கது; அத்தவத்தைச் செய்யாதவர் தமக்கே துன்பஞ் செய்தவராவர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை சவுனகர் பாலும் சையாதி பாலும் உணரப்படும்.

கதை.

சவுனகர் என்பவர் பிருகுமுனிவருடைய புதல்வர். வேத முதலிய கலைகளையெல்லாம் ஓதியுணர்ந்தார். உணர்வுமிகுந்தார். உருவம் பருவம் முதலியவற்றுள் தபனையொத்த அரசபுதல்வர் பலருடன்கூடி அகமகிழ்ந்திருந்தார். உலகப்பொருள்களால் உள

வாம் இன்பம், நிலையில்லாதது என்றுந்தெளிந்தார். உடலுறும் இன்பத்தை வெறுத்தார் உயிர்க்குறும் இன்பத்தை விரும்பினார். தனிவனம் ஒன்றில் இனிதுறஅமர்ந்தார் வருந்திநின்று அருந் தவஞ்செய்தார். இவருடன் இருந்த அரசகுமாரர் அனைவரும் பொருளின் இன்பங்களைப் பொருந்தச்செய்தார். சிற்றின்பங்களை முற்றத்துய்த்தார். ஆசையுட்பட்டார். அரசராய் நின்றார். அவருள் சையாதி எனபவன் தன் அருமைமகளுடன் ஒருநாள் வேட்டைக்குவந்தான். சவுனகர் இருக்குந் தவவனஞ்சார்ந்தான். அரசன்குமரி அங்கிருந்த ஒருபுற்றினை உற்றுநோக்கினாள். அதில் விழிகளின ஒளிகளைக்கண்டாள். ஒருசிறு துரும்பையெடுத்தாள். அவ் ஒளி ஒன்றில் உருவக்குத்தினாள். அஃது அப்புற்றுள் அடங்கியிருந்த சவுனகரது விழியாதலால், அவர் சிறிது வருந்தினார். அதனால் அவ்வனமுழுதும் இருண்டது. அரசனும் பிறரும் கலங்கி அப்புற்றினையடைந்தார். உற்றதையுணர்ந்தார். உடனே முனிவர் அடியில் அரசன் முடியுறப்பணிந்தான். சவுனகர் பொறுத்துத் தணிநிலைநின்றார். சையாதி என்னும் மன்னன் தன் மகளை அம்முனிவருக்கே உகவித்தானும் மெய்யுணர்வுடையவனாய்த் தவஞ்செய்யவிரும்பினான். அமரர் தலைவனாகிய இந்திரனும் வந்துவணங்கச் சவுனகர் தவஞ்செய்து உயர்ந்தார். உடனிருந்த அரசரும் பிறரும் பொருளின்பங்களைச்செய்து ஆசைவலையிற் பட்டு அல்லற்பட்டார். தவஞ்செய்வாரே தமக்கு நன்மைசெய்பவர் அல்லாதவரெல்லாரும் தமக்கே அவஞ்செய்தவராவார் என்பதை உலகம்இவர்பால் ஓர்ந்தது. (விரிவைப் பாரதத்தில்காண்க)

பொருளொடு போகம் புணர்தலுறினும்
அருளுதல் சான்ற அருந்தவஞ் செய்ம்மின்
இருளில் கதிச்சென் றினியிவண் வாரீர்
தெருள லுறினுந் தெருண்மின் அதுவே. (வளையாபதி.)

தவஞ் செய்வாரே தம்முயிர்க்கு நன்மைசெய்வார் என்பது இதனால் கூறப்பட்டது.

267. மண்டு புகழ்ச்சீதை வாகீசர் வாசகர்சீர்
கொண்டனரேன் துன்பால் குமரேசா—மண்டிச்
சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடுந் துன்பம்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு. (எ)

இ—ள்.

குமரேசா! சீதை, வாகீசர், மாணிக்கவாசகர் என்னும் இவர்கள் துன்பம் எய்தியதால் ஏன் மேன்மையை எய்தினர் எனின், சுடச் சுடரும் பொன் போல், நோற்கிற்பவர்க்குத் துன்பம் சுடச்சுட ஒளிவிடும் என்க.

நோற்கிற்பவர்க்கு—தவஞ் செய்வார்க்கு. இதிலுள்ள கில் என்னும் இடைநிலை அவர், அதனை ஆற்றும் ஆற்றலையுணர்த்தி நின்றது.

தீ, சுடச்சுட பொன்னுக்கு ஒளி மிகுமாறுபோல், துன்பம் வருத்த வருத்த தவஞ்செய்வார்க்கு மேன்மை மிகும் என்பதாம்.

பொன்னின் உவமையால் அவர் தன்மை யுணரப்படும்.

பொன்னைத் தீயிடைவைத்து உருக்கி அதனோடு கலந்து நின்ற மாசினை நீக்குவர்; அங்ஙனஞ் செய்தலைப் புடம் இடுதல் என்பர். புடம் இடுந்தோறும் பொன்னுக்கு ஒளியும் மாற்றும் உயர்ந்து தோன்றும், அதுபோல், துன்பந்தோயுந்தோறும் அருந்தவர்க்கு மேன்மையும் ஞானமும் மிகுந்து விளங்கும் என்பார் "பொன் போல் ஒளிவிடும்" என்றார்.

பசி முதலிய உற்ற நோயாலும் பிறர் புரியும் மற்ற நோயாலும் வருந்த வருந்த அருந்தவர்க்குப் பெருமையும் ஞானமும் பொருந்தி மிகும் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை சீதை, அப்பர், மாணிக்கவாசகர், என்னும் இப்பெரியார்பால் காணப்படும்.

கதை.

சீதை என்பவர் மிதிலை வேந்தனாகிய சனகன் புதல்வி. திருவின் கலையாய் இவ்வுலகிலவதரித்து இராமபிரானை மணந்து திரு

வயோத்தியிலிருந்து வாழ்ந்தார். இராமன் வனம் புகுங்கால் உடன் புகுந்தார். பஞ்சவடியென்னும் இடத்தில் அமைத்திருந்த இலைக்குடிசையில் தங்கியிருந்தார். இராமனும் இலக்குவனும் நீங்கிய அமையம் பார்த்துவந்து இலங்கையர் வேந்தனாகிய இராவணன் இவரைக் காதலித்து எடுத்துச் சென்றான். சிறையிடை வைத்துத் தன் தீய எண்ணத்தைத் தெரிவித்தான். கற்புத் தெய்வமாகிய சீதை தன் நிறைவழுவாமல் நின்று இராமனை நினைந்து நெடுந்தவஞ் செய்தார். கணவனைப் பிரிந்து இலங்கையிலிருந்த காலத்தில் அவர் அடைந்த துன்பங்கள் பல. முடிவில் இராமன் வானரப்படைகளுடன்வந்து இலங்கையை வளைத்து அரக்கரனைவரையும் இராவணனையுங் கொன்று வென்றி புனைந்தபின் தன் மனைவியையுங் கொணரும்படி செய்தார். சிறையிடையிருந்த சீதையும் விரைவுடன் வந்து தம் கணவனைத் தொழுதார். இராமன், வெகுண்டவர்போல் நோக்கிப் பல வெம்மொழி பகர்ந்தார். அவர் குறிப்பின்படி சீதை தீயிடைக் குதித்தார். தீங்கின்றி நின்றார். சிறந்து ஒளி மிகுந்தார். அவர், கற்பின் நலத்தையும் தவத்தின் திறத்தையும் எல்லாரும் புகழ்ந்து துதித்தார். சிறையிருந்து துன்பமெய்தியதால் சீதையின் அறிவும் பெருமையும் முன்னையினும் சிறந்து விளங்கின.

பொன்னைத் தீயிடைப் பெய்தலப் பொன்னுடைத் தூய்மை
தன்னைக் காட்டுதற் கென்பது மனக்கொளல் தகுதி
உன்னைக் காட்டினன் கற்பினுக் கரசியென் றுலகில்
பின்னைக் காட்டுதற் கரியதென் றெண்ணியப் பெரியோன்.

இது, துன்பத்தால் வருந்தி நின்ற சீதையைத் தேற்றித் தசரதன் கூறியது.

கதை 2.

அப்பர், மாணிக்கவாசகர், என்னும் இவ் அருந்தவர் இருவர்க்கும் சமணரும், பாண்டியனும், செய்த துன்பங்கள் பல. அத்துன்பங்கள் வருத்த வருத்த அவர்க்கு மெய்யுணர்வும் மேன்மையும் மேலோங்கி நின்றன. இவ்வுண்மையை அவர் சரிதையில் உணர்க.

வருந்த வருந்த அருந்தவர்க்குப் பெருஞ்சீர் உண்டாம் என்பது இதனால் கூறப்பட்டது.

---

268. மண்டிபுகழ் நந்தியைமேயன் மன்னுயிரெல் லாமுவந்து
கொண்டுதொழு கின்ற குமரேசா—கொண்டுநின்ற
தன்னுயிர் தானறப் பெற்றானை யேனைய
மன்னுயி ரெல்லாந் தொழும். (அ)

இ—ள்.

குமரேசா! உயிர்களெல்லாம் நந்தியை என் உவந்து தொழுகின்றன எனின், தன் உயிரைத் தான் அறப் பெற்றானை ஏனைய மன் உயிர் எல்லாம் தொழும் என்க.

தான் அறப் பெற்றானை—தனக்கே முற்றும் உரிமையாகப் பெற்றவனை. என்றது புலன்களை அவாவி மனவசப்பட்டு அடிமையாகாமல் தனது உயிரின் உயர் நிலைமை ஒருவன் தனக்கே உரித்தாகக்கொள்ளலை. ஏனைய மன்னுயிர் என்றது தன்னுயிரைத் தனக்கு உரித்தாகப் பெறாத மற்றைய உயிர்களை. ஏனைய என்பது குறிப்புப் பெயரெச்சம்.

தனது உயிரைப் பொறிகளுக்கு உரிமையாக்காமல் தனக்கே முழுவதும் உரிமையாக்கிக்கொண்டவனை மன்னுயிர்களெல்லாம் மகிழ்ந்து தொழும் என்பதாம்

பொய்ப் பொருள்களில் புக்குழன்று புன்மையுறாமல் மெய்ப் பொருளை அடைதற்கு ஏதுவாகிய தவத்தைச் செய்தவரே உயிர் பெற்ற பயனை யுற்றவராவர்; மற்றவரெல்லாம் பெற்றவரல்லர் என்பது கருத்து. புறத்தேயுள்ள பொருள் முதலியவற்றைத் தனக்கு உரித்தாகப் பெற முயல்வதினும் உள்ளேயிருக்கும் உயிரையே அவ்வகைபெற ஒருவன் முயலவேண்டுமென்பது குறிப்பு.

உடம்பு பெற்றவரெல்லாம் உயிரைப் பெற்றவரே யெனினும் அவ்வுயிர், உயர்நிலை யெய்தி மெய்யின்பத்தைப் பெறும்படி உயர்வு பெற்றவனே அதனைத் தனக்கு உரித்தாகப் பெற்றவன் என்க.

தவத்தால், உயிரைத் தனக்கு உரித்தாகப் பெற்றவரை உலகமெல்லாம் உவந்து தொழும் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை நந்தி தேவர்பால் உணரப்படும்.

கதை.

நந்திதேவர் என்பவர் சிலாத முனிவருடைய புதல்வர். தாய் பெயர் சித்திரவதியார். தமது பெற்றோர் செய்த அருந்தவத்தின் பெரும் பயனாக இவர் அவதரித்தார். அழகும் அறிவும் அமைதியும் வாய்ந்து எல்லாவுயிர்களும் இன்புற வளர்ந்தார். சைலாதி என்று முதலில் பெயரிடப் பெற்றார். பல்வகைக் கலைகளும் பயின்று தெளிந்தார். உலகப் பொருள்களில் உளப்பற்றற்றார். பொறி வழிச் செல்லும் சிறுமை அகன்றார். மனமொழி மெய்களை இனிதுற அடக்கினார். சிவமே துணையென்று தவமே புரிந்தார். உதிர் சருகு தின்றும் சிறிது நீர் பருகியும் உடல் வருந்தி நின்றார். பருவங்கள் பல கழிந்தபின் பரமன் தோன்றினார். வேண்டியது என் என வினவினார். "நின்பால் அன்பே என்பால் அருள்க" என இவர், வேண்டி வணங்கினார். அவர், அதை அருளி அகன்றார். அதன் பின்னும் இவர், அருந்தவமே செய்து அவர்பால் பெரு நலங்களெல்லாம் பெற்றார். பரமனைப்போலவே திருவுருவமைந்து என்றும் அழிவில்லாதவராய் எல்லாத் தெய்வங்களுக்குந் தலைமைத்தன்மையை யெய்தி சுயஞ்ஞை என்னுந் திரு மனைவியோடு பெருமகிழ்வுற்றார். திருக்கைலையில் நின்று சிறந்து விளங்கினார். அமரரும் போற்றும் உயர்ந்த பதவியில் அமரப்பெற்றார். ஆருயிர் அனைத்தும் இவரை அகமகிழ்ந்து தொழுதன. தன் உயிரைத் தனக்கு உரித்தாகப் பெற்றவனை மன்னுயிரெல்லாம் மகிழ்ந்து தொழும் என்பதை உலகம் இவர்பால் உணர்ந்து தெளிந்தது.

(இதன் விரிவைச் சிவ புராணத்தில் காண்க.)

தவமுடையானை உலகமெல்லாம் தொழும் என்பது இதனால் கூறப்பட்டது.

269. சாற்றுபுகழ் மார்க்கண்டர் சாருஞ் சுவேதரேன்
கூற்றினையும் வென்றார் குமரேசா—ஏற்றமிகு
கூற்றங் குதித்தலுங் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு. (௯)

இ—ள்.

குமரேசா! மார்க்கண்டர் சுவேதர்என்னும் இருவரும்என் தமது தவத்தால் கூற்றையும் வென்றார் எனின், நோற்றலின் ஆற்றல் தலைப்பட்டவர்க்குக் கூற்றம் குதித்தலும் கைகூடும் என்க.

கூற்றம்—எமன். இப்பெயர் உடம்புகளிலிருந்து உயிரை வேறு பிரித்துக் கூறுபடுத்துவோன் என்னும் ஏதுவான் வந்தது.

நோற்றலின் ஆற்றல் தலைப்பட்டவர்க்கு—தவத்தினாலாகிய வலிமையைச் சார்ந்தவர்க்கு கூற்றங் குதித்தலும் கைகூடும்—எமனைக் கடக்கவும் முடியும். உம்மை, அவனைக் கடக்க முடியாமையைக் காட்டி நின்றது. தலைப்பட்டவர்க்குங் கைகூடும் என்று காண்க.

தவத்தினாலுண்டாம் வலிமையை யடைந்தவர்க்கு எமனை யுங்கடந்துவிட முடியுமென்பதாம்

கை தலை என்னும் உறுப்பின் பெயர்கள் இதில் வேறு வகையில் கலந்து நின்றன.

தவமுடையாரை மன்னுயிரெல்லாந் தொழும் என்று மேலே கூறினார்; இதில், அவர், எமனையுங் கடப்பர் என்றார். தவமானது தன்னையுடையாருக்கு அழிவில் நிலைமையை அருளும் என்பது கருத்து.

கடத்தற்கு அரிய எமனையும், தவமுடையார் கடந்துவிடுவர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை மார்க்கண்டர் சுவேதர் என்னும் இவ்விருவர்பாலும் உணரப்படும்.

கதை.

மிருகண்டு முனிவரது புதல்வராகிய மார்க்கண்டர் பதினாறுவது வயதின் முடிவில் தமக்கு முடிவுகாலம் என்பதைத் தெரிந்தார். என்றும் அழியாமல் இருக்கும் நிலைமையை எய்த விரும்பி

னார். தவம் ஒன்றனே விரும்பிய எல்லாம் விரும்பியவாறே பெறலாம் என்று உணர்ந்தார். உடனே சென்றார். உற்ற நோய் நோற்று உயர் தவஞ்செய்தார். அதன் வலிமையால் எமனையும் கடந்தார்.

> உதவிய மிருககண் டேயன் மாலயன்
> முதலவர் புகழ்தரு முதன்மை பெற்றனன்
> விதிமுறை யவனருள் மிருகண் டொப்பிலோர்
> புதல்வனைப் பெற்றனன் புரிந்த நோன்மையால். (1)
>
> அப்பெருந் திருமகன் ஆற்றும் நோன்பினால்
> தப்பரும் விதியினைத் தணந்து கூற்றுவன்
> துப்பினை யகற்றியே தொலைவு கண்டபின்
> எப்பொழு தத்தினும் இறப்பின் றாயினான். (2)

(மார்க்கண்டேயப் படலம்.)

கதை 2.

சுவேதர் என்பவர் மாதிமன் என்னும் ஒரு வேதியன் புதல்வர். சிறந்த கல்வியும் நிறைந்த அறிவும் திருந்திய பண்பும் பொருந்தப் பெற்றவர். பிறவியில் என்றும் பெருந்துன்பமே என்று தெளிந்தார். உலக வாழ்க்கையை வெறுத்தார். உண்டி முதலியவற்றைச் சுருக்கி உயர்ந்த விரதங்களைக் கொண்டார். அதன்பின் அலைகின்ற மனத்தையடக்கி அருந்தவம் புரிந்தார். புரிந்துவருங்கால் காலமுடிவில் காலன் வந்தான். அவரது அருந்தவங்கண்டான். கலங்கியகன்றான். பின் கூற்றுவன் வந்து கொதித்துப் பிடித்தான். பரமனருளால் அவனே யிறந்தான். அழியாத வாழ்வினைச் சுவேதர் அடைந்தார். இறந்த எமனை எழுப்பித்தரும்படி வேண்டினார். இறைவன் அருள அவனும் எழுந்தான். தவத்தின் ஆற்றலை மிகப்போற்றி யகன்றான்.

தவவலியுடையார் எமனையும் கடப்பர் என்பதை உலகம் இவர்பால்கண்டது. (இதன் விரிவை இலிங்கபுராணத்தில்காண்க.)

தவத்தினில் அமர்புரி சமனை வெல்லலாம்
தவத்தினில் எழுகடல் தமையும் உண்ணலாம்
தவத்தினில் வடவரை களைந்து தாங்கலாம்
தவத்தினில் அனலமும் தரிக்க லாகுமே.
(திருக்கூவப் புராணம்.)

தவவலியால் எமனையுங் கடக்கலாம் என்பது இதனால் கூறப்பட்டது.

270. பண்டு பலரிலராய்ப் பாடழிந்தார் பாணனைக்
கொண்டான் திருவைக் குமரேசா—மண்டி
இலர்பல ராகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர். (ய)

இ—ள்.

குமரேசா! பலர் வறுமையால் வாடினர் பாணன் ஏன் பெருந் திருவையெய்தி அரசனையடைந்தான் எனின், இலர் பல ராகியகாரணம் நோற்பார் சிலர் நோலாதவர் பலர் என்க.

இலர்—வறியவர். பொருள் இல்லாதவர் என்னும் ஏதுவான் வந்தது. நோற்பார்—தவஞ்செய்வார். நோலாதவர்—தவஞ்செய்யாதவர். இலர் பலர் ஆகிய காரணம்—வறியவர் பலர் ஆதற்குங் காரணம். ஆகிய என்பது இங்கு எதிர்கால வினையெச்சமாய் நின்றது.

பொருளுடையவர் சிலராகவும் பொருளில்லாதவர் பலராகவும் ஆதற்குங் காரணம் தவஞ்செய்வார் சிலரும் தவஞ்செய்யாதவர் பலருமாயமைந்தமையேயாம் என்பதாம்.

செல்வர் சிலராகவும், வறியர் பலராகவும், இவ்வுலகில் காணப்படுகின்றாரே யிதற்குங் காரணம் யாது என்பாரை நோக்கி யிது கூறியுள்ளதாகக் காண்க.

ஒத்த பிறப்பினையுடைய மக்களுள்ளே சிலர் மாத்திரம் செல்வம்பெற்றுச் சிறந்து வாழவும், பலர் வறுமை மிக்கு வருந்தித்

தாழ்வும், அமைந்தமைக்குக் காரணம் தவஞ்செய்தலும் செய்யாமையுமேயாம் என்று காட்டித் தவத்தின் நலத்தை இஃதுணர்த்தியதென்க.

இனி, நுண்ணிய அறிவு இன்மையே வறுமை அஃதுடைமையே பெருஞ் செல்வம் எனப்படும் ஆதலால் அவ் அறிவினது இன்மை உண்மைகளும் ஈண்டுக்கொள்ளப்படும்.

முற்பிறப்பில் தவஞ்செய்தவரே இப்பிறப்பில் செல்வராய்த் திகழ்வர்; செய்யாதவர் வறியராய்த் திரிவர் என்பது கருத்து.

தவம், யமபயத்தை நீக்கி இறுதியில் பேரின்பத்தை ஆக்கும் என்றுமேலே கூறினார்; இதில் அது, பெருந்திருவையும் இங்குப்பொருந்த நல்குமென்றார். தவம் ஒன்றே இருமையினும் இன்பமெய்துதற்குரிய உரிமைகளையெல்லாம் ஒருங்கே உதவும் ஆதலால் அதனை ஒருவன் விரைந்து செய்துகொள்ளவேண்டுமென்பது குறிப்பு. தவஞ்செய்தவரே செல்வராய்ச் சிறந்து வாழ்வார் என்பது இதில் உணர்த்தப்பட்டது.' இவ்வுண்மை பாணன்பால் காணப்படும்.

கதை.

பாணன் என்பவன் பலியின் புதல்வன். சோணிதபுரம் என்னும் திருநகரில் இருந்தவன். அசுரகுலத் தோன்றலாகிய இவன், தந்தை இறந்தபின் தனிநின்று வாழ்ந்தான். புண்ணியமொன்றே எண்ணிய எலாம் தரும் என்று தன் புந்தியிலுணர்ந்தான். இறைவனை நினைந்தான். நிறையுடன் ஒழுகினான். வருந்தி நின்று அருந்தவம் புரிந்தான். பருவங்கள் பல கழிந்தபின் பரமன் தோன்றினார். அவரருளால் இவன் பெருந்திரு வெய்தினான். அமரரும் போற்றும் உயர் நலமடைந்தான். அரசனாயமைந்து ஆருயிர் ஓம்பினான். தன் மரபில் தோன்றினவரும் வேறு பலரும் இல்லாதவராய்த் தன்னை வணங்கித் தாழ்ந்து நின்றார். இவன் மாத்திரம் செங்கோல் செலுத்திச் சிறந்து வாழ்ந்தான். முடிவில், பரமன் அருகே நின்று பணிபுரியும் உயர்பதம் பெற்றான். தவத்தாலேயாகுமாக தான் பெற்ற செல்வம் என்பதை உலகம் இவன்பால் உணர்ந்து மகிழ்ந்தது.

திருவும், அறிவும், தவத்தானே வருமென்பது இதனால் கூறப்பட்டது.

உய்த்தொன்றி யோர்தந் துழவுழு தாற்றவும்
வித்தின்றிப் பைங்கூழ் விளைக்குற லென்னொக்கும்
மெய்த்தவம் இல்லான் பொருளொடு போகங்கட்
கெய்த்துழந் தேதான் இடர்ப்படு மாறே. (வளையாபதி.)

பிறந்தனர் பிறந்துசாலப் பெருகினர் பெருகிப்பின்னை
யிறந்தன ரென்பதல்லால் யாவரும் இன்றுகாறும்
மறைந்துயிர் வாழாநின்றார் இல்லையால் வாழிநெஞ்சே
சிறந்தது தவத்தின்மிக்க தின்மையே சிந்திகண்டாய்.
(சூளாமணி)

அழகு, இளமை, மேன்மை முதலிய உயர் நலங்களெல்லாம் ஒருங்கே வாய்ந்த தெய்வமகளிர் பலர் எளியராய் வந்து பணிகள் புரிய, அரக்கியர் தலைவியராய் நின்று இலங்கையில் நிலவுவதைக் கண்ட அனுமான், அவரது தவப்பயனை வியந்து கூறியதாகக் கம்பர் தீட்டிக் காட்டிய இன்கவி ஒன்று ஈண்டுக் காணத்தக்கது.

ஈட்டுவார் தவமலான்மற் றீட்டினால் இயைவதின்மை
காட்டினார் விதியாரஃது காண்கிற்பார் காண்மினம்மா
பூட்டுவார் முலைபொருத பொய்யிடை நையப்பூநீர்
ஆட்டுவார் அமரர்மாதர் ஆடுவார் அரக்கர்மாதர்.

தவமுடையவரே திருவினை அடைவர் என்னும் உண்மையை உணர்த்துகின்ற இதன நயத்தை ஊன்றியுணர்க.

(இவ்வதிகாரத்தின் தொகைப் பொருள்.)

உறுநோய் பொறுத்தலும் பிறவுயிர்கட்கு அருள்புரிதலுமே ஒருவனுக்கு அருந்தவமாகும். முன் தவமுடையார்க்கே அஃது எளிதில் கைகூடும். இல்லறத்தார்க்குத் தானம்போல் துறவறத்தார்க்குத் தவமே சிறந்தது. அதனால் அழிக்கவும் ஆக்கவும் வல்ல ஆற்றல்கள் உளவாம். எண்ணிய எல்லாம் அஃது இன்புற நல்கும். தவஞ்செய்வாரே தன்னுயிர்க்கு நன்மை செய்தவராவர். சுடச்சுடப் பொன் ஒளிவிடுவதுபோல் துன்பம் உற உறத் தவஞ் செய்வார் சிறந்து விளங்குவார். தவமுடையானை உலகமெல்லாம் உவந்து தொழும். தவமுடையார் எமனையும் கடப்பர். அவரே செல்வமெல்லாமெய்திச் சிறந்து வாழ்வர்.

௨௭-வது தவம் முற்றிற்று.

௨௮-ம் அதிகாரம் கூடாவொழுக்கம்.

அஃதாவது தவத்தோடு பொருந்தாத ஒழுக்கம். உள்ளத்தில் ஒழுக்கம் இலராயிருந்தும் தவமுடையார்போல் புறத்தே பொய் வேடங்கொண்டு உலகத்தாரை வஞ்சித்தொழுகும் இவ்வன்கண்மை, இருமையினும் பெருங்கேடு பயக்குமாதலால் மெய்த்தவமுடையார் இப்பொய்யொழுக்கத்தை அறவே ஒழிக்கவேண்டுமென்பது கருதி இஃது ஈண்டுவைக்கப்பட்டது. அதிகாரமுறைமையும் இதனானே தெளிவாம்.

271. பண்டுமுத்த நாதன் படிற்றொழுக்கை எல்லாரும்
கொண்டிழித்தார் என்னே குமரேசா—மண்டுகின்ற
வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும். (௧)

குமரேசா! முத்தநாதனது படிற்றொழுக்கத்தை ஏன் எல்லாரும் நகைத்து இழித்தார் எனின், வஞ்சமனத்தானது படிற்று ஒழுக்கத்தைப் பூதங்கள் ஐந்தும அகத்தே நகும் என்க.

படிறு என்பது பொய் களவு வஞ்சம் என்பவற்றைக்குறித்து வரும் ஒரு சொல். படிறு ஒழுக்கம் என்பது படிற்றொழுக்கம் என நின்றது. படிற்றொழுக்கம்—கள்ளவொழுக்கம்.

பூதங்கள் ஐந்தாவன நிலம், நீர், தீ, வளி, வான் என்பன. இவற்றின் சேர்க்கையானே உடம்பு முதலிய எல்லாப் பொருள்களுந் தோன்றியுள்ளன.

வானின் குணமாகிய ஒலியைச் செவியானும், வளியின் குணமாகிய ஊற்றை மெய்யானும், தீயின் குணமாகிய ஒளியைக் கண்ணானும், நீரின் குணமாகிய சுவையை வாயானும், நிலத்தின் குணமாகிய நாற்றத்தை மூக்கானும், நுகர்ந்து உயிர்க்கு உறுதுணை

யாயிணைந்திருக்கும் மனத்தின்கண் ஐம்பெரும் பூதங்களும் அருவாயமர்ந்துள்ளன. அவையறியாத மறைபொருள் யாண்டும் இல்லை; இவ்வுண்மையை உணராமல் எவரும் காணார் என்று கருதி வஞ்ச மனத்தான் கொள்ளும் கூடாவொழுக்கத்தை அவைகண்டு அவனது மடமையை நினைந்து அவன் காணாமல் தம்முள்ளே நகைக்கும் ஆதலான் "பூதங்கள் ஐந்தும் அகத்தே நகும்" என்றார்.

வஞ்சங்கலந்த மனத்தையுடையவனது படிற்றொழுக்கத்தை ஐம்பெரும் பூதங்களும் அறிந்து தம்முள்ளே சிரிக்கும் என்பதாம்.

ஆறாவது ஒன்று இன்மையால், ஐந்தும் என்றார். இது முற்றும்மை. இனி, பிறர் புறத்தே நகைப்பர், பூதங்கள் ஐந்தும் அகத்தே நகும் எனக்கொண்டால், எச்சவும்மையாம். ஐம்பூதங்களும் இறைவனுருவாய் எங்குங் கலந்து நின்று எல்லாங்காணும் ஆதலால் எவரும் அறியார் என்று கருதிக் கூடாவொழுக்கத்தை ஒருவன் கூடலாகாதென்பது குறிப்பு.

அகத்தே தீயஎண்ணங்கொண்டு புறத்தே தவவேடங்கொள்வோன் பழியே யெய்தி யிழிவான் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை முத்தநாதன்பால் உணரப்படும்.

கதை.

முத்தநாதன் என்பவன் கொங்கு நாட்டின் கீழ்பால்இருந்த ஒரு குறுநில மன்னன். செருக்கும் வஞ்சமும் சேர்ந்த நெஞ்சினன். அழுக்காறுள்ளவன். ஆசை மிக்கவன். கொடுங்கோலனாகிய இவன், அக்காலத்தில் திருக்கோவலூர் என்னுந் திருநகரிலிருந்து செங்கோல் செலுத்திவந்த மெய்ப்பொருளார் மீது மிகப் பகைமை கொண்டான். அவரை வென்று அவரது நாட்டைக் கைக்கொள்ளக் கருதினான். படையுடன் சென்று மிடலுடன் பொருதான். போரில் வலிதொலைந்து புறமுதுகிட்டான். பல முறையும் வந்தான். ஒரு பயனுமின்றி மீண்டான். அப்புண்ணிய வேந்தன் பெருமையை இப்புல்லியன் எண்ணியெண்ணிப் புழுங்கினான். வஞ்சனையாலன்றி நேர்நின்று அவரை வெல்ல முடியாதென்று தெளிந்தான். தவமுடையார்போல் பொய்வே

டங்கொண்டு அம்மெய்யர்பால் வந்தான். அவர், இவன் கரவறி யாது முனிவர் எனக்கருதித் தம் அரண்மனைக்குள் அழைத்துச் சென்றார். தனியிடம் புகுந்தவுடனே இக்கொடியோன் தன் கையில் மறைத்துவைத்திருந்த வாளால் அவர்தலை துணிபடவீசிக் கொலைவினை செய்தான். உயர்ந்த வேடத்தைக் கொண்டிருந்தும் தீவினையால் இவன் இழிந்து தொலைந்தான். குற்றமுற்ற நெஞ்சினர் கொள்ளும் வஞ்சவேடத்தால் யாதும் பயனில்லையென்பதை உலகம் இவன்பால் கண்டது. (இது பெரியபுராணத்திலுள்ளது.)

வஞ்சித் தொழுகும் மதியிலிகாள் யாவரையும்
வஞ்சித்தோம் என்று மகிழன்மின்—வஞ்சித்த
எங்கும் உளனொருவன் காணுங்கொல் என்றஞ்சி
அங்கம் குலைவ தறிவு. (குமர குருபரர்.)

தீயார் கொள்ளும் மாய வேடத்தைக் கண்டு மயங்கலாகா தென்பது இதனால் கூறப்பட்டது.

272. குன்றா வுயர்தோற்றம் கொண்டும் அதிசூரன்
குன்றினான் என்னே குமரேசா—என்றேனும்
வானுயர் தோற்றம் எவன்செய்யும் தன்னெஞ்சம்
தானறி குற்றப் படின். (உ)

இ—ள்.

குமரேசா! அதிசூரன் நீறுதோய்ந்த மெய்யினனாய் உயர்ந்த தோற்றம் உற்றும் ஏன் இழிந்தான் எனின், தான் அறிந்த குற்றத்தில் தன் நெஞ்சம் படின், வான் உயர் தோற்றம் எவன் செய்யும் என்க. வான் உயர்தோற்றம்—வான்போல் உயர்ந்த தவவேடம்.

வானை உவமை கூறியது தோற்றத்தின் உயர்ச்சி தோன்ற என்க. அறிகுற்றம்—அறிந்த குற்றம். இது வினைத்தொகை.

தான் குற்றமென்று அறிந்ததின் கண்ணே தன் நெஞ்சம் பொருந்துமாயின் வான்போல் உயர்ந்த தவவேடம் என்னபயனைச் செய்யும் என்பதாம். அதனால் யாதும் பயனில்லை என்றபடி.

மனத்தின்கண் மாசுடையார் புறத்தில் எத்துணை உயர்ந்த தவவேடத்தைத் தாங்கியிருப்பினும் அதனால் அவர்க்குப் பயனில்லை என்பது கருத்து. தீய நெஞ்சினார் கொண்ட வஞ்ச வேடத்துக்கு அஞ்சவேண்டாம் என்பது குறிப்பு.

சிறந்த தவவேடத்தை ஒருவன் பொருந்தியிருப்பினும், தன் நெஞ்சம் குற்றத்தின் கண்ணே பொருந்துமாயின அவன் எல்லாரானும் இகழப்பட்டு இழிவான்என்பது இதில்உணர்த்தப்பட்டது.

இவ்வுண்மை அதிசூரன்பால் உணரப்படும்.

கதை.

அதிசூரன் என்பவன் சோழமண்டலத்தைச் சார்ந்த எயினன் என்னும் ஊரிலே சான்றார் குலத்திலே பிறந்தவன். பொறாமையும் வஞ்சமும் பொருந்திய நெஞ்சினன். இவன் காலத்தில் ஏனாதிநாதர் என்னும் பெரியார் ஒருவர் அக்குலத்தில் தோன்றி நலத்துடன் வாழ்ந்திருந்தார். அவர், அஞ்சா நெஞ்சினர். குன்றா அன்பினர். பின்றா வென்றியர். சிவனடியாரைச் சிவமெனநினைக்கும் தவநலமுடையவர். வாள்வித்தையில் வல்லவர். அதனைப் பிறர்க்குப் பயிற்றுவித்து அதனால் வரும் ஊதியங்கொண்டு அருந்தவரைப் பேணித் தாமும் அருளுடன் வாழ்ந்தார். இங்ஙனம் வாழ்ந்துவருங்கால், வாள்வலியில் தன்னினுஞ் சிறந்து விளங்குகின்றார் என்று கருதி அவர்மேல் இவன் பொறாமைகொண்டான். புறங்கூறி வந்தான். பின் வெல்ல முயன்றான். பலமுறை முயன்றும் பழுதுற நின்றான். ஒடுங்கி நொந்து கொடுஞ் சூழ் செய்தான். தனியான இடத்துக்கு வரும்படி அவரைப் போர்க்கு வலிந்து அழைத்தான். அவரும் அங்கு சென்று இவனை யெதிர் பார்த்து நின்றார். ஏனாதிநாதர் சிவனடியாரைச் சிவனென மதிக்கும் இயல்புடையார் ஆதலால், இக்கொடியவன் அவ்வடியவர் போல் தவவேடங் கொண்டான். நீறுதோய்ந்த மெய்யினனாய் வானுயர் தோற்றத்தோடு இப்பொய்யன் அம்மெய்யர்முன் அணுகும்வரையும் தன் கையிலிருந்த கேடகத்தால் தன் முகத்தை மறைத்துச் சென்றான். அவர், இவன் மீது தம் வாளினைவீச அடி

பெயர்த்தார். உடனே தன், பொய்வேடத்தை இவன் பொருந்தக் காட்டினான். அவர் கண்டு மதித்தார். இவன்பால் அன்பு கொண்டார் அவ்வமையம் இத்தீயவன் பாய்ந்து அத்தூயவர் தலையைத் துணித்தான். இறைவன் அருளால் அவர் உயர்பதமெய்தினார். சிவவேடங் கொண்டும் இவன், அவமேயிறந்தான். தான் அறிந்த குற்றத்தின் கண் தன் நெஞ்சு விழுமாயின் வானுயர் தோற்றத்தால் ஒருபயனும் அவனுக்கு இல்லையென்பதை உலகம் இவன்பால் உணர்ந்தது. (விரிவைப் பெரியபுராணத்தில் காண்க.)

உள்ளந் தீதாயின் வெளிவேடத்தால் பயன் இல்லையென்பது இதனால் கூறப்பட்டது.

273. மாதவன்போல் இந்திரனேன் வல்லுருவந் தாங்கிவந்து
கோது புரிந்தான் குமரேசா—ஏதும்
வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று. (௩)

இ—ள்.

குமரேசா! இந்திரன் என் மாதவன்போல் உருவந்தாங்கி வந்து காதல் இன்பத்தை நீதுறத் துய்த்தான் எனின், வலிஇல் நிலைமையான் வல் உருவம் பெற்றம் புலியின் தோலை போர்த்து மேய்ந்தற்று என்க. பெற்றம்—பசு.

பைங்கூழ் என்றது உணவுப்பொருள்களை யுதவுகின்ற நெற் பயிர் முதலான பசிய பயிர்களை.

வல் உருவம்—வலிய கோலம். அஃதாவது மனத்தின் வழிப்பட்டு மெலியாமல் அதைத் தன்வழிப்படுத்தும் வலியுடையார் கொள்ளும் தவவேடம். இங்கு வலி என்றது அறிவின் திண்மையை

மனத்தைத் தன்வசப்படுத்தும் வலியில்லாத இயல்பினையுடையான் அவ்வலியுடையார் வேடத்தை மேற்கொள்ளல் பசு, புலியின் தோலைப் போர்த்துப் பசும் பயிர்களை மேய்ந்ததை ஒக்கும் என்பதாம்.

காமம் தன்னுள்ளே தோன்றி நலிய அதனை அடக்குதற்கு உரிய தவவலி இல்லாதிருந்தும், தவமுடையார்போல் வஞ்சவேடங் கொண்டு பிறர் அறிந்து ஐயுறாவாறு மறைந்து சென்று தான் விழைந்ததை விழைந்து துய்ப்பர், வெறியனுக்கு; இயல்பாகவே வலியில்லாதிருந்தும் வலியுடைய புலியின் தோலைப் போர்த்துத் தனக்குரிய புல்லைவிட்டுப் பிறர்க்குரிய பயிர்களைப் பரந்து மேயும்பட்டிப் பசுவை இங்கு ஒப்புறக் கூறினார். இஃது இல்பொருளுவமையாம். அஃதாவது எக்காலத்தும் இல்லாத ஒன்றினை இருப்பதாக்கொண்டு ஒரு பொருளுக்கு உவமையாக அமைத்து உரைப்பது. இதனை வடநூலார் அபூத உவமை என்பர். பசு, புலியின்தோலைப் போர்த்தல் என்றும் இல்லை என்பது நன்று தெளிவாம்.

பசு, புலித்தோலைப் போர்த்து ஒருவன் பைங்கூழை மேய்வதைக் காணினும், புலி புல்லைத் தின்னாது என்னுந் துணிவானும் நெருங்கினால் அடித்துவிடுமே என்னும் அச்சத்தானும் எவரும் அதனை அகற்றாது அகல்வர்; அதுபோல் வேடமுடையார் தீயொழுக்கம் புரியார் என்று நம்பியும், அவர் தவவலியுடையார் என அஞ்சியும் அவரை உலகோர் ஒன்றுங் கூறாதுபோற்ற அவர், தன் கருத்தைநிறைவேற்றிக் களித்துத் திரிவர் என்பதாம்.

உள்ளத்தில் தோன்றி நலியும் காமத்தை அடக்கலாற்றாது புறத்தில் தவமுடையார்போல் வேடங்கொண்டு பிறர்க்குரிய மகளிரை விழைதல் பொருந்தாது என்பதும் அத்தீயவொழுக்கம் தன்னையுடையானுக்குப் பழியையும் துன்பத்தையும் வழுவாமல் பயந்தேவிடுமென்பதும் இதில் உணர்த்தப்பட்டன. இவ்வுண்மை இந்திரன்பால் உணரப்படும்.

கதை.

தன் மனத்தை யடக்குதற்கு உரிய தவவலியில்லாத இந்திரன் அவ்வலியினையுடைய கோதமரைப்போல் உருவங்கொண்டு அவருடைய மனைவியாகிய அகலிகைபால் வந்து அவளை வஞ்சித்து மருவினான். அதனால் என்றும் குன்றாத பழியினை யெய்தினான்.

எவரும் அறியார் என்று கருதிக் கரவாக நின்று தீயொழுக்கம் புரியினும் அஃது எல்லாராலும் அறியப்பட்டு இழிவே பயக்கும் என்பதை உலகம் இவன்பால் ஓர்ந்தது. (விரிவை மேலேகாண்க.)

கூடாவொழுக்கத்தால் கேடேவரும் என்பது இதனால் கூறப்பட்டது

274. பண்டுதவ வேடமுற்றும் பார்த்தன் சுபத்திரையைக்
கொண்டகன்றான் என்னே குமரேசா—கொண்ட
தவமறைந் தல்லவை செய்தல் புதன்மறைந்து
வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று. (௪)

இ—ள்.

குமரேசா! தவ வேடத்தை மேற்கொண்டிருந்தும் பார்த்தன் ஏன் சுபத்திரையை மறைத்துக் கொண்டு போனான் எனின், தவம் மறைந்து அல்லவை செய்தல் வேட்டுவன் புதல் மறைந்து புள் சிமிழ்த்து அற்று என்க.

புதல்—தூறு: அஃதாவது செடி கொடிகளின் செறிவு.

புள்—பறவை. சிமிழ்த்தல்—பிடித்தல். பிணித்தலுமாம்.

தவம் என்றது ஆகுபெயராய் இங்கு அதன் வேடத்தை உணர்த்தி நின்றது. அல்லவை என்றது தான், கொண்டவேடத்துக்கு இயல்பல்லாத கூடா ஒழுக்கங்களை.

தவம் மறைந்து—தவவேடத்தின் கண்ணே மறைந்து நின்று.

அல்லவை செய்தல்—தவம் அல்லாதவற்றைச் செய்தல்.

சிமிழ்த்து அற்று—பிணித்ததை ஒக்கும்.

தவவேடத்தின் கண்ணே மறைந்து நின்று தவம் அல்லாதவற்றை ஒருவன் செய்தல், புதரின் கண்ணே மறைந்து நின்று வேட்டுவன் புட்களைப் பிணித்தாற்போலும் என்பதாம்.

வெளிவேடங்கொள்ளும் வெய்யரைப் பழிவேடர் என்று ஒழிக்கவேண்டும் என்பது குறிப்பு.

மேல், அகத்தில் காமமுடையவன் புறத்தில் தவவேடங்கொள்ளல் பசு, புலித்தோலைப் போர்த்தலை ஒக்கும் என்றார். இதில் அவன், பறவைகளைப் பிடிக்கும்பொருட்டுப் புதரில் மறைந்து நிற்கும் வேட்டுவனை ஒப்பன் என்றார்.

கூடாவொழுக்கத்தானது உருவமும் செயலும் இவ் இருவகை உவமைகளாலும் விளக்கப்பட்டன.

அடிகள் காட்டிய இவ்வுவமையை கச்சியப்பவள்ளல் தம் பாவில் காட்டியுள்ளமை இதனடியில் வருவதால் காணப்படும்.

கேட்டியால் அந்தணாளா கேடிலா எம்பிரான்றன்
மாட்டொரு சிறிதுமன்பு மனத்திடை நிகழ்ந்ததில்லை
காடுறு புள்ளின்சூழல் கவருவான் புதன்மேற்கொண்ட
வேடுவ னியல்போன் மேலோன் வேடம்நீ கொண்டதன்மை.

உமாதேவி தவம் புரிந்தகாலத்தில் பரமன் ஒரு தவயோகி போல் வந்து, அவரது திருவுள நிலையை உலகறியும்படி அவாவிச் சிவநிந்தனையாகச் சில மொழிகள் பகர்ந்தார். அம்மை பொறாது வெகுண்டு அவரை நோக்கி, தவவேடமுடையராயிருந்தும் இவ் அவமொழி புகலும் உமது செயலைநோக்கின் புதர்மறைந்து புட்களைக் கவரும் பொல்லா வேடனது புல்லிய இயலை ஒத்திருக்கின்றது. ஆதலால், செல்லும் செல்லும் என்றுசொல்லுங்கால் இது, சொல்லியதென்

கருதியதைக் கைக்கொள்ளும் பொருட்டு அரிய தவவேடத்தை மேற்கொள்வாருஞ் சிலர் உளர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை அருச்சுனன்பால் அறியப்படும்.

கதை.

அருச்சுனன் என்பவன் தருமர் முதலிய ஐவருள் ஒருவன். பங்குனித் திங்களில் உத்திரநாளில் இந்திரமந்திரத்தால் குந்தியிடம் பிறந்தவன். சிறந்த போர்வீரன். வில்வித்தையில் இராகவனுக்கு அடுத்தவன். பார்த்தன், தனஞ்செயன், பற்கு

னன், கிரீடி, விசயன், சவ்வியசாசி, வீபற்சு, அருச்சுனன், கிருட்டினன், சுவேதவாகனன் எனப் பத்துப்பெயர்களை யுடையவன். இவையெல்லாம் இவனுக்கு ஏதுவால் வந்தன. ஒரு காலத்தில் இவன், ஓர் ஏதுவால் இந்திரப்பிரத்தம் என்னும் தன் நகரத்தை விட்டுத் தீர்த்தயாத்திரைக்குச் சென்றான். பல நதிகளிலும் நீராடி மகிழ்ந்து இறுதியில் துவாரகையை அடைந்தான். கண்ணன் தங்கையாகிய சுபத்திரையின் பேரழகைக் கேட்டு அவள் மேல் பெருங்காதல் கொண்டான். பெற்றாரும் உற்றாரும் அவளைத் துரியோதனனுக்கு மணமுடிக்கக் கருதியிருந்தனர். அதன்முன்னர் அவளை இவன் கைக்கொள்ள விரும்பினான். காவிதோய்ந்த ஆடையை உடுத்துத் தண்டுங் கமண்டலமுங்கொண்டு ஒருமாதவன் போல் வேடங்கொண்டு அங்கோர் மலைச்சாரலில் தங்கிக் கண்ணனைக் கருதினான். அவரும் வந்தார். உண்மை தெளிந்தார். பலராமன் முதல் அவர் மரபினர் அனைவரும் முனிவர் என்று கருதி மனமுறப் பணிந்தார். சில நாட்கள் கழிந்தபின்னர் அவருக்குப் பணிசெய்துவரும்படி சுபத்திரையைத் துணையாக வைத்தார். விரும்பியது கிடைத்ததென்று விசயன் பெருமகிழ்வெய்தினான். பணிவிடை செய்துவருங்கால் காதல் மொழிகளும் இடையிடையே கலந்து நிகழ்ந்தன. இயல்பாகவே சுபத்திரை அருச்சுனன்மீது மையல் கொண்டிருந்தாள். தவமறைந்திருந்தவர் தன்மையை அறிந்தாள். விழைந்திருந்ததை இருவரும் விரைந்துடன் துய்த்தார். பருவங்கண்டு ஒருநாள் அவளை உடன்கொண்டகன்றான். பலராமர் முதலிய அனைவரும் தவமறைந்து அல்லவை செய்தான் என்று அவனை மிக இகழ்ந்து நொந்தார். வேடன் புதரில் மறைந்து நின்று பறவைகளைப் பிணித்தல்போல் சிலர் தவவேடத்தில் மறைந்து நின்று தாம் கருதிய மகளிரை யணைத் தகல்வர் என்பதை உலகம் அருச்சுனன்பால் உணர்ந்தது. எத்துணை சிறந்தவர்களாயினும் தவமறைந்து அவம்புரிந்தால் அவர் பழிக்கப்படுவராதலால் அதனை ஒழிக்கவேண்டும் என்பது கருத்து. இதன் விரிவைப் பாரதத்தில் காண்க.

கூடா ஒழுக்கம் கூடாதென்பது இதனால் கூறப்பட்டது.

275. பற்றற்றார் போன்று படிவமுற்ற வில்வலனேன்
குற்றமுற்று மாய்ந்தான் குமரேசா — முற்றவே
பற்றற்றேம் என்பார் படிற்றொழுக்கம் எற்றெற்றென்
றேதம் பலவுந் தரும். (௫)

குமரேசா! பற்று அற்றவர்போல் வேடங்கொண்ட வலன் பழியுற்று அழிந்து ஏன் இழிதுயர் உற்றான் எனின், பற்று அற்றேம் என்பார் படிற்று ஒழுக்கம் எற்று எற்று என்று பழிக்கத் தக்க ஏதங்கள் பலவுந்தரும் என்க.

எற்று எற்று என்று—என்ன பாவஞ் செய்தேன், என்ன பாவஞ் செய்தேன் என்று தானே வருந்தி இரங்கும் வகை.

ஏதம் பலவுந் தரும்—துன்பங்கள் பலவற்றையும் கொடுக்கும்

எற்று எற்று என்று ஏதம் பலவுந்தரும் என்பது, கொல்லு கொல்லு என்று பிறர் சொல்லிப் பழிப்படியான துன்பம் பலவும் தரும் எனவும் பொருள்படும்.

மனத்தில் பற்று அறாதிருந்தும், “யாம் பற்று நீங்கினேம்” என்பாரது வஞ்சவொழுக்கம், என்ன செய்தேம் என்ன செய்தேம் என்று பின் அவர் வருந்தி இரங்கும் வகை பல துன்பங்களையும் அவர்க்குக் கொடுக்கும் என்பதாம்.

கூடாவொழுக்கம் பின், தனக்கே கேடு விளைக்குமாதலால் அதனைச் சிறிதும் கொள்ளலாகாதென்பது குறிப்பு.

வேடத்தால் உலகத்தாரை வஞ்சித்து அதனால் இன்புற்று வாழ்வோர் பின் தாமே வாய்விட்டு அலறிப் பெருந்துன்பத்தால் வருந்தி மாள்வர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை வில்வலன்பால் உணரப்படும்.

கதை.

வில்வலன் என்பவன் எல்லாந் துறந்தவன்போல் நடித்து அருந்தவர் தமக்கு விருந்து செய்வதாகக் கூறிப் பெருந்தீங்கு

செய்து முடிவில் அகத்திய முனிவரைக் கண்டான். அருந்தவத்திற் சிறந்த அப்பெருந்தகையிடத்தும் அஞ்சாது நின்று வஞ்சம் புரிந்தான். முனிவர் தெளிந்து பெருமுனிவு கொண்டார். தருப்பை ஒன்றை எடுத்து அவன்மேல் வெறுப்புடன் ஏயினார். அதனால் அவன் ஆவி தீர்ந்தான். நரகினிலாழ்ந்து பின் பிறவியில் வீழ்ந்தான். வறுமையும் நோயும் வருத்த வருந்தினான். ஏன் செய்தேனை என் செய்தேன் என்று பின் ஏங்கி இரங்கினான். தன் பழவினையை நினைந்து அழுதழுது நொந்தான். பற்று அற்றேம் என்பாரது படிற்றொழுக்கம் எற்று எற்று என்று இரங்கும்படி அவர்க்கே பின் ஏதம் தரும் என்பதை இவன் எய்தக் கண்டான்.

பாவொழுக்கம் பின்பு தனக்கே பெருந்துன்பந்தரும் என்பது இதனால் கூறப்பட்டது.

[வர்ந்தேன்

276. மாதவன்போல் வந்தமதன் மாண்பொருளெல் லாங்க
கோதுசெய்து சென்றான குமரேசா—யாதொன்றும்
நெஞ்சிற் றுறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணார் இல். (௬)

இ—ள்.

குமரேசா! மதன் என்பவன் மாதவன்போல் வந்து வஞ்சித்துத் தருமதத்தனையும் இரக்கமின்றிக் கெடுத்து ஏன் ஓடி மறைந்தான் எனின், நெஞ்சில் துறவார், துறந்தார்போல் வஞ்சித்து வாழ்வாரின் வன்கணார் இல் எனக. வன்கணார்—கொடியார்.

உள்ளத்தில் பற்றுக்களை வைத்துக்கொண்டு துறந்தார்போல் புறத்தில் பொய்வேடம் பொருந்தி வஞ்சித்து வாழ்வாரைப்போல் கொடியவர் உலகத்து இல்லை என்பதாம்.

நெஞ்சு நேர்மையில்லாரது வஞ்சவேடத்தைக் கண்டு மயங்கலாகாது என்பது குறிப்பு.

உள்ளத்தில் துறவு இன்றிக் கள்ளவேடம்பூண்டு உலகத்தாரை வஞ்சிக்குங் கூடாவொழுக்கத்தவர், தம்மை நம்பி அடுத்தவர் பொருளை யெல்லாங்கவர்ந்து நன்றியும் அருளுமின்றி அவர்க்குப் பெருங் கேடு விளைக்குங் கொடியர் ஆதலால் அவரை “வன் கண்ணார்” என்றார். இவ்வுண்மை மதன்பால் காணப்படும்.

கதை.

மதன் என்பவன் இற்றைக்குப் பல்லாயிர ஆண்டுகளுக்கு முன்னர் கலிங்க நாட்டிலே மதங்கபுரி என்னும் நகரிலே யிருந்தான். மனநலமில்லாதவன். சொல்வலியால் எவரையும் மயக்க வல்லவன். பொல்லாத சூழ்ச்சிகள் எல்லாந் தெரிந்தவன். இவன் ஒருநாள் தலையை முண்டிதஞ் செய்து, காதில் குண்டலமணிந்து கழுத்தில் கண்டிகை புனைந்து, மெய்முழுதும் வெண்டிருநீறு பூசி கையில் சிறிய தண்டு ஒன்றை ஏந்தி, முற்றத்துறந்த முனிவன்போல் தோன்றி, அந்நாட்டிலுள்ள அரிபுரம் என்னும் ஊரினை யடைந்து தனியான ஓரிடத்தில் தங்கினான். மறுநாள் தருமதத்தன் என்னுந் தனவணிகன் இல்லினை யணைந்தான். அவன் இக்கொடியவனை அடியவர் என்று மதித்து அடிவணங்கி ஆதரித்து உணவருத்தினான். இவன் உண்டு மகிழ்ந்தான். பற்றற்றவன் போல் நடித்துத் தத்தனை நோக்கினான். அன்பனே “யான் முற்றத்துறந்தவன். நின் அன்பிற்காக ஈண்டு வந்தேன். இரும்பு முதலிய இழிந்த பொருள்களையெல்லாம் உயர்ந்த பொன்னாக்குவேன். அருந்தவஞ் செய்கின்ற நான் உனக்கேதாவது தரும்படி விரும்பினேன். உன்பால் உள்ள பொருளெல்லாங் கொணர்க. நின் இல்லில் வைத்தற்கு இடம் இல்லையென்று சொல்லும்படி அவற்றை மிகப் பெரிதாக்கி நினக்கின்று தருவேன்.” என்று மாயமொழிகள் பல நேயமொடு புகன்றான். தத்தன் நம்பித் தன் பொருளெல்லாந் தந்தான். அவ்வளவில் அமையாமல் தம் முன்னோர் நிறுவிய தரும வுரிமைகளையும் விற்றுத் தன் பெயரியல்பினை விளக்கினான். வந்தவன் கொண்டு வாதஞ் செய்வதுபோல் ஏதஞ் செய்தான். உருக்கிய குகையை நெருப்பிடை வைத்தான். பெரும்புகை செறிதருமருந்தொன்றையிட்டான். புகையால் தத்தன்

பொறிகலங்கி நின்றான். அவ்வமையம் இவன், பொய்க் குகையொன்றைப் பொருந்தவைத்து அப்பொய்க் குகைதன்னை மெல்ல மறைத்தான். புழையையும் அடைத்தான். நான்கு நாட்களுள் வருவதாக நயமொழி புகன்றான். தன்னை மும்முறை வலம்வந்து வணங்கச் செய்தான். பாவம்! தத்தன் சுற்றிவந்து வணங்கித் துவன்றி நின்றான். குகையிலிட்ட பொன், மூன்றுநாட்களுள் நூற்றெட்டு மாற்றும் என்று பொருந்தமொழிந்து பொய்வேடன் ஒழிந்துபோனான். குறித்த நாளில் தத்தன் குகையைப் பார்த்தான். மிகையே கண்டான். வருந்தி வீழ்ந்தான். மடிந்து தீர்ந்தான். அறவுரிமைகளை விற்றமையால் கரும தத்தன் மதமீறிய யானையாய் மாறிப் பிறந்து வனத்தில் திரிந்தான். உணவையும் உண்டிப் பொருளையும் கொண்டு நன்றி சிறிதுமின்றித் தன்னை நம்பினவனுக்கு இருமையினும் பெருங்கேடு விளைத்த கொடியனாதலால் நெஞ்சிற்றுறவின்றி துறந்தார்போல் வந்த அவ்வஞ்சனை வன்கண்ணன் என்று வையம் இகழ்ந்தது. அவனும் மாய்ந்தான். நரகில் ஆழ்ந்தான். இதன் விரிவைக் கந்தபுராணத்தில் காண்க.

கொடியார் எவரினும் கூடாவொழுக்கத்தாரே கொடியார் என்பது இதனால் கூறப்பட்டது.

277. சீதைபால் மாதவன்போல் சென்றான் இராவணனுட்
கோதுகொண்டும் என்னே குமரேசா—ஓதும்
புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி
மூக்கிற் கரியார் உடைத்து. (௭)

இ—ள்.

குமரேசா! சீதைபால் மாதவன்போல் வேடங்கொண்டு வந்த இராவணன் ஏன் தன்னுள்ளத்தில் தீய எண்ணத்தைக் கொண்டிருந்தான் எனின், புறம், குன்றி கண்டு அனையரேனும் குன்றி மூக்கின் அகம் கரியாரை உலகம், உடைத்து என்க.

குன்றி என்பது ஒருவகைக் கொடி. அஃது இங்கு ஆகு பெயராய் அதன் கொட்டையை உணர்த்தி நின்றது. நுனியில் கறுத்து மற்றது சிவந்து உருட்சியாயிருத்தலின் அதனைக் குன்றி மணி என்பர்.

புறம் குன்றி கண்டு அனையர் எனும்—புறத்தில் குன்றிமணியைக் கண்டாற்போல செம்மையான வேடத்தையுடையராயினும்.

குன்றி மூக்கின்—குன்றி மணியின் மூக்குப்போல.

அகம் கரியார்—மனம் இருண்டிருப்பார். கருமை இங்கு தீமைமேல் நின்றது.

குன்றி மணியைப்போல் புறத்தில் செம்மையுடையராய்க் காணப்படினும் அதன் மூக்குப்போல அகத்தில் கருமையுடையாரை இவ்வுலகம் உடைத்தாயுள்ள தென்பதாம்.

உள்ளந் தீயாரும், நல்லார்போல் வேடம்பொருந்தி இவ்வுலகில் திரிவர் ஆதலால் அவரை அஞ்சி அகலவேண்டு மென்பது குறிப்பு.

காவிதோய்ந்த ஆடையையுடுத்து புறத்தில் பற்றற்றவர்போல் நடித்து அகத்தில் காமமுடையராய் அறிவிழந்து திரியும் வேடதாரிகளுக்குக் குன்றிமணியை ஒப்புக்கூறியது, செம்மையும் கருமையும் சேர்ந்திருக்கும் அதன தன்மை கருதி என்க.

நல்ல வேடத்தை மெய்யிலும் தீய எண்ணத்தை நெஞ்சினும் உடையாரும் இவ்வுலகத்தில் உளராவர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை இராவணன்பால் உணரப்படும்.

கதை

இராவணன் சீதைமேற் காதல் பூண்டு அவளிருந்த சோலைக்குவந்து அருந்தவன்போல் வேடங்கொண்டு அவள்முன் சென்

றான். அவளும் அவனை முனிவனென்றே கருதி இனியமொழிகள் பகர்ந்து எதிர்கொண்டழைத்தாள். ஏத்தித் துதித்தாள். இருக்கையும் ஈந்தாள். அவ்வஞ்சனும் இருந்தான். அவ்வஞ்சியை நோக்கி நோக்கித் தன் நெஞ்சங் களித்தான். உரியவர் வருவரோ என்று பெரிதும் விரைந்தான். ஆசைமீக்கூர்ந்தான். நீர் யாரம்மா? என்றான். அகம் கரியனாய்ப் புறம் செய்யனாய் வந்த அவ்வெய்யவன் தீமையை, அம்மெய்யவள் ஓர்ந்திலள் "யான் சனகன் மாமகள். பெயர் சனகி, காகுத்தன் மனைவி" என்று அம்மறுவில் கற்பினாள் மறுமொழி தந்தாள். இருந்தவன் போன்று இருந்தவன் இவற்றையெல்லாங் கேட்டான். தானும் சிலபகன்றான். பின், வானும் வையமும் வருந்த அவளை வாரியெடுத்துச் சென்றான். நெஞ்சு கரியாரும் வஞ்ச வேடங்கொண்டு உலகில் உலாவுவர் என்பதை அவன் உணர்த்தி நின்றான்.

உள்ளும் புறமும் ஒவ்வாத கள்ள வேடத்தாரை உணர்ந்து நீங்கவேண்டுமென்பது இதனால் உணர்த்தப்பட்டது

278. பண்டொருவன் ஆசான் பணம்பறிக்கப் பொய்வேடம்
கொண்டுவந்தா னென்னே குமரேசா — கொண்ட
மனத்தது மாசாக மாண்டார்நீ ராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர். (அ)

இ—ள்.

குமரேசா! முன், ஒருவன் தன் குருவின் பொருளைக் கவரும் பொருட்டு ஏன் வேடங்கொண்டு மறைந்து வந்தான் எனின், மாசு மனத்தது ஆக மாண்டாராய் நீராடி மறைந்தொழுகும் மாந்தர் பலர் இவ்வுலகில் உளர் என்க.

மாசு மனத்தது ஆக--குற்றம் மனத்தின்கண் அமைந்திருக்க. மாண்டார் நீர் ஆடி---மாட்சிமையுடையார் போன்று நீரின் மூழ்கி. இனி, மாண்டாரது நீர்மையைப் பொருந்தி எனவும் இது பொருள்படும். நீர்மையென்றது தவத்தின தன்மையை.

மனத்தின்கண் மாசு உடையராயிருந்தும், மாட்சிமையுடையார் போன்று நீரில் மூழ்கிப் புறத்தே தவவேடங்கொண்டு அதன் கண் மறைந்து நின்று ஒழுகும் மாந்தர் பலர் உளர் என்பதாம்.

உள்ளத்தில் அழுக்கு இருக்க அதனை ஒழிக்காது உடல் அழுக்கைக் கழுவிக் கள்ளவேடங்கொண்டு நல்லார்போல் நடிக்கும் பொல்லாதாரும் பலர் இவ்வுலகில் உளராதலால், அவரை அறிந்து அகற்றவேண்டுமென்பது கருத்து.

உள்ளம் மாசுற உடல்மாசு கழுவிப் பிறர்பொருள் கவர்ந்து கரவுடன் ஒழுகும் பழியர் பலருளர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை தேவசன்மன் பாலும், திவகன் கண்ணும் தெளியப்படும்.

கதை.

இற்றைக்கு எண்ணூறு வருடங்கட்கு முன்னர் மகத நாட்டிலே மாகபுரி என்னும் ஊரிலே தேவசன்மன் என்னும் வேதியன் ஒருவன் இருந்தான். அவன் வறுமை மிக்கவன். வஞ்சித்து வாழத் தன் நெஞ்சத்தெண்ணினான். துறவிபோல் வேடங்கொண்டான். அருள் பெற்றவன்போல் நடித்துப் பொருள்பெற்றவர்பால் சென்றான். அருந்தவன் என்று மதித்து அனைவரும் அவனுக்கு அன்பு செய்துவந்தார் அவர்பால் தொகுத்த பொருளையெல்லாம் பொற்காசுகளாக மாற்றி உள்ளே துளையுள்ள தண்டு ஒன்றில் எவரும் அறியாமல் செறித்து என்றும் அதனைத் தன் கைக்கொண்டிருந்தான். பரம்பொருளினும் அவ் அரும்பொருண்மீது அவன் பற்று மீக்கூர்ந்தான். என்றும் எவரிடமும் அத்தண்டை எனைத்துணையும் நல்கான். இவ்வாறு ஒழுகி வருங்கால் அத்தண்டின் தன்மையைத் திவகன் என்னும் ஒருமிண்டன் தேர்ந்தான். அதனைக் கைக்கொள்ள விரும்பினான். தக்கார் போலத் தானும் தவவேடம் பூண்டான். பொன்னூறு தண்டுகொண்ட அப்பொய்யன்பால் வந்தான். பொருந்த வணங்கி அருந்தவன் போல் நடித்தான். தொண்டுசெய்வதாகத் தொழுது அடி அடைந்தான். குருவும் சீடனுமாய் அவ் இருவரும் அமைந்தார். ஆண்டு

ஒன்று கழிந்தது. இருவரும் ஒருவன் இல்லிடைச் சென்று தம் இருப்பிடம் மீண்டார். வேடச்சீடன் தன் தலையிலிருந்த துரும்பு ஒன்றை எடுத்தான். "அந்தோ! அவ் அன்பன் மனைத் துரும்பு என் தலையிலிருந்தது, யான் அறியாமல் கொணர்ந்தேன். பெரும்பாவம் செய்தேன், என்செய்வேன்! குருநாதா", என்று அழுது தொழுது மீண்டு ஓடினான். அவ் இல்லிடையே அதனை மெல்ல எறிந்துவிட்டு ஒல்லையில் வந்து தன் குருவின் அடியினை யடைந்தான். அப்பாவந்தீரிய அருள் செய்ய வேண்டினான். எவரையும் நம்பாத அப் பேய்க் குருவும், வியந்து அன்று முதல் அவனை நம்பினான். தன் கைத்தண்டையும் அவன் கையில் தந்து வாங்கத்தானே இசைந்தான். கொடுத்தலும் வாங்கலும் அடுத்து அடுத்து நிகழ்ந்தன. குறி பார்த்திருந்து அத் தண்டை ஒருநாள் சீவகன் கொண்டே போயினான். கருத்தில் அருளில்லாத இவன் தன் கையிலிருந்த பொருளையுமிழந்தான். மருளுற்றழுந்தான்.

"பிறர் மனைத் துரும்பு கொள்ளான்
பிராமணன் தண்டு கொண்டான்"

என்று அந்த நாடெங்கும் ஒரு மொழி ஓர் உயர்ந்தது. சீவகனும், தேவசன்மனும் மனத்துக்கண் மாசுற்றும் மாண்டார் நீராடி மறைந்தொழுகி வாழ்ந்ததை உலகம் தெரிந்து இகழ்ந்தது.

உள்ளத்தில் இழுக்கிருக்க உடலழுக்கைக் கழுவுவதால் பய என்பது இதனால் கூறப்பட்டது.

279. கண்டமான் செவ்விதென்ற காகுத்தன் வன்செயலாற்
கொண்டனன்றீ தென்றே குமரேசா—மண்டுங்
கணைகொடிது யாழ்கோடு செவ்விதாங் கன்ன
வினைபடு பாலாற் கொளல். (௯)

இ—ள்.

குமரேசா! முன் கண்ட மானைச் செவ்விது என்று கொண்ட காகுத்தன் பின் ஏன் அதன் செயலால் தீயதென்று

தெளிந்தான் எனின், கணை கொடிது, யாழ்கோடு செவ்விது, ஆங்கு அன்ன வினைபடு பாலால் கொளல் வேண்டும் என்க.

காகுத்தன்—இராமன்; ககு மரபில் பிறந்தவன் என்பதாம். இவ்வாறு வருவதை வடநூலார் தத்திதாந்த நாமம் என்பர். தாசரதி என்பதும் அது.

கணை—அம்பு. கோடு—வீணாதண்டம்.

ஆங்கு அன்ன—அவ்வகையே கொடியர் செவ்வியர் என்பன.

வினைபடு பாலால் கொளல்—தொழில்படு வகையால் தெளிந்துகொள்க. செவ்விய கணை கொலைத் துன்பத்தையும் கோடிய யாழ் இசை இன்பத்தையும் கொடுத்து நிற்றலால், கொடியர், செவ்வியர், என எவரையும் வடிவால் துணியாது செயலாலே தெளிக என்பதை அன்ன என்னும் வினைக் குறிப்பால் விளக்கினார்.

அம்பு, வடிவத்தால் செவ்விது, ஆயினும் தொழிலால் கொடிது; யாழ், கோட்டால் வளைந்தது ஆயினும் செயலால் செவ்விது; அவ்வகையே தவம்புரிவோரைக் கொடியர் செவ்வியர் என அவரவர் வினைபடு வகையால் அறியவேண்டும் என்பதாம்.

இவர், நல்லவர்; இவர், தீயவர்; என எவரையும் வேடத்தால் மதிக்கலாகாது. அவர் அவர் செயல்களால் அறியவேண்டுமென்பது கருத்து.

மாசு மனத்தராய் அருந்தவர் போல் மறைந்தொழுகும் மாந்தர் பலர் உலகில் உளர், அவரை அறிந்து நீக்கல் வேண்டுமென்று மேலே கூறி, அவரை அறியும் விதத்தை இதில் உவமையால் விளக்கினார்.

உருவத்தால் செவ்வியர் போன்று வந்தவர், பின் செயலால் கொடியராய்க் காணப்படின் உடனே அவரை ஒழித்து மீளவேண்டும் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இது மாரீசன் பால் உணரப்படும்.

கதை.

மாரீசன், மானாகி வந்து சீதைமுன் நின்றதைக்கண்ட இராமன் அதனது உருவச் செவ்வியைக்கொண்டு நல்லதென்றே துணிந்து பற்றும்படி பின்சென்று நெடுந்தூரம் போனபின் அதன் செயலால் கொடுந் தீமை தெளிந்தார். பின் தம்மைக் கொண்ட அம்பை அதன் மெய்க்கொள்ள விடுத்தார். திரும்ப வந்தார். அதனால் நேர்ந்த தீமையால் நொந்தார்.

காயம்வே றாகிச் செய்யுங் கருமம் வேறாயிற்றன்றே
ஏயுமே யென்னின் முன்னம் எண்ணமே இளவற்குண்டே
ஆயுமே லுறுதல் செல்லாம் அரக்கரானவர்கள் செய்த
மாயமேயாய தேநான் வருந்தியதென்றான் வள்ளல்.

ப, தான் செவ்விது என்று கொண்ட மாயமானின் வினைபடு பாலால் அதன் தீமை கண்டபோது இராமன்சொன்னது.

வேடதாரிகளின் இயல்பினை அவரது செயல்களான் உணர வேண்டுமென்பது இதனால் கூறப்பட்டது.

280. பண்டுதவ வேடமொன்றும் பற்றார் சகநேசர்
கொண்டார் உயர்வேண் குமரேசா—கொண்ட
மழித்தலும் நீட்டலும் வேண்டா வுலகம்
பழித்த தொழித்து விடின். (௰)

இ—ள்.

குமரேசா! சகநேசர் என்பவர், உயர்ந்த தவவேடம் ஒன்றுங்கொள்ளாமல் ஏன் சிறந்து நின்றார் எனின், உலகம்பழித்ததை ஒருவன் ஒழித்துவிடின், மழித்தலும் நீட்டலும் அவனுக்கு வேண்டா என்க.

மழித்தலும்— தலைமயிரைக் களைதலும், வழித்தல் என்பதும் அது.

நீட்டலும்—களையாது வைத்து மயிரைச் சடையாக்கி நீட்டலும். உலகம் பழித்தது—உயர்ந்தோர் பழித்துக்கூறிய குற்றத்தை. தீமை நன்மைகளைத் தெரிந்து கூறவல்லார் உயர்ந்தோரே ஆதலாலும் "உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே" என்றதனாலும் உலகம் என்பது ஈண்டு உயர்ந்தோர்மேல் நின்றது.

சிலர் மொட்டையடித்தும், சிலர் சடைவளர்த்தும் துறவியாவர். சைநமதத்தைச் சார்ந்தவர் துறவு கொள்ளுங்கால் மயிரை ஒவ்வொன்றாகப் பறித்து நீக்குவர். மொட்டைச்சாமி, சடைச்சாமி என்று பெயரெடுப்பதினும், ஒழுக்கச்சாமி என்று உயர்ந்தோர் புகழுமாறு ஒழுகுவதே நன்மை என்பது கருத்து.

உயர்ந்தோர் குற்றமென்று விலக்கிய தீய ஒழுக்கத்தை நீக்கிவிடின் மொட்டையடித்தலும் சடைவளர்த்தலும் வேண்டா என்பதாம்.

உள்ளத்தில் உள்ள குற்றத்தை ஒழிக்காமல், உடலிலமைந்த மயிரை ஒழிப்பதால் பயனில்லை என்பது குறிப்பு.

துறந்தவர்க்கு வேடத்தினும் ஒழுக்கமே சிறந்தது என்க. உள்ளும் புறமும் ஒப்ப நின்று நெறிவழுவாதொழுகும் அறிவுடையார், வேடமின்றியும் தவப்பயனை யெய்துவர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை சகமித்திரர்பால் உணரப்படும்.

கதை.

சகமித்திரர் என்பவர் வடநாட்டிலே பரணி என்னும் ஊரிலே இருந்த ஒரு வேதியர். பெருமானிடத்தே பேரன்புடையவர். வேதமுதலிய கலைகள் பலவும் ஓதியுணர்ந்தவர். கமலை என்னும் கன்னியை மணந்து இல்வாழ்ந்திருந்தார். அறிவும், அருளும் அமைதியுமுடையவர் வறுமையும் இவரை உரிமையாக் கொண்டது. வறியவராயினும் ஒழுக்கத்தில் பெரியவராதலால் அனைவரும் இவரை அன்புடன் ஆதரித்துவந்தார். பலருதவியால் நலமுற வாழும இவர்மீது சிலர் பொறாமை கொண்டார். அத்தீயவர், ஒருநாளிரவில் இவர் இல்லில் தீயிட்டு மறைந்தார்.

பிறரால் இகழப்படாத தன்மையை எய்த விரும்புகின்றவன் யாதொரு பொருளையும் பிறரை வஞ்சித்துக்கொள்ளக் கருதாவகை தன் நெஞ்சினைக் காக்கவேண்டும் என்பதாம். இனி, எள்ளாமை என்பதை எள்ளி என்னும் எச்சத்தின் எதிர்மறையாத் திரித்து, வீட்டினை இகழாது விரும்புவான் என்பான் எனைத்தொன்றும் கள்ளாவகை தன் நெஞ்சினைக் காக்க எனவும் பொருள் கொள்ளப்படும். 'வீட்டினை' என்னும் வினைக்குரிய செயப்படுபொருள் இதில் வருவிக்கப்பட்டது.

களவே இழிவினுள் எல்லாம் இழிவாம் என்பது கருத்து. எனைத்தொன்றும் என்றதனால் அரிய கல்விப் பொருளையும் முறையானன்றிக் கரவாகக் கொள்ளக் கருதலாகாதென்பதும், கருதின் அதனால் இழிவே வரும் என்பதும், இதில் உணர்த்தப்பட்டன. இவ்வுண்மை கன்னன்பால் காணப்படும்.

கதை.

கன்னன், வில் வித்தையைத் துரோணரிடம் கற்க விரும்பினான். அவர் ஓர் எதுவால் அதற்கு இசைந்திலர். அதன்பின் அவன் பரசுராமர்பால் பயிலக் கருதினான். அவர், அரசர் மரபினர்பால் பெரும் பகைமை பூண்டவராதலால் தன்னை அந்தணன் என்று காட்டிக் கன்னன் அவரையடைந்தான். அவரும் நம்பி அன்புடன் பயிற்றினார். கன்னன் பயின்றுவருங்கால் ஒருநாள் அழகிய பூஞ்சோலை ஒன்றில் தானும் குருவும் தனியாயுலாவினார். முடிவில், கன்னன் தொடையில் தம் தலையை வைத்துப் பரசுராமர் துயின்றார். அவ்வமயம் கன்னனது வஞ்சத்தை வெளிப்படுத்தக் கருதி இந்திரன் வண்டுபோல் வந்து அவன் தொடையில் புழையுறும்படி குடைந்தான். உதிரஞ் சிதறியொழுகினும் கன்னன் அஞ்சா நெஞ்சினனாய் அசையாதிருந்தான். குரு விழித்தார். குருதியைக் கண்டார். இதற்கு ஏது யாது என வினவினார். வண்டின் செயலை வணங்கி உரைத்தான். குரு வியந்தார். இத்துணைத் திண்மையும் ஆண்மையும் வேதியர்க்கு உண்டோ என்று ஐயங்கொண்டார். கன்னனை நோக்கினார்.

"அந்தணன் அல்லை; நீ யார்! உண்மையை ஒழியாது உரை" என உவந்து கேட்டார். நிகழ்ந்தன எல்லாம் கன்னன் நெறியே கூறினான். களவாகக் கற்றதனால் இவ்வித்தை பலியாமல்போகக் கடவதென்று சபித்தார். எல்லாரும் எள்ளுநவரே என்று கன்னன் கவன்று மீண்டான். எனைத்தொன்றையும் வஞ்சித்துக் கொள்ளா வகை தன் நெஞ்சைக் காத்தலே நன்று என்று தெளிந்தான். விரிவு பாரதத்தில் தெளிவாம்.

யாதொரு பொருளையும் களவினால் கொள்ளக் கருதலாகாதென்பது இதனால் கூறப்பட்டது.

282. பண்டுமலர் கள்ளத்தால் பற்றிப் பராந்தகனும்
கொண்டனன்தீ தென்னே குமரேசா—கொண்டுநின்ற
உள்ளத்தால் உள்ளலுந் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தால் கொள்வேம் எனல். (உ)

குமரேசா! பாரந்தகன் என்பவன் பலரைக் கள்ளத்தால் கொண்டதால் என் பெருந் தீது கொண்டான் எனின், உள்ளத்தால் உள்ளலும் தீதேயாம், ஆதலால் பிறன் பொருளைக் கள்ளத்தால் கொள்வேம் எனல் என்க.

உள்ளலும் தீதே—கருதலும் பாவமே. உம்மை இழிவு சிறப்பு.

பிறன் பொருளைக் கள்ளத்தால் கொள்வேம் எனல்—பிறனுடைய பொருளைக் களவால் கொள்வேம் என்று கருதற்க. எனல் என்பது ஈண்டு எதிர்மறை வியங்கோளாய் நின்றது.

பி, எனல் என்பதைத் தொழிற் பெயராகக்கொண்டு, பிறன் பொருளைக் கள்ளத்தால் கொள்வேம் என்னலை உள்ளத்தால் உள்ளலுந் தீதே எனவுங் கொள்ளலாம்.

பிறனொருவன் பொருளைக் களவினால் கொள்ள வேண்டுமென்று கருதினும் பாவமாம் என்பதாம்.

மேல், களவால் பழிவரும் என்றார்; இதில் அதனைக் கருதினும் பாவமாம் என்றார்.

களவினை, உள்ளினும் கொள்ளினும் உடனே பெருந் தீமை யுண்டாம் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை பராந்தகன்பால் உணரப்படும்.

கதை.

பராந்தகன் என்பவன் இற்றைக்குப் பல நூற்றாண்டுகட்கு முன் உறையூரை ஆண்டவன். இவன் அரசுபுரிந்து வருங்கால் சாரமா முனிவர் என்னும் பெரியவரொருவர், செவ்வந்தி மலரைப் பரமனுக்கு அணிய விரும்பி அதன் மூலங்களை அரிதின் முயன்றுகொண்டு வந்து தனியிடத்தில் வைத்து அவற்றைப் பெரிதும் போற்றிவந்தார். பருவமுற்றபின் அவற்றில் நறிய மலர்கள் தோன்றின. மாவலன் என்னும் அரசனுடைய ஏவலன் ஒருவன் அம்மலர்களை முனிவர் அறியாவகை கவர்ந்துகொண்டுவந்து அரசனுக்குத் தந்தான். முனிவர் தெரிந்து அரசன்பால் வந்து ஏவலினை செய்த புன்மையைப் பொருந்த உணர்த்தினார். உணர்ந்தும் அரசன் ஒன்றும் சொல்லாது அதற்கு உடன்பட்டிருந்தான். முனிவர் நாளும் பொறுத்தார். மேலும் மேலும் பூவின் களவு பொருந்தி மிகுந்தது. கள்ளத்தால் வருவதென்று தெரிந்தும் தள்ளாமல் அரசன் கொள்ளுகின்றானே என்று முனிவர் கொதித்தார் உடனே அங்கு மண்மாரி பெய்தது. அவனும் மாண்டான். நகரமும் அழிந்தது. தான் கள்ளாதிருந்தும் கள்ளத்தால் வந்ததைக் கொள்வேமென்று கருதியதால் அரசன் பெருங் கேடடைந்தான். பிறன் பொருளைக் கள்ளத்தால் கொள்வேம் என்று கருதினும் தீதாம் என்பதை உலகம் பராந்தகன்பால் தெளிந்தது. *விரிவை அவன் சரிதையில் தெளிக.

களவினைக் கருதினும் தீதாம் என்பது இ
பட்டது.

283 அன்று களவால் அடைந்தவெல்லாம் ஒழிந்து
குன்றினார் சாரர் குமரேசா—என்றும்
களவினால் ஆகிய ஆக்கம் அளவிறந்
தாவது போலக் கெடும். (௩)

குமரேசா! களவினால் அடைந்த செல்வமெல்லாம் இழந்து ஏன் சாரர் குன்றினார் எனின், களவினால் ஆகிய ஆக்கம் அளவிறந்து ஆவது போலக் கெடும் என்க.

அளவு இறந்து ஆவதுபோலக் கெடும்—வாய்ப்பு கடந்து வளர்வதுபோலத் தோன்றி அழியும். ஆவதுபோல அளவு இறந்து கெடும் எனக் கூட்டி ஆவதுபோலத் தோன்றி அளவு கடந்து கெடும் என்று கொள்ளினும் அமையும். அஃதாவது தன்னால் ஆகிய ஆக்கத்தோடு தன்னை ஆக்கினவன் முன் ஆக்கியிருந்த அறம் புகழ்யாவும் ஒருசேர அழியும் என்பது கருத்து என்க.

களவினால் உளதாகிய செல்வம் மிகப் பெருகுவதுபோல் தோன்றிப் பழியையும் பாவத்தையும் நிறுவி விரைவில் அழியும் என்பதாம்.

களவினால் பழியும் பாவமும் உளவாம் என்று மேலுணர்த்தியதை நோக்கி, அவை வரினும் அதனால் பொருள் உண்டாகுமல்லவா என்பாரை நோக்கி இது கூறியதென்க.

களவால் கொண்ட பொருளோடு, தம் பொருளையும் அறத்தையும் இழந்து கள்வர் துன்புறுவர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை சாரன் முதலிய சாரர்பால் உணரப்படும்.

கதை.

இற்றைக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் மதுரையம்பதியில் அரசுபுரிந்திருந்த வீரபாண்டியன் என்னும் வேந்தர் பெருமானுக்கு அழகிய காமக்கிழத்தியர் பலரிருந்தனர். அப்போத

மாதர்பால் சுகன், மதனன், சுகுணன், சோமன், விக்ரமன், வீரசேனன், வீரசேகரன், வீரகாமன், விசயன், சயதரன், எனப்புதல்வர் பதின்மர் தோன்றி வளர்ந்தார். சாரப் பிறந்ததால் இவர் சாரர் எனப்பட்டார். அதன்பின் தன் இன்னுயிர்த் துணைவியாகிய நன் மனைவியும் உலகம் மகிழ்வுற ஒரு குலமகனைப் பெற்றாள். அரசன், பேருவகை பூத்துக் குமரனைப் போற்றிவருங்கால் ஒரு நாள் வேட்டைமேல் சென்று அங்கோர் புலிவாய்ப்பட்டான். அனைவரும் ஏங்கி அழுதிரங்கினர். சுகன் முதலிய புன்மக்கள் பதின்மரும் அற்றப் நோக்கி நிதியறைக்குட் புகுந்து மணி முடியையும், அணிகலன்களையும் கவர்ந்துகொண்டு மறைந்து சென்றார். அமைச்சர் அக்குல மகனுக்கு மணி முடி சூட்ட விரும்பி அணி அறையைத் திறந்தார். அங்கிருந்த மணி மகுடத்தைக் காணாது மதி மயங்கி நொந்தார். முன்னர் வழுதி மருமகனாகி இவ்இரு நிலம்புரந்த அம் முழுமுதற்பரமனே ஒரு வணிகனாய் வந்து மரகத முதலிய மணிகள் ஒன்பதையும் அணி பெறத் தந்து மன்னன் மகனுக்கு மகுடம் புனைமின் என்று வாழ்த்தி மறைந்தார். அனைவரும் வியந்து பரமனைத் துதித்து அவரருளியபடியே மணி முடி சூட்டி அரசிளங் குமரனுக்கு அபிடேக பாண்டியன் எனப் பெயரும் புனைந்தார். தோன்றலும் மன்னுயிர்க்கெல்லாம் இன்னுயிர்த் துணையாய்த் தோன்றி விளங்கினன். தனக்கு ஒரு வகையில் துணைவர்போலத் தோன்றியிருந்த பகைவர் பதின்மரையும் பற்றிக் கொணர்ந்து அவர் கவர்ந்தனவெல்லாம் உவந்து வாங்கினன். களவால் வந்த பொருளோடு தம் பொருளையும் இழந்து பழியும் பாவமுமெய்தி அவரனைவரும் அந்த நகரை விட்டு அகன்றொழிந்தார். களவினால் ஆகிய ஆக்கம் ஆவதுபோலத் தோன்றி அளவிறந்து கெடும் என்பதை உலகம் அவர்பால் ஓர்ந்தது. விரிவைத் திருவிளையாடலில் மாணிக்கம் விற்ற படலத்தில் காண்க.

களவால் வரும் பொருள் பழியை விளைத்து விரைவில் அழிவுறும் என்பது இதனால் கூறப்பட்டது.

284. மாசில் மணிக்களவால் மந்திரிதன் இன்பதம்போய்க்
கூசிநொந்தான் என்னே குமரேசா—நீசங்
களவின்கட் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமந் தரும். (௪)

இ—ள்.

குமரேசா! ஒரு மணியின் களவால் கனகேசன் என்னும் அமைச்சன், ஏன் தனது உயர்ந்த பதத்தை இழந்து இழிந்து நொந்தான் எனின், களவின் கண்ணே கன்றிய காதல், விளைவின் கண்ணே வீயாத விழுமத்தைத் தரும் என்க.

கன்றியகாதல்—மிகுந்த ஆசை.

விளைவின்கண்—பயன்தரும்பொழுது. விளைவு ஆகுபெயர்.

வீயா விழுமம் தரும்—தொலையாத துன்பத்தைக்கொடுக்கும்

காதல் தரும் என்று காண்க. வினைமுதல் அடைபெற்றதற்கேற்பச் செயப்படு பொருளும் பெற்று வந்தது.

களவினிடத்தே மிகுந்த ஆசையானது, பயன் கொடுக்கும் பொழுது, தன்னையுடையானுக்குத் தொலையாத துன்பத்தைக் கொடுத்துவிடும் என்பதாம்.

பொருளை நெறியான முயற்சியான் அன்றி, இழிவான களவால் ஒருவன் கொள்ள விரும்பின், அவ்விருப்பம் விறகுபெற்ற தழல்போல் முறுகி வளர்ந்து முடிவில்லாத துயரை அவனுக்கு முடிவில் விளைவிக்கும் என்பது கருத்து. இவ்வுண்மை கனகேசன்பால் காணப்படும்.

கதை.

கனகேசன் என்பவன் இற்றைக்கு முந்நூறு வருடங்கட்கு முன்னர் அங்கநாட்டு வேந்தன்பால் அமைச்சனாய் இருந்தவன். சிறந்த நிலையிலிருந்தும், இழிந்த செயல்களில் இவன் இசைந்திருந்

தான். மேல்வரும்படி யென்ற இதுபொழுது வழங்கிவருகின்ற பரிதான மாமூலுங் கீழ்வருவாயினை இவன் நாள்தோறும் விரும்பினான். அதனால் அரசனும் இவன்மேல் ஐயுற்றிருந்தான். ஒருநாள் அரசன் உருமாறி நள்ளிரவில் நகர்வலம் வருங்கால் எதிரே வந்த ஓர் இளைஞனைக் கண்டு "யார், எங்கே போகின்றாய்" என்றான். யான் கள்வன், அரசன் இல்லில் பொருள் கொள்ளச் செல்கின்றேன் என்று அவன் பொய்யாது புகன்றான். மன்னன் வியந்து தானும் உடன் வருவதாகச் சொல்லி அவனோடு இசைந்து சென்றான். நிதியறைக்குள் இருவரும் புகுந்து உயர்ந்த மணிகள் மூன்று ஒருங்கிருப்பக் கண்டார். அவற்றுள் இரண்டு மணிகளை மட்டும் எடுத்து உடன்வந்த உரிய கள்வனுக்கு ஒன்றைக் கொடுத்துத் தான் ஒன்றை வைத்துக்கொண்டான். அவ் ஒன்றை என் கொள்ளாது தள்ளினாய் என்று கூட்டாளி கேட்டான். நம்மிருவர்க்கும் பங்கிடுவதற்கு இசையாது ஆகலால் அதனை விடுத்தேன் என்றான். மன்னன் அவனது மனநலத்தை வியந்து, பெயர் ஊர் முதலிய யாவும் தெரிந்து பிரிந்தான். மறுநாள் அமைச்சனை அழைத்து நமது நிதியறை களவால் கொள்ளை செய்யப்பட்டதாகக் காணப்படுகின்றது நீ போய் அதனைக் கண்டு வாரும் என்றான். அமைச்சன் சென்று ஆய்ந்தான். விழுமிய மணிகள் மூன்று வைத்திருந்த அழகிய பேழையுள் ஒன்றே யிருக்கக் கண்டான். கள்வர் அதனைக் கவர்ந்து விட்டனர் என்று கருதித் தானே கைக்கொண்டு மறைத்து மன்னன் முன் வந்து "அரசே உயர்மணி மூன்றும் கொள்ளை போயின" என்று கூசாது கூறினான். அரசன் முன்னர்க் குறித்த கள்வனை அழைத்து அவையிலிருத்தி நிகழ்ந்தன முழுவதும் பலரும் அறியும்படி விளக்கி அவன் கொண்டிருந்த ஒன்றையும், தன்பாலிருந்ததையும், அவை முன்னே வைத்து அமைச்சனை நோக்கி நின்பால் உள்ளதையும் கீழேவை; என்று நேரே கூறினான். அவன் உள்ளங் கலங்கி அவ் ஒரு மணியையும் வெளியே வைத்துப் பெரு நாணமுற்றான். அதன்பின் அவனது நலமனைத்தையுங் கவர்ந்துகொண்டு அரசன் அவனைச் சினந்தகற்றினான். அவனும் சீர்மையும் சிறப்பும் இழந்து தேம்பிச் சென்றான். களவின் கண்ணே கன்றிய காதலுடையவர்

அதன் விளைவின் கண்ணே தொலையாத துன்பத்தை அடைவர் என்பதை உலகம் அவன்பால் உணர்ந்து தெளிந்தது. இது கன்னமூலத்திலுள்ளது.

களவை விரும்பினோர் முடிவில்லாத துன்பத்தை முடிவில் அடைவர் என்பது இதனால் கூறப்பட்டது.

285. கண்டார்பொன் மூவர் கருணையின்றி யேயிருவர்
கொண்டோடி மாய்த்தார் குமரேசா—மண்டுமே
அருள்கருதி அன்புடைய ராதல் பொருள்கருதிப்
பொச்சாப்புப் பார்ப்பார்கண் இல். (ரு)

இ—ள்.

குமரேசா! மூவர் கண்ட பொன்னை ஏன் இருவர் அருளின்றி வஞ்சித்துக்கொண்டு போனார் எனின், பொருள் கருதிப் பொச்சாப்புப் பார்ப்பார்கண், அருள்கருதி அன்புடையராதல் என்க.

பொச்சாப்புப் பார்ப்பார்கண்——மறவியை எதிர் பார்த்திருப்பாரிடத்து. அருள் கருதி அன்புடையராதல்——அருளின் மேன்மையையறிந்து அதன்பால் அன்புடையராய் ஒழுகுதல். இறைவன் அருளை எய்தக் கருதி உயிர்கள்மாட்டு அன்பு உடையராய் ஒழுகுதல் எனவும் இது பொருள்படும். அன்புடையார்க்கே அவனருள் உண்டாமென்க.

பிறர் பொருளைக் கவர்ந்துகொள்ளக் கருதி அவர் மறந்திருக்குஞ் சமயத்தை எதிர்பார்த்திருக்கும் வன்கணாளர்மாட்டு அருள் கருதி அன்புடையராய் ஒழுகுதல் இல்லை என்பதாம்.

கள்வரிடத்து அருளும் அன்பும் உளவாகா என்பது கருத்து. பிறர் சோர்வு பார்த்துப் பொருளைக் கைக்கொள்ளக் கருதிச்செல்லும் கள்வர், தம் கருத்துக்கு மாறாக எதிர்ப்பட்டார்பால் கொலை முதலிய பழிபடு வினைகள் பலவும் துணிவுடன் செய்வராதலால் அருள்கருதி அன்புடையராதல் அவர்க்கு அமையாதென்க.

கள்வர், அருள் சிறிதும் இலராய்ப் பொருளையே விரும்பிப் பொல்லாதன எல்லாம் புரிவர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை ககன் முதலிய கள்வர் மூவர்பால் காணப்படும்.

கதை.

ககன், காடன், சலன் என்னும் மூவர் கலந்து சென்று பிறனொருவன் பொருளை இரவில் கவர்ந்து வந்து பொதுவில் வைத்திருந்தார். ஐந்து நாட்களுக்குப் பின்னர் அதனைப் பங்கிடக் துணிந்தார். தாம் இருந்த இடத்துக்கு அயலிலுள்ள ஓர் ஊரில் சென்று நல்ல சிற்றுணவுகளை வாங்கிவரும்படி சலனிடம் மற்றிருவருங் கூறினார். அவனும் இசைந்து அங்குச் சென்று சிறிது உண்பொருள் கொண்டு மீண்டான். மீளுங்கால் அவ்விருவரையும் ஒழித்து அப்பொருளைத் தான் ஒருவனே கைக்கொள்ளக் கருதினான். அதனால் தன் கையிலிருந்த சிற்றுண்டியில் கொஞ்சம் நஞ்சைக் கலந்து கொண்டுவந்தான். அவன் வருமுன் அங்கிருந்த இருவரும் அவனைக்கொன்று அதனைத் தம் இருவர்க்கே உரிமையாக்கிக்கொள்ளக் கருதியிருந்தார். வந்தவன் உணவைத் தந்து உவந்திருந்தான். சிறிதுபொழுது சென்றபின் முன் சுட்டியபடியே மறைந்து நின்று ககன் அவனை வெட்டி வீழ்த்தினான். அதன்பின் ககனும் காடனும் களிமீக்கூர்ந்து அவ்வுணவினையுண்டு அப்பொருள்கொண்டு போனார். உடனே விடந்தலைக்கேறி ஒருங்கே மாண்டார். பொருள் கருதும் கள்வர்க்கு அருள் கருதும் தன்மையில்லையென்பதை அப்புன்மையோர் மூவரும் பொருந்தக் காட்டினார். (இதனை மித்திரபேதத்தில் காண்க.)

அருளும், அன்பும், கள்வர்பால் இல்லையென்பது இது கூறப்பட்டது.

286. மாசில் வசவரின்முன் வந்தும் களவெழுவர்
கூசாதேன் செய்தார் குமரேசா—பேசும்
அளவின்கண் நின்றொழுக லாற்றார் களவின்கட்
கன்றிய காத லவர். (௬)

-ள.

குமரேசா! மாசில்லாத வசவரது இல்லின் முன்னே வந்தாம், ஏன் எழுவர் கூசாது களவொழுக்கம் கொண்டார் எனின், களவின் கண்ணே கன்றிய காதலவர், அளவின் கண்ணே நின்று ஒழுகல் ஆற்றார் என்க.

அளவு—நிறை. அஃதாவது தக்க இன்ன தகாதன இன்ன என்று ஒக்க உணர்ந்து அதின் வழுவாது ஒழுகும் நேர்மை.

அளவின்கண் நின்று ஒழுகல் ஆற்றார்—நிறையின் கண்ணே நின்று ஒழுகுதலைச் செய்யார்.

[illegible], அளவு என்றதைக் காட்சி, கருதல் முதலிய அளவைகளாக்கொண்டால், உலகியலையும் உயிரியலையும் உணர்வியலையும் அளவையாலறிந்து அதில் வழுவாது ஒழுகல் ஆற்றார்எனவுமாம்.

களவின் கண்ணே மிக்க வேட்கையையுடையவர், நேர்மையான நெறியின் கண்ணே நிலைத்து ஒழுகமாட்டார் என்பதாம்.

களவில் ஆசையுடையவர் முறையான வழியில் ஒழுகார் என்பது கருத்து. இவ்வுண்மை கலுளன் முதலிய எழுவர்பால் காணப்படும்.

கதை.

கலுளன் முதலிய கள்வர் எழுவர் முன்னொருகாலத்தில் பங்களாபுரியிலிருந்த மாதவராகிய வசவதேவரது இல்லிற்கு வந்தனர். அங்கே சிவனடியவரோடு உடனிருந்து உண்ண விரும்பித் தாங்களும் அடியார்போல் கள்ள வேடந்தரித்து உள்ளே போனார். அங்கிருந்தவரனைவரும் இலிங்கதாரணமுடைய வீரசைவராதலால், இவர்களும் கத்தரிக்காய்களை மறைத்து மார்பில் தொங்கவிட்டுக்கொண்டு தொடர்ந்துபோயிருந்தார். இவ்வுண்மையைச் சிலர் அறிந்து கள்வர் என்று காட்ட அருள் வள்ளலாகிய வசவதேவர் அக்காய்களனைத்தும் சிவலிங்கங்களாகக் கருதினார். அங்

ணமே ஆயின. கள்ள வேடந் தரித்துவந்த அப்பொய்யரெல்லாரும் மெய்யராகிப் பொருந்தி விளங்கினர். தாம் பழகிவந்த களவியல்பால் சோற்றின் பொருட்டும நெறி தவறி வந்தார் என்று அனைவரும் அவரை இகழ்ந்து வசவ தேவரது மாண்பினைப் புகழ்ந்தார். களவின் கண்ணே காதலுடையவர் அளவினைக்கண்ணே நின்றொழுகமாட்டார் எனபதை அவ் எழுவரும் அன்று காட்டி நின்றார். (விரிவை வசவர் சரிதையில் காண்க.)

வெள்ளைவெளிப் பெருந்தகைக்கி யானசெய்யடிமை மெய்யாகக்
கள்ள வேடம் புனைந்திருந்த கள்வரெல்லாம் நாங்கமறும்
உள்ளபோதி மெய்யடியா ராகவுள்ளத் தாள்ளூருள்
வள்ளலாகும் வசவேசன் மலர்த்தாள் தலையால் வணங்குவாம்.

(பிரபுலிங்க லீலை.)

இது, கள்வர்பால் வசவேசர் செய்த வண்மையை வியந்து சிவப்பிரகாசர் கூறியது.

களவில் ஆசையுடையார் அளவிறந்து தீமை செய்வார் என்பது இதனால் கூறப்பட்டது.

287. அன்றேன் களவை அடியவர்செய் யாரென்றார்
தென்றாக சேரா குமரேசா—என்றும்
களவென்னும் காரறி வாண்மை அளவென்னும்
ஆற்றல் புரிந்தார்கண் இல். (எ)

குமரேசா! குலசேகராழ்வார் பரனடியவர் களவினைச் செய்யார் என்று ஏன் உறுதியாகச் சொன்னார் எனின், களவு என்னும் காரறிவாண்மை அளவு என்னும் ஆற்றல் புரிந்தார்பால் இல்லை என்க.

கார் அறிவு—இருண்ட அறிவு.

என்றது தனக்கு நன்மை இன்னதென்று உணராத ஒருவ மருண்ட அறிவினை.

அளவு என்னும் ஆற்றல் புரிந்தார் கண் இல்—நேர்மை என்னும் வன்மையைப் பொருந்தினார்மாட்டு இல்லை.

அளவு என்னும் பெருமையைப் பொருந்தினாரிடத்துங் களவு என்று சொல்லப்படுகின்ற மருண்ட அறிவு இல்லை என்பதாம்.

நல்ல அறிவினையுடையவரிடத்துங் களவு செய்கற்குரிய பொல்லாத அறிவு பொருந்தாது என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை சேரமன்னன்பாலிருந்த திருமாலடியவர்பால் தெளியப்படும்.

கதை.

திருவஞ்சிக்களம் என்னும் திருநகரிலிருந்து செங்கோல் செலுத்திய குலசேகரன் என்னும் சேரர் பெருமான் மாலடிக்கே மனங் குழைந்த மாதவராதலால் அவரது ஆதரவில் பாகவதர்கள் பலர் குழுமியிருந்தனர். அவ்வடியவர் பக்கல் அவ் அரசர் பெருமான் ஆற்றிவருகின்ற அருமைகளைக் கண்டு அமைச்சர்கள் பொறாமைகொண்டார். அதனால், விலையுயர்ந்த நவமணி மாலை ஒன்றை அரசமாளிகையிலிருந்து ஒருநாள் எடுத்து மறைத்து வைத்துக்கொண்டு, வைணவர்களே அதனைக் களவு செய்திருப்பார்கள் என்று அரசனிடஞ் சென்று அமைச்சர்கள் அறிவித்தார். இவ் இழிந்த தொழிலை அடியார்கள் செய்யார் என்று அரசன் நினைந்து அமைச்சரையே வெறுத்தான். மாலடியவர் நெறி நின்று ஒழுகிய அறிவுடையவராதலால் களவு என்னும் தீமையை ஒருபோதும் செய்திடார். இஃது யான் உணர்ந்தறிந்த உண்மையாம். உலகறிய இதற்கு நானே உறுதி கூறுவேன் என்று துணிந்து ஒரு குடத்தில் நாகப் பாம்பை அடைத்து அதனை நடுவே இருக்கும்படி செய்து, என்பால் உள்ள வைணவர் மனம் மொழி மெய் என்னும் திரிகரணங்களும் புனிதராயிருப்பது உண்மையாயின் இப் பாம்பு என்னைக் கடியாதிருக்கக்கடவது

என்று பலருங் காண அக்குடத்துள் தமது செங்கையையிட்டார். அது யாதொரு ஊறுஞ் செய்யாது அத்திருக்கரத்தைச் சுற்றிக்கொண்டு கடகம்போல் விளங்கியது. அனைவரும் வியந்து அரசையும் அடியவரையும் புகழ்ந்தார். அமைச்சர்கள் நடுங்கி அடிவணங்கி மன்னிக்கும்படி மன்னனை வேண்டினர். அளவு என்னும் ஆற்றல் புரிந்தார் கண், களவு என்னும் கார் அறிவு என்பதை அரசன் அன்று உலகறிய உணர்த்;

(விரிவை ஆழ்வார் சரிதையில் காண்க.)

ஆரங்கெடப்பரன் அன்பர்கொள் ளாரென் றவர்களுக்கே
வாரங் கொடுகுடப் பாம்பிற் கையிட்டவன் யாற்றலரை
வீரங் கெடுத்தசெங் கோற்கொல்லி காவலன் வில்லவர்கோன்
சேரன் குலசே கரன்முடிவேந்தர் சிகாமணியே.

(மணக்கால் நம்பி.)

மேற்குறித்தவுண்மை இதனால் இனிது தெளிவாதல் காண்க.

களவு என்னும் தீமை நல்லோர்பால் இல்லை என்பது இதனால் கூறப்பட்டது.

---

288. திண்டோட் சயிந்தவன்றன் தீரநெஞ்சிற் புன்கரவுங்
கொண்டுநின்றான் என்னே குமரேசா—உண்டாம்
அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்கும்
களவறிந்தார் நெஞ்சிற் கரவு. (அ)

இ—ள்.

குமரேசா! சயிந்தவன் தனது வீரம் பொருந்திய நெஞ்சில் ஏன் வஞ்சம் பொருந்தி நின்றான் எனின், அளவு அறிந்தாரது நெஞ்சத்து அறம் நிலைபெறுதல் போல களவு அறிந்தாரது நெஞ்சில் கரவு நிலைபெறும் என்க.

கரவு—வஞ்சனை. களவு அறிந்தார்—களவையே பழகினவர்.

அளவு அறிந்தார்—உண்மையை அளந்து தெளிந்து அதனையே பழகினவர்.

நெறி அறிந்தவர் நெஞ்சில் அறம் நிலைபெறுமாறுபோல், களவறிந்தவர் நெஞ்சில் வஞ்சனை நிலைபெறும் என்பதாம்.

களவு என்னும் காரறிவானது பேரறிவாளரை அணுகாது என்று மேலே கூறினார், இதில், அவர் நெஞ்சில் அறம் நிலைபெற்றாற்போல அக் கள்வர் நெஞ்சில் கரவு நிலைபெறுமென்றார்.

எவ்வளவு உயர்ந்த நிலையினை யெய்தியிருப்பினும் களவையே பழகினவர் உள்ளத்தில் வஞ்சம் ஒழியாது நிற்குமென்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை சயிந்தவன்பால் உணரப்படும்.

கதை.

சயிந்தவன் என்பவன் சிந்து தேசத்து வேந்தன். சயத்திரதன் என்னும் பெயரினையுடையவன். துரியோதனன் தங்கையாகிய துச்சளையை மணந்தவன். நல்ல போர்வீரனாயிருந்தும் இவன் நெஞ்சில் வஞ்சம் நிலைத்திருந்தது. பாண்டவர் காமிய வனத்திலிருக்குங்கால இவன் ஆண்டுக் கரவுடன் சென்றான். ஐவரும் நீங்கிய அமையம் பார்த்துத் துரோபதைபால் அணுகினான். அவ்வுத்தமி இவனை உபசரித்து நாட்டுள்ளார் நலங்களை நன்கு வினவினாள். சிறிது பொழுது கழிந்தபின் அவ்வஞ்சியை இவ்வஞ்சன் வலிந்து கவர்ந்து விரைந்து சென்றான். அந்நல்லாள் அழுகுரலைக் கேட்டு ஐவருந் தொடர்ந்தோடி யிவனைப் பிடித்துப் பிணித்து இழிவினை பலவுஞ் செய்து கழுதைமேல் ஏற்றி அத்தினபுரியை நோக்கி அனுப்பிவிட்டுப் பத்தினியைத் தேற்றிக்கொணர்ந்து பண்டுபோல் அமைந்து பண்புடனிருந்தார். களவு என்னும் காரறிவாண்மையால் அளவில்லாத துன்பத்தையும், அவமானத்தையும் இவன் அடைந்தான். கொடுவினை செய்திருந்தும் இவனைக் கொல்லுதல் தீது என்று ஒழித்து ஐவரும் அறங்குறித்து நின்றார். சிறந்த அரசனாயிருந்தும் களவையே பழகியதால் இவன் நெஞ்சில் கரவுடையனாகிக் கடும் பழி பூண்டான்.

விரிவைப் பாரதத்தில் காண்க.

நல்லோருள்ளத்தில் நேர்மையும், கள்வருள்ளத்தில் கரவும் குடிகொண்டிருக்குமென்பது இதனால் கூறப்பட்டது.

---

289. அன்று களவால் அமிழ்துண்டார் ஏனுடனே
குன்றி யழிந்தார் குமரேசா—என்றும்
அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல
மற்றைய தேற்றா தவர். (௯)

குமரேசா! அன்று களவால் அமிர்தத்தை உண்டவர் என் உடனே அழிவுற்றார் எனின், களவு அல்ல மற்றைய தேற்றாதவர், அளவு அல்லாதவற்றைச் செய்து ஆங்கே வீவர் என்க.

மற்றைய என்றது களவல்லாத வேறு நல்ல முயற்சிகளை.

களவு அல்ல மற்றைய தேற்றாதவர்—களவல்லாத பிற நெறிகளை அறியாதவர். களவை அன்றி வேறொன்றையும் அறியாதவர் எனினுமாம்.

அளவு அல்ல செய்து—அளவு அல்லாத தீமைகளை எண்ணி.
இந்த அளவு என்றது அறிவால் ஆய்ந்தளந்த நெறியினை.

ஆங்கே வீவர்—தப்பாமலே கெடுவர். கெடுதல் ஒருதலை என்பதை ஏகாரம் உணர்த்தி நின்றது.

களவினாலன்றிப் பொருள் பெறுதற்குரிய வேறு நெறிகளை அறியாதவர் நெறியல்லாத தீமைகளை நினைந்து உடனே கெடுவர் என்பதாம்.

களவே பயின்றவர் கடிதே கெடுவர் என்பது கருத்து.

கள்வர்க்கு இழிவும் அழிவும் உடனே உளவாம் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை இராகு கேதுக்கள்பால் அறியப்படும்.

கதை.

இராகு என்பவன் விப்பிரசித்தி என்னும் ஓர் அசுர வீரனுடைய புதல்வன். தாய் பெயர் சிம்மிகை. தம்பி கேது. திருமால் மோகினி உருவங்கொண்டு அசுரர்களை மயக்கி அமிர்தத்தை அமரர்களுக்குப் பருக்கக்கொடுக்கும்பொழுது இராகுவும், தம்பியும் அமரர்போல் உருமாறி ஆங்குப் புகுந்து அவ் அமிர்தத்தைக் களவால்கொண்டு ஒளிந்து உண்டார். உண்ணுங்கால அவ்வுண்மையைத் திருமாலுணர்ந்து தமது கையிலிருந்த சட்டுவத்தால் அடித்தார். அவ்வடியால் இராகுவின் தலை துணிபட்டது. அமிர்துண்டநலத்தால் தலையும் உடலும் இருவடிவாகி இலங்கின்றன. தப்பிச்சென்ற தம்பியின் பெயரையே அத்தலையின் உடலுக்கு நலமுற இட்டார். தம்மைச் சுட்டிக்காட்டிய சூரியசந்திரராகிய அவ் இருவர்மீதும் இராகு கேதுக்கள் என்னும் இவ் இருவரும் பெரும் பகைகொண்டு புழுங்கி நொந்தார். களவைப் பயின்றவர் அளவில்லாத தீமைகளைச்செய்து ஆயுள்கெடுவர் என்பதை உலகம் இதன்பால உணர்ந்தது. (விரிவைக் கந்தபுராணத்தில் காண்க.)

கள்வர் கதியில் கெடுவர் என்பது இதனால் கூறப்பட்டது.

290. பண்டேன் வசுக்கள் பசுக்களவால் தம்முடம்பும்
கொண்டனவும் நீத்தார் குமரேசா — அன்புநின்று
கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை கள்ளார்க்குத்
தள்ளாது புத்தேள் உலகு. (ம)

இ—ள்.

குமரேசா! வசுக்கள் எண்மரும் தமது உடம்பும் உயர்நிலையும் ஏன் களவினால் ஒருங்கே இழந்தார் எனின், கள்வார்க்கு உயிர் நிலையும் தள்ளும்; கள்ளார்க்குப் புத்தேள் உலகும் தள்ளாது என்க

உயிர்நிலை—உடம்பு. உயிர் நிற்றற்கு இடம் என்னும் ஏதுவான் வந்தது. கள்வார்க்கு—களவினைச் செய்வார்க்கு. உயிர் நிலை, உலகு, என்னும் ஈரிடத்தும் நிற்கவேண்டிய உம்மைகள் தொக்குநின்றன.

கள்வார்க்கு உயிர் நிலையும் தள்ளும்—கள்வர்க்குத் தமது உடம்பும் தவறும். என்றது மரண தண்டனையை அரசன் கள்வர்க்கு விதிப்பன் என்பது கருதி.

கள்வர்க்குத் தமது உடம்பும் தவறிவிடும்; களவு செய்யாதவர்க்கு, தெய்வவுலகமும் தவறாது கிடைக்கும் என்பதாம்.

கள்வர் இம்மையில் மரண தண்டனையை அடைந்து மறுமையில் நரகம் புகுவர்; கள்ளாதவர் இங்குப் புகழும் இன்பமும் எய்திப் பின்பு புத்தேளுலகமும் பொருந்துவர் என்பது கருத்து.

களவினை விரும்புவோர் தாம் பெற்றுள்ள உயர் நலமெல்லாம் ஒருங்கேயிழந்து யிழிவர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை பிரபாசன் முதலிய வசுக்கள் எண்மர் பாலும் உணரப்படும்.

கதை.

வசுக்கள் என்பவர் திசைகாப்பாளர்போல் என்றும் எண்மராய் நின்று விளங்கும் தெய்வ மரபினர். அனலன், அனிலன், ஆபத்சைவன், சோமன், தரன், துருவன், பிரத்தியூசன், பிரபாசன் என்பன அவர்கட்குப் பெயர்களாம். இவருள் பிரபாசன் என்பவன் தன் மனைவியாகிய வசுமதி பால் பெருங் காதலுடையவனாதலால் அவள், விரும்பிய எவற்றையும் விரைந்துகொண்டு தந்து அவள் இன்புறுவதைக் கண்டு தான் இன்புறுபவன். ஒரு நாள் காம தேனுவைக் கொண்டுவரும்படி வசுமதி கணவனிடம் கூறினாள். பிரபாசன் இசைந்து தன் துணைவர் எழுவருடன் கூடி நள்ளிரவில் வசிட்டர் மனைக்கு வந்தான் அங்குத் தங்கியிருந்த அத் தெய்வப் பசுவை அவர் அறியாவகை கவர்ந்துசென்றான். மனைவி பால் தந்து மனமகிழ்ந்திருந்தான்.

விடிந்த பின் வசிட்டர் மெய் யுணர்வால் ஆய்ந்து மெய்ம்மையைத் தெளிந்தார் உயர்ந்தவரா யிருந்தும், களவு என்னும் இப் பழிவினையைச் செய்ததால் அவரனைவரும் இழிந்தவராகும்படி சபித்தார். அவ்வாறே அவரனைவரும் தெய்வவுருவினை யிழந்து இந்நிலவுலகை நோக்கி யிழிந்தார். அயனிடு சாபத்தால் நிலை யிழந்து வரும் சுர நதியை இடை வழியில் கண்டார். அவள் அடிகளை வணங்கினார். அந் நதி மடந்தை அவர்களுக்கு அருள்புரிவதாக ஆதரவு கூறினாள். அவ்வாறே தான் கங்கையாய்த் தோன்றிச் சந்தனுவை மணந்த காலையில் தன் வயிற்றில் தோன்றிய புதல்வர் எழுவரையும் புவியில் தோன்றாவண்ணம் தொலைத்துப் போக்கினாள். பிரபாசன்மட்டும் பிறந்து வளர்ந்தான். முன்னர்ப் பெண்வழிச் சென்று பிழை செய்தமையால் பின்னர்ப் பெண் இன்பம் இன்றிப் பெரு நாள் இருந்தான். இவனே வீடுமன் என்க. கள்வார்க்கு உயிர் நிலையும் தள்ளும் என்பதை உலகம் இவன்பால் உணர்ந்து நின்றது. விரிவைப் பாரதத்தில் தெளிக.

கள்வர், கள்ளாதார், என்னும் இருவர்க்கும் உளவாம் பயன் இதனால் ஒருங்கு கூறப்பட்டது.

(இவ் அதிகாரத்தின் தொகைப்பொருள்.)

பிறருடைய பொருளை வஞ்சித்துக்கொள்ளங் கருதாவகை தன் நெஞ்சினைக் காக்கவேண்டும். களவினை உள்ளத்தால் உள்ளினும் பெருந் தீங்கு உண்டாம். களவினால் உண்டாம் செல்வம் பழியை விளைத்து விரைவில் அழிவை அடையும். களவின் மீது காதலுடையவர் அளவில்லாத துன்பங்களையடைவர். களவு செய்வோர் உள்ளத்தில் அருள் உண்டாகாது. நெறி நின்று ஒழுகும் நேர்மையை அவர் அடையமாட்டார். களவென்னும் தீமையை அறிவுடையார் அணுகார். நல்லோர் உள்ளத்தில் அறம் நிலைத்திருத்தல்போல் தீயோர் உள்ளத்தில் களவு நிலைத்திருக்கும். களவே பயில்வோர் அழிவே அடைவர். கள்வர்க்கு மரண தண்டனையும் இழி பிறப்பும் உளவாம். களவு செய்யா

தவர் புகழும் இன்பமும் பொருந்திப் புத்தேளுலகத்தை அடைவர் என்பனவாம்.

29-வது கள்ளாமை முற்றிற்று.

௩௰-ம் அதிகாரம் வாய்மை.

அஃதாவது உண்மையினது தன்மை. உள்ளம், வாய், மெய் என்னும் மூன்றிடத்தும் இது தோன்றுமாதலால் உண்மை, வாய்மை, மெய்ம்மை என உரைக்கப்படும். கள்ளம் இல்லாத உள்ளமுடையார்க்கே பொய் சொல்லாமை என்னும் இந் நல்லறம் நன்கு அமையுமாதலால் கள்ளாமையின் பின்வைக்கப்பட்டது.

291. உள்ளதே சொன்னான் உயர்தருமன் பொய்யனென்று
கொள்ளநின்றான் என்னே குமரேசா—தள்ளாத
வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றும்
தீமை யிலாத சொலல். (௧)

இ—ள்

குமரேசா! உள்ளதையே சொல்லியும் தருமர் என் பொய்யர் என்றுகொள்ள நின்றார் எனின், வாய்மை எனப்படுவது யாது எனின், யாது ஒன்றும் தீமை இல்லாத சொற்களைச் சொல்லுதலேயாம் என்க.

தீமை யாதொன்றும் இலாத சொலல்—தீங்கு சிறிதும் உண்டாகாத சொற்களைச் சொல்லுதல்; இலாத என்பது ஈண்டுப் பெயராய் நின்றது.

மெய்ம்மை என்று சொல்லப்படுவது யாது எனின், பிறிதோருயிர்க்கு யாதொரு தீமையும் பயவாத சொற்களைச் சொல்லுதலேயாம் என்பதாம்.

உள்ளதை உள்ளதாகவும், இல்லதை இல்லதாகவும் சொல்லுதல் வாய்மையன்று, பிறவுயிர்கட்குத் தீமை சிறிதும் இல்லாத சொற்களைச் சொல்லுதலே வாய்மையாம் என்றபடி.

உண்மை இஃதென்று இதில் உணர்த்திய ஒண்மையை ஊன்றி உணர்க.

உள்ளபடியே நிகழ்ந்ததை ஒருவன் சொல்லினும் அதனால் பிறர்க்குத்தீமை விளையுமாயின் அவன்பொய்யின் பயனை எய்துவான் என்பது கருத்து. இவ் வுண்மை தருமர் பால்காணப்படும்.

கதை.

பாண்டவர்கட்கும் துரியோதனன் முதலானவர்கட்கும் பெரும் போர் தொடங்கி நடந்துவருங்கால் பதினைந்தாம் நாட் போரில் துரோணரைக் கொல்லக் கருதிய கண்ணன் அவ் வில் வீரனை வெல்வது அரிது என்று தெளிந்து வெய்ய சூழ்ச்சி ஒன்று செய்தார். அவருடைய மகனாகிய அசுவத்தாமன் பொருது இறந்தான் என்று தருமர் வாயால் சொல்லப்படின், அச் சொல்லால் உள்ளங் கலங்கி வில்லெடாது மெய் மறந்து நிற்பர், அவ்வமையம் அவரை வெல்லலாம் என்று துணிந்து தருமரையணுகி அவ்வகையே சொல்லும்படி வேண்டினார். 'பொய்யினால் ஆள்வது இந்தப் புவிகொலோஎன்று' அவர், வெறுத்து மறுத்தார். மாளவதேயத்து மன்னனாகிய இந்திரவன்மன் ஏறிவந்த மத யானை ஒன்று அன்று மாள நேர்ந்தது. அதற்கும் அசுவத்தாமா என்றே பெயரிடப்பட்டிருந்தது. உண்மையில நிகழ்ந்ததாதலால் அதையேனுஞ் சொல்லுக என்று கண்ணன் தொடர்ந்து மொழிந்தான். என் செய்வார் தருமர்; இசைந்தார்.

"அத்தனே அடுவல்லாண்மை அச்சுவத்தாமா என்னும் மத்தவாரணத்துக் கையோ மாருதி சிங்கமானால்" என்று பங்கமறக்கூறினார். இவ் ஒலியைக் கேட்டவுடனே தன் மகனே இறந்தான் என்று துரோணர் கம்பித தன் வில்லையும் கணையையும் வீசியெறிந்து வெறிதே நின்றார். அவ்வமயம் திட்டத் துய்மன் விட்

ட கணையால் அவர் தலை துள்ளி விழுந்தது. மெய்யே விரதமாகவுடைய தருமரும் பொய் புகன்றார் என்று ஒரு புன்மொழி பரந்தது. அதன் பயனாகத் தருமா ஒருமுறை நரகத்தைக் காணும்படி நேர்ந்தது. உண்மையாக நிகழ்ந்ததைக் கூறினும் பிறிதோருயிர்க்குத் தீமை பயக்குமாயின் அது பொய்ம்மையாம் என்பதை உலகம் இவர்பால் உணர்ந்தது. விரிவைப் பாரதத்தில் காண்க.

கற்கொண்டு கன்மழைமுன் காத்தகள்வன் கட்டுரைத்த
மொழிப்படியே கருதார் போரில்
முற்கொண்ட விரதமறந் தியாருங்கேட்ப முரசுயர்த்தோன்
பொய்சொன்னான் முடிவிலங்கச
சொற்கொண்டு வெறுங்கையனும் அளவிற்றிட்டத்
துய்மனென நின்றகுருத்துரோகி கொன்றான்
விற்கொண்டு பொரநினைந்தால் இவனையல்ல விண்ணவர்க்கும்
எந்தை தனை வெல்லலாமோ.

(பதினைந்தாம் போர்ச்சருக்கம்.)

இது, தம் தந்தையாரை வஞ்சனையால் கொன்ற வகையினை யறிந்து அசுவத்தாமன் வருந்தி யுரைத்தது.

வாய்மை இன்னதென்பது இதனால் வகுத்துக் கூறப்பட்டது.

292. மாதர் கலைக்கோட்டு மாமுனிபால் பொய்யுரைத்தும்
கோதடையார் என்னே குமரேசா—தீதுடைய
பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின் (உ)

இ.-

குமரேசா! கமலை சுலோசனை என்னும் மாதரிருவரும் கலைக்கோட்டு முனிவர்பால் பொய்யுரை புகன்றும் ஏன் நன்மை யெய்தினார் எனின், புரைதீர்ந்தநன்மை பயக்கும் எனின், பொய்ம்மையும் வாய்மை இடத்தவாம் என்க.

புரை தீர்ந்த நன்மை—குற்றம் நீங்கிய நன்மை.

குற்றமற்ற நன்மையைக் கொடுக்குமாயின், பொய்ம்மைச் சொற்களும் வாய்மைச் சொற்களின் பாலவாம் என்பதாம்.

பொய்ம்மை என்பது பால்பகா அஃறிணைப் பெயராதலால் இடத்த என்னும் பலவின்பால் முற்றுக்கேற்ப இங்குப் பன்மையாய் நின்றது.

தீமையிலாத சொலலே வாய்மை என்று மேலே கூறினர் இதில், அச்சொல் பொய்ம்மையா யிருப்பினும் மெய்ம்மையாம் என்றார்.

பிறர்க்குத் தீமையில்லாதபடி வினோதமாக ஒருவன் பொய் கூறினும் அது பாவமாகுமாதலால் அதனை விலக்குதற்கு நன்மை பயக்குமெனின் என்றார்.

தனக்கு நன்மை பயக்குமாறு ஒருவன் பொய் கூறி அதுவும் வாய்மை இடத்தவாம் என்று இதனை வலிந்தெடுத்துக்காட்டி வாய்ப் பறை கொட்டலாகாதென்பது "புரைதீர்ந்த" என்னும் அடையால் தெளியப்படும்.

பிறர்க்கு யாதொரு தீமையும் இல்லாமலும், கேடேனும் சாவேனும் அடையநின்றதோருயிர் அவற்றினின்றும் நீங்கி இன்புறுமாறு எழுகின்ற பொய்ம்மையே அறிவுடையோரால் மெய்ம்மையாகக் கருதப்படும் என்பது கருத்து.

பொய்ம்மையாயினும் புரைதீர்ந்த நன்மை பயக்குமாயின் அது மெய்ம்மையாம் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை கமலை சுலோசனை என்னும் இருவர்பாலும் காணப்படும்.

கதை.

கமலை சுலோசனை என்னும் மாதர் இருவரும் உரோமபதன் என்னும் அரசனுடைய திரு நகரிலிருந்தவர். அழகால், பாடலால், ஆடலால் சிறந்தவர். 'கல்வியறிவோடு சொல்வன்மையும்

வாய்ந்தவர். கலைக்கோட்டு முனிவரின், தன் நாட்டில் மழைவரும் என்று கலைஞர் கூறியதைக் கேட்டு அம்முனிவரனைக் கொணரும் வகையாதென்று அரசன் கவலுங்காலையில் இம்மகளிரிருவரும் எழுந்து யாம் ஏகி அவ் அருந்தவனைக் கொண்டுவருகின்றோம் என்று கூறிச் சென்றார். மாந்தரை விலங்குகள் என்று உன்னு மனத்தனைப், மாதவத்தனைப் உலக நாட்டமின்றி உணர்வையே நாடி நிற்கும் அவ் உயர்தவனை யணுகித் தாமும் அருந்தவர்போல் நடித்து இனிய மொழிகள் பல அவர் மனங்கொள மொழிந்தார். நாள் பல கழிந்தபின் தம் பொய்ம்மைச் சொற்களால் அம் மெய்ம்முனிவனை மயக்கித் தம் நகருக்கே கொணர்ந்தார். மாதவன் வருகையால் மழையும் பெய்தது. அரசனும் பிறரும் அறிந்து ஓடிவந்து அருந்தவனை வணங்கினார். மங்கையர் பொய்ம்மையால் மயங்கி வந்தோம் என்று முனிவர் தெளிந்தார். முனிவுகொண்டார். அடிகள் எய்தியதால் யான் எய்தியிருந்த கேடு நீங்கி அளவிலின்ப மெய்தினேன் என்று அரசன் போற்றினான். முனிவர் முனிவு நீங்கி இனிதருள் செய்தார். தமது பொய்ம்மையால் புரைதீர்ந்த நன்மையை விளைவித்த அம்மாதர் நலம் பல பெற்று நன் மதிப்புற்றார்.

உம்மையின் மறுமைதன்னில் உறுபயன் இரண்டும் பார்க்கின்
இம்மையில் விளங்கும் யார்க்கும் அவரவர் இயற்கையாலே
மெய்ம்மையே ஒருவர்க்குற்ற விபத்தினை விலக்குமாகிற்
பொய்ம்மையும் மெய்ம்மைபோலப் புண்ணியம் பயக்குமாதோ.
(பாரதம்.)

பொய்யும், நன்மை பயக்குமாயின் மெய்யாம் என்பது இதனால் கூறப்பட்டது.

293. வேதாவும் தாழையுமுன் வெய்யதொரு பொய்புகன்றேன்
கோதடைந்து நொந்தார் குமரேசா—ஏதேனும்
தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும். (௩)

இ.—ள்.

குமரேசா! அயனும், தாழையும் வெய்ய பொய்மை முன் புகன்று, பின் ஏன் துன்பமெய்தி நொந்தார் எனின், தன் நெஞ்சு அறிவதைப் பொய்யற்க; பொய்த்தபின், தன் நெஞ்சே தன்னைச் சுடும் என்க.

தன் நெஞ்சு அறிவது பொய்யற்க—தன் மனம் அறிந்ததை மறையாது மொழிக.

ஒருவன், தன் மனம் அறிந்ததொன்றனைப் பொய்யாது மொழியவேண்டும்; பொய்த்தானாயின் தன் மனமே பின் தன்னை வருத்தும் என்பதாம்.

ஏகாரம் உரிமையை விளக்கிநின்றது. சுடும் என்றது துன்ப மிகுதி தோன்ற என்க.

மனம் அறிந்ததை மறைத்து, மாறொன்று கூறின், அம்மனமே கரியாய் நின்று பெருந் துன்பத்தை விளைவிக்கும் ஆதலால் அதனை ஒருவன் மறந்துங் கூறலாகாதென்பது கருத்து.

பிறர் அறியார் என்று கருதி ஒருவன் பொய் கூறின் அது பின் உலகறிய வெளிப்பட்டு அழியாத பழியையும் தொலையாத துன்பத்தையும் அவனுக்கு நிலையாகக் கொடுக்கும் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை பிரமன் பாலும் தாழை மலர் பாலும் உணரப்படும்.

கதை.

ஆதியூழியில் அழலுருவாய்த் தோன்றிய இறைவனது திருமுடியை அறிந்து வருவதாக மாலிடம் வாது கூறி அயன், அன்ன வடிவங்கொண்டு மேலெழுந்து பறந்தான். பல்லாயிர வருடங்கள் கழிந்தும் ஒரு சிறிதுங் காணாது உளந் தளர்ந்து சோர்ந்தும் ஊக்கம் விடாமல் மேன்மேல் உயர்ந்து சென்றான். செல்லுங்கால் விரைந்து தாழ்ந்து வருகின்ற தாழம் பூ ஒன்றை இடை

யே கண்டான். "நீ யார் எங்கிருந்து வருகின்றாய்" என்று அதன் இயல்பினை வினவினான். அது தெய்வ மலராதலால், தன் திருவாய் திறந்து "யான், தவ நலத்தால் தாழும் பூவாகிப் பரமன் திருமுடியிலிருந்தேன், ஓர் இழுக்கால் அதிலிருந்து வழுவி வீழ்ந்தேன், நாற்பதினாயிர வருடங்களாயின இழிந்துபோகின்றேன்" என்று உளைந்து மொழிந்தது. அயன் கேட்டு அஞ்சித் தன் கருத்து முற்றாதென்று தெளிந்து தன் இயல்பினை அதற்கு உணர்த்தி, தான் பரமன் முடியினைக் கண்டதாகத் தன்னுடன் வந்து மாலிடம் உறுதிசொல்லும்படி அதனைப் பெரிதும் வேண்டினான். அதுவும் இசைந்து, அவ்வாறே வந்து மாலிடங் கூற, அயனும் நாணாது ஆம் என மொழிந்தான். உடனே ஒளியுருவாய் நின்ற தனிமலை படீர் என்று வெடித்து "பொய், பொய்" என்று உலகறிய ஒலித்தது. அயனும் கைதையும் அஞ்சி நடுங்கினார். உள்ளந் தீய உயிருந் தேம்பினார். ஈசன், அயனை ஏசி நோக்கி

"வாசமா மலரவ உனக்கு மண்ணின் மேல்
பூசையும் கோயிலும் போக என்றனன்."

அதன்பின் தாழும் பூவை நோக்கி

"கைதையே இவனொடு கரவு நீயுரை
செய்ததால் தீண்டிலேம் என்று தீர்த்தனன்." என்றான்.

இவற்றைக் கேட்டு,

அவ் இருவரும் பொய்ம்மையாலெய்திய புன்மையை எண்ணி யெண்ணி யேங்கினார். பொய்த்தபின் தன் நெஞ்சே தன்னைச் சுடும் என்பதை அவர் அன்று உணர்ந்து நாணினார்.

பிறரறியார் என்று ஒருவன் பொய்கூறின், அது பலரும் அறியத் தோன்றி அவனுக்குப் பழியையும் துன்பத்தையும் விளைக்கும் என்பதை உலகம் அவர்பால் உணர்ந்தது.

அண்ணிய கிளையுமில்லும் அரும்பெறன் மகவும் அன்பும்
திண்ணியசீரும் மிக்க செல்வமுந் திறலுந் தேசும்
எண்ணிய பொருள்கள் யாவும் இயற்றிய தவமுமேனைப்
புண்ணியம் அனைத்துஞ்சேரப் பொய்ம்மையாற் பொன்றுமன்றே.

(பாரதம்.)

தன் நெஞ்சே தன்னை வருத்துமாதலால் பொய்மை ஒருவன் யாண்டும் கூறலாகாதென்பது இதனால் கூறப்பட்டது.

294. வள்ளலரிச் சந்திரனேன் வையத்தா ருள்ளமெல்லாங்
கொள்ளநின்றான் இன்றுங் குமரேசா—எள்ளளவும்
உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன். (௪)

இ—ள்.

குமரேசா! அரிச்சந்திரன் உலகிலுள்ள எல்லாருடைய உள்ளங்களிலும் ஏன் இன்றும் நின்றுளான் எனின், உள்ளத்தால் ஒருவன் பொய்யாது ஒழுகின், உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் அவன் உளனாம் என்க.

பொய்யாது ஒழுகின்—பொய் கூறாது ஒழுகுவனாயின். ஒழுகின் உளன் என்று காண்க.

தன் உளம் அறிய ஒருவன் பொய் சொல்லாது ஒழுகுவனாயின் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் அவன் உளனாவன் என்பதாம். மெய்யுடை ஒருவனை உணர்வுடையாரெல்லாரும் தம் உள்ளத்தில் வைத்துப் போற்றுவாராதலால் "உள்ளத்துள் எல்லாம் உளன்" என்றார்.

மேல், தன் நெஞ்சறியப் பொய்யத்தானை அந்நெஞ்சே சுடும் என்றார்; இதில், அங்ஙனம் பொய்யாதானை உலகிலுள்ளார் உள்ளங்களெலாம் உவந்து போற்றுமென்றார்.

பொய் சொல்லாத ஒருவன் எக்காலத்தும், எவ்விடத்தும் எல்லாரானும் புகழ்ந்து போற்றப்படுவான் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை அரிச்சந்திரன்பால் உணரப்படும்.

கதை.

அரசர் பெருமானாகிய அரிச்சந்திரன் கோசிகர் செய்த பொல்லாத சூழ்ச்சிகள் எல்லாவற்றினும் நிலை கலங்காமல் நின்று

பொய்யாதொழுகினர். அதன் பொருட்டுப் பதியும் நிதியும் இழந்து, தனது அருமை மனைவியையும் இனிய புதல்வனையும் பிரிந்து, தானும் பறையனொருவனுக்கு விலைப்பட்டுச் சுடலை காத்து நின்று, பொறுத்தற்கரிய பெருந்துயரங்களை அடைந்து அகங்குழைந்திருந்தார். ஆங்கும், முனிவர் வந்து கரவுடன் நின்று ஒரு பொய் புகலின் இத்துன்பங்களெல்லாம் உனக்கு நீங்கிவிடு மென்று தனக்கு இனியவர் போன்று மொழிந்தார். அவ்வமையத்தும் இவர் ஒன்றிலும் பொய்யைநினையாது நின்றார். அதன் பயனாக முதல்வர் மூவரும் இவர் முன்னே தோன்றி இன்னருள் புரிந்தார். இழந்தன எல்லாம் எய்தி இன்புற்றார். நாடகசாலைகளிலும் இவர் சரிதம் நடிக்கப்படுகின்றது. இவ் ஐயனைப் "பொய் சொல்லா மெய்யன" என்று உலகம் இன்றும் போற்றிவருகின்றது. உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் அவன் உளனும் என்பதை உலகம் இவர்பால் கண்டது.

(விரிவை அரிச்சந்திர புராணத்தில் காண்க,)

சேய்மை யண்மையில் உயிர்க்கொரு துணையெனச் சிறந்த
வாய்மை யாலகந் தூய்மையாம் மற்றிலை புறத்தைத்
தூய்மை செய்வது நீரலாற் சொல்லின்வே றுளதோ
நோய்மை செய்யினும் வாய்மையே நோன்பெமக் கறிதி. (1)

புலையனும் விரும்பாதவிப் புன்புலால் யாக்கை
நிலையெனு மருண்டுயிரினும் கெடுதுறச் சிறந்தே
தலைமை சேர்தரு சத்தியம் பிறழ்வது தரியேம்
கலையு ணர்ந்தநீ யெமக்கிது கழறுவ தழகோ. (2)

இம்மை யம்மைவீ டெனமறை பொலன்கொள இயம்பும்
மும்மை யுந்தரும் முறையுடைத் தெனுநிலை முரணி
எம்மை யாழ்வயிற் றடக்கிமீட் டெழ்கலா எரிவாய்
வெய்மை கூர்நர குய்க்கினும் மெய்மையை விடேமால். (3)

பதியிழந்தனம் பாலனை யிழந்தனம் படைத்த
நிதியிழந்தனம் இனியெமக் குளதென நினைக்கும்
கதியிழக்கினும் கட்டுரை யிழக்கிலே மென்றா
பதியிழந்துதன் வாயிழக் தருந்தவன் மறைந்தான். (1)

இவை, ஒரு பொய்யேனும் சொல்லுக என்று முனிவர் சொன்னபோது மன்னவன் சொன்னவை.

பொய்யாத ஒருவனை உலகமெல்லாம் தம் உள்ளத்தில் வைத்துப் போற்றும் என்பது இதனால் கூறப்பட்டது.

295. பண்டு மனம்பொருந்தப் பாஞ்சாலி மெய்புகன்று
கொண்டாள்சீர் என்னே குமரேசா — உண்டாம்
மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு
தானஞ்செய் வாரிற் றலை. (௫)

இ—ள்.

குமரேசா! பாஞ்சாலி மனம்பொருந்த மெய் சொல்லி என் அதனால் மாண்பு எய்தினாள் எனின், மனத்தொடு வாய்மை மொழியின், தவத்தொடு தானம் செய்வாரின் தலை என்க.

மனத்தொடு வாய்மை மொழியின்—உளம் பொருந்த உண்மையைச் சொல்லின். செய்வாரின் தலை—செய்பவரினும் சிறப்புடையன்.

மேல், பொய்யாதொழுகுவானை உலகம் போற்றுமென்றார்; இதில், அருந்தவரினும் பெருங்கொடையாளிகளினும் அவன், சிறந்தவன் என்றார். பொய் சொல்லாதவன் புகழும் அறமும் பொருந்தி விளங்குவான் என்பது கருத்து.

மனம் பொருந்த மெய்ம்மையை ஒருவன், சொல்லுவனாயின் அவன், தவமும் தானமும் ஒருங்கே செய்வாரினும் சிறந்தவனாவன் என்பதாம்.

வனம் புகுந்து தவம்புரிவாரினும், இல் இருந்து தானஞ்செய்வாரினும், மெய் சொல்வோரே மேலோர் என்றபடி.

பொறிகளை அடக்கியும், வருந்தி யீட்டிய பொருளை வரையாது கொடுத்தும் எய்துகின்ற பயனை மெய்ம்மையொன்றனே ஒருவன் எய்தலாம் என்பது குறிப்பு.

மனம் பொருந்த மெய் சொல்வோர் மாதவரினும் மாண்படைவர்என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை துரோபதையால் உணரப்படும்.

கதை.

துரோபதை என்பவள் பாஞ்சால தேசத்து அரசன் புதல்வி. அதனால் பாஞ்சாலி என்று பெயர் பெற்றாள். இவள் பாண்டவரை மணந்து அவரோடு வனம் புகுந்து வருந்தி வாழுங் காலத்தில் ஒருநாள் அமித்திர முனிவருக்கு உரியதும் அருமையுடையதும் இனியதுமாகிய விழுமிய நெல்லிக்கனி ஒன்றைக் கண்டு உண்ண விரும்பினாள். உடனே அருச்சுனன் அதனைக் கொய்து கொடுத்தான். தருமர் கண்டு அதனியல்பைத் தெரிந்து முனிவர், முனிவரே என்று கலங்கித் தம்பியருடன் கலந்து கண்ணனைக் கருதினார். உடனே கண்ணனும் வந்து உண்மையை உணர்ந்து அவரை உரிமையோடு நோக்கி நீங்கள் அறுவரும் உங்கள் உள்ளத்தில் உள்ளதை ஒளியாது மொழியவேண்டும் என்றார். தருமர் முதலிய ஐவரும் தம் மனத்தியல்பைத் தனித்தனி மொழிந்தார். அதன்பின் பாஞ்சாலி "அழகும் ஆண்மையும் வாய்ந்த கணவர் எனக்கு ஐவர் அமைந்திருந்தும் என்மனம் அமைதியின்றி இன்னும் ஒருவனை நாடுகின்றது; விழுமிய என் உள்ளமே இங்ஙனம் விழைபுயாயின் மற்ற மங்கையரை எங்ஙனம் நம்புவது" என்று மகளிரது உணர்தற்கரிய மன நிலையை யாவரும் உணருமாறு தன் நெஞ்சையே சான்று காட்டி உணர்த்தினான். உள்ளத்தின் இயல்பை உள்ளபடி சொல்லிய பாஞ்சாலியின் வாய்மையின் மாண்பினை யாவரும் புகழ்ந்தார். வீழ்ந்திருந்த பழம் எழுந்துபோய்ப் பொருந்திநின்றது. உற்றது சொன்னால் அற்றது

பொருந்தும் என்ற ஓர் உயர்மொழி அன்று உதித்தெழுந்தது. மனத்தொடு வாய்மை மொழிந்ததால் தவத்தொடு தானம்செய்வாரினும் பாஞ்சாலி தலைமையுடையளாய் விளங்கினாள்.

(விரிவைப் பாரதத்தில் காண்க.)

உவமந் தீர்த்திடு வாய்மையொன் றேயுறின் உலகிற்
றவமுந் தானமும் ஒருங்குறச் செய்தலிற் றலையாய்ப்
பவம கன்றுநான் மறைமுடி வாகிய பரம
சிவனரும்பதம் பெறும்படி யுயர்த்திடுந் தெரியின்.

(திருக்கூவப் புராணம்.)

தவஞ் செய்வாரினும் பொய் சொல்லாதவரே உயர்ந்தவர் என்பது இதனால் கூறப்பட்டது.

296. போத உதத்தியனேன் பொய்யாமை பூண்டதனால்
கோதிலறங் கொண்டான் குமரேசா—தீதகன்ற
பொய்யாமை யன்ன புகழில்லை யெய்யாமை
யெல்லா அறமுந் தரும். (௬)

இ.—ள்.

குமரேசா! உதத்தியன் என்பவன் பொய்யாமை ஒன்றானே எல்லா அறநலங்களையும் ஏன் ஒருங்கே எய்தினான் எனின், பொய்யாமை அன்ன புகழ் இல்லை; எய்யாமை எல்லா அறமும் தரும் என்க.

எய்யாமை என்பது, அறிதல், மெலிதல், இளைத்தல், என்பவற்றை உணர்த்திவரும் எய்த்தல் என்பதன் எதிர்மறை. இஃது இங்கு எச்சமாகி வருந்தாமல் என்னும் பொருளில் வந்தது. இனி, எய்யாமைஎன்பதற்கு அறியாமை ஒன்றே பொருள் என்று கொண்டு பொய்யாமையானது எல்லா அறங்களையும் தன்னையுடையானுக்குஎவரும் அறியாவகை தானே கொணர்ந்து கொடுக்கும் எனவும் இது பொருள் கொள்ளப்படும்.

எய்யாமையே அறியாமையே. என்றது தொல்காப்பியம்.

ஒருவனுக்குப் பொய்யாமையை ஒத்த புகழ் இல்லை; அவன் வருந்தாதபடி எல்லா அறங்களையும் அது தானே கொணர்ந்து அவனுக்குக் கொடுக்கும் என்பதாம்.

கொடை, வீரம், முதலியவற்றானும் புகழ் உண்டாம் னும் பொய் சொல்லாமையால் ஒருவனுக்கு எய்தும் புகழ் போல் அது சிறந்ததில்லை என்பார் "பொய்யாமை அன்ன புகழ் இல்லை" என்றார். புகழ் ஈண்டுக் காரிய ஆகு பெயராய்த் தான் தோன்றுதற்குரிய காரணத்தின்மேல் நின்றது. வள்ளல், வீரன், கல்வியாளன், எனப் பெயரெடுப்பதினும் பொய் சொல்லாதவன் என்று பெயர் பெறுவதே ஒருவனுக்குப் பெருஞ் சிறப்பாம் என்பது கருத்து.

பொய்யாமை, புகழையும் அறத்தையும் பொருந்தப் பயக்கும் என்றதனால் பொய்த்தல், பழியையும் பாவத்தையும் இழிவுடன் கொடுக்கும் என்பது பெற்றாம்.

மேல், வாய்மையுடையான் தானம் தவம் செய்வாரினும் மேன்மையுடையான் என்றார்; இதில், அவன் வருந்தாவண்ணம் எல்லாப் புகழறங்களையும் ஒருங்கே பொருந்தி இருமையினும் இன்பமெய்துவான் என்றார்.

பொய்யாமை ஒன்றானே எல்லா நலங்களையும் ஒருவன் பொருந்தி விளங்குவான் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை உதத்தியன்பால் உணரப்படும்.

கதை.

உதத்தியன் என்பவன் கோசல நாட்டிலிருந்த தேவதத்தன் என்னும் ஒரு வேதியன் புதல்வன். தாய் பெயர் உரோகிணி. பெற்றோர் கல்வி பயிலும்படி இளமைப் பருவத்தே ஓர் நல்லாசிரியன்பால் இவனை உய்த்தார். இவனுஞ் சென்று பயின்றான். வயது பன்னிரண்டாகியும் ஓரெழுத்தேனும் இவன் உணரிலன். கல்வியை வருந்தி முயன்றும் அது கைகூடா

மையால் இவன் கலங்கி நொந்தான். தாயும் தந்தையும் தம்முள்ளே வருந்தினர். அவர் காணுங் கோரம் இவன், நாணங்கொண்டான். கல்லா உடம்பினும் கல்லே நலமென்று சொல்லி வெறுத்து ஒருநாளிரவு மெல்ல எழுந்து இல்லைவிட்டகன்று வனமொன்றில் புகுந்து தனியே வாழ்ந்தான். எவ்வகையாயினும் பொய் சொல்லலாகாதென்று துணிந்திருந்தான். ஆண்டுகள் பல கழிந்தும் இவன் ஆண்டே தங்கினன். முனிவர் பலரும் இவன் இயல்பினை முற்றுந் தெளிந்து சத்திய விரதன் என்று இவனுக்கோர் தனிப் பெயரிட்டார். வேட்டையில் தப்பித் தன் முன்னே ஓடித் தன் குடிசையின் அயலிருக்கும் ஒரு புதரில் மறைந்த முள்ளம் பன்றியை ஆதலன் என்னும் வேடனொருவன் தேடி வந்தான். அடிச்சுவடு கண்டு இவனை அணுகிக் கேட்டான். உள்ளதைச் சொன்னால் அப் பன்றியை இவன் கொன்றேவிடுவான். சொல்லவில்லையானால் பொய்யனாய்ப் போவனே என் செய்வேன் என்று ஏங்கித் தன் நெஞ்சமுருகிக் கண்ணீர் சொரிந்தான். உடனே உலக மாதாவாகிய தேவி இவன் முன்னே தோன்றி "சத்திய விரத! நீ எண்ணிய எல்லாம் எண்ணியவாறே பெறுவாய்; அஞ்சற்க;" என்று அருள் செய்தகன்றாள். வேடனும் கேட்டு வியந்து நடுங்கினன் அதுமுதல் வேட்டஞ் செய்தலை விடுத்தான். சத்திய விரதனும் எல்லாக் கலைகளிலும் வல்லுநனாய்ப் பெருந் திருவெய்தித் தந்தை தாயரை அணுகி அன்பு செய்தொழுகி அரும் புகழ் படைத்து என்றுங் குன்றாத இன்பமெய்தினன். எல்லாப் புகழறங்களும் பொய்யாமையால் ஒருவன் எய்யாமல் எய்துவான் என்பதை உலகம் இவன்பால் உணர்ந்தது.

(இதன் விரிவைத் தேவிபாகவதத்தில் காண்க.)

பொய் சொல்லாதவனுக்கு எல்லா நலங்களும் ஒருங்கே உளவாம் என்பது இதனால் கூறப்பட்டது.

297. ஓரறமும் செய்யான் உயர்ந்தான்பொய் யாமையொன்றால்
கோரனென்பான் என்னே குமரேசா—சீருடைய
பொய்யாமை பொய்யாமை யாற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று. (எ)

இ.-

குமரேசா! கோரன் என்பவன் ஓர் அறமுஞ் செய்யாதிருந்தும் பொய்யாமை ஒன்றனே ஏன் எல்லா நலங்களையும் எய்தினான் எனின், பொய்யாமை பொய்யாமை ஆற்றின், பிற அறங்கள் செய்யாமை செய்யாமை நன்று என்க.

பொய்யாமை பொய்யாமை ஆற்றின்—பொய் சொல்லாமையையே பொய் சொல்லாமையையே ஒருவன் செய்ய வல்லனாயின்.

இடைவிடாதபடி மெய்யையே என்பார் இருமுறைகூறினார். அதனைக் கடைபோகக்காக்கும் அருமை கருதி ஆற்றின் என்றார்.

பொய் கூறாமை என்னும் நன்மையை ஒருவன் இடைவிடாது செய்து வருவானாயின் அவன், வேறு அறங்கள் செய்யவே வேண்டாம் என்பதாம்.

வருந்திச் செய்யவேண்டிய தானம், தவம், முதலிய பிற அறங்களின் பெரும் பயன்களெல்லாவற்றையும் பொய்யாமை ஒன்றே எய்யாமை எய்தாவிக்கும் ஆதலால் அதனையே செய்தல் நல்லது என்பார் "அறம்பிற செய்யாமை செய்யாமை நன்று" என்றார். அடுக்குகள் ஈரிடத்தும் உறுதியை உணர்த்திநின்றன.

இனி, பொய்யாமையைப் பொய்யாமல் ஆற்றின், பிற அறம் செய்யாமையைச் செய்யாமை நன்று எனவும் இது பொருள்படும். இதில், பொய்யாமல் எனபது வழுவாமல் என்பதையும், செய்யாமை செப்யாமை என்னும் இரண்டெதிர்மறையும் சேர்ந்து செய்தல் என ஓர் உடன்பாட்டையும், குறித்தன என்க.

பொய் சொல்லாமை என்னும் ஓர் அறத்தைத் தனக்கு உரிமையாகக் கொண்டவன் வேறு அறங்கள் யாதும் செய்யாவிடினும் அவற்றின் அரும் பயனைத்தும் அவன் ஒருங்கே அடைவான் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை கோரன்பால் தேறப்படும்.

கோரன் என்பவன் கொங்கு நாட்டிலே வல்லம் என்னும் ஊரிலே யிருந்தவன். களவு முதலிய இழிதொழில்கள் பலவுஞ் செய்து வாழ்ந்துவந்தான். வருங்கால கனிகர் என்னும் முனிவரொருவரைக்கண்டு இனிய மொழிகள் புகன்றான். அவர், இவன் மீது அருளுடையராகி இவனது தீய ஒழுக்கங்களைத் தெரிந்து இரங்கினார். தீவினைகள் துன்பத்தைப்பயக்கும் ஆதலால் அவற்றை ஒழிக என்று மொழிந்தார். இவனும் ஒன்றையும ஒழிக்கா தொழுகினான். களவு முதலிய யாவும் விடமுடியாது பொய்யைமாத்திரம்சொல்லாதிருப்பேன்என்று குருமுன உறுதிசொல்லினான். குரு இசைந்து சென்றார். பொய் கூறலாகாதென்ற அவ் ஒரே துணிவினால் அவன் பழகிவந்த இழிவினைகளெல்லாம் தாமே ஒழியலாயின. இவனது மனநலத்தையும் வாய்மையின் மாண்டையும் அந்நாட்டுச் சிற்றரசன் ஒருவன் தெரிந்து இவனைத் தனக்கு அமைச்சனாக்கிக்கொண்டான. இவனும் சிறந்த புகழும் நிறைந்த இன்பமுமெய்தி உயர்ந்து விளங்கினான். பொய் கூறாமை என்னும் புண்ணியத்தையுடைய ஒருவன், வேறு அறங்கள் செய்யாவிடினும் அவற்றின் பயனை அவன அடைவான் என்பதை உலகம் இவன்பால் உணர்ந்தது. இது கன்னமூலத்தில் காணப்படும்.

மெய்யே கூறுவோன் வேறோரறமுஞ் செய்யவேவேண்டாம் என்பது இதனால் கூறப்பட்டது.

298. மண்டு புகழ்ப்பாதன் மாசின்மை கண்டறிந்தார்
கொண்டமெய்யால் என்னே குமரேசா—கொண்ட
புறந்தூய்மை நீரான் அமையும் அகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும். (அ)

இ—ள்.

குமரேசா! பரதனது மனத் தூய்மை அவன் வாய்மையால் என தெளிந்தார் எனின், புறத் தூய்மை நீரான் அமையும்; அகத் தூய்மை வாய்மையால் காணப்படும் என்க.

புறம்—உடம்பு. அகம்—மனம். ஒருவனது உள்ளத்தின் தூய்மை அவன் சொல்லுகின்ற மெய்ம்மொழிகளானே உணரப்படும்; ஆதலால் "அகம் தூய்மை வாய்மையால் காணப்படும்" என்றார்.

புறத் தூய்மை நீரையின்றி அமையாது; அதுபோல் அகம் தூய்மை வாய்மையையின்றி அமையாதெனக. கருத்துப் பொருளை விளக்குதற்குக் காட்சிப் பொருளை எடுத்துக் காட்டினார்.

நீரால் உடம்பு புனிதமாம்; அதுபோல் வாய்மையால் மனம் புனிதமாம் என்பதாம்.

வெளிமாசு நீரானும், உள்மாசு மெய்ம்மையானும் ஒழியுமென்றமையாதலினால் இருவகைத் தூய்மையும் ஒருவன் எய்தவேண்டுமென்பது கருத்து.

ஒருவனது மனத்தின் தூய்மை அவன் மெய்ம்மொழியால் உணரலாம் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை பரதன்பால் உணரப்படும்.

கதை.

இராமபிரானுடைய அருமைத் தம்பியாகிய பரதன் உத்தம குணங்களுக்கெல்லாம் உறைவிடமானவன். உண்மைக்கு ஓர் உயிரென இருந்தவன். இராமன் வனம்புகுந்த காலத்தில் தொடர்ந்து பின்சென்று அரசை வந்து ஆளும்படி அண்ணனை வருந்தி அழைத்தான். பதினான்கு வருடங்கள் கழித்து வருவதாக அப்பெருமான் உறுதி கூறினான். குறித்த நாளில் வரவில்லையானால் யான் உயிர் துறப்பேன் என்று பரதன் உறுதி மொழிக்

தான். மறுகிமீண்டான். இரவிகுலத்துள்ளான் வாக்கிற் பொய்யான் வரும் வரும் என்று எதிர்நோக்கி நோக்கிப் பொறுமையிருந்தான். குறித்த எல்லையில் இராமன் வாராமையால் அன்று தான் முன் கூறியிருந்தபடி தன் ஆருயிரை அகற்றத் துணிந்தான். கோசலை முதலானவர் வந்து தடுத்தார். வாய்மை தப்பி வாழ்வதினும் மாள்வதே எனக்கு மாண்பு என்று சொல்லி நெருப்பில் விழச்சென்றான். அவ்வமையம் அனுமான் வந்து அதனை அவித்து இராமன் வரவை உணர்த்தினான். உடனே இராமன் வரக் கண்டு பெருங் களிப்போடு அவரது அடிகளில் தன் முடிபட விழுந்தான். அவரும் அணைத்து மகிழ்ந்தார் அரச இன்பத்தை விரும்பாமல் மெய்யினுக்காகத் தனது அழகிய மெய்யினையும் நீக்கத் துணிந்த பரதனது மாசற்ற தன்மையை வியந்தார். அகத் தூய்மை வாய்மையால் காணப்படும் என்பதை அனைவரும் அவன்பால் உணர்ந்தார் (விரிவை இராமாயணத்தில் காண்க.)

வாய்மையால் மனம் தூய்மையாம் என்பது இதனால் கூறப்பட்டது.

299. வென்றித் தசரதனுஞ் சத்யகாமன் மெய்யினையே
நன்றுமேற் கொண்டார் குமரேசா—நன்றாக
எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு. (௯)

இ.—ள்.

குமரேசா! தசரதன் சத்தியகாமன் என்னும் இருவரும் மெய்ம்மையைத் தம் உயிரினும் உயர்வாகக் கருதி ஏன் கைக்கொண்டார் எனின், எல்லா விளக்கும் விளக்கு அல்ல சான்றோர்க்குப் பொய்யாத விளக்கே விளக்காம் என்க.

நெய்விளக்கு, மணிவிளக்கு, கற்பூர விளக்கு முதலிய விளக்குகள் பலவுள்ளமையின் "எல்லா விளக்கும்" என்றார்.

பொய்யாத என்னும் எதிர்மறைப் பெயரெச்சம் ஈறுகெட்டுப் பொய்யா என நின்றது.

பொய்யா விளக்கு—பொய் கூறாமையாகிய விளக்கு.

எல்லா விளக்குகளும் விளக்காகா; [illegible] நிறைந்தோர்க்குப் பொய்யாமையாகிய விளக்கே விளக்காம் என்பதாம்.

மேல், வாய்மையை நீராக உவமித்தார், இதில், அதனை நெருப்பாக உருவகித்தார். விளக்கு உலகப் பொருள்களை விளக்கும்; மெய்ம்மை பரம்பொருளை விளக்கும்; ஆதலால் அவ்வுரிமை தோன்ற இதில், அவற்றைப் பொருந்த வைத்தார்.

சூரியன், சந்திரன், தீ என்னும் பேரொளிகளும் இயன்ற அளவிலமைந்து விளங்கும் எல்லா விளக்குகளும் புறத்திருளை மாத்திரம் நீக்கி உலகப் பொருள்களைத் தோன்றச்செய்யும், பொய்யாமை அகத்திருளை நீக்கி, அறிதற்கரிய அவ் ஒரு பொருளையும் அறியும்படி செய்யும் ஆதலால் அவ் எல்லாவற்றினும் இம்மெய் விளக்கையே உயர்வாகக்கருதி அறிவோர் உரிமையாக்கொள்ளவேண்டுமென்பது கருத்து. வாய்மை தூய்மைக்கும், அது பரனருள் அடைதற்கும் ஏதுவாம் என்க.

பொய்யாமையுடையவரே பொன்றாத புகழைப் பொருந்தி விளங்குவர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை தசரதன்கண்ணும் சத்தியகாமன்பாலும் காணப்படும்.

கதை.

மெய்ம்மையைக் கடைபோகக் காத்தவருள் தசரதர் தலைநின்றவர். தான் சொல்லியிருந்த ஒரு சொல்லை மறுத்தற்கு நாணிக் கண்ணினும் உயிரினும் சிறந்த [illegible] எண்ணரிய [illegible] தன் தலைமகனைப் பிரிந்தார். உண்மைக்காகத் தமது அரிய உயிரையுந் துறந்தார். பொய்யாமையை யாண்டும் இவர் பொய்யாமற் செய்த அருஞ் செயல்களை இராம கதையில் பல இடங்களினும் காணலாம். மெய்ம்மையும் மரபுங் காத்து மன்னுயிர் துறந்த வள்ளற்றூயவன் எனவும், கைத்த சொல்லால் உயிரிழந்தும் புதல்வர்ப் பிரிந்தும் கடையோடு மெய்த்த வேந்தன் எனவும், மெய்யினுக்கு

இன்னுயிரீந்துபோய் வானுளெய்திய மன்னவன் எனவும், பொய்ப் பகையே மெய்க்கு அணியே புகழின் வாழ்வே எனவும், வாய்மை மாண்பால் இவர் வாழ்த்தப் பெறுவார். விரிவை இராமாயணத்தில் தெளிக.

கதை 2.

சத்திய காமன் என்பவன் சாவாலி என்னும் ஓர் முனிவன் புதல்வன். மெய்ம்மையையே என்றும் விரும்பி நின்றானாதலால் இப்பெயர் அவனுக்குக் காரணந்தான் வந்தது.

பொய்மையே பாவமெல்லாம் விளைதரு பூமியாகும்
பொய்மையே பிறவியெல்லாம் புகப்புரி வித்துமாகும்
பொய்மையே வறுமையெல்லாம் போதரப் புரிவதாகும்
பொய்மையே நரகமெல்லாம் புகுதரப் புகுத்தாநிற்கும்.

என்னும் உண்மையை இனிது தெளிந்து அதனை யாண்டுந் தீண்டாது அருந்தவம் பூண்டவன். வாய்மையின் வழுவாத அவனது தூய்மையை அமரரும் முனிவரும் அகமகிழ்ந்து புகழ்ந்தார். இங்குக் குறித்த இருவரும் பொய்யாமையைப் பொய்யாமல் ஆற்றி அதனால் என்றும் பொன்றாத புகழினை யெய்தினர். சான்றோர்க்குப் பொய்யா விளக்கே விளக்கு என்பதை உலகம் இவர்பால் பொருந்தக் கண்டது.

மெய்ம்மை ஒன்றே மேலோர்க்கு விளக்கு என்பது இதனால் கூறப்பட்டது.

---

300. மாறில் சகாதேவன் வாய்மையினை யன்னையென்று
கூறினான் என்னே குமரேசா—தேறிநின்று
யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை யெனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற. (ம)

[illegible]

குமரேசா! சகாதேவன் வாய்மையே தனக்குத் தாய் என்று ஏன் கூறினான் எனின், யாம் மெய்யாக் கண்டவற்றுள் எனைத்தொன்றும் வாய்மையின் நல்ல பிற இல்லை என்க.

யாம் மெய்யாக் கண்டவற்றுள்—யாம் உண்மையாகக் கண்டவற்றுள். வேதம் முதலிய எல்லா நூல்களினும் வாய்மை ஒன்றே தலைமையாக நிலவுகின்றதென்பதும், அதனின் மிக்க நன்மை யாண்டும் இல்லை என்பதும் கூறுவார் "யாம் கண்டவற்றுள் வாய்மையின் நல்ல பிற இல்லை" என்றார். "யாம்" என்று தாமே சான்றாய் நின்று உண்மையின் தலைமையை உணர்த்திய தேவரது தெளிவையும் தகவையும் இதில் ஊன்றி உணர்க.

யாம், உண்மையாகக் கண்ட அறங்களுள் எவ்வகையானும் வாய்மைபோல மேன்மை வாய்ந்தது வேறு எதுவும் இல்லை என்பதாம்.

வாய்மையே எல்லா நலங்களுக்கும் தாய்மையாயுள்ளது என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை சகாதேவன்பால் உணரப்படும்.

கதை.

சகாதேவன் தன் உள்ளத்தியல்பைக் கண்ணன்பால் உரைக்கும்பொழுது வாய்மையைத் தாயாகவும், தத்துவவுணர்வைத் தந்தையாகவும், தருமத்தைத் துணைவனாகவும், கருணையைத் தோழனாகவும், அமைதியை மனைவியாகவும், பொறுமையை மகனாகவும், தான் கருதியிருப்பதாகத் தெரியவுணர்த்தினான். மற்றெல்லாரினும் தாய் எப்படி மக்களுக்குச் சிறந்தவளோ அப்படியே மற்றெல்லா அறங்களினும் வாய்மையே சிறந்ததென்று மதித்து அதனைப்போற்றி ஒழுகினான். அதனால் சகாதேவன் புகழும் அறமும் பொருந்தி விளங்கினான். இதனைப் பாரதத்தில் தெளிக.

மெய்ம்மையே எல்லா அறங்களினும் மேலானது என்பது இதனால் கூறப்பட்டது.

வாய்மை யென்னுமீ தன்றி வையகம்
தூய்மை யென்றுமொன் றுண்மை சொல்லுமோ?
தீய்மை தானதிற் றீர்த லன்றியே
யாய் மெய் யாகவே றறைய லாவதே. (இராமாயணம்)

பொய்யின் நீங்குமின் பொய்யின்மை பூண்டுகொண்
டையமின்றி அறநெறி ஆற்றுமின்
வைகல் மேவத்தனை வைகலு மொன்றின்றிக்
கவ்வை யில்லுல கெய்துதல் கண்டதே. (வளையாபதி)

இவ்வதிகாரத்தின் தொகைப் பொருள்.

வாய்மை என்பது தீமையில்லாத சொற்களைச் சொல்லுதலே யாம். பொய்ம்மையாயினும் புரைதீர்ந்த நன்மை பயக்குமாயின் அது மெய்ம்மையாம். ஒருவன் பொய்கூறின் அவன் உள்ளமே அவனைச் சுடும். பொய்கூறாத ஒருவனை உலகத்தாரெல்லாரும் தம் உள்ளத்தில் வைத்துப் போற்றுவர். வாய்மையே சொல்பவன் தவந்தானங்கள் செய்வாரினும் உயர்ந்தவனாவான். புகழறங்களெல்லாம் பொய்யாமையானே எய்யாமல் உளவாம். பொய்சொல்லாதவன், எல்லா அறங்களையும் எய்தி மகிழ்வான். வாய்மையானே எவர்க்கும் மனத்தூய்மையுண்டாம். மெய்ம்மை யொன்றே மேலோர்க்கு விளக்காம். எல்லா அறங்களினும் வாய்மையே சிறந்தது என்பனவாம்.

௩௰-வது வாய்மை முற்றிற்று.

௩௧-ம் அதிகாரம் வெகுளாமை.

அஃதாவது சினத்தைச் செய்யாமை. அறிவைக்குலைத்துப் பழிபாவங்களை விளைத்துத் தன்னையுடையானுக்கு அழிவையே கொடுக்கும் இவ் இழிகுணம் களவும் பொய்யும்போல் அறவே விலக்குதற்கு உரியதாகலின், கள்ளாமை பொய்யாமைகளின்பின் வைக்கப்பட்டது.

[தைக்
301. தென்னுபுகழ் அல்லமனார் செல்லிடத்தும் வெஞ்சினத்
கொள்ளாத தென்னே குமரேசா—தள்ளாமற்
செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக்
காக்கினென் காவாக்கா லென். (௧)

இ—ள்.

குமரேசா! அல்லமனார் தன் சினம் செல்லும் இடத்தும் ஏன் அதனைக் கொள்ளாதிருந்தார் எனின், செல் இடத்துங் காப்பானே சினம் காப்பான்; அல் இடத்துக் காக்கின் என் காவாக்கால் என் என்க. செல் இடத்து—பலிக்கும் இடத்து.

சினம்காப்பான் காப்பான்—வெகுளியைக் காப்பவனே காப்பவனாவான். அல் இடம் என்றது சினம் செல்லுதற்கு இயலாத இடத்தை. தன் சினம் பலிக்கும் இடத்தில் அதனைத் தடுப்பவனே அறிவால் திருந்தியவனாவான்; ஏனைப் பலியாத இடத்தில் அதனைத் தடுத்தலென்? விடுத்தாலென்? என்பதாம். வினாக்கள் அடக்குதல், விடுத்தல்களால் யாதும் பயனில்லை என்பதை விளக்கி நின்றன.

ஒருவனுடைய சினம், தன்னினும் மெலியார்பாற் சென்றே நலிவு செய்யுமாதலால் அதனைச் செல் இடம் என்றும், மற்றை வலியார்கண் அது பலியாதாதலால் அதனை அல் இடம் என்றும் கூறினார். செல்லும் கோபம், செல்லாக் கோபம் என இட வகையாற் சினம் இரு வகைப்படும் என்க.

மெலியவர் மேற்செல்லும் தனது வலிய கோபமே கொடுந் தீமைக்கு ஏதுவாகுமாதலால் அதனை அறவே ஒருவன் ஒழிக்க வேண்டுமென்பது கருத்து.

தன் கோபம் செல்ல வல்ல இடத்தும் அதனைச் செலுத்தாது அடக்கினவனே அறிவால் சிறந்தவன் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை அல்லமா பால் அறியப்படும்.

கதை.

அல்லமர் என்பவர் வள்ளிகாவை என்னுந் திரு நகரிலே இறைவன் கலையாய் அவதரித்தவர். தாய் பெயர் சுஞ்ஞானி. தந்தை பெயர் நிராங்காரன். அவ் இருவரும் செய்த அருந் தவப் பயனால் அவர்க்குப் புதல்வராய்த் தோன்றினர். ஆருயிர்க்

செல்லார் தலைவராய் நின்று அருள்புரிந்தொழுகினார். இவர் இளமைப் பருவத்தே யூ[illegible] பலவேறிடங்கட்குஞ் சென்று நல்ல நீதிகளையுந் தெளிந்து எல்லாரும் நன்மையெய்துமாறு நயந்து கூறி அருந்தவக்கொள்கையில் திருந்தி விளங்கினார். காமம் வெகுளி முதலிய இழிகுணங்கள் சிறிதுமில்லாத பெரியவராகிய இவர், ஒருநாள் சித்தராமர் என்னும் கருமயோகியைக் காணவிரும்பி அவர் திருநகருட் புகுந்தார். அங்கோர் குளத்தைத் தோண்டிக்கொண்டிருந்த அவருடைய பணியாளராகிய சில ஒட்டரைக்கண்டு "தலைமையில்லாத உங்கள் தலைவன் எங்குள்ளான" என்று தம் தலைமை தோன்றக்கேட்டார். இதனைக் கேட்டவுடனே ஒட்டர்கள் கிளர்ந்து சினந்தார். தொட்டதை விடுத்து அவர் கிட்டவந்தார். வைது தெளித்தார். அல்லமரை வளைந்து கொதித்தார். சிலர் கட்டுமின் என்று கடுத்தார். சிலர் வெட்டுமின் என்று விரைந்தார். இனனுஞ் சிலர் எறிமின் எய்யுமின் என்று எழுந்தார். பினனுஞ்சிலர் குட்டுமின் கொல்லுமின் என்று குவிந்தார். வேறு சிலர் அவரது வெண்பல்லைத் தட்டுமின் எனறார். இங்ஙனம் வாய்கொண்டமட்டும் வைததோடமையாது அப்பொல்லாத ஒட்டர் நம அல்லமர்மேல் கல்லும் எறிந்தார். தம் ஒரு சொல்லால் அவ்வனைவரையும் ஒருநொடியில் ஒருங்கே சுடவல்ல தவ வலியுடையராயிருந்தும சிறிதும் வெகுளாமல் அக்கொடியவர் எறிந்த கற்களின் குவியன்மேல் தம் தவமாண்பால் ஊறு ஒரு சிறிதுமின்றி உவந்து நின்றார். அவ்வெய்யவரனைவரும அஞ்சி நடுங்கி அகன்று ஓடினார். செல் இடத்தும தம் சினத்தைச் செலுத்தாமல் காத்த அல்லமரை எல்லாரும் போற்றினார். (இதன் விரிவை பிரபுலிங்க லீலையில் காண்க.)

கொடியவ ரெறிந்தகல் குவியக் குன்றென
முடிமிசை நின்றனன் முத்தன் அல்லமன்
புடவியின் உடனிழல் புதைப்ப அந்நிழல்
கடிதினின் மீமிசை காணுந் தன்மைபோல்

இதனான் மேற்குறித்த வுண்மை இனிது புலனாதல் காண்க.

வலியவனிடத்தும் ஒத்தான் மாட்டினும் வெகுளிகாத்தல்
யாவிடத்துஞ்செய அறமாகுமெனப் பொருந்தாது தணியர்தம்பால்
கலியுறு வெகுளிசெலாக் காத்தலைச் சமயமோரு
மெலியவனிடத்திற் காக்கும் வெகுளியே அறமதென்பார்.

மெலியவர் மீது வெகுளாதவரே மேலோர் என்பது இதனால் கூறப்பட்டது.

302. செல்லாச் சினந்தீர்ந்தார் செல்லிடத்துங் கோசிகரேன்
சொல்லுதலை செய்தார் குமரேசா—பல்விதத்தும்
செல்லா இடத்துச் சினந்தீது செல்லிடத்தும்
இல்லதனிற் றீய பிற. (உ)

இ—ள்.

குமரேசா! கோசிகர் தம்சினம் செல்லாத இடத்தில் இழிவுற்றார்; செல்லும் இடத்தும் ஏன் கொலைப்பாவத்தை எய்தினார் எனின், சினம் செல்லாத இடத்துத் தனக்கே தீதாம், செல்லும் இடத்தும் அதனின் தீய பிற இல்லை என்க.

எளியவரை வெகுளின் அளவில்லாத தீமைகள் உளவாம் என்பார் "செல்லிடத்தும் அதனின் தீய பிற இல்" என்றார்.

அதனின் தீயபிறஇல்—அச்சினத்தினும் தீயன வேறு இல்லை.

ஒருவன் சினம், தன்னினும் வலியார்பால் பலியாதாதலால் அதனைச் செல்லா இடம் என்றும், மெலியார்பால் பலிக்கும் ஆதலால் அதனைச் செல்லும் இடம் என்றும் கூறினார்.

ஒருவன் சினம் வலியார் மாட்டு எழின் தனக்கே தீதாம்; ஏனை மெலியார்மேற் செல்லின் அதனினும் பெருங்கேடு உண்டாம் என்பதாம்.

"வலியார்மேல் ஒருவன் சினங்கொள்ளின் கன்மேலடித்த கழி போல் தானே கெடுவான், ஏனை மெலியார் மேலெனின் அவர்

வலிய அரசனால்தான் பழியும் பாவமும் எய்தி இழிவான் ஆதலால் ஈரிடத்தும் சினம் தீதே பயக்கும் என்பது கருத்து.

இவ்வுண்மை விசுவாமித்திரர்பால் உணரப்படும்.

கதை.

விசுவாமித்திரர், வசிட்டர்மேற் சினந்து வல்லமர் புரிந்தார். அவ் வமரில், தமது உடல் வலியும், படை வலியும், பிற வலியும் தொலைந்து தம் அருமைப் புதல்வரனைவரையும் இழந்தார். மறுபடியும் மாதவம் புரிந்து மாண்பெய்தினார். அதன் பின்னரும் அரிச்சந்திரன் பொருட்டு அவரோடு மாறுபட்டுத் தம் தவத்தில் பாதியிழந்து பழிப்பும் எய்தினார். ஒருவன் சினம் தன்னினும் வலியார்மேல் எழின், அதனால் தனக்கே கேடு வருமென்பதை இவர் உணர்ந்து வருந்தினார். செல்லாத இடத்துச் சினம் தீதாமென்பதை முனிவர்சிலரும் இவர்பால் தெளியலாயினார். திரிசங்குவின்பொருட்டுத் தாம் செய்யவிரும்பிய வேள்வியை அவமதித்த வசிட்டருடைய மக்களை வேடர்களாகச் சபித்தார். தம்சொல்லை மறுத்த தம்முடைய புதல்வர்களையும் சினந்தார். அதனால் அவரும் புலையராகி யிழிந்தார். தம்மை விரும்பிய அரம்பையர் சிலரை அருங்கற்களாக்கினார். பாவி, மகேந்திரன் என்னும் அரசர் சேனையைச் சினந்துச் சாம்பராக்கினார். இவரது வெகுளித்தீயால் அழிந்தும், இழிந்தும் அல்லல் எய்தினார் பலர். அதனால் இவர் தமது தவமும் குன்றிப் பழியும் அடைந்தார். பின்பு சினமகன்று தவம்புரிந்தே சிறந்து விளங்கினார். செல்லா இடத்தும் செல்லும் இடத்தும் சினம் தீதேதரும் என்பதை உலகம் இவர்பால் உணர்ந்தது. (இதன் விரிவை இராமாயணமுதலிய நூல்களிற் காண்க.)

பெரியவர் தம்மைக்காய்ந்தான் பிறங்கல்கல்லிய நோலாப்பான்
புரிவன புரியப்பட்டுப் புலம்புவன் ஒத்தார்க் காய்ந்தான்
எரிநரகதனில் வீழ்வன் இழிந்தவர்க் காய்ந்தானென்றால்
ஒருவர்தம் இடத்தும் சீற்றம் உறாமையே நன்றுமாதோ.
(பிரபுலிங்கலீலை.)

பிறங்கல்—மலை.

செல்லும் இடம், செல்லாத இடம் என்னும் ஈரிடத்தும் சினம் தீதே பயக்கும் என்பது இதனால் கூறப்பட்டது.

303. தள்ளா வெகுளியினைச் சாந்தலிங்கர் யார்மாட்டும்
கொள்ளாத தென்னே குமரேசா—தள்ளி
மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய
பிறத்தல் அதனான் வரும். (௩)

இ—ள்.

குமரேசா! சாந்தலிங்கர் யாவர்மாட்டும் வெகுளியைக் கொள்ளாதது என்னே எனின், யார்மாட்டும் வெகுளியை மறத்தல் வேண்டும்; தீய பிறத்தல் அதனான் வரும் ஆதலால் என்க.

யார்மாட்டும் வெகுளியை மறத்தல்—யாவரிடமும் வெகுளியை ஒழிக. மறத்தல் என்பது ஈண்டு உடன்பாட்டு வியங்கோளாகி மறக்க என்னும் பொருள் மேல் நின்றது. வெகுளி என்பது மனத்தில் தோன்றும் ஓர் இழிகுணமாதலால் அதில் அது தோன்றுவண்ணம் ஒழிக்கவேண்டு மென்பார் "வெகுளியை மறத்தல்" என்றார். எல்லாப் பழிபாவங்களையும் வெகுளி விளைக்கும் ஆகலால் "தீயபிறத்தல் அதனான் வரும்" என்றார். வெகுளியே தீமைக்குக் காரணம் என்பது குறிப்பு.

எல்லாத் தீமைகளும் வெகுளி ஒன்றானே உளவாம், ஆதலால் யாவரிடமும் அதனை ஒருவன் செய்யலாகாதென்பதாம்.

எளியவர் வலியவர் என்னும் இருவர்மாட்டும் வெகுளலாகா தென்று மேலே கூறினார்; இதில், உலகிலுள்ள யாவர்மாட்டும் அதனைச் செய்யலாகாதென்றார்.

உயர்ந்தவர், தாழ்ந்தவர், ஒத்தவர், என்னும் முத்திறத்தார் மாட்டும் எத்திறத்தானும் ஒருவன் வெகுளலாகாதென்பதுகருத்து

அறிவுடையவர் யாவர்மாட்டும் வெகுளார் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை சாந்தலிங்கர்பால் உணரப்படும்.

கதை.

சாந்தலிங்க சுவாமிகள் என்பவர் இற்றைக்கு முந்நூறு ஆண்டுகட்கு முன்னர்க் கொங்கு நாட்டிலேயிருந்தவர். சிறந்த வீர சைவர். அடக்கம் பொறை அருள் முதலிய உயர் குணங்களெல்லாம் ஒருங்கே அமையப்பெற்றவர். பலநூற் புலமையும் விழுமிய இனிய செஞ்சொற்களால் அழகிய கவிகள் பாடும் தலைமையும் இவர்பால் அமைந்திருந்தன. ஞானம்பிகை என்னும் ஓர் உத்தமியை மணந்து இல்லறத்திலிருந்து சிலகாலம் வாழ்ந்து பின் துறவியாயினார். சிவஞான தேவர் என்னும் பெரியார் ஒருவர்பால் அருளுபதேசம் பெற்றார். புறமும் அகமும் புனிதமுடையராய் எவ்வுயிர்கட்கும் இனியராய் விளங்கினார். ஆருயிர்மாட்டுப் பேரருளுடையவர். அருந்தவக் கொள்கையில் திருந்திய தன்மையர். இவர் சமாதியிலிருந்து வெளிவருங்கால் எவரை நோக்கினும் அவர்தம் புன்மை நீங்கி மெய்யுணர்வுடையராய் மேலான நன்மை எய்துவரென்பர். வெகுளியை எவரிடமும் எனைத்துங் கொள்ளாது சாந்த சீலராயிருந்தமையால் இவரைச் சாந்தலிங்கர் என்று உலகம் ஏத்தி நின்றது. பெரியவரொருவர் ஒருநாள் இவர்பால் வந்து "வசிட்டர் விசுவாமித்திரர் துருவாசர் முதலிய அருந்தவர்களும் ஏன் வெகுளியைப் பொருந்தி நின்றார்கள்" என்று வினவினார். சுவாமிகள் "தாம் செய்த வினைப்பயன்களை இறைவன் அருவமாய் நின்று உயிர்களை முன்னிலையாக்கொண்டு ஊட்டுகின்றான் என்று தெளிந்திருந்தும் அவர்கள் வெகுளி கொள்ளுவது என்ன காரணமோ யான் அறியேன்" என்று புன்னகைசெய்தார். கொலைமறுத்தல், வைராக்கியசதகம், வைராக்கிய தீபம், அவிரோதவுந்தியார், என்னும் நான்கு விழுமிய நூல்கள் இவரால் செய்யப்பட்டுள்ளன. கோயம்புத்தூருக்கு மேல்பாலுள்ள பேரூர் என்னும் திருநகரில் இவர் சமாதியாயினார். இவர் பெயரால் அங்கு மடம் ஒன்று இன்றும் சிறந்து விளங்கிவருகின்றது. பார்மாட்டும் வெகுளியை மறத்தலே அறவோர்க்கழகு என்பதை உலகம் இவர்பாலுணர்ந்தது.

வெகுளியை ஒருவரிடமும் கொள்ளலாகாதென்பது இதனால் கூறப்பட்டது.

---

304. தீதுபகை யேதுமில்லாச் சித்தரா மன்சினத்தாற்
கோதடைந்தான் என்னே குமரேசா—போதும்
நகையும் உவகையுங் கொல்லுஞ் சினத்திற்
பகையும் உளவோ பிற. (௪)

குமரேசா! பகை ஏதும் இல்லாத சித்தராமன் ஏன் சினத்தால் தீதுற்றான் எனின், நகையையும் உவகையையும் கொல்லுகின்ற சினத்தினும் பகை பிற உளவோ என்க.

நகை—முகமலர்ச்சி. உவகை—மனமகிழ்ச்சி.

சினத்தின் பிற பகையும் உளவோ—சினத்தைப்போல வேறு பகைகளும் உளவோ. இல்லைஎன்பதை ஓகாரம் உணர்த்தி நின்றது.

முகமலர்ச்சியையும், மனமகிழ்ச்சியையும் அழித்தெழுகின்ற சினத்தைப்போலத் தீயபகை ஒருவனுக்கு வேறு யாதும் இல்லை என்பதாம்.

சினம் கோன்றுங்கால் அகம் புறம் என்னும் ஈரிடத்தும் அமைந்துள்ள இனிய இயல்புகளை அறவே அழிக்கும் ஆதலால் சினம், நகையும் உவகையுங் கொல்லும் என்றார். பொறாமை, அறியாமை முதலியவற்றால் புறத்தேயிருந்து துயர்விளைக்கும் பகைவரினும உள் இருந்தே தன் உணர்வின்பங்களை அழிக்கும் வெகுளியே ஒருவனுக்குக் கொடும்பகை என்பது கருத்து.

பகைவரைப் பகைவரென்று வெகுளற்க; அவ் வெகுளியே உனக்குப் பெரும் பகை என்றபடி. புறப்பகைவரினும் அகப்பகையாகிய வெகுளியே தனக்குப் பெருங் கேடு விளைக்கும் ஆதலால் அதனையே ஒருவன் அறிவால் அடக்கவேண்டுமென்பது குறிப்பு.

வெகுளியை ஒருவன் அடக்காவிடின், அதனால் அவனுக்கு இழிவும் துன்பமும் உளவாம என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை சித்தராமனால் உணரப்படும்.

கதை.

சித்தராமன் என்பவர் கருநாட தேசத்திலுள்ள சொன்னலாபுரம் என்னும் நகரில் இருந்தவர். திருவும் அறிவும் சேரப் பெற்றவர். சிறந்த வீரசைவர். சித்திகள் செய்து சிறப்புப்பெற்றவர். பல நூல்களையும் பயின்று தெளிந்தவர். தாம் செய்கின்ற நற்கருமங்களே பரமுத்திக்குக் காரணம் என்று கருதி யெப்பொழுதும் அவற்றையே போற்றிவந்தார். தத்துவ ஞானமே முத்திக்கு ஏதுவென்று உணராதிருந்தும இவரது மன நலத்தை உணர்ந்து உண்மையை இவர்க்கு உணர்த்த விரும்பி அல்லமதேவர் என்னும் அருள்வள்ளல் ஒருநாள் இவர்பால் வந்தார். சரியை, கிரியை, யோகம், என்பன ஞானம உண்டாதற்கு ஏதுவேயாகும். இதனை யுணராது கதியென அவற்றையே கருது[illegible]மென்று இவரது அமைதியை அறிய அல்லமர் அருளினார். இதனைக் கேட்டவுடனே சித்தராமர் சித்தங் கொதித்தார், தவத்திற் பெரியராய நம்மை அவமதித்தாரே என்று கருதியும், தம் பணியாளர்களாகிய ஒட்டர்கள் உரைத்ததையறிந்தும் அவர்மேல் இவர் பெருஞ் சினங்கொண்டு தமது யோக மகிமையால் ஒரு பெரு நெருப்பை அவர்மேல் ஏவினார். அத் தீ அல்லமரை ஒன்றுஞ் செய்யாமல் சித்தராமரது நகரத்தையே பற்றி யெரித்தது. இவர் அஞ்சி நடுங்கி அவர் அடியில் வீழ்ந்தார். அதன்பின் அவர் அருள்செய்தகன்றார். தன் சினத்தால் தானடைந்த துன்பத்தை நினைந்து கவன்று பின் அதனைத் துறந்து விளங்கினார். விரிவைப் பிரபுலிங்க லீலையில் காண்க.

தன் சினமே ஒருவனுக்குக் கொடும் பகையாம் என்பது இதனால் கூறப்பட்டது.

305 மிண்டோன் இரணியன்றன் சேய்மேற் சினந்ததனால்
கொண்டான் அழிவென் குமரேசா—கொண்டாடும்
தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம். (௫)

இ—ள்.

குமரேசா! இரணியன் தன் மகன்மேற் சினந்ததனால் ஏன் அழிந்தான் எனின், தன்னைத்தான் காக்கின் சினம் காக்க; காவாக்கால் சினம் தன்னையே கொல்லும் என்க.

தன்னைத்தான் காக்கின்—தன்னைத் துன்பம் அடையாவண்ணம் ஒருவன் காக்கவிரும்பின். சினம் காக்க—சினத்தை மனத்திலெழாவண்ணம் தடுத்து நீக்குக.

துன்பம் யாதொன்றும் தன்னை அடையாதிருக்குமாறு ஒருவன் விரும்புவனாயின், அவன் வெகுளியைக் கொள்ளலாகாது கொள்ளின் அஃது அவனையே கொன்றுவிடும் என்பதாம்.

வெகுளியால் துன்பமே விளையுமென்பது கருத்து.

வெகுளி, தன்னையுடையானது அறிவைக் கெடுத்துப் பழி பாவங்களை விளைத்து இருமையினும் அவனுக்குப் பெருந் துன்பத்தை நல்கும் என்பார் "சினம் தன்னையே கொல்லும்" என்றார்.

ஒருவன் வெகுளி அவனது முகமலர்ச்சியையும், மனமகிழ்ச்சியையும் கொல்லும் என்று மேலே கூறினார்; இதில், அவனையே அது கொன்றுவிடும் என்றார்.

இன்பத்தைக் கொள்ள விரும்புவோன் கோபத்தைக் கொள்ளலாகாதென்பது குறிப்பு.

வெகுளி தன்னையுடையானுக்கு அழிவையே விளைவிக்குமென்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை இரணியன் பால் உணரப்படும்.

கதை.

இரணியன் என்பவன் திதியிடம் தோன்றிய அசுரகுலத் தோன்றல். பொன்னிறமுள்ளவனாதலால் இப்பெயர் இவனுக்கு இடப்பட்டது. இரணியம்—பொன். எல்லா அண்டங்களையும் தனக்கே உரிமையாக்கொண்டு அரசுபுரிந்தவன். ஒப்பற்ற உடல் வலியுடையவன். ஆண்மையில், திண்மையில், எவருந் தனக்கு நிகரில்லாதவன். யாண்டும் எவராலும் எவற்றாலும் எவ்வகையாலும் இறவாவண்ணம் உயர்வரம் பெற்றவன். உயிர்களெல்லாம் தன் பெயரையே சொல்லித் துதித்து வாழும்படி ஆணை செலுத்தினான். இவன், கயாதி என்னும் பேரழகுவாய்ந்த ஒரு மாதை மணந்து ஹ்லாதன், சம்ஹ்லாதன், அநுஹ்லாதன், பிரஹலாதன் என நான்கு புதல்வர்களையும் சிம்ஹி என்னும் ஒரு புதல்வியையும் பெற்றான். எல்லா நலங்களையும் ஒருங்கே எய்திப் பெரு மகிழ்வோடு இவன் பேரரசு புரிந்து வருங் கால் தன் புதல்வனான பிரஹலாதன் வேதம் ஓதப்புகுந்து முதலில் மாலின் பெயரையே மாலற ஓதினான். அதனால் அவன்மேல் இவன் கோதித்தான். அம்மாயன் எங்குள்ளான் என்று சினந்தான். எங்கும் உள்ளான் என்று அவ் இளைஞன் இசைத்தான். அவனை இங்குக் காட்டுக; இல்லையானால் உன்னைக் கொல்வேன் என்று சினந்து அடுத்திருந்த ஒரு கம்பத்தில் தன் அடலுறுகையால் பொடிபட அடித்தான். அதிலிருந்து அரி, நரசிங்கமாய்த் தோன்றி இவனைக்கொன்று தொலைத்தார். சினத்தை ஒருவன் காவாக்கால் அஃது அவனையே கொல்லும் என்பதை உலகம் இவன்பால் உணர்ந்தது. இதன் விரிவு இராமாயணத்தில் இரணியன் வதைப் படலத்தில் இனிது காணப்படும்.

சினம், தன்னைக் கொண்டவனையே கொல்லும் என்பது இதனால் கூறப்பட்

306. வெற்றித் திரிசங்கன் வெஞ்சினத்தால் தன்குருவைக்
குற்றமுறத் தீர்ந்தார் குமரேசா—உற்ற
சினமெனும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும். (சு)

இ—ள்.

குமரேசா! திரிசங்கு மன்னன் தன் குருவையும் ஏன் சினத்தால் பிரிந்தான் எனின், சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி, இனம் என்னும் ஏமப் புணையைச் சுடும் என்க.

புணை—மரக்கலம். சேர்ந்தாரைக்கொல்லி என்றது நெருப்பினை. தன்னை அடுத்தவற்றை அழிப்பது என்னும் காரணம் பற்றி இதற்கு அப்பெயர் இடப்பட்டது. இனம் என்றது தனக்கு உறுதியை உணர்த்தும் உற்றார் முதலிய நல்லினத்தை.

இனம் என்னும் ஏமப் புணையைச் சுடும்—இனம் என்று சொல்லப்படுகின்ற இனிய மரக்கலத்தையும் சிதைக்கும். இறந்தது தழுவிய எச்சவும்மை இதில் தொக்குநின்றது.

நெருப்புத் தன்னைச் சேர்ந்த பொருளை மாத்திரம் எரித்துத் தொலைக்கும், சினம் சேர்ந்தாரையும் சேராதாரையும் சேர அழிக்கும். ஆகலால் அதனினும் கொடியதாக அஞ்சி ஒழிக்கவேண்டுமென்பது குறிப்பு.

துன்பக்கடலில் விழுந்து வருந்தாவண்ணம் இன்பக்கரையிலேற்ற வல்ல இனிய நல்ல துணை என்பார், ஏமப்புணை என்றார்.

சினம் என்னும் தீ தன்னை எடுத்தவரையேயன்றி அவரை அடுத்தவரையும் கெடுத்துவிடும் என்பதாம்.

தனக்கு இதத்தைச் செய்ய வல்ல குருமார் முதலிய நல்லோரையும் சினமுடையான் தன் சினத்தின் தீமையால் இழந்து வருந்துவான் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை திரிசங்குபால் உணரப்படும்.

கதை.

திரிசங்கு என்பவன் சூரிய குலத்தோன்றலாகிய சத்திய விரதன் புதல்வன், சத்திய சீலராகிய அரிச்சந்திரன் தந்தை. இவன் சத்தியவதி என்னும் உத்தமியை மணந்து அரசுபுரிந்து வருங்கால் ஒருநாள் தமது குலகுருவாகிய வசிட்டரையணுகி

உடலோடு தான் துறக்கத்தில் புகவேண்டுமென்று வேண்டினன். அதற்கவர் இப்பூத உடம்போடு அங்குப் போதல் கூடாது ஆதலால் இதனை ஈண்டு இகந்தபின் நீ போகலாமென்றார். “என்மனங் கொண்டதைச் செய்து தரவில்லையானால் நீர் என்ன குரு” என்று அரசன் சினங்கொண்டான். உம்மால் இயலவில்லையானால், யான் கருதியதைத் தருதற்குரிய பெரியார் ஒருவரைக்கொண்டு யாகம் ஒன்று புரிந்து யான் எண்ணியதை எண்ணியாங்கே எய்துவேன் என்று எதிர்ந்து மொழிந்தான். உடனே முனியாதமுனிவரும் முனிவுகொண்டார். வழி வழி வந்த எனக்கும் இழிமொழி தந்தாய் ஆதலால் நீ நீசனாகக் கடவையென்று ஏசிச் சினந்தார். அரசன் அவ்வாறே தனது அழகிய வடிவம் மாறி உடனே புலையனானான். முனிவரும் பிரிந்து ஒரு தனிவனம் புகுந்தார். தமக்குரிய இனத்தின் நலத்தை இருவரும் தம் தம் சினத்தால் இழந்தார். சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம் என்னும் ஏமப்புணையைச் சுடும் என்பதை உலகம் இவ்விருவர்பாலும் உணர்ந்தது. (விரிவை இராமாயணத்தில் காண்க.)

தன்னையடுத்தவரையெல்லாம் சினம் தீயைப்போல் கெடுத்து விடும் என்பது இதனால் கூறப்பட்டது.

307. கொண்டார்சினம்பொருளாக்கொங்கணர்பின் வாசுகியாற்
கொண்டாரோ கேடு குமரேசா—பண்டு
சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று. (எ)

இ—ள்.

குமரேசா! சினத்தையே தனக்குத் துணையாகக் கொண்டிருந்த கொங்கணர் ஏன் வாசுகியால் அதனையிழந்து இழிந்தார் எனின், சினத்தைப் பொருள் என்று கொண்டவன் கேடு நிலத்து அறைந்தான் கை பிழையாத அற்று என்க.

சினத்தைப் பொருள் என்று கொண்டவன்—சினமே தனக்கு உறுதிதரும் பொருள் என்று கொண்டவன். பொருள் என்றது உரிமை தோன்ற நின்றது.

பிழையாத அற்று—தப்பாத வாறுபோல். இதில் அகரம் குறைந்து நின்றது. கொண்டவன் கேட்டிற்கு அறைந்தான் கையை உவமை காட்டியது தவறாது என்பதை உணர்த்துதற்கென்க.

நிலத்தின்கண் அறைந்தவன் கை அதில் தப்பாது படுதல் போல் சினத்தையுடையவன் கெடுதல் தப்பாது என்பதாம்.

தனது வலிமையையும் பெருமையையும் உலகில்காட்டுதற்கு சினமே உரிய துணை என்று கருதி அதனையே எவரிடமும காட்டுகின்றவன் தவறாது கெடுவான் என்பதை நிலத்து அறைந்தான் கையால் தேவர் எடுத்துக்காட்டிய நயத்தை ஈண்டுச் சிறிது நிலைத்துக் காண்க.

சினமுடையவன் தனது பெருமையை விரைவிலிழந்து தவறாது கெடுவான் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை கொங்கணர்பால் உணரப்படும்.

கதை.

கொங்கணர் என்பவர் கொங்கு நாட்டிலிருந்த ஒரு சிற்றூரில் பிறந்தவர். இவரது காலம் இற்றைக்கு இரண்டாயிர ஆண்டுகளுக்கு முன்னதாகும். இவர், அணிமா, மகிமா முதலிய அட்டமா சித்திகளும் அடையப் பெற்றவர். ஒரு காலத்தில் தம் உடலழுக்கைத் திரட்டித் திருமழிசையாழ்வார்முன் வைத்து அதனை ஒருசிறு பொன் மலையாகப் பொருந்தக் காட்டினர். இவர் போக முனிவர்பால் பேரன்புடையவர். அவர் கருதியவெல்லாம் உரிமையினுதவி அவரோடு உவந்திருந்தார். பின் அவரைப்பிரிந்து ஓர் அடவியிற் புகுந்து ஐம்பொறியடக்கி அருந்தவம் புரிந்தார். புரிந்துவருங்கால் ஒரு கொக்கின் எச்சம் இவர்மேல் பட்டது. இவர் அதனை நிமிர்ந்து பார்த்தார். உடனே அஃது எரிந்து கரிந்தது. தமது மகிமையைத் தாமே வியந்து எவரையும் தமது

சினத்தால் வெல்லலாம் என்று அதன்பின் துணிந்தார். சினமே பொருளெனக்கொண்டு வனமெலாந் திரிந்தார். அறியாதவர்க்கெல்லாம் தம் ஆற்றலையுணர்த்தினார். ஒருநாள் திருவள்ளுவ நாயனார் திருமனை முன் நின்று பலிதருக என்றார். அவ்வமையம் நாயனாருக்குப் பணிபுரிந்திருந்தமையால் வாசுகியம்மையார் உடனே வரவில்லை. சிறிது பொழுது கழிந்தபின் பலிகொண்டு வந்தார். விரைவில் வரவில்லையே என்று கருதிச் சித்தர் நம் அம்மையைச் சினந்து விழித்தார். அக்கற்புத் தெய்வம் அவர் தன்மையைத் தெளிந்து புன்னகை செய்து "கொக்கென்று பார்த்திரோ கொங்கணரே" என்றுகூறியருளினார். சித்தர் அம்மையாரது மெய்யுணர்வையும் மேன்மையையுந் தெளிந்து நடுங்கிப் பணிந்தார். நாணிச் சென்றார். சினத்தால் சித்தர் சீரிழந்தார் என்று அனைவரும் சிரித்து இகழ்ந்தார். சினத்தையே பொருளென்று கொண்டவன் தப்பாது கெடுவான் என்பதை உலகம் இவர்பால் உணர்ந்தது. (விரிவைச் சித்தர் சரிதையில் காண்க.)

சினமுடையான் தப்பாது கெடுவான் என்பது இதனால் கூறப்பட்டது.

308. எள்ளித் துயர்செய்தும் ஏனோ சிவஞானர்
கொள்ளவில்லை கோபம் குமரேசா—தள்ளி
இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று. (அ)

இ.—ள்.

குமரேசா! சிவஞான தேசிகர் தனக்குப் பெருந் துன்பஞ் செய்தவனிடத்தும் ஏன் வெகுளியைச் செய்யவில்லையெனின் இணர் எரி தோய்வு அன்ன இன்னா செயினும் வெகுளாமை புணரின் நன்று எனக.

இணர் என்பது பூங் கொத்தை உணர்த்தும் ஒருசொல். அஃது ஈண்டு அக் கொத்தைப்போற் செறிந்த பல தீச்சுடர்களைக் குறித்து நின்றது.

இணர் எரி—கற்றைத் தீ; என்றது பல சுடர்கள் நெருங்கிய தொகுதியான பெருந் தீயை. எரி என்றது துன்பத்தின் கொடுமையையும், இணர் என்னும் அடை அதன் மிகுதியையும் உணர்த்தி நின்றது. தனக்குத் துன்பஞ் செய்தானிடத்தும் வெகுளியைச் செய்யாமல் பொறுத்திருக்க எவர்க்கும் முடியாதாகலின் "புணரின்" என்றார்.

தொகுதியான பெருந்தீ வந்து தோய்ந்தாற்போல ஒருவன் மிகுதியான துன்பத்தைச் செய்தானாயினும் அவனையும் வெகுளாமை ஒருவனுக்கு அமையுமாயின் அது நன்று என்பதாம்.

சினத்தையே பொருளென்று கொண்டவன் கெடுவான் என்று மேலுணர்த்தியதை நோக்கி, அதனை அங்ஙனங் கொள்ளாவிடினும் தமக்குக் கொடுந்தீங்கு செய்தானிடத்தேனும் அதனைச்செய்யலாகாதா? என்று ஐயுறுவார்க்கு இஃது அருளியதென்க. இன்னாசெயினும் வெகுளாமை நன்று என்றார் புகழும் அறமும் அதனால் உளவாம் என்பது கருதி.

தனக்குத் துன்பஞ் செய்பவனிடத்தும் வெகுளியைச் செய்யாதிருப்பவனே மேலான நன்மையை எய்துவான் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை சிவஞான தேசிகர்பால் உணரப்படும்.

கதை.

சிவஞான தேசிகரென்பவர் இற்றைக்கு நானூறு ஆண்டுகட்கு முன்னர் வடநாட்டிலே பெருமுக்கல் என்னும் மலையினை அடுத்த ஒரு சிற்றூரில் இருந்த அம்மவை என்பவளுடைய புதல்வர். பொறுமை அடக்கமுதலிய உயர் குணங்களெல்லாம் இயல்பாகவே அமையப் பெற்றவர். பால சித்தர் என்னும் ஞான யோகிபால் அருளுபதேசம் பெற்று இருவகைப் பற்றுமற்று பொம்மபுரம் என்னும் நகரில் சித்திகள் பல செய்து சிறந்து விளங்கியிருந்து பின் விருத்தாசலத்தை அடைந்து வறியவர் பிணியாளர் கொடியவர் மூடவர் முதலானவர்களையும் அடியவராக்கி அருள் புரிந்தார், புரிந்துவருங்கால், கூனிமேடு என்னும் ஊரிலிருந்த

தாசீகன் என்னும் மந்திரவாதி ஒருவன் இவர்மீது பொறாமையுற்று இவர்க்கு அல்லல் பல செய்தான். கொல்லவும் முயன்று கொடுஞ்சூழ் செய்தான். தமது தவமகிமையால் அவ்வெல்லாவற்றினும் இவர் தப்பி உய்ந்தார். அக்காலத்தில் செஞ்சியிலிருந்து அரசுபுரிந்த திரியம்பகன் என்பவனை அணுகி இவர்மீது அவன் அடாப்பழி புகன்றான். அவ்வேந்தனும் செற்றமுற்று வந்து தேசிகரது குற்றமற்ற தன்மையை யுணர்ந்து நற்றாள் தொழுதான். நயந்து சென்றான். இங்ஙனம் சொல்லாலும் செயலாலும் தமக்குப் பெருந்துன்பங்களைச் செய்துவந்த அத்தாசீகன்மீது இவர் சிறிதும் வெகுளாமல் அவனுக்கு இதமே செய்தார். இவரது சினமின்மையையும், மன நன்மையையும் தெளிந்து அவனும் வந்து இவர் அடிகளை வணங்கி அடியவனானான். அனைவரும் இவரது பொறுமையை வியந்து புகழ்ந்து போற்றினர். இவரும் எல்லா நலங்களுமெய்தி இறுதியில் ஈறிலின்பமெய்தினார். தனக்கு இன்னாதவற்றைச் செய்தார் கண்ணும் வெகுளாமலிருத்தல் அமையுமாயின் அஃது ஒருவனுக்கு நலமாம் என்பதை உலகம் இவர்பால் உணர்ந்தது. விரிவை மயூராசல புராணத்தில் உணர்க.

மிகு தீங்கு செயினும் வெகுளாதிருத்தலே ஒருவனுக்கு நலமாம் என்பது இதனால் கூறப்பட்டது.

309. பண்ணி வெகுளாப் பரத்துவரேன் உள்ளியதைக்
கொண்டார் உடனே குமரேசா—கொண்டாடி
உள்ளிய தெல்லாம் உடனெய்தும் உள்ளத்தால்
உள்ளான் வெகுளி யெனின். (௯)

இ—ள்.

குமரேசா! தாம் நினைத்தவற்றை எல்லாம் பரத்துவாசர் ஏன் நினைத்தவுடனே பெற்றார் எனின், உள்ளத்தால் வெகுளியை உள்ளான் எனின், அவன் உள்கிய எல்லாம் உடனே எய்தும் என்க.

உள்ளத்தால் வெகுளி உள்ளான் எனின்—நெஞ்சால் வெகுளியை நினையானாயின். மேல், வெகுளாமை எய்தின் ஒருவனுக்கு நன்று என்றார், இதில், அவன் கருதியன எல்லாம் அதனால் எய்தும் என்றார்.

மனத்தால் வெகுளியை ஒருவன் நினையானாயின் அவன் நினைத்தவற்றையெல்லாம் உடனே பெறுவான் என்பதாம்.

எண்ணியவெல்லாம் எண்ணியவாறே ஒருவன் எய்தவேண்டுமாயின் அவன் வெகுளியை எண்ணலாகாது என்பது கருத்து.

சினத்தை ஒழித்தவனுக்கு நினைத்தனவெல்லாம் உடனே கிடைக்குமென்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை பரத்துவாசர்பால் உணரப்படும்.

கதை

பரத்துவாசர் என்பவர் உதத்திய முனிவருடைய புதல்வர். தாய்பெயர் மமதை. இவர் சிறந்த தவ வொழுக்கம் வாய்ந்தவர். உயிர்கள் மாட்டுப பேரருளுடையவர். முனிவிலாத முனிவரென்று இவரை அனைவரும் புகழ்வார். பரமபொருளிடத்தே என்றும் தம உளத்தைப் பொருத்தியதால இவர் பரத்துவாசரெனப் பெற்றார். இதுபொழுது பிரயாகை என வழங்கப்படுகின்ற இடமே பண்டு இவரிருந்து தவம்புரிந்த தலமாம். இராமமூர்த்தி இராவணவேட்டையாடி வானரசேனைகளுடன் திருவயோத்தியை நோக்கி மீளுங்கால் அவரை எதிர்கொண்டு சென்று தமது தவச்சாலைக்கு அழைத்துவந்து இனிய உபசாரங்கள் செய்து அரிய விருந்து ஒன்றை இவர் ஆற்ற விரும்பினார். தெய்வவுலகத்தில் எய்தியிருக்கும் இனிய பொருள்களெல்லாம் தம்மிடம் எய்தும்படி எண்ணினார். அவ்வாறே சுரபி சிந்தாமணி அமிழ்தம் முதலிய போகப் பொருள்களெல்லாம் உடனே எய்தின. அவற்றால் அரசர் முதல் அடியவரீறாக அச்சேனையிலுள்ள அனைவருக்கும் ஒருபடியாக உயர்ந்த இன்பத்தை ஊட்டினார். எல்லாரும் உண்டு மகிழ்ந்தார். இவரது மனநலத்தையும் தவ வலத்தையும்

வியந்து இராமமூர்த்தியும் புகழ்ந்து போற்றினார். உள்ளத்தால் வெகுளியை உள்ளாதவர்க்கு உள்ளியன எல்லாம் உடனேஎய்தும் என்பதை உலகம் இவர்பால் உணர்ந்தது. விரிவை இராமாயணத்தில் காண்க.

வெகுளியில்லாதவர்க்கு விரும்பியன எல்லாம் விரைவில் உளவாம் என்பது இதனால் கூறப்பட்டது.

310. திண்டோட் சகரர் சினந்திறந்தார் அஞ்சுமான்
கொண்டான் உயர்வேன் குமரேசா—மண்டி
இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை. (ம)

இ.—ள்.

குமரேசா! சகரர் சினத்தால் இறந்தார்; அஞ்சுமான் ஏன் வெகுளாது உயர்ந்தான் எனின், சினத்தினை இறந்தார், இறந்தாரை அனையர்; சினத்தைத் துறந்தார் துறந்தார் துணை என்க.

இறத்தல் என்பது மிகுதல் சாதல் கடத்தல் என்பவற்றை உணர்த்தி நிற்கும். சினத்தினை இறந்தார் இறந்தார் அனையர்—சினத்தின் மிக்கவர் செத்தவரோடொப்பர். இதில் சினம் இடைநிலைத்தீவகமாய் நின்று இருமருங்கினும் சென்றிசைந்தது.

சினத்தைத் துறந்தார்—வெகுளியை விட்டவர்.

துறந்தார் துணை—சாதலை ஒழிந்தாரை ஒப்பர்.

சினத்தை மிகுத்தவர் செத்தவரையும், அதனை விடுத்தவர் சாகாதவரையும் ஒப்பர் என்பதாம்.

வெகுளி யுடையவர், உயிருடையராயினும் தாம் பிறந்த பயனை இழத்தல் நோக்கி அவரை இறந்தவர் என்றும் அஃதில்லாதவர் மெய்யுணர் வுடையராய் அழிவி லின்பத்தை அடைவரென்பது கருதி அவரை இறவாதவர் என்றும் கூறினார் என்க,

எரிநிகர் வெகுளிபொங்க மயக்கம்வந் தெய்தும் எய்தத்
தெரிபவை சிதையும் உள்ளந் தெரிந்தவை சிதைந்தபோதே
உரியதன் உணர்வுமாயும் உணர்வுமாய்ந் தொழிந்தவாறே
அரியவென் றறிஞர்பேசும் அனைத்துமாய்ந் தொழியுமன்றே.

(பகவற்கீதை.)

வெகுளி மிக்கவர்க்கு வீடு பெறுதல் அரிது என்பதை இதனானுணர்க. இனி, துறந்தார் என்பதற்கு துறவிகள் என்று பொருள்கொண்டால், வெகுளியை மாத்திரம் துறந்தவர், எல்லாவற்றையும் துறந்த பெரியாரோடொப்பர் என்று கொள்க.

வெகுளியுடையவர் இறப்புத் துன்பத்தையும், அஃதில்லாதவர் இறவா இன்பத்தையும், எய்துவரென்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை சகரர் பாலும் அஞ்சுமான் கண்ணும் உணரப்படும்.

கதை 1.

திருவயோத்தியிலிருந்து அரசுபுரிந்த சகர மன்னனுக்கு சுமதியென்னு மனைவிபால் இறைவனருளால் அறுபதினாயிரம புதல்வர்கள் தோன்றினர். அவரனைவருக்கும ஒரு தொகையாகச் சகரர் என்றே பெயர். உருவில், திருவில், உரனில், உணர்வில் ஒரு நிகரானவர். விரிந்த அறிவு இலராயினும் சிறந்த ஆண்மையுடையவர். ஒருவரையொருவர் பிரிதல் இலராய் யாண்டுச் செல்லினும் ஒருங்கே செல்வர். பாதலத்திலிருந்து அருந் தவம் புரியுங் கபில முனிவரைக் கண்டு அவரது மன நிலையை உணராது அவர்மேற் சினமீக் கூர்ந்தார். அனைவரும் அதனால் ஒருங்கே அழிந்தார். சிறந்த பிறவியை எய்தியிருப்பினும் இறந்த சினத்தார் இறந்தவரே யாவர் என்பதை இவர் அன்று உணர்த்தி ஒழிந்தார்

கதை 2.

அஞ்சுமான் என்பவன் சகர மன்னனுடைய பேரன். பொறுமையும் அறிவும் பொருந்திய பண்பினன். திண்மையுள்ள

வனாயினும் யாவர்மாட்டும் தண்மைமிக்கவன். சகரர் இறந்தமையைத் தெரிந்து தாம் புரிகின்ற பரிவேள்விக்கு இடையூறு வந்ததேயென்று கவலுகின்ற தன் பாட்டனாகிய சகரனைத் தேற்றிவிட்டுப் பாதலத்தில் புகுந்து கபில முனிவனைக் கண்டு அவரது அடிகளிற் பணிந்து இனிய மொழிகள் பல அவர் உவகையுற மொழிந்தான். இவனது மன நலத்தையும் சினமகன்ற தன்மையையும் முனிவர் தெளிந்து இனிதருள்செய்து பரியையும் உதவினார். அதனைப் பெற்றுவந்து அருமகம் முடித்து அரசனுந் தமகிழ்வூட்டித் தனது அமைதியினலத்தால் அநந்தவரும் போற்றத்தக்க பெரும்பதத்தை அடைந்தான். சினமுடையவர் அழியுந்துயரையும், அஃதில்லாதவர் அழியா இன்பத்தையும் பெறுவார் என்பதை உலகம் இவர்பால் உணர்ந்தது. விரிவை இராமாயணத்தில் காண்க.

(இவ்வதிகாரத்தின் தொகைப் பொருள்.)

செல்லும் இடத்தும் தன் சினத்தைக் காப்பவனே சிறந்தவனாவான். செல்லும் இடம், செல்லாத இடம், என்னும் ஈரிடத்தும் சினம் தீதே பயக்கும். யாவர்மாட்டும் சினத்தை ஒருவன் ஒழித்தல் வேண்டும். மன மகிழ்ச்சியையும், முக மலர்ச்சியையும் சினம் அறவே தொலைக்கும். அதனை அடக்காதவனை அது கெடுத்தேவிடும். அதனையுடையவன் தனக்குரிய நல்வினைத்தையெல்லாம் இழப்பான். அதைக் கொண்டவன் தப்பாமல் துன்பத்தைக் கொள்வான். தீயைப்போல் வந்து பிறர் துன்பஞ் செய்யினும் சினங்கொள்ளாமையே ஒருவனுக்கு உயர் நலமாகும். வெகுளி இல்லாதவனுக்கு உள்ளியவெல்லாம் உடனே உளவாம். சினம் மிகுந்தவர் செத்தவரோடு ஒப்பர். அதனைத் துறந்தவர் அழிவிலின்பத்தைப் பெறுவர் என்பனவாம்.

31வது வெகுளாமை முற்றிற்று.

௩௨-ம் அதிகாரம் இன்னா செய்யாமை.

அஃதாவது துன்பமானசெயல்களைப் பிறவுயிர்கட்கு எவ்வகையானுஞ் செய்யாமை. இன்னாமை—துன்பம். இஃது இனிமை என்பதன் எதிர்மொழி. வெகுளி, அறியாமை, தன்னயங்கருதல், மறதி என்பவற்றால் இது நிகழுமாயினும் பெரும்பாலும் வெகுளி பற்றியே விளையுமாதலால் அது தோன்றினும் இது செய்யலாகாதென்பதை உணர்த்துதற்கு வெகுளாமையின்பின் வைக்கப்பட்டது.

---

311. உற்றமுன்னோன் இன்னா வுறவெனன எனிளங்கோ
குற்றமற நீத்தார் குமரேசா—முற்றும்
சிறப்பீனும் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா
செய்யாமை மாசற்றார் கோள். (க)

இ—ள்.

குமரேசா! அரச செல்வத்தைப் பெறுவதாயிருந்தும் தன் அண்ணனுக்கு இன்னா செய்யலாகாதென்று எண்ணி என் அதனை இளங்கோ துறந்தார் எனின், சிறப்பைத் தருகின்ற செல்வத்தைப்பெறினும் பிறர்க்கு இன்னாதவற்றைச் செய்யாமை மாசு அற்றாரது கோள் என்க.

சிறப்பு என்பதற்குப் பொருள் ஈண்டு இயல் நோக்கிக் கொள்க. கோள்என்பது புறங்கூறல், இடையூறு, கிரகம், கோட்பாடு, குணம் என்பவற்றை உணர்த்தும்ஒரு சொல். அஃது ஈண்டு கோட்பாடு என்பதைக் குறித்து நின்றது.

மாசு அற்றார் கோள்—குற்றம் அற்றாரது துணிவு.

சிறப்பைத் தருகின்ற செல்வத்தைப் பெறுவதாயினும் பிறர்க்குத் துன்பத்தைச் செய்யாமை குற்றமற்றாரது துணிவு என்பதாம்.

எத்துணைச் சிறந்த செல்வமாயினும், பிறர்க்குத் துன்பஞ் செய்து அதனால் எய்துவதாயிருப்பின் அதனை மனந் தூயார் விரும்பார் என்பார் "செல்வம் பெறினும் இன்னா செய்யாமை மாசற்றார் கோள்" என்றார். இன்னா செய்யாமையே குற்றமற்றாரது குணம் என்பது குறிப்பு.

இனி, சிறந்த செல்வத்தைப் பெற்றிருப்பினும் பிரர்க்குத் துன்பஞ் செய்யாமை மாசு அற்றார்க்கு இயல்பு எனினும் பொருந்தும். ஒருவனுக்கு இம்மைக்குரிய எல்லாச் சிறப்புகளையும் செல்வம் நல்கும் ஆதலால் அது சிறப்பு ஈனும் என்னும் அடைபெற்று வந்தது. எத்துணை அறிவுடையாரையும் சித்தத்தைத் திரித்துச் செருக்கை மிகுத்துப் பிறர்க்குத் தீங்கு செய்யும்படி செல்வம் தூண்டுமாதலால் அது பெறினும் மாசற்றார் இன்னா செய்யார் என்றார். இன்னாசெய்யும்படி செல்வம் செய்யும் என்பதை உம்மை விளக்கி நின்றது. எவ்வளவு சிறந்த செல்வமாயினும் பிறர் துன்புற வருவதாயின் அதனை அறிவோர் விரும்பார் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை இளங்கோ பால் உணரப்படும்.

கதை.

இளங்கோ என்பவர் சேர நாட்டிலே வஞ்சி நகரத்திலிருந்து செங்கோல் செலுத்திய சேரலாதன் என்னும் அரசனுடைய புதல்வர். தன்னுடன்பிறந்த முன்னோனாகிய சேரன் செங்குட்டுவனோடு சேர்ந்து வளர்ந்து யாவர்மாட்டும் ஆர்ந்த அன்பினராய் அமர்ந்து விளங்கினார். அரியணை அமர்ந்து திருவுடன் விளங்கும் அரசன் முன்னர் இவ் இருவரும் இருப்ப ஒருநாள் நிமித்திகன் ஒருவன் வந்தான். வணங்கி நின்றான். குமரர் இருவரையும் அமர நோக்கிப் பின் அரசனை நோக்கினான். அரசே! "நம்புதல்வர் இருவரில் அரசுரிமையை யெய்துதற்குரியநலங்களெல்லாம் இளங்கோவுக்கே அமைந்துள்ளன ஆதலால்அவனே இனி அரசனாவான்" என்று அறைந்து சென்றான். மூத்தவனுக்கே அரசு உரிமை என்னும் முறைமை மாறியதோ என்று செங்குட்

டுவன் சினந்து சென்று மனந்திரிந்தான். அதனை இளங்கோ உணர்ந்தார் தம்மால் அண்ணனுக்கு இன்னல் வந்ததே என்று வருந்தி அதனை அவனடையாவண்ணம் தாம் துறவினை அடைந்தார். வஞ்சியின் கீழ்பாலிருந்த திருக்குணவாயில் என்னும் தலத்திலமர்ந்து தவத்திலிருந்தார். உயர்ந்த சிறப்பைத் தருகின்ற சிறந்த அரச செல்வம் தமக்கு வருவதாயிருந்தும் முன்னோனெய்தும் இன்னாமைக்கு இரங்கி அருளுடன் துறந்த இப்பெரியாரது மாசற்ற தன்மையை அனைவரும் வியந்தார். துறவுகொண்டபின் இளங்கோவடிகள் என்றும் சேர முனி என்றும் இவரைப் புகழ்ந்து போற்றினர். சிலப்பதிகாரம் என்னும் சிறந்த காவியம் இவரால் இயற்றப்பட்டது. இவரது மதிநலமும், மனநலமும், அருளுடைமையும் இந்நூலில் பலஇடங்களிலும் புலனாகின்றன. பிறர்க்குத் துன்பமான செயல்களைப் பெரியோர் எவ்வகையிலும் செய்யார் என்பதை உலகம் இவர்பால் உணர்ந்தது. (விரிவைச் சரிதையில் காண்க.)

தமக்குப் பெருஞ் செல்வம் வருவதாயினும் பெரியோர் பிறர்க்குத் துன்பமானவற்றைச் செய்யார் என்பது இதனால் கூறப்பட்டது.

312. செற்றங்கொண் டின்னாமுன் செய்தார்க்கும் செய்திலரேன்
கொற்றங் குடியார் குமரேசா—முற்றும்
கறுத்தின்னா செய்தவக் கண்ணும் மறுத்தின்னா
செய்யாமை மாசற்றார் கோள். (௨)

குமரேசா! செற்றங்கொண்டு இன்னாதவற்றைத் தமக்குச் செய்தாரிடத்தும் கொற்றங்குடி உமாபதியார் என் அதனை மறுத்துச் செய்யவில்லை எனின், கறுத்து இன்னா செய்த அக்கண்ணும் மறுத்து இன்னா செய்யாமையும் மாசு அற்றார் கோள் என்க. தொக்கு நின்ற உம்மைமேலதைத் தழுவிநின்றது.

கறுத்தல்—வெகுளிக் குறிப்பு.

கறுப்பும் சிவப்பும் வெகுளிப் பொருள. (தொல்காப்பியம்.)

செய்த அக்கண்ணும்—செய்த அவ்விடத்தும். செய்தவன் கண்ணும் எனவும் பாடம்.

இன்னாதவற்றைத் தமக்கு ஒருவன் வெகுண்டு செய்தவிடத்தும் அவற்றைமாறி அவனுக்குச் செய்யாமை மாசற்றாரது இயல்பு என்பதாம்.

செல்வம் பெறினும் பிறர்க்குத் துன்பமான செயல்களை மாசற்றார் செய்யார் என்று மேலே கூறினார்; இதில், தமக்குத் துன்பஞ்செய்தாரிடத்தும் அதனை அவர் செய்யார் என்றார்.

சினங்கொண்டு பிறர் இன்னாசெய்யினும் அதனை மனங்கொள்ளாது பெரியோர் மறந்துவிடுவர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை உமாபதி சிவாசாரியர்பால் உணரப்படும்.

கதை.

உமாபதி சிவாசாரியர் என்பவர் சோழநாட்டிலே தில்லையம்பதியிலே அந்தணர் குலத்திலே அவதரித்தவர். வேதங்கள், சிவாகமங்கள், இதிகாச புராணங்கள், முதலிய பல கலைகளிலும் தலைமையான புலமை வாய்ந்தவர். அருள், அடக்கம் பொறை முதலிய அரிய குணங்களெல்லாம் அமையப் பெற்றவர். மறைஞான சம்பந்தர் என்னும் பெரியாரொருவர் பால் அருளுபதேசம் பெற்று இறைவனருளையே நாடி இளமையிலேயே தவநெறி ஒழுகினார். சாதி முதலியவற்றின் இழிவரம்புகளைக் கடந்து பரந்த நோக்குடன் யாவர்மாட்டும் பேரருளுடையவராய்ப் பொருந்தி விளங்கினார். தமது முறைப்படி ஒருநாள் பொன்னம்பலவருக்கு இவர் பூசை செய்யப் போயினார். தில்லைவாழந்தணரெல்லாருஞ்சேர்ந்து இவரைக் குலமுறை தவறினவரென்று பழிமொழி பகர்ந்து பணிசெய்யலாகாதென்று தடுத்துத் தம் குழுவிலிருந்து விலக்கினர். அவ்வளவி லமையாது இன்னாத செயல்களையும் இ

சைநது செய்தனர். ஐயம் நீங்கிய மெய்யுணர்வுடைய இவ் ஐயரது பெருமையைச் சிறிதும் அறியாமல் அவர் செய்த அல்லல்கள் மிகப் பல. இவர் யாதுஞ் செய்யாது அமைதியோடு அப்பதியைவிட்டகன்று அதன் கீழ்பாலிருந்த கொற்றங்குடி என்னும் சிற்றூரையடைந்து தனி முதலை நாடித் தனியே யிருந்தார். மறுநாள் தில்லை வேதியர் அம்பலத்திற் சென்று பூசை செய்தற்கு ஆதி அறையைத் திறந்தார் அங்கு அம்பலவாணரைக் கண்டிலர். அஞ்சி நடுங்கி அயர்ந்தார். உடனே "யாம் உமாபதி பால் உவந்திருக்கின்றோம்" என்று ஓர் ஒலி இறைவன் அருளால் வானில் ஒலித்தெழுந்தது. வேதியர் கேட்டு வெருண்டோடி உமாபதியாரை வணங்கித் தம் ஊருக்கழைத்தார். அருள் வள்ளலாகிய இவர் யாதுங் கூறாமலடைந்தார். அம்பலவாணரும் ஆங்கு வந்தமர்ந்தார். நாள் பல கழிந்த பின் மீண்டு சென்று உமாபதியார் கொற்றங்குடியே குடியாக் கொண்டார். பெற்றான் என்னும் ஓர் உத்தமனுக்கு முத்தி கொடுக்குமாறு ஒரு பாவை எழுதிப் பெருமான் ஏவ அதனைப் பெற்று இவர் அவ்வாறே செய்தார். அப்பாட்டு இதனடியில் வருகின்றது.

அடியார்க் கெளியன்சிற் றம்பலவன் கொற்றங்
குடியார்க் கெழுதியகைச் சீட்டுப்—படிமிசைநற்
பெற்றான்சாம் பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து
முத்தி கொடுக்க முறை.

இங்ஙனம் இறைவனருளை நிறையப்பெற்று உண்மை நெறி விளக்கம், சிவப்பிரகாசம், வினாவெண்பா, நெஞ்சுவிடுதூது முதலிய அரிய நூல்கள் பல அருளிச்செய்து யாவர்க்கும் இனியனவே செய்து இசை பெற்றிருந்தார். வெறுத்துத் துயர் விளைத்தவரிடத்தும் பொறுத்து அருள் செய்த இவரது மனத் தூய்மையை அனைவரும் போற்றிப் புகழ்ந்தார். கறுத்து இன்னா செய்தவரிடத்தும் மாசற்றார் மறுத்து இன்னா செய்யார் என்பதை உலகம் இவர் பால் உணர்ந்தது (விரிவை இவர் புராணத்தில் காண்க.)

எவரிடமும் மேலோர் இன்னாதனசெய்யார் என்பது இதனால் கூறப்பட்டது.

313. திண்டோள் நிமிவசிட்டர் சீறியின்னா செய்துதுன்பம்
கொண்டார்பின் என்னே குமரேசா—பண்டொன்றும்
செய்யாமற் செற்றார்க்கும் இன்னாத செய்தபின்
உய்யா விழுமந் தரும். (௩)

-ள.

குமரேசா! நிமியும் வசிட்டரும் ஒருவர்க்கொருவர் இன்னாசெய்து பின் ஏன் இருவரும் இடும்பை எய்தினர் எனின், செய்யாமல் செற்றார்க்கும் இன்னாத செய்த பின் அஃது உய்யா விழுமம் தரும் என்க.

செய்யாமல் செற்றார்—ஒருவன் யாதொரு துன்பமும் முன்பு செய்யாதிருக்க அவன்மேற் சினந்து துன்பம் செய்தவர்.

உய்யா விழுமம் தரும்—கடக்க முடியாத துன்பத்தைக் கொடுக்கும்.

முன் யாதொரு துன்பமும் தான் செய்யாதிருக்கத் தன்மேற் செற்றங்கொண்டு துன்பஞ் செய்தவர்க்கும் ஒருவன் அதனைச் செய்வனாயின் அவனுக்குக் கடக்கமுடியாத துன்பத்தை அச்செயல் கொடுக்கும் என்பதாம்.

கறுத்து இன்னா செய்தார்க்கும் மேல் மறுத்து இன்னா செய்யலாகாதென்றார்; செய்தாலென்னை? யென்பார்க்கு அதனால் தொலையாத துன்பம் உளவாம் என்று இதில் உணர்த்தினாரென்க.

இன்னாமை இன்னாமையையே யீனுமாதலால் அதனை எவ்விடத்தும் எவ்வகையானும் செய்யலாகாதென்பதும், செய்யின் செய்தார்க்கே அது துன்பத்தை விளைக்கும் என்பதும், இதில் உணர்த்தப்பட்டன. இவ்வுண்மை நிமியின்கண்ணும், வசிட்டர்பாலும் உணரப்படும்.

நிமி என்பவன் சூரியகுலத் தோன்றலாகிய இக்குவாகுவின் புதல்வன், அமரரும் வியக்கத்தக்க அருந்திறல் படைத்த

வன். சிறந்த போர்வீரன். மலர்தலை யுலகினுக்கு உயிரென இருந்து இசை திசை பரப்பி வசையற ஆண்டவன். துறந்தவர் தம்மினும் தூய்மை வாய்ந்தவன். இவன் சத்திரவேள்வி ஒன்று செய்யவிரும்பி வசிட்டரை அதற்குத் தலைவராயிருக்கும்படி அழைத்தான். இந்திரன் வேள்வி ஒன்று புரிகின்றான் அங்குச் சென்று வருகின்றேன் என்று அவர் செப்பிப் போயினார். கௌதமரைக்கொண்டு தனது வேள்வியை நிமி இனிது முடித்தான். அத்திரி, பிருகு, அங்கிரா முதலிய முனிவர்களையும் அங்கு வந்திருந்த மன்னர்களையும் தண்ணளியோடு அனுப்பிவிட்டு வேள்வியின் இளைப்பால் மென்துயில்புரிந்தான். வசிட்டர் வந்தார். "யான் வருவதற்கு முன் வேறொருவனைக்கொண்டு வேள்வியை முடித்தான், யான் வந்திருந்தும் இங்கு வந்து காணாத மன்னன் என்னை அவமதித்தான்" என்று முனிவர் மனங்கொதித்து "அவன் ஆவி தீர்க" என்று சாபங் கூறினார். அமைச்சர் எழுப்ப நிமி எழுந்து நிகழ்ந்ததையறிந்து தான் ஒன்றுஞ் செய்யாதிருந்தும் தன்மேற் செறுத்து இன்னா விளைத்தாரே என்று முனிவரை வெறுத்து "அச்சாபம் உன்னையும் சார்க" என்று மன்னவன் சபித்தான். இருவரும் இறந்து இன்னுடல் கழிந்தார். பிரிந்து நொந்து பின் பிறந்து வருந்தினார். செய்யாமல் செற்றார்க்கும் இன்னாத செய்யின் அச்செயல் உய்யா விழுமம் தரும் என்பதை உலகம் இவர்பால் உணர்ந்தது. விரிவைப் பாகவதத்தில் காண்க.

என்னைமுன் வரித்துப்போன யான்வருவதற்கு முன்போர்
அன்னியன் றன்னைக் கொண்டாங் கருமகம் நடாத்துகின்ற
மன்னவன் காணா நான்றன் வந்திடப் புறப்படாதோன்
தன்னுடல் விடுக ஆவி யெனமுனி சபித்தான் அன்றே.

அன்னவன் சபிக்கக்கேட்ட அரசர்கோன் அழலிற்பொங்கித்
தன்வரவறியேன்பாயல் சார்ந்துநித்திரைநான் பண்ண
என்னையந் நியாயத்தாலே யெரிவித்த சாபம் அன்னான்
தன்னையுஞ் சார்கவென்று சபித்தனன் தவத்தின் மிக்கான்.

(உத்தரகாண்டம்.)

இவற்றால் மேற்குறித்தவுண்மை இனிது புலனாதல் காண்க.

இன்னாத செயல் எவ்வகையாலும் தன்னைச் செய்தார்க்கே துன்பம் விளைக்கும் என்பது இதனால் கூறப்பட்டது.

314. பண்டு சுயோதனனைப் பாண்டவரே கட்டவிழ்த்துக்
கொண்டுவந்து விட்டார் குமரேசா—மண்டிவந்து
இன்னா செய்தாரை யொறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல். (௪)

குமரேசா! தமக்கு இன்னா செய்யவந்த துரியோதனை கட்டவிழ்த்துக்கொண்டுவந்து ஏன் ஐவர் இனியன செய்து விடுத்தார் எனின், இன்னா செய்தாரை ஒறுத்தல், அவர் நாண நன்னயம் செய்துவிடலேயாம் என்க.

நன்னயம்—இனியவை. நல் நயம் எனப் பிரித்துக் காணினும் பொருத்தமாம்.

நன்னயம் செய்துவிடல்—இன்புறும் நலங்களைச் செய்து விடுக. விடல் என்பது உடன்பாட்டு வியங்கோள்.

தனக்குத் துன்பம் செய்தாரை ஒருவன் கண்டிக்கலாவது அவர் தாமே நாணும் வகை அவர்க்கு இன்பம் செய்துவிடுதலே யாம் என்பதாம்.

தான் யாதும் செய்யாதிருக்க தனக்குத் தீது செய்தானுக்கு இன்னா செய்யினும் தீதாம் என்று மேலே கூறினார்; இனி அவன்பால் செய்ய வேண்டுவதுதான் யாது என்பார்க்கு இது கூறினாரென்க.

தமக்கு இன்னாதன செய்தானுக்கும் அறிவோர் இனியனவே செய்வார் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண் பாண்டவர்பால் உணரப்படும்.

கதை.

பாண்டவர்கள் வன வாசஞ் செய்யுங்காலத்தில், துரியோதனன் தன் செல்வ நலத்தையும் சிறப்பையும் அவர்க்குக் காட்ட விரும்பிச் சிறந்த அணிகளும் உயர்ந்த ஆடைகளும் அணிந்து மனைவிமக்களும் உரிய துணைவரும், கன்னன் சகுனி முதலிய நண்பரும் நால்வகைச் சேனையும் புடைசூழ எழுந்து வனம் புகுந்து அவர் தங்கியிருக்கும் இடத்தைச் சார்ந்தான். நறுவிய மலர்கள் நிறைந்த ஓர் இனிய வாவியை யணுகித் தமது படைகளோடு நீராடி நின்றான். தனது அழகிய மகளிரோடு அங்கு வந்திருந்த சித்திரசேனன் என்னும் வித்தியாதரனுக்கும் இவனுக்கும் வாதம் நிகழ்ந்தது. முதலில் சொற்போர் தொடங்கி முடிவில் விற்போர் நிகழ்ந்தது. அதில் அனைவரையும் வென்று துரியோதனனைக் கட்டிப் பிடித்துக்கொண்டு சித்திரசேனன் தேர்மேலேறி வான் மேல் போனான். வஞ்ச நெஞ்சன் அஞ்சி அலறினான். அவனது அபயக் குரலை அறன் மகன் கேட்டார். மனமிக இரங்கித் துணைவரை யனுப்பினார். காலினுங் கடுகி நால்வரும் ஓடினார். வான்வழிச் செல்வோன் மேல் வாளி தூவினார். அருச்சுனனைக் கண்டு தன் நட்புரிமையை நினைந்து தான் பிடித்திருந்த சிறையினை விடுத்து இனிய மொழிகள் புகன்று அவன் மகிழ்வுடன் சென்றான். துரியோதனனைக் கொண்டுவந்து தருமர் முன் விடுத்தார். இவரும், அவனை அன்புடன் தழுவி அரிய கனிகளையூட்டி யினிய உபசாரங்களைச் செய்துவந்தவரோடு வாழ்த்தியனுப்பினார். சொல்லுதற்கரிய பெருந் துன்பங்களைத் தான், அவர்க்குச் செய்திருந்தும் தனக்கு அவர் அன்று செய்த நன்றிகளை நினைந்து நினைந்து நாணங்கொண்டான். ஆயினும், காட்டிலிருந்து இவ்வளவு சுகமாக வாழ்கின்றார்களே என்னும் புல்லிய பொறாமையும் அவனுள்ளம் புகுந்திருந்தது. தமக்கு இன்னாதவற்றைச் செய்த கொடியவனான துரியோதனனுக்கும் இனியவற்றையே செய்து அன்புடன் விடுத்த தருமர் முதலிய ஐவரது மன நலங்களை அனைவரும் போற்றினார். விரிவைப் பாரதத்தில் காண்க.

தமக்கு இன்னா செய்தவர்க்கும் இனியன செய்வோரே பெரியோர் என்பது இதனால் கூறப்பட்டது.

315. திண்டோட் பவணனேன் சிற்றுயிர்நோய் கொண்டாலும்
கொண்டான் துயரம் குமரேசா—கொண்ட
அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போல் போற்றாக் கடை. (௫)

இ—ள்.

குமரேசா! சிற்றுயிர்கள் சிறிது துன்புறக் கண்டாலும் பவணமாதேவன் ஏன் பெரிதும் வருந்திப் போற்றினான் எனின், பிறிதின நோய் தம் நோய் போல் போற்றாக் கடை அறிவினான் ஆகுவது உண்டோ என்க. இல்லை என்பதை ஓகாரம் உணர்த்திநின்றது. அறிவுக்குப் பயன் இதில் அறிந்துகொள்க.

ன் நோய்—பிறிதோர் உயிர்க்கு உறும் நோய்.

போற்றாக் கடை—பேணாதவிடத்து.

பிறர் நோய் என்னாது பிறிதின் என்று அஃறிணையாற் கூறியது நுண்ணிய வுடம்புகளையுடைய எறும்பு புழு முதலியவற்றையும் தம் உயிர்போல் பேணவேண்டுமென்று கருதி என்க.

பிறிதோருயிர்க்கு வரும் நோயைத் தம் உயிர்க்கு வந்ததாக்க் கருதிக் காவாதவிடத்து மக்கள் அறிவினால் ஆவதொரு பயன் யாதும் இல்லை என்பதாம்.

மல், இருத்தல், கிடத்தல், நடத்தல் முதலிய செயல்களாலும் சிற்றுயிர்கள் வருந்தாவண்ணம் உற்றறிந்து ஒழுகவேண்டுமென்பது கருத்து. பிறவுயிர்களைத் தன் உயிர்போல் பேணாதவன் எவ்வளவு அறிவுடையவனாயினும் அவனை அறிவில்லாதவனாகவே கொள்ளவேண்டுமென்பது குறிப்பு.

பிறவுயிர்கள் சிறிது வருந்தினும் அறிவுடையார் பெரிதும் இரங்கி அவற்றைப் பேணுவரென்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை பவணமாதேவன்பால் உணரப்படும்.

கதை.

பவணமாதேவன் என்பவன் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தாதகி நாட்டிலே யிருந்த பூமி திலகம் என்னும் நகரிலிருந்து அரசுபுரிந்தவன். அருளும் பொறையும் அறிவும் நிறைந்தவன். எவ்வுயிரும் தன்னுயிர்போல் எண்ணியொழுகிய புண்ணிய சீலன். இவனுடைய அருமை மனைவிக்குச் சயமதி என்று பெயர். அவள்பால் நலமெலாந் திரண்ட ஒருகுலமகன் பிறந்தான். பருவமெய்தி அவன் இளவரசாய பின் அழகிய மகளிர் ஐவரை மணந்து அரும போகந் துய்த்தான். துய்த்துவருங்கால் பொய்கை ஒன்றில் பொருந்தியிருந்த ஓர் அன்னப் பார்ப்பை அவர்பால் தந்தான். அவர் பெற்றுப் பெருமகிழ்வுற்றுக் காலில் மணியணி புனைந்து பாலமுதூட்டி மார்போடணைத்து இனிது பேணிவந்தார். அதனை ஒரு நாள் அரசன் கண்டான். இனிது பேணினும் தாயினை யிழந்து மறுகி நிற்கும் அதன் நோயினையுணர்ந்தான். நொந்து துடித்தான். அந்தோ! "குழந்தாய் என்ன பாவஞ் செய்தாய்!! இவ் இளங் குஞ்சை ஏன் இவ்வாறு இனம் பிரித்து வருத்துகின்றாய். இது சாலவுந் தீது" என்று சொல்லி அதன்பாலணுகி அதனை உற்றுநோக்கி உள்ளங்கலங்கினான். மன்னனது பேரருளையும் மனப்பண்மையும் கண்டு மைந்தன் அஞ்சி நடுங்கி அதனை விரைந்தெடுத்துச் சென்று முன் இருந்த வாவியில் விடுத்தான். சிறு துயருற்ற ஒரு பறவைக்காகப் பெருந் துயரெய்திய தந்தையின் பண்பையே பின் தானும் கொண்டான். பிறவுயிரையும் தன்னுயிர்போலக் கருதிப் போற்றலே ஒருவன் அறிவுக்குப் பயன் என்பதை உலகம் பவணமாதேவன் பால் உணர்ந்து மகிழ்ந்தது. (விரிவைச் சிந்தாமணியில் காண்க.)

பிறவுயிர்களையும் தன் உயிர்போல் கருதிப் பேணாதவிடத்து ஒருவனது அறிவால் பயனில்லை என்பது இதனால் கூறப்பட்டது.

316. பற்றியகை அன்னம் படுதுயர்கண் டேனுடனே
கொற்றநளன் விட்டான் குமரேசா—எற்றேனும்
இன்னா வெனத்தான் உணர்ந்தவை துன்னாமை
வேண்டும் பிறன்கட் செயல் (௬)

குமரேசா! தன் கையிற் சிக்கிய அன்னம் அடைந்த இன்னலைக் கண்டு இரங்கி ஏன் நளன் அதனை விடுத்தான் எனின், இன்னா என தான் உணர்ந்தவற்றை பிறன்கட் செயல் துன்னாமை, வேண்டும் என்க. துன்னல்—நெருங்கல்.

பிறன்கண் செயல்—பிறனிடத்துச் செய்தலை.

துன்னாமை வேண்டும்—பொருந்தாமை வேண்டும்.

துன்பமென்று தான் உணர்ந்தவற்றைப் பிறனிடத்து ஒருவன் செய்யலாகாதென்பதாம்.

மேல், பிறவுயிரையுந் தன் உயிர்போல் பேணி ஒழுகுதலே ஒருவன் அறிவுக்குப் பயன் என்றார்; இதில், துன்பமானவை என்று உணர்ந்தவற்றை எவரிடமும் அவன் செய்யலாகாதென்றார்.

தாம் துன்பமென்று உணர்ந்ததை அறிவுடையார் பிறரிடஞ் செய்யார் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இது நளன்பால் உணரப்படும்.

கதை.

நளன் ஒருநாள் மாலையில் தனது அழகிய பூஞ்சோலையில் புகுந்து உலாவினான். அங்குள்ள விரும்பிய வளங்கள் பலவுங்கண்டு முடிவில் அதனிடையே அமைந்திருந்த பலாத் தடத்தை யணுகினான். பொன்னிறமுள்ள தெய்வ அன்னம் ஒன்று தழைவுறு சிறகரால் தன் தலையினை மறைத்து உடல் வளைந்து ஒரு கால் ஊன்றி செந்தாமரை மலரொன்றில் நின்று தூங்கிற்று. அந்த அரச அன்னத்தின் எழிலையும், நலத்தையும், வியந்து பதுங்கிச் சென்று அரசன், தன் கையாற் பற்றினான். கைப்படு சிறை அன்

னம் கலங்கி வெருவிப் புலம்பித் துடித்தது. அது துன்புறுவதைக் கண்டு மன்னனுந் துன்புற்று என்ன தீங்கு செய்தேன் என்று தன்னை நொந்தான். தெய்வ அன்னம் ஆதலால் அதனை நோக்கி இன்னுரை சில புகன்று நன்னயஞ் செய்து ஏகுதி ஏகென இசைந்து விடுத்தான். இன்னா எனத் தான் உணர்ந்தபின் அறிவோர் அதனைப் பிறர்மாட்டுச் செய்யார் என்பதை உலகம் நளன்பால் உணர்ந்தது. விரிவை நைடதத்தில் காண்க.

கைப்படு சிறையனங் கலங்கி வாய்வெரீஇத்
துப்புறழ் தோலடி துடிப்பத் துன்புற
றெய்ப்பொடு சிறையடித் தேங்க லாமையின்
மைப்புய லனையகை மலர்ற கொத்திறரல். (1)

அளிக்கொரு கடலன்னான் அதனைக்கண்டுகண்
துளித்திடத் தன்புனற் றுவலை வீழ்தலிற்
றளிர்த்தமென் சிறையனந் தளர்வு நீங்கியுட்
களித்தது காவலன் கருணை நோக்கியே. (2)

ஆகுலத் துடன்மட வனத்தை நோக்கி நின்
மேக்குறு பொன்னிறச் சிறகர் நோக்குறும்
மோகமே பிடித்தனன் முழுதும் நோக்கினன்
ஏகுதி யேகென இறை விடுத்தனன். (3)

(அன்னத்தைக் கண்ணுற்ற படலம்.)

இவற்றால் மேற்குறித்த உண்மை இனிது தெளிவாதல் காண்க.

உணர்வுடையார் பிறவுயிர்கட்குத் துயர் வினை செய்யார் என்பது இதனால் கூறப்பட்டது.

317. நாதும் உயிரென்றேன் நாணிக் குசேலர்முன்
குந்தி நடந்தார் குமரேசா—முந்தும்
எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்
மாணாசெய் யாமை தலை. (எ)

இ—ள்.

குமரேசா! சிற்றுயிர்களும் சிறிதும் வருந்தாவகை தெரிந்து என் குசேலர் முன் சென்றார் எனின், எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தான் ஆம் மாணா செய்யாமை என்க.

மாணா என்றது மாண்பு இல்லாதன என்று அறவோர் விலக்கியுள்ள இழி செயல்களை. எனைத்தானும்—சிறிதாயினும்.

மனத்தான் ஆம் மாணா—மனம் அறிந்த துன்பங்களை.

மனத்தானும் என்று பாடங்கொண்டால் பிறர்க்குத் துன்பமான செயல்களை நெஞ்சினாலும் நினைக்கலாகாது என்று கொள்க.

எக்காலத்தும் யாவர்க்கும் சிறிதேனும் துன்பமான செயல்களை மனமாரச் செய்யாமையே ஒருவனுக்கு தலையான அறம் என்பதாம்.

செல்வம் அதிகார முதலிய நலங்களை யெய்தித் தன் செல்வாக்குச் செல்ல வல்ல காலத்தும் என்பார் “எஞ்ஞான்றும்” என்றார். யார்க்கும் என்றது எளியவர் மெலியவர் முதலிய யாவர்க்கும் என்பது கருதி.

ஒரு காலத்தும் ஓரிடத்தும் ஒருவருக்கும் எவ்வகையானும் துன்பமான செயல்களை ஒரு சிறிதும் ஒருவன் செய்யலாகாதென்பது கருத்து. இவ்வுண்மை குசேலர்பால் காணப்படும்.

குசேலர் கண்ணனைக் காணக் கருதி துவாரகையின் இராச வீதியில் செல்லுங்காலத்தில் இரு புறங்களிலும் வரிசையாக வைத்திருந்த குளிர்ந்த மரங்களின் நிழலில செல்லாமல் வெளியிடையே சென்றார். நிழல்வழி நடந்தால் வெயிலுக்கு ஒதுங்கி ஆங்கு அடைந்திருக்கும் ஊர்வனவாகிய சிற்றுயிர்கள் துன்புறுமே என்று இரங்கித் தன் மேனி மேல் வெயில்பட வெம்பியும்

உயிர்களைப் பேணினார். வெயிலின் கொடுமைக்கு ஆற்றாது இரு கரங்களையும் விரித்துத் தம் தலை மீது கவித்துக்கொண்டு [illegible] நடந்தார். எனைத்தானும் மனத்தானும் இன்னலை அறிவோர் எவ்வுயிர்க்கும் செய்யார் என்பதை உலகம் இவர்பால் உணர்ந்தது.

முன்னும் பார்க்கும் முதிரொளி தோன்றலால்
பின்னும் பார்க்கும் பெருநிலத் தாருயிர்
உன்னும் பார்க்கும் உறுவர் குழாமெலாம்
இன்னும் பார்க்க எழுந்திடும் சீர்த்தியான். (1)

சீதநீழற் செலிற் சிற்றுயிர்த் தொகை
போதச் சாம்புமென் றெண்ணிய புந்தியான்
ஆதவந் தவழ் ஆறு நடந்திடுங்
காதலங்கை விரித்துக் கவித்தரோ. (2)

இவற்றால் மேற் குறித்த வுண்மை இனிது தெளிவாதல்

இன்னாத செயல்களைச் சிறிதும் யார்மாட்டும் செய்யாமையே பேரறம் என்பது இதனால் கூறப்பட்டது.

318. மண்டுதுயர் தானறிந்தும் மாரிதத்தன் என்பிறர்க்குக்
கொண்டுசெய்தான் இன்னா குமரேசா — கொண்டுநின்ற
தன்னுயிர்க் கின்னாமை தானறிவான் என்கொலோ
மன்னுயிர்க் கின்னா செயல். (அ)

குமரேசா! துன்பத்தைத் தான் அனுபவித்து அறிந்தும் மாரிதத்தன் ஏன் பிறர்க்கு அதனைச் செய்தான் எனின், தன் உயிர்க்கு இன்னாமை தான் அறிவான், மன் உயிர்க்கு இன்னா செயல் என்கொலோ என்க.

என் கொலோ என்றது அறிந்திருந்தும் அறிவிழந்து செய்கின்ற அவனது அறியாமைக்கு இரங்கி என்க.

பிறர் செய்யும் இன்னல்கள் தன் உயிர்க்குத் துன்பமாந் தன்மையை அனுபவித்து அறிகின்றவன் பிறவுயிர்கட்கு அவற்றைச் செய்தல் யாது காரணத்தாலோ என்பதாம்: அறியாமையே காரணம் என்பது கருத்து.

அறிவிலிகளே பிறவுயிர்கட்குத் துன்பமான செயல்களைச் செய்வார் என்பதும் அறிவறிந்த மக்கள் அவற்றையாண்டுஞ் செய்யார் என்பதும் இதில் உணர்த்தப்பட்டன. இவ்வுண்மை மாரிதத்தன்பால் உணரப்படும்.

மாரிதத்தன் என்பவன் இற்றைக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் மகத நாட்டிலே இராசமாபுரம் என்னும் நகரிலிருந்து அரசு புரிந்தவன். திண்ணிய அரசனாயினும் நுண்ணிய அறிவில்லாதவன். எவர் எதைச் சொல்லினும் அதை நம்பியுழல்வான். இவன், வசந்தகாலமொன்றில் தன் படைகள் புடைசூழ ஓர் அழகிய பூஞ்சோலைக்குட் சென்றான். அங்கே தொங்கிக்கொண்டிருந்த தென்னங்குரும்பை யொன்று காற்றிலலைப்புண்டு இவன் தலைமேல் விழுந்தது. அதனால் நொந்து துடித்தான். குடிகள் சிலர் வந்து அரசே! இந்த இன்னல் தேவதையாகிய தேவி செய்த ஏவல் ஆதலால் அவள் மகிழுமாறு பூசைசெய்யவேண்டுமென்றார். அதற்கு என் செய்வதென்றான். பன்றி, கோழி, முதலியவற்றைக் கொன்று பலியிடுக என்றார். அவ்வாறே செய்தான். அவ்வமையம் அவ்வழியே சென்ற அபயருசி என்னும் முனிவரொருவரைக் கண்டான். அவரையும் கொணர்ந்து நரபலியிட்டால் தேவி மிக மகிழ்வாள் என்று கருதிச் சண்டகருமன் என்னும் ஒரு தண்டத் தலைவனை விடுத்து அவரைக் கொண்டுவரும்படி செய்து காளிமுன் நிறுத்தி வாளினை எடுத்தான். அப்பெரியவர் சிறிதும் கலங்காமல் நின்று புன்னகை செய்தார். வெட்

கவனித்த அரசன் வியந்து முன்வந்தான். என் சிரித்தாய் யென்று எதிரே நின்றான். "இளமைப் பருவத்தில் உன் கையில் வைத்திருந்த தேங்கா யொன்றை வினோதமாக ஒருவன் தலையில் வீழ்த்தினாய். அவ்வினைப்பயனே இன்று உன் தலையில் அது விழும்படி செய்தது. அதற்காக இன்று பலவுயிர்களைக் கொன்றாய். இக் கொலையால் நீ எத்தனை தலைமுறை கொலையுண்டு கழிவாயோ என்று கருதியும், உன் உயிர்க்கு உற்ற அச்சிறு துன்பத்தை உணர்ந்தும் பிறவுயிர்கட்கு இப்பெருந்துன்பத்தைப் புரிகின்ற உன் அறியாமைக்கு இரங்கியும், யான் நகைத்தேன்" என்றார். கேட்டான் அரசன். அஞ்சி நடுங்கி அவர் அடியில் விழுந்தான். அருளுடையனாகி அன்றே துறந்தான். மன்னுயிர்க்கு இன்னாசெயல் மடமையாம் என்பதும் அதனை அறிந்தோர் செய்யார் என்பதும் இவன்பால் உணர நின்றன. விரிவை யசோதரீயத்தில் காண்க.

பிறவுயிர்கட்குத் துன்பஞ்செய்வோர் அறிவிலிகளே யாவர் என்பது இதனால் கூறப்பட்டது.

---

319. கூடல்சேர் கோவலனைக் கொன்றோன் இராகுலன்பின்
கூடினார் துன்பேன் குமரேசா—நாடிப்
பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா
பிற்பகற் றாமே வரும். (௯)

இ.—ள்.

குமரேசா! முன் கோவலனைக் கொல்வித்த காவலனும் இராகுலனும் பின் ஏன் தாமே கொலையுண்டிறந்தார் எனின், பிறர்க்கு இன்னா முற்பகலிற் செய்யின் தமக்கு இன்னா பிற்பகலில் தாமே வரும் என்க.

முன்பகல், பின்பகல், என்பன ஒரு பகலின் முற்பகுதியையும் பிற்பகுதியையும் என்க.

பிறர்க்குத் துன்பமானவற்றை ஒருபகலின் முற்பாகத்தில் ஒருவன் செய்வானாயின் தமக்குத் துன்பமானவை பிற்பகலில் அவர் செய்யாவிடினும் தாமே வரும் என்பதாம்.

செய்த தீவினை செய்தவனையே சென்று சேர்தல் ஒருதலையாதலால் தாமேவரும் என்றார். பிற்பகல் என்றது விரைவில் வரும் என்பதை உணர்த்துதற்கு என்க.

துன்பமான செயலைப் பிறர்க்கு ஒருவன் செய்யின் அச்செயல் அவனுக்கே பின்பு துன்பமாய் முடியும் என்பது இதினுணர்த்தப்பட்டது. இவ்வுண்மை நெடுஞ்செழியன் கண்ணும் இராகுலன்பாலும் உணரப்படும்.

கதை 1.

நெடுஞ்செழியன் ஆராயாமல் கோவலனை முன்பு கொல்லும்படி செய்தான். அதனால் பின்பு தானே துன்புற்று மாய்ந்தான். இன்னா, தன்னைச் செய்தானையே சென்று பற்றித் துன்புறுத்தும் என்பதை உலகம் இவன்பால் நன்குணர்ந்தது.

> கோப்பெருந் தேவி கொடுவினை யாட்டியேன்
> யாவுந் தெரியா இயல்பினே னாயினும்
> முற்பகற் செய்தான் பிறன்கேடு தனகேடு
> பிற்பகற் காண்குறாஉம் பெற்றிகாண். —சிலப்பதிகாரம்.

மன்னன் தேவியை நோக்கிக் கண்ணகி கூறிய இவ்வுண்மை மொழிகளால் மேற்கூறித்த உண்மை தெளிவாதல் உணர்க.

கதை 2.

இராகுலன் என்பவன் காந்தார நாட்டிலே இடவயம் என்னும் திருநகரிலிருந்து அரசுபுரிந்த அத்திபதி என்னும் அரசனுடைய புதல்வன். தாய் பெயர் நீலபதி. இவன், அறிவினும், ஆண்மையினுஞ் சிறந்து பருவமெய்தினன். இலக்குமி என்னும் ஓர் உத்தமியை மணந்து இன்பந்துய்த்து இனிது வாழுங்கால் பிரமதருமர் என்னும் முனிவரொருவருக்கு அமுதருத்த விரும்பி விழுமிய வுணவுகளை விரைவில் ஆக்குக என்று ஆசன் என்னும் மடைத்தொழில் வல்லானுக்கு முதல்நாள் ஆணை தந்தான். மறு

நாள் அவன் சிறிது தாமதமாகிவந்து அட்டில்புகுந்து அடுதொழில் முயன்றான். முனிவருக்கு வேண்டிய இனிய உணவுகளை இன்னும் ஆக்கவில்லையா! என்று இராகுலனை முனிந்தான். அச்சத்தால் அவன் அடிதடுமாறி அங்கிருந்த நன்கலங்கள் ஒலிபட விழுந்தான். விழுந்ததைக்கண்டும் இரங்காமல் தனது வாளால் அவனது தோளும் தலையும் துணிபட வெட்டினான். இவனும் பாம்பொன்று கடிக்கப் பின்பு பதைத்து மாய்ந்தான். தான் செய்திருந்த நல்வினைப்பயனால் கிள்ளிவளவன் என்னும் சோழ மன்னனுக்குப் பிள்ளையாய்ப் பிறந்து பெரியனாகிச் சிறந்து விளங்கிவருங்கால காஞ்சனன் என்னும் வித்தியாதரன் ஒருவன் தன் மனைவியை விரும்பினான் என்று மாறுபட மதித்து இவனது தோளும் தலையும் துணிபடத் தன் வாள்கொண்டு வெட்டினான். இவனும் துடித்துயிர் துறந்தான். முன்பு தன் பணியாளனைத் தான் கொன்றபடியே பின்பு தான் கொலையுண்டிறந்தான். பிறர்க்கு இன்னா முற்பகல் செய்யின் தமக்கு இன்னா பிற்பகல் தாமேவருமென்பதை உலகம் இவர்பால் உணர்ந்தது. இதன் விரிவை மணிமேகலையில் காண்க.

பிறர்க்கின்னா செய்தலிற் பேதைமை யில்லை
பிறர்க்கின்னா தென்று பேரிட்டுத்—தமக்கின்னா
வித்தி விளைத்து வினைவிளைப்பக் காண்டலிற்
பித்தும் உளவோ பிற. (அறநெறிச்சாரம்.)

அல்லித்தாள் அற்றபோதும் அறாதநூ லதனைப் போலத்
தொல்லைத்தம் உடம்புநீங்கத் தீவினைதொடர்ந்து நீங்காப்
புல்லிக்கொண் டுயிரைச்சூழ்ந்து புக்குழிப்புக்குப் பின்னின்
றெல்லையில் துன்பவெந்தீச் சுட்டெரித்திடுங்க ளன்றே.

மணி.)

ஒருவன் பிறர்க்குத் துன்பஞ்செய்யின் தனக்கே பின்பு அது துன்பமாம் என்பது இதனால் கூறப்பட்டது.

320. வண்டுகட்கு நோய்செய்த மாண்டவியர் பின்கொடுநோய்
கொண்டுநொந்தார் என்னே குமரேசா — மண்டிப்
நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர். (௰)

இ—ள்.

குமரேசா! வண்டுகட்கு முன் நோயினைச் செய்த மாண்டவியர் பின் தாம் கொடுநோய் கொண்டு என நொந்தார் எனின், நோய் எல்லாம் நோயினைச் செய்தார் மேலவாம் ஆதலால் நோயின்மை வேண்டுபவர் நோயினைச் செய்யார் என்க.

நோய் எல்லாம் — துன்பங்களெல்லாம்.
நோய் செய்தார் மேலவாம் — பிறிதோருயிர்க்குத் துன்பங்களைச் செய்தார்கண்ணே சேர்வனவாம்.

துன்பங்களெல்லாம் பிறவுயிர்கட்குத் துன்பங்களைச் செய்தார்கண்ணே சேர்வனவாகும்; ஆதலால் துன்பமின்மையை விரும்புகின்றவர் பிறிதோருயிர்க்குத் துன்பத்தைச் செய்யார் என்பதாம்.

தம் உயிர்க்கு இன்பத்தை விரும்புகின்றவன் பிறவுயிர்க்குத் துன்பத்தைச் செய்யலாகாது என்பது குறிப்பு.

முற்பகலில், பிறர்க்கு ஒருவன் துன்பம் செய்யின், பிற்பகலில் அந்து அவனுக்கே துன்பமாய் வரும் என்று மேலே கூறினார்; இதில், அவ் வுண்மையை உணர்ந்து தனக்குத் துன்பமின்மையை வேண்டுகின்றவன் எவ்வுயிரிடத்தும் அதனைச் செய்யாதிருக்கவேண்டுமென்று உணர்த்தினார்.

நோய் செய்தவரே நோயினை அடைவார் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை மாண்டவியர்பால் உணரப்படும்.

கதை.

மாண்டவியர் என்பவர் மறையவர் மரபினர். இவரது காலம் இற்றைக்கு ஐயாயிரம் வருடங்கட்கு முன்னராகும். இவர், இள

மைப் பருவத்தில் அளவில்லாத அல்லல்களைப் பிறவுயிர்கட்குச் செய்தார். மீன் தவளை முதலிய சில நீர்வாழினங்களையும் வண்டு தும்பி முதலிய சில புன்சிறு பறவைகளையும் பிடித்துக் கூரிய முட்களை அவற்றின் உடல்களிற் புகுத்தி அவை துடிப்பதைக் கண்டு இவர் நகைத்துக் களிப்பர் பருவமுற்றபின் பலகலை தேர்ந்து நல்லவரானார் இல்லறந் துறந்து துறவறம் புகுந்தார். தனியிடமொன்றில் இனிதுற அமர்ந்தார். பொறிகளை யடக்கி இறையருள் நாடினார். இவர் இவ்வகை யிருக்கையில் சாளுவ தேசத்து அரசனது மாளிகையில் கள்ளர் சிலர் புகுந்து கொள்ளை செய்து மீண்டு இவரிருக்கும் பாழ் மண்டபத்தை யடைந்து கிடைத்த பொருள்களைப் பங்கு செய்துகொண்டிருந்தார். உடனே அவ்வரசனுடைய போர்வீரர்கள் பின்தொடர்ந்து குறித்த இடத்தை அடைந்தார். கள்வர் அங்கிருந்த புதரொன்றிற் புகுந்து மறைந்தார். வந்த வீரர்கள் அங்குக் கண்மூடி யோகத்திலிருந்த இவரைக் கண்டு பக்கத்தில் சிதறிக்கிடந்த அணிகளையும், மணிகளையுந் தெரிந்து இவரைக் கள்வர் தலைவனென்றே கருதிப் பிடித்துத் தம் காவலன்பால் காட்டினார். காவலன் சினந்து இவரைக் கழுவில் ஏற்றும்படி கட்டளையிட்டான். உடனே ஏற்றினார். முனிவர் கதறித் துடித்தார். உதிரம் சிதறித் துளித்தது. வழுவில்லாத முனிவரைக் கழுவில் ஏற்றுதற்குக் காரணம் யாதென்று தேவர் சிலர் காலனை வினவினார். இளமைப் பருவத்தில் வண்டுகளுடல்களில் முட்களை யேற்றினமையே காரணமென்று காலன் கூறினான். அவ்வுண்மையைத் தம் மெய்யுணர்வால் முனிவரும் உணர்ந்தார். அறியாப்பருவத்தில் அறிவில உயிர்கட்குச் சிறுநோய் செய்த அப்பெரியாரும் பின் பெருநோயுற்றார் நோயெல்லாம் நோய் செய்தார் மேலவாம் என்பதை அறிஞர் சிலர் இவர்பாலுணர்ந்து பிறவுயிர்கட்கு நோய் செய்யாதொழுகினார். அதனால் பின் நோயிலராய் உயர்ந்தார். (இதன் விரிவை மாண்டவியத்தில் காண்க.)

தனக்குத் துன்பமின்மையை விரும்புகின்றவன் பிறர்க்குத் துன்பஞ் செய்யலாகாதென்பது இதனால் கூறப்பட்டது.

(இவ் அதிகாரத்தின் தொகைப்பொருள்.)

எதுவரினும் பிறர்க்கு இன்னாதவற்றைப் பெரியோர் செய்யார். சினந்து ஒருவன் தமக்குத் துன்பஞ் செய்யினும் மாறி அவன்பால் அதனை உயர்ந்தோர் செய்யார். காரணமின்றித் தனக்குத் துன்பஞ் செய்தவனிடத்தும் தான் அதனைச் செய்யாமையே ஒருவனுக்கு நன்மையாம். தனக்கு இன்னாதன செய்தார்க்கு ஒருவன் இனியனவே செய்துவிடின் அதுவே அவர்க்குத் தண்டனையாம். பிறிதின் நோயைத் தன் நோய்போற் போற்றுதலே ஒருவன் அ[illegible]டக்குப் பயனும். தான் துன்பம் என்று உணர்ந்தவை ஒருவன் யாண்டுஞ் செய்யலாகாது. என்றும் எவர்க்கும் சிறிதேனும் துன்பஞ் செய்யாதொழுகுதலே ஒருவனுக்குத் தலையாய அறமாம். தனக்குத் துன்பமென்று உணர்ந்ததொன்றைப் பிறவுயிர்க்குச் செய்பவன் உணர்வில்லாதவனே யாவன். முற்பகலில் பிறருக்கு ஒருவன் துன்பஞ் செய்யின், பிற்பகலில் அஃது அவனுக்கே வரும். துன்பங்களெல்லாம் தம்மைச் செய்தாரைக் கண்ணே பின் சேர்வனவாகும். தனக்குத் துன்பமின்மையை விரும்புகின்றவன் பிறர்க்கு அதனைச் செய்யலாகாது என்பனவாம்.

32-வது இன்னா செய்யாமை முற்றிற்று.

௩௩-ம் அதிகாரம் கொல்லாமை.

அஃதாவது யாதோர் உயிரையும் எவ்வகையானுங் கொல்லுதலைச் செய்யாமை. முனிவிகந்து யாவர்மாட்டும் இனியவை புரிந்து புனிதமெய்தியவர்க்கே கொல்லாமை என்னும் இந்நல்லறத்தைக் கொண்டொழுக வலிமையுமாதலால் வெகுளாமை இன்னா செய்யாமைகளின் பின் இது வைக்கப்பட்டது.

321. கொன்றிழிந்த வேடன்பின் கொல்லாமை யாலுயர்ந்தோன்
குன்றுஇன் புற்றன் குமரேசா — என்றும்
அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல்
பிறவினை யெல்லாந் தரும். (௧)

குமரேசா! கொல்லுதலைச் செய்து இழிந்துநின்ற வேடன் பின் கொல்லாமையால் ஏன் உயர்ந்து இன்புற்றான் எனின்? அறவினை யாது எனின் கொல்லாமை; கோறல், பிறவினை யெல்லாம் தரும் என்க. பிறவினை என்றது—பாவச் செயலை.

கோறல் பிறவினை எல்லாம் தரும்—கொல்லுதல் பாவச்செயல்கள் எல்லாவற்றையும் கொடுக்கும்.

கொல்லாமையே அறச்செயல்; கொல்லுதல் பாவச்செயல்கள் எல்லாவற்றையும் கொடுக்கும் என்பதாம்.

கொல்லாமை ஒன்றனே எல்லா அறங்களின் பயனையும் ஒருவன் கொள்ளலாம் என்பதூஉம், எல்லாப் பாவங்களின் பயனையும் கொல்லுதல் ஒன்றே கொடுத்துவிடும் என்பதூஉம் கூறியபடி.

அறம் பாவங்களிவையென தேவர் அருளிய அருமையை இதில் ஆய்ந்து உணர்க. எல்லா அறங்களின் பயனையும் ஒருவன் ஒருங்கே கொள்ளவேண்டுமாயின் கொல்லாமை என்னும் விரதத்தை அவன் கொள்ளவேண்டும் என்பது குறிப்பு.

கொல்லுதல் என்னும் தின்மையை விடுத்துக் கொல்லாமை என்னும் நன்மையை ஒருவன் கொள்வானாயின் எல்லா நலங்களையும் அவன் எளிதிலெய்துவான் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை விபுலனால் உணரப்படும்.

கதை.

விபுலன் என்பவன் ஓர் வேடுவர் மரபினன். இமயமலையை அடுத்திருந்த ஏமகூடம் என்னும் வனத்தில் இருந்தவன். கொல்லுதல் என்னும் புல்லிய செயலையே கொண்டு உயிர் வாழ்ந்தான். அருள் வள்ளலாகிய அசலமதேவர் அப்பெருவனத்துட் புகுந்த பொழுது இக்கொடியவனைக் கண்டார். அருள்மிக்கொண்டார். கொல்லுதலின் தீமையையும், கொல்லாமையால் எய்தும் நன்மை

யையும் அவன் உணருமாறு உணர்த்தினார். அக்கேள்வியால் அவனும் உணர்ந்தான். அன்றுமுதல் கொல்லாத விரதங்கொண்டான். அதனால் எல்லா நலன்களும் கண்டான். முன்ன தான் கொன்றதால் எய்திய தீமைகளெல்லாம் நீங்கின. எல்லா அறங்களின் பயனையும் பின் அவன் கொல்லாமை ஒன்றால் எய்தினான். கொல்லாமையைக் கொண்டவன் எல்லா அறங்களையும் ஒருங்கே கொண்டவனாவான் என்பதை உலகம் இவன் பாலுணர்ந்தது. இதன் விரிவை முனிவரர்க்கதையில் காண்க.

ஆனையடியில் அடங்கா அடியில்லை
தானதுபோல் நிறைகின்ற தன்மைதான் — ஊனுயிரைக்
கொல்லா அறத்தின் கொழுநிழற்கே யுள்ளடங்கும்
எல்லா அறமும் இசைந்து. (பெருந்தேவனார்.)

கொல்லாமையே அறவினையாம் கொல்லுதல் பாவமாம் என்பது இதனால் கூறப்பட்டது.

322. தண்டார் இயக்கோடன் சத்தன் பகுத்துண்டு
கொண்டார மகிழ்வேனா குமரேசா — கொண்ட
பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாந் தலை. (௨)

குமரேசா! நல்லியக்கோடன் சத்தப்பிரத்தன் என்னும் இவர் ஏன் பகுத்துண்டு மகிழ்வுற்றார் எனின், பகுத்து உண்டு பல் உயிர் ஓம்புதல் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை என்க.

பகுத்து உண்டு — உண்பதனைப் பசித்த உயிர்கட்குப் பகுத்துக்கொடுத்து உண்டு. வினைக்கேற்ற செயப்படுபொருள் இதில் வருவிக்கப்பட்டது. பல் உயிர் ஓம்புதல் — பல உயிர்களையும்

பேணல். ஊர்வன நீர்வாழ்வன முதலிய எல்லா வுயிர்களையும் என்பார் பல் உயிர் என்றார். இதில் முற்றும்மை தொக்கது.

எல்லாம் தலை—எல்லாவற்றினுஞ் சிறந்தது.

உண்டு ஓம்புதல் எல்லாவற்றுள்ளும் தலை என்று கொண்டு காண்க. பகுத்துக் கொடுக்கவும் பரிந்து ஓம்பவும் தான் இருந்து வாழவேண்டுமாதலால் அவற்றிற்கிடையே தனக்குரிய உண்டு என்பது உற்று நின்றது. ஓம்புதல் இன்றேல் அவன் ஒழிதல் நன்று என்பது குறிப்பு.

தமக்குக் கிடைத்த உணவைப் பசித்தவர்க்குப் பகுத்துக் கொடுத்து எஞ்சியதை உண்டு பல உயிர்களையும் பாதுகாத்தல் நூலோர் திரட்டிய அறங்களெல்லாவற்றினும் தலையாய அறம் என்பதாம்.

பசித்த மக்கட்குத் தம் உணவைப் பகுந்து ஊட்டிப் பல் உயிர்களையும் பரிந்து பேணுவோரே சிறந்த அறமுடையவராய் உயர்ந்து விளங்குவரென்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை நல்லியக்கோடனிடமும் சத்துப்பிரதன்பாலும் உணரப்படும்.

நல்லியக்கோடன் என்பவன் இற்றைக்குப் பல நூற்றாண்டுகட்கு முன்னர்த் தொண்டை நாட்டிலிருந்த ஆமூர் என்னும் ஊரிலிருந்து திருவுடன் விளங்கிய ஒரு குறுநில மன்னன். நல்ல சீலமுள்ளவன். இரக்கமும், ஈகையும் இவன்பால் இயல்பாகவே அமைந்திருந்தன. அருவாவடதலை நாட்டிலும் இவனுக்கு உரிமையான ஊர்கள் பல இருந்தன. ஊருணி நீர்போல் இவனது பெருஞ்செல்வம் எல்லா உயிர்களும் இன்புற நின்றது. பாரி, பேகன், அதிகமான், நள்ளி முதலிய வள்ளல்கள் எழுவருக்கும் பிற்பட்டவன். பேருபகாரி. அக்காலத்தில் இவனுக்கு ஒப்பான கொடையாளர் ஒருவரும் இல்லை. இவனது அருங்குணங்களையும் பகுத்துண்டு பல்லுயிரோம்பிய பெருந்தகைமையையும் நல்லூர்

நத்தத்தனார் என்னும் புலவர் திலகர் புகழ்ந்து பாடியுள்ளார். தனது ஈகையாலும், இரக்கத்தாலும் மேலான அறமுடையனாய் இவன் மேன்மை பெற்றனன். விரிவை சிறுபாணாற்றுப்படையில் காண்க.

> கொழுசமங் கடந்த எழுவுறழ் திணிதோள்
> எழுவர் பூண்ட ஈகைச் செந்நுகம்
> ஒருதான் தாங்கிய உரனுடை நோன்றாள்
> களிற்றுத் தழும்பிருந்த கழல்தயங்கு திருவடிப்
> பிடிக்கணம் சிதறும் பெயன்மழைத் தடக்கை
> நல்லியக் கோடனை நயந்து சென்றேனை
> அரிபசி வருத்தம்விடப் பொழிந்தவுட்
> டறுகட் பூட்கைக் கயங்குபனி மருங்கிற்
> சிறுகண் யானையொடு பொருந்தேர் பெய்தி
> யாமவன் நின்றும் வருதும் நீவிரும்
> செல்வீ ராயின் சீர்பல பெறுவீர்.

இது, நல்லியக் கோடனை யடைந்து பரிசில் பெற்று மீண்ட பாணனொருவன் மற்றொருவனை நோக்கிக் கூறியதாக அவன் பகுத்துண்டு உயிரோம்பிய திறம் இதனால் பகுத்துணரப்படும்.

கதை 2.

சக்துப்பிரத்தன் என்பவன் ஓர் உத்தம உணர்வினன். சிலர் வேதியன் என்பர். சிலர் இவனை அரசமரபினன் என்பர். சுமதி என்னும் மனைவியோடுகூடித் தனியிடமொன்றில் இனிதுற வாழ்ந்தான். மிகவும் வறியவன். சுகேசன் என்று இவனுக்கு ஒரு குமரனிருந்தான். அவனும் பருவமெய்திக் கமலை என்னும் ஒரு கன்னியை மணந்தான். தனது உரிமை மனைவியையும் இனிய மகனையும் அருமை மருகியையும் இவனே ஆதரித்து வந்தான். பொருள்பெறு முயற்சியில் புகாமல் அருளையே நாடி நின்றான். அதனால் மிகவும் வறியவனானான். ஆயினும் செம்மையில் வழுவாது நன்மையில் நின்று பல்லுயிரோம்பி இயன்ற அளவில் இல்லறம் புரிந்தான். அரிதின் முயன்று வந்து

ஆங்கவ்வுணவைக் காக்கை முதலிய பறவைகளுக்கேனும் ஊட்டியபின்பே இவன் உண்டு மகிழ்வான். ஓரறிவுயிர்க்கும் இவன் ஓர் ஊறுசெய்தறியான். பிறவுயிர்கள் வருந்தக்கண்டால் இவன் உள்ளம்பதைத்துக் கண்ணீர் உகுப்பான். பஞ்சகாலமொன்றில் இவன், ஐந்துநாட் பட்டினி கிடந்தான். ஆறாவதுநாள் மாலையில் அரிதாய்க் கிடைக்கப்பெற்ற அரிசிமாவைப் பங்குசெய்து நான்கு சிறுபாகங்களாக்கி மனைவி முதல் மூவருக்குங் கொடுத்துத் தானும் உண்ணமுயன்றான். இவனது மனநிலைமையை உணர விரும்பி தருமதேவதை ஓர் அதிதிபோல வந்து அருகில் நின்றது. தான் உணவை எடுத்ததை அதற்கு உவந்து கொடுத்தான். அதுகொண்டு உண்டு பின் சாலாதென்றது. மனைவியும் தன்னதை மாறாது கொடுத்தாள். அதுவும் போதாதென்றது. மகனும், மருகியும் உரியதை முறைமுறை கொடுத்தார். அனைத்தையும் உண்டு இவரது அருட்குணங்களை வியந்து அவ்வறக் கடவுளும் அகமகிழ்ந்து அகன்றது. இவரனைவரும் அன்றே ஆருயிர் துறந்தார் பின் பிறவா இன்பம் பெற்று மகிழ்ந்தார். பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதலே அறங்களெல்லாவற்றுள்ளும் சிறந்ததென்பதை உலகம் இவர்பாலுணர்ந்து தெளிந்தது. விரிவைப் பாரதத்தில் காண்க.

மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே. மணிமேகலை

உயிர்களைப் பேணுதலே தலையாய அறமென்பது இதனால் கூறப்பட்டது.

323. கண்ட பசுவொன்றைக் காப்பாற்ற ஆமகனும்
கொண்டான்பொய் என்னே குமரேசா—கண்டறிந்தால்
ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று. (௩)

குபேரசா! பசு ஒன்றைக் கொலையுறாமல் காக்கும்பொருட்டு ஆபுத்திரனும் ஏனை பொய்மையைப் பொருந்தினனெனின், ஒன்றாக நல்லது கொல்லாமை; பொய்யாமை மற்று அதனை பின்சார நன்று என்க. ஒன்றாக—முதலையாக. அதன் பின் சார—அக்கொல்லாமையின் பின் நிற்க.

எல்லா அறங்களினுஞ் சிறந்து முதன்மையாய் இருத்தற்கு உரியது கொல்லாமையே என்பதும் அதனை அடுத்து நிற்றற்குரியது வாய்மையே என்பதும் கூறுவார் கொல்லாமை ஒன்றாக நல்லது; பொய்யாமை அதனைப்பின்சார நன்று; என்று கூறினார். இங்ஙனந் தகுதி கூறியது அவ்விரண்டறங்களின் இயல்பு நோக்கியென்க.

கொல்லாமையே முதன்மையாக நல்லது; பொய்யாமை அதன் பின்னாக நன்று என்பதாம்

கொல்லாமையை முதலாவதாகவும் பொய்யாமையை இரண்டாவதாகவும் அறங்கள் கொண்டுள்ளன என்பது குறிப்பு. மக்களுள் அரசனும் அமைச்சனும்போல, அறங்களுள் கொல்லாமையும் வாய்மையும் சிறந்தன என்க.

பொய்யாமை யுடையவன் வேறோர் அறமும் செய்யவே வேண்டாம் என்றும், அஃதொன்றே அறப்பயன் யாவும் ஒருங்கே உதவுமென்றும், யாம் மெய்யாக் கண்டவற்றுள் வாய்மைபோல நல்லது வேறு இல்லை என்றும், மேல அருளி இதில் எல்லா அறங்களினும் கொல்லாமையே நல்லது என்று கூறலமையுமோவெனின், பிறிதோருயிர்க்கு நன்மை பயக்கும் வழி பொய்யாயிருப்பினும் மெய்யாயும், நன்மை பயவாவழி மெய்யாயினும் பொய்யே யாகியும் இதனை நோக்கி அது திரிந்து நிற்றலால் இதன்பின் சார்ந்து நிற்கவே அது நன்றும் என்றது அமையுமென்க. அறங்கள் பலவினும் வாய்மையே சிறந்தது, அதனினும் கொல்லாமை உயர்ந்தது என்ற அடிகள் அருண்மாண்பை இதில் ஆய்ந்துணர்க.

கொல்லாமை ஒன்றையே அறிவுடையார் தலைமையாகக்கொள்ளுவரென்பதும், அதனைக் காக்கும்பொருட்டுப் பொய்யாமை முதலிய உயரறங்களையும் நெகிழவிடுவர் என்பதும் இதில் உணர்த்தப்பட்டன. இவ் உண்மை ஆபுத்திரன்பால் உணரப்படும்.

கதை.

ஆபுத்திரன் தன் தாயை யிழந்தபின் பாண்டி நாட்டிலுள்ள வயனங்கோடு என்னும் ஊரிலிருந்த பூதி என்னும் அந்தணன் மனையிலிருந்து வளர்ந்துவந்தான். அருள் நிறைந்த உள்ளத்தனாகிய இவன் ஒருநாள் தெருவிடைச் செல்லுங்கால் அங்கோர் மறையவன் வீட்டில் வேள்வியில் கொல்லும்பொருட்டு மாலைசூட்டிக் கொணர்ந்து வைத்திருந்த ஆவினைக் கண்டான். கொலைநவில் வேட்டுவர் கொடுமரம் அஞ்சி, வலையிடைப்பட்ட மானைப்போன்று, அது அஞ்சிநின்று அழைக்கும் அதனை அருந்துயர் தெரிந்து, நெஞ்சு நெக்குற்று இவன் நெடுங்கண்ணீருகுத்தான். அந்தோ! இந்த ஆவை இன்று கொன்றுவிடுவரே! என்று கலங்கி அதனைக் காப்பாற்றும்பொருட்டுப் பொய்யாத இவனும் பொய்கட்ட கள்வனானான். உள்ளங்கரந்து ஆங்கு ஒருபுடையொதுங்கிநின்று எவரும் அறியாதபடி இரவில் அதனைக் கவர்ந்து சென்றான். சிலர் தொடர்ந்து பின்சென்று இவனைப்பிடித்து இப்பொய்ப்படு களவினை நீ ஏன் புகுந்து செய்தாய் என்று கடிந்து மொழிந்து கடுந்துயர் செய்தார். கொல்லாமையன்புடைய இவன் அப்பொல்லாதவர்களை நோக்கினான்.

நோவன செய்யன்மின் நொடிவனர் கேண்மின்
விடுநில மருங்கிற் படுபுல் ஆர்ந்து
நெடுநில மருங்கின் மக்கட் கெல்லாம்
பிறந்தநாள் தொட்டும் சிறந்ததன் தீம்பால்
அறந்தரு நெஞ்சோடு அருள்சுரந் தூட்டும்
இதனொடு வந்த செற்றம் என்னை
முதுமறை அந்தணீர் முன்னியது உரைமோ?

என்று இன்னுரை பகர்ந்து எல்லா அறங்களினும் கொல்லாமையே சிறந்தது என்று உணர்த்தினான். பொய்யாமையினும் கொல்லாமையே முதன்மையானதென்று ஆபுத்திரன் அன்று கொண்டிருந்த திண்மையை அனைவரும் கொண்டாடி மகிழ்ந்தார். (விரிவை மணிமேகலையில் காண்க.)

கொல்லாமையே எல்லா அறங்களினும் தலையானதென்பது கூறப்பட்டது.

324. நாடி மருளசங்கர் நல்லதென்று கொல்லாமை
கூடி நின்றார் என்னே குமரேசா!—தேடியெனறும்
நல்லா றெனப்படுவ தியாதெனின் யாதொன்றுங்
கொல்லாமை சூழும் நெறி. (௪)

குமரேசா! மருளசங்கரதேவர் கொல்லாமை ஒன்றே நல்லதென்று என் கூடி நின்றார் எனின், நல் ஆறு எனப்படுவது யாது எனின், யாது ஒன்றும் கொல்லாமை சூழும் நெறி என்க.

யாதொன்றும்—யாதோருயிரையும். ஓரறிவுயிரையும் என்றபடி. சூழ்தல்—கருதல், வளைதல்.

கொல்லாமை சூழும் நெறி—கொல்லாமை யென்னும் நன்மை சூழ்ந்த நெறி. தன்னையுடையானுக்கு நன்மை பயத்தலின் நல் ஆறு என்றார்.

கொல்ாமை என்னும் நலஞ்சூழ்ந்த நெறியே பேரின்ப வீட்டை அடைதற்கு நேரான நல்ல நெறி என்பதாம்.

கொல்லாமை சூழாத நெறி பொல்லாத நெறி யென்று கொள்க. முத்தி நிலத்தைச் சேர்தற்கு நல்ல வழி யாது? என்பாரை நோக்கி இது கூறியதாகக் காண்க.

கொல்லா விரதத்தைக் கொண்டவர்க்கே அழிவில்லாத இன்ப வீடு எளிதில் எய்தும் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை மருளசங்கரர் பால் உணரப்படும்.

கதை.

மருளசங்கரர் என்பவர் சிறந்த ஒரு ஞான யோகி. பேரருளுடையவர் ஓரறிவுடைய கொடி செடிகளுக்கும் இவர், கொடுமை செய்தறியார். செற்றம் நீங்கிய பற்றறு பண்பினர். கனி காய் கிழங்கு முதலியவற்றை எவரேனும் கொணர்ந்து உண்ணும்படி கொடுப்பின் அவற்றின் உருவமும் அழகும் சிதையுமே என்று இரங்கி அவற்றை உண்ணாது விடுவர். வசவ தேவரது திருமனையில் சிவனடியவர் உண்டு மிகுந்த எச்சில் இலைகளை விடுகின்ற குழியின்கண் அமர்ந்திருந்து பசி வந்தபோது அதிலுள்ள எச்சிலுணவைச் சிறிதுண்டு பெரிது உவந்திருப்பர். முத்தரான இவர் ஒன்றுமறியாப் பித்தர்போல் இருப்பதை அல்லம தேவரறிந்து கொல்லா நலத்தை இவர் கொண்டிருந்த மாண்பை எல்லாருக்கும் உணர்த்தினார். அல்லல் யாதுமின்றி இவர் அழிவில் வீட்டையடைந்தார். கொல்லாமை சூழும் நெறியே வீட்டினை அடைதற்கு நல்லாறென்பதை இவர் உலகினுக்கு உணர்த்தினார். விரிவைப் பிரபுலிங்க லீலையில் காண்க.

கொல்லா விரதமொன்று கொண்டவரே நல்லவர் மற்
றல்லாதார் யாரோ அறியேன் பராபரமே. (தாயுமானவர்)

கொல்லாமையே வீட்டினை அடைதற்கு நல்ல நெறி என்பது இதனால் கூறப்பட்டது.

325. பண்டு துறந்தார் பலருள்ளும் புத்தரேன்
கொண்டார் உயர்வைக் குமரேசா—கொண்ட
நிலையஞ்சி நீத்தாருள் எல்லாங் கொலையஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் தலை.

குமரேசா! துறந்தார்பலருள்ளும் புத்தர்மட்டுமே சிறந்துநின்றார்எனின், நிலைஅஞ்சி நீத்தாருள் எல்லாம், கொலைஅஞ்சிக் கொல்லாமை சூழ்வான் தலை யென்க. சூழ்தல்—எண்ணுதல். மறவாது குறிக்கொள்ளுதலை இங்கு அது குறித்து நின்றது.

பிணி, மூப்பு, இறப்பு முதலிய துன்பங்களெல்லாம் பிறப்பின் கண்ணே அணி அணியாக அமைந்துள்ளன என்று அதன் நிலையை அறிந்து அஞ்சுதலே துறந்து அடங்குதற்கு ஏதுவாகுமாதலால் அம் முறை கருதி நிலை அஞ்சி நீத்தார் என்றார்.

கொல்லாமை சூழ்வான் தலை—கொல்லாமை என்னும் விரதத்தைக் கொள்வோனே உயர்ந்தவன்.

பிறப்பின் நிலைமையை அஞ்சித் துறந்தவர் எல்லாருள்ளும் கொலையின் தீமையை அஞ்சிக் கொல்லாமையாகிய நன்மையைக் கொண்டவனே உயர்ந்தவன் என்பதாம்.

அஞ்சுதல் நீத்தலுக்கும், கொலை அஞ்சுதல் கொல்லாமைக்கும் காரணமாதல் காண்க. சூழ்வான் என்றார் கருதினும் பெருமையாம் என்று கருதி.

கொல்லா விரதமுடையவன் இல்லறத்திருப்பினும், துறந்தார் எல்லாரினும் அவன் சிறந்தவன் எனினும் அமையும்.

உலகைத் துறந்தவரெவரினும் கொலையைத் துறந்தவன் சி தவன் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை பு பால் உணரப்படும்.

கதை.

அருள் வள்ளலாகிய புத்தர், அரசைத் துறந்து சிறந்த ஞானியாய் அருந் தவம் புரிந்து வேணுவனம் என்னும் தனியிடமொன்றில் இனிது அமர்ந்திருந்தார். அங்கிருந்த துறவிகளெல்லாரும் இவரது குண நலங்களையும் கொல்லா மாண்பையும் தெ

ளிந்து அடி தொழுது அன்புசெய்தார். பின்பு அடியவராயினர். அருள்நிறைந்த இவரது இனிய மொழிகளால் ஒருநாள் தொள்ளாயிரம்பேர் துறவிகளாயினர். பல்வேறிடங்கட்குஞ் சென்று கொல்லா நலத்தையே கொள்ளும்படி எல்லாருக்குஞ் சொல்லினர். அனைவரும் இவர் சொல் வழி ஒழுகினர். கொல்லாமை என்னும் நல்லறம் உலக முழுவதும் மிகவும் பரவியது இவரால் என்னலாம். பல்லாயிரம் துறவிகள் புடைசூழ விளங்கி இரணியவதி என்னும் ஆற்றின் கரையில் எண்பதாவது வயதில் தமது அழகிய திருவுடம்பைத் துறந்து அழிவிலின்பத்தை அடைந்தார். அக்காலத்தில் அந்தக் குழுமியிருந்த நீத்தாரனைவரும் நெஞ்சங் கலங்கி அவரது பிரிவை ஆற்றாது அலறி அழுதார்.

மருளறுத்த பெரும்போதி மாதவனைக் கண்டிலமால்
என் செய்கேம் யாம்
அருளிருந்த திருமொழியால் அறவழக்கங் கேட்டிலமால்
என் செய்கேம் யாம்.
பொருளறிந்த அருந்தவத்துப் புரவலனைக் கண்டிலமால்
என் செய்கேம் யாம்
தெருளிருந்த கொல்லாத திருவனையாம் தெரிந்திலமால்
என் செய்கேம் யாம்.

என்று எல்லாரும் புலம்பித் தவித்தார். இவரது திருவுடம்பை எரித்தபின் என்பையும் சாம்பரையும் தனித் தனி எடுத்துச் சென்று பொதிந்து வைத்து ஆலயம் புனைந்து வழிபாடு செய்தனர். கொல்லாமை சூழ்வான் எல்லாரினும் தலை என்பதை உலகம் இவர்பால் உணர்ந்தது. விரிவு சரிதையில் தெளிவாம்.

கொல்லா விரதமுடையவன் எல்லாரினுஞ் சிறந்தவன் என்பது இதனால் கூறப்பட்டது.

326. கொல்லாத நாரையினைக் கூரருள்சேர் நாகனையேன்
கொல்லவில்லை கூற்றம் குமரேசா—நல்லதென்று
கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாண்மேற்
செல்லா துயிருண்ணுங் கூற்று. (௬)

குமரேசா! கொல்லாமையை மேற்கொண்ட நாரையின் மேலும், நாகன்மீதும் கூற்றுவன் ஏன் செல்லவில்லை எனின், கொல்லாமையே மேற்கொண்டு ஒழுகுவானது வாழ் நாள் மேல் உயிர் உண்ணும் கூற்று, செல்லாது என்க.

மேற்கொண்டு—விரதமாகக் கைக்கொண்டு.

ஒருயிரையும் கொல்லாத பேரறமுடையான் பின் பிறவா இன்பம் பெறுவனாதலால் அவனது வாழ்நாள் மேல் கூற்றுச் செல்லாதாயிற்று. கொல்லா நலமுடையவர் கூற்றால் கொல்லப் படார் என்பது குறிப்பு.

கொல்லாமையை விரதமாக மேற்கொண்டு ஒழுகுவானது வாழ் நாள் மேல் உயிர் உண்ணுங் கூற்றுச் செல்லாது என்பதாம்.

உயிரை உடம்பிலிருந்து பிரித்துக்கொள்ளும் இயல்பினை யுடைய கூற்று அதனை உண்டதாகக் கூறியது அவனது துணிவும் கொடுமையும் தோன்ற எனக. உண்ணுதற்கு உரியதல்லாத உயிரை இங்ஙனம் குறித்தது உபசாரமாகும்.

உண்டற் குரிய வல்லாப் பொருளை
உண்டன போலக் கூறலும் மரபே. (தொல்காப்பியம்.)

கொல்லாமை என்னும் நல்லறமுடையவர் எமபய நீங்கி ஈறி லின்பத்தை எய்துவரென்பது கருத்து. இவ்வுண்மை நாரையிடமும், நாகன்பாலும் காணப்படும்.

கதை 1.

பண்டொரு காலத்தில் மதுரையம்பதிக்குத் தென்பால் அடர்ந்த வனமொன்றிருந்தது. அதில் குளிர்ந்த நீர் நிலை ஒன்று விளங்கியிருந்தது. இரையின்றி மெலிந்த செங்கால் நாரையொன்று அங்குவந்து தனியாகத் தங்கியிருந்தது. முனிவர்கள் அப்பொய்கையில் புகுந்து தோய்ந்து எழுங்கால் அங்குள்ள மீன்களுக்கு ஊறு ஒன்றும் செய்யாது அவர்கள் உதவி செய்வதை இந்நாரை கண்டது. நல்லறிவு பிறந்து அன்று முதல் யாதொன்றையும் கொல்லலாகாதென்று துணிந்தது. மீனுணவு துறந்து மெலிந்து தளர்ந்தது. ஆயினும் ஒன்றையும் கொல்லாது உணர்வோடிருந்து பின் மதுரையையடைந்து பொற்றாமரை என்னும் நற்றடம் புகுந்து கொண்ட விரதம் குலையாதிருந்தது. எல்லாம் அறியும் கூடற்பரமன் அதன் கொல்லா நலத்தை வியந்து அழிவில்லாத முத்தியை அதற்கு அருளினார். தன் கொல்லா நலத்தால் கூற்றைக் கடந்து அந்நாரை எய்திய பேற்றைப் புகழ்ந்து அனைவரும் போற்றி மகிழ்ந்தார். விரிவைத் திருவிளையாடலில் காண்க.

பிரிவறக் கொன்று தின்னும் கடைப்படும் பிறப்புநாரை
வரனுறு தேவராகி வான்தொழ இருப்பக் கண்டீர்
கருதிர் என்றும் பொல்லாக் கடையராயினுங் கொல்லாமல்
அரனைவந் திப்ப ரேல்வான் ஆள்வதற் கையமின்றே.
(பழைய திருவிளையாடல்.)

கதை 2.

நாகன் என்பவன் தண்டகவனத்திலிருந்த ஒரு வேடுவன். விப்பிராதன் என்றும் இவனுக்கு ஒரு பெயருண்டு. மான், முயல் முதலிய விலங்கினங்களை முதலில் இவன் கொன்று வாழ்ந்தான். ஒருநாள் முற்கல முனிவரைக் கண்டான். அவரையும் கொல்ல வெகுண்டான். அவர், இவனைநோக்கி மக்கட் பிறப்பின் அருமையையும் கொல்லாமையால் எய்தும் நன்மையையும் எளிய நடையில் இனிய மொழிகளால் தெளிய வுணர்த்தினார். அவன்,

உணர்ந்தான். அன்றுமுதல் யாதோருயிரையும் கொல்வதில்லையென்று உறுதிகொண்டான் ஓரறிவுடைய கொடி செடிகளுக்கும் ஊறு செய்யாது இவன் ஒடுங்கியிருந்தான். உதிர்ந்த சருகும் தின்னலாகாதென்று உயர்ந்த அருளைக் கொண்டான். இவனது கொல்லா மாண்பை மகிழ்ந்து விநாயகப் பெருமான் தோன்றித் தம்போல் தெய்வவுருவை இவன் எய்தும்படி திருவருள் செய்து புருசண்டி என்று ஒரு பெயரும் தந்தார். கொல்லாமையை மேற்கொண்டிருந்த இவன் அதன் பயனாக அக்தெய்வ வுருவை எய்தி அப்பெயருடன் சிறந்து விளங்கி என்றுங் குன்றாத இன்பத்தை அடைந்தான் விரிவை முனிவர்சரிதையில் காண்க.

கொல்லாமை மேற்கொண் டொழுகுவார் வாழ்நாள் மேல் உயிருண்ணுங் கூற்றுச் செல்லாது என்பதை உலகம் இவ்வேடன் கண்ணும், அந் நாரையிடமும், உணர்ந்து மகிழ்ந்தது.

கொன்றுமுன் தின்றநாகன் கொல்லாமை மேற்கொண்டன்று
நின்றதால் இறவாஇன்பம் நிலைபெறப் பெற்றானம்மா
நன்றறி மக்களிந்த நலமுணர் கிலாயந்தோ
கொன்றபின் கூற்றுங்கொல்லக் கும்பிவீழ்ந் தழுந்தலென்னே.
(தனியன்.)

கொல்லாமையுடையவர் கூற்றால் கொல்லப்படார் என்பது இதனால் கூறப்பட்

327. நீதிமன்னன் சேயுயிரை நீக்கவஞ்சி ஏனமைச்சன்
கோதிலுயிர் நீத்தான் குமரேசா—மோதிவந்து
ரயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
வயிர் நீக்கும் வினை. (எ)

இ.—ள்.

குமரேசா! மனு நீதிகண்ட சோழனுடைய திருமகனது உயிரை நீக்குதற்கு அஞ்சி சத்திய சீலன் ஏன் தன் உயிரை நீக்கி

னான் எனின், தன் உயிரை நீப்பினும், பிறிதோர் இன் உயிரை நீக்கும் வினையைத் தான் செய்யலாகாதென்க.

தன் உயிர் நீப்பினும்—தன் உயிர் நீங்கிவிடுமாயினும்,
செய்யற்க—செய்யாதுவிடுக.

தன் உயிர் நீங்கினும் பிறிதோர் இன் உயிரை நீக்கும் வினையை ஒருவன் செய்யலாகாது என்பதாம்.

மேல், கொல்லாமையை ஒருவன் யாண்டும் விரதமாகக்கொள்ளவேண்டுமென்றார் ஆயின், ஊனை விரும்பிக் கொல்லாவிடினும் தன்னைக் கொல்லவந்ததையாவது கொல்லலாகாதா? என்பார்க்கு இது கூறியதென்க. இங்ஙனங் கூறியது தன் பாவங் கழிந்து மறுமை இன்பத்தை அவன் பெறுவன் என்பது கருதி.

ஊனையேஉண்டுவந்த ஒருவன் கொல்லா விரதம்கொள்க என்றதை உணர்ந்து அதனை உண்ணவில்லையானால் தன் உயிர் போய்விடுமே! என்று கூற, "உன் உயிர் நீங்கினும் பிறிதோர் இன் உயிரை அது நின்ற உடம்பிலிருந்து நீ நீக்காதே" என்று அவனை நோக்கி இஃது அருளியதெனினும் அமையும்.

தன் உயிர் போனாலும் அறிவுடையார் பிறிதோருயிரைக் கொல்லார் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை சத்தியசீலன்பால் உணரப்படும்.

கதை.

சத்திய சீலன் என்பவன் மனுச் சோழ மன்னனுடைய முதல் அமைச்சன். நிறைந்த அருளும், சிறந்த அறிவும் உடையவன். பசுவின் கன்றைக் கொன்றதால் தன் மகனைக் கொல்லும்படி மன்னன் இவனுக்குக் கட்டளையிட்டான். இவன் அவனது இன் உயிரை நீக்குதற்கு நாணித் தன்உயிரையே நீக்கினான். இவனது கொல்லா மாண்பையும், மனவுறுதியையும், வியந்து அனைவரும் இரங்கினார். இழந்த உயிரை இறைவனருளால் பின் இவன் எய்தப்பெற்றான், தன் உயிர் நீப்பினும் மேலோர் பிறி

து ஓர் இன் உயிரை நீக்கார் என்பதை இவன் அன்று உணர்த்தி நின்றான். (விரிவைப் பெரிய புராணத்தில் காண்க.)

என்றும் எவ்வகையானும் பிறிதோருயிரை மேலோர் கொல்லார் என்பது இதனால் கூறப்பட்டது.

328. கொன்றுசெய்யும் வேள்வி கொடிதென்றேன் கும்பமுனி
குன்ற வுரைத்தார் குமரேசா—என்றுமே
நன்றாகும் ஆக்கம் பெரிதெனினுஞ் சான்றோர்க்குக்
கொன்றாகும் ஆக்கங் கடை. (அ)

இ—ள்.

குமரேசா! கொலைபுரிந்து வேள்விசெய்தல் தீதென்று அகத்தியனார் ஏன் அன்று கூறினார் எனின், நன்று ஆகும் ஆக்கம் பெரிது ஆம் எனினும் சான்றோர்க்குக் கொன்று ஆகும் ஆக்கம் கடை என்க.

செல்வம் உயர்ந்த நலங்களை உளவாக்கும் ஆதலால் அது நன்றாகும் என்னும் அடைபெற்று வந்தது. இனி, நன்மையும் ஆகும் ஆக்கமும் பெரிதாம் எனினும் அமையும்.

கொன்று ஆகும் ஆக்கம் கடை—கொல்வதால் உண்டாகின்ற செல்வம் இழிவானது.

கொன்றாகும் ஆக்கம் என்றது வேள்வியால் எய்தும் செல்வத்தை. அதில் கொலைவினை கலந்திருத்தலால் சான்றோர் அதனை விரும்பார் என்பது கருத்து.

இன்பமிகும் செல்வம் பெரிதாம் எனினும் கொல்வதால் வரும் செல்வம் மேலோர்க்கு இழிவாம் என்பதாம்.

வேள்வி செய்யின், நன்மையுண்டாகும், ஆக்கமும் பெரிதாம் என்றாலும் கொலையுறு வினை என்று அருளுடை அறவோர் அதனைப் புரியார் என்பது கருத்து.

ஆடு, பசு, குதிரைகளுள் ஒன்றைக் கொன்று அதன் வயிற்றுக்குள் இருக்கும் வபை என்னும் வெள்ளிய நிணம் ஒன்றை எடுத்து ஓமத் தீயில் மடுத்து இந்திரனை நோக்கி மந்திரம் புரியின் இன்பமாகும் துறக்கச் செல்வம் எய்தலாம் என்று விதித்திருப்பினும், பிறவுயிர்களையும் தம் உயிர்போல் பேணும் அருளுடையார் அக் கொலை வினையால் எய்தும் அவ் ஆக்கத்தை வெறுத்து இகழ்வராதலால், "சான்றோர்க்குக் கொன்று ஆகும் ஆக்கம் கடை" என்றார். சான்றோர்க்குக் கடை என்றதனால் அதனைத் தலை என்று கொள்வோரின் நிலை காணலமையும்.

தன் உயிர் நீப்பினும், பிறிதோர் இன் உயிர் நீக்கும் வினை செய்யற்க என்று மேற்கூறியதை நோக்கி, வேள்விக்கட் செய்யலாமென்று விதித்துள்ளதே எனின், அவ்விதி ஈறில் இன்பத்தை எய்த விரும்பிய பேரறிவாளர்க்கு விலக்காமென்று இதில் உணர்த்

எண்பதினாயிரம் வெண் பொற்காசு பெறத்தக்க நன்முத்து ஒன்று இச்சிப்பியில் உள்ளது; இதனைச் சிதைத்து நீ அதனை எடுத்துக்கொள்க என்று சித்தர் ஒருவர் ஒருநாள் புத்தர்பால் கொடுத்தார். அவர், "அந்தோ! இந்தக் கொலை வினையால் அந்தமில் இன்பத்து அழிவில் வீடு எனக்கு வருவதாயினும் யான் அதனை வேண்டேன்" என்று அருளுடன் அகன்றார். இப்பெரியாரது கருணைப் பண்பு கண்டு அதுவும் இவ்வமையத்து மிகவும் கருதத்தக்கது. இவ்வமையம் என்றது 1926 மார்ச்சில் இவ்வூரில் முத்துவேட்டை நிகழ்ந்த காலத்தை என்க.

பெருநலந்தருவதாயினும் ஒருயிரைக் கொல்லுந் தீமையை உயர்ந்தோர் கொள்ளார் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை அகத்தியர்பால் அறியப்படும்.

கதை

முன்னொருகாலத்தில் முனிவரும் பிறரும் குழுமி ஒரு பெரு வேள்வி செய்ய விரும்பி ஆடு ஒன்றை அங்குக் கொணர்ந்தார்.

அகத்தியர் கண்டார். ஐயகோ உயிர்க் கொலை தீது என்று மறுத்தார். அசம்கொண்டு அருமகம் புரிக என்று வேதத்தில் கூறியுள்ளதே என்று அவரனைவரும் கூறினார். அசம என்பது ஆட்டையும் மூன்று ஆண்டின் நெல்லையும் குறிக்கும் இருபொருளொரு சொல், அம்மூவாண்டு நெல்லே வேதத்திலுள்ள அசம் என்னும் சொல்லுக்குப் பொருள் இவ் உண்மையை உணராமல் வன் படுகொலை புரிந்து கெடுகின்றீர்கள் என்று பரிந்து உணர்த்தி அவ் ஆட்டினை அகற்றித் தாம் கூறியவாறே வேள்வியை முடித்து வித்தினைக் கொண்டே அமரருக்கு அவியளித்தார். கொலை வினை நிகழாமல் செய்யும் வேள்வியே தலைமையானதென்று மலைவறக் கூறி அனைவரும் நலமுற அருள்புரிந்தனன்றார். கொன்று ஆகும் ஆக்கம், சான்றோர்க்குக் கடையாம் என்பதை அன்று உலகம் அகத்தியர்பால் உணர்ந்தது. விரிவைப் பாரதத்தில் காண்க.

கொலையால் வருஞ் செல்வம் பெரிதாமாயினும் பெரியோர் அதனை விரும்பார் என்பது இதனால் கூறப்பட்டது.

329. பண்டு பராசர்தம் பாலரையும் ஈனரென்றேன்
கொண்டார் கொலையால் குமரேசா — கொண்ட
கொலைவினைய ராகிய மாக்கள் புலைவினையர்
புன்மை தெரிவா ரகத்து. (௯)

-ள.

குமரேசா! தம்முடைய மக்களையும் கொலை வினையால் ஈனரென்று பராசரர் ஏன் பழித்தார் எனின், கொலை வினையராகிய மாக்கள் புன்மை தெரிவார் அகத்து புலை வினையர் என்க.

கொலை வினையர்—கொலைத் தொழிலை யுடையவர்.

புலை வினையர்— அக்கொலையால் வரும் ஊனைத் தின்னும் டையவர்.

மாக்கள் என்றார் மக்கள் அறிவு பாழ்போனமையின். பிறவுயிரையும் தம் உயிர்போல் பேணி ஒழுகுவோரே மக்களாவார் என்க.

புன்மை தெரிவார் அகத்து—இழிவினைத் தெளிவார் நெஞ்சத்தில்.

கொலைத் தொழிலினராகிய மாக்கர், அறிவுடையார் மனத்தில் புலைத் தொழிலினராக மதிக்கப்படுவாரென்பதாம்.

பிறவுயிர்களை அருளின்றிக் கொல்லுகின்ற பழியின் இழிவை உணர்கின்றவரே உயர்ந்தவரென்பதும், அவருள்ளம் அக்கொலையாளரைப் புலையரென்று இகழ்ந்து தள்ளும் என்பதும் கூறுவார், "புன்மை தெரிவார் அகத்துப் புலைவினையர்" என்றார்.

ஆவுரித்துக் தின்று வருவோர் சாதிப் புலையர் என்றும், ஆருயிர்களைக் கொன்று திரிவோரும், வேறு ஊன்களைத் தின்று மகிழ்வோரும், கன்மப் புலையரென்றும் வேறுபாடு காண்க.

கொலை வினையாளரைக் கன்ம சண்டாளர் என்று கருதவேண்டுமென்பது கருத்து.

பிறப்பால் உயர்ந்தவராயினும், கொலைத் தொழிலைப் புரிவரேல் ஈனர்களென்று அறிவுடையோரால் அவர் இழிக்கப்படுவரென்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை தத்தன் முதலிய அறுவர்பால் காணப்படும்.

கதை.

தத்தன், அனந்தன், சதுமுகன், நந்தி, பருதி, மாலி என்னும் இவ் அறுவரும் பராசர முனிவருடைய புதல்வர்கள். இச்சிறுவர்கள் அவ்வறுவரும் ஒருங்கு சேர்ந்து ஒருநாள் சரவணப் பொய்கையை அணுகி விளையாடினார். நீரில் பாய்ந்து நீந்தியும் மலர் பல கொய்து மகிழ்ந்தும் உலாவினர். தவளை முதலிய நீர்வாழுயிர்களை இரக்கமின்றி எறிந்து கொன்றார். அதன்பின் அதிலுள்ள மீன்களைப் பிடித்துக் கோரைப் புல்லிற் கோத்துக் குதித்

துக் திரிந்தார். அவ்வமையம் பராசர முனிவர் அங்கு நீராட வந்தார். குழந்தைகள் செய்த கொலை வினையைக் கண்டார். உளங் கலங்கினார். நல்ல மரபிற் பிறந்திருந்தும் இப் பொல்லாத செயல்களைப் புரிந்தீர் ஆதலால் ஈன மீன்களாகி நீவிர் அனைவிரும் இழிந்து தொலைமின் என்று சினந்து மொழிந்தார். அவரும் அவ்வாறே ஆகி யுழன்றார். உயர்ந்த குலத்தில் தோன்றியும் தாம் புரிந்த கொலை வினையால் இழிந்து நொந்தார். கொலை வினையராகிய மாக்கள் புன்மை தெரிவார் அகத்துப் புலை வினையராவர் என்பதை உலகம் இவர்பால் உணர்ந்தது. விரிவைக் கந்தபுராணத்தில் காண்க.

> கொலையிலான் உதவும் அன்னம் கூறிற்பே ரமுதமாகும்
> கொலையுளான் உதவுமன்னம் கூறில்வல் விடமதாகும்
> புலையர்தம் மனையிலுண்போன் புலையனா மாறுபோலக்
> கொலையர்தம் மனையிலுண்போன் கொலைஞனையாவனன்றே.
> (பதிவிளக்கம்.)

கொலை வினையாளரைக் கன்ம சண்டாளர் என்று அறிவோர் கருதுவர் என்பது இதனால் கூறப்பட்டது.

330. பண்டு கவந்தன் பழியுடம்பும் தீவாழ்வும்
கொண்டுழந்தான் என்னே குமரேசா—கொண்ட
உயிருடம்பி னீக்கியா ரென்ப செயிருடம்பிற்
செல்லாத்தீ வாழ்க்கை யவர். (௰)

குமரேசா! கவந்தன் பழி உடம்பும் இழி வாழ்வும் கொண்டு ஏன் உழந்தான் எனின், செயிர் உடம்பில் செல்லாத் தீ வாழ்க்கை யவர் உயிர் உடம்பில் நீக்கியார் என்பர் என்க.

செயிர் உடம்பு—குற்றமான உடம்பு: அஃதாவது உறுப்புக் குறையும் நோயும் உடையது.

செல்லாத் தீ வாழ்க்கை—இனிது நடவாத கொடிய வாழ்க்கை; என்றது வறுமையும் சிறுமையும் மலிந்த வாழ்க்கையை.

பிணி நிரம்பிய பழி யுடம்பும் வறுமை மிகுந்த இழி வாழ்க்கையும் உடையாரை உயிர்களை உடம்பில் நின்று நீக்கினகொடியவரென்று பெரியோர் மொழிவர் என்பதாம.

மேல், கொலைவினையரைக் கன்மப்புலையர் என்று கருதவேண்டும் என்றார் இதில், அவர் பின்பிறப்பில் இயல்பாகவே புலையராவர் என்றார். முற்பிறப்பில் உயிர்களைக் கொன்றவர் பிற்பிறப்பில் தொழுநோய் தழுவிய பழியுடம்பும் அழிதுயர் மிகுந்த இழி வாழ்க்கையும் அடைந்து வருந்துவர் என்பது கருத்து.

கொலைவினையால் வறுமையும் நோயும் தொடருமாதலால் அதனை ஒருவன் அறவே ஒழிக்கவேண்டும் என்பது குறிப்பு.

உடம்பும், ஈன வாழ்க்கையும் கொலை வினையாளர்க்கு உளவாம என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை கவந்தன்பால் உணரப்படும்.

கதை.

கவந்தன் என்பவன் தண்டகவனத்திலிருந்த ஓர் அரக்கன் இவன், முற்பிறப்பில் தனு என்னும் பெயரினையுடைய ஒரு காந்தருவனாயிருந்தான். மிக்க செருக்குடையவன். உயிர்களை இரக்கமின்றிக் கொன்றான். விலங்கினங்களுக்கும் மக்களுக்கும் இவன் வெந்துயர் செய்தான். தூலசிரசு என்னும் முனிவருக்கும் நனிதுயர் புரிந்தான். அவர், இவனை அரக்கனாகச் சபித்தார். அங்ஙனமேயாகி ஆருயிர்களைக் கொன்று தின்று திரிந்தான். இவன் கொடுமையை யறிந்து சினந்து இந்திரன் தன் குலிசத்தால் இவன் தலையில் புடைத்தான். அதனால் இவன் தலை உடலில் புகுந்தது. அன்றுமுதல் இவனுக்குக் கவந்தன் என்று பெயர் வந்தது. தலையில்லாத குறை உடலுக்குக் கவந்தம் என்று பெயர். எழுந்து திரிதற்கு இயல்பில்லாத ஈன வுடம்புடன் தண்டக வனத்தில் கிடந்து கண்ட வுயிர்களைக் கைக்கொ

ண்டு தின்று தயங்கியிருந்தான். உயிர்களை உடம்பில் நின்று நீக்கினவர்க்கு செயிர் உடம்பும் தீ வாழ்க்கையும் உளவாம் என்பதை உலகம் இவன்பால் உணர்ந்தது. இராம இலக்குவரால் இவன் சாபம் நீங்கப் பின் மேன்மை எய்தினான். விரிவை இராமாயணத்தில் காண்க.

கொலை வினையாளர்க்கு இழி பிறப்பும் ஈன வாழ்க்கையும் எய்தும் என்பது இதனால் கூறப்பட்டது.

சிலையினான் மாக்கள்கொன்று செழுங்கடல் வேட்டமாடி
வலையினால் மீன்கள்வாரி வாழுயிர்க் கூற்றமான
கொலைஞரைக் கும்பிதன்னுட் கொழுந்தழ லழுத்தியிட்டு
நலிகுவர் நாளுநாளும் நரகரை நாமவேலோய். (1)

வயிரமுள் நிரைத்துநீண்ட வார்சினை யிலவமேற்றி
செயிரிற்றீ மடிப்பர்கீழாற் சென்னுனைக் கழுவிலேற்றி
மயிருங்கொண் ருகவாங்கி வகைத்தனைத் திவர்மன்னு
உயிரைப்பே துறுத்துமாந்தர் உயிரைப்பே துறக்குமாறே (2)
(சீவகசிந்தாமணி)

இவ் அதிகாரத்தின் தொகைப் பொருள்.

கொல்லாமையே அறவினையாகும். கொல்லுதல் எல்லாப் பாவங்களையும் கொடுக்கும். உயிர்களைப் பேணுதலே தலையாய அறம். எல்லா அறங்களினும் சிறந்து முதலில் நிற்றற்குரியது கொல்லாமையே. எல்லையில்லாத இன்ப வீடடைதற்குக் கொல்லாமை ஒன்றே நல்ல நெறியாம். துறந்தவரெவரினும் கொல்லாமையுடையவரே சிறந்தவராவர். கொல்லாவிரதியர் மேல் கூற்றுவன் செல்லான். தன் உயிர் நீங்கினும் பிறவுயிரைத் தான் நீக்கலாகாது. கொலையால் வரும் செல்வம் பெரிதாமாயினும் அதனைப் பெரியோர் கொள்ளார். கொலை வினையாளரைக் கன்ம சண்டாளரென்றே கருதவேண்டும். அதனையுடையவர் ஊன உடம்பும் ஈன வாழ்க்கையும் எய்தி உழல்வார்.

௩௩-வது கொல்லாமை முற்றிற்று.

௩௪-ம் அதிகாரம் நிலையாமை.

அஃதாவது தோற்ற முடையனயாவும் நிலையா என்னும் உண்மை. கொல்லா விரதத்தைக் குறிக்கொண்டொழுகிய நல்லறிவாளர்க்கே இவ்வுண்மை இனிது புலனும் ஆதலால் இஃது அதன் பின் வைக்கப்பட்டது.

331. கொண்டவுடல் நிற்குமென்ற கோரக்கர் சீரிழந்து
கொண்டார் இழிவேன் குமரேசா—கண்டறிந்தும்
நில்லாதவற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை. (௧)

இ—ள்.

குமரேசா! தனது உடல் என்றும் நிலைநிற்கும் என்று துணிவுகொண்டிருந்த கோரக்கர் ஏன் அதனால் இழிவுகொண்டார் எனின், நில்லாதவற்றை நிலையின என்று உணரும் புல்லறிவாண்மை கடை என்க.

நில்லாதவற்றை—நிலையில்லாத பொருள்களை.

நிலையின என்று உணரும்—நிலையுடையன என்று கருதுகின்ற. புல் அறிவு ஆண்மை கடை—புல்லிய அறிவினை ஆளுந் தன்மை இழிவானது. தன்னை யுடையானைக் கீழ்மைப்படுத்துமாதலால் அது கடையாயிற்று. தான மயங்கி அறிந்ததையே மெய் என்று துணிந்து அது முனைந்து நிற்குமென்பது ஆண்மைத் தொடர்பால் அறியப்படும்.

நிலையில்லாத பொருள்களை நிலையுடையன என்று கருதுகின்ற புல்லிய அறிவுடைமை அறிவோரக்கு இழிவாம் என்பதாம்.

அநித்தமான யாக்கை முதலியவற்றை நித்தமென்று கருதி அவற்றின் மேல் பற்று வைப்போர் முடிவில் குற்றமே கண்டு நொந்து தாழ்வராதல்லால் "புல்லறி வாண்மை கடை" என்றார்.

புல்லறிவு இழுக்கே பயக்குமாதலால் அதனை ஒருவன் ஒழிக்கவேண்டுமென்பது குறிப்பு. பொருள்களின் இயல்பை மயலற உணரும் நல்லறிவுதலையானதால் புல்லறிவு கடை எனப்பட்டது.

நிலையில்லாத இயல்பினையுடைய உடம்பு முதலியவற்றை நிலைநிற்குமென்று கருதிக் களிப்பவர் சிறுமைப் படுவர் என்பது கருத்து. இவ்வுண்மை கோரக்கர்பால் காணப்படும்.

கதை.

கோரக்கர் என்பவர் சயிலமலைச் சாரலிலிருந்து காய சித்தி செய்துகொண்டு வந்த ஒரு யோக சித்தர். இவர், தமது சித்தின் இயல்பால் எவ்வகையாலும் சிதைவுறாதபடி உடல் வலி பெற்றிருந்தார். அதனால் என்றும் அது நிலைபெறுமென்று நம்பியிருந்தார். இவரது புல்லறிவாண்மையைப் போக்குதற்கு நல்லறிவாளராகிய அல்லம தேவர் ஒரு நாள் இவர்பால் வந்தார். சிறிது போழ்து வினாவினார். சித்தர், என் உடல் என்றும் அழியாது நின்று நிலவும் என்றார். மின்னின் நிலையில மன் உயிர் யாக்கைகள் என்னும் மெய்ம்மையை நீர் இன்னும் உணர்கிலீர்போலுமென்று அல்லமர் புன்னகை செய்தார். யாது கூறினும் அவர் வாது மீறினார். அதன்பின், காணப்படுகின்ற பொருள்களின் மூலகாரணங்களையும், அவை யாவும் அழியும் இயல்பின என்னும் உண்மையையும், விண்ணில் எறிந்த கல் மண்ணில் விழுதல் தப்பாதவாறுபோல் தோற்றமுடையன யாவும் தொலையும் எனனும் தன்மையையும் அவர் உணர்ந்து தெளியுமாறு உணர்த்தினார். சித்தர் உணர்ந்தார். நில்லாதவற்றை நிலையின என்று இதுவரை தாம் நினைந்து நின்றது இழிந்ததென்று தெளிந்து நெடுநாண்கொண்டார். உடற்பற்று அற்று உயர் வீடெய்தினார். (விரிவைக் கோரக்கர் கதியில் காண்க.)

பிறந்த ஆகமொன் றிறந்திடாப் பெருமையும் உடைத்தோ
எறிந்த வான்சிலை வீழ்ந்திடா திருப்பதிங் கில்லை
செறிந்த காரியம் என்பதென் றாயினுஞ் சிதையும்
இறந்திடாதுகா ரணமெனப் படுவதே யென்றும். (1)

மருந்தினூடல் நித்தியமா மென்றுநீ வருத்த
திருந்தா வாழ்நாட் பன்மைகொண் டன்றி வேறில்லை
பொருந்தி நீ யுடல் அழிந்திடாதென்பது பொருந்தா
தருந்தவா! இனி வீடுவேண் டென்றனன் ஐயன். (2)

இவை, கோரக்கரை நோக்கி அல்லமரருளியன.

நிலையில்லாததை நிலையென உணர்தல் அறிவோர்க்கு லாமென்பது இதனாற் கூறப்பட்டது.

332. வென்றிமிகு சூர்முதலோர் மேலான செல்வமெல்லாம்
குன்றியேன் போன குமரேசா—குன்றாத
கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கும் அதுவிளிந் தற்று. (உ)

-ள்

குமரேசா! சூரபன்மன், இராவணன், முதலிய பேரரசர் பெருஞ் செல்வமெல்லாம் ஏன் நிலையாமல் போயின எனின், பெருஞ் செல்வம், கூத்தாட்டு அவைக்குழாத்தது அற்றே; அதன் போக்கும், அது விளிந்தற்று என்க.

கூத்தாட்டு அவை என்றது நாடகசாலையை. குழாம்—கூட்டம்.

அது விளிந்தற்று—அக் கூட்டம் போயினாற்போலும்.

ஆங்காலத்தில் ஒருவனுக்குப் பெருஞ் செல்வம் வருவது எதுபோல்வதெனின் கூத்தாடுகின்ற இடத்தில கூட்டம் கூடுவது போலும் என்பார், "பெருஞ் செல்வம் கூத்தாட்டு அவைக் குழாத்து அற்றே" என்றார்.

தான் இருத்தற்குரிய காரணம் இருக்கும்வரையுமே செல்வம் நிற்கும் என்பதை உவமை உணர்த்தி நின்றது.

ஒருவனிடம் பெரிய செல்வம் வந்து சேர்தல், கூத்தாடுகின்ற அரங்கின்கண் கூட்டம் வந்து சேர்தல்போலும்; அச்

செல்வம் குலைந்து போதல் அக் கூட்டம் கலைந்து போதல் போலும் என்பதாம்.

ஆங்காலத்தில் செல்வம் ஒருவன் பால் பல வழிகளாலும் வந்து சேர்ந்து பின் போங் காலத்தில் அவனைவிட்டு ஒருங்கே அது போய்விடுமாகலால் அறிவுடையார் அதனை நிலையென்று கருதலாகாதென்பது கருத்து.

மேல், நிலையாதவற்றை நிலையென்றுணர்தல் புல்லறிவென்றார்; இதில், அந்நிலையாத ஒன்றின் நிலைமையை உவமையால் விளக்கினார்.

செல்வம் என்றும் நிலைத்திராதென்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை சூரபன்மன் கண்ணும், இராவணன்பாலும் உணரப்படும்.

கதை 1.

அண்டமாயிரத் தெட்டையும் தனியர சாட்சி
கொண்டு வைகினன் குலத்தொடும் அமரர்தங் குழுவைத்
தொண்டுகொண்டனன் யாவர்வந் தெதிர்க்கினுந் தொலையேன்
உண்டுகொல் இவன் எனக்குநே ராகவே ஒருவர்.

என்று இறுமாந்திருந்த சூரபன்மனது பெருஞ் செல்வமும் முடிவில் அவனையகன்று சென்றது.

கதை 2.

இலங்கையர் வேந்தனாகிய இராவணன் பதினாயிரம் ஆண்டுகள் அருந்தவம் புரிந்து அதன் பயனாகப் பல்வகைப்பட்ட செல்வங்களும் தாமே வந்து தன் பால் படிந்து நிற்கப் பெற்றான். முடிவில் அனைத்தும் ஒருங்கே இழந்து தானும் அழிந்தான்.

மரமடங்கலும் கற்பகம் மனையெலாங் கனகம்
அரமடந்தையர் சிலதியர் அரக்கியர்க் கமரர்
உரமடங்கிவந் துழையரா யுழல்பவரொருவர்
தரமடங்குவ தன்றித் தவஞ்செய்த தவமால்.

மரகதத்தினும் மற்றுள மணியினும் வனைந்த
குரகதத்தடந் தேரினம் அவைபயில் கொட்டில்
இரவி வெள்கநின் றிமைக்கின்ற இயற்கையவென்றால்
நரகம் ஒக்குமால் நன்னெடுந் துறக்கமிந் நகர்க்கு.

என்னும்படி சிறந்து விளங்கிய இலங்கைச் செல்வமும் பின் சிதைந்து தொலைந்தது.

புலைமேலுஞ் செலற்கொத்துப் பொதுநின்ற செல்வத்தின்
புன்மைத் தன்மை
நிலைமேலும் இனியுண்டோ நீர்மேலைக் கோலமெனும்
நிலைமைத் தன்றே
தலைமேலுந் தோண்மேலும் தடமுதுகிற் படர்புயத்தும்
தாவி யேறி
மலைமேனின் றாடினபோல் ஆடினவால் வானரங்கள்
வரம்பிலாத.

தன் பெருஞ் செல்வத்தை யிழந்து இராவணன் பட்டபோது இது கூறியதென்க. செல்வம் கூத்தாட்டுநடம் போல் திரண்டுவந்து பின் சிதைந்துபோம் என்பதை உலகம் இவர்பாலுணர்ந்தது. விரிவை இவர் சரிதைகளிலுணர்க.

செல்வம் என்றும் நிலையாதென்பது இதனால் கூறப்பட்

333. தண்டார்க் கலயனார் தாலிவிற்றும் ஆங்கறமே
கொண்டுசெய்தார் என்னே குமரேசா—மண்டியென்றும்
அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல். (௩)

இ—ள்.

குமரேசா! குங்குலியக் கலயனார் தாலியை விற்றும் ஏன் அப்பொழுதே அறத்தைச் செய்தார் எனின், செல்வம் அற்கா இயல்பிற்று அது பெற்றால் அற்குப ஆங்கே செயல் என்க.

அற்கா—நிலைநில்லாத. அற்குப—நிலைநிற்கின்ற.

செயல் என்பது இங்கு உடன்பாட்டு வியங்கோளாய் நின்றது.

அற்கா என்றது அல்கல் என்னும் வினையடியாப் பிறந்த எதிர்மறைப் பெயரெச்சம். அல்கல் என்பது நிலைத்தல், தங்கல், சுருங்கல்களை உணர்த்தும்

செல்வம் அற்கா இயல்பிற்று— செல்வம் நிலையாத இயல்பினையுடையது. அற்குப என்றது நிலையான அறங்களை.

செல்வம் நிலைத்து நில்லாத இயல்பினையுடைது; அதனைப் பெற்றால் நிலையுடைய அறங்களை அப்பொழுதே செய்க என்பதாம்.

கூத்தாடுக் கூட்டம்போல் செல்வம் விரைவில் நீங்குமென்று மேலுரைத்தார்; அது நீங்கிவிடுமுன்னே அதனால் செய்யவேண்டியது என்னஎன்பதை இதில் உணர்த்தி அருளினார்.

நிலையில்லாத பொருள் தம் கையில் எய்தப் பெற்றால்னே நிலைநிற்கின்ற அறங்களை அதனால் அறிவுடையார் செய்து கொள்வரென்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை கலயனார் பால் உணரப்படும்.

கதை.

கலயனார் என்பவர் சோழ நாட்டிலே திருக்கடவூர் என்னுந் தலத்திலே, வேதியர் குலத்திலே பிறந்தவர். சிறந்த செல்வமுடையவர். பிறவுயிர்களையுந் தம் உயிர்போல் எண்ணிப் பேணுந் தண்ணளியுடையவர். இவர் அத்தலத்தில் விளங்கும் திருக்கோவிலுட் சென்று நாளும் வாசனைத் தூபம் இட்டு ஈசனைப் போற்றிவந்தார். உயிர்கள் மாட்டு ஆரருளும் பரமன் மாட்டுப் பேரன்பும் கொண்டு ஒழுகிவருங்கால் இவர், செல்வந்தேய வறுமை மிக்கது. அதனால் மிக வருந்தினார். ஆயினும், உயிர்களுக்குச் செய்யும் உதவியினும் பரமனுக்குப்புரியும் பணியினும் சிறிதுங் குறைந்திலர். குடும்பத்தோடு இரண்டு நாட்களாப் பட்டினி கிடந்தார்.

மூன்றும் நாள் தமது அருமை மனைவியார் பெரிதும் இரங்கித் தாலியை எடுத்து உணவுப் பொருள்கள் வாங்கி வரும்படி இவர் கையில் கொடுத்தார். இவரும் அதனைக் கொண்டு சென்றார். செல்லுங்கால் ஒரு வணிகன் கொண்டுவந்துள்ள குங்குலியப்பொதியை இடையே கண்டார். நிலையாத உடம்பைப் பேறுதலினும் நிலையுள்ள அறத்தைப் பேறுதலே நலம் என்று துணிந்தார். ஈசனுக்குத் தூபம் இடுதற்கு மிகவும் இனிதாமென்று மகிழ்ந்து அவ்வாசனைப் பொருளையே வாங்கினார் நிலை நில்லாத இயல்பினையுடைய செல்வம் தம் கையில் எய்தப் பெற்றால் அறிவுடையார் அது கொண்டு நிலையான அறங்களையே செய்துகொள்வர் என்பதை இவர் அன்று உணர்த்தி நின்றார். மங்கிலியங் கொடுத்துக் குங்கிலியங் கொண்டதால் அன்று முதல் இவர் குங்கிலியக் கலயனார் என்று கூறப்பட்டார். அற்கா இயல்பினவான செல்வம் அமையப்பெற்றால் அறிவோர் அப்பொழுதே அதனால் அறத்தைச் செய்வர்என்பதை உலகம் இவர்பால் உணர்ந்தது. விரிவைப் பெரிய புராணத்தில் காண்க.

முல்லை முகைசொரிந்தாற் போன்றினிய பாலடிசில் மகளிரேந்த
நல்ல கருனையால் நாள்வாயும் பொற்கலத்து நயந்துண்டார்கள்
அல்லலுடைய அடகிடுமின் ஓட்டகத்தென் றயில்வார்க் கண்டும்
செல்வம் நமராங்காள் நினையன்மின் செய்தவமே நினைமின்கண்டீர்.

சீவக சிந்தாமணி.

செல்வம் நில்லாது ஆதலால் உடனே அதனால் அறஞ் செய்தல்வேண்டுமென்பது இதனால் கூறப்பட்டது.

334. மாசில் உரோமமுனி வாழ்நாள் தனிபெற்றும்
கூசினேன் வாழக் குமரேசா—தேசுறும்
நாளென ஒன்றுபோற் காட்டி யுயிரீரும்
வாள துணர்வார்ப் பெறின்,

குமரேசா! உரோமமுனி நீண்ட ஆயுள் நாளைப் பெற்றிருந்தும் தன் வாழ்நாற்கு நாணினார் எனின், நாள் என ஒன்றுபோல் காட்டி உயிர் ஈரும் வாள் அஃது உணர்வார்ப் பெறின் என்க. ஈர்தல்—அரிதல், பிளத்தல்.

நாள் என்றது பகல் இரவு என்று கதிரவனால் கணிக்கப்பட்ட காலக் கூறுபாட்டை. நாள் என—நாளென்று.

ஒன்றுபோல் காட்டி—ஒரு பொருள்போல் காட்டி.

உயிர் ஈரும் வாள்—உயிரை ஈர்கின்ற வாளாயுள்ளது.

உயிரானது ஈரப்படுவதொரு பொருளன்றாயினும் அஃது உற்று நிற்கும் உடம்பைப்பிரித்தலால் நாள் அதனை ஈரும் என்றார்.

அஃது உணர்வார்ப் பெறின்—அவ் உண்மையை உணர்வார் உளராயின். பெறின் என்றது அவ் உணர்தலின் அருமையை உணர்த்தி நின்றது. அஃது என்னும் குற்றியலுகரம் செய்யுள் நோக்கி அதுவென நின்றது.

நாளென்று காலவரையறையாகிய ஒரு பொருள் போல் தன்னைக்காட்டி உயிரை ஈர்கின்ற வாளாயுள்ளது அவ் உண்மையை உணர்வார் உளராயின் என்பதாம்.

உணர்வுடையார் வீழ் நாள் படாமல் நாளும் நன்றே ஆற்றுவர்; உணர்வில்லாதவர் பொழுதைப் பழுதே போக்கி முடிவில் இழிவே அடைவர் என்பது குறிப்பு.

நாளானது வெளித் தோற்றத்தில் ஒரு கால அளவைபோல் காணப்படினும், உண்மையில் உயிர்களை அரிந்துகொண்டிருக்கின்ற வாளாகவே உள்ளது; ஆதலால் அதன் கழிவை நம் அழிவெனக் கருதி அழிவிலின்பத்தை அடைதற்குரிய வழிகளை அது கழியுமுன் தேடுமின் என்று உணர்வுடை மக்களை நோக்கி இஃதுணர்த்தியதென்க.

நாளின் கழிவை உயிரின் கழிவாக உணர்வோர் உணர்வரென்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ் உண்மை உரோம முனிவர்பால் உணரப்படும்

கதை.

உரோமமுனிவர் என்பவர் புசுண்ட முனிவருடைய புதல்வர். அருந்தவமுடையவர். இவர் உடம்பு முழுவதும் நீண்ட மயிர்கள் அடர்ந்திருந்தமையால் இவருக்கு இப்பெயர் வந்தது. முற்றத் துறந்தவர். நீண்ட ஆயுளைப் பெற்றிருந்தும் ஒன்றினிடத்தும் பற்றிலலாமல் நிலையாமையையே நினைந்து நெடுந்தவம் புரிந்தார். கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் ஆகிய இந்நான்கு யுகங்களுஞ் சேர்ந்தால் ஒரு சதுர்யுகமாகும். அது நாற்பத்து மூன்று இலக்கத்து இருபதினாயிர வருடங்களையுடையது. இத்தகைய சதுர யுகங்கள் பல்லாயிரங் கழிந்தால் பிரமாவுக்கு ஆயுள் முடிவாம். அவர் அழியும்பொழுது இம்முனிவருக்கு மயிரொன்று உதிரும். இவருடம்பில் முப்பத்து மூன்று கோடி மயிர்கள் இருந்தனவாம். அவை முற்றும் உதிரின் இவர் இற்று முடிவர். நாரதர் முதலிய முனிவர் பலரும் இந்திரன் முதலிய அமரர் சிலரும் இவரது தவச்சாலைக்கு வந்து நெடிய வாழ்நாளையுடைய நீர் ஏன் இச்சிறிய குடிசையில் இருக்கின்றீர் என்றார். நாளும் கழிந்துகொண்டு போகின்ற ஆயுளை நிலையெனக் களித்தல் மிகவும் இழிவாகும். என்னினும் மிக்க ஆயுளையுடைய ஒருவர் உளர். அவருக்கு அட்டகோண முனிவர் என்று பெயர். என் உடலிலுள்ள மயிர் முழுதும் உதிர்ந்து நான் முடிவடையும்பொழுது அவருக்கு ஒரு கோணல் நிமிரும். அவ்வாறு, அவ் எட்டும் நிமிர்ந்தால் அவர் இற்றுவிழுவார். அவரைப்போய்க் காண்மின் என்றார். அனைவரும் வியந்து அவர்பால் வந்தார். நிலையாமையை நினைந்தே நெடுந்தவம் புரிகின்ற அவர் நிலைமையைக் கண்டார். நெடுநாண் கொண்டார். நாளின் கழிவை உயிரின் கழிவாகவே உணர்வுடையார் உணர்வரென்பதை உலகம் இவர்பால் உணர்ந்தது.

விரிவை முனிவர் மான்மியத்தில் காண்க.

பாளையாந் தன்மைசெத்தும் பாலனாந் தன்மைசெத்தும்
காளையாம் பருவஞ்செத்தும் காமுறும் இளமைசெத்தும்
மீளுமிவ் வயதுமின்னே மேல்வரு மூப்புமாகி
நாளுநாட் சாகின்றாமால் நமக்குநாம் அழாததென்னே.
(குண்டலகேசி.)

தினங்கள் செலச்செல ஏதோபெற்றனபோல் களிக்கும்நெஞ்சே தினங்களோடு
கனங்கொளும் உன்ஆயுளுநாள் கழிவதுணராய் உயிர்தீர் காயஞ்சேரும்
வனங்கடுகி வாவென்ன விளித்துன்பால் தினநெருங்கும் வண்மையுன்னி
முனங்கொளறி யாமையைநீ இனங்கொள்ளா தறஞ்செய்ய முயலுவாயே. (நீதிநூல்.)

நாளின் கழிவை உயிரின் கழிவாகவே உணரவேண்டுமென்பது இதனால் உணர்த்தப்பட்டது.

335. மண்டு புகழ்க்கட்டு வாங்கன் விரைந்தேனோ
கொண்டுசெய்தான் நன்மை குமரேசா—கொண்டாடும்
நாச்செற்று விக்குண்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும். (௫)

இ.—ள்.

குமரேசா! கட்டுவாங்கன் ஏன் விரைந்து தவஞ் செய்தான் எனின், நாச்செற்று, விக்குள் மேல் வாரா முன் நல் வினை மேற் சென்று செய்யப்படும் என்க. விக்குள்—விக்கல். விக்கல் மேல் எழும்பொழுது நாஎழாது ஆதலால் "நாச் செற்று விக்குள் மேல் வாராமுன்" என்றார்.

மேற்சென்று செய்யப்படும்—விரைந்து செய்யப்படும்; வாய்பாட்டுக்கேற்ற எழுவாய் இதில் வருவித்துக்கொள்க.

உயிர் உடம்பை விட்டுப் பிரியுங் காலத்தில் தோன்றுகின்ற துன்பக் கூறுபாடுகளுள் மிக்கது ஆய விக்கல் தோன்றுமுன்னே வீட்டிற்கேதுவாகிய நல் வினையை விரைந்து செய்யவேண்டுமென்றது அது தோன்றியபின் யாதும் செய்யமுடியாதென்பது

நாவை அடக்கி, விக்குள் மேல் எழுவதற்கு முன்னே அறிவுடையோரால் வீட்டிற்கு உரிய அறம் விரைந்து செய்யப்படும் என்பதாம்.

மேல், நெருநல் உளனா ஒருவன் இன்று இலனாவன் என்றார்; இதில், அவ் இன்மை வருமுன்னமே நன்மை செய்க என்றார். உண்மையை உணர்த்தி உறுவனவற்றை விரைவில் செய்க என்ற அடிகள் அருள் மாண்பை இதில் ஆய்ந்துகொள்க.

கருவிகள் தளராதிருக்கும்பொழுதே உயிர்க்கு உறுதியான நன்மையை ஒருவன் விரைந்து செய்துகொள்ளவேண்டுமென்பது கருத்து.

நிலையில்லாத உடல் நிலைத்திருக்கும்பொழுதே நிலையான அறத்தை அறிவுடையார் செய்து கொள்வர் என்பது இதில் உணர்த்தப் பட்டது. இவ் உண்மை கட்டுவாங்கன் பால் உணரப்படும்.

கதை

கட்டுவாங்கன் என்பவன் சூரியகுலத்து வேந்தனாகிய விசுவகன் குமரன். சிறந்த போர்வீரன். இவனுடைய மகன் பெயர் தீர்க்கபாகு. மனைவி சதமதி. இவன், மன்பதை இன்புற மாநிலம் புரந்தான். அக்காலத்தில் அசுரருடன் அமராற்ற ஆற்றாது அமரர் சிலர் இவன்பால் வந்து துணைவர வேண்டினார். இவன் சென்று அசுரரை அடங்கவென்று அமரருக்கு உயரிய மேன்மையை உதவினான். அதனால் இந்திரன் மகிழ்ந்து "வென்றிவேந்தே! உனக்கு வேண்டுவது யாது" என்றான். இவன் எனக்கு ஆயுள் முடிவு எப்பொழுது என்று நீ அறிந்து கூறுக

என அவனை அலமந்து வேண்டினான். அவன் யோகவுணர்வால் நோக்கி "ஐயகோ! இன்னும் இரண்டுநாழிகைதானே உள்ளது" என்றான். மன்னன் மாநகர் வந்தான். அரியவை யாவும் உரிமை யினுகவி அறவினையெல்லாம் விரைவினில் செய்தான், பற்றறத் தெளிந்தான். பற்றற்றானையே பற்றி நின்று சலஞ்செய்[illegible] முத்தியடைந்தான். விக்குள் மேல் வருமுன்னே நல்வினையை அறிவோர் விரைந்து செய்வரென்பதை உலகம் இவன்பால் [illegible]ந்து மகிழ்ந்தது. (விரிவைப் பாகவதத்தில் காண்க.)

இளமையும் எழிலும்வானத் திருவிலின் நண்மையுந்
வளமையுங் கிளையுமவாரி புதியகன வரவுபோலும்
வெளியிடை விளங்கினவீயும் ஆபுவுமென்று வீட்டுக்
குளபகலுங்கஞ் செய்வர் உணர்வினாற் பெரியநீரார்.

(மேருமந்தர புராணம்,)

இளமையும் நிலையாவால் இன்பமும்நின்ற வல்ல
வளமையும் அஃதேயால் வைகலுந் துன்பவெள்ளம்
உளவென நினையாதே செல்கதிக்கென்று மென்றும்
விளைநிலம் உழுவார்ப்போல வித்துநீர் செய்துகொண்மின்.

(வளையாபதி)

புன்னுனிமேல் நீர்போல் நிலையாமை என்றெண்ணி
இன்னினியேசெய்க அறவினை—இன்னினியே
நின்றான் இருந்தான் கிடந்தான்தன் கேளலறச்
சென்றான் எனப்படுத லால்.

(நாலடியார்)

பசிவந்தபின்னெல்லை விதைப்பதுபோல் வீட்டில் [illegible]
நசியும்போததையவிக்க ஆறுவெட்டல்போலும்போதடை [illegible]
விசிகநூல் கற்கமுயல் வதுபோலும் கபமிருசி [illegible]
இசிவுகொண்டுசாங்காலததெப்படிநீஅறம்புரிவாய் [illegible]

விக்கிச் சா முன்னே நல்வினையை விரைந்து செய்ய வேண்டுமென்பது இதனால் கூறப்பட்டது.

336. பண்டு மணமகனாய்ப் பத்தினியைக் கைப்பிடித்தான்
கொண்டஅன்றேன் மாண்டான் குமரேசா—கண்ட
நெருநல் உளனொருவன் இன்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு. (சு)

-ள்.

குமரேசா! மணமகனாகி மகிழ்ந்து நின்றவன் அன்றே ஏன் பிணமகனாகி இழிந்துபோனான் எனின், ஒருவன், நெருநல் உளன்; இன்றுஇல்லை என்னும் பெருமையை இவ்வுலகு உடைத்து

ஒருவன் நெருநல் உளன்—ஒருவன் நேற்று உளனாயினன்.

இன்று இல்லை—இன்று இல்லையாயினன்.

என்னும் பெருமை என்றது இகழ்ச்சிக் குறிப்பு. உலகோர் சொல்லின்மேல் வைத்து இஃதுணர்த்தியதென்க.

ஒருவன் நேற்றுப் பிறந்தான் இன்று இறந்தான் என்று சொல்லும்படியான நிலையாமையையே இவ் உலகம் நிலையாகக் கொண்டுள்ளது என்பதாம்.

“நேற்று இருந்த ஒருவன், இன்று இல்லையானான்” என்னும் பெருமைதான் இவ்வுலகில் மிகுதியாகவுள்ளது ஆதலால் உள்ளபோதே உயிர்க்கு உறுதியைச் செய்துகொள்ளுக என்பது குறிப்பு. இறத்தலும் பிறத்தலும் இருபாலார்க்கும் உளவாயினும் உயர்வுபற்றி ஒருபால்மேல்வைத்துக் கூறினார்.

மேல், விக்குள் வருமுன்னே வேண்டியதை விரைந்துசெய்க என்றார்; மூப்பு வந்த பின்னர்தானே அது வரும் என்று அயர்த்து இராதே என்று இதில் அருளினார் என்க.

இன்று இருந்தான் தன் கேள் அலற இப்பொழுது ஒருவன் இறந்துபோனான் என்று இவ்வுலகில் அடிக்கடி சொல்லப்படும் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை தனதன்பால்
ரரப்படும்.

கதை.

தனதன் என்பவன் மதுரையிலிருந்த ஒரு வணிகர் குல மகன். இவன் காலத்தில் குலோத்துங்க பாண்டியன் அரசுபுரிந்தான். தனது மரபுக்குரிய மங்கை ஒருத்தியை இவன் மணம் புரிந்தான். பெற்றாரும் உற்றாரும் பிறரும் புடைசூழ்ந்து மகிழத் திருமணம் அழகுற நடந்துகொண்டிருந்தது; அப்பொழுது அங்கோர் இளங் கன்றையுடைய பசு ஒன்று வெருண்டோடி வந்து இவன்மேற் பாய்ந்து விரைந்து சென்றது. அதனால் குடர் சரிந்து இவன் உடனே மாண்டான். மணமகனாயிருந்தவன் பிண மகனானான். இன்று இருந்தான் இப்பொழுது இறந்தானே என்று அனைவருங் கலங்கி அழுது துடித்தார். நெருநல் உளன் ஒருவன் இன்று இல்லை என்பதினும் மிக்க நிலையாமையை இவன் பால் உலகம் அன்று கண்டது. விரிவைத் திருவிளையாடலில் காண்க.

ஓட்டியபல் கிளைதுவன்றி ஒல்லொலிமங்கலந் தொடங்கக்
கொட்டியபல் இயமுழங்கக் குழுமியவோசையின் வெருண்டு
கட்டியதாம் பிறப்புனிற்றுக் கற்றாவொன்றதிர்ந் தோடி
முட்டியதால் மணமகனை முடிந்ததால் அவனாவி. (1)

மணமகனே பிணமகனாய் மணப்பறையே பிணப்பறையாய்
அணியிழையார் வாழ்த்தொலிபோய் அழுகையொலியாய்க்கழியக்
கணமதனிற் பிறந்திறமிக் காயத்தின் வரும்பயனை
உணர்வுடையார் பெறவருணர்வொன் றுமிலார்க்கொன் றுமிலை. (2)

இவற்றால் மேற்குறித்த உண்மை தெளிவாதல் காண்க.

மன்றங் கறங்க மணப்பறை யாயின
அன்றவர்க்காங்கே பிணப்பறையாய்ப்—பின்றை
ஒலித்தலும் உண்டாமென் றுய்ந்துபோமாறே
வலிக்குமாம் மாண்டார் மனம். (நாலடியார்)

நிலையாமையே இவ் உலகில் நிலையாக உள்ளதென்பது இதனால் கூறப்பட்டது.

337. கோடி கருதிக் குதித்தான் சயத்திரதன்
கூடினான் சாவேன் குமரேசா—கூடி
ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியும் அல்ல பல. (எ)

இ—ள்.

குமரேசா! வெற்றி பெற்றோமென்று தன் வாழ்வைக் குறித்துப் பல கோடி எண்ணிய சயத்திரதன் ஏன் உடனே மாண்டான் எனின், ஒருபொழுதும் வாழ்வது அறியார், கோடியும் அல்ல பல கருதுப என்க.

கருதுப—எண்ணுவர். கோடி ஓர் எண்: அஃதாவது நூறு நூறாயிரம். உம்மை இழிவு சிறப்பு. கோடியும் அல்ல பல என்றது மனத்தில் தோன்றும் எண்ணங்கள் அளவிடலரியன என்பது க(

அறியார் கருதுப என்று கூட்டுக. கருதுப என்பதைப் பெயராகக் கொண்டு கருதப் படுவன பல என்று காணினும் அமையும்.

ஒரு பொழுதளவும் தாம் நிலையாயிருந்து வாழ்வேமென்பதை உணராதவராயிருந்தும் கோடியினும் பலவாய எண்ணங்களை அறிவிலார் கருதுவர் என்பதாம்.

அற்ப வாழ்வையும் அற்ப அறிவையுமுடைய மக்கள் கற்ப கோடி காலம் வாழ்வார் போன்று பல கோடி எண்ணங்களை நினைந்து நினைந்து நெஞ்சு புண்படுவர் என்றபடி.

உலண்டு கூடு கட்டி யாங்கு அறிவிலார் பல் கோடி நினைவுகளால் மனக்கோட்டை கட்டி மகிழ்வர்; அறிவுடையார் தமது நிலையாமையின் நிலைமையைத் தெளிந்து நிலையானதையே நினைந்து நிற்பர் என்பது கருத்து.

ஒரு கணமேனும், இவ்வுலகில் நிலைத்திருப்போம் என்னும் மை தமக்குத் தெரியாதிருந்தும் பல கோடி எண்ணங்களை நினைந்து களித்து அறிவிலார் அழிவர் என்பது இதில் உணர்த்தப் பட்டது. இவ் உண்மை சயத்திரதன்பால் உணரப்படும்.

கதை.

சயத்திரதன் பாரதப் போரில் பதின்மூன்றாம் நாளில் அருச்சுனனுடைய மகனாகிய அபிமன்னனைக் கொன்றுவிட்டான். அதனால், அருச்சுனன் சினந்து மறுநாள் பொழுதுபடுமுன் அவனைக் கொல்வதாகவும், இல்லையானால் நெருப்பில் விழுந்து தான் முடிந்து செல்வதாகவும் சூளுரை புகன்று துணிந்திருந்தான். முறைப்படி மறுநாள் போர் தொடங்கினது. அன்று சயத்திரதனை நடுவே வைத்து எண்பதினாயிரம் தேர் வீரர்களை அவனைப் படைசூழ நிறுத்துப் பல்லாயிரங்கோடி போர்வீரர்களை அதனமேல் நிறுத்துத் துரோணர் படைத் தலைவராய் நின்று, நால்வகைச் சேனைகளையும் நடத்திப் பொருதார். இருபத்தெட்டு நாழிகையாகியும் அவன் இருந்த இடத்தையுங் கூட அருச்சுனன் பொருந்தப்பெற்றிலன். சாரதியாயிருந்த கண்ணன் தன் சக்ராழியால் கதிரவனை மறைத்தான். உலகம் இருண்டது. துரியோதனன் முதலானவர் மகிழ்ந்து சயத்திரதனை ஓர் அழகிய தேரில் அலங்கரித்துவைத்து "சயம் சயம்" என்று முழங்கிக் குதித்து அருச்சுனன் முன்னே நிறுத்தினர். "உடன்படிக்கையின்படி பொழுதுபோய்விட்டது இனித் தீயில் விழுந்து அருச்சுனன் இறந்துபடுவான்; அவன் இறந்தவுடன் தருமர் முதலிய நால்வரும் தொலைவர்; அவர்கள் தொலைந்தபின் படைகளனைத்தும் பறந்துபோம்; அதன் பின் அரசு முழுவதும் நம் அரசனுக்கே உரியதாகும்; அதனால் புகழும் வெற்றியும் பொருவருஞ் செல்வமும் யான் பெற்று மகிழ்ந்து பெருஞ் சிறப்படைவேன்" என்று இங்ஙனம் பல கோடி எண்ணங்களைச் சயத்திரதன் கருதிக் கருதிக் களித்தான். கதிரவன் மறையவில்லை யென்னும் உண்மையைக் கண்ணன் விசயனுக்கு உணர்த்தி 'விடுக அம்பு' என விரைந்து நின்றார். உணர்ந்து வீரனும் உடனே விட்டான். துள்ளி நின்றவன் தலை துள்ளி எழுந்தது. ஒருபொழுதளவும் தாம் வாழ்வதை அறியாதிருந்தும்

கோடியினும் பலவாய எண்ணங்களை அறிவிலிகள் எண்ணியெண்ணி மகிழ்வர் என்பதை உலகம் அன்று இவன்பால் உணர்ந்தது. (விரிவைப் பாரதத்தில் காண்க.)

உண்பது நாழி உடுப்பது நான்குமுழம்
எண்பது கோடிநினைந் தெண்ணுவன—கண்புதைந்த
மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போலச்
சாந்துணையுஞ் சஞ்சலமே தான். (ஔவை.)

முன்னொரு காலத்தில் காகன் என்னும் வேடனொருவன் வேட்டைக்குச் சென்றான். அங்கோர் யானையைக்கண்டு அதன் மேல் அம்பினை ஏவினான். அதனால் அது மாண்டு விழுந்தது. வேடன் வியந்து அதன்பால் விரைந்து சென்றான். அங்குக் கிடந்த பாம்பு அவன் காலில் கடித்தது. அதனை வில்லால் அடித்தான். அது மடிந்தது. விடந்தலைக் கேறி வேடனும் மடிந்தான். சிறிதுபொழுது கழித்து நரி ஒன்று அங்கு வந்தது. பெருமகிழ்வு கொண்டது. யானை ஆறு மாதங்கட்கு உணவாகும், வேடன் மூன்று நாட்களுக்கு அமையும், அரவம் இன்றைக்குக் காணும், என்று கருதி நரி அன்று கொண்ட உவகைக்கு அளவேயில்லை. சுற்றிச் சுற்றி வந்தது. நரம்பால் கட்டியுள்ள வில்லின் நாணியை முதலில் தின்னக் கருதி நுனிப் பக்கம் இருந்த நரி அதனைக் கடித்தது. நாண் இற்றவுடன் வில் விரைந்து எற்றியது. அதனால் நரி மாண்டது. தன் மனைவியுடன் வந்து அவ்வனத்தி லுலாவுகின்ற மன்னன் இந்நிகழ்ச்சியைக் கண்டு நாமும் இவ்வாறுதானே பல கருதி மாள்கின்றோம் என்று நிலையாமையை யஞ்சி உடனே துறவுகொண்டான். இதுவும் கண்டு கருதத்தக்கதாதலான் இதனடியில் காட்டப்பட்டது.

கரியொரு திங்களாறு கானவன் மூன்றுநாளும்
இரிதலைப் புற்றுநாகம் இன்றுணும் இரையாமென்று
விரிதலை வேடன்கையில் விற்குதை நரம்பைக்கவ்வி
நரியனார் பட்டபாடே நரர்களும் படுவர்மாதோ.
(நரி விருத்தம்)

தம் நிலைமையை உணராமலே அறிவிலிகள் பல கருதுவர் என்பது இதனால் கூறப்பட்டது.

338. கூடிவந்த் தன்மனைவி கொண்டவுயிர் காணாதேன்
கூடுபட்டுங் கண்டான் குமரேசா—நாடுங்
குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு. (௮)

இ—ள்.

குமரேசா! தேவசன்மா, தன் உடன் வந்த மனைவியின் உயிரைக் காணாது என் உடம்பை பட்டும் கண்டான் எனின், உடம்போடு உயிரிடை நட்பு, குடம்பை தனித்து ஒழியப் புள் பறந்தற்று என்க. குடம்பை—பறவைக் கூடு.

புள்—பறவைகளெல்லாவற்றிற்கும் பொதுவான பெயர்.

உடம்போடு உயிரிடை நட்பு—உடம்புக்கும் உயிர்க்கும் உளதாய உறவு. உயிருடை எனவும் பாடம்.

புள் பறந்தற்று—பறவை பறந்து போன தன்மைத்து.

நட்புப் பறந்தற்று என்று காண்க. உயிர்க்கும் உடம்பிற்கும் அமைந்துள்ள உறவின் தன்மையை உணர்த்துதற்கு நட்பு என்றார். அதனை புன்மை குறிப்பாலிழிக்கப்படுதலால் இது குறிப்பு மொழி என்க.

குடம்பையை விட்டுப் பறவை பறந்து போதல் போல் உடம்பினை விட்டு உயிர் பிரிந்துபோம் என்பதாம்.

உடம்பு தனியே கிடக்க உயிர் பிரிந்து போதல் எதுபோல்வதெனின், கூடு தனியே கிடக்கப் பறவை பறந்து போதல் போலும் என்பார் "உயிரிடை நட்பு, புட் பறந்தற்றே" என்றார்.

உடம்பு தனித்தொழிய உயிர் போதலை உணர்த்துதற்குப் புள்ளை உவமை காட்டியது அதன் இயல்பு நோக்கி என்க.

குடம்பையும் புள்ளும், உடம்பிற்கும் உயிர்க்கும் இதில் முறையே ஒப்பாய் நின்றன.

இனி, உடன்தோன்றல், ஒன்றாய் நிற்றல், காலம் வந்துழிப் பிரிந்துபோதல், பின் அதில் புகாது ஒழிதல ஆகிய உடலுயிர்களின் செயல்கள் முட்டைக்கும், அதனுள் இருக்கும் புள்ளுக்கும் பொருந்தியிருத்தலால் குடம்பையை முட்டை என்று கொண்டு பொருள் காணினும் அமையும்; ஆயினும், முட்டையிலிருந்து குஞ்சு வெளிப்பட்டுத் தவண்டு கிடக்குமே யன்றிப் பறந்துபோதல் இல்லாமையாலும், அவ்வமையம் அது புள் என்று பெயர்கொள்ளாமையாலும், "புள் பறந்தற்று" என்பதே இங்குச் சிறந்தமையாலும், இவ் அரிய அமைவில ஒருவகை எளிய அமைவின்மையும் அமைந்துள்ளது என்க.

உடம்பைத் தனியே ஒழித்துவிட்டு ஒருவரும் அறியாவண்ணம் உயிர் ஒளிந்துபோம் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை கமலவதிபால் உணரப்படும்.

கதை.

இற்றைக்குப் பல நூற்றாண்டுகட்கு முன்னர் மதுரையின் வடகிழக்கிலுள்ள திருப்பத்தூர் எனனும் நகரில் தேவசன்மா என்றொரு வேதியனிருந்தான். அவன் கமலவதி என்னும் கன்னியை மணந்து இல்வாழ்க்கை புரிந்துவருங்கால் ஒருநாள் தன் மாதுலனைக் காண விரும்பி மனைவியையும் குழவியையும் உடன்கொண்டு மதுரையை நோக்கி வந்தான். நெறியிடையிருந்த ஓர் ஆலமர நிழலில் அவ் இருவரையும் இருத்திவிட்டு அவர்க்காக நீர் நாடிச் சென்றான். அவ் ஆலமரத்தின் நுனியில் முன்னரே தொங்கிக் கிடந்த அம்பு ஒன்று காற்றால் அலைப்புண்டு கீழே இருந்தவள் மேலே விழுந்தது. அதனால் அவள் உயிர் துறந்தாள். சென்றவன் நீர்கொண்டு திரும்பி வந்தான். அயில்பட்ட மயில்போல் உயிர்போய்க் கிடக்கும் அவ் அழகியைக் கண்டு ஆருயிர் பதைத்தான். கலங்கி அறிவழிந்து கதறி அழுதான். இவ் அழகிய உடம்பிலிருந்து பழகிய அவ் உயிர் எவ்வாறு போயிற்றோ என்று ஏங்கி நொந்தான். பருவம் வந்துழிக்குடம்பையை விட்டுப் பறந்து செல்லும் பறவைபோலக் காலம் வந்து

ழிஉடம்பை விட்டு உயிர் பிரிந்து போய்விடும் ஆதலால் நீ வருந்திவாய்விடாதே என்று சிலர் மொழிந்து தேற்றினர். உடம்பிற்கும் உயிர்க்கும் உளதாய நட்பின் நிலைமையை இவன் உணர்ந்து தெளிந்து குழந்தையோடு தன் ஊரினையடைந்தான். (விரிவைக் கூடற்காண்டத்தில் காண்க)

கேளாதே வந்து கிளைகளாய் இற்றோன்றி
வாளாதே போவரால் மாந்தர்கள்—வாளாதே
சேக்கை மரனொழியச் சேணீங்கு புட்போல
யாக்கை தமர்க்கொழிய நீத்து. (நாலடியார்.)

விடம்பயில் எயிற்றர வுரியுக் விருமை
குடம்பையும் தானுங் கொள்கைத்தே கொலாம்
நடம்பயில் கூத்தரை நடிக்கும் ஐவர் வாழ்
உடம்பையும் யானென வுரைக்கற் பாலதோ. (தனிசெ.)

உடம்போடு உயிர்கொண்டுள்ள உறவின் இயல்பு இதனால் உரைக்கப்பட்டது.

339. அன்றிறந்த சத்தியவான் அவ்விருத்தை யேன்பிறந்து
குன்றெழுந்தார் குமரேசா—நன்றாய்
உறங்குவதுபோலுஞ் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு. (௯)

குமரேசா! அன்று இறந்து விழுந்த சத்தியவானும் விருத்தையும் ஏன் உடனே பிறந்து எழுந்தார் எனின், சாக்காடு, உறங்குவதுபோலும்; பிறப்பு உறங்கி விழிப்பதுபோலும் என்க.

சாக்காடு— இறப்பு. காடு தொழிற்பெயர் விகுதி.

இறத்தல் உறங்குதலையும் பிறத்தல் உறங்கி விழித்தலையும் ஒக்கும் என்பதாம்.

உறங்குவதையும் விழிப்பதையும் இறப்புக்கும் பிறப்புக்கும் ஒப்பிட்டார் இயல்பாகவும் விரைவாகவும் உயிர்கட்கு அவை மாறி மாறி உளவாம் என்பது கருத்து.

குடம்பையை விட்டுப் பறவை போதல்போல் உடம்பினை விட்டு உயிர் போம் என்று மேலே கூறினார்; இதில், அவ் உயிர் மீண்டும் மீண்டும் உடம்பெடுத்து நின்று மாண்டு மாண்டு தோன்றும் என்பதை உவமையால் விளக்கினார்.

நீரோடு தட்பமும், நெருப்போடு வெப்பமும் எப்படி இயல்பாக அமைந்துள்ளனவோ அப்படியே உடலோடு சாக்காடு உறைந்துள்ளது என்க.

உறக்கமும் விழிப்பும் போல் இறப்பும் பிறப்பும் உயிர்கட்கு மாறி மாறி வருமென்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை சத்தியவானிடமும், விருத்தையாலும் உணரப்படும்.

கதை 1.

சத்தியவான் தனது மனைவியாகிய சாவித்திரியுடன் நீரதம் என்னும் வனத்தில் ஓர் ஆலமர நிழலில் உவந்து இருந்தான். அப்பொழுது அவனுக்கு முடிவுகாலம் வந்தது. சாய்ந்து படுத்தான். உயிர் மாய்ந்துபோனான். உடனிருந்த மனைவி உள்ளங் கலங்கித் தன் கற்பின் மாண்பால் காலனைத் தொடர்ந்து மங்கலந்தேடு தன்னைக் காத்தருளும்படி வேண்டினாள் இவளது தூய்மைக்கு மகிழ்ந்து அவ்வாறே ஆகுக என்று அவனும் அருள்புரிந்தகன்றான். இவளும் மீண்டுவந்து தன் கணவனைத் தீண்டினாள். இறந்துகிடந்தவன் உறங்கி விழித்தவன்போல் எழுந்தான். இருவரும் மகிழ்ந்து தம் இருப்பிடஞ் சென்றார். விரிவைச் சிவ மகா. புராணத்தில் காண்க.

கதை 2.

விருத்தை என்பவள் இற்றைக்குப் பல்லாயிர வருடங்கட்கு முன்னை அநாமயம் என்னும் வனத்திலிருந்த உசத்தியன் என்னும் ஒரு முனிவரன் புதல்வி, தாய் பெயர் மங்கலை. இவள்

ஒரு நாள் மங்கையர் பலருடன் மலர் கொய்யச் சென்றாள். ஆங்கோர் மதயானை முழங்கி வந்தது. அதனால் அனைவரும் சிதறி ஓடினர். இவளுங் கலங்கி ஓடிப் புதர் மூடியிருந்த ஒரு பாழுங் கிணற்றிற் பாய்ந்து மாய்ந்தாள். பெற்றோர் அறிந்து பேதுற்றுவந்து மகளையெடுத்து விம்மி விம்மி மயங்கிநொந்தார்.

அறங்காட்டிற் சென்றதுவோ செய்தவமும் இங்கிலையோ
அரிதா முகத்தி
திறங்காட்டுந் தவநெறியும் பொய்த்தனவோ கலியுமினிச்
சேர்ந்ததேயோ
மறங்காட்டும் வனக்களிறு வந்தடர்த்த தென்பெண்ணை
மாது மணியை
புறங்காட்டிற் கிடந்திடுமோ என்னையென்னே விதியோ
புதுமையாமே.

என்று புலம்பியழுதார். அவ்வமையம் அங்குக் குச்சக முனிவர் வந்து தம் தவ மகிமையால் அவ்வுயிரை மறலியிடமிருந்து மீட்டுக் கொணர்ந்தார். உடனே அஃது அவ் உடலிற் புகுந்தது.

உடற்குள்உயிர் வந்திடலும்புகுந்ததுமெய் யுணர்வுசிறி
துயிர்த்த நாசி
துடித்தனநால் பதைத்ததுரந் துளங்கிமுகம் விளங்கியதால்
துவண்ட தாகம்
எடுத்தன்கை அசைந்தனதோள் இமைத்தனகண் விழித்தனவா
வினைய காலை
மடக்கொடியும் துயிலுணர்ந்தாள் போலெழுந்தாள் எல்லோரு
மருங்கிற் சூழ்ந்தார்.

இவ்விருந்தையே மார்க்கண்டருடைய தந்தையின் தந்தையாகிய மிருகண்டு முனிவருக்கு மனைவியாயினாள். உறங்குவதுபோலும் இறப்பு உறங்கி விழிப்பது போலும் பிறப்பு என்பதை உலகம் இவ் இருவர் பாலும் அன்று உணர்ந்து தெளிந்தது. விரிவைக் கந்தபுராணத்தில் காண்க.

இறப்பும் பிறப்பும், உறக்கமும் விழிப்பும்போல் மாறி மாறி வருமென்பது இதனால் கூறப்பட்டது.

340. நிண்டோட் சசித்துவசன் செய்யவுயிர் பல்லுடம்பு
கொண்டலைந்த தென்னே குமரேசா—கொண்டுநிற்கும்
புக்கில் அமைந்தின்று கொல்லோ வுடம்பினுள்
துச்சி லிருந்த வுயிர்க்கு.

குமரேசா! சசித்துவசனது மெய் உயிர், ஏன் பல ம்புகளினும் புகுந்து அலைந்தது எனின், உடம்பினுள் துச்சில் இருந்த உயிர்க்கு புக்கில் அமைந்தின்று கொல் என்க.

புக்கில்—புகுந்து நிலையா யிருக்கு மிடம்.
அமைந்தின்றுகொல்—அமைந்ததில்லை போலும்.

துச்சில்—ஒதுக்கிடம்; அஃதாவது இரவலாக ஒதுங்கித் தங்கும் இடம். துச்சில் இருந்த உயிர்க்குப் புக்கில் அமைந்ததில்லை என்றது பல்வகை உடம்புகளினும் புகுந்து அஃது ஒன்றினும் நில்லாது நீங்குமென்பது கருதி.

நிலையான உயிர், நிலையாயிருத்தற்கு ஒரு நிலையான நல்ல இல்லம் அதற்கு இதுகாறும் அமைந்ததில்லை என்பது கருத்து.

நிலையில்லாத உடம்புள் நிலைத்திருக்கும்பொழுதே நிலையேறுடைய நன்மையை ஒருவன் பெறவேண்டுமென்பது குறிப்பு.

உடம்புகளுள் இரவலாக ஒதுங்கித் தங்கியிருக்கும் உயிர்க்கு என்றும் நிலையாகப் புகுந்து இருத்தற்கோர் இடம் இன்னும் அமைந்ததில்லையோ என்பதாம். புக்கில் அமைந்ததாயின் துச்சில் இருந்து உயிர் அலையாதென்பது தெளிவாதலால் கொல்லோ என்றது ஐயமாயிற்று. நிலைபெற்ற இல்லாகிய வீட்டினை அடையும்வரையும் உயிர் நிலையின்றி அலையும் என்பது கருத்து.

ஓர் இல்லில் ஒதுக்குக் குடியிருப்போர் அவ் இல்லிற்குரியவர் விரும்பும்வரையும் இருந்து வெறுத்தவுடனே வெளியேறிவிடுவர்; அதுபோல், கொடு நோய்களுக்கு உரிய இடமாயுள்ள உடம்புகளுள் உயிர் புகுந்து ஒதுங்கியிருந்து அலைவு அடங்கி

ருச்குர் வரையும் அமர்ந்து அவை நிலை திரிந்தவுடனே அகன்று போய் அவ்வாறே மாறி மாறி அலைந்துவரும் என்க.

ஒதுக்குக் குடியிருக்கின்ற ஒருவனுக்கு அவ் வீடு எவ்வளவு உரிமையுடையதோ அவ்வளவே உயிர்க்கு உடம்போடு உளதாய உறவு என்பது குறிப்பு.

பல்வேறு உடம்புகளுள்ளும் புகுந்து சிறிது காலந் தங்கி ஒன்றிலும் நிலையின்றி உயிர் திரிந்து வரும் என்பதைப்

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்"

என்னும் அருள்மொழிகளினிது விளக்குகின்றன.

ஒரு நிலையில் நில்லாமல் உடல்கள்தோறும் உயிர் புகுந்து மீளும் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை சசித்துவசன் பால் உணரப்படும்.

கதை.

சசித்துவசன் என்பவன் இற்றைக்குப்பல நூற்றாண்டுகட்கு முன்னர்ப் பல்லவதேயத்தை ஆண்டிருந்த ஒரு மன்னவன். நல்ல சீலமுள்ளவன். இவனுடைய மனைவி பெயர் சுசாந்தை. இவ்விருவரும் கணவனும் மனைவியுமாய் முன்னர்ப்பல உடம்புகளிலும் புகுந்திருந்து பொருந்தியின்புற்றார். பின்னர் வணிகமரபில் தோன்றி மருவிவாழுங்காலத்தில் அவடவாயுவு என்னும் ஓர் நோயால் அவன் ஆவிதீர்ந்தான். மனைவிவருந்தி அழுதாள். அவ்வமையம் அங்கு வந்த சவுபரி என்னும் முனிவரொருவர் இரக்கமுற்று அவனை எழும்படி மொழிந்தார். அவரது தவமாண்பால அவனும் எழுந்தான். மிகுதியாகப்புலால் தின்றுவந்த பாவத்தால் அவ்விருவரும் பின் கழுகுகளாய்ப் பிறந்து காடன் என்னும் வேடனொரு

வன் கண்ணியிற் சிக்கிக் கண்டகி நதிக்கரையில் கொல்லப்பட்டார். வேடன் அவரை அறுத்துச் சுட்டு ஊனை உண்டு எஞ்சிய என்புகளை நதியில் வீசி எறிந்தான். அந்நதியிற் கலந்த நலத்தின் பயனாக அரசனும் அரசியுமாக அவ்விருவரும் அமைந்து தோன்றி ரமா வென்னும் [illegible]யைப் பயந்து கல்கிக்கு மணம் புரிந்து தன் சிறப்பு உடைமையை அமைத்து அரசன் இறந்து போனான். பலவகைப் பட்ட பிறப்புகளெல்லாம் ஒதுங்கி ஒதுங்கி நின்று ஒன்றினும் நிலையில்லா பல உழன்று திரிந்து அழிவில் இன்பத்தை முடிவில் அடைந்தான். உயிர்க்கு ஒதுங்கிடமாகவே உடம்பு அமைந்துள்ளது எனறும் அஃது அதில் நிலையாக நிலைத்தென்றும் தோன்றியதாகவும் தொலைந்து அழியும் என்றும் நிலையாமையின் இயல்பை இவன் நினைந்து தெளிந்தவன். (விரிவைக் கல்கி புராணத்தில் காண்க)

ஒரு உடம்பினும் நிலையாக நில்லாமல் உயிர் மாறி மாறி அலையுமென்பது இதனால் கூறப்பட்டது.

கடுங்கால் நெடுவெளி இடுஞ்சுடரென்ன
ஒருங்குடன் இல்லா உடம்பிடை உயிர்கள். சிலப்பதிகாரம்.

உழந்திரிந் தவர்களுக் குதவும் ஒண்பொருள்
கழங்கினுங் குலவுகட் டிய களஞ்சியம்
தழலினுக் கோர்தன மான சட்டகம்
எறிபுனற் பாயினும் இருப்ப தல்லவே.
(செவ்வந்திப் புராணம்.)

ஓரிடத்தோ ருயிர்நெடுநா ளுறைவதிலை உதவியெனும்
நீரிடத்துப் புரிவின்மையால் நிலையிலுடம் பிதுபோனால்
பாரிடத்திற் சுவர்க்கத்திற் பலர்க்கமதில் எங்கெனினும்
சேரிடத்துஞ் சேருமிது திண்ணமெனத் தெளிந்திடுதி.
(சேதுபுராணம்.)

இறப்பெனும் மெய்ம்மையை இம்மை யாவர்க்கும்
மறப்பெனும் அதனின்மேற் கேடு மற்றுண்டோ
துறப்பெனும் தெப்பமே துணைசெய் யாவிடிற்
பிறப்பெனும் பெருங்கடல் பிழைக்க லாகுமோ.
(இராமாயணம்.)

இவ் அதிகாரத்தின் தொகைப் பொருள்.

நில்லாதவற்றை நிலைஎன்று உணர்தல் புல்லறிவாகும். செல்வம் கூத்தாட்டுக் கூட்டம்போல் திரண்டுவந்து பின் பிரிந்துபோம். அது நிலையாக நில்லாதாதலால் உடனே அதனால் அறம் செய்து கொள்ளவேண்டும். நாளினை நம்உயிரை அறுக்கும்வாள் எனஉணர வேண்டும் மூப்பு வருமுன்னரே நல்வினையை விரைந்து செய்துகொள்ளவேண்டும். நேற்று இருந்தான் இன்று செத்தான் என்னும் பெருமைதான் இவ் உலகில் மிகுதியாக உள்ளது. ஒரு கணமேனும் உயிர், உடலோடு கூடி வாழும் என்பதை ஒருவரும் அறியார். குடம்பையை விட்டுப் பறவை பறந்துபோதல்போல் உடம்பினைவிட்டு உயிர் பிரிந்துபோய்விடும். இறப்பும், பிறப்பும் உறக்கமும், விழிப்பும் போல் மாறி மாறி வரும். ஒருடம்பினும் உயிர் நிலையாக நில்லாது.

௩௪-வது நிலையாமை முற்றிற்று.

௩௫-ம் அதிகாரம் துறவு.

அஃதாவது உடல்முதல் உலகிலுள்ள எல்லாப் பொருள்களின்மேலும் உளதாய பற்றுக்களை அறவே விடுதல். உற்ற பொருள்களெல்லாம் முற்றும் அழியும் என்னும் உண்மையுணர்வு உதித்த பின்னரே இஃது உதிக்கும் ஆதலால் நிலையாமையின் பின் நிறுத்தப்பட்டது. அதிகார நிலையும் இதனானே தெளிவாம்.

341. பெற்றசெல்வம் எல்லாம் பிருகரதன் ஏன்துறந்து
குற்றமற நின்றான் குமரேசா—உற்றறிந்தே
யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன். (க)

-ள.

குமரேசா! அரச செல்வம் முழுவதும் நீங்கிய பிருகரதன் ஏன் யாதொரு நோதலும் இலனாய் அமைதியுற்றிருந்தான்

எனின், யாதனின் யாதனின் நீங்கியான், அதனின் அதனின் நோதல் இலன் என்க.

நோதல்—துன்பம். நீங்கியான்—துறந்தவன்.

யாது என்னும் வினாப் பெயர் அன்சாரியையும் இன் உருபும் அடைந்து யாதனின் என நின்றது. அஃது என்னும் சுட்டுப் பெயர் ஆய்தங் கெட அன்சாரியையும் இன் உருபும் பெற்று அதனின் என நின்றது. பொருள்கள் பலவாகலின் அடுக்கியருளினார்.

துறந்தவனுக்குத் துன்பம் இல்லை என்பார் நீங்கியான் நோதல் இலன் என்றார்.

யாதொரு பொருளின் நின்றும் யாதொரு பொருளின் நின்றும் ஒருவன் பற்று நீங்கினான், அதனின் நின்றும் அதனின் நின்றும் வருகின்ற துன்பம் அவன் அடைதல் இலன் என்பதாம்.

பொருள்கள்மேலுள்ள பற்றுக்களை ஒருவன் எவ்வளவுக்கு எவ்வளவு விடுகின்றானோ அவ்வளவுக்கு அவ்வளவு துன்பத்தில் நின்று அவன் விடுபடுகின்றான் என்பது கருத்து.

உலக வாழ்க்கையில் பற்று நீங்கினவனுக்குத் துன்பம் நீங்கும் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை பிருகரதன்பால் உணரப்படும்.

பிருகரதன் என்பவன் விதேகநாட்டு வேந்தன். அழகும் வீரமும் அமையப் பெற்றவன். பேரறிவுடையவன். தேவவிரதன் என்னும் புதல்வனைப் பெற்றுச் சிறந்து வாழ்ந்து வருங்கால் ஒரு நாள் மேன் மாடத்தில் நிலா முற்றத்தில் உலாவிக்கொண்டிருந்தான். முதிர்ந்து உதிர்ந்த மா இலை ஒன்று தன்முன் விழக் கண்டான். தனது அழகிய கையால் அதனை எடுத்தான். தளிராயிருக்கும்பொழுது அது பெற்றிருந்த அழகும் செவ்வியும் இப்பொழுது எங்கே போயின என்று அதன் முதுமையை நினைந்து தன் பிறவியை முனிந்தான். துறவினை விரும்பினான்.

எரிபுரை எழிலதாய இளந்தளிர் இரண்டுநாளின்
மரகத உருவமெய்தி மற்றது பசலைகொண்டு
கருகிலை யாகிவீழ்ந்து சரிந்துமண் ணுதல்கண்டும்
வெருவிலர் வாழ்துமென்பார் வெளிறறினை விலங்கலாமோ.

என்று அவ்விலையின் இயல்பால் நிலையாமையை உணர்ந்து இரங்கி அரசுரிமைகளை ஒவ்வொன்றாக நீக்கினான். முடிவில் தன்னுடைய மூத்த மகனுக்கு முடிபுனைந்து முடியா இன்பத்தைத் தான் அடைய முயன்றான். அனைத்தையுந் துறந்து அடவியிற் புகுந்து ஆதவனை நோக்கி அருந்தவம் புரிந்து திருந்திய ஞானியாய்ச் சிறந்து விளங்கினான். பற்று இனிதகன்றிருக்கும் மனத்தைப் போல பனி மதியும் பதுமத்தோனும் பொற்றிரள்சேர் இந்திரனும் சுகம் அடையார் என்று தான் உணர்ந்து மகிழ்ந்தான். துன்பம் யாதும் இன்றி இன்பமெய்தி யிருந்தான். பொருள்கள்மேல் பற்று நீங்கினவனுக்குத் துன்பம் நீங்கும் என்பதை இவன் பொருந்தித் தெளிந்தான். (விரிவை மைத்திராயணி உபநிடதத்தில் காண்க.)

உறவு தந்தைதாய் ஒண்டொடி மாதரார்
சிறுவர் வண்புவி செல்வம் பெரும்புகழ்
பிறவினும் படும் ஆசை பிரிந்தமெய்த்
துறவின் அல்லது துன்பம் அகலுமோ. (திருக்கூவப்புராணம்)

பற்று நீங்கினவனுக்கே துன்பம் நீங்கும் என்பது இதனால் கூறப்பட்டது.

342. பண்டேன் இளமைப் பருவத்தே சங்கரர்மேற்
கொண்டார் துறவைக் குமரேசா—மண்டுநலம்
வேண்டினுண் டாகத் துறக்க துறந்தபின்
ஈண்டியற் பால பல. (உ)

குமரேசா! சங்கரர் ஏன் இளமைப் பருவத்தே துறவினை மேற்கொண்டார் எனின், துறந்தபின் ஈண்டு இயற்பால பல; அவை வேண்டின் உண்டாகத் துறக்க என்க.

ஈண்டு இயற்பால—இம்மையில் உளவாம் இயல்பினையுடையன.

பின்னர் நெடுங் காலம் உளதாயிருக்கும்படி முன்னரே ஒருவன் துறக்கவேண்டும் என்பார் "உண்டாகத் துறக்க" என்றார். என்றது இளமையிலேயே பற்று நீங்குக என்பதாம்.

காலம் உண்டாகவே காதல் செய்து உய்மின் என்றபடி. இன்பம் வேண்டின் இளமையிலேயே துறவு கொள்க; துறவு அடைந்தபின் இங்கு எய்தும் முறைமையையுடைய நலங்கள் பல என்பதாம்.

துறவால் துன்பம் நீங்குமென்று மேலே கூறினார்; இதில் அஃது அளவிலின்பத்தை உளவாக்குமாதலால் இளமையிலேயே அதனை அடைக என்றார்.

பேரறிவுடையவர் இளமைப் பருவத்தே துறவினை அடைவர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை சங்கராசாரியர்பால் உணரப்படும்.

கதை.

சங்கராசாரிய சுவாமிகள் இற்றைக்கு ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபது ஆண்டுகட்குமுன்னர்க் கேரளநாட்டிலே, காலடி என்னும் நகரிலே, வேதியர்குலத்திலே சிவகுரு என்பவருக்குப் புதல்வராய் ஈசுரவருடம் வைகாசிமதியில் அவதரித்தார். தாய்பெயர் ஆரியாம்பாள். சிவ கலையாகிய இவர் இளமையிலேயே உயர் கலை பலவும் ஓதாதுணர்ந்தார். இவரது அழகும், அறிவும் குண நலங்களும் எவருடைய உள்ளங்களையும் கவருந் தன்மையன. காளைப் பருவத்தை இவர் எய்துமுன்னரே தந்தையார் காலம்

போயினார். உலகப் பொருள்களில் ஒரு பற்றும் இன்றி உயர்ந்த துறவொழுக்கத்தை இவர் கொண்டார். அதனைக் கண்டு தடுத்த தமது அருமைத் தாய்க்கு இதம் பல கூறித் தனியே இருத்திவிட்டுப் பல இடங்கட்குச் சென்றார். அற்புதங்கள் பல அருளுடன் புரிந்தார். மிக வறுமையுற்றிருந்த அயாசிதர் என்னும் ஓர் அந்தணன் மனைவிபால் தாம் பிச்சையாக எற்ற ஒரு நெல்லிக்கனியின் பொருட்டு அவ் இல்லம் எங்கும் பொன் மாரி பெய்வித்தார். நெடுங்காலம் வருந்தியிருந்த சத்திய சாதன் என்னும் ஓர் அரசனுக்குப் புத்திரப் பேற்றை அருளினார். பரதகண்டம் முழுவதுந் திரிந்து முனிவர் பலரைக் கண்டு இனியவுரைகளாடி மதங்கள் பலவற்றையும் மறுத்துத் தம் மதத்தையே அணிபெற நிறுத்தினார். ஆரிய சுருதிப் பொருள்களைத் தமக்கு உறுதிப் பொருளென ஏவரும் எளிதில் உணருமாறு தெளிவுறத் திருத்தினார். பல்லாயிரவரைத் தம சொல் வழி ஒழுக்கினார். பதுமபாதர், மண்டல மிசிரர், ஆனந்தகிரி, அத்தாமலகர் என்னும் இந்நால்வரும் அன்புறு சீடராய எப்பொழுதும் இவரை அணுகியிருந்தனர். கேதாரம், சகந்நாதம், துவாரகை, பதரிகாச்சிரமம் முதலிய இடங்களில் தம் பெயரால் மடங்களை நிறுவித் தமது அருமைச் சீடர்களை அவைகளில் அமரச் செய்து மைசூர் நாட்டிலுள்ள ஒரு மலையின் சாரலில் ஓர் உயர்மடம் புதுக்கிக் கலைமகள் பீடத்தை அங்கு நிலைபெற அமைத்துத் தாம் நிலைபெற்றஇன்பத்தை மலைவற எய்தினார். அப்பதி இப்பொழுது சிருங்ககிரி என்று வழங்கப்படுகின்றது. இவரது மத போதனை உலகமெங்கும் பரவியுள்ளது. "வேதாந்த சூரியன், வியாக்கியான வீரியன், அருங்கலை விநோதன், அந்தணர்சிந்திதன், பூமண்டல ஆசாரியன், புரையறு துறவினன்" என்று இவரை அனைவரும் புகழ்ந்தார். உலக குரு என்று உலகம் இன்றும் இவரைப் போற்றி வருகின்றது. இளமையில் துறந்தவர், அதனால் உளவாம் உயர் நலங்களை நெடுங்காலம் அடைவர் என்பதை உலகம் இவர்பால் உணர்ந்தது. (விரிவைச் சங்கர விசயத்தில் காண்க.)

காலமுண் டாகவே காதல்செய் துய்மின் கருதரிய
ஞாலமுண் டானொடு நான்முகன் வானவர் நண்ணரிய
ஆலமுண் டானெங்கள் பாண்டிப் பிரான்றன் அடியவர்க்கு
மூலபண் டாரம் வழங்குகின் றான்வந்து முந்துமினே.
(திருவாசகம்)

துறந்தவனுக்கு இம்மையிலேயே பல நலங்களும் உளவாம் என்பது இதனால் கூறப்பட்டது.

343. வெற்றிமிகு சீவகனேன் றேவியவெல் லாமொருங்கே
குற்றமென விட்டான் குமரேசா — முற்றும்
அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய வெல்லா மொருங்கு. (௩)

குமரேசா! தான் கொண்டிருந்த செல்வ முழுவதையும் ஏன் சீவகன் ஒருங்கே துறந்தான் எனின், ஐந்தன் புலத்தை அடல்வேண்டும் வேண்டிய எல்லாம் ஒருங்கு விடல்வேண்டும் என்க.

அடல்—கொல்லுதல், கெடுத்தல், சமைத்தல், பொருதல்.
ஐந்து என்றது மெய், வாய், கண், முதலிய ஐம்பொறிகளை.

ஐந்தன் புலத்தை அடல்வேண்டும்—ஐம்பொறிகள் வழியாக அடைகின்ற சுவை முதலிய ஐந்து புலன்களையும் அடுதல் வேண்டும். உலக இன்பங்களை நுகர்தற்காகத் தான் முன் விரும்பித் தொகுத்தவற்றை எல்லாம் அறவே துறக்கவேண்டுமென்பார் "வேண்டிய எல்லாம் ஒருங்குவிடல் வேண்டும்" என்றார்.

பொறிகளின் வாயிலாக அடைகின்ற ஐம்புல நுகர்ச்சிகளையும் கெடுத்தல் வேண்டும்; அவற்றிற்காகத் தான் விரும்பிக்கொண்டிருந்த எல்லாவற்றையும் ஒருங்கே விடுத்தல் வேண்டும் என்பதாம்.

புல்லிய புலனுகர்ச்சிகள், எல்லையில்லாத அல்லல்களுக்கே ஏதுவாகுமாதலால் பிறவித்துன்பங்களை அறுக்க நின்ற துறவோர் அவற்றை அறவே முதலில் வெறுக்கவேண்டும் என்பதும் அவற்றிற்கு உரிமையாயிருந்த பொருள் முழுவதையும் ஒருங்கே துறக்கவேண்டும் என்பதும் கருத்து.

அடலும் விடலும், அகத்தும் புறத்தும் முறையே அமையும் என்க

அகத்தே பொறிகளை அடக்கிப் புறத்தே உள்ள பொருள்களையெல்லாம் அறிவோர் அகலவிடுவர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை சீவகன்பால் உணரப்படும்.

கதை.

சீவகன் என்பவன் ஏமாங்கத நாட்டிலே இராசமாபுரியிலேயிருந்த சச்சந்தன் என்னும் அரசனுடைய அருமைத்திருமகன். அறிவும் அழகும் ஆண்மையும் வாய்ந்தவன். சிறந்த போர்வீரன். இளமையும் எழிலும் இயைபுற அமைந்த காந்தருவதத்தை, குணமாலை, பதுமை, கேமசரி, கனகமாலை, விமலை, சுரமஞ்சரி, இலக்கணை என்னும் தனது மனைவியர் எண்மரோடும் இனிதமர்ந்து எல்லா நலங்களையும் நன்கு நுகர்ந்து இன்புற்றிருக்குங்கால், ஒருநாள் அவரனைவரையும் உடன்கொண்டு அழகிய பூஞ்சோலை ஒன்றில் புகுந்து அதன் வளமெல்லாங்கண்டு மகிழ்ந்து முடிவில் ஒரு பலாமரத்தின் அடியில் தேவியர் சூழச்சிறந்து வீற்றிருந்தான். அவ்வமையம் ஓர் ஆண்குரங்குத் தான் கவர்ந்து கொணர்ந்த பலாப்பழத்தைப் பிதிர்த்துச் சுளைகளையெடுத்துத் தன் காதல் மந்தியைக் கனிந்து தழுவி உண்ணும்படி உவந்து கொடுத்தது. உடனே அச்சோலையைக் காப்பவன் ஓடிவந்து அவைகளை ஓட்டிவிட்டு அக்கனியைக் கவர்ந்து தானே உண்டு களித்தான். அதனைக் கண்டிருந்த சீவகன் புலனுகர்வின் இழிவையும் அதனால் உயிர்களுக்கு விளையும் பழியையும், தெளிந்து தன் தந்தையைக்கொன்று கட்டியங்காரன் கவர்ந்த அரசை

தான் வென்று கொண்டதுபோல் கடுவனைக் கலக்கிக் காப்பாளன் கவர்ந்துவாழும் இவ் உலகவாழ்க்கை நிலையற்றதென்று உணர்ந்து ஆருயிர்த்துணைவிகளையும், அரசுமுதலிய அரிய நலங்களையும் ஒருங்கே துறந்து அடவியில் புகுந்து அருந்தவம் புரிந்தான். மெய்யுணர்வுடையவர் ஐம்புலன்களையும் அட்டு வேண்டிய எல்லாம் ஒருங்கே விட்டுவிடுவர் என்பதை உலகம் இவன்பால் உணர்ந்து தெளிந்தது. விரிவை முத்தியிலம்பகத்தில் காண்க.

இன்கனி சுவருமந்தி கடுவனோ டிரியவாட்டி
நன்கனி சிலதனுண்ண நச்சுவேல் மன்னனோக்கி
என்பொடு மிடைந்தகாமம் இழிபொடு வெறுத்துநின்றான்
அன்புடை அரிவை கூட்டம் பிறனுழைக் கண்டதொத்தே. (1)

கைப்பழம் இழந்தமந்தி கட்டியங் காரனொத்த
திப்பழந் துரந்துகொண்ட சிலதனும் என்னையொத்தான்
இப்பழம் இன்றுபோகத் தின்பமே போலுமென்று
மெய்ப்பட வுணர்வு தோன்றி மீட்டிது கூறினானே. (2)

வேட்கைமை யென்னும் நாவிற் காமவெந் தேறன்மாந்தி
மாட்சி யொன்றானுமின்றி மயங்கினேற் கிருளைநீங்கக்
காட்டினார் தேவராவர் கைவிளக்கதனை யென்று
தோட்டியால் தொடக்கப்பட்ட சொரிமதக் களிற்றின் மீண்டான் (3)

இவை, மெய்யுணர்வு தோன்றிய பொழுது சீவகன் சொன்னவை.

புலன்களை அடுதலும் எல்லாவற்றையும் ஒருங்கே விடுதலுமே சிறந்த துறவாம் என்பது இதனால் கூறப்பட்டது.

344 ஓர்நாய் உடைமைக்கும் ஓங்குபுகழ்ப் பத்ரகிரி
கூர்நோயேன் கொண்டார் குமரேசா—தேரின்
இயல்பாகும் நோன்பிற்கொன் றின்மை யுடைமை
மயலாகும் மற்றும் பெயர்த்து. (௪)

இ.—ள்.

குமரேசா! ஒரு நாயைத் தனக்கு உடைமையாக வைத்திருந்த பத்ரகிரியார் பின் ஏன் அதனை மடைமை என்று கருதி வருந்தினார் எனின், ஒன்று இன்மை நோன்பிற்கு இயல்பு ஆகும்; உடைமை மற்றும் பெயர்த்து மயல் ஆகும் என்க.

நோன்பு என்றது இங்கு அதனைச் செய்வார் மேல் நின்றது.

ஒன்று இன்மை நோன்பிற்கு இயல்பாகும் — ஒரு பொருளும் இல்லாமையே தவம் செய்வார்க்கு இயல்பாகும்.

மற்றும் பெயர்த்து மயல் ஆகும்—மீண்டும் மறுபடியும் மயங்குதற்கு ஏதுவாகும்

மெய்யுணர்வுடையவராய்த் துறந்து சென்றவர் ஏதேனும் ஒன்றை உடையவராயிருப்பின், அப்பற்று மறுபடியும் அவரை மயக்கத்தில் ஆழ்த்திவிடும் ஆதலால், "உடைமை மற்றும் பெயர்த்து மயலாகும்" என்றார்.

இன்மை, இயல்பாகும்; உடைமை, மயலாகும்; என்று காண்க.

முத்தியை எய்த விரும்புவார் தாம் பெற்றுள்ள பொருள் முழுவதையும் முற்றும் விடவேண்டுமென்று மேலுரைத்து அங்ஙனம் விடுங்கால் ஒன்று உடையராயினும் அஃது அவர்க்கு நன்றாகாதென்று இதில் உணர்த்தினார் என்க.

இன்மையே தவமுடையார்க்கு நன்மையாம் என்பது கருத்து.

ஒரு பொருளும் இல்லாமையே தவஞ்செய்வார்க்கு இயல்பாகும்; ஏதேனும் ஒன்று உடைமை அவர்க்கு மீண்டும் மயலாகும் என்பதாம்.

இவ்வுலகில் இன்மை இழிவையும் உடைமை உயர்வையும் மக்கட்கு அடைவிக்கும்; ஆயினும், பிறவா இன்பம் பெற விரும்பிய பெரியோர்பால் அம்முறை மாறி நிற்கும் என்க.

தவஞ்செய்பவர் யாதாயினும் ஒரு பொருளை உடையராயிருப்பின் அதனால் அவர்க்கு இழிவே வருமென்பது இதி[illegible]ர்த்தப்பட்டது. இவ்வுண்மை பத்ரகிரியார்பால் உணரப்படும்.

கதை.

பத்திரகிரியார் தாம் பெற்றிருந்த அரச செல்வ முழுவதையும் முற்றத் துறந்து திருவாரூரை அடைந்து தனியான இடத்தில் அமர்ந்து தவம்புரிந்திருந்தார். இருக்குங்கால், ஒரு நாய் இவர்பால் நன்றியறிவோடு நணுகி யிருந்தது. உச்சிப்போதில் தாம் உண்டு மிகுந்த பிச்சைச் சோற்றை அதற்கும் இட்டு அன்பு செய்து வந்தார். தமக்குத் திருவருள் புரிந்த ஞானமூர்த்தியாகிய பட்டினத்தடிகளும் அத்தலத்தில் எழுந்தருளி யிருந்தார் அவர், இவரது ஊன அன்பை ஒழிக்க விரும்பித் தம்பால் பிச்சைக்கு வந்த ஒரு யோக சித்தரை நோக்கி, “அதோ ஒரு சமுசாரி இருக்கின்றான் அவன்பாற் செல்க” என்று அருளி விடுத்தார். சித்தர் வந்து பத்திரகிரிபால் பிச்சை கேட்டார் என்பால் ஒன்றும் இல்லையே என்று அவர்பால் அன்போடு சொன்னார். நீ பெரிய சமுசாரி என்று அங்கொருவர் கூறி விடுப்ப யான் தேடி வந்தேன் என்று அம்மன்னு மாதவர் இன்னுரை பகர்ந்தார். தன் கையில் இருந்த ஓடும், நாயும், அல்லவோ என்னை இங்ஙனம் எண்ணும்படி செய்ததென்று வருந்தி, அவ் இரண்டையும் ஒருங்கே ஒழித்தார். ஒன்றும் இன்மையே துறவோர்க்கு நன்று என்று அடிகள் சுட்டிக்காட்டியதை அவர் அறிந்து தெளிந்தார். துறந்திருந்தும் ஒரு நாயின் உடைமையால் தாம் அடைந்த இழிவினை எண்ணி இரங்கினார். துறவோர்க்கு உடைமை மடைமையாம் என்பதை இவர் அன்று உலகறிய உணர்த்தினார். (விரிவை இவர் சரிதையில் காண்க)

மனைவியர் மக்களில் வாஞ்சை யுண்மையே
புனைதரு நலமெல்லாம் போக்கித் தாழ்த்திடும்
மனைவியர் மக்களில் வாஞ்சையின்மையே
புனைதரு பரகதி பொருந்த உய்க்குமே. (காசிரகசியம்)

ஒன்றும் இன்மையே துறவோர்க்கு நன்று என்பது இதனால் கூறப்பட்டது.

345 பூவணையும் பொற்கலனும் போக்கியுயர் பட்டணத்தார்
கோவணமேன் கொண்டார் குமரேசா—பூவுலகில்
மற்றும் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்கல்
உற்றார்க் குடம்பும் மிகை.

குமரேசா! பூவணையையும், பொற்கலன்களையும் துறந்து பட்டினத்தார் ஏன் கோவணம் கொண்டார் எனின், பிறப்பு அறுக்கல் உற்றார்க்கு உடம்பும் மிகை; ஆனபின் மற்றும் தொடர்ப்பாடு எவன் கொல் என்க.

பிறப்பு அறுக்கல் உற்றார்—பிறவியை நீக்க நின்ற துறவோர். உடம்பின் உரிமைச் சிறப்பை உம்மை உணர்த்தி நின்றது. மற்றும் தொடர்ப்பாடு என்றது மனைவி, மக்கள், துணைவர், ஒக்கல் இல்லம் முதலிய வேறு சில புறப்பொருள்களை. பிறப்பினை அந்தப் புறப்பொருள்கள் எல்லாவற்றையுந் துறந்து பேரின்பத்தை எய்தற்கு விரைந்தெழுகின்ற தூய உயிர்க்கு, வினையுள்ள அளவும் விடாது நிற்கும் உடம்பு தடையாயிருக்குமாதலால் அது மிகையாயிற்று என்க. உற்றார்க்கு மிகை என்று உணர்க.

யை அறுக்க நின்ற துறவிகட்கு தம் உடம்பே மிகையாகத் தோன்றும் எனின், வேறு பொருள்களை அவர்க்கு என் ஆம் என்பதாம் வெறுத்து நீக்குவர் என்பதை விரு குறித்து நின்றது.

தம் உடம்பையே மிகை என்று கருதவேண்டிய துறவிகள் மற்றுஞ் சில பற்றுக்களை உற்று நிற்பது என்ன பயன் கருதியோ எனவும் இது பொருள்படும்.

எல்லாப் பொருள்களையுந் துறந்து, உடம்பையும் மிகை என்று துறவோர் கருதியார் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ் உண்மை பட்டினத்தார்பால் உணரப்படும்.

கதை.

அரசரும் விரும்பத்தக்க பெருந் திரு உடையராய் எல்லா நலங்களையும் இனிது நுகர்ந்திருந்த பட்டினத்தார், உலகப் பொருள்கள் ஒன்றும் நிலையா என்னும் உண்மை உணர்வு உதித்த உடனே தாம் பெற்றிருந்த எல்லாப் பொருள்களையும் முற்றத் துறந்து பற்றற்று நின்றார். தனியிடம் ஒன்றில் இனிதுற அமர்ந்து அடிகள் ஒரு நாள் அகமகிழ்ந்திருந்தார். பண்டு இவரோடு பழகியிருந்த அரசனொருவன் கண்டு அருகில் வந்து நின்று பூவணையையும், பொற்கலன்களையும் ஒழித்துவிட்டு ஒன்றும் இல்லாதவராய் ஒடுங்கியிருக்கும் நீர் இதனால் என்ன பயன் கண்டீர் என்று இரங்கிக் கேட்டான். "எல்லாமுடைய நீ நின்று சொல்லவும், ஒன்றுமில்லாத நான் இருந்து கேட்கவும் ஏற்றதொரு பயனை யான் இன்று கண்டேன இனி எல்லாங்காண்பேன்." என்று இவர் எதிர்மொழி தந்தார். அடிகளது அகத்துறவையும் அருட்பெருக்கையும் அரசன் அறிந்து அகமகிழ்ந்தகனான். அடிகள் பல இடங்களிலுந் திரிந்து முடிவில் திருவொற்றியூரை அடைந்து தாம் உற்றிருக்கும் உடம்பு நீங்கு வரையும் பொறுத்திராமல் அதனுடனே சமாதியில் அடங்கி மறைந்தார் துறவோர் தம் உடம்பையும் மிகை என்று கருதி வீட்டினை அடைய விரைவர் என்பதை உலகம் இவர்பால் அமையக் கண்டது. விரிவை இவர் நூல் காண்க.

என்பினை நரம்பிற் பின்னிக் குடர்வழும் பிறைச்சி மெத்திப்
புன்புழுப் பொதிந்து செந்நீர்ப் புண்ணசும் பொழுகி நாறித்
துன்பநோய் எவற்றினுக்கும் உறையுளாய்ப் புறந்தோல் மூடும்
வன்புலை யுடம்பே ஆவி வருத்திடும் பிணிவேறில்லை.

(காஞ்சிப்புராணம்).

நாயினுக் கிரையோ நரியினுக் கிரையோ நகுநடைக்
பிறம்பற்
பேயினுக் கிரையோ கழுகினுக்கிரையோ பெரிது நாரியபுழுக்
குரம்பை

ஈயினுங் கீழையோ யாதினுங் கீழையோ யான் சுமந்துழன்றிடப் பணித்தாய்
தாயினுக்கழுநோ சேயினைவருத்தல் சாற்றிடா இளசைவாணவனே. (இளசையந்தாதி).

இருப்பதுபொய் போவதுமெய் என்றெண்ணு நெஞ்சே
ஒருத்தருக்குந் தீங்கினையுன் னாதே—பருத்ததொந்தி
நம்மதென்று நாமிருக்க நாய்நரிகள் பேய்கழுகு
தம்மதென்று தாமிருக்கும் தான். (1)

மண்ணுந் தணலாற வானும் புகையாற
எண்ணரிய தாயும் இளைப்பாறப்—பண்ணுமயன்
கையாறவும்அடியேன் காலாறவுங்கண்பார்
ஐயா திருவையா றா. (பட்டினத்தார்.) (2)

ஐயாறனிடத்தில் ஐவகை ஆறுதலை வேண்டிய அடிகளது புலமை நயத்தையும், உடம்பையும் மிகைஎன்றெண்ணிய துறவின் திறத்தையும், இவற்றில் உய்த்துணர்க.

உற்ற உடம்பினும் துறவோர் பற்றுவையார் என்பது இதனால் கூறப்பட்டது.

346 ஏனை அயனுலகும் எண்ணார் சரபங்கர்
கோனுலகே புக்கார் குமரேசா—ஞானமுற
யானெனதென் னுஞ்செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும். (௬)

ப—ரை.

குமரேசா! சரபங்கர் அயனுலகத்தையும் தள்ளி ஏன் அதனினும் உயர்ந்ததின் கண்ணே புகுந்தார் எனின், யான் எனது என்னும் செருக்கை அறுப்பான், வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும் என்க.

செருக்கு அறுப்பான்—மயக்கத்தை ஒழிப்பவன்.

வானோர்க்கு உயர்ந்த உலகம் என்றது, முத்தி உலகத்தை. யான் எனது என்னும் செருக்கு என்றது ஊனை உடம்பைத் தான் என்றும், ஒழியும் பொருளைத் தன்னுடையது என்றும் கருதிக் களிக்கும் மயக்கத்தை. அதனை அறுத்தலாவது நிலையாமையாகிய அவற்றின் இயல்பினையுணர்ந்து அவற்றின் மேல் வைத்துள்ள பற்றுக்களை அறவே ஒழித்தல். அவை அகப்பற்று எனவும், புறப்பற்று எனவும் உரைக்கப்படும். அறுப்பான் புகும் என்று கொள்க.

யான் எனது என்னும் மயக்கத்தை அறுத்தவன், வானவர்களும் அடைதற்கரிய முத்தியுலகத்தை அடைவான் என்பதாம்.

எல்லா உலகங்களினும் மேம்பட்டுள்ள வீட்டுலகத்தை ஒருவன் அடையவேண்டுமாயின் அவன் இவ்வுலகப் பற்றுக்களை அறவே ஒழிக்கவேண்டுமென்பது குறிப்பு.

அகம் புறம் என்னும் இருவகைப் பற்றுக்களையும் விட்டவர் இந்திரன் முதலிய இறைவர் பதங்களையும் எய்தாமல் அந்தமிலின்பத்து அழிவில் வீட்டையே எய்துவர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை சரபங்கர்பால் உணரப்படும்.

கதை.

சரபங்கர் என்பவர் இற்றைக்குப் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னர்த் தண்டக வனத்தில் இருந்த ஓர் அருந்தவர். மன்மதனுடைய சரத்தைப் பங்கஞ் செய்தமையால் இவர் சரபங்கர் எனப்பெற்றார். சரம்—அம்பு. இதனால் இவரது புலனடக்கம் எவர்க்கும் இனிது புலனாம். காமம், வெகுளி என்னும் தீமைகளில்லாத தூய்மையுடையவர் என்று இவரை அமரரும் போற்றினர். பிரமா இவரது மனப்பண்பை வியந்து தன் உலகத்துக்கு அழைத்துவரும்படி இந்திரனை விடுத்தார். இந்திரன் வந்தான். அயன் கருத்தை உணர்த்தி அழைத்தான். அங்கு வருவதில்லையென்று மறுத்து இராமபிரானுடைய வரவையே இவர் எதிர்நோக்கியிருந்தார். முனிவரது பற்றற்ற தன்மையைப் புகழ்ந்து அமரர் தலைவனும் அகன்றான். அதன்பின் இராமர் மனைவியோடும், இலக்குவனோடும்,

ஆங்கு எய்தக்கண்டார். அவரைக் கண்ட அளவில் இவருக்கு உண்டான உவகைக்கு அளவேயில்லை. அவரும் புகழ்ந்து இவரது தவச்சாலையில் அன்று தங்கியிருந்தார். நிலைபேறுடைய உயிர், நிலையில்லாத உடம்போடு கூடியிருந்து தன் வினைப்பயன்களை நுகர்ந்து முடிவில் அதனை விட்டுப் பிரிந்து போய்விடும் என்றும், அதனை யான் எனக்களித்தல் ஞானமுடையவர்க்கு ஈனமாம் என்றும், வந்தவர் வாழ்த்தினும் வசையுரைக்கினும், சந்தனம் பூசினும் தசையைக் கொய்யினும் முந்துறு வினையினால் மூண்டதாமெனச் சிந்தையில் தெளிந்து சினத்தைத் துறந்தவனே தவத்திற் சிறந்தவன் எனவும், துறவொழுக்கங்கள் பலவற்றையுங் குறித்து அவ்விரவு முழுவதும் இரகுவீரனோடு இவர் உரையாடி மகிழ்ந்தார். விடிந்தவுடன் தன் மனைவியுடன் நெருப்பில் பாய்ந்து மேலான வீடுலகத்தை எய்தினார். யான் எனது என்னும் செருக்கை ஒழித்தவர் வானோர்க்கும் உயர்ந்த உலகின்கண்ணே புகுவர் என்பதை உலகம் இவர்பால் உணர்ந்து தெளிந்தது. விரிவை இராமாயணத்தில் காண்க.

சிறுகாலை யிலா நிலையோ திரியா
குறுகா நெடுகா குணம் வேறுபடா
உறுகால் கிளர் பூதமெலா முகினும்
மறுகா நெறி யெய்துவன் வானுடையாய்

இஃது, அயனுலகம் வருக என்று அமரர்கோன் அழைத்த பொழுது சரபங்கர் சொல்லியது. நித்தியவுலகின் இயல்புகளையும் தத்துவ ஞானிகளது சுத்த நிலைகளையும் இதில் உய்த்து உணர்க.

இருவகைப் பற்றுக்களையும் விட்டவரே இன்ப வீட்டினை எய்துவரென்பது இதனால் கூறப்பட்டது.

347 பண்டு சவுபரியும் பற்றொன்று பற்றியதால்
தொண்டாரேன் துன்பும் குமரேசா—பண்டியென்றும்
பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு. (எ)

இ—ள்.

குமரேசா! சவுபரி என்பவர் பற்று ஒன்று பற்றியதால், ஏனை துயரம் உற்றார் ஆனின், பற்றினைப் பற்றி விடாதவர்க்கு இடும்பைகள் பற்றி விடா என்க. பற்றுதல்—இறுகப்பிடித்தல்.

விடாதவர்க்கு—விடாதவரை. குவ்வுருபு இதில் ஐயுருபாகக் கொள்ளப்பட்டது. யாதன் உருபிற் கூறினும் பொருள் செல்லும் வழியே உருபு செல்லும் என்க, விடாதவரை விடா என்று காண்க.

பிறவித் துன்பம் தன்னைப்பற்றாதொழிய ஒருவன் விரும்புவானாயின் தான் பற்றி நிற்கும் உலக இச்சைகளை அவன் ஒருங்கே ஒழித்துவிடவேண்டும் என்பது கருத்து.

பற்றுக்களைப் பற்றி விடாதவர்களைத் துன்பங்களும் பற்றி விடா என்பதாம்.

இருவகைப் பற்றையும் அறவே விடுத்தவர் பேரின்பத்தை எய்துவர் என்று மேலே கூறினார். அவற்றை விடவில்லையானால் என்னை என்பாரை நோக்கி விடாதவரைத் துன்பங்கள் விடா என்று இதில் உணர்த்தினார் என்க.

தனக்கு இன்பந் தருமென்று கருதி உலகப் பொருள்கள் மேல் ஒருவன் பெருங் காதல் கொள்வனாயின், அஃது அளவில்லாத பிறவித் துன்பங்களை என்றும் அவனுக்கு உளவாக்குமாதலால் "பற்றினை விடாதவரை இடும்பைகள் விடா" என்றார்.

பற்றினையுடையவர் துன்பங்களை அடைவர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ் உண்மை சவுபரியால் உணரப்படும்.

கதை.

சவுபரி என்பவர் வேதமித்திரர் என்னும் ஓர் அந்தணருடைய புதல்வர். இவர் மனோமையை என்னும் கன்னியை மணந்து இல்லறத்திருந்து இன்புற்று வாழ்ந்துபின் பிள்ளையின்மைக்கு அஞ்சி

நெறிந் துறவடைந்தார். தவநலத்தால் பலநலன்களும் எய்தி விளங்கிய இவர், ஒருநாள் யமுனை நதியையணுகினர். அதன் அகன் கரை மருங்கைக் உவந்து உலாவினர். அதில் இரண்டு மீன்கள் ஒன்றோடு ஒன்று கலந்து மகிழ்வதையும், பல குஞ்சுகள் அவற்றை அணைந்து நிற்றலையும் கண்டார். காதலோடு மீண்டார். ஆங்கோர் பணிமலர்ச் சோலையில் அன்றிலொன்று தன் பேடையை மருவி ஆரா அன்போடு அணைந்து நிற்பதையும் அமைந்து கண்டார். மையல் கொண்டார். தாமும் அவ்வாறே பெண் இன்பம் பெற எண்ணி விரைந்தார். உற்ற துறவை ஒழித்துவிட்டுப் பற்றுடன் சென்றார். மாந்தாதாவின் புதல்வியர் பலரைத் தம் மதி நலத்தால் மணந்தார். அமைந்த இன்பங்களை அவர்பால் அமர்ந்து துய்த்தார். தாம் அடைந்த காதலால் இடும்பைகள் பல தம்மை அடையக் கண்டார். பற்றே பிறவித் துன்பங்கட்குக் காரணம் என்பதைத் தாம் உற்றறிந்தார். அதன்பின் உற்ற பற்றையெல்லாம் முற்றும் ஒழித்துவிட்டு உண்மைப் பொருளையே நாடி உயர் தவஞ் செய்தார். பற்று நீங்கினவர்க்கே துன்பம் நீங்கும் என்பதையும் அதனை விடாதவரைத் துன்பங்கள் விடா என்பதையும் உலகினுக்கு இவர் உணர்த்தி நின்றார். விரிவைப் பாகவதத்தில் உணர்க.

பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்
பிறவார் உறுவது பெரும்பே ரின்பம்
பற்றின் வருவது முன்னது பின்னது
அற்றோர்க் குறுவது அறிகென் றருளி. (மணிமேகலை)

பற்று நீங்காதவர்க்குத் துன்பங்கள் நீங்கா என்பது இதனால் கூறப்பட்டது.

348 சிற்றம் பலர்முத்தி சேர்ந்தார் சிவகருமர்
குற்றமுற்றார் என்னே குமரேசா—முற்றத்
தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர். (அ)

குமரேசா! சிற்றம்பல நாடிகள் முத்தியை அடைந்தார்; சிவசருமர் ஏன் குற்றம் பொருந்தினார் எனின், தீரத் துறந்தார் தலைப்பட்டார், மற்றையவர் மயங்கி வலைப்பட்டார் என்க.

படுதல்—கூடுதல், அடைதல். தீரத்துறந்தார்—முற்றத் துறந்தவர். தலைப்பட்டார்—முத்தியை அடைந்தார். மற்றையவர் என்றது உலகப் பற்றுக்களை ஒழியாதவரை. வலை என்றது சனனப் பிறப்பினை. தம் விரும்பியாங்கு உரிமையோடு திரிய ஒட்டாது விலங்குகளையும் பறவைகளையும் தன்னகப்படுத்தி இன்னல் தருகின்ற வலைபோல், தமக்கு இயல்பான உயர்நிலை எய்திப் பேரின்பத்தினை நுகர ஒட்டாதபடி உயிர்களைப் பிணித்து வருத்தலின் பிறப்பு வலை எனப்பட்டது. இஃது உருவகம். தலைப்பட்டார் என்றது இறந்த காலத்தாற் கூறியது விரைவும் தெளிவும் பற்றி என்க.

முற்றத்துறந்தார் முத்தியை அடைந்தார்; அங்ஙனம் துறவாதார் மயங்கிப் பிறப்பாகிய வலையில் அகப்பட்டார் என்பதாம்.

மேலே, பற்று விடாதவரைத் துன்பம் விடாது என்றார்; அதனை விட்டவரது உயர்வையும், விடாதவரது இழிவையும் இதில் விளக்க உணர்த்தினார்.

பற்றறத் துறந்தவர் வீட்டினைப் பொருந்தி மெய்யின்புறுவர் என்பதும் அங்ஙனம் துறவாதவர் பிறவியிற் சிக்கிப் பெருந்துன்புறுவர் என்பதும் இதில் உணர்த்தப்பட்டன. இவ் உண்மை சிற்றம்பல நாடிகள் பாலும், சிவசருமர் கண்ணும் தெளியப்படும்.

கதை.

சிற்றம்பல நாடிகள் என்பவர் சற்றேறக்குறைய இற்றைக்கு அறுநூற்று இருபது ஆண்டுகட்கு முன்னர்த் தொண்டை நாட்டிலே தோன்றியிருந்தவர். கருவி நூல்களும், அறிவு நூல்களும் கசடறக் கற்றவர். நல்ல சீலமுள்ளவர். தம்மரபில் இருந்த ஒரு

சிறந்த இளம் பெண் இறந்துபோயினள். அதனைச் சுடுதற்கு உறவினரோடு முறைப்படி இவர் உடன் சென்றிருந்தார். அங்குச் சிதறிக் கிடந்த பல வகை எலும்புகளையும் பார்த்து நோக்கினார்: எத்தனை நன்மக்கள் இங்கு எரிந்து மறைந்தனரோ என்று இரங்கி நொந்தார். இவ் உலக நிலையினை எண்ணி நைந்தார்.

தவத்துறை மாக்கள் மிகப்பெருஞ் செல்வர்
ஈற்றிளம் பெண்டிர் ஆற்றாப் பாலகர்
முதியோர் என்னான் இளையோர் என்னான்
கொடுந்தொழி லாளன் கொன்றனன் குவிப்ப இவ்
அழல்வாய்ச் சுடலை தின்னக் கண்டும்
கழிபெருஞ் செல்வக் கள்ளாட் டயர்ந்து
மிக்க நல்லறம் விரும்பாது வாழும்
மக்களிற் சிறந்த மடவோர் உண்டோ.

என்னும் இவ் அருமைப் பகுதியை நினைந்து நினைந்து நெடுமூச்செறிந்தார். அன்று முதல் உலகப் பொருள்களில் ஒரு பற்றுமின்றி உண்மையை நாடி ஒடுங்கியிருந்தார். இவரது மதிநலத்தைக் கண்டு பலர் துறவிகளாகி இவரை அணுகியிருந்தார். முற்றத் துறந்த இவரைத் தம் இல்லிற்கு எழுந்தருளச்செய்து ஓரன்பர் விருந்து செய்தார். அடியவரோடு அடிகளிருந்து அருந்துங்கால் அவசரத்தில் அறியாமல் அவ் அன்பர் அங்கிருந்த வேப்பயெண்ணெயை நெய்யென எடுத்து இலைதோறும் விடுத்தார். தீரத் துறந்த இவர் யாதுங்கூறாது அமைதியோடு உண்டார். பிறரும் அவ்வாறே உண்ணச் சிவசருமர் என்பவர் மாத்திரம் ‘இது வேம்பின எண்ணெய் மிகவும் கசக்கின்றது’’ என்று வெகுண்டு மொழிந்தார். அடிகள் அவரது பற்று அறாத் தன்மைக்கு இரங்கி அவரைத் தனியே பிரித்துவிட்டு இனிதே சென்று சிலகாலந் தங்கியிருந்து தன்னைப் பின்பற்றிவந்தவரோடு ஒருங்கே சமாதியாய் உயர்பதம் அடைந்தார். சிவசருமர் பற்றறாமையால் இறந்து பிறந்து பின்வருந்தியுழன்றார். முற்றத் துறந்தவர் முத்தியை அடைவார் என்பதையும், அங்ஙனம் துறவாதவர், பிறவியில் படுவர் என்பதையும் உல

கம் இவர்பால் உணர்ந்து தெளிந்தது. (விரிவைச் சிவப்பிரகாசத்தில் உணர்க).

முற்றத் துறந்தவரே முத்தியை எய்துவர் என்பது இதனால் கூறப்பட்டது.

349 உற்றபற்றை முற்றும் ஒழித்தமணி மேகலையேன்
குற்றமில்வீ டுற்றாள் குமரேசா—உற்றுநின்ற
பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று
நிலையாமை காணப் படும். (௯)

-ள.

குமரேசா! பற்றுக்கள் முற்றும் விட்ட மணிமேகலை என் வீட்டின்பத்தைப் பற்றினாள் எனின், பற்று அற்ற கண்ணே பிறப்பு அறுக்கும்; மற்று நிலையாமை காணப்படும் என்க.

பற்று என்றது உடம்பின் கண்ணும், பொருள்கள் மேலும், வைத்துள்ள இச்சையை. பற்றெனப்படுவது பசை இய அறிவே என்றதுங் காண்க. மற்று என்றது அறுதல் என்னும் வினைக்கு மறுதலையாய் நின்றது. நிலையாமை என்றது பிறப்பினை.

மற்று நிலையாமை காணப்படும்—பற்று அறாதபொழுது பிறவியே காணப்படும். இருவகை அறுதல்களும் ஒருங்கே நிகழும் என்பதனை ஏகாரம் உணர்த்தி நின்றது. இரவு நீங்கியபொழுதே இருள் நீங்குவது போல், பற்று நீங்கியபொழுதே பிறவி நீங்கிவிடும் என்க. பற்றே பிறப்புக்குக் காரணம் என்பது கருத்து.

இருவகைப் பற்றும் ஒருவனுக்கு அற்றபொழுதே அஃது அயலான பிறப்பினை அறுக்கும்; அவை அறாதபொழுது அழிவுறும் பிறப்பே அவனுக்குக் காணப்படும் என்பதாம்.

அறும் எனற்பாலது அறுக்கும் என ஏதுவின்மேல் நின்றது. ஒருவன், இருவகைப் பற்றையும் அறவே விடுவானாயின், அவன் பிறவியினின்று விடுபட்டு வீட்டினை அடைவான் என்பது கருத்து.

பற்றுண்மையே பிறவிக்குக் காரணம் என்பதும், அஃது இல்லாதவர்க்குப் பிறப்பு இல்லை என்பதும், இதில் உணர்த்தப்பட் இவ் உண்மை மணிமேகலையால் உணரப்படும்

கதை.

மணிமேகலை என்பவள் கோவலனுக்கு மாதவியிடம் பிறந்தவள். அழகு நிரம்பிய விழுமிய உருவினள். மணிமேகலை என்னும் காப்பியத்தின் தலைவி. சிறந்த கல்வியும், திருந்திய சீலமும் பொருந்தப் பெற்றவள். இளமையிலேயே மெய்யுணர்வுடையவளாய் உலக இன்பங்களை அறவே வெறுத்தாள். தனது அழகைக் கண்டு காமுற்று நின்ற உதய குமரனுக்கு மெய்யுணர்வு உதயமாகுமாறு பல இத மொழிகளை இனிது கூறினாள். தன் பாட்டியாகிய சித்திராபதி என்பவள் உலக இன்பங்களில் தன்னை உட்படுத்தப் பல வகை முயன்றும் ஒன்றினும் மயங்காது உணர்வுடன் சென்றாள். ஒடுங்கியிருந்து அருந்தவம் புரிந்தாள். அதன் பயனாகத் தனது பழம் பிறப்பையும் உணர்ந்து தெளிந்தாள். முற்பிறப்பில் தனக்குக் கணவனாயிருந்தவனும், இப்பிறப்பில் தன்மீது பெருங் காதலால் வருந்துபவனுமாகிய உதயகுமரன் ஒருநாள் இவளை அணுகி உன் இளமைக்கும், பொழுதுக்கும் சிறிதும் இயல்பில்லாத கடுந் துறவை நீ ஏன் கொண்டாய் என்று

-னே அவனை இவள், உவந்து நோக்கினாள்.

பிறத்தலும் மூத்தலும் பிணிப்பட் டிரங்கலும்
இறத்தலும் உடையது இடும்பைக் கொள்கலம்
மக்கள் யாக்கை இதுவென உணர்ந்து
மிக்க நல்லறம் விரும்புதல் புரிந்தேன். என்றும்,

வினையின் வந்தது வினைக்கு விளைவாயது
புனைவன நீங்கிற் புலால் புறத்திடுவது
மூத்துவிளி வுடையது தீப்பிணி யிருக்கை
பற்றின் பற்றிடம் குற்றக்கொள்கலம்
புற்றடங் கரவிற் செற்றச் சேக்கை
அவலக் கவலைக் கையாறழுங்கல்

தவலா உள்ளம் தன்பால் உடையது
மக்கள் யாக்கை இதுவென உணர்ந்து
மிக்கோய் இதனைப் புறமறிப் பாராய். என்றும்,

அவன் உணர்வுற ஓதி உணர்த்தினாள். பல்வேறிடங்கட்குஞ் சென்று தன் கல்வி நலத்தால் எல்லா மதத்தினரையும் எதிர்த்துரையாடிப் பற்று அற்றவர்க்கே பிறவியறும் என்னும் உண்மையை அனைவரும் ஒப்ப உணர்த்தித் துறவு நிலை நின்று தான் வழுவாதொழுகிப் பிறவா இன்பம் பெற்று மகிழ்ந்தாள். பற்று அற்றவர்க்குப் பிறப்பு அறும் என்பதை உலகம் இவள்பால் உணர்ந்து தெளிந்தது. விரிவை மணிமேகலையில் காண்க.

அற்றது பற்றெனில், உற்றது வீடுயிர்
செற்றது மன்னுறில், அற்றிறை பற்றே. (திருவாய்மொழி)

பற்று நீங்கினவர்க்கே பிறவி நீங்கும் என்பது இதனால் கூறப்பட்டது.

---

350 பற்றகன்ற காரைக்காற் பத்தினியேன் பற்றிநின்றார்
குற்றமற்றான் பற்றைக் குமரேசா—முற்றாகப்
பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு. (ம)

குமரேசா! எல்லாப் பற்றுக்களையும்விட்ட காரைக்கால் அம்மையார் என் இறைவன் தாளைப்பற்றி நின்றார் எனின், பற்று அற்றான் பற்றினைப் பற்றுக; அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு என்க.

பற்று அற்றான் என்றது இறைவனை. பற்று—ஆசை, அன்பு தொடர்ச்சி, பிடித்தல் முதலியவற்றை உணர்த்தி நிற்கும்.

பற்று என்றது இங்கு அவ் இறைவன் அருளிய ஞான நெறியை. பற்றுக—பற்றிக்கொள்க. என்றது தியானம்செய்தலை.

ஒருவன் பற்று விடவேண்டுமானால் பற்றற்றான் பற்றினையே அவன் விடாது பற்றவேண்டுமென்பது கருத்து.

இயல்பாகவே பற்று அற்று விளங்கும் இறைவனது அருளியல்புகளைப் பற்றிக்கொள்க; விடாது வந்த உனது பற்று விடுதற்குக் கெடாது நின்ற அவற்றையே விடாது பற்றுக என்பதாம்.

மேல், பற்று அற்ற கண்ணே பிறப்பு அறும் என்றார்; அப் பற்று அறுதற்குப் பற்றுக்கோடாகப் பற்றவேண்டியது இன்னது என்பதை இதில் இனிது உணர்த்தினார்.

எல்லாப் பற்றுக்களையும் விட்டவர் இறைவனருளையே பற்றி நின்று ஈற்றில் இன்பம் எய்துவரென்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ் உண்மை காரைக்கால் அம்மைபால் காணப்படும்.

கதை.

காரைக்கால் அம்மையார் இற்றைக்குப் பல நூற்றாண்டுகட்கு முன்னர்க் காரைக்கால் என்னும் ஊரிலிருந்த தனதத்தன் என்னும் வணிகர் தலைவனுடைய அருமைத் திருமகள். புனிதவதி என்று பெயரிட்டு இந்த அம்மையைப் போற்றி வளர்த்தார். பருவமெய்தியபின் நாகபட்டினத்திலிருந்த பரமதத்தன் என்னும் வணிகனொருவனுக்கு மணம்புரிவித்து இந்த அம்மையையும் மணமகனையும் தம் நகரிலேயே அமர்ந்து வாழும்படி பெற்றோர் பேணிச் செய்தார். இருவரும் மகிழ்ந்து வாழ்ந்து வருங்கால், பரமதத்தன் இரண்டு மாங்கனிகளைக் கொணர்ந்து மனைவிபால் தந்தான். அம்மை பெற்று வைத்திருக்குங்கால் ஓர் அடியவர் வந்தார். உணவோடு ஒரு கனியை உண்ண உதவினார். பின்னர்த் துணைவன் வந்து உணவுகொள்ளுங்கால் ஒன்றை அரிந்து உணவுடன் வைத்தார். அவன் உண்டபின் இன்னும் ஒன்று கொண்டுவா என்றான். அம்மை உளங்கலங்கி என் செய்வேன் என்று வருந்தி நிற்கையில் தன்கையில் ஒரு பழம் திருவருளால் பொருந்திநின்றது. இறைவனருளை வியந்து அதனையும் இட்டார். நாயகன் உண்டான். அமுதினும் இஃது இனிய சுவையினையுடையது, யான் தந்தவற்றுள் ஒன்று அன்று; இதன் உண்மை யாது என்றான். அம்மை அஞ்சி உண்மை உரைத்தார்; அவன் மீண்டுந் தெளிந்து அம்மையாரது மாண்பினை வியந்து அதுமுதல் அவரை மனைவியாகக் கொள்ளாது வேறிருத்தலையே மனத்து விலகி

வாழ்ந்தான்; அவ் உண்மையை உணர்ந்த அம்மையார் எல்லாப் பற்றுக்களையும் அறவே விட்டு இறைவன் அருளையே பற்றி நின்று உடம்பிலுள்ள தசை முழுதும் உதிரும்படி செய்து என்புருவாய் நின்று அன்புபுரிந்து திருவாலங்காட்டில் பரமனது திருநடங் கண்டு அவரது அழகிய திருவாயால் “அம்மையே” என்று அழைக்கப்பெற்று முடிவிலின்பத்தை முடிவில் அடைந்தார். அவர் பற்றையே பற்றி நின்று தம் பற்று முற்றும் அற்றார். எல்லாப் பற்றுக்களையும் விடுத்து இறைவனருளையே பற்றி நின்று பெரியோர் பேரின்புறுவர் என்பதை உலகம் இவர்பால் உணர்ந்தது. விரிவைப் பெரிய புராணத்தில் காண்க.

பரனது அருளையே துறவோர் பற்றி நிற்கவேண்டுமென்பது இதனால் கூறப்பட்டது.

நீர்நுமதென்றிவை வேர்முதல் மாய்த்திறை
சேர்மின் உயிர்க்கதன் நேர்நிறை யில்லே. (திருவாய்மொழி)

போகவாசனா பிக்கொடி முளைத்தெழு மூலம்
சோகமாசுணைப இருந்தாச ளவதோர் சூழல்
ஆகமேமுதல யானெனு மெனதெனு மஞ்ஞானம்
ஏகமாகிய பராபரன் தோன்றிடு மிறக்கும்
(ஞானவாசிட்டம்)

இவ் அதிகாரத்தின் தொகைப்பொருள்.

எவ்வளவுக்கு எவ்வளவு உலகப்பொருள்களில் ஒருவன் பற்று நீங்குகின்றானோ அவ்வளவுக்கு அவ்வளவு அவனுக்குத் துன்பங்கள் இல்லையாம். அறிவுடையவர் இளமையிலேயே துறவினை அடைவர். புலன்களை அடுதலும் எல்லாப் பொருள்களையும் ஒருங்கே விடுதலும் சிறந்த துறவாம். ஒரு பொருளும் இல்லாமையே துறவோர்க்குப் பெருநலமாகும். உற்ற உடம்பினையும் துறவோர் பற்றினை வையார். இருவகைப்பற்றும் இல்லாதவரே வீட்டுலகினை எய்தி மகிழ்வர். பற்று நீங்காதவர்க்குத் துன்பங்கள் நீங்கா. முற்றத்துறந்தவரே முத்தியை அடைவர். பற்றுஅற்றபொழுதே ஒருவன் பிறப்பும் அறுபடும். பரனது அருள் நெறியையே துறவோர் பற்றவேண்டும்.

35-வது துறவு முற்றிற்று.

௩௬-ம் அதிகாரம் மெய்யுணர்தல்.

அஃதாவது மெய்ப்பொருளியல்பை மெய்யாக உணர்தல். ஐயமும், மயக்கமும் கலந்த அறிவு பொய்யுணர்வு ஆதலால் இது மெய்யுணர்வு எனநின்றது. இதனைத் தத்துவ ஞானமென்பர். தத்துவம்—உண்மை. பொய்ப் பொருளைத் துறந்து மெய்ப்பொருளைப் பற்றி நிற்கும் மேலோரது தூய உள்ளத்தேதான் இம்மெய்யுணர்வு தோன்றுமாதலால் துறவின் பின் இது வைக்கப்பட்டது.

351. தண்டார்ச் சலபனார் தக்கனார் புன்பிறப்பேன்
கொண்டார் மருளால் குமரேசா—கண்ட
பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரும்
மருளானாம் மாணாப் பிறப்பு. (க)

இ—ள்.

குமரேசா! சலபன், தக்கன் என்பவர் ஏன் தமது மயக்கவுணர்வால் இழி பிறப்பை எய்தினார் எனின், பொருள் அல்லவற்றைப் பொருள் என்று உணரும் மருளான் மாணாப் பிறப்பு உளதாம் என்க.

மருள்—மயக்கம். மாணாப் பிறப்பு—மாண்பு இல்லாத பிறப்பு. மாணா என்றது பிறப்பின் அல்லல் இயல்பினைப் பொதுவாக உணர்த்தி நின்றது.

பொருள் அல்லாதவைகளைப் பொருள் என்று உணருகின்ற மயக்கத்தினாலே இன்பமில்லாத பிறப்பே உளதாம் என்பதாம்.

மெய்ப்பொருள், பொய்ப்பொருள் எனப் பொருள் இருவகைப்படும். நித்தப் பொருளாகிய பரம்பொருளல்லாத மற்றப் பொருள்களெல்லாம் பொய்ப் பொருள்களேயாம் அவற்றை அவ்வாறு உணராது உறுதிப் பொருளாகவே கருதி மயங்

குழைவார் துன்பப் பிறப்பையே தோய்ந்து தியங்குவர் என்பது கருத்து. பொருள்களின் உண்மையை உள்ளவாறு உணர்கின்ற தெருளுணர்வால் பிறவி நீங்கிவிடும் என்பது குறிப்பு. இவ்வுணர்வை வடநூலார் நித்தியாநித்தவத்துவிவேகம் என்பர்.

எத்துணைச் சிறந்தவராயினும் விபரீத உணர்வினையுடையவர் பிறப்பினை அடைவர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ் உண்மை சுலபன் கதையால், தக்கன்பாலும் உணரப்படும்.

கதை. 1.

சுலபன் என்பவன் இற்றைக்குப் பல நூற்றாண்டுகட்கு முன்னர் அவந்தி நாட்டை ஆண்டுவந்த ஒரு வேந்தன். பல கலைகளிலும் நல்ல பயிற்சியுள்ளவன். அழகும் ஆண்மையும் அமையப் பெற்றவன். அருங் குணங்களும் பெருங் கற்பும் ஒருங்கமைந்த சுலபை என்னும் தோகையை மணந்து ஆரா அன்போடு ணைந்து வாழ்ந்தான். உலக இன்பங்களையே நிலை என்று கருதினான். மறுமை நலங்களையும் இருவினைப் பயன்களையும் மதியாது இகழ்ந்து காலை தனது கல்வியறிவனைத்தையும் அவ்வழியிற் செலுத்தி இல் வாழ்ந்து வருங்கால் மதுசூதனன் என்னும் முனிவர் ஒருவர் இவனிடம் வந்தார். அவரது துறவொழுக்கத்தையும், தவவேடத்தையும் இவன், எள்ளி நகைத்தான். அவர் அதனைப் பொறுக்காமல் சினந்து இவனை எருதாகச் சபித்தார். இவனும் உடனே ஆகி நின்றான். இதனைக் கண்ட சுலபை தன் கணவன் இகழ்ந்ததை ஒரு பொருளெனக் கருதி உணர்வுடைய முனிவரும் இப் பெரும் பழி செய்தாரே என்று சினந்து தன் கற்பின் மகிமையால் அவரைக் கழுதையாகும்படி சபித்தாள். அவரும் இவளைப் புலைச்சி ஆகெனப் பொங்கி மொழிந்தார். இருவரும் அவ்வாறே இழி நிலையடைந்தார். ஒரு நாள் அப்புலைச்சி தன் மடியில் வைத்திருந்த பசும் புல்லை அவ்வெருது ஈர்த்தது. அவ் எருதின் வாய்ப் புல்லை அக்கழுதை பற்றியது. அம்மூவருக்கும் கலாம் நிகழ அங்கிருந்தவர் அவற்றை வெருட்டி ஓட்டினர். அவை வெருண்டு ஓடுங்கால் கழுதை வாயிலிருந்த புல் அங்கிருந்

ஒரு பிள்ளையார் மீது துள்ளி விழுந்தது. அன்பர் சாத்தும் அறுகம் புல்லைப்போல் அவ் எச்சிற் புல்லும் பிள்ளையார் மேல் இசைந்து நின்றது. அதனால் அம் மூவரும் தம் பழம் பிறப்பையுணர்ந்து முதல்வராணையால் உயர் பதம் பெற்றார். இருவினைப் பயன்களையும் அவற்றை நெறியே யூட்டும் முழுமுதற் பரமனையும் நம்பாமல் உலக இன்பத்தையே பொருளென்று கொண்டதால் அரசனும், தன்னை அரசன் இகழ்ந்தானே என்று மானமுற்ற உடம்பையான் என்று கருதியதால் முனிவரும் வினை விளைவுகளை உணராமையால் கலையும் இழி பிறப்படைந்தார். இவ் உண்மையை உணர்ந்து முனிவர் சிலர் இரங்கினர். பொருளல்லவற்றைப் பொருள் என்று உணர்வாரது இழிவுறும் பிறப்பே உளதாம் என்பதை உலகம் இவர்பால் உணர்ந்தது. (விரிவை விநாயகர் மான்மியத்தில் காண்க.)

கதை 2.

பரம் பொருளை மெய்ப் பொருள் என்று மதியாமல் பொருளல்லாதவற்றையே பொருள் என்று கொண்டதால் தக்கன் மாண்பிழந்து வன்பிறப்பெய்தினான். ஆடப்பிறப்பை யடைந்தானே தக்கன் தன் கோட்ட உணர்வால் என்று உலகம் இவனைக் காட்டி மொழிந்தது. விரிவைத் தக்க காண்டத்தில் காண்க.

மெய்யுணர்வு இல்லாதவர் வெவ்விய பிறவியையே எய்துவர் என்பது இதனால் கூறப்பட்டது.

352. கண்டமயல் நீங்கியபின் காசிபரோன் பேரின்பம்
கொண்டவராய் நின்றார் குமரேசா—பண்டும

மாசறு காட்சி யவர்க்கு. (உ)

இ—ள்.

குமரேசா! தாம் கொண்ட மயக்கம் நீங்கிய பின் காசி

பர் என் பேரின்பம் கொண்டவராய் நின்றார் எனின், மருள் நீங்கி மாசு அறுகாட்சியவர்க்கு இருள் நீங்கி இன்பம் பயக்கும் என்க.

மருள்—மயக்கம். காட்சி—பார்வை, தோற்றம், அறிவு.

மாசறு காட்சி என்றது மெய்யுணர்வை.

மாசு அறு காட்சியவர்—குற்றமற்ற உணர்வினையுடையவர்.

இருள் என்றது பிறவியை. அறியாமை மிகுந்து அச்சமும் கவலையும் அல்லலும் நிறைந்துள்ளன ஆதலால் பிறவி, இருள் எனப்பட்டது. நீக்கி என்பது நீங்கி என மெலிந்து நின்றதாக் கொண்டு பயக்கும் என்னும் வினைக்கு ஏற்ற எழுவாய் வருவிக்கப்பட்டது. இனி, நீங்கிப் பயக்கும்என்பதைத் தன் வினையாக்கொண்டால் துன்பம் நீங்கி இன்பம் உண்டாகும் என்று கொள்க.

குற்றமற்ற உணர்வினை ஒருவன் உடையவனாயின் அம்மெய்யுணர்வு அவனுக்குப் பிறவித் துன்பத்தை நீக்கிப் பேரின்பத்தைக் கொடுக்கும் என்பதாம்.

மருள் நீங்கின் இருள் நீங்கும்; மாசறு காட்சி இன்பம் பயக்கும் என்க. மேல், பொய்யுணர்வால் பிறப்பு வருமென்றார்; இதில், மெய்யுணர்வு பிறவியை நீக்கிப் பேரின்பத்தைத் தரும் என்றார்.

துன்ப நீக்கமும் இன்பப் பேறும் மெய்யுணர்வால் உளவாம் என்பது கருத்து.

மருள் நீங்கி மெய்யுணர்வு எய்தினோர் இருள் நீங்கி இன்பம் பெறுவர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ் உண்மை காசிபர் பால் உணரப்படும்.

கதை.

காசிபர் என்பவர் பிரமாவின் தலைமைப் புதல்வரான மரீசியின் புதல்வர், தாய் பெயர் கலை. அயனருள் முழுவதும் இவர் அமையப் பெற்றவர்; பேரருளுடையவர். அதிதி, திதி, தனு,

அருட்டை, சுதை, கழை, சுரபி, விநதை, மதி, இளை, கத்துரு, குரோதவசை, தாம்பிரை என்னும் தக்கன் புதல்வியர் பதின்மூவரை மணந்து இனிதுற வாழ்ந்து அமரர், அசுரர், மனிதர் முதலிய பல்கோடி வகையினரையும், அவர்பால் தோன்றச் செய்தார். தமது ஆண்மைத் திறத்தால் உலக முழுவதையும் பரசுராமர் தமக்கு உரிமையாக்கிக்கொண்ட காலத்தில் அவரால் இன்னல் மிகுமென்று கருதி அவரிடமிருந்து இப்பூமியை இவர் தானமாகக் கொண்டார். அன்றுமுதல் இவ் உலகிற்கு இவர் பெயரால் காசினி என்று ஒரு பெயரும் தோன்றிற்று. அதன் பின் இல்லற நிலையை அகன்று துறவு நிலையில் புகுந்து அருந் தவக் கொள்கையில் திருந்திய தன்மையராய்ப் பொருந்தி விளங்கினார். அக்காலத்தில் அசுரேசன் மகளாகிய சுரசை என்பவள் இவரால் தமது மரபினர் உயர்வர் என்று கருதி இவரைத் தன் வயப்படுத்தித் தழுவ விழைந்து இவரது தவ வனம் சார்ந்தாள். விரும்பிய உருவுடன் தனியே வந்து அழகொழுக நிற்கும் இவளைக் கண்டவுடனே முனிவர் உணர்வெல்லாம் கலங்கி உள்ளம் உருகினார். மெள்ள நெருங்கினார். ஆசை நோயைக் கூசி மொழிந்தார். "வழியே கண்ட ஓர் வனிதையை வலிய வந்து விழைவது நம்போன்ற தவ நல முடையார்க்குத் தகுதியாகுமா! சிறந்தவராகிய நீர் இவ் இழிந்த எண்ணத்தை எம்பால் இனி மொழியாதகலுமின்" என்று முனிந்தவள் போன்று முனைந்து மொழிந்தாள். அவள் யாது கூறினும் இவர், அவள்மேல் காதல் மீறினார்.

பன்னெடுந்தவம் பற்பக லாற்றியான்
முன்னிநின்றது முத்திபெற் றய்ந்திட
அன்னதேபெற் கருள்செய வந்தனை
உன்னை மேவலன் றேவுயர் முத்தியே.

என்று முனிவர் சித்தந் திரிந்தார். அவளும் கருதியது எய்துமென்று கனிந்து தழுவிச் சூரபன்மன் முதலிய அசுர குலம் முற்றையும் அடங்கப்பெற்று அகன்று சென்றாள். அவளது பிரிவை நினைந்து பெரிதும் நொந்தார். தன்னை மறந்து தனி மயல் கொண்டார்; இதி

யவர் போன்று தியங்கியுழன்றார். இவரது அவிச்சையை நீக்க ஆயனார் தோன்றி அருளுடன் நோக்கினார்.

வேதமும் கலைகளும் உணர்ந்து மேலதாம்
ஏதறி வெப்திப முனிவ நீயொரு
மாதுதன் பொருட்டினால் மையல் எய்தியே
பேதுறுகிற்றியோ பேதை மாந்தர்போல்.

என்று பேணி மொழிந்தார். முனிவர் கேட்டார். தன் இழி நிலைக்கு இரங்கினார். உற்ற மயக்கமும் முற்றும் ஒழிந்தார். உணர்ந்து தெளிந்து பின் உயரின்புற்றார். மருள் நீங்கி மாசறு காட்சியவர்க்கு இருள் நீங்கி இன்பம் பயக்கும் என்பதை உலகம் ஆண்டு இவர்பால் உணர்ந்தது. விரிவைக் கந்தபுராணத்தில் காண்க.

353 மாறில் கருவூரர் வானத்தின் சீரெல்லாம்
கூறிநின்றார் என்னை குமரேசா—ஆறாத
ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணிய துடைத்து. (௩)

இ—ள்.

குமரேசா! கருவூரர் இவ்வையகத்திருந்தும் ஏன் வானத்தின் சீரெல்லாம் வழுவறக் கூறினார் எனின், ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தினும் வானம் நணியது உடைத்து என்க.

ஐயம்—சந்தேகம். அஃதாவது ஒன்றினும் துணிவு தோன்றாது உழன்று திரியும் உணர்வு.

வானம்—மேலுலகம் ஈண்டு அது வீட்டுலகத்தைக் குறித்து நின்றது. நணியது—அணுகி நிற்பது.

ஐயம் நீங்கித் தெளிந்த மெய்யுணர்வினையுடையவர்கட்கு இந்நிலவுலகத்தினும் அவ்வீட்டுலகம் அணுகி நிற்கும் இயல்பினையுடையது என்பதாம்.

மெய்யுணர்ந்தவர், இவ்வுலகத்திருப்பினும் மேலான பேரின்பத்தை விரைவில் எய்துவராதலால் அவர்க்கு இவ்வையத்தினும் வானம் நணியது ஆயிற்று என்க.

மெய்ம்மையை ஐயமறத் தெளிந்தவர் பொய்யுலகத்தில் அழுந்தாமல் மெய்யுலகத்தையே பொருந்தி நிற்பர் என்பது கருத்து. இவ் உண்மை கருவூரர்பால் காணப்படும்.

கதை.

கருவூரர் என்பவர் இற்றைக்குப் பல நூற்றாண்டுகட்கு முன்னர்ச் சோழநாட்டிலே கருவூரிலே சோமநாதர் என்னும் வேதியர்க்குப் புதல்வராய்த் தோன்றினார். இவர், இளமையிலேயே பல நூல்களையும் வழுவற உணர்ந்து துறவு நிலையிற் புகுந்து பிறவி தீர முயன்று பெருந்தவம் புரிந்தார். உலகுயிர்களின் இயல்புகளையும் இறை அருளையும் தமது யோக முதிர்ச்சியால் உணர்ந்து தெளிந்தார். ஒரு பற்றுமின்றி உவந்து திரிந்தார். சாதி குலம் பிறப்பு, இறப்பு, பந்தம், துறக்கம் என்னும் இவற்றில் பிணிப்புண்டு உயிர்கள் தம் வினைக்கீடாக அலைந்து திரிவதை நினைந்து இரங்கி நீதிகள் சில நிலைபெற ஓதினார். வானம் முதலிய எல்லா உலகங்களிலும் நிகழுகின்ற நிகழ்ச்சிகளை இருந்த இடத்திலிருந்தே தமது யோகவுணர்ச்சியால் உணர்ந்து உரைத்தார். பரமனை நோக்கி அன்புறு பாடல்கள் பல அருளுடன் பாடினார். அவை திருவிசைப்பா என்று இதுபொழுது வழங்கப்படுகின்றன. தாம் எய்தியிருந்த வையம்போல வானத்திலும் புகுந்து உலாவி அற்புதங்கள் பல அருளுடன் புரிந்தார். முடிவில அவ்வூர் ஆலயத்துட் புகுந்து அருளொளியில இரண்டறக் கலந்தார். இவரது மேன்மையை வியந்து அனைவரும் இவரைக் கருவூர்த் தேவர் என்று புகழ்ந்து போற்றினார். ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வீட்டுலகம் விரைவில் எய்தும் என்பதை உலகம் இவர்பால் உணர்ந்தது. விரிவைக் கருவூர்ப் புராணத்தில் காண்க.

ஐயமறத் தெளிந்தவர்க்கு வீட்டின்பம் விரைவில் எய்தும் என்பது இதனால் கூறப்பட்டது.

354 சென்றுணர்ந்தும் மெய்கண்ட தேவரெதிர் நந்தியார்
குன்றிநின்றார் என்னே குமரேசா—நன்றாக
ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. (௪)

இ—ள்.

குமரேசா! நல்ல உணர்வு எய்தியிருந்தும், மெய் கண்ட தேவர் முன் அருணந்தியார் ஏன் தம் சீர் குன்றி நின்றார் எனின் ஐயுணர்வு எய்தியக் கண்ணும் மெய்யுணர்வு இல்லாதவர்க்கு அதனால் பயம் இன்று என்க.

ஐயுணர்வு—ஐவகையுணர்வு. அஃதாவது மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐம்பொறிகளானும் அறியும் அறிவு.

மெய்யுணர்வு—மெய்ப்பொருளை உணரும் உணர்வு.

பயம் இன்று—பயன் இல்லை. ஏகாரம் இசை நிறையோடு இரக்க முந்தோன்ற நின்றது. தேற்றம் எனினுமாம்.

ஒருவன் ஐயுணர்வினை எய்தியவிடத்தும் அவன்பால் மெய்யுணர்வு இல்லையானால் அவனுக்கு அதனால் யாதும் பயன் இல்லை என்பதாம்.

இனி, ஐந்தறிவும் புலன்கள்மேற் செல்லாது தன்வயமாகி போர் நிலையில் உறையப் பெறினும், மெய்யுணர்வு இல்லாதவர்க்கு அதனால் பயன் இல்லை எனினுமாம். இதில ஐந்தறிவு என்றது ஐம்பொறிகட்கு மூலமாய மனத்தை. எய்துதற்கருமையை உம்மை இதில் விளக்கி நின்றது.

ஐயுணர்வு உடையராயினும் மெய்யுணர்வு இல்லையாயின் அதனால் யாதும் பயனில்லை யென்றார் இருளை நீக்கி அஃது இன்பம் பயவாமையின்.

எவ்வளவு உணர்வினை எய்தியிருப்பினும் மெய்யுணர்வு இல்லாதவர் அதனையுடையார் முன் ஒடுங்கி நிற்பர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை மெய்கண்டார் கண்ணும், அருணந்தியார் பாலும் அறியப்படும்.

கதை.

மெய்கண்ட தேவர் என்பவர் இற்றைக்கு எழுநூறு ஆண்டுகட்கு முன்னர் நடுநாட்டிலே திருப்பெண்ணை கடகம் என்னும் திருநகரிலே வேளாளர் குலத்திலே அவதரித்தவர். இவர் கருவிலேயே திருவினையுடையவர். தந்தையார் பெயர் அச்சுத களப்பாளர். சுவேதவனப் பெருமாள் என்று பெயரிடப்பெற்று திருவெண்ணெய் நல்லூரிலே தமது மாதுலர் விட்டிலிருந்து வளர்ந்து வந்தார். குழவிப்பருவத்தே பரஞ்சோதி முனிவர்பால் அருளுபதேசம் பெற்றுப் பொல்லாப் பிள்ளையார் அருளால் எல்லாந் தெளிந்தார் அதனால் மெய்கண்ட தேவர் என்னும் விழுப்பெயர்பெற்றார். இவர் மெய்யுணர்வுடையவராய் மேவியிருக்குங் காலத்தில் தமக்குங் குலகுருவும், ஆதி சைவகுல திலகரும், பல்வேறு வகைப்பட்ட கலைகளையெல்லாம் ஒருங்கே கற்ற பெரும்புலவரும் உயர்குண சீலரும், சகலாகம பண்டிதர் என்னும் சிறப்புப் பெயர் பெற்றவரும் ஆகிய அருணந்தி சிவாசாரியார் என்பவர் ஒருநாள் இவர்பால் வந்தார். இளஞ் சூரியன்போல் விளங்கி அமைதியுற்றிருக்கும் சுவேதவனப் பெருமானைப் பார்த்தார். ஆசிரியராகிய தம்மை இவர் வணங்கவில்லையேயென்று எண்ணினார். மனச்செருக்கோடு எதிர்த்து நின்று மதர்த்து நோக்கி ஆணவமலத்தின் இலக்கணம் என்னை என்று இவரை அவர் வினவினார். நின்போலவே முனைந்து நிற்கும் என்னும் பொருள் புலப்படத் தமது சுட்டுவிரலை நீட்டி அவரையே இவர் சுட்டிக் காட்டினார். ஆசாரியர் உணர்ந்தார். தாம் கொண்டிருந்த முனைப்பைத் துறந்தார். இவரது அடிகளை வணங்கி அருளுபதேசம் பெற்றுப் பொய்யுணர்ந்தேனை புன்மையெல்லாம் போக்கியென்னை யினிதாண்ட மெய்யுணர்வே என்று இவரது மேன்மையை வியந்து துதித்தார். எவ்வளவு உணர்வு உடையவராயினும் மெய்யுணர்வு இல்லையானால் பயனில்லை எனவும் மெய்யுணர்ந்தோரே மேலோர் எனவும் உணர்ந்து தெளிந்தார். இவ் இருவரும் சந்தான குரவர் வரிசையில் நின்று சிவஞான போதம், சிவஞான சித்தியார் என்னும் இரு பெருநூல்களை இயற்றியருளினார். இவர் சரித விரிவைச் சந்தான குரவர் புராணத்தில் காண்க.

எவ்வளவு உணர்வுடையராயினும் மெய்யுணர்விலரேல் அதனால் பயனில்லை என்பது இதனால் கூறப்பட்டது.

355 பண்டுகண்ணன் மெய்வடிவே பார்த்துச் சகதேவர்
கொண்டுணர்ந்தார் என்னே குமரேசா—கண்டவற்றுள்
எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. (௫)

இ—ள்.

குமரேசா! பலவடிவமாகித் தோன்றினும் கண்ணனது மெய்வடிவையே சகதேவன் ஏன் பார்த்து உணர்ந்தான் எனின், எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதே அறிவு என்க.

எத்தன்மைத்து ஆயினும்—எவ்விதமாகத் தோன்றினும்.

எப்பொருள் என்றது பொருள்கள் பலவாதலின் என்க.

காண்பதே அறிவு என்று காண்க.

மேல், ஒருவன் ஐயுணர்வு எய்தியிருப்பினும் மெய்யுணர்வு இன்றேல் அதனால் பயனில்லை என்றார்; அம்மெய்யுணர்வுதான் யாது என்பார்க்கு அதன் இலக்கணத்தை இதில் விளங்க உணர்த்தினார் என்க.

யாதொரு பொருள் எவ்விதமாகத் தோன்றினும் அப்பொருளினது உண்மைத்தன்மையை ஆய்ந்து காண்பதே மெய்யுணர்வு என்பதாம்.

காணப்படுகின்ற பொருள்களினுடைய பெயர் வடிவங்களைக் கண்டு மயங்காது அவற்றின் மூலகாரணங்களை முன்னி உணர்வதே ஒருவனுடைய மெய்யுணர்வுக்குப் பயன் என்பது கருத்து

மண்ணால் செய்யப்பட்ட ஒரு பொருளைக் காணின் குடம் சட்டி என்று வழங்கி வருகின்ற அதன் பெயரையும் உருவத்தையும் குறித்து நில்லாமல், அதற்கு முதற் காரணம் மண் எனவும்

அதற்குக் காரணம் நிலம் எனவும், அதற்குக் காரணம் நீர் எனவும் இவ்வாறே மற்றக் காரணங்களையும் கண்டு சென்றால் முடிவில் எல்லாவற்றிற்கும் மூலகாரணமாயுள்ள முழுமுதல் ஒன்று காணப்படும். அம் மெய்ப்பொருட் காட்சியால் மீண்டு வாரா நெறியும் ஈறிலின்பமும் எளிதில் உளவாகும். ஆதலால் அம்மெய்யுணர்வையே பிறவிப் பயனாக ஒருவன் பெறவேண்டும் என்பதாம்.

மெய்யாகிய பொருளை ஐயமறக் கண்டவனே மெய்யுணர்வுடையவன் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ் உண்மை சகதேவன்பால் உணரப்படும்.

கதை.

பாரதப்போர் நிகழாதிருத்தற்கு ஏதாவது உபாயமிருந்தால் சொல்லுக என்று சகதேவனை நோக்கிக் கண்ணன் ஒருநாள் எண்ணிச் சொல்லினான். மாயவன் கூறிய இம்மாயமொழிகளைக் கேட்டு அத்தூயவன் நகைத்தான். ஏன் நகைத்தாய் என்று அவ் ஏந்தல் இசைத்தான். விரித்த கூந்தலை முடித்தற்குத் துரோபதையும், குறித்த சபதத்தைக் கொடுத்தற்கு அருச்சுனனும், கடுத்து வெல்வதற்குக் கன்னனும், பாரின் பாரத்தைத் தீர்த்தற்கு நீயும் அப்போரின் முடிவையே பொருந்தி நிற்கின்றீர்; நீவிர் நால்வரும் இல்லையானால் அப்போரும் இல்லையாம். ஆதலால் அம் மூவரையும் கொன்று உன்னையும் கட்டினால் வாராமல் காக்கலாம் மாபாரதம் என்றான். எல்லாம் முடித்தாலும் என்னை நீ எவ்வாறு கண்டுணர்ந்து கட்டுவாய் என்று கண்ணன் பகர்ந்து பதினாயிர வடிவம் கொண்டு பரந்து நின்றான். தோன்றி நின்ற வடிவங்கள் எல்லாவற்றையும் விடுத்துக் கண்ணனது மெய் உருவத்தையே கண்டு தெளிந்து சகசேவன் கருத்திற் பிணித்தான். கண்ணன் அவனது மெய்யுணர்வை வியந்து அவன் எண்ணிய யாவும் இனிதின் உதவினான். ஒரு பொருள் எத்தன்மைத்தாய்த் தோன்றினும் அப்பொருளினது மெய்யின் தன்மையை மெய்யாகக் காண்பதே மெய்யுணர்வு என்பதை உலகம் காண இவன் அன்று உணர்த்தி நின்றான். (விரிவைப் பாரதத்தில் காண்க.)

இன்னதுதான் மெய்யுணர்வு என்பது இதனால் கூறப்பட்டது:

356 கண்டார்முன் மெய்ப்பொருளைக் கற்றமணி வாசகர்பின்
கொண்டார்வீ டென்னை குமரேசா—மண்டருளால்
கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி.* (௬)

இ—ள்.

குமரேசா! மாணிக்கவாசகர் மெய்ப்பொருளைக் கண்டவுடன் ஏன் வீட்டினை எய்தினார் எனின், கற்று ஈண்டு மெய்ப்பொருளைக் கண்டார், மற்று ஈண்டு வாரா நெறியைத் தலைப்படுவர் என்க.

மற்று ஈண்டு வாராநெறி—மறுபடியும் இப்பிறப்பிற்கு வாராத வழியினை. என்றது முத்தி நெறியை,

மெய்ப்பொருள்—மெய்யான பொருள்: என்றது இறைவனை,
அழிவு இல்லதோர் ஆனந்தப்பொருள் என்றபடி.
தலைப்படுவர்—அடைவர்.

மெய்ப்பொருளை அறிந்த மெய்யுணர்வினர்க்குப் பின்பு பிறப்பு இல்லை என்பது கருத்து.

ஈண்டு வாரா வழியருள்புரிபவன்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவிசாராமே
கள்ளப்புலக்குரம்பை கட்டழிக்க வல்லான். என வரும் இவற்றை ஈண்டு உணர்க. கற்று இப்பிறப்பில் மெய்ப்பொருளை உணர்ந்தவர் மீண்டு இவ் உலகில் வாரா நெறியினை அடைவர் என்பதாம்.

எல்லா உயிர்க்கும் இறைவனேயாயினும், கல்லாதார் நெஞ்சத்தும் காண ஒண்ணாதே எனவும், கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியே எனவும், கற்றவர் வளைத்துத் திரிபுரம் எரித்தோன் கற்றவர் கருத்தினால் காண்போன் எனவும், வருவனவாற்றால் கல்வியே மெய்ப்பொருளைக் காண்டற்குரிய மெய்யுணர்வைப் பயக்குமென்பது காணப்படுமாதலால் காண்டலுக்குக் கற்றல் முதன்மையாய் நின்றது. கற்றுக்கண்டார் தலைப்படுவர் என்று காண்க.

மேல், மெய்ப்பொருளைக் காண்பதே மெய்யுணர்வு என்றார். அவ்வுணர்வால் பயன் என்னை எனின் பிறவியை நீக்கித் தன்னையுடையானுக்கு அது பேரின்பத்தைக் கொடுக்கும் என்று இதில் உணர்த்தினார் என்க.

இப்பிறப்பில் மெய்ப்பொருளைக் கண்டவர் மீண்டு ஈண்டு வந்து பிறவார் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ் உண்மை மாணிக்கவாசகர்பால் உணரப்படும்.

கதை.

நூல் பல கற்று நுண்ணுணர்வெய்திச் சீலம் நிறைந்து சிறந்து விளங்கித் தெளிந்து நின்ற மாணிக்கவாசகர் அரசனாணையால் பரிகள் வாங்கும் பொருட்டுத் திருப்பெருந்துறையை அடைந்த காலத்தில் அங்கு இவரை ஆட்கொண்டருளுமாறு வந்து சிவகணங்களைப் புடைசூழ மானுடவடிவந் தாங்கிக் குருந்த மரத்தடியில் குருமூர்த்தியா யெழுந்தருளியிருந்த அவ் ஒரு மூர்த்தியைக் கண்டார்; உள்ளம் உருகினார். அவரது ஒண்மலரடியை உவந்து வணங்கித் துவண்டு நின்றார். அம் முழுமுதற் பரமன் இவரது விழுமிய அன்பை வியந்து மகிழ்ந்து வீட்டுநெறியை விளங்க உணர்த்தினார். அதனால் இவர் பிறவிதீர்ந்தார். ஈண்டு மெய்ப்பொருளைக் கண்டவர் மீண்டுபிறவார் என்பதை உலகம் இவர்பால் உணர்ந்தது. விரிவைத் திருவாதவூர்ப் புராணத்தில் காண்க

வாரா வழியருளி வந்தெனக்கு மாறின்றி
ஆரா அமுதா யமைந்தன்றே—சீரார்
திருத்தென் பெருந்துறையான் என்சிந்தை மேய
ஒருத்தன் பெருக்கு மொளி. (1)

இரந்திரந் துருக என்மனத்துள்ளே எழுகின்ற சோதியே இமையோர்
சிரந்தனிற் பொலியுங்கமலச்சேவடியாய் திருப்பெருந்துறையுறை சிவனே
நிரந்தவா காயம் நீர்நிலம் தீகால் ஆய் அவை அல்லையாய் ஆங்கே

கரந்தமைந்தார் உருவே களித்தனன் உன்னைக் கண்ணுறாக் கண்டு
கொண்டின்றே (2)

இவை மெய்ப்பொருளைக் கண்டபின் தாம் எய்திய மெய்ந்நெறியை வியந்து மாணிக்கவாசகர் அருளியன.

மெய்ப்பொருளை அறிந்தவர்க்குப் பிறப்பு இல்லை என்பது றல் கூறப்பட்டது.

357 திண்மேடாட் சிகித்துவசன் சிங்கவன்மன் உள்ளுணர்ந்தேன்
கொண்டபிறப் பற்றார் குமரேசா—தண்டாமல்
ஓர்த்துள்ளம் உள்ள துணரின் ஒருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு. (எ)

இ—ள்.

குமரேசா! உண்மைப் பொருளை உணர்ந்து தெளிந்ததால் சிகித்துவசன் சிங்கவன்மன் என்பவர் ஏன் தம் பிறப்பு நீங்கினார் எனின், ஒருவன் உள்ளம் ஓர்த்து உள்ளதை ஒருதலையாக உணரின் அவனுக்குப் பேர்த்துப் பிறப்பு உள்ள வேண்டா என்க.

ஓர்த்து—ஆராய்ந்து. இஃது ஓர்தல் என்னும் வினையடியாகப் பிறந்தது. ஓர்தல்—ஆராய்தல், தெளிதல்.

உள்ளது என்றது மெய்ப்பொருளை; என்றும் நிலையாயிருப்பது என்றபடி. ஒருதலையா—தெளிவாக.

மெய்ப்பொருளைக் கண்டவர் பிறவியைக் காணார் என்று மேற் கூறியதை நோக்கி ஐயுறுவார் உளராயின் அஃது உள்ளதாக ஒருதலையாக நீவிர் உள்ளவேண்டாம் என்று அவரை நோக்கி இஃது உணர்த்தியதென்க.

ஒருவன் உள்ளம் மெய்ப்பொருளைத் தெளிய ஆராய்ந்து உணருமாயின் அவனுக்குப் பின்பு பிறப்பு உளதாக நினைக்க வேண்டாம் என்பதாம்.

உள்ளம் உள்ளது உணரின், பிறப்பு உள்ளதாக உள்ளவேண்டா என்றது மெய்ப்பொருளைத் தெளிந்து சிந்திப்பவர்க்குப் பிறப்பு இல்லை என்பது கருத்து என்க.

கேட்டல், சிந்தித்தல், தெளிதல், பாவித்தல் என்னும் இந்நிலைகள் யாவும் முறையே பிறப்பினை நீக்கும் பெருமையுடையன. உள்ளதை ஒருதலையாக உணர உணர அவ் உள்ளம் உயிரினும் அவ் உயிர் மெய்ப்பொருளினும் கலந்து இரும்புண்ட நீர்போல் திரும்பாதடங்கிவிடும். ஆகலால் அது பின்பு பிறவாதென்க.

மெய்ப்பொருளையே ஒருவன் சிந்தித்திருப்பனாயின், அவனுக்குப் பின்பு பிறப்பு இல்லையென்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ் உண்மை சிகித்துவசன் கதையானும், சிங்கவன்பான்பாலும் உணரப்படும்.

கதை

சிகித்துவசன் என்பவன் மாளவதேயத்து மன்னன். இவனது காலம் இற்றைக்கு ஆறாயிர ஆண்டுகட்கு முன்னர் என்பர். இவன் மனைவிபெயர் சூடாலை. மிக்க மெய்யுணர்வுடையவள். அவளால் இவன் ஞானவுபதேசம் செய்யப்பெற்றான். மெய்ப்பொருள் பொய்ப்பொருள் என்னும் இருவகைப் பொருள்களின் இயல்புகளையும் மயலறத் தெளிந்தான். அதன்பின் அரசுமுதலிய அனைத்தையும் துறந்தான். மறுமை ஆசையும் இகந்தான். உள்ள மெய்ப்பொருளையே உளத்திற்கொண்டான். உணர்ந்து தெளிந்து உவந்து பாவித்தான். பின்பு பிறப்பு நீங்கிப் பேரின்பமுற்றான். முதற்பொருளை உணரின் பிறப்பு நீங்கும் என்பதை அவன் உணர்த்திநின்றான். விரிவை வாசிட்டத்தில் காண்க.

கதை 2.

இற்றைக்குப் பல நூற்றாண்டுகட்கு முன்னர் மதுரையின் வடமேற்கில் ஓர் அடர்ந்தவனம் இருந்தது. அதில் விலங்கினங்களும், பறவைக்கூட்டங்களும் மிடைந்திருந்தன. முற்பிறப்பில் தான் வலியவனாயிருந்து மெலியவர்க்குச் செய்த தீவினைப் பய

னால் சிங்கவன்மன் என்னும் அரசனொருவன் கரிக்குருவியாகி அங்குக் கலந்திருந்தான். அதனை மற்றப் பறவைகளெல்லாம் கொத்தித் துன்புறுத்தின. அது நடுங்கி ஓடித் தனியாக ஒரு ஆலமரத்தில் அடங்கியிருந்தது. சிவனடியார் சிலர் ஒருநாள் அதன் அடியில் அமர்ந்து மதுரைப்பெருமான் அருளைப் புகழ்ந்தார். மறைந்திருந்த பறவை அம்மொழிகளைக் கேட்டது. மகிழ்ந்து பறந்து மதுரையை அடைந்தது. கூடற் பரமனையே தன் உள்ளம் கூடப்பெற்றது. ஓர்ந்த பொருளையே ஒருதலையாக உணர்ந்து நின்றது. அதனால் அதனது பிறவி அறவே தீர்ந்தது. ஒருவன் உள்ளம் உள்ளதை ஓர்ந்து உணரின் அவனுக்குப் பிறப்பு இல்லை என்பதை உலகம் இதன்பால கண்டது; விரிவைத் திருவிளையாடலில் கரிக்குருவிக்கு உபதேசஞ் செய்த படலத்தில் காண்க.

மற்றது கேட்டுக் கொம்பர் வைகிய கருவாய் ஞானம்
பெற்றது பறவையாகிப் பிறந்தும் பிறவுந் தேற்றம்
உற்றது நாமிச் சன்மம் ஒழிப்பதற் காலவா யிங்ஙன்
சொற்றதே உறுதியென்றா தணிவுகொண் டெழுந்ததன்றே (1)

குருமொழி பயின்றமுள்வாய்க் குருவிதன் குலனுந்தன்போல்
அருமறை முதல்வனீந்த ஆற்றலால் பறவைக்கெல்லாம்
பெருமைசால் வலியான் எனனும் பெயரவா யுலகின் மன்னக்
கருமணி கண்டன் செய்யபொற் கனைகழ லடிசேர்ந்தன்றே. (2)

இவற்றால் மேற்குறித்த உண்மை இனிது தெளிவாதல் காண்க.

ஒருவனுள்ளம் மெய்ப்பொருளை அடையின் அவனைப்பிறப்பு அடையா என்பது இதனால் கூறப்பட்டது.

[தற்கேண்

358 தேடரிய செம்பொருளைத் தேர்ந்துபொன்னனை காண்ப
கோடிவகை செய்தாள் குமரேசா—பீடில்
பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்பதறிவு. (அ)

இ—ள்.

குமரேசா! பொன்னனையாள் என்பவள் பரம்பொருளைத்

காண்பதற்கு ஏன் பெருங்கவலை கொண்டாள் எனின், பிறப்பு என்னும் பேதைமை நீங்க சிறப்பு என்னும் செம்பொருளைக் காண்பதே அறிவு என்க.

பேதைமை— அறியாமை; அஃதாவது உண்மையை ராமை. பேதைமை பிறப்பிற்குக் காரணமாதலால் அதனையே பிறப்பென்றார்.

சிறப்பு என்னும் செம்பொருள்— சிறந்தது என்று சொல்லப்படுகின்ற செவ்விய பொருள்; அஃதாவது பரம்பொருள் என்க. எல்லாவற்றிலும் சிறந்ததாய வீட்டின்பத்திற்குக் காரணமாய் என்றுங்கோடாமல் நின்று நிலவுதலால் அது சிறப்பு எனவும் செம்பொருள் எனவும் நின்றது.

பிறப்பிற்குக் காரணமாகிய பேதைமை நீங்குமாறு முத்திக்குக் காரணமாகிய மெய்ப்பொருளைக் காண்பதே ஒருவனுக்கு மெய்யுணர்வு என்பதாம்.

பேதைமையே பிறவிக்குக் காரணம் என்பதும், அது நீங்கினால் பிறவி நீங்கிவிடும் என்பதும் இதனடியில் வருவனவற்றால் இனிது காணப்படும். பேதைமை மீளச் செய்கைமீளும்; செய்கை மீள உணர்ச்சி மீளும்; உணர்ச்சி மீள அருவுரு மீளும்; அருவுரு மீள வாயில் மீளும்; வாயில் மீள ஊறு மீளும், ஊறு மீள நுகர்ச்சிமீளும்; நுகர்ச்சி மீள வேட்கை மீளும், வேட்கை மீளப்பற்று மீளும், பற்று மீளக் கருமத்தொகுதி; மீளும்கருமத தொகுதி மீளத்; தோற்றம் மீளும்தோற்றம் மீளப்; பிறப்பு மீளும் பிறப்புப் பிணிமூப்புச், சாக்காடவலமரற்றுக்கவலை, கையாறென்றிக்கடையில் துன்பம், எல்லாமீளும் இவ்வகையான் மீட்சி, யாதிக்கண்டமாகும் என்ப; பேதைமை செய்கை என்றிவையிரண்டும், காரண வகைய ஆதலானே. எனவரும் மணிமேகலையின் அணிமொழிகளை ஈண்டு மனங்கொண்டுணர்க.

செம்பொருளைக் காண்பவர்க்கு வெம்பிறவி நீங்கும் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை பொன்னனையாள்பால் உணரப்படும்.

கதை

பொன்னனையாள் என்பவள் மதுரையின் கீழ்பாலுள்ள திருப்பூவணம் என்னும் திருநகரில் இருந்தவள். உருத்திர கணிகையர் மரபில் உதித்தவள். அழகும், குணமும், அறிவும் நிறைந்தவள். குழலினும் யாழினும் இனிமை வாய்ந்தவள். பெருந்திரு உடையளாய்ச் சிறந்து விளங்கிய இவள், உலக இச்சைகளை அறவே வெறுத்து உண்மைப் பொருளையே உளங்கொண்டிருந்தாள். சிவனடியாரைச் சிவனென மதித்தாள். நாளும் அவர்க்கு நயந்துணவூட்டினாள். தன் பிறப்பினை நினைந்து பெரிதுங் கவன்றாள். பிறவா இன்பம் பெற மிகவிழைந்தாள். பரமனருளையே பாவித்து வந்தாள்; அவ் உருவிலா ஒருவனை உருவிலுங் காண உருகியுழந்தாள். இவளது சித்தந் தேர்ந்து இறைவர் ஒரு சித்தராய்த் தோன்றி விரும்பிய பொன்னை அருளி மறைந்தார். வடிவில்லான் வடிவத்தை அதனால் ஆக்கினாள். கருவில் அமைத்த அவ் உருவைக் கண்ட அளவில் அவள் கொண்ட உவகைக்கு அளவேயில்லை. தன் அகத்தில் குறித்திருந்ததையே புறத்தில் கண்டாள். அவ் உருவ அழகினைப் பருக நோக்கினாள்; ஆர்ந்த அன்போடு அதன் கன்னத்தைத் தன் கையால் அள்ளி முத்தங் கொண்டாள். ஓர் ஆலயம் புதுக்கி வைத்து அதனைத் தன் அகத்தில் பாவித்தாள். அப்பாவனையால் தன் பிறப்பு நீங்கிப் பேரின்பமுற்றாள். சிறப்பு என்னும் செம்பொருளைக் காண்பார்க்குப் பிறப்பு நீங்கும் என்பதை இவள் உணர்த்தி நின்றாள். முத்தங் கொள்ள இவள் அழுத்திய கைத்தழும்பை அம்மூர்த்தியின் கபோலத்தில் இன்றுங் காணலாம். விரிவைத் திருப்பூவணத் தலபுராணத்திலும் திருவிளையாடலிலுங் காண்க.

மழவிடை யுடையான்மேனி வனப்பினை நோக்கி அச்சோ
அழகிய பிரானே வென்னா அள்ளிமுத் தங்கொண்டன்பிற்
பழகிய பரனையாளாப் பரிவினாற் பதிட்டை செய்து
விழவுதேர் நடாத்திச் சின்னாள் கழிந்தபின் வீடுபெற்றாள்.

(திருவிளையாடல்)

பிறவி நீங்கும்படி மெய்ப்பொருளைக் காண்டலே மெய்யுணர்வுக்குப் பயன் என்பது இதனால் கூறப்பட்டது.

359 சண்டேசர் தாளெறிந்தும் சார்தருநோய் சாராமல்
கொண்டார்சீர் என்னே குமரேசா—உண்டான
சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய். (௯)

இ—ள்.

குமரேசா! சண்டேசர் தம் தந்தையின் தாளினை வாளால் எறிந்தும் ஏன் அத்தீவினை நோய் அவரைச் சாரவில்லை எனின், சார்பு உணர்ந்து சார்பு கெட ஒழுகின் சார்தரு நோய் அழித்து மற்றுச் சார்தரா என்க.

சார்பு—இடம், பற்று, குணம்.

முதலில் சார்பு என்றது இறைவனை என்க. எல்லாப்பொருள்களும் தன்னைச் சார்தற்கு இடனாய் நிற்பது என்னும் ஏதுவான் வந்தது. சார்பு உணர்ந்து—மெய்ப்பொருளை உணர்ந்து.

சார்பு கெட ஒழுகின்—பற்று அற ஒழுகுவனாயின்.

மற்றுச்சார்தரா—பின் சாரமாட்டா.

சார்தரும் நோய் என்றது தம்மைச் செய்தவனைச் சார்ந்து துன்புறுத்துதற்குக் காலம் ஓர்ந்து நிற்கும் வினைத்துன்பங்களை.

பரம்பொருளை உணர்ந்து ஒருவன் பற்றற ஒழுகுவனாயின், அவனைப் பற்றுகின்ற நோய் அவன் நிலையினை அழிந்துப்பின் பற்ற மாட்டா என்பதாம்.

உணர்ந்து ஒழுகின் நோய் சாரா என்று காண்க.

தனக்கு என்றும் நிலையான சார்பினை உணர்ந்து நிலையில்லாத பொருள்கள்மேல் தான்வைத்துள்ள சார்பு கெடுமாறு பொறிக

ளையடக்கி ஒருவன் ஒழுகுவனாயின், அவன் பிறவி நோய் நீங்கிப் பேரின்பம் அடைவான் என்பது கருத்து.

இறைவன் அருளைச் சார்ந்து இருவகைப்பற்றுக்களும் அறுதற்குரிய ஞான நெறியில் நிலைத்து ஒருவன் ஒழுகவல்லனாயின், அவனை எவ்வகை வினைத்துன்பங்களும் சாரமாட்டா என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை சண்டேசுரர்பால் உணரப்படும்.

கதை.

சண்டேசுரர் என்பவர் அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவர், இவர் சோழமண்டலத்திலே திருச்சேய்ஞலூரிலே காசிப கோத்திரத்திலே தோன்றியிருந்த எச்சதத்தன் என்னும் ஒரு விச்சைவேதியனுக்கு எச்சமாகித் தோன்றினார். தாய்பெயர் பவித்திரை; விசாரசருமர் என்று பெயரிட்டுப்பெற்றோர் இவரைப்பேணி வளர்த்தார். இளமையிலேயே கலைகள் பலவும் நலமுற உணர்ந்து ஆருயிர்மாட்டுப் பேரருளுடையராய் அடங்கி ஒழுகினார். வழக்கமாக அவ்வூர்ப் பசுக்களை மேய்த்துவந்த இடையனொருவன் ஒருநாள் தன்னைப் பாய்ந்த பசு ஒன்றை ஓங்கி அடித்தான். அதனை இவர் கண்டார். அருள்மிகக் கொண்டார், அன்று முதல் அவனை நீக்கிவிட்டு அவ் ஆநிரையைத் தாமே மேய்க்க இசைந்து அன்புடன் போற்றிவந்தார். பசுக்கள் முன்னையினும் பால் மிகுதியாகக்கொடுத்தன. ஊரார் அனைவரும் உவந்து புகழ்ந்தார். மேய்ந்து நிற்குங்கால் பசுக்கள் மடிகளிலிருந்து பால் பொங்கியோடுவதைக் கண்ட விசாரசருமர் அதனைக் குடத்திலேந்தி மண்ணியாற்றங்கரையிலுள்ள மணலைச் சிவலிங்கமாகச் செய்து அதன்மேல் மஞ்சனம் ஆட்டி மகிழ்ந்து போற்றினார். இதனைச் சிலரறிந்து இவர் தந்தைபால் வந்து “நும் மகன் எங்கள் பசுவின் பாலை வீணாக மணலில் விட்டுத் தொலைக்கின்றான்” என்று வெகுண்டு கூறினார். மைந்தன் செயலைக் காணும் பொருட்டுத் தந்தையார் ஒருநாள் மறைந்து வந்தார். பூசையும் முறையே பொருந்தி நடந்தது. மறைந்து நின்றவர் சினந்து வந்து மகனைக் கோலால்

அடித்துப் பாலின் குடத்தைக் காலால் உதைத்தார். சருமர் வருந்தி அங்குக் கிடந்த ஒரு சிறு கோலை எடுத்து வீசினார். அது கூரிய மழுவாய்ச் சென்று அவரது காலைத் துணித்தது. ஐயர் அலறி விழுந்தார். அம்மெய்யர் பண்ணும் பூசையில் முனைந்து நின்றார். சார்பை உணர்ந்து தந்தையிடத்தும் சார்பு இன்றி ஒழுகிய அம் மைந்தன் தன்மையை வியந்து உடனே பரமன் உமையோடு விடைமேல் தோன்றி அவரை அருளோடு தீண்டினார். பரமனருளையே உடனே சருமர் எய்தினர். "எம்மை வழிபடுவோர்க்கு என்போல் நின்று நீயே அருள் புரிக" என்று தம் அருளின் இயல்பை அவர்க்கு அருளி அகன்றார். அன்று முதல் அவர் சண்டேசுரர் என்னும் பெயருடன் விளங்கி உயிர்களுக்குத் தண்ணளி புரிந்து பிறவி நோய் நீங்கப் பேரின்பந் துய்த்தார். சார்பை உணர்ந்து ஒருவன் சார்பு கெட ஒழுகின் சார்தரு நோய்கள் அவனைச் சாரா என்பதை உலகம் இவர்பால் உணர்ந்தது. விரிவைப் பெரிய புராணத்தில் காண்க.

மெய்யுணர்வோடு நெறிநின்று ஒழுகுவோரை வினைத் துன்பங்கள் சாரா என்பது இதனால் கூறப்பட்டது.

---

360 உற்றநோய் ஒன்றும் உறாதேன் சுதீக்கண்ணர்
குற்றமில்இன் புற்றார் குமரேசா—பற்றிநின்ற
காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமங் கெடக்கெடும் நோய். (ம)

இ—ள்.

குமரேசா! சுதீக்கண்ணர் யாதொரு துன்பமுமின்றி ஏன் உயர்ந்த இன்பத்தை எய்தினார் எனின், காமம், வெகுளி, மயக்கம் என்னும் இம்மூன்றனுடைய நாமம் கெட நோய் கெடும் என்க. நாமம்—பெயர். நோய்—துன்பம்.

காமம் வெகுளி முதலிய இழிகுணங்களே துன்பங்கட்குக் காரணமாகும் ஆதலால் அவை அறவே இல்லையானால் அத்துன்

பங்களும் இலவாம் என்பார் "மூன்றன் நாமம்கெட நோய்கெடும்" என்றார்.

காமம் இல்லை எனிற் கடுங்கேடெனும்
நாமம் இல்லை நரகமும் இல்லையே. என்றார் கம்பரும்.

இச்சைக்கு இடையூறு நிகழ்ந்த இடத்தேதான் வெகுளி தோன்றும் ஆதலால் அது காமத்தின் பின் நின்றது. தாய் முன் சேய்கள் நிற்றல்போல் தமக்குக் காரணமாய மயக்கத்தின் முன் இவை இரண்டும் மயங்கி நின்றன.

ஆசை கோபம் அவிச்சை என்னும் இம்மூன்றனுடைய பெயரும் கூட ஒருவனிடம் நில்லாமல் நீங்குமாயின் பிறவித் துன்பம் அவனை விட்டு நீங்கிவிடும் என்பதாம்.

துன்பங்கள் தன்னைத் தொடராமலிருக்க ஒருவன் விரும்புவனாயின் அவன் காமம் வெகுளி முதலிய குற்றங்களை அறவே ஒழிக்கவேண்டும் என்பது குறிப்பு.

அவாவும், சினமும் இல்லாதவனுக்குப் பிறவித்துன்பங்கள் உளவாகா என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ் உண்மை சுதீக்கண்ணாரால் காணப்படும்.

கதை.

சுதீக்கண்ணார் என்பவர் திரேதாயுகத்தின் முற்பகுதியிலிருந்த ஒரு முனிவரர். தண்டக வனத்தில் தனியேயிருந்து அருந்தவர் வியந்திடப் பெருந்தவம் புரிந்தார். சுதீக்கணர் என்னும் இவரது வடமொழிப் பெயர்க்கு நல்ல ஒளியினை யுடையவர் என்பது பொருளாம். அருக்கன் அன்ன முனிவன்; இடரில்லான எனக் கம்பரும் இவரை இசைத்தார். இதனால் இவரது மறுவறு காட்சியும் முனிவில மாட்சியும் புனித புலமையும். காமங்கடிந்து கடுஞ்சினந் துறந்து மருளறுத்து எப்புறமும் மருவாதென்றும் ஒரு மெய்ப்பொருளையே உளங்கொண்டிருந்தார். இருக்குங் காலங் கூடும் சிறிய கோதத்தாயும் கொடுமை இழப்பக் கோல் துறந்து

கானம் புகுந்த இராமர் இவரை வந்து கண்டார். இணையடி தொழுதார் முனிவர் பெருமகிழ்வோடு இறுகத்தழுவி இனிதுரை பகர்ந்தார். தாம் செய்திருந்த தவமுழுவதையும் அவர் நலமுறத் தந்தார். தவங்களையும் தானம் செய்த அவரது மனத்தூய்மையையும், அவரது தன்மையையும் வியந்து இராமர் மிக மகிழ்வுற்றார். அவரருளை அமையப்பெற்று அகன்று சென்றார். முனிவர் இடர் ஒன்றுமின்றி இனிதமர்ந்திருந்து முடிவிலின்பத்தை முடிவிலடைந்தார் காம வெகுளிகள் இல்லாதவர்க்கு நோய்கள் இலவாம் என்பதை உலகம் இவர்பால் உணர்ந்தது. விரிவை இராமாயணத்தில் காண்க.

காமமும் வெகுளியும் ஒழிந்தால் பிறவி நோய் ஒழியும் என்பது இதனால் கூறப்பட்டது.

ஆசைசற் றிருந்திடின் அதிநிமித்தம் வந்
தோசைசால் வெகுளியும் ஒருங்கு நண்ணிடும்
மாசையார் அஃதுற மயக்க முப்முறும்
ஈசையார் அடிக்கலப் பிரிக்கும் இன்னவே. (காசிரகசியம்)

ஈட்டுறு பிறவியும் வினைகள் யாவையும்
காட்டிய தினையதோர் காமமாதலின்
வாட்டமில் புந்தியான் மற்றந் நோயினை
வீட்டினர் அல்லரோ வீடு சேர்ந்துளார். (கந்தபுராணம்)

இவ் அதிகாரத்தின் தொகைப்பொருள்.

மெய்ப்பொருள் அல்லவற்றை மெய்ப்பொருள் என்று உணருகின்ற மயக்க உணர்வால் பிறப்பு உண்டாகும். மயக்கம் நீங்கி மெய்யுணர்வடைந்தவர் பிறப்பு நீங்கிப் பேரின்பம் அடைவார். ஐயந் தீர்ந்த மெய்யுணர்வோர்க்கு வையமதனிலும் வானுலகு அணித்தாம். எவ்வளவு உணர்வுடையராயினும் மெய்யுணர்வு இல்

லாதவர்க்கு மேன்மை இல்லை. பொருள்களின் உண்மையை உள்ளவாறு அறிதலே மெய்யுணர்வாகும். மெய்ப்பொருளை உணர்ந்தவர் மீண்டு பிறப்பினை அடையார். உண்மைப் பொருளை ஒருவன் உள்ளந்தெளிய உணரின் அவனுக்குப் பிறப்பே இல்லை. வெம் பிறவி நீங்குமாறு செம்பொருளைக் காண்பதே ஒருவன் மெய்யுணர்விற்குப் பயனாம். தனக்கு நிலைபெற்ற சார்பாய இறைவனை யுணர்ந்து தன் சார்புகெட ஒருவன் ஒழுகுவனாயின் அவனை வினைத் துன்பங்கள் சாரா. ஆசை சினம் அவிச்சை என்னும் இம் மூன்றையும் அறவே ஒருவன் ஒழிப்பனாயின் அவனுக்குத் துன்பமே இல்லை.

௩௬-வது மெய்யுணர்தல் முற்றிற்று.

௩௭-ம் அதிகாரம் அவாவறுத்தல்.

அஃதாவது ஆசையை ஒழித்தல். மெய்யுணர்வெய்தி மெய்ப்பொருளை உணரினும் பொய்ப்பொருள்கள் மேல் முன் பொருந்தியிருந்த ஆசை சிறிது இருக்குமாயின், அது பிறவிக்கு வித்தாய்ப் பெருகி வளர்ந்து பின் பெருந்துயர் விளைக்கும் ஆதலால் அதனை அறவே ஒழிக்கவேண்டுமென்பதை யுணர்த்துதற்கு இஃது ஈண்டு வைக்கப்பட்டது. நிலையாமையை யறிதல் உலகைத் துறத்தற்கும், மெய்ப்பொருளை உணர்தல் பொய்ப்பொருளவாவைப் போக்குதற்கும் முறையே ஏதுவாகுமாதலால் அதிகார நிலைகளும் அம்முறையில் நின்றன.

361 கண்டமான் பாற்சிறிது காதலுற்ற தாற்பரதர்
கொண்டார் பிறப்பேன் குமரேசா—கொண்ட
அவாவென்ப எல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றுந்
தவாஅப் பிறப்பீனும் வித்து. (௧)

இ—ள்.

குமரேசா! ஒரு மான் மேல் வைத்த அவாவால் பரதர் ஏன் பிறப்பினை அடைந்தார் எனின், எல்லா உயிர்கட்கும் எஞ்ஞான்றும் தவா அப் பிறப்பு ஈனும் வித்து அவாவேயாம் என்க.

தவா என்பது தவுதல் என்னும் வினை அடியாகப் பிறந்த எதிர்மறைப் பெயரெச்சம்; தவுதல்—கெடுதல். சுருங்குதல்.

தவாப் பிறப்பு—கெடாத பிறப்பு. தவாஅ என்பதில் அகரம் அளபெடை. அஃதாவது பாட்டில் ஓசை குறையுமிடத்து அதனை நிறைக்க இடுவது.

இசைகெடின் மொழிமுதல் இடைகடை நிலை நெடில்
அளபெழும் அவற்றவற் றினக்குறில் குறியே. நன்னூல்

எல்லாவுயிர்கட்கும் எக்காலத்தும் கெடாது வருகின்ற பிறப்பை விளைத்தற்கு வித்தாயிருப்பது அவாவே என்று அறிந்தோர் சொல்லுவர் என்பதாம். அவாவை வித்து என்றது அதன் இயல்பு நோக்கி என்க. நுண்ணியதோர் ஆலவித்தானது எண்ணருங் கிளைகளாய்ப் பரந்து விரிந்த ஒரு பெரிய பழுமரத்தைப் பயந்து விடுதல்போல் அருவாய் அணுவாயுள்ள அவாவும் கடத்தற்கரியதோர் பிறவிப் பெருங்கடலை விளைத்து நிற்கும் ஆதலால் அது வித்து என நின்றது. தான் சிறிதாயிருந்து பெரிதான ஒன்றைத் தோற்றுவிக்கும் ஏற்றம் கருதி இங்ஙனம் கூறியிருப்பினும் வித்து விளைவு தோன்ற விளியும் எனவும் அவா பிறவியை விளைத்துத் தானும் அழியாது நிற்கும் எனவும் வேறுபாடு காண்க.

இச்சைவித்து உகுத்துழி யான்எனப்பெயரிய
நச்சுமாமரம் நனிமிக முளைத்துப்
பொய்யென் கவடுகள் போக்கிச் செய்யும்
பாவப்பஃறழை பரப்பிப் பூவெனக்
கொடுமை அரும்பிக் கடுமை மலர்ந்து

துன்பப் பலவாய தாக்கிய பின்பு
மரணம் புகுந்து நரகிடை வீழ்ந்து
தமக்கும் பிறர்க்கும் உதவாது
இமைப்பிற கழியும். என்றதுங் காண்க.

அவாவே பிறவிக்குக் காரணம் ஆகலால் பிறவியை அறுக்க நின்ற துறவோர் அதனை அறவே முதலில் அறுக்கவேண்டும் என்பது கருத்து. அருந்தவக் கொள்கையிற் சிறந்தவராயினும் அவாவினைச் சிறிது உடையவராயின் அதனால் அவர் பிறப்பினை அடைவர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை பரதர் பால் உணரப்படும்.

கதை.

மனுகுல வேந்தனாகிய இடபசிங்கனுக்கும் சயந்திக்கும் புதல்வனாய்த் தோன்றி இந்நிலவுலக முழுவதும் தனக்கே உரிமையாகப் பெற்றுப் பன்னெடுங் காலம் பரிவுடன் ஆண்ட பரத மன்னன் பருவமுதிர்ந்த பின் அனைத்தையும் துறந்து அடவியிற் புகுந்து அருந்தவம் புரிந்தார். புரிந்து வருங்கால் ஒரு நாள் கண்டகி நதியை அடைந்தார். சூல் முதிர்ந்த மான் ஒன்று அதில் நீர் பருக வந்தது. அங்குத் தோன்றிய ஒரு சிங்க முழக்கத்தால் தன் கருப்பம் நழுவ அது கலங்கி மாய்ந்தது. தாய்மான் மாயக் குட்டி தனியே தத்தளித்துத் தவித்தது. அதனை அரச முனிவராகிய பரதர் கண்டார். அகம் மிக உருகினார். அதனை அணைத்தெடுத்துத் தமது தவச்சாலைக்குக் கொணர்ந்தார். அளவில்லாத காதலை அதன் மேல் வைத்தார். தமது அரிய ஞான உணர்ச்சி முழுதும் அச்சிறிய மானை வளர்ப்பதில் சென்றது. நெடுங்காலம் அருந்தவங் கிடந்து பெற்றெடுத்த ஓர் அரசிளங் குழவியைப் போல் அதனை இவர் பேணி வருங்கால் தமது உடம்பு நீங்குங் காலம் வந்தது. இளமான் பிரிவை நினைந்து நினைந்து இவர் உளம் மிக உருகினார். பின் உயிரும் பிரிந்தது. அம் மான்மேல் வைத்த அவாவினால் பின்பு ஒரு மானாகவே பிறந்தார். மதிநலங்குன்றாது வனங்களில் திரிந்து சின்னாளில் மடிந்து பின் ஆங்கீரசகோத்

திரத்தில் அங்கிரா என்னும் ஓர் அந்தணனுக்குப் புதல்வனாய்த் தோன்றி அவாவினால் எய்திய அலைவையுணர்ந்து அதனை அறவே ஒன்றும் அறியாப் பித்தர் போல இருந்து பின் பிறப்பு நீங்கினார். அவாவே பிறப்பு எனும் வித்து என்பதும் அதை அற்றவர்க்கே பிறப்பு அறும் என்பதும் உலகம் இவர்பால் தெரிந்து கண்டது.

(விரிவைப் பாகவதத்தில் காண்க)

திரியொடு நெய்செறி வற்ற செஞ்சுடர்
எரிதரும் இருந்துவற் றிலன்றே மாறுபோல்
விரியுழுக் குணத்தொடு மேவின் மாமனம்
உரைதரு பிறவியை ஒழிப்ப தில்லையே (1)

பன்னுமுற் பிறந்தையில் பரதன் என்னுமான்
இந்நிலம் புரந்திடா அகற்றி யாவும்விட்
டுன்னிய தவத்தொடும் ஒழுகும் நாளினோர்
கன்னிமா னுழை மனம் கலந்திறந்தலால் (2)

அவ்வுழை உருவமும் அடைந்திட் டபின்
இவ்வுருவெடுத்தனன் இன்னும் ஒன்றுறா
கவ்வைசெய் மனங் கதுவாது நின்றனன்
செவ்வியோய் பவக்கடற் செலவு மாற்றியே. (3)

இவை ரகுகணனை நோக்கிச் சடபரதர் கூறியன. இவற்றால் மேற்குறித்த உண்மை இனிது தெளிவாதல் காண்க. அவாவே பிறப்பிற்கு வித்து என்பது இதனால் கூறப்பட்டது

362 வேறொன்றும் வேண்டார் விரும்பிப் பிருங்கியேன்
கூறின்பம் கொண்டார் குமரேசா—தேறியே
வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும். (உ)

இ—ள்.

குமரேசா! ஒரு பொருளையும் தாம் வேண்டாதவராயிருந்தும் பிருங்கி முனிவர் ஏன் பேரின்பத்தை அடைந்தாரெனின்,

வேண்டுங்கால் பிறவாமை வேண்டும் அது வேண்டாமையை வேண்ட வரும் என்க. அது என்றது பிறவாமையை.

வேண்டத்தக்கதும், வேண்டியதை எய்தும் நெறியும் இதில் விளக்கியுள்ளமை காண்க.

பெரியோர் உள்ளம் ஒன்றை விரும்புங்கால் பிறவாமையையே விரும்பும், அப்பிறவாமை ஒரு பொருளையும் விரும்பாமையை விரும்ப அவருக்குத் தானே எய்தும் என்பதாம்.

இனி, ஒருவன் ஒன்றை விரும்புங்கால் பிறவாமையையே விரும்பவேண்டும்; அது விரும்பாமையை விரும்ப தானே அவனுக்கு வரும் எனவும் இது பொருள்படும்.

அவா இல்லாதவர்க்குப் பிறப்பின்மை தானே யுண்டாகும் என்பது கருத்து.

மேல் பிறவிக்குக் காரணம் காட்டினார்; இதில் பிறவாமைக்கு உபாயங் கூ

வேண்டாமையால் வேண்டியது வரும் என்று அடிகள் உணர்த்திய உண்மையை இதில் ஊன்றியுணர்க. மெய்யுணர்வுடையவர் எதையும் விரும்பாமல் பிறவாமையையே வேண்டுவரென்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை பிருங்கி முனிவர்பால் உணரப்படும்.

கதை

பிருங்கி என்பவர் முற்றத்துறந்த ஓர் முனிவர். நெடுங்காலம் கடுந்தவம் புரிந்தவர். எல்லாத் துன்பங்களுக்கும் இச்சையே காரணம் என்பதை இனிது தெளிந்து அதனை அறவேயொழித்து உண்மைப் பொருளையே உளங்கொண்டிருந்தார். பிறவி நீக்கத்தையே பெற்றிட விழைந்தார். இவர் தமது யோக மகிமையால் மேருவையடைந்தார். அங்கு அருளுருவாகி யிறைவியோடு எழுந்தருளியிருக்கும் இறைவனைக் கண்டார். தேவியைவழிபடின் உலக இன்பங்களெல்லாம் எளிதில் எய்திவிடும் என்பது கருதி அவர்

றை வேண்டாதவராய் ஐயனைமாத்திரம் வலம்வந்து வழிபட்டார். அம்மை சிறிது சினமுடன் அம்முனிவரை நோக்கத் தமது கூறாகிய உடல் வலி குன்றி உதிரமும் தசையும் ஒருங்கே உதிர்ந்தன. முனிவர் தளர்ந்தார். உடனே ஒரு காலும் கோலும் அவர்க்குக் கைதாங்கல் உதவி அம்மைக்குத் தன்னுடைமையை உணர்த்தினார். பிரிந்திருந்ததனாலேயே இப்பிரிவினை வந்ததென்று கருதி அம்மை அருந்தவம் புரிந்து ஐயனோடுங் கலந்திருந்தார். அதனையே அர்த்தநாரீசன் என்பர். மீண்டும் முனிவர் வேறொன்றையும் வேண்டாமல் பிறவாமையையே வேண்டி வணங்கினார். அவரது அவாவற்ற தன்மையை வியந்து அம்மையும் அருள்புரிந்து வந்தார். முனிவர் பின் பிறவாமையையே பெற்று மகிழ்ந்தார். மெய்யுணர்வுடையவர் பிறவாமையையே வேண்டுவர் என்பதும் அவா இல்லாதவர்க்கே அஃதுண்டாகும் என்பதும் உலகம் இவர்பால் கண்டது. (விரிவைச் சிவரகசியத்தில் காண்க)

அவா அற்றவர்க்கே பிறப்பு அறும் என்பது இதனால் கூறப்பட்டது.

363 மேலரசும் கன்னிகையும் வேண்டாதேன் வேதசரர்
கோலமுறச் சென்றார் குமரேசா—ஞாலமுடன்
வேண்டாமை யன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை
யாண்டும் அஃதொப்ப தில். (௩)

இ—ள்.

குமரேசா! வேதசரர் என்பவர் அரச செல்வத்தையும் அரசிளங் குமரியையும், வேண்டாமென்று விடுத்து ஏன் விரைந்து சென்றார் எனின், வேண்டாமை அன்ன விழுச்செல்வம் ஈண்டு இல்லை ஆண்டும் அஃது ஒப்பது இல்லை என்க.

வேண்டாமை அன்ன—அவாவின்மை போன்ற.

விழுச் செல்வம்—மேலான செல்வம்.

ஈண்டு ஆண்டு என்பன இவ்வுலகத்தையும் அவ்வுலகத்தை

யும் குறித்து நின்றன. யாண்டு என்று கொண்டால் எவ்வுலகத்தும் இல்லை என்று கொள்க. உம்மை இறந்தது தழுவியது.

அவாவின்மையானது தன்னையுடையவனுக்கு அளவில்லாத பெருஞ்சிறப்பினை அமைய நல்கும் ஆதலால் அது விழுச்செல்வம் என நின்றது. கவலையாதுமின்றி இருமையினும் இன்பம் பயக்கும் அருமையை விழுமிய என்னும் அடை விளக்கிநின்றது.

மேல், வேண்டாமையால் பிறவாமையுண்டாம் என்றார் இதில் விழுமிய செல்வமாய் நின்று இம்மையினும் அது மேன்மையைத் தருமென்றார். துறக்கத்திலிருப்பினும் அவாவுடையவர் மேலும் மேலும் விரும்பிக் கலக்கத்தையே யடைவராதலால், அவா இன்மையன்ன நன்மை ஆண்டும் இல்லையாயிற்று.

செல்வம் என்பது சிந்தையின் நிறைவே
அல்கா நல்குரவு அவா எனப்படுமே. என்றதுங் காண்க.

அவாவாமையை ஒத்த செல்வம் இவ்வுலகத்தில்லை; அவ்வுலகத்தும் அதனை ஒப்பது இல்லை என்பதாம்.

இல்வாழ்வார் செல்வத்தாலும் துறவிகள் அவாவின்மையாலும் சிறப்புறுவர் என்பது குறிப்பு. செல்வமுடைமையும் அவாவின்மையும் இருவகை நிலைபார்க்கும் முறையே உரிமையாம் என்க. அவா இன்மையே அறிவோர்க்கு விழுமிய செல்வம் என்பது கருத்து,

மெய்யுணர்வுடையவர் அவாவின்மையையே விழுமிய செல்வமாகக் கொள்வர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை வேதசரர்பால் உணரப்படும்.

கதை.

வேதசார் என்பவர் இற்றைக்குப் பல நூற்றாண்டுகட்கு முன்னர் வடநாட்டிலிருந்த சயசீலன் என்னும் ஓர் வேதியன் புதல்வர். சிலர் இவரை அரச மரபினர் என்பர்; பல நூற்புலமையும் இவர் நலனுறப் பெற்றவர். நிலையாமையைத் தெளிந்து

இளமையிலேயே உலகைத் துறந்தவர் தனியிடமொன்றில் அமர்ந்திருந்து தனித்தவம் புரிந்தார். நாள் பல கழிந்தபின் ஓர் நகரினை அடைந்தார். அங்கு அந்நாட்டு வேந்தனுடைய அருமை மகளின் சுயம்வரம் நிகழ்ந்தது. சுயம்வரம் என்பது ஒரு பெண் தனக்கு விருப்பமான ஒருவனை மணமகனாகத் தானே வரித்துக் கொள்வது. வேறு ஆண் மகவின்றி அவளே தன் அரசுக்குரியளாயிருந்தனள். அதனால் அவளை அடைபவனே தன் அரசபதவியையும் அடைவான் என்று அறிவித்திருந்தது. அவ்விருவகை நலனுங்கருதி ஆயிரக்கணக்கான அரசர்களும் பிறரும் வந்து அங்குக் குழுமியிருந்தனர். அரசிளங்குமரி தோழிகள் புடைசூழ வந்தாள். அவைநடுவேயிட்டிருந்த உயர்ந்த பீடத்தின்மீது உவந்து ஏறினாள். அப்பேரழகியைக் கண்ட அளவில் அவ் அவையில் உளவாய உவகைக்கு அளவேயில்லை. நாற்புறமும் நயந்து நோக்கினாள். மிக்க ஆரவாரத்துடன் எனக்கு எனக்கு என்று தத்தம் தலைகளை நீட்டிக்கொண்டு எதிர்நோக்கியிருக்கின்ற எவரையும் அவள் விரும்பவில்லை. இவ்விழாக்கதையை ஒரு மூலையில் ஒதுங்கி நின்று பார்த்துக்கொண்டிருந்த நமது தவசியாரையே விரும்பினாள். தன் கையில் இருந்த மலர்மாலையை இவருக்குச் சூட்டுதற்கு விரைந்து வந்தாள். இவர் வேண்டாமென்று வெருண்டு சென்றார். அவளுந் தொடர்ந்து அடியையடைந்தாள். அவளை நோக்கித் தம் மனவுறுதியை உணர்த்தி இதம் பல மொழிந்தார். அவள் உணர்ந்தாள். அரசை வெறுத்துத் தவநெறி நின்றாள். சிறந்த அழகியையும் உயர்ந்த பதவியையும் ஒருங்கே வேண்டாமென்று வெறுத்துச் சென்ற இவரது துறவின் பெருமையை அமரரும் வியந்தார். அவாவில்லாதவர் இருமையினும் பெருமை எய்துவர் என்பதை உலகம் இவர்பால் கண்டது. (விரிவைப் பாரதத்தில் காண்க.)

அவா இன்மைபோல் மேன்மையான செல்வம் வேறெங்கும் யென்பது இதனால் கூறப்பட்டது.

364 மாசில் நமசிவயர் வாய்மையொன்றே வேண்டி யெல்லாம்
கூசியேன் நீத்தார் குமரேசா—ஆசகன்ற
தூஉய்மை யென்ப தவாவின்மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும். (௪)

குமரேசா! நமசிவாயர் யாதோர் அவாவுமின்றி மெய்ப்பொருள் ஒன்றையே எண் மேவி நின்றார் எனின், தூய்மை என்பது அவா இன்மையே; அது வாய்மை வேண்ட வரும் என்க.

அளபெடைகள் இசை நிறைத்து நின்றன.

தூய்மை என்றது முத்தியை; மாசற்றது என்பதாம்.

வாய்மை என்றது கடவுளை; மெய்ப்பொருள் என்றபடி.

அவா இன்மையை மேல் விழுமிய செல்வம் என்றார்; இதில் அதுவே முத்தியின்பம் என்றார்.

முத்தி என்று சொல்லப்படுவது அவா இன்மையேயாம்; அது மெய்ப்பொருளை விரும்பத் தானே எய்தும் என்பதாம்.

ஆசை இன்மையே முத்தி என்பதும் அது மெய்ப்பொருளைச் சிந்தித்தலால் தானே வந்து சேரும் என்பதும் இதன் கருத்தாமென்க. இனி, தூய்மையைச் சுத்தம் என்றும் வாய்மையைச் சத்தியம் என்றும் கொண்டால், சுத்தம் என்பது ஆசையின்மையாம்; அது சத்தியத்தை விரும்பத் தானே உண்டாம் என்று கொள்க. அவா இல்லாதவர்க்கே பேரின்பம் உண்டாம் என்பது குறிப்பு.

அவாவற்று மெய்ப்பொருளைப் பற்றினோர் பிறவா இன்பத்தை விரைவில் எய்துவர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ் உண்மை நமசிவாயர் பால் உணரப்படும்.

கதை.

நமசிவாயர் என்பவர் சற்றேறக்குறைய இற்றைக்கு அறுநூறு ஆண்டுகட்கு முன்னர்த் திருவண்ணாமலையி லிருந்தவர். அக்காலத்தில் துறவியாய்த் தனித்திருந்த குகை நமசிவாயர் என்னும் ஞானயோகிபால் பேரன்புடையவர். பல நூல்களிலும் நல்ல பயிற்சியுள்ளவர். செய்யுள் இயற்றும் திறமையும் வாய்ந்தவர். உலக நாட்டமின்றி உண்மைப் பொருளையே உளத்திற் கொண்டவராய் ஒழுகி வருகின்ற இவர் தமது ஆடையை இருகைகளாலும் பிடித்து ஒருநாள் விரைந்து தேய்த்தார். ஏன் தேய்த்தாய் என்று ஆசிரியர் இசைத்தார். தில்லை பரமன் திருமுன் சிறு திரைச் சீலையில் நெருப்புப் பிடித்தது அதனை அவிக்கத் தேய்த்தேன் என்றார். ஆசிரியர் உற்றதை முற்றும் வினவி உண்மையென்று உணர்ந்தார். சீடரது முற்றுணர்வைத் தெளிந்து வியந்தார். "குருவே" என்று அழைத்தார். அதுமுதல் இவரைக் குருநமசிவாயர் என்று உலகம் கூறி வந்தது. தேசிகர் தில்லைக்கே சென்றார். ஆசிரியர் பணித்தபடியே, இவர் சிதம்பரத்தை அடைந்தார். இவரது அன்புக்கிரங்கி அம்பிகையே வந்து பொற்கலத்தில் அன்னம் அருளி அகன்றார். அத்தலத்திலிருந்து சித்திகள் பலசெய்து வந்தார். இவரது மேன்மையைத் தெளிந்து ஆயிரக்கணக்கான பேர்கள் தந்நலங் கருதித் தம்மாலியன்றதை இவர் முன் காணிக்கையாகச் செலுத்தினர். அவற்றுள் ஒன்றையுந் தீண்டாது ஒதுங்கியிருந்தார். கிடந்த பொருள்களைக் கண்டவரெலாம் கொண்டே சென்றார். மெய்ப்பொருள் ஒன்றையே இவர் விரும்பியிருந்தார்.

ஈசனை யிருத்துறும் இதயத் தோர்பொருள்
ஆசையை யிரித்தலை அந்தணாளர் தாம்
வாசமுற் றிடுமொரு மனையில் புனைபவ
நீசனை யிருத்துவ தொக்கு மென்பரால்,

என்னும் உண்மையை இவர் இனிதுணர்ந்தனர். அவா என்பது யாதும் இன்றி,

இறைவனருளையே அவாவி நின்ற இவர் நெடுங்காலம் கழிந்தபின் திருப்பெருந்துறையை அடைந்தார் [illegible] வருடம் வைகாசிமதியில் நவமித்திதியில் இறை[illegible] [illegible] டறக்கலந்தார். அண்ணாமலை வெண்பா, [illegible] றிய சில நூல்கள் இவரால் இயற்றப்பட்டன [illegible] மெய்ப்பொருளையே விரும்பியுள்ள [illegible] ம் விளைவில் உண்டாம் என்பதை உல[illegible] [illegible] வை அருணை மான்மியத்தில் காண்க.

அவா இன்மையே முத்தியின் [illegible] ஞர் கூறப்பட்டது.

365 ஆசையற்ற நாரதர்பின் அற்றுயர்ந்தார் மற்றவரேன்
கூசிமிக நொந்தார் குமரேசா—ஆசற[illegible]
அற்றவ ரென்பார் அவாவற்றார் மற்றையார்
அற்றாக அற்ற திலர். (ரு)

இ—ள்.

குமரேசா! அவா அற்ற நாரதர் பிறவியற்றார்; அஃது அறாத கபில முதலியோர் துறந்திருந்தும் ஏன் பிறந்து உழன்றார் எனின், அற்றவர் என்பார் அவா அற்றாரே; மற்றையார் அற்றாக அற்றது இலர் என்க. அற்றவர் என்பதற்கு ஈண்டு இயைந்த ஒன்றை இயைத்துக்கொள்க.

மற்றையார் என்றது அவா அறாதவர்களை. அற்றாக—அத்தன்மையாக; அஃதாவது அவா அற்றார் பிறவி அற்றதுபோல.

பிறவி அற்றவர் என்று சொல்லப்படுவோர் அவா அற்றவரே அஃது அறாதவர் அவர்போல் பிறவி அற்றவராகார் என்பதாம்.

இனி, புறத்தில் பற்று அற்றார் என்று சொல்லப்படுவோர் உளத்தில் அவா அற்றபின்பே, அவ அவா அறாதவர் அவ்வளவாகப் பற்று அற்றவராகார் எனவும் இது பொருள்படும்.

அவா இல்லாதவரே பிறவா இன்பத்தைப் பெறுவர் எனவும், அதனையுடையவர் பிறவித் துன்பத்தையே அடைவர் எனவும் இஃதுணர்த்தியதென்க. விதி, மறை, என்னும் இருவகையாலும் அவா அறுத்தலது சிறப்பு இதில் விளக்கப்பட்டது.

அவா அற்றவர்க்கே பிறவி அறும் என்பதும் அஃது அறாதவர்க்குப் பிறவி அறாது என்பதும் இதில் உணர்த்தப்பட்டன. இவ்வுண்மை நாரதர்கண்ணும், கபி முதலானோர்பாலும் உணரப்படும்.

கதை

நாரதர் என்பவர் பிரமாவின் மானச புதல்வர். முனிவர்கணத்துள் முதன்மை வாய்ந்தவர். நெடுங்காலம் பெய்யாதிருந்த மழை இவர்பிறந்தவுடனே பெய்ததால் இவருக்கு நாரதர் என்று பெயர்வந்தது என்பர். நாரம்—நீர். யாழ்இசையில் இவர் மிகவும் வல்லவர். பாரதீயம் என்னும் ஓர் இசை நூலை இயற்றியுள்ளார். இவரது யாழுக்கு மகதி என்று பெயர். முற்றத் துறந்தவர். தத்துவவுணர்வினர். ஒரு நிலையின்றி எவ்வுலகங்களிலும் இனிது திரிபவர். மனிதர்களாயினும் தேவர்களாயினும் செருக்குக் கொள்வராயின், உடனே சென்று அவர்களது சிறுமையை வெளிப்படுத்தித் திருத்திவிடுவர். இவரது நடை, உடை, பாவனை, சொல், செயல் எல்லாம் விநோதமானவேயாம். இவருக்குக் கலகப்பிரியரென்று ஒரு பெயரும் உண்டு. ஆனால் இவர் மூட்டும் கலகங்கள் மறைகடிந்து உயிர்களுக்கு நலம் புரிவனவாகும். இவர் செய்துள்ள மித்திரபேதங்கள் அளவிடலரியன அவையாவும் இறுதியில் இதமாகவே காணப்பட்டன. இவரது பெயரைக் கேட்ட அளவில் அமரர் முதல் அனைவரும் அகமகிழ்வடைவர். அவாவே எல்லாத் துன்பங்கட்கும் காரணம் என்பதை இனிது தெளிந்து அதனை இவர் அறவே அறுத்தார். அதனால் பிறவி நீங்கப் பெறுதலுமுற்றார். அரிச்சந்திரன், தருமன், சித்திரகேது, முதலிய அரசர் சிலரும், சுகர் அரியசுவர் முதலிய முனிவர் பலரும் இவரது ஞான மொழிகளைக் கேட்டு மேன்மையடைந்தனர். அவா அற்றவர்க்கே பிறவி அறும் என்பதை உலகம் இவர்பால்உணர்ந்தது. விரிவைப பிரமகைவர்த்தத்தில்காண்க.)

கதை 2.

கபி, இமசரன், குலோசனன், தூடன், பிசுநன், பிதுர்வர்த்தி, சொரூபன் என்னும் இவ் எழுவரும் பாரத்துவாசருக்குப் புதல்வராய்த் தோன்றித் துறவிகளாயினர். கார்க்கிய முனிவரை அடுத்துக் கலைகளைப் பயின்றார் ஆயினும், பொறியின்பங்களை அவாவி அறிவில் செயல்கள் புரிந்தார். அதனால் இவரனைவரும் வேடராகப் பிறந்தார் வெம்பழி அடைந்தார். அவா அறுந்தவர்க்குப் பிறவி அறுமென்பது உலகர் இவர்பால் எளிதே கண்டது. விரிவைச் சிவமகாபுராணத்தில் காண்க.

அற்றான் என்று சொல்லப்படுவான் ஆசையற்றான் ஒருவனே
மற்றுகாரணங்கொண்டு அப் பவத்துப் பிறவிக்கெல்லாம்
செற்றானெனினும் அவையாக்கருஞ்செயிர்த்துன் பகற்றானையன்றி
உற்றார் வணங்கும் அவன்போல ஒழிந்தான் கொல்லோவுறுபிறவி

(குசேலோபாக்கியானம்)

அவா நீங்காதவர்க்குப் பிறவி நீங்காதென்பது இதனால் கூறப்பட்டது.

---

366 கூடுமவா வுக்கஞ்சிக் கோசிகரும் மாகதரும்
கோடியெண் சென்றார் குமரேசா—நாடியென்றும்
அஞ்சுவ தோரும் அறனே ஒருவனை
வஞ்சிப்ப தோரும் அவா. (சு)

இ—ள்.

குமரேசா! கோசிகரும், மாகதரும் அவாவினை அஞ்சி எண் திசைகள் தோறும் அகன்றார் எனின், ஒருவனை வஞ்சிப்பது அவாவே; ஆதலால், அதனை அஞ்சுவதே அறன் என்க.

ஓரும் என்பன இரண்டும் அசை நிலைகளாய் நின்றன. ஒருவனை என்றது பிறவியற நினைந்த அறிவனை என்க.

பற்றற்று மெய்யுணர்வெய்தி முத்தியை அடையவிருக்கும் நற்றவருள்ளத்தும் அவா மெல்லப் புகுந்து அவரைத் தன்வயமாக்கிக் கெடுத்துவிடுமாதலால், "அவா வஞ்சிப்பது" என்றார்.

ஒருவனை மயக்கிக் கெடுக்க வல்லது அவாவே ஆதலால் அதனை அஞ்சிக்காப்பதே அறனும் என்பதாம்.

ஒன்றானும் அஞ்சாத துறவோர் ஆசையை அஞ்சிக் காக்க வேண்டுமென்றது, தாம் பெறுகின்ற இன்பத்துக்கு உறுபகையாயிருப்பது அதுவேயாகலான் என்க. ஆசையைத் தம் உள்ளத்தில் புகவொட்டாமல் உண்மைப் பொருளையே உணர்ந்து பாவித்து உலையாது நிற்றலே துறந்தவர்க்குச் சிறந்த அறம் என்பது குறிப்பு.

அவாவினை அஞ்சிக் காத்தலே துறவோர்க்கு அறம் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை கோசிகர் கண்ணுவமா கதையாலும் உணரப்படும்.

கதை

கோசிகர் அரசைத் துறந்து தமது நகரைவிட்டகன்று கிழக்குத் திசையை நண்ணி அருந்தவம் புரிந்திருக்குங்கால் இவரது தவ நிலையைச் சிதைக்க விரும்பி இந்திரன் திலோத்தமையை அனுப்பினான். அவளும் இசைந்து ஆங்கு வந்து இருந்தவர் முன்னே பொருந்தினாள். அவளது உருவ அழகைக்கண்டு இவர் உளங்கரைந்துருகினார். மனநிலை குலைந்து மயல் மிகக் கொண்டார். அவள் இணங்க, உவந்து அணைந்து மகிழ்ந்தார். அவளது போகக் கடலில் புகுந்து தாழ்ந்திருக்க இவர் சிறிது காலம் போனபின் போதந் தோன்றப்பெற்றார். தம் பிழைக்கு இரங்கினார் பொங்கி எழுந்தார். அவாவின் கொடுமையை அஞ்சி நடுங்கினார். இவ்வஞ்சம் இந்திரன் செய்ததென்றுணர்ந்து அவ்வஞ்சியை நோக்கி வஞ்சினங் கொண்டார் மண்மகளாகென்று அப் பெண்மணியைச் சபித்தார். அங்கிருந்தால் இன்னும் வஞ்சம் நிகழுமென்று

அஞ்சி அகன்றார். தென்திசையையடைந்து திருந்திய தவத்தைச் செய்து தெளிந்திருந்தார். அங்கும் தமது உள்ளத்தில் அவாவும் வெகுளியும் அடர்ப்பதை அஞ்சி அதனையகன்று மேலைத்திசை நண்ணினார். ஆண்டும் அஞ்சி அதனைவிட்டகன்று வடதிசை புகுந்து திடமுடனிருந்து யாம்தானெனவும் தமமையனுமா வணணம் அஞ்சிக்காத்து எவரும் அடைதற்கரிய உயர்பதம் அடைந்தார். அவாவை அஞ்சிக் காப்பதே துறவோர்க்கு அறம் என்பதைஇவர் உணர்த்தி நின்றார் (விரிவை இராமாயணத்திற்காண்க.)

கதை 2.

மாகதர் என்பவர் வசிட்டரது மரபில் தோன்றியவர். சிறந்த துறவொழுக்கமுடையவர். இவர் மேருவின் தென்பால் மாநது குவாடபுரிந்திருந்தார். வீடுபேறெய்தற்குரிய விழுமிய நலங்களெல்லாம் ஒருங்கே மேவியிருந்த இவர்பால் விபுதை என்னும் ஓர் அசுர கன்னிகை வந்தாள். அசுர குலத்துக்கோர் தலைமையான புதல்வனைப் பெறக்கருதி அசுர குருவாகிய சுக்கிரனே அவளை இவரிடம் அனுப்பினார். அவளது எழிலைக் கண்டு முனிவர் அழிவிடு மொழுகாய் அவள் மேற்கொண்டார். அருகிலணைந்து உருகி மொழிந்தார். அவள் இசைவுற மருவி நகையுற இருந்தார். நாள் பல கழிந்த பின் நல்லுணர்வெய்தினார். ஆசை நோயால் தாமடைந்த மாசினையோர்ந்தார். அஞ்சி நடுங்கி அவளை அகல விடுத்தார் இவரைத் தோய்ந்த நலத்தால் அவள்பால் கயமுகன் தோன்றினான். தமது இழிநிலையினை எண்ணி எரியுறு தளிர்போல் வாடி இன்னலங்கடலுட்பட்ட முனிவர், வேறோரிடத்தை அடைந்து ஆசையை அறவே நீக்கி ஈசனை நோக்கி அருந்தவம் புரிந்தார். அவாவின் வஞ்சத்தை அஞ்சி அகற்றலே அறிவோர்க்கு அறம் என்பதை உலகம் இவர்பாலும் உணர்ந்தது (விரிவைக் கந்த புராணத்தில் காண்க.)

மெய்ம்மை புணர்தல் முடிவாக வேண்டுங் கருவி யெலாம் பெற்றுச்
செய்யமுத்தி யடைவதற்குச் சிறந்துளோனை மறவிலழிப்

பையநுழைந்து பவமீட்டும் பாய்த்திக்கெடுக்க வல்லதவா
ஐய அதனுக்குளநெஞ்சே அஞ்சிக்காத்தல் அறிஞர் தொழில்.
(குசேலோபாக்கியானம்)

அவாவை [illegible] அறம் என்பது இதனால் கூறப்பட்டது.

367 சாரும் அவாவறுத்த தக்கார்க் நிறையரின்பம்
கூறுகின்றார் எனவே குமரேசா—நேரும்
அவாவினை யாற்ற வறுப்பிற் றவாவினை
தான்வேண்டு மாற்றான் வரும். (எ)

இ—ள்.

குமரேசா! ஒரு பொருளையும் அவாவாத தக்காரத்திரையர் யாதொரு துன்பமுமின்றி எல்லா நலங்களையும் ஏன் எளிதில் எய்துகிறார் எனின், அவாவினை ஆற்ற அறுப்பின், தவாவினை தான் வேண்டும் ஆற்றான் வரும் என்க.

ஆற்ற என்பது மிகுதியை உணர்த்தும். ஈண்டு அது முழுதும் என்பதைச் சுட்டி நின்றது.

அவாவினை ஆற்ற அறுப்பின—ஆசையை அறவேயொழிப்பின். தவாவினை என்றது கெடாத அறங்களை; அறமே அழியாததனை யாதலால் அதனைத் தவாவினை என்றார்.

ஆசையை ஒருவன் அறவே ஒழித்தால், அழியாத நலங்கள் எல்லாம் அவன் விரும்பியவாறே உளவாம் என்பதாம்.

மேல் நெஞ்சு புகாவண்ணம் அவாவினை அஞ்சிக் காக்கவேண்டும் என்றார்; அதனால் பயன் யாது எனபார்க்கு இது கூறியதென்க. ஆசையிலாதவன் அழிவில் இன்பத்தை எளிதில் எய்துவன் என்பது கருத்து.

அவாவினை முற்ற அறுத்தவன் யாரும் காங்கின்ற பெரும் பயன் யாவும் ஒருங்கே எய்துவான் என்பது இங்கு உணர்த்தப் பட்டது. இவ்வுண்மை தத்தாத்திரேயர் பால் உணரப்படும்.

கதை.

தத்தாத்திரேயர் என்பவர் அத்திரி முனிவருடைய அருந் தவப் புதல்வர். இவர், கண்ணன் தோன்றிய குலத்துப் பதினொரு தலைமுறைகளுக்கு முன் அக்குலத்தில் தோன்றியிருந்த எது என்னும் அரசனுடைய காலத்திருந்தவர். உயர்ந்த ஒழுக்கமுடையவர். பொறிபுலன்களை அறவே வெறுத்தவர். குளிர்மதி போல் எப்பொழுதும் இனிய இயல்பினர். முனிவர் சிலர் சீடராகி இவரை அணுகியிருக்க விரும்பினர். அதனையும் பற்று என்று கருதி அவர்களையும் அகன்று சென்று திகம்பரராகித் தனியேயிருந்தார். வேட்டைமேல்சென்ற எதுவேந்தன் ஒருநாள் இவரைக் கண்டு ஒன்றுமிலராயிருந்தும் எல்லாமடைந்தவர்போல் இன்பமெய்தியிருக்கும் இவரது திருமுகப் பொலிவை வியந்து "உடைமையொன்றுமின்றி எதனால் இங்ஙனம் உவந்திருக்கின்றீர்" என்று பணிந்து வினவினான். முனிவர் அருளுடன் நோக்கி அவாவின் நிலைமையையும் அதனை அறுத்தார்க்கு உளவாம் மேன்மைகளையும் பல உதாரணங்களால் இனிது விளக்கினார். அரசனும் உணர்ந்து அவா அற்று உய்ந்தான். அருந்தவம் புரிந்து வருந்தியடையவேண்டிய உயர்ந்த பதங்களை இருந்த இடத்திருந்தே இவர் வருந்தாதடைந்தார். அமரரும் முனிவரும் இவரது அவாவற்ற தன்மையை வியந்து போற்றினர். அவா சிறிதும் இலராகிய இவர் எண்ணரிய நலங்களை எளிதாகவெய்தி அழிவில்லின்பத்தை முடிவில் அடைந்தார். அவாவினை அறவே அறுத்தவர் விரும்பியனவெல்லாம் விரைவில் அடைவர் என்பதை உலகம் இவர்பால் உணர்ந்து தெளிந்தது. (விரிவைப் பாகவதத்திற் காண்க.)

ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்
ஈசனோ டாயினும் ஆசை அறுமின்கள்
ஆசை படப்பட ஆய்வரும் துன்பம்
ஆசை விடவிட ஆனந்தம் ஆமே (திருமந்திரம்.)

அவா இல்லாதவர்க்கு எல்லா நலங்களும் எளிதிலுளவாம் என்பது இதனால் கூறப்பட்டது.

---

368 அன்று மழிசையின்பம் ஆர்ந்தார் அவாவுற்றுக்
குன்றினரேன் நால்வர் குமரேசா—என்றும்
அவாவில்லார்க் கில்லாகும் துன்பம் அஃதுண்டேல்
தவாஅது மேன்மேல் வரும். (அ)

குமரேசா! பொருளை விரும்பாமல் சென்ற திருமழிசையாழ்வார் இன்பமுற; அதனை அவாவி நின்ற நால்வர் வன் துன்பமுற்றார் எனின், அவா இல்லார்க்குத் துன்பம் இல்லாகும்; அஃதுஉண்டேல் தவாது மேல மேல் வரும் என்க.

அஃது என்றது அவாவை.

தவாது—குன்றாது. மேல் மேல் வரும்—இடைவிடாமல் வரும்.

அது என்னுஞ் சுட்டு துன்பத்தைக் குறித்து நின்றதாக் கொண்டு தவா அது எனப் பிரித்துக் காணினும் பொருத்தமாம்.
அவா இல்லாதவர்க்கு யாதொரு துன்பமும் இல்லை; அஃது உண்டாயின் எல்லாத துன்பங்களும் முடிவின்றி இடைவிடாமல் வரும் என்பதாம்.

துன்பங்கட்கெல்லாம் அவாவே காரணமாதலால் அதனை யுடையார்க்கு அவையுளவாதலும் அஃது இல்லார்க்கு அவை இலவாதலும் இயல்பாம் என்க.

ஆசையில்லாதவர்க்குத் துன்பம் இல்லையென்பதும், அதனை யுடையவர்க்குத் துன்பம் உண்டாம்என்பதும் இதில் உணர்த்தப் பட்டன. இவ்வுண்மை திருமழிசையாழ்வார் கண்ணும் சிறுகணன் முதலிய நால்வர்பாலும் உணரப்படும்.

கதை.

திருமழிசையாழ்வார் என்பவர் திருமாலடியவருட் சிறந்தவராகிய ஆழ்வார்கள் பன்னிருவருள் ஒருவர். இவரது காலம் இற்றைக்கு எண்ணூறு வருடங்கட்கு முன்னாகும். சிலர் துவாபர யுகத்தின் பிற்பகுதியில் சித்தார்த்தி வருடம் தைமாதத்தில் பிருகு முனிவரது தவமகிமையால் ஓர் அரம்பையால் இவர் தோன்றினர் என்பர். பேணுவாரின்றி வனத்தில் தனியே கிடந்து அழுதுகொண்டிருந்த இவரை வேடனொருவன் எடுத்துச் சென்று தன் மனைவிபால் தந்து இனிது வளர்த்தான். பருவம் எய்தியபின் உலகைத் துறந்துபோய்த் தனியேயிருந்தார். அருந்தவரெனவரும் வியந்துபோற்றத் தக்க தெளிந்த ஞானியாய்ச் சிறந்து விளங்கினர். எல்லாச் சித்திகளும் இவரெய்தியிருந்தார். மாலைப்பொழுதில் தனியே செல்லுங்காலத்தில் வழியே கிடந்த பல பொற்காசுகளைக் கண்டு "ஆட்கொல்லியா கிடக்கின்றது" என்று சொல்லி அகன்று சென்றார். வாணிகத்தின்பொருட்டு அவ்வழியே வந்த சிறுகண்ணன், சென்னன், பலகன், தேவகன் என்னும் நால்வரும் அச்சொல்லைக் கேட்டு அந்த இடத்தை அடைந்தார். கிடந்ததைக் கண்டார். இப்பொன்னை விரும்பாமல் விரைந்து சென்றவன் பித்தன்போலும் என்று எள்ளி நகைத்து அவற்றை எடுத்துச் சென்று அங்கோர் தனி இடத்தை அடைந்து நால்வரும் பங்கிடத் துணிந்தார். உண்டபின் பகுந்துகொள்ளலாம் என்று சிறுகண்ணன் கூறினன். பலகனும், தேவகனும் அயலிலிருந்த நகரில் அன்னம் வாங்கச் சென்றார். போனபின்னர் இருந்த இருவரும் அப்பொன்னைத் தமக்கே உரிமையாக்கக் கருதி அவ் இருவரையும் கொல்லத் துணிந்து குறிக்கொண்டிருந்தார். சென்றவரும் அதனைத் தாமே கொள்ளவிரும்பியதால் திரும்புங்கால் சோற்றில் மிகுதியாக நஞ்சைக் கலந்து கொணர்ந்தார். வந்தவர் தந்ததை இருந்தவர் வாங்கினர். அவ் இருவரையும் நீர் கொண்டுவர ஏவினர். அவர் கூவத்திலிறங்கி நீர் மொண்டு நிற்குங்கால் குப்புறத் தள்ளி அவரை மேலெழாதபடி செய்து இவ்

இருவரும் மீண்டுவந்தார். இருந்த உணவை விரைந்து உண்டார்; விட வேகத்தால் உடனே மாண்டார். அவா இலராய் அகன்று சென்ற திருமழிசையார் யாதொரு துன்பமும் இன்றி அகமகிழ்ந்திருந்தார். அவாவுடைய நால்வரும் அடியோடு மாண்டார். அவா இல்லார்க்குத் துன்பம் இல்லை என்பதையும், அதனையுடையவர் முடிவில்லாத துன்பத்தை அடைவர் என்பதையும், உலகம் இவர்பால் உணர்ந்தது. (விரிவை ஆழ்வார் சரிதையில் காண்க.)

அவாவே துன்பங்களுக்கெல்லாம் காரணம் என்பது இது கூறப்பட்டது.

369 என்றுமா இன்பத்தை எய்தும் பிருகுமுனி
குன்றல் கொண்டார் குமரேசா—என்றுமே
இன்பம் இடையறா தீண்டும் அவாவென்னும்
துன்பத்துட் டுன்பங் கெடின். (௯)

குமரேசா! அவா நீங்கியபின் பிருகு முனிவர் ஏன் அழியா இன்பத்தை எய்தினர் எனின், அவா என்னும் துன்பத்துள் துன்பம் கெடின், இன்பம் இடையறாது ஈண்டும் என்க.

துன்பத்துள் துன்பம்—துன்பங்கள் எல்லாவற்றினுள்ளும் மிக்க துன்பம். அவாவையே துன்பம் என்றது அதன் இயல்பும் தீமையும் கருதி என்க.

அவா என்று சொல்லப்படுகின்ற பெருந் துன்பம் ஒருவனுக்குக் கெடுமாயின், இன்பமானது அவன்பால் இடையறாது வந்து பெருகும் என்பதாம்.

ஈண்டும் என்பதைப் பெயராகக் கொண்டால் உலகத்தும் இன்பம் இடையறாது என்று கொள்க. இதில் உம்மை ஆண்டும் என்பது தோன்றநின்றமையின் எச்சவும்மையாம்.

அவாவை ஒழித்தவன் அழிவில்லாத இன்பத்தை இடையறாது எய்துவான் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை பிருகு முனிவர்பால் உணரப்படும்.

கதை.

பிருகு என்பவர் அந்தணர் மரபில் தோன்றிய ஓர் அருந்தவர். பிரமாவின் மானசபுத்திரருள் ஒருவர் என்பர். எல்லாக் கலைகளிலும் வல்லவர். பிறந்தபொழுதே பேரொளியுடையரா யிருந்தமையால் இவர் பிருகு என்று பெயரிடப் பெற்றார். புலோமசை, கியாதி என்னும் மனைவியரிருவரை மணந்து முதலில் இவர் இல்லறம் புரிந்தார். முற்றத் துறந்த முனிவரர்களும் இவரது சிறந்த தவ ஒழுக்கத்தைக் கண்டு புகழ்ந்து போற்றினார். திருமாலோடு அமர் புரிந்திளைத்த அசுரர் சிலர் இவருடைய முதல் தேவியிடம் வந்து அடைக்கலம் புகுந்தார். அந்த அம்மை யாதோர் அல்லலும் அடையாதபடி அவர்கட்கு அருள் புரிந்தனுப்பினாள். அதனால் மால் சினந்து அவளை மடியச் சபித்தார். அவள் மாண்டதையறிந்து முனிவர் மாலை நோக்கி "நீர் மண்மேற் பிறந்து மனைவியைப்பிரிந்து வருந்துவீர்" என்று சபித்தார். அதன் பயன்தான் இராமாவதாரத்தில் நிகழ்ந்தது என்பர். இறந்த மனைவியைத் தமது தவ மகிமையால் முனிவர் எழுப்பிக்கொண்டார். பின்பு துன்பங்களே மலிந்துள்ளன என்று கருதிப் பிறவியை வெறுத்தார். எல்லாத் துன்பங்கட்கும் அவாவே காரணம் என்று தெளிந்து அதனை அறவே அறுத்தார். அதனால் அல்லல் யாதுமின்றி ஈண்டும் அமர்ந்து இன்புற்றிருந்து பின் மீண்டு வாரா மேன்மையை மேவினார். அவா ஒழியின இருமையினும் இன்பம் மிகும் என்பதை உலகம் இவர்பால் உணர்ந்தது. விரிவைத் தேவிபாகவதத்தில் காண்க. அவா ஒழியின் அளவில்லாத இன்பம் உளவாம் என்பது இதனால் கூறப்பட்டது.

370 அன்றேன் அரியசுவர் ஆசையற்ற அப்பொழுதே
குன்றாஇன் புற்றார் குமரேசா — என்றுமே
ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும். (௰)

இ—ள்.

குமரேசா! அரியசுவர் என்பவர் அவா நீங்கிய அப்பொழுதே என பிறவா இன்பம் பெற்றார் எனின், ஆரா இயற்கை அவா நீப்பின் அந்நிலையே பேரா இயற்கை தரும் என்க.

ஆரா பேரா என்பன ஆர்தல் பேர்தல் என்னும் வினையடியாகப் பிறந்த எதிர்மறை யெச்சங்கள்.

ஆர்தல்—நிறைதல். பேர்தல்—நிலைதிரிதல்.

ஆரா இயற்கை அவா—நிரம்பாத இயல்பினையுடைய ஆசையை.

பேரா இயற்கை என்றது முத்தியை; என்றும் நிலைதிரியாத இயல்பையுடையதாதலால் அஃது இங்ஙனங் கூறநின்றது.

ஒருகாலும் நிறைதலில்லாத இயல்பினையுடைய அவாவினை ஒருவன் ஒழித்துவிடுவானாயின் அப்பொழுதே அஃது அவனுக்கு வீட்டின்பத்தைக் கொடுத்துவிடும் என்பதாம்.

அவா நீங்கியபொழுதே ஒருவனுள்ளத்தில் பேரின்பம் ஓங்கிவிடும் என்பது கருத்து.

ஒருகாலும் நிறையாத அவாவினை ஒழித்தவர் என்றும் நிலையான இன்பத்தை எய்துவர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை அரியசுவர்பால் உணரப்படும்.

அரியசுவர் என்பவர் தக்கனுடைய புதல்வர்கள். தாய் பெயர் வேதவல்லி. இறைவனருளால் பதினாயிரவராக இவர்

இசைந்து தோன்றினார். இவரனைவருக்கும் ஒரு தொகையாக அரியசுவர் என்றே பெயர். உருவிலும், குணத்திலும், அறிவிலும், அழகிலும், ஒரு நிகரானவர். தக்கன் விரும்பியாங்கு படைப்புத் தொழிற்குரிய உயர்ந்த பதவியைத் தாம் அடைய வேண்டி இவர் தவத்திற்கேகினார். விந்த மலைச் சாரலில் விளங்கியிருந்த ஓர் அழகிய பொய்கையை அடைந்து தாம் விரும்பியதை மேவ அருந்தவம் புரிந்தார். ஆண்டுகள் பல கழிந்தபின் ஆண்டு நாரதர் வந்தார். தவம் புரி பாலரை வியந்து நோக்கினார். "யாது வேண்டி இம் மா தவஞ் செய்கின்றீர்" என்றார். அவரனைவரும் உற்றதை யுரைத்தார். முனிவர் இரங்கினார். "எத்துணை சிறந்த பதவியாயினும் அதில் துன்பங்கள் நிறைந்தே யிருக்கும். துன்பங் கலந்த ஒன்றை இன்பமெனலாகுமா? மாசற்ற இன்பத்தையே நீர் மருவுதல் வேண்டும். அஃது ஆசையற்றவர்க்கே அமைவதாகும். உணர்வோர் பெறும் பயன் அவ்வுயர் நலமேயாம்" என்று உண்மையை உணர உரைத்தார். அவரனைவரும் உணர்ந்தார். உற்ற அவாவை முற்றும் ஒழித்தார். முத்தராகி உடனே முத்தியை அடைந்தார். நிறையாத அவா நீங்கியபொழுதே நிறைவான பேரின்பம் உண்டாம் என்பதை உலகம் இவர்பால் உணர்ந்தது. (விரிவைக் கந்தபுராணத்திலும் பாகவதத்திலும் காண்க.)

தீராத அவா அற்றபொழுதே பேராத இன்பம் பெருகும் என்பது இதனால் கூறப்பட்டது.

நன்றாய் ஞானங்கடந்துபோய் நல்லிந்திரியமெல்லாமீர்த்
தொன்றாய்க்கிடந்த அரும்பெரும்பாழ்உலப்பிலதனையுணர்ந்துணர்ந்து
சென்றாங் கின்பத்துன்பங்கள் செற்றுக்களைந்து பசையற்றால்
அன்றே அப்போ தேவீடும் அதுவேவீடு வீடாமே.

(திருவாய்மொழி.)

மாடத்துளான் அல்லன் மண்டபத்தான் அல்லன்
கூடத்துளான் அல்லன் கோயிலுள்ளான் அல்லன்
வேடத்துளான் அல்லன் வேட்கைவிட்டார் நெஞ்சின்
மூடத்துளே நின்று முத்தி தந்தானே. (திருமந்திரம்)

(இவ் அதிகாரத்தின் தொகைப் பொருள்)

அவாவே பிறப்பிற்கு வித்து. அவா இல்லாதவர்க்குப் பிறவாமையுண்டாம். அவா இன்மையே அறிவோர்க்கு அரும்பெருஞ் செல்வம். அதுவே முத்தியின்பமாம். அவா அற்றவரே பிறப்பு அற்றவராவார். தன் நெஞ்சிற் புகாவண்ணம் அவாவை அஞ்சிக் காக்கவேண்டும். அவா இல்லாதவர்க்கு எல்லா நலங்களும் எளிதில் உளவாம். அவா இலாதவர் இன்பத்தையும் அதனையுடையவர் துன்பத்தையும் அடைவர். தொலையாத அவா தொலையின் நிலையான இன்பம் விளையும். அது நீங்கிய அப்பொழுதே என்றும் நீங்காத இன்பம் எய்தும்.

௩௭-வது அவா வறுத்தல் முற்றிற்று.

௩௮-ம் அதிகாரம் ஊழ்.

அஃதாவது வினையின் விளைவு. வினையாவது மனம், வாக்கு, காயம் என்னும் மூன்று கரணங்களிலிருந்து தோன்றுகின்ற நினைவு, சொல், செயல்கள். அவை நல்லனவாயின் நல்வினையாம். தீயன வாயின் தீவினையாம். நல்வினை இன்பத்துக்கும் தீவினை துன்பத்துக்கும் காரணமாகும். கடவுள் வாழ்த்து முதல் அவாவறுத்த லீறாக உரைத்தன யாவும் துன்பம் நீங்கி இன்பம் எய்தும் நெறிகளையே இனி துணர்த்தின; 'முன்பு செய்த நல்வினையே பின்பு நல்லூழாய் இன்பம் விளைக்குமாதலால் இதுவரை செய்யாதொழியினும் இனிமேலாவது அதனையே ஒருவன் செய்யவேண்டும் என்பதும், அடுத்துவருகின்ற பொருள், இன்பங்கட்கும் அவ் வூழே காரணமாகும் என்பதும், உறுதியாக உணர்த்தவேண்டியே இஃது இறுதியாக ஈண்டு வைக்கப்பட்டது. அதிகார முறைமையும் இதனானே புலனாம்.

371 அன்றறுவர் தீநின் றகன்றார் மடிகொண்டு
குன்றினரேன் மற்றோர் குமரேசா—என்றுமே
ஆகூழாற் றோன்றும் அசைவின்மை கைப்பொருள்
போகூழாற் றோன்றும் மடி. (1)

-ள்.

குமரேசா! வீமன் முதலிய அறுவரும் தீநின்று அகன்றார்; சகுனி முதலிய எழுவரும் ஏன் மடிகொண்டு மாய்ந்தார் எனின், ஆகும் ஊழால் அசைவின்மை தோன்றும்; கைப்பொருள் போகும் ஊழால் மடி தோன்றும் என்க.

ஆகு ஊழ், போகு ஊழ் என்னும் வினைத்தொகைகள் பொதுவாய் நின்று பெயரெச்சப் பொருளை மாத்திரம் உணர்த்தாமல் காரணப் பொருளவாய் நின்றன.

அசைவின்மை என்றது முயற்சியை. அசைவு—மடி.

ஒருவன் செய்த நல்வினை பின்பு நல்லூழாயும், தீவினை தீயூழாயும் விளைந்து அவனது இன்பதுன்பங்கட்கு முறையே காரணமாகுமாதலால் அவை ஆகூழ் எனவும், போகூழ் எனவும் அமைந்து நின்றன.

கைப்பொருள் ஆதற்கு ஏதுவாகிய ஊழால் ஒருவனுக்கு முயற்சி உண்டாம்; அஃது அழிதற்கு ஏதுவாகிய ஊழ் தோன்றின் மடியுண்டாம் என்பதாம்.

பொருள் ஆகி வருதற்கும், அஃது அழிந்து தொலைதற்கும் ஊழே காரணம் என்பது கருத்து.

நல்லூழ் உடையவர் முயற்சியுடையராய் உயர்ச்சியடைவர் என்பதும், தீயூழ் உடையவர் மடிமிகுந்து அழிவுறுவர் என்பதும் இதில் உணர்த்தப்பட்டன. இவ்வுண்மை வீமன்கண்ணும் சகுனி முதலிய எழுவர்பாலும் உணரப்படும்.

துரியோதனனது புன்மைக்கு இரங்கி வீடுமர் முதலியோர் பாண்டவர்களைக் காசியில் சிறிதுகாலம் தங்கியிருக்கும்படி செய்தார். துரியோதனன் சூழ்ச்சியால் புரோசனன் என்னும் மந்திரியும் அவரோடு பொருந்தியிருந்தான். நாள் பல கழிந்தபின் மெழுகால் இவன் அங்கோர் மாளிகை அமைத்து ஐவரையும் அதில் குடியேறச் செய்து உடன் வாழ்ந்திருந்தான். அவர் அயர்நது தூங்குங்கால் அவர் மாயும் வகை அதில் தீயை வைத்தற்கு இவன அமையம் நோக்கியிருந்தான். இங்ஙனம் இருக்குங்கால் துரியோதனன் அவர்களை விரைந்து கொல்லக்கருதி சகன், தரன், சலன், சாகுலன், வலன் என்னும் வேடர் ஐவரை அழைத்து விடம் அருத்திக்கொன்றுவரும்படி ஐயாயிரம் பொற்காசுகளைக் கொடுத்து விடுத்தான். அக்கொடியவரைவரும் ஒரு தாய் வயிற்றிற் பிறந்தவர். சாகனி என்னும் தம் தாயையும் அழைத்துக்கொண்டு தேன் விற்பவர் போல் அங்குவந்து சேர்ந்தார். பொழுதும் போயிற்று. விடிந்தபின் பார்ப்போம் என்று அம்மாளிகையின முன்புறததில தங்கினர். தாம் கொண்டுவந்த விடங் கலந்த தேனையும், பரிசிலாகப் பெற்ற பொருளையும் பொதிந்துவைத்துக்கொண்டு சிறிதுநேரம் செனறபின் அயர்ந்து தூங்கினர். பாதி இரவில் வீமன எழுந்தான. இங்கிருந்தால் என்னேனும தீங்குநிகழுமென்றுகருதி துணைவரையும தாயையும் உடன்கொண்டு வெளியே போயினன். போனவுடன் தீயும் பொங்கி எழுநதது. மாளிகை முழுதும் தீந்து கரிந்தது. கைப்பொருளும்போய், வேடரும், தாயும், விரகனும் வெந்து தொலைந்தார். ஐவரும், தாயும் அகனறுபிழைத்தார். மடிகொண்டார் பொருளிழந்து மாண்டார். மடியில்லார் பின முடிபுனைந்தாண்டார். ஆகூழால் ஒருவனுக்கு முயற்சி தானே உண்டாகும் என்பதையும், போகூழால் மடி தோன்றும் என்பதையும் உலகம் இவர்பால் ஒருங்கே கண்டது. (விரிவைப் பாரதததில் காண்க.)

முயற்சியும் மடியும் ஒருவனுக்கு ஊழானே உண்டாம் என்பது இதனால் கூறப்பட்டது.

372 பண்டுநளன் பேதைமையாற் பாரிழந்தான் புட்கரனேன்
கொண்டுவந்தான் செல்வம் குமரேசா—மண்டிவந்து
பேதைப்படுக்கும் இழவூழ் அறிவகற்றும்
ஆகலூழ் உற்றக் கடை. (௨)

குமரேசா! நல்லறிவுடைய நளன் அறிவு திரிந்து தன் அரசினை இழந்தான்; புல்லறிவுமிக்க புட்கரன் ஏன் அதனைப் பெற்று மகிழ்ந்தான் எனின், இழவூழ் பேதைப்படுக்கும்; ஆகலூழ் உற்றக்கடை அறிவு அகற்றும் என்க.

உற்றக்கடை—பொருந்தியபொழுது.

இழவூழ்—இழத்தற்கு ஏதுவாகிய ஊழ்.

ஆகல் ஊழ் அறிவு அகற்றும்—ஆதற்கு ஏதுவாகிய ஊழ் அறிவை விரிக்கும். அகற்றல்—விரித்தல், நீக்கல், துரத்தல்.

நல்லறிவாளரைப் புல்லறிவினராக்கவும், புல்லறிவாளரை நல்லறிவினராக்கவும் ஊழ் வல்லது என்பார் "இழவூழ் பேதைப் படுக்கும் ஆகலூழ் அறிவு அகற்றும்" என்றார்.

இழவூழ் ஒருவனுக்கு அறியாமையையுண்டாக்கும்; ஆகலூழ் உற்றவிடத்து அறிவை விரிக்கும் என்பதாம்.

மேல், பொருள் வருதற்கும், குறைதற்கும் ஏதுவாகிய முயற்சியும் மடியும் ஊழானே வரும் என்றார்; இதில் ஒருவனது அறிவைச் சுருக்கவும், பெருக்கவும் அது வல்லது என்றார்.

நல்ல அறிவினையுடையராயினும் தீயூழ் அடைந்தால் தம் அறிவெலாம் இழந்து இழிவடைவர் என்பதும், அறிவிலராயினும் நல்லூழ் உற்றால் எல்லா அறிவுமுடையராய் உயர்வடைவர் என்பதும், இதில் உணர்த்தப்பட்டன. இவ்வுண்மை நளன்கண்ணும், புட்கரன்பாலும் உணரப்படும்.

கதை.

நல்லறிவாளனாகிய நளன் பேரழகுடைய தமயந்தியை மணந்து இன்புற்று வாழுங்கால் புட்கரன் என்னும் பெயரினையுடைய குறுநில மன்னன் ஒருவன் இருந்தான். அவன் ஆசையும், பொறாமையும், அச்சமும் அமைந்தவன்.

நஞ்சிலுங் கொடியவன் நாளுந் தீமையே
நெஞ்சினில் உடையவன் நீதி யில்லவன்
வஞ்சனை சூதுபொய் மாயம் வல்லவன்
அஞ்சையும் ஆறென அகத்தில் கொண்டவன்.

என்றபடி புல்லிய குணங்கள் எல்லாமுடைய இவன், கலியின் சூழ்ச்சியால் நளன்பால் வந்தான். தன் முடி படியிற் பட அவன் அடியில் விழுந்தான். அவன் இருக்க என்றுரைத்த பின் இவன் இணங்கியிருந்தான். சூதாட வரும்படி நளன்பால் இவன் ஓதாமல் ஓதினன். எய்தும் நல்குரவினுக்கு இயைந்த தூது; வெம்பொய்யினுக்கு அருந்துணை; புன்மைக்கு ஈன்ற தாய்; மெய்யினுக்கு உறுபகை; என்ற சூதின் தீமையை நன்குணர்ந்திருந்தும் நளன் எதும் ஆராயாமல் அவனுடன் ஆட இசைந்தான். அதில் தனது அரசு முழுவதும் இழந்தான். நல் அறிவு சிறிதுமில்லாத புட்கரன் விரிந்த அறிவுடையனாய் அதனை வென்று கைக்கொண்டான். தீயூழால் நளன் பேதையனாகிப் பெரும்பொருளிழந்தான். நல்லூழால் அறிவு மிகுந்து புட்கரன் அரசை அடைந்தான். எல்லா அறிவும் உடையனாயினும் இழவூழ் உற்றவிடத்து ஒருவனுக்கு அறிவுகுன்றும் என்பதையும், அறிவிலனாயினும் ஆகலூழ் உற்றால் அவனுக்கு அறிவு விரியும் என்பதையும், உலகம் இவ்இருவர்பாலும் ஒருங்கே கண்டது. (விரிவை நளசரிதையில் காண்க.)

ஆவது விதியெனின் அனைத்தும் ஆயிடும்
போவது விதியெனின் எவையும் போகுமால்
தேவருக் காயினும் தீர்க்கத் தக்கதோ
ஏவரும் அறியொணா ஈசற் கல்லதே. (கந்தபுராணம்.)

ஒருவன் அறிவைக் குறைக்கவும் விரிக்கவும் ஊழ் வல்லது என்பது இதனால் கூறப்பட்டது.

373 திண்டோள் இராமனுமேன் தேராமல் மான்பின்போய்க்
கொண்டான் துயரம் குமரேசா—தண்டாமல்
நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை யறிவே மிகும். (௩)

இ—ள்.

குமரேசா! நூல் பல கற்ற இராமரும் ஏன் ஆராயாது மான்பின் சென்று துன்பம எய்தினார் எனின், நுண்ணிய நூல் பல கற்பினும், மற்றும் தன் உண்மையறிவே மிகும் என்க.

உண்மை என்றது ஊழை. பால், முறை, தெய்வம், விதி நியதி, உண்மை, கன்மம், என்பன ஊழையே யுணர்த்திவரும் ஒரு பொருட் சொற்கள்.

நுண்ணிய நூல்—நுண் பொருள்களை உணர்த்துகின்ற நூல்; அஃதாவது தன்னைக் கற்பவருடைய அறிவை மிக்க நுட்பமாக்குந் திறனுடையது. உம்மை சிறப்பு உம்மை.

உண்மை அறிவு—ஊழறிவு. முன்னரே செய்துபோந்த வினையினால் தோன்றி நிலைபெற்றிருத்தலின் இஃது இப் பெயர் பெற்றது.

நுண்ணிய நூல்கள் பலவற்றையும் ஒருவன் கற்றிருப்பினும் பின்னும் அவனுக்குத் தன் ஊழறிவே மிக்குத் தோன்றும் என்பதாம்.

நூலறிவு சாலவுடைய மேலோராயினும் தீயூழ் அணுகின் தமது உயர் மதி மயங்கி அதன் வயமாகி நன்றென ஒன்றை நயந்துசெய்து பின் இரங்கி மெலிவர் என்பது கருத்து.

மேல், ஒருவனது அறிவைச் சுருக்கவும், பெருக்கவும் ஊழ் வல்லது என்றார்; இதில் நூலறிவையும் அது கீழ்ப்படுத்தும் என்றார் கல்லா அறிவை ஊழ் கலக்குமேயன்றி, நூல் வல்லார் அறிவை அஃது என்செய்யும் என்பார்க்கு இஃது இயம்பியதென்க.

சிறந்த அறிவுடைய உயர்ந்தவர்களையும் ஊழ் தன் வயப்படுத்திவிடும் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை இராமர்பால் உணரப்படும்.

கதை.

இராமபிரான் பஞ்சவடியில் தங்கியிருக்குங் காலத்தில் சீதையை வஞ்சித்துக்கொள்ளக் கருதிய இராவணன், அழகிய ஒரு மான் வடிவங்கொண்டு சீதைமுன் போய் நில் என மாரீசனை ஏவினான். அவனும் அவ்வாறே ஆகி வந்தான். சீதை கண்டாள். ஆசை கொண்டாள். அப் பொன்மானைப் பற்றித்தரும்படி தன் நாயகனை வேண்டினாள். இராமரும் இசைந்துசென்று அப் பொன் மானை நோக்கிப் பெரிதும் வியந்தார். அதன் அழகில் மயங்கி ஆவமீக் கூர்ந்தார். பிடிக்கத் துணிந்தார். அடுத்து நின்ற தம்பி தடுத்து வணங்கி "அண்ணா, இம்மானின் வடிவையும், அழகையும், ஒளியையும், இயல்பையும் ஊன்றி நோக்கினால் ஒருமாயம் என்றே எனக்குத் தோன்றுகின்றது. மாரீசன் என்னும் அரக்கனே இவ்வடிவங் கொண்டு இங்கு வந்துள்ளான் என்று எண்ணுகின்றேன். இதன்பால் சென்ற விருப்பத்தை அடிகள் அறவே ஒழித்தல் வேண்டும்" என்று மிகவும் நயந்து மொழிந்தான். இராமர், ஒன்றுந் தேராமல், அதனை மெய்மான் என்றே நம்பி இதம் பல கூறித் தம்பியை இருத்திவிட்டு அதன் பின்பே சென்றார். ஆண்டிலும் அறிவிலும் இளையவனாகிய இளையவனுக்கு உண்மை தோன்றவும், நுண்ணிய நூலறிவுடையாரெல்லாரும் எண்ணிப் போற்றுகின்ற புண்ணிய மூர்த்தியாகிய இராமருக்கு அது தோன்றாமல் அம் மான் பின் போய் அல்

லல் பல எய்தி அகங் கரைந்திரங்கினார். நூல் பல கற்பினும் ஊழறிவே மிகும் என்பதை உலகம் இவர்பால் உணர்ந்து தெளிந்தது. (விரிவை ஆரணிய காண்டத்தில் காண்க.)

இம்மான் இநிலத்தினில் இல்லையெனா
எம்மானி தெனச்சிறி தெண்ணல் செயான்
செம்மானவள் சொற்கொடு தேமலரோன்
அம்மானும் அருந்திய னாயி

நோக்கிய மானைநோக்கி நுதியிழை மகிழ்வினான்றுந்
நூக்கிலன நன்றிதென்றான் அதனபொருள் சொல்லலாகும்
சேக்கையின அரவுநீங்கிப் பிறந்தது தேவர்செய்த
பாக்கிய முடைமையன்றோ அன்னது பழுதுபோமே. (கம்பர்.)

இவை, மானை நோக்கியபொழுது இராமனைக் குறித்துக் கூறியன. இக்கவிகளில் அமைந்துள்ள அழகுகளையும், பத நயங்களையும், பொருள் வளங்களையும் ஆய்ந்து மகிழ்க.

நூலறிவையும் ஊழ் கீழ்ப்படுத்தும் என்பது இதனால் கூறப்பட்டது.

374 தெள்ளியனாய் நின்றும் துரோணன் துருபனிடம்
கொள்ளவந்தான் என்னே குமரேசா—கொள்ளும்
இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு. (௪)

இ—ள்.

குமரேசா! துரோணர் அறிவுடையரா யிருந்தும் பொருள் இலராகித் திரு ஒன்றே உடைய துருபனிடம் ஏன் வந்தார் எனின், உலகத்து இயற்கை இரு வேறு; ஆதலால் திரு வேறு தெள்ளியர் ஆதலும் வேறு என்க.

ந—செல்வம். தெளிவு—அறிவு.

திரு வேறு—செல்வமுடையராதலும் வேறு.

தெள்ளியர் ஆதலும் வேறு—அறிவுடையராதலும் வேறு.

திருவும் தெளிவும் ஒருவன்பால் ஒருங்கே அமைந்திருத்தல் அரிது என்பார் உலகத்தியற்கை இருவேறு என்றார்.

உலகத்தின் இயல்பு இரண்டு வகை; ஆதலால் திருவுடையராதலும் வேறு அறிவுடையராதலும் வேறு என்பதாம்.

மேல், நாலறிவையும் ஊழ் வேறுபடுத்தும் என்றார்; இதில், அறிவுடையார்க்குப் பொருள் இன்மையையும் பொருளுடையார்க்கு அறிவின்மையையும் அஃது அளித்து நிற்கும் என்றார்.

திருவும் அறிவும் ஊழானே வரும் எனினும் அறிவிலார் சிலர் செல்வராகவும் அறிவுடையார் பலர் வறியராகவும் பெரும்பாலும் இவ்வுலகில் காணப்படலான் ஒன்றற்காகும் ஊழ் ஒன்றற்கு ஆகாது என்பதை இஃது உணர்த்தியதென்க.

அறிவும் திருவும் ஒருவன்பால் ஒருங்கே அமைவது அரிதென்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை துரோணன் கண்ணும் துருபன்பாலும் உணரப்படும்.

கதை

துரோணர் என்பவர் பரத்துவாசருடைய புதல்வர். இவர் பிறப்பு மிகவும் வியப்புறத்தக்கது பரத்துவாசர்.ஒருகால் திலோத்தமையைக் கண்டார் அவள்மேல் பெருங் காதல்கொண்டார். அதனால் தமது வீரியம் வெளிப்பட அதனை அங்கிருந்த ஒரு துரோணத்தில் விடுத்தார். துரோணம் என்பது பதக்கு நீர் கொள்ளும் ஒரு கும்பத்துக்குப் பெயர். அதிலிருந்து இவர் தோன்றியதனால் இவருக்குத் துரோணர் என்று பெயர் வந்தது என்பர். இவர், எல்லாக்கலைகளிலும் வல்லவர். நல்ல சீலமுள்ளவர்.

ஈரேழ் விஞ்சைத்திறனும் ஈன்றோன் தன்பாலெய்தி
நீரேழனைய யாவும் நிறைந்தகேள்வி நெஞ்சன

பாரேழெண்ணும் படைகள் பரசுராமன் தன்பால்
ஓரேழ் பகலினுலகுக் கொருவனெனக் கற்றான்

இத்தகைய பேரறிவுடைய இவர் யாதொரு பொருளும் இல்லாதவராயிருந்தார். இவர் கிருபி என்னும் ஓர் அழகியை மணந்து ஒரு புதல்வனைப் பயந்தார். துணைவியையும் குழவியையும் பேண முடியாமல் நாணி வருந்தினார். தனது பழைய நண்பனாகிய துருபனிடம் வந்தார். அவன் பெருந் திருவுடையனாய்ச் சிறந்து விளங்கினும் போதிய அறிவு பொருந்தப் பெறாதவன். அவன்பால் இவர், தம் எளிமையைக் கூறி ஏதேனும் ஒன்று தருக என்றிரந்தார். அவன், இல்லை போ என்று ஒல்லை மொழிந்தான். எள்ளி நகைத்தான். இவர் இரங்கி நொந்தார் பின் இயன்றதைச் செய்தார். அறிவுள்ள இவர் பொருள் இலராகவும், தெளிவில்லாத துருபன் திருவுடையனாகவும், திகழ்வதைக் கண்டு அனைவரும் இரங்கினர். அறிவுடையார்தற்காகும் ஊழ் செல்வமுடையார்தற்கு ஆகாது, செல்வமுடையார்தற்கு ஆகும் ஊழ் அறிவுடையார்தற்காகாது என்பதை உலகம் இவ் இருவர்பாலும் அன்று உணர்ந்து தெளிந்தது. (விரிவைப் பாரதத்தில் காண்க.)

திருவையும் அறிவையும் ஊழ் இருவேறு வகையாகத் தரும் என்பது இதனால் கூறப்பட்டது.

375 சாதுவன்முன் நன்றாய்ந்தும் தாழ்ந்தான்பின் தீதடைந்தும்
ஜோதகனான் ஏனோ குமரேசா — ஆதலினால்
நல்லவை எல்லாஅந் தீயவாந் தீயவும்
நல்லவாஞ் செல்வஞ் செயற்கு. (௫)

இ—ள்.

குமரேசா! நல்ல உபாயங்களைச் சூழ்ந்து கொண்டும் சாதுவன் தாழ்ந்து நொந்தான்; பின் தீயனவற்றைச் சார்ந்து நின்றும் என செல்வம் பெற்றான் எனின், செல்வம் செயற்கு நல்லவை எல்லாம் தீயவாம்; தீயவும் ஊழ் வயத்தான் நல்லவாம் என்க.

ஊழ் வயத்தான் என்பது இதில் வருவிக்கப்பட்டது. நல்லவை எல்லாம் என்றது செல்வத்தை ஈட்டுதற்கு உதவியான கருவியின் நலங்களை.

செல்வத்தை ஒருவன் ஈட்டுங்கால் நல்லவை எல்லாம் தீயனவாய் நின்று அழிக்கவும்; தீயவை எல்லாம் நல்லனவாய் நின்று ஆக்கவும் ஊழ் செய்விக்கும் என்பதாம்.

நல்ல காலத்தில், நல்ல இடத்தில், நல்லவிதமாகச் சூழ்ந்து செய்யினும் நல்லூழ் இல்வழி அவையாவுந் தீயனவாய்க் கேட்டை விளைக்கும் என்பதும், அக்காலம் முதலியன தீயனவாயினும் நல்லூழ் உற்றால் அவை நலமுடையனவாய் நின்று ஆக்கத்தைப் பயக்கும் என்பதும் இதன் கருத்தாம் என்க.

மேல், அறிவில்லார்க்குத் திருவையும் திருவில்லார்க்கு அறிவையும் ஊழ் சேர்க்கும் என்றார்; இதில், அது நல்லதைத் தீயதாக்கவும் தீயதை நல்லதாக்கவும் வல்லதென்றார்.

தீயூழ் உற்றால் ஒருவனுக்கு நல்லவுந் தீயவாகும் என்பதும் நல்லூழுற்றால் தீயவும் நல்லவாகும் என்பதும் இதில் உணர்த்தப்பட்டன. (இவ்வுண்மை சாதுவன்பால் உணரப்படும்.)

கதை.

சாதுவன் என்பவன் பெருநிதியுடைய ஒரு வணிகர் தலைமகன். இவன் மனைவி பெயர் ஆதிரை. சிறந்த கற்புடையவள். அவளுடன் அமர்ந்து இவன் இல்வாழ்ந்து வருங்கால் போகவதி என்னும் ஒரு தாசி வசப்பட்டுத் தன் செல்வ முழுதும் சேர இழந்தான். பின் தேறி வருந்தினான். மீண்டும் பொருள் தேடவிரும்பி நண்பர் சிலருடன் கலந்து நல்ல ஓரையில் கப்பலேறிச் சென்றான். இடை வழியில் வந்த கடுவளியால் அக்கப்பல் உடைந்தது. அதிலிருந்தாரனைவரும் பெருந் துயரடைந்தார். பலர் மாண்டார். சிலர் திருவருளால் கரை சேர்ந்தார். அங்கு ஒடிந்து விழுந்த பாய்மரத் துண்டைச் சாதுவன் பற்றிக் கிடந்

தான். அஃது அலைகளால் அலைந்தலைந்து ஒரு மலையினை அடைந்தது. அதற்கு நாகர் மலை என்று பெயர். அதனில் உள்ளவர்கள் உடையில்லாதவர்களாய்க் கொடிய குணமுடையராய் ஊனையும் தின்னும் இயல்பினரானவர். அந்நாகர்கள் அயர்ந்து சேர்ந்த இவனை விரைந்து கொல்ல வந்தார். இவனது இனிய மொழிகளைக் கேட்டு இரங்கிக் கொண்டுபோய்த் தம் தலைவன் முன் விடுத்தார். தலைவனும் இவனது நிலைமையைத் தெளிந்தான். எமக்காம் நல்லறம் எடுத்துரை என்றான்.

நன்று சொன்னாய் நன்னெறிப் படர்குவை
உன்றனக் கொவ்வா நெறியறம் உரைக்கேன்
உடைகல மாக்கள் உயிருய்ந் தீங்குறின்
அடுதொழில் ஒழிந்தவ ராருயிர் ஓம்பி
மூத்துவிளி மாவொழித் தெவ்வுயிர் மாட்டும்
தீத்திறம் ஒழிகெனச் சாதுவன் உரைத்தான
அவனும், ஈங்கெமக்காகும் இவ்வறஞ் செய்கேம்
ஆங்குனக் காகும் அரும்பொருள் கொள்கெனப்
பண்டும் பண்டும் கலங்கவிழ் மாக்களை
உண்டேம் அவர்தம் உறுபொருள் ஈங்கிவை
விரைமரம் மென்றுகில் விழுநிதிக் குப்பையோ
டிவைஇவை கொள்கென எடுத்தனன் கொடுத்தான்.

அப்பொருளனைத்தையும் பெற்றுக்கொண்டு அதனை யடுத்துவந்த சந்திரதத்தன் என்னும் ஒரு வணிகனது கப்பலின்மேலேறித் தன்வள நகர் அடைந்தான். நல்லனவற்றைத் தீயனவாக்கி அல்லல் அளிக்கவும், தீயனவற்றை நல்லனவாக்கிச் செல்வம் விளைக்கவும், ஊழ் வல்லதென்பதை உலகம் இவன்பால் கண்டது. (விரிவை மணிமேகலையில் காணுக)

நல்லதைத் தீயதாக்கவும், தீயதை நல்லதாக்கவும் ஊழ் வல்லது என்பது இதனால் கூறப்பட்டது.

376 கட்டிவைத்தும் தத்தன்முன் கைவிட்டான் ஏலேலன்
கொட்டியுமேன் பெற்றான் குமரேசா—முட்டப்
பரியினும் ஆகாவாம் பாலல்ல வுய்த்துச்
சொரியினும் போகா தம. (௬)

ள.

குமரேசா! தருமதத்தன் வருந்திக் காத்தும் தன் பொருளை இழந்தான்; ஏலேலன் கடலிடைச் சொரிந்தும் ஏன் தன் கைவரப் பெற்றான் எனின், பால் அல்ல பரியினும் ஆகாவாய்; தம உய்த்துச் சொரியினும் போகா என்க.

பால்—ஊழ். பரிதல்—வருந்திக் காத்தல்.

பால் அல்ல—ஊழால் தமக்கு உரிமையில்லாத பொருள்கள்

தம—தமக்கு உரிமையான பொருள்கள்; தம்முடையன என்றபடி.

ஊழால் தமக்கு உரிமையில்லாத பொருள்களை வருந்திக்காப்பினும் அவை நில்லா; தமவாய பொருள்களை வெளியே கொண்டு போய்ச் சொரிந்து விடினும் தம்மை விட்டு அவை போகா என்பதாம்.

செல்வம் நிலைத்தலும், போதலும் ஊழால் ஆதலேயன்றி மக்களது காத்தல் ஒழிதல்களால் அமையாவென்பார் “பால் அல்ல பரியினும் ஆகா; தம சொரியினும் போகா’ என்றார்.

ஊழால் தம்முடையதல்லாத பொருள் கண்ணூன்றிக் காத்தாலும் நில்லாது, தமவாயது கடலிடை எறிந்தாலும் போகாது என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை தருமதத்தன் கண்ணும் ஏலேலன் பாலும் உணரப்படும்.

கதை 1.

தருமதத்தன் என்பவன் கலிங்க நாட்டிலே அரிபுரம் என்னும் நகரிலேயிருந்த தேவதத்தன் என்னும் ஒரு வணிகனுடைய

தலைமகன். பெரும்பொருளுடையவன். ஆயினும் சிறந்த அறிவில்லாதவன். எவர் எதைச் சொன்னாலும் அதை நம்பி யுழல்வான். பொருள்மேல் பெரும் பற்றுடையவன். கண்ணினும் உயிரினும் சிறந்ததாக அதனை எண்ணிக் காத்துவந்தான். வருங்கால் இரசவாதி என்று ஒரு வஞ்சன் இவன்பால் வந்தான். அவன் செய்த வஞ்ச வினையினால் இவன் வருந்திக் காத்துவந்த பொருள் முழுவதையும் தன் கண்முன்னே வறிதே இழந்தான். அதனால் இறந்தான். பால் அல்ல பரியினும் ஆகாவாம் என்பதை உலகம் இவன்பால் கண்டது. (விரிவைக் கந்த புராணத்தில் காண்க.)

கதை 2.

வணிக குல திலகராகிய ஏலேல சிங்கர் பிறவுந் தம்போல் பேணி நெறி வழுவாது வாணிகம் புரிந்துவருங்கால் இடையே பஞ்சம் தோன்றிற்று. அதினும் நெஞ்சங் கோடாமல் நின்று உண்பொருள்களை உயிர்கள் இன்புற இனிது உதவிவந்தார். அதனால் பெரும் பொருள் திரண்டது. அதிலொரு பெரும் பகுதியை எடுத்துப் பொன்னாக மாற்றி யுருக்கிப் பொற் கல்லாகச் செய்து அதன்மேல் "இஃது ஏலேலசிங்கனது" என்று எழுதி அதனைக் கடலிடை எறிந்தார். இங்ஙனம் செய்யும்படி நமது நாயனாரே கட்டளையிட்டனரென்பர். எறிந்த அப்பொற் பாளம் நாள் பல கழிந்தபின் ஒரு மீனால் விழுங்கப்பட்டது. அது பின் ஒருவன் வலையிற் பட்டது. ஈர்த்துப் பிளந்தான். அதன் வயிற்றிற் கிடந்து பாசி படிந்து ஒளி மழுங்கியிருக்கும் அதனைக் கண்டான். இன்னதென அறியாது எடுத்துச் சென்று துறைமுகத் தலைவராகிய சிங்கரிடமே சேர்த்தான். அவரும் கடற் கல் என்றே மதித்துப் புறங்கடையில் கால் கழுவுவதற்கு உதவியாகப் போடச் செய்தார். நாள் பல கழிய அதன்மேல் மாசு தேய்ந்தது. ஒரு நாள் அதனை உற்று நோக்கினார். தம் பெயரினைக் கண்டார். பெருமகிழ்வு கொண்டார். அதனை வியந்தெடுத்துப் புனைந்து போற்றினார். ஏலேலசிங்கன் பொருள் எறிந்தாலும் போகாது என்று அன்றுமுதலாக ஒரு சிறந்த பழமொழி இன்

றும் வழங்கிவருகின்றது. தம உய்த்துச் சொரியினும் போகா என்பதை உலகம் இவர்பால் கண்டது.

செல்வம் நிலைத்தலும் போதலும் ஊழாலே ஆம் என்பது கூறப்பட்டது.

377 ஊடி அமுதசுரர் உண்ணா தொழிந்தாரேன்
கோடி தொகுத்துங் குமரேசா—நாடி
வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்தல் அரிது. (௭)

குமரேசா! அமிழ்தைத் தாம் வருந்தித் தொகுத்தும் ஏன் அசுரர்கள் அதனை நுகராது ஒழிந்தார் எனின், வகுத்தான் வகுத்த வகை அல்லால், கோடி தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது என்க. மிகுதியை விளக்குதற்குக் கோடி என்றார்.

வகுத்தான் என்றது ஊழை. தன்னைச் செய்த உயிரையே வினைப்பயன் சேர வகுத்தலின் அஃது இப் பெயர் பெற்றது. வகுத்தது என்னாது வகுத்தான் என உயர்திணையாக் கூறியது அதன் வன்மை கருதி என்க.

உம்மை சிறப்பும் எச்சமும் தெரிய நின்றது.

பொருள்களைக் கோடி கோடியாக ஒருவன் சேர்த்தாலும் ஊழ் வகுத்த வகை அல்லால் அவற்றை அவன் அனுபவிக்கமுடியாது என்பதாம்.

வகுத்தான் என்பதற்குக் கடவுள் என்று பொருள்கொண்டால் வினைப் பயன்களை உயிர்களுக்கு ஊட்டுவிக்கும் இறைவன் முன்னம் வகுத்தபடியன்றி ஒருவன் பெரும் பொருளைத் தொகுத்தாலும் அதனை அவன் நுகர முடியாதென்று பொருள் கொள்க;

பொருளை மிகுதியாகத் தொகுத்தும் அதனைச் சிறிதும் துய்க்காமல் வறிதே வைத்திருக்கும் சில செல்வரை நோக்கி இதற்குக் காரணம் யாது என்று கருதுவார்க்கு இஃது அருளியதென்க.

பொருளை ஒருவன் வருந்தியீட்டினும் திருந்த இருந்து நுகர்ந்து மகிழ்தற்குரிய ஊழ் இல்லையானால் அதன்பயனை அவன் உண்ணமுடியாதென்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ் உண்மை அசுரர்கள்பால் உணரப்படும்.

கதை.

அசுரர் உடல்வாங்கிக் கடல் கடைந்து அமிர்தந் திரட்டினார். பின்பு தமருடனிருந்து அனைவரும் அதனை நுகரவிரும்பினார். அதுபொழுது திருமால் ஒரு மோகினி வடிவங்கொண்டு அவர்முன்னே நின்றார். அம்மோகினியின் பேரழகையே நோக்கி அசுரர் பேதுற்று நின்றார். அவ்வமையம் இந்திரன் முதலிய அமரரனைவரும் அவ் அமிர்தினை அமர்ந்து நுகர்ந்தார். மகிழ்ந்தெழுந்து பின் மறைந்து போனார். வருந்தி யீட்டியும் அமிழ்தைத் துய்க்கப் பெறாமல் அசுரர் துன்புற்றழுந்தார். கோடி தொகுத்தாலும் நுகர்தற்குரிய ஊழ் இல்லையானால் அதன் பயனை உண்ணமுடியாதென்பதை இவர் அன்று உணர்த்தி நின்றார்.

மதியினை மலரச்சூழ்ந்து வருந்தித்தாம் படைக்கப்பட்ட
நிதியினை நுகர்துமென்று நினைத்தினி திருந்தபோழ்திற்
பதியினைக் கலங்கிச்சென்று பறித்துத்தாம் பிறர்க்குநீட்டும்
விதியினை விலக்கமாட்டா மெலிபவால் வெளியநீரார்.

(சூளாமணி)

செல்வமிருந்தாலும் ஊழ்இல்லையானால் அதனை நுகரமுடியாதென்பது இதனால் கூறப்பட்டது.

378 தள்ளா வறுமையுறறும் சத்திமுத்தர் நற்றுறவு
கொள்ளாத தென்னே குமரேசா — உள்ளித
துறப்பார்மற் றுப்புர வில்லார் உறற்பால
வூட்டா கழியு மெனின். (௮)

குமரேசா! ஒரு பொருளும் இல்லாதிருந்தும், அறிவு மிக்க சத்திமுத்தர் ஏன் துறவினைக் கொள்ளாதிருந்தார் எனின், உறற்பால ஊட்டா கழியும் எனின் துப்புரவு இல்லார் துறப்பார் என்க.

துப்புரவு—துய்த்தற் குரிய பொருள்கள்.

உறற்பால—உறுதற்பாலனவாய துன்பங்கள்.

ஊட்டா கழியும் எனின்—உறுவியாது ஒழியுமாயின்.

துறவு என்பது உள்ளன எல்லாம் ஒருங்கே விடுதலேயாம், அவ் விடுதலை இயல்பாகவே அமையப் பெற்றிருந்தும் சிலர் ஏன் துறவுகொள்ளாமல் வறிதேயிருக்கின்றார் எனின், அதற்குக் காரணம் ஊழ் வலியேயாம் என்று அவரை நோக்கி யிஃதுணர்த்தியதென்க.

உறுதற்பாலவாய துன்பங்களை ஊழ் ஊட்டாது ஒழியுமாயின் துய்த்தற்குரிய பொருளில்லாதவர் துறந்து செல்வர் என்பதாம்.

மேல், பொருளிருந்தாலும் ஊழ் இல்லையானால் நுகரமுடியாதென்றார்; இதில், ஒரு பொருளும் இல்லையானாலும் அஃது இல்லையானால் துறவும் கொள்ளமுடியாதென்றார்.

இல் வாழ்ந்திருந்து இன்பம் நுகர வேண்டினும் துறந்து சென்று பயன்பெற விரும்பினும் ஊழ் இன்றியமையாதென்பது கருத்து.

ஒன்றும் இல்லாமையே துறவுக்கு இயல்பாகுமாயினும் ஊழ் இல்லையானால் அஃது ஒருவனுக்கு உண்டாகாதென்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ் உண்மை சத்திமுத்தர் பால் உணரப்படும்.

கதை.

சத்திமுத்தப் புலவர் என்பவர் இற்றைக்குப் பல நூற்றாண்டுகட்கு முன்னர் சோழநாட்டிலே சத்திமுத்தம் என்னும் ஊரிலிருந்தவர். பல நூல்களிலும் நல்ல பயிற்சியுள்ளவர். அடக்கம் பொறை முதலிய உயர் குணங்களும் அமையப் பெற்றவர். அருமையான கவிகளை விரைவில் பாட வல்லவர். இந்நலங்களெல்லாம் அமைந்திருந்தும் மிக்க வறுமையும் இவரை மேவியிருந்தது. "வெறும் பானையும் அரிசா வீட்டில் வரும் எறும்புக்கும் ஆற்பதம் இல்லை" என்று தம் வறுமையைக் குறித்து இவரே சொல்லி நொந்துளார். வறுமைப் பிணியால் வாடி ஒருநாள் இவர் மதுரைப் பதியையடைந்தார். அங்கோர் பாழ்மண்டபத்தில் பசியுடன் கூடிப் படுத்துக்கிடந்தார். நடுயாமத்து மாறுவேடம் பூண்டு நகரியல்பறியுமாறு வழுதி வேந்தன் அதனருகே வந்துகொண்டிருந்தான். அவ்வமையம் இரண்டு நாரைகள் ஆகாயத்தில் பறந்து சென்றன.

நாராய்! நாராய்! செங்கால் நாராய்
பழம்படு பனையின் கிழங்கு பிளந்தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்
நீயுநின் மனைவியும் தென்திசைக் குமரியாடி
வடதிசைக் கேகுவீராயின்
எம்மூர்ச் சத்திமுத்த வாவியுட் டங்கி
நனைசுவர்க் கூரை கனைகுரற் பல்லி
பாடுபார்த் திருக்குமெம் மனைவியைக் கண்டு
எங்கோன் மாறன் வழுதி கூடலில்
ஆடையின்றி வாடையின் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலது கொண்டு மேலது தழீஇப்
பேழையுள் இருக்கும் பாம்பென உயிர்க்கும்
ஏழையாளனைக் கண்டனம் எனுமே.

என்று நாரையை நோக்கிப் புலவர் தம் இயல்பை விரித்தார். மன்னன் கேட்டுத் தான் கருதியிருந்த நாரையின் கூர்வாய்க்கு

நேரிய உவமை அதில் நேர்ந்திருப்பதை வியந்து புலவருக்கு வேண்டிய நலங்களை விரும்பியுதவினான். இல்லாதவராயிருந்தும் நல்லறிவாளராகிய இவர், துறவிற் செல்லாது நின்றார். அதனை நினைந்து பின் இவரே இரங்கினார். ஊழ் இல்லையாயின் வறுமையுறினும் ஒருவன் துறவினையடையான் என்பதை உலகம் இவர்பால் உணர்ந்தது. (விரிவைப் புலவர் சரிதையில் காண்க.)

ஊழ் உதவா வழி ஒருவனுக்குத் துறவும் உதியாதென்பது கூறப்பட்டது.

379 அன்றுதுயர் எய்துங்கால் அல்லலின்றிச் சச்சந்தன்
குன்றாதேன நின்றான் குமரேசா—என்றுமே
நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்
அல்லற் படுவ தெவன். (கூ)

பொ—ள.

குமரேசா! இன்பமெய்தி நின்ற சச்சந்தன் பின்பு துன்பமுறுங்காலும் அல்லலின்றி வன் அமைந்து நின்றான் எனின், நன்று ஆங்கால் நல்லவாக் காண்பவர் அன்று ஆங்கால் அல்லற் படுவது எவன் என்க. நன்று—நன்மை. அன்று—தீமை.

நல்வினை விளையுங்கால் அதன் பயனாகிய இன்பங்களை
தாக நுகர்பவர் வனைத் தீவினை விளையுங்கால் அதன் பலனாய துன்பங்களையும் இணங்கி அனுபவியாமல் உணங்கி உளைவது எதற்காக என்பதாம்.

இன்பமும் துன்பமும் தாம் செய்த வினையின்படியே வரும் அவற்றுள் ஒன்றுக்கு இசைந்து மகிழ்தலும் மற்றொன்றுக்கு அசைந்து நெகிழ்தலும் அறிவுடையாருக்குத் தகுதியன்று ஆகலால் "அன்று ஆங்கால் அல்லற்படுவது எவன்" என்றார். வினைப்பயன் துய்க்காமல் தொலையாதாதலால் அதற்கு வருந்துவதால் பயனில்லை என்பது குறிப்பு.

கடலிடை நிரதமொருவன் அஞ்சினும் அஞ்சாவிடினும் அலைகள் அடியாமல் அகலா; அதுபோல் பிறவியில் நிற்பவன வேண்டினும் வேண்டாவிடினும் வினைப்பயன்கள் உறுதலொழியா எனக.

எதுவாயினும் அறிவுடையார் இசைந்து அனுபவிப்பர் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை சச்சந்தன்பால் உணரப்படும்.

கதை.

சச்சந்தன் என்பவன் ஏமாங்கத நாட்டு வேந்தன். இராசமாபுரி எனனும நகரிலிருந்து அரசுபுரிந்தவன். அரசுக்குரிய எல்லா நலங்களும் அமையப்பெற்றவன் இவனது காலம் இற்றைக்கு மூவாயிர ஆண்டுகட்கு முன்னென்பர். பேரழகியாகிய விசையையை மணந்து இன்பநலம் துய்த்திருங்கால் கட்டியங்காரன் என்னும் அமைச்சன் கொடுஞ்சூழ்ச்சியால் அரசபதவியைத் தனவசப்படுத்தினான். பின் போர் செய்ய வந்தான். அவ்வமையம் நிறைந்த கருப்பவதியாயிருந்த மனைவி அஞ்சி நடுங்கினாள். அவளை இவன் அணைத்துத் தேற்றினான். நமது நல்வினைப்பயனால் இந்திர திருவுடனிருந்து இதுவரை இன்பந் துய்த்தோம். இனி நந் தீவினைப்பயன் சேர்கின்றது. அதனை அஞ்சுவதால் பயன் யாதும் இல்லை. ஓடினும் ஒளிப்பினும் ஒடுங்கி நிற்பினும், கூடிய வினைப்பயன் குறுகுதும் என்பயன். ஆதலால் ஏது வரவேண்டுமோ அது வருக எம்மை விடுத்து ஏது அகல வேண்டுமோ அது அகலுக என்று இணங்கியிருப்பதே உணர்ந்தோர்க்கழகு என்று அவள் உணர உணர்த்தினான் வினைப்பயனை உவந்து அனுபவித்தான். அறிவுடையார் வினைத்துன்பங்கட்கு அஞ்சி அல்லலுழவார் என்பதை உலகம் இவன்பால் உணர்ந்தது. (சீவகசிந்தாமணியில் காண்க)

சாதலும் பிறத்தல் தானும் தன்வினைப் பயத்தினாகும்
ஆதலும் அழிவுமெல்லாம் அவைபொருட்கியல்புகண்டாய்.
நோதலும் பரிவும் எல்லாம் நுண்ணுணர் வின்மையன்றே
பேதைநீ பெரிதும் பொல்லாய் பெய்வளைத்தோளி என்றான்.

இது, மனைவி அச்சமுற்றபோது சச்சந்தன் சொன்னது. அன்று ஆங்கால் இவன் அல்லற்படாது நின்ற உண்மை இதனால் இனிது தெளிவாதல் காண்க.

ஊழின் பயன் எதுவாயினும் அதனை இனிதாகக் கொள்வோனே அறிவோன் என்பது இதனால் கூறப்பட்ட

380 சிந்துபதி முற்சூழ்ந்துந் தேர்ந்துபரீச் சித்துநின்றும்
குந்தியேன் மாய்ந்தார் குமரேசா—முந்துகின்ற
ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும். (ய)

குமரேசா! சிந்து தேசத்து வேந்தனும், பரீச்சித்து மன்னனும், வினைவிளைவுகளை விலக்குதற்குரிய சூழ்ச்சிகளை முன்னதாகவே சூழ்ந்திருந்தும் ஏன் அழிவினை எய்தினர் எனின் ஊழிற் பெருவலி யாஉள; மற்று ஒன்று சூழினும் தான் முந்துறும் என்க. வலி என்பது ஆகு பெயராய் அதனையுடையவற்றைக் குறிக்கின்றது

சூழ்தல்—எண்ணுதல்; அஃதாவது விதியை விலக்குதற்கு உரிய உபாயத்தைக் கருதித் துணிதல.

மற்று ஒன்று சூழினும்—பிறிதோர் உபாயத்தை எண்ணினும் உம்மை செய்யினும் என்பதைச் சுட்டி நின்றமையால் எச்ச உம்மையாம்,

தான் என்றது ஊழை. முந்துறும்—முன்னதாகி நிற்கும். ஊழை விலக்குதற்கு ஏதாவது ஓர் உபாயத்தை எண்ணினும் ஊழ் அதனினும் முற்பட்டுத் தன் பயனை ஊட்டிவிடும். ஆதலால் அவ்வூழைப் பார்க்கிலும் வலிமையுடையன யாவை உள என்பதாம். யாதும் இல்லை என்பது கருத்து.

மேல், நல்லூழின் பயனை மகிழ்ந்தனுபவிப்பதுபோல் தீயூழின் பயனையும் அமைந்தனுபவிப்பதே அறிவுடைமைக்கு அழகாம் என்றார். அத்தீயூழை ஏதாவது ஓர் உபாயத்தால் விலக்கிவிடலாகாதா? என்பார்க்கு இஃது உணர்த்தியதென்க.

வினை விளைவுகளை விலக்குதற்கு வேண்டிய சூழ்ச்சிகளைச் செய்யினும் ஊழானது அவையனைத்தையுங் கடந்துவந்து தன் பயனைத் தப்பாது கொடுத்துவிடும் என்பது இதில் உணர்த்தப்பட்டது. இவ்வுண்மை விருத்தச்சத்திரனாலும் பரீச்சித்தாலும் உணரப்படும்.

கதை.

விருத்தசத்திரன் என்பவன் சிந்து தேசத்து வேந்தன். சயத்திரதன் தந்தை. தன் மகன் இன்ன நாளில் இறந்து படுவான் என்று கனவினாலும் அசரீரியாலும் முன்னமே யுணர்ந்தான் அதுநிகழாவண்ணம் விரைந்து சூழ்ந்து சமந்த பஞ்சகம்என்னும தனியிடத்தை அடைந்து தென்திசைநோக்கியிருந்து இயமனை நினைந்து "என்மகனுடைய தலையை எவன்தரையில்வீழ்த்துகின்றானோ அவனது தலை உடனே வெடிக்கக் கடவது" என்று உளத்திற் குறித்து உரிய மந்திரங்களை உரைத்துக்கொண்டிருந்தான், இங்ஙனம் இருக்குங்கால் அத்தினபுரியில் நடந்த பாரதப் போரில் பதினான்காம் நாள் மாலையில் சயத்திரதன் தலை அருச்சுனன் கணையால் துணிபட்டது. அப்பொழுது சிந்துமன்னன் சூழ்ந்திருக்கும் உண்மையைக் கண்ணன் உணர்த்தினான். உணர்ந்த விசயன் அந் தலை கீழே வீழாதபடி அம்பினை ஏவிக் கண் மூடி மந்திரம் புரிகின்ற தந்தையின கையில் வீழ்த்தினான் பாவம்! விழித்து நோக்காமல யாதோ! என்று அதனை அவன் கீழே எறிந்தான். அது தரையில் படலும் அவன் தலை பொடிபட்டது. ஊழை விலக்குதற்கு புர்சூழ்ந்திருந்தும் அதனினும் அது முற்பட்டு நின்றது அதனால் இருவரும் பட்டார். ஊழின் பெருவலியை உலகம் இவனால் உணர்ந்தது. விரிவைப் பாரதத்தில காண்க.

கதை 2.

பரிச்சித்து என்பவன் அருச்சுனன் குமாரனாகிய அபிமன்னனுடைய புதல்வன். தாய் பெயர் உத்தரை இவன் கருப்பத்திலிருக்கும்பொழுது பாரத யுத்தம நடந்தது அசுவத்தாமன் பாண்டவர் மரபு நாசமாகும்படி மந்திர முறையோடு ஓர் அம்பை ஏவினான். அது உத்தரை வயிற்றிலிருக்கின்ற இக்கருவையும் அழிக்கும்படி கிளர்ந்தது. கண்ணன் அருளுவாய்ப் புகுந்து அதனை அதட்டி நீக்கினான். மாலின் பரிசம் கருவிலேயே பட்டதால் இவனுக்குப் பரிச்சித்து என்று பெயரிட்டனர் என்பர். இவன் நல்ல நீதியுடையவன். சிறந்த போர்வீரன். பொறையும் அருளும் பொருந்திய நெஞ்சினன், வனத்திலிருந்த சமீக முனிவர்பால் வினோதமாக இவன்செய்த சிறுபிழைக்காக "ஏழு நாட்களுள் பாப்பு கடித்து மடிவாய்" என்று அம்முனிவருடைய புதல்வராகிய சிருங்கி முனிவர் சாபமிட்டனர். அதனை உணர்ந்த இவன், அவ் வினை விளைவை விலக்குதற் பொருட்டு அறிஞர் பலருடன் நன்காராய்ந்து ஒரு பிராணியும் அருகில் அணையாதபடி ஓரழகிய புணையில் சிலருடன் அமர்ந்துபோய்க் கடலிடையிருந்தான். யாதும் அருகில் அணுகாவாறு அனைவரும்

மிக்க ஆயத்தமாயிருந்தனர். குறித்த காலம் வந்தது. கார்க்கோடகன் என்னும் பாம்பு அரசனைக் கடிக்க எழுந்தது. அரசன் முன்னுற ஆய்ந்திருக்கும் தன்மையை யுணர்ந்தது. எலுமிச்சம் பழம்போல உருவெடுத்துக் கடலில் விழுந்தது. அலையால் அலைந்து அலைந்து அலைந்து புணையின் அருகே அணைந்தது. ஊறு ஒன்றும் இல்லையென்று கோர்ந்திருந்த அரசன் ஊர்ந்து வரும் இப் பழத்தை உற்று நோக்கினன் தன் கையால் உவந்தெடுத்தான். பழமாயிருந்தது பாம்பாய்க் கடித்தது. மன்னன் துடித்தான். உடனே மாண்டு விழுந்தான. ஊழை விலக்குதற்கு முற்சூழ்ந்து மிக்க எச்சரிக்கையாயிருந்தும் மன்னன் ஊழ் வயப்பட்டான. மற்றொன்று சூழினும் ஊழ் முந்துறும் என்பதை உலகோர் இவன்பால் உணர்ந்து தெளிந்தார் (விரிவைப் பாகவதத்தில் காண்க)

முதிர்தரு தவமுடை முனிவ ராயினும்
பொதுவறு திருவொடு பொலிவ ராயினும்
மதியின ராயினும் வலிய ராயினும்
விதியினை யாவரே வெல்லும் நீர்மையார். (கந்தபுராணம்)

அதிசயம் ஒருவரால் அமைக்க லாகுமோ
துதியறு பிறவியின் இன்பது துன்பந்தான்
விதிவச மென்பதை மேற்கொள் ளாவிடின்
மதிவலி யால்விதி வெல்ல வல்லமோ. (இராமாயணம்)

ஊழை விலக்க எவராலும் முடியாதென்பது இதனால் கூறப்பட்டது.

இவ் அதிகாரத்தின் தொகைப்பொருள்.

ஆகும் ஊழால் முயற்சி தோன்றும். போகும் ஊழால் மடி உண்டாம். நல்லூழ் அறிவைக் கொடுக்கும். தீயூழ் அதனைக் கெடுக்கும். நூல் பல கற்பினும் ஊழறிவே மிகும். திருவையும் அறிவையும் ஊழ் இருவேறு வகையாய் நின்று உதவும். தீயதை நல்லதாக்கவும், நல்லதைத் தீயதாக்கவும் ஊழ் வல்லதாம். செல்வம் நிலைத்தற்கும் போதற்கும் ஊழே காரணம். செல்வம் பெறினும் நல்லூழ் இல்வழி அதனை நுகரமுடியாது. ஊழ் உதவாவழித் துறவும் உதியாது. வினைப்பயன் எதுவரினும் அதனை உவந்து அனுபவித்தலே உணர்வோர்க்கு அழகு. ஊழை விலக்க ஒருவராலு முடியாது. ஊழின் வலியே உலகில் மிக்கது.

௩௮-வது ஊழ் முற்றிற்று.

அறத்துப்பாலும் இப்பாலுடன் முடிந்தது.

அறத்துப்பாலின் திரட்டுப்பால்.

அறம் பொருள் இன்பம் வீடு என்னும் உறுதிப்பொருள்கள் நான்கனுள் முன்னதாகிய அறத்தின் இயல்பை உணர்த்தியதால் இஃது அறத்துப்பால் என நின்றது. அறத்துப்பால் என்பதற்கு அறத்தை உணர்த்தும் பகுதி என்பது பொருள். அறமாவது நல்லன செய்தலும் அல்லன ஒழிதலுமாம். அதனை இல்வாழ்க்கை, துறவு, என்னும் இருவகை நிலைகளிலுமிருந்து செய்யலாம். கடவுள் வாழ்த்துமுதல் ஊழ் ஈறாக முப்பத்தெட்டு அதிகாரங்களால் அதன் இயல்புகள் இதில் விளக்கப்பட்டுள்ளன.

நூலின் முன்னுரை.

உலகு, உயிர் எவற்றிற்கும் முதல்வர் ஒருவர் உளர். அவர் எங்கும் நிறைந்தவர். எல்லாம் வல்லவர் என்றும் உள்ளவர். இன்பவுருவினர். அவரை அன்புடன் நினைத்தலே நம் அறிவுடைமைக்குப் பயன். அவர் மறை வடிவாய் நின்றும் உயிர்களைப் பேணுகின்றார். அம்மறையாலேதான் இவ் உலகம் நிலை பெறுகின்றது. பொறிகளை அடக்கி அரியன செய்வோரே இவ்வுலகிற் பெரியவராவர். அவர் அருள்நெறி ஒழுகலே அறநெறியாகும். அவ் அறத்தை இல்வாழ்க்கையில் இருந்து செய்வதே எவர்க்கும் நல்லது.

இல்லறம்.

கற்புடைய மங்கையை மணந்து நன்மக்களைப்பெற்று, ஒக்கல்பால் மிக்க அன்புடையனாய்ப் பெரியவர், வறியவர் முதலிய எவரையும் பேணி, உணவும் உடையும் உறையுளும் உதவி, இன்சொல் இயம்பி, பிறர் செய்த நன்றியை நினைந்து, நடுநிலை நின்று அடக்கமுடையனாய், ஒழுக்கம்பேணி, பிறருடைய மனைவியரை விழையாமல், பொறையை மேற்கொண்டு, பொறாமையை ஒழித்துப், பிறர் பொருளை விரும்பாமல், புறங்கூறாமல், பயனில சொல்

லாமல், தீவினைக்கு அஞ்சி, ஒப்புரவறிந்து, இயன்றவகை ஈதலைச் செய்து, புகழ்பெற வாழ்வோனே இல்லறத்தான் ஆவான்.

துறவறம்.

ஆருயிர்மாட்டுப் பேரருளுடையனாய், ஊனுண்ணல் ஒழிந்து உயர் தவம்புரிந்து, வஞ்சமும் களவும் நெஞ்சத்திற்கொள்ளாமல், வாய்மைகாத்து, வெகுளியை ஒழித்து, இன்னாசெய்யாமல், ஒன்றையுங் கொல்லாமல், நிலையாமையை நினைந்து, நெடுந்துறவடைந்து, மெய்யுணர்வு எய்தி அவாவினை அறுத்துப்பிறவி அறுகிற்போனே துறவறத்தான் ஆவான்.

ஊழ்.

இவ் எல்லாவற்றிற்கும் ஊழே காரணமாதலால் அவ் உண்மையை உணர்ந்து நல்லூழுக்குரிய நல்வினைகளாகிய மனபதை நாடிச்செய்தல் வேண்டும்.

உறுதி.

பிறருடைய மனைவியரை நயவாமலும் புறங்கூறாமலும் உள்ளவரே இல்வாழ்வோருட் சிறந்தவர். மெய்யுணர்வுடையராய் அவாவினை ஒழித்தவரே துறவோருள் உயர்ந்தவர். இவ் இருவகை நிலைகளிலும் நின்று தக்க சிறந்த இவ் உயர்நலங்களை அடைந்தவர் எல்லா நலங்களையும் இங்கு எளிதில் அடைந்து அழிவில் வீட்டை முடிவில் அடைவர். இவ்வுண்மையைப் பாலில் நெய்போல் இப்பாலில் காண்க.

உள்ளீர் நமரங்காள் ஓதுந் திருக்குறளாம்
தெள்ளமிழ்த மாந்தித் தெளிமின்கள்—மெள்ள மெள்ள
எல்லா நலங்களும்வந் தெய்துநமக் கன்றேதான்
வல்லான் அருளும் வரும்.

வள்ளுவப் பெருந்தகை மாணடி வாழ்க.

அறத்துப்பாலில் அடங்கியுள்ளவை.

அதிகாரம்	பக்கம்	அதிகாரம்	பக்கம்
கடவுள் வாழ்த்து	11	பயனிலசொல்லாமை	375
வான் சிறப்பு	35	தீவினையச்சம்	395
நீத்தார் பெருமை	50	ஒப்புரவறிதல்	414
அறன்வலியுறுத்தல்	73	ஈகை	434
இல்வாழ்க்கை	91	புகழ்	455
வாழ்க்கைத்துணைநலம்	109	அருளுடைமை	472
மக்கட்பேறு	127	புலான்மறுத்தல்	490
அன்புடைமை	151	தவம்	509
விருந்தோம்பல்	173	கூடாவொழுக்கம்	532
இனியவை கூறல்	193	கள்ளாமை	553
செய்ந்நன்றியறிதல்	211	வாய்மை	572
நடுவு நிலைமை	230	வெகுளாமை	593
அடக்கமுடைமை	248	இன்னாசெய்யாமை	614
ஒழுக்கமுடைமை	265	கொல்லாமை	635
பிறனில்விழையாமை	283	நிலையாமை	658
பொறையுடைமை	302	துறவு	683
அழுக்காறாமை	320	மெய்யுணர்தல்	707
வெஃகாமை	338	அவாவறுத்தல்	730
புறங்கூறாமை	355	ஊழ்	753